Koviloor Digital Library



A. No. 5643
வ: 3324

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பல பக்திமான்கள் சரித்திரமாகிய

ஸ்ரீமஹாபக்தவிஜயம்

இரண்டாம் பாகம்.

இஃது:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்தியாதி ஸ்ரீமான் திருக்கோவிலூர்
ஸ்ரீநிவாஸாசாரியார் திருவடி சம்பந்தராகிய

பு: நாராயணதாச ரவர்களால்,

மஹாராஷ்டிர பாஷையிலிருந்த
சக்குபாய், புரந்தரதாசர், கோராகும்பர், பத்திராசல ராமதாசர், பெரியதாசர்,
துக்காராம், ஏகநாதசுவாமி, நரசிம்மமேதா, சோகாமேளர், மீராபாய்,
தாமாஜி பண்டிதர் போசலபாவா முதலாகிய 12-தாசர்களின்
சரித்திரங்களையும், முதற்பாகத்திற்கு பூர்த்தியாகாத
ஜெயதேவர், கபீர், துளசி, நாமதேவர், ஞானேஸ்
வரர், முதலாகிய 5-தாசர்களின் சரித்திரமுடி
வையும் ஆங்காங்கு சமயோசித சுருதிப்
பிரமாணங்களுடனும் தமிழில்
மொழிபெயர்க்கப்பட்டு,

T. R. வெங்கடேச முதலியார் அவர்களாலும்,
பூவிருந்தவல்லி,
R. அப்பாதுரை முதலியார் அவர்களாலும்,
சென்னை, மண்ணடி,
சரவணபவ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்] 1928. [விலை ரூபா 2-8-0.

Koviloor Digital Library



ஸ்ரீ பாண்டு ரங்கர்.

Koviloor Digital Library

ஸ்ரீ பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

Koviloor Digital Library



ஸ்ரீமஹாபக்தவிஜயம்

இரண்டாம் பாகம்.

முகவுரை.

சுலோகம்.

நமோ நமோ வாங்மன ஸாதி பூமயே
நமோ நமோ வாங்மன வைஸ பூமயே
நமோ நமோ நந்த மகா விபூதயே
நமோ நமோ நந்த தயைக ஸிந்தயே,—

ஸ்ரீமகா லட்சுமியை மார்பிர் தரித்த சர்வேஸ்வரன் வைகுந்தமா நகரத்தில் நித்திய சூரிகள் தன்னை சேவிக்கத் திருமாமணி மண்டபத்தில் வீற்றிருந்து தனக்குத் தானே சிந்திக்கலாயினர்.

சுலோகம்.

"விசித்ராய தேஹசம்பத்தி
ரீ ஸ்வராய நிவேதிதம்"

என்பதுபோல பொன்னை யுறைத்த கல்லை மெழுக்குண்டையினல் ஒற்றியதுபோல அணுவுக் கணுவாய் மூலப்பிரகிருதியில் கிடந்த ஆத்தும கோடிகளுக்கு கர சரணதி அவயவங்களைக் கொடுத்து நம்மைத் துதித்து நமது பதவியை அடையும்படி கிருபை செய்து பூவுலகிற்கு அனுப்பியும், அவர்கள் ஆகாரம் நித்திரை பயம் இவைகளுக்கு வசப்பட்டவர்களாகி காலத்தை வீண்போக்கி மிருகங்களுக்குச் சமானர்களாகினர்கள். சாது சங்கத்திற்சேர்ந்து சாந்தி சுகத்தை அனுபவிப்பதல்லவா மானிட ஜெனனத்திற்கு மேன்மை. அப்படிப்பட்ட சுகத்தை அனுபவிக்காமல் காம குரோத லோப மோக மத மாச்சரிய மென்னும் அரிஷ்டவர்க்கத்திலகப்பட்டு பயங்கரமாகிய சத்துருக்களை ஜெயிக்கவகையறியாமல ஜெனன மரணரூபமாகிய வலையை யறுத்துக்கொள்ள சக்தியற்றவர்களாகி மந்தமதியால் பரமானந்தசுகத்தை விட்டுப் பாமரர்களாகினர்களென்று பிரலாபித்து தசாவதாரங்களில் ஒன்றாகிய இராமவதாரத்தில் கோசலை கைகேசி சுமத்திரைகளிடத்தில் நான்கு ரூபங்களுடன் அவதரித்து ஸ்ரீராமரூபத்தினல் சாமானிய தர்மத்தையும்

Kovilloor Digital Library

லட்சுமண ரூபத்தினல் பகவன் சேஷத்துவ ரூபமாகிய மேலான தர்மத்தையும் பரதரூபத்தினல் ஈஸ்வரபாதந்திர ரூபமாகும் பெருந்தர்மத்தையும் சத்ருக்ன ரூபத்தினல் பாகவத பாதந்திர ரூபமாகும் அதிக தர்மத்தையும் வெளிப்படுத்தி சரணுகதி விபவத்தை சாதுஜனங்களுக்கு, அனுஷ்டித்துக் காட்டி மகாரிஷிகளுக்கு விரோதிகளாகிய இராவணுதிகளை வதைத்து விபீஷணர் பிரார்த்தனையைப் போல உலகோர்க்கு அபயப் பிரதானமளித்து யாதவகுலத்தில பலராம கிருஷ்ண ரூபங்களிலவதரித்து பூதகி சகடாசுர திருணுவர்த்த காளிங்க தேனுக அரிஷ்ட பிரதம்பதேசி துவிதசாணூர முஷ்டிகன் முதலாகிய துஷ்டாத்துமாக்களை வதைசெய்து பாண்டவர்களுக்குத் தூதுபோய் பார்த்தனுக்குச் சாரதியாகி இறந்தவர்களை எழுப்பியும் சரணுகதி யடைந்தவர்களை ரக்ஷித்தும், அர்ச்சுனன் வேண்டுகோளினல் ப்ரம்மவித்தை யாகும் கீதை உபநிஷத்தை உலகோர்க்கு அளித்து கலியுக அந்தியத்தில் வர்ணுஸ்ரம தர்மங்கள் குறைந்து தர்மம் மறையப்பட்டு உலகம் பாஷாண்டமயமாகி யிருக்கிறபோது கல்கியா யவதரித்துக் காட்டியும் சேதனர்கள் வழிப்படாமையால் பன்னிரண்டு ஆழ்வார்களை தன் அம்சங்களாக அவதரிக்கச்செய்து மானைக்காட்டி மானைப் பிடிப் பாரைப் போல உபாயந்தேடியும் ஆத்துமாக்கள் வழிப்படாமல் அநர்த்தப்படுவதைப் பார்த்து மனஞ் சகிக்காமல் வியாசரை ஜெயதேவராகவும், சுகரை கபீர்தாசராகவும் வால் மீகரை துளசிதாசராகவும். உத்தவரை நாமதேவராகவும், சிவனை நிவர்த்தி, தேவராகவும், விஷ்ணு ஞானதேவராகவும், பிர்மாவை சோபான தேவராகவும், இன்னுமநேக சாதுக்களை பூமியில் அவதரிக்கச் செய்துசேதன சேதனர்களை திருத்தி தன் திருவடியை தியானித்து நித்தியபதத்தையடையும்படிச் செய்யுங்க ளென்று நேமிக்க பகவான் நேமனத்தை சிரமேற்கொண்டு கீழ்கண்ட சாதுக்களனை வரும் பூவுலகிலவதரித்து பாமரர்களுக்கு எம்பெருமான் நாமமே இக்கலி காலத்தில் உஜ்ஜீவிப்பதற்கு உபாயமாகியது என்று போதித்து பகவான் களிக்கும்படி பாமரர்களைத் திருத்தி ஆண்டருளினர். இப்படிப்பட்ட பரம சாதுக்களின் மகிமைகளை வெளியிட வேண்டியது அவசியமெனபிரசுரிக்கப்பட்டது.

முகவுரை-முற்றிற்று.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்

அ றி வி ப் பு.

சித்தி முத்தி பக்தர்கள் சரிதையாகிய ஸ்ரீ மகா பக்தவிஜயம் இரண்டாவது பாகமாகிய இப்புத்தகத்தை ம-ள-ள-ஸ்ரீ, பூ. ரா. அப்பாதுரைமுதலியார் அவர்கள் சகல சுதந்திரங்களும், தாமே பெற்றுக் கொண்டபடியால் வேறொருவர் அச்சிடாதபடிக்கு சென்னையிலும், புதுவையிலும், காரைக்காலிலும் காபிரைட்ரிஜிஸ்டர் செய்திருக்கின்றனர்.

மேற்படியாரனுமதியின்றி யாவரேனும் பேர்மாற்றியாவது முன்பின் சங்கதிகளைப் புரட்டியாவது சங்கதிகளைத் திருத்தியாவது அச்சிடுவாராயின் 1867-ம் வருஷத்திய 25 வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் படி நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகியும், பினல் கோர்ட்டாரவர்கள் சட்டத்திற்கு குற்றவாளிகளென்றறிக

ஒன்பதாம் பதிப்பு காப்பி 1500

இப்படிக்கு.
பு. நாராயண தாசர்.

Koviloor Digital Library

இது, கலவை புரசை ம-ா-ா-ஸ்ரீ,

தேவராஜ கவிராயரவர்களாலியற்றிய

சாற்றுக்கவி அகவல்

திருவளருலகினிற் றிகழ்ஜெயதேவர்
தருவளர் துளசி தருநாமதேவர்
மருவளர்கபீர்ஞா னேஸ்வரர்குசேலர்
அருள்வளர்வரை யச்சிலியற்றினன்
கருவளருமாபதி முதலியென்போன்
சீர்பக்தவிஜயஞ் சிறப்புப்பெயரிட்டு
பேர்பெற்ற பூ. ரா. அப்பாதுரை முதலியாரும்
பாலதிபன்னிரு தாசரையச்சினில்
வாலறிவாலே யிட்டனரன்பினுல்
அவர்களாரென்னில சக்குபாய் புரந்தரர்
தேவர்களாம்கோரா கும்பர்பத்திராசலர்
பெரியவர் வாக்கால் பெரியதாசருமுயர்
அரியதுக்காரா மாமேகநாதரும்
சுகமுடைநரசிம்ம மேதாசோகாமேளர்
அகமுடைமீருபா யானதாமாஜியும்
சகமுடை போசல பாவாவென்பார்
மகமுடைஜெயதேவர் முதலியானவர்
நயனுெடுதேவனை நாடியே பணிந்து
பயனுெடுபரம பதம்நண்ணினுரே.

இது, புரசை ம-ா-ா-ஸ்ரீ,

சிரஞ்சீவி முதலியாராலியற்றிய

அகவல்

இராகம்-எதுகுலகாம்போதி.

மலர் தலையுலகத்து மகுடமன்னரைப்போல்
நிலமைசேர்பன்னிரு நித்தியரைப்போல்
பக்தர்கள் பரவும் பக்தவிஜயத்தை
வாக்கியவசனமாக வகுத்தனன் தமிழால்
யோக்கியமாகப் புகழ்ரத்தின முதலியும்
யோக்கியமுற்ற அப்பாதுரைமுதலியாரும்
பாக்கியமென்றே பலதரம்பணிந்து
பொலிவுறவச்சிற் பொருந்தினரதனுல்
கலிவிலாதிருந்து நாளும்வாழியவே.

பாரிப்பாக்கம் ம-ா-ா-ஸ்ரீ

முனியப்ப முதலியாரவர்கள்

மாணுக்கர் சென்னை ம-ா-ா-ஸ்ரீ

ஏகாம்பர நாயகரவர்களாலியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

திக்குளோர்பரவச் செகமதிலுதித்தே
பக்குவமாகப் பகவனைப்பணிந்தே
தக்கவன்றொடு தவமதியற்றியே
மிக்கவாய்மை மேன்மேலுயர்ந்து
மாதவக்குருக்களை வந்தனைபுரிந்தே
ஏதமிலாம லில்லத்தில்வாழ்ந்தும்
ஆதுலர்க்கன்ன மன்போடுகொடுத்துந்
தீதிலாவட்டே யத்தினிற்றிகழும்
அற்புதமாகவமர்சக்குபாயுடன்
விற்பனபுரந்தர வியன்கோராகும்பர்
சொற்பத்திராசல ராமதாசர்
ஏற்பெரியதாசரினிய துக்காராம்
தேகமேநழுவா சித்திகள்பெற்ற
ஏகநாத சாமியோடினிது
தாசபோகந் தணிந்திடப்பணிசெய்
வாகார்நரசிம்ம தாசனேடொளிரும்
தத்துவசோகா மேளர்மீராபாய்
வத்துவாந்தாமாஜி பண்டிதர்வாய்மை
வித்தகந்தன்னை விரிபோசலபாவா
எத்தரையோரு மிசைஜெயதேவர்
அபிநயத்தோடு வரங்களைப்பணியும்
கபீருந்துளசி தாசருக்கருதும்
தவசியாய்வந்த தனிநாமதேவர்
நலநவமாக நல்லன்பர்சரிதம் [க்கும்
சொற்சுவை பொருட்சுவை தோன்றிடவெவர்
அற்புறச்செய்து வகமகிழ்ந்திட்டான்
தெற்றிவர்மாளிகை சேணிவர்புதுவை
கற்பதிவிதித்த நாராயணதாசர்
சாதனநான்கும் தக்கவர்பெறவும்
மாதனங்கொண்டு வரும்வேளாளர்
காதனும்ரத்தின வேலுநம்முதலியும்
சேதன அப்பாதுரைமுதலியாரும்
கச்சிடுபக்தவிஜயம் நயமுடன்
இச்செகத்தோர்கள் இவண்கற்றுணர
மெச்சித்தன்பொடு விரண்டாம்பாகம்
அச்சிற்பதிப்பித்து விட்டனரந்தோ.

Kovilesar Digital Library

திருப்பதி ம-ா-ா-ஸ்ரீ,

திருவேங்கட முதலியாரா லியற்றிய

சாற்றுக்கவிகள் வெண்பா.

நயந்து முதற்பாகம் நானிலத்தோர்காண
வியந்துயச்சியிற் பதிப்பித்துவிட்டு—தகுந்த
உமாபதிமுதலியெனு முத்தமன் காண்மேலோன்
அமரர்பதிக்கேகினுன்
மன்னுமுலகிற்செய்த மாபக்தவிஜயத்தை
மின்னுமணிபோல் விளம்பினுன்-அன்னத் (தாஸ்
கண்டுபடிக்குந்தென்புதுவைக் கண்ணுர்நாராயண
பண்மருவுஞ் செந்தமிழால் பார்.
தானிரண்டாம் பாகந்தனிற் பன்னிருவர்கதை
கானமுடனச்சிட்டுக் காட்டினுன்—ஊனமிலா
பூந்தமல்லிதனிலுற்ற அப்பாதுரை முதலியார் வேள்
எக்காலமு மிருக்கவே.

சிறுமணவூர் ம-ா-ா-ஸ்ரீ,

முனுசாமிமுதலியா ரவர்களால்

இயற்றிய சாற்றுக்கவி

அகவற்பா.

பரிதிவெண்டிங்கட் பரவுபிர்மாண்டத்
திரைவளையகண்டா காரபூகோளத்
துதித்திடுஞ்ஜெனனத் தொகைபெறுமெண்ணிற்
மதித்தமனுக்களில்மனுக்களாய் தோன்றித்
தூய்மையுமதெய்வத் துணைவழிக்கடையே
வாய்மையாய்ப்பிறவி வாரியைத்தாண்டிக்
காலமூன்றின் தகிவிதியுணர்ந்து
ஞாலத்தோடே நடிப்பனநடித்துந்
தவத்தைக்கைவிடா தரத்துடனியற்றி
தவத்தைக்கடந்து பரத்துள்பரமாய்
சோதியுட்சோதியாய்ச் சோதியையடைந்த
அதிமகான்களின் அற்புதச்சரிதையிங்
கியற்றியிருப்பினு மேனையோர்யாரும்
தவந்துபோற்றுமாறு நல்கிடாராதலின்
தாசர்கட்சரிதையாற் றறையுமுருகுமால்
தேசதேசங்கட்டிரிந்தவைசேகரஞ்
செய்தமட்டிற் செந்தமிழ்நடையாய்
பெரியநற்புண்ணியப் பேர்வழிகேண்மின்
தக்காரிற்றக்கத் தக்கார்வியற்கும்
சக்குபாயெனுமா சத்தியச்சரிதையும்
அறமிகுபக்தி யருட்கடைபிடித்த
புரந்தரதாசர் புண்ணியச்சரிதையும்
ராவிவேச வியப்புமிகுந்தோளிர்
கோராகும்பர் குலவியசரிதையும்
சித்தமேவின்டுபால் செலுத்தியமிக்க
பத்திராசலராம பக்தர் சரிதையும்
அரியதிருமகட் கன்பன்கருணைநீர்
பெரியதாசரவர் பெட்புறுசரிதையும்
எக்காலுமாறு வெழிற்பெயர்பெற்ற
துக்கராமென்னுந் தூயவர்சரிதையும்
சாகரஞ்சூழ்புவிச் சாற்றுமனவிலா
ஏகநாதனென் சுவாமி சரிதையுந்
தரைமகிழ்மிகுந்துந் தன்புகழ்பெற்ற
நரசிம்மமேதா நற்பெருங்கதையுங்
வாதாப்பிறவி வருந்தைத்தவிர்த்த
சோகாமேளா சொரூபசரிதையும்
ஆராதாரத் தமர்ந்தொளிகண்ட
மீராபாயெனு மெல்லிமாசரிதையும்
காமாதிசத்தக் கவலையகன்ற
தாமாஜிபண்டிதர் தக்கச்சரிதையும்
பாசங்கடந்து பதம்பெறுபுண்ணிய
போசலபாவா புண்ணியச்சரிதையும்
மித்தகையோர்கள் மேவியமார்க்க
மெத்தனையெத்தனை யத்தனையாவும்
இரும்புவிமேவு யேனையோர்யாவரும்
வரும்பதமுணர்ந்து வருட்பேறடைந்து
ஞானவானுகி நற்கெதியடைகில்
தானயினிதுவேர் தரையிலிலையென
ஆன்றோர்கிருபையைத் தருண்மொழிகேட்டு
நான்தருவேனென நயந்துமுயன்று
மதுரத்தமிழ்கடன் மடையகன் றோங்கும்
புதுவைநாராயணப் புலவன் வாக்கால்
ஈண்டியதமிழ்மணி யெங்குமோங்கவே
வேண்டியநவமணி யெங்குமோங்கவே
மிக்கார்வியற்கு மிகுவளமெய்தத்
பூந்தமல்லிதனி லுதித்தலுறைவோன்
வைஷ்ணவமார்க்க வருட்கடலானோன்
தராதலமேழுந் தாளாலளந்த
அப்பாதுரைமுதலிவேளென்னும்பூங்கொடையோன்
மாறாதிடையுரு மாதவனருளால்
சரவணபவ அச்சியந்திரசாலையில்
தகமகழ்ந்தியற்றித் தந்தனனிந்த
ஜெகமகிழ்பக்தர்கள் விஜயமிரண்டாம்
பாகமிதற்குப் பதிலுபகாரமாய்
லோகமேயீண்டினுந் தியாகமன்றன்றே.

இவை

ம-ா-ா-ஸ்ரீ, M. K. சாமி அவர்களால்

இயற்றிய அறுசீரடி ஆசிரிய விருத்தம்,

இத்தரணியோக்கன்பாய் நன்மதியுந்தான் விளங்க
இனிமையாக
பக்தவிஜயந்தன்னை அப்பாதுரை முதலியார் தன்
சரவணபவபிரஸில் தானே
சித்தமகிழ்ந்தச்சியற்றி ஜெகமீதுயாவர்களும்
சிந்தித்தன்பாய்
முக்திபெருமார்க்கத்தை காட்டுதற்கு காரணமாய்
முனைந்திட்டாரே.

Digital Library



ஸ்ரீமஹாபக்தவிஜயம்

இரண்டாம் பாகம்.

பாயிரம்.

கணேசர் துதி.

நேரிசை வெண்பா.

அம்புவியின் முத்தி யருட்பெருமையை யீந்து
துன்பங்கள் யாவுந் தொலைந்திடு நல்-அம்பிகையாள்
மைந்தன் விநாயகர் மாணடிகளென் றுமவை
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

சரஸ்வதி துதி.

விருத்தம்

அந்தமுகுபக்தவிஜய மிரண்டாம்பா
கந்தனைசெப்ப கனமுடனே நாவில்
வந்தருளிவரிதப்பு மிலாது நல்ல
எத்தனையாண்டிடு மினிதாய்வர்ணித்தாயே.

இலக்குமி துதி.

விருத்தம்.

வாயவன்றன்வல மார்பில்வசிக்குமன்னை
நேயர்கள்தம்முளத் தென்று நினைக்குமன்னை
சேய்களெனச்செகத் தோரைக்காக்குமன்னைத்
தூயமாமலர்பதங்கள் தொழுவாய்நெஞ்சே.

பரப்பிரம்ம துதி.

விருத்தம்.

பக்தர்களு முத்தர்களும் பணியுஞ்சோதி
சுத்தர்களுஞ்சித்தர்தின மேத்துஞ்சோதி
நித்தர்களும் நற்றவரும் போற்றுஞ்சோதி
கத்தியமா மேகப்பரப்பிரம்மசரணம்போற்றி.

ஜீவன்முக்தர் துதி.

விருத்தம்

சக்குபாய் புரந்தரதாஸ் கோராகும்பர்
சாந்தமிகு துகாராம் ராமதாசர்
பக்குவ்மாம் பெரியதாசர் சோகாமேமீளர்
பண்புடைய ரோஹிதாஸ் ஸாவந்தியமாலி
முக்குறும் பையகற்றி முமுட்சுவாகியென்று
மூவர்தேவர் தொழுங்கருணை முதிர்ந்த சுத்தர்
இக்குவலயத் துதித்திணையி லாதவர்க்
கென்றுவிடா தெழிற்சரணம் போற்றி போற்றி.

ஆசாரியர் துதி

செயங்கொண்ட கீர்த்தித் திருவேங்கடதேசிகரே
பயங்கொண்டுன் பாதம்பணிந்தே னிகத்தில்பக்தவி
சயங்கூறக்கிருபைசெய் யடியேன்வினை யகல்வ
பயந்தர வேண்டுமினிதாங் கருணைவாரிதியே.

Koviloor Digital Library

அவையடக்கம்.

செந்தமிழிலக்கணந் தெரிந்தவரிடத்தினிற்
சேர்ந்துணர்ந்தவனு மல்லன்
அந்தமாமெதிகண ப்ரகாசமார்க்கந்தனை
யறிந்தகவி வாணனல்லன்
மந்தமதியால்பகர வெண்ணினேன்சக்குபாய்
மாசரிதை யுள்ளபிழையை
பந்தமொடுகுற்றமொழி யெனப்பாதுகாப்பதுங்
கடமைமதி பெரியோர்களே.

ஸ்ரீமத் அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயகராகியும், ஆதிமத்தியாந்த ரஹிதராகியும், ஸ்ருஷ்டி திதி லயகாரண வஸ்துவாயும், சமஸ்த ஆத்மகோடிகளின் உள்ளும் புறம்பும் வியாபித்திருக்கும் பகவானாகிய ஸ்ரீபாண்டுரங்கநாதன் வீற்றிருக்கும்பூலோக வைகுந்தமாகியும், ப்ரம்மானந்தத்தாற் றன்னை மறந்திருக்கிற ஜீவன்முத்தர்களுலவு மிடமாகியும் அட்டாங்கயோகங்களாற் சகல சித்திகளுமடைந்த சித்தர்கள் சஞ்சரிக்கும் க்ஷேத்திரமாகியும், திருமூர்த்திகளை யோதி யுணர்ந்த நீதிமான்களும், நிறைந்திருக்கிற ஊராகியும் துவாரகாநாத், ஜெகந்நாத், ராமநாத், பதரிநாத் என்ற நான்குகயிற்றூர் கட்டி யிருக்கும் மதில்களாலும் மத்தியிலுள்ள கொடி ஸ்தம்பத்தை யொத்த இடையிலுள்ள உச்சிஸ்தானத்தைப் பண்டரிநாதமென்று பலராலும் புகழப்பட்டதாயும் சந்ததமும் எந்தத்திக்கிலும் நாதப்பிரமம் முழங்கும் ஓசைபரவும் பண்டரி புரத்தில் கலியுகாதி 4990-ம் வருடத்தில் இப்பூவுலகோரீடேறவவதரித்து அநேக வற்புதங்களைக் காட்டிய ஜெயதேவர்-நாமதேவர்-ஞானதேவர்-சோபானதேவர் - சாரங்கதேவர்-துளசிதாசர் - கபீர்தாசர் - கூர்மதாசர் - விஷ்ணுதாசர் - சூர்தாசர் - ரோகிதாசர் - ராமதாசர் - மாதவதாசர்-மச்சேந்திரநாதர்-சலந்தரநாதர் - கோரக்நாதர் - ஏகநாதர் - கோராகும்பர் - ராகுமார் - பரமானந்தசோகா - சகமித்ரிநாத் நிவர்த்திசாது - சாவந்திபாமலி முத்தாபாய் - ஜெனாபாய் - மீராபாய் - கங்காபாய் சக்குபாய் நரஹரிதாசர் முதலான ஏனைய ப்ரஹ்ம ஞானிகளின்சரிதையெனும் அமிர்தத்தை நிறைத்து வைத்திருக்கும் பக்த விஜயமாகிய கிரந்தத்தைப் பொய்வசனங்கள் பூரணமாய் நிறைந்த புல்லறிவாளனாகிய அடியேன் வாக்கினாற் புகல அசக்தனாயிருந்தும் பகரத்துணிந்தேன். இச்சுபசரிதையை தேகவியோகமின்றி நிர்விக்நமாய் முழுது மினிமையாக நிறைவேற்றும் கருணாகரக் கடவுளாகிய விநாயகக் கடவுளின் திருத்தாள்தாமரைகளின் மகிமையே அன்றியும் பக்தர்கள் சரித்திரங்களைக் கேட்ட புண்ணிய பலமே மேலும் விரிஞ்சாவதாரரான நாபாஜிசித்தரர் செய்த பக்தசார மென்னும் விசாலமான பூமியில் உத்தமர்களின் அற்புதங்களாகிய சுகந்தமணம் வீசும் மலர்கள் புஷ்பகளமாய் புஷ்பித்திருக்கும் நந்தவனமாகிய பக்தவிஜய சரித்திரத்தை இப்புவியிலுள்ள பாபங்களெல்லாம் திரண்டோருருவமாகிய தேகமும் ஓர் க்ஷண நேர மாகிலுஞ் சஞ்சலமற்றிராத வஞ்சகம் நிறைந்த நெஞ்சினையுடைய கொடியனாகிய வடியேனுடைய மனதில் அஞ்ஞானாந்தகாரத்தைப் போக்க ஜொலித்தெழுங்கோடி சூரிய ப்ரகாசம் போன்ற கிருபாவிலாசமே பிரவேசித்து தமிழ்பாஷையிற் செயத் தொடங்கின விந்தையே விந்தையாம்

நூற் பெருமை.

பக்தப்பிரியனாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாபிக்கமலத்தில் திருவவதாரஞ் செய்து இவ்வண்டபிண்ட பிரம்மாண்டங்களையோர் நொடியில் சிருஷ்டித்த ப்ரம்மதேவனே இவ்வுலகீடேற அவதாரஞ் செய்து நாபாஜி சித்தரெனப் பேர்பெற்று பக்தர் சரித்திரங்களை யெல்லாம் மாராஷ்டக பாஷையிற் செய்து வைத்தது மன்றி, அன்பரைக் காத்து ரக்ஷித்து, நாளது பரியந்த மிவ்வுலகில் உலாவிக் கொண்டிருக்கிறாரெனின் அவர் தம்மகிமையை ஒருவராற் சொல்லக்கூடியதோ? சொல்ல மானிடரால் தேடியதோ பக்தசாரமெனப் பேர்வழங்கும் பக்த விஜயமானது பிரம்மானந்த ரசத்தையளித்து சந்ததமுமளித்து. அழியாத சத்தியஞானானந்த பிரம்மமா யிருக்கச் செய்வதால் தேவாமிர்த மென்றுங், கொலை களவு கட்காமம் பொய்யென்னும் பஞ்சமாபாதகங்களை நீக்குதலால் பகீரதியென்னும், அனந்தஞ் சரிதங்களா லலங்கரிக்கப்பட்டிருப்பதா லிதிகாச மென்றும், ஸ்ரீமந் நாரயணனுடைய கல்யாணகுணங்கள் நிறைந்திருப்பதால் விஷ்ணுபுராண மென்றும், பரமசிவத்தின் பலமகிமை யுள்ள சரித்திரங்க ளடங்கி யிருப்பதால் சிவ புராண மென்றும், பிரபஞ்சோற்பத்தி நாசமும் விதிநிஷேதங்களும் பல நிலைகளு முரைப்பதால் வேதமென்றும், வேத முடிவான மகா வாக்கியார்த்தங்களி னினிய ரகசியங்களனந்த மடங்கி யிருப்பதால் வேதாந்த மென்றும் சொல்லப்படும். அன்றியும் இதில் மதபேதங்களைக்கண்டித்து, மானாபி மானங்களைத் துண்டித்து அரியரனை சமமாகப் புகழ்ந்து, அல்லவென்பவர்களையிகழ்ந்து நாமகிரியைகளைக் குறைத்து பிரம்மக் ஞானத்தை நிறைத்து துன்பத்தி லிருப்போரைப்

Koviloor Digital Library

பிழைப்பித்து இன்பத்தில் வாருமென்றழைத்து ஜென்மங்களில்லாமற் போக நன்மை பெற்றொங் நாளும் வாழப் பிரம்மானந்தத்தையே விரித்து ரைத்தலால் வேதாந்த சித்தாந்த விளக்கமென் றுஞ் சொல்லலாம். இவ்வளவு மாட்சிமையான மோக்ஷமாட்சிக் கிரந்தத்திற்குப் பக்தவிஜயமெனப் பேரமைத்ததேனெனின் அரிய குருபக்தியில்லா மல் சித்தி முத்தி யடைந்தவர்க ளில்லாமையானும், எல்லாவற்றிற்கும் பக்தியே காரணமாதலானும் பக்தியில்லாதவற்கு முக்தியில்லாமையானும் இதிற் சொல்லும் பிரம்மக்ஞானிகளனைவரும் பகவத்பக்தி யினாலேயே சித்தி விரத்திமுக்தி யடைந்தார்களாத லானும், பக்தியினால் காமக்ரோத லோபமாக மதமாச்சரியங்களென்னு மரிஷ்டவர்க்க வீரர்களைச் செயித்து, விஜயம் பெற்று உண்மை ஞானமும், பேரின்பமும் கைவல்யமு மடைந்தபடியால் பக்த விஜயமெனப் பெயர் வைக்கப்பட்டது.

அன்றியும், கலியுகாதி 4811-வருடத்தில் துகாராம் புத்திரியின் குமாரனாகிய வாசுதேவ பாவா வென்பவர், பண்டரி புரத்தில் பிரம்மாம்சமான நாபாஜிசித்தர் செய்த மஹாராஷ்டக பாஷையி லுள்ள பக்தசாரத்தைப் பாராயணஞ் செய்து கொண்டிருப்பதை அவ்வூருக் கிறைவனாகிய பாதுஷா நாடோறும் சிரவணஞ் செய்துகொண்டே வந்து துகாராம் பொந்தியோடும் சகலரும் பார்க்க வானுலகிற் சேன்றாரென்பதைக் கேட்டுப் பாதுஷா சந்தேகங்கொண்டு துகாராம் போனதைக் கண்ணாரப் பார்த்தவர்கள் யாராவதிவ்வூரிலிருக்கிறார்களா வென்று கேட்க, இரண்டொருத்தர் நாங்கள் சிறுவர்களா யிருந்தபோது துகாராம் பொந்தியோடு போனதிது மெய்ம்மை யென்றுரைக்க அரசன் நம்பாமல் அது சுத்த பொய்யென்றுரைக்க, அதற்கு துகாராம் பேரன் வயதில் மிகுந்த என் அன்னைக் குத் தெரியுமெனப் புகல இராஜன் உன்மாதவை யழைத்துக்கொண்டு வந்து மெய்ப்பித்தாலும் நம்ப மாட்டேன் இனியிப்புராணத்தைக் கேட்கவு மாட்டே னெனச் சபையிலுள்ளவரு மப்படியே பகர்ந்தனர்.

வாசுதேவ பாவா தானும் சந்தேகங்கொண்டு தன்தாயைக்கேட்டு நிசந்தெரிந்துக் கொள்ளவேண்டிய வெண்ணத்தால் புராணத்தை நிறுத்தச் சபையோரை நோக்கி அடியேன் வருகிற பரியந்தம் யாரும் போகதீர்கள், இதோ அரைக்ஷணத்தில் வருகிறே னென்றுரைத்து சபையை நீங்கித் தன் வீட்டை நோக்கிப் போகையில் அச்சபையில் சாது வேஷத்துடன் வந்து நாடோறுங் கேட்டுக் கொண்டிருக்கும் துகாராம் தனது பேரனை யழைத்துக் கொண்டே போய், நானே துகாராமென அவர் நீர் துகாராமாயின் என் தாயிடம் வாருமெனத் துகாராமை வாவென்றழைத்துக் கொண்டு போய்த் தன் புத்திரியின் நாமத்தைச் சொல்லியழைக்கத் தந்தையின் தொனியைக் கேட்ட அவ்வம்மணி திடுக்கென்றெழுந்தோடி வந்து தந்தையினடிகளிற் பணிந்து ஓ என் தாதையே, நீர் வந்தது வெகு விந்தையே ௬0-வருடங்களா யெங்கு மறைந்திருந்தீர் எனப் பல விதங்களாகத் தோத்திரஞ் செய்தனள்.

துகாராம் வந்த காரணத்தைப் புகன்று பேரனுக்குற்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்து அடா என் கண்மணியே நான் வாசித்துக் கொண்டிருந்த இந்த தம்பூரைச் சபைக்குக் கொண்டுபோய் சபையோரே, துகாராம் பொந்தியோடும் மேலுலகிற் சென்றது பொய்யாயின் அவர் கரத்தால் வாசித்துக் கொண்டிருந்த இந்த தம்பூரும் அந்தரத்திற் செல்லக்கடவதென்றுரைத்துக் ககனத்தி லெறிந்துவிடு உடனே நான் தம்பூரைப்பிடித்துக் கொண்டு வானுலகிற் செல்லுகின்றே னென்றனர்.

அதைக் கேட்ட வாசுதே பாவா சந்தோஷ சித்தனாகச் சபையை யடைந்து, இறைவனைநோக்கி ஓ பாதுஷாவே, உமக்குள்ளசந்தேகத்தை இத்தம்பூரால் நீக்குகிறேன் பாருமென்றுரைத்து ஸ்ரீமந் நாராயணனைப் பலவிதங்களாகத் துதித்து ஓ என் னுண்டவனே உமக்கதியந்த பக்தனான துகாராம் பொந்தியோடும் வானுலகிற் சென்றது சத்தியமானால், அவருடைய தம்பூரும் அந்தரத்திற் செல்லுமென்றறைந்து ஆகாயத்தில் விட்டெறிய, உடனே துகாராம் தம்பூரைப் பிடித்துக்கொண்டு மீட்டித் தாளத்தைக் கூட்டி ஜெயவிட்டல் பாண்டுரங்காவெனப் பற்பலபாடல்களைப் பாடிக்கொண்டே அந்தரத்திற்சென்றதன்றி பக்தர் சரித்திரத்தை அன்புடன் கேட்டவர்களும் ஓதுபவர்களும் பவசாகரத்தையும் துக்கசாகரத்தையும் கடந்து சகல சுபமங்களமும் பிரம்மானந்தமு மடைந்து மோக்ஷமடைவார்களென்றுரைத்து, மறைந்தாராதலால், இதன் பெருமையை மதித்துரைக்கக் கூடுமோ? இந்நூலைப் பக்தியுடன் பார்ப்போர்பால் யாதொரு துன்பமும் நாடுமோ? நாடாது ஸ்ரீமகாபாரத ராமாயண ப்ரம்மாண்ட புராணத்திலும் பெருத்த நூலான இதைக்கலியுகாதி 4732-ம் வருடத்தில், விரிஞ்சாவ

Koviloor Digital Library

தாரரான நாபாஜிஸித்தர் இந்துஸ்தானி பாஷையில் 700-சரித்திரங்களைச் செய்து, பக்தசாரமெனப் பெயர் வைத்து, உத்தவஸித்தர் முதலானோருக்குப் போதித்தார். அதுகேட்டு உத்தவ ஸித்தர் 700-சரித்திரங்களைச் சுருக்கமாகக் குவாலியார் பாஷையிற் செய்து பக்தமாலாவெனப் பெயர் வைத்தார் மகிபதி பாவாஜி யென்பவர் கலியுகாதி 4862-ம் வருடத்தில் ஒருவர்க் கொருவர் போதித்த ஞான வாக்கியங்களை முழுதுஞ் சேர்க்காமல், சிலவற்றைச் சேர்த்து 109-சரித்திரங்களை மாராஷ்டக பாஷையிற் செய்து, நீபரத்தினாகமென பெயர் வைத்தார் இவைகளை யெல்லாம் பார்வையிட்டு ஒன்றுக் கொன்று ஏறக்குறைய யிருப்பவைகளைப் பெரியோர்கள் பார்கேட்டு, சரித்திரங்களிற் சற்றும் விக்கினமின்றி வரிசையாகக் கலியுகனூ 4669ல் சக்குபாய் புரந்தரதாசர், கோராகும்பர், பத்திராசல, ராமதாசா, பெரியதாசர், துக்காராம், ஏகநாத சுவாமி, நரசிம்மமேதா, சோகாமேளர், மீராபாய், தாமாஜி பண்டிதர், போசலபாவா முதலாகிய 12-சரிதைகளைப் புதுவை நாராயணதாசரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பூ. ரா. அப்பாதுரை முதலியார் அவர்களால் பிரசுரஞ் செய்யப்பட்டது.

வரிசைக் கிரமமாய் நிகண்டுகள் ருக்யசுர் சாமாதர்வண மென்னும் நான்குவேதங்கள், பஞ்ச காவியம் ஆறுசாஸ்திர பதினெண் புராணங்கள் முதலானதுகளை அமரிக்கையாய் வாசித்துணர்ந்தவனல்லன், சஞ்சலசித்தமுடைய தீவினையனும்கேவலனுமாகிய அடியேன் அமலமான சக்குபாய் புரந்தரதாசர், கோராகும்பர், பத்திராசலராமதாசர், பெரியதாசர், துக்காராம், ஏகநாதசுவாமி, நரசிம்மமேதா, சோகாமேளர், மீராபாய். தாமாஜி பண்டிதர், போசலபாவா முதலாகிய பன்னிருவர் சரிதைகளைம் புல்லரிவினால் வேடிக்கையாய்ச் சொல்லத் துணிந்தேன், "நற்றமிழ் தெரிந்த நறுத்தொகைதன்னூற் குற்றங்களைவோர் குறைவிலாதவரே" யென்னுமாப்போல, இதிலுள்ள குற்றங்களை நல்லறங்களாக எண்ணுவதுந் தவிரத் தங்கள் மதலைபகரும் குதலை மொழியிலோர் விந்தையிலா திருந்தும் அற்பமாச வென்னாமல் கற்பனமும் விற்பனமு முள்ளதாகப் பாவித்து அன்பர் இன்பமாய்கேட்டுல்லாச மடைந்துடலம் பூரித்தானந்த வாரிதியில் மூழ்கித் தன்னை மறந்தவர் போலவிப்பத்திபாகிய நற்புத்தியிற் சிறந்து பற்பல வற்புதச் சொற்களை வித்தகமாய்ப் பூரித்து, நற்கீர்த்தி பெற்ற உத்தம சற்சனர்களாகிய எந்தைகளை தங்கள் சொந்த மைந்தனு தாசாநுதாசனுமாகிய நாராயணதாசன் உங்கள் செந்தாமரைப் பதங்களை யாசித்து நேசித்து விசுவாசித்துப் பூசித்த அடியேனுக்குச் சகல சந்தேகங்களையும் நீக்கி, நிர்ப்பயமுண்டாகி, விக்நமென்பதை விலக்கி, நிர்விக்நமாமெனத் துலக்கி நித்திய தரித்திரனைக் கார்க்கும் தனவான்களைப்போல நாயேனைப் பவரோகமெனும் வியாதியைப் போக்கும்படி சதா எம்பெருமான் திருவடித்தியான அமிர்தத்தைப் புசித்து, கடைத்தேறும்படி ஆசிகள் கூறி ரக்ஷிப்பீர்களென்று மேலுமேலும் சரணமடைந்தேன், அன்றியும் அடியாரடிகளை மனதில்நிலை நாட்டி, அஷ்டாக்ஷரத்தை நாக்கிற்றீட்டி, பக்தவிஜயத்தைச் சொல்லச் சக்தியில்லா மோசவாசனாகிய வடியேன் அறிவுக்கெட்டின திவ்வளவென்று யோசித்து, ஆசிர்வதித்துப் பழுதின்றிச் சரித்திரங்களை முழுதும் பார்த்தால், மனோவிகாரங்களை விலக்கி, விநோதம் பலபல துலக்கி, பரப்பிரம்ம விலாசத்தைக்காட்டி பரிபூரணானந்தம் நிலைநாட்டி ஆனந்த பாஷ்பங்கள் பெருக்கி, அன்பினால் நெஞ்சுளை யுருக்கி ஆனந்தக் கடலில் புரண்டு, அளவில்லா வாசைகள்திரண்டு அற்புத வேதவாக்குகுறைந்து ஆநந்த மெய்ப்போது நிறைந்து, திக்கு தேசாதிகள் சென்று திரியக்ஸ்தாவர மற்று, ஆமைபோலடங்கி, ஊமைபோலொடுங்கி, ஒருவிகாரமுமின்றிப் பெருமை பாராட்டாமற் குன்றி சங்கற்ப விகற்பங்கள் கெட்டு அங்கமேலாசை விட்டு கேவல கைவல்ய பிரம்மாநந்த சொரூப சாக்ஷாத்கார சுயம்பிரகாச சுபங்கள சிந்மய தேஜோமய சித்விலாச சித்கனமான பரப்பிரம்மத்திற் சொக்கி யிருப்பார்கள்.

பண்டரிபுரப் பெருமை.

இப்பண்டரிபுரமானது நன்செய் புன்செய்களிலும், தெங்கு, வாழை, செவ்வாழை, பச்சைவாழை, மலைவாழை, மாமரங்களில் மில்பசந்து, காதர்பசந்து ஹமீர் பசந்து, கிரேயின், கிளிமூக்குமா, பலா, எலுமிச்சை, நாரத்தை, அசோகு, பொம்மளிமாஸ் ஆரஞ்சி, மணிலா முதலான பல விருக்ஷங்களிலும், மல்லிகை, முல்லை, ஜாதிமல்லி, குடமல்லி, இருவாக்ஷி, சண்பகம், குருக்கத்தி, சம்பங்கி, ரோஜா, கொடிசம்பங்கி, கதிர்பச்சை, அலரி, செவ்வலரி, மனோரஞ்சிதம், மந்தாரை, திருத்துழாய் முதலான மலர்ச்சோலைகளாலும்வீதி, சாலைகளாலும்; பிரம்ம க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களாலும், நடபாவி, தடாகம், சந்திரபாகா நதியாலும், பூமாதுக்கோர் திலகம் போலவும், புஷ்பமாலை போலவும், அஷ்டலட்சுமி கடாக்ஷப் பொருந்தி விளங்கும் பண்டரி

Koviloor Digital Library

புரத்தில் நிவாசஞ் செய்யும் நான்குவருணத்தோரில் ஐந்துவயதுக்கு மேற்பட்ட ஆண் பெண்களும் காலையிலெழுந்து சந்திர பாகா நதியில் மூழ்கி அனுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு பண்டரிநாதன் சந்நிதிக்குட் சென்று ப்ரதக்ஷண நமஸ்காரஞ் செய்து தங்கள் தங்ளகம் புகுந்து சர்வதேச சர்வகாலசர்வாவஸ்தைகளிலும் விட்டல் விட்டலென்று தியானித்திருப்பதுந் தவிர ராஜன் முதலான காலால்களும், இன்னமுள்ள சகலரும் விட்டல் விட்டல் என்னும் நாமகோஷம் எங்கும் வியாபித்து தேவலோகத்திற் கெட்டும். மேலும் ஒரு வஸ்துவேண்டி பஜாருக்குச் சென்று விட்டல் விட்டல் என்று தியானித்துக்கொண்டே காசை வியாபாரிகளிடத்தில் கொடுப்பார்கள். வியாபாரிகளும் விட்டல் விட்டல் என்று தியானித்துக் கொண்டே காசை பெற்றுக்கொள்வார்கள். இதனால் பண்டரிபுரத்திற்கு நாமபஜாரன்றும் சத்தியபுரி, யென்று நாமம் சொல்லப்பட்டது. அன்றியும் சிறு பிள்ளைகள் சென்று பாண்டுரங்கனை ஆலிங்கனஞ் செய்யினும், அவர்கள் காத்திற்குச் சரியொத்திருப்பார், பெரியோர்கள் சென்று ஆலிங்கனஞ் செய்யினும், அவர்கள் காத்திற்கும் சரியொத்திருப்பார். மேலும் அவர் பண்டரியில் நாலுலக்ஷத்து சில்லரை தம்பூராக்களுண்டு. சதவருடங்களுக்கு முன் அப்பண்டரி சமீபத்தில் ஒருஜாமபரியந்தம் பொன்மாரி பொழிந்தது இதுவன்றியும் அன்னப்பிரம்மம் ஜெகநாதமென்றும், பூரணப்பிரம்மம் திருப்தியென்றும், தாரகப்பிரம்மம் வாரணசியென்றும், நாதப்பிரம்மம் பண்டரிபுரமென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. புண்டரீகபக்தன் அண்டையில்வந்த பகவான் தொண்டர்களை யண்டித் தொண்டு செய்து அன்னமுண்டு உயர்ந்தேனெனவிண்டு ஆநந்தங் கொண்டு அக்கண்டம் அடங்காம லிருக்கும்படி புண்டரீகன் வேண்டிக்கொள்ள வரந்தந்து ருக்மணி சமேதனாக நின்ற திருக்கோலமாய் கருணை பொழியும் மாக்ஷிமையை ஆயிரம் பணாமுடிகளையும் இரண்டாயிரம் நாவுகளையு முடைய ஆதிசேஷனாலும் சொல்ல முடியாது. இத்தன்மை வாய்ந்த பெருமையும் அருமையுமாகிய பண்டரி புரத்திற்கு இடையிலுள்ள திண்டிரவனத்தில் நிவாசமாகிய உத்தவ சித்தர் முதலானோர்கள் நாபாஜி சித்தரைப் பணிந்து ஓ சுவாமி! ஜெயதேவர், கபீர், துளசிதாசர், நாமதேவர், ஞானேஸ்வர் ஆக ஐவர் சரித்திரங்களை தங்கள் திருவாக்கால் சொல்லக்கேட்டு நாங்கள் பிரமாநந்த மடைந்தோம். இன்னும் ஜீவன் முக்தர்களாய் பூமியிலுலாவும் பக்தர்கள் சரித்திரங்களைக் கேட்க ஆவல்கொண்டோம், தயைசெய்து சொல்லவேண்டும் மென்று ப்ரார்த்தித்த சித்தர்களை நோக்கி நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினார் கேளுங்கள் சித்தர்களே, இப்பூவுலகிலுள்ள ஆடவர்களும், ஸ்திரீகளும் ஸ்ரீமந்நாராயணனுடைய மாயையிலகப்பட்டு சம்சாரமென்னுஞ் சேற்றிற் படிந்து கரையேற அசக்தி யுடையவர்களாய் ஆசை மேலிட்டு மோசமார்க்கத்தைத் தொட்டு கெஞ்சித்தேனும் பகவானை யுபாசிக்காமல் விட்டு நாசமடைய நரகத்திற்குட்பட்டு ஞானவழியை விண்டு தீனராகிப் பண்டு சஞ்சல மேற் கொண்டு வஞ்சியருக்குத் தொண்டுசெய்து நாளைக்கிடத்தி உய்யும் வகையை விடுத்து ஜீவகாருண்ணியமற்று தேவகாரியம் செய்யாது செத்து பூவைபர்களையே பிச்சித்து மாவித்தையெனக்குறித்து கெர்வம் மேலிட்டு சிரசித்தும் தர்மமின்றிக்கெட்டு வஞ்சமனத்தால் தடைப்பட்டு கர்மத்துக்கென்நாளு முடன்பட்டுத் திரியும் பாமரர்களைத் திருத்தித் தன் திருவடியிற் சேர்த்துக்கொள்ள கருணைமேலிட்டு சாக்ஷாத் பரமபதநாதர் யாரை பூலோகத்திற் கனுப்பலாமென்று யோசித்து அக்கருணைக்கடலாகிய . பகவான் ஆத்துமகோடிகள் கடைத்தேறும் பொருட்டு வேதசாஸ்திர புராண இதிகாசங்களைத்தந்தும் ஞானமின்றி அஞ்ஞானிகளாய் போவதையுணர்ந்து ஸ்ரீமந்நாராயணன் ஜீவகாருண்யமடைந்து தானே மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ஸ்ரீராம, பலராம, கிருஷ்ணவதாரங்கள்செய்து அனேக தர்மங்களை யனுஷ்டித்துக் காட்டியும் உணராத மந்தமதிகளான பாமரர்களை ரக்ஷிக்கவெண்ணி மானைக்காட்டி மானைப் பிடிப்பாசைப் போலும் குளவி புழுக்களைக்கொண்டு வந்து தன்னிற மாக்குமாப்போலும் தன்னடியார்களான வியாசர், சுகர், வால்மீகர், உத்தவர் முதலானோரையும் அவதரிக்கச்செய்து பூமியிலுள்ள சாமான்னியரை திருத்தம் செய்வித்த படியால் அவர்களவதரித்து வெகுபேர்களைத் திருத்தி சிஷ்யராகச் செய்துக்கொண்டதுமன்றி லோகத்தாரையும் பகவந்நாம பாராயணஞ்செய்வித்தார்களென்று , நாபாஜிசித்தர் உத்தவசித்தர் முதலானோரை நோக்கிப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

பாயிரம்-முற்றிற்று

Koviloom Digital Library

ஸ்ரீ

ஸ்ரீ ர ஸ் து.

ஸ்ரீ பாண்டுரங்கப் பரப்பிரம்மணே நம:

ஸ்ரீ மகாபக்தவிஜயம்.

(ஏழாவது)

சக்குபாய் சரித்திரம்.

பகவான் துதி.

விருத்தம்.

திருவமர்ந்த மார்பா மிடத்துத் திருத்துழாய் முளரிபூண்ட
கருமுகில்மேனி மாயா கனகபீதாம்பர வுதாரி
பெருமையா யுலகோருன்றன் பேரின்பமடைய வெண்ணித்
தருமத்தை நிலைக்கவைத்த தனிய நின் சரண்புகுந்தேன்.



சக்குபாய் துதி.

விருத்தம்.

இக்குவலயத்தி லரியிணைமடி சம்பந்தமாகி
பக்தியினல் தனக்குபதில் பாண்டுரங்கன் றன்னைக்கட்டி
முக்தியடையவெண்ணி முகுந்தனை சேவித்தவன்னை
சக்குபாய் நின் பதுமமலர்ச் சரண்புகுந்தேன் றயைசெய்வாயே.

1-வது சக்குபாய் உற்பத்தி அத்தியாயம்.

சீர்தரும் கணபதிமூஷிகவாஹனு லம்போதரா வயன்றேர்தரம் தியானிக்கும் பக்குவர்களுக்கு எக்காரியங்களும் அக்ஷணமே முடியக் கிருபை செய்யும் சுக்கலாம் பாதரனுன விக்னேஸ்வரனை மூலாதாரத்திலும் நோக்கற்கரியசாக்ஷியாய் ஜீவன் மொக்க மடைந்தோர் வாக்கினில் நீக்கமின்றிய வாக்காளை நாக்கினிற்வரிந்த எண்ணேக்கமுள்ள பிரம்மாவை சுவாதிஷ்டானத்திலும், பகிர்முகம் நீக்கி அகமுகந்தாக்கி தானென்னுமம்மதை குன்றிச் சட்டகத்யான மின்றிச் சுகாநந்தத்தி லிருப்போர் வாசஸ்தானத்தை நீங்காத்திருமகளை லக்ஷஸ்தலத் திற் பக்ஷத்துடன் தரித்த அச்சுதனை மணிபூரகத்தி லும் தர்மங்கள் யாவுந்தெரிந்து மர்மங்களனைத்து மறிந்து கர்மங்கள் யாவுமெறிந்து பிரம்மாநந்தம் விரிந்து தன்னை மறந்திருப்போர்க்கு அன்னமும் பாலுமேந்திக் கொண்டவர் பின்னிழலைப் போற்றி

திரியும் அன்ன பூரணிக் கிடபாகமீந்த சங்கரனை அனுகத்திலும், பிரம்மானந்த வாரிதியில்மூழ்கி திரிகரணத்துன்பங்கள் மாழ்கி உன்மனியாவவஸ்தையிலிருப்போர்க்கேவல் செய்யு மாதவர்மேற் றனதாக்கினையைச் செலுத்தும் மயேஸ்வரனை விசுத்தியிலும் ஜாக்ரதை, சுவப்ன சுழுத்தி, துரியமுங்கடந்து துரியாதீத நிலைசைப் பொருந்திச் சங்கற்ப விகற்பமென்னும் இராப்பகலற்று நிருவிகற்பமா யிருப்போரைப் பணியும் பக்தர்களின்சித்தத்தைச் சுத்தமாக்கும் பிரசித்தனை நித்திய சத்திய சதாசிவத்தை ஆக்னேய சக்கரத்திலும் தரிசித்த பரிசுத்த உத்தவசித்தர் முதலானவர்களை நோக்கி இருமணிகளையும் ஒருமணியாக்கி ஆயிரத்தெட்டிதழ் பங்கய மேடையில் ஒரு காலை நீட்டி ஒரு காலையாட்டி காலனைவாட்டி வீணையைமீட்டி ஓசையைக் கூட்டிச் சுகாமிர்தத்தை யூட்டிச் சட்சக்ரேஸ்வர ரறுவருமோருருவாகிய கோடிசூரியப் பிரகாசக் கிரணங்கள் திரணங்களாய் மயங்கும்படி ஒளிவிளங்கிய சுப்பிரமணியரைப் பிரம்மரந்திரத்திற் காணுமற்கண்டு ஆனந்தங்கொண்டு அவர் கமனேகோசரமாய் மூவர் தேவர் மற்றியாவராலும் அறிவதற்கரியபரமாய் அபரோக்ஷமாய் அத்வைதமாய் சாக்ஷாத்காரமாய் தன்மய சின்மயமாய் நிஷ்களை புஷ்களமாயிருக்கும் பிரம்மாம்சபூதரான நாபாஜிசித்தர் சொல்லுகிறார்.

ஓ சித்தர்களே பக்தர்களே சீலர்களே சற்சங்கத்துக் கனுகூலர்களே ஸ்ரீரகுநாயகர் தன் மார்பிற் போட்ட மாலையிலுள்ள முத்துக்களை ஒன்றென்றுய்க் கடித்துப்பார்த்து ஞானரசமில்லை யென்றத் தர்மத்தை யெறிந்துவிட்ட பூரண பிரம்மக்ஞானியாகிய மாருதியின்றிருவுருவை வெகு சித்திரமாய் வரைந்திருக்கும் நீக்ஷியான அனுமக்கொடிகளும் பிருங்கிசனைத் தனசேட்டைக் காற்றினல் வாட்டியக் கேசனமுகிய வடிவை யெழுதியிருக்கும் மாட்சிமையான கருடத்துவசமும் புருஷமிருகத்திற்கும் பீமனுக்கும் நேர்ந்த வழக்கைத் தீர்த்த நடுநிலைமை பூண்ட தருமமே ஒருருவானயுதிஷ்டிரன் முதலான அரசர்களும் நாணும்படியான நீதிகள் நிறைந்தவர்களால் கட்டப்பட்ட வாயுமண்டல ஸ்பரிசத்தையும் பாபத்துக்கஞ்சி கோபித்துக்கொண்டிருக்கும் மேகஜலத்தின் ஸ்னானத்தையும் சந்திரமண்டலத்தை அளாவிய கோபுரங்களும் மாபுரங்களும்மாதர் போகத்தையும் மோகத்தையும் வென்றவர் களால் வகுத்த சத்தியலோகத்தார் பார்த்தாச்சரியப்படும்படியான ஓமகுண்டங்களும் பிதுர் பிண்டங்களும், பணத்தாசை கனவிலுமில்லார் புதுக்கிய யாகசாலைகளும் பெருஞ் சோலைகளும் சொற்பனத்திலும் தப்பிதம் செய்யாத அற்புதமானவர்களாற் செய்த தர்மதேவதை வாஞ்சித்திருக்கும்படியான அன்ன சத்திரங்களும் அதில் வர்ணசித்திரங்களும் இறந்தும் அரமேசெய்தானந்தமடையும், புனிதர்களாலியற்றிய பூந்தோட்டங்களும் அதில் நீரோட்டங்களும் அளகேசனும் துதிசெய்யு மேடைகளும் நீரோடைகளும். வண்ணமாடங்களும், நீண்டகூடங்களும் பரதநாட்டியத்திற் சிறந்த அரம்பை-ஊர்வசி மேனகை - திலோர்த்தமைகளுக்கு நிகரான தாசிகள் நடக்கும் ஆச்சரியமான ஆட்டங்களும், பவுத்தாவதாரனை பூரணாநந்த நிஷ்டையிற்றிகழ்ந்து மகிழ்ந்து யிதுவே யிருப்பிடமாகி க்ஷீரசாகரத்தை நினையாதிருப்பதென்ன பயித்தியமோ துரிதமாய் ஆதிசேஷன்மேற் சயனிக்கவாருமென் றோங்கார சப்தமும் ஹரிஓம் கிருஷ்ணு இந்த நாதாநந்தம் க்ஷீரசாகரத்திற் கேற்பதரிதாகையால் இப்பண்டரிபுரம் விட்டு நீங்காதிருப்பாயென் றாசையுடனோசையால்பாடும் பரம பாகவதர்களின் கோஷ்டமும் புண்ணிய க்ஷேத்திரமாகியும் அழகும் புகழும் அமைந்த பண்டரிக்கிடையில் சுஞ்சுருணி புரமென்றோர் கிராமமுண்டு அதில் பிரமகுலத்திற் பிறந்தவர் சாதுக்கள் சேவையிற் களிகொண்டவர், அதிதியப்பாகதருக்கு அன்னமளிக்கும் விரதம் பூண்டவர், ஸ்ரீபாண்டுரங்க நாமத்தையிரவும் பகலும் மனதிற் கொண்டவர், மண் பெண் பொன் யென்னு மூவாசை விண்டவர், ஜீவகாருண்ணிய நிலைபூண்டவர் ஏழைகளுக் கீவுயென்றும்விடாதவர், விஷயாந்திரங்களைத்துறந்தவர், உத்தமகுணத்திற்சிறந்தவர், கனவிலும் பொய் சொல்லாதவர், இனமில்லாதவரிடம் என்றும் செல்லாதவர், மிகவும் தனம் படைத்தவர், அகமமதை விடுத்தவர், அழகில் மன்மதனை யொத்தவர், கெங்காதரா வென்றபேர் வகித்தவர், மிகவும் பரிசுத்த உத்தமர், இவருக்கு நற்குண நற்செய்கைகளும் ரதிக்கு நிகரான அழகுவாய்ந்த கமலபா யென்னும் பேர்வகித்தவள், நன்னடக்கையுற்றவள், அதிதிகள் பூசை பெரும்பாலுங் கற்றவள், கற்பினில் மிகுந்தவள், கணவனே தெய்வமென்றெண்ணும் நற்றினவள், பந்துஜன முதலானோர் தன்பதிக்கு நிகரென்றென மதித்தவள், நல்ல கால்வழியி லுதித்தவள், புத்திரனுக்கு அன்னபானதிகள், மேலுமேலும் ஊட்டிப் போஷிக்கும் அன்னைபைப்போலத் தன் கொழுநனைப் பிரியமோடு போஷிப்பவளும் எஜமானிக்குப் பயந்து வேலைகளைச் செய்யும் வெள்ளாட்டியைப்போல தன்னுயக

Koviloor Digital Library

னுக்கு பயபக்தியோடும் பணிவிடை செய்பவளும், சௌந்தரியத்தில் ஸ்ரீமகாலக்ஷ்மியை நிகரானவளும் விடநாயகன் இஷ்டப்படி மன்மத லீலையில் ரமிக்கும் வேசியைப்போல் தன் கணவ னிஷ்டப்படி, மதனலீலையி லீடுபடுபவளும், முன்பின்வருங் காரியா காரியங்களை யோசித்து அரசனுக்குப் போதிக்கும் மந்திரியைப்போலத் தன் கணவனுக்கு போதிக்கு மவளும், பொறுமையில் பூமாதுக்கு நிகரானவளும் இவ்வாறு குணங்களும் பொருந்திய கமலபாய் தனக்கு சகல பாக்கியங்களு மிருந்தும் புத்திரபாக்கியமில்லாக் குறையால் அனேக விரதங்களை யநுட்டித்தும் பாவன தீர்த்தங்களிற் படிந்தும், திவ்ய தேச யாத்திரைசெய்தும், கோதான, பூதான, வஸ்திரதான, அன்னதான, ஸ்வர்னதான கன்னியாதான மென்னும் ஷோடசதானங்க ளன்றியில் இன்னுமனேகக் கிருஷிகளைச் செய்தும் மதலைப் பேறு உண்டாகாமையால வியாகூல மேலிட்டு னொந்தார்களென் றுரைத்த நாபாஜி சித்தரை நோக்கி உத்தவசித்தர் முதலானோர்கள் பணிந்து ஓசுவாமி? எங்களாண்டவரே கிடைத்த மாத்திரம் அனுபவிக்கவேண்டுமென்று தர்ம சாஸ்திரங்கள் முறையிட அப்படிக்கிராமல் இவர்களேன் புத்திரருக்காய் சிரமப்பட வேண்டுமென்ற உத்தவசித்தர் முதலானோரை நோக்கி நாபாஜி சித்தர் சொல்லுகிறார். கேளுங்கள் சித்தர்களே, புத்திரரில்லாதவர்களுக்குப் பரலோகமில்லையென்ற பிரமாணமிருப்பதால் கெங்காதராவும் கமலாபாயும் வைராக்கிய சித்தங்கொண்டு தவசு புரிந்தேனுந் தநயரைப் பெறவேண்டுமென்று யோசித்து ஆசானிடஞ் சென்று வணங்கி தெண்டனிட்டு தங்கள் மனக்குறையை தேசிகருக்கு விண்ணப்பஞ்செய்து தபசு செய்வதற்கு தகுதியான மந்திரங்களை அடியேங்களுக்கு கிருபைசெய்து உபதேசிக்க வேண்டும் சுவாமியென்று வேண்டிக்கொள்ளும் தம்பதிகளை ஆசாரியர் விளித்துக் கேளுங்கள் சிஷர்களே, யுகம் கலியுகமாகியபடியால் தபசு செய்வது மகா அருமை அது செய்யினும் உங்கள் கோரிக்கை நிறைவேறுவது இந்த யுகத்தில் விட்டல் நாமத்யானஞ் செய்தால் சர்வ அபிஷ்டங்களுஞ் சித்திபாகும் மேலும், இம்மண்டலத்தில் தொண்டரை காக்கும் பொருட்டு விண்டு வானவர், பண்டரியில் நிவாசமா மெழுந்தருளியிருப்பதால் அவ்வெம்பெருமானைச் சிரத்தை பக்தியோடு துதிசெய்வீராகில் உங்களுக்கு மதலைப் பேறுண்டாமென்று தேசிகர் மங்களவாசிகள் கூற அம்மொழியைச் சிரசாகவகித்து இருவரும் பீமநதியில் மூழ்கி வருணாச்சிரம தருமப்படி லவாடத்தில் புண்டாரங்கள் தரித்து பாண்டுரங்கன் சந்நிதிக்குச் சென்று முக்காலும் வலம்வந்து அருச்சனை யாராதனை ஆலிங்கனுதிகளும் நல்லடியார்களுக்குத் ததியாராதனைகளும் இன்பமாய் அன்பாய் பூசித்து நேசித்துதொண்ணூறுநாள் மூன்றுமாதம் கைங்கரியங்கள்செய்தார்கள் இதனால் பக்தவச்சலனும் கருணாநிதியும், ராதாருக்மணிபதியும், யேழைகளுக்குக் கதியுந் தன்னிகரில்லா விதியும், பாண்டுரங்கனுமாகிய பரமபத நாதன் கமலாபாயின் சொர்ப்பனத்தி லெழுந்தருளி யுன்னிஷ்டப்படி ஓர்பெண்குழந்தை யுதிக்கக்கடவதென்று சொல்லி மறைந்தார்.

கமலாபாய் திடுக்கிட்டெழுந்து நாயகனையழைத்து ஓ சுவாமி? கோடிசூரியப் பிரகாசம் பெற்ற வெம்பெருமான் பெண்கனவிற் றோன்றியோர் பெண்குழந்தை யுண்டாகுமென்று சொல்லிச் சென்றுரென்றுரைத்துப் பல பிரார்த்தனைசெய்து புருடனை யழைத்துக்கொண்டு தன்னகரஞ்சென்று பகவானை தியானித்துக் கொண்டிருந்தாள். கெங்காதராவும் ஆனந்தமேலிட்டு வரிசையாய்ப் பத்து மாதமுஞ சடங்குகள் நடத்தினான் கமலாபாய் பூரண கருப்பமாகி தாமரைக்குமித்திரனாகிய சூரியனை நிகர்ப்ப பெண்குழந்தையைப் பெற்றாள் இதையறிந்து கெங்காதரராவ் வறுமையால் மிகவும் நொந்து அலையும் தரித்திரனுக்கு புதைய லகப்பட்டதைபோல் புளகாங்கிதங்கொண்டு பனிரண்டாநாள் அக்குழந்தைக்கு ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்கள் தரிப்பித்து வேதியர் அதிதியர்பாகவதாள் முதலானோருக்கும் ஆடையாபரண பூமிகோதான முதலாகிய பல தானங்களித்து அக்குழந்தையை முத்தமிட்டு உள்ளங்களித்தறு பலபெரியோர்களையும் ஆசாரியரையும் பந்து மித்திரர்களையும் வரவழைத்து அம்மதலையை ஆசாரியிடந்தந்து ஓ சுவாமி? தங்கள் கிருபையினா லுண்டாகிய இக்குழந்தைக்குத் தாங்களே நாமகரணஞ் செய்யவேண்டு மென்று புகழ் தேசிகரும் நல்ல வாசகருமான ஆசாரியர் இக்குழந்தை பிறந்த மாதம் வாரம் திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் இதுகளை நன்றாய் ஆராய்ந்து பார்த்து சக்குபாயென்று நாமமிட்டு ஆசைமேலிட்டு ஓசையாய் கூப்பிட்டுப் பலரும் மங்களவாசிகள் கூறப்பட்டு புத்ரோத்சவம், பிரமோத்சவமாகக் கொண்டாடி பலவிதங்களாய்ப்பாடி தன்னை மறந்தாடி பக்தர்களுடன் கூடி வந்தவர்கள் யாவருக்கும் பூரணமாய் தானந்தந்து அனுப்பி விந்தையாய் யாவர்க்கும் அன்னம் பகர்ந்து தானு மின்பமாய் புசித்து

தாம்பூல சந்தன பரிமள மலர்களணிந்து தங்கள் தங்களகஞ் சேர்ந்தார்கள். பிறகு இக்குழந்தை நாளுக்கு நாள் செல்வமாய் அமாவாசை கடந்த மூன்றுநாளிருந்து விருத்தியாகுஞ் சந்திரனைப் போல வளர்ந்து ஒன்றிரண்டு மூன்று நான்கு வருடமாகவே இக்குழந்தை பலபெண்களுடன் கூடி யாட இப்பெண்ணைத் தாய் தந்தையர்கள் கண்களால் பார்த்து மகிழ்ந்தார்கள் பின்பு சக்குபாய் தனக்கு நிகரான ஐந்துவயதுடைய பெண்களுடன்கூடி பலரும் நடக்கும்படியான பாதையில் மண்ணினுற்சிறு வீடுகள் கட்டி மனதின்எண்ணப்படி அனுதினமும் விளையாடிக் கொண்டிருந்தது.

௩-வது ஸ்ரீபாண்டுரங்கன் பிராமணத் திருமேனியாய் வந்து சக்குபாயிக்கு மந்திரோபதேசஞ் செய்த அத்தியாயம்

பாண்டுரங்கன் சக்குபாயின் மனதைச் சோதிக்கும் நிமித்தியம் அதிதியைப்போல உருவமெடுத்து இடையில் வைதீகர் தரிக்குங் கரையில்லாத தாவள்ய வெள்ளை வஸ்திரமுடுத்தி நெற்றிமுதல் கேசவாதிபன்னிரு திருமண் ஸ்ரீ சூர்ணந்திருத்தி மிடத்தில் வனமாலை யசைந்தாடத் தரித்து கையில் தம்பூரெடுத்து ஐயன் கல்யாண குணங்களைப் படித்து ஆங்காங்கு பலவாய் நடித்து தூய்யராகிய பாகவதர்கள் தன்னைத் தொழுதேத்தப் பலர் போற்ற பையாவிற்றுயில் நாரணன் பாடி யாடி கூடி தேடி புறப்பட்டுவரும் ஐயனைக் கூட்டமாய் கூடி விளையாடிக் கொண்டிருந்த பெண்குழந்தைகள் யாவருங் கண்டு பயந்து கூக்குரலிட்டு ஓடிக் கொஞ்சந் தூரத்தில் நின்று பார்த்தார்கள். ஓடி வருவதற்கு வாட்டமிராமையால் சக்குபாய் அப்பெரியோரிடத்தில் அகப்பட்டுக்கொண்டாள், இவ்விடத்தில் நாமிருந்தால் நம்மையுங் கஷ்டமடையும்படி வருத்துவர் வாருங்களடி. யென்று சொல்லிக் கொண்டேதங்களகம் சேர்ந்தார்கள் பிறகு அதிதியைப்போல ப்ராமணத் திருமேனியடைந்த பாண்டுரங்கன் பகவந் நாமாமிர்தத்தைப் பானஞ் செய்து வெறி கொண்டு தன்னை மறந்தாடும் பாகவதர்களைப்போல நடித்துப் பாதமலர் பட்டு அச்சிறுவீடு கலைந்து கலைந்ததைத் தானறியான் போலக் கலைத்து கீர்த்தனைகளைப் படித்து பஜனை செய்துக் கொண்டேநடந்தார். மண்ணினுற் கட்டித்தான் விளையாடும் வீடு கலைந்திருப்பதைப் பார்த்து சக்குபாய் வேகமாய் யெழுந்தோடி அம்மறையோரைத் தடுத்து ஐயா பெரியோரே பிக்ஷையெடுக்கிற உமக்கு இத்தனைகெர்வமா? முன் செல்வச் செருக்கை யடைந்தவரோ? இச்சிறுவீட்டைக் கலைத்த காரணம் யாதோ அதைத் தெரியச் சொல்லிவிட்டு சந்தோஷமாய்ப் போமையா வென்ற சக்குபாயின் மொழியைக் கேட்டு அதிதியாகிய பகவான் சொல்லுகிறார்.

கேளும் அம்மணி! நான் பகவத் பக்தியினால் யென்னை மறந்து பிரம்மாநந்தமாய் நடித்தபோது ஒருக்கால் யென்னுடைய பாதம்பட்டுக் கலைந்திருந்தாலிருக்கலாம் வேணுமென்றகங்கொண்டு இவ்வீட்டைக் கலைக்க யெனக்கு விரோதியா அக்காரணத்தால் கலைத்தேனென்பதற்கு யாதொன்று மறியாத பெண்பேரில் உனக்கித்தனை கோபமா இவ்வளவு மனஸ்தாபமா? இதுயெவரிட்ட சாபமா யான்முன் செய்தபாபமா? ஓ குழந்தாய் முன்னிருந்ததைப் போலிவ்வீட்டைகட்டிக் கொடுக்கும்படி நேமித்தாலப்படியே செய்கிறேன். இதுவன்னியொரு முக்கியமான காரியம் ஒன்று சொல்லுகிறேன். அதென்னவென்றால் உன்னிஷ்டப்படி. நீ சொல்லிய வேலையைச் செய்துக்கொண்டிருந்து காலம் போக்கினால் நான் ஜீவனஞ் செய்வதெப்படி. ஆகையால் தயைசெய்து யெனக்கு விடைதந்தால் உனக்கு மிகுந்த புண்ணியமுண்டாமென்ற அதிதியாகிய பகவான் வாக்கியங்களைக் கேட்டுசக்குபாய் ஐயா அதிதியே நீர்சொன்ன மொழி மிகுந்த ஆச்சரியம்! ஆச்சரியம்! நன்றாய் வாசித்துத் தேர்ந்தவராகத் தோற்றமாகிறது யெதினாலென்றால் மறுபடி வேறொருவர் வாயெடுத்துப் பேசாமல் ஜெக்பந்திகட்டிப் பேசுகிற உம்மோடு வாதுபேசுவதற்கு நான் வாசித்தவளல்ல வீணாய் ஒருவருக்கொருவர் தர்க்கமிடுவதால் பயனில்லை இவ்வீட்டைக்கலைத்த குற்றத்திற்காக் உம்மிடத்திலிருக்கிற தம்பூரைக் கொடுத்துவிட்டு சுகமாய் போய் வாருமையா வென்றனள். மாயாவதிதி யிவ்வார்த்தையைக்கேட்டு அகத்தில்களிப்பும்முகத்தில் சுளிப்புமடைந்து ஓ சிறு பெண்ணே! அவ்வீட்டைக்கலைத்ததினால் வந்த பழுதென்ன தம்பூரதற் கிணையாமோ நிதானித்து யெனது வார்த்தையைப் பொறுமையுடன் கேள் நிந்தனை செய்யாதே பேதையே அநித்தியமாகிய சிறிய வீட்டைகலைத்தால் நித்தியமாகிய பெரிய வீட்டையடைவார்களெனவேதங்கள் முறையிடுகிறது அன்னியிலும் ஜனங்கள்நடக்கும் படியான வழியில்வீடுகட்டி நீ விளையாடுவதால் பலர்பாதம்படுமேயன்றிப் படாமற் போகாது மேலும் உனக்குச் சாந்தமான நிலத்திற் கட்டி விளையாடும்போது யென்னைப்போலெத்தவர் வந்து கலைத்தால் அதி

னால் குற்றமே ராஜவீதியாதலால் தப்பில்லை ஆகையால் யென்முன்னே உபயோகமில்லாத வார்த்தைகளுரைப்பதில் பிரயோஜனமொன்று மில்லையென்று சொல்லி நடந்தார் சக்குபாய் மறுபடியும் பின்றொடர்ந்து மாயாவதிதியைத் தடுத்துத் தம்பூரைத்தந்தாலொழிய விடேனென்று மறுத்து ரோஷமேவிட்டு ஒருவருக்கொருவர் சௌரியம் பேசிக்கொண்டார்கள். இதெப்படி யிருந்ததென்றால், வடதேசத்திலிருந்து தென்தேசம்போகிற ஒருவன் தென்தேசத்திலிருந்து வடதேசம் போகிற ஒருவன் இவ்விருவரும் ஓர் சத்திரத்திற் படுத்து நித்திரை செய்தார்கள் விடிவோரையில் வடதேசத்தான் முன்னுதாயெழுந்து தன்னைக்காவலாய்கொண்டுவந்த இருப்புவளை தடியையெடுத்தான் அத்தடிதென்தேசத்தான் தொள்ளைக்காதில் மாட்டிக்கொண்டதை அறியாமல் சித்திருட்டாக யிருந்தபடியால் நேரமாய்விடுகிறதே யென்று வடதேசத்தான் வேகமாய் வளைதடியை வலிக்க தென்தேசத்தான் காது காது யென்றான் வடதேசத்தான் முறடனானபடியால் நாதி நாதி என்று வலித்ததைப் போல விடாக்கண்டன் கொண்டாக்கண்ணனை யொத்திருந்தது பிறகு மாயாவதிதி ஓ சிறு பாலிகையே யிருந்த கஷ்டப்பட்டுத் தவஞ் செய்து பெற்றெடுத்த உன் தாய் தந்தையரிடஞ் சென்று நம்மிருவருக்கும் நேரிட்ட வழக்கைச் சொல்லுவோம் வா அவர்களிவ்வழக்கை விசாரித்துத் தம்பூரைக் கொடுத்துப் போமையா வென்றாலுஞ் சரி அல்லது தம்பூரைக் கொண்டு போமையா வென்றாலுஞ்சரி ஒப்புக்கொள்வனே தவிர உன்னிடமிந்தத் தம்பூரைக் கொடுப்பேனென்று கனவிலும் நினையாதே யென்றார் சக்குபாய் ஐயா பெரியோரே நானும்மை நல்லவாசிப்பாளி யென்றும் புத்திசாதுரிய முடையவ ரென்றும் மதித்திருந்தேன் இப்போது நீர்சொல்லிய வார்த்தையினால் வாசித்த தன்மையும் சாதுரியமும் வெட்ட வெளியாய் விட்டது அதெவ்வாறென்றால் நம்மிருவருக்கும் நேரிட்ட வழக்கை யென் தாய் தந்தையர்களிடம் நீர் சொன்னால் அவர்கள் யென் பக்ஷமாய்ப்பேசி தம்பூரை வாங்கி யெனக்கே கொடுப்பார்கள் இது சங்கதி நாலுபேரறிந்தால் உங்களுக்கு அவமான மல்லவோ அப்படித்தங்களை அவமானப்படுத்த யெனக்கிஷ்டமில்லை ஆகையால் நீரும் யானுமரிந்ததாக யிருக்கட்டும் அன்னியிலும் அவாள் வீட்டுப் பிள்ளையொருவன் இவாள் வீட்டுப் பிள்ளையொருவன் யிவ்விருவரும் விளையாடிக்கொண்டிருக்கும்போது அந்தப் பிள்ளை இந்தப் பிள்ளையை அடித்துவிட்டு ஓடினான். அடிப்பட்ட யிப்பிள்ளை யழுதுகொண்டே தாயாரிடஞ் சென்று சொல்ல தாயார் அது தாளாமல் தன் பிள்ளையை யழைத்துக்கொண்டு அப்பிள்ளையின் அன்னைபாற்சென்று இப்படியும் அடிக்கலாமா உன்பிள்ளையென்று சொல்ல அப்பிள்ளையின் அன்னை அடியம்மா என்பிள்ளை நல்ல உத்தமனுச்சுதே ஒரு பிள்ளைகளுடன் சேரான் வீட்டை விட்டெங்குமேகான் யென்பாளே தவிர தன் புதல்வனைத் தானே காட்டிக்கொடுப்பாளா? இதுபோல் யென் தாய் தந்தையர்கள் என் பங்கிலே யிருந்து பேசுவார்களே யல்லது உனக்காகக் கிஞ்சித்தும் பேசார் ஆகையால்ரெண்டாவது மனிதனறியா முன்னம் தம்பூரைக் கொடுத்துவிட்டு கௌரமாய் போமையா வென்றனள். அதைக்கேட்ட மாயாவதிதி கருணையோடும் தம்பூரை சக்குபாயிடங் கொடுத்துவிட்டு நான் போய்வருகிறேனென்றார் சக்குபாய் ஓ சுவாமி! தங்களிடம் வாதாடி யித்தம்பூரை வாங்கினேன் இதைவைத்துக் கொண்டென்ன செய்கிறது இந்த மர்மங்களைச் சிறுவளாகிய யேழைமேல் கிருபைசெய்து சொல்லுமையனே யென்றாள். மாயாவதிதி சந்தோஷ மனமுடையவராய் கேளும் அம்மணி இத்தம்பூருக்கு தூபதீப நைவேத்தியந் தந்துசுத்தி கூட்டியதில் வைத்து பகவன்னும பாராயணஞ்செய்வது லோக வழக்கம் ஆகையால் இது உன்னிடமிருந்தால் நீ யென்ன செய்வாய் யாதொன்று மரியாயே முழக்கம் யென்றனர்.

சக்குபாய் ஓ ஐயா! அருள்மெய்யா மிகுதுய்யா கிருபைசெய்யா அடியாளும் தாங்கள் சொல்லுகிறபடி செய்ய வேண்டும் அதையெனக்குச் சொல்லும் இன்னமும் என் உம்முடைய மனம் எவ்வளவு மிறங்கவில்லை யென்னுடைய மனம் தேவர்கட்டளைப்படி செல்லும் யென்ற சக்குபாய் மொழியைக் கேட்ட அக்குரவன் மிகவு மதிசயத்து அக்குதலையை இருகரங்களாலும் கூசாமலெடுத்து மடியின் பேரில் பதலமாய் வைத்தொரு நாமம் இதராளறியாமல் உபதேசித்தார் எந்த நாமமென்றால், மந்திரங்களில் ஆதியாகியும் நாராம் அயனம், நமசப்தங்கூடிய மூன்று பிரிவாகிய அஷ்டாக்ஷரநாமத்தை யன்போடுரைத்த மாயாவதிதியை நோக்கி சக்குபாய் சுவாமி இந்தபேர் யெனக்குத் தெரியமாட்டாதோ! இதை யிதராளறியாமல் அதிரகசியமா யுரைத்தீர் இவ்வூரில் இப்பேர்கொண்டவர்கள் அனேகரிருக்கிறார்களாகையால் இதை மெய்யாக உரைப்பீராகிலிந்தத் தம்பூரைத் தருவேன் மேற்கோளுடன் அடியாள் மனங்களிக்கும்படி சொல்லுமையாவென்ற சக்கு

Koviloor Digital Library

பாயியை நோக்கி மாயாவதிதி ஓ சிறு குழந்தாய் இந்த நாமத்தை நம்பித் துதித்துக் கெட்டவர்களில்லை, இப்படியில் நம்பி யநுட்டித்து கடத்தேறினவர்கள் யாரேனுமுண்டோ வென்பையோ அநேகர் முக்திபடைந்தார்கள், அவர்கள் யாரென்றால் வியாசபராசரசுகசனகநாரதர் ருக்மாங்கத அம்பரீஷ த்ருவ கஜேந்திரஸிபந்ஜீவியாகிய விபீஷணசபரிசுக்ரீவ சுகவாசுதேவர் விதுர த்ரௌபதி ப்ரகலாத குசேல சோகாமேள கபீர் கமால் புரந்தரவிட்டல் ராமதாசர் பெரியதாசர் முதலா யின்னுமனேகர்கள் உனக்குரைத்த இந்நாமத்தை தியானித்துப் படைவீடடைந்தார்கள், ஆகையால் அருமையாகிய அஷ்டாக்ஷர மென்னும் நாமத்தை மனந்தனிலிருத்தி சர்வதேச சர்வகால சர்வாவஸ்தையிலும் தியானஞ் செய்வையாகில் மறுமைக்கு மெய்ப்பதம் யெம்பெருமான் தடையின்றி யளிப்பரென்றார் இதைக்கேட்ட சக்குபாய் யெந்தையே யென்னையாட்கொள்ளவந்த அருட்கடலே இம்மந்திரத்தை யெத்தன்மையா யிருந்து தியானிப்பது தியானித்தால் யிடையில் யேதாகிலுஞ் சங்கடங்கள் நேரிடுமோ இதுகளையெல்லாம் ஒன்றொளியாமல் நன்றாகத்தெரியச் சொல்லவேண்டும் சுவாமியென்ற சக்குபாயியை நோக்கி மாயாவதிதி கேளாய் பாலிகையே காமக்ரோத லோபமோகமத மாச்சரியங்களென்னும் ஷட்வர்க்கங்களும் யிந்திரியங்களையும் நீக்கி பூததயை ஜீவகாருண்ணிய சற்சன சகவாசமும் துர்ச்சன நிக்ரகமும் அதிதிபூசையும் தானத்திலாசையும் ஆசாரியபக்தியும் சர்வத்திலும் விரத்தியும் சாது சேவையிலா சக்தியும் யிடைவிடாதுனக்குண்டாகில் சுலபமாய் முக்திகிடைக்கும். மேலும் பாலிகையாகிய நீ ஒரு நாயகனை விவாகம் செய்துகொள்ளுகிற பரியந்தம் தாய்தந்தையர்களிடத்தில் அடக்கம், விவாகமானபின் புருடனிடத்தில் அடக்கம், பிறகு பிள்ளைகளிடத்தி லடக்கம், நீ பெண்பிள்ளையாகையால் மரணபரியந்தம் ஒருவருக்கு அடங்கியிருக்க வேணுமேயன்றி சுதந்திரங் கிடையாது ஆகையால் கீழ்ச்சொன்னவர்களால் விபரீதங்களும் விரோதங்களும் நேரிடும் குற்றமற்ற பக்தி செய்வதற்கு யெதுவரினும் வரட்டுமென்ற வைராக்கியமுனக் கிருக்குமாகில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல பரமபதம் சுலபமாய் கிடைக்கு மென்று சொல்லக்கேட்ட சக்குபாய் அதிதியை நோக்கி யென்னாண்டவனே பலவிதத்தாண்டனே யேழையைக்காக்கவருள் பூண்டயனே கிருபை நீண்டவனே காடாந்தகாரவிருள்மூடிய அடியாள் மனதில் அஷ்டாக்ஷர நாமமாகிய கதிரவனை யேவி அந்தகாரமாயைப்போக்கி தெளிவடையும்படி பரிசுத்தமாகச் செய்த நற்குருவே யுன்னிணைமலரடிகளை தினமும் பணிவேன் தேவரைச் சொந்தமாகபாவித்துக் குற்றேவல் செய்வேன் சுவர்னத்தினுலான தாமரைமலரினுலர்ச்சிப்பேன் அடியாளுக்கு நேரிடும் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டு சதாயிருக்கும்படி தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன் யென்ற சக்குபாயியை நோக்கி அருமைப் புதல்வியே நான் வந்து வெகுநேரமாச்சுது. நான் போய் மடிசஞ்சி முதலானதுகளை யெடுத்துகொண்டு வருகிறேன் அன்னியிலும் நான் உனக்கு சொல்லியதெல்லாம் மெய்யென்றெண்ணாதே சொற்பனங் கண்டதுபோலெண்ணியிருமென்ற மாயாவதிதியை நோக்கி சுவாமி, தேவரீர்போனால் அவ்வழியைப் பார்த்துப் பார்த்துத் திகைக்குமே மிகவும் பிரகாசம் பொருந்திய பொற்பதங்களைத் தெரிசித்த கண்கள் ஆகையால் இத்தனை நாளில்வருகிறேனென்றோர் கெடுவுசொன்னாலொழிய நான் விடைதர மாட்டேனென்று சித்தமாயெண்ணும் யென்ற சக்குபாயியை நோக்கி மாயாவதிதி ஐந்து வருடத்தில் வருகிறேனென்றார் அதுகேட்ட சக்குபாய் பிரிவாற்றாமையாலும் நெடுநாளாகையாலும் சோகித்து மூர்ச்சை யடைந்தாள் உடனே ஐயன் ஐந்துமாதத்தில் வருகிறேனென்றார் இதைக்கேட்ட சக்குபாய் மூர்ச்சை தெளிந்தெழுந்து பச்சாதாபத்தோடு தம்பூரைக் கொடுத்தாள் மாயாவதிதி தம்பூரைப் பெற்றுக்கொண்டு அதுர்சனானார். இதைக்கண்ட சக்குபாய் ஆச்சரியப்பட்டு ஓகோ சாமானிய பிராமணரென்றிருந்தேன் இப்பரமாத்மா பாண்டுரங்கனென்றுருகி அகோ யெந்தையே யடியாளறியாமற் செய்த வபசாரத்தை மன்னித்து ரக்ஷிக்கவேண்டும் வாயில் வந்தபடியேதேதோ யான் பாவியானேனே மிகுந்த கோபியானேனே ஓ சுவாமி தங்களுடைய சேவையி லீடுபட்ட நேத்திரங்களுக்கு குளிர்ச்சியும் தேவரீருடைய வாக்கிலிருந்து தரும் மிருது வசனங்களாற் செவிகளுக்கமிர்தமும் நாவுக்குருசியும் மனதுக்குச்சுகமும் தேகத்துக்குப் சம்மானந்தமு முண்டாக்கும் பகவானே யெப்போதும்மைக்காண்பேன் யென்னாளு முன்னை மறவேன் யெப்படி. யுயிர்தரிப்பேன் லோகமாயை யென்று துறப்பேன் கெட்டகுணங்களை யெப்போதொழிப்பேன் சற்சங்கத்திலினி காலம் கழிப்பேன் துற்சங்கத்தைக் காணில் பழிப்பேன் யென்று

Koviloor Digital Library

முகத்தில் விழிப்பேன் பென்றிப்படி மாரா விருப்பங்கொண்டு நீராயுருகி நின்று நேமமோடு விண்டு நாமாமிர்தத்தை யுட்கொண்டு மானசிக பக்திசெய்துக்கொண்டு சக்குபாய் நித்திரையிலிருக்க அயல் வீட்டுப் பெண் பிள்ளைகள் வழக்கப்படி விளையாடும் பொருட்டு அதிகாலையில் வந்து அடிசக்குபாயீ யின்னமென்னடி தூக்கம் றென்றதட்டி யெழுப்பசற் குருவுதான் வந்தாரெனத் திடுக்கிட்டெழுந்து சக்குபாய் யேக்கங்கொண் டிருப்பதையறிந்து பெண்பிள்ளைகள் ஒருவருக்கொருவர் யோசிக்கிறார்கள் விளையாடுவதற்கு ஒருவருமில்லையே யென்ற யேக்கமும் தூக்கமுமாக யிருக்கிறாள் நாமெல்லோரும் சமீபத்திற் சென்றழைப்போம் வாங்களடியென்று யாவரும் நெருங்கி சக்குபாய் யின்று நாம் விநோதமான வீடுகளைக்கட்டி விளையாடுவோம் வாடி - யேனிதா முகவாட்டமா யிருக்கிறதே அதென்னடி. நாங்களிருக்கிறபோது உனக்கென்ன குறையடி. அதைச் சொல்லாவிடில் நாங்கள் போகமாட்டோமென்று சொன்ன பெண்களை நோக்கி சக்குபாய் அடியென தருமைத்தோழிகளே யென்னன்பிற்குரிய நாதன் ஐந்து நாளையில் வருகிறேனென்று சொல்லிப்போய் மேல் ஐந்து நாளாய்விட்டது. இன்னும் வரவில்லை ஆகையால் அவர்வந்தால் விளையாட வரலாமென் றெண்ணுகிறேன் உங்களுக்குக் கிஞ்சித்தும் புத்தியில்லையோ சொல்லுங்கள் யென்றனள், பெண்கள் இவளுக்கு நாயகனேது யிதற்றுகிறாள் சீச்சி நாமரியோமே தாயார் வீட்டிலிருக்கும் நங்கைக்குப்பந்து மித்திராளுக்குத்தெரிவிக்காமலா விவாகம் செய்தார்கள். இதை யோசிக்க மிகுந்தவாச்சரியமாயிருக்கிறது ஆகிலுமினியொரு சந்தேக மிருக்கிறது அதாவது சுமார் ஒன்பது நாளைக்கு முன் ஒரு பெரியவர் வரக்கண்ட நாமெல்லோரும் பயந்து ஓடி வந்தோம் சக்குபாயி மாத்திரந் தனித்திருந்தாள் அச்சமயத்தில் அப்பெரியோர் யேதோ போதித்து விட்டாப்போல் தோற்றுகிறது, ஆ, ஆ, இப்பெண்நல்ல புத்திசாலி யாச்சுதே யிவளுக்கிப்படிப்பட்ட பயித்தியம் வாய்ச்சுதே இன்னுஞ் சில நாளிவளோடு கூடியாடுவதற்கில்லாமற் போச்சுதே யென்ற விபாகூலமடைந்து பெண்கள்யாவரும் சக்குபாயின் அன்னையிடத்திற்கேகி அம்மணி தங்கள் புதல்வியை விளையாடவா வென்றழைத்த யெங்களை புத்தியில்லாதவரென்றும் ஞான சூனியர் யென்றும் தன்னுடைய நாயகன் போய் பத்துநாளாச்சுது அவரின்னம் வரவில்லை வந்தவுடன் விளையாட வருகிறேன் யென்றும் சொல்லுகிறாள். இப்படிச் சொல்வதற்குக் காரணம் யாதென்றால் சுமார் ஒன்பது நாளைக்குமுன் பெரியவரொருவர் சக்குபாயுடன் தனித்து வார்த்தையாடிக்கொண் டிருந்தார் அவரேதோ போதித்தாற் போல யெண்ணுகிறோம் ஆகையா லிப்பெண்பயித்தியம் பிடித்தவளைப்போ லிருக்கிறாள் இவளை ஜாக்கிறதையாயப்பாருங்க ளென்றுசொல்லிய அப்பெண்கள் மொழியைக்கேட்ட கமலாபாய் தன்மகளாகிய சக்குபாயை யழைத்து அடி சக்குவேளைக்குக்குளிக்காமலும் நல்லாடை யாபரணங்க ளணியாமலும் அன்னபானாதிகளைப் புசியாமலும் உறக்கமின்றிக் கலக்கமுடனிருப்பதுந்தவிர பெண்களுடன் கூடி இயல்பாய் விளையாடாதிருப்பதும் பெண்கள் விளையாட வழைத்தால் எனது நாயகன் வந்தால் வருகிறெனென்பதும் அவர்களை வைவதும் உனக்கு யிதமுறையோவென அநேகபுத்திமதிகளைத் தாய்தந்தையர் சொல்லியும் கேளாள் பகவான் வரவில்லையென்ற யேக்கமும் பாண்டுரங்கநாமாமிர்தத்தில் நோக்கமும் ஊணுமறப்ப தூக்கமும் யெம்பெருமான் சொல்லியபடி நடக்கும் போக்கியமும் உடையவளாயிருக்க தாய்தந்தையர் யிவ்விரகசியவறியாமல் ஓ தெய்வமே இதற்குத்தானா அநேகவிரதங்களை யநுட்டித்ததும் திவ்யதீர்த்தங்களாடியதுந் திவ்யதேசயாத்திரை செய்ததும் கோதான பூதான வஸ்திரதான ஹிரண்ணியதான கன்னிகாதான முதலான ஷோடசதானங்களும் இன்னுமனேகக் கிரியைகளுஞ் செய்து கடைசியாய் ஆசாரியர் நேமனத்தாலும் பாண்டுரங்க நாதனது கிருபையாலுங் கிடைத்த குழந்தை பைத்தியம் பிடித்ததைப் போலாயிற்றே யென்று விசனமடைந்து மிகுஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டு வந்தார்கள் சக்குபாயிக்கு நாளுக்கு நாள் வித்பத்தியும் பின்புபக்தியும் பிறகு சர்வத்திலும் விரக்தியுமுண்டானதால் முக்தியை யடையும்படியான மார்க்கமெதுவோ அதை அநுட்டித்து தன்னை மறந்து பகவானுடைய திருவடியிற்சொக்கி தனக்கு வயது பத்தாகிற பரியந்தம் இன்னமும் பண்டரிநாதன் வரவில்லையே எப்படி யொழிப்பேன் தொல்லையே எத்தனை நாளனுபவிப்பே நிச்சள்ளையே யீதென்ன கொள்ளையே, கிருபை கிஞ்சித்து மில்லையே யெண்ணுருகி ஞானவாரிதி பெருகிக் காமக்குரோதாதிகள் கருகிப் போகச்செய்து அமிர்தத்தைப் பருகியிருக்கத் தாய்தந்தையர்கள் யோசிக்கத் தொடங்கினார்கள்.

என்னவெனில்.' தாய்தந்தையர்கள் தங்கள்பெண்களைப் பத்துவயதிற்குள் விவாகம் செய்துகொடுத்துவிடவேணு மென்றும், அப்படி கொடுக்காத

Koviloor Digital Library

தாய்தந்தையர்களுக்கு பாபம் நேரிடுமென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகிறபடியால், நமது சக்குபாயிக்கு பத்துவயதாய் விட்டமையால், இனி யாதாமொருவனுக்கு விவாகஞ்செய்து கொடுக்க வேணுமென்று தீர்மானித்திருக்க அருகிலிருக்குங் கிராமத்திலிருந் தொருவன் வந்து இச்சக்குபாயின் குணரூப சில லக்ஷணங்களை அடுத்த வீட்டாராலறிந்து வீட்டிற் பிரவேசித்து அவர்களால் மரியாதை செய்யப் பெற்றுத் தன்னுடைய வரன்முறையாவத்துஞ் சொல்லக்கேட்ட கெங்காதரராவ் தன்வரன் முறைகளை சொல்ல, அதைக்கேட்ட அயல் கிராமத்தான் மிகுந்த களிப்போடு வதுவை செய்துகொள்ள ஒத்துக்கொண்டு அப்பெண்ணைப் பார்க்க வெண்ணி அதன் கருத்தை தெரிவிக்க கெங்காதரராவும் அதற்கிசைந்து தாதிகளையனுப்பி சக்குபாயியை யழைத்து வரும்படி நேமித்தான். தாதிகள் அந்தப்புரஞ் சென்று தன்னை மறந்து யெம்பெருமானுடைய திருவடியிற் சொக்கியிருக்கும் சக்குபாயிக்கு ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்க ளலங்கரித்து மணமிகுந்த மலர்களைச்சூட்டி மைதீட்டி அகிற்சந்தன தூபங்காட்டிமிகவும் சிறப்பாய் அலங்கரித்து அழைத்து வந்தார்கள். அப்போது சக்குபாய் தெளிந்து தாதிகளைநோக்கி அடி தாதிகள் யென்னை யெங்கழைத்துப்போகிறீரென, தாதிகள் அம்மணி! மங்களகரமான திருமேனி யுடையவளே பூரணச் சந்திரனும் கண்டுநாணும் முகாரவிந்த முடையவளே, அப்போது மலர்ந்த செந்தாமரை மலரையொத்த நேத்திரங்களுடையவளே, முத்துகளையொத்த தந்தங்களுடையவளே, சிற்றன்ன நடையாளே, சிறுபின்னற் சடையாளே யித்தனை யழகுபொருந்திய உனக்குத் தகுதியான அழகுவாய்ந்த புருஷனுக்கு மணஞ் செய்விக்க உன் தாய்தந்தையர்கள் நிச்சயித்தார்கள் அப்புருஷன் உன்னைப் பார்க்கவேணு மென்றவா கொண்டதால் அழைத்துவரும்படி தந்தைநேமித்த படி நாங்களுன்னை யழைத்துப் போகிறோமென, சக்குபாய் இரண்டு செவிகளையு மிரண்டு கரங்களால் மூடி விட்டல்விட்டல் பென்று வாடி அடி குடிகேடி கேளடி சேடி யிவனாரடி யெந்தவூரடி புழுக்கள் நிறைந்தகூட்டினையுடைய இவனு யென்னழகைப்பார்க்க வரவழைத்தான் யென்னுடைய சுந்தரத்தைப் பார்க்க யிவனுலாகுமா ஆகாதடி யென தாதி தன் கரத்தால் சக்குபாயின் வாயைமூடி இப்படி இனி யாதொன்றுஞ் சொல்லாதே யிளமாதேயென்றழைத்துக்கொண்டு வந்தார்கள். சமீபத்தில் வந்த சக்குபாய் அவனைப் பார்க்க மனமில்லாதவளாய் கண்களை மூடிக்கொண்டு தாதிகளே எனதருமை நாயகன் வந்தால் அவரை விளித்துக் களித்துக்கொண்டாடிப் பாடி யாடி சமீபத்திலோடிப் பணிந்துத் திருவடிகளை சிரசுக்கணியா யணிந்து ஆனந்தமடையும் நாளல்லவோபூசை யிவனர். சுவாமித்ரோகியென்ற சக்குபாயின் மொழியெனு மோசையை கேட்டவன் ஒகோ இவளுக்கு நாயகன் ஒருவனிருக்கிறாப்போற்றோணுகிறது. இப்படிக்கிருக்கிற யிவளை மணஞ் செய்துக் கொண்டலல்லபடுகிறது சரியன்றென்று யோசித்துத் தன்னூரை யோசித்து இவர்களுடன் செல்லாமலோடி நாடித்தேடிக்கூடினான்.

பிறகு சக்குபாயின் அன்னை தந்தையர்கள்மிகுந்த வெறுப்புற்று தனையை மேலாசையற்று இது வென்ன விபரீதமென்றதிசயித்து சக்குபாயியையர் தப்புரத்திற்சேர்த்து மிகவும் கோபித்து தேகம்வேர்த்து விவாகம் நடப்பதைக் கெடுத்து விட்டாளே தோதகிமிதுபாதகி நமதாவியைக் கைக்கொண்டாளே பாவியென்று வைது ஒருவனுக்கு தாரை வார்த்து வீட்டைவிட்டெப்போது இவளை யொழிப் போமென்ற வாட்டமடைந்திருந்தார்கள். இப்படியிருக்கையில் சக்குபாய் நல்ல கடிகையில் ரஜஸ்வலையானாள். இதை தாதிகளா லறிந்த தாய் தந்தையர்கள்இவளை யிதுவரையி லந்தப்புரத்திலிருக்கச்செய்ததுபோல் அவ்விடத்தில் தானே யிருத்தினால் மோசம்வருமென்றெண்ணி மேல்மெத்தையொன்று நூதனமாய்க்கட்டி அதிலிருக்கும்படி நேமித்துசடங்குகள் யாவத்தும் நடாத்தி முன்னிருந்தவைப் பார்க்கினு மெண்மடங்கதிக ஜாக்கிரதையாய் பாதுகாத்துவந்தார்கள். சக்குபாயியும் பகவன்னுமத்தியானத்தில் யிடைவிடாது லயித்துக்கொண்டேயிருந்தாளென்று சொல்லி உத்தம சித்தரை நோக்கி நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லுகிறார்.

3-வது சக்குபாயின் விவாக அத்தியாயம்.

இப்படி யிருக்கிற காலத்தில் சிந்துதேசத்தில் நிவாசஞ்செய்யும் மித்ருராவ் என்பவன் கரைவீரபுத்திற்கு வந்து அயல்வீட்டாரால் இச்சக்குபாயின் குணரூபங்களை யறிந்து மிகுந்த மோகங் கொண்டு வீட்டிற்குள்வந்து அவர்கள் செய்தமரியாதையைப் பெற்று விவாகத்திற்கு ஆகியசில நன்மொழிகளைப் பகர்ந்து இவன் வதுவை செய்துக்கொள்ள ஒப்புக்கொண்டதின்பேரில் அவர்களும் பெண்ணைக்கொடுக்கச் சம்மதித்து லக்னம் குறித்து தேச தேசங்களுக்கும் மணவோலைக ளனுப்பி நற்பச்சைகளால் சௌபானங்களியற்றி சொக்க நிலத்தினால் திண்

Koviloor Digital Library

லைகளமைத்து கோமேதகங்களால் கதவுகளும், புஷ்பராகங்களினால் வாசற் கால்களும் கெம்புகளினால் சன்னல்களும் முத்துகளினால் கொத்து சித்திர வேலைகளும், வைரக்கற்களாலும் சுவர்ணச் சேற்றாலுமாகியசுவர்களும்வைடூரியங்களினால் தூண்களும் பவழங்களினால் வாரைகளும் பத்தரை மாற்றுத் தங்கத்தினால் பூரண கும்பங்களும் சுகந்த பரிமள மலர்களினால் பந்தல்களும் அதற்கிடையில் தேங்கு, கதலி, பலா. த்ராக்ஷை, மா முதலான பல வகை பலவர்க்கங்களும் அமைத்து கல்பாண மண்டபம் முதலான யிடங்களும் இயற்றினார்கள்.

இங்கிப்படியிருக்க மணவோலைகளைக் கண்ட வாசர்கள் தங்கள் தங்கள் ரதகஜ துரகபதாதிகளுடன் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள். அவரவர்களுக்குத் தகுதியான விடுதிகளும் வேண்டும் சாமக்கிரியைகளுந் தந்துகளிப்புறச்செய்தபின்னர் தாரை, பூரி, சின்னம், தாளம், எக்காளம், வங்கை, டமா, டோல், முரசு, புள்ளாங்குழல், கிளார்நெட், கொடி வாத்தியமுதலான தோற்கருவி துளைக்கருவிகள் கோஷிக்க பந்துமித்ராள் புரோகிதர் அதிதி அப்யாகதர்கள் முதலானோர் வந்து கல்பாண மண்டபத்தில் சூழ்ந்திருக்க மித்ருராவ் மஞ்சனமாடி ஆடையாபரணங்களாலலங்கரித்து மணக் கோலங்கொண்டு மரகதக் கால்நாட்டி, நாரியைக்கூட்டி வாருங்களெனத்தாட்டி மிகுந்த கோஷ்டிகள்பகரத்தாதிகளுந மன்னையும் அந்தப்புரஞ் சென்று அம்மைக்கு நலங்கிட்டணிகளைப்பூட்டி மைதீட்டி சந்ததம்புக்தி சொல்லித்தனி நிலைக்கண்ணாடியிற் றைபலையெதிர்க் கொண்டு காட்டி இருவரையு மணவறையின் மேற் சேர்த்து இவளுடையவார்த்தை அவன் செவியிற் படாதிருக்கும்படி கெங்காதரராவ் ஓர் யுக்தி செய்தான் அதேதனென்றால் முன்னொருவன் வந்திருக்க அவனை சக்குபாய்தூஷித்ததைகேட்டு ஓடிப்போய் விட்டான் ஆகையால், இவனையும் யேதாகிலுஞ் சொல்லிவிடப் போகிறாளென்ற சந்தேகத்தினால், யென்ன சூக்ஷி செய்தானென்றால், அண்டகடாகமுமதிரும்படி வாத்தியங்களை கோஷிக்கச்செய்தான், அது சமயத்தில் மித்ருராவ் சக்குபாயின் மிடத்தினில் மாங்கிலியத்தை சூட்டினான். அநந்தரம் புரோகிதன் மந்திரபூர்வமாக சடங்குகள் நடத்திக்கொண்டிருக்க மாப்பிள்ளை புரோகிதரை நோக்கி மந்திரங்களை சிக்கிரம் சொல்லிமுடியுமையா அப்படி முடிக்காமல் காலஹரணம் பண்ணுவீரேயாகி லெனக்குக் கோபம்பிறக்கும். ஏனென்றால் வில்லைப்போலொத்த புருவத்தையுடைய யிப்பெண்ணையான்கூடி வீணையையொத்த மொழியைக் கேட்டுச் சிரவணானந்தமடைய வேண்டுமாகையால் துரிதமாக மந்திரங்களைச் சொல்லி முடித்துவிடும் என்றான், புரோகிதரும் மாப்பிள்ளை யெண்ணப்படி மந்திரங்களைச்சொல்லி முடித்தார். கெங்காதரராவ் அதிதி அப்யாகதர் யாசகர் வாசகர் முதலானோருக்கும் சந்தோஷமாய் தான தருமங்களைச் செய்தார் சுமங்கிலிய ஸ்திரீகள் மங்களத்துடன் பல்லாண்டுகூறி த்ருஷ்டிகழித்தார்கள். இத்தன்மையாக இருபத்தி யொருநாள் கலியாணஞ் செய்துமுடித்து இந்தவூரிலுள்ள பந்துக்கள் நேசர்கள் ராஜாக்களுடனுண்டு சந்தனபுஷ்ப தாம்பூலாதிகள்கொண்டு வீற்றிருக்கும்பந்துக்களைக் கண்டு சோபனமுகூர்த்தம் நடத்திவைக்க சில வசனம் விண்டு யாவத்திராளுக்கும் தொண்டுசெய்துக் கேட்டான். அச்சமயத்தில் மாப்பிள்ளையாகிய மித்ருராவ் பெரியோர்களை நோக்கிப் பலநீதிகளு முணர்ந்த கனவான்களே! மிகுந்ததனவான்களே! சாந்தகுணவான்களே! நாயேனுடைய விண்ணப்பமாகிய வினவுக்கு விடைதரவேண்டும் அதாவது யென்னுடைய ஊருக்குச்சென்று சோபன முகூர்த்தஞ்செய்து கொள்கிறேனென்றதற்கு அவர்கள் சம்மதித்து மாப்பிள்ளையைநோக்கி அப்பா மித்ருராவே யிப்பெண்ணை அநேகதவம்புரிந்து பெற்றதுந்தவிர மிகுந்த செல்வமாய் வளர்ந்தது, ஆகையால் யிக்குழந்தையைப் பிரியமாய்க் காப்பாற்றுவது மன்றிதப்பு ஒப்புகள்செய்தபோதிலும் அதுகளை க்ஷமித்துப்போஷித்துவருவது வுன்பாரம் சகலமும் தெரிந்தவுனக்கு விசேஷித்து யாங்கள் சொல்லவேண்டுவதில்லையென்று பலமுறை புத்திசொல்லிதுதித்து சக்குபாயிக்கு யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் அநேக தாதிகள் ஆடையாபரணங்கள் முதலானதுகள் ஸ்ரீதனமாகக் கொடுத்து தாயாரையும் பந்துக்களையும் கூட்டியனுப்ப மாப்பிள்ளை அருமையான விடையுமிகக்கனமும் பெற்று சிவிகையின் பேரிற்றன்றேவியையேத்தி முகமற்கவசம் மேற்போர்த்துத் தான் ஆட்டக் குதிரையின் மேலேறி யாவத்திராளும் பின்றுடர்ந்து வரப்பார்த்துக் கொண்டேயேகினான். இப்படி போகிறமார்க்கத்தில் சக்குபாய்தேசிகன்றிவ்யரூபத்தை த்யானஞ் செய்து பரவசமடைந்தாள். இதைக்கண்ட தாயார் அடிசக்கு அல்லும்பகலுமிப்படியிராதே உன்னுடைய நாயகன் மிகுந்தகோபி சாமானியமாய் விடமாட்டான் அதிசாக்கிரதையாய் இனி நீ இருக்கவேண்டுமெனச் சக்குபாய் அன்னையைநோக்கி யிவ்வுலகமும் மற்றெவ்வுலகங்களும் அதில்வாசமாகிய சமஸ்தஜீவராசிகளும் திரியக்ஸ்வதாவரஜங்கம சொத்துகளும் சாக்ஷாத்ஜெகதீசனது

ஸ்ருஷ்டி திதிலயத்துக் குட்பட்ட தாகையால் யுக முடிவில் யாவற்றும் அழிந்துபோம் அதிலிவனும் அழியத்தக்கவன்தானே ஆகையால் இவனுக்கேன் யான் பயப்படவேண்டும். நித்தியனான வெம்பெருமானொருவனுக்கே பயந்து நடக்கவேண்டுமே யல்லது அநித்யமான இவனுக்கெவ்வளவும் அச்சப்படேனென்றுரைத்துச் சிவிகையின் சாலரக்கதவை திரந்து திரையை நீக்கி நான்கு திக்கும் பார்த்தாள். ஆரண்ணியமா யிருந்த படியால் அதில்வசிக்கும் மிருகங்களையும் பக்ஷிகளையும் நோக்கி சிங்கங்களே! யானைகளே! காடிகளே! ஓ புலிகளே! மான்களே! கவுரி மான்களே! அன்னங்களே! குயில்களே! நீங்கள் தயவுசெய்து பாண்டுரங்கனிடத்திற் சென்று பெண்ணொருவன் தங்கள் சேர்வையில்லாமல் உயிர் தரிக்கேனென்று கண்ணுங் கண்ணீருமா யழுது புலம்புகிறாளென்ற பகவான் மனங்கரையும்படி அடியாள் விஷயத்தில் புருஷாகாரஞ் செய்வதுந் தவிர இவ் வழியாயச் சிந்து தேசத்திற்கு சென்றாளென்று சொல்லுங்களெனப் பகர்ந்து அவ்வாரண்ணியமார்க்கத்திற் பின்னும் ஆத்துமாவுக்கும் தேகத்துக்கும் சம்பந்தமில்லாதிருக்க கணவனேது துணைவனேது தனமேதுகனமேது காணியேதுதோணியேது மானமேது அவமானமேது கரியேது பரியேது தந்தையேது அற்பவிந்தையேது சொந்தபந்துயேது கடைசந்தையேது தேவேந்திராதி தேவர்களுக்கும் மற்று யாவர்களுக்கும் தேவனை அடியாளுக்கு அன்னை தந்தை கணவன் துணைவன் பந்து மித்திரர் யாவத்தும் பாண்டுரங்கனே யென்று பெண்ணி பகவான் திருவடிகளை நண்ணித் துதிபண்ணித் தன்னை மறந்திருந்தாள்.

அச்சமயத்தில் மாப்பிள்ளையாகிய மித்ருராவ் கோபங்கொண்டு வேகமாய்வந்து மாமியாரை நோக்கி யிவளென்ன காரணத்தால் சிவிகையைத்திரந்தாளெனக் கேட்டான் மருகா! சிவிகையைத் திரந்த காரணத்தைச் சொல்லுகிறேன் சீற்றம் நீக்கி யிவ் வுண்மையைப் பாருமென்று மர்மத்தை வெளியிடாமல் சொல்லுகிறாள். கேளும் மருமகனே நின்பேரில் மையல்கொண்டு யென்மகள் க்ஷீன்னமெத்தனை தூரமிருக்கிறதென்று பார்க்கும் பொருட்டொன்று, இச்சிவிகையிலிருத்தி சாளரங்களை மூடி மேலே கவசமொன்று போட்டபடியால் கிஞ்சித்துங் காற்றுவாராமல் தேகமெங்கும் வேர்வை ஜலமாயோடிற்று யிவ்விரண்டு காரணத்தைப் பற்றிச் சிவிகையைத் திரந்தாளெனக்கேட்ட மாப்பிள்ளை அதியுற்சாகமடைந்து சென்றான். பிறகு மார்க்கத்திற் றகுதியான யிடங்களிற்றங்கி அன்னபானாதிகளைப் புசித்து இரண்டு நாள்போக மூன்றாவது நாள்சிந்து தேசத்தைக்கிட்டி ராஜனுடைய அரண்மனை முதலான அந்தப்புரங்களைக்கடந்து பந்துக்கள் சூழ்ந்துவர மாப்பிள்ளை குதிரையை விட்டிறங்கி பெண்ணைச் சிவிகையை விட்டிறக்கி கலியாணப்பெண்ணின் கையை பிடித்துக்கொண்டு முத்துமாலைகள் பவழமாலைகளசைபநடந்து வீட்டின் வாசற்படியில்நிற்கசுமங்கலிய ஸ்திரீகள்பலவிதங்களாய் அயினிகழித்து அதிகத்திற்குள் சேர்க்க பந்துக்களுடன் புசித்துச் சுகமேயிருந்தார்கள் சிலநாள் சென்றபிறகு சோபனத்திற்கு சுபலக்னம் வைத்து யாவருக்குந் தெரிவித்து சக்குபாயிக்கு இழையாயிரம் பொன் பொரும்படி உன்னிதமா யலங்கரித்து மணவறையி லிருவரையுமிருத்தி ஹோமசாந்தி முதலானதுகளும் நடத்தி யாவத்திராவும் புசித்துத் தாம்பூலாதிகள் தரித்து அறையை யலங்கரித்து மேன்மேலு மஞ்சத்திற்கு புஷ்பங்களைச்சூட்டி அத்தர் புனுகு ஜவ்வாது கஸ்தூரி முதலான பரிமள திரவியங்களும், வாழை, செவ்வாழை, மலைவாழை, பச்சைவாழை, பில்பசந்து, கிளிமூக்கு, மல்கோவா, கிரேயின், பலா, த்ராக்ஷை முதலான பழவர்க்கங்களும் பல மிட்டாய் தினுசுகளும் பால் கற்கண்டுகளு மமைத்துவைத்திருக்கும் அறை வீட்டிற்குள் தம்பதிகளிருவரையுந் தாதிகள் சேர்த்து விட்டு கதவைமூடிக்கொண்டார்கள் சக்குபாய் பாண்டுரங்கன் திருவடிகளை தியானஞ் செய்துக்கொண்டு தன்னை மரந்து நின்றாள். மாப்பிள்ளை சக்குபாயியை நோக்கி சமீபத்தில் வாடி பெண்ணே யென்னிருகண்ணே மன்மதன்கணையினா லடிப்பட்டு மெலிந்து யெனது சோகத்தை தீரடி குயிலே அன்னியனுகவெண்ணி நாணமடைந் திப்படி யிருப்பது நீதியோ மயிலே துஞ்சும் பஞ்சணைமீதி லஞ்சுகம் போலக்கொஞ்சி விளையாடவாடி. யிங்குநாடி உன்னைத்தேடி முன்னம்வாடியிருக்குமெனைக்கூடியணைய ஓடி நின்னதரந்தாடி வாயைத்திரந்தோர் வார்த்தை சொல்லடி யுன்மனமென்ன கல்லடி நினக்கேதும் பயமில்லடி அன்னியனல்லடி மதனைவெல்லடி வாய் திறந்து மர்மங்களை யோதடி என்று பலவிதங்களாய் ப்ராத்தித்து பேசாமையால் ஏதடி பதுமை போலிருக்கிறாய் யிதென்ன வாதடி யென்னுடன் செய்யத்தகாதடி செய்யிலதனால்தீதடி பெருத்தகோபதடி யுனதடி பணிவேன் மனங்கறையவில்லையா யிப்படிச்செய்வது மர்மமா யென்னிஷ்டப்படி நீநடப்பது தர்மம் யுன்னிஷ்டமாய் சுதந்திரப்படுவது மர்மம் இனி யிக்கபடங்களைப் போக்கி யெனக்குக் களிப்புண்டாக்கி காமாந்தகார அக்கினியை தணித்து ஆலிங்கனாதிகாற் சேர்த்தணைத்து மனதிரன்

Digital Library

டையும் ஒன்றாயிணைத்துக் காக்கவேணு கிட்டி வருவாய் மஞ்சத்தின் மீதே யிப்போதே யடிமாதே யென்று பலவிதங்களாய்த் துதித்தும் சக்குபாய் வாராதபடியால் பின்னும் யோசிக்கத்துடங்கினான்.

அதென்னெனில் தாயாரிடமே யிருந்தவளாகையாலும் நூதனஸ்திரீ ஆகையாலும், புருஷாளிடத்தில் பேசிபழக்கமில்லாதவளாகையாலும் இவள் நாணை மடமச்சம் பயிர்ப்பென்னும் நான்கு குணங்களைப் பொருந்தி யிருக்கிறாளென யூகித்து யாதொன்றுக்கு மசையாமல் வுயர்ந்தமரத்துக்கு நிகராய் நிற்குஞ் சக்குபாயியை யிருகையினாலு மோடி வந்தணைத்து அடிபேதையே மடமை குணமுடைய கோதையே ஆரணியத்திற் சிவிகையின் மேலிருந்து சாளரங்களைத் திறந்தபோது யிசைந்த வுனக்கின்று நாணம்வந்ததேதுயெனச்சொல்லி தாம்பூலம் இதோ பெற்றுக் கொள்ளெனக் கொடுத்தான். அதையும் வாங்காமலிருக்கக்கண்டு மன்மதபாதை மேலிட்டமித்ருராவ் சக்குபாயினைத் தூக்கி மஞ்சத்திலேற்றி மதனனுறுந் துயரந்தீர்ந்தும் பேசாமையால். தாயகத்திலிருந்தவளும் புதியபெண்ணுமாகையால் இன்று நாணமுற்றிருக்கிறாள். நாளை முதல் நம்மிஷ்டப்படி நடப்பாளென்றுன்னி நித்திரைசெய்தான்

மறுநாள் வலிமையிற்கூடியு மாயிழை தன்வழிக்கு வாராததை யறிந்து பதினொரு நாள்வரையிலும் அநேக முயற்சிகளைச் செய்வதும் மனம்போல்நடவாததால் வீட்டுவேலைக் குபயோகப்படுத்தினான். மாமி நாத்தி முதலானோர் பாத்திரங்களை யெடுத்துக்கொண்டுபோய் முத்தத்தில் சேர்த்து சுத்திசெய்யும்படி சக்குபாயிக்கு நேமித்தார்கள் அப்பாத்திரங்களில் ஒன்றையெடுத்துக் கருவியாகத் தட்டிக்கொண்டு விட்டல் விட்டல் பாண்டுரங்க விட்டல் நரஹரி முரஹரி ஹரி ஹரி அடியாள். பந்தத்தைப் பரிகரி கருணைக்கடலே காமியாதிகளைக்கொடுக்கும் வரதபக்தவத்சலா பரமதயாளா பாகவதர்கட்கிதனே அமரர்கட்கிசனே ஆபத்பந்து அனாதரக்ஷகா ஆதிதேவனே அஷ்டைசுவரியங்களும் பொருந்தினவனே இஷ்டர்களுக்கு பந்துவே துஷ்டர்களாகிய விராக்கதரை வாட்டிய சூரனே தேவகி வசுதேவ குமாரனே நிகரில்லா தீரனே. ஆயர்பாடியிலிருந்த கோபிகள் சாரனே வெண்ணையுண்டசோரனே கெம்பீரனே தேவவிநோதனே ருக்மணி நாதனே பங்கய பாதனே மங்களகுணபோதனே பாண்டவர் தூதனே நவநீதனேயெனச் சிந்தித்து வந்தித்து நந்தன கோதனில் வந்தமுகுந்த கோவிந்த வைகுந்தாவெனத் துதித்து தன்னை மறந்து சோகமடைந்தாள். இதைக்கண்ட மாமி நாத்தி முதலானோர் இவள் பாசாங்குகள்ளி நம்குலத்துக்குத் தலைமாட்டுக்கொள்ளி சாமானியமாய்விடலாகாதென்று சொல்லிக் கீழேதள்ளி வகை வகையாய் பிடித்து மனம்போனபடி அடித்துத் தங்கள் பகைதீரயிடித்து நடைநொடி பாவங்களைக் காட்டி நடித்து யெங்களண்ணனுக்கென் றெங்கிருந்து வாய்த்தாயடி யெம்மண்ணனுக்கெங்கள் பேரிலிருந்த பிரியத்தைக் கெடுத்தாயடி யென்று பலவித தூர்ப்பாஷைகளைப் பிடித்து யினியாகிலும் நாங்கள் சொல்லும்வார்த்தைகளைக்கேட்டு அப்படி நடக்கிறாயாவென சக்குபாய் அவர்களுக்குப் பதிலொன்றுஞ் சொல்லாமலும் அவர்களிட்ட வேலைகளைச் செய்யாமலு மவர்களைத் தன் வாக்கால் யாதொன்றும் வையாமலும் அவர்கள்மேற் கோபங் கொள்ளாமலுமிருக்க யிதையறிந்த மாமி நாத்திகள் நாமிவளைக் கேவலமாய் நினைத்துவிட்டுவிட்டால்நமளைக் கூட வென்று விடுவாளென்றேசித்து த்வேஷித்து அடி பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் இழிவுண்டாக்கிய பாதகி! அறந்தப்பி நடப்பதானுனக்குண்டாமோ காதகி! கீர்த்திவகிக்கும், மார்க்கம் யிதுதானா பூர்த்தியாயோசனை செய்து பாரடி. தோதகி யெனப் பலவிதமாய்ப் பாஷித்து கோஷித்து தூஷித்து அன்னபானாதிகள் கொடாமல் இம்சை செய்துக்கொண்டு வந்தார்கள். சக்குபாய் மாமி நாத்திகள் கூடி தன்னையென்ன செய்த போதிலும் பயப்படாமல் அன்னபானாதிகள் கொடாமையால் யேக்கமடைந்து அவாள் சொல்லும் வேலைகளைச் செய்யாமல் நீக்கியெதுவரினும் பகவானுடைய அருளென்று மனதிற்றேக்கி இடைவிடாமல் அஷ்டாக்ஷர நாமத்தைத் துதித்துக்கொண்டிருந்தாள்.

இப்படி யிருக்குங்காலத்தில் ; மித்துருராவை நோக்கி அன்னைசொல்லுகிறாள். அடாகுமாரா! உன்னைப்போல இல்லாளைப் படைத்தவர்களை நானெங்குங் கண்டதில்லை அம்தன்னவென்றால் வீட்டின்வேலையைச் செய்யடியென்று பலவிதங்களா யடித்தும் வைதும் எங்களுடைய வார்த்தையைக் கேளாமலே தோ பயித்தியங் கொண்டவள்போல் நடைநொடி பாவனைகளைக் காட்டி லக்ஷியஞ் செய்யாமலிருக்கிறாள் உன்னிஷ்டப்படி சென்று முன் பின் யோசிக்காமலும் அக்கம்பக்கங்களிலிப் பெண்ணின் குணங்களையும் இவள் தாய்தந்தைகளின் நடவடிக்கைகளையும் விசாரித்து யோசித்து கொள்வனை குடுப்பனை கால்கழிக்கீனை யாராய்ந்துணராமலும், என்னிடஞ் சொல்லாமலும் இந்த மூர்க்கம் பிடித்தவளைக் கட்டிக்கொண்டு வந்தையே இது வெகு விந்தையே

Koviloor Digital Library

மனமிக நொந்தையே, யெனக்கு கஷ்டமிகத் தந்தையே யென்ற அன்னையின் மொழியைக் கேட்டு இவ்வண்ணம் வீட்டின் வேலைக்கு மிசைந்தவளல்ல. நம்மெண்ணப்படியும் நடக்கமாட்டாள். இவளுக்கு யேர்க்கனவே கெட்டகுணமோ, அல்லது வியாதி சம்பந்தமோ, அன்றி பேய் ஏதாகிலுஞ் பிடித்திருக்கிறதோ? யாதொன்றுந் தெரிய வில்லையே யென்ன செய்வோமென் றேசித்துப்பண்டிதரை வரவழைத்துக் காட்ட, அவ்வைத்தியர் வாதபித்த சிலேஷ்மமென்னு மூன்று நாடிகளைப் பக்தி யூகையாய்ப் பார்த்தது மன்னியில் குறிகுணங்களெல்லா மறிந்து ஐயா இப்பெண்ணுக்கு பித்தம் தலைமண்டை கொண்டிருக்கிறது. அட்டா யிதைட்பார்க்காம லிருந்து விட்டீர்களே வியாதி ஜனிக்கிறபோதே யதற்குத் தகுதியான அவிழ்தங்களைக்கொடுத்து பற்றறுத்து விட வேண்டும். அப்படிக்குச் செய்யாமல் வியாதி யதிகரிக்கச் செய்து கொண்டீர்களே, ஐயா யிப்பெண் பொற்பாவை போலிருக்கிறதே ஆகினும் பெரிதல்ல, சீக்கிரமவிழ்தங் கொடுக்க முயற்சி செய்யுங்கோளென்றான். சக்குபாயின்புருடன் ஐயாவைத்தியரே யிதற்கென்ன அவிழ்தங் கொடுக்க வேணும் அதற்கென்ன சிலவு பிடிக்கும் சொல்லு மென்றான். வயித்தியன் லேகிய மொன்று செய்துக் கொடுக்க வேணுமதற்குச் சிலவு பத்துவராகன் செல்லுமென்றான். சக்குபாயின் நாதன் லேக்கியத்திற்காக பத்து வராகன் பிடிக்குமென்று அப்படிக்குப் பேரம்பேச வேண்டாம் உண்மையா யிவ்வளவு பிடிக்குமென்று சொல்லி ரூபாயை வாங்கிக் கொண்டவிழ்தங் கொடுத்து சொஸ்தப்படுத்தும் பின்னிட்டுமக்குத்தகுந்த வெகுமதி செய்கிறேனென்ன வைத்தியர் பின்னிட்டு நீ செய்கிற மரியாதை யிருக்கட்டு மிப்போது பத்துவ்ராகன் கொடுத்தாலன்றி அவிழ்தங்கொடேனென்ன சக்குபாயின் மணாளன் ரூபாயெல்லாம்சிலவாகி விடுகிறதே யென்றும், இப்பாவி நமக்கென்று ஜெனித்தாளே யென்றும், நாம் சம்பாதித்த திரவியம் வெகுசா யிவளைக் கலியாணம் செய்தபோது விரயமாய் விட்டதே யென்றும், நாமிப்பத்து வராகன் மறுபடி யெப்போது சம்பாதித்துத் தொகையோடு கூட சேர்க்கப்போகிறோமென்றும் அக்கிருபணசிகாமணி யோசித்து, மெத்த வருத்தத்துடன் பத்து வராகனை வைத்தியருக்குக் கொடுத்தான்.

வராகனை பெற்றுக்கொண்டு ஒருமண்டலம் நாற்பது நாளுக்காகும்படி லேகியத்தைக் கொடுத்து இச்சாபத்தியம் வைத்து நாளொன்றுக் கிரண்டு முறைவந்து பார்த்துக் கொண்டு நாற்பது நாளும் பூர்த்தியாயும், கிஞ்சித்தாகினும் சொஸ்தமில்லாமையால் வேறே யவிழ்தங் கொடுக்க வேண்டுமென்றார் வைத்தியர், இதையறிந்த அக்கிருபணன் போதும் போதும் நீயவிழ்தங் கொடுத்து சொஸ்தமாக்கியது போய் வாருமையா வென்றனுப்பிப் பூசாரிகளை வரவழைத்துப் பார்க்கும்படிச் சொன்னான். அவர்கள் பனிரெண்டுபேர்கூடி விளக்கு வைத்துப் பார்த்து, ஐயா! யிப்பெண்ணை சங்கிலிவீரனும் காட்டேரியுமாகிய விரண்டுபேய் பிடித்திருக்கிறது அதுகள்பிடித்து சொம்பநாளாகிறது ஓட்டிவிடலாமென்ன அவர்களிஷ்டப்படியே ஓட்டும்படி யுத்தரவு கொடுத்தது மன்னியில் வேண்டுமான சாமக்கிரியைகளெல்லாந் தந்து பணமெல்லாம் சிலவாய் விட்டதே யென்ற யேக்கத்தினால் தூக்கமின்றி நிற்பாக்கியனைப்போக நீக்கமின்றி யிருந்தான். பூசாரிகள் பம்பை உடுக்கை சிலம்பு முதலான கருவிகளைக் கொண்டு சடுதிக்கச் செய்து பாடி யாடிப் பலவித முயற்சிகளைச் செய்வதும் சக்குபாயியை யுட்காரவைத்து ஓட்டினார்கள்.

நாற்பதுநா ளிரவும் பகலும் தூக்கமின்றி போட்டியும், இப்படி யப்படி யசையாமலும், பேசாமலிருப்பதையுங் கிருபணன் கண்டு கோபங்கொண்டு பூர்வமென்ன பாவம்செய்தோமோ பண்டு அதற்கிணங்கவாய்த் தாளிப்பெண்டு யெனப் பலபலவிதமான மொழிகளை விண்டு, அபாரமான திரவியம் விரயமாகியும் நம்முடைய பத்தினி யிஷ்டப்படிக் கிசையாமல் விகாரமாய் விட்டாளே, யினி நானென் செய்யப் போகிறேனென்று விசனமடைந்து மனமிக நொந்து கோபாக்கினியால் வெந்து வேடங்குலைந்து மிகவு மலைந்து பெருங்குடத்திற் சாணங் கரைத்து, பூசாரிகள் தலையிற்கொட்டி இனி யிங்கு நிற்காம லோடிப் போங்களென் றதட்டி தலையிற் குட்டி இனி வாராதீர்களிங்கு கிட்டி யென்றுரைத்துக் கொண்டே கோபமேலிட்டு கையினாலுங் கொம்புகளாலும் மனம்போனபடி சக்குபாயியை யடித்துப் பிடித்திடித்து பற்பல துர்ப்பாஷைகளைப படித்து அறைவீட்டிற் குள்ளாகக் கொண்டு போய் வேர் கொண்டு கால் கரங்களைப் பிணைத்துக் கதவை மூடித் தாய்தமக்கை தங்கையை யழைத்துநீங்கள் உண்மையாயிவளுக்கு அன்னமுந் தண்ணீருங் கொடாம லிருப்பீர்களாகில் பசியினால் மெலிந்து நம்மைநாடி தனக்குத்தானே வருவாளென்று சொல்லிச் சென்றான். பிறகு சக்குபாய் இதாளுடைய வார்த்தையின்றி யேகாந்தமான யிடங்கிடைத்ததே யென்று மிகுந்த களிப்படைந்து பகவானைத் தியானிக்கத் துடங்கினாள் எப்படியென்றால்:—

Koviloor Digital Library

ஓம் ஹரி ஹரி கரஹரி முராஹரி மதுஹரி பங்க ஜாக்ஷா பாண்டவபக்ஷா அச்சுதா உச்சுதா பஞ்சா யுதா பாண்டவதூதா லக்ஷ்மீசமேதா லீலா விநோ தா கமலபாதா ஆதிமத்தியாந்தரகிதா அனுதாக்ஷகா அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா பரமானந்தா முகுந்தா வைகுந்தா கோவிந்தா நந்தநந்தா பச்சை வண்ணா பங்கயக்கண்ணா ஜனார்த்தனா கருடவாஹனா ராக்ஷஸமர்த்தனா காளிங்கநிர்த்தனா சேஷசயனா நாராயணா பிரமபாராயணா வாமனா வசுதேவநந்தனா மதுசூதனா பரிபூரணா சர்வகாரணா வெங்கடரமணா சங்கடஹரணா சிதரா துளசிதரா தாமோதரா பீதாம் பரா மச்சகச்சவராஹவதாரா பலபத்திரா பரமதயா பரா பரமேஸ்வரா சங்குசக்ரா சர்வேஸ்வரா கருணா கரா ருக்மணிமனோஹரா ஸ்ரீரங்கா பாண்டுரங்காபவ பங்கா சச்சங்கா லோகநாயகா பத்மநாபா திவ்ய சொரூபா புண்ணியபுருஷா புருஷோத்மா ஸ்ரீராமா ஜெயராமா பரந்தாமா மனசியாரா ஜெகதபிராமா ரணபீமா ஜனகாமா முகசோமா ஜானகிராமா அன ந்தராமா நரசிம்மா திரிவிக்கிரமா பரசுராமா சகஸ் திரநாமா பக்தவச்சலா தேவானுகூலா ஆதிமூலா வேணுகோபாலா மாதவா யாதவா ராகவா கேசவா வாசுதேவா தேவதேவா ஆதிதேவா மகானுபாவா தேவகிதநயா தசரததநயா மாயாவிலாசாவைகுண்ட வாசா சுயம்பிரகாசா வெங்கடேசா ருஷிகேசா சித் விலாசா கஜபதி ரகுபதி சீதாபதி வெங்கடாசலபதி ஆயா வெண்ணையுண்டவாயா அன்பர்கள் நேயா அண்டர்களேத்துந்தூயா உலகமுண்டவாயா நானு வுபாயா பக்தர்கள்சகாயா சதுர்ப்புஜா கருடத்து வஜா கோதண்டஹஸ்தா புண்டரீகவரதா தாசரதி தயாநிதி அருட்கருணாநிதி லட்சுமீபதி ஐயா மெய் யா துய்யா நேமிகையா கிருபைசெய்யா பந்தங்க ளைக் கொய்யா ஓம் விஷ்ணுஓம் பரதாபரா பரமதபா ளா பக்தபாலா பரமசீலா மறைமூலா ராக்கதகாலா கனகசேலா கோபிகலோலா துளசிவனமாலா ஹரி கிருஷ்ணா கிருஷ்ணாவென்று முறையிட்டு தன்னை மறந்து சொக்கியிருந்தாள்.

இவ்விடமிப்படியிருக்கப் பாண்டுரங்கன் மா யாவதிதியைப்போல் ரூபந்தரித்து சக்குபாயின் முறையைக்கேட்டு மனந்தாளாமல் வேகமாயோடி கரவீரபுரம் சேர்ந்து கமலாபாயியைக்கண்டு அம்மா உன் குமாரத்தி யெங்கேயென்றுவினவக் கமலாபாய் மாயாவதிதியை நோக்கி ஓ ஸ்வாமி அப்பெண்ணை வதுவைசெய்து அழைத்தேகினனென பகவான் சிந்துதேசத்தை நோக்கியோடி அங்கரை நாடி யவ்வீதியிற் பஜனைபாடி தன்னைமறந்தாடி சக்குபாயி யைத் தேடி வருகையில் சக்குபாய் மாயாவதிதி பஜனை செய்வதை செவிக்கின்பமாய்கேட்டு ஜன்ன லைத் திறந்து அவ்வழியால் அப்பெரியோரைப் பார் த்து மிகவும் பிரகாசம் பொருந்திய தேஜஸைக்கண் டு மெய்சோர்ந்தாள். இதை யுணர்ந்த மாயாவதிதி தன்னுடைய பீதாம்பரத்தொங்கலினால் சக்குபா யின் முகத்தைத் துடைத்து மூர்ச்சை தெளிவித்து, அம்மணீ முன்னெப்படியிருந்தாயோ அப்படியிரு. நான் வந்திருக்கிறேன். யாதொன்றுக்கும் பயப்படா தே யென்றுசொல்லி அவ்வீட்டின்தலைக்கடைக்குட் சென்று பிக்ஷை போடுங்கோளென்ற அரவங்கேட்டு சக்குபாயின் மாமி ஆரடாவென் றதட்டிக் கொண் டே வந்து பிச்சையில்லை போவென மாயாவதிதி அம்மணீ பிச்சையில்லாவிடில் வெகு தூரமலைந்து விடாய்ப்பட்டு வந்தேன். மிகுந்தாபமாயிருக்கிறது ஆகையால் தாகத்துக்குத்தண்ணீராகிலும் கொஞ்சம் கொடுவென்று வேண்ட அக்கிழவி ஐயா பெரியோ ரே குளத்தில் தண்ணீருண்டருந்தி போவாய் என் குமாரன் உம்மைக்கண்டால் கொன்றுபோடுவான். ஆதலால் சீக்கிரமிந்த இடம்விட்டு ஓடிப்போவாயெ ன்றாள் மாயாவதிதி ஓ அம்மணி தாக தீர்த்தங்கொ டாவிட்டாலும் போகட்டும். இந்தயிடம் மிகுந்த குளிர்ச்சியாயுங் குளிர்ந்தகாற்றும் வருவதால் கொ ஞ்சநேரம் தங்கி யிருந்து விடாய் தீர்த்துக்கொண்டு போகிறேனென்றார். கிழவி படுத்துக்கொள்ளவும் ஆ யாசம் தீரவும் இது சத்திரமா? அதோ கொஞ்சதூர த்தில் சத்திரமிருக்கிற தவ்விடத்திற்குச் சென்று உனதிஷ்டப்படி விடாய்தீர்ந்துபோம் போபோ நிற் காதே யெழுந்திரு மெழுந்திருமென்றுசொன்ன கிழ வியை நோக்கி மாயாவதிதி சொல்லுகிறார். கேளும் அம்மணி! கையாளும்படியான பண்டங்களும், அல ங்காரத்திற் கணிந்துக்கொள்ளு மாபரணங்களும் வேண்டிய பந்துஜனங்களும், பிரியமானபுத்திரகளத் திர பௌத்திரர்களும், அஷ்ட ஐசுவரியங்களுமாகிய மாடு கன்று வீடு தோட்டந் துரவுகளும் இத்தேகத் தை விட்டுயிர் போகும்போது நம்மோடுகூட வரு கிறதொன்றுமில்லை, ஆகையால் பேராசை கொண் டலைந்துகெட்டு இந்தத்தரணியில் புகு துடன்பட்டு நானென்னதென்றுசுதந்திரமடைந்து நாளைபோக்கி அந்தியத்தில் எமதூதர்கள் கையிற் சிக்கி பலவிதங் களான வாதைகளடைந்து நரகத்துக்காளாவது தகாது சர்வமும் எம்பெருமான் சொத்தென்றுண் மையாயெண்ணி தர்மங்களைப்பண்ணி பாகவதாளை கண்ணி பரத்தையுன்னி பிடிபிச்சை யளிப்பாய். பூத தயை கிஞ்சிற்று மில்லையோ! உன்மன மென்னசிலை யோ, நான்கேழ்ப்பது மலையோ! உனக்கு பிச்சை யிட மனமில்லையோ, அந்தோ! இந்தப் பட்டணத்தி லளவிலாத வீடுகளிருந்தும் குடிகள் மிகுந்த ஒரு

ள்களடைந்தும் ஒருவீட்டிலாகினும் பிடிபிச்சை கிடைக்கவில்லையே! யென்ன கிழவி அடா கிழவா பிச்சையில்லைபோடாவென்று பலதரஞ்சொல்லியும்போகாமலென்னடா வெனக்கு ஞானம்போதிக்குராய் இப்படிப்பட்ட ஞானம் அநேகமாயானறிவேன் சீக்கிரம்மிவ்விடம்விட்டுப் போகிறையா அல்லதுன் பிராணனைப் போக்குறையா யென்னமாயாவதிதி யனம்மா கோபித்துக்கொள்ளுகிறாய். கோபிக்கவேண்டாம் இதோயான்போகிறேன் ஆகினுமின்னொரு விசேஷம் அதை கவனமாய்க் கேளுமென்று சொல்லவாரம்பித்தார்.

ஓ அன்னையே! அறநெரியெனுங் கிராமத்தில் முராறரியெனு மோர் பிராமணரிருந்தார் அவர்தர்ம சாஸ்திரவிதி வழுவாமல் வைஷ்ணவ சித்தாந்தத்திற் றேர்ந்து யாவும்பொய்யெனத்தெளிவடைந்து விரக்தியுண்டாகி பக்தியிற் சிறந்து முக்திமார்க்கத்தை நாடி தன்பொருளெல்லாம் தானஞ்செய்து அக்ஷயபாத்திரத்தினால் ஜீவனஞ்செய்துக்கொண்டுவந்தார். இப்படியிருக்க ஓர்நாள் வழக்கப்படி அக்ஷய பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு அவ்வூரில் வீடுகள்தோறும் சென்று அமுதுபடிவாங்கிக்கொண்டு அடுத்தவீட்டிற்குட் சென்றுபவதி பிக்ஷாந்தேகியென்றார். அப்போதவ்வீட்டுத்தலைவி அமுதுபடியை உரலில் போட்டுக் குத்திக்கொண்டே பிச்சையில்லைபோ போவென்றாள் அதற்கம் முராகரியென்னும் வைணவர் அன்னையே! உரலிலமுதபடியிருக்க யில்லைபோவென்பது தர்மமல்ல கிஞ்சித்தமுதுபடி யுதவியனுப்புமென்ன அத்தலைவி யில்லையென்று சொன்னால் போகாமல் மறுபடியும் பிக்ஷயிடுமெனக் கேழ்க்கும்படி யெந்த தர்மசாஸ்திரத்திற்செல்லுகிறது மேனுமேனு மிரட்டித்துக்கூவாதே, சீச்சிபோவென்றாள். அவ்வைணவர் ஓ அம்மாயிப்படிப்பேசுவதழகோ! அமுதுபடியளித்துப் போவென்றாலல்லவோ அழகுயென்றார். அப்பாவிசகல ஆபரணங்களுமணிந்தாளல்லவோ அழகு, அமுதுபடி உமக்களிப்பதழகல்லவென்று கோபத்தினால்தன் கையிற்பிடித்திருந்த உலக்கையால் அவ்வைணவரைக்குத்தினாள் அதிலொட்டிய வோரரிசி அக்ஷயபாத்திரத்தில் வீழ்ந்த வைணவரும் அத்தலைவியு மரியார்கள் உலக்கைகுத்தின லவ்வைணவர் மிகுந்தவதையடைந்து தன்னகம் புகுந்து தளிகைசெய்து பகவானுக்கு நைவேத்தியஞ் செய்துப் புசித்திருந்தார்.

சிலநாள் சென்ற பின்னக்கர்மியைக்கால தூதர்களடித்து உயிரைக் கவர்ந்துகொண்டுபோய் யாதனாசரீரத்திற் பிரவேசிக்கச் செய்து யெமனிடச் சபைக்கழைத்து போய்விட யெமன் சித்திராபுத்திரனை யழைந்தவனென்ன பாவஞ்செய்தவர்களா புண்ணியஞ் செய்தவர்களா? சொல்லுமெனச்சித்ராபுத்திரன் கணக்குகளைப் பார்த்து இவள் விசேஷ பாவமும் கிஞ்சித்துப் புண்ணியமும் செய்தவளென்ன யெமன் அப்புண்ணிய மெத்தன்மையாய்யாருக்குச் செய்தவளென்ன பரம வைதீகபிராமணரை யுலக்கையிலொட்டிய வோரரிசி யவரக்ஷயபாத்திரத்தில் விழ அவரதைக்கொண்டுபோய்தளிகைசெய்து பகவானுக்கு நிவேத்தியஞ்செய்து புசித்தார் அப்புண்ணிய புருஷருடைய குக்ஷியில்தங்கிய வோரன்னமுமிவள் மனமாரச் செய்யவில்லை இவளுக்குத் தெரியாமல் வீழ்ந்ததென்றான். எமன் தூதுவரையழைத்து யிவளை யழைத்துக் கொண்டுபோ தூரத்திலே தானே நிறுத்தி பரமபதத்தைச் சேவிக்கச் செய்துகொண்டு வாருங்கோளென்றுக்கினையிட அவ்வாறே தூதர்கள் அவளை யழைத்துச் சென்று தூரத்தில் அதோபார்த்தாயா நவமணிகளிழைத்துப்பிரகாசம் பொருந்திய நித்தியவிபூதியென்றுகாட்ட அவளையாதூதர்களை தர்மராஜனுடைய சபையை விட்டு நீங்கின. முதல் கண்பார்வை வரவரக் குறைந்துகொண்டேவந்தது இப்போது சுத்தமாய்க் கண்பார்வை தெரியவில்லை ஆகையால் நான் பரமபதத்தின் கிட்டநெருங்கிகைகளாலாகினுந் தடவிப்பார்த்து வருகிறேனென்று சொல்லி தூதர்களைவிட்டுதடவிக்கொண்டே நடந்து பரமபதத்தைக்கரங்களால் ஸ்பரிசிப்பதுபோல அபிநயங்காட்டிக்கொண்டேயிருந்து தடாலென்றுள்ளே புகுந்து ஆதிசேஷன்பேரில் யோகநித்திரை செய்யும் பகவானைக்கண்டு தீர்க்கதெண்டனிட் டெழுந்து கைகட்டிவாய் பொத்திக்கொண்டு ஓம்ஜெகதீஸ்வரா ஸர்வேஸ்வரா அகிலாண்டகோடி ப்ரமாண்ட நாயகா ஆதிமத்யாந்தரகிதா ஆபத்பாந்தவா அனாத ரக்ஷகா ஆதிதேவா அஷ்டலட்சுமி சமேதா அம்புஜ பாதா அடியார்காணுதமதுசூதா வேதவினோத அருட்பிரபோதா ஜெகநாதா லட்சுமிநாதாஅடியாளையாளுமையா கிருபைசெய்யா மிகுதய்யா சக்கரக்கையா யென்றோலமிட்டுக்கதரபகவான் நீயாரென்றுவினவ அவளாதியோடந்தமாகச் சொல்லி ஓ சுவாமி! தேவரீரைச் சேவித்த பின்புகூட அடியாளுக்குயெமதண்டனை யுண்டோ? யினியெந்த குற்றத்தைக்கண்டோ பண்டுயான் மிகுந்த பாவியென விண்டு யெம்பெருமான் திருவடியில் தீர்க்க தெண்டனிட்டெழாமல் விழிந்து கிடந்தாள்.

பகவான் குலுங்க குலுங்க நகைத்து யிவள் மெத்தக் கெட்டிக்காரியெனத் தீராமகிக்ஷியடைந்து உன்னிஷ்டபடி நம்முடையபதவிதந்தோம் சுகமாயிருப்பாயாகவென்று கடாக்ஷித்தார் ஆகையால்

Koviloor Digital Library

உலக்கையிலொட்டியிவோரரிசியினுல் பரமபதமடைந்தாள். மனமாறப்பிடிபிச்சை யளித்தால் பதவிசல பமாக வடையலாமாகையால் ஓ படுபாவி யோர்பிச்சைக் கொண்டிடும் யென்னக் கிழவி துரிதமாயோடித் தன்குமாரனைக்கண்டு அடாகுழந்தாய் எவனோ கிழவன்வந்து பிச்சைகேட்டான் பிச்சையில்லை போவென்றோ மவன்போகாமல் வாயில் வந்தபடி யெல்லாம் வைகிறுனெனவிண்டமொழியைக்கேட்டதும் அதிக கோபங்கொண்டு பற்களைநறநறெனக்கடித்து ஆர்பரித்து தேகம்வேர்த்து ஆக்ரஷித்து வேகமாயோடிவந்து, அடாகிழவா! உனக்கு யேற்கனவே தற்குணமோ அல்லது நீ சண்டைக்கழைக்கிறையா சீக்கிரமுன் பிராணனைக்காப்பாற்றிக் கொள்ளுவதாயிருந்தா லிவ்விடம் விட்டு ஓடிப்போ அல்லது பிராணனைவிடத் துணிந்திங்கிருப்பையாகிலித்தடியாலுனது மண்டையைப்பிளக்கிறேன்பாரடாவென்றுக் கிட்டிவந்தான். இதையறிந்தமாயாவதிதி ஐயமெடுக்குமென்னை நீயடித்தால் அடிக்கவேண்டாமென்றுன் கையைப்பிடித்துக்கொள்ளுகிறவர்கள் யார்? கொஞ்சம் நிதானித்து யென்னுடைய வார்த்தையைக் கேளுமையா அதென்னெனில் துவாபரயுகத்தில் கண்ணனவதாரஞ்செய்து பூதகி, சகடாசூரன் த்ருணாவர்த்தன், தேனுகன், கார்த்தபாசூரன், பகாசூரன், காளிங்கன் முதலானோரை வதைத்து வடமதுராபுரியைவிட்டு துவாரகையில் வசித்திருக்கிறபோது அஸ்தனபுரத்தை யரசாட்சி செய்யும் துரியோதனுதிகள் தாயாதிகளாகிய பாண்டவர்கள் மேல் த்வேஷங்கொண்டு சூதாடி அவர்கள் ராச்சியத்தை பரித்ததுமன்றிப் பதிவிரதையாகிய திரௌபதியை அநேகராஜர்களும் பீஷ்மர் துரோணர் கிருபாசாரி அசுவத்தாமா முதலான பெரியோர்களும் தனக்குரிய உரியோர்களும் நிறைந்த சபைக்கு துர்ச்சாதனனுமிழுத்துவந்து துகிலுரியும்போது தருமப் பிரபுக்களாகிய பஞ்சபாண்டவர்களி லொருவனுகிய வீமசேனன் மனந்தாளாம லண்ணனாகிய யுதிஷ்டிரரை நோக்கி, அண்ணா! யிதுவென்னகாரியம்! அற்பம் பாஞ்சாலி துடிதுடிப்பதும் நாம்பார்த்திருப்பதும் மிகவும் நன்றாயிருக்கிறது யிதனால்நமக்குகௌரவம் வருமென்றோயெண்ணிகிறீரோ அப்படிக்கெண்ணியிருப்பது ஞாயமல்ல தேவரீருக்குத் தெரியாது யாதொன்று மில்லையாகையால் தாங்கள் தயவுசெய்துவிடை கொடுத்தால் அரைநாழிகையில் யாவரையும்வென்று கொன்று வருகிறேனென்ற தம்பியைநோக்கி அடாதம்பி அற்பத்துக்காசைப்பட்டு மேன்மையாகிதருமத்தைவிட்டு அதருமத்திற்குடன் படலாமா? மேலும் யாவத்தும் அழிந்துபோகுமே யன்னியில் நீடூழியாயிராது ஆகையால் நாம்பூர்வம் யென்ன கருமங்கள்செய்தோமோ! அதுகளெல்லாமனுபவிக்காமல் தீராது ஆகச்சே யுனக்கிந்த கோபமாகாது. பொறு துரிதப்படாதே அன்னியிலும் சொற்பமான கெண்டைக்கு ஆசைப்பட்டுபெருத்த ஏரியை உடைத்துவிடலாமா அதென்னெனில், துரௌபதைக்காக முயன்று பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமர் முதலானபெரியோர்களைக்கொன்று விடலாமா மேலும் நான் யெனதென்னும் வேர்முதல்மாய்து யென்னும் பிரமாணப்படி சகலசுதந்திரங்களுமற்று பாதந்திரமாய் நடிப்பதே நமக்கு தர்மம் ஆகையால் பாதந்திரமுடையவன் சொத்தைக் காப்பாத்திக் கொள்ளுவான் விருதாவிலலங்கரித்துப் பேசுகிராய் இன்னும் சிலநாளையில் படுகளம் நேரிடு மப்போதுங்கள் தைரியசௌகரியங்களைக் காட்டலாம் பதாதிருமென்றார். அப்படிப்பட்ட தகாதகாரியஞ் செய்தவர்களையே அடிக்கவில்லையென்றால், நிரேதுவான என்னை நீர் அடிப்பது தருமமா? ஆனுல் என்பேரில் கோபம்வேண்டாம் பிச்சையில்லையென்று சொன்னால் போகிறேன். ஆகினுமினியொரு சந்தேகமிருக்கிறது அதென்னவெனில், இவ்வரை வீட்டிருக்கும் பெண்ணுமக்கென்னவேண்டு மிதைத் தெரியச்சொன்னால் யான் போகிறேனென்றார்.

இதைக்கேட்டு சக்குபாயின் கணவன்ஐயா ஸ்மிவா யென்னுடைய பரிதாபத்தை யென்னவென்று சொல்லுவேன், இவள் தாயார் அவள்பத்னி, அவனை மனம்புரிந்து மூன்றுவருடகாலமாச்சுது. நாளது வரையில் யென்னிஷ்டப்படி நடப்பதில்லை வீட்டுவேலைக்குமுதவாள் ஆகையால் கோபமிகுந்து கயறுகொண்டு கால்கரங்களைப்பிடித்து இவ்வரையிலடைத்தே னென்ன மாயாவதிதி. ஐயா! கிரகஸ்தனே பெரியோர்கள் கூட்டத்திலெனக்கு மெத்த பழக்கமுண்டு அவர்களாலருமையான மந்திரங்கள் போதிக்கப்பட்டு மிகவும் கைதேர்ந்திருக்கிற னுகையால்ரிதாகிய கிரகதோஷங்களாயிருக்கினும் யெதிரில் வந்தால் மந்திரித்து போக்குரேன்யென்ன. கிரகஸ்தன் ஐயா! முன்னம் பன்னிரண்டுபேர் மாந்த்ரீகத்திற் றேர்ந்த யௌவன புருஷர்கள் நாற்பது நாளிரவும்பகலும் நிற்பந்தமாயனேக சிகிச்சைகள் செய்து ஓட்ட அது அசையாதிருந்ததாலெங்களாலாகாதென்று அவரவர்கள் ஓடிப்போனார்கள். அற்பக்கிழவன் உனக்கென்னதெரியும் வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போமையாவென்றான்.

Koviloor Digital Library

4-வது பகவான் சக்குபாயிக்குப் பேயோட்டிய அத்தியாயம்.

மாயாவதிதி ஐயா கிரகஸ்தனே! உன்மனதில் கிஞ்சிற்றும்சந்தேகமின்றி அப்பெண்ணை யென்முன் னழைத்து வந்தா லென்னுலாவது மாகாதநும் இப் போதே நீ தெரிந்துக்கொள்ளலாம் மேலும் யெனக் கொரு காசளவுங் கொடுக்கவேண்டியதில்லை. ரூபாய் கள் செலவாய் விடுகிறதேயென்ற தொல்லை யுமக்கு வேண்டாம் தடைசொல்லாம லப்பெண்ணை யென் முன்னழைத்துவா வென்ன, கிரஹஸ்தன் பணச்செல வில்லாமல் நமக்கனுகூலம் செய்கிறே னென்கிறதெ னச் சந்தோஷங்கொண்டு அவர் வார்த்தையை மறு க்காமல் அப்படியே செய்யத்திடங்கொண்டு கதவை திறந்து பிணைத்திருக்கும் கயற்றை யவிழ்த்தான் உடனே சக்குபாய் ஆடையாபரணங்களைத் திருத் திக்கொண்டு வாடைக்காற்றினுல் சல்லிவேரு மற்று விழும் மரம்போல வேகமாயோடி வந்து விழுந்து உபயதிருவடி மலரையுங்கண்ணிற் சேர்த்தாள் நொ டியி லிதைக்கண்ட சக்குபாயின்வரன் ஓகோ? நாமி ப்பெரியோரை ஒன்றுந்தெரியாதவரென்று யோசித் தோம், இவர் நல்ல மாந்தரீகத்திற் சிறந்தவர் இவ ரால் நம்முடைய நாயகி திருத்தப்பட்டு நம்மிஷ்டப் படி நடப்பாளென்று அடங்காச் சந்தோஷமடை ந்து யிருந்தான், பிறகு சக்குபாய் யெழுந்து மாயா வதிதியின் பேரில் விழுந்து கன்னத்தி லடித்தும் பிடித்துக் கடித்தும் இடித்தும், உபத்திரவ முண் டாகச் செய்ய ஐயன் ஓகோ, கோவிந்தா - வைகுந் தா - முகுந்தாவென் றோலமிட்டுக் கதறிக் கூவிக் கொண்டேயோடி திண்ணையின்பேரில் விழுந்து தாய் வயிற்றினில் நின்றுந் தப்பிப் பிறந்தேன் யென்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டிரு ந்து கிரகஸ்தனை நோக்கி ஐயா! நமக்கொன்றும் வேண்டாம் நீர் பிச்சை யிட்டது போதும் போதும் நாயைப்பிடித்துக் கட்டு மிதென்ன பெருத்த கோரமா யிருக்கிறதென்ன கிரஹஸ்தன் ஓ ஸ்வாமி! யெமக்காதாவிங்கு தேவரீரை யல்லால் வேறொராள் ஒருவருமில்லையாகையால் யிசைபுச்செ ய்வது முந்தன் பாரம் என்னமாயாவதிதி ஐயா கிர கஸ்தனே! பெரிய ஜடாமுனி யிப்பெண்ணை பிடித் திருக்கிறது ஆகையால் ஒரு மண்டலந் தவறாமல் முழுக்கில் வைப்பேன் சொந்த மனுஷியைக்கூட வனிப்பி ஸ்நானஞ் செய்துவரச் சொல்லும் யெ ன்று சொல்லித் தான் குளக்கரைக்குச் சென்றார் சக்குபாயியும் புருடனுடைய உத்திரவின் பேரில் அதே குளக்கரைக்குவந்து மாயாவதிதியைக்கண்டு சுவாமி!

பத்யம்.

நதஜலபூரிதம்புலகு நூறுநூ நூரிடிகண்டெ னெக்கசு - வ்ரதயுகவாவிமேனு மரிவாவினு நூரிடி கண்டெசத்-க்ரதுவதிமேனு தத்க்ரதுவு நூரிடிகண் டெசுதுண்டுமேனு தச்-சுத சதம்புனகண்டெனெக சூன்ருதவாக்யமுமேனு ஜூடீகன்.

(இதன் பொருள்)

ஆரணிய மார்க்கத்தில் தேசாந்திரிகளுக் குப யோகப்படும்படி ஜலம் பூரணமாய் நிறைந்த ஒரு கிணறு கட்டுவது பெருத்த தருமம் இப்படி நூறு கிணர் கட்டிவைப்பது அதற்கு மேலான தருமம் இதைப்பார்க்கிலும் ஒரு தடாகம் கட்டிவைப்பது விசேஷம் அந்தடாகம் நூறுக்காகிலும் ஒரு யாகம் செய்வது விசேஷம் இப்படிக்கொத்த யாகங்கள் நூருக்காகிலும் உத்தமனுகிய ஒரு குமாரன் விசே ஷம் இவ்வுத்தமனைப்போல நூறு பிள்ளைக்காகிலும் சொன்னசொல் தப்பாமல் காப்பாற்றும் சத்திய வாக்கொன்று விசேஷம் என்ற நீதி வாக்கியப்படி தாங்களனுஷ்டிக்காமல் சொற்சோர்வுபடே லென் னும் ஔவை வாக்கின்படி நடவாமல் சொற்சோர்வு பட்டதேவர் முகத்தைப் பார்க்கலாமா? இந்தனை மோசமாமா இப்படி நடப்பதோர் பிரதாபமா இதி லென்ன கௌரவமா? யேழைமேலித்தனை வர்மமா? இது யான்செய்த பூர்வகர்மமா ஈதுனக்கு தர்ம மா? நீரென்ன சுத்தப் பிரம்மமா அன்றியும் இந்த ஜெகந்தனில் உம்மைவிட அடியாளுக்கு வேறு திக் கில்லாததினுலே மறுபடியு மும்மை சேவிக்கவும் பாஷிக்கவும் நேரிட்டது யென்றனள் மாயாவதிதி அம்மா சக்குபாய் உன்னைப்போ லாசான் சொற்படி நடந்த பேர்களில்லை நின்னைவிட்டு நீங்கிற்றுத் தொல்லை, கடந்து விட்டாய் யெல்லை, யிதுவென்ன கொள்ளை யென்று பயந்தோடி விட்டது சள்ளை பெண்களி லுன்னைப்போல பக்தி செய்வதற்கு ளரி இதுவேபெரிது மோக்ஷமடைவதற்கு நற்பாதை மற்றதெல்லாம் நரகவேதை ஞானிகளல்லோ வழி வார்களிச்சூதையெனப் புகழ்ந்தம்மாதை நோக்கிப் பின்னுஞ் சொல்லுகிறார் பக்தியிற் சிறந்த விற்பன மிகுந்த நித்திய விபூதிக்குத் தகுந்த யெனக்குகந்த சக்குபாய் நான் சொல்வதைக் கேள் இப்பூமியின் கண் பிரம்மசரிய வானப்பிரஸ்த கிரஹஸ்த ஸன்னி யாச மென்னும் நான்கு ஆசிரமங்களுண்டு இதில் கிரஹஸ்தாசிரமம் விசேஷம் அது எப்படி யெனில் பிரம்மசரிய சன்னியாச வானப்பிரஸ்தா சிரமத்தை யடுத்த இம்மூவரும் நினைத்ததுபோல முடிக்கும் மகிமாதிசய முடையவர்க ளாகிலும் க்ஷூத்பாதை

Kovilloor Digital Library

நிவர்த்தி இல்லத்தானு லாகவேண்டி யிருப்பதால் இல்லறதருமம் விசேஷம் மேலும் "இல்லற மல்லது நல்லறமன்று" என்ற ஔவையார் மொழிப்படி இல்லறத்திலிருந்து பகவத்பக்தி செய்து மோக்ஷமடைவது விசேஷம், இதைவிட்டு சர்வசங்கத்தையும் ஒழித்து துறவியாகி முமுட்சுவாகிறது அவ்வளவு பெரிதாகாது ஆகையால நீ இல்லறதருமத்தை யடுத்து கொழுந னிஷ்டப்படி நடித்து பகவான் திருவடியில் மனதை விடுத்து யிதர விஷயாந்தரங்களை வெறுத்துமுக்குரும்புகளைக் கருவறுத்து மாமி நாத்திகள் களிக்கப் பொருந்து அன்னபானாதிகளளித்து நாயகனுடன் கூடி களித்து இருப்பாய் இதுவன்றியும் உன்னை மணஞ்செய்த புருடன் உன்னை யருமையாக பாவித்து உரிய உணவாதிகளை யளித்துப் பிரியமாய்ப் போஷிப்பதுபெதற்காக தன்னுடைய சவுக்கியத்திற்காகவே செய்கிறான் ஆகையா லவன் மனம் நோகச் செய்வது தருமமல்ல வென்றார். சக்குபாய் மாயாவதியை நோக்கி சுவாமி இதிலொரு சந்தேகம் அதாவது வயற்று சோற்றுக்காக நாள் முழுமையும் வேலைகளைச் செய்து இரவுவந்தவுடன புருஷனுடன் கலந்தணைவதினால் தேகங்கெட்டு சத்துகள் குறைந்துபோகுமே யன்னியில் இதனால் சுகங் கிடையாது யோசிக்கும் விஷயத்தில் இதுகளெல்லாங் கடனே யல்லாமல் இதனால் கண்ணனருளும் சேவையுங் கிடைக்குமா வென்றாள். மாயாவதிதி ஓ அம்மணி சக்குபாய் இல்லறவாழ்வி லிருந்து யெவ்வாறு கண்ணனுடைய பாதங்களைத்துதிப்பதென்று மிரண்டு விட்டாய் அம்மார்க்கத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

சர்வசங்கத்தை மொழித்த கெர்வம் மகாமற்ற யமிர்தமேகேள் தேவேந்திராதி தேவர்களுக்குந் தேவனாகிய கண்ணனைச் சதா நின்மனதிலெண்ணு மற்றவை யெல்லாம் பிரம்மமாக பாவனை பண்ணு, யெதையெனில் எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவராசிகளையும், திரியக்ஸ்தாவர ஜன்மங்களையும், பிபீலிகாதி பிரமபரியந்தம் அடங்கியஇஜ்ஜெகம் யாவற்றையும் கோவிந்தனுருவ மென்றும், பாவ புண்ணிய மிரண்டுங் காவலனுடைய அருளென்றும், எண்ணியிருக்கக்கடவாயென்றனள். சக்குபாய்தேவரீர் சொல்லுவது பேதையாகிய அடியாள் புத்திக்கு கோசரப் படவில்லை, ஆகையால் விளங்கும்படி நன்றாய்ச் சொல்லவேண்டு மென்றனள். மாயாவதிதி கேளும் அம்மணி தொம்பரவன் கழையை நட்டு மேளமடித்து ஆரவாரித்து அக்கழைமே லொரு சிறுவனையேற்ற அச்சிறுவன் யேரிக்கழையினுனியி லிருந்து பலரும் பார்க்க ஜகர்ன கோகர்ன வித்தைகள் பார்ப்போர் பிரமிக்கும்படி சித்திர விசித்திரமாயாடினும் அவன் தப்பியெங்கே விழுந்து விடுகிறமோ யென்றடியில் மனங்குவிந்திருப்பதைப் போலவும் மேலும் சேற்றினுழலும் பிள்ளைபூச்சியைப்போலும் அன்னியிலும் தாமரை யிலையின் மேலிருக்கும்ஜலம் போலவும், வழுவாமலுலகிலிருந்து நேராய் ஹரியைத்தினம் வந்தித்து சிந்தித்துப் பாராய், நின்கவலை தீராய், சீராயிருக்கக்கடவாயென, சக்குபாய் ஓ சுவாமி முன்னம் அஷ்டாக்ஷரநாமம் அடியாளுக்குத் தேவரீர் உபதேசித்தபோதே யிவ்வண்ணம் சொன்னா லப்படியே நடந்துகொள்வேன் இப்படி மோசம் போவேனா இனி தங்கள் சொற்படி நடப்பேன் இன்னமுமிப்படி யேதாகிலும்வருமோ சொல்லுமென மாயாவதிதி யினியாதொன்றும் வரமாட்டாதென்று சொல்லிக் குளத்திற்படிந்தோடிவந்து முனிபை யோட்டுதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் தயார் செய்துக்கொண்டிருந்தார்.

சக்குபாய் தடாகத்திற்குளித்துச் சீலமாய் வந்தனள் மாயாவதிதி சக்ரஸ்தாபனஞ்செய்து அதில் சக்குபாயியை யுட்காரவைத்து அஷ்டாக்ஷரமந்திரத்தை யார் முகூர்த்தஞ் ஜெபஞ் செய்து சிரசில் தீர்த்தந் தெளித்ததன்னியில் பேய் ஓட்டுவதற்குரிய சிகிச்சைகளைசெய்தார் இப்படி நாற்பதுநாள் செய்து நாற்பத்தியோராநாள் குளிசமொன் றெழுதிக் கட்டி கிரஹஸ்தனை நோக்கி இப்பெண்ணுக்கு விரோதமானகாரியங்களைச் செய்யாதிருந்தால் அமிர்தம்போ லிருப்பாள் நீருய்வீரென்றார் கிரகஸ்தன் ஓ சுவாமி விரோதமான காரியமென்னீரே அவை யாவதென் தெரியச்சொல்லுமென்ன மாயாவதிதி ஐயா கிரஹஸ்தனே இப்பெண்பேருக்கு மடமொன்றுகட்டி அதிதியப்யாகதாள் சாதுக்கள் முதலானோருக்கு அனுதினமும் ததியாராதனஞ் செய்யக் கடவாய் இக்கைங்கரியஞ் செய்ய நீ முயற்சி செய்வாயாகில் இப்பெண் விரகந்தொண்டு உன்னிஷ்டப்படி பணிகள் செய்வாள், இதுவன்னியிலும் இப்போது யான்வோட்டிய முனி யிவ்வூரிலே தானிருக்கிறது நீ செய்யுந் ததியாராதனைப் பலத்தாலதுபயந்து சொந்தவூரை நாடித்தேடி யோடிப் போய்விடும் பிறகு சுகித்திருப்பாயென்று சொன்னார். கிரகஸ்தன் ஓ சுவாமி உமக்குண்டான ஆயாசம்தீரும்படி பாயாசம், அதிரசம், கனிபன்னமும், நேசமாய் புசிப்பீர் நெய்கொண்டு வருகிறேன் இதன்றி யென்னென்ன வேண்டுமோ அதுகள் குறைவின்றித் தருகிறேனென்ன, மாயாவதிதி ஐயா கிரகஸ்தனே யுன்வாக்கினால் புசிக்க வாருமென் றழைத்ததே பூரணமாயருந்திய தொக்குமுமக்காயாசம் வேண்டாமென்று சொ

Koviloor Digital Library

ல்லி விடைபெற்றுக் கொண்டு மறைந்தபின் அந்த நாள் கடந்த மறுநாள் சக்குபாய் தன்வீட்டுவேலைக்கதகரியாகிய யாவத்தும் என் கரங்களாற் செய்து மாமி நாத்திகளுக்குதவி தன் நாயகன் இஷ்டப்படியன்னபனுதிகளளித்து மன்மதலீலையிற் களித்து, யெம்பெருமானைத் துதித்து நாளைக்கழித்து வந்தாள் இவ்வண்ணமிருக்கச் சக்குபாயின் புருடன் தன்மனையாள் நடவடிக்கைப் பற்றி பொருந்த கூட்டங்கூடி யிருக்கும் பெண்கள் மத்தியிற்சென்று மிகவும் ஸ்தோத்திரஞ் செய்தான் அஃதெப்படியெனில், ஓ வனிதைகளே! கேளுங்கள் இப்பூமியின்கண் பதிவிரதை யென்று யாரைச் சொல்லலாம், என்மனையாளைவிட பதிவிரதைகளில்லை அதெப்படியெனில் புருடனைப் போஷிக்கும் விஷயத்திலன்னையை யொத்தவளும், லக்ஷ்மியை யொத்த அழகுவாய்ந்தவளும் பூமிதேவியை நிகர்த்தபொறுமையுடையவளும் லீலையில் வேசிக்கு நிகரானவளும் புத்தியில் மந்திரியை யொத்தவளும் ஆகயிவ்வாறு குணங்களும் பொருந்தி யிருப்பதால் இவளைப் போல மாதுசிரோண்மணியைப் பார்த்தவர்களில்லை யென்றம்மாதின் மேற் பிரியத்தால் சொல்லக்கேட்டம்மாதர்களி யாவரும் வியாகூலமடைந்து அடேயப்பா உன் பத்தினியைக்குறித்து நாங்களேதாகிலுமிழிவாகச் சொன்னோமா அல்லதுன் பத்தினியின் குணமெப்படி யென்று கேட்டோமா யாதொரு ஞாயமில்லாதிருக்க நீ எங்கள் முன் வந்து புகழ்ந்து நிரபராதிகளாகிய வெங்களை யிகழ்ந்து கனமகிழ்ந்து பேசினாய் ஆகிலும் பெரிதல்ல யின்னுஞ் சிலநாளிலே பதிவிரதையினுடைய நடவடிக்கையை யறிவிக்கிறோமென்று தங்கள் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

5-வது பகவான் குளத்தில்விழும் சக்குபாயியை ரக்ஷித்த அத்தியாயம்.

பிறகு சக்குபாய் புருஷனுடைய யிஷ்டாநுசாரமாய், இல்லற தருமத்திலீடுபட்டு நெடுநாளாகப் பகவானைக் காணாததால் நேரிழை நிந்தாஸ்துதி செய்தாள் எப்படி யெனில், ஓ பகவானே யேரி சவாரி செய்வதற்கோர் குதிரை யுமக்கிருந்தால் யேதுக்குத் தாழ்ந்தபக்ஷியின்மேரித் திரிவையா, மேலும் நவரத்தின ஆபரணங்களுனக்கிருந்தால் தாமரைத் கொட்டை திருத்துழாய் கட்டையாலாகிய மணிவடந் தரித்துலவுவையா, அன்னியிலும் பெரியோர் சிறியவனென்னும் மரியாதை யுனக்குத் தெரிந்திருந்தால், அம்மானாகிய கஞ்சனைக் கொன்றுபோடுவையா இதுவுமன்றி நீ வசிப்பதற்கில்லறமிருந்தாற் பாற்கடலி லிருப்பாயா, மேலும் உனக்கு படுக்கக் கட்டிலிருந்தாற் பாம்பின்மேற் றுயில்வாயா, அன்னியிலும் தண்டனை கண்டனை செய்யத் தாய்தந்தையர்கள் உனக்கிருந்தால் பூமியில் ஸர்வாந்தரியாமியாய் வியாபித்திருப்பாயா, மேலும் வயிறார புசிக்க அன்னமுனக்கிருந்தால் சபரிப்பெண்ணெச்சில் பழத்தைப் பிரியமாய்ச் சாப்பிடுவையா, உன் நடத்தை தெரியவந்தது ஐயா பண்டரிநாதா, நம்பினபேதையாகிய அடியாளை இப்படி நட்டாற்றில் மூழ்த்துகிறையா, அன்னியிலும் சதாகாலமும் பக்தஜனங்களை ரக்ஷிப்பவர் நீயென்று சர்வக்ஞர்களான பெரியோர்கள் சொல்லக் கேட்டல்லவா உன்னைச் சரணமடைந்தேன் நீ யிப்படிப்பட்ட மோசக்காரனென்று யானறியாமல் போனேன். ஓ பிரம்மாவைப் பெற்ற ஆதிதேவனேயென்று நிந்தித்துக்குளத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வோமென்று தண்ணீர் குடத்தை யெடுத்துக்கொண்டு குளத்தை நாடிச் சென்று குளக்கரையில் குடத்தைவைத்து ஒருவருமில்லாமற் பார்த்து, விட்டல விட்டல வென்றுதியானித்துக்கொண்டே குளத்தில் விழுந்தாள்.

எள்ளுக்கு ளெண்ணை போலும், பாலுக்குள் வெண்ணைபோலும், சர்வாந்தரியாமியாய் விளங்கும் பாண்டுரங்க னிதையுணர்ந்து பதராதே பதராதே இதோவந்தேன் வந்தேன் தெரிசனந் தந்தேன் தந்தேனெனச் சொல்லிக்கொண்டேவந்து பாவையை யெடுத்து மடியின்மேல் வைத்துக்கொண்டு க்ஷத்திரிய குலத்திற் பிறந்து உத்தமியெனச்சிறந்து இகவாசையைத்துறந்து பரவாசையிற் பறந்து, தன்னைத் தான்மறந்த வம்மணி. நீ யிதுகாரியம் செய்யலாமோ யிப்படி செய்வது ஞாயமோ நல்ல நேயமோ, ஈதென்ன மாயமோ சிறந்த உபாயமோ, யென்னவபாயமோ யென புத்திகளைச் சொல்லிக் கொண்டிருக்க தடாகத்திற்கு ஜலமெடுக்க வந்த சிலர்கண்டு, மித்ருராவிடஞ் சென்று, ஐயா சிலநாளைக்கு. முன் யென் பத்தினியைப்போல பதிவிரதை யுலகிலில்லையென்று சொன்னீரே அப்பதிவிரதை பாபுருடனிடம் பேசிக் கொண்டிருக்கிறாள் இதோபாரும் யென்று காண்பித்துச் சென்றார்கள்.

இதைக்கண்ட மித்ருராவ் மிகுந்த கோபங்கொண்டு, கையில் வாளைத்தரித்து வேகமாய் வந்து மாயாவதியைக் கண்டு நீயார் உன் ஊரென்ன; பேரென்ன இப்பெண்ணுக்கு முனக்கும் வெகு நாளைய பழக்கமோ நான் மணஞ் செய்துக் கொள்ளாமுன்னமே யிவ்வனிதையை ரகசியத்தில் வைத்திருந்தவ

Kovilloor Digital Library

ஞெ யாருக் குறித்தாமென்று தெரியுமாவெனச்சின
ங்கொண்டு வாளினல் வெட்டி விடுகிறேனெனச்
செப்பி அவர் சமீபத்தில் வேகமாய் நடந்தான் ஜல
மெடுக்கவந்த வேறு சிலரிதைக்கண்டு அடாபாதகா
அவரைப் பார்த்தாற் பசிகூடத் தீருமே. வீண் சண்
டை செய்பவர்கள் உன்னைப்போ லிவ்வுலகி லுண்
டோ அவர் செய்ய மாட்டாரென்று சொல்லிவிலக்
கினர்கள். மாயாவதிதி ஜலமெடுக்க வந்த ஸ்திரீ கூட்
டங்களையும், சக்குபாய் புருடனையும் நோக்கி முன்
யான் ஓட்டிய பேயானது இப்பெண்ணை யிழுத்துக்
குளத்திற்றள்ளக்கண்டு அதற்கு முயற்சியோடு மந்
திரித்துத் தடுத்து இன்னும் சிலநாளிவருக்குதவியா
யிருக்கட்டுமென்று நானுபகாரஞ் செய்திருக்க அ
தை தெரிந்துக் கொள்ளாமல் இகழ்வாகப்பேசி,
சண்டைக் கெதிர்த்துவந்தாயே யென்றதைக்கேட்ட
மித்ருராவ், அந்தோ யானிது தெரியாமல் பெண்டு
கள் வார்த்தையைக் கேட்டுக் கொண்டேனே அபவா
தத்துக் குட்பட்டேனே பெரியோரை யிகழ்வாகப்
பேசிச்சண்டை தொட்டேனே மதியீனனய் விட்
டேனே யென்று சொல்லி தன் பத்தினியையழைத்
துக்கொண்டு வீடுசேர்ந்து நாளைப்போக்கிக்கொண்
டிருந்து ஓர் நாள் தண்ணீர் கரையை நோக்கிச்செல்
லும்போது மார்க்கத்தில், கபீர்கமால் ராமதாசர்
முதலான பெரியோர்கள் பஜனை செய்துக்கொண்டு
வர பெறுத்த 'கூட்டத்தைக்கண்டு அவர்களைநண்ணி
தெண்டன்பண்ணி பலவிதமாய்த்துதிபண்ணி நிதி
கிடைத்தவாரண்ணி, சுவாமிகளே! யெங்குபோகி
றீர்களென, அவர்கள் நன்மொழி சிலது விண்டார்
அதென்னவெனில், அம்மணி சக்குபாய் உத்தம
க்ஷேத்திரமாகிய பண்டரி பாண்டுரங்கனுடைய சந்
நிதியில் யேகாதசி யுற்சவமாகையால் அதினுடைய
மகிமை யெடுத்துச்சொல்ல ஆயிரம் பணமுடிகளும்
இரண்டாயிரம் நாவுமுடைய ஆதிசேஷனலும் தா
மாமோ, அபாரம் யென்ன சக்குபாய் ப்ரமாசாரி
யர்மீதும், இஷ்டதேவதையின் மீதும், சிரவணர்த்
தங்களின்ய..ம், சிரத்தை பூரணமாகவுடையவளும்
மேலும் ப்ர..சாரியா மீதிருக்கும் சிரத்தையானது
பரமக்ஞானத்தைக் கொடுக்கும், இஷ்டதேவதை
மீதிருக்கும் சிரத்தை பாபவிமோசனமாக்கும், சிரவ
ணர்த்த சிரத்தை யில்லாதவருக்கு ஞானம் லபிக்க
மாட்டாது ருதுவாகாத கன்னிகை எப்படி கெர்ப்
பந்தரிக்கமாட்டாளோ, அப்படியே சிரத்தையில்
லாதவருக்கு ஞானர்த்தம் மனதிற்றரிக்கமாட்டாது.
சிரத்தையேருது, உபதேசமேபிந்நா, ஞானமே கர்ம்
மம் ஆநந்தமே சிசுவென்றுரைக்கத்தகும் குரு கிரு
பையில்லாவிட்டால் சிரவணதிகள் லபிக்கமாட்டாது

தன்னை மறக்கிற பரியந்தம் கீழ்ச்சொன்ன மூன்றி
னிடத்திலும் சிரத்தை பூரணமா யிருப்பவர்க்கே
பிரம்மானந்த முதயமாகும் எப்போது ஆசாரியரின்
பரிபூரண கிருபை பெருவாரோ அப்போது உதய
மாகும், ஞானப்ரகாசம், அற்றுற்போகும் அஞ்சான
பாசம், விஸ்தரிக்கும் ஆத்விலாசம், இராதுசிந்தனம்
லவலேசம், சஞ்சித்கர்ம்மங்களாய்ப் போகும் நாசம்
தன்னை மறக்கச்செய்துவிடும் பிரமோபதேசம், சகல
பற்றுக்களுமற்றுப் போகும்படிச் செய்யும் சாதுக்
கள் நேசம் எவ்வளவு மேன்மையானது பாருங்
கள் குரு விசுவாசம், மேலும் தேகம் சேதனம், மூட
சடம்-நித்தியசுக்ஞானசேதனம், தேகம் கண்ட ரூப
நாமம் நீங்கள்கண்ட பரிபூரண நிரூபநிர்னமம்,
தேகம்-விகார மலதுக்கம், நீங்கள் நிர்விகார நிர்மலா
நந்தம், முக்தர்களான பேர்களுக்கேது தேகாபிமா
னம், ரூபமென்றறைக்குமோரேநிதானம்,ரூபம்யாரா
லுஞ் சொல்லுதற்கரிய மோனம் இதுவே வேதமுடி
வான யெதார்த்தஞானம். மற்றவைகளெல்லாம்
மூடஞானம் மூகபாவத்தை யடைந்திருப்பதே பிர
மத்தியானம் தற்சுதந்தரமற் றிருப்பதே ஆசாரிய
ருக்களிக்குந் தானம், நானென்பதற்றவர்க்கு மூண்
டோ ஈனம், நாடற்றபிரமஞானியேமூவர்க்குஞ் சமா
னம் நானற்ற பேர்க்குண்டு நாரதாதிகளின் சன்மா
னம் அன்னியும் தேகத்தை நடப்பித்தும் பிரா
ணனை நடப்பிப்பதுஞ்ஜீவன் ஜீவனை விளங்கச் செய்
வது ஆத்மக்ஞானம் ஆசையால் தேகாதிகளை நானா
ல்லவென்றே யிருந்து ப்ராப்திர்தீனமான தேகத்
தின் மேலாசையற்று தேகாபிமானத்தைவிட்டு தன்
னைத்தான் ஆராய்ந்து எல்லையற்ற ஆனந்தமேலீட்
டால் தேகாதிகளை அசைவா நிறுத்தி நித்திரானந்
தம் வந்தடைவதுபோல் துரியதிருஷ்டியை மேவி
பிர்மமாத்திரமாயிருந்து ஆனந்தோதயத்தில் நின்று
நித்திரையானது தன்னை மறக்கச்செய்வதுபோல ஆ
னந்த நித்திரையால் தன்னை மறந்து சொக்கியிருக்
கும் சுபாவமுடைய சக்குபாய் அப்பரம சாதுக்க
ளைச்சேவித்த ஆனந்தத்தால் என்னையாளவந்த யெந்
தைகளே! அடியாளுங் கூடவருகிறேன் அந்தசே
வையை சேவிக்கச்செய்தால் உங்களுக்கு நல்லசுகுர்
தமுண்டு அன்னியிலும் தேன்கமழும் மலர்களைக்
கொண்டு பாதங்களி லர்ச்சிப்பதுந்தவிர, தெளிவா
கச் செய்வேனுங்களுக்குத் தொண்டு யென்றனள்
சாதுக்கள் ஓ சக்குபாய் உனக்கு நாயகன் மாமிநாத்
தி முதலானேரிருக்க அவர்களனுமதியின்றி நாங்க
ளழைத்துப்போவது ஞாயமோஞாயமல்ல உனக்கு

Koviloor Digital Library

ஏகாதசி சேர்வை சேவிக்க வேணுமென்ற அபேக்ஷை யிருக்கும்பக்ஷத்தில், நின்னுயகனுக்கறிவித்து மகிழச்செய்து அவனை வரவழைத்துக்கொண்டு அத்தலம் சுகமாய் வந்து சேருமென்று சொல்லி நடந்தார்கள்.

பின்புசக்குபாய் ஜலங்கிரட்டிக் கொண்டுபோய் வீட்டில் வைத்து வேலைகள் யாவும் முடித்து புருடனுக்கு அன்னபனுதிக ளுதவி படுக்கை வீட்டிற்குட் சென்று கணவனிஷ்டப்படி நடந்து ஓ நாதா! அடியாளுடைய மறுவொன்றுளது, அஃதென்னெனில் பண்டரிபுரத்தில் ஏகாதசி யுற்சவம் விசேஷமென்று பஜனை செய்துக்கொண்டே பல பெரியோர்கள் போகிறார்கள் ஆகையால் அந்தசேவைக்குச் சென்று சேவித்தால் பூர்வத்திற் செய்த வினைகளை யெல்லாம் போக்குமாம் ஆகையால் நாமும் சென்று சேவித்து வருவோம் வாரும் என்ன மித்ருராவ் அடிபெண்ணே இப்போதென்ன முழுகிப்போனது மேல் வருடம் குடும்பத்தோடு சென்று சேவித்து வரலாம் அங்கென்ன யிருக்கிறதென்று தேடிப் பார்ப்பது போடி பயித்தியக்காரி யென்றான் சக்குபாய் அந்தோ அந்தோ நானென்ன செய்வேன் மேன்மைபான பகவத் சேவையும், அரிதானசாதுக்கள் தெரிசனமும் நமக்கு ப்ராப்தமில்லாமற் போச்சுதே, இந்த ஜென்மம் வீணாச்சுதே எத்தனை நாளைக்கிருக்கினும் மரணமொருநா ளடைவது நிச்சயம் அறுவும் இன்றோ நாளையோ காடோ வீடோ குளமோ குட்டையோ அல்லிலோ பகலிலோ இப்போதோ யெப்போதோ நாமறியோமாகையால் இத்தேக மிருக்கும்போதே சாதுக்கள் சேவைசெய்து அவாளனுக்கிரகம் பெறவேண்டுமென்று வைராக்கியத்தை வகித்தவளாகி நாயனைப் பார்த்து நாதா! நீரென்ன செய்தபோதிலுஞ்சரி நான் பண்டரிக்குச் சென்று பகவானையும் பாகவதாளையுஞ் சேவித்து தான் வருவேன் என்றனள்.

6-வது பகவான் மாயா சுந்தரியாய்வந்து சக்குபாயிபை பண்டரிபுரத்திற் கனுப்பிய அத்தியாயம்.

மித்ருராவ் சக்குபாயியை நோக்கி குக்கலைப் பிடித்து சுவர்ன்னமயமான சிம்மாசனத்திலேத்தி சுபலக்கினத்தில் பட்டங் கட்டினபோதிலும் அதின் குணம்மாறாது கெடுதியே செய்யுமாப்போல உனக்கெத்தனை விதத்தில் நற்புத்திகளைப் போதிக்கினும் முன் குணம்மாறாமல் எதிர்த்து வைராக்கியம் பேசுகிறையா குடிகேடி நல்லதாகட்டும் நின்னை லேசாய் விடுகிறதில்லையென்று கடுங்கோபத்தாற் கோலினுற் புடைத்து அன்று பெரியவரோட்டிய பேய் மறுபடியும் பிடித்ததோவெனச் சந்தேகமடைந்து கயறுகொண்டு கால்கரங்களைப் பிணைத்து அறையிற்போட்டடைத்துச் சென்றான் சக்குபாய் பண்டரியென்று உறக்கமின்றி பகவானை தியானித்துக்கொண்டிருந்தாள் இங்கிதப்படி யிருக்கப் பகவான் அண்டைவீட்டிற் சுந்தரி யென்றொரு பெண்ணுண்டு அப்பெண்ணைப்போல் ரூபந்தரித்து வந்து, அம்மா சக்குபாய் உனக்கென்ன அதிக நித்திரையோ? கதவைத் திற பண்டரிபுரத்தில் ஏகாதசி யுற்சவம் மிகுந்த விசேஷமாம் ஆகையால் நாமிருவரும்போய் சேவித்து வருவோம் வாரும் யென்ன சக்குபாய் அடியேன் மனதுக்கினிய மாதே யெனக்கு வீட்டுவேலை மெத்தவுண்டு நீ போய் சேவித்துவா வென்னச் சுந்தரி அப்படியல்ல உன்கொழுநன்மாமியைக் கேட்டுச்சொல்லு இப்போதுக்கதவைத்திற வென்ன அந்த பக்கந்தான் திறக்கவேண்டும் ஆகையால் நீ திறந்து கொண்டுவா வெனச் சுந்தரி கதவைத்திறந்துகொண்டு உள்ளே போய் சக்குபாயியை நோக்கி தேனே யடிமானே உன்னை யென்ன காரணத்திலிப்படிக் கட்டினார்கள்.

கட்டினவர்கள் யார் அதைத்தெரியச்சொல்லுமென சக்குபாய் கேளுமம்மா சுந்தரி நான் என் கொழுநனை பண்டரிபுரத்திற்குபோய் பகவானை சேவித்து வரலாம் வாருமென்றழைத்தேன் அதற்கவர் மேல் வருஷத்திற்குக் குடும்பத்தோடும் போய் சேவித்து வரலாமென்றார்; அதற்குமேல் நான் இது அநித்தியமான ஜென்மம் இதுமாறினால் மறுபடி நாயோ பேயோ யெந்த ஜென்மம் லபிக்குமோ ஆகையாலிந்த ஜென்ம மிருக்கிறபோதே பகவானைச் சேவித்துவரவேண்டு மென்றாலோசித்து கணவனைநோக்கி நீரென்னசெய்தாலுஞ்சரியிறைவனைக் கண்டுமீள்வேனென்றேன் அதற்கவர் கோபித்து அடித்துப் பிணைத்து இவ்வறையிற்போட்டுமூடிச்சென்றாரென சக்குபாய் மொழியையக்கேட்ட மாயாசுந்தரி ஹரி ஹரி! பகவானைச் சேவித்து வருகிறேனென்றதற்கா இத்தனை யலங்கோலஞ் செய்தானன்று நீதரியாமுடன் யென்றனுதாபப்பட்டு ஓ சக்குபாய்! அவசியம் பகவானை சேவித்துவரவேணுமென்கிற தீவிரமிருக்கிற பக்ஷத்தில், நானொருபாயஞ் சொல்லுகிறேன் அப்படி நீநடந்தால் பகவானை தெரிசிப்பாயென்ன சக்குபாய் அடி சுந்தரி யெனக்குத் தந்திரஞ்சொல்லுவையாகில் உன்னிஷ்டப்படி நடக்கிறேன் என்ன மாயா சுந்தரிஉனக்கப்பர்மத்தைச் சொல்லிஉபகாரஞ்செய்ய

வெண்ணியனுப்பினால் நீ அத்தலத்திற்குச் சென்று நிரந்தரம் பகவற்சேவை செய்துக்கொண்டு அங்கிருந்துவிட்டால் நானுன் புருடனுக் கென்னபதில் சொல்லுவேன். அதற்குத்தகுந்த சமாதானஞ் சொல்லுவையாகில் அனுப்புகிறேனென்ன சக்குபாய் அடியம்மா பெங்காகிலுமுண்டா நானப்படி செய்து உன்னைக்காட்டிக்கொடுத்துவிட்டு அங்கோர் நிமிஷங்கூட யிருக்கமாட்டேன் ஈதுண்மையானஅப் பண்டரிக்குப்போய் பகவானைச் சேவித்து உடனே வருகிறேனென்ன மாயாசுந்தரி அக்கட்டுகளை யவிழ்த்துவிட்டு தன்னை கட்டும்படிசொல்லி கட்டுப்பட்டிருந்தாள்.

உடனே சக்குபாய் வீட்டைவிட்டு வேகமாய் நடந்து பெரியோர்கள் கூட்டத்திற் சேர்ந்து பஜனை செய்துக்கொண்டே போகிறபோது, கபீர்தாசர்-சக்குபாயியை நோக்கி ஓ அம்மா! உனக்காகப் பாண்டுரங்கன் கட்டுப்பட்டானே உன்பாக்கியமே பாக்கியம் இதுவல்லோ யோக்கியம் யெங்களுக்குண்டோ பிர்ம சிலாகியம் யிப்படி கலந்திருப்பது வேதவாக்கியம் இவ்வமுத முண்பதுதான் மிகுந்த யோக்கியம் உன் சேவையால் எங்கள் ஜென்மம் பாவனம் இது நல்ல ஜீவனம் என்று ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் ஆனந்தமேலிட்டு தெண்டன் சமர்ப்பித்து ஆலிங்கனாதிகள்செய்து சக்குபாயியை பகவானென்றே மதித்து உளத்திற் பதித்து பலவிதமாய்த் துதித்து தங்களை மறந்து ஸ்தம்பித்து பலவிதங்களாய்க் கொண்டாடி பண்டரியைத்தேடி நடந்து ஒன்றுகூடி பீமநதியில் குளித்து அனுஷ்டானங்களை முடித்து தம்பூர் முதலான பல கருவிகளைக்கொண்டு யிசையிற் கூடிப்பாடி வாடி யாடி சந்நிதியை நாடி விதிப்படி வலம்வந்து சகல மேளவாத்தியங்கள் கோஷிக்க நடுவில், விட்டல்தேவன்-ராதா ருக்மணி சமேதராய் திருவீதியிற் சேவைதர சேவையிலீடுபட்டு மூலவரை தெரிசித்து ஆலிங்கனஞ் செய்து சந்நிதியிற் கொடுக்கும் பிரசாதங்களை வாங்கி ஸ்வகரித்து மூன்றுநாளங்கிருந்து நாலாநாள் வைகரைப்பொழுது லெழுந்து கபீர்-கமால்-ராமதாசர்-முதலான பெரியோர்களு மெழுந்து தங்களூரை நாடி நடந்தார்கள்.

7-வது பகவான் மாயாஜோதியாய் வந்து பாம்புகடித்திருந்த சக்குபாயிக்கு ஔஷதங்கொடுத்து சொஸ்தப்படுத்தி சிந்துதேசத்துக்கனுப்பிய அத்தியாயம்.

சக்குபாய் காலையிலெழுந்து பீமநதிக்குச்சென்றுஸ்நானஞ்செய்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டிருந்தாவனத்திற்குச்சென்றுமலர்களையெடுத்து மாலையாகத் தொடுத்து பகவானுக்கலங்கரிக்கக் கொடுத்து ஸந்நிதியிற் கொடுக்கும்பிரசாதம்வாங்கி ஸ்வீகரித்துத் தன்னூரென்னமில்லாமல் பகவானைச் சேவித்துக்கொண்டு சக்குபாய் இப்படியிருக்க அங்குசிந்துதேசத்தில் சக்குபாயினால் கண்டுண்ட மாயாசுந்தரி யென்ன செய்தாளென்றால் சக்குபாயியைப்போல ரூபந்தரித்திருந்தாள். அவ்வேளையில் மித்ருராவ் கதவைத்திறந்து உள்ளேபோய் அடிசக்கு! உனக்குப் பண்டரிபுரயேகாதேசிசேவைகிடைத்தது போதுமா, இனியாகிலும் என் சொற்படி நடக்கிறாயா? என்ன சொல்லுகிறாயென்ன, மாயா சக்குபாய் ஓ நாதா! தேவரீர் கட்டியகயிறு கால்கரங்களை வாளைப்போலிருக்கின்றது ஆகையால் அடியாளை யிச்சிறையினின்று நீக்கி விட்டால் உமதிஷ்டப்படி நடக்கிறேனென்றவுடன் மித்ருராவ் கட்டுகளையவிழ்த்துஅறைவீட்டைவிட்டு வெளிப்படுத்தினான் மாயாசக்குபாய் வீட்டின் வேலைகள் யாவுஞ்செய்து அன்னபானாதிகள் சமைத்து சக்குபாய் நாயகனுக்கும் மாமி நாத்தி முதலிய யாவருக்கும் பரிமாறி இரவுவந்தவுடன் படுக்கைக்குப் போய் இவன்களிப்படையும்படி கதைகளைச்சொல்லிக்கொண்டிருக்க சக்குபாயின் புருடன் தன்பத்தினியென்றே மதித்திருந்தான். மாயாசக்குபாய்! ஓயென் மனதிற்குகந்த நாதா அடியாள் வார்த்தையைக்கேளும் அதென்னவெனில் இப்போது அடியாள் தரித்திருக்கும் கம்மலுக்கேத்த நல்ல கத்திரிபாவலெனக் கனியத்தருவீராகில் நாளையதினம் உம்முடைய இஷ்டப்படி நடக்கிறேனென்று சொல்லி வெத்திலைச்சுருளுச்சிதமாய் மடித்துகொடுக்கஅவனும் பிரியமாய் வாங்கிமென்று கொண்டிருக்க மாயாசக்குபாய் ஓபிராணநாதா நல்ல மூக்குத்தியொன்று தந்து யிஷ்டப்படி யிருவென்றிப்படியாக அவன் மகிழ்ச்சி யடையும்படி யனேக தந்திரக்கதைகளைச்சொல்லி நாளைப் போக்கி கொண்டிருந்தாள் இப்படியிருக்க தலத்திலிருக்கும்படியான சக்குபாய் யோர்நாள் மலர்கொய்யும்போது அவ்வனத்திலிருந்த ஓர் சர்ப்பத்தீண்டியதனால் விஷமேறி நிலத்திதெங்கும் விழாமல் ஓடிவந்து பாண்டுரங்கனை யாலிங்கனஞ்செய்து பலவிதங்களால் வேண்டி மரணமடைந்தாள்.

அங்கு பாண்டுரங்கனை சேவிக்கவந்த சாதுக்கள் கண்டு இப்பிணமிங்கேதென்று சொல்லி பிரேதத்தை சந்நிதிக் கெதிரிற்போட்டு அக்கினி ருசங்கழித்து சம்புரோக்ஷணை முதலானதுகள் நடத்தி நித்தி

Koviloor Digital Library

யோற்சவ பக்ஷோற்சவ பிரம்மோற்சவங்கள் தடையின்றி நடக்கும்படியான யேற்பாடுகள் செய்தகன்றூர்கள் சிலர் சக்குபாய் இறந்திருக்கப் பார்த்து தாய்வீட்டுக்குச்சென்று அம்மா கமலாபாய் உன் மகள் பண்டரிபுர சேவைக்கு வந்து மடிந்துபோனாளென்ற சொற்கேட்ட கமலாபாய் அவர்களைநோக்கி அவள் மாமியுடனும் வரவில்லை கொழுநன் கூடவும் வரவில்லை தனிவழியாய் வந்தவள்போலத் தோற்றுகிறது ஆகையால் யெங்கள் குலத்தில் தனிவழியாய் வந்தவளை வீட்டிற் சேர்க்கிற வழக்கங்கிடையாது மேலும் நான் அப்பிணத்தை வீட்டிற்கெடுத்து வருவேனையாகில் பந்துக்கள் யெங்களை ஜாதியில் நின்றும் விலக்கி விடுவார்களே நானென்ன செய்வேனென்று ஜாதிகட்டுக் குள்ளாகியிருந்தார்கள் இன்னுஞ் சிலர் சிந்து தேசத்திற்குச் சென்று மித்ருராவைக் கண்டு உன்மனைவிசிலது நாளைக்குமுன் பண்டரிபுரச்சேவைக்கு வந்து மலர் கொய்யப்போன விடத்தி லரவங்கடித்து யிறந்துபோனாளென்ற சொற் கேட்டவுடனே, அடிசக்கு இங்குசீக்கிரம் வாடியென்றழைத்து மாயா சக்குபாயியை யவர்களுக்குக் காட்டி உங்களுக் கிவள்பேரி லென்ன கொடுமையோ, உயிரோடிருக்கும்போதே இறந்துபோனாளென்று சொல்லுகிறீர்களே, இனிமேல் அந்த வார்த்தையைச் சொலலிக்கொண்டென்முன் நிற்கப்போகாது ஓடிப்போவீர்களென கோபித்துத் துரத்தினான்.

பிறகு ஆயர்பாடியில் யலேதள கோபிகள் வீட்டில் களிதல கிருஷ்ணனாகத் தோன்றிய சாக்ஷாத் பாண்டுரங்கன், உடனே ஜோகியைப்போல வேடந்தரித்துப் பண்டரிபுரவீதியில் விஷகடி மருந்துகள் விற்றுக்கொண்டுவர அவரை நோக்கி ஒரு பெண் ஐயா பாம்புகடிக்கு மருந்திருக்கிறதா வென்றாள் ஆ யிருக்கிறதென்றார் அவரை யழைத்துக்கொண்டே வந்து சக்குபாயின் தேகத்தைக்காட்ட கருடமந்திரத்தை யுச்சரித்து கமண்டல நீரைக் கொட்டிக் கருணைக் கடலாகிய மாயாஜோகி யெழுப்ப நித்திரை நீங்கி யெழுந்திருப்பவள்போல சக்குபாய் உயிர் பெற்றெழுந்தாள் மாயாஜோகி அம்மா உனக்கொரு பயமில்லை, இனி வீட்டிற்கேகுவா யென்ன இன்னமிரண்டு நாளிவ்விடமிருந்து போகிரேனென்றாள். மாயாஜோகி நல்லவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே சக்குபாயியை யழைத்துவந்து அன்னகர் சமீபத்தில் விடுத்து மறைந்துபோனார் அனந்தரம் வீட்டிருந்த மாயா சக்குபாய், தண்ணீர்க்கரையை நோக்கித் தனியாக பொற்குடமெடுத்து யெதிர் நெருங்கி சமீபித்து மாயா சக்குபாய் உருவம்மாரி சுந்தரியானாள் அவளைக்கண்ட யெதார்த்த சக்குபாய் இவளுக்கென்ன நான் சொல்லுவேன் யென்று கலக்கமுற்று நின்றாள் அக்குறிப்பை யுணர்ந்த சுந்தரி அம்மா சக்குபாய் நீ சொல்லிப் போனபடி வராமல் இத்தனை நாள் கடந்து வந்தனையே உன் புருடன் கேட்டால் நானென்னபதில் சொல்லுவேன் உன் புருடனோ மிகவும் கெட்டவன் யென்றுனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் நீ இப்படிச் செய்தது சரியா உனக்கென்ன வெறியா வென்ன, சக்குபாய் அடி யம்மா சுந்தரி என்மனதுக்கிசைந்த மந்திரி சமயோசிதமாய் நடக்கும் தந்தரி அதிகசவுந்தரி நான் பண்டரிக்குப் போகும் மார்க்கத்தில் சில பெரியோர்கள் சேவையால் யாவற்றையு மறந்து கியாபகமின்றி நாளைப் போக்கிவிட்டேன் ஆனந்த மேலிட்டேன் பிரமத்திற் குட்பட்டேன் அஷ்டாக்ஷர மந்திரத்தைதொட்டேன் ஆகையால் மன்னிக்க மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன் மேலும் இனி நான் வீட்டுக்குச்சென்றால் புருடனடிப்பானே யென்ற சக்குபாயியை நோக்கிச் சுந்தரி சொல்லுகிறாள் கேளாய் பண்டரி நாதன் களிக்சப் பக்திசெய்யும் யெனது யேசியே மிகு விசுவாசியே பகரும் மிருதுபாஷியே நீயொன்றுக்கும் அஞ்சவேண்டாம் உன்னைப்பற்றி விசேஷமாக யுன்புருடனுக்கும் போதித்திருக்கிறேன் பயப்படாமல் போவென்று பொற்குடத்தைக் கொடுத்துத் தன் சுயரூபத்தையெடுத்து சக்குபாயிக்குச் சேவைதந்து நின்ற பாண்டுரங்கனைப் பணிந்து மலர்ப்பதங்களைப் கண்களிலணிந்து பலதரம் வலம் வந்து உருகி யானந்தக் கண்ணீருதிர்த்துப் பணிந்தெழுந்துத் துதிக்கத் தொடங்கினாள்.

எப்படி யெனில் ஓ மாதவா எழுதற்கரிய மறையை கவர்ந்துக்கொண்டு கடலிற் புகுந்து ஒளிந்த சோமுகா சூரனுயிரை மீனுருவெடுத்து மாய்த்து அவன் விடாது பற்றியிருந்தவேதத்தை நாமகள் நாயகனாகிய நான்முகக்கடவுளுக்கீந்துஜீவஜந்துக்களை ரக்ஷித்த புண்ணியனே போற்றி போற்றிதிருப்பாற்கடலின் நடுவே மந்தரகிரியை மத்தாக்கி மதியைத் தறிபாக்கி நாட்டி வாசுகியை வடமாகப்பூட்டி சுராசுரர்கள் கடைய அம்மலைக் கடலி லழுந்தாவண்ணம் ஆமை வடிவெடுத்துத் தாங்கியபராபரனே போற்றி போற்றி பூமியைப் பாயாகச் சுருட்டி பாதாளத்தில் மறைத்த இரணியாக்கனுயிரை வராகவுருவெடுத்து வாட்டி அப்பூமியை பழையபடி விரித்த வரதனே தேவரீரது திருத்தாட்டாமரைகட்கு வந்தனம் தானெனுமமதையவைத்து தன்னுடையநாமமே துதிக்கும்படி கட்டளையிட தன்குமாரனான பிரகலாதாழ்வான் ஹரிநமோவென்று சொல்லக்கேட்டுக் கோபமடைந்து பலவாய் தண்டனைகளைச்செய்த இரணிய

கசிபன்முன்நரசிங்கமாகி அவனுயிரைப் போக்கியன்பனுன பிரகலாதனனை யாட்கொண்ட காருணகரனே உம்மைச் சரண்புகுந்தேன் வேதத்திற்சிறந்த காசிபருக்கும் அதிதிதேவிக்கும் தனயனுகப்பிறந்து, மமதையிற்படிந்த மாபலியிடஞ்சென்று மூன்றடி பூமியையாசித்து ஓரடி பூமியையளந்து இரண்டாமடிவானுலகையளந்து மூன்றாமடி அவ்வசுரன் முடிமேல் வைத்துப்பாதாளத்திலழுத்தி இந்திராதி தேவரைக் காத்த திருவிக்கிரமனே உம்மைச் சரண்புகுந்தேன் ஜமதக்நிக்கும் ரேணுகாதேவிக்கும் புத்திரனுக உதித்து அதம்வழி நடந்த கார்த்தவீரியார்ச்சுனனையும் இன்னும் சூரியகுலத்தரசர்கள் முதலானோரையுமழித்து அந்தணர்களைக் காத்தருளிய பரசுராமனே உம்மைச் சரண்புகுந்தேன், திருவயோத்தியில் தசரத சக்கிரவர்த்திக்கும் கோசலைக்கும் மகவாயுதித்து ராவணாதி ராக்கதரைவென்று ரிஷிகளைக் காத்து ரக்ஷித்துப் பட்டாபிஷேகனுகிய ஸ்ரீராமபத்திரா உம்மைச் சரண்புகுந்தேன், தேவகிதேவிக்கும் ரோகிணி தேவிக்கும் ஒரு மகனுயுதித்து பிரபலம்பன் முதலானோரைக் கூற்றுவனுலகுக்கனுப்பிய பலராமா உம்மைச் சரண்புகுந்தேன், வடமதுராபுரியில் வசுதேவருக்கும் தேவகிதேவிக்கும் திருவவதரித்து, வசுதேவரால் நந்தகோபன் யசோதையின் கிரகமேவி வளர்ந்து முலையில் விடந்தரித்து உயிர் துறக்கச்செய்ய மெண்ணிவந்த பூதகியுயிரை வாங்கியதேவனே சரணம் சகடாசூரனை யிடதுகாலாலுதைத்து மடித்த அகளங்கனே சரணம் சுழல் காத்தாய் வந்த த்ருணாவர்த்தனைக்கொன்ற கிருஷ்ணனேசரணம் ஆயர்பாடியி லின்னுமனேக மாயங்களைச்செய்து கஞ்சனை மடித்து உக்கிரசேன மகாராஜனுக்கு வடமதுராபுரியைப் பட்டங்கட்டி தேவமயனால் நடுக்கடலில் துவாரகையென்றோர் நகருண்டாக்கி அதில் அஷ்டலட்சுமி சமேதராய் வசித்த ஸ்ரீ கிருஷ்ணபகவானே சரணம் கலியுகத்தில் பாலகளாகிய மிலேச்சர்களை வதைக்கக்காலத்தை யெதிர்பார்த்திருக்கும் கலிகியவதாரனே சரணம்என்றிவ்விதமாகத் துதித்து நிற்கும் சக்குபாயியை நோக்கி இன்னுஞ் சிலகா லவனுடன்கூடி யில்லறத்தி லிருமென்று கடாக்ஷித்துப் பாண்டுரங்கன் மறைந்துபோனார்.

பிறகு சக்குபாய் பொற்குடத்திற் ஜலங்கொண்டு அகத்தில்வைத்து அன்னபானுதிகள் முதலியவை சமைத்து யாவத்திராளுக்கும் படைத்து வீட்டு வேலைகளைமுடித்து, படுக்கைவீட்டிற்குட் சென்று கணவனுக்குத் தாம்பூலம் சாமானியமால் மடித்துத் தர மித்ருராவ் அதைக்கண்டு யென்னடி மானே யென்பேரில் கோபமா நேற்றையதினமும் முன்னையதினமும் சித்திரசித்திரமாய் மடித்துத் தந்தாயே அதைப்போல் கொடாமல் மர்மம் சாதிக்கிறாய் மனதைப் பேதிக்கிறாய் உன்மனதிலென்ன குறையடி அதை வெளிப்படையா யுறையடி; வஞ்சமனதை நீக்கடி, முன்போல யெனக்குக் களிப்புண்டாக நடவடி யென்ற கொழுநனைநோக்கி ஓ பிராணநாதா! வெற்றிலைச்சுருள் வேறுமாதிரிமடிக்க யெனக்குத் தெரியாது அடியாளுடன் ஏன்வாது, தெரிந்திருந்தால் செய்யத்தடையேது, கோபமேன் ஏழைமீதுயென்ற மனைவியின் வார்த்தையைக்கேட்டு ஓவனிதையே வேறுமாதிரி மடிக்கவறியேன் யென்றெனையே நேற்றுயிருந்தது நீயல்லவோ இனியாரடி, நடந்ததை மறைக்காமல் உண்மையைச்சொல்லடி யென்ற கணவனை நோக்கி யென் தந்தையாகிய பாண்டுரங்கன் எனக்குப்பதிலாயிருந்து யென்னைப்பண்டரிபுரத்திற்குப் போகும்படிச் சொன்னார் அவ்வண்ணமேயான் பண்டரிபுரத்திற்கு ஏகாதசி சேவைக்குப் போயிருந்தேன் அவரைத் தெரிந்துக்கொண்டு பாதங்களிற் பணிந்து வேண்டிய வரங்களை கேளாமல் விட்டுவிட்டேனே யென்ற மனையாள் வார்த்தையைக்கேட்டு அடிமாதே பேதையாகிய உனக்காக இத்தனை ஊழியஞ் செய்தாரோ உண்மைதெரிந்தாலல்லோ புகழ்வேன் அஞ்ஞானமதியால் அறிந்துக் கொள்ளாமற்போனேனே, மிகுந்த அபராதியானேனே அடிமானே திருத்தியதேனை யென்றுருகி வியாகூலமடைந்து அடிபெண்ணே! உனக்கந்த பகவான் எப்படிசேவை தந்தாரென்று கேட்டகணவனைநோக்கி ஆதியோடந்தமாகச் சொல்ல, அதைக்கேட்ட மித்ருராவ்அந்த மந்திரத்தை யெந்தனக்குச் சொல்லடி நானன்னியனல்லடி இப்பிரபஞ்சவாழ்க்கையை வெல்லவடி இது மிகு தொல்லையடி, இத்தனைவேண்டியும் மனமென்னகல்லடி, என்ற கணவனை நோக்கி ஓ பிராணநாதா அந்த மந்திரத்தை யுந்தனுக்குறைக்கயெந்தனுலாகுமோ இவ்வளவு துணிவேன், உனதடி பணிவேன், அதைபோதிக்க எகனுகிய பாண்டுரங்கனுலாகவேண்டும் அவரால்போதிக்கப்பட்டு பவசாகரத்தைத் தாண்டும், என்றமனையாளை, நோக்கி, அடியெனதன்பிற்குரிய நாயகியே மந்திரத்தைச் சொல்லாவிடினும் போகட்டும் எந்தையாகிய பாண்டுரங்கன் சேவையிலாகிலும் யீடுபடுத்து என்கண்ணாரக் கண்டு களிக்கும்படி செய்படி இல்லாவிடில் உன்

Koviloor Digital Library

சொல் மெத்தப்பொய்யடி இவ்வாளா னுனையிரண்டு துண்டு செய்வேனடி; அனந்தரம் யானுய்வேனடி, என்ற கணவனை யழைத்துக் கொண்டு பகவானைத் தேடி பல விடங்களில் நாடி வேகமாயோடி இருவருங்கூடி, பகவான் நாமம்பாடி, ஆங்காங்கு பலவாயாடி ஆயாசத்தா வாடி அகப்படாததால் இளைத்து தங்களகத்தை நோக்கிவந்தனர்.

8-வது பகவான் சக்குபாயிக்கும் அவள் புருஷனுக்கும் தரிசனந்தந்த அத்தியாயம்.

எதிர்வீட்டின் திண்ணைமீது பகவானிருக்கக் கண்ட சக்குபாய் வேகமாயோடி பலரிந்து பலமலர்களை நயனங்களிலணிந்து ஆனந்தமாய் நடித்து புகழைப் பலவாய்ப் படித்து ஓ பிராணநாதா! நாம் தேடியலைந்துங் கடவுள்காணுததாள் இதோதிண்ணை மீதிருக்கிறர் ஆகையாலவரைச் சேவித்து உமக்கு வேண்டியதெல்லாங் கேட்டுக் கொள்ளுமென்றனை யாள் வார்த்தையைக்கேட்டு திண்ணை சுவர் யாவற்றுந் தடவிப் பார்த்தும் பகவானைக் காணுததால் கோபங்கொண்டு மனையாளை நோக்கி திண்ணை மீது பகவான் இருக்கிறுரென்று கேலி செய்கிறுயோடி, ஒரு வார்த்தையாகினும் உண்மையில்லாத உன்னை இவ்வாளுக் கிரையாகச்செய்கிறேன் பாரடியென்று வாளைக் கரத்திற் பிடித்துக்கொண்டு சமீபித்தான் இதைக்கண்ட சக்குபாய் பிராணகர்தா அடியேன் வார்த்தையைக் கவனமாய்க்கேழ்க்க வேண்டும் அதாவது பகவான் பிரத்தியக்ஷமாய் எனக்குச் சேவை கொடுத்துக் கொண்டிருக்க உமக்குமாத்திரம் ஏன் சேவைதரவில்லை இதைத் தெரிந்து வருகிறேனென்று பகவான் சமீபத்திற் சென்று,

சக்குபாய் பகவானை துதிசெய்கிற விருத்தம்.

பஞ்சமா பாதகர்க டம்மில் முதற்பாதகிப்
பாரிலென் போலபாப
வஞ்சமன முடையோர்க ளுண்டோவரை யேந்திய
வள்ளலே பூர்வம் யான்செய்
சஞ்சிதகர்ம மங்களாஞ் சநியித ணும்மிகு
சங்க மடையு மென்னைப்
பஞ்சவர்கள் தூதனே பண்டரி நாதனே
பாதுகா ரிதுசமயமே.

எந்தையின் பாதார விந்தமதை யெள்ளளவு
வினிதுடன் துதிசெய்திடாச்
சிந்தையுடை மாதிச் சேகவாசை யிற்சிக்கி
சிறந்தேன காட்கழித்தேன்
அந்தமாம் பெரியோரையன்யாடித் மார்த்தமதை
யறிந்திடா மலேதிரிந்தேன்
பந்தமாயைப்போக்கி பாண்டுரங்கா வெனைப்
பாதுகாரிது சமயமே. 2

பாவசங்கங்க ளாற்பல்லுயிர் தமைக்கொன்று
பாவியாகி னேனையனே
ஜீ : ஜெந்துக்களிடங் கிஞ்சித்து மேகருண
செய்யாத கடுமையானேன்
தேவர்கள் வணங்கும்நின செந்தாமரைப்பாத
சேவைசெய்யா திளைத்தேன்
நாபவர்கள் புகழுமுனை நம்பினே னடியாளை
நாளுங்கா ரிதுசமயமே. 3

தாண்டவகிருஷ்ணனே தற்பரந்தாமனே
தாமோதரா ஸ்ரீதரா
வேண்டினேன் வேணுகோபாலனே சீலனே
விண்ணவர்க் கனு கூலனே
ஆண்டவ னேயாதி மத்தியாந்த ரகிதஸ்ரீ
யலர்மேன் மங்கைசமேதா
பாண்டவர் சகாயனே பண்டரி நாதனே
பாதுகா ரிதுசமயமே. 4

எத்தனை ஜென்மங்க ளெடுத்தெடுத்திப்பாரின்மே
விளைத்தலைந் தேகந்தந்ததோ
உத்தமர்தமக்குயிர் பொருடனு மவர்பாத
முகந்தளி யாதுழன்றேன்
பித்தளாய் மாயாப் பெரும்பிணி யதனுல் மிகப்
பிணைக்கப்பட் டுய்மாறின்றி
கர்த்தனே கார்வண்ணனேயேழை யைப்பாது
கார்த்தருளு மிதுசமயமே. 5

வேதங்கள் நான்கையுங் கவர்ந்துசோ முகன்முனம்
வேலையி லொளித்த மீனும்ய
பாதகன் றனைமாய்த்து மறைபிரமனுக் களித்த
பரமகாருண்ய மூர்த்தி
பேதமதின்றியே திரிவோர்க்குப் பதமருளும்
பேரின்ப மிகுவாரியே
நாதனேபண்டரி நாதனே னின்பதம்
நண்ணிடச்செய் யிதுசமயமே. 6

பண்டுதேவர்க்காகப் பாற்கடலைக் கடைந்து
பாகுசேரமுத மீய்ந்தாய்
தண்டுழாய் மாலையணி வுதாரனே தரணிமிசை
தசரதன்மகவாயுதித்தக்
கொண்டல்வண் ணுவச்சிதா கோவிந்தாமு
குந்தாபிரியா வாதனே
பண்டரி நாதனே பார்புகழ்பாதனே
பாதுகாரிது சமயமே. 7

உலகமதைப் பாய்சிகரச்சுருட்டி யிரணியன்முன
முளமகிழப் பாதலத்தில்
மலைக்கோட்டை யதில்வைத்து மாராதுகார்த்திட
மாமகிமை வராகமாகித்

Koviloor Digital Library

தலமதனைத் துளைத்துட் புகுந்தவன்னைத்
தடத்தில்விழ வதைத்துமுன்போல்
நிலமதனைச் செருத்திட ஙோய்திருத்திய
நிமலனேகாரிது சமயமே. 8

வேறு.

தனக்குநிகரொரு தெய்வந்தா னிலையென்று
தனிச்செங்கோல் கொண்டு
தினந்தோருடன் யக்ஷகின்னரர்முதல்
சித்தவித் தியாதரரை

நினைத்தபடி தண்டனை கண்டனைகள் செய்யும்
நீசனுமிரணியாக்க நீதியில்லான்
றனைப்பிரகலா தானுக்காய்த் தூணில்
சங்கரித்தாய்வந்து நரசிங்கதேவா. 9

யாகாதிகட்செய்து தேவபோக
மனுதிடவேயெண்ணிப் பூமினிந்த
போகாதிக டமையொழித்திடப்
பொருமைசேர் புண்ணியஞ்செய்

தேகாதிகள் பாதலத்தழுந்திட வாமனம்
திருவுரு பெற்றுமேவி
சாகாதிருக்கச் சிரஞ்சீவியாய் மூன்றடி
தனையளந்திட்ட தனிபனே. 10

ஜமதக்னி ரேணுகைக்குச் சிவனுயுதித்து
ஜெகத்துள வரசர்தமை மாய்த்துத்
தமதுதவ மோங்கிடப் பிரமக்ஞானி
தந்தையின் மொழிதப்பாது

உமதன்னையைக் கொன்ற உத்தமகுணத்திலகு
உறுதிபெறு மனதிடத்தாய்
எமதுகுல தெய்வமாகிய பரசுராமனே
யென்று மெனதுளமேவுவாய். 11

வானவர் துயர்தீரவந்தயோ த்தியிலுதித்து
வாமுனி பின்சென்று
தானவர்கடலையியாந் தாடகையைக் கொன்று
ஜனகன்குமரியை மணந்து

கானகந்தனிற்சென்று கரன்முதலோரை வாட்டி
காரிகையைப் பிரித்து
மானமுள விபீஷணர்க்கு முடிசூட்டி
மாபாவிராவணனை வதைத்தராமா. 12

பலராமனுயுதித்து பிரலம் பன்முதலோரை
வென்றுப் பாரின்மீது
சலனமிலா ஹலாயுதந்தரித்து யெங்குஞ்
சந்திரகுலமோங்க வஷ்டதிக்குங்கீர்த்தி

இலகவே பெற்ற சங்கிருஷ்ணு
யேழையடியாள் மீதிரங்கியென்றும்
நிலைபெறவே வரமளித்துக் காப்பாயென்னி
நீலவர்ணனுக்க னுசனுனகோனே 13

தேவகிதன்மகவாகித் தெளிவிலா யசோதையிடந்
திடமாய் வளர்ந்துக்

கோவலர்தம் மகமேவித் தயிர்பால்வெண்ணை
குணமுடனேயுண்ட கோபாலதேவா
காவலரைக்கொன்று பூபாரந்தீர்த்த
கருணைபெருங்கீர்த்தி கார்மேனிவண்ணு
பாவமெனையண்டாது பாதுகாரும்
பார்த்தசாரதியைபார்மக டண்ணுதாகண்ணு 14

வலிமையின்றித் தருமங்கள் குறைந்துபாவ
வல்லமைகள் மிகுந்தெங்கும் வயதுகுன்றி
நலிமிகுந்துபசிதாபத் தாலலைந்து
நாரியர்களாசையினுல் நைந்துநொந்து
புலிபசுவைக்கொன்றுதின்னும் வரம்புமாரி
பூவையர்களயலானைப் புணருங்காலங்
கலிகாலமாகையாலே காலத்தையெதிர்
நோக்குங் கற்கிதேவா. 15

ஓ ஸ்வாமி! இவ்வேழையை ரக்ஷிக்க மனமில்லையோ, உமக்கிதுதொல்லையோ, ஈதென்ன கொள்ளையோ, யெனக்குவந்த சள்ளையோ, உமக்குகந்தவளல்லையோ இத்தனை பாராமுகமா, யீதென்ன தர்மமா அடியாளுக்குமாத்திரம் சேவைதந்து, என் புருடனுக்கு சேவைதராக் காரணம் யாதோவென்னும் சக்குபாயியை நோக்கி, அம்மணி! அவன் மனம் போன போக்காக நடப்பன், வெகுளிபூதத்தைப் போலப் பொருளைக் காப்பவன் கிஞ்சித்தும் ஞானமில்லாதவன், ஜீவகாருண்யமில்லாதவன், இறப்பவர்க்குக் கொடாக் கர்ம்மி, சிலநாள் போகட்டும் சேவை கொடுத்து சேர்ப்போமென்ற பகவானை நோக்கி ஓ பார்த்தசாரதியே சங்காழிக்கரனே, லட்சுமியைத் தரித்தயுரனே, வாமோதரனே, தேவரீர் இப்போதவருக்கு தெரிசனந்தராவிடில் அடியாள் பொய்யாளாவதுந் தவிர இரண்டு துண்டாய் வெட்டி விடுகிறேனென்றுகோபிக்கிறார் ஆகச்சே யெத்தனை குற்றஞ் செய்திருக்கினும் க்ஷமித்தாட் கொள்ளுமென்தையே யென்று பலவாராக வேண்டிக்கொள்ளகருணாநிதியாகிய பகவான் கிருபைமிகுந்து அவன்பேரிலிருந்த சினந்தணிந்து தன்னுருவப் பிரபாவம் யாவற்றுந்தெரிய ஆகாயத்தில் ஒளிவீசி மறையும் மின்னலைப்போல தெரிசனங்காட்டி மறைந்தார்.

அதிலீடுபட்ட சக்குபாயின்கணவன் பகவானை தெரிசித்து, ஹாஹா! என்ன ஆச்சரியம் ஆச்சரியம் நானென்னனென்று சொல்வேன் பூமியிலிவ்வளவு மகானுபாவனைக் கண்ணிற்காண்பது அரிது கனவிலுங்கண்டதில்லை இத்தன்மையாய் சொற்பனங்கண்டேனென்றா இதராளால் சொல்லக்கேட்டதுமில்லை பூரணச் சந்திரனையொத்த முகமும் பெருத்த கூட்டங்கூடிய வண்டுகளை நிகர்த்த கருத்தகுழலும் விருத்தி சந்திரனைப்போல கபோலமும் பளிங்காகிய

Kavilai Digital Library

கண்ணாடியை யொற்ற தாடைகளும், அப்போது மலர்ந்த செந்தாமரை மலரை யொத்த நேத்திரங்களும் எள்ளின்மலரை யொத்தமூக்கும் ஸ்ரீயெழுத்தை யொத்த செவிகளும், மல்லிகை மொக்கையொத்த வெண்மையான தந்தவரிசைகளும் வலசழிசங்கத்தை யொத்த வெண்மையான மிடறும், விசாலமாய்ப் பரவியமார்பும், திரண்டதோளும் சிறு நகையோடுகூடிய முகமும் யானையின் தும்பிக்கையை யொத்த கைகளும் தாமரை மயிரைப்போன்ற அஸ்தங்களும், பயிற்றங்காயை யொத்த விரல்களும் நக்ஷத்திரங்களை யொத்த நகங்களும் சிகையைச் சிக்கெடுத்துக் கொண்டை யொன்று போட்டு மயிர்க்கன்னி ரவை பொருந்தவைத்து சூரியபிறை சந்திரபிறை சூட்டி முகப்பட்டமின்ன சொக்க முத்துகள் யசைந்திலங்க, பசையுள்ள கெம்பும் வாகுடை பொட்டும், கஸ்தூரி திலகம் கண்களில் மையும் குண்டலங்கள் கண்டத்தில் பிரகாசிக்க, நாசி முதற்பாகத்தில் நவமுத்துக்களும், உத்திரகஞ்சமும். முத்தாரங்களும் கௌஸ்துவமணியும் கண்டசரங்களும், மின்னும் நவரத்ன பதக்கங்களும், தளதளவென்று பிரகாசமாகிய சரங்களும், மோகனமாலையும் மகரகண்டியும் புலிநகப்பதக்கமும், புஜகிருதிகளும் ஹஸ்தங்களில் - புள்ளாங்குழலும், கங்கணங்களும், இடையில் சுவர்ன்ன வஸ்திரமும், சாதுஜனங்கள் துதிக்கும் பங்கயபதங்களில் சுனுகமொலிக்கின்ற தண்டைகொலுசுகிங்கிணியும், அநாதைகளை ரக்ஷிக்கும் விருதுந்தரித்து, மேலும்கருணைக்கடல்காமித்த பொருளை யளிக்கும் வரதன், பக்தவற்சலன் பாகவதர்களுக்கிதன்-அமரர்களுக்கு மீசன்-ஆபத்பந்து அனுதரக்ஷகன் - ஆதிதேவன் - அஷ்டைசுவரியங்களும் பொருந்தினவன் - இஷ்டர்களுக்குபந்து-துஷ்டர்களாகிய ராக்ஷதர்களை மடிக்கும் சூரன்கைச்சூலத்தினல் காணுரன் முதலான மல்லர்களையுங்கொன்று கங்கனை வதைத்தவன் யோகிசுரர் உள்ளத்தில் நிவாஸன் மன்மதனுக்காகினு மிகுந்த அழகமைந்தவன் இவனைப்பெற்ற தாயாகிய தேவகியும் வளர்த்தயசோதையும். பூர்வம் என்ன நோன்பு நூற்றார்களோ எந்த புண்ணியவதி இல்லாளாய்ப் போனளோ திருத்துழாய் மாலைதரித்த திருமேனியுடையவெம்பெருமானைப் புகழ்ந்து கொண்டாட ஆயிரம் பணாமுடிகளும் இரண்டாயிரம் நாவுமுடைய ஆதிசேஷனுமாகாதரூபம்-ரேகை- சௌந்தரியலாவண்யங்களை பாவியாகிய அடியேனல் புகழத்தரமாயென்று சந்தோஷத்துடன் அடிபெண்ணே! உன்னலல்லோ பாமரனாகிய யெனக்கு பகவத்சேவை கிடைத்தது நீ எனக்குப் பத்தினியாக நான்பூர்வம் என்ன புண்ணியஞ் செய்தேனே, யென்பாக்கியமே பாக்கியம் சிலாக்கியமே சிலாக்கியம் என்று கொண்டாடி பத்தினியையழைத்துக்கொண்டுவீடுசேர்ந்து இரவும் பகலும் இடைவிடாமற் பகவானைத்தியானஞ் செய்துக்கொண்டேயிருந்தார்கள்.

சிலநாள் கடந்தபிறகு திவ்யதேச யாத்திரை செய்து வெகு தேசங்களெல்லாந் திரிந்து மறுபடியும் தங்கள் சுதேசம்சேர்ந்து, பாண்டுரங்கா-பக்தசங்கா-பவபங்கா-மோனுங்கா யென்று இருவருந் துதி செய்திருந்தார்கள். இப்படியிருக்க, பகவான் ஓர் நாளிருவருக்குஞ் சேவைதந்து சக்குபாயின் மணாளனுக்கு அஷ்டாக்ஷர நாம முபதேசித்துப் பண்டரிபுரத்துக் கழைத்துச்சென்று இன்னுஞ் சில நாளையில் பரமபதந்தருகிறோம் வந்து சேருங்களென்று வரமீந்து மறைந்தார். பிறகு சக்குபாயியும் அவள் மணாளனும், சிலசாதுக்களுடன்கூடி, பலவாய்ப்பாடி வெவ்வேறு விதங்களாயாடி பகவானை நாடித் துதிசெய்யுங்களென்று பலருக்கும் போதித்து, இனியாராகிலும் நிர்மிக்கப்படாததாகியும், எந்தகாலத்திலு மழியாததாகியும், நித்தியமாகியும் சத்தியமாகவும் விளங்கும்பரமபதத்தைத் தம்பதிகளிருவரு மடைந்தார்கள் என்று நாபாஜிசித்தர் உத்தவசித்தர் முதலானோரை நோக்கிச் சொல்ல யாவரும் பிர்மானந்த மடைந்து தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

வாழி விருத்தம்.

இக்குவலயத்தோர்க ளென்றும்வாழ யெழிற்சக்கு பாய்சரித்த மிசைந்தோர்வாழ
பக்குவமா யிதைப்படிப்போர் கேட்போர்வாழ-பாரின்மிசைச்சிற் பதிப்பித்தோர்வாழ
முக்கியமா மழைமுகிற் செந்நலும்வாழ-மோக்கவிச்சை யோகநெறி யுள்ளோர்வாழ
சரவணபவ சாலைவாழ-ராமனடிவிடாது நெஞ்சம் ரமித்து வாழ.

சக்குபாய் சரித்திரம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸ்ரீ ரஸ்து

ஸ்ரீ பாண்டுரங்கப் பரப்பிரம்மணே நம:

(எட்டாவது)

புரந்தரதாசர் சரித்திரம்.



மத்தகோகில,

பங்ஜோத் பவுராணி புஸ்தக பாணி பாஸு ராங்கிநீ
பங்கஜ பத முலகு ம்ரொக்கெத மாமரிக்கா ஜூடக
நிங்கனை ஞ்வாக்கு நுண்டி யிலநீ புரந்தர சரிதமா
டங்கமேதியு லேக நகுநனி பூர்ணமுக கடாக்ஷிஞ் சிஞ்சவே.

(இதன் பொருள்.) சர்வலோக சரண்யரான திருமா லுந்திக்கமலத்திலுதித்த பிரம தேவனுக்கு தேவியே, கரத்தில் வீணையும் புத்தகமும் தரித்தவளே உன்னுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடிகட்கு அடியேன் வந்தனஞ்செய்கிறேன், இனியாகிலும் பராமுகஞ் செய்யாமல், அடியேன் வாக்கினிற் றங்கி பரம பாகவதரான புரந்தரதாஸர் சரிதையை, யாதொருதடையின்றி நிர்விக்கினமாக முற்றிலும் சொல்லக் கடாக்ஷித்தருளும் என் அன்னையாகிய சரஸ்வதியே என்ற வாறு.

1-வது புரந்தரதாசருற்பத்தி அத்தியாயம்.

அகிலலோகங்களிலுள்ள ஆத்மகோடிகளிலும் திரியக் ஸ்தாவரங்களுக்கும் ஆதாரமான திருமால் சக்கரம்போல கீழ்த்திசையில் சூரியோதயத்துக்கு முன் உத்தவசித்தர் முதலானோரும், பீமநதியில் ஸ்நானஞ்செய்து ஜெபதபானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, இவ்வுலகிலுள்ள மானிடர்களை யீடேற்றத் திரிகாலமு முணர்ந்த பிரம்மாம்சமா யுதித்த நாபாஜிசித்தரிடஞ் சென்று, அவர் திருத்தாட்டாமரைக்கு வந்தனந் தந்து மாதவனே, நாரதாம்சமான புரந்தர தாஸர் சரிதையைத் திருவாய்மலர்ந்தருளி அடியோங்களைப் புனிதராக்க வேண்டுமையா வென்று தொழுதுநிற்க:—

நாபாஜி சித்தர் அகமுகமலர்ந்து பலவாசிகள் கூறி யிருக்கச்செய்து அன்பாயின்பாய் தன் ஆசிரியரையும் பகவானையும் மானசீகத்தில் தொழுதுபோற்றி: ஓ பாண்டுரங்கனுக்குகந்த பக்தர்களே, இதர விஷயாந்திரங்கள் யாவு மகற்றிய சித்தர்களே, பகவானை யுபாசிக்குமார்க்கம் கற்றவர்களே ஜீவன்முக்தர்களே, கேளுங்கள், அண்டர்கள் முதல் மற்றுமெண்டிசை யுள்ளோர்களும் கொண்டாடும் விண்டுவுக்கு நிவாஸஸ்தானமாகிய பண்டரிபுரத்திற் கிடையிலே நிலவளம்நீர்வளம் மிகுதியாகி,நஞ்சை-புஞ்சை வயல்களாலும் நன்றாய் செழித்துந் தழைத்தும் பூர்த்துங் காய்த்துங் கனி-காய்களைத் தருஞ்சோலைகள்

Koviloor Digital Library

மிகுந்த தென்னை-வாழை-பலா-மா-கிச்சிலி-ஆரஞ்சி மணிலா - பொம்பளிமாசு-அன்னாசி-எலந்தை-நாவல் எலுமிச்சை-கொடிஎலுமிச்சை- செவ்வாழை-பச்சை வாழை-மலைவாழை-பில்பசந்து - அமீர்பசந்து-காதர் பசந்து-கிளிமூக்குமா-ஒட்டுமாங்கனி இன்னுமநேக பலவிருக்ஷ ஜாதிகளிலும், மல்லிகை-முல்லிகை-குடமல்லிகை சம்பங்கி பலதினுசு ரோஜா-கோங்கு-மந்தாரை-மன்மதபாணம்-கதிர்பச்சை-குருக்கத்திபவழமல்லி-மரிக்கொழுந்து - இருவாக்ஷி-செண்பகம்-மருக்கொழுந்து திருத்தொழாய் முதலான பலமலர்ச்சோலைகளாலும் செந்தாமரை வெண்டாமரை செவ்வல்லி வெண்ணல்லி நீலோற்பலம் குமுதம் முதலான மலர்கள் நிறைந்த வாவிகூப தடாகங்களிலும் பிரமவித்துக்களாகிய பிராமணர்களாலும், க்ஷத்திரியர்களாலும், பலவஸ்துக்கள் வியாபார வைசியர்களாலும்; சூத்திரர்களாலும் பார்மகள் மிடத்திற்கு மாலையைப் போலவும் திலகம் போலவும், அஷ்டலக்ஷ்மி கடாக்ஷமும் பொருந்திய வேமனபுரியில் மார்த்தவ குலத்திற் பிறந்தவர், இல்லற தருமத்திலுங் குறைந்த சாதுக்கள் சேவையைத் துறந்தவர் பகவானைக் கனவிலுமறந்தவர். பிராமண குலவிதியை பிறந்தவர், பொருளாசையில் மிகவுஞ் சிறந்தவர், லக்ஷாதிகாரியெனப் பேர்நிறைந்தவர், ரத்தின வியாபாரத்தில் மிகவுஞ் சிறந்தவர், தர்மத்தில் குறைந்தவர், அதர்மம் நிறைந்தவர், பெரியோர்கள் வந்து நமது குலாசார விதிப்படி நடப்பாயென்று நீதி மார்க்கங்களைப் போதித்தால் அவர்களை எதிர்த்து நீங்கள் ரொம்பவும் ஆசாரமாய் நடக்கிறீர்களே அதினால் என்ன லாபத்தைக் கண்டீர்கள். அதை யெனக்குரூபில் காண்பித்தால் நானுமப்படியே நடக்கிறேனென்றிப்படி எப்போதும் எந்த பெரியோர்களையுந் தூஷிப்பவர், சதா கடுமையாகவே பாஷிப்பவர், ஜீவகாருணிய மில்லாதவர், பாவகாரியங்களைத் தள்ளாதவர் தானும் அன்னம் வபாரக் கொள்ளாதவர், மிகவும் பொல்லாதவர், பிச்சைக் கெவர்வந்தாலும் இடாதவர், ஏழை பரதேசிக்கு உபகாரமாயாகிலும் பணங்கொடாதவர், இத்தியாதி துர்க்குணங்களை விடாதவர் புரந்தரன் பென்றபேர் வகித்தவர், இவர்க்குப் பத்தினி லட்சுமிபாயென்னும் பேர்வகித்தவள் நன்னடை யுற்றவள், அதிதிகள் பூசை பெரும்பாலுங் கற்றவள், கற்பின் மிகுந்தவள், கணவனே தெய்வமென்றெண்ணும் நற்றவள், பந்துஜன முதலானோர் தன்பதிக்கு நிகரன்றென மதித்தவள், நல்ல கால் வழியி லுதித்தவள் அன்னபானாதிகளில் புத்திரனைப் போஷிக்கும் அன்னையைப்போல கொழுநனைப் போஷிப்பவளும் ஊழியஞ் செய்பவள் எஜமானிக்கு பயந்து எந்த வேலையிலுங் குறைவுபடாது செய்யும் வெள்ளாட்டியைப்போல தன் நாயகன் குறிப்பறிந்து பணிவிடை செய்பவளும் சௌந்தரியத்தில லட்சுமிக்குச் சமானமானவளும், பொறுமையில் பூமிதேவிக்கு நிகரானவளும், மன்மத கிரீடையில் பௌவன புருடன் இஷ்டப்படி நடக்கும் தாசியைப் போலத் தன்மணாளன் மனோபீஷ்டம்போல் ரமிப்பவளும் மதியில் முன்பின் காரியாகாரியங்களை யாராய்ந்து அரசனுக்கு போதிக்கு மந்திரியைப்போல காரியா காரியங்களை யோசித்துத் தன் கணவனுக்குப் போதிக்கும் புத்தி சாதுரியமுடையவளும் இத்யாதி நற்குண நற்செய்கையுடைய பதிவிரதையாகிய லட்சுமி பாயிக்கு பாண்டுரங்கன் அருளினாலே யோர் புத்திரி ஜெனித்தது பத்துநாளுங்கடந்த விரண்டா நாளென்னும் பனிரெண்டாம்நாள் அச்சிசுவுக்கு ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரண லலங்காரஞ் செய்து ருக்மணிபா யென்று நாமகரணமிட்டு நாளுக்குநாள் விருத்தி யடையும்படி போஷித்து வந்தார்கள்.

2-வது பகவான் புரந்தரதாஸரிடம் விருத்தப் பிராமணரூபமாய் வந்து திரவியங்கேட்ட அத்தியாயம்.

இப்படியிருக்க இவருக்கு நாளுக்குநாள்தனஞ் சேரச்சேர ஆசைமேலிட்டு வீட்டுக்குவேண்டியசாமக்கிரியைகள் கணக்காய் கொடுத்து கோமுட்டிக்காகிலும் அதிக சிட்டாய் வாயிக்குத் தாம்பூலங்கூட போடாமல் மிகுந்த லோபியா யிருந்தார் மேலும் தான் உண்ணாமலும், நல்லவஸ்திரங்கள் தரியாமலும் தன்னிடத்தில் தனமிருப்பதை இதராளுக் கறிவிக்காமலும், ஆபத்து யென்று வந்தவர்களுக்காகிலும் கொடுத்து அவர்கள் கஷ்டத்தை நீக்காமலும், அதிதி யப்யாகதாளுக்கு கொடாமலும் கம்பு கொல்லை சோளக் கொல்லைக்கு வைக்கோலினாலே பொம்மைசெய்து காவலாக வைக்க அதுவும் உண்ணாமல் இதராளுக்கும் உபயோகப்படுத்தாதது போல இவரும் பொருளைக் காத்துக்கொண்டிருக்கும் பூதத்தைப்போல தனத்தை வெகு பத்திரமாய்ப் பாதுகார்த்துக்கொண்டு முப்பதுவருடம் மாபாவியென்று உலகோர் சொல்லப்பேரெடுத்து பூர்வ புண்ணிய பலத்தால் மதமச்சாங்க ளிவரைவிட்டு நீங்கிற்று அதெப்படியெனில்! சர்வலோக சரண்யராகிய சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் தனக்குள்தானே யோசிக்கின்றார் அதாவது நாரதரை நாம் பூலோகத்திலவதரித்துப் பாமரர்களைத் திருத்தும்படியனுப்ப, அவர் உலகமாயையில் அகப்பட்டு திரவியாபேக்ஷையால்

Koviloor Digital Library

கெட்டு அஞ்ஞானத்தைத்தொட்டுஞானமார்க்கத்தை விட்டு ஐயமிடாப் பாவியெனப் பேரெடுத்து குல தருமத்தை விடுத்து கிருபண னாகிவிட்டாரே யென்று அனுதாபித்துத் தான் விர்த்தப் பிராமண வுருவெடுத்து கரத்திற் கோலொன்றைப் பிடித்துந் வாதச ஊர்த்தவபுண்டரங்கள் தரித்துக் கண்டத்தில் வனமாலை வனசமாலையைப்பூண்டு இடையில் வெண்மையான உடையணிந்து வயது சென்றமையால், ஒவ்வோரடிக்கு இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டு தேகமாதியந்தமும் வெடவெட வென்று நடுக்கத்தோடும் பூமியில் பாதங்கள் நடுக்குத்தால் தட்டு கெட்டுப் போகும்படி. அபிநயஞ் செய்துக் கொண்டு வேமனபுரத்துக்கு வந்து சிலரைக்கண்டு ஆசீர்வதித்து ஐயா! நான் ஏழைப்பிராமணன் என் பேர் விட்டல தாஸானுதாஸன் வசிப்பது பண்டரிபுரம் இவ்விடம் யேன் வந்தேனென்றால் எனக்கோர் புதல்வனுண்டு, அவனுக்கு விவாகம் நடப்பிக்க திரவிய மில்லாமையால் தங்களைப்போன்ற தனிகாளை யடுத்துத் திரவியஞ்சேகரித்து பெண்பிராணனிருக்கிறபோதே வதுவையைமுடித்துக் கண்களாரப்பார்த்து இறந்து போவோமென்ற யெண்ணமடைந்து வந்தேனென்று சொல்ல அவ்வூரார் ஐயா சுவாமி! பிராம்மணோத்தமரே, அதோ தெரிகிறது பார்த்தீரா மெத்தை மேடையோடு ஓர் அகம் அதில் லக்ஷாதிகாரி மகாப்பிரபு ஒருவரிருக்கிறார் அவரைத் தாங்கள் போய்க் காணுவீராகில், இந்த சுபகாரியம் உங்களுக்குச் சுலபமாய் முடிந்துவிடும் ஆகையால் சீக்கிரம் அங்கு போமையாவென்று பரிகாசமாய் போகச்சொன்னார்கள், என்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

காயமென்னு மகத்தில் அஞ்ஞான மென்னு மிருளைமாற்றி, ஞானமென்னும் விளக்கேற்றி, மோனமாயிருக் துஞ் சித்தர்களே, பரிசுத்தர்களே! கேளுங்கள் பூர்வத்தில் வனவேடனொருவன் தன்பெண்டு பிள்ளைகளை காப்பாற்றும் நிமித்தியம் பாட்டைசாரிகளை வழிமறித்து அடித்துப் பறிப்பதுங் கொடா விட்டால் சிரத்தைக்கொய்தும் அவாளிடத்திலிருக்கும் பொருளை யெடுத்து வெகுநாளாய் ஜீவனஞ் செய்துக்கொண்டு வந்தான். இப்படியே வெகுபே தரக்கொன்று சிரங்களைக் கொண்டுபோய்த் தான் வசிக்குங் கொட்டாயினுயரக் கட்டித் தொங்கும்படிச்செய்து, மிகுந்த களிப்போடிருந்தான். இப்படிக்கிருக்குங் கிராதகனை ரக்ஷிக்கவேண்டுமென்ற நிர்ஹேதுகத்பாயமான கடாக்ஷம் மிகுந்த தானே அவ்வேடனைத்தேடி புதுமணஞ் செய்தவர்களைப் போல பிராமண வுருவெடுத்து சகலாபரண பூஷிதர்களாகி லட்சுமியுந் தானுமாய்ப்புறப்பட்டு அம்மார்க்கமாய் வருவதை வேடன் மரத்தின் மீதேறிப்பார்த்து பிராமணர் தரித்துவரும் ஆபரணங்கள் ஏழு தலைமுறைக்குப் போதுமான தென்றெணந்தக் கூத்தாடி புண்ணியசாலிகளென்று தன் பெண்டுபிள்ளைகளைக் கொண்டாடி, அதிக களிப்போடும் அவர்கள் கிட்டிவர யெதிர்ப்பார்த்திருந்தான், பகவானும் லட்சுமியும் நடந்து சமீபத்தே, அவ்வேடன் ஓய் பிராமணரே! நில்லும்!நில்லும்! ஆபரணங்களை யெல்லாங் கழட்டி யிருவருந் தாருங்கள் உங்கள் பிராணனைக் காருங்கள் கொடுக்க மனமில்லையாகில் இதோ என் கரத்தில் இருக்குங் கத்தியைப் பாருங்கள், என் கடனைக்கொடுத்துத் தீருங்கள் தடையின்றி யுங்களூர் போய் சேருங்களென்றுக் கடுமையாய் ஆர்ப்பரித்துச் சொல்லும் வேடனுக்குப் பயந்தவாகள்போல் உடனே பணிகள் யாவற்றையுங் கழட்டி, காலாழி மாத்திரம் கழட்டக் கூடாமையால் லட்சுமி சிரமப்படுவதைப் பார்த்தவேடன், பொருளின்மேலுற்ற ஆசையால் லட்சுமியினுடைய விரலில் தன்பற்களைத் தாக்கிக் காலாழியைக் கடித்துக் கஷ்டப்படுவதைக் கண்டு தன் பாதத்தில் விழுந்து சரணமடைவதாகப் பாவித்து, அவனைக் கடாக்ஷித்தாள்.

பகவான் ஐயா வேடனே! இத்தன்மையாய் பாட்டைசாரிகளை வழிமறித்துக்கொண்டு சம்பாதிக்கும் திரவிய மேதுக்கென்ன வேடன் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவதற் கென்றான். கணக்கில்லா மலநேகரைக் கொன்றையே அப்பாவம் உன்னை சேர்ந்ததா அல்ல துன்மனைவியைச் சேர்ந்ததாவென்று பிராமணர் கேழ்க்க இந்த மர்ம்மம் எனக்குத் தெரியாது, என் மனையாளைக்கேட்டாள் தெரியுமென்ற வேடனை நோக்கி பிராமணர் நாங்களிங்கு தானே யிருக்கிறோம் நீ சென்றுன்மனைவியைக்கேட்டுவாவென்றார் உடனே வேடன் தன் பத்தினியிடஞ் சென்று அடி பெண்ணே; இத்தனை பேரைக் கொன்று பணத்தைப்பறித்து உங்கள் போஷணைக்குக் கொடுத்தேனே அந்தபாவம் உன்னைச் சேர்ந்ததாவென்று கேட்டான் அதற்கு வேடன் மனைவி, ஓ பிராணநாதா நீர் செய்த புண்ணியத்தில் மாத்திரம் எனக்கு பாதிபாகமுண்டு பாவம் யெனக்குச் சம்பந்தமில்லை யென்றாள். இதைக்கேட்ட வேடனுக்கு லட்சுமி சமேதனை பிராமண திருமேனியுடன் தெரிசனங்கொடுத்த ஸ்பரிசத்தினாலே கியானோதயமுண்டாகி ஓடோடியும் வந்து தம்பதிகளிருவரையுந்தொழுது தன்மனையாள் சொன்னதைச்சொல்லி

யழுது வீணாய்ப் போக்கிவிட்டேனேபொழுது. எமனுலினவருமே பழுது, என்று முறையிடும் வேடன் காத்தைப் பிடித்துக்கொண்டு பகவான் ராமவென்று சொல்லு, உன்னுடைய பாவமெல்லாம் பெருங்காற்றிலகப்பட்டப் பஞ்சிபோலப் பறந்தோடு மென்ன வேடன் ஓ சுவாமி! அது வென்னுவிற்சொல்ல வரவில்லை யென்ன செய்வேனென்று உருகும் வேடனை யழைத்துக் கொண்டு அவ்வாரண்யத்திலுள்ள மரங்களின் பேரைக் கேட்டுக்கொண்டே வந்து மராமரத்தினண்டையிற் சென்று இதன்பேரென்ன சொல்லுமையா வென்ற பகவானை நோக்கி, வேடன் ஓ மாதவனே, இந்த மரத்தின்பேர் மரா வென்றான் - இராதைக்கேட்டமாயாமறையோன், ஓவேடனேமராமரா வென்று சொல்லிக்கொண்டு இதனடியிலிருமென்று சொல்லி மறைந்தார் வேடன் அம்மரத்திலிருந்து மராமரா மராமராவென்று சொல்லிக்கொண்டே தன்னைமறந்தான் இப்படிவெகுநாள்நடந்துவிட்டபடியாக் அவரைபுத்துமூடிக்கொண்டது, இவ்வண்ணமிங்கிருக்கப் பரமபதத்தில் நித்தியசூரிகளும், நாரதாதிமகரிஷிகளும், தேவேந்திராதி தேவர்களும் புடைசூழ்ந்திருக்க, அரவணைச் செல்வனைச் செல்வன் யாவத்திராளையும் நோக்கி பூலோகத்திற் அயோத்திய நகரத்தை பரிபாலனஞ் சொய்யும் தசரத மகாராஜனுக்கும், கோசலாதேவிக்கும், நான் புத்திரனாக அவதரித்து துஷ்டர்களான இராவண கும்பகர்ணாதிகளை வதைத்து தருமத்தை நிலைநாட்டப் போகிறேனாகையால், ஓ தேவர்களே, நீங்களும் எனக்கு சகாயமாக வானரர்களா யவதரிக்கக் கடவீர்களென்று ஆக்யாபித்து அனுப்ப யாவரும் அவர்கள்தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

அதில் திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் பரமபதத்தில் நடந்த இரகசியத்தை அப்புத்தினிடத்தில்வந்து இராமாவதாரஞ் செய்யப்போகிற ரகசியத்தைச் சொல்லி யதேச்சையாய்ச் சென்றார் இதைக்கேட்டவுடனே வேடனென்னும் நாமம் நீங்கிவால்மீகரென்று நாமமோங்கி நாலு லக்ஷத்து சில்லரை சுலோகங்கள் ஸ்மஸ்க்ருதத்தில் இராமாயணஞ் செய்து வால்மீக மகாமுனி யென்றுபேர்கொண்டு ராமநாமாமிர்த்தத்தையுண்டு மேலான பரமபதமடையும்படி கிருபை செய்து ரக்ஷித்த பகவானாகிய மாயா மறையோன் புரந்தரருடைய வீட்டை விசாரித்துக் கொண்டே வந்து உண்டயிளப்புத் தொண்டர்க்கு முண்டென்னும் பிரமாணப்படி புசித்து இளப்போடிருக்கும் புரந்தரரைக்கண்டு மகதைஸ்வர்யாபி விர்த்திரஸ்து யென்றாசீர் வதித்துதன் காத்திலிருந்த புஷ்பம் தாம்பூலம் தேங்காய் அக்ஷதை முதலானதும் புரந்தரரிடத்திற் கொடுக்க ஒருவருக்குந் தான் கொடுக்க மனமில்லாதவனாகியும் இதரர்கள் கொடுத்தல் பெற்றுக்கொள்ளும் சுவாபீக குணமுடைய புரந்தரர் மாயா மறையோன்தந்த சுப வஸ்துக்களை அதிசீக்கிரம் பெற்றுக்கொண்டு பத்துநாளைக்குத் துகையலுக்காச்சுதித்தேங்கா யென்றெண்ணி அகமுமுகமுமலர்ந்து ஓய்சுவாமிதாங்களெவ்விடமிருப்பது இங்கென்ன காரியமாய் வந்தீர் தங்கள் பேரென்ன மிகுந்த வார்த்திகதிகதிசை யடைந்து நடந்த ஆயாசத்தால் பெருமூச் செடுக்கிறது, உமக்குப் பிள்ளைகளொருவருமில்லையா வாய்திறந்து சொல்லையா உன்மனமெனச் சிலையா பதில் சொல்லுகிறதுமக்கோர்மலையா யென்றார் அதற்கு மாயா மறையோர் லட்சுமி கடாக்ஷமும் அஷ்டை சுவரியமுமடைந்த மகாப்பிரபுவே, எங்கும் பெரும்புகழ் பெற்ற பிரபுவே நான்வசிப்பது பண்டரிபுரம் என் பேர் விட்டலதாஸானுதாஸன், எனக்கோர் தனயனுண்டு அவனுக்கு வதுவைசெய்விக்க யெண்ணி ஆயிரம் வராகன் வேண்டித் தங்களிடம் வந்தேன், மேலும் இந்த வேமனபுரியில் தங்களைவிட தாதாஇல்லை யென்றும் ஈவில் கர்ன மகாராஜனுக்கு நிகரானவரென்றும் என்னைப்போன்ற பாவிகளை யாதரிக்கும் தருமசிந்தையுடையவரென்று கேட்டு இங்கு வந்தேனென்ற மறையோனைநோக்கி ஓய் பிராமணரே உமக்கென்ன பயித்தியமோ என்னைப் பிரபுவென்றும், லக்ஷாதிகாரி யென்றும் சொன்ன விரோதியை உடனழைத்துவரக்கூடாதா ஒருவராகன் இவ்வளவென்றகணக்குந் தெரியாயேழையாகிய யான் எங்கிருந்துமக்கு ஆயிரம் வராகன் கொடுக்கிறது போபோ யென்று பிடரியிற் காத்தைக் கொடுத்து நெட்டித்தள்ளினார் மாயா மறையோன் ஓமகானுபாவா சத்தியநாபா நீதருமகுணத்திற் சிறந்தவரென்று கேள்விப்பட்டதன்றி அகமுமுகமும் குறியுங்குணமு மப்படியே தோன்றுகிறதாகையால் இவ்வேமனபுரியிற் சில நாளிற் றருமக்கொடியை நடுவாய் ஓ தயாளகுண முடையவரே! பெண்டு பிள்ளை பண்டம் பதார்த்தம் நாடு நகர் தாய் தந்தை உற்றோர் மற்றோர் ஆனை சேனை முதலானதுங் கூடவருந்துணையல்லவே தருமம் அநேக ஜென்மங்களுக்கும் துணையாயிருந்து காப்பாற்றுமல்லவா? உனக்கு விரித்துச் சொல்மவா? தருமந் தலைகாக்குமென்று பழமொழி பொய்யா? முன்னம் கர்ன்னமகாராஜன் செய்த தருமல அபாரமானதால் அர்ச்சுனன் பாணத்தினால் பிராணன் போகவொட்டாமல் தருமதேவதைகள் வந்து கவிந்துக் கொண்டு காப்பாற்ற வில்லையோ ஓ தன

Koviloor Digital Library

வானே தருமத்தை யன்றி வேறு துணையில்லையே மௌனமாயிருப்பது தொல்லையே லோபகுணத்தை மாற்றவில்லையே நீ தருமகுண முடையவனல்லையே அப்பா இந்த யேழைப் பிராமணன் முகத்தைப் பார்க்கலாகாதோ பார்த்தா லுனக்கிலாபமுண்டாகாதோ பாபங்களெல்லாம் நசித்துப் போகாதோ? லோபகுணம் தத்தபடலமாகாதோ? தரும சொரூபனே இவ்யப்பிரதாபனே லோபியைப் போன்ற பாபியில்லையென்ற பழமொழியறிவாயே? யறிந்தெ ன்னுசி பெறுவாயே முற்காலத்தில் தருமார்த்தமாய் ததிபிமகாரிஷி தன்முதுகெலும்பைத் தரவில்லையா? மாபலி பாதாளத்தி லழுந்தவில்லையா? சிபிச்சக்கிரவர்த்தி தன் சரீரத்தை யறுத்துக் கொடுக்கவில்லையா? ஈருராஜன் தன்னாராங்கத்துடன் மனைவிகளை யுங் கொடுக்கவில்லையா, கர்ன்னன் தன்னுயிரைக் காக்குங் கவச குண்டலந்தை யீயவில்லையா! தருமராஜன் தன்னுடன் வந்த கணங்களைச் சுரலோகந் திற்குக் கொண்டுபோக வில்லையா? அர்ச்சுனன் ஓர் கெந்தர்வனைக் காக்கும் நிமித்தியம் கிருஷ்ணனோடு போராடவில்லையா? இலட்சுமி பரமசிவனுக் குற்ற பிர்மத்தியைத் தானேற்றுக் கொள்ள வில்லையா? கலைக்கோட்டு மஹாமுனிவர் தசாதனுக்குற்ற புத்திர வாஞ்சையைத் தீர்க்க வில்லையா தசரதன் தேவர்களைக்காக்கவில்லையா? புரூரசக்கிரவர்த்தி தேவகன்னிகையை விடுவிக்கவில்லையா? கிருஷ்ணன் பஞ்சபாண்டவர்களுக்குத் தூதாக வில்லையா? அவருக்கு சாரத்யஞ் செய்யவில்லையா? துருவாசருக்கு ஏவல் செய்யவில்லையா? கோவர்த்தனகிரியைக் குடையாக வெடுக்கவில்லையா? குசேலமா முனிவருக்கு அஷ்டைசுவரியங் கொடுத்து ஏவல் செய்ய வெண்ணங்கொள்ளவில்லையா. அம்சத்துவஜன் தன்னுடலை இருபிளவாயருத்தியவில்லையா? பாண்டியன் தன்தலையை யறுத்துக் காவேரிநதியிற் போடவில்லையா? அற்பம் ஆயிரம் வராகன் நீர் கொடுப்பது அரிதோ யீதுனக்கோர் பெரிதோ, என்றிப்படி சொல்லிய மாயா பிராமணனை நோக்கி ஓ முதிர்ந்த வயதடைந்த மூர்க்கப்பிராம்மணா உமக்கென்ன தெளிவில்லையா நீர்புகன்ற தருமத்தை யனுசரித்த திருஷ்டாந்திரங்களையானுமறிவேன் ஆகையால் நீர் எனக்கு அதிகமாகச்சொல்வது வீண்கண்டதோஷம் இதனால் வருமோ நின்மீது விசுவாசம் முழுமோசம் உமக்கு தனத்தை நான் கொடுத்தென்ன விசேஷம் நினது சொல்லைக் கேழ்க்கக் கேழ்க்க யெனக்கு மிகுந்த ரோஷமுண்டாகிறதாகையால், இனி பதில் பேசினால் த்வேஷம் நேரிடும் மேலும் நீங்கள் வார்த்திகத்தை யடைந்த பெரியவரானபடியால், வைதாலும் அடித்தாலும் தோஷமென்றுலோசித்து உன்னைவையாமல் மரியாதையோடு போகச்சொன்னேனே இதுவேயொரு பைபணமென்றெண்ணிக்கொள்ளும் அன்னியிலும்! நின்னை அடிக்காமல் மானத்தோடு போய்வாருமையா வென்றேனே அந்த சொல்லைக் கோடி கோடி யென்று பாவித்துப் போமையா யென்ற புரந்தரனை நோக்கி மாயா மறையோன் பின்னுஞ் சொல்லுகிறார் ஐயா தங்களைப்போன்ற தநிகர் இப்படிச்சொன்னால் என்னைப்போலொத்த ஏழைகளெப்படி ஜீவிப்பது யென்று பின்னும் அனேகநீதி மார்க்கங்களையும் தரும சாஸ்திரங்களையும் எடுத்துக் கூறினார்.

இப்படி மாயாமறையோன் மடக்கிமடக்கிப் பேசுவதால், புரந்தரருக்கதிக கோபம்பிறந்ததுகண்களில் நெருப்புப் பொறிபறக்க மீசை படபடவென்று துடிக்க, பிராமணரைப் பிடித்துத்தள்ள பிராமணர் புரந்தரரைத்தள்ள இருவருமிப்படி கீழுமேலுமாய்விழுந்து வெகுநேரம் போராடி கடைசியாய்ப் புரந்தரர்களைத்து ஆயாசமேலிட்டு பிராமணரைவிட்டு மனத்திடுக்கிட்டு இவ்வார்த்தியக்கியத்தை யடைந்த மறையோன் அதிக பலமுடையவனென்றுச்சரியப்பட்டு தன்னுடைய வியாபாரங்கெட்டுப் போச்சுதேயென்று துரிதமாய் வெளிப்பட்டு ஒரு காசிலொட்டிய தூசியும் உமக்கு கொடேனென்று சொல்லி தன்னுடைய வியாபாரத்திற்குச் சென்றார் அஃதெப்படி யிருக்கிறதென்றால், வடக்கே சுந்தரமிகுந்த தந்திரம் நிரைந்து, சந்தனம் சிறந்த பந்துறாரென்னும் கிராமத்தில் கனகர்ம்மிகள் போற்றுந் தனக்கோடி செட்டியென்றோர் கோமுட்டி யிருந்தான். அவன் பொருளிற்சிறந்தவன், தருமத்தை மறந்தவன் நன்மார்க்கத்தைத் துறந்தவன், பாவியென்றெங்கும்கீர்த்தி நிறைந்தவன், புத்திரப்பேரில்லாப் புல்லரிவீனன், ஞானமில்லாக்குருடன், அஞ்ஞானமிகுந்தத்திருடன் பலரையுந் தூஷிக்கு மூடன், தாய்வயிற்றிற்கு நோயுண்டாகப் பிறந்த புருடன், இவ்வண்ணம் சதாபொருள் சம்பாதிக்கும் விஷயத்தில்தானே மனதைநாட்டி யிருந்தான் இப்படிக்கிருக்க ஓர்நாள் சூரியகிரகணம் வந்தது அதற்கவ்வூராரெல்லாம் கடற்கரைக்குச்சென்று ஸ்நானஞ் செய்து தர்ப்பணம்விட்டு தங்கள் தங்கள் சக்தியநுசாரம் தானங்கள் செய்ய இவர்களைக்கண்ட தனக்கோட்டிசெட்டி நாம் கடற்கரைக்குப்போய் ஸ்நானஞ்செய்து வரலாமென்றால் பிராமணருடைய உபத்திரவத்தால் மெத்தப்பணம் சிலவாகும். ஆகையால் பனிரண்டுமணிக்குமேல் போனால் ஒருவரும் இருக்

Koviloor Digital Library

கமாட்டார்கள், பணமும் செலவில்லாமற் போகுமெ ன்றெண்ணி நாழிகையை யெதிர்பார்த்துக் கொண் டிருந்து பதினைந்து நாழிகையானதே புறப்பட்டு கடற்கரைக்குச் சென்று நான்குதிக்கும் ஒருவரு மில்லாமற்பார்த்து இதுதான் நல்ல சமயமென்றுக் கடலிலிறங்கி யோர்முழுக்குப் போடுவதற்குள் பக வான் ஓர் பிராமண ரூபமாய்வந்து ஓ மகாப்பிரபு! இன்றைக்கென் தரித்திரம் நிவாரணமாய் விட்டது முழுகிச் சீக்கிரம் வாருமென்ற மொழியைக்கேட்ட கோமுட்டிக்கி அடிவயற்றிலிடிவிழுந்து பெருமூச்சு விட்டு நாம் பதினைந்துநாழி கழித்தபிறகுதானே வந் தோம் மேலும் நாம் வருகிறபோ தொருவருமில்லை நான்குதிக்கும்பார்த்துத்தானே கடலிலிறங்கினோம் இந்த சமயத்திலிப்பாவி யெப்படி வந்தான் நம்பண த்துக்குச் செலவு தந்தான், இதென்ன காரணமென்று வியந்து தன்னைத்தான் மிகவும் நொந்து நாமிங்கேன் வந்தோமென்று நைந்து இப்படி தேனில் விழுந்த ஈயைப்போல யெண்ணமிட்டுப் பின்னுந் தைரியத் தோடு கறையேறிப் பிராமணனைப்பார்த்து ஐயா யென்னை சிக்கிரம் வரும்படி ஆக்யாபித்தகாரணமே தென்றான்.

அதற்கு பிராமணன் ஓ தனக்கோட்டி செட்டி யாரே! இன்று கிரகண புண்ணிய காலமாகையால் தர்ப்பணம் விட்டு ஷோடச தானங்கள் செய்தால் பிதுர்தேவதைகளுக் கானந்தமேவிட்டுசகலசம்பத்து களும் மேலுமேலும் உண்டாக்கும்படியாகி கூறு வார்களென்ற பிராமணரை நோக்கி கோமுட்டி சொல்லுகிறான் ஓ மறையோரே! நான் தர்ப்பணம் விட தகுந்த சாமக்கிரியைகள் ஒன்றும் கொண்டுவர வில்லையே நான் என்ன செய்கிறது என்ன மறை யோன் யாவத்து சாமக்கிரியையும் யான் தருகி றேன் இதற்கு தகுந்த விலைகொடுத்து விடுமென்னக் கிருபணன் ஒரு காசுகூட இங்கென்னிடம் கிடையா தென்றான், பிராமணர் இங்குகொடுக்க வேண்டாம் உம்முடனே வீட்டிற்குவருகிறேன் அவ்விடம்பணங் கொடுத்துவிடும் நாழியாய்விடுகிறது சீக்கிரம் வாரு மென்ற பிராமணன் சமீபத்திற்சென்று தனக்கோட் டிசெட்டி யுட்கார்ந்தான். பிராமணன் தர்ப்பையக்ஷ தை பழம் வெத்திலைப்பாக்கு யாவத்தும் எடுத்து செட்டியார் முன் வைத்து எள்ளுகொண்டு தர்ப்ப ணம்விட்டு பலதானம் தக்ஷிணை கேட்காமல் தன்னி டமிருந்து கால்ரூபாய் கொடுத்து அவன் கையால் மாவிலை ஜலம் விடுக்க பிராமணர் பெற்றுக்கொண் டார் உடனே கோமுட்டி ஓ சுவாமி இப்போதென் னுடன்கூட கால்ரூபாயிக்காக வரவேண்டாம் நாளை பகல் பதினைந்து நாழிக்கு வீட்டிற்கு வாருங்கொடுக் கிறேனென்று சொல்லிவிட்டு வீட்டிக்குச் சென்றான் அன்னாள்கடந்த மறுநாள்கோமுட்டி கால்ரூபாயிக் காக பிராமணன் வந்துவிடுவானே யென்றுயோசி த்து துரிதமாய் புசித்து மனையாளையும் புசிக்கச் சொல்லி புசித்தானவுடனே அடிபெண்ணே கால் ரூபாய்க்காக ஓர் பிராமணன் வருவான் அதற்கு ஓர் தந்திரஞ்சொல்லுகிறேன் அப்படி நீசெய்வையாகில் அவன் வந்து பார்த்துவிட்டுப் போய்விடுவான் நமக் குக் கால்ரூபா மீதியாகுமென்றான். அதற்கு அக் கோமுட்டியின் மனைவி ஓ நாதா! தாங்கள் சொல்லு வதைப்போல நடக்கசித்தமாயிருக்கிறேன் அதெவ் வண்ணமாய் நடக்கவேண்டுமோ அதைச்சொல் லும் பிராணவல்லபா யென்றனள் கோமுட்டி அடிபெண்ணே! ஒரு துப்பட்டி கொண்டுவந்து படு த்திருக்கு மென்பேரில் போர்த்து ஐயா இப்போது தானேசாப்பிட்டெ டெப்படி போனீரென்று பலபலவென்று வாயிலறைந்துக் கொள்வையேயாகில் பிராமணன்வந்துயென்னைப் பார்த்துவிட்டுபோய்விடு வானென்றான் உடனே அவ்வனிதை துப்பட்டியை யெடுத்து வந்து கணவன்மேற் போர்த்துத்தான் லப லபாவென்று வாயில் அறைந்துக்கொண்டு ஓ நாதா எப்படி யென்னை யொண்டியாக்கிப்போனீர் வேரா தாவில்லாத அடியாளை நடுத்தெருவில்விட்டு எமன் கைக்குள்ளானீர் நமக்குள்ள நேசத்தை மறந்தீர், பக்ஷியைப்போல் பறந்தீர், சம்ஸார பாதை மிகு கொடியதென்று துறந்தீரா இகவாழ்வைக்கடந்து சிறந்தீரோ வென்றோல மிட்டழுமோசையைக்கே ட்டு அக்கப்பக்கத்து வீட்டோர்கள் வந்துபார்த்து அறைநாழிகைக்கு முன்னிவர் திண்ணைமீதிருக்கக் கண்டேனே, இதென்னவாச்சரியமாய் இருக்கிறதே தெய்வச்செயலுக்கு நாமென்ன செய்வோமெனப் புகன்று அவ்விடம் விட்டகன்று தங்களிடஞ் சேர்ந் தார்கள் பிறகுகோமுட்டி மனைவி விடாது அழுதுக் கொண்டிருக்கிறபோது பிராமணர் வந்து தனக் கோட்டி செட்டி இறந்து விட்டானென்றதை தெரி ந்து சமீபத்திற்சென்று சுவாசமடக்கிக்கொண்டிரு ப்பதைப்பார்த்து அடடா நேத்திக்கிருந்தார் இன் றைக்கிறந்தார் என்றவாக்கியம் ஸ்திரமாச்சுதே ஓ அம்மணி நீ யழவேண்டாம் உன்னையண்டின பீடை விலகிப்போச்சுது எனக்குச் சேரவேண்டிய கால் ரூபாய் போச்சுதே இவர்சொத்தெல்லா முனக்கு சொந்தமாச்சுதே, இனியுனக்கு நல்லகாலம் வாச்சு தே ஓ புண்ணியவதி நீபயப்படாதே உன்கணவனுக் குச் செய்யவேண்டிய கர்ம்ம விதிகள்யாவும் நானே செய்கிறேனென்று சொல்லி வெளிப்பட்டு பிரேத சம்ஸ்காரத்திற்கு வேண்டியசாமான்கள் யாவும்வாங்கி

Koviloor Digital Library

கூலியாள் நால்பேர்களினு லெடுப்பித்துக்கொண்டு வந்து தனக்கோட்டி செட்டிக்கு ஸ்னானஞ் செய்வித்து புதுவஸ்திரம் போர்த்து பிரேதத்துக்குச்செய்யவேண்டிய சடங்குகளெல்லாங் குறைவின்றி நடத்தி பாடைகட்டி யதின்பேரில் செட்டியாரை வளர்த்தித் தான் அக்கினிசட்டியை யெடுத்துக்கொண்டு கூலியாள்களினாலே பாடையைத் தூக்கிவரும்படி நேமித்து பிரேதம் பின்னும் தான் முன்னுமாய் நடந்து சுடலையைச் சேர்ந்து, கட்டை முட்டைகளெல்லாம் சீர்திருத்தி, ஓ செட்டியாரே! மிகவும் கெட்டிக்காரரே அற்பமான நால்ரூபாய்க்காகவா வீணாய்ப் பிராணனை விடுகிறீர் நிந்தனைக்குட்படுகிறீர், என்றுணர்த்துக்குபயந்தா அக்கினிக்குத்தேகத்தை இரையிடுகிறீர், அந்தோ! யென்னபாபம் இவ்வண்ணம் நடந்தவரை யான்கண்டதில்லை கேட்டதுமில்லை யென்றுசொல்லி சுத்திவந்து குடமுடைத்து கொள்ளியிட்டு சமீபத்திலிருந்த புதரில் மறைந்திருந்தார், பிறகு காத்தினால் அக்னிபத்தி யெரிகிறபோது சிரசில் தீயண்டிக் கொளுத்தும் பாதை தாளாதவனாகி அப்பாவென்று சொல்லிக்கொண்டே தனக்கோட்டி செட்டி யெழுந்து பிராமணன் யெங்கேயாகினும் ஒளித்திருக்கிறானோ அல்லது போய் விட்டானோதெரியவில்லையே யென்றேசிப்பதை யுணர்ந்த பிராமணன் வேகமாயோடி செட்டியாரே இப்போதாகிலும் நாலணாவைக் கொடுமென்றார். கோமுட்டி காடு சேர்ந்த பிணம் வீடுவருமோ யிங்கேது என்னிடத்தில் ஓர் காசளவுங் கிடையாது போபோவென்றான் பிராமணர் பதிலொன்றுஞ் சொல்லாமற்போய்விட்டார்.

கேளுங்கள் சித்தர்களே! பரிசுத்தர்களே! அத்தனக்கோட்டி செட்டி நெருப்பிட்டுக் கொளுத்தியும் மரணமடைந்தாலு மடைவனே யல்லாமல் மனமாரக் நால்ரூபாய் உனக்குக் கொடேனென்ற வைராக்கிய மனமுடையவனை யொத்தவர், இந்தப்புரந்தரர் என்று விண்டுமேல் நடந்ததைச் சொல்லுகிறார்.

3-வது பகவான் புரந்தரதாசர் மனைவியிடம் மூக்குத்தியை தானம் வாங்கிய அத்தியாயம்.

பிறகு மாயாமறையோன் தவஞ் செய்யினும தன்னுடைய நாயகனைவிட வேறு தெய்வமில்லையென்றெண்ணி யிருக்கும் லட்சுமிபாயின் மனதையறிய வெண்ணி அவ்வீட்டின் பிழக்கடைப்பக்கமாய்வந்து கதவைத் தட்டினார். அரவங்கேட்டு லட்சுமிபாய் வேகமாய்ச்சென்றுக் கதவைத்திறந்து பிராமணரை பார்த்து சுவாமி வரவேணும் வரவேணு மென்றழைத்துவந்து நல்ல தீர்த்தத்தினால் திருவடிகளுக்குத் திருமஞ்சனஞ் செய்து, தன்னுடைய முந்தானையால் துவட்டி உசிதாசனத்திலிருத்தி தூபதீப நைவேத்தியம் முதலான உபசாரங்களால் அன்பாயின்பாய்ப் பூசித்து ஆலவட்டக் கைங்கரியஞ் செய்துகொண்டு ஓ சுவாமி! தங்கள் திருவடிகள் இக்குடிசையிற் பட்டமாத்திரத்தில் பாவம் விமோசனமாய்விட்டது தேவரீர் சேவையினால் யாங்கள் பவித்திரராய்விட்டோம் எங்களுக்கினி வேண்டுவதொன்றுமில்லை தங்களுடைய கிருபா நோக்கத்தினால் ஸமஸ்தமும் பூரணமாய் நிறைந்துவிட்டது. தேவரீர் எந்தவூரில்வாசம், அடியோங்களிடம் வைத்து வந்தீரே நேசம், எங்களைவிட்டு விலகியது பந்தபாசம், துர்க்குணங்களெல்லாமாய்விட்டது நாசம், தமர்கள் என்று அனி இவணெழுந்தருளியது விசுவாசம், மெய் வருந்த பாதங்கள் வருந்த இவ்விர்த்தப்பிராயத்தையடைந்த தேவரீர் இவ்வளவு சிரமமெடுத்துக் கொண்டு இவ்விடம் வந்தகாரணம் யாதோ? அதைத் தெரியச் சொல்லவேண்டும் சுவாமியென்று பணிந்த லட்சுமிபாயிக்குப் பலஆசிகள் கூறி, ஓ புண்ணியவதிகட்குள் சிரோமணியே எனக்கோர் புத்திரனுண்டு அவனுக்கு திருமணஞ் செய்விக்க வெண்ணங்கொண்டு ஆயிரம் வராகன் வேண்டி உன்னிடம்வந்தேன் மார்க்கயாசத்தால் மிகவும் நொந்தேன் இதோ புஷ்பமும் மஞ்சளும் தந்தேன் தரித்திரத்தினுல் வெந்தேன் காயம் அநித்தியம் நீர்மேற்குமிழி க்ஷணபங்குரம் இப்பவோ பின்னையோ என்றிருக்கிற என் உயிர் இத்தூலத்தை விட்டுப்பிரியாததற்குமுன் தனயனுக்கு வதுவை முடிக்கவேணு மென்றுன்னுயிருக்கிறேன் ஆகையால் ஒப்பிவாக்கைக் கடவாமதியினையுடையமாதே, இச்சுபகாரியத்திற்கு உதவி செய்தால் உனக்கு மெத்த புண்ணியமுண்டாகும் அஞ்ஞானம் விண்டேகும் பாபங்கள் அடியோடு சாகும் லோபகுணம் சூரியனைக்கண்ட பனிபோலாகும், ஓ உத்தமகுலத்திற் பிறந்து நற்றவமியற்றும் சுந்தராங்கியேயென்ற மாயாமறையோரை நோக்கி எங்களை யீடேற்ற வந்த ஓ சுவாமி, அடியாளிடம் வராகனைச் சார்ந்தது ஒன்றுகூட கிடையாதே, ஐயோ! நானென்னசெய்வேன், லோபியை ஸத்பாத்திரனும், பாபியைப புண்ணியவானும், விபசாரியை உத்தமனும், துன்மார்க்கனை சன்மார்க்கனும், கழுதையைக் குதிரையும் நேசித்ததைப்போல மகாபாவியும், ஈவுயென்பது கிஞ்சுற்றுமில்லா லோபியுமாகிய அடியாளை யாசித்தீரே யென்று மனமுருகி இல்லை யென்று சொல்ல மனம்வாராமல் யோசித்துத் தன்மூக்குத்தி

Koviloor Digital Library

யைக் கழட்டி ஓ சுவாமி ! இந்த மூக்குத்தியை இவ்வூரிலெங்கும் காட்டாமல் உமது சொந்த ஊருக்குக் கொண்டுபோய் விற்பனைசெய்து அந்த திரவியத்தினால் குமாரனுக்கு விவாகஞ்செய்து திருப்தியடையுமையாவென்று அம்மூக்குத்தியைக் கிருஷ்ணார்ப்பணஞ் செய்துகொடுத்தாள் கேட்டீர்களோ சித்தர்களே யென்று நாபாஜி சித்தர் பின்னுஞ் சொல்லுகிறார்.

மாயாமறையோன் அம்மூக்குத்தியைப் பெற்றுக்கொண்டு போய்வருகிறேன் ஓபாக்கியவதி! கணவனுக்குகந்த சதியென்று சொல்லி விடைபெற்று அவ்விடம்விட்டு புறப்பட்டு பெருத்த சவுகார்போல வடிவெடுத்து புரந்தரன் கடையையடுத்து மூக்குத்தியைக் கொடுத்து இதை எத்தனை வராகனுக்கெடுத்துக் கொள்வீர் மதிப்பு போடுமையா என்று அந்த மூக்குத்தியைக் கொடுக்கப்பெற்றுக் கொண்டபுரந்தரர் திருப்பித் திருப்பித் பார்த்து இது நம்முடைய மனைவியின் மூக்குத்தி போலிருக்கிறதே இது இந்த சவுகாரிக்கு எப்படி கிடைத்ததென்று யோசித்து நாம் இவரை கேட்போமென்றால் இதினும் விலையுயர்ந்த அனேகம் நகைகள் வைத்திருக்கிறாரே இவரை எப்படி கேழ்க்கிறதென்று நிதானித்து யாதொன்றுங் கேழ்க்கவாயெடாமல் ஐயா சவுக்காரியே இது ஆயிரம் வராகன் மதிப்பு பெறும் ஆகையால் ஆயிரம் வராகனுக்குக் கொடுத்தால் நான் எடுத்துக்கொள்ளுகிறேன் என்றார் இந்த மூக்குத்தியை நான் இரண்டாயிரம் விராகனுக்கு வாங்கினேனே இதினால் அநேக செல்வானை யோங்கினேனே நீ சொல்லிய மதிப்பைக் கேட்டவுடன் தேங்கினேனே அடா இத்தனை மோசமா வெகுநாளாய் உனை யறிவேன் சீ! சீ! யென்று மிகவும் ஏசி நீ எனக்கொருதுசி மதிப்பொன்றிருக்க வேறு மதிப்பு சொல்லிய த்ரோஷி! அடா அற்ப சந்தோஷி! களங்க மனமுடைய த்வேஷி! கடினபாஷி இதைநீ கன்றாயோசி இன்னம் வாத்தியாரிடம் வாசி போதும் போதும் நீ வாங்கினது, மூக்குத்தியைத் தாருமென்ற மாயா சவுகாரியை நோக்கி ஐயா அடியேன் மீது மிகவுங் கோபிக்கிறீர் என் மனதில் தோன்றிய மதிப்பு ஆயிரம் விராகன் தான் கொடுக்கச் சம்மதியானால் விராகனைப் பெற்றுக்கொண்டுபோம் இல்லாவிட்டால் இதோ மூக்குத்தியைத் தருகிறேன் என்ற வியாபாரியை நோக்கி ஓ வர்த்தகனே நீ இன்றையதினம் இராஜன் முகத்தையோ நரி முகத்தையோ பதிவிரதையின்முகத்தையோ பக்தன்முகத்தையோ பார்த்து வந்தாய் நல்ல லாபங் கிடைத்தது விராகனைத் தாருமையா வென்ற மாயாசவுக்காரை நோக்கி-ஓ ஐயா விராகன் வீட்டிலிருக்கிறதுஎடுத்து வருகிறேன் தயை செய்து கொஞ்சநேரம் இவ்விடமிரும் இதோ வந்து விட்டேனென்று சொல்லி வீட்டிற்கு வந்து குமாரத்தியாகிய ருக்மணி பாயியையழைத்து உன் தாயாருடைய மூக்குத்தியை வாங்கிக்கொண்டுவா என்ற தந்தை சொற்படி ஸ்நானஞ் செய்துக் கொண்டிருக்கிற அன்னையிடஞ் சென்று அம்மா உன்னுடைய மூக்குத்தியை அப்பா வாங்கிவரச் சொன்னாரென்னவே அப்பதிவிரதை இடிவிழுந்த நாகம்போலும் வலைக்குட் சிக்கிய பக்ஷியைபோலும் தேனில் விழுந்த ஈயைப்போலும் பள்ளத்தில்விழுந்த யானையைப்போலும், விபசாரஞ் செய்தவள் புருஷனிடத்தில் அகப்பட்டாற் போலும், மனங்கலங்கி யாதொன்றுஞ் சொல்லத் தோன்றாதவளாய் அம்மா ருக்மணி இதோ நான் வந்து யெடுத்துத் தருகிறேனென்று சொல்லி யோசிக்கத் துடங்கினாள். நாம் செய்ததோ தருமம் நமக்கு நேரிட்டதே அதர்மம் இதற்கென்ன செய்வது அறையிலிருந்த என்னை யம்பலமாக்கினாரே அந்தபிராமணர் இதற்கென்ன செய்வேன் எப்படி நாணுய்வேன் நாதனுக்குப் பதிலென்ன சொல்வேன் என்று தாபந்திரியப்பட்டுக் கொண்டே ஸ்நானஞ் செய்து விட்டு எம்பிரான் செயலெப்படியோ அப்படி முடியுமென்று தைரியங்கொண்டு நாயகனிடம் வந்து நிற்கக் கண்டு அடியே மூக்குத்தி யெங்கே சீக்கிரங் கொண்டு வாடி மனுஷாள் காத்திருக்கிறார்கள் ஏன் இன்னும் கொடுத்தனுப்பவில்லை யென்ற கணவனை நோக்கி சுவாமி நான் ஸ்தானத்திற்குச் செல்லும்போது கழட்டி வைத்துவிட்டுச் சென்றேன் தாங்கள் சொல்லி யனுப்பினபொழுது நான் ஸ்நானஞ் செய்து கொண்டிருந்தேன் ஆதலால் கொடுத்தனுப்ப தடைப்பட்டது இதோ சென்று பார்த்தெடுத்து வருகிறேனென்று சொல்லி உள்ளேபோய் ஒன்றுந் தோன்றாதவளாய் ஏக்கங் கொண்டு வைத்துமறந்தவள் போல அங்குமிங்குந் தேடுவதைக்கண்ட கணவன் அடி ! என்ன என்னும் அகப்படவில்லையா ஈதென்ன மோசஞ் சொல்லாயா வைத்தவிடந் தெரியாதா உனக்கித்தனை மாதியா அடிநாயே! அங்கு மிங்கு மலைகிறாய் பேயே பதில் சொல்லாதிருக்கிறாய் நீயே யென்று பற்களை நறநறவென்று கடித்து மீசைபட்படவென்று துடிக்க கோபமதிகரித்து ஆங்காரத்தினால் சிரித்து புருவங்களை நெறித்து திரேகம்வேர்த்து மிகவு மார்பரித்து இப்பிரம்பினால் வாங்கி விடுகிறேன் பாரென்ன சம்பித்த கணவனுக்கு மிகவும் பயந்து இதோ எடுத்துத்தருகிறேனென்று பயந்த மனைவியை நோக்கி எங்கே வைத்தாய்சொல் என்ன இந்த விடத்தில் தான் வைத்தேனென்று பழங்கலங்

Koviloor Digital Library

களை அடுக்குபானையெல்லாம் இறக்கி அடியிலிருந்த பாண்டத்தில் கையைப்போட்டு தடவிக்கொண்டே பகவத்தியானஞ் செய்யத் தொடங்கினாள் கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர்பின்னுஞ் சொல்லத் துடங்கினர்.

கொலைகட் களவுகாமம் பொய்யென்னும் பஞ்சமாபாதகங்களை நீக்கி இயம நியமாதிகளைக் காக்குஞ் சித்தர்களே பரிசுத்தர்களே! கேளுங்கள் மதிதனிற்சிறந்த நிதிதனைத் துரந்த கெதிதனிற்பாந்த பதிவிரதையாகிய லட்சுமிபாய் காத்தைப்பாண்டத்திலிட்டுத் தடவினபடியே ஓம்-நமோ நாராயணா - சர்வலோக பாராயணா-ஜெகத் காரணா-சர்வபரிபூரணா-பாண்டுரங்கா-பக்தசங்கா - பவபங்கா - கஸ்தூரிரங்கா-மோஹனங்கா - இப்பூமி பாரத்தைத் தீர்க்க தேவகி வசுதேவனுக்குத்தனயனாக அவதரித்தகண்ணா, காசாம்பூவண்ணா - கௌரவர்கள் முதல்வன் சூதிற் கெலித்தோமென்று கெர்வித்து பஞ்சவாபத்தினியாகிய துரௌபதியைத் துர்ச்சாதனனால் சபைக்கிழுத்துவந்து துகிலுரியும்போது துரௌபதியானவள் அந்த ஆபத்காலத்தில் அவஸ்தைப்பட்டு, நந்தநந்தா-முகுந்தா-கோவிந்தா-வைகுந்தாவென்று துதிக்க, துகில் மேலுமேலும் பெருகக் கடாக்ஷித்தருளிய எந்தையே! அடியாள் துக்கத்தைத் தீர்த்துக் காப்பாற்றுவது ஓர் பெரிதோ, அன்றியும் சக்குபாயியைத் தன்கணவன் பிணைத்துக்கட்டி அறையிற் போட்டடைக்க, அவள் துதிக்கிறங்கிச் சென்று ஆட்கொண்ட பரம்பொருளே, நிரூபமா யிருக்கும் போது பிரம்மமென்றும், ரூபமான போது விஷ்ணுவென்றும், சொல்லும் அமலா - விமலா - நிர்ம்மலா, உன்னையன்றி வேறு கெதியில்லா இவ்வேழையை ரக்ஷித்தருளும் சுவாமி யென்றும், மேலும் ஓ பக்தவச்சலா இத்தூலதேகம் ஒருநிமையிலோ, ஒருமாத்திரையிலோ, ஒரு விகடிகையிலோ, ஒரு முகூர்த்தத்திலோ, ஒரு அல்லிலோ ஒரு பகலிலோ ஒரு தினத்திலோ, ஒரு வாரத்திலோ, ஒரு பக்ஷத்திலோ. ஒரு மாதத்திலோ, ஒரு ருதுவிலோ, ஒரு அயனத்திலோ ஓராண்டிலோ, தசாண்டிலோ, சதாண்டிலோ, கனவிலோ, நினைவிலோ, காட்டிலோ, நாட்டிலோ, இடியாலோ, கடியாலோ, புலியாலோ, கிலியாலோ, வலியாலோ, நலியாலோ, கிடக்கும்போதே, நடக்கும் போதோ, புசிக்கும்போதோ. வசிக்கும்போதே எப்போதாகிலும், எந்த காரணத்தினாலேனும், இந்தப் பிராணன் நீங்குமே யல்லது ஸ்திரமல்லாமல் எத்தன்மையாய் விளங்குகிற தென்றால்:—வெட்டவெளியில், வைத்தவிளக்கைப் போலவும் பழுதத் நிலையைப்போலவும், பழுத்த கனியைப்போலவும் நீர்மேற் குமிழியைப் போலவும், எழுத்தைப்போலவும், சுழல்காற்றைப் போலவும், பம்பரத்தைப் போலவும், மின்னலைப்போலவும் அருகுநுனிபனியைப்போலவும், அநித்தியமான காயத்தை நம்பிப் பாவியாய்ப் போனேன் நிச்சயமில்லா இம்மல உடலை மெய்யென்று நம்பி பொய்யாளாய்ப் போனேன் நாயும் நரியும் பேயும் கழுகும் பிடுங்கித் தின்னும் இப்பிணத்துக்கு மணஞ்செய்துப் பேதையாய்ப் போனேன் பிரத்தியக்ஷ நரகமான இத்தனுவுக்கு சுமங்கொடுத்து பலருக்கும் மகவாய்ப் பிறந்தேன் கோழையுங் குருதி மென்பும நரம்புஞ் சதையும் பொருந்திய இவ்வூனை நானென்றஞ் ஞானியாய்ப் போனேன் லவணம் சலமல்லவென்றும், ஆயுதம் இரும்பல்லவென்றும் சொல்வாருண்டா அதைப் போலவே தேகம் அநித்தியமென்றும் பிரபஞ்சம் மயேந்திர ஜாலமென்றும் சொல்வதே மெய்யன்றி பொய்யென்று பிதற்றும் பேதையரைப்போல கோதுக்குள்ளானேன் மெய்ஞ்ஞான சதானதுக்குறிய அரிதான வாயுவை வீணாய்ப்போக்கலழகோ காலன் எப்போது இவளாயுள் முடியுமென்று காத்துக்கொண்டிருக்கின்றான் சூரியனென்னும் நாழியாலாயுளென்னுந் திவசங்களையுண்டு முடிவிற்றன்னையுமுண்ணும் எமனுக்குத் தப்பி இவ்வுலகில் யாருமிருக்கவில்லையே! குலைபழுத்தவுடன் அடியோடு வெட்டித் தள்ளும் வாழைக்கிணையான இவ்வேழ்மையானயாக்கையை கோழைபுத்தியால் மோழையாய் வைத்திருப்பது நலனோ? அளவற்ற திரவிய வியாபாரத்தாலும் தேகாந்திரிய மனோவிகாரங்களாலும் தேகவாதையாலும் மனோவாதையாலும் சஞ்சலமே மிகுதியாய் வளர்ந்துகொண்டு வருகின்றதோடு பொன்னாசை புருடனாசை மண்ணாசை யென்னும் ஈஷணாத்திரயங்களால் கட்டுண்டு வெட்டுண்டு தட்டு கெட்டுத் தடுமாறி தலைதெரியாமற் றலைகீழாய் விழுந்து தறுதலையாய்ப்போயினேனே ஒருநாளும் உம்மை ஆனந்தமாய்த் துதித்தரியேன் அஞ்ஞானாந்தகாரத்தாலும் மனோவிச்சையாலும், பஞ்சேந்திரிய ஆசையிற் சொக்கி சம்சாரமென்னும் சாகரத்திலாழ்ந்தும் தாழ்ந்தும் விழுந்தும் எழுந்தும் அழிந்துங் கரையேருவதற்கோர் துரைகாணமல் வெகுநாளாய் அழுதுக்கொண்டிருக்கிறேனே! பந்தமென்னும் பாசத்தாற் கட்டுபட்டேனே, மோக்ஷார்த்தத்தையே மறந்துவிட்டேனே ஓகோ கெட்டேன் அநித்தியமான இவ்விகவாசையால் நித்தியத்தைத் தேடாமல் நாசமாய்ப் போனேனே இதனால் சந்தோஷமோ அணுவளவுமில்லை அனுபவிப்பதோ அளவற்ற தொல்லை

Koviloor Digital Library

ஆநந்தமும் நிலையோ தெரியவில்லை நிளைபியவதற் கெ ன்னைபோன்றவர்க்கு மிகவுந்தொல்லை பஞ்ச அறி வுள்ள மானிட ஜென்ம மெடுத்தும் பூமிக்கு பார மான மிருகத்துக் கிணையானேன் மிருகமாவது ஓர் காரியத்திற்கு உதவும், நானோ ஒன்றுக்கும் உதவாப் பிணியானேன் மரணமோ புலியைப்போல் பயங்கா ட்டிக்கொண்டு முன் நின்றது, மரணத்தை நினைத் துக்கொண்டாலோ கிடு கிடு வென்று கொஞ்சம் நடுநடுங்கின்றது பிறக்கும் போதுள்ள துன்பத்தை விடஇறக்கும்போது ஆயிரம் பங்கதிகமான துன்ப மிருக்கு மென்பதற்கோர் சந்தேகமே இல்லை, இது கவனத்தில் வந்தாலோ இருதயம் பிளந்து போகின் றது ஆகையால் அப்பனே ஒப்பொருவர் இல்லாத உண்மைப் பரமே! இது நல்ல சமயம் இந்த வேளை யில் என்னை காத்து இரட்சிப்பது உந்தன் பாரம் இதோ உமக்கு அபயம் அபயம் என்றுருகிஆனந்தக் கண்ணீர் விட்டமூகிற லக்ஷிமிபாயின் முறைபைபரம பதத்தில் லட்சுமியோடு பாச்சிகை யாடுகின்ற எம் பெருமான் கேட்டு திடுக்கென் றெழுந்து பிராட்டி யைநோக்கிப் பெண்ணே பூலோகத்தில் ஓர் பதிவிர விரதை யாசகஞ்செய்துவந்த ஓ ரதிதிக்குத் தன்கண வனுக்குத் தெரியாமல் தன் மூக்குத்தியை கிருஷ் ணார்ப்பணஞ் செய்துகொடுத்தாள் அதை வாங்கிக் கொண்ட அதிதி அன்னவள் புருடன் கடையில் கொடுத்து விலைகூற விபாபாரி பார்த்து தன் மூக் குத்தி என்றுணர்ந்து அதிதியை அங்கே நிருத்தி வீட்டிற்குவந்து தன் பத்தினியை மூக்குத்தி கேட்க அன்னவள் பழங்கலத்தில் வைத்ததாகச் சொல்லி அதை தேடுபவள் போல்நடித்து எம்மை துதித்து எமக்கு அடைக்கலம் புகுந்து தொழுது அழுகிறு ளாகையால் அன்னவளை நாம் காப்பாற்ற வேண்டி யது நமது கடனாயிருக்கிறபடியால் உன் மூக்குத்தி யை கொடுவென்று வாங்கிக்கொண்டு சூட்சமரூப மாய்வந்து அப்பாண்டத்தில் வைத்தேகினர்.

பாண்டத்தைத் தடவிக்கொண்டேயிருந்த லட் சுமிபாயின் கரத்தில் நந்தகோபாலனுடைய கிருபை யால் நல்லமூக்குத்தி யொன்று அகப்படக்கண்டதே பிறவிக்குருடன் கண்பெற்றதைப் போலவும் மலடி மைந்தனைப் பெற்றதைப்போலவும், தரித்திரனுக்கு நிக்ஷேபங் கிடைத்தாற்போலவும், யாசகனுக்கு ராஜ ரீகங் கிடைத்தாற் போலவும், அகமகிழ்ந்து ஹரி யைப் புகழ்ந்துக்கொண்டே இம்மூக்குத்தியை தன் கணவனிடமிருந்த பிரியத்தோடும் கொடுக்க அதை அவர் வாங்கிப்பார்த்து பிரமித்து ஜலம் நாடின வனுக்கு அமிர்தமும் சிப்பியைத் தேடுவோனுக்கு முத்தமும், பிக்ஷைக்கேகுவோனுக்கு இராஜரீகமும் எட்டியைத் தேடுவோனுக்குக் கற்பகமும், சூதாடு வோனுக்கு புராணமும் துன்மார்க்கரைத் தேடு வோனுக்கு சன்மார்க்கனும் கல்லைத்தேட இரத்தி னமும் கழுதையைத்தேடக் குதிரையும், பைசாசை ப்பூசிக்கக் கடவுளும் உலகவியாபாரத்தை நாடக் கடவுள் தியானமும் லபித்ததுபோல மூக்குத்தி யைத் தேடப்போய் மூவுலகங்களையும் பதிலாகக் கொடுத்தாலும், நிகராகாத மூக்குத்தியைக்கண்டு ஆச்சரியங்கொண்டு ஆ ஆ இப்படிப்பட்ட ரத்தின மும் உலகிலுண்டோவென்று சோதித்து அடிபெண் ணே! என்னிருகண்ணே பாக்கியவதி மிகுந்த யோக் கியவதி யென்று காதலியைநோக்கி, கச்சுசத்தைப் போக்கி மிக்க பிரியமுண்டாக்கி அடிமானே என தன்புக்குரிய தேனே! இது நம்முடைய மூக்குத்தி யல்லவே, இதற்கு நிகராக இப்பூவுலகங்களையும் மதி ப்பிட்டாலும் நிகராகாதே அப்படிப்பட்ட இப்பெ ருமைபொருந்திய மூக்குத்தி உனக்கு எவ்வண்ணங் கிடைத்தது அதை யொளிக்காமல் சொல்லென்ற கொழுநனை நோக்கி ஓ பிராணநாதா இன்று பகல் தங்களிடம் வந்து தன் புதல்வனுக்கு வதுவைசெய்ய ஆயிரம் வராகன் வேண்டுங் கொடுமையா என்று யாசித்த மறையோர் தாங்கள் வியாபாரத்திற்குப் போனபிறகு அடியாளிடம்வந்து யாசிக்கநான் மூக் குத்தியைக் கிருஷ்ணார்ப்பணஞ் செய்து கொடுத் தேன். அவரதைப்பெற்றுக் கொண்டுசென்றார், உட னே தாங்கள் வந்து மூக்குத்தியை யெடுத்து வாவெ ன்றுகேட்ட விஷயத்தில் பயந்து வைக்காத பாண் டத்தில் வைத்தேனென்று பொய்சொல்லி அப்பாண் டத்தில் கரத்தைவிட்டு வக்ஷஸ்தலத்தில் பெரியபிரா ட்டியைத் தரித்த பாண்டுரங்கநாதனைத் துதித்துக் கொண்டே தடவினேன் அந்த எம்பெருமானுடைய கிருபையினால் இம்மூக்குத்தி கிடைத்தது, நடந்த உண்மை யீதென்ற மனைவியைநோக்கி, ஆபெண் ணே! ஞானபக்தி வைராக்கியங்களால் தொழுதும் அழுதும், ஆடியும், பாடியும், தேடியும் நாடியும்ஆநந் தமேலிட்டால் விழுந்தும் எழுந்தும் யாவத்தும் துா ந்தும் தன்னை பாரதும் புகழ்ந்தும் மகிழ்ந்தும் ஆன ந்தத்தால் கரைந்தும் இறைந்தும் பணியும் சாதுக் களுக்கு எப்பெருமானருள் கிடைப்பதரிதா யிருக்கப் பேதமைகுண மிகுந்த உனக்குப் பகவான் கிருபை யுண்டானது மிகவும் அருமையே, இது பெருமை யே யென்று புகன்று யோசித்துப் பூர்வஜென்ம வாசனையினாலும் பகவானுடைய அருள்யோசனையி னாலும், புரந்தரர் தனக்குத்தானே சிந்திக்கத்தொடங் கினர் கேட்டீர்களோ சித்தர்களே யென்று நாபாஜி சிததர் பின்னுஞ் சொல்லுகிறார்.

Koviloor Digital Library

கேளுங்கள் பரிசுத்தர்களே ஜீவன்முக்தர்களே பகவத் பக்தர்களே, சித்தர்களே, அந்தப் புரந்தரருக்கு பூர்வ புண்ணியத்தினாலும், பகவானுடைய வெண்ணத்தினாலும், ஞானோதய முண்டாகி ஓம் நமோ- நாராயணா - வேதபாராயணா-பராத்பர-நிர்விகாரா - ஆநந்தமளிக்கும் சர்வேஸ்வரா - அடியேனையாட்கொள்ளும் கருணாகரா-உம்முடைய கிருபை ஆகாமியமே செய்யும், மோகாந்தகாரன் மேல் வருமோ வந்தால் பாவனுப் போகமாட்டேனே, ஓ அநாதிகாரணா-சர்வபரிபூரணா - ஓ நிரபந்தமே அநித்தியமாகிய இத்தேகத்தை நித்தியமென்று நம்பி மண் பெண் பொன்னென்ற மூவாசையினாற் கட்டுண்டு சம்சாரமென்னும் சாகரத்திலாழ்ந்து கரையேறுதற்கோர் முறைகாணாதுபந்தபாசத்தாற் கட்டுபட்டேன். மோக்ஷார்த்தத்தை முற்றிலும் மறந்து விட்டேனே. பூசுராணுகியுதித்தும் வேதசாஸ்திர புராணங்களை யுணர்ந்தும், பாவத்தை யொழித்து தவத்தையடையும் மார்க்கம் தெரிந்து கொள்ளாமற்போனேனே, இனி எப்பிரப்பில் மெய்ப்பொருளாகிய உம்மைச்சேர்ந்த இப்பிரவியை நீக்கப்போகிறேன், ஓசுவாமி! நிஷ்காமி; சிசுவுக்குத், தாயும், தரித்திரர்களுக்குப் பிரபுவும். பகலுக்குச் சூரியனும் இராத்திரிக்குச் சந்திரனும், தருமத்திற்குச் சாந்தமும் வீரனுக்கு தைரியமும் வேந்தனுக்குப் படையும் சதிக்குப்பதியும், பதிக்குச் சதியும், தபத்துக்கு வைராகியமும், நிடத்துக்கு சிரவணமும், ஜென்மசாபத்துக்கு நிராசையும் ஸ்திரிகளுக்குக் கற்பும் புருடர்களுக்குக் கல்வியும், கல்விக்குச் ஜீவகாருண்யமும் மந்திரங்கட்கு யுக்தியும், வியாபாரிக்குத் திரவியமும், உலகத்துக்கு மழையும், துணையாயிருந்து விளக்குவதைப்போல் அஞ்ஞானம்மிகுந்து மெஞ்ஞானம்துரந்து யிக்கோழை மனமுடையயேழையின்மீதுகிருபை செய்தாட்கொள்ளும், சுவாமியென்றுதுதித்து சர்வசொத்திலும் வெறுப்புற்று தான் கஷ்டப்பட்டுத் தேடிப்புதைத்துவைத்தபொருளை வெளியிலெடுத்து அதைப் பார்த்துக் கடுகடுத்து ஓ பணமே உன்னுலென்ன குணம் உண்டாகுமோ, மனமே அதையோது இக்கணமே மேலு முன்னைத்தேடி பக்தோபஸ்தாப் மூடிவைத்துக் காப்பாற்றினவர்களை நீடித்திருக்கும்படி தீர்க்காயுள் தருவையா? அல்லது எமன்வந்து ஜாடிக்கும்போது நானிருக்கும்போது நீ எப்படி வருகிறாயென்று சொல்லி எமனை வெல்ல இழுந்து வருவையா கூடி நேசமாயிருப்பவர்கள் குடியைக் கெடுத்து ஒருவர்க்கொருவர் விரோதம் நேரிடும்படிச் செல்வதுந்தவிர எங்குந் தேடியோடி அற்பரையடுத்து உத்தமர்களைக் கண்டால் ஓட்டமெடுத்தும் வஞ்சகம் நிறைந்த மாயப் பிரபஞ்சமெங்கும் மேலுமேலும் விர்த்தியடையும்படியாகவும், நசித்துப் போகும்படியாயும், செய்யுங் கொடிய நெஞ்சத்தையுடைய உன்னை கிஞ்சித்தும் நெஞ்சத்திலெண்ணாத மெய்ஞ்ஞானிகளுக்கல்லவோ மேன்மையுண்டாகும் அன்றியும் என்னுதற்கரிதான இடமெங்குஞ் சென்று செழித்திருப்பாய் ஈயாதமென்னைப்போலொத்த லோபிகளிடத்தி லகப்பட்டுத் தூங்குவாய் இந்திர ஜாலங்களை செய்து விளையாடுவாய் நார்கள் மனக்கண்களை மூடுவாய் வைத்துப் புதைத்தவாயில் மண்போடுவாய் என்று சொல்லி விரக்தியடைந்தவரா யத்தனங்களையும் தானியங்களையும் பெட்டி பேழைகளையும், வீடுமாடுகளையும், ஆடையாபரணங்களையும், பாத்திரங்களையும், அணி மணிகளையும், தோட்டந் துரவுகளையும் காணிதோணிகளையும், தந்தக்கட்டில்களையும், தங்கத் தொட்டில்களையும் துஞ்சும் பஞ்சணைகளையும் இசைந்த தலைக்கணைகளையுந் தட்டு முட்டுகளையும், விசித்திரப் பட்டுகளையும், அண்டா தவலைகளையும் கைவளையல்களையும், கெம்பு,கோமேதகம்,பச்சை;நீலம்,பவளம், முத்துவைரம், வைடூரியங்கள்,புஷ்பராகங்கள் முதலான தனக்குண்டாகிய எல்லா ஆஸ்திகளையும் கொள்ளையிட்டு, தான் ஒரு தருணம்கூடஎற்றுக் கொள்ளாமல் கட்டிய வஸ்திரத்தோடும் மனைவி குமாரத்தியோடும், கரத்தில் தம்பூர்-சிப்ளாகட்டையேந்திக்கொண்டு வெளிப்பட்டு அவ்வூர் வீதிகடோறும் பஜனைசெய்து திரிந்து உஞ்சவிர்த்தியால் மூவருஞ் ஜீவனஞ் செய்துக்கொண்டு வந்தார்கள்.

ஓர்நாள் வழக்கப்படி தெருக்கள் தோறும் பஜனைசெய்துக்கொண்டு வந்தார்கள் அதில்ருக்மணி பெப்படி பஜனை செய்கிறாளென்றால், திருப்பாற்கடலில் ஆயிரம் பணாமுடிகளுடைய ஆதிசேஷன்மீது யோக நித்திரையைவிட்டு பக்தர்களை ரக்ஷிக்கும் நிமித்தம் பண்டரியில் எழுந்தருளிய பாண்டுரங்கநாதா ஓ சுவாமி! அடியேன் இவ்வுலகத்தில் கணவனில்லாக் கன்னியும், கர்த்தனைப் பணியாச் சென்னியும், திருமண்ணணியா நெற்றியும் தெளிவிலாப் புத்தியும், அன்பில்லாப் பக்தியும், அகத்திலில்லாச் சுத்தியும், ஜீவகாருண்ணிய மில்லாத் தவமும்சிந்தையிலூன்றாதஜபமும். ஆரில்லாதவூரும், அரசனில்லாப் பாரும், ஞானமில்லாக்கல்வியும், மானமில்லாச்செய்தவமும், பக்தியில்லாப் பூசையும், போர் செய்யும் வீடும், புனிதரில்லா நாடும், நீதியில்லா அரசும், நிழலைத்தரா மரமும் பிரியமில்லா மோகமும் பிணியாற் சூழ்ந்ததேகமும் தருமம் செய்யாக்கையும் சாந்த

Koviloor Digital Library

சைப்பணியாசெய்யும், ஜலமில்லா யேரியும் சர்சசன சைச்சேர்க்கா ஓரியம்! மலைமேற்பொழியும் மாறியுக், மனைவியுமனைவையும்நாரியும் விபசாரஞ்செய்யுமங்கையும் விட்டிற் றங்காநங்கையும் என்றுந் தீராச்சங்கையும் எளியோரை மோஞ்அங்கையும் சங்கமில்காத்துறவும், சத்துருஷ்டியில்லா அறமும் குண்டுணிவேலையாற்றிவிப்பதும் குருவைமனிதனுக பாவிப்பதும், கொடியோர் செய்த கர்மமும், குருபேதைகமில்லாச் சென்மமும், தாழ்வடைவதுபோல குருவுபதேசமில்லா நாளும் தாழ்வடைந்தென், மூதெய்வமே எனக்குற்ற சங்கைகள் எப்போது நீங்கும் பிரமானந்த மெக்காலத்திலோங்கும என்று தமக்கிருக்கும் சங்கையை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு வீதிகள்தோறும் பகவானைத் தியானித்துத்தன்னை மரந்தாடிப் பாடிக்கொண்டே போகிற போது, சாக்ஷாத் எம்பெருமான் பிராமண உருவெடுதது அவர்கள் மூவரையும் அடுத்து நில்லுங்களெனத் தடுத்து பலவாசிகள் படித்து ஓ புண்ணிய சிலர்களே! என்னுதான் எண்ணெக்காக உலருகிறது எலிபுழுக்கை யெதுக்காக உலருகிறது என்னுமாப்போல நீங்களிருவருந் பகவானுடைய அருள்பெற்று வைகுந்த மடையவேணு மென்ற இச்சையால் பாடியாடி வருகிறீர் இப்பெண் எனையா வருகிறுன் இப்படிசெய்வது சரியல்ல இக்குழந்தையை சிறுவயதில் தானே ஓர் பிராமணனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து உங்களிஷ்டப்படி நடக்கலா மென்ற பிராமணரை நோக்கி ஐயா சுவாமி இப்புதல்விக்கு மணஞ்செய்விக்க (தன மூலம் ஜெகத் என்பதுபோல்) தனம் வேண்டியிருப்பதால் எங்களிடத்தில் ஒரு காசலவும் கிடையாதே நாங்கள் என்னசெய்வோம் எங்கள் பொருட்டு எம்பெருமாள் கிருபை எப்படியோ அப்படி நடக்கும்நம்மாலோரணுவளவும்அசையாதென்ற புரந்தாரை நோக்கி மயாமறையோன் உமக்கோர் காசளவுங் செலவில்லாமல் இக்குழந்தைக்கு மணஞ்செய்விக்கிறேன், என்சமர்த்தைப் பாருமென்று சொல்லிச் சென்றூர். பிறகு அம்மூவர்களும் உஞ்சவிர்த்தி செய்து கிடைத்த அமுதுபடியினல் ஜீவனஞ் செய்து வந்தார்கள். இவ்வண்ணம் இங்கிவர்களிருக்க மயாமறையோன்புரந்தான் நம்பேரில் பாரத்தைப் போட்டு விட்டாரே யென்று சிறத்தையுடையவராய் வேகமாய் நடந்து கிஷ்கிந்தாபுரி பட்டனஞ் சென்று ஓர் பிராமணன் வீட்டிற் புகுந்து ஓ புண்ணிய புருஷர்களே நானிருப்பது வேமனபுரி ஸ்மார்த்தப் பிராமணன் என்பேரோ நாராயணபட்டதுஉ- இவ்வூருக் கொருகாரியமாய் வந்தேன் பொழுது போய் விட்டது மிகவும் பசிதொந்திரவாயிருக்கிறது ஆகையால் எனக்கவ்வளவு அன்னம் படைப்பீர் களாகிலுமக்கு மிகுந்த புண்ணியமுண்டாகுமென்றவரை அவ்வீட்டெஜமான் ஓசுவாமி! வாரும் இப்படி யெழுந்தருளும் என்றோர் பீடங் கொடுத்தான்.

மயாமறையோன் இதோ வந்தேனென்று அப்பீடத்தி லுட்கார்ந்தார். கிரகஸ்தன் அன்னபருதிகளெல்லாம் சமைத்தானேவுட்னேஜலங்கொடுத்து கால்கரங்கள் சுத்திசெய்துகொள்ளச் செய்து தளிகையிலேயில் பரிமாரி மாயாமறையோருந் தானுமாகப் புசித்து தாம்பூலாதிகளை தரித்து வேடிக்கையாய் பேசிக்கொண்டிருக்கிறபோது கிரகஸ்தன் புதல்வன் வந்தான் அவனைக்கண்டமாயாமறையோர் அடேயப்பா குழந்தாய் இங்குவாடா வென்று சமீபத்தி லழைத்து வாசிப்பு முதலான க்ஷேமங்களை விசாரித்து இப்பிள்ளைக்கு இன்னும் ஏன் விவாகஞ் செய்விக்காம லிருக்கிறீர்களென்ன கிரஹஸ்தன் ஓ சுவாமி பெண்பார்த்து வருகிறேன் சரியானதாய் கிடைக்கவில்லை குலம்சரிப்பட்டால்கோத்திரம் சரிப்படவில்லை, குலமுங்கோத்திரமும் சரிப்பட்டால்பொருத்தநிமித்தம்சரிப்படவில்லை, இப்படியாகயிருக்கிறதென்ற கிரஹஸ்தனை நோக்கி மாயா மறையோன் என்வசமாய் ஒருபெண் இருக்கிறது அது ரூபலாவண்ணியத்திலும் சௌந்தரியத்திலும் சிறந்தது அதை வேண்டுமானல் பேசி முடிக்கிறேன். உம்முடைய அபிப்பிராயத்தை தெரியச்சொன்னல் அப்படியே நடந்து கொள்ளுகிறேனென்றூர்.

4-வது பகவான் புரந்தரதாசர் குமாரத்திக்கு அந்தணரூபமாய்வந்து விவாகம் முடித்த அத்தியாயம்.

கிரகஸ்தன் உம்முடையவசத்திலிருக்கும் பெண் எந்த ஊரில் வசிப்பது தாய்தந்தைகளிருக்கின்றூர்களா? சௌக்கியமுடையவர்கள் தானு? தகப்பனுருக்கென்ன ஜீவனம் இதுகளையெல்லாம் விஸ்தரித்துச் சொல்லுமையா என்று கேட்டான். மாயாமறையோன் தாய்தந்தைகள் முன்திரண்ட சம்பத்துடனிருந்து தற்காலம் கஷ்ட ஜீவனஞ் செய்து வருகிறூர்கள், அவாளப்படிக் கிருக்கினும் அப்பெண்ணுக்கு வேண்டியவரிசை ஸ்ரீதனங்களில் யாதொரு குறைவுமின்றி யானே நடத்துகிறேனென்ன கிரகஸ்தன் அப்பெண் உமக்கென்ன வேண்டுமென்ன மாயாமறையோன் அப்பெண்ணெனக்குப் புதல்வியாக வேண்டும் எப்படி யெனில் தம்பியினுடைய பெண் எனக்குப் பிள்ளை களில்லாமையால் நான்

Koviloor Digital Library

எடுத்து வளர்த்துக்கொண்டேனென்று வதுவைக்காக சில நன்மொழிகளைப் பகர்ந்து நிச்சய தாம்பூலமும் விடையும் பெற்று வேமனபுரிசேர்ந்து புரந்தரரையும் லட்சுமிபாயையுங் கண்டு உங்கள் பெண்ணுக்கு மணவாளனைப் பேசி கெட்டிசெய்து தாம்பூலமும் பெற்று வந்தேனென்று தாம்பூலத்தைக் கொடுத்தார், அதைப் பெற்றுக்கொண்டு தம்பதிகளிருவரும் ஓ சுவாமி! எங்கள் கையில் ஒரு காசுவாகிலும் இல்லையே, இந்தச் சமயத்தில் இச்சுபகாரியத்தை கெட்டி செய்து வந்தீரே, நாங்களென்ன செய்வோம், சூரியனுதிக்காமல் பனிநீங்குமா சந்திரனில்லாமல் இருளாகுமா அதுபோல பொருளில்லாவிட்டால் மணம் நடக்குமா ஓர் குரங்கு கள்ளைக் குடித்துத் தன்னைமறந்து ஆர்பாட்டம் பண்ணிக்கொண்டிருக்க இச்சமயத்தில் தேளொன்று கொட்டிவிட அதிக பாதையினால் கதறியழுகிறபோது பிசாசு ஒன்று பிடித்து அலைவதுபோல மேலும் மேலும் எங்களுக்குக் கஷ்டமே வந்துகொண்டிருக்கிறதேயென மாயாமறையோன் ஓ பக்தர்களே சதாகாலமும் பாண்டுரங்கனைப்பாடி அன்பாய்க் கொண்டாடி ஆனந்தக் கண்ணீர்விட்டு வாடி தங்களை மறந்தாடி பகவானைத்தேடித்திரியும் உத்தமர்களே உங்களுக்கு இது விஷயத்தில் யாதொரு துன்பமும் வேண்டாம் முன் நான் சொல்லியபடி உங்களுக்கு யாதொரு சிலவும் நேரிடாமல் நடத்திவைக்கிறேன் நீங்களிருவரும் நம்மோடு கூடவந்திருங்களென்று சொல்லி சம்மதிக்கச்செய்து மூவரையும் அழைத்துக்கொண்டு கிஷ்கிந்தாபுரி சேர்ந்து மாப்பிள்ளை வீடுபுகுந்து சாமக்கிரியைகளை எல்லாஞ் சேகரிக்கச் செய்து நல்ல கடிகையில் மணமாலைசூட்டிவைத்து அவ்விடம் வந்திருந்த பிராமணாளுக்கெல்லாம் ஒருஜெதை வேஷ்டியும், ஒரு ரூபாய் தக்ஷிணையும், பிராமண ஸ்திரீகளுக்கு, ஓர் புடவை ஓர் ரவிக்கை கால்ரூபாய் தக்ஷிணையுங் கொடுத்து யாவருக்கும் திருப்தியாக அன்னமளித்து வெகு சம்பிரமாய் கிரமப்பிரகாரம் கலியாணத்தை நிறைவேற்றிவைத்து மறையோன் மாய்மாய் மறைந்து போனார். கேட்டீர்களோ சித்தர்களே என்று நாபஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

அகமும்முகமும் மலர்ந்து இகவாசையை மறந்து ஜெகத்தனில் மிகவுஞ் சிறந்து பகவானையே தைலதாரையைப்போல தியானிக்குஞ் சித்தர்களே பின்பு தம்பதிகளிருவரும் தம்முடனிருந்த மறையோரைக் காணாததால் வியப்புற்று இவ்வண்ணம் நடத்திவைத்தது, பகவானேயென்று மதித்து அஞ்ஞானத்தாலறியாமற் போனோமேயெனத்துடித்து நடத்திய காரியங்களுக்குப் பிரமித்து மறுபடி சேவிப்பதெப்போதென விசாரித்து. ஓ ஸ்வாமி! ஏழைகளுக்காக இவ்வண்ண முயற்சி யெடுத்தீரே உமக்குள்ள சுயரூபம் விடுத்தீரோ, இச்சுபகாரியத்தை முடித்தீரோ: பாரமாக யீவுகொடுத்தீரோ, மாயமாய் மறைந்துவிட்டீரோ, நாங்களியற்றிய குற்றங்களை நற்றவமாகக் கொண்டு எங்களைக் காத்தருள் உலகுண்டவாயா, அன்பர்கள் சகாயா, பிரமக்ஞானிகள் நேயா, கபடநாடகனுகிய மாயா, நானுவித உபாயா வெண்ணெயுண்டவாயா சகலருந்தொழுந்தூயா, கோபாலரைக்காத்த நேயா, நிரூபமாகிய ஆகாயா, நீலமேகச்சாயா, கோசலையீன்ற சேயா, பச்சைவண்ணமுள்ளகாயா அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா, ஓ பரந்தாயகா, ஓம் விஷ்ணுபகவானே, நீர் எளியோங்களுக்காக இக்காரியஞ் செய்யக்கூடுமோ வென்றுஆனந்தவிதங்களாகத் துதித்து, ஆனந்தமேவிட்டதால். குதித்து சம்மந்திகளிடம் விடைபெற்று கிஷ்கிந்தாபுரிபட்டணத்தைவிடுத்து வேமனபுரியையடைந்து வீதிகள்தோறும் உஞ்சவிர்த்தி யெடுத்து பாண்டுரங்கா பக்தசங்கா மோகனுங்கா பவபங்கா வெனத்துதித்து சிலநாள் வசித்து யாத்திரைசெய்ய வேண்டுமென் றேசித்து அடியார்களைப் பூசித்து, அவரடிகளை நேசித்துப் பாமரர்களை தவேஷித்து ஹரிசங்கீர்த்தனைகளை கோஷித்து அவரது கல்யாணகுணங்களைப் பாஷித்து அவ்வூரைவிட்டு வெளிப்பட்டு தென்னாட்டு திவ்விய தேசங்களிலுள்ள எம்பெருமான்களைச்சேவித்துத் திருமலையை நண்ணிஓர் தாசிவீட்டிற் றளிகைபண்ணிப் பகவானுக் கம்சை செய்து ஸ்வீகரித் துய்துவந்தார்கள்.

இப்படியிருக்க அவ்வீட்டு தாசி பகற்காலமெல்லாம் வீட்டிற்போக்கி இரவில் பத்துமணிக்குமேல் நாள் தப்பாமல் வீணையை யெடுத்துக் கொண்டுபோவதைக்கண்ட புரந்தரர் ஓர் நாள் அத்தாசி வெளியே போக எத்தனிக்கையில், அவள் பாதங்களில் வீழ்ந்து தெண்டனிட்டுகண்களில்சேர்த்துக்கொண்டாடி ஓ அம்மணி நீ தினமும் இரவில் வீணையை யெடுத்துக்கொண்டு போகுறையே எங்குபோகிராயென்று வினவினர், இதைக்கேட்ட தாசி அச்சமுற்றவளாய் இவர் யாரோ மகானுபாவராய் இருக்கிறார், இவரிடத்தில் நாம் பொய்புகன்றால் தோஷம்வந்து சம்பவிக்குமென்றெண்ணி, ஓ ஸ்வாமி! நானோதாசி தேவரீரோ பிராமணர், அப்படியிருக்க அடியாள்பாதங்களில் தேவரீர் வணங்குவது நியாயமா தர்மமா அபசாரத்துக்குள்ளானேனே இவ்வபசாரத்தை எப்படி நிவர்த்திசெய்வேனென்று விசாரப்பட்டு சுவாமி

Kovilpoor Digital Library
5643 சா கு

மி அடியாள் தினமும் திருமலைக்குச் சென்று மண்டபத்திலிருந்து வீணாகானம் செய்யத் திருவேங்கடமுடையான் காலில் கெஞ்ஜையைக் கட்டிக் கொண்டு வந்து ஆடுவர், அடியாள் கெஞ்ஜைகட்டிக் கொண்டாடும்போது பகவான் விணாகானஞ்செய்வார் இப்படி இவரெல்லாம் பகவானுடனிருந்து வைகறையானதே புறப்பட்டு வருவேன். ஆகையால் இன்றும் பகலற் சேவைக்குப் புறப்பட்டு போகிறேனென்ன புரந்தரர் ஓ அம்மா பாக்யவதி ஏழையாகிய அடியேன் மீது தயை செய்து எம்பெருமானுடைய சேர்வையில் ஈடுபடுத்தி காக்கக்கடவாயென்றடியில் வீழ்ந்து தொழுது ஓ அம்மணி கோகிலாக்குமரி இப்பூமியின்கண் கணவனில்லாக் கன்னியும், கர்த்தனைப் பணியாச் சென்னியும் திலகமணியா நெற்றியும், தொளியில்லாப் புத்தியும் அன்பில்லாப் பக்தியும், அகத்தில்லாச் சுத்தியும், ஜீவகாருண்ணியமில்லா தயமும் சிந்தையிலூன்றுத ஐபமும் ஆறில்லாதவூரும், அரசனில்லாப்பாரும், ஞானமில்லாக் கல்வியும், மானமில்லாச்செல்வமும், பக்தியில்லாப் பூசையும், பணத்தின்மேலாசையும், போர் செய்யும்வீடும், புனிதரில்லா நாடும், நீதியில்லாவரசும் நிழலைத்தா அரசும் பிரியமில்லா போகமும், பிணியால்சூழ்ந்த தேசமும் தருமஞ்செய்யாக் கையும் சான்றரைப்பணியா மெய்யும், ஜலமில்லாயேரியும், சர்வஜனரைச் சேர்க்கா ஒரியும், மலைமேற்பொழிபுமாரியும், மணாளனைவையும் நாரியும், விபசாரஞ்செய்யு மங்கையும் வீட்டிற்றங்கா நங்கையும், என்றுந்தீராச் சங்கையும் எளியோரை மோதும் அங்கையும், சங்கம்நீங்காத்துரவும் சந்துருஷ்டியில்லா வுறவும், குண்டுணிவேலையாற் ஜீவிப்பதும், குருவை மனிதனாக பாவிப்பதும், கொடியோர்செய் சற்கருமமும் குருவுமில்லாச் சென்மமும், தாழ்வடைவதுபோல வெகுநாளாய் குருபுபதேசமின்றி இச்சென்மம் பாழடைந்து போகுதென்று ஆசானைத் தேடிப்புறப்பட்ட அடியேனுக்குத் தேடிப்போன மருந்து காலில் அகப்பட்டவண்ணம் பிறவிக்குருடன் கண் பெற்றதைப் போலவும், தரித்திரனுக்கு க்ஷேமங்கிடைத்தார் போலவும் யாசகனுக்கு இராஜரீகம் கிடைத்தாற் போலவும் மகிழ்ந்து புகழ்ந்து அம்மணி! கண்ணைக் காக்கும் இமையைப் போலவும் கன்றைக்காக்கும் கபிலையைப் போலவும், கற்பைக் காக்கும் காந்தையைப்போலவும், உயிரைக் காக்கும் உடலைப்போலவும், சிசுவுக்குத் தாயும், விருக்ஷங்களுக்கு ஜலமும், பக்தர்களுக்கு தெய்வமும், ஜீவர்களுக்கு குணமும், பிரஜைகளுக்கு இராஜனும் தரித்திரர்களுக்கு பிரபுவும், பகலுக்கு சூரியனும், இராத்திரிக்குச் சந்திரனும், தருமத்துக்குச் சாந்தமும் வீரனுக்கு தைரியமும், வேந்தனுக்குப்படையும், சதிக்குப்பதியும், பதிக்குச்சதியும் தபத்துக்கு வைராக்கியமும் திடத்துக்குச் சிரவணமும், ஜென்மபாசத்துக்கு நிராசையும், ஸ்திரிகளுக்கு கற்பும், புருஷர்களுக்கு கல்வியும், கல்விக்குச் ஜீவகாருண்யமும், மந்திரிகட்கு யுக்தியும் வியாபாரிகளுக்குத் திரவியமும், உலகத்துக்கு மழையும், துணையாயிருந்து விளக்குவதை போல அடியேனுக்குத் தாங்களே துணையாயிருந்து காக்க வேண்டுமன்றி வேறுவழியில்லை ஏனெனின் அநேக சாஸ்திரங்களை வாசித்தும் இஷ்டதேவதையை பூசித்தும் பெரியோர்களை நேசித்தும் அன்பாய் விசுவாசித்தும் பேரின்பத்தையே ஆசித்தும் ஒரு நிமைப்போதாகினும் சஞ்சலமற்று ஆனந்தமாய் இருந்தறியேன் ஆதலால் பிரமமே ஒருருவான தேவரீரே அடியேனை ஆனந்தக்கடலில் ரமித்திருக்கச் . செய்யவேணடும், என்று கண்ணீர்விட்டழுது பலதரந்தொழுது பயபக்தியுடன் நின்றார். இதைக்கேட்ட அப்புண்ணியவதி கருணைபுரிந்து புரந்தரரைக் கூடவே அழைத்துக்கொண்டு மலையின்பேரிலேரி பக்திமீறி மண்டபத்தின் தூணின்மரபில் புரந்தரரையிருக்கச்செய்துதான்வீணையை சுதிசெய்து அதில்லயித்து பகவத் கல்யாணகுணங்களைப் பாடிக்கொண்டிருந்தாள் அப்போது பகவான் காலில் கெஞ்ஜை கட்டிக்கொண்டு கதவைத்திறந்து வெளிப்பட்டு இசைக்கு ஒற்றுமையாய் பலபல விதமாய் ஆடிக்களிப்படைந்து ஓ பாக்கியவதி இன்றையதினம் என்றுமில்லாத பிரம்மானந்த முண்டாச்சுது போரும் நீ கெஜ்ஜைகட்டியாடு நான் வீணாகானத்துடன் பாடுகிறேனென்று, கெஜ்ஜையை அவிழ்த்துக் கொடுத்துவிட்டு வீணையைக் கரத்தில் வாங்கிக் கொண்டு திருட்டை வெளிப்படுத்த வேண்டுமென்றெண்ணி காந்தாரத்தை குறைத்து சுதிசேர்த்த பகவான் பாடி கானஞ்செய்ததைக் கேட்டு சங்கீதத்தில் மிகவுந் தேர்ச்சியடைந்த புரந்தரர், தனக்காசானாக மதித்திருக்கும் உத்தமியைக் கூப்பிட்டு ஓ அம்மணீ! இப்போது வீணைவாசிக்கும் அபசுரத்தால் என் தலை மண்டை யுடைந்துப் போகிறது ராகமோசராகமாயிருக்கிறது, தாளமோ பேதாளமாயிருக்கிறது எனக் கேட்ட பகவான் ஓபுரந்தரி அன்னியமனிதன்யாரோ வந்திருப்பதாய்த் தோற்றுகிறது, பேச்சுக்குரல்கேழ்க்கிறது யாரை அழைத்துவந்தாய் என்று பகவான் கேட்க புரந்தரி கிடுகிடுவென நடுநடுங்கி சுவாமி முன் வந்து தெண்டனிட்டு கருணாநிதி அலர்மேலு மங்கைப்பதி என்னைப்போல ஏழைகளுக்குக் கெதியாகிநின்ற பூரணமதி அடியாள் செய்த அபசாரத்தை மன்னி

த்து அடியாருக் கபயஸ்தம் கொடுத்தாட்கொள்ள வேறுமொன்று வேண்டிக்கொள்ள திருவேங்கடமுடையான் அருள்மழை பொழிந்து தன்னுடைய அஸ்தங்களை அம்மாதுசிரத்தில் பொருந்தச்செய்து பயத்தைக்கொய்து ஓபுரந்தரி உன்னுடனே கூடவந்தவர் யார்? எங்கிருப்பவர்? இங்கு ஏன்வந்தார்? இவ்விடம் எங்குதங்கி யிருக்கிறார் என்ன புரந்தரி ஓஸ்வாமி! இத்தச்சாது பண்டரிபுரத்திற்கு இடையில் வேமனபுரியில் இருப்பவர் திவ்வியதேச யாத்திரையாய் வந்து அடியாள் குடிசையில் தங்கியிருக்கின்றார் தங்களைச் சேவிக்க வேண்டுமென்று அடியாளை மிகவும் வேண்டிக் கொண்டபடியால் இங்கே அழைத்து வந்தேன் என்ன பகவான் அவருக்கு வீணைவாசிக்கத் தெரியும் போல் இருக்கிறது ஆகையால் அவரை இங்கு அழைத்துவாவென புரந்தரிமாதுவின் சமீபத்திற் சென்று ஓ மகானுபாவரே! பகவான் சேமமா யிருக்கிறது. எழுந்தருளும் என்றதைக்கேட்டு ஆனந்தக் கடலில் மூழ்கினவராகி திரேகம்பூரித்து மயிர் கூச்செறிந்து அகமும் முகமும் மலர்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்து கொண்டே பகவான் பாதங்களில்விழுந்து தொழுது நயனங்களிலலிர்ந்து பலவாராகப் புகழ்ந்து மகிழ்ந்து எழுந்திருக்கும் புரந்தரற்குப் பகவான் பல ஆசிகள்கூறி இந்தாரும் வீணை இதைச் சுதிசேர்த்து வாசியும் என் செவியாரக் கேழ்க்க வேண்டுமென்ன புரந்தரன் பாக்கியமென்று வீணையைப் பெற்றுக்கொண்டு சுதிசேர்த்து அதில் லயித்து லயையுடன் பாடி வீணைவாசிக்க பகவானும் புரந்தரியுங் கேட்டு பிரமானந்த மடைந்தார்கள்.

அப்போது பகவான் புரந்தரியை நோக்கி ஓ பாக்கியவதி! இப்புண்ணிய புருஷனை யாரென்றுநினைத்தாய் எனக்கருமையான பக்தனாகியும் ஜீவன் முக்தனாகியும் எனது இருகண்ணினுள் மணியாடும் பாவைபோன்றவனாகியும், எனதாவிக் கருத்துணையனும், எனக்குள் ஐக்கியமாய் இருப்பவனும், என்னை மறக்காதவனும், என்னை மறக்காதவனும், என்னை விழுங்கினவனும், விளங்கும் நாதமஹா முனிவனென்று நினைக்கக்கடவாய் அன்னியினும் இவருக்கு குருவுபதேசஞ் செய்யக்கடவாய் மேலும் உன்னுடைய உதவியால் என்னை சேவிக்கபடியால் இன்றுமுதல் இவருக்குப் புரந்தர தாஸனென்று பேர் வழங்கக் கடவதென்று ஆசிகள்கூறி வைகறையாய் விட்டது போய் வாருங்களென்று விடைகொடுத்து மறைந்தார். கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லுகிறார்.

கேளுங்கள் சித்தர்களே பகவானிடம் விடைபெற்ற புரந்தரி புரந்தரதாசர் இருவரும் மலையிறங்கி தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். அநுதினமும் இப்படியே பகவத்சேவைக்குச் சென்று வீணாகானஞ் செய்து நாளைப் போக்கிக் கொண்டிருக்க ஓர்நாள் புரந்தரதாஸர் உத்தமியின் பாதங்களில்விழுந்து ஓ அருள்ஞானம் நிறைந்த புனிதவதியே அடியேன் பேரில் தயைசெய்து ஞானமார்க்கத்தை போதித்து ஈனமார்க்கத்தை பேதித்து ரக்ஷியும் அம்மணி என்ன அப்புனிதவதி சொல்லுகிறாள். ஓ புரந்தரதாசரே நிரந்தரம் பகவத்தியான விசுவாசரே, பிரம்மானந்தத்தை விரும்பினவன் முன்னம் சகுணமாகிய திரிமூர்த்திகளையாவது நிர்க்குணமாகிய பரப்பிரம்மத்தையாவது அன்பாய் உபாசிக்கவேண்டும் இதனால் அக்கினியில் வீழ்ந்த சருகைப்போலச் சகல ஆகாமிய மாயங்களும் பஸ்பமாய்ப் புண்ணியம் மேலிடும் இப்புண்ணிய மேலிட்டால் அநித்தியமாகிய சம்சாரம் துன்பமாய்த் தோன்றுவதன்றி நித்தியமான மோக்ஷ மார்க்கத்தைக் காட்டும் சத்குரு தரிசனங் கிடைக்கும் அந்த சத்குருநாதனுக்கு அன்புடன் பணிவிடை செய்வதால் பெருங்காற்றுற் சிதறிப்போகும் மேகத்தைப் போலச் சஞ்சித கர்மங்களெலாஞ் சிதருண்டுபோம் இதினால் அதிக சந்தோஷமுண்டாகும் பின்பு ஆசாரியர் உபதேசிக்கும் மகாவாக்கியத்தை ஏகாந்த ஸ்தானத்திலிருந்து தைலதாரையைப்போல் தியானிக்கவேண்டும் இதனால் காற்றில்லா விடத்திலுள்ள தீபத்தைப் சகலசஞ்சலங்களும் நீங்கிவதாக்கிர சித்தமுண்டாகும் பிறகு சத்குரு முன்னிலையில் தேகத்தையு இதனுள்ளிருக்கும் அவாரங்களையும் இதனுள்ளுலாவும் சுவாசத்தையும் இதனிலிருந்தறிக்கும் அந்தக்கரணங்களையும் இவைகளையெல்லாம் நான்தான் என்றிருக்குஞ் சீவனையும். இதனுக்காதாரமான சுத்தசூனியமாகிய அஞ்ஞானத்தையும் சாக்ரதாவஸ்தையில கருவிகளில் சேஷ்டையையும், சொர்ப்பனத்தில் மனக் கூத்தையும் சுழுமதியில் சூனியத்தையும் அறிந்துகொண்டு சாக்ஷியாயிருக்கும் சர்வ சாக்ஷியாகிய பிரமமும் ஒன்றேயெனக்காட்டும் வாவாக்கியார்த்த சிரவணஞ்செய்ய வேண்டும் இதனாற் சூரியோதயத்தால் நீங்கும் இருளைப்போல அஞ்ஞானம் நீங்கிப்போம் பின்பு தேகம் அனித்தியம் நாம் நித்தியம் இந்திரியங்கள் துரீசமயம் நாம் ஆனந்தமயம் அந்தக்கரணஞ் சலனசுபாவம், நாம் நிர்ச்சலனபாவம் வாய்வு தேகத்துக்கு ஆகாரம் நாம் சமஸ்தத்துக்கும் ஆதாரம் ஜீவன் நாலென்னும்டாகம் நாம் நவனற்றபாவம் அஞ்ஞா

Koviloor Digital Library

ளம் சுத்த சூனியம் நாம் அகண்ட பரிபூரணமென்று மண்டூகத்தின் கண்டத்தைப் போலவும், சிசுக்களின் உச்சியைப்போலவும் மானிடர்களிருதயத்தைப்போலவும் சதாமனனம் பண்ணவேண்டும் இதனால் தீர்ப்பானபின் சந்தேக மற்றதுபோல சகல சந்தேகங்களுந் தலையெடுக்காமற் சாகும் பிறகு தேகாதிகள் நாமல்லாததால் நமக்கு தருமமா தருமம் பந்தமோக்ஷ ஜனன மரணங்கள் முக்காலத்திலும் இல்லை பலதுளிகள்கூடி பெருவெள்ளமானது போலச் சகலசாக்ஷிகளின் கூட்டமே சர்வசாக்ஷியாகிய பிரமமென்றும் பிரம்மேசாக்ஷி ஸ்வரூபமாகிய நானென்றும், ஜனனமில்லா வெனக்கு மரணமேதென்றும் ரூபமில்லாவெனக்கு விகாரமேதெனறும் சங்கல்பமில்லா வெனக்கு விகல்ப மேதென்றும், மரணமில்லா வெனக்குப் பயமேதென்றும், பரிபூரணமாயிருக்கு மெனக்கு தேகமேதென்றும், முக்காலத்திலும் ஒரியல்பா யிருக்கு மெனக்குக் காலமேதென்றும் என்றைக்கு மழியாமலிருக்குமென்பதால் முன்னும் பின்னும்மித்தையான இந்திரஜால வித்தையைப் போன்ற இப்பிரபஞ்சம் முழுமித்தை யென்றும், என்று மழியாதிருக்கும் பிரமமே நானென்பதற்கு சந்தேகமில்லையென்றும் திடமாய் நித்யானந்தத்தாற் றெளிந்துக் கொள்ள வேண்டும்.

இதனால் தீபமேற்றியபின் சர்ப்ப பயம் நீங்கிப் பழுதையென்று, காலாற்றள்ளி விடுவதுபோல பிரபஞ்சம் மெய்யென்றும், தேகந்தானென்றும், பந்தமோக்ஷங்க ளுண்டென்றும் நினைக்கச் செய்யும் விபரீதபாவனை யொழிந்துபோம் பிறகு தேகமிருந்தா லென்ன மறிந்தாலென்ன: காட்டிலிருந்தாலும் நாட்டிலிருந்தாலும் பிராப்தாதீனமான இந்தாலம் சுகத்தையும் துக்கத்தையும் அநுபவித்தே தீர்க்கவேண்டும் என்று பலதரம் இச்சித்து நினைத்தாலும் வராது பலதரம் வேண்டாமென்று நிக்கிரகித்தாலும் போகாது. என்று நிரேதவாய் சகல இச்சைகளுமற்று புற்றினுள்ளிருந்து புறப்படும் ஈசலைப்போல உள்ளத்திலிருந்து உதிக்கும சங்கற்பங்களை இந்திரியங்களின் வழியாய் செல்லாமல் மீனை உண்ணும கொக்கைப் போலுண்டு இச்சையென்னும் மடுவிலிருக்கும் நினைப்பென்னும் மச்சங்களை எல்லாம் நாசஞ்செய்து, இச்சை பின்வழியாய் மனதைச் செல்லாமல் நிக்கிரகித்து நிஸ்தரங்க சமுத்திரத்தைப்போ லசையற்றுக் கூடஸ்த பிரமமாத்திரமாய் இருப்பது சமாதியென்று சொல்லப்படும் இதனால் சுழுத்தியிலுண்டாகுஞ் சுகத்தைப் போலக் கண்டு ஆனந்த முண்டாகும் இப்பேர்க்கொத்தஎல்லையில்லாச் சுகானந்தக்கடலிற் படிந்து தன்னைமறந்து தலைவனிற்கலந்து எங்கனும் நிறைந்தமுகபாவத்தையடைந்து தான் இன்னானென்றுந் தெரியாமல் சுத்தாசுத்தங்களையுங் குறியாமல் பேசுவதும் உண்ணுவதும் சொற்பனத்திற் கண்டுங்காணாத சாக்ஷிபோலுணர்ந்தும் உணராமல் பேயன் பித்தன் உன்மத்தன் சிசுவைப்போலாகி ஹரி ஹராதிகள் பிரத்தியக்ஷமானாலும் மாயா மயனென்றறிந்து தலையசைவதுந்தெரியா ஆனந்தாவேசம் மேலிட்டு ஜாக்ரசுழுத்தியின் நிலையை மேவி பிரமமாத்திரமா யிருப்பதுசாக்ஷாத்காரம் இதனாற் கற்புள்ள கன்னிகைக்குச்சாயுச்சியங்கிடைப்பது போலச் சாலோக-சாமீப-சாரூப-சாயுச்சியமென்னும் நாலுபாதங்களுக் கப்பாற்பட்ட ஐந்தாம்பதமாகிய ஆனந்த பாத்திரமான கைவல்லியங் கிடைக்கும் ஆதலாற் சகலபற்றுக்களும் அற்ற பகலத்தாசனே! மிகுந்த நேசனே! பிரம்மே இஷ்டதெய்வமென்றும் தெய்வமே சத்குருவென்றும் குருசேவையே சகல கிரியைகளென்றும், குரு உபதேசமே வேதமென்றும், வேதமுடிவே வேதாந்தமென்றும், வேதாந்த சிரவணமே மோக்ஷமார்க்கமென்றும் மோக்ஷ இச்சையே தபோபலமென்றும், தபோபலமே மனனமென்றும் மனனமே நித்தியாசனமென்றும் நிந்தியாசனமே சமாதிநிஷ்டை யென்றும் நிஷ்டையே சாக்ஷாத்கார மென்றும் சாக்ஷாத்காரமே பிரமமெனறும், பிரம்மே ஆனந்தமென்றும் ஆனந்தமே முக்தியென்றும்நிச்சயமாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றுஞ் சொல்லி பின்னுஞ் சொல்லுகிறாள்.

ஓ சர்வசங்கத்தையும் நிவர்த்திசெய்த பக்தசிரஜீவன்முக்தரே முக்கியமாய் பரமாசாரியர் மீதும் இஷ்டதேவதையின்மீதும், சிரவணார்த்தங்கள் மீதும் சிரத்தை பூரணமாய் இருக்கவேண்டும் பரமாசாரியர் மீது இருக்கும் சிரத்தையானது பரமஞானத்தைக் கொடுக்கும் இஷ்டதேவதைமீது இருக்கும் சிரத்தை பாபவிமோசன மாக்கும் சிரவணார்த்த சிரத்தை இல்லாதவனுக்கு ஞானம் லபிக்கமாட்டாது ருதுவாகாத கன்னிகைக்கு எப்படி கெர்ப்பந் தரிக்கமாட்டாதோ அப்படியே சிரத்தை இல்லாதவனுக்கு ஞானார்த்தம் மனதிற்றரிக்காது சிரத்தையேருது, உபதேசமே பிந்து, ஞானமே கர்ப்பம் ஆனந்தமே சிசுவென்று உணர்க்கத்தகும் குருகிருபை இல்லாவிட்டால் சிரவணாதிகள் பலிக்கமாட்டாது தன்னை மறக்கிற பரியந்தரம் மேற்சொன்ன மூன்றிலிடத்திலும், சிரத்தை பூரணமாய் இருப்பவனுக்கு பிரமானந்தம உதயமாகும்எப்போது ஆசாரியருடைய் பரிபூரணக்கிருபை பெருவானோ அப்போதே ஞானப்பிரகாசம் உதயமாகும் அற்

Koviloor Digital Library

றுப்போகும அஞ்ஞானபாசம் விஸ்தரிக்கும் ஆத்மவி
லாசம இருக்காது சிந்தனம் லவலேசம் சஞ்சித கர்ம
ங்கள்போகும் நாசம் தன்னை மறக்கச்செய்து விடும்,
பிரேமோபதேசம் சகலபற்றுக்களும் அற்றுப்போகும்
படி செய்யும், சாதுக்கள் நேசம் குரு விசுவாசம் எவ்
வளவு மேன்மையானது பாரும், ஒ நற்றவமிகுந்த
பரிசுத்தரே! சங்கீத சாஹித்தியத்திற் பிரசித்தரே!
தேகம் சேதனமூடசடம் நீ நித்தியசுகஞானசேதனம்
தேகம் அகண்டரூபநாமம் நீ அகண்டபரிபூரண நிரு
பநிர்ணமம், தேகம் விகார மலதுக்கம் நீ நிர்விகார
நிர்மலானந்தம் முக்தனுன உனக்கென்ன இனிதேகா
பிமானம் உன்னுடைய ரூபமென்றைக்கும் ஒரேவிதா
னம். யாவராலுஞ் சொல்லுதற்கரியமோனம், இதுவே
வேதமுடிவான எதார்த்தஞானம் பறவைகளெல்லாம்
மூடக்ஞானம் மூகபாவத்தை அடைந்திருப்பதே பிர
ம்மத்தியானம் தற்சுதந்தரமற் றிருப்பதே ஆசாரியரு
க்களிக்குந்தானம், நானென்பவர்க்குமுண்டோ ஈனம்
நானற்ற பிர்மக்ஞானியே மூவாக்கும சமானம் சான
ற்றபேர்க்குண்டு நாரதாதிகளின் சன்மானம், ஒசாது
வே! தேகத்தை நடப்பிப்பது பிராணன் பிராணனை
நடப்பிப்பது ஜீவன் ஜீவனை விளங்கச் செய்வது ஆத்
மக்ஞானம் ஆதலால் தேகாதிகளை நானல்லவென்றே
இருக்கவேண்டும் பிராப்தாதீனமான இத்தேகத்தை
குறித்து உனக்கு அக்கரையென்ன, தேகாபிமானத்
தை இன்றுடன் விட்டுவிட்டு உன்னை நீயே நன்றாய்
ஆராய்ந்து பார், தனக்குள் ளாராய்பவர்க்கே எல்லை
யற்ற ஆனந்தமுண்டாகும் தேகாதிகளை அசைவற வி
ருத்தினவனுக்கு நித்திரானந்தம் வந்தடைவதுபோல
துரிய திருஷ்டியைமேவி பிரம்மமாத்ரையாய் இருப்ப
வர்க்கே ஆனந்தம் உதயமாகும் நித்திரையானது தன்
னை மறக்கச்செய்வதுபோல ஆனந்த நித்திரைஉன்னை
மறக்கச்செய்யும் நீ முற்காலத்திலும் முத்தனுகவே
இருந்தாய் இனிமேற் சங்கை செய்வையானல் பந்தத்
துக்குட் பட்டுப்போவாய், திரிகுணங்களும் திரிகுண
சேஷ்டைகளும், பஞ்சபூதங்களும் வஞ்சகாத்மர்களும்
மாயையால் நிர்மானிக்கப்பட்டது இவைகளை யெல்
லாம் சாக்ஷியாய் இருந்தறிகிறு உனக்குமாயையும்திரி
குணங்களும் பஞ்சபூதவிகாரங்களும், ஒருகாலத்திலு
மில்லை நீ பிரதிவு-அப்பு-தேயு-வாய்வு ஆகாசங்களில்
நிறைந்திருக்கும் பிரம்மமேயாம். இவ்விதஐக்கியவநு
பூதானு பவத்தினுலேயே நானென்றும் ஜீவபாவம்
ஒழிந்துபோ மென்கிற பற்பல வேதாந்த ரகசியங்க
ளுரைத்து, ஓ உத்தமதாசரே! இந்த அனுபவமே
நான்குவேதத்திலும் வசிஷ்டசங்கிதை சூதசங்கிதை
பகவதகீதை ஆதமகீதை ராமகீதை உத்தரகீதை ரிபு
கீதை குருகீதை பாண்டவகீதை பிரம்மகீதை அஷ்ட
வக்கிரகீதை இன்னும் வேதவியாசருரைத்த பதினெண்
புராணங்களிலும், தச்சிபுராணங்களிலும்,நான்குவிஷ்
ணுபுராணங்களிலும், உபய பிரம்ம புராணங்களிலும்
சூரியபுராணம் அக்கினிபுராணம், விநாயகபுராணம்,
சத்திபுராணம் முதலான புராதன புராணங்களிலும்
சொல்லியிருப்பதை தப்பென்று மதபேதத்தால்திரஸ்
கரிப்பவர்களுக்கு ரவுரவாதி நரகமே பிராப்தியாகு
மென்றறைந்தார் கேட்டீர்களோசித்தர்களேயென்று
நாபாஜிசித்தர் பின் சொல்லத்தொடங்கினர்.

இத்தன்மையாக உபதேசித்த உத்தமியாளுக்கு
வந்தனம்புரிந்து எழுந்து முழுமைக்கும் இப்படியே
அருள்புரிந்து ஆட்கொள்ளும் அன்னையே என்று அ
ன்புடன் சிலநாள் தங்கியிருந்து பின்பு விடைபெற்று
தன்பத்தினியுடன் புறப்பட்டு தங்கள் ஊரையடுத்து
முன்போலவே உஞ்சவிர்த்தியால் ஜீவனஞ் செய்துக்
கொண்டு பரமாசாரியர்மீதும் இஷ்டதேவதையாகிய
பாண்டுரங்கன் மீதும், சிரவணார்த்தங்களினும் சிரத
தை யுள்ளவராகி சதா தைலதாரையைப்போல மன
னஞ்செய்து கொண்டிருந்தார் இப்படியிருக்க கிஷ்
கிந்தபுரி பட்டணத்தில் விவாகஞ்செய்து கொடுத்த
ருக்மணிபாய்ருதுவானுள். அது சங்கதி தாய்தந்தை
யருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அப்பெண்ணின்
மாமி மாமன் ஓர் பிராமணனை அழைத்து ஐயா பிரா
மணரே நீர் வேமனபுரிக்குச் சென்று ருக்மணிபாய்
தாய்தந்தரைக்கண்டு இப்பெண் புஷ்பவதியானுளெ
ன்று சொல்லி விட்டு சீக்கிரம் வாருமையாவென்று
வேண்ட அவரும் அதற்கு உடன்பட்டு, அப்படியே
போய் வருகிறேனென்று விடைபெற்றுக் கொண்டு
வேமனபுரிக்குச்சென்று புரந்தரதாசர் வீட்டைவிசா
ரித்துத் தெரிந்துகொண்டு அவ்வீட்டினுள் பிரவேசி
த்தார் அச்சமயத்தில் லட்சுமியானவள் வஸ்திரத்தை
த்தைத்துக் கொண்டிருந்தாள். அப்படி தைத்துகொ
ண்டிருந்த லட்சுமிபாயை நோக்கி அம்மா உன்குமா
ரத்தி ருக்மணிபாய் நேற்றையதினம் ருதுவானுளெ
ன்று சொல்லி உமது நாயகரெங்கேயென்றுகேட்டார்
அச்சமயத்தில் லட்சுமிபாய் திடுக்கிடதான் தைத்துக்
கொண்டிருந்த ஊசிமுனை விரலில்பட்டு ரத்தம்பெரு
கிய உபத்திரவத்தாலும் பெண்ணுக்கு யாதொரு சீரு
ஞ் செய்வதற்கு இல்லையே என்ற விசனத்தினுலும்
வந்த பிராமணனை நோக்கி,ஐயாமறையோரே எனது
கொழுநன் அச்சுதனுக்கு அழப்போனு ரென்று

Digital Library

கோபத்தோடு சொல்லியவை சர்வவியாபகனான பகவான் அறிந்து பதிவிரதையாகிய உமையவள் மனம்நொந்தமையால் ஓர்பாகம் பாழாய்விட்டது உத்தமியாகிய பத்மாவதி மனதுநோக பூமி படீரென்றுவெடித்தது, கற்புள்ள சீதையின் மொழியால் அக்கினிபகத்தைப்போல குளிர்ச்சி பொருந்தியது, வனிதைகளின் ரத்தினமாகிய தமயந்தியின்மொழியால்வேடன பஸ்பமாயெரிந்துபோனான். அப்படிப்போல இம்மங்கை மனக்கொதிப்பினால் யேதேனும பதாப்போகிறதென்று பயந்து நடுநடுங்கி புரந்தரதாசரைப்போல் வடிவம்பூண்டு வீதியில் நின்றார். வந்தபிராமணன் அவரைக்கண்டு ஓபரம பாகவதரே உமக்கு நமஸ்காரமென்று நவின்று சமீபத்தில் சென்று உமது குமாரத்தியாகிய ருக்மணிபாய் ருதுவானாள். இந்த சுகத்தை அப்பெண்ணின் மாமன் தங்களுக்குத் தெரிவித்து வரச்சொன்னானென்று சொன்னவுடனே அம்மாயா புரந்தரதாசர் ஆனால் வாருமென்று அப்பிராமணனுடன் கிஷ்கிந்தாபுரி பட்டணம் சேர்ந்து அம்மார்க்கமாய் போகிறபோது அவ்வீதியிலுள்ளோர் சிலர் சொல்லுகிறார் இவ்வளவு யேழையாய் இருப்பவர் ஏன்வந்தார் இவர் சம்மந்தி வீட்டையடைந்தால் இவரை லஹியம் பண்ணுவானா படாடோபமிருந்தாலல்லோ இவகேவாரும் என்றழைமேனுட்காருமென்பார்கள் கட்ட வஸ்திரத்துக்கே தரித்திரமாயிருக்கும் இவரைக்கண்டால் சம்பந்தி அலக்ஷியஞ் செய்வானே அன்னியிலும் அப்பெண்ணுக்கு சீருஞ் சிறப்புஞ்செய்யவேண்டுமே இவரென்ன செய்யப்போகிறாரென்றும, இவர் இவ்விடம் வாராமலிருந்தால் மிகு நன்மையாயிருக்கும் அப்படி செய்யாமல் இவர் வந்தவிஷயத்தில் சம்பந்திகளும் சம்பந்தியைச் சார்ந்தவர்களும் அப்பெண்ணை இடித்து இடித்து வைவார்களேயென்று சில உத்தமர்கள் பேசிக்கொண்டார்கள் வேறு சிலர் இவன் முன்போல இரத்தினவியாபாரஞ் செய்து வருவானேயாகில் லக்ஷாதிகாரியாய் எல்லோரும் தன்னைகண்டு அச்சப்படும்படியாய் இருக்குமே அதைவிட்டு சோம்பலடைந்து வீதிவீதி திரிந்து நாராயணா கோவிந்தாவென்று பிக்ஷையெடுத்து தேகம் வளர்க்கும் இவனுக்கு தரித்திரம் குடிகொண்டிருக்குமன்றி ஒருக்காசும் செல்வமனுகாது மேலும் முன் சம்பாதித்த திரவியத்தை பத்திரமாய்க் காப்பாற்றி வைத்திருந்தால் இவனும் இவனை நத்தினபேர்களும் சுகமாய்ஜீவனஞ் செய்யலாமே அப்படி செய்யாமல் இப்பாவி கெர்வத்தினாலே யாவற்றையுந் தொலைத்திட்டு இக்கோலமானானே என்றும் பின்னுஞ் சிலர் இவன்தேகமெல்லாம் திருமண் ஸ்ரீசூர்ணங்களைப் பார்த்தீர்களோ எதுக்கு முதவா தாமரைக் கொட்டை துளசிக்கட்டையாற் செய்த தாவடங்களை பதினாயிரம் விலைபெரும் நவரத்தினமாலைகளைப்போல பாவித்து வெகுபத்திரமாய் மிடத்திற் றரித்திருப்பதோடு ஓட்டைத்தம்பூராவும், அழுதுபடி வாங்கிக்கொட்டும் பொத்தம்பையையும் பார்த்தீர்களா என்று சில துஷ்டர்கள் கெக்கலிகொட்டி நகைத்து ஏளனம் செய்தார்கள். இதுகளையெல்லாம் லக்ஷ்மி வல்லபராகிய மாயாபுரந்தரதாசர் கேட்டுக் கொண்டே சம்பந்தி வீடு சேர்ந்தார்.

௫-வது, பகவான்புரந்தரதாசர்குமாரத்திக்கு சீதனம்நடத்திய அத்தியாயம்.

இவரைக்கண்ட சம்மந்திகள் வாருமென்று அழைக்காமலும் ஒரு வார்த்தையும் பேசாமலும் சுபத்துக்கு வந்திருக்கும் பந்துக்களுக்கு புரந்தரதாசரைக் காட்டி ஒருகாசுக்கும் வழியற்ற சவுகாராகிய சம்மந்தியைப் பார்த்தீர்களோ என இழிவாகப்பேசி ஏன் வந்தானிங்கு சீச்சீயென்று மிகவுபேசி தங்கள்மனதுரோசி அலக்ஷியஞ் செய்தார்கள்: இவர்களன்னியில் பெண்டுகளும் கேலியாய்ப் பேசினார்கள். இதுகளையெல்லாங் கேட்ட மாயாபுரந்தரர் உள்ளே நுழைந்து தன்பெண்ணைக்கண்டு க்ஷேமங்களை விசாரித்து நான் போய்வருகிறேன் அம்மாயென்று சொல்ல ருக்குமணி கலங்கிக் கண்ணீருதிர்த்து அண்ணா தாங்கள் சிம்மதியாய் ஊரிலே தானே இருக்கப் போகாதா? இவ்விடம் ஏன்வந்தீர் எனக்கிடர் தந்தீர். ஐயோ பலரும் நம்மைப்பார்த்துப் பழிக்கலாச்சே நான் பிழைத்த பிழைப்பெல்லாம் போச்சே அகிலருக்கும் இது எச்சே மாமியும் மாமனும் புண்ணிற் கோலிட்டாற்போல இடித்து இடித்து பல இழிவான சொற்களைப் படித்துப்பேச என்னை இங்குகட்டி கொடுத்துவிட்டு நீங்கள் தேசாந்திரியாய்ப் போனீரே, நானென்ன செய்வேன் என்று பற்பல வார்த்தைகளைச்சொல்லி யழும் பெண்ணை நோக்கி மாயாபுரந்தர தாசர் சொல்லுகிறார். ஓ அம்மா ருக்குமணி நீயொன்றுக்கும் சலிக்கவேண்டாம் நாளையதினத்தில் நடககும் இச்சுபகாரியப் பிரலாபத்தை நீகண்டுஆச்சரியப்படப் போகிறாயென்று திடஞ்சொல்லி அவ்விடம் விட்டு வெளிப்பட்டு ரேழியில்வந்து யிருந்தார். அங்கொரு துஷ்டன்வந்து இவரைப் பார்த்து தாஷித்தான் மாயாபுரந்தரதாசர் அடஅப்பா அமேத்தியம் சாப்பிடுகிறவன் வீட்டிற்கு ஒருவன் விருந்துவந்தான்

...நூலகம் ... A. N.

Koviloor Digital Library

அவனை வீட்டுக்காரன் தான சாப்பிடுகிற அமேத்தியத்தைச் சாப்பிடும்படி பொழுதுபோகிற பரியந்தம் அடித்தாப்போல நான்வந்து வெகுநேரமாச்சுது அதுமுதல் ஆளுக்கொருவார்த்தை பேசுகிறீர் வாயில் வந்தபடி யேசுகிறீர், உங்கள் கண்ணுக்கு இவ்வளவு அலக்ஷிமாய் விட்டதா உங்கள் மதிகெட்டதா சனி தொட்டதா ஞானம் அஞ்ஞானத்துட்பட்டதா இந்த சுபத்திற்கு வேண்டிய சாமக்கிரியை ஆடையாபரணங்கள் முதலானதுகளை ஓர்பட்டியில் எழுதித்தாடா இதோ ஒருகொடியில் யாவற்றையும் கொண்டுவந்து சகலரும் பார்த்து களிக்கும்படி இக்காரியத்தைநிறைவேற்றிப் போகிறேனென்று ரோஷத்துடன் கண்கள் சிவப்பேற மீசை படபடவென்று துடிக்கச்சொல்லிய வார்த்தைகளைக்கேட்ட அத்துஷ்டன் ஒரு ஓலையில் பெண்ணுக்குத் தலைசாமான் உள்பட பெண்களுக்குள்ள எல்லா ஆபரணங்களும் பிள்ளைக்கு உத்திரஜந்தியம் உள்பட ஆண்பிள்ளைகளணியும் ஆபரணங்களும், சேலை ரவிக்கை அரிசி பருப்பு மிளகாய் புளி மிளகு சீரகம் வெந்தயம் கடுகு நெய் எண்ணை நல்லெண்ணை இலை எரிகரும்பு பழம் தேங்காய் மஞ்சள் வெற்றிலை பாக்கு புஷ்பம் முதலான இன்னும்பல தினுசுகளும் எழுதி கடைசியில் பெருத்த பாராங்கல்ஒன்று வேண்டுமென்று எழுதிக்கொடுத்தான் அதைப் பெற்றுக்கொண்ட மாயா புரந்தரர் வேகமாய் நடந்து எட்டுவண்டியில் யாவத்து சாமான்களையும் நிரப்பி ஒருவண்டியில் பெருத்த ஒரு பாராங்கல்லை ஏற்றிக் கொண்டு அன்று மாலைவந்து சேர்ந்து பட்டி யெழுதிய துஷ்டனைவரவழைத்து பட்டியை அவன்கரத்திற் கொடுத்து நீஎழுதிய பட்டிப்படி யாவத்தும் இருக்கிறதா பார்த்துக்கொள்ளும் என்றார் துஷ்டன் பட்டியிற் கண்டபடி யாவத்தும் கல்லும் ஒரு வண்டியில் இருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு இக்கல்லை வண்டியிலிருந்து இறக்குவதற்குத் தகுந்த ஜனங்கள்வேண்டுமே நாம் குரும்புக்கெழுத இரும்பாய் வந்ததே என்று யாவற்றையும் வண்டியிலிருந்து இறக்கிவைத்துப் பாராங்கல்லை எப்படி இறக்குவது என்று யோசித்துக் கொண்டிருக்கும் துஷ்டன் உள்ளத்தை அறிந்து மாயாபுரந்தரதாசர் அக்கல்லை வண்டியோடுகொண்டுபோய் வாசற்படியில் உருட்டி போகவரவழியில்லாமல் அடைத்துவிட்டார்.

அது தெரிந்த அத்துஷ்டன் சொல்லுகிறான் ஓ சுவாமி! தங்கள் மேன்மையை உணராமல் அஞ்ஞானத்தால்செய்த குற்றத்தை மன்னித்து ரக்ஷிக்கவேண்டுமென்று இவருடைய பாதங்களில் விழுந்து அழுது தொழுதான் மாயாபுரந்தாருக்குக் கருணைபிறந்து அக்கல்லைப பிழக்கடைக்குப் போகும்படி நினைக்கத்தக்ஷணம் அக்கல் பிழக்கடையில் இருக்கக்கண்டுசகலரும் ஆச்சரியப்பட்டு இவர் மகானுபாவரென்று எல்லோரும் வந்தனஞ் செய்துச் சென்றார்கள். இந்த விந்தை சம்மதிக்குத் தெரிந்து ஓடோடியும் வந்து பலவிதங்களாகப் பிரார்த்தித்து அழைத்துக் கொண்டுபோய் பீடத்தின்பேரில் இருக்கச்செய்து நாங்கள் செய்த அபசாரங்களை மன்னித்து உபசாரமாக பாவித்து ரக்ஷிக்கக் கடவீரென்று சகலரும் பாதங்களில் விழுந்து எழுந்து பலவிதமாய்த் தொழுதார்கள். மாயாபுரந்தரதாசர் யாவர்க்கும ஆசிகூறி! இருக்கச்செய்து இனிதாமசமாகாமல் காரியத்தை நிறைவேற்று மென்று ஆக்யாபித்தார். உடனே சம்மந்திவந்த் சாமான்களைக் கொண்டு தளிகைசெய்து யாவத்திராளுக்கும் பரிமாரி திருப்திசெய்வித்து தானும் புசித்து அன்றிரவைப் போக்கி மறுநாளுதையத்தில் எழுந்து யாவற்றும் தயார்செய்து பெண்ணுக்கு ஸ்நானஞ் செய்வித்து ஆடை யாபரணங்களால் அலங்கரித்து மணவறையில் உட்காரவைத்து சகல மேளவாத்தியங்களும் முழங்க சடங்குகள் யாவற்றையும் நடத்திபிருமணருக்கெல்லாம் அன்னம் பரிமாரி திருப்தி செய்வித்து புஷ்பம் தாம்பூலம் சந்தனத்துடன் ஒருஜதை வேஷ்டி ஒருரூபாய் தக்ஷணையுடன் கொடுத்தனுப்பி பிறகு ஸ்திரீகளுக்குச் சேலையொன்றும், ரவிக்கையொன்றும் கால்ரூபாய் தக்ஷணையும் இத்தன்மையாய் வந்தபிராமணருக்கும், பிராமண ஸ்திரிகளுக்குங் கொடுத்தனுப்பி விட்டு மாயாபுரந்தரதாசர் தன் குமாரத்தி சம்பந்தி முதலானோரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு மாயமாய் மறைந்துபோனார். கேட்டீர்களோ சித்தர்களே என்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

நந்தநந்தனன் மாறுவேடம் தரித்துப் புரந்தரதாசரைப்போல நடித்து விந்தையாக வந்து சுபத்தை நிறைவேற்றிப் போனபின் யாவரும் களித்து ஆச்சரியம் ஆச்சரியமெனப் புகன்று எங்கு மிப்படி கண்டதில்லையென்று நவின்று தங்கள் தங்களிடஞ் சேர்ந்தார்கள். ருக்குமணிபாயின் மாமன் மாமி கொழுநன் முதலானோர் அன்பு பிரியமாய் பாதுகாத்து வந்தார்கள். இப்படியிருக்க அன்று அவ்வூரிலிருக்கும் பிராமணன் யாதோ காரியார்த்தமாய் அடுத்த் கிராமத்திற்குச் சென்று அக்காரியத்தை முடித்துக்கொண்டு மாலையில் ஊர்வந்து சேர்ந்து யாவரும் புதுவேஷ்டி தரித்துக் கொண்டிருப்பதைக்

கண்டு இன்று ஊரிலென்ன விசேஷமென்று விசாரித்தான் புரந்தரதாசர் குமாரத்தி ரஜஸ்வலையானுளே அம்மாளை இன்று வீட்டிற் கழைத்துக் கொண்டார்கள். அதற்காக புரந்தரதாசர் ஒருவர் பாக்கியின்றி புருஷாளுக்கு ஒருஜதை வேஷ்டியும் ஒருரூபாய் தக்ஷிணையும் ஸ்திரீகளுக்கு புடவையொன்றும ரவிக்கையொன்றும் கால்ரூபாய் தக்ஷிணையும் கொடுத்தார். நீரெங்குபோயிருந்தீரென்ருன அதைக்கேட்ட பிராமணன நானொரு காரியமாய் அடுத்த கிராமத்திற்கு போயிருந்து இப்போது தான் வந்தேன் தரித்திரனுக்கு எதுவும் லபிக்கமாட்டாது ஏனென்ருல் இத்தனை நாளும் வீடுவிட்டு அசையாதிருந்த நான் இனறுபோனபடியால் நிச்சயமாய் தரித்திரனென்றே சொல்லத்தகும் ஆகிலும் நாளையதினம் புரந்தரதாசரிடத்திற்குப் போய் பெற்றுக் கொள்ளுகிறேனென்று சொல்லி அன்றிரவுபோக்கி மறுநாள் காலையி லெழுந்து ஸ்நானுனுஷ்டானங்களை முடித்து பிரசாதம் ஸ்வீகரித்து கிஷ்கிந்தாபுரி பட்டணத்தைவிடுத்து வேமனபுரியையடுதது கடைவீதியில் பஜனை செய்துக்கொண்டிருக்கும் புரந்தரதாசரை தடுத்து ஓமகானுபாவரே நேற்றியதினம் கிஷ்கிந்தாபுரியில் உமது புத்திரியை வீட்டிற்சேர்க்கும் நிமித்தியம் வந்திருந்து சடங்குகளை நடத்தி பிராமணருக்கெல்லாம் வேஷ்டியும்ஒருரூபாய் தக்ஷிணையும் ஸ்திரீகளுக்கெல்லாம் ஓர் புடவையும் கால்ரூபாய் தக்ஷிணையும் அளித்த பிரபுவே அடியேன் அச்சமயம் அடுத்த கிராமத்திற்குப் போயிருந்து சாயந்திரம் வந்து விசாரிக்க, ஒருவராகிலும் பாக்கியன்றி தாங்கள் கொடுத்ததைப் போல எவருங் கொடுக்கவில்லையென்று மிகவும் கொண்டாடுகிருர்கள் ஆகையால் இவ்வேழைமீதில் தயவுசெய்து வேஷ்டியும் தக்ஷிணையுங் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திததான். அப்போது புரந்தார் ஆச்சரியப்பட்டு பிராமணரை அழைத்துக் கொண்டுபோய் தன்னுடைய வீட்டுக்குட்சென்று மனைவியை அழைத்துஇது செய்தியைச் சொல்லி பெண்ணே முன்னாள் பிராமணர் வந்து நமதுகுழந்தை ருதுவானதாக சொன்னுரென்று சொன்னுயே அபபோது ஏதாகிலும் விசேஷம் நடந்ததுண்டோவென்று கேட்க அவ்வுத்தமி ஓ ஸ்வாமி பிராமணர்வந்து குழந்தை ருதுவானசங்கதியைச் சொல்லி, தேவரீர் எங்கேயென்று விசாரித்த சந்தர்ப்பத்தில் ஊசியின் முனை விரலிற்பட்ட உபத்திரவத்தாலும் பெண்ணுக்கு சீர் சிறப்பு செய்வதற்கு ஓர்காசளவும் இல்லாமற்போச்சுதே என்ற கோபத்தினுலும்தாஙகள் ஆச்சுதனுக்கு அழப்போனீரென்று அந்தப் பிராமணனிடத்தில் சொன்னேன் இதுதான் நடந்த விருத்தாந்தம் என்ருர், இதைக்கேட்ட புரந்தரதாசர் அடிக்கோதையே அறிவில்லாப் பேதையே இகவாசை நீத்தவர்களே புனிதர்கள்மற்றவர்கள் ஈனபனிதர்கள், என்று ஆரணம் முறையிடுவதை அறிந்திருந்தும் இகவாசையான மகவாசையைக் கோறினை பகவானைத் தூரினை வேதவாக்கியத்துக்கு மீறினை மலையைக்கெலலி எலியைப் பிடிப்பதுபோல நெடுநாளாய் என்னுடன்கூடி கடவுளைத் தியானஞ் செய்தும் இசுவென்னைங்களைக் கொய்யாது சாமானிய இச்சைக்குட்பட்டாய் நீகெட்டாய் எண்ணறக்கற்று எழுத்தரவாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தியே, என்கிறபழமொழியை உன்னிடத்திற் பிரத்தியக்ஷமாய்க் கண்டேன என்றுசொல்லி ஓபகவானே அடியேனைப்போல் ரூபந்தரித்தீரோ எங்களுக்கிருந்த தரித்திரத்தைக் கெடுத்தீரோ அளவற்றஇன்பைக்கொடுத்தீரோ பகவான் என்கிறபெருமையைவிடுத்தீரோ, இவ்வளவு கஷ்டமெடுத்துக் கொள்ளலாமோவென்று நயந்து பயந்து வியந்து, அறியாமற் செய்த அபசாரத்தை மன்னித்து ரட்சியும் பக்தவச்சலா பரம தயாளாவென்று தொழுதுக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்க அவ்வூரில் சிலர் மடமொன்று கட்டி அதில்பகவானை ஸ்மரித்து பஜனைசெய்து வந்தார்கள் புரந்தரதாசரும் சிலரை அனுகூலஞ் செய்து கொண்டு மடமொன்று கட்டி அதில் எம்பெருமானை பிரதிஷ்டைசெய்த சங்கீத பஜனை செய்துக்கொண்டு வந்தார். சிலநாள் சென்றபின் இவ்விருதிரத்தவர்களுக்கும் விரோதம் நேரிட்டு வைரம் மேலிட்டதின் பேரில் புரந்தரதாசர் அவர்களை நோக்கி தூஷிக்கத் தலைப்பட்டார் எப்படியெனில், ஓ ஞானமில்லா மானிடரே, உங்களுக்குத் தம்பூரை சுதிசெய்யும் வகைதெரியுமா? நீங்கள் உங்கள் மனம்போனபடி வாயில் வந்த மட்டும் கண்டமட்டும் உளறுவது ஈனம் ஆசானையடுத்து நடப்பது தியானம், இஷ்டதேவதையைப் பூசித்து ஆசானை யாசித்து இரவியைப்போ லென்று பிரகாசித்து இன்பமீவரையே நேசித்து இகவாழ் வற்பமென்றூகித்து குருவே பதியெனப் பூசித்து, கோதிலா நூல்களை யாசித்து, குருமொழிகளை விசுவாசித்து குருசங்கீர்த்தனங் கோஷிநது தபமைத்தாமே தூஷித்து, சாத்வீகராய்ச் சந்தோஷித்து, சாக்ஷிப் பொருளாய் சேவித்து, சர்வசாக்ஷியாய் விசேஷித்துத்துரிய வீட்டிற் பிரவேசித்துச் சும்மா இருக்கவே ஆசித்து இருப்பதே பக்தி, அதிலிருந்தும் விரக்தி பின்பு முக்தியுண்டாகும் மேலும் சர்க்கரை யெனக் சொல்வதால் மதுரந்தோன்றுமா அன்னமென்றுரைப்பதால்

Koviloor Digital Library

மகிழ்க்குமா, பாகீரதி யென்றுரைவதால் பாப நிவாரணமாகுமா, தீபமென்றிசைப்பதா லிருள் நீங்குமா வேதாந்தமென்றிசைப்பதால் சகல சந்தேகங்கள் நிவர்த்தியாகுமா மந்திரனெருருதலால் சித்தியுண்டாகுமா, அமிர்தமெனச் செய்வதால் பிணி நீங்குமா, குருவெனப்பகர்வதால் கிருபையுண்டாகுமா, தெய்வமெனச் செப்புவதால் அன்புண்டாகுமா அதைப்போலவே குருளிவறி வாசாக்ஞானத்தா லானந்த முண்டாகுமா, ஓ தீனர்களே மோக்ஷ இச்சையுள்ளவர்களுக்கு வைராக்கிய முன்ன மிருக்கவேண்டும ஏனெனின் வைராக்கியமில்ல ஞானம் நிஷ்பிரயோசனமாய் முடியும் ஆனல் வைராக்கியங்கள் அநேகவிதமுண்டு அதுயாமதனில் சாஸ்திரங்களை கேட்கும்போது மாத்திரம் அப்படி யிருக்கவேண்டும், இப்படியிருக்க வேண்டும எப்போதும பகவானை தியானிக்க வேண்டுமென்று நினைப்பது புராண வைராக்கியம் பிரேதத்தைக் கொண்டு போகும்போது மாத்திரம் இது என்ன வாழ்வு என்னசுகம் என்னசம்சாரம் எல்லாம் நிஷ்பிரயோசனம் பிரபஞ்சம் இந்திரசாலத்துக்கு இணையானது என்று நினைபபது மயான வைராக்கியமும், பிரசவவேதனை பொருக்கமாட்டாமல் இனிமேல் புருஷர்கள் முகத்தைப் பார்க்கவே கூடாதென்று உருதியாய் நிச்சயம் செய்துக்கொள்ளும் ஸ்திரீகள் சிசு கீழேவிழுந்தவுடன் நாயகன்மேலிச்சை வைத்திருப்பதுபிரசவவைராக்கியம் இப்படிக்கெல்லாம் இராமல் ஆசாரியாருளைப்பெற்று தைலதாரையைப்போல இருக்கவேண்டுமென்று இப்படியவர்கள் பேரிலிருக்கும் குரோதத்தால் இதனு சொல்பவர் போல பேசியாவரும் என்னிடம் வந்தால் உங்களை சங்கீதத்தில் தேர்ச்சி யடைவிக்கிறேனென்று சொல்ல அவர்கள் போம்போம் எங்களுக்குத் தெரிந்தவரையில் கிருஷ்ணராமா வென்று பஜனை செய்துக்கொண்டிருப்போமேயல்லது உம்மிடத்தில்வந்து வலிகண்டவரைப்போல கையும் முகமும், கோண விகாரமாய் வைத்துக்கொண்டு ராகம் இழுக்க எங்களாலாகாது என்று சொல்லிப் போனார்கள் இப்படியே இவருக்கும் அவளுக்கும் போராட்டமாய் இருந்தபடியால புரந்தரருக்குப் பாகவத அபசாரதோஷம் மேலிட்டு நாக்கு உள்ளே வலித்துக்கொண்டு வார்த்தையாடுவதற்குக் கூடாமையால் சைகையினல் அறிவித்தும் அவசியமான காரியமாயிருந்தால் எழுதிக்காட்டியும் பெற்றுக்கொள்வார், இவரிப்படி ஊமையைப்போல் பேசாதிருந்தால் பஜனை படத்துப் பாகவதர்கள் இந்தப் புரந்தரதாசன் சதா நம்மெல்லோரையும் வாயில் வந்தபடி வைத்துக்கொண்டேயிருந்த அக்கிரமத்தைப் பகவானறிந்து, சகிக்காமல அவர் நாக்கு உள்ளே இழுத்துக்கொள்ளும் படி தண்டித்தார். ஏழைகளழுதக் கண்ணீர் கூறியவாளை யொக்கும், எளியாரை வலியோர்வைதால் வலியோரைத் தெய்வம் தண்டிக்குமென்பது போலவும் அரசனன்று கொன்ருல் தெய்வம் நின்றுகொள்ளும் என்பது போலவும், நமக்கு நிதர்சனமாச்சுதென்று சொல்லிக்கொண்டார்கள்.

பின்பு தாசர் வெகுநாள் நாவெழாமல் மிகுந்த சிரமைப் பட்டுக்கொண்டிருக்கிற போது ஓர்நாள் அவர் சொற்பனத்தில் பகவானெழுந்தருளி நானெனுமமதை கொண்டதாசரே, பாகவதர்களை தூஷிக்கும் விசுவாசரே, நாளைய உதயத்தில் ஊரார்பஜனை மடத்துக்குட் சென்று பாகவதர்களை யெல்லாம் வரவழைத்து அவர்கள் திருவடிகளில் விழுந்து சரணுகதியடைவீரேல் உமக்கு நாவெழும் சுகமாய் பஜிக்கலாம். அம்பரீஷச் சக்கிரவர்த்தியிடம் அபசாரப்பட்டு துருவாசர் எவ்வளவோ கஷ்டப்பட்டார் இது புராணங்களில் நீரறிந்திருப்பீர். அஞ்ஞானத்தால் மோசம்போனீர் இனி தெளிவோடிரு மென்றுசொல்லி மறைந்தார். உடனே புரந்தரர்திடுக்கிட்டெழுந் கான் கண்ட கினவைநினைத்து மிகவுஞ்சிந்தித்து பகவானை வந்தித்து பொழுது விடிந்தவுடன் எழுந்து காலக்கடனை முடித்துக்கொண் அகத்தைவிடுத்து பஜனை மடத்தை படுத்த பாகவதர்களனைவரையும் வரவழைத்து அவர்கள் பாதங்களில் விழுந்தவுடனே நாவெந்து சொல்லத் தொடங்கினர் ஓ பரமபாகவத சிகாமணிகளே தனயன் செய்த குற்றத்தை தந்தை க்ஷமிப்பதைப்போலும், பாரியாள் செய்தகுற்றத்தைப்பதிக்ஷமிப்பது போலும், சிஷ்யன் செய்த குற்றத்தை ஆசான் க்ஷமிப்பதைப் போலவும், பக்தன் செய்த குற்றத்தை பகவான் க்ஷமிப்பதைப் போலவும், மனிதர்கள் செய்த குற்றத்தை புனிதர் க்ஷமிப்பதுபோலவும் சிறியேன் செய்த குற்றங்களைப் பெரியோர்களாகிய நீங்கள் க்ஷமித்து அடியேன் ரக்ஷிக்க வேண்டுமென்று பற்பல விதங்களாகக் கொண்டாடும் தாசரைப்பார்த்து அனைவரும் அவர்பாதங்களில் விழுந்து ஓஸ்வாமி! யாதொன்றுந்தெரியா அறியாச் சிறுவர்களைதாங்கள் ஸ்தோத்தரிப்பது தர்ம்மமோ? இது யாங்கள் செய்த கர்மமோ எம்மையும்உம்மையும் ரக்ஷிக்க பகவானிருக்க பாமரர்களாகிய நாங்களா உம்மை ரக்ஷிப்பது? இது நல்லஞாயம், தகுந்தவுபாயம் அனி நமக்குள் விரோதமின்றி இருப்பதேநேயம் இது நித்தியமான காயம் இதற்கரை நொடிக்குள் வரும் அபாயம், முழு

கிப்போகும் பிரமேயம், நமக்குபகலத் தியானமே சகாயம் என்றுசொல்லி அனைவருங்கலந்து பக்தவச்சலனை பாண்டுரங்கனைப் பாடி, தாசரைநோக்கி ஓஸ்வாமி தேவரீர் ஒருகீர்த்தனம் பாடுமென்று தப்பூரைக் கரத்தில்வாங்கிய தாசர் பிரம்மானந்தமாகப்பாடியாடி தன்னைமறந்து விழுந்தெழுந்து, ஆனந்தக்கண்ணீரொழுக மனமுருகியழுது பலவிதங்களாய் தொழுது மங்களம்பாடி சகலரையும்நாடி வந்தனந் தந்து விடைபெற்று தன் அகத்தையுற்று இஷ்டதேவதையையும் பரமாசாரியரையுந் தியானித்துக் கொண்டு உஞ்சவிர்த்தியால் ஜீவனஞ் செய்துகொண்டு வந்தார். கேட்டீர்களோ சித்தர்களே என்று நாபாஜிசித்தர் பின்னுஞ்சொல்லத் துடங்கினர்.

கேளுங்கள் சித்தர்களே பாகவத பக்தர்களேஎங்கும் பிரசித்தர்களே ஜீவன்முக்தர்களே புரந்தரதாசர் இத்தன்மையாய் நாளை போக்கிக்கொண் டிருக்கும் பொழுது ஒருநாள் தன்சிஷ்யனாகிய அப்பண்ணா வென்பவனை அழைத்து, அப்பா சிஷனே நாளையதினம் எனது தகப்பனாருக்கு திதியாகையால், நீபண்டரிக்குச் சென்று நெய் வாங்கிவாவென்று, தவலையும் ஒருரூபாயும் கொடுத்தனுப்பினர். அவனும் மகா பாக்கியமென்று குருவைவணங்கி விடைபெற்றுக்கொண்டு, அந்நகரைவிட்டு புறப்பட்டு பண்டரிசேரப் பொழுது போய்விட்டமையால், காலையில் எழுந்து நெய்வாங்கிக்கொண்டு போகலாமென நினைத்து ஓர்திண்ணையின் மீது படுத்துக்கொண்டு நித்திரைசெய்து வைகறைப் பொழுதில் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு கடைவீதிக்குப்போய் நெய் நயம்பார்த்து விலைதீர்த்து நெய்யை வாங்கித் தவலையை யெடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு தந்நகரை நோக்கி நடந்து வருகிறபோது பகவான் அவ்வழியில் ஓர் தீர்வைசாவடி ஏற்படுத்திக்கொண்டு அதில் தீர்வை வாங்குபவன் போலிருந்து கொண்டார் நெய் வாங்கிக்கொண்டு வருகிற அப்பண்ணாவானவர் அத்தீர்வைச்சாவடியை கடக்கும்போது பகவான் அவனைநோக்கி ஆடா போகிறவன் தலைமேலிருக்கும் தவலையிலென்ன கொண்டுபோகிறாய் என்ன அப்பண்ணா நெய் கொண்டு போகிறேனென்றான் மாயா தீர்வைக்காரன் நெய்க்குத்தீர்வை கட்டிப் போடாவென அப்பண்ணா என்னிடம் ஒருகாசுங்கிடையாதென மாயா தீர்வைக்காரன் காசில்லாவிடில் நெய் பரி முதலாய்விட்டது. நெய்தவலையை வைத்துவிட்டுப் போடாவென அப்பண்ணா தவலையை வைத்துவிட்டு ஆசாரியர் என்னசொல்லுவாரோ வென்ற யேக்கத்துடன் நடந்தான், இவனிப்படி இருக்கவே மனபுரியில் புரந்தரதாசர் பிராமணருக்குச் சிரார்த்தங்கொடுத்து பந்துக்களுக்கெல்லாம் இலைபோட்டு கறியமுது அன்னம் பருப்பு முதலானதும் பரிமாறி நெய்யில்லாமல் தெருவுக்கும் வீட்டுக்கு மாயோடி அப்பண்ணாவை இன்னுங் காணோமேபிராமணருக்கு கிரமதோஷம் வருமே யென்று விசனப்பட்டுக் கொண்டிருந்தாரென்று சொல்லிய நாபாஜிசித்தரை நோக்கி உத்தமசித்தர் முதலானோர் நமஸ்கரித்து சுவாமி! பகவான் அப்பண்ணா கொண்டுவந்த நெய்த்தவலையை என் பறித்துக்கொண்டார் யென்று வினவ நாபாஜி சித்தர் ஓசித்தர்களே! நன்குவினவினீர் சொல்லுகிறோம் கேண்மோ பரமகருணாநிதியாகிய பகவான் முன்னமே தீர்வைச்சாவடி யேற்படுத்தியிருந்தது எதுக்கென்றால் அப்பண்ணா நெய்த்தவலையை யெடுத்துக்கொண்டு வேமனபுரி சேருவதற்கு அஸ்தமிக்கும் நெய்யும் அவசரத்திற்கு உதவாமற்போகும் அதினால் நம்முடைய பக்தனுக்கு அபசாரம்நேரிடுமாகையால் பக்தனுக்கு அபசாரம் நேரிடாமல் காக்கவேண்டுமென்று தீர்வைச்சாவடி ஏற்படுத்தி நெய்யை பரிமுதலாக்கி அப்பண்ணா ரூபத்துடன் நெய்த்தவலையை தலைமீதில் எடுத்துக்கொண்டு வேகமாய்சென்று எதிபார்த்துக் கொண்டிருக்கும் புரந்தரதாசரிடங் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட தாசர் தவலையிலிருக்கும் நெய்யைப் பந்திக்கு எவ்வளவு மொண்டுவிட்டாலும், தவலையில் நெய் குறைவின்றி யிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அத்தவலையிலிருக்கும் நெய்யை உற்றுநோக்க அதில் பகவான் சேவை கொடுத்தார் அவரைக்கண்டதாசர் சேவித்து அநேகவிதமாய் தோத்திரஞ்செய்து தன்னை மறந்திருக்க பகவான் உடனே மாயமாய் மறைந்தார்.

உடனே தாசர் தெளிந்தெழுந்து பிராமணர்களுக்கு சந்தன தாம்பூலந்தந்து அவர்களை வழிவிட்டுவிட்டு வந்து அங்கிருப்பவன் அப்பண்ணா வென்றே நினைத்து அடா அப்பண்ணா! சலஸ்பர்சத்துக்குப்போகிறேன சொம்பில் ஜலங்கொண்டு வாவென்று சொல்லிப்போனார். மாயா அப்பண்ணா ஆலஸ்யமாய் ஜலங்கொண்டுபோக தாசர் அடே அப்பண்ணா! சீக்கிரம் ஜலங்கொண்டு வரச்சொன்னால் இத்தனை தாமசமேனென்று தலையில் ஓர் குட்டுகுட்டினார். அக்குட்டை பெற்றுக்கொண்டே மனதிலெண்ணினார். அதென்னவெனின் இந்தகுட்டுக்கு பதில் அடிக்க யோசனை பண்ணி ஓ ஸ்வாமி தங்களிடத்தி லித்தனை நாளாய் சிஷ்யனாய் இருந்ததற்குப் பலன் குட்டொன்றேபோதும் விடைகொடுத்தாலபோய் வருகிறேனென தாசர்

என்னடா என்றும் மறுமொழிசொல்லாத நீ இன்று எதிரிட்டுப் பேசும்படி நேரிட்டது இதென்னகாரணமென்று யோசித்துக்கொண்டிருக்க மாயா அப்பண்ணன்போய் வருகின்றேன் தயவு இருக்கட்டுமென்று சொல்லி மாயமாய் மறைந்துபோனார். இதைக்கண்ட தாசர் மிகவுந்திடுக்கிட்டு நாம் இவரை அப்பண்ணுவென்று பாவித்தல்லவோ ஜலங் கொண்டுவரும்படி சொன்னோம். அன்னியிலும் ஆலசியமென்னவென்று தலையிலுங்குட்டினோம். இந்த அபசாரத்தை எப்படி போக்குவோம் மாபாவியாய் விட்டோமே யென்று சிந்தித்து தன்னைத்தான் நிந்தித்துக்கொண்டிருக்கும் போது உண்மையான அப்பண்ணு வரக்கண்டுஎன்ன சமாசாரமென்று விசாரிக்க அப்பண்ணு சொல்லுகிறான். ஓஸ்வாமி சற்குருநாதரே யென்றுவணங்கி தன் மார்க்கத்தில் வரும்போது நெய்த்தவலையைத் தீர்வைச்சாவடிக் காரனிடம் வைத்துவந்தேன் என்றுசொல்ல அச்சங்கதியைச் சொல்லக்கேட்ட புரந்தரதாசர் முன்னிலும் எண்மடங்கதிகமாகப் பிரலாபிக்கத் தடங்கினார்.

அதெப்படியெனில் ஓ என்குலதெய்வமே மாயா சம்மந்தத்திற் கட்டுபட்டு மண் பெண் பொன் என்னும் மூவாசையிற்றயங்கி யென்றும் விடாது மயங்கி பாவியாகிய எனக்குச் சீஷனைப்போல் ரூபமெடுத்து நெய்த்தவலையை சிரத்தில் வைத்துச் சுமந்து வந்து பிராமணுதிக் கிரமதோஷம் லபிக்காமல் காத்து ரக்ஷித்த கருணாநிதியே கொடியேனாகிய வடியேன் தேவரீர் சிரத்திற்குட்பட்ட அடியுமபட்டீரோ எழைங்காய் சீஷனுருவெடுத்துப் புறப்பட்டீரோ. கோபங்கொதித்திறைந்தேவே ஒகர்த்தனே! பரிசுத்தனே நான்இயற்றிய குற்றங்களை நற்றவமாகக் கொண்டு காத்தருளும் அன்பர்கள் சகாயா பிரம்மக்ஞானியர்கள்நேயா கபடநாடகனாகிய மாயா நானாவிதஉபாயா வெண்ணையுண்டவாயா சகலருந்தொழுந் தூயா கோபாலரைக் காதக ஆயா நிருபமாகிய ஆகாயா நீலமேகச் சாயா சோசலையீன்ற சேயா பச்சைவண்ணமுள்ள மாயா அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா ஓ பாந்தாயகா என்று அநேகவிதங்களாகத் துதித்துக்கொண்டாடி அவ்வூரிலுள்ள பாமரர்களைத்திருத்தி பகவந்நாமங்களை விரித்து அநேகவிதங்களாக போதித்து அளவற்ற சிஷர்களுடன் பக்தியிற் சிறந்திருந்தார். இப்படியிருக்க பகவான் தாசருடைய பெருமையை வெளிப்படுத்த வேண்டுமென்று தன்னை சிரத்திற் குட்டிய வியாஜ்ஜியத்தைக் கொண்டு தாசரைப் போலுருவந் தரித்து அச்சாவதாரமான பாண்டுரங்கன் கரத்திலிருக்கும் காப்பை யெடுத்துக்கொண்டு அப்பண்டரியில் உத்தமியாகிய கனகவல்லி யென்னுந் தாசி வீட்டுக்கு போக அவ்வுத்தமி வேகமா யெழுந்தோடிவந்து அதிவினயத்துடன் அழைத்துக்கொண்டுபோய் சோடசவுபசாரங்கள் செய்து உசிதமான ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து அநேகவிதமாய் தோத்திரஞ் செய்து ஸ்வாமி தேவரீர் பாதங்கள்பட்ட இக்குடிசைப் பாவனமாய்விட்டது தங்கள் சேவையினால் நானும் தன்னியளாய் விட்டேன் எனனுடைய பாக்கியமேபாக்கியம் எனக்குண்டான சிலாக்கியமே சிலாக்கியமெனப் புகன்ற பிரம்மானந்தமடைந்து ஆலவட்டக் கைங்கரியஞ் செய்துக்கொண்டே சுவாமி இவண் தாங்களெழுந்தருளிய காரணம் யாதோ அதையறிவிக்கக் கோருகிறேனென மாயா புரந்தரதாசர் அடிபெண்ணேஎன் கண்ணே மயிலே குயிலே அன்னமே சொர்னமே காமாக்கினிபால்வாடி உன்னை கூடியணைய இங்கு வந்தேன் இன்னஞ்சாலமோடி இதோ பாண்டுரங்கன் காப்பு எடுத்துக் கொண்டுவந்தேன்இன்றிரவுமோகம் நீங்கு குயங்களை மார்பிறருக்கு எனக்குண்டான பிரமையைப்போக்கு அதரபானந்தந்து சற்றே நோக்கென்று காமவிகாரங் கொண்டவன்போல் மேல்விழ நெருங்குவதைக்கண்ட தாசியாகிய கனகவல்லி! ஐயா தாசரே! சகலமுந்தெரிந்த புண்ணியவானென்றுஎண்ணி உமக்குப் பலவாய் உச்சரித்து பயபக்தியாய்வணங்கினேன் அன்றிப் பேரின்பத்தை யடைந்தநீர் அற்பமாகிய சிற்றின்பத்தைக் கருதலாமா கருதி நாசமடையப்போமா மேலும் எங்களுடைய வீட்டிற்குகுடியன் வெறியன் தர்மஞ்செய்யா லோபி மிகவும் பாபிகளாகிய துஷ்டர்கள் வருவார் அவர்களுக் குண்டான திரவியங்களை யெல்லாம் பறித்துக்கொண்டு ஒட்டாண்டியாக அவமானஞ் செய்வது எங்களுக் கியற்கையானதொழில் இப்படிக்கிருக்க காமக்குரோதலோபமோகமத மாச்சரியமென்னும் மரிஷ்டவர்க்கங்களும் மண் பெண் பொன்னென்னும் ஈஷணத்திரியங்களையும் விடுத்து மாடு கன்று வீடு பிள்ளை பெண்டு சுற்றம் சகோதரர்கள் முதலான சர்வசங்கப் பரித்யாகஞ் செய்து சதாபகவந் நாமத்தியானஞ் செய்யும் சாதுக்களை சேரவேமாட்டோம் அன்னியிலும் பகவானுடைய அஸ்தத்திற்றரிக்குங் காப்பு எமக்குவேண்டாம் முன் நான் என்னென்ன பாவஞ்செய்தோ இத்தாசி குலத்திற் பிறந்தேன் சுவாமியினுடையகாப்புக்கு ஆசித்து மறுபடியுஞ் சென்மமெடுக்க வேண்டுமா மரியாதையாய்ப் போய்வாரும் சுவாமி என்றனள் மாயா ரகிதனான பகவான் தன்னுடைய மாயையால் அவளை மயக்கி பிரமிக்கச்செய்து தங்காப்பை அங்கு வைத்து

Koviloor Digital Library

மாயமாய் மறைந்துபோனர் இவ்விதனை யரிந்த அத்
தாசி தங்கக்காப்பைப் பத்திரப்படுத்தி வைத்திருந்
தாள் பிறகு அர்ச்சகர் காலையில்வந்து விடோபாஅஸ்
தத்தில் ஒதனை தங்ககாப்பைக் காணுமையால் வேக
மாய்ச்சென்று ராஜனுக் கறிவிக்க ராஜன் மந்திரியோ
டு ஆலோசித்து தஙகக் காப்பைக்கொண்டுவந்துகொ
ப்பவர்க்கு தண்டனை இலலை என்று நகரெங்குந் தண்
டோரா போடும்படி நியமித்தான்.

தண்டோரா மூலமாய் கேழ்விப்பட்ட கனகவ
ல்லி என்றுந் தாசியானவள் தங்கக் காப்பை எடுத்து
க்கொண்டுபோய் அரசன் சபைமுன் வைத்தாள் மந்
திரி அத்தாசியை நோக்கி உனக்கிந்த தங்கக் காப்பு
எவ்வண்ணங் கிடைத்ததென அத்தாசி ஒஸ்வாமி அடி
யாள்பேரில் மோகங்கொண்டு சாதுவாகிய புரந்தரர்
கொண்டுவந்து கொடுத்தாரென உடனே மந்திரிதலை
யாரிகளை யழைத்துப் புரந்தரதாசர் எங்கிருந்தாலும்
பிடித்துக் கட்டிக்கொண்டு வாருங்களென அததலை
யாரிகள் துரிதமாய் நடந்து புரந்தரதாசர் வீட்டை
யடுத்து ஓ புரந்தரதாசரே யெனக்கூவி பகவான்ஆபர
ணத்தைத் திருடினபாவி உன்னை விடுவதில்லையெனத்
தாவி பின்கட்டுமாய்க் கட்டி இப்போதே போக்கு
ரோ முனதாவி எனப்பலவித இம்சைகளோ டழைத்
துக் கொணடு அரசன் சபைக்குமேவி இதோ தாங்
கள் சொல்லியபடி புரந்தரதாசரை கட்டிக்கொண்டு
வந்தோமென தலையாரிகள் மொழியைக்கேட்ட மந்
திரி புரந்தர தாசரைக்கண்டு மிகவுங்கோபங்கொண்டு
அடாமூடா சாமித்துரோகி தாசிகள்போகியேமொரு
ஹரிதாசனைப்போல பனிரெண்டு திருமண் ஸ்ரீசூரண
ங்களும் வனமாலை வானமாலையும் தரித்து உண்மை
யான பக்தனைப்போல வேடம்பூண்டு பகவான் கரத்
திலிருந்ததை சோரத்வஞ் செய்துக்கொண்டு வந்ததி
ஞல் நீஹரிதாசனல்ல பிவனெவனை ஒத்தவனென்றுல்
காட்டில் வேடன் வலைகட்டி தன்னுடைய உருவத்
தை புதற்களில் மறைத்து அம்புகளையெய்து பறவை
களை யகாலும் அக்கிராதவனை விடக் கொடியவனு
னுப் ஆதினும் ஆலயத்தின் கபாட பங்கனம். செய்தி
ருக்தே எப்படி உள்புகுந்து தங்கக்காப்பைக் கவர்ந்
து வந்தாயென ஹரிதாசர் நானேது மறியேனென,
மந்திரி மிகவுமுனிந்து தாசியை நோக்கி இவன் யா
தொன்று மறியய னென்கிறுன். உண்மையைச்சொல்
லென்று மிரட்டிக்கேழ்க்க பிரமாணமாய் இவரே நே
ற்றிராத்திரி தங்கக் காப்பைக் கொண்டுவந்து கொடு
த்து இருந்துபோனுரென மந்திரி தலையாரிகளையழை
த்து இவனைக் கொண்டுபோய் மரத்திற் கட்டி புளிய
மிலார்க்கொண்டு அடியுங்களென ஆக்கினை விதித்
தான்.

கேட்டீர்களோ சித்தர்களே, இது எப்படி யிரு
க்கிறதெனில், ஓர்கிராமத்தில் ஒருவண்ணுனிருந்தான்
அவனுக்கொரு கழுதையுண்டு அக்கழுதை யானது
அழ்வூர் கிராமத்தில மேல்ந்துகொண்டுவந்து ஓர்கோ
முட்டி வீட்டின் வேலிக்கிட்புகுந்து அவன் பயிரிட்டி
ருந்த கிரைத்தண்டை யெல்லாம் மேய்ந்து விட்டது.
இதைக்கண்ட கோமுட்டி வயிறெரிந்து ஓர்தடிகொ
ண்டு அக்கழுதையின் காலைமுறித்து விட்டான் அதை
நொண்டிநொண்டி வீட்டையடைந்தது அதை வண்
ணுன் பார்த்து வயிறெறிந்து இக்கழுதையை இவ்வே
லை செய்தவன் யாரென்று அக்கம் பக்கத்தில் விசாரி
த்து கோமுட்டி யென்றிருந்த சமயம் பார்த்துக்கொ
ண்டிருந்து கோமுட்டி இல்லாவேளையில் அவன் வீட்
டிற்குள் புகுந்து அம்மா செட்டியாரில்லையா வென்
றுன் பூரண கர்ப்பமாயிருக்குங்கோமுட்டியின்மனைவி
வெளியில்வந்து செட்டியாரில்லை வெளியிற்போயிருக்
கிறுரென, வண்ணுன் அவளைப் பிடித்து, அவள்வயிற்
றில் உதைத்தான் அவள் கெர்ப்பத்திலிருந்த பிண்
டம் நைந்து உதிரமாய்விட்டது. அதைக்கண்ட வண்
ணுன் திருப்தியடைந்து தன் வீடுசேர்ந்தான் கோமு
ட்டி, வந்துபார்த்து வண்ணுன்செய்த அக்கிரமங்களை
பார்த்து மனந்தாளாமல் நியாயாதிபதியிடம் போய்
பிரியாதுசெய்தான் உடனே நியாயாதிபதி கோமு
ட்டிசொன்னவை யாவுங்கேட்டு வண்ணுனை அழைத்
துவரும்படி உத்தரவுசெய்தார் உடனே சேவகர்கள்
வண்ணுனைப் பிடித்துக் கொண்டுபோய் நியாயாதிப
தியிடம் விடுத்தார்கள் உடனே நியாயாதிபதி வண்
ணுனை யழைத்து விசாரணை செய்தார் வண்ணுன்நியா
யாதிபதியைப் பார்த்து சுவாமி எனக்கிருப்பதுஒரே
கழுதை அதின்காலை முறித்துவிட்டான் அந்தகோப
த்தால் இந்த கோமுட்டியின் பத்தினி கர்ப்பத்தின்
மேல் உதைத்தேனென்றுன். கோமுட்டியை அழை
த்து நீ என்ன சொல்லுகிறுயென்னஓதருமப்பிரபுவே
நான் பயிரிட்டிருந்த கீரைத்தண்டை யெல்லாம் தின்
று வேலியையும் நாருங்கச் செய்ததால் அக்கழுதை
யின் காலை முறித்தேனென்றுன் இவர்களுடையவாய்
மொழியைக்கேட்டு அம்மூல நியாயாதிபதி கோமுட்
டியை யழைத்து வண்ணுன் கழுதையின் கால் சொஸ்
தப் படுகிறவரைக்கும் மூட்டைகளைச் சுமந்துக்கொ
ண்டு அவனிடமிருமென்றும், வண்ணுனை யழைத்து
கோமுட்டியி மனைவி முன்போலப் பூரணகர்ப்பமா
கும்புரியந்தம் அவளுடன்கூடி யிருவென்றும் தீர்ப்பு

Koviloor Digital Library

கொடுத்தான் அத்திரப்பை போலிருக்கிறதென்று சொல்லி மேல்நடந்ததைச் சொல்லத் தொடங்கினர்

மந்திரியின் ஆக்ஞையைப்பெற்றத் தலையாரிகள் அவரை அழைத்துக்கொண்டு போகிறபோது ஓ என் குலதெய்வமே யாதொன்றுமறியா ஏழைமேல் எந்த நிந்தை இதை யோசித்துப்பார்க்க, வெகு விந்தையென சிந்தைநாணுது உம்முடையசொத்து இதை என்ன செய்தாலும் மானமோ, அவமானமோ, அது உம்மைச் சார்ந்ததன்றோவென்று நடந்துதலையாரிகளால் மரத்திற்பிணைக்கப்பட்டு பக்திமேலிட்டு ஹரியேயென்று கும்பிட்டிருக்க, தலையாரிகள் புளியன மலார்களைக் கையிலெடுத்து அடிக்கப்போகிற சமயத்தில் அகிலபுவன கர்த்தாவாகிய பகவான் அசரீரியாய் அடா தலையாரிகளே யென்தாசனை அடிக்காதீர்கள் உங்களரசனையும் அமைச்சனையு மழைத்து வாருங்களென, இதென்ன விந்தையென்று தலையாரிகள் ஓடோடியுஞ் சென்று அரசனுக்கும் அமைச்சனுக்குந் தெண்டனிட்டு நடந்ததை பகர அவ்விருவரும் ஆச்சரியப் பட்டு வேகமாய் ஓடிவந்து தலையாரிகளைநோக்கி இங்கு ஒருவரையும் காணேமே விந்தையான வார்த்தைகள்சொன்னீர்களேயென ஆகாயத்தில் அசரீரியாகியபகவான் அரசனையும் மந்திரியையுமழைத்து, சபாஷ்! சபாஷ்! உங்களுடைய நீதி மிகவும் நன்றாயிருக்கிறது அக்காப்பு எங்கேயிருந்தது அவ்வாலயத்தின் கபாடந்திறந்தாயிருந்தது அம்மஹானுபாவர்எப்படி திருடிக்கொண்டுபோய் அத்தாசிக்குக் கொடுத்தார் இதனையே யோசிக்காமல் உத்தமராகிய இவர்பேரில் குற்றஞ்சுமத்தி அடிக்கவா உத்தரவுகொடுத்தீர்கள்முன் அவரைக்கட்டியகட்டுகளை அவிழ்த்துவிடுங்கள். நடந்த உண்மை என்னவென்றால், ஓர்சமயத்தில் இவருக்கு நான் ஜலங்கொடுத்தேன் அதற்கு சந்தோஷிக்காமல்சீற்றங்கொண்டுஎன்ன இவ்வளவு ஜாலமென்று என்சிரத்திற் குட்டினர் மிகவுந் தெரித்ததளிர்த இவர்க்குஇன்னஞ் சாந்தம் தலைஎடுக்க வில்லையே என்று சாந்தமுண்டாகும் பொருட்டும் என்னை குட்டியகுட்டுக்குப் பதில் அடிக்கவேணுமென்றெண்ணி பகவான்கரத்திலிருந்த காப்பைசமுட்கு நானே அத்தாசியினிடம் இப்பக்தனைப்போல ரூபமெடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்தேன் இவர்யாதொன்றும் அறியார் இதுவேஉண்மையேயென நவின்றார் பின்பு அரசனும் அமைச்சனும் அத்தாசர் பாதங்களில்விழுந்து நாங்களறியாமற் செய்த குற்றத்தைமன்னித்து ரக்ஷிக்கவேண்டும் சுவாமியென வேண்ட ஹரிதாசர் ஓஅரசனே அமைச்சனே பகவான் இல்லாமல் உலகமில்லை அவனில்லாமல் உயிருமில்லை அவனன்றி நீங்களுமில்லை அவனல்லால்நானுமில்லை எங்கும் அவன் அசையாவிட்டால் ஓரணுவும் அசையாது. பிரமாணம் இப்படியிருக்க நீரென்னசெய்தீர் உம்மால் எதாகிலுமாகுமா என்னால் எதாகிலுமாகுமா ஒன்றும் ஆகாது அல்லும்பகலும் விடாது பகவந்நாமத்தைத் தியானஞ்செய்து கடைத்தேரும் மார்க்கத்தைத் தேடுங்களென்று போதித்து அவ்விடமிருந்து பக்தியுடன் புறப்பட்டுப் பண்டரியைச் சேர்ந்து அங்கிருக்கும் சிலரைத் திருத்தி தனக்கு சிஷர்களாகச் செய்துவாசமாயிருக்க ஓர் நாள் பாண்டுரங்கநாதன் கெருடவாகனருடனுஞ்சதிபதிகளுக்குசேவைசாதித்து நீங்களிருவரும் பரமபதம் வாருங்களென்று உரைத்து மறைந்தார். பிறகு புரந்தரதாசரும் லட்சுமிபாயும் பகவான் நேமனபடி இனியொருவரால் நிர்மிக்கக்கூடாததாயும், எந்தகாலத்திலும் அழியாததாகியும்நித்தியமாகியுஞ் சத்தியமாகியும் விளங்கும் நான்காம் பதவியாகி பரமபதத்தை அடைந்தார்கள். என்று திருவாய் மலர்ந்தருளி இனியுங்களாசிரமத்திற்கு எழுந்தருளுங்கோளென விடைகொடுத்து, விரிஞ்சாவதாரரான நாபாஜிசித்தர் பிரம்மானந்தத்திற் படித்திருந்தார். இந்தப் புரந்தரதாசர் சரிதையை அன்புடன் கேட்போர்களும், அநுதினமும் பாராயணஞ் செய்வோர்களும், வாசுதேவன் கருணையும், பிரமஞானமும் சாந்தகுணமும்பெற்று என்றும் வாழ்வ.

வாழிவிருத்தம்.

ஈரேழு பதினாலு லோகம் வாழ்க இதினுதிக்குஞ் சகலஜீவ ஜெந்துக்கள் வாழ்க
நீரேறு நன்மனையு மழையும் வாழ்கச் சிறந்த யோகநெறியுள்ளோ ரென்றும் வாழ்க
பாரீதிச் சரிதைதுதி பக்தர் வாழ்கப் பரர்புரந் தரதாசர் கீர்த்தி வாழ்க.
கார்மேனிச் செங்கண்மால் குணங்கள் வாழ்கக் கருதரியக் கஞ்சமலர்த்தேவி வாழ்க.

புரந்தரதாசர் திருவடிகளே சரணம்.

புரந்தரதாசர் சரித்திரம்.

முற்றிற்று.

Noolaham Digital Library

ஸ்ரீ

ஸ்ரீ ர ஸ் து.

ஸ்ரீ பாண்டுரங்கப்பரப்பிரம்மணே நம:



ஒன்பதாவது,

கோராகும்பார் சரித்திரம்.

வீ ஸ பத் தி ய ம்.

அகிலாத்மா கோடுல ஹரியனி பாவிஞ்சி யானந்தமுக தன்னுமாசியாடு
தாஸானுஜுசின தாஸோஹமனிபடி சாஷ்டாங்க தண்டமு பெட்டிவேடு
பாண்டுரங்கா பதிதபாவனுபங் நாம பாராயணமு ஜேஸி பொகடி பாடு
ஸாது ஸஜ்ஜனுல ஸாங்கத்யமே மேலனிசால பிரேமதா கூர்மி ஸல்பி கூடு

சுத்த ஸாதுடு ஸத்தியமுமெலகு வாடு
கோராயனுநாம ஜாதிலோ கும்மரீடு
சரிதமுனுஜெப்பு ஸாஸ்வதீ ஜாகுலேக
பக்ஷமுன ஜிஃக நிவசிஞ்சி பங்கஜ பவுனிராணி.

(இதன்பொருள்.) சகலஜீவகோடிகளையும், சாக்ஷாத் ஸ்ரீ ஹரியென்றே மனதிலெண்ணி பிரம்மானந்தமாய் தன்னை மரந்தாடுபவரும் அடியார்களைக்கண்டால் அடியேன் தாசனென்றுவிழுந்துசாஷ்டாங்கதெண்டனிட்டு வேண்டிக்கொள்ளுபவரும் பாண்டுரங்கா பதிதபவபங்காவென்றுபலவிசைகளோடும்மகிழ்ந்துபுகழ்ந்துபக்தியாய்ப் பாடுபவரும், ஸத்துகாளாகிய ஸாதுஜனங்கள் சங்கமமேவி சேஷமென்றுமிகவும்அன்போடுநேசித்து கூடுபவரும், சுத்தசாந்தகுண முடையவரும்,சத்தியமேதர்மமென்றுவிடாதுநடிப்பவரும்,ஜாதியிற்குயவருமாகியகோராவென்னும்நாமம் பெற்றவருடைய சரிதையைத்தடையின்றிஅடியேனாவிலெழுந்தருளி பிரியத்துடன் சொல்லும் அம்மணி, பிரமதேவன்பட்டமகிஷியாகிய ஸரஸ்வதித்தாயே என்றவாறு.

விருத்தம்.

சீரான தருமமே நித்திய மென்று சீவகாருண்யமதிற் சிறந்தசாது
மாராமல் மண்ணுலகில் மாலைப் போற்றி மாதரிரு வரைமணந்து மாயைபோக்கி
தோராத உளத்தினரைத் தேவதேவன் திருநாமமுறையுங்க ளென உறைத்த
சோரா வென்னுநாமக் கோதிலாக் குணவாள ஏிருபதமே சிரமேற் கொள்வாம்.

Koviloor Digital Library

முதலாவது கோராகும்பா ருற்பத்தி அத்தியாயம்.

ஞானமென்னுந் தீபமேற்றி, அஞ்ஞான மென்னும் இருளைமாற்றி, தீனதயாளனான பகவானைப்போற்றி மோனமார்க்கத்தில் சதா வீற்றிருக்கும் உத்தமர் முதலான சித்தர்கள் காலையிலெழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, புராதன சித்தரான நாபாஜி சித்தரை யடைந்து, அவருடைய தாட்மரைக்கு வந்தனம்புரிந்து ஓஸ்வாமி! தாங்கள் இதுவரையில் சாதிந்த பாகவதர் சரித்திரங்களைக் கேட்ட எங்களுக்கு பிரம்மானந்தமா யிருப்பதால். அடியேங்கள் உய்யும்பொருட்டு இன்னுமோர் தாசரின் சரிதையை திருவாய்மலர்ந்தருளுமென்று வணங்க, நாபாஜி சித்தர் ஓ சித்தர்களே, குயவர் குலத்திலே பிறந்து பகவத்பக்தியிலே சிறந்து மிகப்பிரசித்திபெற்ற கோராகும்பார் என்பவரின் சரிதையை சொல்லுகிறேன் சற்று கவனமாய் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினர்.

ஓ சித்தர்களே! அண்டர்கள்மகிழும் தொண்டர்கள் திகழும் இந்திரன்புகழும் சந்திரன்தவழும் சுந்திரமான சந்திரபாகா நதிக்கருகான பண்டரி புரத்திற்கிடையில் தொடோகியென்னும் கிராமத்தில் பண்டரம் நெற்றியிற்றரிப்பவரும் உத்தமகுணத்திற் சிறந்தவரும் சத்தியதருமம்நிறைந்தவரும், தப்புகளெல்லாந் துறந்தவரும் இப்புவியாசை இறந்தவரும் ஒப்பில்லாவின்பிற்கறைந்தவரும், எப்பொழுதும் அரியின்பதத்தை பஜிப்பவரும் சுபஜனங்களிடத்தில் தாக்ஷண்யமும், வேலைக்காரரிடத்தில் கயையும் சாது ஜனங்களிடத்திற் பிரியமும், ராஜர்களிடத்தில் நயமும், வித்வான்களிடத்தில் பயமும் முதலான இத்யாதி நற்குண நற்செய்கைகளமைந்து அன்னையாவெனுந் திருநாமம் பெற்ற ஓர் புண்ணியசீலர் குயவர் குலத்திலுதித்து சதாபாண்டுரங்கனை மனதிற்பதித்து மற்றவைகளெல்லாம் மித்தையென்று நிஷேதித்து நித்தியானந்தமே ஓர் பெண்ணுருவாகிப் பிறந்ததெனச் சங்கிக்கும் படியான சத்தியவதியென்னும் உத்தமசித்தத்தினையுடைய பத்தினியோடும், சித்தகமாகிய இல்லறத்தில் நல்லறத்தோடிருந்து அதிதிகட்கு அன்புடன் அடிக்கடி விருந்துசெய்து கர்மங்களைக்கொய்து, சதாசாதுக்கள் சங்கமும், கதாப்பிரசங்கமும், பெரியோர்கள் பால வணக்கமும், உரியோர்கள்பால் இணக்கமும் நாளில் ஹரிஹரியென்னுஞ் செபமும், இல்லையென்பவர்க்கீயுந்தானமும், சந்தோஷவாரிதியிற் படிந்திடும் மோனமும் பெற்று உச்சிதமன துடையவனும் சகலசாம்பிராச்சியத்துடன் பிரம்மானந்தத்தைப் பெற்று நிர்விகற்ப நிலையையுற்று தங்கள் குலத்தொழிலானமண்ணை மிதித்துப் பாண்டங்களைச்செய்து சூளைபோட்டுவிக்கிரயமாக்கி சுகமாய் வாழ்கிறகாலத்தில், சத்தியவதி தனக்கெல்லா பாக்கியங்களிருந்தும் புத்திர பாக்கியமில்லாக் குறைவால் பாண்டுரங்கனை யாசித்து அன்புடன் பூசித்து பகவான் நாமங்கோஷித்து நாளுக்குநாள் புத்திராபேக்ஷை விசேஷித்துப் பகவானைச்சந்ததம் சிந்தனை செய்துக் கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கப் பகவானுடைய கிருபையால் ஓர் புத்திரன்பிறக்க அப்பிள்ளையைப் பார்த்து சந்தோஷ சாகரத்தாற் றன்னைமறந்து ஆனந்தம் நிறைந்து துன்பமிறந்து அளவற்ற ஆசைபிறந்து, அன்பார்ந்த நெஞ்சுடன் மோகமாகிப் பாலூட்டி, நீராட்டி, ஆபரணம்பூட்டி தொட்டில்மாட்டி, ஓசைகூட்டித் தாலாட்டி ஏணைமாட்டி, துன்பங்களையோட்டி கண்களை நாட்டி மைதீட்டி என்கண்ணூட்டி, யென்றருமையாய் வளர்த்து அரும்கொழுந்துபோற் றளிதது, களிப்பென்னுங் கடலிற்படிந்தெழுந்து யிருந்தாள். அன்னையாவும் ஸ்ரீராமன்பிறந்தபோது தசரதனும் ஸ்ரீகிருஷ்ண பகவான் அவதரித்தபோது வசுதேவரும் அடைந்த சந்தோஷத்தைப்போல சந்தோஷமடைந்து, உடலம்பூரித்து உச்சாகமிகுந்து லோபகுணத்தைவாட்டி கேட்போருக்கு கேட்டபடி அநேகதான தருமங்களைக் கொடுத்து குழந்தையை அருமையாகக் "காப்பாற்றி பண்டரிநாதனைப் போற்றி கடவுளே காதலனைத் தந்தாரென்றெங்குந் தூற்றி, பந்துவர்க்கங்களைக் கூப்பிட்டுப் பக்ஷத்துடன் விருந்திட்டு மறையவரைக் கும்பிட்டு மதலைக்குக் கோராவென்னும் திருநாமமிட்டு அருமையாகவளர்த்து ஆனந்தமாய்க்களித்து அதிதிகளுக்கு அநேக திரவியமளித்து அகமுமுகமும் மலர்ந்து இன்புற்றிருந்தார்கள்.

இவவிதமாய் அன்புடன் சதிபதிகள் மனமொத்துத் தனயனைப் பாதுகார்த்து கோராவுக்கு நான்கு வயது கடந்து ஐந்துவயதாகவே பள்ளியில் வாசிக்கவிட்டார்கள் வாசித்து வருகிறகாலத்தில் பின்னும்பகவானருளால் ஓர் புத்திரன் பிறந்தான் அச்சிசுவையும் சீராட்டி தாலாட்டி எற்றன்றுவென்று நாமகரணஞ்செய்து போஷித்து வந்தார்கள் ஐந்து வயதாகவே பள்ளியில் வாசிக்கவிட்டார்கள், இதற்குள் கோராவும் வாசிப்பில் தேர்ந்து பக்தியைச் சேர்ந்து அனுதினமும் பண்டரிநாதனை சேவித்து வீட்டிற்கு வந்து

Koviloor Digital Library

குலத்தொழிலைச் செய்துவந்தார் இதற்குள் எற்றன்னுவென்பவரும் கல்வியிற் சிறந்து தமையனோடு குலத்தொழிலைச் செய்வதும் காலைமாலை இரண்டுவேளையும் பண்டரிநாதனைச் சேவித்து ஆலிங்கனஞ் செய்துங் கொண்டு வந்தார்கள். இதையறிந்த அன்னையார் தன் புதல்வரிருவரையும் அழைத்து அப்பா குமாரர்களே உங்களுக்கு பகவத்கடாக்ஷமுண்டாக வேணுமேயானால் நான் சொல்வதைச் சற்றுக்கவனியுங்கள், அதாவது தேவதைமீதும், சிரவணார்த்தங்களின் மீதும் சிரத்தைப் பூரணமாயிருக்கவேணும் பரமாசாரியர்மீது இருக்கும் சிரத்தையானது பரக்ஞானத்தைக் கொடுக்கும் இஷ்டதேவதை மீதிருக்கும் சிரத்தை பாபவிமோசனமாக்கும் சிரவணார்த்த சிரத்தையில்லாதவனுக்கு ஞானம் லபிக்கமாட்டாது எப்படி ருதுவாகாத கன்னிகைக்கு கெர்ப்பந்தரிக்க மாட்டாதோ அப்படியே சிரத்தையில்லாதவனுக்கு ஞானார்த்தம் மனதிற்றரிக்காது, சிரத்தையே ருது உபதேசமே பிந்து ஞானமே கெர்ப்பம் ஆனந்தமே சிசுவென் றுரைக்கத்தகும் ஆதலால் பரமாசாரியை யடுத்து உண்மையை தெரிந்து கொள்ளுங்களப்பாவென்று சாற்றிய தந்தையின் மொழிகளைக்கேட்டதனையர்களிருவரும் சில நாள்போக்கி ஓர்நாள் பண்டரிநாதனைத்தொழுதுதிருப்புகையில் தந்தைகுரு முகாந்திரத்தில் உண்மையை அறிந்துக்கொள்ளுங்களென்றுரைத்ததை நினைத்துக் கொண்டு சிந்திக்கத் துடங்கினார்கள்.

அதெப்படியெனில் இவ்வுலகில் கணவனில்லா கன்னியும், கர்த்தனைபணியாச் சென்னியும், திலகமணியா நெற்றியும், தெளிவில்லாத புத்தியும் அன்பில்லாப் பக்தியும் அகத்திலில்லாச் சுத்தியும், ஜீவகாருண்யமில்லாத் தவமும் சிந்தையிலூன்றாத ஜபமும் ஆரில்லாதவூரும் அரசனில்லாப்பாரும் ஞானமில்லாக்கல்வியும் மானமில்லாச்செல்வமும், பக்தியில்லாப் பூசையும் பணத்தின்மேலாசையும், போர்செய்யும் வீடும், புனிதரில்லா நாடும், நீதியில்லாவரசும், நிழலைத் தரா அரசும் பிரியமில்லா மோகமும் பிணியாற்சூழ்ந்ததேகமும், தர்மஞ்செய்யா கையும், சாந்தனைப் பணியா மெய்யும் ஜலமில்லா ஏரியும், சர்ச்சனரைச் சேர்க்கா வோரியும, மலைமேற் பொழியும் மாரியும், மணாளனை வையும நாரியும், விபசாரஞ்செய்யும் மங்கையும வீட்டிற்றங்கா நங்கையும் என்றுந் தீராச்சங்கையும், எளியோரைமோதும் செங்கையும், சங்கம்நீங்காத்துறவும் சந்துஷ்டியில்லா உறவும், குண்டுணிவேலையாற் ஜீவிப்பதும், குருவை மனிதனாகப் பாவித்தும் குருவுபதேசமில்லா ஜென்மமும் தாழ்வடைவதுபோல குருவுபதேசமில்லா நாமும் தாழ்வடைவோமல்லவா ஓ தெய்வமே எங்களுக்குற்ற சங்கைகள் எப்போது நீங்கும் பிரமானந்த மேககாலத்திலோங்கும் என்று தங்களுக்கு இருக்கும் சங்கையை நிவர்த்திசெய்துக் கொள்ளும்பொருட்டு ஆசானைத் தேடப்புறப்பட்டு பண்டரிபுரமெல்லாந் திரிந்து அகப்படாமையால் முகங்கரிந்து விசோபாகேசர் மேன்மையைக் கேள்விப் பட்டு இனிக் கிருதார்த்த ரானோமெனச் சந்தோஷப் பட்டு விசோபாகேசரே நமதாசானெனத் தீர்மானித்து இவரே நாம் வணங்கத் தகுந்தவரெனத் தியானித்து அநேக மாணாக்கர் பணிபவராயும் அருந்துளபத்தாரணிபவராயும் அடியார்களை ஆட்கொள்ளும் ஆண்டவராயும் விரதம் பூண்டவராயும் ஞானக்கொடியை நட்டவராயும் நாரியர் போகத்தை விட்டவராயும் அகங்காரத்தைக் கொன்றவராயும் அபிமானத்தை வென்றவராயும் எனதென்னு மாசையைக் கிழித்தவராயும் இருளணுகாமலழித்தவராயும், பிரம்மானந்தத்தில்விழித்தவராயும் மகா வாக்கியங்களை அறிந்தவராயும் மர்மங்களெல்லாந் தெரிந்தவராயும்விளங்காநின்ற விசோபாகேசர் தங்கியிருக்கும் நாகேசுவரர் சந்நிதிக்குட் புகுந்து இருவருங் கூடி விசோபாகேசரைநாடி அவர் சேவடிகளில் விழுந்து ஓகர்த்தனே! பரிசுத்தனே என்று மழியா நித்தனே இன்பர்தொழு மர்த்தனே முடிவான அர்த்தனே அஞ்ஞான அனர்த்தனே! கெடாத புத்தனே வல்லமையுள்ள சித்தனே ஞானசித்தனே ஆனந்தரூபனே சுயம்பிரகாச தீபனே சத்சீடருக்கு உபதேசிக்குங் கியாபனே! மூவுலகேத்தும் பிரதாபனே ஆனந்தலாபனே துர்க்குணங்களையகற்றுந் தூயனே அழகுள்ளரூபனே அகண்டமாகிய நிரூபனே என்று பலபல விதங்களாய்த் தோத்திரஞ் செய்தேற்றி யாவருந் துதிக்குங் கீர்த்திவகித்த சத்குருமூர்த்தி அடியேங்களுக்கு உமது திருவாக்கினால் ஞானோபதேசஞ் செய்து ஆட்கொள்ளும் ஸ்வாமி என்றுவேண்டிக் கொள்ளும் இருவரையும் விசோபாகேசர் தன்னருட் கண்ணால் பார்த்து பலவாசிகள் கூறி இருவரும் அதிதிவிர பக்குவமுடையவரென்று சமீபத்தில் அழைத்திருக்கச் செய்து ஓ சோதிலாக்குணமுடைய சாதுக்களே கேளுங்களென்று விசோபாகேசர் சொல்லத் தொடங்கினர்.

இப்பூதலத்தில் பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எண்பதினான்குலக்ஷம் ஜீவஜெந்துக்களுள் ஜலத்திலே வசிப்பது ஒன்பதுலக்ஷம் பறவைகளில் பத்துலக்ஷம் ஊரும்புழுக்களிலே பதினொருலக்ஷம்ஸ்தாவரஜங்கங்களிலே இருபதுலக்ஷம் நான்குகாலுள்ள மிருக

Koviloor Digital Library

ங்களில் முப்பதுலக்ஷம் நரஜென்மத்தில்நான்குலக்ஷம் இதிலும் கூன்குருடு செவிடு பேடி முடம் முதலான அவயவப்பழுதின்றி சர்வாவயங்களும் பூரணமாகப் பொருந்திப் பிறப்பதரிது, பிறக்கினும் பெண்ணுயுதிக்காமல் புருடனுகப் பிறப்பதரிது புருடனுக உதிக்கினும் இந்திர சரு கபஸ்திரக தாம்பிரவருணி சென்மய கெந்தர்வமென்னும் கண்டங்களி லவதரிக்காது இபபரதகண்டத்திற் செனிப்பதரிது பரதகண்டத்தி லுதிக்கினும் லக்ஷ குசக்ரௌஞ்ச சாக புஷ்க்கரசாக்ஙமென்னுங் தீவினிற் பிறக்காமல் இந்த ஜம்புத்தீவிற் ஜெனிப்பதரிது இவற்றையெல்லாங் கடந்து இத்தீவிலுதித்த இத்தூலசரீரம் நித்யமோ யென்ருல்,

சுலோகம்.

அநித்யாநி ஸரீராணி
விபவோ வைவ ஸாஸ்வத
நித்யம் ஸந்நிஹிதோ மிருத்யு
கர்த்தவ்யோ தர்மஸங்கிரஹ.

என்றபடி இத்தேகம் அநித்யம் ஆகையால்இந்த பிராணன் இப்பவோ பின்னேயோ இரவிலோ பகலிலோ என்றறியாமல் எப்போதாவது நீங்குமே யல்லது ஸ்திரமல்ல இவ்வாத்மா இச்சரீரத்தில் வசிப்பது எப்படி யிருக்கிறதெனில் வெட்டவெளியில் வைத்த விளக்கைப்போலவும் பழுத்த இலையைப் போலவும் கனியைப்போலவும் நீற்குமிழியைப் போலவும் சுழல் காற்றைப் போலவும், பம்பரத்தை போலவும் மின்னலைப் போலவும் அறுகுநுனியைப் போலவும் பக்த ஆவியை நம்பிப் பாவிகளாய்ப் போகாமல் நிசமில்லா இம்மலவுடலை மெய்யென்று நம்பிப் பொய்யாப்போகாதீர்கள். நாயும் நரியும் பேயுங் கழுகும் பிடுங்கித் தின்னும் இப்பிணத்துக்கு மணஞ்செய்து பேதைக்காளாகாமல் பிரயக்ஷ நரகமான இத்தனுவுக்குச்சுகங் கொடுத்து பலருக்கும் மகவாய் பிறந்து கோழையுங் குருதியும் என்பும் நரம்புஞ் சதையும் பொருந்திய இவ்வூனை நானென்று அஞ்ஞானிகளாகாமல்லவணஞ் சலமல்லவென்றும் பாண்டம் மண்ணல்ல வென்றும் ஆபரணம் பொன்னல்லவென்றும் ஆயுதம் இரும்பல்லவென்றும் சொல்வாருண்டா அதைப்போலவேதேகம் அநித்தியமென்றும் பிரபஞ்சம் மயேந்திர ஜாலமென்றும் சொல்வதே மெய்யன்றிப்பொய்யென்று பிதற்றும் பேதையரைப் போலக் கோதுக்குள்ளாகாதீர்கள் மெய்ஞ்ஞான சாதனத்திற்குரிய அரிதானவாழ்வை வீணாய்ப் போக்கலழகோ காலனே எப்போதிவன் ஆயுள்முடியுமோவென்று காத்துக்கொண்டிருக்கின்றன அவ்வெமனுக்கு தப்பி இவ்வுலகில் யாரும் இருக்கவில்லை குலைபழுததவுடன் அடியொடு வெட்டிச்சாய்க்கும் வாழைக்கிணையான இவ்வேழ்மை யாக்கையைக் கோழைபுத்தியால் மேலையாய் வைத்திருப்பது நலமோ மேலும் இவ்வாக்கைக்கு அஞ்ஞானத்தால் செல்வம் முதலான வியாபாரங்களிலும் தேகேந்திரியாதி மனோவிகாரங்களிலும் தேகவாதையிலும் மனோவாதையிலும் மனஞ்செல்லும் அதினுல் சஞ்சலமே மிகுதியாய் வளர்ந்துக் கொண்டே வரும்மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையென்னும் ஈஷணாத்திரசங்களால் கட்டுண்டு வெட்டுண்டு தட்டுகெட்டுதடுமாறி தலைதெரியாமல் தலைகீழாய் விழுந்து 'தருதலையாய்ப் போகாதீர்கள் அஞ்ஞானந்த காரத்தாலும் துன்மார்க்கருறவாலும் மனோவிச்சையாலும் பஞ்சேந்திரிய வாசையிற் சிக்கி சொக்கிச் சம்சாரமென்னும் சாகரத்திலாழ்ந்து தாழ்ந்து விழுந்து எழுந்து அழிந்து போகாமல் சர்வசகலதேச சர்வாவஸ்தைகளிலும் ஸ்ரீராமநாமத்தை இடைவிடாது தியானித்தால் மேன்மையான பரமபதத்தை அடைவீர்கள் அப்படிக்கல்லாது இல்லறத்திலிருந்து பதவிபடைய வேண்டுமென்றெண்ண மிருக்குமாகில் புளியம்பழத்தின் மேலோடு போலவும் தெளிவிலாமை செவிடன் போலவும் நீர்மீதூரும் நவநீதம்போலவும் நீர்தனிறெரியும் நிழலைப்போலவும் ஆழியில்விழும் பல ஆற்றைப்போலவும் ஆடும் தொம்பரன் கூத்தைப்போலவும் பாடும் பாடகன் பாட்டைப்போலவும்கனவிற்காணுங்காக்ஷி போலவும் நற்குடமேந்திய பீவையைப் போலவும் தாமரையிலைமீது ஜலம்போலவும் சம்சாரவியாபாரத்திலிருந்தே பிபீலிகாதி சமஸ்தவஸ்துக்களிலும் பிரேமம் நிறைந்திருக்கிறதெனறும் பிரம்மமில்லா விடமுண்டோவென்றும் பரப்பிரம்மத்துள் நானென்பது முற்காலத்திலு மில்லையென்றும் நானென்றும் அகந்தையே மூலஞானமென்றும் நானென்னுஞ் ஜீவத்தன்மை அறிவூன்றி விசாரிக்கில் சுத்தசூன்யமாகுமென்றும் நான் நீ உமதெமதென்னும் விகற்பமற்றிருத்தலே பிரம்மஞானமென்றும் நானெனலற்றவிடத் துதயமானவின்பமே நிரதிசயானந்தமென்றும் பரப்பிரம்மமே ஒருருவா யெழுந்தருளிய குருஸ்வாங்கட்கு உடல் பொருளாவி என்னும் மூன்றையுந் தத்தஞ்செய்து நானென்பதடக்குவதே உத்தமதான மென்றும் தனக்கிதராஜீவர்களால் பொல்லாங்கு நேரிட்டாலும் தானப்படி செய்யாதிடர்செய்து நானென்பதை யடக்குவதே சாந்த நிதான மென்றும் நான்மறை முடிவாகிய மகாவாக்கியார்த்தங்களைச் சிரவ

னஞ்செய்து தேகேந்திரியப் பிராணகாண சிவனிருள் நானல்லவென்று ஆத்மஸ்வரூபமாகிப் பரப்பிரம்மத்துள்ளே ஏகபாவமாதலே பிரம்மத் தியானமென்றும், இம்மனன பலத்தாற் றிரிகரணங்களை அவசரவா நிவிருத்தி நாமென்னு மங்காரக் கிரந்தியைக் களைதலே பிரமமக்ஞானமென்றும் திரிகரணங்களின் சலனமற்றபோது உதயமான பிரம்மானந்தவாரியி லமிழ்ந்து தன்னை மறத்தலே மகாமௌனமென்றும திக்குசோதிகளை மறந்து சங்கற்ப விகற்பமிறந்து கனவிற் எழுப்பியடைந்து மானுபி மானங்களைக்கடந்து நிருவிகற்பமா யிருத்தலே ஜீவன் முக்தியென்றும் இப்பேர்க்கொத்த அபேத நிலையிலிருந்து சாக்ஷாத்கார மடைதலே மோக்ஷமென்றும் தன்னையடைந்த சக்சிஷருக்குபதேசித்து அப்பா குழந்தைகாள் நான் இப்பொழுது சொல்லி வந்தபடி நடந்துக்கொள்ளக் கடவீர்கள், என்றுசொல்லி தாரகநாமத்தை யுபதேசித்து விடைகொடுத்துப் போய்வாருங்களென்றார். உடனே தமயனுந் தம்பியும் அவர்பாதங்களில் விழுந்து வணங்கி தங்கள் வீட்டைநாடி வருகிற மார்க்கத்தில் தம்பியை நோக்கி அப்பா தம்பி இன்றைக்கு நாம்செய்த பாக்கியமே பாக்கியம் நமது பெரியோர்கள் செய்த சிலாக்கியமே சிலாக்கியம் நாம் கோரிவந்த எண்ணத்தை பகவான் முடித்தார் அன்று நமது தந்தை உரைத்தபடி இன்று நம்மாரியரு முரைத்தார் வேதமுடிவான தாரகமந்திரமிதுவேயாகும் இதனாலேயே சகல பாபங்களும் நசித்துப்போகும் எதையும் நம்பினால் வீடுண்டு நம்பாதார்க்குக் கேடுண்டு, பரமேசன் பார்வதிக்கும், நாரதர் வால்மீகருக்கும், வால்மீகர் பரத்துவாசருக்கும் பராசர்வேதவியாசருக்கும், வியாசர் சுகப்பிரம்ம ரிஷிக்கும் சொல்லிய மந்திரமிதுவே அல்லவா அன்றி, அநேகரிஷி யீஸ்வரர்களெல்லாம் இதைத் தியானித்தே பரமபத மடைந்தார்கள் ஆதலால் இதைவிட மேலான வாக்கியமுண்டோ இல்லை இல்லையெனச் சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்தவர்களாய் பீமநதியில் மூழ்கி ஊர்த்துவ புண்டரங்கள் தரித்து வீட்டையடைந்து ஆசிரியர் பாதங்களில் மனதை நாட்டி வனமாலை வசனமாலைகளைப் புனைந்து ஸ்ரீராம நாமத்தை தியானித்துக் கொண்டிருந்தார்கள் கேட்டீர்களே சித்தர்களே யென்று நபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

பின்பு கோராவும், எற்றன்னவும் சந்ததமும் தாரக மந்திரத்தைச் சிந்தனஞ் செய்துக்கொண்டு, காலையிலெழுந்து சந்திரபாகாநதியிற் படிந்து, ஊர்த்துவபுண்டரங்கள் அணிந்து, விடோபாகேசர் திருவடிகளைப்பணிந்து ஸ்ரீமந்நாராயணருடைய திவ்விய திருநாமங்களைப் பாடிப் பலருக்கும் விரித்துரைத்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்க அன்னையாவுஞ் சத்தியவதியும் மூத்த குமாரன் கோராவுக்கு வதுவை செய்விக்க எண்ணங்கொண்டு தங்கள் மரபிலுதித்த உத்தமருணத்தில் பிறந்த மிகவும் நிறைந்த மேகத்தைப் போன்ற கூந்தலுஞ் சந்திரனைப்போன்ற முகமும் பவளம் போன்றவாயும் முத்தைப்போன்ற பற்களும் மெதுவான நடையும் மெலிவான இடையுமுள்ள பத்மாவதியென்னும் கன்னிகையைப்பேசி முகூர்த்தம் நியமித்து தன் பந்துக்கள் முதலான சகலருக்கும் மணவோலையனுப்பி அருமையான பந்தலிட்டு அதில் சிந்தவாழை-கமுகு-பலா முதலான பலவர்க்கங்களும், மலர்மாலைதோரணம் மாவிலைதோரணம் முதலான தோரணங்களுமமைத்து மிகவுஞ் சிங்காரமாய் பலருங்கண்டு மெச்சும்படியான மணப்பந்தலைமைத்துகோராவுக்கு ஸ்நானஞ் செய்வித்து பலபணிகளணிவித்து மலர்மாலைகளைச் சூட்டி மிகவுஞ் சிறப்பாய் அலங்கரித்து மணமகளையும் ஸ்நானஞ் செய்வித்து சகல ஆபரணங்களு மணிவித்து மணக் கோலஞ் செய்து மலர்ப்பந்தலில் இருவரையும் வீற்றிருக்கச் செய்து மேளவாத்தியங்களுங் கோஷிக்க வேதியர்கள் வேதகோஷ்டங்கள் முழங்க மிகவும் வைபவத்துடன் சகல சடங்குகளும் நிறைவேற்றி மாங்கல்யத்தை பிராமணர்களாலும் பெரியோர் களாலும் ஆசீர்வதிக்கச்செய்து மணமகன் கையில் கொடுத்து மாங்கல்யதாரணஞ் செய்வித்து தம்பதிகளை ஆசீர்வதித்து வேதியர் முதலானோர் களுக்கு பலதானங்களும் வழங்கி பந்துஜனங்களுக்கும் மற்றுமுள்ளோருக்கும் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகள் கொடுத்து பந்துவர்க்கங்களுடன் போஜனஞ்செய்து சந்தோஷசித்தர்களாய் கிரமப்படி வதுவை முடித்து வந்தவுடன் பந்துக்கள் முதலானோருக்கு தங்கள் தங்களிருப்பிடஞ் செல்ல விடை கொடுத்தனுப்பி மிகவும் மனக்களிப்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

பிறகு கோராவும் பத்மாவதியும் அன்புடன் இன்பபோகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் எப்படியெனில் உடல் வேறாக உயிரொன்றாக வடிவிரண்டாக மனமொன்றாக ஒருவர் மொழியை ஒருவர் தள்ளாமல் புரியமில்லாப் புன்மொழிகள் விள்ளாமல் இருவருமொன்றாய் ஏகமாய் போகமாய் மருவித் திருமால் மாயையிலிருந்து கடினமில்லாமற் கசித்துபேசாமல் விடியுமுன்னெழுவார் விண்டுவைத் தொழுவார் ஆதிநாரணனரிநாமங்களை யோதியென்னளு முளங்களி கூர்வார்கள். பெரியோர்க்கேவல பிரியமாய்ச் செய்வார், உரியோர்வந்தா லுவமையோடழைப்பார் சொர்ன தானங்கள் சுகமாய்ச் செல்

Koviloor Digital Library

வார், அன்னதானங்கள் அன்புடன் செய்வார் அனித்தியவாழ்வில் ஆசையேயென்பார் சனித்ததிவ்வியாஞ்யாற் றெளிந்தாமென்பார் நித்தியப்பொருளை நேசிப்போமென்பார், சத்தியமானது தியானமேயென்பார் துர்ச்சன சங்கத்தொல்லையா மென்பார், சற்சனசங்கஞ் சதானந்தமென்பார் போதமீந்தெனையாள் புனிதரேயென்பார் இவ்வித நன்மொழிகள் ஆடிக்கொண்டு இருவரு மனமொத்து மூவருந்தேவரும் முத்தருஞ்சித்தரும் மனமகிழவாழ்கிற காலத்தில் எற்றையன்-வைராக்கிய சீலனாகி காலைமாலை இரண்டு வேளையும் பாண்டுரங்கனை தெரிசித்து ஆலிங்கனஞ் செய்துஞ் சிரவணஞ்செய்துஞ் சற்குருநாதனை ஏற்றிப்போற்றி அன்னை தந்தைகளுக்கு வணங்கி இணங்கி தொண்டு செய்து வருவார் விண்டுவேயென தொழுவார் பலவிதமாய்ப்பாடி யழுவார்த்தன்னை மறந்தாடிவிழுவார், ஆரியர் புகன்ற மொழியை வழுவார் ஐயன் திருவடியின் பக்திநழுவார் தைலதாரையைப்போல் இடைவிடாது பாராயணஞ் செய்துவந்தார் கோராவும் தம்பியினுடைய நன்னடைக்கு மிகவுங்களித்திருந்தார் இப்படியிருக்கிற காலத்தில் சத்தியவதி தன் குமாரரிருவரையும் கொழுநனையும் விளித்து, ஓ எனதன்புற்குகந்த தனையர்களே நாயகனே கெருடவாகனரூடாய் பஞ்சாயுதராய் வனமாலை வனசமாலை புனைந்து பகவான் கனவிலெழுந்தருளி ஓ பாக்கியவதி உத்தமகுணவதி நம்முடைய பதவிக்கெழுந்தருளக் கடவாயென்றுசொல்லி மறைந்தார், அன்னியினும் இதோ என்கண்முன் அநேக சாதுக்கள் கூட்டங்கூட்டமாய் நிற்கிறார்கள் என்று சொல்லி பரமபதமடைந்தாள், உடனே பிரதேசமஸ்காரங்கள் யாவும் செய்துமுடித்து இரவும் பகலும் பாவசது பகவானித் தியானத்திலிருக்க, சிலநாள் கடந்தபின் அன்னையனும் பரமபதமடைந்தார். அதற்கும் செய்யவேண்டிய உத்தரிமைகள் யாவும் நடத்தியபின் தந்தை சேகரித்துவைத்த திரவியமெல்லாம் அதிதியப்யாகதர் சாதுக்களுக்கு மளித்துமிருந்த ஏழைகளாகி தங்கள் குலத்தொழிலாகிய பாண்டங்களைச் செய்து ஜீவனஞ் செய்துக்கொண்டு வந்தார்கள் இவ்வண்ணமிருக்கையில் ஓர்சமயம் சூளைபோடுவதற்கு யெத்தனித்து எற்றையன் பாண்டங்களை வரிசைக்கிரமமாய் அடுக்கிக்கொண்டுவர பாண்டங்கள் சூளைக்குத் குறைவுபடுதலால் அதையப்படியே நிறுத்திக் குறைவுக்குப் பாண்டங்கள் செய்துக்கொண்டிருக்கும்போது இவர்க்குத் தெரியாமல் ஓர்பூனையானது பாண்டங்கள் குறைவுபட்ட சூளைக்குள் குட்டிகள் போட்டிருந்ததை யறியாத எற்றையன் பாண்டங்களை அத்துடன் சேர்த்து கட்டை விராட்டிகளைக்கூட்டி நெருப்பையிட்டு மேலேமூடி களிமண்கொண்டு காத்துபுகாம லடைத்துவிட்டார் சூளையோ நாலுபக்கமுங் கலந்து பற்றியெறிகிற போது பூனையானது வந்து அச்சூளையின் மேலேறி குட்டிகளைக்காணாமல் கதறுவதையறிந்த எற்றையன் அந்தோ சூளையில் பூனைக்குட்டி யிருப்பது தெரியாமல் நெருப்பை வைத்துவிட்டேனே நிரயத்துக்குட் பட்டேனே மாபாவியாகிக் கெட்டேனே இப்பாவம் எனைவிட்டெப்போது நீங்குமோ பூதலம் எப்படி எனைத்தாங்குமோ புண்ணியஸ்தல தீர்த்தயாத்திரையாலோங்குமோ! எனக்குள்ளதுக்க மெதினாலேநீங்குமோ? அன்பர்க்கருளாழி கையனே? ஆபத்பந்துவாகிய மெய்யனே துன்பங்களை யொழித்திடுந்துய்யனே தோதகன் முன்வந்த ஐயனே அண்டர்களேத்தும் பாதா, அம்புயவல்லிநாதா, தொண்டர்களேத்தும்விநோதா, பாண்டவர்தூதா, மிகவும் பிரக்யாதா, ஞானபோதாவெனப் பற்பலவிதங்களாய்த் துதித்து தமையனிடஞ் சென்று, நடந்த உண்மையைப்புகன் நான் தீர்த்த யாத்திரைபோகிறேன் என்பாபம்துலைக்கத் தங்களையகன்று தடையின்றிவிடைதாருவென்று விழுந்து பணிந்து எழுந்து அண்ணியையும் சேவித்து விடைபெற்றுக்கொண்டு அவ்வூரைவிட்டு நடந்து தேசதேசங்கள் திரிந்து பெரியோர்களை தரிசித்து புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி அநேகருக்கு பகவத்குணானுபவங்களை விரித்து பக்தி செய்யுங் கோளிதை யனுசரித்து அநுதினமும் விசுவாசித்து நேசித்துப் பூசித்து ஆசித்து ராமநாமத்தைக் கோஷித்து பாமரர்களை த்வேஷித்து பெரியோர்களைப்பூசித்து, சற்குரு சேவையை யாசித்து தைல தாரையைபபோல மனனஞ் செய்வீரென்று போதித்து மேலுமேலும் தீர்த்தயாத்திரையிலேயே இருந்தார்.

இங்கு கோராவானவர் தன்தம்பி யாத்திரை போனபிறகு தன்குலத்தொழிலாகிய பாண்டங்களை செய்து ஜீவனஞ் செய்துவந்தார் இப்படியிருக்க பகவானுடைய கிருபையால் ஓர் புத்திரன் பிறந்தான். அக்குழந்தையைக்கண்ட பத்மாவதி மார்புடன் சேர்த்து குருடன் கண்பெற்றதைப் போலவும் மலடிமைந்தனைப் பெற்றதைப் போலவும் தரித்திரனுக்கு க்ஷேமங்கிடைத்ததைப் போலவும் அகமகிழ்ந்து ஹரியைப்புகழ்ந்து கண்ணைக் காக்கும் இமையைப் போலவும், கற்பைக்காக்குங் காந்தையைப் போலவும், உயிரைக்காக்கும் உடலைப்போலவும் காப்பாற்றி கர்த்தனைப்போற்றி தருமந் தாராளமாய்ச் செய்து, தங்களுக்குற்ற சங்கையைக்கொய்து, அனை

Kovilloor Digital Library

வருக்கும் விருந்திட்டு பிள்ளையனென்று பெயரிட்டுப் பாலூட்டி நீராட்டிச் சீராட்டிப் பாராட்டி ஆலங்காட்டி மையிட்டி ஆபரணம்பூட்டி தொட்டில்களை மாட்டி ஓசை கூட்டித் தாலாட்டி துன்பங்களையோட்டி கண்களைநாட்டி என்கண்ணேட்டி என்றருமையாய் வளர்த்து அருங்கொழுந்துபோற் றளித்து, களிப்பென்னுங் கடலிற்படிந்து அச்சிசுவுக்கு எட்டு ஒன்பது மாசமாக ஓர்நாள் பாலூட்டி ஏணையிற் சேர்ந்து தாலாட்டி தூங்கப்படுத்தி விட்டு ஜலங்கொண்டுவந்து மண்ணிற் கொட்டிக் கொண்டிருந்தாள்.

கோராவும் பண்டரி புரத்தில் பிரம்மோற்சவம் சமீபித்து விட்டதை மனதில் நினைத்துக்கொண்டு மருஜன்மன் வராமலிருக்கும்படி பகவத் பக்தியில் மனம் லயித்தவராய் அதிக பிரியத்துடன் வாக்கினால் விட்டல விட்டலவென்று தியானித்து தன்னை மறந்து நடித்துக்கொண்டே மண்ணை மிதித்தார். இது சமயத்தில் அக்குழந்தை மிகுந்த பசியினால் அன்னையை நினைந்தழுது ஏணையிலிருந்து கீழேவிழுந்து தவழ்ந்துக் கொண்டேவந்து தந்தையைக் கண்டு சமீபத்திற் சென்று சாதுவின் காலிலகப்பட்டு மிதியுண்டு மடிந்துவிட்டது. இதை யறியாத பத்மாவதி பூரணமாய் ஜலங்கொட்டி விட்டு பாண்டத்தை யிருந்தவிடத்திற்சேர்த்துக் குழந்தையை தேடிக் காணாமல் அக்கம்பக்கங்களில் விசாரித்தும் அகப்படாமையால் புத்திர சோகம் மேலிட்டுக் கதறிக்கதறி யழுதுக்கொண்டே அவ்வூரெல்லாந் திரிந்து ஆவேசங்கொண்டவர் போல அலைந்து அடாமகனே அழகான முகனே எங்கிருக்கிறாயடா ஐயோ என்ன செய்வேனப்பா உன்னைப்பிரிந்து எவ்வண்ண மிருப்பேன் இனியெங்கென்று தேடுவேன எவரையான் நாடுவேன் எப்படி யுயிர்தரிப்பேன் எவ்வண்ணம் பிரிந்திருப்பேன் அடா கண்மணியே என்னருங்கிளியே ககவாகனன் கிருபையினால் பிள்ளைக்கலியைத் தீர்க்க வந்தசுதனே அறியவற்புதனே அடாஎன் கட்டிக் கரும்பே மணமுள்ள மல்லிகையரும்பே தேனே பாகே என்கன்றைப்பிரிந்த பசுவைப் போலவும், காந்தையைப்பிரிந்த கணவனைப்போலவும், இனத்தைப்பிரிந்த மான்போலவும், தண்ணீரைப்பிரிந்த தாமரைப்போலவும், ஜலத்தைப்பிரிந்த தவளைப்போலவும் கண்ணையிழந்த குருடனைப்போலவும் இமை நீங்கிய கண்ணைப்போலவும், உயிர்நீங்கிய உடல்போலவும் அலறி உளறிக்கொண்டே தன்வீட்டை யடைந்து தன்னைமறந்து பகவத்தியானத்துடன் நடித்துக் கொண்டிருக்குங் கணவனைநோக்கி ஓ சுவாமி நமது புதல்வனை யாராகிலும் எடுத்துக்கொண்டு போகப் பார்த்தீர்களா, குழந்தையைக் காணோமே நானென்ன செய்வேன் நாதாவென்று துக்கத்தோடு கேட்டும் பதில்வார்த்தை சொல்லாதிருப்பதால் பகவத்தியான பரவசராயிருக்கிறாரென்றுணர்ந்து புத்திர பேதைமையினால் இடர்கடலில் ஆழ்ந்து தனக்கொருசந்தேகந்தோன்றி பதியானவர், நடக்கும் மண்ணைக் கவனித்துப் பார்த்தாள். அதில் சிகையோடு சிரசும் படிந்திருக்கும் ரத்தமும் நரம்பும் மாம்ஸங்களும், அஸ்திகளும் நகங்களும் தந்தங்கள் முதலானதைக் கண்டவுடனே பத்மாவதி அடியற்ற பனைபோல் பூமியில்விழுந்து கடகடவென்றுருண்டு அழுதுபுரண்டு முகத்திலும் மார்பிலும் கரங்களால் அறைந்துக்கொண்டு ஆகுமாரா அழகானகுமாராஎன்னைவிட்டின்று பிரிந்தாயோ உன் தந்தைகாலால் மிதியுண்டிறந்தாயோ அம்மா வென்றென்னை நினைத்தாயோ, அந்நேரமென்னை யெண்ணினாயோ பாவியென்னைநொந்தாயோ பார்மேற் சிந்து சிந்தானாயோ உன்னைப் பார்த்திருந்தாலும் பசிதீருமே பாவங்களென்னை விட்டு விலகிப்போகுமே பாவி என்முகம் பார்க்கலாகாதென்று உயிர்விட்டாயோ, பாண்டுரங்கனுக்குடன் பாட்டாயோ என்னை இன்று கைவிட்டாயோ எழுந்து ஒரு வார்த்தைச் சொல்லக் கிட்டாயோ என்று பிரலாபித்து கணவனை நோக்கி உமக்கென்ன மதி கெட்டதோ, கண் கெட்டதோ, பாலனென்று தெரியாதோ, பக்தீர் கொள்ளிவிழுந்தெரியாதோ பெத்தவயிர் பத்தி யெரியுதே சித்தங் கரிந்துபொரியுதே என ஒலமிட்டழும் ஓசையினால் கோராவுக்கு பக்திகெட்டு பந்தத்திற்குட்பட்டு பக்தியைக் கெடுத்ததினால் கோபம்மேலிட்டு பாலன் இறந்தானென்ன தாபங் கிஞ்சித்துமில்லாமல் மனதைவிட்டுப் பரமாத்மா பிரிந்து போனாரேயன்று சிந்தை பட்டு கோபங்கொண்டு அடிபாவி, பக்தியைக் கெடுத்தாயே மூதேவி பாலனால்வரும் பயனென்னபாதகி, பெருவைவயோ முக்தியைத் தோதகி, எமபாதகி அடிபேதாய் அறிவிலாகோதாய் என் முன்னேன் வந்தாய் எனக்கேனிடர் தந்தாய் தியானத்தைக் கெடுத்தாயே துன்பத்தைக் கொடுத்தாயே பதிவிரதைத் தன்மையை விடுத்தாயே தைரியத்துடனென்னை யடுத்தாயே நெடுநாளாகச் செய்துவந்த நோன்பைக் கெடுத்தாயே என்று சொர்க்கத்திற் சென்றவன் நரகத்தையுஞ் சுகத்திலிருந்தவன் துக்கத்தையும், அமிர்தம் புசிப்பவன் விஷத்தையும் இராஜரீகஞ் செய்தவன் பாசிக்கவும் சமபாவமுள்ளவன் ஆசிரியரை நிந்திக்கவும் நித்திய வஸ்துவை அடைந்தவன் அனித்தியப் பொருளையும் நரஜென்மத்தின் அருதமையை அறிந்தவன் வீணாள்

கழிக்கவும் பரிமளாதிகளைப் பூசிக்கொள்பவன் மலத்தை யளிந்துக்கொள்ளவும் தன்னை மாந்து யிருக்கச் சாதகஞ்செய்பவன் சஞ்சல வியபாரத்திற் குட்படவும் வாஞ்சிப்பதுபோல அடியேனைக் கர்மம்வந்து சூழ்ந்துக் கொண்டதே இதற்கெல்லாங் காரணம் இவளன்றே எனரோஷத்துடன் த்வேஷித்து சக்கரத்தைச் சுழட்டும் தண்டத்தைக் காத்தி லெடுத்துக் கொண்டு தன்மனைவியை அடிக்க நெருங்கிவருவதை யுணர்ந்த பத்மாவதி இராஜன் முன் குற்றவாளியும் மாமியார்முன் மருமகளும் வித்தியாகுருவின் முன் மாணாக்கனும் பதியின் முன் விபசாரியும், நடுங்குவதுபோல வெடுவெடுவென்று நடுங்கிப் பூனைபோலவொடுங்கி வாய்குளறி மாத்துமாரி ஓ பிராணநாத விட்டலதேவன்பேரி லாணையாய் தேவரீர் கரஸ்பரிசம் என்பேரில் படக் கூடாதென்றாள் இதைக்கேட்ட கோராவானவர் தலைக்குட்பட்ட நாகம்போலவும், வலையில் அகப்பட்ட மான்போலவும் இடியோசைக்கேட்ட சர்ப்பம்போலவும் சத்தியத்திற் கட்டுபட்டு யாதொன்றுஞ் செய்யவும், சொல்லவுங் கூடாமையால் ஹரி ஹரி பாண்டுரங்கா எனத் தியாரித்துக்கொண்டு தண்டத்தை இருந்திடத்தில் வைத்து சாந்தத்தை வகித்து தனயனுக்குச் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்துமுடித்து பத்தாவதியின் கரங்களால் படுக்கை போஜனம் முதலான சமஸ்த கைங்கரியங்களையும் நிவர்த்தி செய்து விட்டு அன்னபானாதிகளைத் தானேசெய்து பகவத்ப்ரீதிசெய்து புசித்துத் தன்குலத்தொழிலை செய்துப் பகவான் நாமத்தைப் பாராயணஞ் செய்துக் கொண்டு நாள் கழித்துக்கொண்டிருந்தார் கேட்டீர்களோ சித்தர்களே என்று பின்னும் நாபாஜீ சித்தர் சொல்லத் தொடங்கினர்.

பின்பு பத்மாவதி கடந்த ஞானிபுங் கடப்பரோமக்கள்மேற் காதலென்னுமாப்போலவும் புத்திரதுக்கம் கிரந்தாமென்னுமாப்போல புதல்வனை நினைத்து அடாசுதனே மிருந்ததேகவவும் மதனே பரிமளமதுவே பாக்கியத்திருவே கற்பகத்தருவே களங்கமிலாவுருவே, கொஞ்சுங்கிளியே கோகிலாவொளியே மல்லிகை யரும்பே ரசமுள்ள கரும்பே எனப்பற்பல இனியவார்த்தைகள் பகர்ந்து விகாரம் பிறந்துஞான விசார மறிந்து கர்த்தன் பக்தியை மறந்து பாமரகுணங்கள் நிறைந்து பாவியானேனெனப் பகர்ந்து இறைந்தழுது பெருமூச்சு விட்டயர்ந்து ஆயாசத்தால் மூர்ச்சையாகி நிலத்திற்சாய்ந்து மறுபடியுந் தேர்ந்து மகவாசையினால் மணாளன் பக்தியைக் கெடுத்தவாய் கொழுப்பு சீலையால் வடிகிறதென்னும் பழமொழிப்படி பாண்டுரங்கன் மீதில் ஆணையிட்டபடியால் நாயகன் கம்மிடகரத்தினால் யாதொருவேலையுங் கொள்ளாமல் மதுரவார்த்தைகள் விள்ளாமல் இருப்பதற்குக் காரணம் நாமேயல்லவா பாலன் மாண்டு விட்டான் புருடன் உயிர்பெற்றிருந்தும் நமது நிர்ப்பாக்கியதிசை நீக்கிவிட்டதல்லவா என்றிப்படிச் சிலநாள் துயரப்பட்டுக் கொண்டும் நாயகன் புசித்து மீந்த அன்னத்தைத் தாரைவார்த்து குடும்ப விருத்தியன்றி க்ஷீணமாய்ப் போச்சுதே விருத்தியடைவதற்கோர் ஏதுவுமில்லாமல் வாய்ச்சுதே என்றெண்ணமிட்டிருந்து ஓர்நாள் தன் தாய்வீடு சேர்ந்து சிலநாளிருந்து தாய்தந்தையர்களுக்குத் தன்சம்சாரத்தின் பெருமையைச் சொல்லி தினமும் பிரயத்தின பூர்வமாய் தங்கையைத் தன் நாயகருக்குக் கொடுத்து வதுவை செய்யும்படி வற்புறுத்திக்கொண்டிருக்க தாய்தந்தையர்களயோசித்து சந்ததியில்லாக் குறையால் நம்மை பாதிக்கிராளெனத் தீர்மானித்து மணஞ் செய்ய நிச்சயித்து வேண்டுமாள் சாமக்கிரிகைகளை சேகரித்து சில சாதுக்களைவரவழைத்து உண்மையை யரிவித்து எவ்விதமுயற்சிலாவது கோராவை யழைத்துவந்து விவாகம் நடத்திவைப்பது உம்முடை பாரமென்றார்கள்.

இதைக்கேட்ட சாதுக்கள் அப்படியே உங்களிஷ்டப்படி கலியாணம் நடத்திவைக்கிறோமென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு நடந்து கோராவின் வீட்டையடைந்து சாதுவைக் கண்டு க்ஷேமவார்த்தைகள் விண்டு, இன்று தங்கள் சேவைநன்று பாவங்களெங்களை விட்டு நீங்கிற்றென்று நவின்று உமது மனைவி யெங்கேயென்று வினவ சாதுவானவர் வந்தசாதுக்களுக்கு நடந்த விபரப்பாவும் தெரிவித்தனர் அதைக்கேட்ட சாதுக்கள் ஐயா கோராவே இல்லறத் துழல்வதற்கு மூலம்பாரியாள் ஆகையால் இல்லறத்தில் ஏகாந்தமாய் பத்தினி இல்லாதிருப்பது அதர்மம் ஆனதால் முதற்பத்தினி அபசாரப்பட்டபடியால் நீக்கிவிட்டீர் உன்வாழ்க்கைகருத் துணையான மனையாளிருக்கும் வீடுகற்பக விருக்ஷங்களடர்ந்த சிரநாடு ஆகிலும் இரண்டாவது விவாகஞ் செய்துக்கொண்டு இல்லற தருமத்திலிருறென்றனர்கள்.

இதைக்கேட்ட கோராவானவர் மரண பரியந்தம் பேய்கொண்டாலுங் கொள்ளலாம் பெண்கொள்ளலாகாதென்ற பழமொழி இருப்பதன்றி சப்தத்தில் அசுணப்பக்ஷியும், ஸ்பரிசத்தில் யானையும் ரூபத்தில் விட்டிற்பூச்சியும் ரசத்தில்மீனும், கந்தத்தில் வண்டும் இச்சைவைத்து மரணமடைகிறது இப்படியிருக்க இவை வந்து விஷயங்களுங்கூடி ஒருருவாய்

Kovilbor Digital Library

வந்துமயக்கம் தந்து மாந்தரைவாட்டும்மாதர்கள் தேகத்தளகப்பட்டவன் விடுபடுவது ஜன்மாந்தரங் களினுங் கூடாதென்றும் சாஸ்திரங்களில் முறையிடுகின்றது. அப்பப்பா இந்தத் தப்பிதத்துக் குட்பட்டபின் தனம்வேண்டும், சனம்வேண்டும், மக்கள் வேண்டும், பல ஜெந்துக்கள் வேண்டும் இது தெரிந்தும் நீயில்விழுவேனோ இதத்தோரைத்தொழுவேனோ வென்று பலவிதங்களாய், யோசித்தறிந்தவனறியும, உத்தமியுடன் கூடி இல்லறத்தி லிருந்தால் சுகம், அவளால் மோக்ஷங் கிடைக்கும், சமஸ்த சாம்பிராஜ்ய லக்ஷ்மீகடாக்ஷமுண்டாகும், அப்படிக்கன்றி விடியுமுன் எழுந்து நித்திரையிலிருக்குங் கணவனை எமனைப்போல் பார்த்து வீட்டில் சமஸ்த சாமக்கிரியையும் நிறைந்திருக்க எறிகரும்புகூட கிடையாதே சூரியன் இரண்டுமார் தூரம் வந்துவிட்டானே இன்னுந் தூங்குகிறாயே பாவியென்றும் பலரறியும்படிப் பகருவ தன்னியும் அக்கம்பக்கத்தன்னைகளுடன் பலதருஞ்சொல்லி புருஷன் பவுஷிவைவாங்கி அனுதினமும் இப்படியப்படி யென்றும் சொல்லத் தாமில்லாத சண்டைச் சச்சரவு செய்யும் பெண் பிராப்தமானால் அந்த அற்பசம்சாரத்தைவிட்டு நீங்கியிருக்கும் மனிதனல்லோ மன்னவான்.

மேலும் சிரமப்பட்டு மனவர்த்தி சாமக்கிரியையெல்லாம் கொண்டு வந்தளிக்கினும் இதுவென்ன அற்பம் நவரத்தினங்க ளிழைக்கப்பட்ட ஆபரணங்களும் நூதனமான விலையுயர்ந்த நானாவித ஆடைகளும் வெகுவித ஷட்ரச அன்னமும் பஞ்சமஞ் செருப்புகளைச் சுவுந்தாகிலும், குண்டுணிவேலைகளைச் செய்தாகிலும் சம்பாதித்துக்கொண்டு வந்து கொடுமென்று தினமும் வாதனைசெய்யும் கீர்த்தியில்லாத மனைவி சம்பிராப்தமானால் அந்த வனுசிதமாகிய பாழும் சம்சாரத்தை விட்டு நீங்கியிருக்கு மனிதனல்லோ மன்னவான். இதுவன்னியிலும் அனுதினமும் இவ்விதமாகிய ரோதனை சகிக்காமல் மனதுக்கு சஞ்சலமுண்டாகும. நாளுக்குநாள் வலுவைக்குறைக்கும் யானையை யொத்த வச்சிர சரீரம் பிணத்தைப் போலாகும்படி செய்யும் ஈனத் தொழிலுக் குட்படச் செய்யும ஈஸ்வர தியானத்தை கெடுக்குமாகையால் வலது கரத்தில் சக்கரத் தாழ்வானைத் தரித்த எம்பெருமான் தொண்டருக்குத் தொண்டர்களும் சமஸ்த இஷ்டஜனங்களுங்கேளுங்கள் பாழுங் கஷ்டசம்சாரத்தை விட்டு யிருக்கும் மனிதனே மன்னவான் ஆதலால், அடியேனுக்கு இரண்டாவது சம்சாரம் வேண்டாமென்று மருத்தசாதுவாகிய கோராவைநோக்கி சாதுக்கள் சர்வமும் எம்பெருமானென்று மதியினன்னிய ஓ சுவாமி! தேவரீர் சொல்லிய ஈடவடிக்கயுடைய பெண்ணை நாங்களுமக்கு விவாகஞ் செய்து வைப்போமா? அப்படி நீர் ஒருக்காலும் நினைக்க வேண்டாம். நல்ல குலத்திற்பிறந்தவளும் கற்பினிலுயர்ந்தவளும், சாந்தம், க்ஷமை முதலான நற்குண நற்செய்கைகளுடைய சன்னிகையையே தள்ள வேண்டாமென்று பலநீதிமார்க்கங்களைப் புகன்று சம்மதிக்கச்செய்து கூடவே யழைத்துக்கொண்டு பத்மாவதியின் தாயார் வீட்டிற்குட்சென்று சகல மரியாதையும் நடத்தி நல்லகடிகையில் பச்சைப்பந்தலிட்டு, வாழை, கமுகு, பலா முதலானதுகள் நட்டு சந்தனம் பூசி மகிழ்ப்பேசி மாப்பிள்ளையை அலங்கரித்து மணப்பெண்ணையு மலங்கரித்து மணவறையிற் சேர்த்து ஹோமம் வளர்த்தி வேதமந்திரங்க ளுச்சரித்து சுமங்கிலிகள் மங்களம்பாட நாரியின்மிடத்தில் மங்கிலியஞ் சூட்டி ஆலங்காட்டி பந்துக்களனைவோரையுங் கூட்டி விருந்திட்டு வெகு ஆனந்தப்பட்டு அதிதியப்யாகதாளுக்கன்பாய் தானமளித்து தம்பதிகளைக் கண்டு களித்து புஷ்ப சந்தன தாம்பூலாதிகளைப் பெற்றுத்தங்கள் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

மாப்பிள்ளை பதினான்கு தினம் அவ்விடத்தில் ஆடம்பரமாயிருந்தார். இப்படியிருக்கும் மாப்பிள்ளையை மாமனார் வரவழைத்து ஓ மருகனே! உன்னைப் போல தாசஉத்தமர்கள் அநேகரிருக்கினும் உனக்குச் சமானமானவர்கள் இவ்வுலகில் இல்லவேயில்லை. சத்தியாசந்தனரும், சாதுசேவை செய்பவரும், சாந்தம், பொருமை, ஜீவகாருண்யம் முதலான நற்குணங்கள் நிறைந்த சாதுவென்றறிந்து என் இரண்டாவது புதல்வியையும் தங்களுக்குக் கொடுத்து மணஞ்செய்வித்தேனாகையால் ஒரு பெண்ணிடம் பிரியமும் மற்றொரு பெண்ணிடம் வெறுப்புங் கொள்ளாமல் இருவரையுஞ் சமமாக அன்பாய் இன்பாய் பாதுகாத்து செழிப்புடன் இல்லறதர்மம் நடத்தக்கடவாயென்றுமுன்னடந்திருக்குங்காரியங்களை மறந்து பெண்கள்பேரிலிருக்கும் பிரியத்தினால் பாண்டுரங்கள் திருவடிகள்பேரில் ஆனையாய் ஒருமைப்பட்டு நடந்து கொள்வாயென்றார்.

கோரா மாமனாருரைத்த பிரமாண வார்த்தைகளைக் கேட்டு களிக்கடலில் மூழ்கினவராய் பாண்டுரங்கநாதன் நமக்குப் பெருத்த சகாயம் செய்தாரென்று நாம் விவாகம்வேண்டாமென்று மருத்திருந்த நமதெண்ணப்படி முடித்து வைத்தார் பரம உபகாரியாகிய பகவானென்றெண்ணி அதிக அன்போடு மாமனாரைநோக்கி ஓ மாமா தங்கள் இஷ்டப்படியே இருவரையும் சமமாக பாவித்து நடத்துகிறேன் என்று சொல்லி விடைபெற்று தனது அகஞ்சேர்ந்து இரு

Koviloor Digital Library

வருக்கும் ஆடையாபரணங்கள் முதலானதுகளை சமமாய் இரண்டுபிரிவுகளாய்ப் பாகித்து இருவருக்குங் கொடுத்து இரண்டாவது பத்தினியைப் போலவே யாதொரு வேலைகளையும் அவள்கரத்தால் பெருமல் நிவர்த்திபண்ணி பகவான் நாமபாராயணத்தோடு தன்குலத்தொழிலைசெய்து அதினால் கொடுக்கும் ரொக்கங்களை பாகித்து இருவருக்குங் கொடுப்பதன்றி ஏழைபரதேசிகளுக்குத் தான்மீந்து நாளுக்குநாள் பக்தியில தேர்ந்த சாதுகூட்டங்களைச் சார்ந்து நாள்தோறும் சாஸ்திர விசாரணையிற் களிகூர்ந்து இருந்தார். கேட்டீர்களோ சித்தர்களே என்று பின்னும் நாபாஜிசித்தர் சொல்லத்தொடங்கினர்.

ஆணவம் மாயை காமங்களைப் போக்கி அஞ்ஞானந்த காரத்தை நீக்கி ஆதிதேவன் திருவடிகளில் மனதைத்தாக்கி ஆனந்தத்திற் சொக்கித் தன்னைமறந்த சித்தர்களே, ஜீவன் முக்தர்களே, பரிசுத்தர்களே, பிரசித்தர்களே கேளுங்கள்! சாதுவாகிய கோராவின் இரண்டாவது பத்தினியானவள் கணவன் தன்னோடு பேசாமலும் தன் கரங்களால் யாதொரு வேலையுங் கொள்ளாமலும், தன்முகத்தை பாராமலும், தன்னோடு சேராமலும் இருப்பதை உணர்ந்துக் கொள்ளும்பொருட்டு தன் தமக்கையைநோக்கி அடியம்மா நாயகன் இப்படி வர்மமாயிருக்குங் காரணம் ஏதோ அதை தெரியச்சொல்லடி என்ன பத்மாவதி தங்கையை நோக்கி அடியம்மா முன்னமிவர் குழந்தைக்காலினால் மிதித்துக்கொல்ல அதைப்பிகத நான் அவர் பக்தியைக் கெடுத்ததன்றி நிந்தனையுஞ்செய்தேன் ஆனால் அவருக்குக் கோபம் பிறந்து தண்டத்தை யெடுத்துக்கொண்டு என்னை அடிக்கவந்தார அதற்கு பயந்து நான் ஓ நாதா பாண்டுரங்கன் மேலாணையாம் என்னைத் தொடாதே என்றேன். இதைக்கேட்ட உடன் பதிலொன்றுஞ் சொல்லாமல் அன்றுமுதல் இன்றைய வரையில் என்னிடம் பேசாமலும் என் கையால் யாதொரு வேலையும் பெற்றுக் கொள்ளாமலும் சமஸ்தமும் நிவர்த்திசெய்திருந்தார். இதுவிஷயத்தில் அடியாள் யோசித்து சந்ததிக் கிடமில்லாமற் போச்சுதே யென்று நம் தாய் தந்தைகளிடத்திற் சொல்லி இரண்டாவது உன்னை விவாகஞ் செய்துவைத்தால் சந்ததி உண்டாகும் குடும்பவிர்த்தி யடையுமென் றெண்ணி உன்னை விவாகஞ் செய்து வைத்தேன். இக்குற்றம்நம்முடைய தந்தையால் நேரிட்டது என்னுலும் பதியானுக் தோஷமில்லை யென்றாள்.

தங்கை தமக்கையை நோக்கி அடியக்கா! எந்த முகாந்திரத்தால் நம் தந்தையால் குற்றம் நேரிட்டதென பத்மாவதி அடிதங்கையே உனக்கு விவாகம் நடந்தபின் நமது தந்தை முன்நடந்த சங்கதி ஞாபகமில்லாமல் மருமகனை வரவழைத்து எனது குமாரத்திகளாகிய இவ்விருவரையும் பாண்டுரங்கன் திருவடிமேதாணையாய் சமமாகப் பிரியத்துடன் பாதுகாக்கக் கடவாயென்று சொல்லி விடைகொடுத்தனுப்பியபடியால் நமது கணவன்சத்தியத்திற்குட்பட்டு ஆடையாபரணங்கள் யாவும் பாகித்துக் கொடுத்து என்னைத்தொடாமலும்பேசாமலுஞ் சர்வவிஷயங்களையும் நீக்கினதுபோல உன்னால் யாதொரு வேலையுங்கொள்ளாமலும் என்னைப்போலவே உன்னையும் சமமாகப் பார்க்கிறுரென்ற தமக்கையை நோக்கி தங்கை அடியக்கா எம்மர்மங்களை என்னிடம் முன்னமே சொல்லாமல் மனதில் வைத்திருந்து நீ கெட்டதுமல்லாமல் தான் கெட்ட குரங்கு வனத்தையுங் கெடுத்ததைப் போல என்னையுங் கெடுத்தாயே, அபிமானம் விடுத்தாயே, தாய்தந்தை யரையடுத்து வேறோர் நாதனுக்குக் கொடுப்பதையுந் தடுத்தாயே என்று சொல்லித் துக்கக் கடலில் மூழ்கி விதியின்படி முடியுமென்று பகவானை தியானித்துக் கொண்டிருந்தாள்.

இப்படி சிலநாள் சென்றபின் ஓர்நாள் சாதுவாகிய கோரா தன் பிரக்ஞையின்றி நித்திரை செய்வதைப் பத்தினிகள் இருவருமறிந்து அவர் வலப்புரத்தில் மூத்தாளும் இடப்புரத்தில் இளையாளுமாகப்படுத்து அவர் கரங்கள் இரண்டையும் இருவர் மார்பின் மேல் போட்டுக்கொண்டு நித்திரைசெய்தார்கள். இதில் கோரா மூன்றாஞ் சாமத்திலேயே ஜாக்கிரதைப்பட்டு கண்விழித்துப் பார்த்து கரங்களிரண்டும் பத்தினிகள் மார்பின்மேல் இருக்கக்கண்டு பகவான் திருவடிக்கபசாரப்பட்டதே யென மிகவுஞ் சினங்கொண்டு கத்தியை கொண்டு இரண்டு கரக்களையும் இரண்டு துண்டாக வெட்டிக்கொண்டு இனி தேகவியோக மடையுங் காலம் நேரிட்டது இப்போதே நமதிஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ பாண்டுரங்கனைத் தியானஞ் செய்து மோக்ஷானந்தமடைவோமெனத் துணிந்து பகவானை நினைத்துக் கண்ணீரால் நனைந்து மொண்டிக் கரங்களைக் கூப்பிக்கொண்டு பாதுகாப்பாயெனவிண்டு. அச்சுதா, கேசவா ஆயனே அபயம், உச்சிதா நானுவுபாயனே அபயம் புண்டரிகாக்ஷ பரிபூரணு அபயம், அண்டரேத்தும் ஆதிகாரணு அபயம், பரமபுருஷ பத்மநாபனே அபயம் திருவாழ்வுதரு ஞானதீபனே அபயம் சங்கு சக்கர தண்டபாணியே அபயம், பங்கயிலா கோத

Kotte Digital Library

ண்டபாணியே அபயம், மாயனே உலகுண்டவாயனே அபயம், தூயனே தூயர்கள் நேயனே அபயம் அடியார்கள் மேலநிகமித்திர அபயம், படியுளோமேத்தும் பலபத்திர அபயம், மச்சாவதார மலிவண்ணனே அபயம், கச்சாவதார நற்கண்ணனே அபயம், ஜெயராம ஸ்ரீராமதேவனே அபயம், பவனகுரு மகாறுபாவனே அபயம், மாசுவா வைகுந்த வாசனே அபயம், யாதவா சாவா யீசனே தேவாநுகூல திரிவிக்கிரமா அபயம், யாவரும் போற்றும் பராக்கிரமா அபயம், சுரர்நர் தொழுதேற்றும் முராஹரி அபயம் ஹரி ஹரீ ஹரிஹரி ஹரிஹரீ அபயம், பக்தவத்ஸலா வேணுகோபாலா அபயம், முக்தியருள் முகுந்த பூபாலா அபயம், சீதாசமேத துளசிதரா அபயம், நாநாவிநோத தாமோதரா அபயம், மதுசூதனா கிருஷ்ணா, வாமனா அபயம், பதிதபாவன லோகபாவனா அபயம், பஞ்சபாண்டவர் தூதராமனே அபயம், செஞ்சுவோர்க்கருள் பரந்தாமனே அபயம், தங்கபாதா தொனிசங்கனே அபயம், கரிவரதகோவிந்த கர்த்தனே அபயம் சிரமைநீர்த்தாள் வைபிரசித்தனே அபயம், பாண்டுரங்கா விஷ்ணுபகவானே அபயம், ஈடேன்னையாளுவாயிறைவனே அபயம், துரோபதை தனைக்காத்த தோன்றலே அபயம், விரோதமென் மீதிலேன் விமலனே அபயம், அருமறைகள் புகழாதிமூலமே அபயம், திருவருளை யீந்திடுஞ் சீலனே அபயம், வெங்கடேஸ்வர வேணுநாதனே அபயம், சங்கடந்தீர்க்குஞ் ஜகநாதனே அபயம் அபயம் என்று தோத்திரஞ் செய்த கோராமுனையைக் கேட்ட பரமகருணாநிதியாகிய பகவான் முன்னம்யாத்திரை செய்யச்சென்றகோராவின் தம்பியைப்போல வுருவங்கொண்டு அதிவேகமாய்வர அம்மார்க்கத்திற் கண்டவர்க ளெல்லாம் எப்போது வந்தீரென்று விசாரிக்க, அவர்களுக்கு இப்போதே வருகிறேனென்று சொல்லி அத்தெருவின் மார்க்கமாய்வர வீதியிலுள்ளோர்கண்டு க்ஷேமலாபங்களை விசாரிக்க, அவர்களுக்கும் விடையளித்து வீடுசேர்ந்து தமையனுக்கும் மனிதனுக்குந் தெண்டனிட்டு தான் யாத்திரை செய்யப்போனது முதல்சேவித்த தலங்களின் விசேஷங்களையும் ஆதியோடந்தமாகச் சொல்லி அனந்தரம் காங்கள் வெட்டுண்ட ஆச்சரியத்தை மதனிகளாலுணர்ந்து விரைந்து அன்னபானாதிகளை சமைத்து யாவருக்கும் பகுந்து தமயனுக்குத் தொண்டு குறைவின்றி செய்துக் கொண்டு நாளைப்போக்கி காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்க பண்டரிபுரத்தில் பிரம்மோற்சவந்தொடங்கி நடந்துவர அதில்நாமதேவர் சாக்ஷாத்பாண்டு ரங்கநாதன் கோரா கும்பருடைய திருவறத்தில் கைங்கரியஞ் செய்திருப்பதை யுணர்ந்து உற்சவங்கண்டருள வழைமீதிற் கிருபை கூர்ந்து எழுந்தருளவேண்டும் பண்டரிநாதா பாண்டவர்தூதா மறைபன்னும் பாதா மாதுருக்மணிசமேதா வென்றுதுதிக்கும் நாமதேவருடைய முறையைக்கேட்டு கோரா கும்பரை நோக்கி அன்று சந்நிதியின் மண்டபத்தில் நாமதேவர் பகவத் காலக்ஷேபஞ் செய்கிறாராம் நாமெல்லோருஞ்சென்று சிரவணஞ் செய்வோம் வாருமென்ன கோராகும்பார் உடனே சந்நிதியைப் பார்க்க நடந்து நாமதேவர் காலக்ஷேபம் செய்யுமிடஞ் சேர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு தம்பி வுருவங்கொண்ட பகவான் அண்ணிக ளிருவரையும் அழைத்துக் கொண்டு சந்நிதிசேர்ந்து ஸ்திரீகளிருக்கும் இடத்தில் இருவரையுஞ் சேர்த்து மறைந்தார். அதுசமயத்தில் நாமதேவர் அங்கெழுந்தருளி யிருக்கும் சாதுக்களை நோக்கி ஓ பாகவதஅன்பர்களே! நாமெல்லோரும்பகவான் தியானஞ் செய்யாது நாளை வீண் போகாமல் பகவத்தியானத்திலேயே நாளைக் கழிக்கவேண்டும் அதேதெனன்றால் இப்பூமியின் கண்ணெண்பத்து நான்குலக்ஷம்ஜீவராசிகள் அதெப்படியெனில், ஜலத்திலுதிப்பது ஒன்பது லக்ஷம், பறவைகளுதிப்பது பத்து லக்ஷம், புழுக்களாய் ஜெனிப்பது பதினொருலக்ஷம், அசையும்பொருள் அசையாப் பொருளாக ஜெனிப்பது இருபது லக்ஷம், நான்கு காலுள்ள மிருகங்களாயுதிப்பது முப்பது லக்ஷம், மானிடனாக வுதிப்பது நான்கு லக்ஷம், இந்த எண்பத்திநான்குலக்ஷத்தில் மானிடனாக ஜெனிப்பது அரிது அதேதெனில் மற்ற ஜீவஜெந்துக்களுக்குஆகாரம், நித்திரை, பயம், மைதுனமென்னும் நான்கு அறிவுமாத்திரமுள்ளது மானிட ஜென்மத்துக்கு பகுத்தறியும் ஞானமொன்று விசேஷித்திருப்பதால் இந்தஜென்ம மெடுப்பது அரிது இதிலுங் கூன் குருடு செவிடு பேடி மொண்டி முடமென்னும்படியான அவயவயீனமின்றி சர்வாவயவ பரிபூரணமாய் பிறப்பதரிது பிறக்கினும் பெண்ணா யுதிக்காமல் புருஷயுதிப்பது அரிது புருடனுதிக்கினும் ப்லக்ஷகுச க்ரௌஞ்சசாக புஷ்கரசால்மமென்னுந் தீவுகளில் உதிக்காமல் ஆரியவர்த்தகப் புண்ணிய பூமியென்னும் பிரமாணப்படி இந்தஜம்புத்தீவிலுதிப்பதரிது, இதுவன்றி, இந்திரசருகபஸ்தி நாக தாம்பிர வாருணி சௌமீய கெந்தர்வமென்னுங் கண்டங்களுதிக்காது இப்பரத கண்டத்தில் உதிப்பதரிது. இத்தனைவிதங்களிலிருந்து சிரமப்பட்டு அரிதாய் வந்த இந்த ஜென்மத்துக்கு மரணமென்னும்படியானது ஒன்றுண்டு. அதுவோ பாலியத்திலோ யௌவனத்திலோ கௌமாரத்திலோ வா

Koviloor Digital Library

ர்த்திகத்திலோ, அன்றியும் ஹரிலோ, ஆவணியத்திலோ, ஜலத்தின்மத்தியிலோ, எப்போதோ ஏகதேவேளையிலோ, ஒருவேளை கண்வழிபோமோ, செவிவழிபோமோ, களிவழிபோமோ, நாசிவழி போமோ நாமத்தின் வழி போமோ, இந்த ஒன்பது வழியில் எந்த வழியாய்ப் போமோ அன்னியிலும் கண்ணை மூடினல் மரணம் கண்ணைத்திறந்தால் ஜெனனம இந்தனைகலபத்தில் மரணமசேரிடும். மரண மடைந்தாலோ நாயோ பேயோ கழுதையோ அல்லது குதிரையோ மறுபடி எந்த ஜென்மம் சம்பவிக்குமோ ஆகையாலிந்த அரிதாகிய ஜென்மத்திலிருந்து ஆக்மா பிரிந்து போவதற்கு முன எம்பெருமானை தியானித்து அருளைத்தேடிக்கொள்வதற்கு இதுதான் அரிதாகிய ஜென்மம் ஆகச்சே இந்தஜென்ம மிருக்கிறபோதே எம்பெருமானைத் துதிசெய்து மேன்மையாகிய பதவியை யடையுங்கள் சாதுக்களே அதெப்படி யெனில், வாக்கில் நாமத் தியானத்தோடு கரதாள சகிதமாய் மனதை பகவான் திருவடியில் கிறுத்திப் பஜிக்கவேண்டும். அருச்சுனன் கண்ணனைநோக்கி எனதாண்டவனே தேவரீருக்குயாரிடத்தில் அதிகப்பிரியமென்று வினவ பகவான் பார்த்தனைநோக்கி ஒபற்குண சஞ்சலமிலா மனதோடு எனது நாமத்தை தியானித்து கரதாளசகிதராய் பஜிக்கும் சாது எவரோ அவருடைய தாசனுக்கு தாசனுகி மிகுந்த பிரியமா யிருப்பேன். இத்தன்மையாய் எத்தனைகால மிருப்பே னென்றால், ஜென்மந்தோறும் அந்த சாதுக்கு தாசானு தாஸனாக யிருப்பேனென்று கீதையில் பகவான் சொல்லியிருப்பதால் நாமெல்லோரும் அத்தன்மையாய் பஜிப்போமென்று நாமதேவர் சாதுக்களுக்கு விண்டாரென்று சொல்லி ஞானதேவர் சித்தர் உத்தவசித்தர் முதலானோரை நோக்கி பின்னுஞ்சொல்லுகிருர்.

ஆகமாதி புராணசாரத்தை யுண்டு தேகாபிமானத்தை விண்டு மோகாதி பாசங்களைக் கொன்று ஏகாந்த நிலையில் நின்று யோகசாதனஞ் செய்யுஞ் சித்தர்களே பிரசித்தர்களே கேளுங்கள். பின்பு சாதுக்கள் யாவரும் நாமதேவர் சொல்லியபடி கரதாளத்தோடு பஜிக்கிறபோது கிராசை யிதாசை யொத்த சமநிலையில் நின்று கோராவனவர் தானும் தன்னிருமொண்டி கரங்களை தட்டிக்கொண்டு தன்னை மறந்து பஜிக்கிறபோது தாமரை மொக்கானது சூரியன் கிரணபட்டமாத்திரத்தில் மலர்வதைப்போல் பாண்டுரங்கனது கிருபையால் இரண்டு கரங்கள்முளைத்தன அதைக்கண்டு சாதுக்கள் யாவரும் ஆச்சரியமடைந்து ஜெய விட்டல விட்டல வென்று மிகவும் கோஷித்தார்கள்.

இவ்வாச்சரியத்தைக் கண்ட பத்மாவதி சிக்கிரமாயோடி நாமதேவர் திருவடியில் விழுந்து எழுந்திரா திருக்க நாமதேவர் ஆசீர்வாதஞ்செய்து எழுந்திரும் அம்மணிபென் றுயிலின்பத்மாவதியை நோக்கி, ஓ அம்மாநீ எவ்விடமிருப்பது உன்னுடைய கணவர்யார் அவருடைய பேரென்ன உனக்குற்ற குறையென்ன முகவாட்டமடைந் திருப்பதென்ன சொல்லும் என்ற பரமபாகவதரை நோக்கி அதிவிநயத்துடன் பாலன் தந்தையின் காலினல் மிதிக்கப்பட்டு மரணமடைந்ததுமுதல் இதுபரியந்தம் நடந்ததை சயிஸ்தாரமாகச் சொல்லி ஓ மஹாத்மாவே! தங்களுடைய கிருபையால் அடியாள் கணவன் வெட்டிக்கொண்ட இருகரங்களும் மறுபடியும் உண்டாகும்படி அருள்மழை பொழிந்த வெள்ளையே அதுபோல அடியாள் பாலனையும் தந்தருளவேண்டும் சுவாமி கருணைக் கடலேயென்று துதித்துநிற்கும் பத்மாவதியை நோக்கி நாமதேவர் சொல்லுகிருர்.

கேளாய் பத்மாவதியென்ற நாமம்பெற்றஅன்னையே உனக்குக் குமாரன் வேண்டுமென்ற அவாமிகுதியா யிருப்பதால் இச்சந்நிதானத்தின் முன் பாண்டுரங்க விட்டலனை துதிசெய்வாயாகில் அவசியம் பகவான் உனக்கும் பாலனை கடாக்ஷிப்பார் தடையில்லை நீயும் சுகமடைவாயென்ற நாமதேவர் மொழியை சிரமேற்கொண்டு அப்பத்மாவதிபகவானைத் தோத்திரஞ் செய்யத்தொடங்கினள். ஓம் ஸ்ரீமத் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா சரணம், ஆதிமத்தியாந்தரகிதா சரணம், மாதவா சரணம், யாதவா சரணம், வெங்கடரமணா சரணம், கேசவா சரணம், வாசன்பணி சர்வேசா சரணம், நேசமிகுந்த அன்பர்கணேசசரணம், தேசமெங்கும் நிறைவாசா சரணம், அனைதையைக் காக்கு மன்பா சரணம், விநோதங்களிழைக்கும் விமலா சரணம், மனோவாக்குக் கெட்டா மாயனே சரணம், பணிபன் மேற்றுயில்பவனே சரணம், சத்வகுண மிகுந்த பிரசித்தனே சரணம் அத்தியைக் காத்திலகுஞ் சுத்தனே சரணம், வித்தையிற் றேர்ந்தவஸ்துவே சரணம், எத்திசையோர் துதி நித்தியனே சரணம், தற்பரத்தாயிரநாமா சரணம், சிற்சுகானந்தசீமா சரணம், அற்புதமாயைக் காதியே சரணம், விற்பனமிதவனுதியே சரணம், சொற்பனத்திலுந் தோன்றுசோதியே சரணம், நற்பதமளிக்கும் நன்னிதியே சரணம், இச்செகத்தோர் துதி மச்சாவதாரனே சரணம், பார்மிசை பஜிக்கும் கூர்மாவதாரனே சரணம், தராதலத்தோர் போற்றும் வராகவதாரனே சரணம், பொங்கமாம் நாசிங்கனே சரணம், தாமரையாள்புகழ் வாமனசரணம், அரசரைமாய்த்த பரசுராமனே சரணம், தசரதகோசலை ராமனே உரமிகுபலராமனே சரணம், மண்ணில் நிலைத்துப் புண்ணியந்தழைக்க விண்ணவர் செ

Koviloor Digital Library

ழிக்கவந்த கண்ணனே சரணம், உலகத்தில் கலியும் பலநர் தமக்காய் கலமிருகற்கியாய் நிலைநின்றவனே சரணம் என்று பலவாறு துதிசெய்யும் பத்மாவதியும் பலசாதுக்களுங்காண சந்நிதி மூலஸ்தானத்திலிருந்து அப்பாலன் தவிழ்ந்துக்கொண்டே தாயாரை நோக்கி சமீபித்து வந்தான் பாலனை அன்னையிருந்த ஆவலோடெடுத்து உச்சிமுகந்து முத்தந்தந்து கையிற் கண்டதனத்தை கிளையிற்கண்டெடுத்த வாவடையும் அடங்கா மகிழ்ச்சியைப்போல பத்மாவதியும், அதிகளிப்பு அடைந்திருந்தனள்.

இந்த ஆச்சரியத்தை யாவத்திராளுங்கண்டு ஆஹாஹாவென் றுனந்தங்கொண்டு ஆநந்தக் கூத்தாடி பகவான் நாமத்தைப்பாடி திரேகத்தின் ஆசைவிட்டு வாடி. சோகத்தைநாடி நின்றார்கள் இவர்களிப்படிக் கிழிக்க கோராவின் இரண்டாம்பத்தினி வேகமாயோடி. நாமதேவர் தாட்டாமரையில்விழுந்து தெண்டனிட்டெழுந்து ஓஸ்வாமி எங்கள் குலதெய்வமே தங்களையடுத்த யாங்களினியுய்ந்தோமென பலவாறுபுகழ்ந்து தொழுதுநின்றாள். இவ்விதமாகத் துதிசெய்யுங் கோராவின இரண்டாம்பத்தினியைநோக்கி நாமதேவர் ஓ பதிபக்தியிற் சிறந்தசுதியே உனக்குண்டான மனக்கவலைஎன்ன அதை தெரியச் சொல்லுமென்ன கோராவின் இரண்டாம்பத்தினி ஓசுவாமி முன்னம் எனது நாதன் வெட்டிக்கொண்ட அஸ்தங்க ளிரண்டையும் கருணையோடு கிளைக்கச்செய்தார். இரண்டாவது இறந்துபோன என்தமக்கையின்பாலன் உயிர்பெற்றுவளர்ந்துவர கிருபையோடளித்தீர். அதுபோல அடியாள் கணவனை இணங்கியிருக்கத் தயை செய்யவேண்டும். எங்கள் குலதெய்வமே என்ன நாமதேவர் ஓபாக்கியவதி மிகவும்யோக்கியவதி ஸாக்ஷாத் பாண்டுரங்கனை நீ துதிசெய்வாகில் பக்தாள்காமித்த பொருளைத்தந்து ரக்ஷிக்கும்பண்டரிநாதன் தன் நினது கோரிக்கையை நிறைவேற்றுவாரென்ற நாமவேர் வசனத்தைசிரமேற்கொண்டு பகவானைத் துதிசெய்யத் தொடங்கினள்.

கோராவின் இரண்டாம்பத்தினி விடோபாவைத்துதிசெய்தல்.

விருத்தம்.

கற்பகோடிகாலமிக் கர்மவினையிற்சிக்கிக்
 கசிந்துருகி நைந்துநொந்தேன்
அற்பமலவுடலிதனை யடுத்துநீடுழியா
 யகிலமதில் நிலைபெற்றுய்ய
கற்பனையிலாமலே காலம்வீண்போக்கினேன்
 கருணைபெற மனதிலெண்ணேன
விற்பனவிவேகிகள் தினந்தொழும்விமலனே
 வீமநதிக்கரை வாசனே. 1
சீர்கொண்டபங்கயத் துளபமணியொடுதிருத்
 திகழுவமர் மார்பனேயுன்
நேர்கொண்டவசுரரை நிமையொழுதில்வதைசெய்த
 நேமிதரித் தலவுகையா
ஏர்கொண்டவெங்கையே யெங்குமொன்றுப்தங்கு
 மேகாந்த ரூபமெய்யா
நீர்கொண்டமமத வண்ணனேகண்ணன
 கியலபண்டரி நாதனே 2
நந்தநந்தலாமுகு குந்தவரதாயொரு
 நாளுமுனைத் துதிசெய்திலேன்
சுத்தமிர்தவித மாயமாயையைச்
 சார்ந்துனக் கடிமைசெய்வேன்
பித்தைதனிறபுத்திரமித்திரர்கள் பந்துக்களெனுஞ்
 சிற்றின்பமே கோரினேன்
எந்தையேபண்டரி நாதனேயேழையென்
 னிடர்தீரும் பாண்டுரங்கா. 3
எவ்வளவுமுனைவேண்டி யென்னாளுந்தொழுதிலேன்
 யெங்குமநிறைந் தருள்மூர்த்தியே
கள்ளமேமிருந்தக் கசடர்களில்முதற்
 கள்ளியானினி யென்செய்வேன்
உள்ளமதுகலங்கியுனை யண்டினேன்மேலான
 வுபயபாதங்க ளதனை
வள்ளலேபண்டரி வாசனேகருணைபுரி
 வஞ்சியென திடர்தீரவே. 4
பலியரசர்மீதினிற் பக்குவத்துயில்கொளும்
 பக்தவச்சலா ஸ்ரீதரா
மணிவண்ணனேயிரு புரமுமருவியேமிற்கு
 மாதர்மகிழ் பாண்டுரங்கா
பணிகள்மிகவேயமரர் விடத்தினில்மாங்கல்யம்
 பரிவுடன் சூடிநாதன்
துணிவோடெனைத்தொடா திருப்பதைவிலக்கியே
 தொடர்ந்திருந்திடச் செய்குவாய். 5
பிள்ளைபடுந்துயரதனைப் பிதாகண்டுசகிப்பனோ
 பெற்றவள் மனம்பொறுப்பளோ
அல்லல்படுமெனைக்கண் டறவருப்பாகியே
 யகலவிடாது யெந்தன்
தொல்லைவினைகள்போக்கித் துரிதமாயாளுமா
 தேவாதிதேவ வமலா
கல்லைப்பெண்ணாக்கிய கழற்பணிந்தேஉந்தன்
 கடைக்கண்ணாற் பார்த்தருளுவாய். 6
ஆதியாயனைத்துலகமதனை சிருஷ்டித்துநின்
 னன்பரைக் காத்தசீலா
சோதியாகியநேமி கொட்டுதஷ்டர்தமைச்
 சூக்ஷ்மமாய்க் கொன்றபாலா
நீதியெங்குநிலைபெற் றுய்யவேசெய்த
 நீலநிறமேவு கண்ணா
கோதிலாசுகுண வாரியேபண்டரிக்
 கோயிலுறை பாண்டுரங்கா. 7
இன்னமுங்கோபமோ யெளியவட்கிரங்கா
 திருப்பதென் மனதாபமோ
சின்னஞ்சிறுவள்செய்த குற்றமதைநற்றவச்
 செல்வயென வெண்ணிச்சாரும்
சொன்னபீதாம்பரச் சோதிகௌத்துகதரச்
 சோமநிகர் முகபங்கயா
கன்னல்நிறைச்சோலைசூழ் சந்திரபாகநதிக்
 கரையில்வாழ் பாண்டுரங்கா. 8
காவித்தபொருளினைத் தடையின்றியீபுகற்
 கற்பகந்தருவே தேனே
பூமித்திருமகள் மலர்மகளுநதனே

Koviloor Digital Library

புசிப்பதற் கினியபாகே
நேமிசார்ங்கங்களை யிடைவிடாதுதரித்திலகு
நிமலனே நெடியமாலே
காமியென்றுறைநிரக் கொழுநனைத்தந்தருள்
கடல்நிகர் மேனிவண்ணா 9
உள்ளும்புறம்புமாய் சகலஜீவர்களிடத்
தொளித்தலவு சுகமாயனே
என்றூர்குளொண்ணாபோ லெங்குநிறைந்
தொழிலார்ந்த ரூபனேலா
புள்ளூருங்கேசவனே போற்றியேமறைநான்கும்
புகலறிய வசகாயனே
கள்ளூறுபூமபொழில்சூழ் கனவிமாநதிக்
கரையில்வாழ் பாண்டுரங்கா. 10

வசனம.

இவ்வாறு பாண்டுரங்கநாதனை துதிசெய்தாள் தன் எண்ணம் நிறைவேறுமையால் மறுபடியும் நாமதேவர் திருவடிகளிற் சாணாகதியடைந்தாள். நாமதேவர் ஆசிர்வதித்து அருகிலிருத்தி கோராவை யழைத்து ஒபகவத் பக்தசிகாமணி! இந்த இரண்டு ஸ்திரீகளும் உமக்கென்ன முறைவேண்டுமென்னக் கோரா ஒசுவாமி அவர்கள்யாரோ அடியேனுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லையென்ன, நாமதேவர் பக்தசிரேஷ்டராகிய கோராவே இவர்களிருவரும் உம்முடைய பத்தினிகளென்று சொல்லக் கேள்வியுற்றேன், அப்படியிருக்க நீர் பரமபாகவதராயிருந்தும் பொய்வார்த்தை சொல்லலாமா, அவாளுக்கும் எனக்கும் சம்பந்தமில்லையென்று விள்ளலாமா, அவர்கள்மேல்இத்தனைவெறுப்புகொள்ளலாமா, கொண்டாலும் அவர்களைத் தள்ளலாமா என்ன கோரா ஒசுவாமி, பிரமசிருஷ்டிக்குட்பட்டசமஸ்த ஜீவராசிகளும் இந்தவுலகமும் பொய் ஸ்ரீபாண்டுரங்கநாதன் ஒருவரே இறப்பும் பிறப்புமின்றி நித்திய மங்களமாய் அழிவில்லாத நித்தியன், ஆகையால்யான் சொல்வது பொய்யல்லமெய்யே அதெப்படி யெனில் தேகத்திற்கும் ஆத்மாவுக்கும் சம்மந்தமில்லாதிருப்பதால் அவர்களுக்கும் எனக்கும் சம்மந்த மெவ்வாயிருக்கிறதென்ன நாமதேவர் ஞானத்திற்சிறந்தசுக்ஞானியே அப்படியானல் இச்சபையிலுள்ளசாதுக்களில் யாருக்காகிலும் இவ்விரண்டு ஸ்திரீகளையுங் கொடுத்துவிடட்டுமா உம்முடையகருத்தைத் தெரிவியுமென்ன கோரா ஒசுவாமி தங்களுடையசொத்தைத் தாங்களெப்படி விநியோகஞ்செய்யினும் சம்மதம் எனக்கென்ன சுதந்தரமிருக்கிறதென்ன நாமதேவர் உடனே அச்சபையிலுள்ள சாதுக்களை ஒவ்வொருவரா யழைத்து ஒ பாகவதரே! இந்தஸ்திரீகளிருவருங் கோராவின்பத்தினிகள் இவர்களையாதரிக்குந் தலைவர்கள் கிடையாது ஆகையால்நீங்கள் யாரேனுமிவர்களைக் கொள்ளுங்களென்ன சாதுக்கள் ஒவ்வொருவரும்யோசித்து ஒ சுவாமி நாமதேவரே! நல்லவார்த்தை சொன்னீர் ஜென்மஜென்மங்கள்தோறும் பாபங்களைச்செய்து இப்பொழுது இச்சென்மத்தை யடைந்த நாங்கள் அப்பாபங்களைப்படித் துலையுமென்று சஞ்சலமடைந்து தேவரீரது தரிசனத்தாலேனும் பாபங்களை ஒழிப்போமென்றெண்ணி இவ்விடம்வந்தோம் அதையுணர்ந்த தாங்கள் மேலுமமேலும் பாபமூட்டைகள் விசேஷிக்க யேற்றுக்கொள்ளச் செய்வதுதர்மமோ, அன்னியிலும் இவர்களோ பிரம்மக்ஞானத்திற் சிறந்த கோராகும்பாருடைய பத்தினிகள் இவர்களை மனதிலொருதரந்தியானித்தால் செய்த பாபங்களெல்லாம் நெருப்புபொறிபட்ட பஞ்சுப்பொதிபோல் கரிந்துபொரிந்து பறந்துபோம், மேலும் பரமசாதுவின் பத்தினிகள் ஆகையால் பாகவதாபசாரதோஷமுஞ் சம்பவிக்கும்இஃதெப்படி யிருக்கிறதென்றால் (குளிக்கப்போய் சேற்றுபூசியதை யொத்திருக்கிறது) முன்னம் பாகவத அபசார தோஷத்தாலன்றோ துருவாசர்மானமழிந்து அம்பரீஷச் சக்கிரவர்த்தியால் ஆதரிக்கப்பட்டார் அன்னியிலும் பகவானிடத்தில் அபசாரப்பட்டால்பாகவதபுருஷாகாரத்தால் போக்கலாம் பகவானிடத்தில் அபசாரப்பட்டால் அதைப்போக்க பகவானாலுமாகாது ஆகையால் இவ்வுத்தமிகள் எங்களையீன்ற அன்னைகளாதலால் எமக்கு இந்த தோஷம்வேண்டாம் வேண்டாமென்று ஒருவர்தப்பாமல் யாவரும் மொழிந்தனர்.

இவ்வசனங்களைக் கேட்ட நாமதேவர் சிரித்து கோராகும்பாரை யழைத்து, ஒஜீவன்முக்த பாக்கியவந்தரே இந்த சபையிலுள்ள ஒருவர்தவராது யாரும் இந்த ஸ்திரீகளிருவரையும் வேண்டாம் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள் ஆகையால் நீரே இவ்விருவரையும் காப்பாற்றக் கடவீரென்று அவர்கள் கரத்தைபற்றிக் கோராவின்கையில் ஒப்புவித்தார் கோராகும்பார் நாமதேவசுவாமிகள் நேமப்படி இரண்டு வனிதைகளுடன் தன்னில்லஞ்சேர்ந்து சிஷ்யவர்க்கத்துடன் சிலகாலம் பகவானை பஜித்து இறுதியில் பேரின்பவீடடைந்தாரென்று நாபாஜிசித்தர் சொல்லக் கேட்டு உத்தவசித்தர் முதலானோர்கள் பிரமானந்தத்தில் தெண்டனிட்டு விடைபெற்றுச் சென்றார்கள்,

கோராகும்பார் திருவடிகளே சரணம்ஃ

வாழிவிருத்தம்,

சீரான சரவணபவ விலாசச் சிறப்புற்ற யந்திரசாலைவாழ்க
நேராக விதைவாசித்துக் கேட்டு நேமித்துப் பதிப்பித்தோ ரென்றும்வாழ்க
கோராதன் கடாக்ஷததா லிக்குவலயமும் வான்சந்திர சூரியரும் வாழ்க
மாராமல் மாரியென் னளும்பெய்து மன்னியவயற் செந்நெலும் பெருகிவாழ்க.

கோராகும்பார்சரித்திரம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸ்ரீ

ஸ்ரீ ர ஸ் து.

ஸ்ரீ பாண்டுரங்கப்பரப்பிரம்மணே நம:



பத்தாவது,

ஸ்ரீபத்திராசல் ராமதாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

பத்தியொடு ராமகைங்கரியம்பண்ணிப் பண்புடனே ததியாரா தனங்கள் செய்து
நித்தியமு மிராமநாம மிடைவிடாது நிமிஷம்வீண் காலம்போக் காதசுத்த
சத்தியன் ஞானநிதன் புருஷாகாரத் தந்திரத்தால் தாசுரதி யருளைப் பெற்ற
பத்திராசல ராமதாசர் பாதபங்கயங்கள் பலதரமும் போற்றுவோமே.

பத்திராசல மகத்துவம்.

சகலபுராண சரித்திர குதூஹல சித்தர்களாகிய சௌனகாதி முனிவர்கள் புராணத்தலைவராகி சூத புராணிகரைநோக்கி ஓசுவாமி மஹாத்மாவே சகல ஜனங்களுக்கும் பிரியம் ஜெனிக்கும்படியானு ஓர்புண்ணிய கதையைச் சொல்லுமென்று வேண்டிக்கொள்ள அம்முனிவர் சபையோரைப் பார்த்து ஓ முனிவர்களே கேளுங்கள் பூலோகத்தில் தண்டகாரண்யமத்தியில் கோதாவரிக்கிடையில் ஸ்ரீராமக்ஷேத்திரமாகியும் இக்கலியுகத்தில் தர்மங்குறைந்து அதர்ம ம்நிறைந்து ஆசாரங்கெட்டு, பூசாவிதிகளைவிட்டு பரஸ்திரீகட்குட்பட்டு, தனத்தின்மே லிச்சை மேலிட்டு, பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் வர்ணாசிரம தர்மத்தைவிடுத்து, நீசகமதத்தை யடுத்து, ஈவுகொடுப்போரைத் தடுத்து, நற்குலத்தை கெடுத்து, சாதுக்களைதூஷித்து ஏழைகளை த்வேஷித்து பாவிகளைப்பூசித்து அதிதியப் பாகவதர்களை ஹேளனமாய்க் கோஷித்தும் தனயன் தந்தை சொல்லைக் கேளாமலும் பாரியாள் பதிவார்த்தையைக் கேளாமலும் குலஸ்திரீ பரபுருட மோகத்திலைலைந்தும், விலைமாதர் பிழைப்பின்றித்தயங்கியும் அமங்கலிகள் மஞ்சள்பூசி குங்குமமிட்டு மேனிமினுக்குவதும் குலஸ்திரியை அன்னம் ஆடைக்கும் அலையவிட்டு அன்னியஸ்திரீகளுடன் கூடி களிப்படையவும் புருடர்களும் அன்னமிட்டவற்கு கன்னமிடுபவராகியும் இப்படிக்கெல்லாம் சத்தியம் நீங்கி அசத்தியமோங்கிப் பூரண்மாம் நிறைந்து ஜனனமரண வியாதி வதை பீடிக்க அற்பாயுளமர்ந்த நரர்களுக்கு மேலாகிய பதமளிக்கும் பொருட்டு தாரக நாமனாகிய ஸ்ரீராமபிரான் சீதாலக்ஷ்மண சமேதராகி எழுந்தருளியிருக்கும் பத்திராசலமென்னும் சிறந்த பர்வத மொன்றுளது அதுபுண்ணிய பதவி சேவிக்க ஆனந்தமும்உண்டாகுமாதலால் அந்தக்ஷேத்திரத்தின் மகத்துவத்தை இவ்வளவுதா னென்றறிந்து சோல்ல பிர்மதேவனாலு

மாகாது. ஆயினுஞ் சாரார்த்தமட்டும் சொல்லுகிறேன் சாவதான சித்த முடையவர்களாய்க் கேளுங்களென நவின்று சூதபுராணிகர் பின்னும் அவர்களை நோக்கி முற்காலத்தில் சகல பர்வதங்களுக்கும் ராஜனாகிய மேருமலை தன்பத்தினியாகிய மேருதேவியுடன் கூடி புத்திராபேக்ஷையிருந்து பிர்மதேவனை யுத்தேசித்து வெகுகாலம் காத்துமழை வெயிலுக்குப் பின்னிடாமல் சிரமங்களுக்குப் பொறுத்து மிகவும் உக்கிரமாகிய தவஞ்செய்ய அப்பிரமதேவன் மேருமலை செய்யும் தவத்திற்குமெச்சி தரிசனந்தந்து உமக்கிஷ்டமான வரத்தைக்கேளும் தருகிறேனென அப்போது அப்பர்வத சிரேஷ்டன் அந்த சதுர்முகனை அநேகவிதங்களாய்த் துதிசெய்து நான்முகதேவாவெனக்கு ஸ்ரீராமநாமத்தியானஞ் செய்யும் உத்தமபுத்திரனுண்டாகும்படி வரமளித்து ரக்ஷியுமென்ன பிரமதேவர் கருணையோடும் அவ்வரந்தந்து அந்தர்த்தானமாய் மறைந்தார்.

அனந்தரம் சிலகாலத்திற்குப்பின் மேருதேவனுக்கு பிர்மாவின் மொழிப்படி மேருதேவியினால் பத்திரனெனும் புத்திரன் பிறந்து அந்தபத்திரன் ராமானுக்கிரகமடைந்து அத்தேவனுக்கு நிவாசமாவதற்கு மூலகாரணமாகி புராதனகதை யொன்றுளது. அதெப்படியெனில் பூர்வகாலத்தில் தசரதகுமாரராகிய தாசரதி தந்தை வாக்கியபரிபாலனஞ் செய்யும் நிமித்தியம் வனவாசஞ் செய்யச் சென்று தண்டகாரண்யத்தில் பிரவேசித்து, அவ்வாரண்யத்திற் றிரிந்துக் கொண்டிருக்குங் காலத்தில் ஒருநாள் சீதாலக்ஷ்மணசமேதராகி போய்க் கொண்டு ஓரிடத்தில் விசாலமும் மிகவும் நிர்மலமுமாகிய பெருத்த சிலையைக் கண்டு மார்க்காயாசந் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு அச்சிலையின் பேரில் உட்கார்ந்து அதினாலுண்டாகிய சௌக்கியாதிசயத்திற் கானந்தித்து அச்சிலையைப் பார்த்து நீ எங்களுக்கு இவ்விடத்திலுண்டாகிய மார்க்காயாசத்தை போக்கினாய் ஆகையால் இந்தசுகிர்த விசேஷத்திற்காக சில காலத்திற்குள் மேருதேவனுக்கும் மேருதேவிக்கும் புத்திரனாக வுதித்து பர்வதரூபந்தரித்து எங்களுக்கு மிகவும் பிரியபக்தனாகக் கடவாயென்று சொல்லி யதேச்சையாச்சென்றார் பின்பு அந்த சிலை ஜடஸ்வரூபமாயிருப்பினும் ஸ்ரீராமப்பிரசாதத்தினால் ஞானம் மிகுந்த சில காலத்திற்குள் மேருகிரிக்குக் குமாரனாகிய பூர்வஜென்மக்ஞான முண்டாகி முன்சீதாபதியுரைத்த வாக்கியங்களை நினைத்துபக்தபராதீனனும் லோகநாயகனுமாகிய ஸ்ரீராமமூர்த்தியைமிகவும் பயபக்தி யுக்தனாகி அநேக ஆயிரவருடங்கள் அருமையாகிய தவஞ்செய்து தயாநிதியாகிய ஸ்ரீமந்நாராயணன் வைகுந்தத்தில் லட்சுமி சமேதனாகி ஸனகஸந்தனாதி நித்திய சூரிகள் தோத்திரஞ்செய்ய ஆதிசேஷசயனனாகி லீலாவிநோதங்களிற் களித்திருந்த பக்தவத்சலனாகையால் நிஜபக்தனாகிய பத்திரனை கடைத்தேற்றி ரக்ஷிக்க வெண்ணி ஸ்ரீ ராமரூபந்தரித்து ஸ்ரீதேவியு ஆதிசேஷனும் சீதாலட்சுமணர்களாகிய பின் தொடர்ந்துவா முதுகில் அம்புப்புட்டிலும் தனுசையும் கையிற் பிடித்து பத்திரன் தவமிஷ்டனாயிருக்குமிடத்திற்குச் சென்று அவனைப்பார்த்து உன்தவத்திற்கு மெச்சினேன் வரங்கள் கேளுங் கொடுக்கிறேனென்று சொல்லிய ஸ்ரீராமச்சந்திரது கெம்பீரவாக்கியங்களைக் கேட்டு பத்திரன் கண்களைத் திறந்து தன்னெதிரில் நீலமேக நிறமுள்ள திரேகத்தோடும்கோடி மன்மதாகாரனாகியும் ரத்னாபரண கிரீடகேயூர மகர குண்டல மலர்மாலைகள் தரித்தும்விளங்குகின்ற ஜகன்மோகனனும் நீலமேக நடுவில் பளபளவென்று ஜொலிக்கும் மின்னலுக் கொப்பாகிய ஜானகிதேவி தனொரு பக்கத்திலும் சொர்ணவர்ண சரீரத்தோடும் சர்வாபரணாலங்காரத்தோடும், கரங்களில் தனுசு பாணங்களோடும் கூடி லட்சுமணன் தன் மறுபக்கத்திலும் நிற்கத் தன் கண்முன் ஸாக்ஷாத்கரித்த சீதாபதியைக் கண்டு ஸ்வாமி என்றறிந்துபயபக்தி விசுவாசம் மேற்கொள்ள நேத்திரங்களில் ஆனந்தக்கண்ணீர் பெருக புளகாங்கித சரீரனாகி பத்திரன் ராமபத்திரனுக்குத் தீர்க்கதெண்டனிட்டு இருகரங்களைக் குவித்துச் சுவாமி சங்குசக்கரம் கெதைவாள் சாரங்க மென்னும் பஞ்சாயுதங்களை தரித்து சகலலோகங்களுங்கும் சுபங்களைக் கொடுக்கும் தயாபர மூர்த்தியாகி அடியேனைப் போலொத்த பாமரர்களுக்கும்ஞானமளித்துமோக்ஷங்கொடுத்து ரக்ஷிக்கும் அனந்தகோடிசூரியப்பிரகாச தேஜோ மூர்த்தியாகி பிரகாசித்துக் கொண்டிருக்கும் கர்த்தனே அடியேன் நமஸ்காரம்செய்கிறேன்என்னை ஜடனென்றும், மூடனென்றும் நிக்கிரகிக்காமல் அடியேனை அநுக்கிரகித்துமெச்சி வரங்களைகேளும் தருகிறேனென்றும்மொழிந்தீர். பிரமருத்திரேந்திராதி தேவர்களுக்கும் அகப்படாதஉம்மைசேவித்துதங்களால் அபிமானிக்கப்பட்டேனாகையால் எனக்கிதற்காகிலும் மேலான வரங்களைக் கேட்பதற்கு ஒன்றும்தோன்றவில்லை ஆயினும்ஜானகி லட்சுமணசமேதராகிசமேதராகி என்சிரமத்தில் வசித்திருக்கவரந்தந்துரக்ஷிக்க கோருகிறேனென்று பின்னும்பிரார்த்தித்துகொண்டிருக்கும் பத்தினிபிடம் தயையுடையவராகிராமச்சந்திரன் பத்திரனே உன்மனதில் கோரியபடி வரங்கொ

டுத்தேன் சந்திர சூரியாள் நக்ஷத்திரங்கள் பூமியாகாசங்களுள்ளளவும் எங்களை யுன் மஸ்தகத்திற்றரித்து சேவை செய்யப்பட்டவர்களுக்கு சகல சௌக்கியங்களும் உண்டாகும்படி செய்து மிகவும் பிரசித்தனாகி பலவித ரூபத்துடனிரும் கல்பாந்தத்தில் என்னுடைய கிருபையினால் இந்த ஜட ரூபத்தை விட்டு நிர்ம்மலக்ஞான ஸம்பன்னனாகி என்னுடைய பதவியாகிய வைகுந்தஞ் சேர்ந்து சுகிப்பாய் இன்று முதல் யாரேனும் பிரியத்தோடு உன்னைப் பார்க்கினும் என்னைமஸ்தகத்திற்றரித்த உனக்கு ஆதிவாரதில் ஸ்நானுஷ்டானங்களை முடித்து பக்தியுக்தராகி மூன்று தரம் வலம் வருவார்களாகில் நிர்மலக்ஞான சம்பன்னர்களாகி எனது பதவி சேர்ந்து சுகிப்பார்கள். மேலும் எனக்குப் பிரிய பூர்வகமாய் நித்தியோற்சவம், பக்ஷோற்சவம், பிரம்மோற்சவம் நடத்துவதுமின்றி நியமயுக்தர்களாகி யாக தவ தானாதிகள் செய்வதுடன் சந்தோஷ சித்தர்களாகி அன்னதானங்கள் செய்வார்களாகில் அப்படிப்பட்டவர்க ஆயுராரோக்கிய ஐஸ்வரிய சம்பன்னர்களாகி அந்தியத்தில் என்னை சேவித்து சுகிப்பார்கள். இதுவுமல்லாமல் பூர்வத்தில் பகிரதன் ஆகாச கெங்கையை பூலோகத்திற்கு கொண்டு வந்ததுபோல கௌதம மஹா முனிவர் ஸஹ்யமலயாசல நடுவிலிருந்து கோதாவரி நதியை அழைத்துவரக் கடவன் அப்படிவந்த அந்நதி இவ்விடத்தில் கௌதமியெனும் பேரினால் பிரவஹித்து விஸ்தீரணமடையும். அதில் ஸ்நானுஷ்டானங்கள் செய்யும் ஜனங்களுக்கு சகலபாவங்களையும் போக்கும்படி செய்துக்கொண்டிருக்கு மாதலால் அந்நதியே விரஜாநதியென்றும் நான் வசிக்கும் உன் சிரப்பிரதேசம் வைகுந்தமென்றும் நினைத்து யாவரிங்கு வசித்திருப்பார்களோ அவரவர் பூர்வஜென்மத்திற்செய்த பாவங்களைப்போக்கி புத்திர பௌத்ராதி விருத்தியடைந்த சமஸ்த ஸம்பத்துடன் இகத்தில் யாவத்போகங்களையும் அனுபவித்து அந்தியத்தில் என்னிருப்பிடமாகிய வைகுந்தத்தில் வசிப்பார்கள். என்றிப்படி ஸ்ரீராமபத்திரன் பத்திரனோடு சொல்லி அவனது மஸ்தகத்தில் நிவசித்ததால் பத்திராசலமென்று வழங்கியது. அதுமுதல் இந்தபூலோகத்திலுள்ள ஜனங்களுக்கு சேவையாகி கலியுக வைகுந்தமெனப் பிரசித்தியாகிசபசொரூபமடைந்து பிரகாசித்தது ஆகையால் இப்போதிவ்வுலகில் யாராகிலும் மேன்மையடைய கோரிக்கை யுடையவர்கள் பத்திராசலத்தில் ஸ்ரீராம நவமியன்று தேவாதி தேவனாகி பக்தர்களுக்கபயஸ்தங்கொடுத்து ரக்ஷித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீராம பரமாத்மாவை தெரிசித்து திருத்துழாய் மலர்கள் அக்ஷதை சந்தனாதிகளால் அர்ச்சனைசெய்து நாம கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு அந்த இரவு நித்திரையின்றி யிருப்பார்களாகில் ஸ்ரீராமபதங்களை யடைவார்கள். அன்னியிலும், நவமி தினம் உபவாசமிருந்து மறுநாள் பாரணை செய்யும் போது பிராமணர்களுக்குப் பிரிய பூர்வகமாய் அன்னம் அளிப்பார்களாகில் கெங்காநதிலேனும் திவ்விய க்ஷேத்திரங்களிலேனும் ஆயிரம் பிராமணனுக்கு நதியாராதனஞ்செய்த பதத்தை யடைந்து அநேக ஜென்மங்களிற் சொர்ணங்கவந்ததவும் குருபத்தினி சங்கம பிரம்மஹத்யாதி மகாபாதகங்களெல்லாம் நசித்து மூத்தராவார்கள். மேலும் அந்த பத்திராசலத்தைச் சுற்றி இரண்டு கூப்பிடு தூரத்திற்குள், மூன்று லோகத்திலுமுள்ள புண்ணிய தீர்த்தங்கள் யாவத்தும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஆக்கினையினால் அவ்விடத்தில் மூன்றிரவு தங்கியிருந்த நார்கள் சாஸ்வத சுகபிராப்தி யடைவார்கள். அதெப்படியெனில், திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் பிரம்ம தேவரால் இந்தக்ஷேத்திர மகத்துவத்தைக் கேட்டு அந்த ராகவக்ஷேத்திரத்திற்கு வந்து கோதாவரி நதிக்கரையில் ராமகதைகானம் செய்துகொண்டு வெகுகாலம் நிவாசஞ்செய்து தேவலோகத்திற்குச் சென்றார்.

ஆகையால் இந்த பத்திராசல மகத்துவத்தை ஆதியோடந்தமாகச் சொன்னால், ஆயிர வருடங்களானாலும் பூரணமாகாது இதையென் சக்தியானுசாரம் சங்கிரகரூபமாய் உங்களுக்குச் சொன்னேன். இதுவுமன்றி இன்னொருவிசேஷமுண்டு. அதென்னவெனில் இந்த பத்திராசலத்திற்கு அக்கினி மூலையில் இரண்டு கூப்பிடுதூரத்தில் கோதாவரி கர்ப்பத்தில் விசேஷஸ்வரமென்றும், உஷ்ணகுண்டமென்றும் இருக்கின்றது. இதின் மகத்துவம் எப்படியென்றால், பூர்வகாலத்தில் அரவரசனாகிய ஆதிசேஷன் நாகலோகத்திற்கு பிரபுவாகி யிருக்க துஷ்டர்களாகிய ராக்ஷதர்கள் சிலர் ரஸாதலத்திற்குச் சென்று அந்த நாகலோகத்தில் அக்கிரமஞ்செய்ய அந்த ராக்கதருடன் யுத்தஞ் செய்ய மாட்டாமல் பிரம்மலோகத்திற்குச் சென்று பிரம்மாவுடன் தனக்கு அரக்கர்களால் உண்டாகிய யுத்தத்தை யறிவித்தான். அப்போதந்த பிரம்ம தேவன் ஆதிசேஷனை நோக்கி நீ பூலோகத்திற்கு சென்று பத்திராசல ஸ்தலத்தில் கௌதமி நதியின் கரையில் மயேஸ்வரத் தியானபரனாகி தவஞ் செய்வையாகில் உனக்கு காரியானுகூலமாகுமென்று சொல்லவிசேஷனும் அந்தப்படி பூலோகத்திற்கு வந்து கௌதமி நதிக்கரையிற் சேர்ந்து அவ்விடமோர் சார்பில் சிவனை யேளப்பண்ணி அந்த சிவபெருமானை யுத்தேசி

Koviloor Digital Library

த்து ஜபதபங்கள் பக்திபூர்வங்களாய் செய்துக் கொண்டு. ஓர் அக்கினிகுண்டம் செய்வித்து, அதில் அபிசாரஹோமம் செய்ய பக்தசீலனாங்க காலகண்டன் அவனது சீலகுணத்திற்கு மெச்சி பிரசன்னனாகி சர்வசத்ருவிநாசனி யென்னுமோர் சூலத்தைத் தந்து இதனால் உனக்கு விரோதங்களைச் செய்துக் கொண்டிருக்கும் ராக்ஷதனைஜெயித்து உன்னுடைய நாகலோகத்தையாளுமென்றுசொல்ல நாகேந்திரன் சந்தோஷமடைந்து அந்த மகாதேவனை அநேக விதங்களாகத்தோத்திரஞ்செய்து அங்கிருந்து ரஸாதலத்திற்குச் சென்று சிவதத்தமாகிய சூலதினால் சத்துருக்குள யாவரையும்வென்று ராஜ சுகங்களனுபவித்துக்கொண்டு சுவஜன போஷகனாகியிருந்தார் சேஷன் பாதாளத்திலிருந்து பூலோகத்திற்கு வந்துகௌதமி நதிக்கரையில் நிசகோரிக்கை யடைந்துசென்றார்.

அக்தக்காலத்தில் சேஷன் பூலோகத்திலிருந்து நாகலோகத்திற்கு போன பிலத்துவாரத்தில் போகவதி நதி ஜலம்வெளிப்பட்டு கௌதமிநதியிற் கலந்தது ஆகையால் அந்தயிடம் ரஸாதலகெங்கை சம்மந்தமென பிரசித்தி யடைந்தது. அது முதற்கொண்டு சேஷனால் பிரதிஷ்டை செய்யப்பட்டமையால் அந்த சிவக்ஷேத்திரம் சேஷேஸ்வர மென்றும், அந்த சேஷன் அபிசாரஹோமம் செய்வித்தகுண்டாம் மகாஅக்கினி ஜ்வாலை விசேஷப்பட்டு அந்த ஜலம் உஷ்ணமாயிருப்பதைப்பற்றி உஷ்ணகுண்ட மென்றும் சொல்லப் பட்டது இத்தன்மையாய் சேஷேஸ்வரமும் உஷ்ணகுண்டமும் ரஸாதலகெங்கை சம்மந்தமும் சேஷனாலுண்டாகியபடியால் அந்த தீர்த்தம் சேஷதீர்த்தமென நாமம் பெற்று சர்வ ஜெனங்களுங் கோரும் இஷ்டத்தைத்தரும் ஆகையால் மானிடரெவராயினும், இந்த தீர்த்தத்தில் பக்தியுக்தர்களாகி ஸ்நானமுந் தானமும், ஜபங்களும் தபங்களும் தங்கள் சக்தியளவு செய்வார்களாகில். அவர்களுக்கு முக்தி உள்ளங்கை நெல்லிக்கனி போலயிருக்கும் அப்படிசெய்யசக்தியற்றவர்கள்மனம் வாக்கு காயமென்னுந் திரிகரணசீலரா இந்த பத்திராசலமகத்துவத்தையும் சேஷேஸ்வரப்பிரபாவத்தையும் ரஸாதல கெங்கை சம்பந்தத்தையும் கேட்டு ஆநந்திப்பார்களாகில் மனதி லெண்ணிய கோரிக்கைகளையடைந்து அந்தியத்தில் ஸ்ரீராமபாதத்தியானர்களாகி வைகுந்தப் பிராப்தியுடன் சுகமனுபவிக்கக் கடவரென்று, பிர்ம்மாண்ட புராணத்திற் சொல்லியபடி சூத புராணிகர் சவுனகாதி முனிவருக்குச் சொன்னார்.

பத்திராசல மகத்துவம் முற்றுப்பெற்றது.

1-வது கோபன்னா உற்பத்தி அத்தியாயம்.

ஸ்ரீ மகாலட்சுமி கடாக்ஷம் பொருந்திய தேசங்களிற் பெருமை யடைந்த ஹைதர்பாத் நகரமொன்றுளது. அதில்மிகவும் உன்னிதமாகிய கோட்டைகளும், அமலமாகிய பூந்தோட்டங்களும், மாணிக்கமயமாகிய வேதிகைகளும் நயமாகிய வீதிகளும் மிகுந்தசீலங்களையுடைய சோமயாஜிகளும், தகுந்ததர்மங்களையுடைய ராஜர்களும், சொர்ணத்தினால் நிர்மிக்கப்பட்ட ஊஞ்சல்களும், நிர்மலமணிகளால் கட்டியவீட்டின் வரிசைகளும், பச்சைகளினாலாகியவெகுதோரணங்களும், உற்சாகங்கொண்ட மதவாரணங்களும், சிங்காரமாகிய தேர்களும், ஆங்காரத்தினால் கொடி வித்தைகள் கற்ற சூரர்களும், நவரத்தின மயமாகிய மேடைகளும், எவருஞ் சந்தோஷிக்கும் எழில்ஓடைகளும், படிகங்களினாலாகிய சுவர்களும் முடிகொள்ளாத முசல்மான் குடிகளும், கெட்டிகட்டடவீடுகளும், மட்டுமிதமில்லாவிளக்கு கூடுகளும் விப்பிரர் தினமும் ஓதும்வேதமும் தப்பிதமில்லா பேரிகாதமும் தேவஸ்திரிகளை வீணைகொள்ளும்வேசிகளும், குபேரனை நிகர்வைசியரும், விண்ணளாவிய மந்திரஹோமங்களும் கண்களுக்குக் குளிர்ச்சியான தீபங்களும், சொகுசாகிய சங்கீதகானங்களும், மிகுகனமாகிய பலதானங்களும், விமலமாகிய ஜலம் நிறைந்த வாவிகளும், கமலங்கள் நிறைந்த குளமும், நடபாவிகளும் மிகுபலமுள்ள படைவீரர்களும், வெகு கல்விகற்பிக்குந்தீரர்களும் நீதிகள் அரசர்க்குநிகழ்த்து மந்திரிகளும், வாது சண்டைகளுக்கு வாகான தந்திரிகளும் கடைகளிற் பூக்கள்விற்கும் பெண்மயில்கள் விடபுருடர்கள்மயங்குங் குயில்கள்சாலைப்பூஞ்சோலை வாய்ப்பும் உண்டாகி கனமிகுந்த அளகாபுரிக்காகிலும் மேன்மையாகி அன்னகரத்தை தானீஷா யென்ற பெயர் பெற்ற ஒரு அரசன் மிகுதர்மமாய்ப் பரிபாலனஞ் செய்து வந்தான். எப்படி யென்னில் பிராம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் தங்கடங்கள் மரபிற்குரிய ஆசாரங்களை கடக்காமலும் குடிகளிடத்தில் ஆரிலொரு கடமையெற்று தன் மரபினரிடத்தில் தாக்ஷண்ணியமும் பரிஜனங்களிடத்தில் தயையும் துர்ச்சனங்களிடத்தில் வெறுப்பும் சாதுஜனங்களிடத்தில் பிரியமும் பிராமணாளிடத்தில்பயமும் வித்துவான்களிடத்தில் பிரயமுற்று மாதமும்மாரி பெய்யகுடிகள் புண்ணியவானென்று துதிசெய்யும்படி நீதியாய் அரசு செய்துவந்தார். இவர்க்கு அக்கன்னா மாதன்னா என்ற நாமமுடைய பூசுரர்கள் அண்ணனுந் தம்பியுமாகிய இருவர் நீதிமந்திரிகளாக வமர்ந்திருந்தார்கள்.

Digital Library

இவ்விருவருக்கும் மைத்துனராகிய லிங்கன்ன என்பவர் நெல்கொண்ட பல்லயென்ற கிராமத்தில்இல்லற தருமத்தைநடத்து புல்லறிவாளுறவுவெடுத்து சல்லியங்க லென்பதைத் தடுத்து நல்லோர்க்குத் தானங்கொடுத்து பாவிகளைக்கடுகடுத்து சதா ஸ்ரீ ராம நாமத்தைம் படித்துவந்தார் இவருக்கு நாயகி கணவனுக் கிணங்கி மிருதுபாஷியாகி காசினியில் மிக்க ரூபவதியாகி தன நாயகனைவிட மேலான தெய்வமில்லை யென்னும் வேசியைப்போல தன்கணவனிடம் மதனலீலை செய்பவளும் மந்திரியை யொத்த புத்திகூர்மை யுடையவளுமாகிய இத்தியாதி நற்குண நற்செய்கையுடைய காமாம்பாளும் எல்லா பாக்கியங்களு மிருந்தும் புத்திரபாக்கியம் ஒன்றில்லாக் குறையால் ஜானகிராமனை இடைவிடாது துதி செய்துக் கொண்டு ஏங்கி சித்தித்திருக்க சக்கரவர்த்தி திருக்குமாரன் அருளால் ஓராண் குழந்தையைப் பெற்றாள் பத்துநாளுங் கடந்த இரண்டாநாள் பந்துகள்யாவரையும வரவழைத்து அக்குழந்தைக்கு ஸ்நானஞ்செய்வித்து ஆடையாபரணங்களலங்கரித்து பெரியோர்களால் கோபன்னவென்று திருநாமங் கொடுத்து தானங்களளித்து உள்ளங் களித்து ஆனந்தமேலிட்டு மோனந்தனைத் தொட்டுப் பாலூட்டி மைதீட்டி பணிகள் பூட்டி தொட்டிலாட்டி மலர்களைச்சூட்டிசீராட்டிப பாராட்டி சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியடைய போஷித்து ஒன்றிரண்டு மூன்று நான்கு ஐந்துவருடமாகவே பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தனர்.

அப்பிள்ளை விக்கினமின்றி நான்குவேதம் ருஞ்சகாவியம்-ஆறுசாஸ்திரம் பதினென்புராணங்களுங் கற்றுத்தேர்ந்து விருத்தியடைந்திருந்தான். இப்படியிருக்க ஓர்நாள் சிலபெரியோர் சேர்ந்து பாலராமாயணம் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கோபன்னவும் அந்த பாலராமாயணம் வாசிக்குமிடத்திற்கு சென்று மிகுந்த சிரத்தையோடும் கூடினவராய் இராமாயணத்தை ஆதியோடந்தமாகக்கேட்டுகளிக்கடலில் மூழ்கினவராகி நான் அந்த ஸ்ரீராமரோடுகூட ஜென்மிக்காமற்போனேனே அப்படி நானும் சகோதரனாகி ஜெனித்திருப்பேனே யாகில் சுக்ரீவர் ஆஞ்சநேயரைப் போல ஸ்ரீராமருக்குத் தொண்டு செய்வே னல்லவா வென்றிவ் விதமாய் நினைத்துருகி சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன அநுமத்சமேத ஸ்ரீராமப் பிரபுவே என்பேரில் கிருபை என்றைக்கு வருமோவென நாள் கழித்துக்கொண்டுவர, தந்தையாகிய லிங்கன்ன, காலவியோகமடைந்தார். அவருக்கு செய்யவேண்டிய கிரியைகள்யாவுஞ் செய்துமுடித்து காலங்கழித்துவர அன்னையாகிய காமாம்பாளும் வைகுந்த மடைந்தனள். அவளுக்குஞ் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து பகவந்நாமத்தைத் தியானஞ்செய்துக்கொண்டிருந்த ஓர்நாள்வழக்கபடி தடாகத்திற்சென் ஸ்நானுஷ்டானங்கள் முடித்து பெட்டகத்தில் எழிபிருக்கும் சீதாலட்சுமண பரதசத்ருக்ன அநுமத்சமேதராகி ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கு திருமஞ்சனஞ்செய்து பட்டு வஸ்திரங்களைச் சாத்தி நவரத்தின ஆபரணங்களை யணிவித்து நறுமலர் மாலைகள் சூட்டி லலாடத்தில் கஸ்தூரி திலகந்தரிப்பித்து வாசனையுள்ள புனுகு கஸ்தூரி அத்தர் பூசி தூபதீபநைவேத்தியங்கள்செய்து தெண்டனிட்டு கண்களை மூடிக்கொண்டு ராமா-பரந்தாமா-பலபீமா-ஜெனகாமா-ரவிகுலசோமா-ஆபிராம-ஞானகிவாமா-மேகசியாமா-சீலா-மறைமூலா - கானவுநாலா-தேவானுகூலா-வனமாலா-ஐயா-அருள் மெய்யா-கோதண்டக்கையா-மிருதுதய்யா கிருபைசெய்வாய் என்று துதி செய்துகொண்டேதன்னை மறந்தார். அது சமயத்தில் காசிதேசவாசியா கபீர்தாசர் அங்குஎழுந்தருளி கோபன்னவின் முகவிலக்ஷணத்தைக்கண்டு சந்தோஷித்து பக்தியை யறியும்பொருட்டு திருவாராதனப் பெட்டகத்தை எடுத்து தடாகத்தில்விட்டு மேலண்டைகரைக்குப்போய் நின்றார். அப்போது கோபன்ன பிரபத்தி முடித்து கண்ணைத்திறந்துபார்த்து திருவாராதனப் பெட்டகத்தைப் காணாமையால் நான்குதிக்கும்நோக்கினர். மேலண்டைக் கரையில் நிற்கும் அனுக்கரைக் கண்டுஅவருக்கேன் திருவாராதனமென்றுன்னிஐயையோ மோசம்போனேமே பெரியோர்கள் காலத்திலிருந்து பரம்பரையா திருவாராதனஞ் செய்துக்கொண்டுவந்த பெருந்தநிதி போய்விட்டது இனிநானென்ன செய்வேனென்று கண்ணீர்சோர தொபபென்று பூமியில் விழுந்து கரையின்பேரில் கடகடவென்று புரண்டழுது மூர்ச்சையானர் இதைக்கண்ட கபீர்தாசர வேகமாய் வந்து கோபன்னவை நோக்கி ஓ பிராமணரே ஏனிப்படி விழுந்து புரண்டு கதறுகிறீ ரென்றார். கோபன்ன அந்தகபீரைநோக்கி அய்யா எங்கள் பெரியோர் சம்பாதித்து அநேகநாளா யனுபவித்த பெருந்த நிதியின்று காணாமற்போய்விட்டது. அதற்காகத் துயரப் படுகிறேனென்ன கபீர் நிதியென்றால் என்ன அதைவிளளும்படி சொல்லுமென்ன கோபன்ன திருதிருவாராதனைப் பெட்டகமென்றார், கபீர் அதிலெழுந்தருளியிருக்கும் பெருமான்பெயரென்னவென கோபன்ன சீதா லட்சுமண பரத சத்ருக்ன அநுமச்ச

Koviloor Digital Library

மேத ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியென கபீர் நீர் பக்திசெய்வது உண்மையாகில் மூன்றுவர்த்தி பகவானை அழைப்பீரேயாகில் பெட்டகத்தோடும் ஸ்ரீராமர் வருவாரென கோபன்னு அநகப்படியே மூன்றுவர்த்தி சீதாலட்சுமண பாதசத்ருக்ன அநுமச்சமேத ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, சீதாலட்சுமண பாதசத்ருக்ன அநுமச்சமேத ஸ்ரீராமசந்திரமூர்த்தி சீதாலட்சுமண பாதசத்ருக்ன அநுமச்சமேத ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கிருபைகூர்ந்து வரவேண்டும் வரவேண்டுமெனறு மூன்றுவர்த்தி யழைத்துவராமையால் துக்கக்கடலில் மூழ்கினவராகி திட்டென்றுவிழுந்து மூர்ச்சையடைந்தார். இதைக்கண்ட கபீர் ஆசாரியரில்லாத பக்தி போல் தோற்றுகிறதென்றெண்ணி கிருபையோடு கோபன்னுவை சோகத்தில் நின்றும்தேற்றி,

சுலோகம்.

ஸ்ரீராமராமராமேதி-ராமேராமே - மனோரமே

ஸஹஸ்ர நாமத்துல்யம்-ராமராம மனோரமே.

என்னுந் தாரக நாமத்தை யுபதேசித்து இன்னுஞ் சிலகாலத்திலே உனக்கு நல்லயோகம் வரப்போகிறது என்றுசொல்லி மூன்றுவர்த்தி சக்கிரவர்த்தித் திருக்குமாரனை யழைத்தார். பக்த பராதீனன் திருவாராதனை பெட்டகத்தோடு குபீலென்று தடாகத்திலிருந்து கிளம்பி கரையோரமாய் வர, அதனையெடுத்து கோபன்னு விடங்கொடுத்து, சுபமங்களமாய் இருக்கக் கடவாயென்று ஆசீர்வதித்து போய் வருகிறேன் யென கோபன்னு! கபீருடைய திருவடியில்விழுந்து சுவாமி! தங்களை மறுபடியும் எப்போது காணுகிறதென்றார் அதற்குக் கபீர், ஓ கோபன்னு! நீரென்னை யெப்போது நினைக்கிறீரோ, அப்போது வருகிறேன் என்று சொல்லி நடந்தார் பின்பு கோபன்னு திருவாராதனைப் பெட்டகத்தை கிருஹத்திற் சேர்த்து ஆனந்தக்கடலில் மூழ்கினவராகி, தன்மனதைநோக்கி சொல்லுகிறார், ஓ மனதே வெகுநாளாய் தாரகமந்திரத்தைக் கோறி யிருந்தேன் இன்றனது கிருபையினால் அகப்பட்டது அதினால் நான்மிகவுந் தன்னியனாகி விட்டேன், மேலும் இந்த மந்திரம் காலதூதர்களுக்கு மிருத்துவு தேவதையென்று நம்பிக்கொள்ளு, இதன்னிலே உன்னைவேண்டி கேட்டுச்கொள்ளுவ தென்னவெனில், மாயையினால் கட்டுண்டு இதரமதங்களில் விழுந்துகெடாதே நூற்றெட்டு திருப்பதிகள் மேலானதென்று திரிந்து துக்கப்படாதே, பிரியத்தோடு புண்ணிய நீர்க்கங்களில் முழுகவேண்டி வேலையில்லை. அமாவாசை - பர்வம்- ஏகாதசிமுதல் விரததினங்களில் ஸ்திரீசங்கமஞ் செய்யாதிருக்கும்படி பிரார்த்திக்கேச். மேலும், எத்தனைஜென்மங்களில் எண்ணிப் பார்த்தபோதிலும் நாராயணன் ஒருவனே அநேக ரூபங்களை யிருக்கும் பாரத்பரனாகிய அந்த மஹாத்மனுடைய கல்யாணகுண சரித்திரங்களைக் கேழ்க்கிலும் அல்லது துதிசெய்யினும் அநேக ஜென்மாந்திரங்களிற் செய்த பாபங்கள் இந்த ஜென்மத்தோடு நீங்கிவிடும் எல்லா ஜென்மங்களுக்கு மிது கடைசியானது சத்தியம் இனிவருவது இல்லவே யில்லை. ஆகையால் நிர்மலமாகி அந்தரத்தில் லக்ஷியத்தோடு ஆனந்தமுடன் சகல கர்மங்களையும்விட்டு மோக்ஷமாகிய நல்லகெதியை எதிர்பார்த்துக்கொண்டு தர்மந்தப்பாமல். பத்திராசலராமனை மனதில் துதிசெய்து நம்பியிருந்தால் மர்மமறிந்து சக்கிரவர்த்தித் திருக்குமாரன் நித்திய வீட்டை யளிப்பாரென்று சொல்லி நேத்திரத்திற்கு புலப்படும் வஸ்துக்கள் யாவும்பொய்யென்று நினைத்து காமாதி ஷட்வர்க்கங்களையும் நீக்கி தாரகநாமத்தியானஞ் செய்துக்கொண்டிருந்து சிலநாளை குப்பின் திரேக போஷணைக்கு யுக்தமாகிய குணவதியாயும், ரூபவதியாகியும், நல்ல கால்வழியிற் பிறந்தவளாகியும், கற்புள்ளவளாகியுமுள்ள ஓர் பெண்ணை விவாகஞ்செய்துக் கொண்டு இல்லற தருமத்தி லிருந்தும் இடைவிடாது பகவந் நாமங்களைப்பாடி காட்போக்கி வர கருணைக்கடலாகிய ஸ்ரீராமபிரானது கிருபையால் ஓர்புத்திரன் பிறந்தான். அச்சிசுவுக்கு சுந்தான் என்று நாமகரணமிட்டு போஷித்துக்கொண்டு தன் தந்தை சேகரித்துவைத்த தனத்தைக்கொண்டு ததியாராதனை செய்துவர ஓர்நாள் அனேகசாது பிராமணாள் அங்கெழுந்தருளி தளிகையம்சை செய்து கொண்டிருக்குஞ் சமயத்தில். கோபன்னுவின் குழந்தை தவழ்ந்துக் கொண்டேவந்து சாதம்வடித்த கஞ்சிசேர்ந்த குட்டையில் விழுந்து மரணமடைந்தது. இதையறிந்த கோபன்னு பத்தினி ஓடி குழந்தையை யெடுத்துப்பார்க்க மரணமடைந்திருப்பதை யறிந்து துக்கித்து ஒருவாராய்த்தேறி இந்த சங்கதியை நம்முடைய மணாளனுக்குத் தெரிவித்தாலும், நாம் விசனப்பட்டுக்கொண்டு சும்மா யிருந்துவிட்டாலும் இக்குழந்தை இந்த சங்கதி பிராமணாள் அறிந்து விடுவார்கள் அப்படி யறிந்தால் பிராமணால் ஒருவரும் புசிக்காமல் போய்விடுவாரென் றெண்ணி மரணமடைந்த குழந்தையை ஓர்மூலையில் கிடத்தி தடுக்கொன்றை மேலேமூடிக் காரியங்களைப் பார்த்திருந்தாள் பின்பு பிராமணாள் யாவரும் புசித்த பின்னர் அவர்களை யனுப்பிவிட்டு கோபன்னு தன் பத்தினியிடம் வந்தார் அவ்வுத்தமி தடுக்கை யெடுத்துவிட்டு மரணமடைந்த புதல்வனைக்காட்டி இறந்த வகையைக் கூறினள். இதைக்கேட்டு கோபன்னு தன்மனையாளை

Koviloor Digital Library

மிகவுங் கொண்டாடி புத்திரனை யெடுத்து தோளின் பேரில் சாத்திக்கொண்டு வேகமாய் நடந்து கோதண்டராமன் சன்னிதியில் கிடத்தி தசரதராமா சீதாரமனு பட்டாபிராமா கோதண்டராமா கோசலைராமா ரகுராமா முகசோமா ஆயிராமா ஜெனகாமா முன்னர் அயோத்தியில் மரண மடைந்த ஓர் விப்பிரனது குமாரனை உயிர்பெற்றுய்யக்கருணை செய்த தேவரீர் இந்த குழந்தைக்குப் பிராணனைத்தந்து ரக்ஷிப்பதோர் பெரிதோ, இது வன்னியிலுங் கண்ணன் அவதாரத்தில் உபாத்தியாயராகிய சாந்தீபருக்கு குருதக்ஷிணை கொடுக்கவெண்ணிய என் கருத்தீடேற உமக்கென்ன வேண்டுமென்று வினவ, அந்த உத்தமி அப்பா மிகுந்த மகிமையுற்றவரே அநேக நாளைக்குமுன் முதலைவிழுங்கிய என்புத்திரனைக் கொண்டு வந்து தாருங்களென மகா பாக்கிய மென்று கடல் முழுவதும் ஆராய்ந்தும் அங்கில்லாமையால், எமபுரத்திற்குச் சென்று பாஞ்சசன்னியத்தையுமது பவளவாயில் வைத்து பம்பம்மென்று ஊத அந்த ஓசையைக்கேட்டு எமன் திடுக்கிட்டு ஓடோடியும் வந்து திருவடியில் விழுந்து வெகுவாய்த் துதித்து, ஓ சுவாமி அடியேனை வரும்படி ஆக்ஞை செய்தால் அடியேன் சிரசால் நடந்துவருவேனே அப்படி செய்யாது ஏழையாகிய பாமரனை நாடிவந்தகாரணம் யாதோ வென்ற எமனைநோக்கி ஓ தர்மராஜனே சாந்தீபருடையகுமாரனைத் தேடிவந்தேன் அவனைக் கொண்டு வந்து கொடுப்பீராகில், குருதக்ஷிணை செலுத்திப் போடுவேனென்ன, எமன் வேகமாயோடி சாந்தீபரது குமாரனைக் கொண்டுவந்து தர அவனைரதத்திலேற்றிச் சென்று குருதக்ஷிணை யாகத்தந்த தேவரீருக்கு இப்புதல்வனை யெழுப்பித்தருவதோர் அருமையோ வென்று பணிய அக்குழந்தை ராமச்சந்திரமூர்த்தியினருளால் நித்திரையில்நின்று விழித்ததுபோல உயிர பெற்றுத் தவழ்ந்துகொண்டே வர அதைக்கண்டு மிகுந்த ஆனந்த மடைந்து பகவானைக் கொண்டாடி தன்னை மறந்தாடி வெகுவாய்ப்பாடி, தன் கிருகத்தை நாடி தன் மனையாளுடன் கூடி, ததியாராதனையை விடாது செய்து பகவத் பஜனை பண்ணிக்கொண்டே ஓர்நாள் ஸ்ரீராமமூர்த்தியை பிரத்தியக்ஷமாய் சேவிக்கும்வகை யெப்படி யென்று யூகித்து கபீர்தாசரை நினைத்தார். உடனே கபீர்தாசர் சேவைதந்து, என்னை நினைத்தகாரிய மேதென கோபன்னு அசானுக்கு சொடச வுபசாரமுஞ் செய்து, ஓ சுவாமி! தேவரீர் தரிசனமே ஸ்ரீராமபிரானை சேவித்ததைப் போலாயிற்று அடியேன் வினைகளனைத்தும் போயிற்று முன்னமொருசாதுவால் தேவரீருக்கு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பிரத்யக்ஷமென்று கேள்விப்பட்டேன். அன்னியிலும், பக்தசுலபனுகிய பகவான் முன்னம் மூன்றுதரம் தாங்களழைக்க தடாகக்கரை யோரமாய் திருவாராதனைப் பெட்டகத்தோடும் வந்தார். இதை ருசுவில் யான்கண்டேன் ஆகையால் அடியேன்பேரில் தயை செய்து தாசரதியை சேவிக்கும்படி கடாக்ஷிக்க வேண்டுமென்று பலவிதமாய் வேண்டிக் கொண்டாடினுர் இதைக்கேட்ட கபீர் சொல்லத் துடங்கினுர். ஓ சாதுவாகிய கோபன்னு தயாநிதியாகிய ஸ்ரீராமபிரானது சேவை லபிப்பது மிகவும் அரிது மேலும் பகவத்சேவை செய்யவேணுமென்று எண்ணம் உனக்கு வுண்டாகியதே பெரிது ஆகையால் யின்னுஞ் சில நாள் போகட்டும் உன்னிஷ்டப்படி பகவத்சேவை லபிக்கும்படி செய்கிறேனென்ன கோபன்னு ஓ சுவாமி இத்தேகமோ அனித்தியம் இப்பவோ எப்பவோ திரேகத்தை விட்டு ஆத்துமா பிரிந்து போகும் இதற்குத்தடையில்லை ஆகையால் பிராணன்போன பிறகு பகவானை சேவிப்பதுபொய். இதுபோது சேவிப்பதேமெய். இது தங்களுக் கருமையோ மனதில் நினைத்தால் உடனே ராமதெரிசனம் சுலபமாய் அடியேனுக்குத் தடையின்றி கிடைக்கும் என்று கண்ணீர் ஆராய்ப்பெருகக் கதருங் கோபன்னுவை நோக்கி கபீர் மனந்தளர்ந்து ஓ கோபன்னு நாளையபகல் பதினேழு நாழிகைக்கு பகவான் வருவார் நீ சேவிப்பாய் துயரப்படாதே யென்று சொல்லிச் சென்றுர். பிறகு கோபன்னு, உற்சாகமடைந்து தசரதனுமனைத் துதிசெய்து தீபாராதனைக்கு வேண்டியவைகளைச் சேகரித்து வீட்டு உயர்ந்த கட்டிலொன்று தருவித்து அதற்கு உம கரணங்களாகிய மெத்தை திண்டுக ளமைத்து, முகமல் துப்பட்டி விரித்து அத்தர் புனுகு சவ்வாது முதலாகிய வாசனைத் திரவியங்களும் பழ வர்க்கங்களும், தூப தீப நைவேத்தியங்களுக்கு வேண்டிய சாமக்கிரியைகளும், சித்தப்படுத்திவந்தி பிராமணுளுக்குக் குறைவின்றி ததியாராதனஞ் செய்துக் கொண்டு பகவான் வரவுக் கேதிர்பார்த்திருந்தார்.

இவ்விடத்திலிப்படியிருக்க கபீர் அவ்விடத்தில் ஸ்ரீராமா பரமாத்மாவை துதிசெய்ய, பகவான் எழுந்தருளி ஓ கபீர்தாசரே முகவிலாசரே உமக்கென்ன குறை நேரிட்டது அதை தெரியச்சொல்லு மென்று எள்ளுக்கு பெண்ணைபோல் எங்கும் நிறைந்த நாராயணன் தனக்குத் தெரியாததுபோல வினவ கபீர் உள்ளும் புறம்புமாய் அகிலத்திலும் வியாபித்திருக்கும் தேவரீருக்குத் தெரியாததுபோல் அடியேனை வினவுவது யென்னமாயமோ எனது வாக்கினுலே சொல்ல கேழ்க்கவேண்டு மென்ற அபிப்பிராயமோ, இப்படி பரிசோதிப்பதும் வுபாயமோ இஃது தேவரீருக்கு நேயமோ யென்று பின்னுஞ் சொல்லுகிறுர்

Koviloor Digital Library

கேளும் அண்டரண்ட சராசரங்களைக் குக்ஷியில் வைத்து காக்கும் அப்பிரமேயனே, தெலகொண்ட பல்லெயெனுங்கிராமத்தில் வசிக்கும் கோபன்னா வெனும் விப்பிரகேயன், தானுந்தடக்கையுங் கூப்பி, ஸ்ரீராமபிரானது நவ்வியசேவையை எனக்குசாதித் தருளும்படி செய்விக்க வேண்டுமென்று அடியேனை மிகவும் வேண்டிக்கொண்டான். அதற்கு அடியேன் நாளைய பகல் பதினேழு நாழிகைக்கு பகவான் உனக்கு சேவை சாதிப்பாரென சொல்லி வந்தேன். ஆகையால் தேவரீர் கிருபை கூர்ந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்ட கபீர் வாக்கியபடி சாக்ஷாத் பரந்தாமன் மகிஷரூபந்தரித்து சேற்றில் விழுழுந்து புரண்டெழுந்து பிரசாதம் புசித்துக் கொண்டிருக்கும் பிராமண கோஷ்டியின் மத்தியில்புகுந்து வேகமாயோடி கோபன்னா தனக்காக சித்தப்படுத்தி யிருக்கும் கட்டிலின் பேரில் விழுந்து புரண்டார். அந்தமர்மந் தெரியாமல் கோபன்னா பகவானுக்கென்று தயார்செய்து வைத்த உன்னிதஸ்தானத்தில் மகிஷம் விழுந்து புரளுகிறதே யென்று கோபங்கொண்டு தடிகொண்டடித்து துரத்தினார்.

மகிஷரூபமாகிய பகவான் தடியடிகளைப்பட்டு வேகமாயோடி சுயரூபத்தைப்பெற்று கபீர் முன்சென்று ஓ சாதுவே உன்வார்த்தையை மறுக்கக் கூடாமையால் அந்த கோபன்னாவிடம் சென்றேன், அவனடித்த அடிகளைப் பார்த்தாயா வென்றி தன்முதுகைத்திருப்பிக் காட்ட கபீர்கண்டு பெருமூச்சு விட்டு இப்படியும் அடிப்பாருண்டோ ஈதென்னமோ சமாகவிருக்கிறதென்று யோசித்து ஓ சுவாமி, தாங்கள் எவ்வித வுருவோடு அங்கு சென்றீரென பகவான் யான் மகிஷரூபமாய்ச் சேற்றிற் புரண்டோடி உன்னிதஸ்தானத்தில் விழுந்து புரண்டேனென கபீர் சரிசரி மிகவும் நன்றாயிருக்கிறது. தேவரீர் மோசவுருக்கொண்டு போனமையால் தடிகொண்டு வீசினார்கள் என்ன, பகவான் ஓ கபீர்தாசரே, அந்த கோபன்னாருக்கு பக்திபோதாது இன்னுஞ் சிலநாள் போகவேண்டுமென்று சொல்லி மறைந்தார். இங்கே கோபன்னா அசுசியாகிய மெத்தை திண்டு முதலானவைகளை வெளிப்படுத்தி மேறு நூதனமாக வரவழைத்தமைத்து வைத்து இன்னும் பகவான் வரக்காணோமே யென்று உள்ளே போவதும் வெளியே வருவதுமாக தீபம் வைக்கும் பரியந்தம் பார்த்து மனம் நொந்து கபீர்தாசர் வார்த்தையும் பொய்யாமோ வென மிகச் சங்கட மனமுடையவரானார்.

அவ்விதெப்படி யிருந்ததெனில் ஓர் வனிதையானவள் அனேகநாளாய் கோரியமணாளன் வரவை அபேக்ஷித்துக் கொண்டிருக்க, அம்மணாளன் நான் இன்று வருகிறேனென்று தூதிகளிடம் சொல்லி யனுப்ப தூதி தங்கள் நாயகிக்கறிவிக்க, அதைக்கேட்டானந்தமடைந்து படுக்கைவிடு ஜோடித்து விடியும்பரியந்தம் நித்திரையின்றிப் பார்த்தும், விழிக ளிரண்டும் பூத்தும், நாயகன் வாராததால் காமநோயால் மெய்சோர்ந்த தலைவியைப் போலிருந்தது. அச்சமயத்தில் கபீர்தாசர் எழுந்தருளுவதைக் கண்ட கோபன்னா எதிர்கொண்டு சென்றழைத்து வந்து தகுந்த ஆசனத்திருத்தி அநேக உபசாரங்களைச் செய்து ஓ சுவாமி பகவான் பகல் பதினேழு நாழிகைக்கு வருவாரென்று சொல்லிய தேவரீர் மொழியும் பொய்யாகி விட்டதே, பகவான் வரவில்லையே யெனக் கபீர் மகிஷ ரூபமாய் வந்த பகவானை தடியினால் அடிக்கஅடிக்க அடித்தனுப்பிய நீர் பகவான்வரவில்லை வார்த்தை பொய்யாயிற்றென்று சொல்லுவது தர்மமோ, ஈதென்ன உமது கர்மமோ பகவான் உன் விஷயத்தில் செய்தது வர்மமோ, எம்பெருமான் கிஷ்ரூபமாகியது என்ன மர்மமோ வென, கோபன்னா திடுக்கிட்டு அந்தோ பகவானை யடித்த மாபாவியாகிய அடியேனுக்கு தர்மசொரூபியாகிய பகவான் சேவைதருவாரா, அகோ இப்பாவத்தை எப்படி யான் போக்குவேன், பவசாகரத்தை எவ்விதத்தில் நீந்துவேன். அஞ்ஞானாந்தகாரத்தில் முழுகிய அடியேன் எத்தன்மையாய் ஞானவானாவேன், நாயினுங் கொடியேன், பேயினுங்கடையேன், மூவாசையுடையேன் சதாதுஷ்டநடையேன் என்போலுங் கொடியவன் இவ்வுலகிலுண்டோ, எந்தையாகிய ஸ்ரீராமமூர்த்தி தரிசனந்தராதது இதைக் கண்டோ என்று பலவாறாய்ப் பிரலாபித்து வாட்டமடைந்த கோபன்னாவை நோக்கி, கபீர் ஓ சாதுசர்ஜனா விணுக யேன் உம்மை நீரே நிந்தித்துக் கொள்ளுகிறீர். பகவத் தெரிசனம் பிராப்த மில்லாமையால்கிடைக்கவில்லை பிராப்தமாகிய வஸ்துவை வேண்டாமென்று தள்ளினும் பிராப்தமாகும் பிராப்தமில்லாத வஸ்துவுக்காக தலைகீழாய் தவஞ்செய்யினும் சம்பிராப்தமாக மாட்டாது. ஆகையால் இன்னுஞ் சிலநாளையில் பகவத் தெரிசனங் கிடைக்கும் விசனப்படாதீரென்று சொல்லி தான் விடைபெற்றுச் சென்றார்.

பிறகு கோபன்னா தன்னைசேர்த்து வைத்ததிரவியமெல்லாம் ததியாராதனையிற் செலவுசெய்துவிட்டு திருவாராதனைக்கு பழங்கற்பூரத்துக்குங்கூட வழியில்லாமல் கட்டவஸ்திரமு மில்லாமல் திரியங் கோபன்னாவை அவ்வூர் குடிகள் கண்டு மிகவும் பச்சாதாபப்பட்டு விசனமுற்றார்கள். கோபன்னா மிகவும் கஷ்டத்துடன் மனதில் ராமனைத் துதிசெய்துக் கொண்டே நித்திரைசெய்தார். அப்போது அவருடைய கனவில்

Koviloor Digital Library

லோக நாயகனாகிய ஸ்ரீராமர் எழுந்தருளி ஓ கோபன்னா நீர் விசனமடையலாமா சீக்கிரமெழுந்து ஹைதர்பாத்துக்கு போய் தானீஷாவைக் காணுவீரேயாகில் உமக்கு மேலாகிய தாசீல், உத்தியோகம் கொடுப்பார் அதினால் நீ சுகமடையலாமென்று சொல்லி மறைந்தார் கோபன்னா நித்திரை நீங்கி எழுந்து நமக்கு ஹைதர்பாதில் யாரிருக்கிறார்கள். யாரைக்கொண்டு தானிஷாவைக் காணுவேனென்று சிந்தித்து ஆகிலும்நமது அம்மான் களிருவர்கள் அக்கன்னா மாதன்னா வென்னும் நாமமுடையவர்கள் தானீஷாவிடத்தில் மந்திரிகளாக இருக்கிறார் களாகையால் நமது நோன்பு பலம் ஈடேறிற்றென்று ஸ்ரீராம பரமாத்மாவை தியானித்து பெண்டு பிள்ளைகள் அவ்விடத்தி லிருக்கும்படி விடுத்து ஹைதர்பாத் நகரத்தை யுத்தேசித்து பகவான் நாமத்தைப்படித்து ஆங்காங்கு தன்னை மரந்து நடித்து வைராக்கியம் பிடித்து நடந்து ஹைதர்பாத் நகரத்தை யடுத்து அம்மான் வீட்டை நாடிச் சென்று அவர்களைக் கண்டு தங் நிர்ப்பாக்கிய திசையை யறிவித்தார். இதைக்கேட்ட அவர்களிருவரும் நல்ல ஆடை யாபரணங்களைத் தந்து தங்களோடு புசிக்கச்செய்து ஆதரித்து ஓ கோபன்னா தானீஷாவைச் சபையில் காண வாருமென்று சொல்லி அண்ணன் தம்பிகள் இருவரும் தானிஷாவின் சபைக்குச்சென்று தங்கடங்க ளாசனத்தில் வீற்றிருந்தார்கள்.

கோபன்னா அம்மான்கள் போன கிஞ்சித்து நாழிகைக்கெல்லாம் ஆடையாபரணம் அலங்காரஞ் செய்துகொண்டு வீட்டைவிட்டு வெளிப்பட்டு தானிஷாவின் சபைக்குச்சென்று மிகுந்த வணக்கத்துடன் பய பக்தியோடு தானீஷாவைக்கண்டு மண்டியிட்டு ராம்ராமென்று சலாம் செய்யக்கண்ட தானிஷா கோபன்னாவின் அடக்க வொடுக்கம் சாந்தகுணத்தைத் தெரிந்து நீராரையா, எந்த வூரையாவென கோபன்னா நான் பிராமணன் நெல் கொண்டபல்லே யென்னும் கிராமத்தில் வசிப்பவன் என்பேர் கோபன்னா யென்றார். தானீஷா இங்கு என்ன காரியமாய் வந்தீரென்றார். கோபன்னா ஓ பிரபு நான் தற்காலம் மிகவும் ஏழ்மை ஸ்திதியி லிருக்கிறபடியால் தங்களிடத்தில் யாதேனும் ஓர் உத்தியோகம் சம்பாதித்து அதனால் ஜீவனஞ் செய்யலாமென றெண்ணி தங்களை நாடிவந்தேன் என்றார். இதைக்கேட்ட தானீஷா அதிலிருக்கும் மந்திரிகளை நோக்கி எங்காகிலும் வேலை காலியாயிருக்கிறதா என மந்திரி மகா பிரபுவே இந்த ஸமஸ்தானத்தைச் சேர்ந்த தாலூக்காக்களில் - பத்திராசலம் தாலூக்காவில் தாசீல் கிடையாது. அந்த வேலைக்கு அனுப்பும் அதிபனே என தானீஷா ஓ கோபன்னா, பத்திராசலத்திற்கு தாசிலாகப்போய் குடிகளுக்கு சௌக்கிய முண்டாகும்படி நீதியாய் விசாரணை செய்து அந்தந்த காலந்தப்பாமல் வசூல் செய்த பணத்தை அவருக்கு அனுப்புவையாகில் உன் விஷயத்தில் எனக்கு மெத்த பிரியம் உண்டாகும். ஜாக்கிரதையாய் பரிபாலனஞ் செய்யும் என்று சொல்லி முத்திரை முதலானதுந் தந்து கோபன்னா விடயத்தில் கையொப்பம் பெற்றுக் கொண்டு போய் வாருமென்று சிலவு தந்தார். கோபன்னா தானீஷாவிடம் சீல் முதலானதும் பெற்று, சலாம் தந்து விடை பெற்று சேவகருடன் பகவத் தியானத்தோடு பத்திராசலத்தை நோக்கி புறப்பட்டு நடக்கும் மார்க்கத்தில் பிர்மாண்ட புராணத்தில் சொல்லிய பத்திராசல மகத்துவத்தை யெண்ணிமிகுந்தகளி யோடு ஸ்ரீ ராமானுக் கிரகத்தினால் இத்தலத்தில் நமக்கு உத்தியோகங் கிடைத்ததே யென்று மனக்களிப்பினால் திரேகம் பூரித்து ஆனந்த மடைந்து கௌதமி நதியை யடுத்து அதில் ஸ்நானானுஷ்டானங்களை முடித்து பத்திராசல சிகரத்தைக் கண்டு அதின் வைபவத்தைக் கொண்டாடுகிறார்.

எப்படியெனில். தங்கமயமாகிய பிராகாரங்களும் துவாரங்களும் கோபுரங்களும் சுந்திரமாகிய யிதற்கிணையான க்ஷேத்திரம் எங்கும் கண்டதுமில்லை கேட்டது மில்லையே பளபளென்று பிரகாசிக்கும் ஒளி நேத்திரங்களைக் கொள்ளை கொள்ளுகிறதே என்ன சொகுசு ஆஹாஹா இதின் பெருமையை ஆதிசேஷனாலுஞ் சொல்ல முடியாதே. மேலும் இக்கலியுகத்தில் வைகுந்த மிதுவே ஆகையால் ஓ ஜவான்களே உங்கள் பாவங்கள் நசித்துப்போகும். தெரிசனஞ் செய்யுங்கோள். அன்னியிலும் நீங்கள், புண்ணியவான்களானதால் என்னுடன் சகாயமாய் வந்தீர்கள். என் பாக்கியமே பாக்கியம் அதோ பார்த்தீர்களா புன்னை-வகுள குருக்கத்தி - மாந்தரை - கோங்கு - இருவாக்ஷி மனோரஞ்சிதம் - மல்லிகை - முல்லை - சாதிமல்லிகை - ரோஜா முதலாகிய மலர்சோலைகள் மிகவு மனோகர மாயிருக்கிறது. மேலும் தேங்கு - கதலி - பலா - நாரத்தை - கமுகு முதலான பலபல வர்க்கச் சோலைகள் அதிக ரமணியமாக யிருக்கிறதுந் தவிர ஸ்ரீ மகாலட்சுமி கடாக்ஷம் பொருந்தி நம்மைப்போன்ற பாமரர்களை ரக்ஷிக்கும் நிமித்யம் ஸ்ரீ பரமாத்மா நிவாசமாகிய பத்ராசலத்தை சேவித்துப்போவோம் வாருங்களென் றழைத்துக் கொண்டு மலையின் மீதேறி சீதா லட்சுமண பரத சத்ருக்ன அநுமச்சமேத ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை சேவித்து சந்நிதியை பிரதக்ஷணஞ் செய்து மலைக் விட்டறங்கி தாசீல் கச்சேரிக்குட் பிரவேசித்துய குடிகளை வரவழைத்து ஓ புரஜனங்களோ தானீஷா பிரபுவுக்கு செலுத்த வேண்டிய கிஸ்தி பணங்களைக் கால

Koviloor Digital Library

ந்தப்பாமல் கொண்டுவந்து கட்டுவதுந் தவிர சதா ஸ்ரீராமமூர்த்தியைத் துதிசெய்து விருத்தி யடைவது மேலாகிய காரியமென்று சொல்லி குடிகளைப் புதல்வரைப்போல மிகுந்த பிரியமாய் காப்பாற்றுவதோடு சக்கிரவர்த்தி திருக்குமாரனை துதிசெய்துக் கொண்டு தன் உத்தியோகத்திலும் மிகுந்த ஜாக்கிரதையோடு குடிகளிடத்தில் நயபயமாய்ப் பணங்களை வசூல் செய்து காலந்தப்பாமல் அஜரூருக் கனுப்பிக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்க ஹைதர்பாதில் மந்திரிக ளிருவரும் தானிஷாவை நோக்கி மஹாப் பிரபுவே, பத்திராசலத்திற் தாசிலாக அனுப்பிய கோபன்னு மிகவுங் கெட்டிக்காரன், ரொம்ப நல்லவன், அதிக கஷ்டமெடுத்துக்கொண்டு பணங்களை குடிகளிடத்தில் வசூல் செய்து கெடுவுக்கு முன் அருருக் கனுப்பிக்கொண்டிருக்கிறனென்று சொல்லக்கேட்ட தானீஷா, மந்திரிகளை நோக்கி ஓ மந்திரிகளே! அந்த கோபன்னு மிகவும் மானி! நல்ல குலத்திலுதித்தவன், சாது சஜ்ஜனன் மிகவும் ஏழை கொற்சோர்வு படாதவ னுகையால் என்னுடைய உத்திரவுபடி நடக்கிறுன். அவன் முன்னம் நம் சபைக்கு வந்தபோதே நடவடிக்கைகள் எனக்கு நன்முய்ப் புலப்பட்டபடியால் அவன் விஷயத்திலெனக்கு பிரியம் பிறந்து அந்த உத்தியோகததிற்குத் தகுந்தவ னென்று யோசித்துதான் இந்த உத்தியோகங் கொடுத்தேன் என்று கோபன்னுவைக் கொண்டாடி அனந்தரம் அவ்வூர் குடிகள் வியாச்ய விதி பிரதிவாதிகளை விசாரித்து நீதியாய் தண்டனை கண்டனைகளைச்செய்து அரசு புரிந்துவந்தார். இப்படி இவ்விடமிருக்க அவ்விடம் பத்திராசல க்ஷேத்திரத்தி லிருக்கும் கோபன்னு, பிராமணர் எத்தனைபேர்வரினும், தீர்வை பணத்தை ஸ்ரீராமர் பணமென்று மனதிலெண்ணி க்ஷேமத்துடன் ததியாராதனை செய்துக்கொண்டிப்படி ஸத்விஷயத்தில் காலங் கழித்துவர, ஓர் நாள் பத்திராசல மலையேறி மார்க்கங்களை திருத்திக்கொண்டு மேலேசென்று, இலமாகி யிருக்கும் கர்ப்பக்கிரஹ பிரகார மண்டபங்களையும், வாஹன மண்டபங்களையுங் கொடிகளின் கிழ்கிடக்கும் சீதா லட்சுமண ஸ்ரீராம விக்கிரகங்களையுங் கண்டு மிகுந்த விசனமடைந்து எத்தனை காலமாச்சுதோ இச்சந்நிதியைக் கட்டி எந்த புண்ணியாத்மா கட்டி வைத்தாரோ மறுபடியும் இதனை கட்டித்திருத்தும் பிரபுக்க ளில்லையோ வென்ன அவ்வூரில் வசிக்கும் சில பிராமணர்கள் கோபன்னுவை நோக்கி, மகாப்பிரபுவே இந்தத்தலம் பூர்வம் இந்த க்ஷேத்திரத்தில் தம்மலதம் மாக்காளெனும் ஓர் உத்தமி தன் குமாரியோடு நிவாசமாகி யிருக்க, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தம் மக்களுடைய மனசிலத்தைத் தெரிந்து ஓர் நாளிரவில் அந்தம்மாள் கனவில் எழுந்தருளி ஓ பக்தமணியே! நான் பத்திராசல சிகரத் தெழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமச் சந்திரனுக்கும், நீ மிகவும் பகவத் பிராணபக்தி யுடையவளாதலால், எனக்கு திருவாராதனை நடத்தி நானிர்க்க பர்வதத்தி லமர்ந்திருக்கும் சமாசாரத்தை சகல ஜெனங்களுக்குந் தெரியப்படுத்தி, எனக்கு பக்ஷோற்சவ முதலானது நடக்கும்படி செய்து கொண்டிருப்பாயாகில் சில நாளையில் எனக்குப் பிரிய பக்தனுகிய ஒருவன் இந்த கிராமாதிகாரியாய் வருவன் அவன் கோயில் கோபுரம் பிராகாரங்கள் முதலானதுங் கட்டிவைப்பன். அது பரியந்தம் நீ பூசித்து வருவாயாகில் உனக்குப் பரமபதம் பிராப்தியாகு மென்று சொல்லி மறைந்தார்.

உடனே அந்த தம்மக்கள் நித்திரை தெளிந்து விடியற் காலமானதே புதல்வியை யழைத்து தான் கண்டகனவின் விருத்தாந்தங்களைச் சொல்லி, பிறகு ஊரிலிருக்கும் ஜனங்கள் யாவருக்குந் தெரியப்படுத்தி கிராமத்தோரும் தானுமாக அன்று பகல் பத்திராசல சிகரமேறி அங்கோரிடத்தில் செடிகளின் கொடிகளினுல் மூடப்பட்டிருக்கும் சீதா லட்சுமண விக்கிரகங்களைப் பார்த்து ஸம்ப்ரோக்ஷணை முதலானதுகள் செய்வித்து பூசித்து அது முதற்கொண்டு அனுதினமும் அந்தக் கிராமாதிகாரியாகிய பத்திரெட்டியெனுங் குடியானவன் மூலமாக நைவேத்தியத் திரவியங்களை பெற்று ஜனங்களை பர்வதமேறிப் போகும் போதும் வரும்போதும் துணையாக அழைத்துக் கொண்டுபோய் தன் சக்தியளவு சிறிய மண்டபங்கட்டி வைத்து அதில் சுவாமியை எழுந்தருளச் செய்து அந்த கிராமஸ்தர்கள் சகாயத்தினுல் பிரம்மோற்சவங்கள் முதலானதுகளுஞ் செய்துக் கொண்டிருந்து பதவி யடைந்தனளென்று சொல்லக்கேட்ட கோபன்னு பெண்பிள்ளை யாகஞ்செய்து இத்தனை கைங்கரியஞ்செய்து கடைத்தேறினளே அந்த பக்தி நமக்கில்லாமற் போச்சுதே, மேலாகிய நரஜென்மம் நமக்கு வாய்த்துதே இதற்கு அந்திய காலம் வந்து போகிற போது புழுத்த பாக்காகிலும் பின் தொடர்ந்து வருமோ வாராது. ஆயிரம் பதினுயிரம் ஒளித்து வைத்துக் கொண்டு யாசகருக்கு யீவு கொடாத லோபிகள் பின்னே யேதும் வரப்போகிறதில்லையே மேலும் கொடுத்த மட்டுக்குந் தெய்வங் கொடுக்கும். அதிக மாய்க் கேட்டால் வராது. இந்த பூமியிற் பிறக்கும்போது நாம் எதாகிலுங் கொண்டு வந்தோமா, அல்லது நாம் பிறந்து வளர்ந்து சம்பாதித்த திரவியத்தை அனுப்பிரமாணமாகிலும் அந்தியத்தில் இறக்கும் போது கொண்டு போகின்றோமே இல்லையே. அன்னியிலும்

Koviloor Digital Library

தன் சந்ததிக்காக மூலைகளில் தனத்தை ஒளித்து வைத்தும் இத்திரேகம் மலபாண்டமென்றும் அழிந்துபோகுமென்றும் தீர்க்கமாய் யோசிக்காமலும் பெண்டு பிள்ளை பசு முதலானதுகளை தங்களுடைய தென்றும் பிரமித்திருக்கிறார்கள். இத்திரேகத்தை விட்டு ஜீவன்போகிறபோது தாமெங்கே தன்மனிதர்களெங்கே, பணமெங்கே நேசரெங்கே அவதாசரெங்கே, விசுவாசரெங்கே, மைந்தரெங்கே பொன்மணிகளெங்கே, நன்வனிதை யெங்கே வீடுமனைகளெங்கே மாடுகன்றுகளெங்கே, பரிகளெங்கே மதகரிகளெங்கே கட்டில் மெத்தைகளெங்கே, பட்டு வஸ்திரமெங்கே பயல் காணியெங்கே, கப்பல் தோணியெங்கே ஒன்றும் நம்மோடுகூட வருவதில்லை. நம்மை தொடர்ந்து வருவது யெதுவெனில், பாவ புண்ணியங்களாம், ஆகையால், நாம் எவ்விதத்திலாகிலும் புண்ணியமே செய்யவேணுமென்றெண்ணி தன்ஜென்ன சாபால்யமாகும்படி பக்தபராதீன ஜானகிரமணா, முக்தாபரணா, மூவுலகாதரனா, உன்னுடைய சந்நிதியை நலமாய்க் கட்டுகிறேனென்றெண்ணி பகவானுக்கு தீர்க்கதெண்டனிட்டு வணங்கி மலையை விட்டிறங்கி குடிகளை வரவழைத்து ஓ குடிகளே ஸ்ரீ பத்திராசல சிகரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீராமபிரானது சந்நிதி ஜீர்ணமாயிருப்பதால் அதை நன்றாய்க் கட்டவேணு மென்கிற எண்ணங் கொண்டேனாகையால் நீங்களும் சகாயமாயிருந்து இக்கைங்கரியங்களை பூர்த்தி செய்யுங்கோளெனக் குடிகள் ஓ சுவாமி! தங்கள் வாக்குக்கிரண்டுண்டோ, அவசியம் தடையின்றி இச் சுபகாரியத்திற்கு எங்களாலானமட்டும் உதவி செய்துவதுமன்றி கூடயிருந்துங் காரியங்களை பார்க்கிறோம். என்று சொன்னார்கள்.

அதைக்கேட்ட கோபன்னா மிகவுங் களிக்கடலில் மூழ்கினவராய் சிற்பிகளை வரவழைத்து பத்திராசல சிகரத்துக் கழைத்துகொண்டுபோய் வேண்டிய சாமான்கள் யாவும் கணக்கெடுத்து தொகையை சேர்த்துப் பார்க்க ஆறுலக்ஷம் விராகன் மொத்தம் வருவதைக்கண்டு வேகமாய் கச்சேரிக்குவந்து கஜானுகணக்கனை யழைத்து நமது கஜானாவில் எவ்வளவு தொகைபண மிருக்கிறது சொல்லுமென்றார். கணக்கனும் ஆறுலக்ஷம் விராகன் கஜானாவி லிருக்கிறதென்று கணக்கு கொடுத்தான். இதைப்பார்த்து கோபன்னா பூரித்து தன்னைமறந்து கட்டடக் கணக்கும் ஆறுலக்ஷம் கஜானாவிலிருக்கும் பணத்தொகை கணக்கும் ஆறுலக்ஷமாக யிருப்பதால் இது இராமார்ப்பணமென்று சர்க்கார் பணமாச்சுதே யென்று கிஞ்சித்தும் பயமின்றி ஸ்ரீராமரிருக்கிறபோது நமக்கென்ன பயமென்று அதிக தைரியத்தோடு கட்டடம் ஆறுலக்ஷம் விராகனைக்கொண்டு ஆரம்பித்தார் சிற்பிமுதலானோரைக்கொண்டு லாஷ்டிகமாய் பிரகாசம் பொருந்திய மணிகளாற்சாலைகளும், பிரகாசங்களில் வெகு மண்டபவரிசைகளும் மெல்லிய தாமாகிய மண்டபங்களும் புஷ்பராகங்களினால் அங்கணங்களும், பொன்மயமாகிய கூடங்களும் ஆகாயத்தையளாவிய தேர்களும் மிகுந்த சித்திர வேலைகளாகிய கோபுரங்களும், உன்னிதமாகிய உயர்ந்த மதில் சுவர்களும் தங்கமயமான பவழந்தூண்களும், ரங்காகிய முத்துகள் கோர்த்த தோலங்களும், சிங்காரங்களாகிய சித்திரங்களும், நவரத்தின மகர தோரணங்களும், கண்ணாடிகளினாலாகிய தோரணங்களும், பூஞ் சப்ரங்களும், ஆலவட்டங்களும், தாராளமாகிய ப · ர் · ந ம் ரத்தினசிகரங்களும், கமகமவென்னுஞ் சந்தன வாசனைகளும், குமு குமு வென்னுங் குங்கும வாசனைகளும், கணகண வென்னும் மணிகள் சத்தங்களும், தணதண வென்னும் பேரிவாத்தியங்களும், பளபள வென்னும் பிரகாசச்சுவர்களும், சுவர்னமாகிய கெருடத்துவஜனங்களும், ராமராமா வென்னும் ராமக்கிளிகளும், நாமங்களைத் துதிக்கும் நய பூசுரர்களுங்கூடி ஒலிக்கும் தம்பூருகளும், கொசரியாடும் பக்தர்கள் நாட்டியங்களும், கெருட வாஹனமுதல் சகல வாகனங்களும் தாரை-பூரி-சங்கம்-துந்துபி வாத்தியங்களும், முழங்கும்படி மிகுந்த மேன்மையான குடைகள் வெண்டங்கா வாத்தியங்களும், தாசிகள் பாட்டும் ஆட்டங்களுங்கனமாகிய திருத்துழாய் வனங்களும், ராமதீர்த்த மகத்துவ தடாகங்களும், சீதா லட்சுமன பரத சத்ருக்ன ஸ்ரீராம மூர்த்திகளுக்கும் கெம்புகள் முதலான நவரத்தினங்களினால் சிரசுக்கு சூடும் சூரிய பிறை சந்திர பிறை கலிகத்துராகட்டி முகப்பட்டம் குண்டலங்கள் நாசியில் நவரத்தின புலாக்கு உத்திர சஞ்சம் முத்துகளாரம் கௌஸ்துமணி கண்ட சாம் நவரத்தின பதகங்களுக்கும், தளதள வென்று பிரகாசிக்கும் தளுக்கு சரங்களும், மோகன மாலையும் மகர கண்டி புலிநக பதகம் புத்கிருதிகிரீடமும் காங்களிற் காப்பும் மத்தியில் கனகசேலமும் பாதங்களில் மிருநாதமாகிய கிண்கிணித்தண்டை கொலுசு முதலாகிய பல ஆபரணங்களுஞ் செய்து சமர்ப்பித்து ராம பத்திர விக்கிரஹ தரிசனங்களும் மிகுந்த ஆனந்தத்தோடு பூமியில் பிரகாசிக்கும்படி மேன்மையாகவுமிருக்க அதை தேவ லோகத்தாருங்கண்டு நாணும்படி கட்டி முடித்து சம்புரோக்ஷணை நடத்தி, நேத்திரோற்சவமாய் சேவித்து நமது கோரிக்கை ஈடேறிற்றென்று ஆனந்த மடைந்து நித்தியோற்சவம் பக்ஷோற்சவம் பிரம்மோற்சவம் முதலாக பஞ்ச பர்வங்களும்

Koviloor Digital Library

நடத்தி இடைவிடாத ராமநாமத்தை ஸ்துதிசெய்துக் கொண்டிருந்தார்.

இவ்விடத்தி லிப்படியிருக்க ஹைதர்பாத்தில் அம்மான்களாகிய மந்திரிகளிருவரும் கணக்கைப் பார்த்து எல்லா தாலூக்கா பணங்களுக்கும் முந்தி பத்திராசலல் தாலூகாபணம் வருமே இப்பொழுது இன்னும் வராதிருப்பதற்கு காரணந் தெரியவில்லையே யென்று யோசித்து தங்களுக்குப் பிரியனாகிய ஓர் ஜவானை யழைத்து நீவெகமாய் பத்திராசலத்திற்குச் சென்று தாசிலாகிய கோபன்னாவைக் கண்டு, எங்களுடைய க்ஷேமத்தை விண்டு, எல்லா தாலூகா பணமும் அருகுக்கு வந்து சேர்ந்ததே கெடுவுக்கு முன் வரும் உம்முடைய கிஸ்தி பணம் அனுப்பாமலிருக்கும் காரணமென்னவென்று தெரிந்துக்கொண்டு வாவென்றனுப்ப, அந்த ஜவானும் ஓடோடியும் வந்து பத்திராசல தாலூகாவைச் சேர்ந்து தாசிலாக இருக்கும் கோபன்னாவைக் கண்டு பல க்ஷேமங்களையும் விசாரித்து ஓ சுவாமி, எல்லா தாலூகாக் காரருக்கு முந்தி உம்முடைய கிஸ்தி பணம் வருகிறதாச்சுதே அப்படி கெடுவுக்கு முன் வரும் உம்முடைய கிஸ்தி பணம் இன்னும் வராமலிருக்குங் காரண மென்னவென்று அறிந்துகொண்டு வரும்படி உமது அம்மான்களாகிய மந்திரிகள் என்னைத் தனியே ரகசியமாயனுப்பினார்களென்று சொல்ல, உடனே கோபன்னா அந்த ஜவானை யழைத்துக்கொண்டு பத்திராசல மலையேறி கட்டடங்கள் முதல் யாவற்றையுங் காட்டி ஓ ஜவானே இக்கைங்கரிய விஷயத்தில் ராமர்ப்பணம் செய்து ஆறு லக்ஷவிராகனையும் சிலவு செய்து விட்டேனென்று சொல்ல, அதைக்கேட்ட ஜவான் ஐயா மகாத்துமாவே நீர் செய்தது மேலான காரியமே இந்த வெண்ணம் உத்தம புருஷாளுக்கன்றி இதராளுக்கு உண்டாகாது. ஆகினும், ராஜாவின் பணத்தை யெடுத்து சிலவு செய்து விட்டீரே இதனாலுமக்கு ஆபத்துண்டாகுமே என்ன கோபன்னா ஜவானை நோக்கு சொல்லுகிறார். ஓ ஐயா! ஸ்ரீ ரகுராமன் - சுபநாமன் - துளபத்தாமன் ஆயிரநாமன் - சுஜனகாமன் - ஸ்ரீ சீதைவான் - ஜெயராமன் - மேகசியாமன் - கோடிமன்மதாகாரன் - தசரதகுமாரன் - சுவிஹாரன் - ஹங்கிருரன்-பூவுலகில் தீரன்-பாவதூரன் - விமல சரீரன் - நிர்விகாரன் - வந்திருக்கும் வானவர்களீசன் சத்ய பாஷன் புத்தோஷன் நிர்த்தோஷன் சாதுபோஷன் மானிட வேஷன் பூமாது களத்திரன் பங்கய நேத்திரன் திரேக காத்திரன் பத்திராசல வாசன் ஹிருதயேசன் விசுவாசன் பக்த நேசன் பாபநாசன் சகல சராசராதி சிலனாகிய பகவான் எனக்கொரு குறையும் வரவொட்டான் என்று கோபன்னாவிடம் சிலவு பெற்றுக்கொண்டு ஹைதர்பாதுக்குச் சென்று நடந்த விருத்தாந்தங்கள் யாவும் மந்திரிகளுக்கறிவித்துச்சென்றான் பிறகு அக்கன்னா மாதன்னா இருவரும் யோசித்து மதிபதிக்கென்னென்று சொல்லுவோம். கோபன்னா தனக்குத்தானே ஆபத்துத் தேடிக்கொண்டானே எவ்வாறாய் முடியுமோ வென்று யேக்கங் கொண்டிருந்தார்கள்.

பத்திராசலத்தில் சிலபுரஜனங்கள் கோயில் புதிதாய் கட்டியதைப் பார்த்து சந்தோஷித்து கோபன்னா மிகவும் தர்மாத்மா வென்று கொண்டாட அதில் நேசர் ஆப்தர்கள் தனக்கான மனிதர்கள்யாவரும் ஒன்றாய்கூடி கோபன்னாவை நோக்கி ஐயா ராமபக்தரே உமது மனதில் சர்க்கார் பணமென்று அணுவுங்கூட யெண்ணாமற்படிக்கு சிலவுசெய்துவிட்டீரோ இப்படிசெய்தது சரியல்ல இதனாலென்ன கஷ்டம் நேரிடுமோ வென்று சங்கடப்பட கோபன்னா உச்சிதமாகிய வேதங்களைக் கவர்ந்த கள்ளனாகிய சோமுகா சூரனைக்கொன்ற வராகவதாரனும், இரணியனை இருபிளவாகச்செய்த நரஹரி யவதாரனும், பூமியையும் சுவர்க்கங்களையும் பொருந்தி வளர்ந்த வாமனாவதாரனும், தரணியில் க்ஷத்ரியர்களை மாய்த்த பரசுராமாவதாரனும், தசக்கிரீவனை முன்னே தரணியிற்கொன்ற தசரதராமவதாரனும், கலக்கமின்றி யாதவகுலத்தி லுதித்த பலராமாவதாரனும், துஷ்டசித்தனாகிய கம்ஸனை வதைத்த ஸ்ரீ கிருஷ்ணாவதாரனும், கலியுகத்தில் காலத்தையெதிர்பார்த் திருக்குங் கல்கி யவதாரனும் ஆகிய பகவான் பக்கத்துணையாகி சக்கராந்த்ரித்து சமீபத்திலிருக்கக் குறையென்ன நமக்கு ஒருகுறைவும் வராது யென்றுசொல்லி ஸ்ரீராமநாம அமிர்தத்தைப் புசித்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்க, அங்கு ஹைதர்பாத்தில் பிரபுவாகிய தானீஷா கொலுக்கூடத் தமர்ந்து உத்தியோகஸ்தர்களை நோக்கி, எல்லா தாலுகா பணமுங் குறைவின்றி அருகுக்கு வந்து சேர்ந்ததா வென்று கேழ்க்க, உத்தியோகஸ்தர்கள் ஹஜரத் பத்திராசலமொன்று தவிர மற்ற தாலுகா கிஸ்திகள் குறைவின்றி பூரணமாய் சேர்ந்ததுயென தானீஷா பத்திராசல கிஸ்திபணம் ஏன் வரவில்லை என்ன முகாந்திரமென்ன! உத்தியோகஸ்தர் கோபன்னா அதிகமாக விரயஞ்செய்துவிட்டார் என்றார்கள். அதைக்கேட்டு தானீஷா எவ்விதத்திலென்றார். மகாராஜவே தாங்கள் எங்கள் மனுவை செவிகொடுத்து கேழ்க்கவேணும் அந்த கோபன்னாவின் வீட்டில் தினந்தினம் பிராமணாளுக்கு சந்தர்ப்பனை விருந்துகள் நடக்கிறது

Kovilur Digital Library

மேலும் பத்திராசல மலையின்பேரிலிருக்கும் இராம க்ஷேத்திரத்தை பலமாய் கட்டி வைத்து அதற்கு சம்ப்ரோக்ஷணை உர்சவாதிகள் செய்வித்துக் கொண்டு தங்கள் பணத்தை தாராளமாய் செலவு செய்கிறார் அதினால் ஆறுலக்ஷம் விராகன் நிலுவை நின்று அருருக்கு வராமற் போய்விட்டது பொக்கிஷங்கள் பாழாச்சுது தேவாலயங்கள் வெகுவாய் திருத்தமாச்சுது கணக்குகள் சரியில்லாமற் போச்சுது. அருருக்கு திரவியம் சேராமல் போச்சுது. தாசில் செய்யும் கோபன்னாகாரு மிகவுந் தண்டாசெய்துக்கொண்டு தங்கள் திரவியத்தை யெல்லாம் கொள்ளை யடிக்கிறார். மேலும் ராமச்சந்திரமூர்த்தியை நம்பி பத்திராசலத்தில் மிகவும் சுகமாயிருக்கிறார். ஆகையால் தாங்கள் தடையில்லாமல் அந்த கோபன்னாவை இவ்விடம் வரவழைத்தால் எல்லா சங்கதியும் வெளியாகும் என்றிப்படி சொல்லக்கேட்டு கொல்லன் மூசினுருகிய செம்பைப் போல பாக்ஷா கண்களிரண்டுஞ் சிவப்பாகி, எப்படி செலவு செய்தான் கோபன்னா என்ன தைரிய மென்று கோபத்தினால் ஆக்கிரகிக்குரோதனாகி சமீபத்திலிருந்த மகம்மதிய ஜவான்களை யழைத்து சீக்கிரம் நீங்கள் பத்திராசலத்திற்கோடி இந்தநாக்கீதை கோபன்னாவுக்கு காட்டி விராகன் ஆறுலட்சமுந் தந்தால் பெற்றுக்கொண்டு வாருங்கள் இல்லாவிடில் யாவரும் பார்க்கும்படி கோபன்னாவை சகலமான காவலுடன் கொண்டு வாருங்க ளென்று ஆக்ஞை செய்தான் எமதூதரை நிகர்த்தவரும் மகாகொடிய மனமுடையவர்களும் ஜீவகாருண்ய மில்லாதவர்களும் பூததயையில்லாதவர்களும் மிகவும் பொல்லாதவர்களுமாகிய அந்த ஜவான்கள் பாக்ஷாகொடுத்த தாக்கீதை பத்திரப்படுத்திக் கொண்டு சலாம் செய்து கொலுவை விட்டு காற்றைப்போல் பரந்து இரவு பகலென்றும் மனதிற் குறியாமல் துரிதமாய் நடந்து பத்திராசலத்தை நாடிகச் சேரிக்குள்ளாக ஓடி அமுல் செலுத்துங்கோபன்னாவை நாடி கியாகி கோபன்னா சலாம் தும்தே கோ சீக்கிரம் எழுந்துவாரும். பாக்ஷாவிடம் போகலாம் கோல கொண்டா நகரத்துக்கு நட என்ன எழுந்துவாருமென்றால் யோசனை செய்கிறையே வாவா நட நட திண்டு திமாசு முதலானதுகளை விட்டு இரங்கி நவாப் எழுதிக்கொடுத்ததை ஜாக்கிரதையாய்ப் பாரு நாங்கள் கேழ்க்கும் வார்த்தைகளுக்கு பதில் சரியான மொழிகளை உறைத்து வுன்மானத்தை காப்பாற்றிக்கொள் மேலும் அவரங்கபாத் தகத்துக்குள்ளாக அநேகமான தாசில்தார்க ளிருக்கிறார். எவர் பேரிலும் பாக்கி ஓர் பையளவும் கிடையாது. என்னமோ உனபேரில் பாக்கி மிகவாயிருக்கிற தாகையால் ஓர் நிமைப் பொழுதாகிலும் பணத்தை நிறுத்த மாட்டோம் உன்பேரில் நிலுவையாக விருக்கிற பூராபணமும் கொண்டுவாரும் இப்பவே சீக்கிரம் இல்லாவிடில் கொரடா கொண்டடிப்போம் அன்னியிலும் இந்த தாலுகாவுக்கு தாங்களதிகாரிகளென்று கிஞ்சித்தும் பயப்படமாட்டோம். எதற்காக இவ்வளவு அஞ்சியிருக்கிறீரென்றால் எங்கள் துரை பத்திராசல ராமனுக்கு தாசனென்றெண்ணி இத்தனை பொருத்தோமென இவ்விதமாய்மொழிந்த ஜவான்களுடன் மிகுந்த நயமாய்ப்பேசி ஓ சாதுக்களே! பாக்ஷாவிடத்திலென்ன அமுல்நடந்தது அந்த விர்த்தாந்தங்களைச் சொல்லுமென்ன ஜவான்கள் ஓ, கோபன்னா எல்லா தாலுக்காகஜானாவும்வந்தது. இந்த பத்திராசல தாலுகாபாக்கி மிகவும் யிருக்கிறதேயென்று கோபித்துக் கொண்டார் தானீஷா வெனக்கேட்க கோபன்னா திர்க்காலோசனை பண்ணி எப்படி செய்யினும் ரகுபதியிருக்க எதுக்கு பயப்படவேண்டு மென்று திடச்சித்தராகி பல்லக்கு பகல் தீவட்டி கொம்பு தமுக்குங்கொண்டு வரும்படி திட்டஞ்செய்தார்.

உடனே ஊழியக்காரர்கள் நொடியில் கொண்டு வந்து கோபான்னாவின் முன் நின்றார்கள். கோபன்னாபோவோம் ஏறுங்கோள் பல்லக்கின்பேரிலென்ன ஜவான்கள் நீர் சர்க்கார் பணமுழுமையும் கட்டிவீரேயாகில் பல்லக்கின்பேரிலேறலாம் பண முழுமையும் செலுத்தாதபடியால் நீர் எங்கள் சொற்படி சகல காயிதாவுக்குட்பட்டு கால்நடையாகவே வர வேண்டுமென கோபன்னா உங்களிஷ்டப்படி வருகிறேனென்று சொல்லி கால்நடையாக ஜவான்களிருபுறமும் உருவினகத்தியோடுவர நடந்த மார்க்கத்தில் மனசஞ்சலங்கொண்டு சர்வலோக சரண்யராகிய சாக்ஷாத் ஸ்ரீராமமூர்த்தினது கிருபை எப்படியோ அதை யறிவர் யார். அன்னியிலுஞ் சாஸ்வதமாகிய ஐஸ்வரியங்களை தந்து சதாகாலமும் என்னை ரக்ஷிப்பாரோ அல்லது பாட்சாவினால் சகல விதங்களாகிய பாதைகளினால் சங்கடமடையப் பார்ப்பாரோ அல்லது எப்போது இந்தப்படியே யிம்சைபடுத்தி ஏற்பரோ மேலும் குமாரர்களைப்போல் பாவித்து என்னை கௌரவமடையச் செய்வாரோ அன்னியில் நாலுபேருக்குள் மிகவும் நகைக்கிடமாய்ச் செய்வாரோ அல்லது பயப்படாதே யென்று அபயஸ்தங்கொடுத்து வேகமாய் என்னை ரக்ஷப்பரோ அன்னியில் இவன் அதமன் துஷ்டனென்று வேகமாய் யாட்சாவை கொண்டு ரக்ஷிப்பாரோ சதா என்னை ஆதாயமுடையவனாகச்செய்து வைப்பாரோ அல்லது நிர்த்தயை யுடையனாகி நீக்கிவிட எண்ணுவாரோ மேலும் இப்பூமியின்கண் அடியேனை தனது தாஸ ஜனங்களுடன் சே

Koviloor Digital Library

ர்ப்பரோ அல்லது பெண்டு பிள்ளைக ளென்னும்
வலைகளில் அகப்பட்டுக் கொள்ளும்படி பார்ப்
பரோ அன்றியிலும் பிரியத்துடன் மங்களகரமா
கிய தெரிசனந் துறையில் களிக்கும்படி தயை செய்
வரோ அல்லது சாமானிய மனிதர்களைக் கொண்டா
டும்படி பார்ப்பரோ என்று கவலையுடைந்து நாமெ
ன்ன அஞ்ஞானத்தினால் பிரமித்து விட்டோம் பண்டு
ஒரு பிராமணன் வீட்டில் சண்டைசெய்து காசி
யாத்திரையாய் நெடுந்தூரம் நடந்துபோகிற மார்க்
கத்தில் ஒரு பிரதேசம் மணல் பாங்காகி சுமார் மூ
ன்றுநாழிகை தூரம் மரம் செடிகளில்லாமல் நிற்க
நிழல் கிடையாமல் சித்திரைமாதம் பகல் பனிரெண்
டுமணியாதலால் அந்த மணல் பாங்கில் நடந்து பா
தங்கள் கொப்பளித்து தட்டு கெட்டு தடமாறி மிக
சிரமத்துடன் போகிறபோது பகவத் கிருபையால்
ஓர் பனைமரத்தைக் கண்டு அதன் நிழலிலாகிலும்
நின்று கொஞ்சம் சிரமபரிகாரஞ் செய்துக் கொள்
ளுவோமென்று அம்மரத்தின் சார்பிற்போய் நின்
றான். அது கற்பக விருட்சமாதலால் இவன் சிரமம்
நீரும்படி குளிர்ந்த காற்றுவீச அதினால் பிராமணன்
உட்கார்ந்து ஆகா என்ன குளிர்ச்சியான காற்று
வீசுகிறது. மிகவும் ஆரோக்கியமாகவிருக்கிறது. இப்
போது தாகதீர்த்தங் கிடைத்தால் ரொம்பவும் நன்
றாக யிருக்குமென்று எண்ணினான். அக்கற்பக விரு
ட்சம் குளிர்ந்த ஜலம் தந்தது. அதை பிராமணன்
புசித்து தாகந்தீர்த்து யிளைப்பால் சயனித்து நித்தி
ரைபோய் விட்டான். நித்திரை தெளிந்து பார்த்த
போது பொழுது அஸ்தமானமாய் விட்டபடியால்
இன்றிரவு இங்கு தங்கி நாளைய உதயத்திற்குபோக
லாமென்றெண்ணி அம்மரத்தை நோக்கி நல்ல பிர
சாதம் கிடைத்தால் பசிதீர்ந்துக் கொள்ளலாமென்று
எண்ணினவுடனே சத்சரான்னங் கிடைக்க அதைப்
புசித்து தீர்த்தம் அருந்திய மாத்திரத்தில் திரோ
தயமாயிற்று அதைக் கண்ட பிராமணன் ஆஹா
இந்த சந்திரபிம்பத்தில் நிலவுக்கும் தென்றற்
காற்றுக்குந் தகுதியான கட்டிலொன்று கிடைத்தால்
மிகவுஞ் சுகமாயிருக்குமே யென உடனே கபர
கூட மஞ்சம் பஞ்சணை திண்டு தலைக்கணைகளோடும்
வர அதனைக் கண்டு ஆனந்தங் கொண்டு அதின்பேரிற்
சயனித்துக்கொண்டு வாசனை திரவியங்களோடு தாம்பூ
லம் கிடைத்தால் சுகமா யிருக்குமென்றார்.

உடனே சந்தனம் புனுகு ஜவ்வாது குங்குமப்பூ
சேர்ந்த ஓர் பொற்கிண்ணமும் ஏலக்காய் ஜாதிக்காய்
ஜாபத்திரி முதலாகிய வஸ்துக்களுடன் சுண்ணாம்
பும் வெற்றிலையும் ஓர் பொற்றட்டில் ஏந்திகொண்டு
ரம்பையைப் பழிக்கும் சுந்திர முடைய ஓர் மா
து சகல ஆபரணங்களுந் தரித்து மின்னற்கொடி
போற் பிரகாசித்து அன்னத்தைப் போல நடந்து
வரக்கண்ட பிராமணன் ஆச்சரியமடைந்து இவன்
தேவ கன்னிகையோ தேவரம்பையோ வனதேவ
தையோ என்று பிரமித்திருக்க அம்மாது கொண்டு
வந்த வஸ்துக்களை கட்டிலின்பேரில் வைத்து மறை
ந்தாள். பிராமணன் கலவைச் சந்தனம் பூசித் தாம்
பூலந் தரித்து கால்கள் மிகவலிக்கிறதே என் செய்
வோமென்று யோசித்து வலி நீங்கும்படி கால்கள்
பிடிக்க இரண்டு ஸ்திரீகளிருந்தால் மிகவும் நன்றாயி
ருக்குமென்று எண்ணினான். உடனே இரண்டு வனி
தைகள் சகல அலங்காரத்தோடும் வந்து பிராமணன்
கால்கள் வலிதீரப் பிடித்து ஒத்திக்கொண்டிருக்கும்
போது பிராமணன் தனக்குள் தானேயோசிக்கிறார்
அதென்ன வெனில் முதலில் ஜலதாபம் தீரும்படி
தீர்த்தமும், பிறகு பிரசாதமும், பின்பு கட்டிலும், பி
றகு சந்தன தாம்பூலங்களும், அதில் பின்பு கால்
வலி தீர்க்கும் இரண்டு வனிதைகளும் கிடைத்தார்
கள். நாம் எதைக்கோருகிறோமோ அதுகளெல்லாந்
தடை யின்றி வருகிறதே இது என்ன ஆச்சரியம் இ
துவோ மனித சஞ்சாரமில்லாத கடுங்கானகமாயிரு
க்கிறது. இப்படிபட்ட பிரதேசத்தில் எங்கிருந்தது
இதுகள் வருகிறதோ அறியோம் இம்மரத்திலேதா
கிலும் பூதமிருக்கிறதோ வென்றெண்ண அம்மரத்தி
லிருந்தோர் பெரும்பூதம் புறப்பட்டு வரக்கண்டு ஏ
தேது இந்த பூதம் நம்மை விழுங்கிவிடும் போலத்
தோற்றுகிற தென்று திகிலடைந்து கால்கரங்கள்
நடுக்கமிற இனி என்ன செய்வேனென்று கதறிக்
கொண்டு இருக்கப் பூதமானது வேகமாம் வந்து பி
ராமணனை வாழைக்கனி விழுங்குவதுபோல எடுத்து
விழுங்கி விட்டது.

இத்தன்மையாய்ச் சஞ்சய சித்தத்தினை பிரா
மணன் பூதத்தினால் விழுங்கப்பட்டதுபோல் நானு
ம் சித்தத்தை சஞ்சலத்திற்குள்ளாகும்படி விட்டுவி
ட்டேனே மேலும் இத்தேகத்தை எத்தனை விதத்
தில் போஷித்து ரக்ஷித்தபோதிலும் ஒருநாளைக்கு
போகுமே யன்றி நிரந்தரமாயிராது பெருத்த காட்
டிற் சென்று ஒளித்துக்கொண்ட போதிலும் அனு
பவிக்க வேண்டிய கஷ்ட நஷ்டங்கள் அநுபவித்தே
தீரவேண்டும் ஒருவன் பூர்வம் தான் செய்த பாவ
புண்ணியத்திற்கு தக்கபடியே சுகதுக்கங்களை யனு
பவிக்க வேண்டியவனா யிருக்கிறான் மேலும் சுகதுக்
கங்களாகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு இயற்கை
யாகவே இருக்குமென்று தைரியங் கொண்டவ
ராகி பகவானை துதிசெய்துக்கொண்டு நடக்க ஜவா
ன்கள் கோபன்னாவைக் கைதிசெய்து மிகுந்த காயி

Koviloor Digital Library

நாவோடும் ஹைதர்பாத்துக்கு அழைத்துக் கொண்டு போய் பாராவில் வைத்து மந்திரிகளாகிய அக்கன்ன மாதன்னுவுக்கு தெரிவித்தார்கள். அக்கன்ன மாதன்னுவுக்கு தெரிவித்தார்கள் அக்கன்ன மாதன்ன இருவரும் பாராவிலிருக்கும் கோபன்னவைக் கண்டு கோபன்ன இப்படியும் சர்க்கார் திரவியத்தை எடுத்து சிலவு செய்யலாமோ அப்படி செய்தால் பாதுஷாவினால் நமக்கு சங்கடம் நேரிடுமென்று கிஞ்சித்தும் யோசிக்காமற் போனாயே. அதுபோகட்டும் இன்னொரு காரியஞ் சொல்லுகிறோம் அதைப்போல் நீ நடப்பாயாகில் சர்க்காருக்கு செலுத்த வேண்டிய ஆறுலக்ஷம் விராகனையுஞ் செலுத்தி உன்னை விடுதலை செய்து முன்போல தாசில் வேலையைப் பார்க்கும்படியாகச் செய்விக்கிறோமென்ன கோபன்ன நான் தாங்கள் சொல்லியபடி நடக்க வேண்டிய காரியமென்ன அதை வெளியிட்டால் ஞாயமாயிருக்கும் பக்ஷத்தில் அவசியம் சிரமேற் கொண்டு நடந்து கொள்ளுகிறேனென்ன மந்திரிகள் நீ ராமபக்தனாகையால் உன்னுடைய வாக்கால் எங்கள் வம்சத்தை வர்ணித்து ஓர் கவிபாடுவீரேல் அவசியம் உன்னை பாட்சாவிடங் கொண்டு போகாமல் மன்னிக்கிறோமென கோபன்ன என்னை நல்ல காரியம் செய்யச் சொல்லி நேமித்தீர்கள் ரொம்பவும் நன்றாயிருக்கிறது பரபிரம்ம வஸ்துவாகிய ஸ்ரீ ராம மூர்த்தியைப்பாடின வாக்கினால் மானிடத்தில் சிரேஷ்டமான பிராமணனைப் பாடேன். இதினால் என்னுயிர் நீங்கினும் இந்த காரியத்துக் குட்படேன் நரஸ்துதி கனவினும் செய்யேன் என்ற கோபன்னவின் பேரில் விருப்பமற்று அருவருப்புற்று கிஞ்சித்தாயினும் தயையற்று இத்தனை கெர்வங் கொண்ட இவனை நாளைய உதயத்தில் தானீஷாவின் கொலு மண்டபத்திற் கழைத்து வாருங்கோ ளென்று ஜவான்களுக்கு உத்திரவளித்துச் சென்ற பின்பு கோபன்ன பகவந்நாமந் துதி செய்கிறார்.

எப்படி யெனில் தீனதயாளத் தீனமயாபரதேவதயாளா, பீதாம்பரமேகவர்ன தயளா, ஸனகாதி முனிவர் தொழுதேத்தும் தயாளா, மன்னஞ் செய்து நரர் போற்றுந் தயாளா, சேதுபந்தன ராமச்சந்திர தயாளா மாதேவாமரானந்தயாளா, நாரத முனிகள் நாததயாளா, மாரஜஸசுரகுநாததயாளா தசரத தனயபிவியாதர தயாளா, பசுபதிதனுர்விகள் சூரர்தயாளா, ஆகமகோத்திர வமலதயாளா, போகிசயன பர்மபுருஷதயாளா பத்திராசல வாசுதேவ தயாளா, பாலனஞ்செய் ராமதாசனை தயாளா என்றும் ஓ பத்திராசலதேவ அடியேன் பூர்வஜன்மத்தில் செய்த கர்மதோஷமோ அல்லது தேவரீர்கநுணைக்கு அடியேன் பாத்திரனல்லனோ, இந்த தர்மதஸ்தர்களா லடிப்பிக்க எண்ணியோ என்னை இதநன்மையாய் செய்வித்தீர் என்று மேலுந்துதி செய்கிறார். ஓ ராமச்சந்திரமூர்த்தி என்னால் என்ன குற்றமையா இவ்வித கஷ்டம் எனக்கு நேரிடப்போகிறதே இது உம்முடைய மகத்துவமோ அல்லது எனது பிராப்தமோ ஸ்ரீ ராமச்சந்திர பிரபு உன்னை நம்பினதற்கு என்னை கைவிடுவது தகாது ரக்ஷிப்பதற்கு இது நல்ல சமயம் என்னை சிரமப்படும்படி செய்வது தகாது என்ன பீஷ்டங்களைக் கொடுக்க உன்னை யல்லால் துணைவேறில்லை. ஆகையால், உரகசயன இரவும் பகலும் உன் நாமத்தை துதி செய்கிற என்னை ரக்ஷிக்க இச்சமயம் வேகமாய் வரவேண்டும். ஓ ராமச்சந்திரமூர்த்தி நானுனக் கென்ன பகை வனோ, பங்கய நேத்திரா பராமுகஞ் செய்பத்தகாது இனி எனக்கு நீர் தாதாவென நினைத்துருகி நின்றேன். மேலும் எத்தனை தரம் வேண்டிக் கொண்டாலும் கிஞ்சித்தும் தயைவராதா பக்தாகள் பாலா கனகசேலா ஆதிமூலா கிருபாவிசாலா ரசிபசில அரக்கர் குலகாலா மறைமூலா தசரதபாலா ஜானகிமணாளா விண்ணவர்க் கனுகூலா வேதா தினந்தொழும் நாதா பங்கயமலர்ப்பாதா வேதாதீரா விளங்கிடும் வினோதா பூமகணாதா புவியளந்தபாதா யென்றிப்படி பலவிதமாய்ப் பாடிக் கொண்டிருந்தார்

மறுநாள் காலையில் தானீஷா கொலுக்கூடத்தில் அமர்ந்திருக்குஞ் சமயத்தில் ஜவான்கள் கோபன்னவை யழைத்துக் கொண்டு போய் நவாப்பின் முன் விட்டு சலாஞ் செய்தார்கள். கோபன்னவும் அதிக வினயத்தோடு மண்டியிட்டு சலாஞ்செல்லக் கண்டு மிகுந்த கோபத்துடன் சொல்லுகிறார்.

தானீஷா வாக்கியம்:—ஓ கோபன்ன நான் உமக்கு சொல்லியனுப்பிய கட்டளையை மறந்து விட்டாயே என் உத்திரவைக் கடத்தமையால் கைதிசெய்யப்பட்டாயே ராஜ துரோகஞ் செய்ய வெத்தனப்பட்டாயே இத்தன்மையாகிய துஷ்டகுணத்தால் கெட்டாயே அநுருக்கு பணம் வரவொட்டாமல் கெடுத்தாயே இக்காரணத்தால் மேலாகிய தாசில் உத்தியோகத்தை யிழந்துவிட்டாயே மேலும் என்னை கிஞ்சித்தாயினும் மதிக்காமற் போனாயே ஆகினும் பெரிதல்ல போனதெல்லாம் போகட்டும் எமது பணத்தை சீக்கிரம் ஒப்புவியு மெனளுர்.

கோபன்ன:—ராஜராஜாக்கள் தொழும் கீர்த்திப் பிரதாப உத்தண்ட மகாப்பிர ... [illegible]

Koviloor Digital Library

ன் திரேக மதத்தினாலே துஷ்ட காரியங்களைச் செய்ய வில்லை மேலும் என் பெண்டு பிள்ளைக்காக வேண்டி அபகரித்துக் கொள்ளவுமில்லை. அன்னியிலும் சொந்த உபயோகத்திற்காக திருடிவைத்துக் கொள்ளவு மில்லை. அதிதி யப்யாகதர்களுக்கு தானஞ்செய்யவுமில்லை. இந்த திரவியத்தினாலே உமது கீர்த்தி இவ்வுலகத்திற்கு எங்கும் பிரகாசிக்கும்படி சுப கைங்கரியஞ் செய்தேனே யொழிய வேறெவ்வித கெட்ட காரியத்திற்கும் உபயோகப்படுத்தவில்லை. ஆகையால் என்பேரிலேன் அடங்காக் கோபஞ்செய்கிறீரென்றார்.

தானீஷா:—ஓ கோபன்னா தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை தருமஞ்செய்தாய் தனக்கு கீர்த்தியுண்டாகும். அப்படியிருக்க என்னனுமதியில்லாமல் எனதிரவியத்தை யெடுத்து உன்னை தருமஞ்செய்யும்படி எந்த சாஸ்திரவிசாரணை செய்தவன உனக்குபோதித்தான். அவனப்படி போதித்தாலும் நீ எனது திரவியத்தை சிலவழித்துவிடலாமோ இது தானீஷாவின் பணமாச்சுதே. உனது தந்தை அல்லது பாட்டன் சொத்தல்லவே நீ தைரியமாய் உன்னிஷ்டப்படி சிலவு செய்வதற்கும் கூடதே இதுவன்னியிலும் நீ என்ன சிறுபிள்ளையா, ஒன்றுந்தெரிதாதவனா! அவூரில் நியமித்திருக்கும் சமஸ்தரினுந் தெரிந்தவனாயிருந்தும் நீ இப்படிப்பட்ட கெட்டகாரிஞ்செய்தாய் ஆகையால் இதுஎமக்குநிமித்தியமில்லை அவூருக்கு செலுத்தவேண்டியதிரவியத்தில் ஒருகாசுகூட குறைவின்டு முழுத்தொகையுங்கட்டிவிட்டுப் போதையாவென்றான்.

கோபன்னா:—பூபதிகள் கொண்டாட தருமநீதியாய் செங்கோல் செலுத்தும் ஜெயசீலரே! தங்களுடைய மெருத்த நகரத்தில் ஓர் காளாகுஞ்சிலவுகாணாதே நான் சிலவுசெய்தது மேலும் எனக்கு சொந்தமாகிய கிரமத்தில் கட்டிக்கொள்ள வில்லையே அத்திரவியத்தை கொண்டு உமது பத்திராசல புரத்தில் சந்நதி கட்டிருக்கிறேனாகையால் தருமபிரபுவாகிய தாங்கள் என்பேரில் தாக்கோபங் கொள்ளுகிறது சரியல்லவென்றார்.

தானீஷா:—ஓ வஞ்சநெஞ்சுடைய பஞ்சையாகிய கோபன்னா மிகு கனவான்களுடைய திரவியம் அவர்களுக்கு சிலவில்லையென் றெண்ணியோ நீ விரயஞ் செய்துவிட்டாய், அப்படி சிலவுசெய்தால் உம்முடைய தலை போய்விடுமே யென்று மனதில் கிஞ்சித்தும் யோசிக்காமல் பேசிவிட்டையோ இதென்ன ஆச்சரியமா யிருக்கிறது அன்னியிலும் உத்தியோக பலத்தால் கெர்வம் மேலிட்டதோ, மனந்தாகனென்ன [illegible] பெரியோர்கள் சாபம் மேலிட்டதோ பகவான் கருணைவிட்டதோ, துஷ்டஜெனங்கள் ளைச்சில் பட்டதோ அதுக ளிருகட்டும் கய்டிப்பாய் நமக்குச் சேரவேண்டிய தொகைமுழுமையுஞ் செலுத்தி விட்ட பிறகு இவ்விடம் விட்டு செல்லுமென்றார்.

கோபன்னா:—செந்திருகடாக்ஷம் பெற்றசுந்தர அங்கம்வகித்த இந்திரனென மதித்த தந்திரத்திற் சிறந்த சந்திரமுகம் கதித்த அரசனே இத்திரேகமானது நித்தியமல்ல அநித்தியமென்றும், இதுமாரினால்நாயோ கழுதையோ வேறெந்த ஜென்மம்வருமோ ஆகச்சே இந்த ஜென்மமிருக்கிறபோதே நல்லகாரியம் ஏதாகிலுஞ் செய்து பரலோக மடையவேண்டு மென்பது வேதசாஸ்திர புராணங்கள் முறையிடுவதால் பத்திராசலத்தில் துரையாகியும் தங்களுக்குச் சேவகனுமாகிய நான் ஸ்ரீராமச் சந்திரமூர்த்திசந்நிதியை நூதனமாகக் கட்டிவைத்தேன் மாகனுபாவரே யென்றார்.

தானீஷா கோபன்னாவின் தைரிய வைராக்கியங்களைக்கண்டுமிகுந்தகோபங்கொண்டு ஓகோபன்னா இன்றே உனது மதத்தை யடக்குறேன். தமாஷைப் பார் மேலும் அந்தந்த கிஸ்திகெடுபடிக்கு சர்க்கார் திரவியஞ் சரியாய் ஏன் வராது ஓய் அதிக தப்புகள் செய்தாய் ஆகையால் உன்பேரில் எனக்கு கிஞ்சித்தும் பிரியமுண்டாகவில்லை. அன்னியிலும் என் விஷயத்தில் உனக்குப் பயமில்லாமற் போனாலும் என் ஜாதியையாகிலும் எண்ணி நீதியாய் நடக்கக் கூடாதா உனை நீதெரியாமல் சிலவுபண்ண இது தானீஷாவினுடைய திரவியமல்லவா இதையுனக்கு விரித்துச்சொல்லவா மேலும் விரயஞ் செய்துவிட்ட பணத்தை மோசக்கருத்தின்று வேகமாய்கொடுக்கிறாயா, அல்லது மிகுந்த கஷ்டமாகிய யென்னுத்திரவுபடிக்கு திரவியஞ்செலுத்துகிற பரியந்தம்கைதியாகியிருக்கிறாயா அன்னியிலுந் திரவியத்தைக்கேட்டால் மொழிகள்தடுமாறி பலவிதங்களாய்ப் பேசுகிறாய் இதினால் என்னுடைய திரவியத்தை நீ அபகரித்து களவுத்தனமாய் ஒளித்துவைத்திருக்கிறாய்ப்போல் தோன்றுகிறது மேலும் என்னுடைய அனுபவம் நீ அறியமாட்டாயென்ற தானீஷாவின் சொற்களைகேட்ட கோபன்னா பலராஜர்கள் முடிவணங்கும் மகாராஜனே ஐதர்பாத் நகரத்திற் ஈசனே ஏழைகளிடம் மிகு விசுவாசனே பிராமணர் நேசனே கேளும் நான் தாசீலாகயிருந்து செய்த தப்புகளை கனவான்களெல்லாங் கேட்கும்படி சொல்லுகிறேன். தாங்கள் அனுப்பிய தாசில் வேலையில் வெகு ஜாக்கிரதையாக அலுவல் பார்த்திருந்தேன். அப்படியிருக்கையில்மன

Koviloor Digital Library

தில் ஹரிபக்தனை வேண்டுமென்று எண்ணி சதா ஸ்ரீராம பரமாத்மாவை துதி செய்திருந்ததுந் தவிர ஸ்ரீவாதாரனாகிய ஸ்ரீராமச்சந்திரனது கோயிலை உனது சேவகனாகிய நான் கட்டிவைத்தேன் ஹஜரத் உம்முடைய தர்மம் அதுவென்றார்.

தானீஷா கோபன்னா சொல்லிய வசனங்களையும் அவர்செய்திருக்குங் கைங்கரியங்களையும் தீர்க்கமாக யோசித்து பண்டுசெய்த சுகிர்த விசேஷ பலத்தால் கோபன்னாவின்பேரிலிருந்த கோபமாறி தானீஷாவானவர் சொல்லுகிறார் இந்த கோபன்னா நற்காரியங்கள் செய்தானென்று மன்னித்து விட்டுவிடுவோமாகில் அங்கங்கிருக்குந் தாசில்கள் கோபன்னாதானீஷாவினுடைய ஆறுலட்சவிராகன் சிலவழித்துகோயில் கட்டிவைத்தானே அவனை தானீஷா வென்ன செய்தான் ஒன்றுசெய்யவில்லை ஆகையால் நாமும் தானீஷாவினுடைய சில திரவியத்தைக் கொண்டு ஏதாகிலும் ஓர் கைங்கரியத்தை செய்வோமென்று தைரியமாய் சிலவுசெய்ய யெத்தனஞ் செய்வார்கள். அதினால் நமது திரவியம் அபாரமாய் நஷ்டமாய் விடும் ஆகையால் கோபன்னாவிடம் திரவியத்தை நயத்தினாலோ, அல்லது பயத்தினாலோ வரப்படுத்திக் கொள்ளவேணும் அப்படி செய்வதினால் மற்ற தாசில்களும் பயமடைந்து கிஸ்திபணங்களை கெடுவுபடிக்கு அருருக்கு அனுப்புவார்களென்று, யோசித்து தானீஷா எல்லோருங் கேழ்க்கும்படி ஜவான்களிருவரைக் கூவியழைத்து கேளுங்கோள் ஜவான்களே இன்னும் ஒரு வாரத்திற்குள்ளாக கோபன்னாதரவேண்டியபணங்கள் யாவத்தும் வசூல் ஆகவேண்டுமென்று கட்டளையிட்டு அப்போதே கோபன்னாவைக் காவலில் வைக்கும்படிக் குரூரமாகச் சொல்ல கேட்டு கோபன்னா மிகவுந் துக்கமேலிட்டு பகவானை தோத்தரிக்கத்தொடங்கினார்.

அந்நாளில் முதலைவாயிலகப்பட்டு ஆயிரந் தேவருடன் தேவர்கள் முதல் யாவரையும்வேண்டி தன்னைரக்ஷிக்கும்படி முறையிட ஒருவராயினும் வந்து காப்பாற்றாமல் பிராணன்போகிற சமயத்தில் ஆதிமூலமே உனக்கபயமபயமென்றகரியாசனைக் காத்தாரக்ஷித்த லட்சுமிவல்லபன் இப்போது என்னை காப்பதரிதோ மேலும் துரியோதிரன் தன் தம்பியாகிய துச்சாதனனைக்கொண்டு அந்த புரத்தில் பயிஷ்டியாகியிருந்த திரௌபதியை யழைத்துவரச் சொல்லி சபையில் நிறுத்தி துகிலுரிய அத்தையல் ஸ்ரீ கிருஷ்ணா ஹிருதய கமலவாசாயென்றுகதறி ஓ துவாரகாபுரிவாசா இப்போதெங்கிருக்கிறாய். இதுசமயம் என் மானங்காக்க வேணுமென்று துதிசெய்ய, அத்தையலுக்கு மானத் துகில்கொடுத்து ரக்ஷித்ததுந் தவிர பாண்டவர்கள் வனவாசஞ் செய்திருக்கிறகாலத்தில் துருவாசர் துரியோதனன் சபைக்கு சிஷ்யர்கள் சமேதராய் வர அரசன் எதிர்சென்று அழைத்துவந்து மிகு விநயத்துடன் சோடச வுபசாரங்கள் செய்துஅஞ்சலியஸ்தனாய் கைகுவித்து எதிர்நிற்கும் நரபதியைக் கண்டு பல ஆசிகள்கூறி சிம்மாதனத்திலிருக்க கேமித்துச் சொல்லுகிறார் ஓ அஸ்தினாபுரத்திற் கதிபதியாகிய துரியோதன மஹாராஜனே உன்னிடத்தில் சிலநாளிருந்து போகவேணுமென்று யெண்ணங்கொண்டிங்குவந்தேன். ஆகையால், உன்னபிப்பிராயத்தை சொல்லுமென்ன வணங்காமுடி மன்னன் சுவாமி தாங்களிவ்விடம் சிலநாளிருக்க தங்கள் சேவையில் நாங்களீடுபட என்ன புண்ணியஞ் செய்தோமோ எங்களுடைய பாக்கியமே பாக்கியம் எங்கள் யோக்கியமே யோக்கியம், எங்கள் சிலாக்கியமே சிலாக்கியம், தாங்கள் வாக்கியமே வாக்கியம், அவசியம் தயைசெய்து எத்தனை வருடம் இவ்விடத்தில் தங்கி யிருக்கவேணுமென்றாலுந் தடையின்றி நீரிவ்விட மிருந்து எங்களைப் புனிதாக்கவேணுஞ் சுவாமி யென்று மிகவும் வேண்டிக் கொள்ள துருவாசமஹாரிஷி அவ்விடத்தில் சிலநாள் தங்கி யிருந்து நாகக்கொடியோன் செய்த உபசாரங்களுக்கு மகிழ்ந்து ஓ நந்தியாவட்ட மாலை யணிந்தநராதிபனே நீ செயவித்த போஷணையினால் மிகவுங் களிப்படைந்தேன் இப்படிப்பட்ட கைங்கரியங்களைச் செய்தவர்களை இதுவரையிலும் நான்கண்டதேயில்லை. ஆகையால் உனக்கு என்னவரம் வேண்டும் கேளுந் தருகிறேனென வஞ்சக மனத்தனாகிய துரியோதனன் யோசித்து ஓ சுவாமி பாண்டவர்களிருக்கும் வனத்திற்கு மத்தியானத்திற்கு மேல்சென்று பாண்டவர்களைக்கண்டு சிஷ்யசமேதராய் அன்னம் புசித்து வரும்படி தங்களைவேண்டிக்கொள்ளுகிறேன் இந்த வரந்தரவேணுமென்ன துருவாசமஹாரிஷி அவன் மொழியைக்கேட்டு உன்னிஷ்டப்படியே வரந்தந்தே னென்றுசொல்லி சென்று சிலநாள் கடந்து துரியோதனனுக்கு கொடுத்த வரத்தை நினைத்துக் கொண்டு ஓர்நாள் பகல் இரண்டு மணிக்கு சிஷ்யர்கள் சமேதராய்ச் சென்று பாண்டவர்களிருக்கும் வனத்தை யடுத்து பாண்டவர்களைக் கண்டு மிகுந்த பசியாக விருக்கிறபடியால் அன்னமளிக்க வேண்டுமென தருமநந்தனர்மிகுந்த பய பக்தி விசுவாசத்துடனே வணங்கி ஓ சுவாமி தேவரீர் ஸ்நான அநுஷ்டானங்கள் முடித்துவாரும் இங்குயாவத்துஞ் சர்வசித்தமா யிருக்கிறது என்று சொன்னார். மஹாரிஷி சிஷ்ய சகிதராக ஸ்நானத்திற்கு சென்ற பிறகு யுதிஷ்டிரர் பாஞ்சாலியை [illegible]

Koviloor Digital Library

தையே தூர்வாசமகாரிஷி அநேக சிஷ்ய சமேதராய் எழுந்தருளி பசியாயிருக்கிறது. அன்னந்தயாராகட்டும் ஸ்நானஞ் செய்து வருகிறேனென்று சொல்லி சென்றார். ஆகையால் அன்னம் படைமென்ன பாஞ்சாலி ஓ பிராணநாதரே! இப்போ தான் அக்ஷய பாத்திரத்தை சுத்தி செய்து கவிழ்த்து விட்டேன் என்ன இதற் கென்ன செய்கிறது தூருவாசர் வந்து விடுவாரே அன்னம் படைக்காவிடில் கோபத்தினால் சபிப்பாரே யென்று யாவரும் யேங்கி வருந்துகிற போது தருமநந்தனர் துவாரகாபுரி வாசரை யுத்தேசித்து ஓ கண்ணா, மணிவண்ணா, கமலக்கண்ணா, உலகுண்டவாயா, பூதகி உயிர்கொண்ட வாயா, சகடாசூரனை வதைத்தவா, திருணாவர்த்தமர்த்தனா, ஜனார்த்தனா, பஷிதபாவனா, ராதா ருக்மணிரமணா, பீதாம்பரதாரணா, கோவர்த்தன கிரியையெடுத்து ஆவினங்களையும் கோபாலகோபிகைகளை ரக்ஷித்தவா ஆயா வெண்ணெயுண்டவாயா தீனர்கள்நேயா பக்தசகாயா தேவகி வசுதேவதனயா சகல சாமர்த்திய உபயா ஆதிமத்தியாந்தரகிதா அமரர்கள் தொழும் பாதா வேத விநோதா யென்று பலவிதமாய் துதி செய்யும் உதிஷ்டிரர் முறையைக் கேட்டு கருணாநிதியாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் ராதா ருக்மணி சமேதராய் கெருடாரூடராகி வேகமாய் பாண்டவர் வசிக்கும் வனத்திற்கு வந்து கெருடனை விட்டிரங்கு ராதா ருக்மணிகளை திரௌபதை யிடம் அனுப்பி தான் ஐவர்களை நாடிவர உடனே பஞ்சபாண்டவர்கள் எதிர்கொண்டு சென்று அழைத்து வந்து தகுந்த ஆசனத்தினிருத்தி பயபக்தி விசுவாசத்துடன் பணிந்து ஓ சுவாமி பக்தவச்சலா பரமதயாளா ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா வென்று போற்றிசெய்தார் பகவானனவர் ஐவரையும் வாழ்த்தி மூத்தோனை நோக்கி ஓ தருமநந்தனா! உன்முகமென்ன வாட்டமாக விருக்கிறது மனதிலுண்டாகிய குறை யென்ன அதைச் சொல்லுமையா வென்று பகவான் கேழ்க்க தருமநந்தனர் சொல்லுகிறார். ஓ சுவாமி! யாதொன்றும் தெரியாதவர்போல அடியேனை வினவுவது கர்மமோ என் வாக்கினால் கேழ்க்க வேண்டு மென்கிற மர்மம் என்னமோ யான் செய்த பூர்வ புண்ணிய வசமோ இந்த ஆபத்து காலத்தில் எங்களை ரக்ஷிக்கும் பொருட்டு எழுந்தருளிய குல தெய்வமே கோப சொரூபராகிய தூருவாச மஹாமுனிவர் அநேகசிஷ்யசமேதரா யெழுந்தருளி இவ்விடம் வந்து எனக்கு மெத்தபசியா யிருக்கிறது. யாவத்திராளுக்கும் அன்னம் படைக்க வேண்டுமென்று அடியேனை கேட்டார் நான் அவரை ஸ்நானஞ் செய்து வரும்படி சொல்லி யனுப்பினேன். அவர் ஸ்நானத்துக் கெழுந்தருளிய பிறகு நான் திரௌபதையை யழைத்து அன்னம் இருக்கிறதா யென்று கேட்டேன் அம்மாது இப்போது தான் அக்ஷயபாத்திரத்தை சுத்திசெய்து கவிழ்த்து விட்டேன் நாளைய பகலுக்கு கிடைக்குமே யன்றி இப்போது கிடைக்காது யென்று சொன்னாள். நான் மிகவும் பயந்து தபசி விந்துவிடுவாரே யென்று திகிலடைந்து கிருபைக்கடலாகிய தங்களை நினைத்து துதி செய்தேன் அடியேன் குறையை தீர்க்கும் பொருட்டு தேவரீரும் வந்து விட்டீர் இனி யெனக்கு யாதொரு சிந்தனையுமில்லை யென்று சொன்னார்.

கண்ணபிரானனவர் உடனே திரௌபதியை யழைத்து அக்ஷயபாத்திரத்தை எடுத்துவரச்சொல்லி அதைத்தன் கரத்தினிற் சரண்டி எள்ளுமூக்கத்தை தன்னைப் பத்தை நாக்கினாற் கொண்டு அதின் ரசத்தைப் புசித்து ஏப்பமிட்டு பீமனை யழைத்து தூருவாசரை அன்னம் புசிப்பதற்கு சீக்கிரம் அழைத்து வாருமென வாய்வுபுத்திரன் பகவான் மொழிப்படி சென்று அழைக்க, அச்சமயத்தில் சிஷ்ய சமேதராய் தூருவாசருக்கும் பசிநீங்கி வயிறுவெடித்துப் போகிறதே இதென்ன ஆச்சரியம் நமக்குண்டான பசியெப்படி மாறி பூரணமாய் விட்டதோ தைரியமில்லை கடுகளவு யிடங்கூட காலியில்லாமல் புளியேப்பம் வருகிறதே யென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு எழுந்து நடப்பதற்கு கூடாமல் கரையின் பேரில் விழுந்து புரண்டு சிரமத்தோடும் பீமனைக் கண்டு தங்களுக்கிருக்கும் உபத்ரவத்தை சொல்லி அன்னம் வேண்டாம் வேண்டாமென்று நயவார்த்தைக ளுரைக்கும்படி செய்வித்து ஐவர்களையுந் தூருவாசர் பயத்தில் நின்றும் விடுவித்த ஜெகதீசன் இந்த சமயத்தில் இங்கில்லையோ எங்கிருக்கிறானோ, மேலும் துரோணருடைய புத்திரனாகிய அஸ்வத்தாமன் விட்டபாணம பட்டு உத்திரையின் கர்ப்பம் கலங்கி உதிரம பெருகியோட அப்பிண்டத்துக்கும் கர்ப்பத்துக்கும் யாதொரு இடையூறும் நேராமல் அச்சிசுவுக்கு பிராணன் கொடுத்த ஜெகத் ரக்ஷகனாகிய என் பந்து தெய்வம் எங்கிருக்கிறாரோ அன்னியிலும் அக்ஷயபாக பத்திராசலந்தன்னில் சாக்ஷாத்காரமாய் வீற்றிருக்கும் ஜெகதீசராகிய சர்வேசன் எங்கிருக்கிறாரோ என்று பலவிதங்களாய் ஸ்தோத்தரித்தார்.

இத்தன்மையாய் தசரதராமநாமத் தியானசித்தனாகிய கோபன்னாவைக் கண்டு புரஜெனங்கள்யாவரும் மிகவும் அனுதாபமடைந்திருக்க பிரபு நேமனம் பெற்ற ஜவான்கள் பந்தேகானுவுக்கு கொண்டு

Koviloor Digital Library

பேர்குஞ் சமயத்தில் கோபன்னு ஸ்ரீ ராமமூர்த்தியை துதி செய்கிறார். ஓ ராமா, இப்போதாகிலும் தயை செய்யாமலிருப்பது உமக்குத் தகுமா நானென்னபகைவனு எத்தனை கெஞ்சிக்கேட்டுக் கொண்டபோதிலும் பேசாதிருப்பதென்னமோ மேலும் சிறிப்பு தங்கிய உன்முகத்தைக் காட்டும் எந்தையே உம்மை மிகவும் நம்பினேன். இத்தனை கஷ்டப்படுத்தினுல் பின்பு நான் எவருடைய பங்கையா அன்னியிலும் பதிதர்களைப் பாவனஞ் செய்வேனென்று விருதுதரித்து இப்போ அதிக கோரமாகிய பாபியென்று என்னை கைசோர விடுவது ஞாயமா சகாயமா மேலும் எத்தனையாய் வேண்டிக் கொண்டாலும் வராதிருப்பதேதேனு நான் உன்னையல்லாது இதர தெய்வங்களை கனவிலுங்கூட யெண்ணமாட்டேன். என் நேத்திரங்கள் மேலாலேயாய் உம்முடைய திருவடியில் விழுந்தேன். ஆட்கொள்ளுமென்று வெகுவிதமாய் துதிசெய்யும் என்னை பராமுகமாய் விட்டுவிட்டால் தங்களைப்போ லொத்தவருக்கு அபகீர்த்தியல்லவா மேலும் பத்திராசல ராமா வென்று ஒரு நிமைப்பொழுது விடாது யேற்றி போற்றினேன். மிகவும் பக்தியோடு தேவரீருக்கு அடியேன் தெண்டனிட்டு விண்ணப்பஞ் செய்துக் கொண்டேன். துரிதமாக வந்து என்னை ரக்ஷியும் சுவாமியென்று பின்னுஞ் சொல்லுகிறார் ஓ பங்கஜ நேத்திரா, சாதுக்கள் மித்திரா, பிரமேந்திராதிகள் ஸ்தோத்திரா, உனக்கு நான் புத்திரனல்லவா, என்னைக் கைவிடுவது இழிவல்லவா, மிருவல்லவா, விரித்துச்சொல்லவா, பத்திராசலவாசா, தாசருள் நேசா, கோடி சூரியப்பிரகாசா தானீஷா ஆக்ஞைப்படி இச்சிறைக்குட் செல்லவா என்றிப்படி ராமநாம பாராயணஞ் செய்துக் கொண்டு வரும் கோபன்னுவை ஜவான்கள் சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கச் செய்து கதவுகளைப்பூட்டிவிட்டு இரண்டு ஜவான்கள் வெளியில் பாரா கொடுத்துக்கொண்டிருக்க பிறகு அப்பரம பாகவதர் ஏகமனத்தராகி ஓ ராமா சிறைச்சாலையாகிய சிறைச்சாலையிலிருக்கும் எந்தன் குறைகளனைத்தையும் போக்கி, இத்தருணம் என்னைக் காக்காமலும் பாபங்களை நீக்கி உனது திருவடிக்காளாக்கிக்கொள்ளாமலும், தானீஷாவானவர் வந்து வேறு தண்டனைகள் விதிக்கப் போகிறுரென்று ஜவான்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர் வந்து தண்டனைகள் விதிக்கும் முன்னமே தேவரீர் எழுந்தருளி திரவியத்தைச் செலுத்தி இச்சிறையில்நின்றும் என்னை விடுவிக்காமலுங் கடன்காரர்கள் வந்து யென்னைக்கட்டி சிறையில் வைத்திருக்க அத்திரவியத்தைக் கொடுத்து ஒப்பச் சொல்லாமல் நீர் எங்கு ஒளிந்து ஓடிப்போனீரோ யென்றிப்படி கோபன்னு சிறைச்சாலையிலிருந்து முறையிடும் சமயத்தில், சிறைச்சாலை காவலாளர்கள் கால்சேர் அமுதுபடியும் கால்சேர் உப்பும் கலந்து கொடுக்க கோபன்னு அதை பெற்றுக்கொண்டு இதை சமைத்து இந்த அன்னத்தை யெப்படி புசிப்பது ஓ பத்திராசலவாசா யென்று பலவிதமாய் துதிசெய்துக் கொண்டே அன்னம் சமைத்து ராஜ துரோகஞ் செய்யலாகாதென்றெண்ணி பகவானுக்கு நைவேத்தியஞ் செய்து புசிக்க திவ்யான்னமாகி யிருக்க இத்தன்மையாய் அநுதினமும் அவர்கள் கொடுக்கும் படியை வாங்கி அன்னம் செய்து பகவானுக்கு கைகாட்டிப் புசித்துக் கொண்டிருக்க சில நாளைக்குப் பின் தானீஷா கோபன்னுவை சிறையில் வைத்து வெகு நாளாகி விட்டது. பணம் வசூலாகாமலிருக்கிறது. அவனெப்படி சகித்திருக்கிறானே விசாரியுங்களென்று சிறைச்சாலை காவலரை யனுப்ப இவர்களங்குசென்று யாவந்துந் தெரிந்து தானீஷாவிடம் வந்து சலாம் செய்து ஓமகாபிரபு அந்த கோபன்னு தங்களாக்ஞைப்படி கொடுக்கும் படியை வாங்கி நிம்மதியாய் புசித்து எந்தசிரமமுமில்லாமல் இரவும் பகலும் ராமனென்றும் ஒருவன் பேரைக் கொண்டு கூவி அழுதுக் கொண்டிருக்கிறானே யல்லது அவருக்குக் கட்டவேண்டிய தொகையை கட்டும் மார்க்கம் ஒன்றும் காணோம் என்று சொல்ல அதைக்கேட்டு தானீஷா மிகுந்த கோபதீப்தனாய் அந்த கோபன்னுவை சிறைச்சாலையில் நின்றும் வெளிப்படுத்தி குரடாக்களைக் கொண்டு அடிக்கும்படி ஆக்ஞை செய்தார். ஜவான்கள் கோபன்னுவை வெளிப்படுத்தி அவ்வூர் ஜனங்களெல்லாம் பார்க்க கோபன்னுவை முப்பிரிக்கயிறு கொண்டு தோள்களில் மாட்டி அவ்வூரைச் சுத்தி இழுத்து டமா தப்பட்டை முதலான கருவிகளைக் கொண்டு கடலொலிபோல் முழக்குவித்து இழுத்துக்கொண்டு போவதை ஊர் ஜனங்கள் பார்த்து ஆயாசப்பட்டு ஐயோ பாவமென்று கதறி யழுதார்கள்.

உடனே ஜவான்கள் கோபன்னுவைப் பார்த்து அடா பாதகா உன் கெர்வத்தை இன்னம் ஒரு நிமிஷத்தி லறிகிறோம். மனதை இதர விஷயங்களிற் செலுத்தாமல் எங்களுடைய வார்த்தையை கவனித்துக் கேளும் ஹைதர்பாத்கிஸ்தி விராகன் ஆறு லக்ஷத்தையுஞ் செலுத்தாமல் நிம்மதியா யிருக்கிறையே உன்னப்பன் சொத்தா இப்போது நீ செலுத்தாமற் போனுல் துரிதமாய் உன்னைக் கொண்டுபோய் தானீஷா முன்நிறுத்தி ஒரு விநாடியில்பணத்தைகொடுக்கும்படி செய்கிறோம். பாரடா வென்றுசொல்லிதா

Koviloor Digital Library

னீஷாவின் கொலுக்கூடத்திற் கெதிரில் கோபன்னுவை யழைத்துக்கொண்டுபோய் நிறுத்தி கால்கரங்களைப் பிணைத்துத் தூலிடம்கட்டி குராடாகொண்டு அடித்தார்கள். அப்போது கோபன்னுவானவர் மிகவும் பிரலாபித்து ஓ ராமா உன்னைப்பூசித்தகரங்களிரண்டையும் இதோ கட்டிப்பிடித்து அடிக்கிறார்களே எப்படித்தாளுவேன். ஐயா தடைசெய்யாமல் வாரும் தட்டுகெட்டுப்போகுதே என்றிப்படி ஸ்ரீராமநாமத்தை துதிசெய்யும் சமயத்தில் ஸ்ரீராமமூர்த்தி பக்தபராதீனனுகையால் அவர்மகிமையால் அந்த அடிகளால் நேரிடும் வாதைநீங்கியிருக்க ஒவ்வொருவேளை அந்த ஜவான்கள் செய்யும்சிரமத்தை நினைத்துக்கொண்டு இப்படி துஷ்டர்களுடைய ஆக்ஞைப்படி இருக்கும்படி செய்கிறீரல்லவாயென்று பின்னும் முறையிடுகிறார். ஓராமா! என்னைரக்ஷிக்கும்துரை நீயேயென்று நம்பினேன் என்னை சிக்ஷிக்கத் தப்பென்ன செய்தேன். மேலும் என்னை ரக்ஷிக்க உம்மையல்லாது வேறேயாரிருக்கிறார்கள். கொஞ்சமேனும் தாக்ஷண்யமில்லாதிருக்கிறீரே உன்னை யுண்மையாய் நம்பியிருக்கிறேனே என்னைக் காப்பாற்றுவது உந்தன் பாரம் என்னைக் கைபிடித்து விட்டுவிடத்தகாது நிற்க நிழலுந்துணையும் நீயல்லாது வேருண்டோ மேலும் எத்தனைவேண்டினாலும் நீயேன்பேசாய். நான் அத்தனை துரோகியோ கண்ணுற்பாராயோ சுத்த சாதுக்களை யாட்கொள்ளும் கர்த்தன் நீகொஞ்சத்தில் கொஞ்சம் பாராமுகமா யிருக்கிறாயே பத்திராசலவாசனே, அமரர்கள் கொண்டாடுமெய்யா, யானைக் கபயந்தந்த கையா, என்பங்கு தெய்வமே யென்று இவ்விதம் முறையிட்டுக்கொண்டிருக்க சிலநாளைக்கும்பின் தானீஷா மறுபடியும் கோபன்ன திரவியஞ்செலுத்தினானேயென்று கேழ்க்க, கஜான்ஜீ இல்லை மகாப்பிரபுவேயென்றுசொல்ல, தானீஷாஜவான்களையழைத்து இன்றுமுதல் அந்த பிராமணனை அனுதினமும் ஒவ்வொருஜாமம் முட்களின்பேரில் நடத்துங்களென்று ஆக்ஞைசெய்தான்.

அதைக்கேட்ட ராஜசேவகர் முட்களின்பேரில் கோபன்னுவை நடப்பிக்க அப்போது ஸ்ரீராமமூர்த்தியைக் குறித்து ஓ ராமா யான் சிரமப்படப் பார்ப்பது உனக்கோர் பிரதாபமா இதிலென்ன உனக்கு லாபமா என்னைப்பாவியென்று ரக்ஷிக்க லோபமா இது யான்செய்த பாபமா எவரிட்ட சாபமோ, அல்லது என்பேரில் கோபமோ, தாபத்திரியமெனும் தீபத்திலெரிகிற ஆபத்துக்குள்ளாகினேன் என்தாபத்தைதீர்த்து உன்சொரூபத்திற் சேர்த்து மஹாபதவியளித்து கடைக்கண்ணினுல் விழித்துக் காருமே கருணைபாருமே நின்னருகிற்சேருமே, திவ்விய திருவடி தாருமே என்று இத்தன்மையாய் துதிசெய்ய அந்த வாதை நிவர்த்தியாய்க்கொண்டிருக்க மறுபடியும் ஒருநாள் தானீஷா கிட்டிக்கோல்போட்டு அடிக்கும்படி நேமித்தான்.

ராஜதூதர்கள் கோபன்ன கைகளில் கிட்டிக்கோல்பூட்டி கும்புகூட்டி பூததையையோட்டி தங்கள் கைகளைநீட்டி குரங்குபோலாட்டி கோறப்பற்களைக் காட்டி பலவிதங்களாயாட்டி அடாபாவி இப்போதே வாங்குகிறேமுனதாவி யெனக்கூவி சேவகர் தாவியிருக்கிறபோது கோபன்ன ஓ ராமா உன் திருவடிகளை யர்ச்சிக்கும் விரல்களுக்கு கிட்டிக்கோல் பூட்டியிருக்கி சிரமப்படுத்துகிறார்களே நான் என்ன செய்குவேன் அந்தோராமா இதென்ன நிரபராதியாகிய என்னை துஷ்டர்கள் மிகுந்த கஷ்டமடையும்படி தண்டித்துக்கொண்டிருக்க ஒன்றும்அறியாதவர் போல் சகித்திருப்பதென்ன காரணஞ் சொல்லும் உன்மனதுக்கே யான் இவ்வளவு அசங்கியமாகத் தோன்றினல் அன்னியர்கள் யார் என்னைரக்ஷிப்பவர்கள்உன்னையன்னியில்ஒருவரையும்காணேமே ஓகோமள நீலவர்ண ஓ சீதாபதி என்கதி நல்லதுதி என்று துதிசெய்ய அந்தவாதை ராமனுக்கிரகத்தினல் நீங்கியிருக்க ஓர்நாள் தானீஷா ஜவான்களை யழைத்து கோபன்ன பணம் செலுத்தி விட்டானு வென ராஜ தூதர்கள் ஓ பிரபுவே இன்றைபவரையில் பணம் செலுத்தும் வகை யாதொன்றும் காணேம். அவனைக் கடுமையாக தண்டித்தால் வசூலாகுமேயன்றி சுவல்ப தண்டனையால் நம்முடைய திரவியம் வசூலாகாது. என்றிப்படி அநேக விதங்களாகத் தெரியச்சொல்லி அரசன் கட்டளையைப்பெற்று கோபன்னுவைக்கொடிய வஸ்திரத்தையவிழ்த்து கயிறுகொண்டு கட்டி தூணிற்பிகிந்து கொரடாக்களினல் அடித்தார்கள். குறிவைத்து எங்கடா விராகன்கள், எங்கடாமோராக்கள், எதோ ரூபாய்கள், அழைப்பியடா இப்போதே அழைப்பிக்காவிடில் உன் தெய்வத்தின் பேரில் ஆணையாய் நோகச்செய்வோம். இப்போ யிதை சகிக்க உன்னுலாகுமோ வேண்டாமடா பணங்களை விரைவினில் இப்பவே வைராக்கியமின்றி செலுத்திவிடு பொழுது போக்காதே போகவேணும் நாங்கள் க்ஷாத்திரமில்லாது தடைசெய்யாமல் இனி மேலும் க்கு மிகுந்த கடுமையான தண்டனைகள் க்ஷாத்திரங் கொண்டுசெய்வோம். நன்றாகக்கேளுமென்று கைக் கொரடாவினல் யுடைக்கவே இருகரங்களை எடுத்து ஓராமா இத்தனை கஷ்டங்கள் உண்டாகியும், நீ சும்

Koviloor Digital Library

மாயிருந்தால் நான் யாருடைய மனிதனுவேன் பெற்ற தந்தையைப்போல என்னை ரக்ஷிப்பதற்கு நின் கிருபையேன் வராது எனக்கு அக்ஷயங் கொடுக்க நினைத்தால் ஸ்ரீ மகாலட்சுமித்தாயார் இல்லையா மேலும் ரட்சிக்கவேணுமென்ற தயை யுண்டாகில் பார்மகள் சந்தினங்களை கற்பத்திற் றரித்தவ ளல்லவா, அன்னியிலும் பகடி பாதிகளாகவிருந்தால் கரத்திலே ஸ்பரிசவேதி யில்லையா மேலும் இந்த க்ஷணத்தில் தயையுண்டாகில் பூர்வ ஜனங்களிருக்குதல்லவா அன்னியிலும் நிசேதுவான என்பேரில் கடாக்ஷமுண்டாகில் கற்பகவிருட்சங்களில்லையா மேலும் நம்மவனென்ற அபிமானம் வைத்தால் சிந்தாமணி யிருக்கிறதல்லவா, அன்னியிலும் அனுபவிக்கும் சிரமங்களை தீர்க்க சரணாகத விருது நினதேயல்லவா, மேலும் அண்ட பிண்ட பிரமாண்டங்களையும் ஆளும் துரை நீயேயல்லவா. அன்னியிலும் தரியாசன் பிரகலாதனன் விபீஷணன் முதலானோரைக் காத்தவன் நீயேயல்லவா அரசன் முதலானோர்களுக்கும் மேலாகிய தேவ தேவனே சம்பத்துகளுக்கு நாயகனே நின் சரணாரவிந்தங்களில் விழுந்தேன். கிருபையோடும் கைநழுகவிடாதே பத்திராசல ராமா என்னைக் காப்பாற்றாமல் இன்னும் பராமுகமா யிருப்பது அழகா என்றிப்படி பத்திராசல நாதனைத் துதி செய்துக்கொண்டிருக்க, ராஜதூதர்கள் பின்னும் சிலநாள் சென்றபின் ஒருநாள் கத்திகளின்பேரில் நடக்கும்படி கோபன்னாவை புடைக்க ஓராமா, அன்னியர்கள் கைக்கு கொடாமல் நினதுகரங்களை நிறுத்தி தண்டனை செய்து ரக்ஷியும் சுக்கிரீவ மகா ராஜனுக்கு பிரியா வாசுதேவா தேவர்கள் நாயகா மாதவா சிதைமணாளா என்றிப்படி பலவிதங்களாக ஆபத்பந்துவாகிய ஸ்ரீராம பரமாத்மாவை துதிசெய்துக்கொண்டே கத்திகள் பேரில் நடக்க ராமானுக்கிரகத்தினால் அக்கத்திகள் பூமியிற் புதைந்து போனதை ராஜதூதர்கள் கண்டு ஆச்சரியமடைந்து மறுபடியும் சிறைச்சாலையிற் சேர்த்து நடந்த விருத்தாந்தங்கள் யாவையும் அறிவிக்கக்கேட்ட தானீஷா இனிமேலென்ன உபாயஞ்செய்வோ மென்று யோசித்து ஜவான்களை அந்தருணக்காரனாகிய கோபன்னாவின் பிடரியில் பத்துபேர் சுமக்கக்கூடாத பாரமாகிய எழுகு குண்டைவைத்து நமது பட்டணத்தை வலமாகக்கொண்டு வாருங்கோ ளென்று கட்டளையிட்ட தானீஷாவின் மொழிப்படி ராஜதூதர்கள் விரைவாகச்சென்று சிறைச்சாலை கதவுகளைத் திறந்து ஜடலைப்போல் பூமியில் விழுந்துகிடக்கும் பரம பாகவதராகிய கோபன்னாவுக்கு தாங்கள் வந்த அரவந்தெரியாமலும் சந்தடிசெய்யாமலும் அந்த கனவாகிய இருப்பு விலங்குகளினால் கால்களுக்குங் கரங்களுக்கும் பூட்டி தயையில்லாமல் எழுகு குண்டொன்றை கொண்டுவந்து பூசான் சிகையைப் பிடித்து பூமிக்குள் வளைத்து பத்துபேரெடுத்துவந்த பாரமான குண்டை முதுகில்வைக்க பெருத்த பாரமாகையால் சுமக்க சக்தியற்று ஓம் நமோராமா என்ன ராஜதூதர்கள் கத்திகளைப்பிடித்து தன்னிரு பக்கங்களிலும் துரத்திக்கொண்டு வர கனமாகிய சுமையாகையால் கால்கள் நடுக்கமுற ராஜஆக்கினைக்கு மேலாய் தூதர்கள் நீதி தப்பிய கூக்குரலோடும் ஐதர்பாத் நகரமுற்றிலுஞ் சுத்திக்கொண்டுவர நாவரண்டு சீதாபதியை துதிசெய்கிறார். ஓராமா பாரங்களனைத்தும் நீயே பாரமென பயமின்றியிருந்தேன் மார்க்கந்தப்பாமல் நின் மலரடியிற் சேர்ப்பாயென்று எனக்கு தைரியந்தோன்றியது அதிக துஷ்டகாரியங்களை எத்தனைத்தனையோ செய்தேன். ஆகினுமென்ன பதிதபாவனவிருதுதரித்தாயென்று பிரசித்தமடைந்தாய். மேலும் எவ்விதத்தி லாகினும் உன்னை நம்பிய என்னை ஈடேரச்செய்வதே கீர்த்தி அன்னியிலும் நான்செய்த குற்றங்களை எண்ணிப் பார்க்க நானெவ்வளவு மனிதன் ஸ்ரீ ராமர் முன்னம் நின்னை சேர்ந்து முமுட்சு வானவர்களின் பெருமையை கேட்டேன். ஜெயராமா என்முறையைக் கேட்டும் கேளாததுபோல யிருக்கிறாய். பல விதங்களாய் விண்ணப்பஞ் செய்தும் பதில்சொல்ல லரியாயோ பரந்தாமா சரணமடைந்தவர்களை ரட்சிக்கின்ற விருது உம்மிடத்தில் இயல்பாக யிருக்கின்றதே சீதாராமா உம்மை பிரியத்தோடும் யான் பிடித்தது புளியங்கொம்பல்லாமல் முருங்கைக்கொம்பல்லவே தசரதராமா பலவிதங்களாய் உம்மைப் பணிந்தும் கிருபை வராதிருப்பதென்னமோ : கோதண்டராமா நேசஜனங்களுக்குள் என்னை அன்னியனாக எண்ணமாட்டாயென்ற நம்பிக்கை கொண்டிருக்கிறேன். கோசலைராமா வாக்காக பத்திராசலத்திற்கு யீசனென்றுகேட்டு மிகவும் துதிசெய்துக்கொண்டிருக்கிறேன் ஆயிரநாமா மேன்மையாக தாசர்களை யாட்கொள்ளும் நினது மனதை யான் கண்டு கொண்டேன். ஜெனகாமா என்றித்தன்மையாய் ஜானகிநாதனை பஜிக்க அந்த கோபன்னாவின் சிரமங்கள் ஆபத்பாந்தவனாகிய ஸ்ரீராமமூர்த்தியின் கிருபையால் நீங்கி அந்த குண்டமானது மசகம்போல தோற்ற வீதிகள்தோறும் தூத்தி ஜவான்கள் சிறைச்சாலையில் கொண்டுவந்து சேர்த்துச்சென்றார்கள்.

இப்படியிருக்க, ஓர்நாள் தானீஷா கொலுகூடத்திற்குவந்து கோபன்னா எவ்விதமாய் இக் கஷ்டங்

Koviloor Digital Library

களை பொருத்திருக்கிறனே நான் பார்க்கிறேனென்று பின்னும் மிகுந்த சினங்கொண்டவனாகி உச்சி வேளையில் மணல் திட்டுகளில் அந்த கோபன்னவை நிற்கச் செய்யுங்களென்று கட்டளையிட தூதர்கள் பிராமணனை பாசாவுடன் அழைத்து வந்து ராஜன் ஆக்ஞைப்படி செய்ய. கோபன்ன அந்த சமயம் நேரிட்டகஷ்டத்தை சகிக்க முடியாமல் தாமரையிலை ஜலம்போலத் தத்தளித்து, ஓ ராமா சரணமடைந்தவரை ரக்ஷிக்கும் விருதுதரித்தவனென்று தெரிந்து உன்னை சரணமடைந்தேன். என்னை பயப்படாதே என்று அபயந்தருளும் என்னை ஈன்ற தந்தையே, கரிவரதா மனோவரந்தனைத்தாரும் தசரத குமாரா வாரும் சதா நினது நாமந் துதி செய்யும்படி கிருபை செய்யும் நாஹரிபாலனாகிய பிரகலாதனைக் காத்த ஜெகந்நாதா கெருடவாகனருடனாகி சேவை தாரும் ஆதிதேவா தேவரீர் சித்தம் எனது பாக்கியம் பாகவதப் பிரியா நினது தொண்டர்களுக்குத் தொண்டனாகிய அடியேனை தயை செய்து காரும், ஹரியே உமக்கு சமானமாகிய ஆப்தர்கள் யாரையா கருணைக்கடலே யென்று முறையிடு மென்னை யாளாததென்ன காரணமோ முரஹரி கோரிக்கை கொண்டேன் என் தெய்வம் நீயே யென்று உமை வைதேன் என்குற்ற மென்னாது கௌரவிக்க கிருபைபாரும் ஸ்ரீதரா என்றிப்படி கோபன்ன அந்த கஷ்டத்தைப் பொருத்து ராம கீர்த்தனஞ் செய்துக் கொண்டிருக்க அந்த சுடுகை தன் பாதத்தி லொட்டதாயிற்று. அந்த வேளையில் ராமானுக்கிரகமல்லவா யென்று மேனு மேலும் ராமச்சந்திர மூர்த்தியை நினைத்துநடித்துக் கொண்டு ராமருடைய மனிதன்யான் எனக்கென்ன விசாரம் சமஸ்தமும் சுவாமியினதே பாரம், தாசர்க்கியே ஜீவாதாரம், தெரிந்தும் தெரியாமற் செய்த நேரம், மாதவன் செய்யும் உபகாரம் மனதிற் சிந்தித்திருப்பதே வீரம் எத்தனை விஸ்தாரம், நினைத்தாலிச்சரீரம் கோரமான அந்தகாரம் கொடுமையான சம்சாரம் ஸ்ரீராமவதாரம் ஆச்சரிய ஒய்யாரம் எத்தனை சிங்காரம் இதர சேவையைக்கோரோம் ரகுபதியை நம்பி நின்றோம் மிகு ராஜேசரைச் சேரோம், இவரைவிட்டு வேறொருவரைக் கோரோம், பத்திராசலரைக் கண்டு கொண்டோம், ராமனுக்கு அடியேனானோம், சந்துஷ்டியினால் மெய் மறந்தோம், அன்னியினுங் கோதண்டராமா என்னைப் பெற்றவர் அடியேனை வளர்த்து ஆதரித்த பகவான் விட்டுவிடமாட்டார். பிரியத்தோடு சீதா லட்சுமண சமேதராகி பாவிகள் வாதனை செய்கிற போது எனக்குத் துணையாக வருவார் ஸ்ரீராமா நாமமே என்னுயிரிடத்தில் எமதூதர்களை பறக்கடிக்கும் பெருத்த அமிழ்தம் பட்டாபிராமருடைய கையை நான் பிடித்தேன் அவருடைய நாமபலத்தால் கெட்டியாய் எமனுக்கு நாமம். போட்டேன் வேகமாய் பத்திராசலவாசா பூமிதாசரை காக்க வாரும் ராமசுவாமி உன்னுடைய நாமம் என்ன மதுரம் கதலி பேரீச்சங்கனி முதலாகிய பழ மதுரங்களைப் பார்க்கினும் பதித பாவனனுமம் என்ன இனிப்பாக யிருக்கிறது மேலும் தயிர், பால், தேன் சர்க்கரை முதலானவைகளுக்காகிலும் பகவந் நாமம் திலக மதுரமையா அன்னியிலும் பஞ்சாமிர்தம் திருக்கண்ணமிது கற்கண்டு வெண்ணை போளி ஆமவடைக்காகிலும் மேலாகிய மதுரமையா பலாமா ஜம்புநாக திராக்ஷக்கனி வகைகளைக் காட்டினும் அதிகமாகிய நினது நாமம் மிகுந்த மதுரமையா மேலும் அஞ்சனை குமாரன் ஹிருதய கமலத்தில் பிரகாசிக்கும் உனது நாமம் அதிக மதுரமையா சாரமில்லா சம்சாரத்திற்கு தாரமாகிய தேவரீர் நாம மிகமதுரமைபா சரணடைந்த ஜனங்களை துரிதமாக ரக்ஷிக்கும் விருது படைத்த நினது நாமமதிக மதுரமையா தும்புருநாரதர்கள் பெருகிய பக்தியோடு வீணகானம் செய்யு முனது நாமம் மிகவு மதுரமையா அதிக ஆவலோடு பத்திராசலராமா தாசரைப் காக்க மிகுந்த கருணையுடைய நினது நாமம் மிகவு மினிது என்றிப்படி ஸ்ரீராமபரமாத்மாவிடத்தில் மனதைச் செலுத்தி தன்னை மறந்து ஜெகநாதனை துதித்து சித்திரப் பதுமைபோல் அசைவற்றிருந்த ராமபக்தனை ராஜதூதர்கள் பார்த்து மரணமடந்தானே வென்று நினைத்து சமீபத்திற் சென்று அசைத்துப் பார்த்தும் கோபன்னவென்று அழைத்தும் பேசாமலிருப்பதைப் பார்த்துஇறந்து போனானென்று நிச்சயத்து அதிலொரு தூதன் கோபன்னவின் சமீபத்திற் சென்று ராம்ராம் என்று சொல்ல உடனே கோபன்ன கண்ணைத்திறந்து பார்க்க தூதன் மற்றவர்களை நோக்கி சொல்லுகிறான் இறந்து விட்டானென்கிறீரே இறப்பென்பதை துறந்தவனாக யிருக்கிறான் பார்த்தையா இவன் மிகுந்த கபடி மோசக்காரன் இவனை நம்பக்கூடாதென்று சொல்லி அவரை யழைத்துக்கொண்டு சென்று சிறைச்சாலையில் இருத்தி பரமபத்திரமாயிருக்க ஒருநாளந்த கோபன்ன காலையில் பல்லை துலக்கிவதற்காக கிணற்றில் ஜலம் மெள்ளப்போகும் சமயத்தி லங்கோர் தேள் அவரைக் கொட்ட அப்போதவர் பாதையினால் மிகுந்த கஷ்டத்தோடு ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கு அறிக்கை செய்கிறார் ஓ ராமா ப்ராதக் காலத்தி லெழுந்திருந்து தந்த சுத்தி செய்ய ஜலம் வேண்டிச் சென்று கிணற்றின் கரையில் காலை வைக்க கிறிய தேள் ஒன்று கொ

Koviloor Digital Library

ட்டினதையா, அந்தபாதையினால்குளிர்வந்து மிகுந்த வாதைப்படுகிறேனே இதின் வேதனை மிகுகொடிய கஷ்டம் இத்தன்மையானால் - நானெந்தன்மையாய் பொறுப்பேன். மூலமாகிய குருமூர்த்தி திருவடியின் மேலாணையாய் மிகவுங்குடைச்சலுண்டாகுதே பகைவர்க்கும் இந்த வேதனையாகாதே ஐயோ பிராணன் போகுதே தீர்க்கமுடன் யானுன்னை சேவிக்கிறேன் சுவாமி இனி இவ்வேதனை தாளமாட்டேன். இவ்வேதனையைபோக்குவாய் ஐயா நரர்கள்செய்வதைப்போல நீரும் செய்யத்தகுமா பத்திரகிரி ராமதாசனுக்கு நேரிட்ட ஆயாசத்தைபோக்கி காப்பாற்றி ரக்ஷியுமென்று துதிசெய்ய வேதனை நீங்கியிருக்கும் கோபன்னாவைக்கண்டு ராஜதூதர்களிவர் மஹானுபாவரென்று சமீபித்து இந்தகஷ்டங்களை எப்படி சகித்திருக்கிறாய். இதற்கு யேதாகிலும் மந்திரமிருக்கிறதோ வென்று தூதர்கள கேழ்க்க கோபன்னா சொல்லுகிறார்.

ஓ ராஜதூதர்களே! ராமனுக்கே அடிமையானேன் அன்னியர்களைக் கண்ணாலேபாரேன் எனக்கு சகாயமாய் மகாநுபாவராகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி காப்பாற்றி ரக்ஷிக்கவிருக்க எனக்கேது மந்திர தந்திரங்கள் இந்திரனையாகிலும் அல்லது பிரமதேவனையாகிலும் லட்க்ஷியஞ்செய்யமாட்டேன் இத்தரையில் ராமநாமமந்திரமே மூவுலகத்திற்கும் தேவதேவன் பாவத்திலொளிவரும் பிரபாவன் மாவினையகற்றும் மகாநுபாவம் நாவலர் புகழும் காடகன் ஆகையால் இவ்வித கீர்த்தியுடைய ராமநாமத்தை சர்வதேச சர்வகாத சர்வாவஸ்தைகளிலும் வைராக்கியத்தினால் பக்தியுண்டாகிதுதி செய்தும்பூசித்தும் கீர்த்தனம பாடியும் நடித்துக்கொண்டு மிருக்கும் தினமெதுவே அதுவே சுபதினம் பிரியத்தோடாகிலும் பிராணபயத்தினாலாகிலும் பக்தியினாலாகிலும் மனமார தம்பூர் சுத்திகூட்டி, தாளத்தை அனுசரித்து பலவித ராகங்களைக்காட்டி கீர்த்தனைகளைப் பாடியும் கரத்தில் திவ்யமணம்பொருந்திய புஷ்பங்களைக்கொண்டு பத்திராசல நிவாசன் திருவடிக்கு தாசன் அர்ச்சனை செய்யும் நாளே மங்களமாகிய நாள் என்று ராஜதூதர்களுக்குத் தெரிவித்தார்.

சிலநாள் கழித்து கோபன்னாவுக்கு கெர்ப்பசூலைகண்டு வேதனை பொருக்கமாட்டாமல் ஓராமா முதலைவாயிற் சிக்கி மிகுந்த கஷ்டமடைந்து பலதேவதைகளை கூவிதன்னை காக்கும்படி வேண்டி கடைசியாய் ஆதிமூலமென்றழைத்த யானைமுன்தோன்றி இடரைப்போக்கி ரக்ஷித்தி தயாநிதியாகிய எந்தையே முன்னம் கௌரவர்கள் சபையில் திரௌபதை யின் துகிலை களைகிறபோது ஓ கிருஷ்ணா துவாரகாபுரிவாசா, சர்வேசா, ருஷிகேசா, பக்தநேசா, பாபநாசா, ஸ்ரீனிவாசா, ஜெகந்நாதாவென முறையிட்ட திரௌபதையின் ஆபத்தைநீக்கி ஆதரித்த ஆபத்பந்தவே பத்திராசல சிகரத்தில் வீற்றிருக்கும் சுவாமியென்று நம்பி ஆயிரம் பதினாயிரமாக துதிசெய்ய வெண்ணிய தாசனை பிரியத்தோடு ராமா வந்து ஆண்டருளுமென்றார். நின் ஒய்யாரம் நீங்கி ஒரு வார்த்தையாகிலும் பேசமாட்டாயா உன்னுடைய நேசம் இப்படிப்பட்டதென்று தெரிந்துக் கொண்டேன் என்றிந்தப்பிரகாரம் சர்வமும் ஸ்ரீராமர்ப் பணமென்றிருக்கும் ராமபக்தர்களுக்கு எந்தகாலத்திலும் பயம்நேரிடாது எனப்பகரும் கோபன்னாவினது சொற்களை கேட்டு அந்த சபையிற் சில துஷ்டர்கள் இவருக்கு தெய்வ சகாய மெப்படியுண்டாகும் ராஜதுரோகி யாதலால் தகுந்த சிக்ஷை செய்ய யெத்தனிப்போமாகில் ஈஸ்வரன் கிருபையுண்டாகி, அந்த பாதையைப் போக்குவாரா பார்ப்போமென்றுபட்டாகத்திகளினால் வெட்டும்படி ராஜன் உத்தரவு செய்து கோபனாவை வெளிப்படுத்தி கத்திகளைக் கொண்டுவீசச் சித்தமானார்கள்.

அதைக்கண்டு கோபன்னாவானவர் பயம்விண்டுபண்டு செய்வினையென்று மனதிற்கொண்டு ஓராமா உனக்கு தொண்டு வெகுநாளாய் செய்து வந்த அடியேன்மீதில் பராமுகங் கொண்டிருப்பது உன் கீர்த்திக்கு பழுதன்றோ என்மீதிலென்ன கோபங்கொண்டே இதென்ன தர்மங்கண்டோ இப்படிச் செய்வதால் என்ன லாபமுண்டோ முன்னஞ் சிலையைப் பெண்ணாகிய போதா, அலைகடற்றுயின்ற விநோதா, சீதாசமேத, சிறந்த பிரபோதா ஏழைமேலின்னமும் வாதா, எங்கும் படைத்த பிரக்யாதா, சேது பந்தனஞ் செய்யுங்காலத்தில் கடலில் முழுகி மணலிற் புரண்டு அம்மணலை பர்வதங்கள் சந்துகளினுதரின அணிலங்கள் பக்திக்கு களித்து கருணை செய்த உன்னையே நம்பினேன் சரணமடைந்தவரை ரக்ஷிக்கிறேனென்று விருதுதரித்த எந்தையே பத்திராசல நிவாசராகிய ராமா தொண்டன்மீதில் தயைசெய்து வந்து காக்கப்போகாதோ நினக்குகிருபை வாராதோ நின்கிருபை வாராவிடின் அடியேனை ரக்ஷிக்க உன்னை விட அன்னியர்களில்லையே ஆகையால் இக்ஷ்வாகு வம்சத்திற்கு திலகமே இனியாகிலும் ஒரு மொழி பேசும் ஓராமச்சந்திரா என்னைரக்ஷித்தருளும் ரகுகுலாதி ஓராகவேந்திரா, சுத்தப்பிரகாரங்கள் சொகுசாய்க் கட்டிவைத்தேன் அந்தப் பிரகாரத்திற்கு பதினாயிரம் வராகன் பிடித்தது கோபுர மண்டபங்கள்

Koviloor Digital Library

குறைவின்றி கட்டி வைத்தேன். குணவாளா அதற்கும் பதினாயிரம் வராகன் பிடித்தது கோபுரமண்டபங்கள் குறைவின்றி கட்டிவைத்தேன் குணவாளா அதற்கும் பதினாயிரம் வராகன் பிடித்தது. பரதருக்கு நல்பச்சைகளால் பதக்கஞ் செய்தேன், அதற்கு பதினாயிரம் வராகன் பிடித்தது. சத்துருக்னருக்கு பொன்னரைஞாண் செய்வித்தேன். அதற்கு பதினாயிரம் வராகன் பிடித்தது. லட்சுமணருக்கு நல்ல முத்து பதக்கஞ் செய்வித்தேன். அதற்கு பதினாயிரம் வராகன் பிடித்தது. சீதையம்மனுக்கு புளியிலைப் பதக்கம் செய்வித்தேன், அதற்கு பிடித்தது பதினாயிரம் வராகன், வாகனங்கள் உமக்கு வரிசையாய் செய்வித்தேன், அதற்காக பதினாயிரம்வராகன் பிடித்தது கலிகிதாஉமக்கு தளுக்காகவும்மகா உன்னதமாயும் செய்வித்தேனே அதைந்தரித்துக் குலுக்கிக்கொண்டு திரிகிறையே யாரப்பன்சொத்தது உன்னுடைய தந்தை தசரதமகாராஜன் உனக்கனுப்பினரா அல்லது உனது மாமன் ஜனகமகாராஜன் உனக்கனுப்பினரா அன்னியிலும் ராஜாக்கள் யாரேனு மனுப்பினார்களா, இது உன்மனதிற் படவில்லையோ யிதென்ன என்னை இப்பாதகர்கள் கையில் காட்டிக் கொடுத்து அநேக கஷ்டங்களை யனுபவிக்கச் செய்வதென்ன தொல்லையோ, உமக்கிது ஓர் அனுவல்லவோ, நான் விரித்துச்சொல்லவோ, மனம் வரவில்லையோ, உன்மனமென்ன சிலையோ, என்னப்பனே உன்னை வைதேனென்று ஆயாசப்படவேண்டாம், இந்த அடிகளுக்கு பொறுக்கமாட்டாமல் ஏதேதோ உளறிவிட்டேன் இதை மனதில் வையாமல் அற்பமாகிய சர்க்கார் பணத்தைச்செலுத்தி இந்த ஆபத்தைப்போக்கி யாதரித்தருள்புரியும் அப்படி இந்த க்ஷணம் என்னை யாளாவிடில் உன்னைப்போகவிடேன் மன்னிக்க வேண்டுமென்று பிரமருத்திராதிகளும் உனது அடியார்களும் எத்தனை விதத்தில் வேண்டிக் கொண்ட போதிலும் விடாமல் என்மனதிற் கட்டி உன்னை இப்படியுமப்படியும் அசையாமல் செய்து விடுகிறேனென்றும் கடிகை கடிகைக்கு மேலு மேலும் உன்னை வேண்டிவேண்டி மிகுந்த ஆவேசம் நேரிட்டதென்றும் பின்னுஞ் சொல்லுகிறார்.

ஓ ராமா இந்த கெடுவுதப்பினல் இனி நான் வெகு துடுக்குத்தனஞ்செய்வேன் அன்னியிலும் நிம்மதியாய் வீற்றிருக்க வொட்டேன் உனக்கு கோபம் வரினும் பயப்படமாட்டேன், இதனை மனதிலேரிந்திரும் இனிதாக்ஷண்ணிய மேதுமில்லை, எனது இருதயகமலத்தில் நிச்சயமாக நின் பாதங்களை இருக கட்டிவிடுவேன். இன்று நாளையென்று காலம்போக்கினுல் யான் பொருக்கிறவனல்ல, திக்கு- நீயென்று சேவித்த எனது பாபங்களை நீக்கி தயவோடு அடிக்கடி நினதுமுகத்தை காட்டாவிடில் அடியைத் தாண்டி அசையவிடமாட்டேன் பதிதரானைப் பாவனஞ் செய்கிறேன் என்ற விருது இல்லையா என்னைப்பரிபாலனஞ் செய்யலாகாதா அறுதினமும் தேவர்களும் பக்தஜெனங்களுநீவந்து மூன்று லோகங்களுக்கும் நாஞேச்சுதே விட்டுவிடுமென்று என்னை வேண்டிக் கொண்டபோதிலும் உன்னைவிடமாட்டேன். மேலும் இராக்கதர் குலத்திற்கு அந்தனுகிய சீதைமணளா தாமரைமலர்போன்ற நேத்திரா நற்குணமுடைய பக்தர்கள் அணியும் ஆபரணா, அடியேனை தீனஜனனென்று இந்தக்ஷணத்தில் மோக்ஷங்கொடுக்காதிருப்பையாகில் அநேக சாதுக்களை சாக்ஷிவைத்து, யர்ஜெனநிசைஷயில் சாதித்துப்போடுவேன். அன்னியிலும், பத்திராசல சிகரத்தில்வாழும் தருமசொரூபமாகிய ராமா, நாயசயனபக்தகாமா இப்படிச் செய்யாமல் அல்பமதியினுலுன்னை விடுவிடுவேனேயாகில் நின்தாசனென்னு நாமத்தைமாற்றி பூமியில் மீவறு போட்டு அழைக்கட்டுமென்னை என்றிப்படி வைராக்கிய சீலராகி ஸ்ரீராமமூர்த்தியை பிரார்த்தனை செய்து வேசாரி ஓராமா என்குறையைத் தீர்ப்பதற்குனக்கு சாமர்த்திய மில்லாவிடில் லோகமாதாவாகிய சீதையம்மாளுக்காகினுஞ் சொல்லி சாமானிய ஜெனங்களால் நேரிடும் பீடிக்கையும் அடியேனை பீடிக்கிறது. அதனைபோக்கி யாளலாகாது உனது பராக்கிரமம் சமுத்திரத்தில் புகுந்துவிட்டதா பணத்தைச் செலுத்தும்படி சிஞ்சித்தும் தயவின்றி ராஜ தூதர்கள் இம்சிக்க உமது அரைத்தன மேலாயிற்று சங்கு சக்கரம் பிடித்தகையா பக்த ஜெனங்களைப் பாலிக்காமலிருக்கிற தேதுக்கு? தாமரைக்கண்ணு பக்தர்களை பரிபாலனஞ் செய்யாத பாக்கியமேயல்லாது எதார்த்தம் உன்னிடமில்லாமற் போச்சுது. தாயுந்தந்தையுமென்று உன்னை என்னுள்ளத்தில் நம்பினேனே கள்ளமனிதர்கள் கஷ்டம் செய்குளிர்ந்த கருணைபொழியாமற் நிராகரித்தீர் குலதெய்வமென்றுன்னை நம்பினேன். உனக்கு நிகரான தெய்வமில்லை யென்றுன்னினேன் ஒண்டியாகபணங்களை ஒப்பிக்கும்படி என்னைத் துன்பப் படுத்த ஏதையா என்னைக்கூடி பின்தொடர்ந்து வாராமற்போனீர் என்று பின்னுஞ் சொல்லுகிறார்.

இப்படி பலவிதங்களாய் ஸ்ரீராமபரப்பிரம்மமூர்த்தியை துதிசெய்தும் தன்னை ரக்ஷிக்காதபடியால் அநேகவருடம் சிக்ஷைக்கு பயந்து ஆயாசங்கொண்டு எப்போதும் தந்தை கடினசித்தமுடையவர், தாயா

Koviloor Digital Library

ருக்கிருக்கும் பிரியம் தந்தைக்குளதோ என்றென்னி ஓமகாராணி ஓ வதூரவாணி ஓமெல்லியபாஷிணி, ஓகோ புராணி, ஓ ஜெகத்காரணி ஓராமராமணி ஓ ஜெகன்மோஹினி ஓ ஜெகஜ்ஜனனி ஜனகராஜன் குமாரத்தியாகிய சீதாபிராட்டியை ராஜதூதர்கள் செய்யும் வாதையை என்னால் பொறுக்க முடியவில்லையே சகிக்கப்போகாதே ஓ புருஷகாரி பன்னிரண்டு வருடகாலமாய் இரவும் பகலும் ஆபத்துடையவனுகி உம்முடைய நாமங்களை எத்தனையோ விதங்களாய் துதிசெய்த போதிலும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லையே காயம்கின்பதினியில்லையே கனவிற் காணவும்வல்லையே எத்தனை நாளிக்கதொல்லையோ நீயாகிலுந் தயவுசெய்து ஸ்ரீராமர்பக்கலில் சேர்க்குதக்கபடி. மன்மதனிரிடை செய்யுஞ் சமயத்திலும் லோகாந்தரங்கள் உன்னோடுயேகாந்தமா யிருக்கும் வேளையிலும் சித்திர விசித்திரமாகிய பத்திராசலத்திற்கு ஈசன் சர்வேசுரனுக்கு போதித்து என்னை யாளும்படி சொல்லும் அன்னையே யென்று வேண்டிக் கொண்டு யாதொரு கெதிமோக்ஷமுங் காணமையால் மின்னும் ஸ்ரீராமரிடம் என்னை யாளும்படி சொல்லலாகாதோ, அன்னையே உனக்கு அடியேன் பேரிலென்ன கோபமோ, பூங்கோதையே, உன்தொண்டனைப் பத்திராசல பரந்தாமனிடத்தில் சொன்னு லென்னிட பாதங்களைப் போக்கி தாதாவாகி ரக்ஷியுமென்றும் பாற்கடலில் ஜனித்தலட்சுமி ஸ்ரீ ஹரியின் மார்பினில் லீலையில் வீற்றிருக்கும் அன்னையே பாலை நிகர்த்த குண முனக்கு மிகவும் உண்டாகி யிருக்க திருத்துழாய் மாலை வனசமாலையை தரித்தவனேடு மேலாக எனது வார்த்தையைச் சிந்தித்து சொல்லுந்தாயே, என்னைப் பெற்ற அன்னையல்லவா சுதனுகி யான் எத்தனைதரமோ முறையிட்டும் செவி கேளாதோ சந்திர சகோதரி எனது விண்ணப்பத்தைக் கேட்டு உனது பிரியனுகி ஸ்ரீராமரோடு என் பேரில் கிருபை செய்யும்படியாயும் தாசனை இடர் தீர்த்து இரக்ஷிக்கும்படியாயும் பக்தர்கள், மனதில் கோரிய காமியார்த்தங்கள் கொடுக்கும்படியாயும் கோமளாங்கி யுனது நாமத்தை நேமமுடன் நம்பி யிருக்கிறேன். பிரிபத்தோடும் காத்தருள் செய்யுமென்று சுவாமி வேங்கட மலைபாரோடு சொல்லும்செந்தாமரை மலரிலுதித்த தேவி செந்தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட ஜனனி செந்தாமரை மலர் போன்ற பாதங்களையுடைய புதல்வி செந்தாமரை மலரை நிகர்ந்த அஸ்தங்களை யுடைய கனகவல்லி செந்தாமரை மலர் போன்ற திருமுக மண்டலமுடைய கற்பகவல்லியென்று பலவிதமாகத்துதிசெய்யும் கோபன்னவின் முறையைக் கேட்டு லோக மாதாவாகிய சீதாபிராட்டி தசரத ராமரிடம் தாமதமின்றி தூரையாய்ச் சென்று வந்தனம் தந்து பக்கத்தில் சேர்ந்து ஓ பிராணநாதா வென்று அன்புடன் பிரார்த்திக்க, உடனே தன்னுடைய மணவாளனை இருகரங்களினால் ஆலிங்கனஞ் செய்துக் கொண்டு நமது குமாரனுகிய கோபன்னுவை இருசமயம் காத்து ரக்ஷிக்க வேண்டும், இல்லாவிட்டால் பாகவத அபசாரம் நேர்க்குவிமோகையால் இக்ஷணமே அவனைக்காத்து ரக்ஷிக்க வேண்டும் சுவாமியென்று சொல்ல அதைக்கேட்ட ஸ்ரீராமபிரான் களித்து ஓ வனிதையே உன் இஷ்டப்படியே நாளையதினஞ் சென்று சர்க்கார் பணத்தை செலுத்தி ராமதாசனை காத்து ரட்சிக்கிறேன் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பகவான் கோபன்ன செலுத்தவேண்டிய தொகையை மாறுருபமாய் வந்து தானிஷாவுக்கு செலுத்திய அத்தியாயம்.

ஜெகத் ரக்ஷகனுகிய பகவானுனவர் இலட்சுமனரை யழைத்து தீன தயாளமாகி முறை யிட்டதும் கோபன்னவை சிறைச்சாலையை விட்டு வெளிப்படுத்த உபாய மெப்படி யென்று ஆலோசித்து தானீஷாவுக்குப் பணங்களைச் செலுத்தி விடுவித்து வருவதே நன்றென்று நிச்சயித்து தமையனும் தம்பியும் புறப்பட்டு ஜல்லடந் தரித்து வெண்மையான அங்கி சரிகை சாலுவைகளைத் தரித்து முகத்தில் கஸ்தூரி திலர்தமிட்டு வில்லம்பு. அம்புகள் பிடித்து. இடையில்ஒட்டியாணமுந்தரித்து வீராவேசத்துடன், ஆறுலக்ஷம் ராம்சிங் மோராக்களை யெடுத்துக்கொண்டு கண்மூடி, கண் திறப்பதற்குள் கனவனுகிய தானிஷாவின் அந்தப் புறத்திற்குட் சென்று இராம லட்சுமணர்களிருவரும் சேவக வேடம் பூண்டு நடந்துக் கொண்டிருக்க சிறைச்சாலையிலிருக்கும் கோபன்னுவானவர் தனக்குள்ளே தானே யோசிக்கிறார் இன்றிரவிற்குள் ஸ்ரீராமமூர்த்தியானவர் என்னை ரக்ஷிக்கா விடில் விஷத்தை புசித்து பிராணனை விடுவதே நலமென்று நிச்சய வைராக்கியங் கொண்டு ஓர் கிண்ணத்தில் விஷத்தை வைத்துக் கொண்டு நித்திரை செய்திருந்தார்.

இங்கிப்படியிருக்க அங்குதானிஷாவானவர் நித்திரை செய்துக்கொண்டிருக்கும் வேளையில் ஓர் கனவு கண்டு திடுக்கென்றெழுந்திருந்து தன் மனைவியை கூவி யழைத்து, அடி என்ஆசைக்கிசைந்த கண்ணே நான் [illegible]

Koviloor Digital Library

ச்செவிகொடுத்துகேளடி. என்றுசொல்ல, அதைக்
கேட்டு அம்மாது ஓ பிராணநாதா, அற்புதமான
கினவுகண்டேனென்கிறீரே அதை எனக்குச் சொல்
லும் என்பிராணநாதா வென்று சொல்ல, தானிஷா
வானவர் சொல்லுகிறார். ஓ பெண்ணே நான்சொல்
லத்தொடங்குகிறபோதே தேகத்தில் மயிர்க்கூச்சிடுகி
றது, கடன்காரனாகிய கோபன்னாவுக்காக திவ்விய
சொரூபமுள்ள இரண்டு புருஷர்கள் என்கண்முன்
னே தோன்றி நமக்குகொடுக்கவேண்டிய தொகை
யைக்கட்டிவிட்டு ரசீது கொடுத்து சீக்கிரம் எங்களை
அனுப்புமையா வென்றும் வந்து இரண்டு திவ்விய
புருஷர்கள் என்னிடம் ரசீது வாங்கிக்கொண்டுபோ
னார்கள். வந்த இரண்டு புருஷர்களைப் பார்த்தால்
சூரியவம்சத்தாராகிய இராமலட்சுமணரைப்போலு
மிருக்கிறது. இப்பேர்ப்பட்ட அற்புதமான சொற்
பனங்கண்டேன் ஈதென்ன காரியமோயானறியேன்
இந்த கனவை என்னென்று சொல்லுவேன் ஓ பெ
ண்ணே, இந்தவிந்தையான மகிமைகள் ஸ்ரீராமமூர்த்தி
யின் கிருபையென்றே யோசிக்கிறேன். இன்னம்
ஒரு ஜாமப்பொழுதிருக்கிறது இக்கினவுஜயமோ அப
ஜயமோ எல்லாம் பொழுதுவிடிந்தால் தெரியுமெ
ன்று சொற்பன விருத்தாந்தங்களை தானீஷாவான
வர் தன் பத்தினியிடஞ் சொல்லி நித்திரைசெய்யுஞ்
சமயத்தில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் மிகவுஞ்
சுந்தரமாகிய அந்தப்புரமேடையின் கதவைத்தட்டி
க்கொண்டு தன்மெல்லிய கரத்தால் காலகண்டதிரிநே
த்திரராகிய உமாமகேசுவரனை தும்பை மலர்களினா
லர்ச்சித்தமேலாகிய துரை நீயாதலால் நித்திரைநீங்
கிவிழித்துக்கொள்ளும். நீலகண்டமகாதேவனைமல்லி
கைப்பூவினாலர்ச்சனை செய்த புண்ணியவானே உம
க்குப் பணம் செலுத்தும்படி வந்திருக்கிறோம் தயை
செய்து கதவைதிறவுமையா மகாப்பிரபு யென்று
சொல்ல, அதைக்கேட்ட தானீஷா திடுக்கென்றெழு
ந்து பத்தினியைபத்திரமா யிருவென்று சொல்லி
விட்டு வேகமாய்க்கதவைத் திறந்து வில்லும் அம்பு
முடைய வீரர்களைக் கண்டு பூர்வபுண்ணியவசத்தால்
நேத்திரோற்சவமாய் சேவித்து அதற்குள் மாயை
யில் மூழ்கி ஸ்ரீராமலட்சுமணர்க ளென்கிற யெண்
ணமாறி ஆச்சரியப்பட்டு இந்த நடுராத்திரியில் இம்
மேடைக்குள்ளாக எந்த உபாயத்தினால் வந்தார்க
ளோ இந்த வீரரிருவர்கள் யாரோ யென்று அவர்க
ளை தானீஷா புகழ்ந்து கொண்டாடுகிறார்.

எப்படியெனில், இப்பூவுலகத்திலுள்ள ஜனங்
களுக்கு இந்த (பசையுள்ள சுந்திரலக்ஷணங்களை நா
ன் எங்கும் கண்டதில்லையே, கோடி சூரியப் பிரகாச
த்தை கூட மழுங்கச் செய்யும் ஒளி மிகுந்த இரேக
ங்களும் பூரணச் சந்திரனை நிகர்த்த சோபிதமுகமும்
செந்தாமரை மலர்போன்ற விலாச நேத்திரங்களும்,
புருவங்கள் மத்தியில் கஸ்தூரி திலகமும், சரிகைப்
பட்டு தாப்தாவை மேலே போர்த்தும் செவிகளில்
நவரத்தின குண்டலங்கள் ஜொலிக்கும், தலைடைக
ளிரண்டும் கண்ணாடியைப்போல ஒளியும் கிருஷ்ண
பக்ஷ சந்திரனை நிகர்த்த கபாலமும் வெண்மை பொ
ருந்திய வலம்புரிச் சங்கையொத்த கண்டமும் வை
ஜந்தி வனமாலை வனசமாலை மார்பிலிலங்கவும் யானை
தும்பிக்கைப்போன்ற நீண்ட கரங்களும், விசாலமா
கிய மார்பும், சுவர்னமயமாகிய தட்டியில் தொங்கு
கின்ற குச்சுகளும், சிங்கத்தினிடையையொத்தகட்டி
ப்ரதேசத்தில் நவரத்தின ஒட்டியாணமும் ஜல்லட
மும் கத்தியும் பளபளவென்று ஜொலிக்கவும், கை
யில் வில்லும் பாணமும் பொருந்திவந்து இந்தமஹா
லில் புகுந்த இவர்களைப்பார்க்க பயமுண்டாகிற
தே மேலும் இவர்களைப் பார்க்கப் பார்க்க வெருவ
லுண்டாகிறதோ இந்ததிடகாத்திரவீரர்ள்யாவரோ
எனக்குத் தெரியாமலிருக்கிறதே யென்று ராஜமார்
த்தாண்டன் நினைத்து மேலும் அவர்கள் பூமிமேல்
வைத்த விரகன்களைக் கண் குளிரப் பார்த்து ருக்ஷ
மாக அவர்களை நோக்கி சொல்லுகிறார் ஓ திவ்விய
புருஷர்களே நீங்கள் எந்த தேசத்திலிருப்பவர்கள்
எங்கிருந்து இங்கு வந்தீர்களென்று தானீஷாவான
வர் கேட்க.

ஸ்ரீராமா ஓதானீஷா ப்ரபூ எங்கள் தேசம்கோ
தாவரி நதிக்கு சமீபத்தி லிருக்கும் பத்ராசலக்ஷேத்
திரம்.

தானீஷா-நீங்கள் யாருடைய ஜவான்கள் உங்
களை எவர்களனுப்ப இங்கு வந்தீர்கள்?

ஸ்ரீராமர் நாங்கள் தாஸஜவான்கள்எங்களை ரா
மதாசரனுப்ப இவ்விடம் வந்தோம்.

தானீஷா-நீங்கள் என்ன குலத்தோர்கள் நீங்க
ளிருவரும் என்ன முறை யுடையவர்கள்?

ஸ்ரீராமர்-எங்கள் குலம் சூரியகுலம் நாங்கள்இ
ருவரும் அண்ணன் தம்பிகள்.

தானீஷா-நீங்கள் என்ன நாமதேயமுடையவர்
கள் அன்னியிலும் எந்த மதத்தை யனுஷ்டித்திருப்
பவர்கள்.

ஸ்ரீராமர்-என்பேர் ராமோஜி, இவன்பேர் லட்
சுமோஜி, நாங்கள் ராமாநுஜமதம்அநுஷ்டிப்பவர்கள்

தானீஷா-நீங்கள் எத்தனைகாலம் அவரிட மி
ருந்து சேவகம் செய்திர்கள்?

Koviloor Digital Library

ஸ்ரீராமர்-நாங்கள் பாட்டன் முப்பாட்டன் முதல் மூன்றுதலை முறையாக அவரிடம் உத்தியோகஞ் செய்கிறோம்.

தானீஷா-என்ன சம்பளங் கொடுக்கிறார். உங்கள் ஜீவனத்திற்காக ஏது கொடுக்கிறார்?

ஸ்ரீராமர்-சம்பளம் சம்மதியில்லாமல் நாங்கள் பிரசாதத்திற்கே யமர்ந்திருக்கிறோம்,

தானீஷா-எதுக்கனுப்பினார் நீங்கள் என்ன வேலையாக வந்தீர்கள்?

ஸ்ரீராமர்-சர்க்காருக்கு செலுத்த வேண்டிய பாக்கி பணத்தை எங்கள் கையில் கொடுக்க பெற்றுக் கொண்டு வந்தோம்.

தானீஷா-எனக்கு கொடுக்க வேண்டிய முழுத்துகையுங் கொண்டு வந்தீர்களா அல்லது துகைக்கு குறைவாய் கொண்டு வந்தீர்களா?

ஸ்ரீராமர்-வீண் மனிதர்கள் யாமல்லோம் தங்களுக்கு பூராய் துகையுங் கொண்டு வந்தோம்.

தானீஷா-நீங்கள் உட்காருங்கள் உட்காருங்கள் உங்கள் வார்த்தைகள் கேழ்க்க மிகவு மினிதாக இருக்கிறது.

ஸ்ரீராமர்-நாங்கள் உட்காரும்படியான புண்ணியஞ் செய்தோமோ தங்களுடைய பேட்டிக்கு வந்திருக்கிறோம்.

தானீஷா-துகையாய் ஆறுலக்ஷவிராகனுங்கொண்டு வந்தீர்களா அல்லது எனது கட்டளைக் குட்பட்டு சிறைச்சாலையில் இருக்கிறேனென்றாரா?

ஸ்ரீராமர்-ஆறுலக்ஷ விராகனுங் கொடுக்க எங்களா லாகுமா மூன்று லக்ஷம் கொடுக்குறோமையா.

தானீஷா-அனுப்பிய துகையைக் கொண்டு வாரும். அதற்குமேல் நடக்கு வேடிக்கைப்பாருங்கள்.

ஸ்ரீராமர்-பதினாயிரம் ரூபா கொண்டு வந்தோமையா அதை பாக்கியில் செல்லு வைத்துக் கொள்ளும் இதற்குமேல் ஒரு காசளவும் கிடையாதையா.

தானீஷா-தென் தேசத்தாரைப் போல வார்த்தைப் பிரட்டிப் பேசுகிறீர்கள்.

ஸ்ரீராமர்-தென்னாட்டாரைப் போல யாங்கள் வார்த்தைப் பிரட்டிப் பேசும்படியானவர்களல்ல.

தானீஷா-தனத்தை என்னுடைய கையிற்கொடுங்கள். பின்பு கைதிக்குள் போங்கள்?

ஸ்ரீராமர்-கைதிக்குள் நாங்களேகோம். தங்கள் கஜானா பணம் யாவும் இதோ கொடுக்கிறோமென்று திரவிய மெல்லாங் கொடுத்து ரசிது தாருமென்றார்.

தானீஷா தனத்தைப் பார்த்த மாத்திரத்தில் மிகுந்த ஆச்சரிய மடைந்து இதைச் சுமப்பதற்கு யானை ஒட்டகம் வேண்டும். இத்தனைப்பளுவாகியமோராக்களை இவ்விருவர் எப்படி சுமந்து வந்தார்களோ அன்னியிலும் இந்த மோரா நூதனமாக விருக்கிறதேயென்று பிரமித்து நிற்கும் தானீஷாவை ஸ்ரீராமர் கண் குளிரக் கடாக்ஷிப்பதற்கு கஷ்டமாய் விட்டது ஏனெனில் தன்னுடைய தாசன் இப்பணத்துக்காக இச்சித்து அநேக தண்டனைக ளெல்லாஞ் செய்தானல்லவா என்று மனதி லெண்ணி கோபத்தோடும் நின்றார்.

திவ்யாசனம் ஸ்ரீராம லட்சுமணனுக்கு கொடுக்க வேண்டுமென்று தானீஷாவுக்கு யோசனையுண்டாச்சுது. அவரை மோசப்படுத்தி ஏகவேண்டுமென்று ஸ்ரீராமருக்கு எண்ணமுண்டாயிற்று. பன்னீருஞ்சந்தனமுங் கலந்து ஸ்ரீராமலட்சுமணனுக்கு பூசவேணுமென்று தானீஷாவுக்கு யெண்ணம்பிறந்தது கிஞ்சித்து சுண்ணாம்பும் வாங்க ஸ்ரீராமருக்கு மனமில்லாமற் போச்சுது, பொன்சரிகை சாலுவைகளைப் போர்க்கவேணு மென்று தானீஷாவுக்கு தோன்றியது. அன்பின்றிய நகைப்பும் ஸ்ரீராமருக்கு வெறுப்புந் தோன்றியது. பதிதபாவனனென்று தானிஷா மனதிற்குள் தோன்றியது. அளவுகடந்த புண்ணியாத்மா இவனென்று ஸ்ரீராமருக்கு தோன்றியது சுத்தப்பிரம சொருபமாகிய ஸ்ரீராமபராமத்மாவானவர் சொல்லுகிறார். ஓ தானிஷாபிரபுவே நாழிகையாய் விடுகிறது. தயை செய்து ரசிது கொடுமையாவென்று கேட்டார். உடனே தானீஷா ரசிது யெழுதி முத்திரை முதலாகியதுஞ் செய்து ஸ்ரீராமர் கையிற் கொடுத்தார். அதைவினயத்தோடும் பெற்றுக்கொண்டு அர்தராத்திரியிலேயே ரசிதை எடுத்துக் கொண்டு போய் தம்முடைய தாசனுக்கு கொடுக்க வெண்ணி சிறைச்சாலையை நோக்கி இருவரும் சென்றார்கள்.

அந்த சமயத்தில் கோபன்னவானவர் விழித்துக்கொண்டு இதுவரைக்கும் பகவான் நம்மை சாக்ஷாட்கரித்து ரக்ஷிக்க வில்லையே யென்று நிஷ்டூர வாக்யங்களாகக் கூறுகிறார். ஓராம முன்னம் கரியாசர், பிரகலாதன், துருவர், ருக்மாங்கதர், அம்பரீஷர், நாரதர், வியாசர், பராசரர், சுகர், ஜனகர், விபீஷணர், சுக்ரீவர், குகன், குசேலர், கோரா, சும்ரார், சாவந்தியாமாலி, ஜயதேவ், நாமதேவ், துளசிதாசர் முதலான இன்னுமநேக தாசர்களும் கிஞ்சித்துந் தயையில்லாதஉம்முடைய நாமத்தைததுதி செ

Koviloor Digital Library

ய்து எவ்விதத்தில் முழுமூட்சுக்களானர்களோ அறியேன். அது உண்மையாகில் என்னை ஏன் ரக்ஷிக்கக்கூடாது என்றுசொல்ல அரிதாகிய சுதந்தரங் கொண்டு ஓராமா இச்சமயத்தில் உமது தேவியாகிய சீதையின்பேரிலாணையாய் என்னை நீர் ரக்ஷிக்கவேண்டும். அப்படி நீ ரக்ஷிக்காவிடில் உன் தந்தை தசரத மகாராஜன் ஆணை வண்டுகள் நிகர்த்துகருத்தக் குழலினையுடைய அகலிகையை யாண்ட அந்நாளில் கிருபைசெய்தாப்போல இந்நாளில் என்பேரில் கிருபைசெய்யும் உமது தம்பி லட்சுமணணை மிகுந்த பிரியத்தோடு சுக்ரீவனைக்கார்த்தாய் அந்நாளில் காத்ததுபோல் என்பேரில் கருணை கடாக்ஷம்வைத்து கிருபை செய்யாவிடில் உன் குலகுருவதிஷ்டராணை பாதகனாகிய அஜாமீளனை முன்னம் பக்தனாகச்செய்தாய். அதுபோல என்வேதனைதீர்த்து ஆளாவிடில் நீகையிலேந்தியிருக்குந் தனுசின்மேலாணை அபயமென்று சரணமடைந்த விபீஷணனை முன்கார்த்தாய் அதுபோல் பரிவுடனென்னை யாளாவிடில் உமதன்னை கோசலையாணை, மேலும் பத்திராசலராமா தொண்டனிடர் தீர்த்து நின் சேவைநிழல் ஈடுபடுத்தாவிடில் உன்னுபயத் திருவடிகளின் பேரிலாணை இந்தப்படி எனக்குற்ற கஷ்டத்தினால் நின்னை விடாது ஏழு ஆணைகளிட நேரிட்டது நான் பாமரனாகிய மந்த புத்தியினால் ஆணைகளிட்டுவிட்டேன். இதைக் குற்றமாக பாவித்து அற்பமதியுடைய அடியேன் பேரில் ஆயாசங்கொள்ளாதிருக்க மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன், ராமா மேலும் தடை செய்யாது தயையோடு என்னைக் கருணைபாரும் ராமா நின்னன்னை தந்தை யாணைநீங்கியது. மேலும்சேவகனைச்செய்து சிரமந் தீர்த்து ரக்ஷியும் ராமா தேவியான சீதையம்மனாணை நீங்கியது மேலும் என் கோரிக்கையை தந்து குறைமுடனே யாளும் ராமா கோதிலா நின் குலகுருவாணை நீங்கிற்று ..னமாரச்செய்த பிழைகளை மன்னியும் மிகு விநயமோடு லட்சுமணனாணை நீங்கிற்று ராமா அல்லும் பகலும் உன்னாமத்தைததிசெய்ய வரந்தாரும் தொல்லுலகினில் உன் வில்லினாணை நீங்கிற்று என்றிப்படி மொழிந்து பின் விஷத்தைப் புசித்து பிராணனை விட்டு உன்னடியினை சேருகிறேன் எத்தனை நாளிருக்கினும் மரணமோர் நாளைக்கு நேரிடுவது உண்மையாகையால் வீணாக தேகத்தை வைத்திருப்பதில் யாதொரு சுகமுமில்லை என்று வைராக்கிய சீலராகி ஜீவன் விடுமுன் ராமனை மார்புஸ்தானத்திற் சேர்த்து சமஸ்த உபசாரங்களுடன் பூசிக்கிறேனென்று சொல்லி ஓ மனதே ராமராம ஸ்ரீராமராமா, யென்னப்போகாதா, நாம் கோரிய பொருளையளிக்கும் சீதாமணாளனைக் காணலாகாதா பிரியத்தோடும் ரகுவீரனுக்கு ஆசனங் கொடுக்கப்போகாதா. பிரமாதிதேவர்கள் கொண்டாடும் நாமத்தைத் தியானிக்கலாகாதா, பெருமை பொருந்தியமேகவண்ணனை அழைத்து ஆவாஹனஞ் செய்யலாகாதா, அன்பர்க்கனுகூலனுக்கு அர்க்கிய பாத்தியம் கொடுக்கப்போகாதா, மறைமூலனுக்கு பாத்தியமளிக்கலாகாதா குறைவிலாச் செல்வனுக்கு ஆசனமளிக்கப்போகாதா கோடி மன்மதஸ்வரூபனுக்கு திருமஞ்சனம் செய்யலாகாதா நாடி பூமிநாதனுக்கு பட்டுவஸ்திரங்கள் உடுத்தப்போகாதா, சாந்தஸ்வரூபனுக்கு பூணூல் தரிக்கலாகாதா எந்தல் சீதாபதிக்கு மணம்பொருந்திய சந்தனம் பூசப்போகாதா, கேதகி ஜாதிமல்லிகை மாலை சூட்டலாகாதா ஸ்ரீதுளசி புஷ்பங்களைக் கொண்டு உபயதிருவடிகளுக்கு அர்ச்சனை செய்யப்போகாதா, கபிலை நெய்யினால் தூபதீபங் கொடுக்கலாகாதா, சுப்பராத்பரனுக்கு தீபாராதனை சமர்ப்பிக்கப்போகாதா, தபசிகள் பிரியனுக்கு நிவேதித்தியமளிக்கலாகாதா, கபடிகள் விரோதிக்கு தாம்பூலமளிக்கப்போகாதா. சகலமேளவாத்தியங்களினாலும் கீர்த்தனைகளாலும் பலவித நாட்டியத்தினாலும் களங்கமற்ற ஜெகதீசனைக் களிக்கச் செய்யலாகாதா. மன்மதனைப்பெற்ற மகானுபாவன் சமீபத்தில் கரங்களைக்குவித்து பலகீர்த்தனங்களைபால் தன்னைமறந்து ஆடலாகாதா மெல்லிய பஞ்சுமெத்தையும் மேலாகிய திண்டுகளும் போடலாகாதா, சயனத்திருக்கோலம் செய்த பின்னர் சாமரம் ஆலவட்டசேவை செய்யப்போகாதா, எழுந்து கொலுவமர்ந்திருக்கும் சமயத்தில் எச்சரிக்கை சொல்லலாகாதா, ராமா-ஜெயராமா-சீதாராமா - தசரதராமா - கோசலைராமா-மேகஸ்யாமா - பரந்தாமா ஆத்மாராமா - ஜெகதபிராமா - ஆபிராமா - ராக்கதபீமா என்று துதிசெய்தால் நமதுவினைகளெல்லாம் பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல பறந்து போகாதா, என்மனதுக்கு போதித்து மானசபூசை செய்ய இந்திரியாதிகளை உத்தேசித்துச் சொல்லுகிறார் ஓ சகல இந்திரியங்களே சேஷ்டைகள்செய்ய இப்போது சமயமல்ல உங்கள் பராக்கிரமத்தை காட்டாமல் நிம்மதியாய் சத்தமின்றி யிருங்கள் நமது வீட்டில் ஜானகிநாதனுக்கு பக்தியோடு பூசை செய்யப்போகிறேன் ஆகையால் சந்தடிசெய்யாம லிருங்கள். அண்டாண்ட சராசரங்களையும்கற்பத்தில்வைத்த நமது எம்பெருமானை இடைவிடாது ஹிருதயகமலத்தில் பிரியமாய் நிறுத்திக்கொண்டு சரணமடைந்த பாமரர்களையும், ரக்ஷிக்கிறேனென்று விருது தரித்தஜெகதீசாயென துதித்து பஞ்சாமிர்தத்தினால் திருமஞ்சனஞ் செய்கிறவேளை நீங்கள் அறைநாழி

Koviloor Digital Library

கை பொருந்திருங்கள். இந்திரியங்களே மேலும் பளபளப்புடன் ஒளிமிகுந்த தங்கமிழைத்த வயிர அங்கி தொடுத்து பரிமளமிகுந்த திருத்துழாய்-மாலை கண்டத்தில் தரித்து, கௌஸ்துவ திவ்வியரத்தினஹாரங்கள் கழுத்திற் கணிந்து நவரத்தினபுஜகீருதிஜெகாதனுக்கு அணியும் வேலையாகையால் இந்திரியங்களே சாந்தமாயிருங்கள். மேலும்பத்தரைமாத்துதங்கத்தினலாகிய தட்டி ஜல்லடம் இடையிற்கட்டி சரிகை சாலுவை மேலுக்குப் போர்த்து புருவமத்தியில் கஸ்தூரி திலர்தமிட்டு தாமரை மலர் நிகர்த்த மெல்லியதிருவடிகளில் கெஜ்ஜை கொலுசு பாதரசம் கிங்கிணிகள் கல்கல்லெனப்பொருந்திய இடையிலொட்டியாணமும் சிலங்கையும் பூட்டும்வேளையாகையால் எனக்கு கஷ்டம்நேரிடாமல் சேஷ்டைகளின்றி யிருங்கள் மேலும்-கெதை-சங்குசக்கரம்-வாள்கோதண்டம் பிடித்தகரங்களில் காப்புகொலுசுகளிட்டு விரல்களில் நவரத்தினங்களிழைத்த மோதிரங்கள் மாட்டி செவிகளில் வயிரக்குண்டலங்கள் அணியும் வேளையாகையால் இந்திரியாதிகளே யாதொரு ஆரவாரஞ் செய்யாதிருங்கள் மேலும் சிரத்தில் நூறுகோடி சூரியர் பிரகாசத்துக்கு மிஞ்சிய மேலான கிரீடஞ் சூட்டி ஹரிப்ரத கமலங்களுக்கு உன்னித் திருத்துழாய் கொண்டு பூசித்து தூபதீப நைவேத்திய தாம்பூலம்மாறி சகல உபசாரங்கள் செய்து பத்திராசல ஈசனுக்கு ராமதாசன் திர்க்கமுடன் சாஷ்டாங்க தெண்டனிடும் வேளையாகையால் இந்திரிய கணங்களே தயை செய்து கொஞ்ச நேரம் இருங்களென்று சொல்லி திரேக இந்திரிய பிரபஞ்சங்களை மறந்து தன்மயத்தினல் ராமதாசர் மானச பூசை செய்துக்கொண்டிருக்க ராமலட்சுமணர்கள் சிறைச்சாலைக்குள் வந்து பரமபக்தன் பாதங்களிற் பூட்டிய பாரமான விலங்கும் இருபது விரல்களிலும்வளர்ந்தநகங்களும், பார்ப்பவர்கள் பயங்கொள்ளும்படி அவர் சிரத்தில் மிகு கேசங்களும். மேலும் ஜடைகள்விழுந்தும் காத்திற்ருத்திரமும் புழுதியடைந்த காத்திரமும் அந்த சிறைச்சாலையில் தன் சமீபத்தில் விஷக்கிண்ணத்தை வைத்துக்கொண்டு ஹரி ஹரி என்றும் தன்னை மறந்து பூமியில் சயனித்திருக்கும் ராமதாசரைக் கண்டு அண்ணன் தம்பிகள் ஆபத்ரக்ஷகர்கள் கோபன்னு யிருக்கும் விதமத்தனையு முணர்ந்து நுழைந்து கிண்ணத்தி லிருக்கும்விஷத்தை மண்ணினிற்கலந்து விட்டு உன்னை யாரும் தெரிந்துக் கொள்ளாமல் மறைந்து வருவா யென்ன உடனே அந்த ஆதிசேஷாம்சனும் அப்படியே செய்து வருநேவென்று உள்ளே பிரவேசித்து அவருக்குத் தெரியாமல் விஷத்தை யெடுத்து மண்மீதிற் கரைத்து விட்டு தன் தமயன் பக்கலிற் வந்து சேர்ந்தார். உடனே பக்தவத்சலனும் பரமதயாளனுமாகிய ராமச்சந்திர மூர்த்தியும் லட்சுமணசகிதராகி பத்திராசலம் வந்து சேர்ந்தார்கள்.

ராமதாசர் மானசபூசை முடித்து அருகில்வைத்த விஷக்கிண்ணத்தை உருட்டி யிருப்பதும் இராம பரப்பிரமம் வந்து தன்னை ரக்ஷிக்காததையும் எண்ணி எண்ணி உருகி வேறொருவரும் உள்புகுவதற்குக் கூடாத நிர்ப்பந்தமாகி இச்சிறைச்சாலைக்குள் யாரோ வந்து போனதுபோல் தோற்றுகிறதே யென்று நாலுதிக்கும் பார்க்கிறபோது ரசீது ஒன்று அகப்பட்டு அதை எடுத்து பார்த்து தானீஷாவின் கையெழுத்தென்றறிந்து இதுசாந்தஉருவங்கொண்ட ஸ்ரீராமமூர்த்தியின் மாயையென் றுன்னி ஓ ராமா முன்னம் தசரத மகாராஜன் தன் குமாரனென்றும், சுக்ரீவன்றனக்கு நேசனென்றும், வானர சைனியங்கள் மிகுந்த வலிமையுடையவ னென்றும் மூவுலகையாளும் மன்னவர்க ளெல்லாம் தங்களுக்கு சக்கிரவர்த்தி யென்றும், பாண்டவர்கள் தங்களுக்கு மைத்துனரென்றும், ஜராசந்தன் முதலான துஷ்டர்கள் தங்களுக்கு விரோதியென்றும் அஷ்டைசுவரி சம்பத்துடையவர் நீரென்றும், குசேலரும் சாமாநியரான தங்களைப் போலொரு மனிதனென்றும், யாதவர்கள் தங்களுக்குத் துரையென்றும், கோபிகாஸ்திரீகள் தங்களை மன்மதனென்றும், அஞ்ஞானத்தினல் தேவரீரது மாயையை யறிய சக்தியற்றவர்களானார்கள். மேலும் பிரமன் இந்திரன் முதல் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீசுரர்களும் உம்முடையமாயை இன்னதென்றறிய அசக்தர்களாயு மிருக்கப் பரமனும் அதிக பாவியாயும் சுகஞானத்தை துறந்து அக்ஞானம் நிறைந்த அடியேன் அறிவேனே என்றிப்படி ராமதாசர் ஸ்ரீராமபிரானை ஸ்தோத்திரஞ் செய்துக்கொண்டு தன்மய மடைந்திருக்க அப்போது தானிஷா தன் முன்னின்ற இரண்டு திவ்ய புருஷர்கள் மாயமாய் மறைந்ததை கண்டு அதிக ஆச்சரியங் கொண்டு சிந்தித்து இருகரங்களாலும் மிகுந்த பக்தியுடன் சலாஞ் செய்து மலரைப்போன்ற மெல்லிய தேகத்தையுடைய தன் பத்தினியை நோக்கி அடிமானே யாரோ வந்தார்களென்று என்னுடைய அஞ்ஞானத்தினல் அறியாமற் போனேன். இன்னவர்களென்று அறிவேனே யாகில் இப்பவே அவர்கள் திருவடித் தாமரைகளை யர்ச்சித்து கரங்களால் பூசித்து நேசித்து விசுவாசித்து அவரது திருநாமங்களை கோஷி

Koviloor Digital Library

த்து தயவைப்பெறுவேன். மேலும்அவர்களிருவரும் மனிதர்களல்ல வந்தவர்கள். வைகுந்தவாசகர்கள் அவர்களை இன்றிரவுகழித்து நாளைவாருமென்றுசொல்லாமலும் நீர் பொறுமையாக நாளை உதயத்தில் வாரும் வந்து ரசிது பெற்றுக்கொள்ளு மென்று யான் பகராதிருந்தேன். நான் மிகவும்பாதியானேன் என்னுடைய மந்த புத்தியினால் அவரை சேவிக்காமலும் இருந்துவிட்டேன் என்று தன்னைத் தான் வெறுத்து ஓ தாமரைமலரை யொத்த கண்களை யுடைய மாதே யான் கண்ட கனவு மெய்யாச்சுதடி, ஆஹா பார்வைக்குப் பாலர்கள் சொரூபமாகிய புண்ணிய புருஷர்கள் மறுபடியும் நாளைவர மாட்டார்களே அன்னியிலும் என்மதிக்கு அவர்கள் மனிதர்களல்ல இந்த பூமியிலப்படிப்பட்ட சுந்தரதிரோகஒளியை யுடைய புருடர்களை நான் கண்டதில்லையடி தேவதேவர்கள் மஹாநுபாவர்கள் சாதுக்கள் நேசராகிய பத்ராசலவாஸர்களடி ராமதாசரை பாலிக்கும் பொருட்டு எழுந்தருளிய பரமாத்மாவென்றறியாமல் மோசம் போனேனடி அந்த நடுராத்திரியில் வந்து கதவை தட்டி யழைக்கவே யாரோ சாமன்ய புருடர்களென்றெண்ணி இருந்துவிட்டேனே ஆ கெட்டேனே ரக்ஷிக்கும்படி வேண்டிக் கொள்ளாமல் மெய்மறந்து விட்டேனே திரவிய அபேக்ஷை கொண்டு மதிகெட்டேனே. அந்த க்ஷணமே ஆறுலக்ஷ விராகன்களத்தினையும் ஓர் அலட்சியமாகச் செலுத்திய சாக்ஷாத்கார பரம்பொருளென்று பக்ஷத்துடன் கருணைகடாக்ஷ வீக்ஷணாலங்கார அரக்கர் குல சிக்ஷ சாதுஜென பக்ஷபுவனரக்ஷா என்னை சிக்ஷைசெய்து ஆட்கொள்ளும் என்று சுவர்ன ஆசனமுங் கொடாமற் போனேனே பரிமளம் பொருந்திய சந்தனம் பூசாமல் தனத்தைப்பார்த்து மோகித்து அல்பனாகி அபசாரப்பட்டேனே என்று தன் பத்தினியிடம் சொல்லி அன்றிரவு முழுதும் விசனப்பட்டுக்கொண்டிருந்தார்.

மறுநாள் பொழுது விடிந்தவுடனே மந்திரிகளை யழைப்பித்து சிறைச்சாலையிலிருக்கும் ராமதாசர் கால் கரங்களில் பூட்டிய விலங்கை கழட்டி விட்டு அவரை தந்தப்பல்லக்கின்பேரி லேற்றி சகல பரிவாரங்கள் சூழ மங்கள வாத்தியங்கள் முழங்க, யான் கொலுவுக்கு வருமுன்னமே பரம பாகவதரை கொலுகூடத்திற்கு அழைத்துவாருங்களென்று உத்திரவுசெய்தார் உடனே அவர்கட்டளைப்படி அச்சிறைச்சாலையருகிற்சென்று கதவுகளைத்திறந்து உட்புகுந்து விலங்குகளைக்கழட்டி பன்னீரினால் ஸ்நானஞ் செய்வித்து பட்டு பீதாம்பரங்களை யணிவித்து வைசந்தி வனசமாலை பச்சைமாலை கழுத்தில் தரிப்பித்து துவாதச ஊர்த்துவ புண்டரகத் திருநாமம் தரிப்பித்தது தோளில் ஜெபமாலை சாத்தி ராமதாசரை முத்துபல்லக்கிலேற்றி. சகல சம்பிரமத்துடனே பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்க, ஆலவட்டம் வெண்சாமரை வீச தம்பூரா வீணைமிர்தங்கம் ஜாலர் குடமுழா வாத்தியங்கள் முதலான முப்பத்திரண்டு வாத்தியங்களிலங்க ஹைதர்பாத் நகரை வலம்புரிவித்து ராமதாசரை கொலுக்கூடத்திற்கு அழைத்து வந்து அவருக்கு சிம்மாசனமிட்டு வீற்றிருக்கச் செய்து பிறகு மந்திரிமார்கள் தானிஷாவுக்கு எச்சரிக்கை செய்தார்கள். உடனே தானிஷா வானவர் கொலுவிற்கு வந்து ராமதாசரைக் கண்டு நான் நின்றபடி தன் கைகுவித்து சலாஞ் செய்து ஓ தாசரே நீர் மகா உத்தம புருடரென்று சொல்லி மிகவும் மெச்சிக் கொண்டாடி மிகுந்த பிரியத்துடன் சொல்லுகிறார் உமக்காக ராம லட்சுமணா ளிருவரும் வந்து ஆறுலக்ஷம் ராம்டிங் மோரா கொண்டு வந்து செலுத்தினார்கள். நீ ரிவ்வளவு புண்ணிய புருடரென்று எனக்குத் தெரியாமல் அநேகமான தண்டனைகளைச் செய்வித்தேன் அந்த கஷ்டங்களை யெல்லாம் நீ ரெப்படி சகித்தீரோ இத்தனை மேலான சாதுவென்றுணராமல் எனதறிவீனத்தால் மிகுந்த சிக்ஷைகள் செய்வித்தேன் ஓ பரமதயாளரே நான் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னித்துஎன் பேரில் கிருபை செய்யவேண்டு மென்று ஸ்தோத்தரித்து ஓ சாதுவே இனி உமது கடன் தீர்ந்துவிட்டது தனத்தை கும்பலாகக் கொட்டி கணக்கு ஒரு நிமைப்பொழுதில் ஒப்புக் கொடுத்து என்னிடம் சொல்லாமற் போய் விட்டார். இவ்வளவு சனவானென்று முன்னமே அறியாமற் போனேன் ஆகையால் என்பேரில் பகைகொள்ளாமல் மனதில் கிருபை வைத்து சன்மானமாக என்னை துரிதமாயாளும் மேலும் நான் துலுக்க ஜாதியி லுதித்தவனாகையால் துர்ச்சனமாகிய எனக்கு அற்ப புத்தியினால் பற்பல விதங்களாக வாதைகள் உம்மைச் செய்தேன் அன்னியிலும் ராமதாசரென்று தெரியாமல் வெகு இடுக்கண்பட உம்மைச் செய்தேன் ஆஹா பத்திராசல ராமருக்கு உன்பேரில் மிகுந்த பிரியமும் அதிககடாக்ஷமும் உண்டாகி யிருக்கிறதையா உம்முடைய ஜென்மமே ஜென்மம் நீர் செய்த புண்ணியமே புண்ணியம், உமது பாக்கியமே பாக்கியம், யோக்கியமே யோக்கியம், எவர்க்குண்டித்த சிலாக்கியமென்று பற்பல விதங்களாகக் கொண்டாடி ரசீதை பெற்றுக்கொள்ளுமையா பரமபாகவதரே யென்று

Kowiloor Digital Library

ரசிதைத் தந்து அவர் திருவடியை நாடி சிரசிற் சூடி பலவாயாடி தன்னை மறந்தாடி பிரபஞ்சத்தையும் தேகாபிமானத்தையும் விட்டு பரமாத்மாவின் திருவடியில் லயித்தார்.

அப்போது தானிஷாவின் திருவடியில் ராமதாசரானவர் தமது சிரத்தைச் சேர்த்து சாஷ்டாங்கமாய் தெண்டனிட்டு ஓ தானிஷா பிரபுவே நீரல்லோ தன்னியர் என்னைப்பெற்ற தந்தையை பிரத்தியக்ஷமாய் கண்ணாரக் கண்டு சேவித்தீர். அன்னியிலும் ராமலட்சுமணர்கள் நேற்றிரவில் உம்மிடம் வந்து என்ன சங்கதி பேசினார்கள் நான் எத்தனை வேண்டிக் கொண்டபோதிலும் வராமலிருந்தவர் நீர் புண்ணியாத்மாராகையால் உனக்கு சேவை கொடுத்தார். நான் பாவியாகியபடியால் எனக்கு தெரிசனந் தராமற் சென்றார் என்று சொல்ல,

தானிஷா-ஓ ராமதாசரே தசரத ராமருக்கு உண்மையானதாசர் நீரே. அன்னியிலும் உம்மை அநேக இம்சைகள் யான் செய்தபடியால் ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியின் சேவைகண்டேன் பிரியத்தோடும் சேவித்துக்கொண்டேன், மனதாபங் கொண்டேன், யாதொரு பூசையுஞ் செய்யாமல் விண்டேன். மேலும் உன்னை மீட்டுக்கொண்டு போகவந்தாரே யல்லது எனக்காக வந்தவரல்ல ஆகையால் நீரல்லோ தன்னியரென்று நவில,

ராமதாசர்-ஓ தானீஷா பிரபுவே! என்னென்ன உபசாரம் செய்தீர் எங்கள் சுவாமி பத்திராசல நிவாசரை நீங்கள் பிரியத்துடன் சேவித்தீர்கள். ஆகையால் ஸ்ரீராமமூர்த்தியின் கிருபையுண்டாகி மேலுமேலுந் தழைத்து வாழ்வீரென்று சொன்னார்.

தானீஷா-ஓ பரம பக்தசிகாமணியே ராமலட்சுமணர்கள் உமக்காக செலுத்திய ஆறுலக்ஷம் ராம்டிங் மோராக்களை உமக்கு இனாமாகக் கொடுக்கிறேன் பெற்றுக்கொண்டு போமையா பத்திராசல ராமருக்கு தாசராகி அந்த தாலுக்காவைக் கூட நீரே ஆண்டு கொள்ளும் இன்னமும் உமக்கு எது வேண்டியதோ அதுகளைக் கேளும் தடையில்லாமல் தருகிறேன். நீரவ்விடம் சென்று சதாகாலம் ராமருக்கு அர்ச்சனை ஆராதனை முதலியவைகளைச் செய்து கொண்டிருமையா வென்று நவின்றார்.

ராமதாசர்-ஓ தானீஷாவே, என்ன வார்த்தைகள் சொல்லுகிறீர் எனக்கேதுக்கு அரசாக்ஷி இப்புவியில் தாங்கள் மேலான ஜென்மமெடுத்தீர்கள். உமக்கு சமான முடையவர்கள் இப்பூமியிற் கிடையார்களென்று சொன்னார்.

தானீஷா-ஓ பரம்மை மிகுந்த ராமதாசரே பத்திராசல தாலுக்காவை சூரிய சந்திராளிருக்கிற பரியந்தம் உமது ராமச்சந்திர மூர்த்திக்குகொடுத்தேன் இன்முதல் கையொப்பனம் செய்கிறேன். இதை கைக்கொண்டு ஸ்ரீபத்திராசல ராமதாசரென்று சகலரும் புகழும்படி கீர்த்திபெற்று ஜெயமுடன் வெகுகாலமிருக்கக் கடவீரென்று இந்தப்படி தானீஷாவானவர் ராமதாசரை யநேகமாக பிரார்த்தித்து ராமலக்ஷ்மணர்கள் தனக்குச் செலுத்திய ஆறுலக்ஷம் மோராக்களையும் மிகுந்த வஸ்திராபரணங்களும் கொடுக்கப் பெற்றுக்கொண்டு அநேக பரிவார சேனைகளுடன் புறப்பட்டார்.

ராமதாசர் தானீஷாவிடம் வெகுமதி பெற்று பத்திராசலத்திற்கேகும்போது திருடர் வழிமறிக்க பகவான் சிப்பாய் ரூபந் தரித்து திருடரை யோட்டிய அத்தியாயம்.

ராமதாசர் பத்திராசலத்தை நாடி வருகையில் அம்மார்க்கத்தில் சில திருடர்கள் வழிமறித்து இந்த ராமதாசர் ஹைதர்பாத் தானிஷாவிடமிருந்து ஸ்ரீராம கைங்கரியத்துக்காக மிகுந்த திரவியங்கொண்டுபோகிறாரென்று குருக்கேவழிமறித்து கத்தியினால்வீசிப் போடுவோம் யாவத்து சொத்துகளையும் கொடுத்து தப்பிப்பிழைத் தோடிப்போ இல்லாவிடி உங்களை லேசாகவிட மாட்டோமென்று ஆர்ப்பாட்டம் செய்வதை யுணர்ந்து ராமதாசர் இதற்கென்னசெய்வேன் ஓராமா உன்னையன்றி இத்துன்பத்தை ரக்ஷிக்குந் தாதா ஒருவரையுங் காணேன் இணையில்லாத குணநிதியாகியகருணையம்பதி அன்னைசீதாபதி நீயேகெதி ஓராமா பிபீலிகாதி பிரமபரியந்தம் சமஸ்த ஜீவாதிகளி னுள்ளத்திலும் ஆத்மாராமனாக எழுந்தருளி இருப்பவர் நீரே இச்சோரர்களிடத்தில் வசிப்பவருந் தேவரீரே ஆகையால் இவர்களெண்ணத்தை மாற்றி உம்முடைய திருவடியை தியானித்துகடைத்தேரும்படியாய் கடாக்ஷிக்கும்படி மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் சுவாமியென்று முறையிட்டார்.

அம் முறையைக்கேட்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் சிப்பாய்களைப்போல அநேகவுருவ மெடுத்து துப்பாக்கிகளைப் பிடித்து இடையில் வாளாயுதந் தரித்து ராமதாசரிருக்குமிடம் வந்து இரண்டு பக்கமும் வரிசை வரிசையாய் பந்தி பந்தியாய் நின்று தன் மாயையினால் ஒரு வேட் டுளப்பிய மாத்திரத்தில் சோரர்கள் பயந்து இத்தனை சிப்பாய்களை நாம்ஜெயிப்பது மிகு கடினமல்லவா. பிராணனைக் காப்பாற்றிக்

Koviloor Digital Library

கொள்ளும் நியிந்தியம திட்டமாய் ஓடிப் போவதே நலமென்று யோசித்து அத்திருடர்கள் அவ்விடத்தை விட்டு ஓடிப்போனார்கள்.

உடனே சிப்பாயுருவங் கொண்டு வந்த ஸ்ரீராமமூர்த்தியானவர் மாயமாய் மறைந்தார் இதைக்கண்ட ராமதாசர் ஸ்ரீராமாநுக்கிரகம் பூரணமாயிருக்க யாதொரு விஷபத்திலும் அஞ்ச வேண்டுவதில்லை (தெய்வேபலே துர்ப்பலே) யென்னு மாப்போல தெய்வபல மிருக்கிற பரியந்தம் நாம் பயப்படக் காரணமில்லை. தெய்வபல மில்லாவிட்டா லன்றோ பயப்பட வேண்டும் என்று மிகுந்த களிப்பு கொண்டவராகி தசரதராமரை துதி செய்துக்கொண்டே போகிறபோது பத்திராசல சிகரத்தை தூரத்திலே தானே கண்டு தன் பின்வருகிறவர்களை கூவியழைத்து ஓ சாதுக்களே பத்திராசல சிகரத்தை சேவியுங்கள் இதுவே இக்கலியுக வைகுந்தம் மிகுந்த அந்தம் இதை சேவிக்கத்திரும் பவபந்தம் சாதுக்கள் தரிசனம் சொந்தம், நம்மைவிட்டு நீங்கும் மந்தம் என்றும மேலு மிக்குவலயத்தில் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னும் இம்மூன்றையும் நீக்கி காமக்ரோத லோபமோக மதமாச்சரியங்க ளென்னும் ஷட்வர்க்கங்களாரையும் அடியோடு உருமாய்ந்து போகும்படி போக்கி, சதா தன் காமத்தியானத்தை கடாக்ஷிக்கும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி எழுந்தருளியிருக்கும் இந்த பத்திராசல க்ஷேத்திரம் மிகுந்த மகிமை பொருந்தியது ஆகையால் நீங்களினியாகிலும் வீண்காலம் போக்காமல் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருவடியை தியானஞ் செய்து பரலோக மடையும்மார்க்கத்தை தேடுங்கோ ளென்று போதனை புரிந்து கௌதமீ நதிக்குச் சென்று ஸ்நானம் ஜபதப அநுஷ்டானங்களை முடித்து தானிஷா கொடுத்த விராகன்கள் ஜாகிருசால்வைகள் ஆடையாபரணங்கள் முதலாகிய சமஸ்தங்களையுங் கொண்டுபோய் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி சந்நிதானத்தின் முன் வைத்து கணக்கில் தாக்கல் செய்து அநந்தரம் பகவானுக்கு திருமஞ்சனஞ் செய்து ஆடையாபரணங்களை யலங்கரித்து தூபதீப நைவேத்தியங்களளித்து பலவித வுபசாரங்கள் செய்து தீர்த்தம் திருத்துழாய் பிரசாத முதலானதும் பெற்று பத்ராசல மலையை விட்டிறங்கி வருகிறபோது சில சாதுக்கள் ராமதாசர் வந்த சங்கதி தெரிந்து சகல கருவிகளாலும் ப்ரம்மாநந்தமாய் பஜனை செய்துக் கொண்டு ராமதாசர்க்கெதிர் வந்து சந்தன புஷ்ப தாம்பூல திரவியங்களையும் சமர்ப்பித்து யாவரும் தீர்க்க தெண்டனிட்டு அவர்களுடன் கூடி ஆஹா இன்றல்லவோ எமது ஜென்ம சாபல்யமாகி சந்தேகங்கள் நீங்கியது அன்னையின் கெர்ப்பத்தில் மலமூத்திராதிகளில் மூழ்கி இப்பூமியிற் ஜென்மித்து பலவிதமான துஷ்ட காரியங்களும், பொய், புலை, கொலை, களவு கட்காமங்களுடனும் கோபியும் பாபியும் குணஹீனனும் குரூரனும் கபடனுமாகி யான் பத்திராசல யீசனது, உபய திருவடித் தாமரைகட்கு சேவகனுகினேன். மேலும் சகல லோகங்களுக்கும் ஆதாரமாகிய ஆதிபுருஷோத்தமன் சீதா சமேதனாகி யிருக்கிற சமயத்தில் சுபத்திற் கிட்டி பலவிதங்களாக துதி செய்ய என்ன பாக்கியம் பண்ணினேன் அன்னியிலும் வெகுகாலத்திற்குப் பின் இன்றல்லோ சேவை கிடைத்தது என்று ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை தியானித்துக் கொண்டே சந்தோஷசித்தராகி தன்னகம் புகுந்து இரவும் பகலும் இடைவிடாது ராமதாரகநாமத்தை துதிசெய்து சந்நிதி காரியங்களில் ஒன்றாகிலும் விடாம லனுவளவும் பிசகாது நித்யோற்சவம் பக்ஷோற்சவம் பிரம்மோற்சவ முதலானதுகளும் நடத்தி தாலூகா கச்சேரி விசாரணைகளும் நீதியாகப் பரிபாலித்து வந்து ஓர்நாள் பத்திராசல சிகரமேறி ஸ்ரீராமபிரானைச் சேவித்து பிரம்மானந்த குதூஹலத்தினால் தன்னை மறந்து இன்று யான் கண் குளிர கண்டேன். ஸ்ரீராமரைக்கண்டு கொண்டேன். மேலும் செங்கமலத்தி லுதித்த சீதை மணாளனை மங்களக் கொலுகொண்ட ராமனை இன்னும் கஸ்தூரி திலர்தமும் கனத்த நிலகாத்திரமும் கருணைமழை பொழியும் கண்கள் படைத்தவனையும் அன்னியிலும் கெட்டி நல்லமுத்து சரங்கள் பிரகாசிக்க முகத்தில் புன்னகையுடைத் எம்பெருமானை கலகலவென்ற பாதசரங்களும் கிண்கிணியும் ஒலிக்க தங்க மயமான கரதல கமலமுடைய சீமானை, நவரத்தின ஒளி ஜெகமெங்கும் பிரகாசிக்கவும் வில்லம்புங் கையில்தரித்த கோமானை, இத்தரையில் ராமதாசரை ரக்ஷிக்கும் பரம புருடராகிய பத்திராசல ஈசனைக் கண்டு கொண்டேன், என்றிப்படி பிரகாச பிரதக்ஷணஞ் செய்து கெர்ப்ப கிருகத்திற்குள் புகுந்து ஸ்ரீசீதாலட்சுமண சமேதராகி நிவாசமாயிருக்கும் ஸ்ரீராமரை சேவித்து பரவசனாகி கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக மெய்மறந்து மனதை ஸ்ரீராமமூர்த்தியிடம் லயிக்கச் செய்து சித்திரப் பதுமைபோல அசைவற்றிருக்க அர்ச்சகர்கள் ஸ்ரீராம பரப்பிரம்ம மூர்த்திக்கு சோடசவுபசார பூஜைகள் செய்வித்து, சகஸ்திரநாம அர்ச்சனை புரிந்து தூபதீபங்கள் சமர்ப்பித்து, ராமதாசருக்கு தீர்த்தம், திருமாலை, சடகோபங்களும் அளிக்கப் பெற்ற ராமதாசர் ஸ்ரீராமா வந்தனம் அநாதி புருடராகிய உனக்கு ஜெயமுண்டாகக் கடவது. சீதாதேவிக்கு நாயகனே உமக்கு வந்தனம்

Koviloor Digital Library

ஹாரகிரீட குண்டலங்களைத் தரித்த உமக்கு வந்தனம். பூரணசந்திரனை நிகர்முகமுடைய உமக்கு வந்தனம். கோதண்டமென்னும் வில்லை கையிற் பிடித்த உமக்கு வந்தனம் ஜெகத்தில் மங்களகரமாகிய விக்கிரகாந்தியுடைய உமக்கு வந்தனம். ரகுகுல திலராகிய உமக்கு வந்தனம். சௌனக கௌதம ரிஷி கணதோத்திரா உமக்கு வந்தனம். சக்கிரவர்த்திக்குப் பிரியசுதனாகிய உமக்கு வந்தனம்தாரகநாமா உமக்கு வந்தனம். ஜெகத்துக்கெல்லாம் நாயகராகிய உமக்கு வந்தனம். தேவஜன பக்த பிரியராகிய உமக்கு வந்தனம். கோதண்டவல்லவராகிய உமக்கு வந்தனம் இக்ஷ்வாகு வம்சதோத்திராவந்தனம். சூரிய சந்திர நேத்ரா உமக்கு வந்தனம். ஜெகத்தை பாவனஞ் செய்ய உதித்த ஜெயராமா வந்தனம். ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மலரின்மேல் நின்ற ரகுராமா வந்தனம். மூரனை வதித்த மோஹனங்கா வந்தனம். அரக்கர்குல நாசஞ்செய்த அய்யனே வந்தனம். சதா குளிர்ச்சி பொருந்திய பார்வையுடைய தந்தையே உமக்கு வந்தனம். தேவேந்திராதி தேவர்களும் சுக்ரீவன் முதல் வானர சைனியங்கள் கொண்டாடும் தேவதேவா உமக்கு வந்தனம்.

வருணராஜனது கெர்வத்தை அடக்கிய அஸ்திரங்கள் அனேகமுடைய அய்யனே உமக்குவந்தனம். ஜெகத்தில் யாவருக்கும் உஜ்ஜீவனமாகிய நாமமே உமக்கு வந்தனம். கௌசிக முனிவர் யாகத்தைரக்ஷித்த கோமானே உமக்கு வந்தனம். வசிஷ்டமகா முனிவரை குருவாகப் பெற்ற வரகுணநாதனே உமக்கு வந்தனம். இணையில்லாத சஸ்திர அஸ்திரங்களைத் தரித்த கையனே உமக்குவந்தனம், சீதாலட்சுமணப் பிரியசேவிதா உமக்கு வந்தனம். மலர்ந்த செந்தாமரைக் கண்ணனே உமக்கு வந்தனம். பூரணச் சந்திரனை போலொத்த முகமுடைய புனிதனே உமக்கு வந்தனம். வலம்புரிச் சங்கையொத்த வெண்மையான கண்டப்பிரதேசத்தைப் பெற்ற தூயா உமக்கு வந்தனம். தாமரை மலர்போன்ற திருக்கைகளும் உபய திருவடிகளுமுடைய தாசரதி உமக்கு வந்தனம். பொன்மயமாகிய பீதாம்பரந்தரித்த பூபனே உமக்கு வந்தனம். ஜெகத்தில் யாவருங் கண்டு மோகிக்கும் சுந்தர ரூபனே உமக்கு வந்தனம். ஓர் காரணத்தை யுத்தேசித்து மானிட உருவங்கொண்ட உத்தமனே உமக்கு வந்தனம். குமுதமலரும் தாமரைமலரைப்போலொத்த கோமளமாகிய சரீரம் பெற்ற உமக்கு வந்தனம். ஜெகத்தில் யாவரும் துதி செய்யும் தெய்வ நாயகனே உமக்கு வந்தனம். சூரிய குலத்திற்கு கௌத்துவ மணிக்கு நிகரான ஒளியை பரவச் செய்யும் சுந்தரனே உமக்கு வந்தனம். தேவர்களைத் ரக்ஷிக்கும் தேவனே உமக்கு வந்தனம். இச்செகத்திற்கு காரண வஸ்துவாகிய உமக்கு வந்தனம் கோருவதைக் கொடுக்கும் கற்பக தருவிற்கு நிகராக அடியார்களெண்ணத்தை நிறைவேற்றும் அமலனே உமக்கு வந்தனம். திருமூர்த்தி சொரூபங் கொண்ட விமலனே உமக்கு வந்தனம் ராகதாள பக்தி நிறைந்த சுத்தாத்மாக்களிடம் நிரந்தரமாய் வசிப்பவனே உமக்கு வந்தனம் அத்திமரத்தில் தொத்திய கனியைப்போல அண்டபிண்ட பிரமாண்டங்களையுந் தாங்கி சமஸ்தமுந்தானாகிய மெய்யனே உமக்கு வந்தனம் பூரண தயையாகிய அமிர்தக்கடலே உமக்கு வந்தனம் சாந்த தத்வ விருது பொருந்திய நிரோகாரோக்கிய சத்தியவசனா உமக்கு வந்தனம் அணுவு முதல் பிரமன் வரைக்கும் நிற்க நிழலாகி யெங்கும் நிறைந்த விராட்டாகி அருவுருவாகிய ஐயனே உமக்கு வந்தனம் என்றும் அனந்த பிரமாண்டங்கள் எவனது நினைப்பினால் சிருஷ்டிக்கப்பட்டு எவனது திவ்விய சக்தியினால் தரிக்கப்படுகின்றதோ, அபாரமான சாகரம் எவனது ஆக்ஞைக்குப் பயந்து தங்களத்துமீறி பூமியில் பிரவேசிக்காமல் நின்றிருக்கின்றதோ, சூரிய சந்திர முதல் கிரகங்கள் எவனது ஆக்ஞையினால் சதா காலசக்கிரத்திற்குட்பட்டு சஞ்சரித்து வருகின்றதோ, எவனது மாய்கையினால் பிரம்மேந்திராதிகள் தங்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்றும் வலிமையோடுங் கூடி யிருக்கிறாரோ, சகல ஜீவராசிகளும் பொம்மைகளை சூத்திரதாரி சூத்திரத்திற்குட்பட்டு கர்மானுசாரமா யாடுகின்றதோ, எவனது மாய்கையில்லாதபோது பிரம்மாதிகள் யாதொன்றுஞ் செய்ய வறியாமல் ஜடத்தைப்போ லிருப்பார்களோ, யாவன் அன்னரூபமாகிய பிர்ம்மனுக்கும் வேதமென்னும் ஞானநேத்திரத்தை கொடுத்தாரோ, சிருஷ்டி திதி சம்ஹாரங்கள் எவனுக்கு லீலையாகி யிருக்குமோ, அநந்தகோடி பிரமாண்டங்கள் எவனது லீலைகளுக்கு விளையாட்டு கந்துகங்களாகி யிருக்குமோ பிரம்மாதிகளெவனது பரமசொரூபத்திற்கு வண்டுகளாகி யிருப்பார்களோ, எவனது சூட்சம சொரூபத்திற்கு பரமாணுக்கள் மேருமலை நிகராகிருக்குமோ, எவன் அணைத்துக்கு மாதாரமாகி தனக்கு வேறொரு ஆதாரமுமின்றி யிருப்பனோ அவனே பராபரவஸ்துவாகிய தேவனும் ஆதித்தவர்களை ரக்ஷிக்கும் விருது தரித்து சமஸ்தமனிதர்கள் பார்வைக்கு காரணனுமாகிய உன்னை தெரிசித்து பக்தி பூர்வகமாய் வந்தனம் செய்கிறேனென்று பற்பலவிதமாய் துதித்து ஸ்ரீராம மூர்த்தியை தரிசித்து ராமதாசர் சந்தோஷ மடைந்து அகத்தி

Koviloor Digital Library

ற்குப் போக மறுபடியும் திரும்பி வருகிறபோது ஹரிதாசர்களைக்கூட்டி அவர்களை நோக்கி ஓ சாதுக்களே சம்சாரக்கடலில் மூழ்கின பாமரர்கள் யாவரையும் ரட்சிப்பே னென்று வைராக்கியங் கொண்டவனுக்கு ஒரு தாசனை யாண்டருள் புரிவது ஓரதிசயமல்ல தன்னிடத்தில் அன்பு கொண்டவர்களுடைய ஆத்துமகோரிக்கையைத் தானே நிறைவேற்றுவா ரென்பதற்கு மேற்கோள் என்னவெனில், பன்னிரண்டுவருட காலம் என்னை தானிஷாவானவர் க்டுமையான சிறையில் வைத்து அநேக தெண்டனைகளைச் செய்தார். அந்த வாதனைக ளனைத்தும் எனக்கு நேரிடாமலும் திரவியத்தை செலுத்தி ஸ்ரீராமர் என்னைவிடுவித்தது உங்கள் யாவருக்குந் தெரிந்ததேயல்லவா, ஆகையால் இனியாகிலும் அறிவை விசேஷப்படுத்தி சரீரமருந்துபோமென்று ஆங்கார முதலாகியது மோக்ஷவிரோதிகளென்று எதார்த்தமாக வெண்ணி வைராக்கிய சீலராகி அடியேன் நாதனுகிய ஸ்ரீரகுநாதருடைய திருத்தாட்டாமரைகளிடம் உங்கள்மனோதுக்கங்களனைத்தையும் அர்ப்பணஞ்செய்து பயமின்றி யாவத்தும் உமது பாரமென்றெண்ணி மனம்வாக்கு காயமனைத்தையும் பகவான் கைங்கரியங்களில் வினியோகப்படுத்தி இடைவிடாது அவனது நாமமுச்சரித்து தாமரை மலரில் வசிக்கும் பிராட்டியை துதிசெய்து அன்னிய விஷயங்களை மறந்து யேகமாகி கலந்து யிருப்பீர்களேயாகில் அந்த பரமாத்மா உங்கள் யோகக்ஷேமங்களைத் தானே யேற்றுக்கொண்டு உங்களுக்கு தன் சாயுச்ய பதவியை கொடுப்பாரென்று சொன்னர்.

அப்படி சொன்ன ராமதாசரது சாரமாகிய இனிய மொழிகளை அங்கிருந்து கேட்டுக் கொண்டிருந்தவர்கள் செவிகளிற்பட்டவுடனே ஸ்பரிசவேதியினுடைய ஸ்பரிச மாத்திரத்தில் இரும்பு பொன்னுகுமாப்போல அந்த நிமிஷத்தில் அவர்கள் யாவரும் ஞானபக்தி வைராக்கிய சம்பன்னர்களாய் ராமதாசரிடம் ஆசாரிய பிரதிபக்தி செய்து அவரது புருஷாகாரமேமனப்படி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை துதி செய்துக் கொண்டிருந்தார்கள். பின்பு ராமதாசர் தமதகம் புகுந்து ததியாராதனை சாதுசேவை அதிதிப்பாகதர் களுக்கு ஈந்து பகவந்நாம உச்சாரனை செய்துக்கொண்டு அந்த பத்திராசலத்திலுள்ள அநேகபாமரர்களைத் திருத்தி பகவத் தாசர்களாக்கி அனைவரும் தன்னை புகழ்ந்து கொண்டாட நாளைப் போக்கி வர ஓர் நாள் சிலபிரஜைகள்வந்து பயபக்தி விசுவாசத்துடன் தண்டனிட்டு ஓ சாதுசத்தாகிய எமது சுவாமி! பாமரர்களாகியயடியோர்கள் கடைத்தேரும்படியாக நன்மார்க்கங்கள் போதிக்க வேணுமென்று துதிசெய்ய ராமதாசர் அவர்களை கடாக்ஷித்து, ஓ நற்குணத்திற் சிறந்த விர்பனர்களே தற்பான்றனக்கினிபகர்பனர்களே கேளுங்கள். கற்பகோடி காலம் இம்மாயா சம்பந்தமாகிய சம்சாரசாகரத்தில் மூழ்கி வெளிப்பட்டு கரையேருவதற்கு வகை யறியாது பூர்வ கர்மவாசனையினுல் மயங்கித் தியங்கி நரர்களையும் சுதவரர்களை சித்தினிசளாகிய பத்தினிகளையும், பந்துக்களையும், சந்தக்கூட்டங்களையும், செல்வோமென்றல்லல் படுத்தும் செல்வச் செருக்கையும் நம்பினுல் இம்மானிட ஜென்மம் கடைத்தேருமா ஒருகாலுங் கடைத்தேராது, நாவுக்கு மதுரந்தரும் இனிய கரும்பிருக்க அதைவிட்டு பேய்க்கரும்பை மென்றால் மதுரந்தருமா ஒருக்காலுந்தராது. மேலும் விரைவாக நடந்துசெல்லக்கால் களிருக்க அதை மறுத்து முழந்தாளால் நடந்து காசிக்குப்போக முடியுமா போக முடியாது. அன்னியிலும் தாகதாபத்தை தீர்க்க நீரிருக்க அதை மறுத்து உமிநீரைப் புசித்தால் பூரணதாகந் தீராது. இன்னும் மேல்பூசிக் கொள்வதற்கு புனுகு ஜவ்வாது அத்தர் பன்னிருகளிருக்க சேற்றைப் பூசிக்கொண்டால் பரிமள வாசனை தருமோ தராது. பின்னும் சம்பத்தை யளிக்க ஜானகி யன்னை யிருக்க இந்தத் தாயை விட்டு பெரியன்னையாகிய மூதேவியைத் துதிசெய்தால் திரவியங்கிட்டுமா கிட்டாது. இன்னும் பசிவேதனையை தீர்க்க அன்னமும் பருப்புகளுமிருக்க மறுத்து அன்பைப் பின்னப்படுத்தி பலகாரங்களைப் புசிக்கில் பசி வேதனை மாருமா மாருது! பின்னும் க்ஷுத்திரதேவதையினுல் உபத்திரவப்படும் வேளையில் நித்திரை கண்களுக்கு வருமோ வராது. இன்னும் பத்திராசல யீசன் பக்தியில்லாத நான் பரத்தையடையக் கூடுமோ கூடாது. இதுபோல நரஹரியை நம்பினுல் சகல சுக மடையலாம். இதற்குதிருஷ்டாந்திரம் எப்படி யெனில், பூர்வத்தில் சுந்திர ராமதாச ரென்றொரு சாது விருந்தார். அவர் தனது மனைவியோடு இல்லறதருமம் நடத்தி மிகுந்த பக்தியோடு பகவத் பாகவதாசாரிய சேவையிலீடுபட்டு வருகிறபோது கல்யாண ராம்தாசரென்றொரு சிஷ்யர் அவரையடுத்து வெகுநாள் சேவைசெய்வதைக் கண்டு, சுந்திர ராமதாசர் மிகுந்த களிப்படைந்து சிஷ்யனைக் கடாக்ஷித்து, அப்பா கல்யாண ராமதாசனே எனக்கு வெகுநாளாய் யாத்திரை செய்ய வேணுமென்கிற பெண்ணம் பூரணமாயிருந்து வாதிக்கின்றது. ஆகையால், என்னெண்ணத்தை நிறைவேற்றி யான்வருகிறபரியந்தம் இங்கு எழுந்தருளி

Kavilor Digital Library

யிருக்கும் எம்பெருமானுக்கு திருவாராதனை சமர்ப்பித்து மனைவிர்த்தி சிலவுகள் வாங்கித்தந்து கொண்டிவ்விடத்திலிருமென்று தனது சிஷ்யருக்கு கட்டளையிட்டு ஆசாரியர் யாத்திரைச் சென்றார்.

பின்பு கல்யாண ராமதாசர் ஆசானிஷ்டப்படி வெகுநாள் நடத்திவந்து ஓர்நாள் ஆசானை சேவிக்க வேணுமென்கிற அவா மிகவுண்டாகி திருவாராதனை சமர்ப்பித்து எம்பெருமானை நோக்கி ஓ சீதா லக்ஷ்மண பரதசத்ருக்ன அநுமத்சமேத ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தேவரீர் அடியேன் பேரில் கிருபைகூர்ந்து இவ்வகத்தை காக்கவேணுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன, நாயேன் ஆசானை சேவித்து வருகிறேனென்று விடைபெற்று அவ்விடம்விட்டு புறப்பட்டு நடந்து ஆசானைக்கண்டு சேவித்து அவா தீர்ந்து அவருடனங்கிருந்தார். இப்படிக்கிருக்க, இங்கு அம்மையார் ஓர் நாள் துணையொருவருமில்லாதலால் தெருவுக்கதவைத்திறந்து எட்டிப்பார்க்கிறபோது மிகுந்த தேககாந்தியுடைய ஒரு யௌவன புருடன் போக கண்டுகளித்து அப்புருடனை கூவியழைத்து உள்ளே சென்று அயன் மனங்களிகொள்ள சில வுபசாரங்களைச் செய்து சிறிது நேரம் பேசியிருந்து ஐயா தாங்கள் தயவுசெய்து இன்றிரவிற்கு அவசியம் இங்கு வரவேணுமென்று வேண்டிக்கொள்ள அம்மாதினிட குறிகுணங்களைக் தெரிந்த அப்புருடன் அவசியம் வருகிறேனென்று சொல்லிச் சென்றான். பிறகு இந்தம்மாள் அநேக பலகார பக்ஷணங்களைச் செய்து வைத்து இரவு வந்தவுடனே எப்போது அப்புருடன் வருவார் வருவாரென்று வழிபார்த்திருந்து வந்தவுடன் தெருக்கதவு தாளிட்டு உள்ளழைத்துச் சென்று உன்னித ஆசனந்தந்து அவனை அதின்பேரிலிருக்கச் செய்து பலகார பக்ஷணங்களைச் யாவுமளித்து அம்மாது தாம்பூலம் மடித்துக்கொடுக்க இவன் வாங்கிவாங்கி மென்று சந்தோஷமாக விருக்கிற போது அகிலபுவன கர்த்தாவாகிய அண்ணல் கல்யாண ராமதாசர் இவ்வகமுதல் யாவும் நமது சுவாதினப்படுத்திப் போயிருக்க, பக்தனுக்கு குறைவுவர நாம் பார்க்கப் போகாதென்று உடனே யாரோ ஓர் சாமானியனைப்போலுருக் கொண்டுவந்து கதவை தடதடவென்று தட்டினார். அந்த அரவங்கேட்ட மாது அந்தக் கள்ளபுருடனை சுந்தர ராமதாசர் படுக்கையிற்சேர்த்து சுத்தி ஓர்மூலையிற்சாத்திவிட்டு ஓடோடியும்வந்து கதவைத்திறந்து யாரென்று வினவினள். வந்தவராயமனிதன் ஓ அம்மணீ, சுந்தரராமதாசரிடமிருந்து வந்த மனிதன் யானென்றுசொல்லவே உள்ள யழைத்துக் கொண்டுபோய் மரியாதைசெய்தாள். அதானவர் கருணைசெய்து க்ஷேமங்களை விசாரித்துத் தெரிந்துகொண்டுசுவாமிகளது க்ஷேமங்களையும் அறியச்சொல்லி பிறகு நான் போய் வருகிறேன் வெகு நாழிகையாய் விட்டது என்று இரண்டடி வைத்து ஓகோ மறந்தேன் அம்மா சுவாமிகள் படுக்கைமெத்தை யிருக்கிறதாம். அதனை எலி கடியாமல் தினமும் வெய்யலிற்போட்டு கட்டிவைக்கும்படி சொல்லச் சொன்னதுந் தவிர என்னையே கட்டி வைத்து வரும்படியாயும் நேமித்தாரென்ன இதைக் கேட்ட அந்தம்மாள் நான் தினமும் வெய்யலிற்போட்டு கட்டி எலிகடியாமல் பத்திரமாய் பார்த்துக் கொண்டிருக்கிறேன். மேலும் நீரும் இத்தடி கொண்டு தட்டினால் அம்மெத்தை எதுக்காகும். அதுமிகுந்த பழைபதாகையால் கிழிந்துபோமென்று தன்னால் கூடியமட்டும் சாக்குப்போக்குகளைச் சொல்லியும் வந்திருக்கும் ஆசாமிகேளாதவனாகி மூலையிலிருந்த மெத்தையிழுத்து கீழேதள்ளி முனையிலிருந்து கடைவரைக்கும் தேங்காயின் மட்டையை நசுக்குவதைப்போல நன்றாய் புடைத்துவிட்டு போய்வருகிறேனென்று சொல்லிநடந்தார். பிறகு அந்தம்மாள் கதவைத்தாளிட்டு வேகமாய்வந்து மெத்தையை விரித்து தேகமெங்கும் நசுக்கி எலும்புகள் நொறுங்கி மாணமடைந்தவனைப் போலிருக்கும் அப்புருடனைக் கண்டு மிகுந்த விசனங்கொண்டு பலவித தூஷணைகளால் தன்னைத்தானே நொந்து யானென்ன பாவஞ் செய்தேனோ பண்டுயென்றுருகிக் கண்களில் ஜலத்தைப் பெருகவிட்டு தனக்குத்தானே தேறுதல் செய்து துணிவுடன் அப்புருடனை அந்த நடுராத்திரியிலே தானே தூக்கிக்கொண்டுபோய் எதிர்வீட்டு திண்ணையின்பேரில் கிடத்தி தனதகம்புகுந்து தாளிட்டுக்கொண்டு நித்திரை செய்தாள்.

இந்தப்படி சிலநாள் சென்றபின்பு, ஒருநாள் அம்மாது முன்போல கதவைத்திறந்து எட்டிப்பார்க்க முன்னடிப்பட்டுப் போனபுருடன்தேக சவுக்கியமடைந்து அம்மார்க்கமாய்ப்போக அவனை யழைத்து முன்னமொருநாள் நாமிருவருஞ் சந்தோஷத்துடன் பேசிக்கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில் சுவாமிகளிடமிருந்து எவனோ வந்து தடுத்து சிரமப்படச்செய்து சென்றான். அந்தப் பிரமை இன்னமெனை வாட்டுகிறது ஆகையால் இன்றிரவாயினும் வந்து எனது மனோரம்பத்தை நிறை வேற்றுமையா வென்று வேண்டிக்கொள்ள அவ்வனிதையின் வார்த்தையைக் கேட்டந்த புருடன் சரிசரி முன்ன மெனை வரச்சொல்லியாரோ ஒருவனைகொண்டு எனது தேகத்தை பஞ்சு கொட்டுவதுபோல நலியச்செய்தது

Koviloor Digital Library

போதும் போதும் அப்பப்பா நான் வரவே மாட்டேன் என்றான். அம்மாது ஐயா அந்த சந்தர்ப்பத்தில் எவனோ சுவாமிகளிடமிருந்து வந்தான். அடிக்கடி வருவார்களோ அன்றுமுதல் இன்றையவரையில் ஒருவரும் வரவேயில்லை. நீர் பயமின்றி வாரும் இன்றுமக்கு யாதேனும் ஆபத்து நேரிட்டால் என் பிராணனைக் கொடுக்கிறேன் இது யதார்த்தமென்ற அவ்வனிதையின் கருத்துக் கிசைந்து அப்புருடன் அன்றிரவில் வந்தான். அவனைக் கண்டவ்வனிதை யளவுகடந்த சந்தோஷமடைந்து தெருக்கதவை தாளிட்டு உள்ளேபோய் தாம்பூலம் மடித்து கொடுக்க அவனும் விருப்பாய் மென்று சந்தோஷமாக விருக்குந்தருணத்தில் பக்தர்கள் செய்யும் பக்தியாகிய வலையிற் கட்டுப்பட்ட பகவான் கல்யாணராமதாசர் மனோரதத்தை நிறைவேற்றும்பொருட்டு முன்போலுருக் கொண்டு ஐந்து வண்டிகளில் நெல்லை யேத்திக் கொண்டு வெகு தீவிரமாக வந்து சுந்தர ராமதாசர் வீட்டின் கதவை தட தட வென்று தட்டினார். அந்த சத்தத்தைக் கேட்ட அம்மாது திகிலடைந்து இதுவென்ன பெருத்த ஆச்சரியமாகயிருக்கிறது. இந்த புருடன் வருகிற தினத்தில் யாரோ வந்து கதவைத் தட்டுகிறார்களே இதற்கென்ன செய்வோமென்று யோசித்து துரிதமாக அந்தபுருடனை நெல்லுகொட்டும் தொம்பைக்கூண்டில் இறக்கிவிட்டு கதவை திறந்து யாரையா வென்று விசாரிக்க, அம்மா யான் சுந்தரராமதாசரது சேவகன் என் வசமாய் ஐந்துவண்டி நெல்லை ஒப்புவித்து வீட்டிற் கொண்டுபோய் சேர்த்துவிட்டு வாருமென்று கட்டளையிட்டார். இதோ பாருமம்மணி நெல்லு வண்டிகளென்று தடபுடலாய் வண்டிக்காரர்களை கூவி நெல்லை வண்டியிலிருந்தும் கூடையிலெடுத்து வாருங்களென்று உள்புகுந்து கூடையில் வாரிக்கொண்டு நெல்லை யெல்லாம் தொம்பையிற் கொட்டி தொம்பை நிறைந்து மிச்சமாகிய நெல்லை கூடத்தின் மூலையிற் கொட்டுவித்து நாங்கள் போய் வருகிறோமம்மா என்று சொல்லி நடந்தார்கள். பின்பு அம்மாது வேகமாய் தெருக்கதவை சாத்தி தாளிட்டு தொம்பை கூண்டிலிருக்கும் நெல்லைவாரிகொட்டி அப்புருடனை வெளிப்படுத்தி ஆயாசந் தீர்த்து சில சமாதான வசனங்களைக் கூறி எனது மணாளன் பகவத்பக்தராகையாலும் சாக்ஷாத் ஸ்ரீராமமூர்த்தியின் சுவாதீனத்தில் ஒப்புவித்துப் போன அடியாளோடு யாவத்துக்கும் ஓயாமின்றி காத்துரக்ஷிக்கும் நிமித்தம் இவ்வுருவோடு வந்து இரண்டு தடவை சேவை தந்தார். அதையுணர்ந்து அவர் பாதத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளாமற் போனேனே மிகுந்த பாவியானேனே ஆஹாஹா! உண்மையான பக்தருக்கு மிகுந்த அபசாரம் செய்தேனே, வேருருக் கொண்டு வந்த பகவானைவதைத்தேனே, உன்னையுமென்கெட்ட அபேக்ஷையினால் கெடுத்தேனே, பதிவிரதை தருமத்தை அறியுகெட்டு விடுத்தேனே என்று பலவாறு புலம்பி அப்புருடனைப் போய்வாருமையாவென அனுப்பி தன் புருடன் திருவாராதனை செய்யும் பெருமாளிடஞ் சென்று தனக்குற்றதுர்க்குணங்களெல்லாம் பகர்ந்து அநேக விதங்களாக தோத்திரம் புரிந்து அபசாரக்ஷமை செய்யும்படி வேண்டி ஸ்ரீ ராமானுக்கிரகம் பெற்று சுகித்திருந்தாள்.

ஆகையால் நாமும் களங்கமிலாத பக்தி பகவானை நாடிச்செய்வோமாகில் நமது காரியங்களெல்லாம் பக்திப் பிரியன் றனதுபொருப்பாக வற்றுக்கொண்டு பக்தனது சம்சாரத்தை நடத்துவார். மேலும் சாதுக்களை இன்னொரு விசேஷமுளது அதெப்படியெனில் ஒரு கிராமத்தில் வெள்ளரிக்காய் தோட்டமொன்றுளது. அத்தோட்டத்திற்கோர் நரியானது வந்து நாள் தப்பாமல் அதிலுள்ள பிஞ்சி பழங்கள் ஒன்றையும் விடாமற் புசித்துப்போக அத் தோட்டக்காரனுக்கு ஒரு பிஞ்சுகூட அகப்படாமையால் அதற்கு வேண்டிய பந்தோபஸ்து செய்தும் தான் கஷ்டப்பட்ட கூலிக்காகிலும் ஒரு பிஞ்சி கிடைக்க வேண்டுமே அதுவுமில்லாமையால் தகுந்த யோசனை செய்து அந்த கள்ளரை பிடிக்க வேணுமென்று இச்சங்கதியை தனக்கு மிகுந்த நேசராகிய சிலரிடம் சொன்னான். இதைக்கேட்ட நேசர்கள் ஆலோசித்து ஐயா நண்பரே, நாங்கள் சொல்வதைப்போல நீரிருந்தால் அந்த கள்ளரைப் பிடிக்கலாம் என, தோட்டக்காரன் உங்களிஷ்டப்படி நடக்கிறேன் என்றான். உடனே நேசர்கள் பிணத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகள் யாதோ அவைகளை வரவழைத்து அந்த வெள்ளரிககாய் தோட்டக்காரனை பாடையிலேத்தி ஒரு கையில் தண்டமும் மற்றொரு கையில் பிண்டமுங் கொடுத்து கண்ணைமூடிக் கொண்டு அரைக்கண் பார்வையா யிருப்பையேயாகில் அந்த கள்ளர் கள்வந்து வழக்கப்படி கனிகளையும் பிஞ்சுகளையும் பறிக்க பிரயத்தினப்படும்போது நீர் தடாலென்றெழுந்து அவர்களை பிடித்துக் கொள்ளுமென்று சொல்லிப்போனார்கள்.

நடுராத்திரியில் வழக்கமாய்வந்து கனிகளையும் பிஞ்சுகளையும் தின்றுபோகும் நரியானது அத்தோட்டத்திற்குள் வந்து பாடையிலிருக்கும் மனிதனைக் கண்டு (ஆச்சரியம் மாணம் த்ருஷ்ட்வா அஸ்தே தண்டக பிண்டேகிராமே களகாநாஸ்தி சிக்கிரபுத்தி

Kovilpon Digital Library

பலாயனம்) என்பதைப்போல அந்நரியானது ஓகோ
இம்மனிதனுக்கு மரணம் நேரிட்டதைப் பார்க்க மிக
வும் ஆச்சரியமாகவிருக்கிறது. அன்னியிலும் ஒரு
கையில் தண்டமும் மற்றொரு கையில் பிண்டமும்
தரித்திருப்பதை யோசித்தால் சந்தேகமாக விருக்
கிறது மேலும் இந்த மனிதன் இறந்தது உண்மை
யே யாகில் இவன் வீட்டிலிருக்கும் மனிதர்கள் அழு
தக் கதறுவார்களல்லவா போய் பார்த்து வருவோ
மென்று கிராமத்திற்குள் பிரவேசித்து மூன்று ஜாம
வரையில் வீதி வீதியாய்த் திரிந்தும் ஒருவித ஆர
வாரமு மில்லாமையால் அந்நரி தன்னறிவினால் தெ
ளிந்து இனி நாம் அந்தத் தோட்டத்திற்குள் போ
வோமேயாகில் மறுபடி உயிருடன் வருவது யில்லை
யென் றுணர்ந்து சீக்கிரமாய் தன்னிருப்பிடத்திற்கு
ஓடிப்போய் விட்டது. இதின் கருத்தென்னெனில்
தோட்டக்காரன் பகவான், தோட்டத்தில் வெள்ள
ரிக்கொடிகள் ஆகமபுராண சாஸ்திரங்கள், காய்கனி
பிஞ்சுகள் பகவானால் ஏற்படுத்திய சட்டங்கள், நாற்
பாக்கிலுள்ள வேலியோ காவல்காரர்கள், நரியோ
மனிதன் கீழ்க்கண்ட ஆகம புராணங்களை யுணர்ந்து
சட்டப்படி நடக்கும் மனிதனுக்கு மேலாகிய தனது
பரமபதந் தருகிறே னென்று சேஷ சயனனாகி யோக
நித்திரையி லிருக்கும் பகவானுக்கு விரோதிகளாகி
சட்டத்தைக் கடந்து நடந்த மனிதர்களுக்கு எம
னாகி அவன் பிராணனை கவர்ந்து யாதனா சரீரத்தில்
விட்டு இனியில்லாத இம்சைகள் அனுபவிக்கச்செய்
வேன் என்பது கருத்து ஆகையால் அந்நரியானது
தன் புத்தியினால் யூகித்து ஜாக்கிரதைப்பட்டதைப்
போல அநேக ஜென்மாந்திரங்களாய் பகவான் சட்
டத்தையெண்ணாது விரோதிகளாகிய விஷயாந்திர
மன்னர்களாகி காலத்தை வீணாகழித்து விட்டோம்
இனியாகிலும் துரிதப்பட்டு சட்டத்தை யனுசரித்து
நடப்பதே மேலாகிய நரஜென்ம மெடுத்ததற்குப்
பலன் என்று ராமதாசர் சொல்லியதை யாவத்திரா
ளும் கேட்டு பிரம்மானந்தத்திற் சொக்கி அன்று
முதல் இடைவிடாது ஸ்ரீராமதாரக நாமத்தைத்துதி
செய்திருந்தார்கள்.

பிறகு ராமதாசர் பத்திராசல சிகரத்திலெழுந்
தருளி யிருக்கும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை யனுதி
னமும் சேவித்து பிரம்மானந்தத்தையடைந்து வரு
கிறபோது ஓர் நாள் சந்நதியின் முன்னின்று ஓ பிர
சன்னராகவா, தேவாதிதேவா-தானீஷா அவர்களுக்
கு நின் தரிசனந்தந்து அடியேனுக்கு தரிசனந்தராத
வகையாதோ ஈதென்ன சூதோ யான் செய்வினை யே
தோ எனதுள்ளம் நீரரியாததோ அந்தோ மிகவு
மன்னோடு எத்தனையாய் உனைவேண்டிக் கொண்ட
போதிலும் உமது மனமுங் கரையாத தென்ன எதா
ர்த்தமாய் தாயுந் தந்தையும் நீரென்று உம்மையே
நம்பி யிருக்கிறேன். அடியேனுக்குத் திக்கு நீரொ
ன்றே என்னரி யிருக்குமென்னை கிருபை பாராதிருந்
தால் வேறு திக்கு யாரிருக்கிறார்கள். மேலும், தேவ
ரீரென்ன சமீபத்திலில்லையோ இருந்தால் என்முறை
உமது செவிக்கு கேளாதோ இத்தனை பராமுகமா
யிருப்பதால் வெகுதூரத்திலிருப்பதாக தோன்று
கிறது. அன்னியிலும் அனுதினமும் வயற்றுக் கன்
னம் தேடுவதே பெருத்த தொழிலாக திரிந்து மதி
யற்ற மனிதர்களையே கெதியென்று எந்நாளும் நேசி
க்கத் துடங்கினேனையா சதாகாலமும் மாயா சம்மந்
தமாகிய சம்சாரத்தை நம்பி துர்க்கதியை யடைகிற
வனாகினேனையா ஓ பதிதபாவனா மிகுந்த வேதனை.
யடைந்து வந்தேன். நற்கதியைக் காட்டி ரக்ஷியும்
பரமதயாநிதி மேலும் உமது பாத சேவை செய்யும்
நல்லோர்களுக்கு எந்த பாவங்களும் அணுக மாட்
டாது. ஐயனே மண் பெண் பொன்னெனும் மூவா
சைகளால் நேரிடும் வாதனைகளைப் போக்கி நின்திரு
வடியிற் சேர்த்து ரக்ஷியும் மெய்யனே இனியாகிலும்
தயை செய்து இரக்ஷிக்கா விடில் என்னை யாதரிப்ப
வர்கள் யார் துய்யனே ஆபத்பந்துவே பத்திராசல
ராமதாசனை நின்னருட்கண் பார்த்து ஏழையை யா
ண்டு கொள்ளுமென்று துதிசெய்ய, ஸ்ரீராம பரமா
த்மாவானவர் அசரீரியாக நின்று ஓ ராமதாசனே
முகவிலாசனே எனக்கினிய நேசனே மிகுந்த பக்தி
விசுவாசனே எமது சேவை யுமக்கு தரவில்லையெ
ன்று ஆயாசங் கொள்ளவேண்டாம். இன்னுஞ் சில
நாளில் உமது க்ஷேத்திரத்திற்கு ஓர் இதம்புலப்படும்
அதிலாரோகணித்து வைகுந்தஞ் சேருமையா என்
று சொல்லி மறைந்தார்.

இதைக்கேட்டிருந்த ராமதாசர் முதலானோருங்
களிசாகரத்தில்மூழ்கி தன்னை மறந்திருக்க ராமதாசர்
ஆனந்தமாக பலவிதமாய் நடித்துச் சொல்லுகிறார்.
ஓ சாது ஜனங்களே, நாம் ஸ்ரீராமமூர்த்தியினது
நாம பஜனை செய்துக் கொண்டிருந்தால் அதுவே
நமக்கு போதுமான நிதி இதைவிட்டு நாம் மிகுந்த
கஷ்டமாகிய தவஞ்செய்ய வேண்டுவதேயில்லை மே
லும் தாரகநாமந் துதிசெய்துக் கொண்டிருந்தாலே
போதும் வேறு தெய்வங்களைத் தேடித் தொழ வே
ண்டிய காரணமில்லவே யில்லை. அன்னியிலும் பாக
வதர்கள் பாததீர்த்தத்தை சிரசில் தெளித்துக்கொ
ண்டால் போதுமானது இதைவிட்டு அதிக சிரம
மெடுத்துக்கொண்டு காசிதேசம் சென்று கெங்கை

Koviloor Digital Library

யில் மூழ்கவேண்டிய அவசியமில்லை. மேலும் அன்னியர்களை மனம் நோகவையாம லிருக்கும் மேலாகிய தருமமேபோதும். இதைவிட்டு அன்னியர்களை ரட்சிக்கிறேனென்ன பகரவேண்டியதில்லை அன்னியிலும் ஏழை எளிய ஜனங்களிடத்தில் இனிதாகிய பக்ஷம் வைத்திருந்தாலே போதும், இதைவிட்டு பரமாத்மனிடத்தில் பிரியம் வைக்க வேண்டியதில்லை. அன்னியிலும் அன்னியர்களிட திரவியத்தை அபகரிக்காமலிருப்பதே நன்று இதைவிட்டு குறிப்புரை கோபுரங்களைக் கட்டவேண்டியதில்லை. மேலும்ஹரிதாசர்களை தினமும் பூசித்திருப்பதே நன்று. இதைவிட்டு ஹரியை பூசை செய்வேனெனும் அகங்கொள்ளவேண்டியதில்லை. அன்னியிலும் ஜபங்கள் தபங்கள் அனுஷ்டானங்கள் மூடர்களுக்காக பெரியோர்கள் ஜெகதீசன் திருவடிகளைச் சிந்தித்துக் கடைத்தேரும் பொருட்டு ஏற்படுத்தினார்கள். மேலும் அதிதிகள் வந்து பசியென்று சொன்னால் அகம்பற்றின்றி கிஞ்சித்து அன்னமிடுவது மிகவும் நன்று. இதைவிட்டு மதிமருண்டு யாகங்கள் செய்யவேணுமென்றுபிரியங் கொள்ளுவதால் பயனில்லை. மேலும் நமது பத்திராசல சுவாமியை எந்நாளும் எண்ணியிருந்தால் மிக நன்று. இதைவிட்டு அன்னிய மதங்களிற் புகுந்து கஷ்டப்பட வேண்டியதில்லை என்றிப்படி சாது ஜனங்களுக்கு சொல்லி ராமதாரக போஷக போக்கியமையாகிய திவ்ய நாமபாராயணஞ் செய்து கொண்டே தனதகம் புகுந்து ததியாராதனையினால் பிராமணர்களை திருப்திசெய்வித்து பிரம்மானந்தமாயிருக்க அங்கே பத்திராசல மலையினிடம் சீதாபிராட்டி ஸ்ரீராமரை நோக்கி மிகவும் அந்தரங்க பக்தனாகிய ராமதாசருக்கு உமது சேவை தாராமல் மிலேச்சகுலத்தோனாகிய தானிஷாவுக்கு தெரிசனந்தந்தீர் இப்படிப்பட்ட கபடமார்க்கம் தங்களிடமனுதியாக நின்றிருக்கிறது. இப்படிச் செய்வதற்குகாரணம் யாதோ அதை தெரியப்படுத்துமென்ன ஸ்ரீராமமூர்த்தி முகத்திற் புன்னகையுடையவராய் பிராட்டியை நோக்கிச் சொல்லுகிறார்.

ஐதர்பாத் நகருக் கரசனாகிய

தானிஷாவின்பூர்வஜென்ம விருத்தாந்தம்

கேளும் தினமும் புசித்துந் தினையளவுந் தெகிட்டாததேனே எனதன்பிற் கினியமானே, கெங்கா நதிக்கு வடக்கே ஓர் சிறிய கிராமமுளது. அதில்பிரம்ம நிஷ்டையிற் சிறந்த சில பிராமணர்கள் கூடி வேதமோதிக் கொண்டிருக்க அதிலொரு பிராமணன் மற்ற பிராமணர்களை நோக்கி ஓ பிரம்மவித்துக்களே நம்மிட குலத்தோர் யாரேனும் பக்தியோடு இந்த க்ஷேத்திரத்திலுள்ள சிவபெருமானுக்கு நாளொன்றுக்கு ஆயிரங்குடம் கெங்காஜலம் கொண்டு தொண்ணூறுநாள் அபிஷேகம் செய்வார்களே யாகில் அவர்கள் தேவேந்திரபதவி அடைவார்களென்று சொல்லிய உறுதி வாக்கியங்களை பிரம நிஷ்டையுடைய ஓர் பிராமணன் கேட்டு அந்தப்படியே எண்பத்தொன்பதுநாளும் பூரணமாகி மிச்சமிருக்கிற ஒரு நாளைய கணக்கில் தொளாயிரத்தி தொண்ணூற்றொன்பதும் அபிஷேகஞ் செய்து ஒருகுடம் குறைவாயிருக்கப் பிராமணன் யோசிக்கிறான் தொண்ணூறு நாளாய் கஷ்டப்பட்டு சிவனுக்கபிஷேகஞ் செய்தும் கிஞ்சித்துகூட அப்பதவியின் பலன் கிட்டவில்லையே என்று வயிறெரிந்து இந்திடத்தில் பரமேஸ்வரன் இல்லை யென்று தீர்மானித்து விரோதங் கொண்டு அந்த பிராமணன் ஓர் ஜலம் நிறைந்த குடத்தை யீசனது சிரந்தின்மேல் போட்டுடைத்தான்.

உடனே சிவபெருமானும் அரவாபரணம் சடையில் கெங்கையைத் தரித்தவனும், பிறைசூடியும் இடதுபாகத்தில் உமையவளைத் தாங்குபவனும்வெள்ளியங்கிரிமேல் வாசனும், மரவுரியும் புலித்தோலணிந்தவனும், பினாகபாணியுமாகிய சங்கரன் மிகுந்த உக்கிராகாரனாகி மந்தபதியாகிய பிரா..ணன் முன் வந்து நின்றார். இப்படித் தன் முன்னின்ற உமாபதியைக் கண்டு மெய் நடுங்கி நாவரண்டு தடாலென்று விழுந்து தீர்க்க தெண்டனிட்டு பலவிதங்களாக துதி செய்து ஓ ஆதி பாண்டுரங்கா எனது அறிவீனத்தினால் அபசாரப்பட்டேன் மன்னித்து ரக்ஷியுமென்றுவேண்டிக்கொள்ள பிராமணன் மீதிருந்த கோபந் தணிந்து ஓ விப்பிரனே தொண்ணூறுநாளும் பூரணமாய் நாளொன்றுக்கு ஆயிரங்குடம் ஜலம் அபிஷேகஞ்செய்தபின் தேவேந்திர பதவி கிடைக்குமென்று சொன்னார்களா ஒருகுடம் குறைவாயிருந்தபோது பதவி யடையலாமென்று சொன்னார்களா வென்று வினவ பிராமணன் குடம் ஒன்றேனும் பாக்கியின்றி முற்றிலும் செய்தால் தேவேந்திர பதவி பெறலாமென்றனர் அதை யுணர்ந்து மூடனாகி தெரியாமற் செய்து விட்டேன் மன்னிக்க வேண்டுமென்ற விப்பிரன் மொழியைக்கேட்ட அந்தி வண்ணன் கிருபை கூர்ந்து ஓ பிராமணா கிஞ்சித்தும் யோசிக்காமல் நீ செய்த குற்றத்துக்காக தாமசமாகிய மிலேச்சனாகி இப்பூமண்டலத்தில் பிறந்து நீ தரணிராஜனாகி யாண்டுக்கொண்டிருந்தால் சிலநாளைக்குப்பின் ஸ்ரீராமதரிசனம் உனக்குண்டாகும் அதற்குமேல் எனது பூரணக் கிருபையினால் தேவேந்திர பதவி பெருவாயென்று சொல்லி மறைந்தார், அந்தப்படி அந்தவிப்பிரன் மிலேச்சகுலத்திற்பிறந்து ஐதர்பாத்

Koviloor Digital Library

துக்கு அரசனுகி மிருந்த கீர்த்தி வகித்து சகலரும் கொண்டாட தானீஷா வென்றும் நாமம் எங்கும் பரவ அரசாக்ஷி செய்கிறான். அவனுக்குப் பசுபதி தந்தவாக்கியத்தின்படி எனது தெரிசனத்தந்தேன். மாதாவே இனி ராமதாசர் ஜென்ம கர்மங்களைச் சொல்லுகிறேன். சற்று விளுவாகக் கேளென்று சொல்லத் துடங்கினர்.

கோபன்னுவென்று நாமமுடைய பத்திராசல

ராமதாசர் பூர்வஜென்ம விருத்தாந்தம்.

ஓ ஜனகமகாராஜன் கலிதீர்க்கப் புத்திரியாக வுதித்த பூமாதே இங்கும் அங்கும் எங்குமுள்ள உத்தமர்கள் குறைநீங்க வந்தா யிப்புவிமீதே இந்தராமதாசர் முன்ஜென்மத்தில் வேதவிற்பனர் பிரமகுல கற்பனர் (த்யஜதுர்ஜ்ஜன ஸம்ஸர்க்கம்-பஜசாது ஸமாகமம் குருதாம்மம ஹோராத்ரம்ஸ்மர நித்யமனித்யதாம் என்னுமாப்போல துஷ்டர்கள்சேசத்தை விட்டுசாது சங்கத்தி லீடுபட்டு இரவும் பகலும் சாஸ்திரத்தில் விதித்திருக்கும் தர்மங்களை யனுஷ்டித்து இந்த சரீரம் நீர்க்குமிழியையொத்த தென்றும் அதின் அனித்தியத்தை எப்போதும்கவனித்துக் கொண்டு மகா க்ஞானியாக விருந்த இவர்பந்துவர்க்கங்களோடு கூடியதேச்சையாய் சஞ்சரிக்கும் ஓர் கிளிப்பிள்ளையை கிஞ்சித் அக்ஞானத்தினுல் கொண்டு வந்து மேலாகிய கூண்டில் விட்டு பழம் சர்க்கரை பாலன்னம் படைத்து அந்த கிளிப்பிள்ளையை வளர்த்து அதற்கு ராமாராமா வென்று பாடும்படி கற்பிக்க அந்தப்படி யதுபாடக்கேட்டு மிகுந்த களிப்பு கொண்டிருந்தபடியால் இந்த ஜென்மத்தில் எனது பக்தியுண்டாகி அந்தக் கிளியை நிர்ப்பந்தமாய் கூட்டில் அடைத்து வைத்ததினுல் இவர் சிறைச்சாலையிலிருக்க நேரிட்டது இப்போது அந்தகர்மதோஷம் இவ்விதமாகத் தீர்ந்தாகையால் இவர்இனி எனக்கேகாந்த பக்தனுகி திவ்யவைகுந்தபதவியை அவசியம் அடைவார் என்று சொல்லி முடித்தார்.

இங்கே ராமதாசர் அனுதினமும் பக்தர்களுடன் கூடி இடைவிடாது ராமநாம பிரபாவத்தைச்சொல்லி வர்ணிக்கிறுர் அப்பப்பா ஸ்ரீராமநாமம்மிகவுமற்புதம் எந்த பாக்கியவானுக்கு லபிக்குமோ இந்தராமநாமம் ஸாரமிலாத சம்சாரக்கடலைத் தாண்டி. கரையேறச் செய்யும் இந்த ராமநாமம் நாலாயிரத்தி நானூத்தி நாற்பத்தெட்டு வியாதிகளையும் போக்கும் நாமம், பஞ்சேந்திரியங்களையும் சிறையில் வைக்கும் நாமம் கோரமாகிய எமதூதர்களை கிட்டே நெருங்க விடாமல் அடித்தோட்டும் நாமம் தனகனவஸ்துக்களை தயைசெய்யும் நாமம், ஆனைகளையும் குதிரைகளையும் சேனைகளை விருத்தி செய்தாலும் நாமம் மூர்க்கனான தேவிக்கு சாஸ்வத கீர்த்தியைக் கொடுக்கும் நாமம் தக்க வால்மீகமாமுனிக்கினுவே யனுட்டானம் ஒருதரம் ராமா வென்றுல் பாத்கோடிபா பாபங்கள், தொழுது இரண்டு தரம் சொன்னுல் உடனே மோக்ஷம்தரும் நாமம் மன்மதன்கிட்டநெருங்கி வரமாட்டான் எட்டவே யிருப்பான் துஷ்ட கர்மங்கள் மோஹபாசங்களனைத்தையும் அருத்தெரியும் நாமம் ஆகாயத்தை யளாவிய பஞ்சுப்பொதிகளைப்போன்ற கணக்கில்லாப் பாபங்களை நெருப்புப்பொறியொன்று பட்டமாத்திரத்தில் அப்பஞ்சுப்பொதிகள் உருமாய்ந்து பஸ்பமாவது போல ஆயிரநாமங்களில் மேலாகிய இந்த ராமநாமத்தை ஓராவர்த்தி உச்சரித்த மாத்திரத்தில் பாபங்கள் உருமாந்தழிந்து போகச்செய்யு நாமம் காமக்குரோத லோப மோக மதமாச்சரியமென்னும் ஆறு துற்குணங்களை அடியோடருத்தெரியு நாமம் பத்திராசலயீசன் பதவியிற் சேர்க்குநாமம் நேமமோடு பன்னிப் பன்னிராம நாமத்தைச் சொன்னுல் என்றும் அழியாத வைகுந்த பதவியை தரும் நாமம் ராமதாசரை யாண்ட ஸ்ரீராம நாமம் என்றிவ்விதமாய் பாகவதசிரேஷ்டர் பஜனை செய்துக் கொண்டிருக்க சிலபேர் மூடர்கள் கோவதைசெய்து அந்த பாவந்திர பாதாகைஷதானஞ் செய்வதைப்போல இவர் ராஜ துரோகஞ்செய்து இந்த கல்லுக்கு அலங்காரஞ் செய்ததினுல் என்ன பலத்தை யடைந்தாரென்று தெருவில் சொல்லிக் கொண்டிருப்பதை சிலபேர் பாகவதர்கள் கேட்டு ராமதாசருக்கறிவிக்க அவர் ஹரி பக்தர்களை நோக்கி எவர்கள் தூஷித்தாலென்ன எவர்கள் பூஷித்தாலென்ன துற்குணங்களை நீக்கி ஆறுதலோடு தேறுதல்செய்ய ஆயர்பாடியில் கோபிகைகளகத்திற் புகுந்து வெண்ணெய்த்திருடிய ஸ்ரீமந் நாராயணனிருக்க நமக்கு மானமேது அவமானமேது நம்மைப் பின்னுலெத்தனை வைதபோதிலுமென்ன அல்லது பிரியத்தோடு நம்மையழைத்து பலவிதங்களாக தோத்திரஞ்செய்யினுமென்ன நமக்கு அபசாரஞ் செய்யவெண்ணினவர்களை நாம் உபகாரிகளாகவே எண்ணவேண்டும் மேலும் நன்றுதீது இரண்டையும் லோகத்தில் வியாபிக்கச் செய்தவன் சர்வேஸ்வரனுகையால் அவனது சிருஷ்டியிலிருந்தும் துற்குணங்களினுல் வைதவர்களை வையாமலும் அவர்கள் விஷயத்தில் நீடித்து க்ஷாந்திரங்கொள்ளாமலும் அவர்களை நேசித்திருக்கவேண்டும் அன்னியிலும் தோத்திரஞ்செய்வதை கேட்டுக்களிகொள்ளாமல் நான் ஏழை நீங்களேன் பகவானை துதிக்கவேண்டிய வாயினுல் பாவியாகிய என்னை துதி செய்கிறீர்களென்ற சங்கியப்பட்டு நிந்திக்கு மவர்களைக்

Koviloor Digital Library

கண்டு ஓ பாக்கியவான்களே கடலை கையினால் நீந்த முயற்சி யெடுத்துக் கொள்ளுவது போல எனது தோஷராசிகளை வர்ணிக்க எத்தனப்பட்டீர்கள் சர்வக்ஞராகி ஸர்வசக்தி பரனாகிய சர்வேஸ்வரனுக்கு என்னைத் தொலையாத பாபராசிகள் உனக்கெப்படி கணக்கிட முடியும் ஆகையால் என்னை பரிசுத்தனாக்க வேண்டு மென்ற பிரியத்தினால் நீங்களிந்த அகணித காரியத்திற்கு முயற்சி யெடுத்துக் கொண்டதற்காக நன்றி யுணர்ந்தவனாகி உங்களுக்கு வந்தனஞ் செய்கிறேன் என்று அவர்களை கௌரவப்படுத்த வேண்டும் மேலும் சுகம்வந்தபோது களிக்கலாகாது துக்கம் வந்தபோது கஷ்டப்படலாகாது இந்த சுக துக்கங்க ளிரண்டையும் சமமாகவே அனுபவிக்கவேண்டும் இதற்கு நிதர்சனமாக முன்னம் மிதிலா நகரத்தை பரிபாலனஞ் செய்த ஜனகமகாராசன் மிகவும் தத்வக்ஞானியாதலால் அந்த உத்தம பூபாலன் சிங்காதனத்திருக்கையில் ஓர் படிகத்தில் சந்தனக் குழம்பும் மற்றோர் படிகத்தில் அக்கினியும் நிரப்பிக் கொண்டு வரச்செய்து அதுகளிரண்டிலும் தனதிரண்டு பாதங்களைப் பொருந்த வைத்திருப்பார்.

இப்படி யிருக்க, ஓர்நாள் திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் அவ்விடத்திற்கு எழுந்தருளக்கண்டு ஜனகன் எதிர்சென்றழைத்து வந்து தகுதியான ஆசனத்திலிருத்தி பக்திசிரத்தையோடு சகலவிதபூசைகள் புரிந்து அஞ்சலியஸ்தனாகி ஓ சுவாமி தேவரீரது பாதங்கள் இப்பூமியிற்பட்ட மாத்திரத்தில் பாவனமாயிற்று. தங்கள் சேவையிலீடுபட்ட அடியேனும் பவித்திரனாகிவிட்டேனென்று பலவிதங்களாய் தோத்திரம் புரியும் அரசனுக்குப் பலவாசிகள்கூறி சிங்காதனத்திலிருக்கும்படி நேமிக்க நேமனம் பெற்ற மன்னவ் சிங்காதனத்திலிருந்து படிகங்களிரண்டிலும் தன்பாதங்களைப் பொருந்தவைத்து க்ஷேமங்களை விசாரிக்கிறபோது படிகங்களிரண்டிலும் ஜனக மகாராஜன் பாதங்கள் பொருந்த வைத்திருப்பதை நாரதர் கண்டு வியப்படைந்து அரசனை நோக்கி ஓ பரிசுத்த பிரசித்த சித்தவிவேக ராஜனே நீர் இப்படி தங்களிற் பாதத்தை வைத்திருக்கிறீரே ஒன்று சந்தனப்படிகமலாதலால் வாதையில்லை மற்றோர் படிகம் அக்கினி நிறைந்திருப்பதன்றி மேலுமேலும் அக்கினை அதில் சேர்த்துக்கொண்டு வருகிறீர் இப்படி எந்தராஜனும் செய்ய நான் கண்டதில்லை யாகையால் இதில் காரணமென்னமோ அதையானறியச் சொல்ல வேணு மென்றார். அதைக்கேட்ட ஜனகர் நாரதரை நோக்கிச் சொல்லுகிறார் ஓ வீணாகானத்தில் விற்பன்னராகிய நாரத முனீந்திரரே மிகுந்த நாழிகையாகி விட்டது ஆகையால் தேவரீர் சென்று ஸ்நானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வாரும் இதினுண்மையைச் சொல்லுகிறேனென் றனுப்பி மந்திரியை நோக்கி ஓ யுக்தியிற் சிறந்த சக்தியுடைய மந்திரி நமது போஜனசாலைக்குட் சென்று ஓர் மயிர்க்காலிலோர் கத்தியைக் கட்டி மேலேதொங்கவிட்டு வாருமென்றார். உடனேமந்திரி அந்தப்படியே போசனச்சாலை மேல் சத்தியைக் கட்டித் தொங் விட்டு இரண்டுதளிகை யிலையில் பிரசாத முதலானதும் பரிமாறி தொங்குகிற கத்திக்கு நேரில் நாரதருக்குப் பரிமாரிய தளிகையிலையை அமர்த்தி ராஜனுக்குத் தெரிவித்தார் ராசனும் நாரதரோடு போஜனச் சாலைக்குட் புகுந்து தளிகையிலையின் முன்னிருந்து புசிக்கத் துடங்கிய போது நாரதர் அரசனை நோக்கி இங்கொருவருமில்லை நாமிருவரே தனித்திருக்கிறோமாகையால் இச்சமயமாகிலும் தயவு செய்து சொல்லவேண்டுமென அரசன் யாதோ யோசிப்பது போல மேல் நோக்கினார். நாரதர் நாம் கேட்ட கேழ்விக்கு அரசன் பதில் சொல்லாமல் மேலே பார்க்குங் காரணமென்னமோ வென்று தானும்மேலே பார்க்க அங்கு மயிர்க்காலில் கட்டித் தொங்கும் கத்தியைக் கண்டு பயந்து துரிதமாய் அந்த இடத்தை விட்டு தளிகையிலையை இழுத்துக்கொண்டு அருகாமையிலிருத்தி ராஜனை நோக்கினார் மன்னவன் ஓ நாரதரே உமக்கின்னமும் அதின் மர்மம் புலப்பட வில்லையாவென நாரதர் எமக்குத் தெரிந்தால் உம்மையேன் மறுபடியும் கேழ்க்கிறேன். ஆலசியஞ் செய்யாமற் சொல்லுமையா ராஜனே யென்று வேண்ட அதிபதி ஓ நாரதரே அதோ மேலே தொங்குகிறதே அது என்னவென்றார் நாரதர் வாளாயுத மோர் மயிர்க்காலில் கட்டி தொங்கவிட்டிருக்கிற தென்றார் அரசன் அறுந்து விழுந்தால் அது என்ன செய்யு மென நாரதர் பிராணனை போக்கிவிடு மென்றார் அரசன் தளிகையிலிருக்கும் பிரசாதத்தைப் புசித்தாலதுஎன்னசெய்யுமென நாரதர் பசியைப் போக்கி தேகத்திற்குசுகத்தைத்தருமென்றார் அரசன் அன்னம்புசித்தால் சுகம் கத்தியறுந்து விழுந்தால்துக்கம் என்று ஏற்பட்டது லோகத்தில் யாவத்திபேரும் சுகதுக்க மிரண்டையும் சமமாகவே அனுபவிக்கவேண்டும் என்று சாஸ்திரங்கள் முறையிடுவதால் அடியேன் ஒரு பாதத்தி லக்கினியும் மற்றொரு பாதத்தில் சந்தனமும நிறைந்த படிகத்தில் பொருந்தவைத்து சமமாக அனுபவிக்கிறேன் யென்ற அரசன் வார்த்தையைக் கேட்ட நாரதர் மிகக் களிகொண்டு தெளிந்த ஞான சம்பத்துடைய ஒளிகொண்ட சுயம்பிரகாசனே யென்று பல பல விதங்களாய்க் கொண்டாடி விடைபெற்று யதேச்சையாய்ச் சென்றார்.

Koviloor Digital Library

ஆகையால் பக்த சிகாமணிகளே நமக்கு யாதொரு சுதந்தரமு மில்லை பாதந்திரமாகவே சகல கருமங்களை ஸ்ரீராம பரமாத்மாவின் திருவடிக்கர்ப் பணஞ்செய்து நானெனு மாங்காரமாயிற்று யாவத்திலும் பற்றற்று தனுகாணுகி பிராணனை ராகவன் உபய திருவடிக்குக் காணிக்கையாக சமர்ப்பித்து ஜடத்தைப்போலகிடப்பதே எமக்குற்றியல்பு சகல பாவங்களையும் போக்கி சாந்தகுணன் மனித்து ரக்ஷிப்பது அவனது கடமையென்று இந்தப்படி அவர்கள் திருப்தி யடையும்படி ஞானோபதேசஞ் செய்து துஷிப்பவர்களுக்கு பகவத்பக்தி யுண்டாகும்படி தெளிவு பெற ஓதுகிறேனென்று மிருதங்கம் தம்பூர் பிட்டல் முதலான கருவிகளைக்கொண்டு பத்திராசல புர வீதிகள் தோறும் ஹரிநாம கீர்த்தனைகள் செய்துக்கொண்டு ஓ ஜனங்களே சகல பவரோகங்களைப் போக்கும்படியான ராமஜோகி மருந்தைக் கொள்ளுங்கள் கொண்டு நீங்கள் பிரியத்துடன் புசித்தால் அப்போதே காமக்குரோத லோபமோக முதலான கனத்த வியாதிகளையுந் தீர்க்கும் மேலும் கோடி தனங்கள் கொடுக்கிறேனென்று கொள்ளப்போன போதிலும் அகப்படாத அவிஷ்தம் இதற்குயீடு இவ்வுலகிலில்லவேயில்லை மேலும் மதமாச்சாரங்களையும் மண் பெண் பொன்னின் விஷயத்தில் மருள்கொண்டிருக்கும் பாமரர்களை நன்மார்க்கத்திற் சேர்க்கும் மருந்து கூட்டமாகக் கூடிய கர்மங்களை போக்கும் மருந்து பிரியத்தோடு பத்திராசலத்தில் வாசமாயிருக்கும் மருந்து ராமதாசர் உள்ளத்தில் தங்கியிருக்கு மருந்து உள்ளறிக்தபடி சகல ஜனங்களுக்கும் பிரியம் ஜெனிக்கப் போதித்து பரமசாந்த ஸ்வரூபராகி ராமதாசர் மகிழ்வடைந்திருக்க ஸ்ரீராமரது பிரம்மோச்சவ அங்குரார்ப்பண நாளாகிய சித்திரை மாதம் சுக்லபக்ஷ பிரதமை துடங்கி ஒன்றேனும் விடாது பாஞ்சராத்ர யுக்தபடி நடத்தி சீதா கல்யாணமும் நிறைவேற்றி பிராம்மணர்களை போஜனத்தினல் திருப்தி செய்வித்து அவரோகண நாளில் கலச வுதவானஞ் செய்வித்த பின்பு அர்ச்சகர்கள் அந்த ராமதாசருக்கு ஸ்ரீ சடகோபம் தீர்த்தந் திருமாலைகளளித்து சங்கீத வாத்தியங்களோடு அவரை யகத்திற்கனுப்பும்போது ராமதாசர் தன்னை மறந்து ஸ்ரீஜானகி ராமனை துதிசெய்வதற்கு ஆனந்தமுண்டானவராய் இன்றல்லவோ ஆரியர் கிருபைபூரணமாக உண்டாகி இருபத்தேழு வீட்டிலிருக்கும் பரமாத்மனை சேவிக்கப்பெற்றேன் பரமமாகிய பக்தி சிரத்தை யுண்டாச்சுது மிகுந்த பாவசங்கங்களெல்லாம் எனை விட்டு நீங்கியது ராகத்வேஷங்களென்னும கட்டுகளிப்போதல்லோ அறுந்தது ராஜயோகத்திலிருக்கும் ராஜனைப் பார்க்கவே ஆனந்த மாச்சுது அன்னியீனும் பூர்வ புண்ணியங்கள் இப்போ தெனக்கு பிராப்தமாச்சுது பார்வதி ஜெபிக்கும் மந்திரமீடேறிற்று அபுரூபமாக கண்களுக்கு சேவைபகப்பட்டது சாமானிய மனிதரிடம் சேமாட்டோம் வெரும் பாமர ஜெனங்களை இனி கூடமாட்டோம் விஷயகாம பக்தர்களை சேர்ந்து வேண்டிடோம் எங்களுக்கு ஹரிநாமமுச்சரிக்கும் பரமபாகவதர்களே திக்கு மேலும் ராமபக்தர்களைச் சேபாக்கியம் பெற்றோம் அன்னிய விஷயங்களாகிய காமம் நீங்கிடவே வுற்றோம் இதர ஸ்திரீகள் பேரிலுள்ள பிரமை நீங்கப் பெற்றோம் அன்னியர்கள் தோஷங்களை எண்ணமாட்டோம் இதரர்களோடு எதிரிட்டு சண்டை செய்யோம் அந்நிய சிந்தனைகளணுவளவுமே கவனியோம் ஸ்ரீராமரை யன்றி அன்னியதேவதைகளை கனவிலுங் கொண்டாடோம் இத்தரணி மன்னரிடத்தி லகப்பட்டு வாதைப்பட்டோம் சூரியகுலத்திற்கு சந்திரனுகிய பத்திராசல ராமச்சந்திரன் சேவை செய்ய பிரம்மானந்த முண்டாகியது என்று கரத்தில் தம்பூர்பிடித்து கரையில்லாத வெள்ளைவஸ்திர முடுத்து ஐயன் திருப்புகழ் படித்து அங்கங்கு பலவாராக நடித்து இந்தப்படி ராமதாசர் வருடங்கள் தோறும ஸ்ரீராமமூர்த்திக்கு பிரம்மோற்சவங்கள் செய்துக் கொண்டு பகவத் காரியங்களிலும் பிராமண ஆராதனையிலும் ஆவல்கொண்ட சித்தராகி யிருக்க சிலநாளைக்குப்பின் தனக்கு காலில் நோயுண்டாக பத்திராசலமலைமேரி ஸ்ரீராமமூர்த்தியை தரிசித்து வருவதற்கு சக்தியில்லாமல் ராமதாசர் விசாரத்தோடு ஓ ராமா எந்த கர்ம்மங்கள்வந்து குருக்கே விழுந்ததோ நானென்ன செய்வேன் ஹரி ஹரி எனது கண்களால் எப்போதுன்னை சேவிப்பனே முராஹரி இவ்வதைகளுக்கு எப்படிபொருப்பேன் என்னிடம தங்களுக்கு இத்தனை யருவருப்பேன் தங்கள் முன்னின்று சேவித்து மூன்று மாதமாச்சுதே என்று மிப்படி யிருந்தது யானரியேனே ஸ்ரீபுண்டரீகாக்ஷா உமக்கு வந்தனம். புருஷோத்தமா உமக்கு வந்தனம் சர்வலோக சொரூபா உமக்கு வந்தனம் உக்கிரமாகிய சக்கரத்தை தரித்த தேவா உமக்கு வந்தனம். தவம் வேதம் முதலானவைகளுக்கு தெய்யமாகி கோக்களும் பிரம நிஷ்டர்களுக்கும் நேசனுகி சகல தேசங்களுக்கும் ரக்ஷனுகி ஸ்ரீராமனென்றும் ராகவனென்றும் திவ்விய நாமங்களோடு கூடி யிருக்கும் உமக்கனந்த வந்தனம். பிரமரூபனுகி ஜெகத்தை சிருஷ்டிக்கும் சுயசொரூபத்தினல் ரக்ஷித்தும் கல்பாந்தியத்தில் ருத்திரரூபமாகி சங்காரஞ் செய்தும் திரிமூர்த்தி சொரூபியாகி பிரகாசிக்கும்

Koviloor Digital Library

உமக்கு வந்தனம் ஓ அச்சுதாவே அசுர கந்தர்வ கின்னர சித்த சாத்ய பன்னக யக்ஷ ராக்ஷச பிசாச மனித பசு பக்ஷி ஸ்தாவர பிபீலிகாதிகள் பிரிதிவு அப்பு தேயு வாயு ஆகாயம் சத்த ஸ்பரிசரூப ரச கந்தங்கள் மனம் புத்தி சித்தம் அகங்காரங்கள் காலம் அதின் குணங்கள் இதுகளின் பரமாத்மமாகிய ஆத்மா இவைகள் யாவும் நீயே வித்தை அவித்தைகள் சத்திய அசத்தியங்கள் பிருத்தி நிவிருத்திகள் வேதயுக்த சர்வகர்மங்கள் யாவும் நீயே ஓ பகவானே சகல கர்மயோகங்களை யனுபவிக்கு மவனும் கர்ம சாதனங்களாகிய திரவியங்களும் சகல கர்ம பலன்களும் நீயே ஓ மகாப்பிரபு என்னிடத்திலும் அன்னியரிடத்திலும் சேஷபூதங்களாகி சகல உலகங்களிடத்திலும் நீ நிறைந்திருப்பது உபாதான நிமித்தகாரண ரூபமாகிய செல்வமும் அனந்தஞானாத்தியாதி கலியாண குணங்களையும், நன்றாய் தெரிவிக்கின்றது பரமயோகிகள் உன்னை தியானிக்கிறார்கள் யாகபிலர்கள் ; உன்னை நோக்கி யாகம் செய்கிறார்கள் நீயே பிதுர்ரூபமும் தேவரூபமுந்தரித்து அவிர்ப்பாகங்களை புசிக்கிறாய் ஓ அச்சுதா அகங்காராதி சூக்ஷ்மங்களும் பிரிதிவாதி பூதங்களும் அவனிட மிருக்கும் சூக்ஷ்மமாகிய ஆத்மதத்துவங்களுமாகி இந்த சூக்ஷ்ம உலகங்கள் யாவும் எங்கிருக்கிறதோ எதிலிருந்து உண்டாகிறதோ அது சொரூப குணங்களினால் மேலாகிய நினது மகாரூபமாகி யிருக்கிறது சூக்ஷ்மமாகி பெருத்ததாகி சூனியமாகி சிந்திக்கக் கூடாததாயிருக்கும் ரூபம் உன் பரமாத்ம சொரூபமாகி இருக்கிறது இப்படிப்பட்ட புருஷோத்தமனாகிய உமக்கு வந்தனம் சர்வாத்மனே சகல பூதங்களிடத்தும் சாந்தாதி குணங்களுடன் சேர்ந்திருக்கும் நினது மாயா சக்தியாகிய ஜீவசொரூபத்திற்கு வந்தனஞ் செய்கிறேன் எனதுமனதுக்கும் வாக்குக்கும் எட்டாததெதோ எந்த விசேஷத்தினாலும் மேலாகச் சொல்லக்கூடாததெதோ ஞானிகளதுஞானத்தினால் நிரூபிக்கக்கூடாததெதோ அப்படிப்பட்ட இலாக்கியமாகிய நினது முக்தாத்ம சொரூபத்திற்கு வந்தனம் எவனுக்கு தனக்கன்னியமாகிய பதார்த்தமில்லையோ எவன் யாவத்திற்கும் வேறாகி யிருக்கிறானோ அப்படிப்பட்ட பகவனாகிய வாசுதேவனுக்கு வந்தனஞ் செய்கிறேன் கர்மாதீனமாகிய நாமரூபங்க ளின்று கேவலவிலக்ஷண சொரூபியாகிய மகாத்மனுக்கு வந்தனஞ் செய்கிறேன் மேலுமவனை நமஸ்கரிக்கிறேன் அவனுக்கு மேலு மேலும் அனந்த வந்தனஞ் செய்கிறேன் தேவர்கள் யாவனது பராத்பரரூபத்தை சேவிக்கக் கூடாமையால் மச்சகூர்மாதி யவதாரங்களையே அர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த பரமாத்மனுக்கு வந்தனம் எவன் ருத்திரன் முதல் சமஸ்தத்திற்கு அந்தராத்மாவாகிய சுப அசுபங்களை பார்த்துக் கொண்டிருப்பானோ அந்த சர்வசாக்ஷியும் பரமேஸ்வரனுமாகிய ஸ்ரீ விஷ்ணு தேவனுக்கு வந்தனஞ் செய்கிறேன் இந்த ஜெகத்யாவத்தும் எவனோடு பேதமின்றி யிருக்குமோ அந்த விஷ்ணுவுக்கு வந்தனஞ் செய்கிறேன் சகலத்திற்கும் ஆதியாகிய அந்த ஸ்ரீ ஹரி யெனக்கு பிரசன்னமாவானாக் எழுத்தும் நாமமும் உண்டாயிருக்கும் எவனிடத்தில் பிரபஞ்சம்யாவும் நூல் வஸ்திரத்தில் கலந்திருப்பதுபோல கலந்தும் நூலில் மணிகள் கோர்த்திருப்பதுபோல கோர்க்கப்பட்டிருக்கிறதோ அந்த துதிநாயகனாகிய அச்சுதன் என்னிடம் பிரசன்னனாகவேண்டும் சர்வ சுவாமியாய் சர்வசேஷியாகி யிருக்கும் அந்த ஸ்ரீ மகா விஷ்ணுவுக்கு வந்தனஞ் செய்கிறேன் எவனிடத்தில் சர்வமும் லயிக்குமோ எவனிடமிருந்து சமஸ்தமும் சிருஷ்டிகாலத்தில் உற்பத்தி யாகுமோ எவன் சகல சரீரனாகி சகல ஆதாரமாகியிருக்கிறானோ அந்த சர்வேஸ்வரனுக்கு அநேக வந்தனஞ் செய்கிறேன் ஸ்ரீ அனந்தன் எதிலும் ஆத்மாவாகி உள்ளும் புறம்பும் சஞ்சரித்துக்ஞானானந்தமயமாகி நிறைந்திருப்பதினால் நானும் அவனே யாகிறேனாகையால் சமஸ்தமும் என்னாலுண்டாயிற்று நானே சகலமுமாகி யிருக்கிறேன் நித்தியனாகியஎன்னிடமே சகலமுமாகி யிருக்கிறேன் நித்தியனாகி வேறு யாதொரு ஆதாரமின்றி தனக்குள் தானிருக்குமவனாகியிருக்கும் பரமாத்மாவாகிறேன் நான் சிருஷ்டிக்குமுன் பிரமமென்றும் நாமத்துடன் கூடியிருந்தேன் பிரளய காலத்தில் சர்வமும் எனக்கு லீனமாகி யிருக்கும் பரம புருடனாகி யிருப்பேன் என்று தன்னை மறந்து தன்மயனாகித் துதிசெய்துக் கொண்டிருந்தார்.

அப்படிக்கிருந்தும் காலின்வாதை நாளுக்கு நாள் விசேஷித்தபடியால் அந்த வேதனை பொருக்க முடியாமல் ஓ ராமா அந்தோ எந்த யிடத்திலும் இந்த ஜீவனுக்கு சுகமில்லை யல்லவா செந்தாமரைக் கண்ணையுடைய எப்பெருமானே நினது மாயை யென்றறிந்து கொள்ளாமல் சம்சாரமென்னும் துக்க சாகரத்திற் மூழ்கி யிருந்தேன் சிலநாள் முன்செய்த பாப புண்ணிய சம்பந்தத்தால் மூழ்கி மிதந்துக்கொண்டிருந்தேன் சிலநாள் எண்பத்து நான்குலக்ஷம் ஜீவராசிகளிற் யோனிபேதங்களிற் பிறந்துழன்றிருந்தேன் சிலநாள் சதாகாலமும் நரகானுபவஞ் செய்து பின் சுவர்க்கானுபவத்தி லிருந்தேன் சிலநாள் ஓ ராமா தடையொன்றில்லாமல் ஆகாயத்தில் மிகவு

Koviloor Digital Library

மலைச்சல் பட்டிருந்தேன் சிலநாள் நன்றுதீதரியாமல் பனிக்குள்ளகப்பட்டு வழியுணரா திருந்தேன் சில நாள் மேன்புசூரியகிரண உஷ்ணத்திற் சிக்கி மிகு கஷ்டத்தால் சஞ்சலப்பட்டிருந்தேன் சிலநாள் பின்பு வர்ஷதாரையிற் சிக்கி உலகடைந்து யாதொருவகை யறியா திருந்தேன் சிலநாள் பின்பு புல் பூண்டு முதல் யாவுமாகி தானியவகைகளிற் பொருந்தி யிருந்தேன் சிலநாள் புருடன் புசிக்கும் அன்னமாகியவன் வயிற்றினில் தங்கி யிருந்தேன் சிலநாள் புருடனும் ஸ்திரீயும் புணர்ச்சி செய்ய வீந்திரியமாகி யவள் கெர்ப்ப நரகத்தில் விழுந்திருந்தேன் சிலநாள் ஜடராக்னி தகிக்க திரும்பித் திரும்பிகருப்பையினில் நாளுக்குநாள் வளர்ந்துக்கொண்டே யிருந்தேன் சில நாள் அப்போது காரம் புளிப்பு முதலானதுகள் என தன்னை புசிக்க அந்த சாரத்தால் மிகவும்நொந்தேன் சிலநாள் எப்போது இங்கிருந்து வெளிப்படுவே னென்று எதிர்பார்த்திருந்தேன் சிலநாள் பின்பு சொல்லதிற் கிழிவான துவாரத்தின்வழியாக ஜெனனமாகினேன் ஓ ராமா பின்பு நாளுக்கு நாள் வளர்ந்து பாலியாவஸ்தையில் தவழ்ந்தும் ஓடியு மாடியுமிருந்தேன் சில நாள் பிறகு வனிதைகளுடன் கூடி மதச்சரங்களில் மூழ்கி ஜெனனம் வந்த காரணம் இன்னதென்றுணராமல்மதோன்மத்தனாகி வீண்காலம் போக்கினேன் சிலநாள் பின்பு பெண்டு பிள்ளைகளெனும் மோகபாசத்திற் கட்டுண்டு கொண்டல் வண்ணனாகிய உன்னை கண்டு சேவிக்காமல் மந்தனாயிருந்தேன் சிலநாள் ஓ ராமா நரைத்து பற்களுதிர்ந்து நடுக்கங்களுண்டாகி தட்டுகெட்டு தடுமாறி சஞ்சலித்திருந்தேன் சிலநாள் கண்கள் புரைப்பி காதுங் கேளாமல் முன்னம் அனுபவித்தவைகளை நினைத்து நினைத்துருகி நின்றேன் அதின் பின் அழைத்தாலும் வராத பெண்டு பிள்ளைகளால் மெத்த விடுக்கண் பட்டிருந்தேன் சிலநாள் பின் மரண மடைந்து எமனிட மலைந்து ஆபத்தடைந்திருந்தேன் சிலநாள் விந்தையாய் இத்தன்மை பிறப்பில் வேதனை பட்டுழன்றிருந்தேன் சில நாள் மன்மதன் தந்தையே பத்திராசலத்திற்கு பதியாகிய நின்னைக் காணும் உபாயந்தேடாமல் திரிந்தேனன்றே சிலநாள் வெகு சிந்தையோடு ராமதாசனாகினேன் இனியாகிலு மென்னை யாதரிப்பாய் ராமா வென்றிவ்விதமாய் ஜனன மரணங்களால் வரும் சங்கடங்களை யெண்ணி விபாகூலப்பட்டு ஓராமா இந்த ஜகத்தில் இத்துனை சிரமதை தாங்கி யிருந்தது போதும் போதுமையா இந்த சுகம் சீக்கிரமுனது பதவியைத் தந்து மறுபடியும் ஜெனனம் வராதபடி ரக்ஷியும் சுவாமி யென்று அநேகவிதமாய் துதி செய்திருந்தார்.

ஸ்ரீராமர் அசரீரியாய் நின்று ராமதாசருக்கு தரிசனந்தந்த அத்தியாயம்.

அச்சமயத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் அசரீரியாய் நின்று ஓராமதாசரே உமது பக்திக்கு மெச்சினேன் நீர் பயப்படவேண்டாம் மேன்மையாகிய வைகுந்த பதவியை தருகிறேன் இன்னுஞ் சில வருட காலம் இந்த பூவுலகிலிரும் அதன் பின்பு ரதமனுப்புகிறேன் அதிலேறிக்கொண்டு யாவரும் புகழ எனது படைவீட்டை சேருமென்று சொல்லி ஸ்ரீராமபிரான் மறைந்தார் பிறகு ராமதாசர் பகவான் சொல்லிய மதுரமொழிகள் செவிகளில் கேட்டு ஆனந்தாதிசய மிகுந்து பாவசமடைந்து சந்திர சூரிய யக்ஷ கின்னர கிம்புருட சித்த சாத்திய உரக அண்டரண்டங்கள் பிண்டா அண்டங்கள் பிரம்மருத்திர துவாதசாதித்தர்கள் அசுவனி தேவதைகள் அஷ்ட திக்கு பாலகர்கள் தாரகைகள் நதிகள் வனங்கள் நானாவித மிருகங்கள் விதித்த கர்மங்கள் அஷ்டவசுக்கள் ஹரிஷட்வர்க்கங்கள் நவக்கிரகங்கள் சப்த சமுத்திரங்கள் யாவும் ராமமயம் என்றிப்படி ராமநாம தோத்திரஞ் செய்து இந்த நாமத்தினால் சித்தியடைவதற்கு காரணம் வைராக்கியம் அந்த வைராக்கியம் மிகுந்த பரிபக்குவ மாகியது சஞ்சலமாகிய எனது மனம் நிர்மலமாகியது ஹரிஷட் வர்க்கங்களை யண்டா திருக்கிறது ஸ்ரீ ஹரிநாம அமிர்தம் நாவிற்கு மிகு மதுரமாகியது குருபாதந் தன்னில் மனது குளிர்ச்சியோடு பொருந்தி யிருக்கிறது சித்தம் இருபத்தாறு வீட்டின்மேல் பாவியிருக்கிறது அன்னியர் திரவியம் பார்க்க மனதுக்கு சில்லும் ஓடுகளாகியது அன்னிய ஸ்திரீகளைக்காணில் மனதுக்கு அன்னை பாவமாகியது பரமசாந்தனை யெண்ணமனதுக்கு வெகுமேலாயிருக்கிறது பாதத்வமிடமே புத்தி படிந்திருக்கிறது தெகிட்டாததேனாகி மனதுக்கு கரும்பு ருசிபோலிருக்கிறது மாயைத்திரை நீக்கி மனது மோக்ஷ வெளியில் கலந்தது என்றிந்தப்படி வைராக்கியத்தினா லுண்டாகிய சுகத்தையனுபவித்துக்கொண்டு யெம்பெருமான் கட்டளைப்படி ராமதசர் நாளைக் கழித்துக்கொண்டிருக்க முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் காணும்படி பகவான் பரமபத ரதத்தையனுப்பினா அதைக்கண்டு ராமதாசர் சந்தஷ்டி யடைந்து கிருதார்த்தனாகினேன் இனி இவ்விமானத்திலேறி பூபிராட்டிகுமாரி தன் மனதுக்கினிய நாயகனது செந்தாமரை மலர்ப்பாதங்களை யர்ச்சிக்கப்போகிறேனென்று சகல இந்திரியங்களையும் வசப் படுத்திக்கொண்டு மோகத்தை நிர்மூலஞ் செய்து சத் புரு

Koviloor Digital Library

ஷர்களுக்கு வந்தனஞ் செய்வது மேலாகிய குணமென்றுன்னி வெகுநாளாய் தனக்குப் பணிவிடை செய்து ஆஸித்திருந்த தனது மனையாளை யழைக்க அந்த சாதுவானவள் சிந்தித்து லேலேயிருக்கிறது பார்த்து வருகிறேனென்று சொல்ல உனது பிராப்தி இவ்வளவே யென்று விமானத்தின்மேலிருந்து பத்திராசல புரத்திலுள்ள பகவத் பக்தர்களை கண்டு ஓ சாதுசனங்களே பாருகட்டி இருபக்கமும் பக்தர்கள் பஜனை செய்யவும் மூன்றூறு மொன்றாய் கூடிக்கலந்த அந்த மார்க்கத்தை யறிந்தும் சோக மென்று சொல்லப்பட்ட வாளாயுதத்தை கையினில் பிடித்து மோகபாசங்களை யெல்லாம் முனைந்து வெட்டி சாய்த்தும் ஈஷணாத்திரியங்க ளெல்லாம் இவ்வுலகினில் விடுத்து சந்தோஷ சாகரத்தினிடமே சஞ்சரித்துக் கொண்டும் தாரகமந்திரமெனும் அமிழ்த ரசத்தை யான்புசித்து பிரியம் மிகவும் ஜெனிக்க மோக்ஷபதவியைக் காணவும் ஆறு கமலத்தின் மீது அற்புதமாகிய ஆயிரம் கமலங்களினிடஞ் சேர்ந்து சந்துஷ்டியடையவும் லக்ஷ்மீகடாக்ஷம் பொருந்திய பத்திராசல ஸ்ரீராம மூர்த்தியின் கிருபையினால் ரக்ஷிக்கப்பட்டு ராமதாசரென்னும் பேரைப்படைத்துப் போகிறேம் அடியேன்மீது நீங்களெல்லோரும் மிகவும் தயவு செய்யுங்கோள் இந்த ஜெனனமாறி மறுபடியும் எத்தனை ஜென்மம் வரினும் ஸ்ரீராம மூர்த்தியை மறவாமல் தோத்திரஞ் செய்து வைகுந்த மடையுங்களென்று சொல்லிருர் ரதம் வைகுந்தத்தை நாடிப் போகிறபோது ஆகாயத்தில் தேவர்கள் கூடி மலர் மாரி பொழிய புரஜனங்கள் யாவும் பலவிதமாய் கொண்டாடி ரதத்தை நோக்கி தீர்க்கதெண்டனிட்டு கரங்களை குவித்து ஜெயஜெய வென்கிற சத்தம் ஊரெங்கும் பெருத்த கோஷ்டமாயிருக்க புண்ணிய புருஷராகிய ராமதாசர் நித்திய சூரிகள் எதிர்கொண்டழைக்கச்சென்று சாயுஜ்யபதமாகிய வைகுந்தமடைந்தார்.

அந்த சமயத்தில் ராமதாசர் மனைவி வீட்டுவேலைகளை சீக்கிரம் முடித்து வெளியில் வந்து புரஜனங்கள் ஆகாயத்தை நோக்கி இருகரங்களையும் சிரசின் மேல் கூப்பித் துதி செய்வதையும் தன்நாயகன் ரதத்தின் மேலேரிச் செல்வதையுங் கண்டு அந்தோ அநேகநாளாய் இம் மகாத்மாவின் சேவை செய்திருந்த யெனது சிர்ப்பாகிய திசையை என்னென்று சொல்வேன் என்று சிந்தனை செய்து இல்லறத்தை விட்டு துறவாத்தை யடுத்து பத்திராசல சிகரத்திற்கு வந்து ஸ்ரீராமமூர்த்தியின் சந்நிதி முன்னின்று ஓ ராமா அந்தோ அந்தோ யான் ஆதிநாராயணனென்று தங்களை தெரிந்துக் கொள்ளாமற் போனேனே கணக்கில்லாத ஜென்மங்களெடுத்து கடுமையான வேதனைகளை யடைந்திருந்தேனே அல்லது துரிதமாயுனது திருவடிகளை நாடி நல்ல கதியை யடையும் வழியறியாமற்போனேனே ஹரியே நாயகனிருக்க யாதொருமோசமும் நமக்கு வராதென்று நினைத்திருந்து தோஷவாசனையிற் சிக்கி மிகவும் நொந்து ஆசா பாசங்களை யறுத்தாளுமென்றுமது முன்வந்து வைராக்கியங் கொண்டு வந்து மூவாசைகளையும் ஹரிஷட்வர்க்கங்களாசையும் பற்றர அறுத்து நின்னைக்கண்டு சேவித்து கலந்து மேலாகிய பதவிபெற எண்ணினேன் ஓ தீனபந்து யெனது முறைக்கிரங்கி எனது புருடன் சேர்ந்த பதவியிலென்னை சேர்க்காவிடில் நினது முகமண்டலத்திலிருந்து விரத மநுஷ்டித்து என் ஜீவனை விடுகிறேனென்று வைராக்கியங் கொண்ட அம்மாதின் சித்தத்தை யறிந்து ஸ்ரீராமர் பிரத்தியக்ஷமாகி உனக்கு சீக்கிரம் வைகுந்தபதவி தருகிறேன் இங்கு கோயிலில் வேண்டிய தர்மகாரியங்களை நிறைவேற்றிக் கொண்டு உனது குமாரன் இத்தர்ம பரிபாலனஞ் செய்யும்படியான யுத்த வயது வருகிற பரியந்தம் இந்த பத்திராசலத்தில் திருத்துழாய் கைங்கரியஞ் செய்துக் கொண்டிருமென்று ஆக்கினைசெய்து மறைந்தார் பின்பு அந்த புண்ணியவதியும் ஸ்ரீராமாது நேமனப்படி திருத்துழாய் கைங்கரியஞ் செய்திருந்து முடிவில் தன்னுயகன் அடைந்த வைகுந்த பதவியையடைந்தாள்.

வாழி விருத்தம்.

சீர்கொண்ட ஸ்ரீராம தாசர்வாழி-சிறந்தோங்கி சரவணபவ விலாசப்
பேர்கொண்ட வச்சியக்திரசாலைவாழி-பிரியமோ டிதைப்பதிப்பித் தோராதிக்
கார்கொண்ட மேகமழை தழைத்துவாழி-கருணைபெற இதைக்கண்டுகளித்து நோக்கு.
மேற்கொண்ட யினிநற் புனிதர்வாரு-எங்கு நிறை யெம்பெருமான் வாழிவாழி

ஸ்ரீ பத்திராசல ராமதாசர் சரித்திரம்.

முற்றிற்று.

Koviloor Digital Library

ஸ்ரீ

ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீ பாண்டுரெங்கப் பரப்பிரம்மணே நம:

பதினொருவது

பெரிய தாசர் சரித்திரம்.



ஆதிவிருத்தம்

திருவளருந் தஞ்சைமா நகரில் முந்தஞ்ததச் சேஷாசல செட்டிச் செய்த்மேலாந்
தருமபரிபாகத்தால் தனையனாகத் தானுதித்துத் தரணியெங்கும் புகழ மிக்கச்
சிறுவயதில் ஸ்ரீஹரியைத் துதித்துநாளுந் தெளிந்துமா பதவியுற்றப் பெரியதாச
ரருமைபெரு நறுமலர்கொன் டடிகளர்ச்சித் தகமகிழ்ந்து சிறந்தினுக் கணிகொள்வோமே

1-வது பெரிய தாசர் உற்பத்தி.

ஸ்ரீமகாலட்சுமி கடாக்ஷம் பொருந்திய தென்னாட்டிற் சிறந்த தஞ்சை..ா நகரத்தில் வளையல் கவரை செட்டி குலத்திலுதித்தவர் ஹரிநாமத்தை மனதிற் பதிப்பித்தவர் தர்மத்திற் சிறந்தவர் அதர்மத்தைத்துறந்தவர் உத்தம குணங்கள் நிறைந்தவர் சேஷாசல செட்டியெனும் பேருபெற்றவர் இல்லற தருமத்தை தமிளை மனைவியாகப் பெற்றவர் இல்லற தருமத்தை வழுவாமல் நடத்தி அந்நகரத்தை யாளும் மன்னார் நாயுடு என்னும் ராஜனிடத்தில் சாப்பு உத்தியோகத்திலமர்ந்து யாதொரு குறைவின்றி காலங் கழித்துக்கொண்டு வந்தார் இப்படியிருக்க பகவானருளால் ஓர் புத்திரனுதிக்க அப்புத்திரனுக்குப் பனிரெண்டாம்நாள் பெரியோர்களும் ஆசாரியர்களுங் கூடி பெரியசாமி செட்டியென்று நாமகரணங்கொடுத்து ஆசீர்வதிக்க சேஷாசலசெட்டி மிகுந்த பிரம்மானந்தங் கொண்டு வந்திருக்கும் ஆசாரியர் முதல் யாவருக்கும் அநேக தானதர்மங்கள் செய்து புத்திரோச்சவங் கொண்டாடி பந்துக்களுடன் புசித்து அனைவருக்கும் சந்தன புஷ்ப தாம்பூலங்களளித்து மனக்களிப்போடு அவரவர் தங்கள் தங்களிடஞ் சென்றபின் அச்சிசுவை மிகுந்த செல்வமாய் நாளுக்குநாள் வளர்த்து ஐந்து வயதாகவே பள்ளியில் வாசிக்கவைத்து வித்தைகற்று வருகிறபோது பந்துஜெனங்கள் பெரியசாமி செட்டியென்று பிரியத்தோடும் அழைத்து சுத்தசாதுவென்று விந்தையாக நினைக்க பரிசுத்தனாக பாலிய விளையாட்டின்றி வாசிப்

Koviloor Digital Library

யில் முயன்று தேர்ந்து சிறுபிராயத்தில் தானே
தனது மனதில் நரசிங்க மூர்த்தியை சிந்தித்துக்கொ
ண்டிருந்தார் இப்படி சிலகாலஞ் சென்றபின் ஹரி
யின் பாதங்கள் அவரது மானசீகத்தில் தானே பரு
த்தது அதன் பின்பு சில நாளையில் சேஷாசலசெட்டி
யாருக்கு வார்த்தீகதிசை வந்தவுடன் உத்தியோகம்
பார்க்க சக்தியற்றவராகி யோசித்து தன் குமாரனை
யழைத்து அப்பா பெரியசாமி யான் பார்த்திருந்த
சராப்பு உத்தியோகத்தை நான் பார்த்ததுபோலவே
இன்று முதல் நீ பார்த்துவரக்கடவாயென்று சிலவு
கொடுக்க பெரியசாமி செட்டியார் அண்ணா நான்
உத்தியோகத்திற்கு போகமாட்டேன் என்ன சே
ஷாசல செட்டியார் அப்பா குமாரகா நான் உத்தி
யோகத்திற்கு போகச் சொன்னால் போகமாட்டே
னென்று சொல்வது என்ன காரணம் அதை அறி
யச் சொல்லுமென்று கோபித்துக்கொண்ட தந்தை
க்கு பதிலொன்றுஞ் சொல்லாமலிருக்க சேஷாசல
செட்டியார் அடா சுதனே (தந்தைசொன்மிக்க மந்
திரமில்லை) என்னு மாப்போல எனது வார்த்தைக்
கு மேலான மந்திரமுமுளதோ இதை யறியாமல் நீ
சிறுப்பிள்ளையைப்போல போக மாட்டே னென்ப
து தகாது அடாமகனே என்னிஷ்டப்படி நடவாத
நீ உன்னிஷ்டப்படி என்னவேலை செய்யப்போகிறாய்
அதை யாகிலுந் தெரியச்சொல்லு மேலும் முன்னம்
பிதுர்வாக்கியத்தை பரிபாலனஞ்செய்து பரசுராமர்
மேலான கீர்த்தியைப் பெற்றார் அன்னியிலும் தச
ரதருடைய வாக்கை பரிபாலனஞ் செய்த ஸ்ரீராமர்
சிரேஷ்டமாகிய பெருமையை யடைந்தார்.

இதுகளெல்லாந் தெரிந்த நீ என் சொல்லை மறு
த்து வேறு என்ன உத்தியோகஞ் செய்யப் போ
கிறாயென்ன பெரியதாசர் அண்ணா ! கோபங்கொள்
ளவேண்டாம் உமது கோபத்தை சிறுவன் பேரில்
காட்டினால் அதை தாங்க என்னாலாமா அதம்மமாகி
ய சேவகத்தை தொட்டு நித்த மோத்தமாகிய சே
வை செய்வதை விட்டு அற்பர்களிடத்தில் சேவை
செய்யச் சொல்வது தர்மமல்ல அதெப்படி யெனில்,

சுலோகம்.

உத்தமம் ஸ்வார்ஜிதம் வித்தம் மத்யமம் பிது
ரார்ஜிதம், அதமம் சேவகா விருத்தி ஸ்ரீவித்தம் அ
தமாதமம்.

என்று சாஸ்திரம் முறையிடுகிறபடியால் சேவ
கஞ் செய்தால் நரஹரி சேவகஞ் செய்துக் கொண்
டிருக்கவேணும் அன்னியத்திற் பிரவேசிக்கும் நினை
வைமாற்றி விஷ்ணுதேவர் சரித்திரங்களை நினைத்து
உருகவேணும் நின்றிருந்தால் ஸ்ரீ ஹரிதாசர் கூட்ட
த்தில் முராஹரியின் குணங்களைப்பாடி நின்றிருக்க
வேணும் அழைத்தால் ஸ்ரீ கிருஷ்ணா வாருமென்று
கூவி யழைத்துக்கொண்டிருக்க வேணும் பார்த்தால்
மலர்ந்த தாமரை மலர்போன்ற திருமுகத்தை பார்
த்து களிப்படைந்து கொண்டே யிருக்கவேணும்
காத்திருந்தால் ஸ்ரீ வைகுந்தன் சந்நிதியைக்காத்துக்
கொண்டேயிருக்கவேணும் எழுதினால் நேமமோடு
ஸ்ரீராமகோடி எழுதிக்கொண்டே யிருக்கவேணும்
துதி செய்தால் ஸ்ரீ மந்நாராயணனை துதிசெய்துக்
கொண்டேயிருக்கவேணும் பாடினால் ஜெகந்நாதன்
மேல் பாட்டுப்பாடிக் கொண்டேயிருக்கவேணும் ஆ
டினால் புருஷோத்தமனை கொண்டாடிக்கொண்டே
யிருக்கவேணும் விட்டால் ஸ்ரீ ஹரி பக்தி செய்யாத
வர்கள் நேசம்விட்டு நீங்கி யிருக்கவேணும் நடந்
தால் ஸ்ரீ வாசுதேவன் ஆலயஞ்சுத்தி நடந்துக்கொ
ண்டே யிருக்கவேணும் மேலும்நமது தேஹ சம்பத்
தையாருக்கு உபயோகப்படுத்த வேணுமென்றால்
(விசித்திராயதேஹ நிம்பத்தி யீஸ்வராய நிவேதிகம்
என்றும் பிரமாணப்படி சித்திரா விசித்திரங்களாகிய
திரேகாவயவங்களை சர்வலோகசரண்யனாகிய ஸ்ரீஹரி
யின் நைவேத்திய கைங்கரியங்களுக்கு உபயோகப்
படுத்த வேண்டும் அதை விட்டு அயசாக்ஷியால் தன்
மனதை செலுத்தி திரவியாபேக்ஷை கொண்டு அநீ
திபாய்ச் செங்கோல் செலுத்தும் இராஜனிடத்தில்
உத்தியோகஞ் செய்ய எனக்கிஷ்ட மில்லையென்ன
சேஷாசல செட்டியார் தன்குமாரன் சொல்லிய நீதி
வசனங்களைக் கேட்டு அகங்களித்து அப்பா குமா
ரா நமது குல தர்மமாகிய வளையல் வியாபாரஞ் செ
ய்யுமென்று நேமித்து சகல வளையல் தினுசுகளுங்
கொண்டு கடையில்சேர்த்து ஜாக்கிரதையாக யிரு
ந்து வியாபாரஞ் செய்யக் கடவாயப்பா வென்று
சொல்லிச் சென்றார்.

பிறகு பெரியசாமி செட்டியார் அக்கடையிலிரு
ந்து விற்பனை செய்த தினுசுகளென்ன வெனில் ரத்
தினங்களிழைத்த ரமணீயமாகிய வளையல் முத்துகள்
கோர்த்த மோஹன வளையல்கள் பச்சைகளிழைத்த
பசும்பொன் வளையல்கள் கெம்புகளிழைத்த கீல்
வளையல்கள் நீலவர்ணமுடைய நீண்ட வளையல்கள்
கருப்பு வர்ணமுடைய சுருதா வளையல்கள் வகை
வகை வர்ணவங்கி வளையல்கள் சதிரோடு மெல்லிய
சம்பூல வளையல்கள் நீலக்கண்ணாடியில் நிகநிகமென
வளையல்கள் பக்கக்கண்ணாடி பாடல் வளையல்கள்
எதிர்க்கண்ணாடி யேகாந்த வளையல்கள் குண்டு கண்
ணாடி கொண்டு வளையல்கள் அழகாகி மிகவுஞ் ஜொ

Koviloor Digital Library

விக்கும் அரிதாகிய வளையல்கள் பளபளென்றுமின்னும் பட்டை வளையல்கள் தளதளென ஒளிதரும் தந்த வளையல்களும் சாக்ஷாத் திருவேங்கடத்துரை ஹரியை துதிசெய்துக் கொண்டு மார்க்கத்தில் நடந்து போகும் ஸ்திரீகளை வலியவழைத்து காசுகள் கேளாமல் அவர்கள் கைகளுக்கு போட்டு இருந்த சாக்குகள் யாவத்தும் இத்தன்மையாய் பிராமண ஸ்திரீகளுக்குப் புண்ணிய ஸ்திரீகளுக்கும் கைகளில் பூட்டி பக்தி வினயத்தோடு பகவத் தாசர் ஜெகமெங்குமரிய வியாபாரஞ் செய்து கடைக்காலியாக்கி ஆத்மார்த்தமாகிய வியாபாரஞ் செய்யத்தொடங்கினார் அதெப்படி யெனில் ஓ சாதுஜனங்களே சகலமானஜீவன்களுக்கும் நேரிடுமாபத்தை போக்கும்படியான வர்த்தகம் அவ்வர்த்தக சரக்கென்னவென்றால் நவரத்தினங்களுக்கு மேலாகிய நாராயண ரத்தினம் இது நாரதமுனிவர் சதாகாலமும் பாராயணஞ் செய்யும் ரத்தினம் இது கோரமாகிய பாவங்களைப் போக்கி மோக்ஷ வழியைக்காட்டி நம்மை தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளும் ரத்தினம் மேலும் ராமாவென்னும் ரத்தினம் சங்கரன் உமையவள் மறவாமல் சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் துதிசெய்யும் ரத்தினம் இது பாவிகளுக்கு மிகுந்த கஷ்டமாகத் தோற்றும் அன்னியிலும் காமக்குரோதம் லோபம் மோகம் மத மாச்சரியம் முதலாகிய துஷ்டசித்தத்தை போக்கி பரிசுத்த ஆத்மாவாகச் செய்யும் மேலாகிய ரத்தினம்.

ஆகையால் ஓ பரமசாந்தகுணமுடைய பக்தர்களே இந்த கோபாலரத்தினத்தை கொள்ளுங்கள் இதன் விலை எவ்வளவென்றால் இதற்கு விலையேயில்லை உங்களுங்கள் மனதை கொடுத்து பெற்றுக்கொள்ளுங்கள் கொண்டபின் மலர்ந்த செந்தாமரையை நிகர்த்த நேத்திரங்களுடைய எம்பெருமான் உங்கள் மனதில் பக்தியோடு நிறுத்திக்கொண்டு இடைவிடாது துதிசெய்வீர்களேயாகில் உங்களுக்குண்டாகும் சங்கடங்களை யெல்லாம் தீர்க்கும் மேலாகிய திருவேங்கடமலைமேல் எழுந்தருளிய ஸ்ரீ ஹரி யிந்நாமம் விலையில்லாத ரத்தினம் என்றிந்தபடி பாமரர்கள் முதல் யாவருக்கும் போதித்துக் கொண்டிருக்கும் புத்திரனை தாயுந்தந்தையுங் கண்டு அநேக நீதி வசனங்களை உரைத்துங் கேளாம லிஷ்டப்படி திரியுங்குமாரனது குறிகுணங்களை யுணர்ந்து அந்தோ இனி யென்ன செய்வோம் நமதிஷ்டப்படி நடப்பானென்றெண்ணி விசேஷ திரவியஞ் செலவழித்து வளையல் வியாபாரஞ் செய்யும்படி சொன்னோம் அந்த வளையல்களை யெல்லாம் வழியிற் போவார் வருவாரை யழைத்து அவர்கள்கைகளுக்கணிந்து காலி செய்து விட்டான் இனி எந்த வர்த்தகஞ் செய்யச் சொன்னபோதிலும் இவன் திரவியத்தை நஷ்டப்படுத்திவிடுவான் இவனை உத்தியோகத்திலிருக்கும்படி தந்திரஞ் செய்து அனுப்பினால் பயந்து நடப்பானென்றெண்ணி சில பெரியோர்களைக் கொண்டு நல்ல புத்திமதிகளைச் சொல்லி திருத்தும்படி வேண்டிக் கொள்ள அப்பெரியோர்கள் பெரியசாமி செட்டியிடம் வந்து ஐயா சாந்தகுணத்திற் சிறந்து தருமகுணம் நிறைந்து ஜீவகாருண்ணிய முணர்ந்து சதா ஹரிநாமத்துதிசெய்யும் தயாளனே நீரிப்படி தந்தை தாய் சொல்லைக் கேளாமலிருப்பது சரியன்று சர்வமுந் தெரிந்த உமக்கு யாங்கள் புத்திசொல்ல வேண்டுமா ஆகினும் தயிரை முன் வைத்துக்கொண்டு வெண்ணெ கொடுமென்றால் கொடாது அதை மத்தைக்கொண்டு கடைந்தால் வெண்ணெ கொடுப்பது போல நீர் அதிக புத்திசாலியா யிருக்கினும் உமக்கு எம்போலியர்கள் குணகுணங்களை அறிவிக்க வேண்டிய கடமையாதலால் தாய் தந்தை புத்திர மித்திர களத்திரர்கள் மனது சந்தோஷப்படுத்தாப் பாவிகளுக்கு கீர்த்தி இகத்திலுமில்லை பரத்திலு முண்டாகாது என்று சுருதிகள் முறை யிடுகின்றது மேலும் ரோகிதாசர் பண்டரீக பக்தர் இவர்கள் தாய் தந்தையர்களுக்கு ஸ்நானஞ் செய்வித்து உலர்ந்த வஸ்திரந்தரிப்பித்து திருமண் காப்புமிட்டு மல்லிகை முல்லை இருவாக்ஷி சண்பகம் குருக்கத்தி முதலான மலர்களைக் கொண்டு அவர்கள் திருவடிகளை யர்ச்சித்து தூபதீபநைவேத்தியங்களைக்கொடுத்து ஆயாசந்தீர ஆலவட்டம்கவரிகளைக்கொண்டு வீசி அவர்கள் களைவளர்ந்த பிறகு இவர்கள் திருமஞ்சன தீர்த்தத்தை யுட்கொண்டு சிரத்திற் றெளித்து அநந்தரம் புசிப்பார்கள் இப்படி இவர்கள் தாய் தந்தையரை ஆசித்து நேசித்து விசுவாசித்து வெகுகாலம் பூசித்து வந்தபடியால் ஆதிமத்தியானந்தரகிதராயும் அன்பர்கள் மனோரதம் நிறைவேறக் கடாக்ஷிப்பவருமாகிய பகவான் ரோகிதாசருக்குசேவைதர பிராமணன் கண்டு வியப்படைந்து அவரையாசித்து குருவாகக் கொண்டான்.

அந்தப்படியே புண்டரீக பக்தனிடத்திற்கும் ஸ்ரீ ஹரியானவர் வந்து நின்றிருக்க அதையுணராது தாய் தந்தையரை பக்தியோடு பூசித்துக் கொண்டிருக்க் தந்தை அப்பா புண்டரீகா அதோ வந்திருக்கும் பகவானுக்கு ஓர் ஆசனங்கொடு மென்ன தந்தையின் சொற்படி அங்கொரு ஆசனமுங் கிடைக்காததால் செங்கல் ஒன்றை யெடுத்துப் போட்டு

Koviloor Digital Library

இதின்பேரிலிரும் பூசை முடித்துவருகிறேனென்று சொல்லி சகலமான பூசை உபசாரங்களைத்துஞ் செய்து சுவாமியை சேவிக்க இதைக்கண்டசாக்ஷாத் கிருஷ்ணமூர்த்தி ஓ புண்டரீக பக்தனே உனது பக்திக்கு மெச்சினேன் உனக்கு வேண்டியவரம் கேளு மென்ன் புண்டரீக பக்தன் யோசித்து ஓ சுவாமி இந்த செங்கல்லின்பேரில் நின்ற சேவையோடு இவ்விடமெழுந்தருளி சாது ஜனங்களுக்கு தெரிசனந்தரக் கடவீரென்ன அந்த புண்டரீகன் கேட்ட வரத்தின்படி அந்த பண்டரிபுரத்தில் பாண்டுரங்கன்விட்டலன் ருக்மணி சத்தியபாமை சமேதராக வீற்றிருக்கின்றார் ஆதலால் நீருமப்படி செய்வீரே யாகில் ஸ்ரீமந் நாராயணன் தரிசனம் சுலபமாகக் கிடைக்குமென்று சொன்ன பெரியோர்கள் வார்த்தையை மறுக்காமல் வீட்டிற்குட் சென்றுதாய்தந்தைகளைப் பணிந்து உங்களிஷ்டப்படி நடக்கிறேனென தாயுந்தந்தையுங் களித்து குமாரனை தழுவிக்கொண்டு அப்பா புத்திரசிகாமணியே இன்று முதல் அரசனிடத்தில் சராப்பு வேலையைப் பாருமென பெரியசாமி செட்டி பெரியோர்கள் பலவந்தத்தினால் சராப் அலுவலை பார்த்துக் கொண்டும் பகவத் தியானத்தில் தைலதாரையைப்போல இடைவிடாது மனதை செலுத்திக் கொண்டும் வந்தார்.

இப்படியிருக்க ஓர்நாள் வழக்கப்படி குதிரையேறிக் கொண்டு கொலுக்கூடத்திற்கு வருகிறபோது மார்க்கத்தில் சில சிறுவர்கள் கெச்சைக்காயாடிக் கொண்டிருந்தார்கள் அந்த கெச்சைக்காயின் பேரில் குதிரைகுளம்புபட்டு தெரித்துப்போய்விட்டது அதைக்கண்டு ஆட்டத்தை கெடுத்து விட்டானென்று யாவரும் நிரபராதியாகவும் நற்குணங்கள் நிறைந்தவருமாகிய பெரியசாமி செட்டியாரை பிடித்துக் கொண்டு வாயில் வந்தபடி யெல்லாந் திட்டி அடிக்கப்போகிறபோது ஓர் யாதவராங்கன் பார்த்து ஓடோடியும் வந்து சிறுவர்களையெல்லாந் துரத்தி விலக்ஷணமாகிய பட்டநாமங்களைக்கண்டுஇவர்பெரிய தாசரென்றுசொல்லி இடைந்துநின்றான் இதையுணர்ந்து உடனே அந்த யாதவராங்கனுக்குப் பெரிய தாசர் விழுந்து விழுந்து பலதரம் தெண்டனிட்டு நாம் பூர்வத்தில்செய்த பூஜையின் பலனென்று புளகாங்கிதங் கொண்டுபூரித்து தன்னைமறந்து நடித்து பின் குதிரைகுடை வஸ்திராபரணங்களையும் யாதவகுலராங்கனுக்கு கொடுத்து அவர்கள் யாவரையுங் கொண்டாடி கொலுக்கூடத்திற்கு போகாமல் திரும்பிவருகிற மார்க்கத்தில் ஸ்ரீஹரியினது பரிபூரண கடாக்ஷம் எனக்கு சித்தித்தது இப்போது இப்பூமியில் யாரேனும் பட்டநாம மிட்டிருப்பாரே யாகில் அவர்களை முராஹரியின் தொண்டர்களென்று பாவித்து அவர்கள் சமீபந்திற் சென்று தெண்டனிட்டு வருவதோடு அன்றுமுதல் சராப்புஉத்தியோகத்தை விட்டு நரஹரியின் சந்நிக்குட் புகுந்து பந்தங்கள் யாவையும் போக்கிய இஷ்டதெய்வமென்று சிந்தனை செய்திருந்தார்.

எப்படியெனில் ஸ்ரீஹரி நாராயணா கோவிந்தாவென்று ஓ மனமே பஜனைசெய் புருஷோத்தமா தாமோதரா கேசவா போகிசயனா ஸ்ரீவேணுகோபாலாவென்று துதிசெய்வாய் ஓ மனதே அன்னிய சிந்தனைகளை அகலவிட்டு இகசுகங்களை அற்பமென்று நினைத்து மிருந்த பிரியத்தோடு கேசவனை துதித்து துஷ்டரார்கள் சங்கத்தை யொழித்து தர்மத்தினிடத்தில் சலிக்காத மதியைவைத்து தயைசாந்தி சத்தியத்தை யனுசரித்து நிர்மலஞானத்தில் சந்தோஷித்து சகல கர்மபலன்களையும் மகிகடை ஹரிக்கி சமர்ப்பித்துப் பரமபாகவதர்களை சேவித்து பக்திமார்க்க சுகத்தை யனுசரித்து அரிஷட்வர்க்கங்களை போகவடித்து யாவத்துக்கும் ஸ்ரீஹரியென்றெண்ணி பிர்மானந்தத்தில் சொக்கி யிருந்தார், இப்படி பெரிய தாசரிருப்பதைக் கண்ட தாய்தந்தையர் பந்துக்களும் மெத்த விசனமடைய அதில் தாய்தந்தையர்க ளிருவருந் தனயனிடத்திற்கு சென்று பலவிதங்களாய் துதித்து விசனப்பட அதைக்கண்ட பெரியதாசர் தாய்தந்தையர்களுக்கு மனது மிகவுருகும்படி ஞானமார்க்கங்களைச் சொல்லுகிறார் என்னையீன்றெடுத்த அன்னையே உனக்கேனிந்த பாமரம் போதும் போதும் வீண்கஷ்டம் இதை நிறுத்து தாய்தந்தை யாவர்கள் தனயர்கள் எவர்கள் இவர்களை மாயையென்றும் கனவிற்கண்ட பொருள் நினைவிலெப்படி காணுவதரிதோ அதைப்போல இவ்வாழ்வு இதை உண்மையாக நம்பாதே, புத்திரமித்திரர்கள் நீர்குமிழி கிளம்பி உடனே அழிவது போல அழிந்துபோவார்களே யொழிய நித்தியமாயிருக்க மாட்டார்கள் ஆனால் நித்தியமாகிய முக்திமார்க்கத்திற்கொருபோதும் அழிவில்லை ஆகையால் அற்ப சம்சார வாழ்விற்கு இவ்விதமாக பிரமையடைந்து எல்லாமானவர்களுடய காயம் ஸ்திரமல்லவென்று கண்டு கொள்ளாமல் சம்சாரத்தை விடாது அதில் கட்டுப்பட்டு எண்ணங்களை மேலும்மேலும் விருத்தி செய்துக் காம குரோத லோபமோக மதமாச்சரியங்களை வளர்ந்து மதோன்மத்தர்களாகி துன்மார்க்கத்திற் பொருந்தி சம்பத்துண்டாகில் சந்தோஷ மே

Koviloor Digital Library

லும் மெத்த களிப்போடு அற்ப சுகத்தை ஆசித்து காமாந்தர்களாகி தங்கள் கெதியைக் காணுமல் வனிதையர்கள் வலையிலகப்பட்டு விடுவித்து கொண்டு வரும் வகை அறியாமல் குறைவற்ற ஈஷணத் திரயங்களுள்ளே மேலுமேலும் புரண்டுதாலுைம் சுங்காரம் இரட்டிக்க பெண்டு பிள்ளைகளுக் கென்று பொருள்களைச் சேர்த்து காலத்தை வீணுக்கழித்துக் கொண்டிருந்து அந்தியகாலம் வந்தபோது எமனிடம் சேர்ந்து கஷ்டங்களினுல் நலிந்து மெலிந்து கூபத்திற்குள் விழுந்து சிலநாளிருந்து பாபாத்துமர்களாகி மறுபடியும் பிரபஞ்சத்திற் பிறந்தும் இறந்தும் சகடம்போல புரண்டு கொண்டிருப்பார்கள் இப்படி பிறப்பிறப்புகள் கணக்கிடுவதறிது ஆகையால் அன்னையே இதையுணர்ந்து இனியாகிலும் ஜாக்கிரதைப்பட்டு நீ ஹரியைத்தியானம் பண்ணி சம்பத்தோடு பரத்தை சாதித்துக் கொள்ளும் என்றிவ்விதம் பெயதாசர் அன்னைக்கு சொல்லித்தான் மௌனியாகியிருந்தார், பின்பு தாய்தந்தையர்கள் குமாரன் சொல்லிய ஞான மார்க்கத்தின்படி சஞ்சல மனதை நிருத்தி சதா ஸ்ரீஹரியைத் துதி செய்து சாயுஜ்ய பதவியை அடைந்தார்கள்.

இந்தப்படி பெரியதாசர் மௌனமாக ஒருவரிடத்தில் பேசாமல் மான சத்தியானத்தி லிருக்கச் சில அஞ்ஞானிகள் அந்த மகானுபாவரது நடவடிக்கைகளை கேட்டு பயித்தியம் பிடித்ததென்று பேசிக் கொண்டார்கள் இதை யறிந்த பெரியதாசர் தூஷணை பூஷணை திரேகத்துக்கே யன்றி ஆத்துமாவுக்கில்லை என்றிருந்தார் இப்படிக்கிருக்குஞ்சமயத்தில் தஞ்சைமாநகரத்தையாளும் ராஜன் மன்னர் நாயுடு ஓர்நாள் கொலுவிலமர்ந்து வித்வாம்சர்களை நோக்கி ஓ சகலவேத சாஸ்திரங்களை யுணர்ந்த சம்பன்னர்களே விவேக கூர்மையுடைய விர்ப்பன்னர்களே சகலலோக சரயண்ணுகிய ஸ்ரீமந்நாராயணன் வசிக்கும் வைகுந்தமானது இவ்விடத்திற் கெத்தனைதூரம், அந்த அளவையறிந்து சொல்லுங்களென்று கேட்க ராஜனைநோக்கி மகாராஜனே பிரம்மனைப்பெற்ற லக்ஷ்மீ வல்லபனை சேவிப்பதே யறிதாகவிருக்க அவனதுஊரை யளவிட்டுச் சொல்ல எங்களாலாகுமோ, நான்குவேதங்களையுஞ் சோதித்த பிரமநிஷ்டர்களும் அந்த ஹரியைத் தேடிக்காணுமல் சிந்தனை செய்துக்கொண்டிருக்கிறுர்கள் ஆகையால் எங்களுக்குத் தெரியமாட்டாது, பெரியபிராட்டி நாயகனதுமர்மம். ஆனுல் அந்த மர்மத்தை சங்கையிலாத தாரகநாமயோக மனதுடைய சத்புருஷர்கள் கண்டுக்கொண்டிருப்பார் என்ன ராஜன் அப்படிப்பட்ட புண்ணிய புருஷர்கள் இந்த வுலகில் யாராகிலுமிருந்தால் அதைத் தடையின்றிச் சொல்லுங்களென்றுர் அதைக்கேட்ட பிராமணர்கள் சொல்லத் துடங்கினுர்கள்.

2-வது தஞ்சைமாநகரையாளும் அரசன் பெரியதாசரை அழைத்துவரும்படி சேவகருக்கு உத்தரவு செய்தல்.

ஓ அரசனே, பொருமையில்மிகுந்த பெரியதாசர் ஸ்ரீ ஹரியின் சந்நிதியைத் தொழுதுக்கொண்டிருக்கிறுர், அவரை யழைப்பித்துக் கேட்டால் சந்தேக நிவர்த்தி செய்வாரென்ற பிராமண மொழியைக்கேட்ட அதிபன் துரிதமாய் சபையிலிருக்கும் சேவகரையழைத்து நீங்கள் வேகமாகச்சென்று நரஹரி சந்நிதானத்தில் பக்தி செய்துக்கொண்டிருக்கும் பெரிய தாசரை அழைத்துவாருங்களென்றுகட்டளையிட அந்தப்படியே வீரர்கள் ஓடிக் கோயிலில் பகவத்யான குதூகுலராயிருக்கும் பெரியதாசரை கண்டு ஓ மஹானுபாவரே, தஞ்சைமா நகரையாளும் மகாராஜா தங்களை யழைத்துக்கொண்டு வரச் சொன்னுர் ஆகையால் தடையொன்றுஞ் சொல்லாமல் சீக்கிரம் வாருமென்றழைக்க உடனே பெரிய தாசர் சேவகரைநோக்கி ஓ ராஜனது ஏவலாளரே (துரைவிக்கு வேந்தன் துரும்பு) என்ற பழமொழிப்படி சகல சங்கற்பத்தையும் ஒழித்து துரைவியாகிய வெனக்கு அரசனுல் யாதொரு காரியமுமாக வேண்டியதில்லை, என்னுல் அரசனுக்கும் ஆகவேண்டிய காரியமொன்றுமில்லை, ஆகையால் யான் பாமரர்களிடம் வரமாட்டேன், ஸ்ரீஹரியின் நாமமே சகல சம்பத்தென்று நம்பி இப்பூமியில் சம்சாரசாகரத்தில் மூழ்கிய யீனர்களோடு நேசஞ்செய்யாமல் ஸ்ரீஹரியைச் சரணமடைந்து சகல சித்தர்கள் சமீபத்தில் சேராமல் ஸ்ரீயப்ப பை மதியில் நம்பி கபடமதிகளோடு கலந்து நடக்காமல் நிபுணரானவர்கள் கிருபைக்குக் காத்துத்தூஷணை பூஷணைசெய்யாமல் நிர்த்தோஷர்களாகிப் பாஷாண்டிகளாகிய பதிதர்கள் கூட்டத்தை தவிர்த்து ஹரிதாசர்களாகிய பூரணச் சந்திரனை நிகர்முக முடைய ஸ்திரிகள் நேசம் கோராமல் பதிநிந்தைகளுக்குடன்படாமல் பொருத்தமாய் ஹரிதாசரை ரக்ஷிக்கும் லட்சுமிநாதன் பஜனையில் ஆனந்தமடைந்திருக்கிறேன் ஆகையால் இப்பெருந்த சுகத்தைவிட்டு பாமரர்கள் வசிக்கு மவ்விடத்திற்கு வரமாட்டேனென்று சொல்ல உடனே அச்சேவகர் பெரியதாசர் தோளைப் பிடித்துத் தன்

Koviloor Digital Library

ரிக்கொண்டே வந்து மகாராஜன் கொலுக்கூடத்தில் விட்டார்கள் அவரைக்கண்ட ராஜன் வந்தனந்தந்து உன்னித ஆசனத்திலிருத்தி, ஓ மலர்ந்தசெந்தாமரைக் கண்ணனது மகிமைகளை யுணர்ந்த புண்ணிய சீலரே பந்தி-தயை-சாந்தம் முதலான நற்குணவாளரே இத்தரையில் எம்போலியர்கள் கோரிக்கையை நிறைவேற்றி நன்மார்க்கத்தைப் போதிக்குந் தயாளரே, ஸ்ரீமந்நாராயணன் புகழைக் கொண்டாடும் விசாலரே யென்று புகழ்ந்து ஏயோ பாகவதரே பன்னக சயனனும் பதிதபாவனனும் பரமதயாளருமாகியஎம் பெருமானை சேவிப்பதற்கும் எண்ணுவதற்குங்கூடாத வைகுந்தமாநகரம் இவ்விடத்திற்கெத்தனைதூரம் அதைச் சொல்லுமையா வென்றான்.

3-வது அரசன் பெரியதாசரை தன்பேரிலும், நகரின்பேரிலும் சிறப்பு பாடும்படி சொல்லல்.

அம்மொழிகளைக் கேட்ட பெரியதாசர் ஆனந்தமடைந்து, ஓ மகாராஜனே, முன்னம் துற்சாதனன் திரௌபதியின் துகிலுரியும்போது அம்மாது பகவானை ஸ்தோத்தரித்து முறையிட அம்முறையைக் கேட்ட பகவான் மேலுமேலுந் துகில் வளரும்படி கருணைசெய்தார், அன்னியிலும் கரியரசன் முறையைக்கேட்டு ஏகனாக ஓடிவந்து முதலியைச் சங்கரித்து அபயஸ்தந்தந்து ரக்ஷித்தாராகையால் அந்த வைகுந்தம் கூப்பிடு தூரத்திலிருக்கிறதையா வென்று சொல்ல அவ்வார்த்தைகளைக் கேட்டு நாபதி ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனாகி காஸ்மீர் சாலுவையை காணிக்கையாகக் கொடுத்து ஓ மகாத்மாவே இப்படிப்பட்ட க்ஞானபக்தி வைராக்கியங்கள் எப்படி எனக்குண்டாகும், ஸ்ரீஹரியை எவ்வித முயற்சியினால் யான் காண்பேன், ஆகிலும் பெரிதல்ல அந்தப் புண்ணியவான் கருணையென்னுங் கீர்த்தனைகளினால் ஸ்ரீஹரியினது சேவையைப்பெறுவேனென்று தன் மனதில் ஆலோசித்தவனாகி தாரணிமன்னன் மிகுந்த வினயமாக பெரியதாசரை நோக்கி ஐயா பக்தசிகாமணியே இப்போது எனது முப்பாட்டன் முதல் வம்சாவளியை வரிசைக்கிரமமாய் நகரச்சிறப்போடு என்பேரில் சிலபாட்டுகள் பாடுமென்ன பெரியதாசர் மிகுந்த விசனமடைந்து, ஓ மகாராஜனே நரசிங்க மூர்த்தியைப் பாடினவாக்கால் ஊருக்கு சிங்கமாகிய உன்னைப்பாடுவதினால் சாரமில்லையென்று சாதுக்கள் பதிதர் பாமரர்கள் யாவருக்குங் கேட்கும்படிச் சொன்னார்.

4-வது அரசன் பெரியதாசரை காராக்கிருகத்தில் அடைத்து பிறகு அனேகவிதமான தண்டனைகளைச் செய்வித்தல்.

அக்கொடிய வார்த்தைக்கு உடனே நாபதி கோபங் கொண்டிருந்தார் அப்போதவ்விட மிருந்த பிராமணர்கள் பெரியதாசர்பேரில் அசூயை கொண்டு நமக்கு நல்லசாக்கு கிடைத்தது இப்போதே இவரை அவமானப்படுத்த வேணுமென்றெண்ணங் கொண்டு யாவரும் ஒன்றாய்க்கூடி வேகமாய் மண்டலேஸ்வரனிடத்தில் கோள் சொல்லத் துடங்கினார்கள் ஓ தரணி நாதனே இவர் பஞ்சமனாக விருந்தபோதிலும் பட்டைநாமந்தரித்த தாசரகள் பேரில் பாடுவாரே யல்லது தங்களைப்போலொத்த மகாராஜன் பேரில் பாடமாட்டாரென்று சொல்லிய பிராமணர்கள் வசனத்தைக்கேட்ட நாபதிக்கு அதிக ஆவேச முண்டாகி அதினால்கண்கள்சிவந்திருக்கும் ராஜனை அந்தச் சபையிலிருந்த யாவருங்கண்டு மிகுந்த பயமடைந்து என்ன விபரீதம்வருமோ வென்று பார்த்திருக்க ராஜன் சேவகரைக்கொண்டு பெரியதாசரைப் பிடித்துவரச்சொல்லி எதிரில்நிறுத்தி பரியாசங்கள் செய்து உடனே ஓர் கழுதைக்கு திரேகமெல்லாந் திருமண்காப்புபோட்டுக் கொண்டு வந்து பெரியதாசர்க்கெதிரில் நிறுத்தஇதைக்கண்ட தாசர் ஸ்ரீஹரி யென்றெண்ணி அதிக தீரத்தோடு எழுந்து அகளங்க பக்தியோடு எல்லாரும் பார்க்க பூமியில் விழுந்து தெண்டனிட்டார் அதைக்கண்ட அரசன் திருமண்காப்பில்லாமல் சாதாரண கழுதை யொன்றைக் கொண்டுவந்து நிறுத்தி அதைக்கண்டு தாசர் தெண்டனிடாமலிக்க அரசன் அடாமூடா அடா துப்தா இந்தக்கழுதையின் காலில் விழுந்து ஏன் கும்பிடாமலிருக்கிறா யென தாசர் அடா குட்டிச் சுவரே கேளடா இந்தக் கழுதை உனக்கு நிகரானது ஆதலாலிதற்கு யான் தெண்டனிட மாட்டேன் என்று சொல்லிய மாத்திரத்தில் ராஜன் ஹரிதாசர் பேரில் அதிக கோபங்கொண்ட கிஞ்சித்துங் கருணையின்றி தாசரைக் காராக்கிருகத்தில் போட்டு அநேக வாதைகள்படுத்தி கதவைமூடிகுச்சிட்டார்.

அச்சமயத்தில் தாசர் மாதாவென்ற மாத்திரத்திலே நரஹரி சந்நிதிக்குச்சென்றிருந்தார் இதையறிந்து ராஜன் பாரா ஜெனங்களை வரவழைத்து அந்த துஷ்டனை உள்ளே போட்டுகதவை மூடி சாவி போட்டிருக்க அவன் எப்படி வெளியிற்போனானென்னப் பாராஜெனங்கள் எங்களிறைவனே பூட்

Koviloor Digital Library

டிய கதவு பூட்டியபடியிருக்கிறது, அவனெப்படிப் போனானோ தெரியவில்லை, ஆனாலிலங்களுக்கொன்று தோன்றுகிறது, அதாவது மிகுந்த மந்திரவாதி யென்று நம்புகிறோமென்ன, ராஜன் ஓபாராஜனங்களே! நீங்களிந்த நிமிஷத்தில் அவனைப்பிடித்துக் கட்டிக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட, அவர்களப்படியேசென்று அவரைக்கட்டிக்கொண்டு வந்தார்கள், அவர்கள் கட்டிக்கொண்டு வரும்போது அவரைச்செய்த அவகோலத்தைக் காணவும் நாவினால் சொல்லவும் மிகுந்தகோரம், அதெதன்னவெனில் சூலம், வாகுவல்லயம், ஈட்டி முதலாகிய ஆயுதங்களைக்கொண்டு குத்தும்படிசெய்தான். ஹரிதாசர் தேவர்களைக்காத்த நரஹரியைப்போற்றி தோத்திரஞ்செய்துக்கொண்டு நின்றார். எப்படியெனில், சகல சத்தக்கூட்டங்கள் எவனிடத்தில் அடைந்திருக்கிறதோ, அந்த சகலலோகசிருஷ்டி சங்காரகர்த்தாவாகிய பரம்புருஷனுக்கு வந்தனஞ்செய்கிறேன், சூரியன் சந்திரர்முதல் சோதிட க்ருகங்களையும் பிரகாசிக்கச்செய்யும் அப்பிராக்ருததேஜோமயனும் நிகரில்லாதவனும், சூட்சுரூபியும், சரம் அசுர ஆத்மாக்களாகி, ஜகத்திற்குக் காரணாவஸ்துவுமாகிய ஸ்ரீ விஷ்ணுதேவனுக்கு நமஸ்காரஞ்செய்கிறேன், எவனுக்குப் பகல்பிரதமை ரூபமாகி இரவு ரெண்டாம் ரூபமாகி, சந்திவேளை மூன்றுவது ரூபமாகியிருக்குமோ அப்படிப்பட்ட காலரூபனாகிய பரமீசனுக்கு வந்தனஞ்செய்கிறேன். எவன் அமிர்தமாகி யனுதினமும் தேவர்களினாலும், பிதுர்தேவதைகளினாலும் புசிக்கப்படுகிறானோ, புல்பூண்டு முதல் சகல வஸ்துக்களினாலும், பிராணிகளுக்கு ஜீவனமாகி யிருக்கிறானோ அப்படிப்பட்ட சந்திரரூபனாகிய பகவானுக்கு வந்தனஞ்செய்கிறேன், எவன் உஷ்ணமாகிய தனது கிரணங்களினால் இருளைப்போக்கடித்து ஆகாசத்தைப் பிரகாசிப்பித்துக்கொண்டு தாபங்களுக்கும், சீதளத்திற்கும், ஜலத்திற்கும், காரணமாகியிருப்பனோஅப்படிப்பட்ட சூரிய ஆத்மாவாகிய பகவானுக்கு வந்தனஞ்செய்கிறேன். எவன் கடினரூபனாகி இவ்வுலகமனைத்தையும் சுமந்துக்கொண்டு, சத்த, ஸ்பரிச ரூப ரசகந்தங்களுக்கு இடமாகயிருப்பனோ அப்படிப்பட்ட பூமி ஆத்மாவாகிய பகவானுக்கு வந்தனஞ்செய்கிறேன், எவன் சுக்லசோணிதங்களாகி உலகத்திற்குக் காரணரூபமாகிய ஜலரூபனாக விருக்கிறானோ அப்படிப்பட்ட பக்தரக்ஷக சொரூபனுக்கு வந்தனஞ்செய்கிறேன். எவன் சகல தேவதைகளுக்கும் முகமாகியிருந்தும், அவ்யமும் பிதுர்தேவதைகளுக்கு கவ்யங்களும் புசித்துக்கொண்டிருக்கிறானோ அப்படிப்பட்ட அக்னிசொரூபனாகிய பரமாத்மனுக்கு வந்தனஞ்செய்கிறேன். எவன் பிராண அபானதிரூபமாகி சரீரங்களிடத்திலிருந்து சதாகாலமும் மூச்சுவிடுவது முதலாகிய காரியங்களைச் செய்விக்கின்றானோ அப்படிப்பட்ட வாயு வாத்மாவாகிய பரந்தாமனுக்கு வந்தனஞ்செய்கிறேன். எவன் சகல ஜீவராசிகளுக்கும் ஒழிவைக்கொடுத்துக்கொண்டு அனந்தமூர்த்தியாகி சுத்தமாகியிருக்கும் ஆகாயரூபனாகியிருக்கிறானோ அப்படிப்பட்ட முகுந்தனுக்கு வந்தனஞ்செய்கிறேன் ஜென்மரகிதனும்-சுத்தனும்-பிரகிருதிகுண சம்பந்தமில்லாதவனும் பிரகிருதி புருஷர்களுக்காகிலு மிகுந்த கௌரவமுடையவனுமாகி இருக்கும் முக்தாத்மசொரூபனான ஸ்ரீ விஷ்ணுதேவனுக்கு வந்தனஞ்செய்கிறேன், நீண்டதும் - குருகனும்-ஸ்தூலமும்-சூட்சுமமும்-சக்தமும்-நீலமும்-நேசமும்-சாயையும்-திரேகமும் - அவயவங்களும்-நடுவில்-ஒழிவும் - சத்த-ஸ்பரிச-ரூப ரஸ-கந்தங்களும் நேத்திர சுரோத்திராதிகளும் வாக்குபாணி பாதாதிகளும், அந்தக்கரணமும், நாமகோத்திரங்களும் அன்னபனாதிகளாலுண்டாகும் சுகமும், தனக்கன்னியமாக வேறொரு ஒளியும், தனக்கொருகாரணமும், பயம்-பிரமை-நித்திரை-வார்த்திகமரணங்களும், சஞ்சரிப்பதும் -இல்லாததாகி எதினாலும் மூடப்படாததாகி அமிர்தமயமாகி சமஸ்தத்திற்குள்ளும் பொருந்தியதாகி, பதமீசுரத்தாதி சகல கல்யாணகுண யுக்தமாகி, சகலாசிரயமாகி தனக்கொரு ஆசிரயமுமில்லாததாகி, மனம் வாக்குக்கு மெட்டாததாகி, கண்களுக்கு அகப்படாததாகி, இந்தப்படி சகலவிதங்களாலும் விலக்ஷணமாகி பரமபிராப்தமாகி இருக்கும் ஸ்ரீ விஷ்ணுபகவான் சொருபத்திற்கு வந்தனஞ்செய்கிறேன் என்றிந்தப்படியாகத் துதிசெய்ய ஸ்ரீநரசிங்கமூர்த்தியின் அருளினால் யாதொரு வாதையுமின்றியிருக்க, அரசன் மறுபடியும் வீரர்களைக்கொண்டு கெதை-முள்ளாயுதம்-பிண்டி-பாலம் - வாளாயுதமுதலானவைகளால் மோதியும், குத்தியும், வெட்டியும் பாதைகள்செய்தான், அவ்வீரர்கள் எமதூதர்களைப்போலவந்து தாசரைச் சூழ்ந்துக்கொண்டு பலவித வேதனைப் படுத்துகிறபோது பெரியதாசர், ஓ ஸ்ரீமந்நாராயணா! முன்னம் முதலைவாயிலகப்பட்டக் கரியரசனை ரக்ஷித்தாய் தூணிலவதரித்துப் பிரகலாதனைக்காத்தாண்டாய், திரௌபதிக்கு துகிலளித்து மானத்தைக் காப்பாற்றினாய், அம்பரீஷனை ரக்ஷிக்க சக்கிரத்தை யனுப்பினாய், ஆயுதமெடேனென்று வீஷ்டுமருக்குச் சொல்லி அர்ச்சுனனுக்காக ஆயுதத்தை எடுத்தாய், இப்படிப்பட்ட பக்தசுலபனாகிய ஓ கோவிந்தா-முகுந்தா நந்தநந்தா பாதாரவிந்தா-வைகுந்தாவந்தனம், மேலு மேலு மும்மக்குவந்தனம், என்று இருகரங்களையுங்

Koviloor Digital Library

குவித்து, பிரபத்திசெய்ய, எம்பெருமான், ராஜனது வீரர்களாய் பெரியதாசருக்கு யாதொரு வேதனையுமின்றிப்பயத்தைமாற்றினர். அரசன் பின்னும் பெருத்த பர்வதங்களுக்கு நிகரான யானைகளை பெரியதாசர்மேல் நடத்தினன், அந்த யானைகளைக்கண்ட தாசர் நரசிங்கா-பவபங்கா-மங்களாங்கா-தயாந்தரங்கா சற்சங்கா-கஸ்தூரிரங்கா-என்று ஸ்தோத்திரஞ்செய்யப் பகவான் பெரியதாசர் அகமுகமும், சிங்கரூபமாக யானைகளுக்கு மாத்திரம் தோற்றமுண்டாகச் செய்தார். அச்சிங்க உருவத்தைக்கண்ட யானைகள் யாவும் பிறிட்டுக்கதறி மாவெட்டியான்றன்னை கீழே தள்ளி ஒருவருக்குங் கட்டுப்படாமல் மூலைக்கொன்றாய் ஒன்றுபோனவழி மற்றொன்றறியாமல் ஓடிப்போய் விட்டதுகள்.

இதைத்தெரிந்து க்ஞானசூனியனும், பிரவிக்குருடனுமாகிய அரசன் பெரியதாசரைப் புலிபோனுக்குள் போட்டான். அப்புலியானது தாசர் சமீபத்தில் வருவதற்கஞ்சி மிகுந்தபயத்தினல் ஒலமிட்டது பின்பு அரசன் புலிபோனுக்குள்ளிருக்கும் பெரியதாசரை வெளிப்படுத்திப் பூர்ணமாய் ஜலம்நிறைந்த தடாகத்திற் போட்டு அழுந்தும்படிசெய்தான். தூதர் ஹரிதாசரை நடுகுளத்திற்கொண்டுபோய் காலுங்கைகளையுங் கட்டிப்போட்டு மேல்கிளம்பினல் மருபடியும் ஜலத்தில் அனேகந்தரம் அழுத்தியும், மறுபடி மறுபடி மிதந்துமேலே வருவதைக்கண்டு, தங்கள் கையும் மெய்யுஞ்சலித்து, நம்மாலிந்த காரியமாகாதென்று குளத்தைவிட்டுக் கரையேறினர்கள், பெரியதாசர் அக்குளத்தில் மிதந்துக்கொண்டு பகவானைத் துதிசெய்திருந்தார். பிறகு அரசன் இத்தனைவிந்தைகளைக்கண்டும் மந்தமதிமடைந்து பெரியதாசரைக் கரையிற்சேர்த்துப் பாஷாணம் பாம்பின் விஷங்களைக்கலந்து, அன்னத்திற்சேர்த்து ஹரிதாசரை உண்ணச்செய்து தூதர்களைநோக்கி இவனைக்கொண்டுபோய் கால்களைக்கட்டி நடுகுளத்திற்போட்டு வாருங்கோளென்றுக் கட்டளையிட்டான். தூதர்கள் அரசன் உத்திரவின்படி கால்கரங்களை கயிர்கொண்டு பிகித்துக்கட்டி ஹரிதாசரைக் குளத்தில்போட்டு இத்தோடு சரி இனி யிவன் பிழைப்பதில்லை. இவனல் நமக்குக் கொஞ்சநாழிகைகூட ஒழிவில்லை, இந்த கஷ்டம் இன்றோடொழிந்ததென்று சொலலிக்கொண்டே அரசனிடம்வந்து சங்கதி தெரிவித்துச்சென்றார்கள் அங்கே குளத்தில் போடப்பட்ட பெரியதாசர் ஓகிருபைக்கடலே-தனிமுதலே-சிருஷ்டிக்குமுன் பல்லாயிரங்கோடி அண்டங்களையும் கெர்ப்பத்தில் வைத்து ஆலிலைமேல் சிறுகுழவியைப்போல பள்ளிக்கொண்ட ஜெகந்நாதா-பங்கயபாதா-மாயாவிநோதா-மலர்ந்த செந்தாமரையிலுதித்த மகாலட்சுமிநாதா-மதுசூதா-அகிலஉலகப்பிரக்கியாதா-க்ஞானபோதா நவநீதா-சோதிப்ரகாசா-சர்வேசா-ஜெகதீசா-பக்தநேசா-விசுவாசா-வைகுந்தவாசாயென்று பற்பலவிதமாகத்துதிக்க எம்பெருமான் கிருபைகூர்ந்து, பெரியதாசருக்கு யாதொரு முயற்சியாலும் விபத்து நேரிடா வண்ணம் கடாக்ஷிக்கப் பிறகு தூதர்கள் நடுகுளத்தில் மிதந்துக்கொண்டிருக்கும் பெரியதாசரைக்கண்டு விந்தையடைந்து ராஜனுக்குத்தெரிவிக்க, அரசன் ஓ மந்திரி அந்த துஷ்டனை அநேக விதமாக சங்கடங்களைப் படச்செய்வித்து பார்த்தும்அவனது திரேகம் இளைக்கவுமில்லை, காயவடுவுமில்லை, நலியவுமில்லை, மேலும் இத்தனை சிரமைப்படுத்தியும், முகவாட்டமுமில்லை. திரேகமோ மேலுமேலும் காந்திரமாகிறது, முகத்தில் அழகு விசேஷிக்கிறது, அன்னியிலும் நமது தூதர்கள் செய்யும் வேதனையினல் கிஞ்சித்துகூடகண்களில் ஜலம்வராது அனந்தமாகிய தண்டனைகள் செய்தும், இவனுக்கதுவிஷயத்தில் லவலேசமும் பயமில்லாமல், பன்னகசயன-பரம்புருஷா பிரகலாதன வரதா-நரசிங்காவென்று துதிசெய்கிறன். இதென்ன விந்தையாகவிருக்கிறது, எந்த முயர்ச்சியினலும் சாகவில்லை, இதையோசிக்கில் பெருத்த வாச்சரியமாகத் தோற்றுகிறது. என்று சொல்லி அரசன் இன்னமொருயுக்தி செய்வோமென்று தூதர்களை யழைத்து அந்த துராத்மாவின் தேகமுழுதுஞ் சூட்டுக்கோல் கொண்டு சூடுபோடுங்களென்று ஆக்ஞைசெய்தான். அந்தப்படியே தூதர்கள் விராட்டிகளைக்கொண்டுவந்து மலையைப்போல வடுக்கி சூட்டுக்கோல்களை அதில் பொருந்தச்செய்து அக்கினியைமூட்டி பெரியதாசரைக் கொண்டுவந்து நிறுத்தி, அவரது திரேக முழுதும் திருமண்காப்டைப்போலச் சூடுபோட்டு அவ்வூரையாளும் ராஜன் முன் கொண்டுபோய் நிறுத்தினர்கள்.

அப்படி கொண்டுவந்துநிறுத்தின தூதர்களை நோக்கி ஓ தூதர்களே! இந்த துஷ்டனைக் கழிவிலேற்றுமென்று சிலவு கொடுக்கத் தூதர்கள் பெரியதாசரை இரதத்தின்பேரி லேற்றிக்கொண்டு ராஜமார்க்கமாய் வருகிறபோது, அவ்வூர் ஜனங்கள் யாவரும் பெரியதாசரைக்கண்டு விசனமுற்றுப் புருஷோத்தமா! தாசரை இப்படிச் செய்வது உனக்குநன்று, ஓ! நரசிங்க மூர்த்தி, இதென்ன அநியாயமாக விருக்கிறது சர்வசங்கத்தையும் ஒழித்து, நீயேகதியென்று உன்னை நம்பின தாசருக்கிப்படிப்பட்ட கஷ்டங்களே துக்கு, தயைசெய்து சீக்கிரம் ரக்ஷியும், முன்னம் கரியரசனை ரக்ஷித்த உனக்கிந்த கனவானையாண்டருள் புரிவது ஓரிதா, இதுவோர் பெரிதா, கரிவரதா! பிர

Koviloor Digital Library

கலாதனன் நினைக்கத் தூணினிடமிருந்ததிரா, நர
சிங்கமாகி ஹிரணிய கசிபனை வதைசெய்து ரண
ரங்கசூரா, இனியாகிலுமிந்த ராஜனுக்கரிவிக்க யோ
சனைசெய்யும், பரந்தாமா சகல ஜனங்களும் தயை
யோடு வேண்டிக்கொள்ளும்படி மனதிற் குடிகொண்
ட ஸ்ரீராமா வென்றிவ்விதமாக ஹரிபக்தர்கள் தங்
கள் மனதிற் சிந்திக்க, சூரியகுலத்திற்கோர் பிரகாச
மணிபோன்ற வெம்பெருமான் சாதுக்கள் முறையை
க் கேட்டுத்துரிதமாக ஓடிவந்தார். அதற்குள்ளாகத்
தூதர்கள் பெரியதாசரை அதிசீக்கிரமாகக் கழுமரத்
தின் சமீபத்திலழைத்துக்கொண்டுபோய் சர்வ சித்த
மாக நிறுத்தினார்கள்.

அப்போது பெரியதாசர் ஆதிநாராயணா-பாற்
கடல்சயனா-வேதவேதாந்தமூர்த்தி-மலர்ந்த செந்தா
மரை நிகர் நேத்திரமுடையதேவனே, திருத்துழாய்
மாலை தரித்த மகானுபாவனே வைகுந்தவாசா-அரக்
கர்குல காலா, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா-பூமாதுநாய
கா-கோபாலா-சர்வேசா-சங்கர்ஷணா -அச்சுதா-தார
கபிரம்மசொரூபனே - கோவர்த்தன பர்வதத்தைக்
குடையாகப்பிடித்து, கோக்கள் கன்றுகள் கோபிகை
கள் கோபாலர் முதல் யாவரையும் ரக்ஷித்த தயாள
னே, கோபிகாரமணா-தேவர்கள் சூடாமணி - இந்தி
ரன் முதல் தேவர்கள் கொண்டாடுங் குணசீலனே,
தாடகை சங்காரனே-தவசிகளீசனே-பீதாம்பர தா
ரனே-ஆஸ்ரயித்த சாதுக்களை போஷிக்கும் வல்லவ
னே-சூரிய சந்திர நேத்திரனே-முராசுரனை வதைத்த
வனே-பூமாதுமணாளா-நந்தகுமாரனே- நவநீதசோர
னே-கரதூஷணதிராக்கதர்கள் தமைக் கொன்றவனே
குருகுலத்திற்கு அந்தகனே-முசுகுந்தனுக்கு பிரசன்
னமானவனே-வேணுகான விநோதா-வேதங்களையப
கரித்துக்கொண்டு கடலிலொளித்த சோமுகாசுரனை
வதைத்து, பிரம்மதேவனுக்கு வேதங்களையளித்த
மச்சாவதாரனே உனக்கு வந்தனம், மந்தரகிரி பர்
வதத்தை மூழ்காமல் முதுகினிற் சுமந்த கூர்மாவ
தாரனே உனக்குவந்தனம், இத்தரணியை யோர்பா
யாகச் சுருட்டி பாதாளத்தில்வைத்திருந்த இரணி
யாக்கனை உயிர்துறக்கச்செய்து, பூவுலகைக் கோட்
டில் தாங்கிப் பூர்வம்போல நிலைநிறுத்திய வராகவ
தாரனே உமக்கு வந்தனம், இரணியன் தன் குமார
னை பிரகலாதனை தன்னை துதிசெய்யும்படி உரை
க்க, பிரகலாதன் ஹரிநாமமுரைக்க அதினால் கோபா
க்கிரந்தனாகி அடே துஷ்டா நானே சகல அண்டங்
களுக்கும் நாதனென்று என்னையே யாவரும் துதிக்
கிறார்கள். அப்படியிருக்க, என் வயற்றில் பிறந்து
எனக்கு விரோதியாகி அன்னியனைத் துதிசெய்கிறை
யா வென்று கோபங்கொண்டு பிரகலாதனை அநேக
தண்டனைகளைச் செய்தும் கேளாமல் அன்னிய பக்ஷ
த்திலேயே லயித்திருப்பதைக் கண்டு இரணியகசி
பன் பற்பல விதங்களாக தண்டித்தும் மரணமடை
யாமலிருக்க, முடிவில் நீ துதிசெய்யும் ஹரி எங்கிரு
க்கிறானென்ன, பிரகலாதன் அங்குமிங்குமெங்கும்
தங்கியிருக்கிறானென்ன, இரணியகசிபன் இத்தூணி
லிருக்கிறானோவென, பிரகலாதன் இருக்கிறானென,
இரணியகசிபன் தன்கையிலிருக்கு கதையினால் அத்
தூணைமோதுகிறபோது, அத்தூண்பிளந்து அதிலி
ருந்தும் வெளிப்பட்டு இரணியகசிபுனுயிர்நீக்கிய நர
சிங்க தேவா உமக்குவந்தனம், இவ்வுலகனைத்தும்
ஆண்டு, தேவலோகத்தையும் அடையவேணுமென்
றெண்ணங்கொண்ட மாபலியிடஞ் சென்று மூன்றடி
நிலம் தத்தஞ்செய்யப்பெற்று மண்ணுலகை யோரடி
யும், விண்ணுலகை இரண்டாவதடியாக வளர்ந்து,
மூன்றாவதடியை பலியின் சிரசில் வைத்து,பாதாளத்
தழுத்திய திருவிக்கிரமனே உமக்கு அநேக வந்த
னம், ஜமதக்னி புத்திரனாக வந்து க்ஷத்திரியரர்கிய
அரசர்கள் பூண்டை பூமியில் வைப்பதில்லையென்று
விருதுதரித்து, மன்னர் மண்டலேசரை யெல்லாங்
கருவறுத்த பரசுராமனே உமக்கு வந்தனம், க்ஷத்தி
யம் நிலைநாட்டுவதற்காக தசரதச் சக்கிரவர்த்திக்குத்
தனயனாக உதித்து, கோசிகர் யாகசகூணஞ்செய்து
அகலிகைப் பாததூசி அணுவால்பெண்ணுருவாக்
கிக் கௌதமரிடம் சேர்த்துச் சரயூநதியைக்கடந்து
மிதிலாநகர்சேர்ந்து சிவன்வில்லை யொடித்துச் சீதை
யை மணம்புரிந்து ஜனகமகாராஜனிடம் விடைகொ
ண்டு அயோத்திமாநகரை நாடிவருமார்க்கத்தில் பர
சுராமர் கெர்வத்தை பங்கப்படுத்தி, அயோத்திமா
நகரடைந்து கைகேசியின் நேமனத்தால் சீதாலட்சு
மணருடன் கானகமடைந்து சித்திரகூடத்தில் வசித்
திருக்க, இங்கு சக்கிரவர்த்தி வானுலகடைய வசிஷ்
டர் பரத சத்துருக்னர்களை வரவழைத்து, பரதரால்
பிரேதசமஸ்காரஞ் செய்வித்து, பரதருக்குப் பட்டங்
கட்ட யெத்தனஞ்செய்யப் பரதர் தடுத்துத்தாயை
வைது உம்மை நோக்கிச் சித்திரகூடம்வந்து நின்
னால் தரப்பட்ட பாதுகையைப் பெற்று நந்திக்கிரா
மத்திலிருந்து அரசாண்டிருக்கப் பின்பு சீதாலட்சு
மண சமேதராகி, தண்டகாவனஞ் சென்று முனிவர்
களுக்கு அபயஸ்தந்தந்து பஞ்சவடியடைந்து, சூர்ப்
பனகியைபங்கப்படுத்தி கர தூஷணர்களை வதைத்து,
சொர்ண மான் பின்சென்று மாரீசனைச் சிதைக்க
அவன் விழும்போது சீதாலட்சுமணாவென்று கூவ
அக்கூக்குரலால் சீதை திடுக்கிட்டு இலட்சுமணரைத்
துரத, அவரும் சீதையை விட்டுப்பிரிய அந்தச்சமயத்
தில் சீதையை ராவணனெடுத்தேக ஜடாயு வழிமறி

Koviloor Digital Library

த்து யுத்தஞ்செய்து மூர்ச்சையாகிவிழ, ராவணன் சீதையோடு லங்கைசேர்ந்து, சீதையை அசோகவனத்திலிருத்திக் காவலமைத்து தினமும் வந்து சீதையைக் கெஞ்சிக்கொண்டிருக்க இப்பாலிராம லட்சுமணர்களிருவரும் பர்ணகசாலையில் வந்து பார்க்க சீதையைக்காணாமையால், இருவருந்தேடிச்சென்று ஜடாயுவினால் சங்கதியறிந்து அவருக்குங்கருமகாரியங்களைமுடித்து, அதைவிட்டு சீதையைதேடிக்கொண்டு நடந்து, கவந்தனைவதைத்துப் பம்பாதீரஞ்சேர்ந்து சவரிபூசையையேற்று மாங்கனிகளைப் புசித்து ஆஞ்சனேயரைக்கண்டு சுக்ரீவனைநேசித்து, வாலியைவதைத்துக் கிஷ்கிந்தாபுரத்தைச் சுக்ரீவமகாராஜனுக்குப் பட்டங்கட்டி, மாருதியினால் சீதையிருப்பிடமறிந்து வானரசேனைகளோடுதென்கடலைக்கண்டு சேது பந்தனஞ்செய்து, விபீஷணர்க்கு சிரஞ்சீவி பட்டமளித்து லங்கையைக்கிட்டி ராவணாதிராக்கதர்கள் யாவரையும் மடித்து, விபீஷணர்க்கு லங்கையைப் பட்டங்கட்டி புஷ்பகவிமானமீது சீதா லட்சுமண சகிதராய், அங்கதன் சுக்கிரீவமகாராஜன் முதல் எழுபத்திரண்டு வெள்ளம் வானர சேனைகளோடும் அயோத்திமா நகரடைந்து தேவேந்திராதி தேவர்கள் தொழ, சகல ராஜர்களும் காணிக்கை கப்பங்களிட்டு சேவடியில்விழ, வசிஷ்டர் விஸ்வாமித்திரரிருவர்கள் புகழப் பட்டாபிஷேகஞ்செய்து திகழ வீற்றிருந்த ஸ்ரீராமா உமக்கு மேலுமேலு மனந்தவந்தனம். வசுதேவ ரோகணிக்குத் தனயனாகவுதித்து, பிரலம்பாசுரர்முதலினரை மண்ணில் மாளவடித்தபலராமனே உமக்குவந்தனம். தேவகி வசுதேவருக்கு புத்திரனாயுதித்து நந்தகோபன் மனைக்குச்சென்று, அசோதைபிராட்டியினிடம் வளர்ந்து, பூதகி சகடாசுர திருணாவர்த்த பகாசுர தேனுகாசுர கார்த்தபாசுர சிசுபால குவலயாபீட முதலான பல அசுரர்களை உயிர்மாயவடித்து, பீஷ்மமகாராஜன் புதல்வியாகியருக்குமணி ராதா முதலாகிய அஷ்டலட்சுமி சமேதனாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யுமக்குவந்தனம், இக்கலியுகத்தில் தருமங்குறைந்து அதருமம் மேலிட்டு, பிள்ளைகள் தாய் தந்தையர்களை வைவதும், பத்தினியோடுகூடி தாய் தந்தையரை அவமதிப்பு செய்வதும், மாமியாரையும் மாமனையு மருமகள் அலக்ஷியமாய்ப் பேசுவதும், ஜாதிபேதமறியாத இணங்கியிருப்பதும், வீட்டிலுள்ள வஸ்துகளைத்திருடி விற்பனைசெய்வதும், புருடனை யேதுக்குமில்லாமற் பேசுவதும், தாயார் வீட்டிலேயே சதாயிருக்க வெண்ணுவதும், புருடனைவிட்டு அன்னியபுருடனைக் கூடியிருப்பதும், ஒருவன் மனைவியை மற்றொருவன் புணர்வதும், வேதபாராயணஞ் செய்வதைவிட்டு நீசபாஷையிற்புகுந்து தேர்ந்து ஆசாரங்கள்கெட்டு அனுசாரர்களாகி சதா மூவாசையில் மூழ்கி யிருக்கிறார்கள், ராஜரீகங்கெட்டு அநீதியாகிவிட்டது. கூடியசீக்கிரத்தில் நீச்சகுலத்தில் மற்றகுலங்கள் சேர்ந்து ஏகமாய்விடும்போலிருக்கிறது. பகவத் பக்தி கிஞ்சித்துங்கிடையாது. வேடிக்கைப் புருஷாளாகவிருக்கிறார்களே, அன்னியில் ஒருத்தராகிலும் பக்தி பூர்வகமாய் நாராயணா-கோவிந்தா நாமத பாராயண வென்று துதிசெய்வ தரிதாகவிருக்கிறது, இதையோசிக்கில் கலிகாலமகிமையின்கொடுமை. இப்படிப்பட்ட துஷ்டர்களை யெல்லாம் வதைத்துச் சிஷ்டர்களை ரக்ஷிக்கும் பொருட்டுக் காலத்தை எதிர்பார்த்து, குதிரை முகங்கொண்ட கலிகாவதாரனே உமக்கு மேலுமேலும் அனேகமாயிரம் வந்தனம். ஓ நரசிங்க தேவா! உண்மையாக ஆபத்தடைந்தயான் மனதில் நினைத்துருகியும், உனக்கித்தனை கடினமனமா, இந்தக்கஷ்டத்தைப் போக்குவதற்கு வேறெந்தவழி எனக்கின்னமெந்தகெதி, எந்தமார்க்கமாய் ஜீவிப்பேன் உம்மையன்றி வேறுதெய்வங்களைத் தொழுதறியேன் காமித்துச் சரணமடைந்தேன், உமது சித்த மெப்படி செய்யினும்சரி ஸ்ரீலட்சுமீசா-நாராயணா மேலும் இலவங்காய்களைக்கண்டு ஓர் கிளியானது, இன்னுஞ் சிலநாளிலிதுகள்பழுக்கும் இதைப்புசித்துக் காலந்தள்ளலாமென்று களிகொண்டு அக்காயின்பேரில் கண்களை வைத்துப் பார்த்திருந்தும் ஒருகனியுங் கிட்டாமல் வேசாரிச் சென்றதுபோல; அடியேன் உம்மைச் சேர்ந்து பலத்தை யடையவேணுமென்று அவாகொண்டு வெகுநாள் காத்திருந்து வேண்டி வேண்டி யாதொருபலனுமடையாமல், மிகுந்த கஷ்டத்தை யடைந்துவிட்டேன், ஓ ஜெகதீசா! ஹரி ஹரீ-கிருஷ்ணா அச்சுதா - அமரர்கள் ஸ்தோத்திரா - அடியேன் முறையைக்கேட்டு வாராயோ, முரஹரீ! என்னையாள சதாகாலமும் உமது பாதத்துதியை யான் மறக்கமாட்டேன், துரிதமாய்க் கருணைசெய்யும், ஓ சித்விலாசனேயெனத் துதிசெய்துக்கொண்டே கழுமரத்தை நோக்கினர். தக்ஷணமே அது திக்கென்றெரிந்து பஸ்பமாகிவிட்டது.

5-வது பகவான் பெரிய தாசரை அனேக தண்டனைகள் செய்ததற்காகக் கோபித்து கொரடாக்களினால் அரசனை அடித்த அத்தியாயம்.

இதைக்கண்ட தேவேந்திராதிதேவர்களும், ரிஷிகளும். அஷ்டதிக்குப்பாலர்களும் சாதுஜனங்களும்

Koviloor Digital Library

ஜனங்களும் ஆஹாஹா வென்று ஆச்சரியப்பட்டார்கள் பாவிகளும் அற்பர்களும் துஷ்டர்களும் இதொரு ஆச்சரியமா மந்திரபல மிருந்தால் இதற்கு மேலான காரியங்களுஞ் செய்யலா மென்று அவமதித்தார்கள் இந்தப்படி ஜெனங்கள் பற்பல விதங்களாகப் பேசிக்கொள்ள சர்வலோக சரண்யரான அரி புருஷோத்தமன் அப்போது மெத்த வேகமாய் அரசனிடத்திற்குச் சென்று அடே மூடா ஞானமிலாக் குடிகேடா வஞ்சகேடா அருள்கேடாமருள்கொண்ட குருடா ஜென்மம் வந்த வகையறியாமல் சாஸ்திர சம்பந்தமாய் சஞ்சரியாமல் ஆத்மாபகாரஞ் செய்த திருடா மனம்போனபடி நடக்கும் மூடா, சுயபுத்தியில்லாக்கபடா யென்றுவைது, கருணை யென்பது கிஞ்சித்து மில்லாமல் என்னுடைய தொண்டனை மெத்தவும் தண்டனைகள் செய்தாய் உன்னை லேசில் விடேனென்று கொரடாக்களைக் கொண்டு புறட்டி புறட்டி யடித்து மறைந்தார்.

அவ்வடிகளை தாளமாட்டாமல் அரசன் ஓ வென்று கதரியழுது தூதர்களையனுப்பி பெரியதாசரை அதிக துரிதமாக அழைத்து வாருங்களென அத்தூதர்கள் ஓடி அரிதாசரைக் கழுவிலேத்த வேண்டாம் நகரில் வெகு விந்தைகள் நடந்தது விடுங்களென்று சொலவி அத்தூதர்கள் பெரியதாசரை கூடவழைத்துக் கொண்டு ராஜன்முன் வந்தார்கள் பக்த சிகாமணியைக் கண்டு நரபதி திடுக்கிட்டெழுந்து பெருங் காற்று மழையினுல் சல்லிவேறுமற்று மரம் எப்படி விழுமோ அத்தன்மையாக உலகாதிபன் தாசரது உபதிருவடிகளில் விழுந்து தெண்டனிட்டெழுந்து நின்று ஓ மகானுபாவரே மிகுந்த புண்ணிய புருஷரென்று உமது மகிமையை யறியாமல் பாவியாகிய யான் அறிவு கெட்டு தெளிவற்று மிகுந்த தண்டனைகளால் இம்சைப்படுத்திய கொடிய பாவியும் மகாகபடனுமான என்னை சபிக்காமல் தங்கள் வாக்கினுல் வேறொன்றுஞ் சொல்லாமல் புதல்வன் செய்த குற்றங்களைத் தந்தை யெண்ணுமல் மன்னித்து காப்பது போல அடியேனை கருணையோடு ரக்ஷியும் ஓ சாது சத்பாத்ரனே சகல ஜனஸ்தோத்திரனே திடமான காத்திரனே நற்குல கோத்திரனே யென்று நரபதி வெகுவாய் வேண்டிக்கொள்ள திரேகாபிமான மற்றவரும், தேவாதிதேவனை மனதில் சதா பொருந்த வைத்தவரும் சகல கலைகளும் நன்றுய்க்கற்றவரும் எங்கும் பிரசித்தகீர்த்தி பெற்றவரும் ஜீவகாருண்ணிய முதலான நற்குணமுற்றவரும் ஆகிய பெரிய தாசர் அரசன் செய்தவபசாரங்களை மனதிற் கொள்ளாமல், தூஷணைவார்த்தைகளொன்றும் விள்ளாமல் ஓ ராஜனே, என்னை அனேகவிதமாகிய தண்டனைகள் செய்த கஷ்டத்திற்கு பலன் நரசிங்கமூர்த்தியின் தரிசனம் உமக்குண்டாகியது ஆகையால் நீர்மெத்த புண்ணிய புருஷன், இவ்வுலகில் மிகவும் தன்னியன் பகவான் கைகளால் அடிப்பட்ட கண்ணியன் ஆதலால் அவசியம் நற்கதியடைவாய் விசனமின்றி பகவானைத் துதிசெய்துக் கொண்டிருமென்று சொல்லிப் பெரியதாசர் அவ்விடம்விட்டு புரப்பட்டு சில சாதுக்களுடன் சேர்ந்து, வாசுதேவா - நாராயணு கிருஷ்ணு கோவிந்தா - கோபாலா - வைகுந்தவாசா யென்று துதிசெய்துக்கொண்டே சந்நிதிக்குட்புகுந்து பெரியதாசர் பகவானைத் துதிசெய்கிருர்.

விருத்தம்.

திருவுறை மார்பா தேவர்
தினதொழும்பாதா தூய
யுருவம் ரொளியே வேத
முறையிடுந் தனியே மேலாந்
தருமமெங் குந்தழைக்கத்
தரைதனி லுதித்து வான
மாளாவிய சோலை சூழ்ந்த
மாதஞ்சை நகருளானே. 1

ஆதி' த் தியாந்தனுகி
யனைத் துளும் புரம்புமான
சோதிநற் குலக் கொழுந்தே
சுயம்பிர வெளியே ஞானப
போதனே பிரம ருதிப்
புரந்தரன் தேடிக் காணு
நாதனே பொழில்சூழ தஞ்சை
நகருரை ஹரியெங் கோனே. 2

எத்தனையோ ஜென்மங்க
ளெடுத்தயர் வுற்று மிக்கப்
பித்தனையாகி மெத்தப்
பேயனைப்போல காமச்
சித்தமே கொண்டு மாதர்
சிறப்பிலா வலையுட் பட்டேன்
கர்த்தனே யெனையாட் கொள்ளுங்
கனமுட னரியெங் கோனே. 3

எனதுடற் பொருளு மாவி
யென்றுமே யிடை விடாது
நினது யடிகளுக்கு
நெறியுட னளித்த வேந்தன்
கனமுறை கேட்டிடாத
காரணம் சாதோ மிக்க
மனம்பெரு தஞ்சை மேவு
மாதவா ஹரி கோவிந்தா. 4

Koviloor Digital Library

நியவல் வினையால் வந்த
சென்ம சாகரத்தை நீந்தத்
துயநின் பத்தி தந்து
துயரதை நீக்கிப்பெற்ற
தாயென வாண்ட நின்றன்
தாள்கெதி யென்று வந்தேன்
மாயவா தஞ்சை நின்ற
மதுகைவிட வரியெங்கோனே 5

கருப்பையி லடையா தென்றுங்
காத்தெனை யாளுமையா
மனப்புனற் றண்டுழாய
மலர்மாலை மார்பனே நின்
றிருப்புகழ் பாடியாடித்
தென்னவர்க் கிலக்காகாமல்
விருப்புடன் றஞ்சை மேவும்
விமலஸ்ரீ ஹரியெங் கோனே 6

உன் புகழ் தன்னையோத
யுலகினி லொருவருண்டோ
வென்பது டளிங்கு போல
விளங்கிட வரிந்திருந்துங்
கன்மன மந்த புத்திக்
கழிரிட வென்னு லாமோ
தென் தஞ்சை நகரதேவ
தேவஸ்ரீ ஹரியெங்கோனே 7

எத்தனை வேண்டினாலு
மேனென்று கேளாதேனோ
சித்தமென் கல்லோ கிஞ்சித்
தேனுங் கரையாதோ வந்தோ
பத்தனே வெறு வேலென்று
பகர்ந்திட நின்வாய் முத்து
கர்த்தனே சிந்திப்போமோ
கடல்வண்ண ஹரியெங்கோனே. 8

கெற்பத்தி லண்டகோளங்
கேடுரா தமர்த்திக் காத்த
வற்புதவடிவே பின்பு
வகையுட னுமிழ்ந்து விருத்திக்
கற்பனை செழிக்க வேபாற்
கடலதிற் கண்வளர்ந்த
விற்பன விவேகியான
வீரஸ்ரீ ஹரியெங் கோனே. 9

முத்தொழி லுக்கு மாதி
முதல்வனே மூர்த்திசெய்ச்
சித்திர மித்ரஜாலச்
செய்கையை யோதுதற்கு
வித்தையிற் சிறந்தவேதா
வொடுசிவனிந்திரன்வாணி
மற்றவ ராலுன் கீர்த்தி
மதிக்கவாகா தென்கோனே. 10

சுத்த சத்துவஞானச்
சுகமுனிதன் வாக்குஞ்
சித்தத் தெட்டாத சாமி
சிறுவன் செய்பிழை யெண்ணாது
தித்திக்குங் கட்டி தேனே
தேர்ந்த நல்லமுர்த பாகே
அத்தனை யாளுந் தஞ்சை
யமர் நரஹரி யெங்கோனே. 11

பெண்டிராற் பிள்ளையாலும்
பெருவதோர் பலனு மில்லை
என்றுணராது வேழை
இனிதென விணங்கி நம்பிப்
பண்டியான் பட்டபாடு
பகரவும் போமோ வைய்யா
தண்டுழாய் மாலை மார்பா
தமியனைக் காரெங் கோனே, 12

அளித்திய மலபாண்டத்தை
அரியாமல் நித்திய மென்று
சினத்து செல்வச் செருக்கால்
சிறப்புடன் களித் திருந்து
தனி முதலான நின்றன்
றுள்களைத் துதிசெய்யாமல்
துணிவுகொள் பாவியான
துஷ்டனைக் காரெங்கோனே. 13

அம்புயை மணாளா வின்ன
மல்லல் பட்டுழ வாகாத்
தெம்பழிந் தீனனாகித்
தோராத உள்ளந் தன்னால்
தப்பித்து பிரம்மை கொண்டு
தளர்வடைந் திட்டே னந்தோ
எம்பெருமானே வந்து
ஏழையைக் காருங் கோனே. 14

இப்படி யலைய விட்டா
யென்கதி இனி யாரையா
எப்படி உயிர் பெற்றிந்த
உலகினி லிருப்பே னின்றன்
சொற்படி நாமத் தியானஞ்
சோர்வின்றிச் செய்யு மென்னை
ஒப்புட னாளவாரு
முயர்தஞ்சை நகரு ளானே. 15

துப்பில்லா வேந்தன் மீதிற்

Koviloor Digital Library

தப்புக் களென்ன வின்னுந்
தகாது மதருள் தனக்கு
துப்புடையோரை யாள்வ
தோர்பெரிதனறி கீர்த்தி
இப்படி யெம்போல்வாரை
ஏங்கவைப்பது மிகழ்ச்சி. 16

தந்தையுந் தாயும் நீயே
தமக்கையுந் தங்கை நீயே
பந்துவும் பாராதம் நீயே
பாரினிற் பலமும் நீயே
சொந்தநற் சொர்னம் நீயே
சொர்விலாப் பொருள் நீயென்றும்
எந்தன துளத்தில் வைத்து
இருந்திடச் செய்தேன் நாதா. 17

வீடும்நீ நாடும் நீயே
வெய்யவ னுருவம் நீயே
மாடும்நீ மாவியும் நீ
மணந்த பெண்டிரும் நீயே
தேடுதற் கரியதான
சித்தொடுயசித்து நீயே
ஆடும்நீ யகிலம நீயென்
றகத்தில் வைத்தேனென் கோனே. 18

சந்திரன் சனியும் நீயே
சரமொடுவசரம் நீயே
அந்திர னக்கினி நீயே
ஏகனும் போகன் நீயே
மந்திர மணியும் நீயே
மகிழ்ச்சியும் புகழ்ச்சி நீயே
தந்திர மியாவும் நீயே
தஞ்சைமா நகருளானே. 19

அகிலமெல்லாம் படைத்தவ நீ
அகிலத்தை காத்தவ நீ
அகிலத்தை யழிப்பவ நீ
அகிலத்தில் மூர்த்தியு நீ
அகிலத்தில் கீர்த்தியு நீ
அகிலத்தில் தூஷணை நீ
அகிலத்தில் பூஷணை நீ
அகிலம் நிறைந்த ஹரியே. 20

என்றிந்தப்படி பெரியதாசர் தோத்திரஞ் செய்து தன்னை மறந்து பிரம்மானந்தத்திற் சொக்கியிருக்கத் தற்சமயத்தில்.

6-வது ஸ்ரீ ரங்கநாதர் பிராமணவுருத் தரித்துவந்து பெரியதாசரை திருவரங்கத்திற் கழைத்துபோகும் அத்தியாயம்.

சுலோகம்

ஸர்வோப நிஷதோ காவோ
தோக்தா கோபாலநந்தநஃ
பார்த்தோ வற்சஸ்ஸுதீர்ப்போக்தா
துக்தப் கீதாம்ருதம் மஹத்

என்பது :—சகல உபநிஷத்துக்களையும் கோக்களாகவும், அர்ச்சுனனைக் கன்றாகச் செய்து கோபாலனாகிய தான் கீதாம்ருதமெனும் பாலைக்கறந்து சாதுக்களென்னும் போக்தர்களுக்கு கொடுத்த சாக்ஷாத் ஜெகதீசனானவர் நான்கு தோள்களுடன் கிரீட மாகருண்டல கேயூரமுதல் திவ்யாபரணங்களுடன் ஸ்ரீவற்ச கௌஸ்துபங்களுடன் வனமாலை வனசமாலைகளுடன் சகல ஜெகத்துக்கும் அன்னையாகிய ஸ்ரீ மகாலட்சுமிக்கு ஆலயமாகிய விசாலமாகிய மார்புடனும், சங்கு சக்ராதி திவ்யாயுதங்களுடனும், கருணை பூரணமாகிய சேவிகள் வரையில் நீண்டகண்களுடன் புன்னகையோடு கூடிய முகாரவிந்தத்தோடு வரதாபய கைகளுடன் சேவைதர, வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத பரம்பொருளைக் கண்டு பெரியதாசர் தீர்க்க தெண்டனிட்டெழுந்து நின்று சிரங்களின்மேல் இருகரங்களை குவித்து பற்பல விதங்களாகத் துதிசெய்யக்களித்து ஓ உத்தம பக்தியிற்சிறந்த சத்வகுண தொண்டனே நாமிருவரும் பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்திற்கு போய்வரலாம்வாருமென்று தனது சுய சரீரத்தைமாற்றி பிராமண ரூபங்கொண்டு தாசரை யழைத்துக்கொண்டு திருத்தமாய் கட்டப்பட்ட தஞ்சைமாநகர் கோட்டைவாயல் தாண்டி வருகிறபோது பகவான் பெரியதாசருக்கு கஸ்தூரி திலர்தமிட்டார் மூன்று லோகங்களிலுமுள்ள வஸ்துக்கள் விற்பனை செய்யும் குச்சிலிக்கடை வீதியில் வருகிறபோது பெரியதாசர் சிரேகத்தில் எம்பெருமான் புனுகுபூசினர் அதைவிட்டு வடிவாற்றுக்கரை சமீபத்தில் வருகிறபோது பச்சைகற்பூரம் சேர்த்த சந்தனம் பெரியதாசருக்குப் பூசினர் பின்பு அதைவிட்டுக் கருந்திட்டகுடிக்குச் சமீபம் வருகிறபோது திவ்வியமான வனமாலை-வனசமாலைகளை பெரியதாசருக்குப் போட்டார் அதைவிட்டும் விமலமாகிய ஜலம்பெருகும் பின்னாத்துக்கரை சேரவருகிறபோது அமுதமாகிய மணம் பொருந்திய அத்தசை பெரியதாசருககு பூசினர் அதை

Koviloor Digital Library

விட்டு கோபமின்றி ரங்கநாதனும் தாசரும் அம்மை பேட்டைக்கு சமீபத்தில் வருகிறபோது தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய எம்பெருமான் பெரியதாசருக்கு மலர்மாலைகளைச் சூட்டினார் அதை விட்டு கருணைக்கடலும் பெரியதாசரும் கருங்குடா த்திற்குச் சமீபமாகவருகிறபோது பெரியதாசர்பே ரில் ரங்கநாதன் பன்னீர்தெளித்தார் அதைவிட்டு அ ண்டஜகமனனும் ஹரிதாசரும் கண்டூருக்குச் சமீப மாய் வருகிறபோது மெத்த பச்சைக்குடை வெயில் படாமல் பெரியதாசருக்கு ஸ்ரீரங்கநாதன் பிடித்தார் அதைவிட்டுப் பூமாதுநாயகனும் பொருமையில் மிகு த்தாசரும் திருப்பத்தூர் சமீபம் வருகிறபோது காமன் தந்தை வஸ்திராபரணங்களை பெரியதாசருக் களித்தார் அதைவிட்டுத்திறமாக ஹரிதாசரைக்கூடி திருக்காட்டு பள்ளிக்குச் சமீபமாய் வருகிறபோது வரலட்சுமிநாதன் ஹரிதாசருக்கு கவரிகொண்டுவீசி ரினார் அதைவிட்டு யாதொருகுறைவுமின்றி ஸ்ரீரங்க நாதன் கோயில் சமீபமாய் வருகிறபோது பெரிய தாசருக்கு அமலமாகிய ஆலவட்டம் பிடித்தார். அ தைவிட்டு அக்கரையோடு அரி புருஷோத்தமனும் அரிதாசரும் அணைக்கட்டுச் சமீபத்தில் வருகிறபோ து பகவான் மிகுந்த பலகாரங்களுடன் பெரியதாச ருக்கு அன்னமளித்தார் குறைவற்ற மரியாதைகள் செய்துக்கொண்டு காவேரிக் கரையோரம் வருகிற போது பரமபுருடன் வெற்றிலையும் பாக்கும் வெகு மேன்மைபாக பரமபாகவதருக் களித்தார் அதை விட்டு சிலதூரம் நடந்துசம்புகேஸ்வரத்துக்குச் சமீ பத்தில் வருகிறபோது ஸ்ரீஹரிபெரியதாசரை அவ் விடத்தில்விட்டு அவர் கண்களுக்குத் தோன்றாமல் மாயமாய் மறைந்தார்.

அதைக்கண்ட பெரியதாசர் நம்மோடுகூடவந்த ஸ்ரீரங்கநாதனை காணோமென்று விசனமடைந்து ஸ்ரீ ரங்கா-உம்மைத் துதிசெய்துக்கொண்டு வேகமாய் வருகிற மார்க்கத்தில் ஓ நரசிங்கா-ஸ்ரீ ரங்கா-பவபங் கா-மங்களாங்கா-நீ மாயமாகிய நடனம்புரிந்து என் னைக்கபடமாக வஞ்சித்துவிட்டு எப்படிப்போனாய் என் கண்ணாரக்கண்டு சேவித்த உம்மை மறுபடியு முனை எப்போது காணுவேன் எப்போதும்மை சே வித்தேன் பெற்ற தந்தையே எனைபொண்டியாக விட்டு எப்படிப்போனாய் எனது பெரிய நிதியென் றும்மை நம்பியிருந்தேனையன்றி எந்த பாவமுமறி யாத என்பேரில் கோபங்கொண்டு எப்படிப்போ னாய் உச்சாகமுண்டாகும்படி அநேகவுபசாரங்களி னால் ஆநந்த சாகரத்தில் நின்று என்னைமிகப் பரிபா லித்துவிட்டு தடாலென் றெப்படிப்போனீரென்று சிந்தித்துக்கொண்டே ஸ்ரீரங்கம் சேரவருகிறபோது தேவர்கள் ஆகாயவீதியிலிருந்து மலர் மழைசொரிந் தார் பெரியதாசர் வருகிறாரென்று பேரி மிருதங்க முதலாகிய வாத்தியங்களொலிக்க வார்த்திகர்கள். பாலர்கள்; விப்பிரர்கள்-சுவாமிகள் முதலானோரும் எதிர்கொண்டு நடந்துவர சகலரும் கொண்டாட தாசர் சந்நிதிக் கெதிராகவரவே பகவான் மலர்ந்த செந்தாமரை முகத்தோடு நன்றாக ரங்கநாதர் சே வையளிக்க அர்ச்சகர்கள் தீர்த்தம் திருமாலை ஸ்ரீ சடகோபம் திருத்துழாய் கொடுக்கப்பெற்று பெரி யதாசர் ஸ்ரீரங்கநாதனைத் திறமாக மனதில் நிறுத்தி அநேகவிதங்களாக துதித்துச் சொல்லுகிறார் ஓ ஜெ கதீசா சிறிபிராயம் முதல் நரசிங்க மூர்த்தியை துதி செய்திருந்தேன் அந்த உருவுடனே வந்து அடியே னை யழைத்துவந்து விட்டு மறைந்து ஸ்ரீ ரங்கநாத னாகசேவைதருவது தருமமோவென்றுருகும் தாசர் காண, பகவான் உடனே நரசிங்க உருவங்கொண்டு சேவைதர அவரைச்சேவித்து சகல இந்திரியங்களை மறந்து திரமனதுடன் நிற்கும் பெரியதாசரை திரே கத்துடன் நரசிங்கமூர்த்தி ஆனந்தமாக அபிக்கியஞ் செய்துக்கொண்டார்.

ஸ்ரீ ஹரியே நம:

சீரான பெருமைபெற்றுச் செழுமுகம் செந்திருமார்ப நாளுஞ் சிறந்துவாழ
ஏரான இதைப்படிப்போர் கேட்போர் வாழ என்றும்விடாதநாட்டிப்போ ரிசைந்து வாழத்
தீராத நோய்களெல்லாந் தீர்ந்துவாழத் திடபக்தி வைராக்கியஞ் செழித்து வாழப்
போரதவுளங்கொண்ட பெரியோர் வாழப் பெரியதாசர் கீர்த்தி மென்மேற் பெருகிவாழ.

பெரிய தாசர் சரித்திரம்.

முற்றிற்று,

Koviloor Digital Library

ஸ்ரீ

ஸ்ரீ ராஸ்து.

ஸ்ரீ பாண்டுரங்கப் பரப்பிரம்மணே நம:



துக்காராம் சரித்திரம்.

துதி விருத்தம்.

நாமதேவ ரம்சங் கொண்டின்னாட்டித் தேவநகரமதில் வந்துதித்து வர்த்தகத்தால்
க்ஷேமமடைந் திரண்டுபெண் டிர்களோடுச் சிறந்தவில்லறதருமம் நடாத்தி மிக்க
நேமமொடு வெகுமகிமை நிறைந்து மோக்ஷம் நிதியடைந்த துக்காரா முபயபாதத்
தாமரைக ளணியாகச் சிரத்தினுக்குத் தரித்துய்வோமென்றுளுந் தாழ்ந்து போற்றி.

1-வது துக்காராம் இல்லர தருமம் நடத்திய அத்தியாயம்.

ஸ்ரீ மஹா லக்ஷ்மீகடாக்ஷம் பொருந்திய தேசங்களிற் சிறந்த அளகாபுரத்திற்கு மேற்கே தேவநகரமென்றோர் நகரமுளது அதில் மராட்டியர் குலத்திலுதித்தவர் மாநிதியென தாசர்களை மதித்தவர் (ஹேகோபாலகஹே க்ருபா ஜலநிதே ஹேஸிந்துகன்யாபதே ஹேகம்சாந்தக ஹேகஜேந்திர கருணாபாரீண ஹேமாதவா ஹேராமாநுஜ ஹேஜகத்ரயகுரோ ஹேபுண்டரீகாக்ஷமாம் ஹேகோபீஜனதபாலயபரம் ஜானுமிநத்வாம் விநு) என்று பகவந்நாமங்களை மனதிற்பதிப்பித்தவர் துக்காராம் சுவாமியென்ற நாமம் பெற்றவர் ஏழைகளுக்கு ஈவு கொடுப்பதில் மிகுந்த பிரியஞ்செனித்தவர் ஜீவகாருண்யத்திற் சிறந்தவர் அநீதிமார்க்கங்களைத் துறந்தவர் உத்தமமாகிய குணங்களை நிறைந்தவர் பாண்டுரங்கா பக்தசங்கா மோகனுங்கா நரசிங்கா வென்பாந்தவர் சகலகலையுங் கற்றவர் இகவெண்ணங்களற்றவர் மிகுகனம் பெற்றவர் களங்கமிலாமனமுற்றவர் கமலநேத்திரனான கார்வண்ணன் பதத்தை இச்சித்தவர் வர்த்தக ஜீவனஞ் செய்திருந்தார் இவருக்கிரண்டு பத்தினிகளுண்டு அவர்களில் மூத்தாளிடம் இரண்டு புதல்வர்கள் பிறந்து வளர்ந்து வந்தார்கள் துக்காராம் சுவாமி வர்த்தகஞ் செய்துக்கொண்டிருந்தும் மூவாசையுமற்ற துலாதாரனைப்போல் பரிசுத்த சித்தராகி பிள்ளை பூச்சியைப்போல் சம்சாரத்திலொட்டியும் ஒட்டாமலும் நிரந்தரம் ஸ்ரீ பாண்டுரங்கனைத் துதிசெய்தும் அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் பகவானுக்கு திருவாராதனம் பக்திபூர்வமாய் நடத்தி வந்தார் இப்படி இருக்க பெருத்த க்ஷாமம் நேரிட்டு ஆகாரங் கிடைப்பது அரிதாகி ஜெனங்கள் இலைகளைப்பசித்துகாலத்தைக் கழித்திருந்தார்கள் இப்படிப்பட்ட கதியில் துக்காராம் சுவாமிகள் மூத்தமனைவி சரீர வியோகமடைய அவ்வுத்தமிக்கு யாவத்கர்மங்களுஞ் செய்து முடித்த சிலநாளைக்குப் பின் அவ்வனிதையின் புதல்வரிருவருக்கும் தந்தையினை நடவடிக்கைகள் சரிப்படாமையாற் குரோதங் கொண்டார்கள்

Koviloor Digital Library

அதென்னவெனில் துக்காராம் சுவாமிகள் சோளம் கேழ்வரகு முதலான தானியங்களை பொதிமாட்டின் பேரில் போட்டுக்கொண்டு குக்கிராமங்களிலுள்ள ஏழை பரதேசிகளுக்கு கிரயமின்றி யாவத்தையும் தயாவிஷயமாய் கொடுத்து விட்டு மாட்டை யோட்டிக்கொண்டு கோணிப்பைகளோடு வந்து வீடு சேர்ந்து கைமுதலில்லாமல் நிம்மதியாய் பஜனை செய்துக்கொண்டு காலம் போக்குவார் இவரிப்படி பலதரம் சென்று திரவிய நஷ்டஞ்செய்துவருவதைக்கண்ட மனைவிகளும் பிள்ளைகளும் வயிற்றுக்கு ஆகாரமில்லாமல் பசியினல் குய்யோ முறையோ வென்று கதரியழுது சொல்லுகிறார்கள் வீட்டிலிருந்த ஆபரணங்களை யெல்லாம் சவுகாரியிடம் ஈடுவைத்து விட்டோம் இனியொரு பொருளுக்கும் வழியில்லையே நாமெவ்விதஞ் சீவனஞ் செய்யப்போகிறோமென்று வாட்டமடைந்து பிள்ளைகளிருவரும் ஓ ஐயா நீர் செய்த வர்த்தகம் வெகு நன்றாயிருக்கிறது பெண்சாதி பிள்ளைகள் கஞ்சிகஞ்சியென்றுகதற கிராமத்திலுள்ளவர்க்கு தானியங்களைக்கொடுத்து ஜீவனஞ் செய்யச் சொல்லுவது மிருந்த தருமமோ அந்தோ சவுகாரிடத்தில் குதுவை வைத்த சொத்துகளெல்லா மிருந்தால் இந்த க்ஷாமகாலத்தை போக்கலாமே அநியாயமாய் வர்த்தகம் வர்த்தக மென்று சொல்லி தானியங்களைப் பிடித்துக்கொண்டுபோய் ஊராருக்கு தாரை வார்த்தீரே இதுவெகு சீரே உம்மைப்போல அதமர்கள் யாரோ? நீர் நடப்பதெல்லாம் மெத்த நேரே என்று வைது அவ்விருவரும் வீட்டை விட்டு யதேச்சையாய் பரதேசங்களுக்குச் சென்றார்கள்.

பிறகு இரண்டாவது பத்தினி தன் கணவன் பஜனை செய்துக் கொண்டு கைமுதலில்லாமல் வர்த்தகத்துக்குப் போகாம லிருப்பதை யுணர்ந்து தடாலென்று சவுகாரிடத்திற்குச் சென்று அவரிடம் நயவசனங்களைப் பேசி நூருவிராகன் கைபதிலாக வாங்கி வந்து நாயகனை நோக்கி ஓ சுவாமி அடியாள் சவுகாரிடத்தில் நூருவிராகன் கைகடனாக வாங்கி வந்தேன் இதைக் கொண்டாகிலும் வர்த்தகஞ் செய்யும் முன்போல ஊராருக்கு இனமாகக் கொடுத்து நஷ்டப்படுத்தாமல் சவுகாருக்கு நாணயமாய் விராகனைக் கட்டி மறுபடியும் வாங்கும்படியான லாவாதேவியில் கருத்தை வைத்து தானியங்களை விற்பனை செய்து வாரும் சுவாமியென துக்காராம் சுவாமிகள் இரண்டாவது பத்தினி கொடுத்த நூறுவிராகன் களையும் பெற்றுக்கொண்டு சோளம் உப்பு இந்த இரண்டு தினுசுகளைப் பிடித்து கோணிப்பைகளில் நிரப்பி மாட்டின் பேரில் போட்டுக்கொண்டு ஊரை விட்டு வெளிப்பட்டு போகிறபோது அம்மார்க்கத்தில் பெருத்த மழையடிப்பதால் மழையில் மாடுகளும் தானும் நனையாமல் நிற்பதற்கோரிடம் கிடைக்காமல் உப்பு மூட்டைகள் வெறுங்கோணிகளாய் விட்டது சோளமூட்டைகள் நனைந்து மொத்தையாய் விட்டதுகள் மேலுமேலும் விடாமழையடிப்பதால் மாடுகளை ஓட்டிக்கொண்டு ஓர் மரத்தடியில சென்று அங்கு தங்கி அன்றிர வெல்லாம் பகவத் தியானஞ் செய்துக் கொண்டு மெய்மறந் திருந்தார்.

இவரிப்படி யிருக்க நடுராத்திரியில நான்குபுலிகள் வந்து மாடுகளை யடித்துக் கொன்று இழுத்துக் கொண்டுபோய் விட்டதுகள் இது சங்கதி யறியாத துக்காராம் சுவாமிகள் நிஷ்டை கலைந்து கண்களைத் திறந்து பார்க்க மாடுகளில்லாமையால் வெகு தூரந் தேடிக்காணமல் பகவத் சங்கல்பத்திற்கு நாமென்ன செய்யக் கூடுமென்று பாதசாரியாகி விரக்தி யடைந்து சிலமாடுகளையும் சோள மூட்டைகளையும் அம்மரத்தடியில் விட்டு வெகு தூரம் காடுகளிலலைந்து அன்னபானதிகளின்றி கால்கள் பத்தை பத்தையாயக் கிழிந்து ரத்ததாரைகளோடே பாண்டுரங்கனை துதிசெய்துக் கொண்டே நடந்து ஓர் மலையின் பேரிலேறி அதில் விசாலமாகிய பாரையின் மீதிருந்து தைலதாரை விச்சின்னமாய் பகவத் குணனுபவஞ் செய்திருந்தார் அதெப்படி யெனில்,

சுலோகம்.

மாதாச்ச கமலாதேவி
பிதாதேவோ ஜனார்த்தன
பாந்தவோ விஷ்ணுபக்தாச்ச
ஸ்வதேஸம் புவனத்ரயம்.

என்னுமாப்போல அகிலஜெகத்துக்கும் அன்னையாகிய மகாலட்சுமியே தனக்குத்தா யென்றும் அகிலபுவன சிருஷ்டி ஸ்திதி சம்மாரகர்த் தாவாகிய புருஷோத்தமனே தனக்குத்தந்தையென்றும் இடைவிடாது சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் பகவந்நாம முச்சரித்துக் கொண்டு துவேஷங்களற்றிருக்கும் விஷ்ணுபக்தர்களே தனக்கு பந்துக்களென்றும், அந்தபகவானுடைய சம்பத்துகளாகிய மூன்றுலோகங்களும் தன்னதென்றும் நினைத்து வைராக்கிய சீலராகி

சுலோகம்.

த்வமாதிதேவ: புருஷபுராண
ஸ்த்வமஸ்ய விஸ்வஸ்ய பரம் நிதானம்
வேத்தாஸி வேத்யம் சபரம்சதாம
த்வயாததம் விஸ்வம் நந்தரூப.

Koviloor Digital Library

வாயுர்ய மோக் னிர்வருணஸ்ஸஸாங்க:
ப்ரஜாபதிஸ்தவம் ப்ரபிதாமஹச்ச
நமோ: நமஸ்தேஸ்து ஸஹஸ்ர க்ருதவ:
புனஸ்ச பூயோபி நமோ நமஸ்தே.
நம: புரஸ்தாத தப்ருஷ்ட தஸ்தே
நமோஸ்துதே ஸர்வ தயேவ ஸர்வ
அனந்த வீர்யாமித விக்ரமஸ்த்வம்
ஸர்வஸமாப்னோஷி ததோஸிஸர்வ:

ஓ பகவானே தாங்கள் ஆதிதேவரும் புராண புருஷரும் சகலஜெகத்திற்கும் பரம ஆதாரவஸ்து வானவரும் நீரே விஸ்வகாரணனும்நீரே, முக்தாத் தமர்களால் அடைபத்தகுந்த மோக்ஷஸ்தானம் அகிலலோகங்களும் உம்மால் நிறைந்திருக்கப்படுகின்றது, வாயுவும்-எமனும்-அக்கினியும்-வருணனும்-சந்திரனும்-பிரம்மாவும் - பிரமனுக்குத் தந்தையாகிய விஷ்ணுவும்நீரே உமக்கு அனேகதடவை வந்தனஞ் செய்கிறேன். ஓபுண்டரீ காக்ஷா-புராணபுருஷா-சம்சாரக்கடலைத் தாண்டுவதற்கு நின்கிருபை அடைந்தவர்களுக்கன்றி மற்றவர்களால் கடப்பதரிது சாகரத்தைக் கைகளால் நீந்தினும் நீந்தலாமல்லது மகாசாகரமாகியசம்சாரத்தை நீந்துவது மிகவுமரிது அதுசாகரம்-இதுமகாசாகரம்-அக்தக்கடல் அபாரமாகிய ஜலத்தை காத்தினல் பாக்கடிக்கப்பட்ட அலைகளும் சுழலும் முதலைகளும் உண்டாகி பயங்கரமாகியிருக்கும் இந்த சம்சாரமாகிய மகாசாகரம் ஆசையென்னுஞ் ஜலத்துடனும் மதனனென்னுங் காத்தினல் பாக்கடிக்கப்பட்ட மோகமென்னும் அலைகளின் வரிசைகளுடனும். பெண்டிரென்னும் சுழலோடும் புத்திர சகோதரர்களென்னும் முதலைக் கூட்டங்களுடனுங்கூடி மிகுந்த பயமாகியிருக்கும் ஆபத்துகாலத்தில் ரக்ஷிப்பவர்களல்லவா பந்துக்களாவார்கள் ஆகையால் ஓ தீனபந்து, ஆபத்பந்து சம்சாரமென்னுங் கடலைக்கடக்கச்செய்து அடியேனுக்கு நின் சேவைதந்து ரக்ஷியும், ஓ பரமகிருபாநிதியென்று துதிசெய்து மெய்மறந்திருந்தார்,

பகவான் துக்காராம் சுவாமிகளைப்போல உருவங்கொண்டு மாடுகளின் மேல் வெறுங் கோணிகளைப் போட்டுக்கொண்டு ஊருக்குச் சென்று சவுகாரைக்கண்டு நூறுவிராகனும் வட்டியும் அவருக்கு செலுத்தி கிஞ்சித்பொருளோடு வீடுசேர்ந்து வாலாயமாய் மாடுகளைக் கட்டுமிடத்தில் கட்டி, மாயாதுக்காராம் துக்காராம் சுவாமிகள் பத்தினியிடத்தில் கிஞ்சித்து தனத்தைக் கொடுத்துவிட்டு மாயமாய் மறைந்துபோனர் உடனே துக்காராம் சுவாமிகள் மனைவி நூறுவிராகனும் வட்டியும்மெடுத்துக்கொண்டு சவுகாரிடம்வந்து விராகனையும் வட்டியையுங் கொடுக்க சவுகார் ஓ அம்மணி நினது பதிமுன்னமே வட்டியுமுதலுஞ் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு வந்தாரே நீயது தெரியாமல் கொண்டுவந்தாப்போலிருக்கிறது எனக்குவட்டியும் அசலும் சேர்ந்துவிட்டது இதை எடுத்துக்கொண்டுபோ மம்மணியென துக்காராம்சுவாமிகள்மனைவி ஆனந்தக்கடலில் மூழ்கினவளாகிய அடங்காச் சந்தோஷமடைந்து விராகனையும் வட்டிகளையு மெடுத்துக்கொண்டு வீட்டிற்குவந்து நாயகனையும்மாடுகளையுங்காணுமல் தேடி வெகுதூர மலைந்து வந்து அன்னபானதிகள் செய்து வைத்து மறுபடியும் வேறொரு திக்கிற்குசெய்து தேடிவாடியழைத்து புலம்பு ஓ நாதா அடியாளையொண்டியாகவிடுத்து எங்குபோனீர்பாவியாகிய எனது சம்பந்தம் போதுமென்று நாலைந்து நாள் திரிந்து வியாபாரஞ் செய்துபணத்தாசை சவுகாருக்குச்செலுத்தி, மீதியை பணத்தாசைகொண்ட என்னிடத்திற் சேர்த்து ஜீவனஞ்செய்துக்கொண்டிருவென் றென்னி சம்சாரத்தை வெறுத்து எங்குசென்றீர் என்று துக்கித்துக்கொண்டேகாடு மாலைகளெல்லாம் தேடியோடி அந்தச்செடி யோர்மலையின் பாறைமேலிருந்து பகவந்நாம விசாரனை செய்துக்கொண்டிருக்குந்தன் கணவனைக்கண்டு அவர்பாதத்தில் வீழ்ந்துக் கண்ணீராய் பெருகவிட்டு குய்யோ முறையோவென்று கதறி பெருமூச்சுவிட்டு துக்க சாகரத்திற் குட்பட்டு சித்தப்ரமை மேலிட்டு மூர்ச்சையாய்வீழ்ந்து கிடக்கும் தன்மனைவியை தேற்றி மிகுந்த இனிய வசனங்களைச் சாற்றி ஓ வனிதையே உனக்கிப்படிப்பட்ட துக்கம் நேரிட்டதற்குக் காரணம் யாது அதை விவரமாக ஓது எப்படிப்பட்டகஷ்டம் நேரிட்டபோதிலும் துக்கிப்பது தகாது. இத்தனை காலமாயில்லாமல் இப்போதென்மீது பக்ஷம் மிகுந்ததென்ன நானோ விரக்கதனகி ஏகாந்தமாய் நிர்மானுஷ்யமான இம்மலையிலிருந்து பஜனை செய்து நற்கெதியையடைய வெண்ணின என்மேல் அருள்கொண்டு என் பக்தியைக் கெடுப்பதுனக்கு நீதி, என்ற துக்காராம் சுவாமிகள் சொல்லைக்கேட்ட அவ்வுத்தமிபணிந்து ஓ நாதா! இன்றைக்கு நான்காநாள் ஊருக்கு வந்து தாங்கள் சவுகாருக்கு விராகன் வட்டிகளைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்து என்னிடங் கொஞ்சம் பொருளைத் தந்து யாதொரு வார்த்தையுஞ் சொல்லாமல் என்னைத் தனியேவிட்டு பிரிந்து இவ்வண்ணம இங்கு தங்கி பகவத் பஜனை செய்துக் கொண்டிருப்பது அடியாளுக் கெப்படி தெரியும் இது சங்கதி தெரியாதலால் இத்தனை கஷ்டப்பட்டு நான்கு நாளாய் காடுமலைகள் நாடுநகரங்களுந்தேடி தேவரீரைக் காணுததாலித்தனை துககம்

Koviloor Digital Library

நேரிட்ட தெனுக்காராம்சுவாமிகள் இந்தவற்புதக் கனேக்கேட்டபுளகாங்கித சரீரனுகி பகவானுடைய திவ்விய லீலைகளைத் துதித்து, மனங்கரைந்து ஓதயாசிந்து-தீனபந்து-அபாரத கருணநிதி-புண்டரீக வரதா-லட்சுமிகாந்தா-மிகுந்த நீசனுகிய அடியேன் பொருட்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தீரே சதாகாலமும் சங்கல்ப மாத்திரத்தில், சிருஷ்டி ஸ்திதி சங்காரங்கள் செய்துக்கொண்டிருக்குந் தேவரீர் உமது தொண்டர்கள் மீதிருக்கும் பிரியத்தை வெளிப்படுத்த நினைத்து தாறுக்கோலை கையிற்பிடித்து மாடுகளேயோட்டிக்கொண்டு வர்த்தகனைப்போலாக ஆசைகொண்டது விந்தையா யிருக்கின்றது யான் பாவிகளில் முதற்பாவியாகையால் எனக்காக நீரிந்த நீசவேஷந்தரித்து சவுகாரிடஞ் சென்று வட்டியும் முதலுந்தந்து வீட்டிற்குப் போய் வனிதையினிடத்தில் கெஞ்சித் பொருளையீந்து மாடுகளோடு மாயமாய் மறந்து போனீரோ வென்று சொல்லிக்கொண்டே மூர்ச்சையாகி பூமிமேல்விழுந்து மெய்மறந்து கொஞ்சநாழிகையில் தெளிந்து ஓ புண்ணியவதீ, என்பொருட் டுனக்கு பிரம்மருத்திர இந்திரஸனகாதி முனிவர்கள் துதிக்கு மிகுந்த தூரமாகிய பகவானது தெரிசனஞ் சுலபமாகக் கிடைத்தது, ஓ வனிதைகள் ரத்தினமே நினதுபாக்கியமே பாக்கியம் நீ வசித்திருந்த கெர்ப்பத்தின் போக்கியமே போக்கியம், நினது பிதுர்க்கள் புண்ணியமே புண்ணியம், என்றிப்படிப் பலபலவிதங்களாகப் புகழும் மனைவியை நோக்கி பக்தியிற் சிறந்து முக்தியிற் பறந்த தத்வக்ஞானியே, தங்கள் நிமித்தியமே பகவத்சேவை கிடைத்தது அடியாளுக்கென்ன போக்கியதை யிருக்கின்றது, நன்று தீதறியாத மந்தமதியைப் புகழ்வது தர்மமல்லவே, எல்லா பாக்கியமும் தேவரீராலன்றி கொடும்பாவியாகிய அடியாள் வந்தவர் பகவானென்றுணராது பணத்தாசையினுல் தாங்களென்றே பிரமித்திருந்து விட்டேனென்று சொல்லி, ஓ சுவாமி பிரசாதம் செய்து எடுத்துக்கொண்டுவருகிறேன் அதுபரியந்தம் தேவரீரிதைவிட்டு வேறெங்கும் போகாதீரென்று சொல்லி வேகமாய் நடந்து அகம்புகுந்து தீர்த்தமாடி சிசுவஸ்திரந்தரித்து, அன்னபானதிகள் சமைத்து யெடுத்துக்கொண்டு வந்து நாயகனுக்குப் படைத்த மிகுந்த சேஷத்தைப் புசித்து இந்தப்படி சிலநாளிருக்க துக்காராம் சுவாமிகள் மனைவி ஓர் நாள் ரொட்டி செய்வதற்கும் காலணு கிடைக்காமல் மிகுந்த கஷ்டத்துடன் பதியினிடத்திற்கு வந்து ஓ சுவாமி இன்றைபதினம் ஆகாரத்திற்கு ஒன்றுமில்லை யென்று விண்ணப்பஞ் செய்த அந்த மகாசாது ஓ வனிதைகள் ரத்தினமே நாம் பூர்வத்தி லெந்த கர்மத்தைச் செய்தோமோ அந்த கர்மத்துக்குத்தக்க பலனைக்கொடுத்து ரக்ஷிப்பதற்கு சாக்ஷாத் பகவானிருக்க நீயேன் சுதந்திரப்பட்டலைகிறுயென அவ்வனிதை ஓ சுவாமி புருஷப் பிரயத்தின மில்லாமல் தெய்வம் எவ்விதமாய் ரக்ஷிப்பார் தெய்வம் காட்டும் வீட்டிமோ, சுவாமி கொடுப்பாரென்று ஸ்நானனுஷ்டானங்களை முடித்து நடுவீட்டில் பாயைப்போட்டுப்படுத்துக்கொண்டிருந்தால் அந்த பகவானெங்கிருந்து அன்னபானதிகளைக் கொண்டு வந்து கொடுப்பார் மேலும் இப்பெருந்த தேகத்தைப்பெற்ற நாம் பகவானுக்கு கஷ்டங் கொடுக்கலாமோ அன்னியிலும் பூமியை யுழுது விதைவிதைத்து அதற்கு களையெடுப்பதும் ஜலம் பாய்ச்சுவதும் முதலாகிய சிகிச்சைகள் செய்யாமல் தெய்வ சகாயத்தினுல் பலன் கொடுக்குமென்று தான் பகவத் பஜனை செய்துக்கொண்டு சும்மாவிருந்தாலப்படி பலனைத்தரும் ஓ சுவாமி, இதென்னவார்த்தை நாங்கள் சொல்லுவது மேலும் ஓர் கிண்ணியில்ஷத்தமமாகிய ஷட்ருசி பதார்த்தங்களுடன் அன்னம்பரிமாரி அதைக் கையினுல் பிரசாதத்துடன் கலந்து யெடுத்து புசித்தால் மாத்திரம் பசிதீரும் அல்லது புசிக்காமல் இரண்டு கைகளையுங் கட்டிக்கொண்டு சாப்பிடுகிறேனென்று எத்தனை நாழிகை பார்த்துக் கொண்டிருக்கினும் பசிதீருமா தீராது அதுபோல முன்னம் கரிராஜன் பிரகலாதனன் துருவன் திரௌபதை முதலான பக்தர்கள் தங்கள் தங்களுக்கு நேரிட்ட ஆபத்துக் காலத்தில் ஸ்ரீமந்நாராயணுவென்று முறையிட்டபடியா லல்லவோ அந்த பகவான் வந்து ரக்ஷித்தார் சொஸ்தமாய் வாயை மூடிக்கொண்டிருந்தால் யாவர் வந்து காக்கப்போகிறூர்கள் ஆகையால் ஓ நாதா இல்லறத்திலிருந்து பகவத் பஜனை செய்வதே வுத்தமமென்று அம்மாது துக்காராம் சுவாமிகளை யழைத்துக் கொண்டு வீடு சேர்த்து அடுத்த வீட்டில் கடன் வாங்கி ரொட்டி செய்து நாயகனும் தானும் புசித்து துக்காராம்சுவாமிகளை போகவிட்டு காத்து வருமையினுல் மிகவும் பீடிக்கப்பட்டு இரவும் பகலும் ஏக்கத்தினுல் மதிகெட்டு இருந்தனள் மிக்க சாது சற்குணமுடைய துக்காராம் சுவாகிகள் ஸ்ரீபாண்டுரங்க நாமத்தை உச்சரித்து கொண்டிருந்தார்.

இவர்களிருவரு மிப்படியிருக்க அவ்வூரில் வசிக்கும் ஓர் வணிகன் அந்த துக்காராம் சுவாமிகளிருக்கும் ஸ்திதியை யுணர்ந்து அவரிடமேவி ஐயா பக்த சிகாமணியே நீ ரிப்படிக்கிருந்தால் எப்படிஜீவனம் நடக்கும் புருடனுனவன் ஏதாகிலும் ஒரு அனு

Koviloor Digital Library

வல் அவசியம் பார்க்க வேண்டிய கடமையாகையால் எழுந்து வாரும் நம்மிட புஞ்சை வயல்களிற்பரவைக் கூட்டங்கள் வந்து புகுந்து கவர்ந்துக்கொண்டு போகா வண்ணம் காத்து வருவீராகில் கண்ட முதலில் எட்டிலொருபங்கு உமக்குத் தருகிறேனென்று அபிமானித்த வணிகன் பின் சென்று துக்காராம் சுவாமிகள் அவனால் காட்டப்பட்ட புஞ்சை வயல்களின் காணி யெல்லைத் தெரிந்துக் கொண்டு அவ்வயல்களுக்கு நடுவில் பரணையொன்று கட்டி அதிலிரவும் பகலும் பாண்டுரங்கனைப்பாடி மெய் மறந்தாடி கவுண்டுக்கல்லை வைத்துக்கொண்டு பாண்டுரங்கா பவபங்கா பக்தசங்கா மங்களாங்கா வென்று பெருத்த கூக்குரலோடு கதறிக்கொண்டு சதா பகவத்தியானத்திலிருக்க வனத்தில் வசிக்கும் காடை கௌதாரி கோர்ஜா மணிப்புறா மாடப்புறா முதலாகிய பலஜாதி பரவைகள் தங்கள் தங்களினங்களோடு கூட்டங் கூட்டமாய் வந்து கதிர்களிலுள்ள சோளங்களைப் புசித்து திருப்தி யடைந்து யதேச்சையாய் பறந்துபோகும் இந்தப்படியாய் தினமும் பரவை கூட்டங்கள் வந்து புசித்துப்போகிறபோது ஓர்நாள் வணிகன் வந்து வயல்களைப் பார்த்து கதிர்களில் ஒருமணிகூட யில்லையே யென்று வயிறெரிந்து ஈதென்ன தொல்லையே உபகாரத்திற்குடன்பட்ட நமக்குஅபகாரம் வந்ததே இந்த துக்காராம் தானியங்களை பரவைகளுக்கு கொள்ளை விட்டானே யென்று வைது ஊரிலுள்ளோரிடத்திற் சொல்லி ஐயா ஒரு காணி யோர்கலஞ் சோளமுமாகாதே இந்த துக்காராம் சுவாமிகள் உத்தமர் சத்திய சந்தனர் பக்த சிரோன்மணி பிறர் பொருளை தன்பொருளைப்போல பாதுகாப்பவரென்று நம்பியல்லோ புஞ்சை வயல்களையெல்லாம் இவர் வசம் ஒப்பி வைத்து கவனியாமல் பராமுகமா யிருந்து விட்டேன் மேலும் இவருக்கு தினமும் படி கொடுத்து மிகவுங்கெட்டேன் மெத்த கஷ்டப்பட்டேன் என்று ஒவ்வொருவரிடத்திலும் முறையிட்டு துக்காராம் சுவாமிகளை யவமதிப்பாக பேசுவதைக் கேட்ட சில உத்தம புருஷர்கள் ஓய் வணிகரே நீர் துரிதப்பட்டு சாதுவாகிய துக்காராம் சுவாமிகளை கேவலமாய்ப் பேசி அபசாரப்படவேண்டாம் சோள வயல்முழுதும் அரவடை செய்து மணிகளைச் சேர்த்து அளவுபோட்டுக் கடந்த வருடங்கண்ட விளைவுக்கு குறைவு படுமாகில் நாமெல்லோரும் அவரை யழைத்து இக்குறைவு தானியத்துக்கென்ன வகை சொல்லுகிறீரென்றுகேட்டு தக்க யேர்ப்பாடுகள் செய்துக்கொள்ளுவோம் அது பரியந்திரம் ஒரு வார்த்தையும் பேசாதிருமையா வென வணிகன் ஒ சாதுக்களே அநேகவருட காலமாய் அனுபவப்பட்டு வருகிற வெனக்கு போனவருடத்திலிருந்தக் கதிரின் மணிகள் வளப்பமும் இவ்வருடத்திய கதிர்மணிகளின் குறைவும் நன்றாகத் தெரிகின்றது. அவரை யநியாயமாய் பேசுவது எனக்கழகோ பொய்வார்த்தை புகலுவதால் எனக்கு வரும் பயன் யாது நீங்கள் சொல்லியபடியே அரவடைசெய்து அளவிட்டுப் பார்ப்போமென்று சொல்லி வயல் முழுமையும் அரவடைசெய்து அம்பாரமிட்டு அளவுபோட்டுக் கணக்கெடுக்கக் கடந்த வருடத்திற் கண்ட முதலைவிட இரண்டுபங் கதிகமாக விருக்கக் கண்டவ்வணிகன் மிகவும் வியப்படைந்து அந்தோ உத்தசீலராகிய துக்காராம் சுவாமிகளை எனது அஞ்ஞானத்தால் மிகவும் வைதேன் ஊரார்எல்லாம் அறியப் பலவித தூர்ப்பாஷைகளால் அவமதிப்புச் செய்தேன் நன்மையெனும் சன்மார்க்கத்தை விட்டேன் தீமையாகிய பொருளாசைக்குட் பட்டேன் ஈனா நரகுக்காளானேன் மாளாப் பிறவிக்காளானே னென்று சிந்தித்து தன்னைத் தான் நிந்தித்து துக்காராம் சுவாமிகளை வந்தித்து அவர் பாதங்களை மனதில் சிந்தித்து பலரறியும்படி நடந்த அருமையை விண்டு பெருமையை மிகத் துதித்துக்கொண்டு வந்தப்புண்ணிய புருஷரைக்கொண்டு அடியேன் என்ன தவஞ் செய்தேனோ பண்டு தேவரீர் திருவடித் தாமரைகட்குத் தொண்டுசெய்ய வாய்த்ததே மேலான பெருமையென விண்டு அன்று முதல் இரண்டு வேளையும் வந்து துக்காராம் சுவாமிகளைச் சேவித்துக்கொண்டு போவதன்றி அவர் வீட்டுக்கு வேண்டிய வஸ்துக்களி லொன்றேனுங் குறைவரக் கொடுத்து வந்தார் துக்காராம் சுவாமிகள் எதற்குஞ் சலியாமல் அவ்வூரிலுள்ள பாண்டுரங்கன் சந்நிதிக்குச் சென்று பகவந்நாம சங்கீர்த்தனம் பாடி யாடிக்கொண் டானந்த பரவச மடைந்திருந்தார்.

சுலோகம்.

கிரைபோ வர்ஷ தாராபி
ர்ஹன்ய மாநோ விவ்யது:
அபிபூய வநுவ யஸனை
ர்யதா தோக்ஷஜ சேத்ஸ:

என்றால் அதோக்ஷஜனிடத்தில் லயித்தமன முடையவர்கள் விசனமுதலான துக்கங்களினா லெப்படி சலியாம லிருப்பார்களோ அப்படிப்போல மலைகள் வர்ஷ பரம்பரைகளினால் சலியாமலிருக்கின்றது என்னுமுண்மை துக்காராம் சுவாமிகளிடம் பிரசித்தமாயிற்று.

Koviloor Digital Library

2-வது துக்காராம் சுவாமிகளுடைய பூர்வ ஜென்ம விருத்தாந்த அத்தியாயம்.

பண்டு நாமதேவர் பண்டரிநாதனை சேவித்து ஆநந்தபரவசராகி ஓ தேவாதிதேவா நினது ஆனந்த கல்யாண குணங்களை எத்தனை விதங்களாய் புகழ்ந்திடினும் அடியேனுக்கு திருப்தியுண்டாகாம லிருக்கிறது நினது குணானுபவஞ் செய்யச்செய்ய ஆச்சரியமாகத் தோற்றுகின்றது சத்தியலோகத்தி லிருக்கும் ஸ்ரீ ராமாயணத்தைப்போல சதகோடி விருத்தங்களினாலும் உம்மைத் துதிசெய்ய மனதிலெண்ணினேன் இந்த எண்ணத்தை பூரணஞ்செய்ய வேண்டுமென்று பலவாறு பிரார்த்திக்க ஸ்ரீ பாண்டுரங்க நாதன் புன்னகையோடு அவரை நோக்கி ஓ நாமதேவா மானிட சரீரம் மிகவும் அநித்தியமென்று நீ யறிவாயல்லவா அப்படி யிருக்க சதகோடி விருத்தங்களினால் என்னை துதிக்க வேண்டுமென்று நினக்குண்டாகிய எண்ணமெப்படி முடிவு பெறும் புருஷனுக்கு நூறுவருடம் பரமாயிளாகி யிருக்கிறது அதில் பாதி நித்திரையினால் வீணாகின்றது மிற்பாதியில் விளையாட்டினாலும் விஷயாநுபவத்தினும் பிடிக்கப்பட்ட ரோகத்தினாலும் சிலகாலம் வியர்த்தமாகின்றது மிகுந்த காலத்தை உண்மையென்று நம்புவது மேலும் மரணமானது பாலியத்திலோ யௌவனத்திலோ அல்லது கௌமாரத்திலோ வார்த்திகத்திலோ மரணம் நேரிடும் இப்படிப்பட்ட திரேகத்தை நம்பி நூறுகோடி விருத்தங்கள் பாடுகிறேனென்றெப்படி நினைப்பு கொண்டாயென்று ருக்மணி நாதன் வினவ நாமதேவர் பகவானுக்கு வந்தனஞ் செய்து எனது திரேகத்தையும் எனது சக்தியையும் நம்பி நானிப்படிப்பட்ட வெண்ணங்கொண்டவனல்ல அடுத்தவர்களுடைய வெண்ணங்களை நிறைவேற்றுவதுமக்கு விருதாகியிருக்கின்றதல்லவா ஸ்ரீ மகாபாரதயுத்தத்தில் நான் ஒருபோதும் ஆயுதம் தொடேனென்று சத்தியஞ் செய்து பரம பாகவதராகிய பீஷ்மாசாரியார் சபதத்தை நிறைவேற்றுவதற்காக நினது சபதத்தை கருதாமல் ஆயுதத்தைத் தொட்டது எல்லாருமறிந்த விஷயமல்லவா மேலும் யான் எனது பக்தர்கள் இருதயகமலத்தில் வசித்து அவர்களெண்ணம் யாவற்றையும் நிறைவேற்றுகிறே னென்னும் விருதுகட்டி யிருப்பவனாகையால் நினது பக்தனாகிய யான் உனது பலத்தை நம்பி அடியே னிப்படிப்பட்ட யெண்ணங்கொண்டவனாகினேன் தேவரீர் சகல சந்தனாகி யிருக்க நினக்குப் பர தந்திரனாயெனக்குண்டாகிய வெண்ணமேன் முடியாது என்று விண்ணப்பஞ் செய்யவே ஸ்ரீ பாண்டுரங்கன் சந்தோஷித்து ஓ நாமதேவா நினது மனோவெண்ணத்தை நிறைவேற்றுகிறேனென்று சொல்லி சரஸ்வதி தேவியை நினைத்தார் இதை யுணர்ந்து அத்தேவியங்குமேவி புண்டரீகவரதனுக்கு வந்தனஞ்செய்து தேவாதி தேவா அடியாளை நினைந்த காரணமென்னவென்று கேழ்க்க ஸ்ரீ ருக்கமணி நாதன் சரஸ்வதியை நோக்கி ஓ மாதுசிரோன்மணி நீ நாமதேவருடைய வாக்கினிலிருந்து அவரெண்ணப்படி சதகோடி விருத்தங்களவரால் சொல்லிவையுமென்று நேமிக்க சாரதாதேவி சுவாமி தேவரீர் விபவங்களைத் துதி செய்வதற்கு விதி சிவ ஸனகாதியர்க்கும் சாத்தியமாகாமலிருக்கிறது வேதபுருஷன் நினது ஆனந்தத்தை நிச்சயிக்க முயன்று மனிதானந்தத்தை நிச்சயித்து பிரம்மானந்த பரியந்தஞ் சொல்லிக்கொண்டேபோய் பரப்பிரமானந்தம் என் மனதுக்கு எட்டாமலிருக்கிற தென்று சொல்லித் திரும்பினார்.

அப்படிப்பட்ட நினது சுந்தரமங்கள குணங்களை புகழ்வதற்கு எனக்கெப்படி சாத்தியமாகும் தேவரீரது கட்டளையை சிரசாய் வகித்து நாமதேவர் வாக்கினி லிருந்து சதகோடி விருத்தங்களைச் சொல்லி தேவரீரைத் துதிசெய்கிறேன் அப்படிச் சொல்லப்பட்ட விருத்தங்களை பரபரப்பாக யெழுதுவதற்குத் தகுந்த சாமர்த்திய மிகுந்த யெழுதும் புருஷன் ஒருவன் எனக்கு வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்துக் கொள்ள அப்போது தேவாதி தேவனாகிய பண்டரிநாதன் தானே ஓலையும் எழுத்தாணியும் கையிலெடுத்துக் கொண்டு தானேயந்த வேலைக்குத் தகுந்தவரென் றெண்ணி எழுதுவதற்கு முயன்று கொண்டார். இப்படி எழுதிக்கொண்டிருக்க நாமதேவர் தொண் ணூற்றி நான்குகோடி நாற்பதுலக்ஷம் விருத்தங்களைச் சொன்னார் இதற்குள் நாமதேவருக்கு பஞ்சபூத சம்பந்தம் அசுசியாகத்தோற்றி நித்தியலோகத்தை யடையவேண்டுமென்று துரிதமுண்டாகியதால் பகவான் நாமதேவரை யாலிங்கனஞ் செய்துக்கொண்டு ஓ சுதனே நீ சோகமடைய வேண்டாம் உனக்கு இவ்வுலகத்தின் வாசம் அசங்கியமாகத் தோன்றியபடியால் நீ கோரியபடி நித்தியலோகத்திற்குப் போம் கொஞ்சகாலத்திற்குப் பின் மறுபடியும் நீரிந்தப் பூலோகத்திற்கு வந்து துக்காராமென்னும் நாமதேயத்தைப் பெற்று என்னிடத்திசயித்த பக்தியோடு கூடி இப்போது குறைவுபட்ட ஐந்துகோடி யறுபதுலக்ஷம் விருத்தங்களைப்பாடி நினது எண்ணத்தை நிறைவேற்றுஎனக் கானந்தத்

தை யுண்டாக்கு மென்று நியமிக்கவே நாமதேவர் சந்தோஷித்து நித்தியலோகத்தை யடைந்தார் இப் போது நாமதேவரது எண்ணத்தில் குறைவுபட்ட விருத்தங்களை பூர்த்திசெய்யவெண்ணி ஸ்ரீ பாண்டு ரங்கன் நாம தேவரோடு துக்காராம் சுவாமி சொற்பனத்தி லெழுந்தருளிய பூர்வத்திய விருத் தாந்தங்களையவ ரிருக்கரிக்கை செய்து ஓய் துக் காராம் நீர் அன்னிய வியாபாரங்களை விட்டு என் கட்டளையைச் சிரமேற் கொண்டு நாம தேவ ரது குறைப் பூர்த்தி செய்யும் நினக்கு யான் சகாய னுகி யிருக்கிறே னென்று சொல்லி மறைந்து போனர்.

உடனே துக்காராம் சுவாமி திடுக்கிட்டெழுந் து சொற்பன விருத்தாந்தங்களை யோசித்து ஆனந்த பரவசராகி அன்னிய வியாபாரங்களை யெல்லாம் விட்டு நீக்கி அனுதினமும் ஸ்ரீபாண்டுரங்கன் பேரில் உலகப்பாகிய விருத்தங்களைப் பாடிக் கொண்டிருந் தார். இந்த விருத்தங்களை கேட்டு சாது ஜனங்கள் யாவரும் பிரம்மானந்தத்தை யடைந்தார்கள் பொ றாமைக் கொண்டு சில துஷ்டர்கள் துக்காராம் சுவா மிகளை கேலி செய்துக் கொண்டிருந்தார்கள். மகா னுபாவராகிய துக்காராம் சுவாமிகள் தன்னிமித் தியமாகி சாதுஜெனங்கள் செய்யுந்துதிகளை கேட்டு இவர்களேன் பகவானை துதிசெய்யும் வாக்கினுல் சாமான்யமாகிய என்னை துதிசெய்திருக்கிறார்க ளெ ன்று அசங்கிதப்பட்டும் துஷ்டர்கள் தனது விஷ யத்திற் செய்யும் நிந்தனைகளைக் கேட்டு அவர்களை நோக்கி ஓ பாக்கியவான்களே கடலைக்கையினுல் நீந் த முயற்சி செய்துக் கொண்டதுபோல் என்தோஷ ராசிகளைப் புகழ்வதற்கு முயற்சி கொண்டீர்கள் ஸர் வசக்தனுகிய சர்வேஸ்வரனுக்கு கணக்கிடுவதற்கு கூடா எனது தோஷராசிகளுக் கெப்படி கணக்கெ டுப்பதற்கு சாத்தியமாகும் ஆகிலும் என்னை பரிசுத் தனுகச் செய்ய வேண்டு மென்னும் பிரியத்தினுல்நீங் களிப்படி அகணித காரியங்களுக் குடன் பட்டதற் காக நன்றி யுடையவனுகி உங்களுக்கு வந்தனஞ் செய்கிறே னென்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்படி யிருக்க ஆடிமாதம் பண்டரியில் பிரம் மோச்சவத்திற்கு சென்று ஸ்ரீபாண்டுரங்கனைச்சேவி த்து ஆசையை நீக்கி முனியாகி சாந்தராகி விரோத மின்றி யமர்ச்சியாகிய மிதமாகிய ஆகார நித்திரைக ளுடன் கூடி அனுதினமும் ஸ்ரீ பாண்டுரங்கனதுகல் யாண குணங்களை திவ்வியமாகிய விருத்தங்களினுல் பாடிக்கொண்டிருப்பார் மலர்ந்த மலர்களின் பரிம ளம் காத்துவாடைகளினுல் உலகத்தில் பரவுவது போல் பரமபாகவதர்களுடைய பிரசங்கத்தினுல் துக்காராம் சுவாமியின் கல்யாண குணங்கள் ஜெக மெங்கும் பரவியது அத்தேசத்தையாளும் சிவாஜி ராஜன் துக்காராம் சுவாமிகள்பெருமைகளைக்கேட்டு அந்த மகாத்மாவை சேவித்துப் போகவேணு மென் ன்று ஆவல் கொண்டு தான் நகரத்தை விட்டு வருவ தை தன் சத்துருக்க ளறியாதிருக்கும்படி மாருவே டந்தரித்து ஒண்டியாகி வெளிப்பட்டு ஓர் தட்டில் விராகன்களைக் கொட்டி யெடுத்துக் கொண்டு வந்து துக்காராம் சுவாமிகள் வீட்டிற்குள் பிரவேசித்து அவருக்கெதிரில் விராகன்கள் நிறைந்திருக்கப்பட்ட தட்டை வைத்து சாஷ்டாங்கமாகதெண்டனிட்டார் அந்த விராகன்களை கண்ட க்ஷணம் துக்காராம் சுவாமிகளுக்கு திரேகநடுக்க முண்டாகி ராஜனை நோக்கி இதையே னிவ்விடத்திற்கு கொண்டுவந்தாய் நிராசையுடைய வெனக்கு ஸ்ரீபண்டரிநாதனது செ ந்தாமரைப் பதங்கள் தவிர அன்னிய பதார்த்தங்க ளிடத்தில் ஆவல்இல்லவேயில்லை புருஷன் திரேகயா த்திரை கர்மாதீனமாகி யிருக்கிறதுகர்ம சாக்ஷியாகிய பகவானிருதய கமலத்தில் வசித்து மனிதர்கள் கர் மத்துக்கு தக்கபடி பலத்தைக் கொடுத்துக் கொண் டிருக்கிறார். அந்த பகவானுக்கென்ன குறை வுண் டாயிற்றென்று நினைத்து இதைக் கொடுக்க வந்தாய் பெருத்த காட்டின் நடுவில் ஈகள் சேர்ந்ததேன்கானு மனிதர்கள் பங்காவது போல லோபிகள் இதராளுக் கு கொடாமல் தானுமனுபவிக்காமல் உலகத்தார்கள் கண்களைமூடி சேர்த்த பொருளானது முடிவில் தன க்கு மாகாமல் தன்பந்துகளுக்கு மாகாமல் அன்னி யர்கள் பாங்காயிருக்கின்றது உயர்ந்த துவிசால மாகி கனத்தும் சஞ்சரிக்கச் சக்தியற்ற பெருத்த மலைதானிருக்கு மிடத்திலேயே ஆகாரமுண்டு ஜீவ னஞ் செய்துக் கொண்டிருக்கின்றது இப்படி யிரு க்க நீர் கொடுக்கும் பொருளால் என கர்மம் நீங்கி விடு மென்றெண்ணினீரோ பொருளுடையவர்கள் ரோகத்தினுல் பீடிக்கப்பட்டவர்களாய் ஆகாரஞ் சகிக்காமலிருப்பது மிகுந்த யேழைகள் அங்கியாபி மானத்தினுல் திவ்வியமாகிய ஷட்ரச அன்னம் புசிப் பதும் நாம் கண்டரியமாட்டோமா எனக்கு ரக்ஷக னுகிய ஸ்ரீவாசுதேவனுக்கு தரித்திர முண்டாகிய போது நான் இந்தப்பொருளைப் பெற்றுக் கொள் ளுகிறேன் இந்த தேவன் அசக்தனுகியபோது நானு னது ரட்சிப்புக்குட் படுகிறேன் பின்னுமொருவிசே ஷம் சொல்லுகிறேன் கேளும் ஓர் தவசி பரமசாது வாகி தவசு புரிந்துக் கொண்டிருந்தார் அவர்தவசை கெடுக்க எத்தனித்து இந்திரன் மாருருவங் கொண் டு வந்து அத்தவ முனிவரைநோக்கி ஓதவமுனிவரே

யாதொரு காரியத்துக்காக ஓரிடத்திற்கும்போய்வருகிறேன் அதுபரியந்தம் எனது வாளாயுதத்தை தங்களிடம் வைத்துப்போகிறேன் மறுபடியும் வந்து எனது வாளாயுதந்தைஎடுத்துக்கொண்டு போகிறேனென்று சொல்லி அவரிடம்வைத்து விடைபெற்றுச் சென்றார் அத்தவசி அந்த ஆயுதத்தை எங்காகிலும் வைத்தால் யாராகிலும் சோரர்கள் கொண்டு போவார்களென்று சந்தேகங்கொண்டு அனவரதமும் அந்த வாளாயுதத்தை தன்கையிற் பிடித்து திரிந்துக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்க தவஞ்செய்யுஞ் சிந்தையைவிட்டு ஆயுத நேசத்தால் சாந்தம் நீங்கி தாமசம்மேலிட்டு பழிதொழில் செய்துக் கொண்டு காலத்தைப் போக்கியத்தவசி நகரத்தை படைந்தாரென்று சீதை ஸ்ரீராமருக்குச்சொன்னதாக ஸ்ரீராமாயணத்திற்சொல்லப்பட்டிருக்கிறது ஆகையால் இப்பொருளையான் கைப்பற்றுவேனாகில் முதல் எனதென்னும் மமகாரமுண்டாகும் கிருக நிர்மாணத்திற்கு புனிபோல அந்தமமகாரம் அகங்காரத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கும் நானெனும் பாவமுண்டாகவேண்டும்இந்தவா எனதென்னும் பாவமுண்டாகவேண்டும் இந்த அகங்கார மமகாரங்களென்னும் சண்டாளர்கள் நேசத்தினால் எனது இருதயாலயம் சண்டாளர்களுக்கு இருப்பிடமாகி பகவான் வசிப்பதற்கு அயோக்கியமாகும் யானெங்கு திரிந்திடினும் என்மனது வீட்டிலிருக்கும் பொருளையே துதிசெய்துக்கொண் டிருக்கும் இந்தப்பொருள் சத்தாதி விஷயங்களுக்கு தாரகமாகி நகரத்தை விர்த்திக்கச்செய்யும் விஷயா சக்தனுக்கு நித்தியவநித்திய விவேகசூன்யமாகி சாஸ்திர மார்க்கந் தப்பிப்போகும் பகவான் கட்டளையாகிய சாஸ்திரங்களை யுல்லங்கனஞ் செய்வதால் தப்பாமல் நரகப்பிராப்தியுண்டாகும் இந்த திரவியத்தை நன்மார்க்கத்தில் வினியோகித்தால் இப்படிப்பட்ட அனர்த்தமேனு முண்டாகுமென்று சொல்லுவையோ "அடுவைத்ரொக்கனேல அடுகுகடுகநேல" என்ற பழமொழிப்படி அனர்த்தமாகிய திரவியத்தைச்சம்பாதித்து நித்திரையற்று நரகத்துக்குதப்பி நற்பாத்திரத்தில் திரவியத்தை வினியோகிக்கலாமென்றென்னுவது மேன்மையல்ல மேலாகிய புத்திமான்கள் மௌன நிஷ்டர்களாகிசகல வனர்த்தமூலமாகிய திரவியத்தை தூரமாகப் பரிகரித்து வைராக்கியத்தையே பெருத்த நிதியாக பாவிப்பார்கள் ஆகையால் நின்பொருளை நீரேகொண்டுபோம் இதுவே எனக்குபெருத்த உபகாரம் என்னை சந்தோஷிக்கச் செய்யவேண்டுமென்று உனக்கிஷ்டமிருக்கும் பட்சத்தில் இந்த திரவியத்தைஏழைகளுக்கீந்து என்னுடன்கூடி பகவானை பஜனைசெய்யும் நீயந்த தேவதேவனை துதிசெய்தால் அத்துதி என் செவியிலமுர்தப்பிரவாகமாகிப் பிரவேசித்து எனக்கு பரிபூரணானந்தத்தை உண்டாகச்செய்யும் இதைவிட்டு விஷத்தைத்தந்து என்னை நரகத்தில் தள்ளவேண்டாமென்று சொல்லி அந்திரவியத்தை உபேக்ஷைசெய்து பகவானை பஜித்துக்கொண்டிருந்தார்.

அந்தநாள் ஏகாதசியாயிருந்தமையால் சிவாஜி மகாராஜன் துக்காராம்சுவாமிகள்செய்யும் ஹரிகீர்த்தனங்களை கேட்டுக்கொண்டிருந்தார் இப்படி கேட்டுக்கொண்டிருந்த அவ்வரசன் மனதுக்கு மென்மேலும் ப்ரியஞ்செனித்து தேசபரிபாலனை முதலியதும் மறந்து இரண்டுமாதம் அவ்விடத்திலேயே யிருந்தார் இந்த சிவாஜி ராஜனுக்கு விரோதியாகிய அவரங்கபாக்ஷா சிவாஜி ராஜனைப்பிடித்துக்கொள்ள வேண்டுமென்று சமயம்பார்த்துக் கொண்டிருந்து தன் தூதர்களால் சிவாஜிராஜன் விருத்தாந்தங்களையறிந்து அவரைப் பிடித்துக்கொண்டு வாருங்களென்று இரண்டாயிரங் குதிரை வீரர்களையனுப்பினார் அவர்கள் வந்து துக்காராம்சுவாமிகள்வீட்டைசுத்திக் கொண்டு அவர்களில் நான்குபேர் உள்ளேபுகுந்து சிவாஜி ராஜன் எங்கிருக்கிறானென்று கேட்டார்கள் அப்போது சிவாஜிராஜன் யாதொன்றுஞ் செய்ய ஈவுபிரியாமல் விசனத்தினால் மதிமயங்கியிருந்தார் அது சங்கதி அங்கிருந்த சாதுக்களினால் துக்காராம் சுவாமியறிந்து நீங்களெல்லோரும் பயத்தைவிட்டு பகவானை துதிசெய்வதோடு பகவத் கீர்த்தனைகளை கேட்டுக்கொண்டிருங்கள் ஸ்ரீபண்டரிநாதன் நமக்கு ரக்ஷகனாகியிருக்க நமக்கெப்படி ஆபத்துகளுண்டாகும், ஒருவேளை இந்த துலுக்காகள் நம்மைச் சங்கரிப்பரோ வென்னவோவென்று சோர்வடையாதீர்கள் அவர்களப்படி செய்தால் நாமிந்த கர்மசரீரங்களாகிய காராக்கிருகங்களிலிருந்து விடுபட்டு பிரம்மானந்த சுகத்தை யனுபவிக்கலாம் எத்தனை நாள் ஜீவித்திருக்கினும் மரணமோர் நாளைக்கு அடையாமல் தப்பாது ஆகையால் அப்படிப்பட்ட மரணத்திற்கு பயந்து நீங்களேன் விசனமடைகிறீர்கள் இந்த துலுக்கர்கள் இன்றே நம்மெல்லோர் சரீரங்களை வெட்டினால் நமது பாக்கியத்திற்கு முடிவில்லை யென்று சொன்னார் அவ்விடத்தியசாதுக்கள் சிவாஜிமகாராஜனிங்கில்லையென்று ராஜதூதர்களுக்குப் புகன்றார்கள் அவர்கள் நம்பிக்கையின்றி உருவினகத்திகளோடு துக்காராம் சுவாமி வீட்டிற்குப் புகுந்தார்கள் துக்காராம் சுவாமிபண்டரிநாதனை துதிசெய்து

Koviloor Digital Library

தேவாதிதேவா நினது கீர்த்தனானந்தத்திற்கு விரோதமாக இப்போதிதுவென்ன லீலைகளென்று கொண்டாடுகிறீரென்று விண்ணப்பஞ் செய்தார் ஸ்ரீபாண்டுரங்கமூர்த்தி நீங்கள் எப்போதும்போல் சங்கீர்த்தனானந்தத்தை யனுபவித்துக் கொண்டிருங்கள் மற்ற காரியங்களை யான் பார்த்துக்கொள்ளுகிறேனென்று துக்காராம் சுவாமிகளோடு சொல்லி தான் சிவாஜி மகாராஜன் வேடம்பூண்டு வெளியில் வந்து ஓர் குதிரையின் மீதேறி கையில் வல்லயம்பிடித்து ரணசூரனைப்போல் போய்க்கொண்டிருந்தார் துக்காராம் சுவாமி சமீபத்திலிருந்த சாதுக்களும் சிவாஜி ராஜனுக்கும் வெளியில் நடந்த விருத்தாந்தங்கள் தெரியாதிருந்தது வீட்டை புடை சூழ்ந்துக்கொண்டிருந்த இரண்டாயிரம் குதிரைவீரர்கள் இவனே சிவாஜி ராஜனாக யிருக்கவேண்டும் நாம் பிடித்துக் கொள்ள வந்த நம்மைப்பார்த்து ஓடிப்போகிறானென்று அவரை பின்றுடர்ந்து கூக்குரலிட்டு போய்க்கொண்டிருந்தார்கள் ராஜன்வேடம் பூண்ட பகவான் கொஞ்சுசம் வேகமாய்போயும் ஒவ்வோரிடத்திலவர்களுக்குத்தான் உட்பட்ட போல நயித்தும் இப்படி யவர்களை யலையப்படுத்தி வனத்தின்நடுவில் கொண்டுபோய்விடுத்து தான் மாயமாயினர் இப்படிக்கிருக்க வந்த குதிரைவீரர்கள் இதுவென்ன ஜெகஜ்ஜாலமாக விருக்கிறது இத்தனை தொலைவு துரத்திக் கொண்டு வந்தும் ராஜன் நமக்குட்படாமற்போனான் நம்முடைய கஷ்டமெல்லாம் வீணாச்சுதே யென சிந்தாக்கிராந்தர்களாகி மறுபடியும் வந்துக்கொண்டிருந்தார்கள் அந்நாளிரவு மூன்றுஞ் சாமத்தில் சந்திரன் அஸ்மித்து காரிருள் நான்குதிசையும் மூடிக்கொண்டமையால் வழிதெரியாமல் குதிரைகள் நடக்க மாட்டாமல் காட்டினிடத்தில் பெருத்த மரங்களைப்பார்த்து மிரண்டு தங்கள் மீதிருக்கும் வீரர்களை கீழேவிழத் தள்ளி மனதிற்கிசைந்தபடி யோடிப்போய் விட்டதுகள் இந்த வீரர்களில் சிலர் செடி புத்து மேடு பள்ளமறியாமல் ஓடி முட்புதருக்குள் விழுந்தார்கள் சிலர் தடாகத்தில் விழுந்தார்கள் ஆகாரமில்லாமையால் சிலர் நடப்பதற்கு சக்தி யற்றிருந்தார்கள் நித்திரையினால் சிலர் வழிதப்பி மத்தர்களைப்போல சஞ்சரித்திருந்தார்கள் இப்படி யந்த சேனைகளியாவரும் துக்கமடைந்து ஒருவன் போனவழி மற்றொருவன் போகாமல் எல்லோரும் அந்தக்காட்டில் தானே நசித்தார்கள் பண்டரிநாதன் துக்காராம் சுவாமியிடத்திற்கு வந்து நேரிட்ட ஆபத்தைத் தொலைதூரம்போகும்படி ஓட்டிவிட்டேன் நீங்கள் பகவத் பஜனை செய்துக்கொண்டு ஆனந்த மடையுங்களென்று சொல்லி மறைந்து போனார் அப்போதெல்லோரும் ஜெயஜெய சத்தங்கூறினார்கள் சூரியோதயமானவுடன் பஜனையை நிறுத்தி ஒருவரை யொருவர் ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு சந்தோஷ சித்தர்களானார்கள் அவ்வூரார் சிவாஜிராஜனைக்கண்டு இவரெப்படி துலுக்ககைக்கு எகப்படாமல் தப்பினாரென்று வியப்படைந்து துக்காராம் சுவாமிக்காக ஸ்ரீபாண்டுரங்கநாதன் நம்மை ரக்ஷித்தாரென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு தங்களிடஞ் சேர்ந்தார்கள்.

முதலில் சிவாஜிராஜன் கொடுக்கவந்த திரவியத்தை துக்காராம் சுவாமி கைப்பற்றாமல் பரிகரித்தபடியால் மறுபடி யொருநாள் கொஞ்சம் தானியமாகிலும் அவர் விஷயத்தில் கொடுக்க வேண்டுமென்று நினைத்து ஓர் ஏழை வர்த்தகனைப்போல வேடந் தரித்து ஓர் எதிரின்பேரில் அரிசி மூட்டையை போட்டுக்கொண்டு துக்காராம்சுவாமி வீட்டிற்குவந்து அந்தமகாத்மனுக்கு வந்தனஞ்செய்து ஓ பாகவத சிகாமணியே யான் அரிசி வியாபாரஞ் செய்துக்கொண்டிருக்கும்படியானவன் இக்கிராமத்தில் என்வியாபாரத்தால் இந்த அரிசி தெய்வானுகூலத்தில் எனக்கு லாபமாய் கிடைத்தது ஆகையால் என்பேரில் தயைசெய்து இந்தவரிசிமூட்டையை கைக்கொண்டு அடியேனை தன்னியனாகச் செய்யவேண்டுமென்று துதித்தார் ஸர்வக்ஞராகிய துக்காராம் சுவாமி யுண்மையைத் தெரிந்து ராஜன் பிரார்த்தனையைத் தள்ளக்கூடாமையால் மௌனமாக இருந்தார் ராஜன் அந்தமகாத்மனிடம் அரிசிமூட்டையை தள்ளிவிட்டு விடைபெற்றுக் கொண்டு தன்னிருப்பிடஞ் சென்றார் துக்காராம்சுவாமி தன் பத்தினியை யழைத்து நேற்றிரவில் சிவாஜிராஜன்வந்து ஒரு மூட்டைபரிசி கொடுத்துப்போனாரே அதில் நமக்கொரு நாளைக்கு வேண்டிய தானியமெடுத்துக்கொண்டு மற்ற தானியத்தை ஏழைபரதேசிகளுக்கு கொடுமென்றுசொன்னார் அந்தம்மாளுக்கம்மொழிச் சம்மதியாகாமையால் தானியம் யாவற்றையும் கைக்கொள்ள எத்தனித்தாள் துக்காராம் சுவாமி தன்மனைவியின் எண்ணத்தை யுணர்ந்து எழுந்துவந்து தன்வீட்டிற் கொரு நாளைக்கு வேண்டிய அமுதுபடியை அந்தம்மாளுக்கு கொடுத்து மீதிபரிசியை ஏழை பரதேசிகளுக்கு கொடுத்தார் அப்போது ராஜதூதர்கள் பார்த்துக்கொண்டிருந்து இந்த விருத்தாந்தங்களை ராஜனுக்கறிக்கையிட்டார்கள் ராஜன் துக்காராம் சுவாமிகள் வைராக்கியத்திற்கு மிகவும் வியப்புடைந்தார்.

இப்படியிருக்க ஓர்நாள் துக்காராம் சுவாமி பகவத் சந்நிதிக்குச்சென்று, ஆனந்தபரவசமாகி பஜனை செய்துக் கொண்டிருந்தார் அவ்வூரிலுள்ள வனை

KOVILOOR MADALAYAM

Koviloor Digital Library

யல் வியாபாரஞ் செய்திருக்கு மவனொருவன் பக்தி யோடே அநுதினமும் துக்காராம்சுவாமி பஜனை செய்யுமிடத்திற்கு வந்துஹரி நாமசங்கீர்த்தனங்களை கேட்டுக்கொண்டிருப்பான் இப்படி கேட்டுக்கொண்டிருக்க ஓர்நாள் தன்சிசுவு மாந்தத்தினுல் மிகவும் வாதைப்பட்டிருப்பதை லக்ஷியஞ் செய்யாமல் வழக்கப்படி பகவந்நாமசங்கீர்த்தனை சிரவணசக்தியினுல் அவர்வீட்டைவிட்டு வெளிப்பட்டார் அப்போது அவர்மனைவி நாயகனுக்கு குருக்கேவந்து நமது குழந்தை மாந்தத்தில் வாதைப்பட்டுக்கொண் டிருக்க நீர் பஜனைக்குப்போவது ஞாயமல்ல அவ்விடமிருக்கும் சாதுக்களுக்குள் யாரையாகிலும் நமக்கு சகாயமாக அழைத்துக் கொண்டுவந்து சிசுவுக்கு சுகமுண்டாவதற்கு தகுந்த கிரிஷியைத்தேடுமென்று சொன்னுள் அவளம்மொழிகளை செவியிற்கொள்ளாமல் துக்காராம்சுவாமி பஜனைசெய்யுமிடத்திற்குவந்தார் உடனே அச்சிசு மரணமடைந்து அப்போதந்தசிசுவைப் பெற்ற தாய் மிகுந்த துக்கமடைந்து அந்த பிணத்தை எடுத்துக்கொண்டு பகவந்நாமம் நடந்துக்கொண்டிருக்கும் இடத்திற்குவந்து துக்காராம்சுவாமியைப் பார்த்து ஓய் பாகவதரே நீர் எங்கள் குடும்பத்தை நாசம் செய்துக்கொண் டிருக்கிருய் என் புருஷனுக்கேதேதோ போதித்துவிட்டாய் அவர் உமது வலையிற்சிக்கி இப்படிப்படிப்பட்ட ஆபத்து வேளையை கிஞ்சித்தாகிலும் சங்கை செய்யாமல் இந்த சிசுவை யுபேக்ஷித்து உம்மிடத்திற்கு வந்தார் என் புருஷன் என்வீட்டிலிருந்தால் இக்குழந்தைக்கு மரணம் நேரிடாமலிருக்குமென்று சொல்லி அந்த சவத்தை துக்காராம் சுவாமிகளுக் கெதிரில் கிடத்தி அழுதுக் கொண்டிருந்தாள் கீர்த்தனை கேட்டுக்கொண்டிருந்த ஜெனங்கள் அடி பயித்தியக்காரி சவத்தை யேன் இவ்விடத்திற்கு கொண்டு வந்தாய் இப்பிள்ளையைப் பிழைப்பிக்க துக்காராம் சுவாமிகளிடத்தில் அமிர்தமிருக்கிறதா யென்று சொல்லக்கேட்டு துக்காராம் சுவாமி அவர்களைநோக்கி ஓ பாகவதர்களே ஸ்ரீஹரி நாம அமிர்தத்திற்காகிலும் இருதயங்கமாகிய வேறென்றுளதா இதின்மகிமையரியாமல் உங்களுக்குத் தோன்றியபடி பேசுகிறீர்கள் நீங்களெல்லோரும் ஏககாலத்தில் ஸ்ரீபாண்டு ரங்கநாதன் நாமத்தை ஒரு க்ஷணநேரம் சொல்லுங்களென்று சொன்னவுடன் அவர்கள் யாவரும் சந்தோஷித்து கடலொலிபோல பகவந் நாமங்களை சொல்லி கோஷித்தார்கள் அப்போதந்த சிசுவுக்கு பிராணன் வந்து எழுந்து உட்கார்ந்தது இவ்வற்புதத்தைக் கண்ட எல்லோரும் ஆனந்த பரவசர்களாகிருர்கள். அக்குழந்தைக்கு அன்னை அச்சிசுவை எடுத்துக்கொண்டு வந்து துக்காராம் சுவாமிகள் பாதங்களில்போட்டு ஓ மகாத்துமாவே நினதுபெருமையை யறியாமல் மனம்போனபடி பேசினேன் அந்த தப்புகளை மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து அபராதக்ஷணம் செய்துக் கொண்டாள் அங்கிருந்தவர்கள் யாவரும் இந்த மகானுபாவர் பெருமை சர்வக்ஞராகிய ஸ்ரீ பாண்டுரங்கற்கே தெரியுமல்லாமல் மந்தமதிகளாகிய நாம் தெரிந்துக்கொள்ள சக்தர்களல்லவென்ன சொன்னுர்கள் தேவர்கள் மலர்மழை பெய்தார்கள் கந்தர்வர்கள் பாடினுர்கள் ரம்பை யூர்வசி திலோர்த்தமைகளாடினுர்கள் தேவ துந்துமி கடலொலிபோல் முழங்கியது.

3-வது துக்காராம் சுவாமிகளின் மனைவி சகல சொத்துக்களையும் தானஞ்செய்த அத்தியாயம்.

பின்பு துக்காராம் சுவாமி பரமவைராக்கிய சீலராகி சம்சாரத்தைவிட்டு வனத்தினிடத்திலும் ஸ்ரீ பாண்டுரங்கன் சந்நிதானத்திலும் வசித்துக்கொண்டு பிரமம் நிஷ்டராகி, பிரம்மானந்த மனுபவித்துக் கொண்டு இடைவிடாது பகவானைத் துதிசெய்திருந்தபடியால் அவர் மனைவி துக்கமடைந்தவளாகி ஓர்நாள் ஜலங்கொண்டுவரப் போனபோது ஸ்ரீ பாண்டுரங்கன் சந்நிதியிலிருந்து வந்துக் கொண்டிருக்கும் தன் புருஷனைக்கண்டு அவருக்கு குறுக்காகவந்தும் என்பிராணநாதா நீர் சுமார் இரண்டுமாதமாக என்னைவிட்டு நீங்கிக் காட்டில் வாசஞ்செய்துக் கொண்டிருந்தால் யான் எப்படி ஜீவனஞ் செய்வேன் என்னை ரக்ஷிக்கப்பட்டவர்கள் யாவர் உமக்கு கிஞ்சித்தாகிலும் என்னிடங் கவனமில்லாமல் இரவும் பகலும் நடனகீர்த்தங்களினுல் ஸ்ரீ புருஷோத்தமனை களிக்கச்செய்துக் கொண்டிருக்கிறீர் நீரிப்படியிருந்தால் நினது குடும்பத்தை எவர்கள் போஷிப்பார்கள் என்று துக்கப்பட துக்காராம் சுவாமி தன் மனைவியை வெகுவாய் சமாதானப்படுத்தி என் தாய் தந்தையர்களை நின்னை ரக்ஷிப்பார்களென்று சொல்ல அந்த வனிதை ஓ நாதா பரலோகத்தில் வசிக்கும் நினது தாய் தந்தையர்கள் என்னை எப்படி ரக்ஷிப்பார்களென்று சொல்ல துக்காராம் சுவாமி ஓ மாதே என் தாய் தந்தையர்கள் ஜெனன மரண மில்லாதவர்கள் பரலோக கெதியடைந்தவர்கள் எனது இரேகத்திற்கு தாய் தந்தையர்களே யல்லது க்ஞானந்த சொரூபனுகி க்ஞானகுணத்தை யடைந்து ஈஸ்வரனுக்கு சேஷபூதகி யிருக்குமெனக்கு தாய் தந்தையர்

Koviloor Digital Library

களல்ல யான் உன்னால் பார்க்கப்பட்ட சரீரமல்ல அந்நியத்தில் சரீரத்தைவிட்டு அந்தரத்தில் வசிக்கும் ஜீவாத்மாவாகி யிருக்கிறேன்.

சுலோகம்.

"அந்த வந்த இமே தேஹா
நித்யஸ்யோக்தாஸ்ஸரீரிணஃ

என்னும்மாப்போல இந்த சரீரம் அநித்தியத்தோடு கூடியிருக்கும் சரீராந்தர வாசியாகிய யான் நித்தியமாகி யிருக்கிறேன்.

சுலோகம்.

"நஜாயதே ம்ரியதேவாக தாசின்னயம் பூத்வா பவிதா வானபூயஃ அஜோ நித்யஸ்ய ஸ்வாஸ்வ தோயம் புராணோஃஹன்யதே ஹன்யமானே சரீரே"

என்றபடி யான் பிறப்பவனுமல்லன் இறப்பவனுமல்லன் அழியாதரூபமுடையவன் அநாதியாகியவன் இந்த திரேகம் அழிந்துபோகுமே யல்லது எனக்கொருபோதும் அழிவில்லை இப்படிப்பட்ட வெனக்கு கர்மத்தினாலுண்டாகிய ஜென்மங்களுக்குகணக்கில்லை அந்த திரேகத்தைப்பெற்ற தாய்தந்தையர்களுக்கும் கணக்கில்லை அப்படி இச்சரீரத்தைப்பெற்ற தாய் தந்தையர்களும் பூர்வஜென்மங்களின் தாய் தந்தையர்களின் கணக்கில் சேரத்தகுந்தவர்களாகி யிருக்கிறார்கள் இனிது எனது உண்மையாகிய தாய் தந்தையர்களின் சொரூபங்களைச் சொல்லுகிறேன் கேளும் க்ஞான சக்தி பல சம்பத்து வீரிய சுந்திரம் என்னும் ஆறுகுண ஐஸ்வரியத்தோடு கூடினவனாகி சகல ஆத்தும கோடிகளுக்கும் சகல ஜெகத்ஸ்ருஷ்டி திதி சங்கார கர்த்தாவாகிய சேதனர்களைப்போல பரதந்திரனாகாமல் சுதந்திரனாகி அகிலத்துக்கும் ஆதாரமாகி தனக்கு வேறொரு ஆதாரமில்லாதவனாகி பரமயோகிகள் மனதுக்கும் வாக்குக்கு மெட்டாதவனாகி நாமரூபங்களை யற்றவனாகிய தன்னை துதிசெய்வது அசாத்தியமாகையால் தன்னை யுபாசிக்கும் உண்மையான பக்தர்களுக்காக நாமரூபங்களை பெற்றவனாகி சகல சேதனர்கள் இருதயகமலத்தில் நிவாசனாகி கர்மசாக்ஷியாகிய கர்மபலத்தைகொடுப்பவனாகி முக்திக்கு வித்தாகி சகலலோக சரண்ணியனாகி அகில ஜெகத்துக்குந் தந்தையாகி யிருக்கும் சர்வேஸ்வரன் எனக்குத் தந்தையாகி யிருக்கிறான் நித்திய வைதேகியாகிய யகிலவாத்மகோடிகளுக்கும் புருஷாகாரியாகி கருணையே ரூபமாக தரித்தவளாகி ஜெகத்துக்கும் மதாவாகி ஸ்ரீபத்மநாபன் மார்பில் வசித்துக்கொண்டிருக்கும் இந்திரையெனக்குஅன்னையாகி யிருக்கிறாள் எனக்கு மாத்திரமேயல்ல இந்த திவ்யதம்பதிகள் சகலாத்துமாக்களுக்கும் தாய் தந்தையர்களாகியிருக்கின்றார்கள்யான் அவர்களை யறிந்து சதாகாலமுந் துதிசெய்துக்கொண்டிருக்கிறேன் நீயோ அவர்களை யரியாமலிருக்கிறாய் ஆகையால் நமது தாய் தந்தையர்களென்று சொன்னேன்னீயும் என்னைப்போல அவர்களைத்தெரிந்து இடைவிடாது பஜனை செய்துக்கொண்டிருப்பையாகில் உனக்கு கெதியுங் குறைவில்லையென்று சொல்லக்கேட்டு அந்த மந்தமதியுடையவனிதை இருதயீஸ்வரா நீரும்என்னுடன் இல்லத்திலிருந்து பகவானை துதிசெய்துக்கொண்டிரும் நீங்களில்லாமையால் வீடுபாழடைந்தது போலிருக்குது உமது உபதேசத்தினால் ஸ்ரீபாண்டுரங்கநாதனை நமக்கு தந்தையென்றும் ஸ்ரீருக்மணி பிராட்டியே தாயென்றும்தெரிந்துக்கொண்டேன் இன்று முதல் யானும் உம்மோடு பஜனை செய்கிறேனென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள துக்காராம் சுவாமி சந்தோஷித்து ஓ வனிதையேயினது மொழிகள் நன்று யிருக்கின்றது நீ என்னுடன்சதாகாலமும் ஸ்ரீபாண்டுரங்கனை பஜித்துக்கொண்டு கர்ம ஆதினமாகிய திரேகயாத்திரைக்காக சிந்திக்காம் விருப்பையே யாமாகில் நான்வீட்டிற்கு வந்து உன்னோடு வாசஞ்செய்கிறேன் என்னபிப்பிராயம் அங்கீகாரமாகுமாகில் யானுபதேசிக்கும் பத்தியத்திலிருக்கிறேனென்று பிரமாணஞ் செய்யுமென்று சொல்லிய புருடன் வார்த்தைகளுக்கு சம்மதித்து அவர் கோரியபடி சத்தியஞ் செய்து கொடுத்து அவரை வீட்டிற் கழைத்துக் கொண்டு வந்துஅவருடன் கலந்து ஹரிபஜனை செய்துக் கொண்டிருந்தாள்.

இப்படிக்கிருக்க ஒரு ஏகாதசியன்று துக்காராம் சுவாமி ஹரிகீர்த்தனை செய்துக்கொண்டிருந்து தன் வனிதையை நோக்கி அப்பாவையற்குஒன்பது சுலோகங்களை யுபதேசித்தார் அந்த சுலோகங்களின் பொருள் என்னவெனில் எண்பத்து நான்குலக்ஷம் ஜீவ ஜெந்துக்களில் மானிடதிரேகம் மிகவும் உத்தமமாகி யிருக்குமதில் ஹரிநாம முச்சரிப்பவர் பாக்கியமே பாக்கியம் பரமாத்துமாவின் சிந்தனையில்லாதவர்கள் குடும்ப பாரத்தை சுமந்து ஜெனனமரணப் பிரவாகத்தில் விழுந்து எமனுக்கு வசப்பட்டவர்களாகி வாதைப்படுவார்கள் ஆகையால் க்ஞானவான்கள் மான அவமானங்களைவிட்டும் இந்திரிய வியாபாரங்களை நீக்கி சுக அசுப சப்தங்களை சமமாகக் கேட்டும் பொன் பொருளை ஓடுகளுக்குச் சமமாகப் பார்த்து இனிப்பு உவர்ப்பு பதார்த்தங்களைச்

Koviloor Digital Library

சமமாகப் புசித்தும் துர்வாசனை பரிமள வாசனைக ளைச் சமமாகமுகர்ந்தும் சஞ்சலமாகிய மனதைதிடஞ் செய்து ஆத்மாவுக்கீசனுகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்துமாவினிடத்தில் தங்கள் மனங்களைலயிக்கச் செய்வார்கள் யானும் அப்படிப்பட்டவனுகி யிருக்கிறேன்.

ஓ பூவையே என் தந்தையாகிய ஸ்ரீபாண்டுரங்கன் மிகவுங்கள்ளனுகி யிருக்கிறன் அத்திருடனுக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்வோமென்றாலோ அவனில்லாத இடங் கிடையாது எங்கு தேடினுலும் அவன் அன்னியில் நமக்கு வேறுகெதியில்லை அப்படிப்பட்ட திருடனுக்கு பிரியத்தோடும் ஒரு காரியம் நீ செய்வையாகில் அது மிகவும் எனக்குப் பிரியமாக விருக்கும் அதினுல் நாம் பரமசுகத்தை யடைந்து திரேகவியோகாலத்தில் ப்ரணவரதாரூடர்களாகி ஸ்ரீவைகுந்தமா நகரை யடைந்து வாசுதேவன் சமீபத்தில் வசித்து ஈஸ்வரானந்தத்திற்குச் சரியான நித்தியானந்தத்தை யடைவோம் ஜெனனமரண துக்கங்களில்லாமல் ஸனகாதிகளைப் போல ஆனந்திப்போம் அவற்குபாய மெதுவென்றால் கேளும் நம்வீட்டிவிருக்கும் யானெனும் ஆங்கார போக்கியங்களாகி சகல பதார்த்தங்களையும் ஏழை பரதேசிகளுக்கு கொடுத்து சம்சாரத்தை எப்படி நிறைவேற்றுவேனென்னும் சிந்தையை விட்டு சகலமும் ஸ்ரீபாண்டுரங்கனே நிறைவேற்றுகிறுனென்று திடங்கொண்டு அந்தக் கள்ளன் பரிசோதனைக்கி கொஞ்சமாகிலுஞ் சலிக்காமல் திடமாக நின்று பிள்ளைகளுக்காக துக்கப்படாமல் இவர்கள் நம் பிள்ளைகளல்லவென்று நினைத்தும் கந்தமூலங்களினுல் பசியையும் நதி ஜலத்தினுல் தாகத்தையும் தீர்த்துக் கொண்டு குப்பையில்விழுந்து கிடக்கும்பழைய கந்தை வஸ்திரத்தை தரித்தும் திருப்தி யடைந்திருப்போமே யாகில் அப்போது அந்த பகவானுக்கு நமது பேரில் சந்தோஷ முண்டாகும் ஆகையால் நாமிருவரும் யோகிசர்களுக்கும் அரிதாகிய பதத்தை யடைந்து சுகித்திருக்கலாம் ஓ பெண்ணே நீ திடமாகிய மனத்தோடு கூடி சகலசொத்துக்களையும் ஏழைகளுக்கு கொள்ளையிட்டு ஸ்ரீ பாண்டுரங்கனைத் துதிசெய்துக்கொண்டிரு மென்றுபதேசித்தவுடனே அந்தப்பாவவை புருடன் கட்டளைப்படி தன் வீட்டிவிருந்த சகல சொத்துகக்ளையும் ஏழை ஜனங்களுக்கு கொள்ளையிட்டு அன்றெல்லாஞ் சுகசித்தமாகியிருந்தாள் அதிலொரு புடவை மாத்திரம் மிகுந்திருந்தது மறுநாள் துவாதசிபாரணைக்குவீட்டிலொரு பதார்த்தமு மில்லாமல் அந்த வனிதை நானென்ன செய்வேனென்று சிந்தை நொந்து யிருக்கிறபோது ஸ்ரீ ருக்குமணி பிராட்டி ஒரு நீசஸ்திரீ வேடந்தரித்து துக்காராம் சுவாமியிடத்திற்கு வந்து ஓ மகாத்துமா நின் வீட்டிவிருந்த சகல பதார்த்தங்களையும் ஏழைஜனங்களுக்கு எதேஷ்டமாகக் கொடுத்தாய் ஆகையால் எனக்கேதாகிலும் ஒருபொருள் கொடுமென்று வேண்டிக்கொள்ள துக்காராம்சுவாமி வீடெல்லாஞ் சோதித்து ஒரு வஸ்துவுங் காணுமல் பிழக்கடைத் தோட்டத்தில் ஈரமுணரக் கட்டியிருக்கும் புடவையை யவிழ்த்து அந்த நீசப்பெண்ணுககுகொடுத்தார் அதைக்கண்டு ஜனங்கள் யாவரும் துக்காராம்சுவாமி சம்சாரத்தை சமூலமாக வெட்டினுரென்று சொல்லி வியப்படைந்திருந்தார்கள்.

அவர்களைக் கண்டு துக்காராம் சுவாமி மனைவி பாக்கியவான்களாகிய ஓ சகோதரர்களே கேளுங்கள் என் புருடன் வீட்டை விட்டு இரண்டு மாதமாய் காட்டில் வாசஞ்செய்துக்கொண்டிருந்தார் யான் வீட்டில் பிள்ளைகளை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டும் நாயகனைத் தேடிக்கொண்டு மிருக்க இவர் முந்தியநாள் தேவாலயத்திற்கு வந்துகொண்டிருப்பதைப் பார்த்து நல்ல வார்த்தைகளைச் சொல்லி யானும் உம்மோடு ஹரிகீர்த்தனைகள் செய்கிறேனென்று சமாதானஞ் சொல்லி நீர் வீட்டிவிருந்தால் போதுமென்று பிரார்த்தித்து உடன் அழைத்து வந்தேன் நேற்று ஏகாதசியாகையால் விருதமிருந்து ஹரிகீர்த்தனஞ்செய்து என்னையழைத்து வெகு விதங்களாக வெனக்குபதேசித்தார் உடனே எனக்கு வைராக்கிய முண்டாகி இவர் மொழிகள் உண்மையென்று நம்பி வீட்டிவிருந்த சகல சொத்துக்களையும் ஏழைகளுக்கிட்டு ஸ்ரீ பாண்டுரங்கனை துதித்திருந்தேன் எனக்கொரு சேலை மாத்திரம் மீதியாகி யிருந்தது. அந்த சேலையைக் கூட என் மணளன் இன்று காலையில் ஒரு நீச ஸ்திரீக்கு தத்தஞ் செய்து தேவாலயத்திற்குப் போயினுரிங்கு பசியினுல் மெய் சோர்ந்திருக்கும் பிள்ளைகளைப்

Koviloor Digital Library

பார்த்து யானெப்படி சகிப்பேன் நானென்ன செய்
வேன் என்கெதிபிப்படியாச்சுது இரண்டுமூன்றுதரம்
துதிசெய்த மாத்திரதில் சகலத்தையும்விட்டுநீங்கும்
படியானகுணத்தை எமக்குண்டாகச்செய்த பாண்டு
ரங்கன் பாதகமலங்கள் மிகவும் வஞ்சனை யுடையதாக
ளாக விருக்கிறது யோகபுருஷர்கள்மகாத்துமாக்கள்
தேவர்கள் முதலாகிய எல்லோரும் அவர் செந்தாம
ரைத்தாள்களை கண்ட மாத்திரத்தில் மெய்மறந்து
சொக்கிப்போகிறார்கள் எனது புருஷன் இரவும் பக
லும் அந்த சொக்குதலோடு கூடியிருக்கிறார் நானிர
ண்டுதரம் துதிசெய்த மாத்திரத்தில் தானே என்புத்
திக்கு மிருந்த பிரமையுண்டாகி மோசம் போனேன்
ஓர் குணமுநல்லினு லிப்படிக்கொத்த பாதங்களை நைய
நறுக்கினால் எல்லவரும் சுகப்படுவார்கள் சாதுஜனங்
கள் தங்கள் பெண்டுகளைவிடுத்து லச்சையற்று உன்
மத்தர்களைப்போல வெளியில் திரியாதிருப்பார்களெ
ன்றுசொல்லி ஒருபெரியகுண்டுக்கல்லை எடுத்துக்கொ
ண்டு தேவாலயத்திற் பிரவேசிக்கவே மச்சரூபமாகி
பிரளய சாகரத்தில சஞ்சரிக்கிறபோதும் கூர்மரூப
மாகி சப்தசமுத்திரத்தில்முழுகிப்போகாமல்பூமியை
நிலையில் நிறுத்தியபோதும் நரசிங்கரூபமாகிஇரணிய
கசிபனோடு போராடியபோதும் வாமனரூபமாகி மா
பலியையாசிக்க போனபோதும் பரசுராமராகி க்ஷத்
திரியர்களை எதிர்த்தபோதும் ஸ்ரீராமரூபமாகிஇராவ
ணனோடு யுத்தஞ் செய்தபோதும் பலராமரூபமாகி
பிரலமயாசூரனால் ஆகாயவீதி கொண்டுபோயினபோ
தும் ஸ்ரீகிருஷ்ணரூபமாகி கல்வியினால் கட்டுப்பட்ட
போதும் கலங்காமலிருந்த திடச்சித்த முடையவன்
பெருத்த குண்டுக்கல்லைத் தன்னிரண்டு கைகளினா
லெடுத்துக்கொண்டு விட்டலநாதன் பாதங்களை நைய
நறுக்க வேணுமென்னும் எண்ணத்தோடுவரும் மங்
கையைப் பார்த்தமாத்திரத்தில் மிகவுங்கலங்கி திரே
கம் நடுங்க பயப்பட்டிருந்தார் அதைபார்த்து ருக்கு
மணிபிராட்டி ஓபிராணநாதா நினது திரேகம்நடுக்க
முண்டாவதற்கு காரணமென்ன துக்காராம் பெண்டு
க்குப் பயப்படுவாயாகில் ஆலயத்தைவிட்டு கொஞ்ச
நேரம் வெளியிற்சஞ்சரித்து மறுபடிவாரும் எனக்கே
ட்டு ருக்மணிநாயகன் ஓவனிதைகள்ரத்தினமே நான்
ஆலயத்தைவிட்டு வெளியிற்போனால் நமக்கந்தரங்க
னாகிய துக்காராம் பிராணத்தைவிடுவார் வண்டுகிரஹ
ணத்திற்காக கமலத்தில் பிரவேசித்து சூரிய அஸ்த
மனசமயத்தில் மூடிக்கொண்ட தாமரையி லகப்பட்டு
வெளிப்பட வகையறியா அளியைப்போல நான்
எனதுபக்தன் இருதயகமலத்தில் அகப்பட்டு வெளி
படக் கூடாமல் பக்த பராதீனனாகி யிருக்கிறேன்

அதோபாரும் துக்காராம் தன்மனைவிக்குநல்லவார்த்
தைகளை சொல்லி சமாதானப்படுத்துகிறான் தன்பிரா
ர்த்தனையை தன்மனைவி யங்கீகரியாளாகில் அம்மாது
கொண்டுவந்த கல்லை தன்காலின்மேல் போட்டுக்கொ
ண்டு எனக்கபாயமில்லாமல் தொலைத்துவிட வேண்டு
மென்று தன்மனதில் நிச்சயித்து தன்பத்தினிக்கு
வெகுவிதங்களினால் நயவசனங்கள் சொல்லிக்கொண்
டிருக்கிறான் ஒருவேளை அந்தமதிதான்கொண்டுவந்த
கல்லை துக்காராம் பாதத்தின்பேரில் போட்டால்பல
தானகெடுதிகளைகாட்டி நடிக்கும்அவர்பாதங்களுக்கு
பின்னம்நேரிடுமல்லவாஎன்று சோதிக்கிறேனென்று
சொன்ன உலகநாதன் வார்த்தைகளைக்கேட்டுஸ்ரீருக்
மணிபிராட்டி நடுமண்டபத்தை நெருங்கிவந்து கொ
ண்டிருக்கும் துக்காராம் பத்தினியை உள்ளே சேரவ
ழைத்துக்கொண்டு துக்காராம் உள்ளேநுழைவதற்கு
முன்பு கதவை சடாலென்று மூடிக்கொள்ள துக்கா
ராம் சுவாமி வெளியில்நின்று ராவணன் பக்தியினால்
சாதிப்பதாகிலும் விரோதத்தினால் தடவது மிருந்த
சுலபமென்று ஸனத்குமாரனால் உபதேசத்தைபெற்று
அதுமுதல் பகவானை துவேஷஞ்செய்து அவரால் மர
ணமடைந்து தன்னியனாகினனென்று ஸ்ரீராமாயண
உத்தரகாண்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அல்
லவா அந்தமொழிபின்று எனதுமனைவியிடத்தில் நே
ரில் கண்டேன் இந்த அவலைக்கு கிடைத்தபாக்கியம்
எனக்கு கிடையாமற்போச்சு தல்லவாவென்றுசோக
மடைந்திருந்தார் மண்டபத்திற்குள் புகுந்தபின்பு
பகவான் திருவடிகளை நையநறுக்குவதற்குஎத்தனஞ்
செய்த துக்காராம் சுவாமி மனைவியின் கைகளை ருக்
மணிபிராட்டி கெட்டியாகப்பிடித்துகொண்டு ஓமந்த
மதியுடைய பெண்ணே தேவாதிதேவனாகிய பாண்டு
ரங்கன் என்ன வபராதஞ்செய்தார் எனக்கேட்க அந்
தப் பாவை ருக்மணிபிராட்டியை நோக்கி ஓ அன்னை
யே ஜாரசோர சிகாமணியாகிய இந்த கோபிகாசித்த
சோரன் பாதங்களை இரண்டுதரம் பக்தியோடு துதி
செய்த மாத்திரத்தில் சகல சொத்துக்களையும் ஏழை
களுக்கு கொடுக்க வேண்டுமென்று எனக்குப் புத்தி
யுண்டாகியது அதினால்நான் இப்பொழுது அனுபவி
க்கிற கஷ்டத்தைப்போலத்தானே இனிமேலும்இந்த
பாண்டுரங்கனுடைய பாதங்களைப் பக்திபூர்வகமாக
துதிப்பவரும் தங்கள் பொருள்களையிழந்து கஷ்டப்
படுவார்கள் ஆகையால் அதற்குகாரணமாகிய இந்த
திருவடிகளை இக்கல்லினால் நறுக்கி உலகத்திற்குக்ஷே
மமுண்டாகச் செய்கிறேனென்று சொல்லருக்குமணி
பிராட்டி பூர்ணசந்திரனை நிகர்முகத்தையுடைய அம்
மாதை சிலாகித்து ஓ அம்மணி நீ இப்பொழுது

இப்படிசெய்வதற்கு காரணம் நினதுவறுமையேயல்
லவா அப்படிவேண்டுவதில்லை நினதுவறுமை நீங்கும்
படி நினக்குவேண்டிய தெல்லாங் கொடுக்கிறேனை
கொண்டுபோம் நீயதற்குஞ் சிந்திக்காதே யென்று
சொல்லி ஒருதிவ்யசேலையை கட்டிக்கொள்ளக்கொடு
த்து சகலாத்திஞபரணங்களினு லலங்காரஞ் செய்து
அம்மாயின் மடிநிறைய விராகன்களைக்கொட்டி சந்
தோஷமுண்டாகச் செய்ய அவ்வனிதை பரமானந்த
மடைந்து ஸ்ரீ ருக்மணிபிராட்டிக்கும் ஸ்ரீபாண்டுரங்க
னுக்கும் நிக்கதெண்டனிட்டு அவரனுமதி பெற்று
தன்னகதிற்குப் போயினள்.

துக்காராம்சுவாமி சிஞ்சவடிபிராமணன் கொண்டபொருமையைத் தீர்த்த அத்தியாயம்.

துக்காராம்சுவாமி மனைவியை நோக்கி மிகுந்த
கோபங்கொண்டு ஓபெண்ணே என்னகாரியஞ் செய்
தாய் நீவிஸ்வாசம் கொஞ்சமேனுமில்லாமல் பகவான்
விஷயத்தில் அபசாரப்பட்டாய் ஆகையால் நமக்கும்
கிடைக்கத் தகுந்த பூர்ணபலன் அற்பமாகியது பக்
குவமாகாததற்குமுன் அரவடை செய்தால் தானிய
மெப்படி குடிகளுக்கு சித்திக்கும் கரந்தவுடனே பா
லைக் குடித்தால் வெண்ணை யெப்படி கிடைக்கும்
சூரியப் பிரகாசத்தைவிட்டு அந்தகாரமான இருளை
அடுத்தவர்களைப்போல பரமவைணவசாயுச்சியத்தை
விட்டு அற்பமாகி அனர்த்த யேதுவாகிய பொருளை
இச்சித்தாய் உனது அவிவேகத்தையானென்னென்று
சொண்டாடுவேன் என்றுசொல்லிய கணவன்து வார்
த்தைகளைக் கேட்டவுடன் அவ்வனிதை மமகாரத்தை
விட்டு வைராக்கிய மேலிட்டு ஸ்ரீருக்மணி பிராட்டி
தனக்கு கொடுத்த ஆடையாபரணங்கள் யாவற்றை
யும் ஏழை பரதேசிகளுக்கு கொடுத்து நிர்மலமாகிய
மனத்தினோடு ஸ்ரீபாண்டுரங்கனை துதிசெய்துக் கொ
ண்டிருந்தாள்.

இப்படிக்கிருக்க துக்காராம்சுவாமிகள் மகிமை
நாளுக்குநாள் விசேஷித்து அபாரமாகி அந்தமகானு
பாவருடைய நிர்மலமான கீர்த்தி உலகெங்கும் பரவி
யது சிலபிராமணர்கள் துக்காராம் சுவாமிகளுடன்
ருக்குமணிநாதன் வீற்றிருந்து சட்பந்திபோஜனஞ்செ
ய்கிறானென்று உலகத்தவர்கள்சொல்லிக் கொள்ளுகிறு
ர்களே அது எப்படி அனுகூலமாகுமென்று தங்களு
க்குள் சொல்லிக்கொண்டிருந்தார்கள் இந்தவார்த்தை
களை சிஞ்சவடியென்னுங்கிராமத்திலிருக்கும் விநாயகர்
பூஜைசெய்யும் ஓர்பிராமணன்கேட்டு பொருமைகொ
ண்டவனாகி நான்கணபதியை பூசிக்கும் பிராமணன்
வேதாந்தங்களை நன்றாயறிந்தவன், சகல சாஸ்திரங்க
ளும் தெரிந்தவன் அநேகமந்திரங்கள் எனக்குஆதீன
மாக விருக்கிறது கணபதியை நானுவிதங்களில் உப
சரித்து பூசித்துக் கொண்டிருக்கிறேன் இப்படிக்கிரு
ந்தும் இதுவரைக்கும் விநாயகமூர்த்தி எனக்கு சே
வைதராதிருக்கிறுன இந்த துக்காராமோ சூத்திரன்
வேதத்தை கற்காதவன், இவன் ஸ்ரீபாண்டுரங்க நாத
னை வசியப்படுத்திக்கொண்டு அந்தஜெகதீசனோடு சம
பந்திபோஜனஞ் செய்கிறானென்றால் எப்படிநம்பக்கூ
டும் ஆகிலும் அவனையிங்கழைப்பித்துபரிக்ஷித்துபார்
க்கிறேனென்று நினைத்திருக்கையில் சர்வஜ்ஞராகிய
துக்காராம்சுவாமிகள் இந்தபிராமணன் நினைவை
யுணர்ந்துதானேசிஞ்சவடிக்குவந்து அந்தபிராமணன்
வீட்டிற்குசென்று அவனுக்கு வந்தனஞ்செய்தார்.

அந்தமறையவன் மிகவும் சந்தோஷித்து ஓதுக்
காராம்! நான் உன்னைப்பார்க்க வேண்டுமெனறு ஆ
சைகொண்டு நினைத்திருக்கையிலே தானே பகவான்
உன்னை இவ்விடத்திற் கழைத்துவந்ததற்காக மிகவும்
ஆநந்தமடைந்தேனென்றுசொல்லி க்ஷேமங்களை வி
சாரித்துக் கொண்டிருந்து நடுப்பகலானவுடன் அந்த
பிராமணன் தான்புசிக்கும்இடத்தில் துக்காராம்சுவா
மிகளுக்குஒருயிலைபோட்டார் அப்போது துக்காராம்
சுவாமி ஓமறையவரே என்னிலைக்கருகில் இன்னொரு
யிலையை போடவேண்டும் நான் புசிக்கும்போது ஸ்ரீ
பாண்டுரஙகனும்புசிக்கவருவார் உன் இலைக்கருகிலும்
இன்னொருயிலையைப்போட்டு உன்னால்பூசிக்கப்பட்ட
விநாயகரை வரவழைத்து புசிக்கச் செய்யும் என்று
சொல்லிய துக்காராம்சுவாமிகள் வார்த்தைகளைக்கே
ட்டு பிராமணன் ஆச்சரியப்பட்டு பூஜைவீட்டிற்குட்பு
குந்து விக்கினேஸ்வரரை வெகுவிதங்களாக துதித்து
புசிக்கவாருமென்று பிரார்த்தித்தும் விநாயகர்வராத
தால் அந்தபிராமணன் லச்சையடைந்து நான் சாஸ்
திரவழியை யனுசரித்து இக்கணபதியை துதித்துக்
கொண்டிருந்தும் இந்ததேவன் எனக்குதரிசனந் தரா
மலிருக்கிறுன் கரியரசன் எந்த சாஸ்திரத்தை தெரிந்
து தோத்திரஞ்செய்து பகவானை சேவித்துக்கொண்
டது வலதுகைக்கும் இடதுகைக்கு உண்டாகிய பே
தத்தையறியாத யாதவஸ்திரீகள் ஸ்ரீகிருஷ்ணனை எப்
படிசேவை செய்துக்கொண்டார்கள் பிரமாதிகளுக்
கும் அரிதாகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தெரிசனம்
ரேபல்லே யாதவர்களுக்கெப்படி சுபலமாயிற்று பக
வான் பக்திக்கு கட்டுபடுவதுபோல் யக்ஞயமதானம்
தவங்களுக்கு கிட்டமாட்டானென்று தனக்குள்சிந்தி
த்துக்கொண்டு துக்காராம் சுவாமிகள் அருகில்வந்து

Koviloor Digital Library

ஓ பாகவதசிகாமணியே அர்ச்சாரூபத்தை பெற்றிருக்கும் பகவான் நம்முடன் எப்படிபுசிப்பார் நாம்ஆராதனைசெய்தும் அன்னத்தை பகவான்கடாட்சித்துதாசர்கள் நாக்கிலிருந்து மதுரத்தை கொள்ளுவாரென்று சாஸ்திரங்கள்முறையிடுகின்றது என்றதைகேட்டு துக்காராம்சுவாமிகள் ஓ பிராமணோத்தமா நினக்கு உபாசனைமூர்த்தியாகியவிநாயகர் நீர் அழைத்தபோது கடலில்விழுந்த ஓர்பக்தனை ரட்சிக்கப்போனார் ஓர்க்ஷணத்திற்குள்வருவார் ஆகையால்நீஇப்போதுசென்று அந்தகணபதியை யழைத்துக்கொண்டு வாருமென்று சொன்னார்.

அந்தபிராமணன் ஆச்சரியப்பட்டுக் கொண்டு பூசைவீட்டிற்குள் புகுந்துபார்க்க ஆசையுடன் ஸ்நானஞ்செய்தவனைப் போல கணபதி திரேகமும் வஸ்திரமும் ஜலத்தினால் நனைந்திருந்தது அந்தவஸ்திரத்தை பிழிந்து ஜலத்தை பரிக்ஷைசெய்ய அதுகடல் நீராகவும் இருக்கதுகண்டு மறையோர் விநாயகருக்கு உலர்ந்த வஸ்திரத்தைவுடுத்தி துக்காராம் சுவாமிகள் சமீபத்திற்குவந்து நீர்சொல்லியதெல்லாம் உண்மையாகியிருந்தது வெகுதூரத்தில் நடந்தசங்கதி நீஎப்படியறிந்தாயென்று பிராமணன்கேட்க துக்காராம் சுவாமிகள் நீதிக்கிணங்கியதங்களைபொத்தசாதுஜனங்கள் ஆசீர்வாதபலத்தால் என்மனதுக்கு தோற்றியதை சொன்னேனென்று நவின்றார்.

அவிடமிருந்த பிராமணர்யாவரும் வியப்படைந்து ஸ்ரீபாண்டுரங்கன் இவருக்கு பிரசன்னமாகியிருப்பதினால் சகலதேவர்களும் இவருக்கும் பிரசன்னராகியிருப்பார்கள் கற்பகத்தருவை யடுத்தவர்களுக்கு சகலசொத்துகளும் கையிலிருப்பதுபோல ஆகிரிதகற்பகத்தருவாகிய ஸ்ரீபாண்டுரங்கனையடுத்த இந்தமகாத்துமாவுக்கு நிறைவேறுதகாரியமெதுவு மில்லையென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள் அப்போது துக்காராம்சுவாமி கணபதியுபாசகரைப்பார்த்து சீக்கிரத்தில் கணபதியை வரவழையும் ஸ்ரீபாண்டுரங்கன் இப்போ வருவார் நாமெல்லோருங்கூடிபுசிப்போமென்றுசொன்னார் அதைகேட்டு அவிடத்தில் பிராமணர்கள் துக்காராம் சுவாமிகளைப்பார்த்து நீங்கள்பாண்டுரங்கனை வரவழைப்பதைப்போல் கணபதியைகூட வரவழையுமென்று சொன்னார்கள்.

துக்காராம்சுவாமி துதிசெய்தமாத்திரத்தில் ஸ்ரீபாண்டுரங்கன் அவடத்துக் கெழுந்தருளினார் பின்பு துக்காராம்சுவாமி கணபதிக்கி வலபாகத்தில் நின்று இருகைகளை கூப்பி யானைமுகமுடைய விநாயகர் ஸ்ரீபண்டரிநாதன் வந்திருக்கிறார் நீயும்வந்து எங்களோடு புசிக்கப்போக வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார் அதைக்கேட்டு பெருச்சாளி வாகனன் எழுந்தருளி பாண்டுரங்கநாதனுக்கு வந்தனஞ்செய்து இருவருமாயுட்கார்ந்தார்கள் துக்காராம் சுவாமிகள் தவிர மற்றவர்கள் கண்களுக்குகணபதியும் வாசுதேவரும் புலப்படாமலிருந்தார்கள் இலைகளில் பரிமாறிய பதார்த்தங்கள் ஒன்றுகிலும் கணகளுக்ககப்படவில்லை மேலுமேலும் பரிமாரிக் கொண்டிருந்த பதார்த்தங்களும் கண்களுக்கு கொஞ்சங் கொஞ்சமாய் குறைவுபட்டுக் கொண்டேவந்தது துக்காராம் சுவாமியுடன் பிராமணர்களெல்லோரும் உட்கார்ந்து புசித்தார்கள் போஜனமானபிறகு எல்லோருங் கைகால் சுத்திசெய்துக்கொண்டார்கள் விஷ்ணுவும் விநாயகரும் துக்காராம்சுவாமிகளால் சந்தனபுஷ்பதாம்பூலாதிகளைப் பெற்றுக்கொண்டு மறைந்துபோனார்கள் பின்பு துக்காராம்சுவாமிகள் அன்றிராத்திரி அவிடத்தில் ஸ்ரீ ஹரிகீர்த்தனங்கள் செய்துக்கொண்டிருந்து சிஞ்சவடி பிராமணர்கள் நேமனங்களைப்பெற்றுவிநாயகரைத்துதித்து வந்தனஞ்செய்து தேவநகரத்துக்கு வந்துக்கொண்டிருந்தார்.

வழியில் ஒருதோட்டக்காரன் துக்காராம்சுவாமிகளுக்கு தீர்க்கதெண்டனிட்டு கருப்பஞ்சாறு கொடுத்துஉபசரித்து சிலகரும்புகளை ஒருகட்டாகக்கட்டி ஓ சுவாமி இதுகளை வீட்டிற்கு கொண்டுபோய் பிள்ளைகளுக்கு கொடுமென்று பிரார்த்தித்தான் துக்காராம் சுவாமி அந்தகரும்புகளை யெடுத்துக்கொண்டு பகவந்நாமசங்கீர்த்தனங்களைச் செய்து தன்னைமறந்துதெருவில் வருகிறபோது அந்தவூர்சிறுவர்கள்பார்த்து எங்களுக்கு கரும்பு வேண்டுமென்று கேட்டார்கள் துக்காராம் சுவாமி அப்பிள்ளைகளை ஸ்ரீபாண்டுரங்கமூர்த்தியாக பாவித்து கரும்பை வாங்கிக்கொள்ளும் தாமோதரா கரும்பை பெற்றுக்கொள்ளும் ஸ்ரீதரா கரும்பைப்புசியும் கோவிந்தா கரும்பைதின்னும் முகுந்தா கரும்பை உண்ணும் வைகுந்தா என்றுசொல்லிக் கொண்டு கரும்புகள் யாவற்றையும் அப்பிள்ளைகளுக்குக் கொடுத்துக்கொண்டு வீட்டுக்கு வருகிறபோது தன்கையில் ஒருகரும்பு மிச்சமிருந்தது அதனை தன் மனைவிகையிற் கொடுத்தார்.

அவ்வனிதை தெருவில்நின்றுதன்கணவன் ஊர் பிள்ளைகளுக்குகரும்புகளைக் கொடுத்துகொண்டுவந்ததை பார்த்துக்கொண்டிருந்தமையால் கணவனைநோக்கிபாக்கியவானாகியதோட்டக்காரன்கொடுத்தகரும்புகள் யாவற்றையும் வீட்டிற்குகொண்டுவராமல் ஊரிலிருக்கும் உன்தந்தைகளுக்கு பகுந்து கொடுத்து

விட்டு இருந்தகரும்பைஎனனென்று என்கையில்கொடுக்கவந்தாய் என்று சொல்லிக்கொண்டே அக்கரும்பினலவர் தலைமீதிலடித்தாள் அப்போது அந்தகரும்பு இரண்டுதுண்டுகளாகி அதிலொன்று அவ்வனிதைகையிலிருந்தது இன்னொன்று பூமியில் விழுந்தது அதைப் பார்த்து பரமசாந்தகுண நிதியாகிய துக்காராம் சுவாமிகள் சிரித்துக்கொண்டே ஓ வனிதையே இக்கரும்பை பாரபக்ஷமில்லாமல பகுந்து விட்டாய் உன்கையிலிருக்குங் கரும்பை நீயெடுத்துக் கொள்ளு கீழேவிழுந்த என்பாகத்தை பிள்ளைகளுக்கு கொடுக்கிறேனென்று சொல்ல அம்மாது இவர்சுத்த சத்துவகுணத்திற்குவியந்து இவர்பிரபஞ்சாதீதர் பரமசாந்தமூர்த்தி ஆங்கார மமாகாரங்கள் இவரிடத்தில் தேடினலும்இல்லை விளக்குவீட்டின் அதிகாரிக்கும் திருடனுக்கும் சமமாயிருப்பதுபோல அம்மகாத்துமா சுகதுக்கங்களிடத்திலும் பாலை ஓடுபொன்னிடத்திலும்சத்துரு மித்துருக்களிடத்திலும் சமனுகியிருக்கிறர் இப்படிப்பட்ட மகாத்துமாவை நான் அனியாயமாய்க் கஷ்டப்படுத்துவது நியாயமல்லவென்றுசொல்லி சாந்தசித்த முடையவளாகி மௌனமாயிருந்தாள்.

துக்காராம்சுவாமிகள் ஸ்ரீபண்டரிநாதனுக்கு விண்ணப்பச் சீட்டனுப்பும் அத்தியாயம்.

துக்காராம்சுவாமிகள் வருஷந்தோறுந் தப்பாமல் ஆடிமாதம் சுத்தஏகாதசிக்கு பண்டரிபுரத்திற்கு போய் வந்துக்கொண்டிருப்பார் இப்படியிருக்கஒரு வருஷம் இவர்தேகத்தில் ஜுரம்உண்டாகி அதினல் மிகவும் வாதைபட்டுக்கொண்டு பலயீனமாகி நடப்பதற்கு வலுவில்லாமலிருந்தார் இந்தவருஷம் ஸ்ரீபண்டரிபுர யாத்திரைக்கு விக்கினம உண்டாச்சுதென்று மிகவும் ஆயாசமடைந்து ஒருசீட்டினிடத்தில் சுபமுண்டாகக்கடவது ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகி அனந்தகலியாணகுண பரிபூரணராகிபண்டரிபுரத்தில் பக்தஜன சம்ரக்ஷணத்திற்காக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாண்டுரங்கநாதன் திருத்தாமரைப் பாதங்களுக்கு அநேக வந்தனங்கள்செய்து எழுதிக்கொண்டவிண்ணப்பம் என்னவெனில ஓ தேவாதிதேவா ஆதிமத்தியாந்த ரகிதா ருக்குமணிநாதா நான் உன்னையன்றி வேறுதெய்வங்களை யாகிலும் உனது சங்கீர்த்தனத்திற்காகிலும் அன்னியமாகியவார்த்தைகளையாகிலும் அறியேன் உன்னையன்றி வேறுகெதியில்லாதவன் சரணுகதரக்ஷக இந்தவருடந் தேவரீர் மகோற்சவத்தை தெரிசனஞ்செய்ய கோரியவெனக்கு விக்கினமாக என்தேகத்தில் ஒருவியாதி யுண்டாகி அதினல் வாதைப்பட்டுக்கொண்டுநடந்துவருவதற்கு வலுவில்லாமல் இருக்கிறவனுகையால்இந்தவிண்ணப்பத்தை எழுதினேன் உனதுகீர்த்தி வேதசாஸ்திரங்களுக்கும் அகோசரம் நானே பாமரன், உன்னை என்னென்று புகழ்வேன் சதாகாலமும் உனது சேவை செய்துக்கொண்டிருக்கும் ஸ்ரீருக்குமணிதேவி உனதுபிரபாவங்களை தரியாமலிருக்கிறுள் பிரம்மருத்திராதிகளுக்கும் மகாரிஷிகளுக்கும் பரமயோகி ஜனங்களுக்கு மரிதாகிய தேவரீர் திருவடித்தாமரைகள் உனது அந்தரங்கபக்தர்களுக்கு சுலபமாகியிருக்கின்றது சகலத்திலும் வசிப்பவனுகி சர்வக்ஞான மூர்த்தியாகிய உமக்கு அடியேன் கஷ்டங்கள் தெரியாமலிருக்கிறது ஓகோவிந்தா ஓவைகுந்தா ஓமுகுந்தா ஓஅனந்தா ஏகதபக்தனை ரக்ஷிக்கச்சென்று என்னை மறந்தாய் நான் எதாகிலும் அபேக்ஷிப்பேனென்றுநீர்பயப்படுகிறீரோ ஓரிஷிகேசா ஏஜெகதீசா ஏதாசர்கள் நேசா ஓதிருமகள் உள்ளத்தில்வாசா என்பிராணநாதா எனக்கு உமதுவல்லமையான பதவியை துரிதமாக்கொடு பெற்றதாய் வெறுத்துவிட்டால் பிள்ளைகள் தமது கோரிக்கையை யாரோடு சொல்லிக் கொள்வார்கள், என்குன்றயை யாரறிபவர்கள் ஏபாண்டுரங்கா பவபங்கா சதசங்கா மங்களாங்கா ஏன் இருப்பயில்லாமல் என்னைப்பரிகரித்தாய் ஏகேசவா ஏராகவா ஏவாசுதேவா ஏதேவாதிதேவா நான் உனக்கு யாதொரு பாரமும் உண்டாக்கச்செய்பவில்லை உமது நாமத்துதியே எனக்குபெருத்தநிதி இதுவே எனக்குப் போதுமென்று உண்மையோடுகூடியிருந்தும் புத்திரனுகியநான் தந்தையாகிய உன்னைப்பார்க்க அவாகொண்டேன் ஏ கோபிகாரமணு கோவர்த்த உத்தாரணு கோபாலபாலா சுத்தசத்துவகுணசீலா உனக்கு அடியார்கள் அநேகரிருக்கிறர்களென்று என்னை மறந்தீரோ லக்ஷ்மீநாதா தீனநாதா தாமரைப்பாதா என் பிராணநாதா உனதுபக்தர் ஒருவரையனுப்பி எனது யோகக்ஷேமங்களை விசாரிப்பதற்கு உனக்குகஷ்டமாகதோன்றியபோதிலும்ஒருசீட்டாகிலும் எழுதியனுப்புவதினுல் உமக்கு வருகிறகஷ்டமென்ன ஏநாராயணு நாதபாராயணு ஜெகத்காரணு பரிபூரணு சாந்தமூர்த்தி அநேகபிள்ளைகளைப் பெற்று வெகுசம்பத்துடன் கூடியிருக்கும் நீஉமது சம்பத்தை உம்பிள்ளைகளுக்குகொடாமல் இனியாருக்கு கொடுப்பது உமதுபிள்ளையாகிய நான்பசியினல் அழுதுக்கொண்டிருக்க என்னைச் சமாதானப்படுத்தாவிட்டால் உண்மையாக உமது கௌரவத்திற்குஅழியுண்டாகுமென்று அறிந்திருந்து நான் உம்மைநினைத்துக்கொண்டு அழும்சப்தம்உமது

Koviloor Digital Library

செவிக்கு நாராசமாகப் படவில்லையா ஓபக்தவச்சலா பக்தபராதீனா பக்தஜெனபாரிஜாதா பக்தருள்வாசா நீயினி பராமுகமாயிருப்பாயாகில் சாது ஜெனங்களிடத்திற்சொல்லி அவர்களால் நீர் அடையும் பக்திபென்றும் பிரியத்தை இன்றுமுதற்கொண்டு நிறுத்திவிடுவேன ஜெனத்துக்கு கர்த்தாவாகிய சகலசக்தனாகி அந்த கல்யாணகுண கணநிதியாகி யிருக்கும் உமது வயற்றினிடத்தில் பிறந்த யான் இப்படி கஷ்டப்படுவது உமக்கு அபகீர்த்தியுடனும் லஜ்ஜையாகியு மிருக்கவில்லையா ஓருக்குமணிநாதா ஏனென்றால் நிஷ்டுர வார்த்தைகளை யுண்டாகச்செய்து கொண்டிருக்கிறீர் துரிதமாக கிருபைசெய்யும் இனி ஒருநிமிஷமாகிலும் சகிக்கமாட்டேன். சகலலோக சரண்யா சரணாகதியடைந்தவர்களைக்கைவிடுவதில் உமக்குச்சமானமாகியவர்களை கண்டுக்கேட்டும் அறியேன் பாவபலத்தினால் இந்தபவக்கடலில்வீழ்ந்து கஷ்டங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறேனென்று சமாதானஞ் செய்துக்கொள்ளுவதற்கு ஒழிவில்லாமலிருக்கிறது ஓசாரங்கபாணி உமது திவ்யநாமங்களிலே ஒன்று பவக்கடலை வற்றச்செய்புமென்று வேதசாஸ்திரங்கள் முறையிட்டுக்கொண்டிருப்பது பொய்யா நான்உமது திவ்யநாமங்களை இரவும்பகலும்இடைவிடாமல் துதிசெய்துகொண்டிருக்கவில்லையா நீர்எனக்குபதில் சீட்டு அனுப்பும் வரைக்கும் நான் உமதுகோயிலைநோக்கி தீர்க்கதெண்டனிட்டெழுந்திருக்காமல்பூமிமேல்விழுந்திருப்பேன் என்னும் முதலாகியசங்கதிகளை இருபத்திநான்குவிதங்களாக எழுதி யாத்திரையாகி பண்டரிபுரத்திற்குப் போகும் சாதுஜெனங்கள் கையில்கொடுத்து எனது தெய்வங்களே இந்தவிண்ணப்பச் சீட்டை எனவந்தனத்துடன் தேவாதிதேவன் கையில்கொடுத்து அவரைப்பார்த்து சங்கிக்காமல் துக்காராம்என்ன அக்கிரமஞ்செய்தார் அவரிடம்உமக்கேன்கிருபையில்லாமற்போச்சுது அவரிடம் எந்த துர்க்குணத்தைக் கண்டு அநாதரித்தீர் ரிஷிகேசா நீர்பிள்ளைகளைப் பெற்றவன் உமதுமனம் இரும்பா உமக்கிஷ்டமானபடி செய்யும் துக்காராம் மனதுநொந்து உம்மைஜபித்தால் அவர் சாபம்பலிக்கும் நீர்சுகமாகவிரும் உமதுநாமமாத்திரமே அவருக்கு போதும் என்று விட்டலநாதனிடம் விண்ணப்பஞ் செய்புங்களென்ன அவர்களப்படியே செய்கிறோமென்று சொல்லி புறப்பட்டு பண்டரிபுரத்திற்குப் போனார்கள்.

ஸ்ரீ பண்டரிநாதன் துக்காராம் சுவாமிக்கு பதில் சீட்டெழுதி கெருடனிடத்தில் கொடுத்தனுப்பும் அத்தியாயம்

உற்சவத்திற்காக பண்டரிபுரத்திற்குவந்த பாகவதர்கள் சந்திரபாகா நதியில்மூழ்கி அனுஷ்டானங்களை தீர்த்துக்கொண்டு பனிரெண்டு புண்டரங்களைத் தரித்து புண்டரிகனைசேவித்து மகாதுவாரத்தில்நமஸ்கரித்து துவஸ்தம்பத்தினருகில் ஸ்ரீவிட்டலநாதனுக்கெதிர்முகமாக நின்று துக்காராம் எழுதிதன்கையிற்கொடுத்த விஞ்ஞாபனச்சீட்டை விட்டலநாதன் முன்வைத்து விண்ணப்பஞ்செய்தார் அதைக் கேட்ட ஸ்ரீருக்குமணிநாதன் பிரித்து வாசிக்கும்படி நேமிக்கசாதுவானவர் பிரித்துவாசிக்க அதில் எழுதப்பட்டிருக்கின்ற இருபத்தநான்கு விருத்தங்களையும்படித்துதெரிவித்தார்கள் ஸ்ரீபாண்டுரங்கன் அதைக்கேட்டு மிகவும்விசனப்பட்டு ஸ்ரீருக்மணிபிராட்டியைப் பார்த்து ஓபெண்ணே எனக்கந்தரங்க பக்தனாகிய துக்காராம் எழுதியனுப்பிய சீட்டினிடத்தில் விருத்தாந்தங்களை கேட்டவுடன் என்மனது வசமாகாமலிருக்கிறதுஎனகுமாரன் எனதுபிரிவைச் சகிக்காதவனாகி அவ்விடத்தில் துக்கப்பட்டுக்கொண்டிருக்க இவ்விடத்தில் உச்சவவிபவம் என்மனதுக்கெப்படி ருசிக்கும் ஆகையால் நான் தேவநகரத்திற்குச் சென்று என்பிராணபதமாகிய துக்காராமனைப்பார்த்து அவனைச்சமாதானப்படுத்தும்வரையில் எனக்குநித்திரை ஆகாரங்கள் ருசிக்கமாட்டாது துக்காராம் எழுதிய விருத்தங்கள் என்மனதை அபகரித்துக்கொண்டு தேவநகரத்திற்கு சென்றது என்மனது என்னைவிட்டுப் போனதினால் எனக்கு இந்திரியபலன்கள் தப்பியிருக்கிறதுஇவ்விடத்திய விபவம் எதுவும் என்கண்களுக்கு காணப்படமாட்டாது இவ்விடத்தியபாகவதர்கள்கோலாகலசத்தம் என்செவிகளுக்கு கேளாது இவ்விடம் எனக்கு செய்யப்பட்ட ஆராத்னை அன்னரசம் என்நாக்குருசிக்கவில்லை பரமபக்தர்கள் அர்ச்சிக்கும் திருத்துழாய் மணத்தை என்மூக்கு கிரகிக்கவில்லை ஓ வனிதையே நானென்ன செய்வேன் இவ்விடம் உற்சவத்திற்காக கணக்கில்லாத சாது ஜெனங்கள் வந்திருக்கிறார்கள். இவர்களைவிட்டுப்போவது சரியல்லவென்று ஜடனைப்போல வசனித்திருக்கும் பிராணநாதனைநோக்கிருக்மணிதேவி ஓதேவாதிதேவா இதற்காக இத்தனை சிந்தைபடுவதேன் கெருடனையனுப்பி துக்காராமனை வரவழைபுமென்று சொல்லிய ஸ்ரீருக்குமணி பிராட்டிவசனங்களுக்குசந்தோஷித்து பக்ஷிராஜனை அழைத்து

Koviloor Digital Library

ஓ கெருடனே நீ யிப்போதே தேவ நகரத்திற்குச் சென்று துக்காராமனைக் கண்டு யோக க்ஷேமங்களை விசாரித்து என் ஆசிர்வாதவசனங்களைச்சொல்லி யாத்திரைவந்தவர்கள்மூலமாய் நீயனுப்பியசீட்டினாலுன் திரேகஸ்திதியை பண்டரிநாதன் அறிந்துமிகவும விசனப்பட்டு உன்னைப்பார்க்க வேண்டுமென்றும் அவரோடு கூடியிருக்கிறா ரென்றுசொல்லி அவரை உன் முதுகின்பேரில் வைத்துக்கொண்டு வேகமாய் வாருமென்று ஒருசீட்டினில் ஸ்ரீபாண்டுரங்கநாதன் ஆயுள் தாரனாகிய துக்காராமனுக்கு க்ஞானபக்திவைராக்கியங்கள் தினம்தினம் விருத்தியாகும்படி மங்களாசாசனஞ்செய்து எழுதும் நிருபமென்னவென்றால் இந்தப்படி நீயெழுதியனுப்பிய இருபத்துநான்கு விருத்தங்களை கேட்டமாத்திரத்தில் எனக்கு மிகவும் விசனமுண்டாச்சுது இவ்விடம் உச்சவத்திற்காக அநேகமாயிரம் சாதுசெனங்கள் வந்திருப்பதினால் நான்இப்போதே உன்னிடத்திற்கு வருவதற்கு சரிப்பட வில்லை (கஜிலேயம்க்ஷணம்பி) என்றபடி உன்னைப் பார்க்காமல் க்ஷணநேரமாகிலும் நான்ஜீவத்துடனிருக்கமாட்டேன் ஆகையால் என்நேமனப்படி நீகெருடன்முதுகின்பேரில் ஏறிக்கொண்டு துரிதமாக பண்டரிபுரத்திற்கு வந்து உன் தெரிசனத்தினால் என்கண்களுக்குஆநந்தத்தைக் கொடுக்கும் உன்மெல்லிய வசனத்தினால் என் செவிகளுக்கு விருந்துசெய்யும் உன் ஆலிங்கனத்தினால் என் திரேகத்திற்கு சுகத்தையளியும் உன் விடசல்லாபத்தினால் என்நாக்குக்கு அமிர்தத்தைத் தாரும் உன்சிரசை முகருவதினால் என்மூக்குக்குஇன்பம்சம்பாதியும் என்பது முதலாகிய விருத்தாந்தங்களை எழுதி அதைகெருடன்கையில் கொடுக்க வேதசொரூபனாகிய பக்ஷிராஜன் அந்தசீட்டை சிரசாய் வகித்து தேவநகரத்திற்கு சென்றார்.

துக்காராம்சுவாமி கெருடபகவானை பார்த்தமாத்திரத்தில் மனதிற்கு உற்சாகமும் திரேகத்தில் பலமும் உண்டாகி எழுந்து தீர்க்கமாக தெண்டனிட்டு கைகூப்பிநின்றிருந்து ஓசுவாமி என்ஜீவனுக்கு ஈசனாகிய ஸ்ரீருக்குமணிநாதன் சுகமாயிருக்கிறாரா அவருக்கு அந்தரங்கர்களாகிய சாதுஜனங்கள் அந்தபுண்டரிகவரதனை சதாகாலமும் சேவித்துக்கொண்டு ஆனந்தித்திருக்கிறார்களா நான் அந்தஜெகதீசன் பிரிவை சகிக்கமாட்டாமல் இரவும்பகலும்இடைவிடாமல் துக்கப்பட்டுகொண்டிருக்கிறேன் எனக்கு என்னுள் பிராணநாதன் தெரிசனங்கிடைக்கும் என்றதைக் கேட்ட கெருடன் ஓபாகவதசிகாமணியேநீரிங்கு ஸ்ரீருக்மணிநாதன் தெரிசனநிமித்தியம் அவர்பிரிவை சகிக்காமல் துக்கப்பட்டவராயிருக்கிறீர் அங்கு ஸ்ரீருக்குமணிநாதனே,

சுலோகம்.

“வ்யஸநேது மனுஷ்யாணாம்
ப்ருசம்பவதி துக்கித”

என்றபடி உனதெரிசனத்தை கோரிக்கொண்டு நின்பிரிவைசகிக்காமல் எனதுநாதன் உன் துக்கத்திற்காகிலும் அதிகமாகிய துக்கத்தையனுபவித்துக் கொண்டிருக்கிறார் அவர்படுந்துக்கம் எம்போலியர்களால் சொல்லத்தக்கதல்ல அதுவாசாமகோசரமாகியிருக்கிறது உன்னையிப்போதே என்முதுகில் ஏறிக் கொண்டு வரும்படி எனதுநாதன் நியமனஞ் செய்தார் அவர் உனக்குகொடுத்த சீட்டு இதுவென்று அந்நிருபத்தை அவர்கையில் கொடுத்தார் துக்காராம்சுவாமிகள் வந்தனஞ்செய்து அந்தஓலையை கைக்கொண்டு கண்களில் ஒற்றிக்கொண்டு சிரசாகவகித்துப் பின்பு அதைப்பிரித்து வாசித்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீருதிர்த்துசூரியனைக்கண்ட தாமரைமலர்போலவும் பருவதினத்தில் சந்திரனைக் கண்ட மகாசமுத்திரம் போலவும், ஆஞ்சநேயரால் கொடுக்கப்பட்ட ஸ்ரீராமர் கணையாழியைக்கண்ட சீதையைப் போலவும் பரமானந்தமடைந்து கெருடன் வாக்கினால் ஸ்ரீவாசுதேவரது சந்தர்ப்பங்களைக்கேட்டு சந்தோஷ சித்தராகி ஓகெருடபகவானே உம்மைப்பார்த்த மாத்திரத்தில் எனது சகலசந்தர்ப்பங்களும் குளிர்ச்சி யடைந்தது வேதசொரூபராகிய உம்மைப்புகழ யாருக்குத்தரமாகும் புராண புருஷோத்தமனை நின்முதுகில் தாங்கிக் கொண்டு பரமயோகிகள்மனமாகிய வீதியில்சஞ்சரிப்பீர் ஸ்ரீநிவாசன் பாத தாமரைகள் நின்கைகளுக்கு ஆபரணங்களாகி யிருக்கும் இப்படிப்பட்ட உமது கௌரவத்தை நானென்னென்று கொண்டாடுவேன் மேலும் நீரந்த பகவானுக்கெதிரில் ரத்தினக்கண்ணாடியெனத்தக்க பாகவதர்களுக்கு புருஷாகாரரூபனாகி வசித்துக்கொண்டிருப்பீர் இதராளால் ஜெயிக்கக்கூடாததேவேந்திரனை ஜெயித்து அவர் சுவாதீனத்திலிருந்த அமிர்தத்தை பாம்புகளுக்குக் கொடுத்து வினதையடிமையை நீக்கிய மகானுபாவர் நீர் எப்பேர்ப்பட்டவரென்றால்,

சுலோகம்.

“தாஞ்ஸஸ்கா வாஹனமாகனம் த்விஜோ
பஸ்தேவிதானம் வயஜனம் த்ரயீமய,’

என்றபடி பகவானுக்குத் தொண்டனாகி நேசனாகி வாஹனமாகி ஆசனமாகி துவசமாகி கொடிகளாகி

Koviloor Digital Library

ஆலவட்டமாகியிருக்கின்றீர் இப்படிப்பட்ட கௌரவத்தை பெரியோர் ஆயிரம்வாய்களினால் கொண்டாடுகிறார்களென்றால் மத்தமதியாகியநான் உம்மைஎன்னென்று துதிசெய்வேன் உமதுதொண்டனாகியநான் உம்மைஎப்படி புகழுவேன் என்கஷ்டத்தை உன்நாதனுக்கு விண்ணப்பஞ்செய்து அவரை இவ்விடத்திற்கு அழைத்துவந்து என் மனக் கோரிக்கையைப் பூர்த்திசெய்யுமென்று விண்ணப்பஞ் செய்துக்கொள்ளக்கேட்டு கெருடபகவான் களிப்படைந்து ஓ சாதுஜன சிரோமணியே சோகமடைய வேண்டாம் அடுத்தவர்களை ரக்ஷிக்கிறேனென்று விருதுவகித்தவனாகியபண்டரிநாதனை இதோ அழைத்துவருகிறேனென்று சம்மதப்படுத்தி பண்டரிபுரத்தைச் சேர்ந்து புண்டரீகவரதனுக்கு வந்தனஞ்செய்து துக்காராம்சுவாமி பிரார்த்தனையை பரிவித்து எனதுநாதா ஜலத்தைவிட்டு மேட்டிற்கிடக்கும் மீனைப்போல் உன்பிரிவாகிய ஜலமில்லாமல் துக்காராம்துள்ளி தத்தளித்துக்கொண்டிருக்கிறான் துரிதமாக அவருக்கு சேவைதரா திருப்பையாகில் அவர்திரேகத்தில் பிராணனிருக்க மாட்டாது என்றுசொன்னார் இந்தசமாச்சாரத்தை ஸ்ரீருக்மணிபிராட்டி கேட்டு ஓநாதா இவிடம் உற்சவத்திற்காக கணக்குமிதமில்லா பாகவதர்கள் வந்திருக்கிறார்கள் நீரிப்போ புறப்பட்டுப் போவீரேயாகில் சந்திரனில்லாப் பருவம்போல மங்களயீனமாகி யிருக்கும் ஆகையால் உற்சவம் நிறைவேரியவுடனே தேவநகரத்திற்குப் போகலாமென்று சொன்னாள் அப்போது பகவான் தெரிசனத்துக்காக லக்ஷக்குமம்முது கனேசநாதன் நிம்பராஜன் முதலாகிய பாகவதர்கள் அநேகர்வந்து துவஸ்தம்பத்தினருகில் தீர்க்க தெண்டனிட்டு ஆநந்த மடைந்தவர்களாகி பலவாக நடித்துக் கொண்டே கீர்த்தனங்கள் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது பண்டரிநாதன் ஸ்ரீருக்மணி பிராட்டியைநோக்கி ஓவனிதையே இந்த நிம்பராஜனுக்கு நீதெரிசனந்தந்து ரக்ஷியுமென்றுசொன்னார் இந்தநிம்பராஜன் ஆரென்றால் வடதேசத்தில் தேவந்தபட்டணம் என்றொருநகரமுண்டு அதில் பெருத்த உத்தியோகஞ் செய்துக்கொண்டு குடும்பியாகி யிருந்தவர் இவர் வைராக்கியசீலனாகி சேது சீதாசலாந்த மாகிய பூமியாவத்தையும் யாத்திரைசெய்து பகவந்நாம சங்கீர்த்தனைகளைப்பாடிக்கொண்டிருந்தார் மேலும்இந்த ராஜன பகவத் பக்தியில்லாத பாக்கிய தவதானங்கள் பிரயோசன மற்றதென்று எண்ணி பகவானை துதிசெய்துக் கொண்டிருக்க ஸ்ரீபாண்டுரங்கனுக்கு இவர் விஷயத்தில் பரமகிருபை உண்டாகி தன்னினைப்பினால் கரிமுகனையழைத்து ஓகணபதி நீஎன் அனுமதிப்படி நிம்பராஜனுக்கு ஸ்ரீதாரகமந்திரத்தை உபதேசித்து அவருக்கு நல்லஞானத்தைக் கொடுமென்று நேமித்தார் பெருச்சாளிவாகனன் ஸ்ரீவாசுதேவர்ஆக்ஞையை சிரசாகபாவித்து நிம்பராஜன் சொற்பனத்தில் எழுந்தருளி தன் வாயிலிருந்த தாம்பூலத்தை அவர்வாயிலிட்டு ஸ்ரீதாரகமந்திரத்தை உபதேசித்து மறைந்துபோனார் உடனே நிம்பராஜன் விழித்துக் கொண்டு சொற்பனத்தை சிந்தித்து தன்வாயிலிருந்த தாம்பூலத்தை மகாப் பிரசாதமென்று உட்கொண்டு ஸ்ரீதாரகநாமமந்திரம் உபதேசித்த விநாயகருக்குத் தீர்க்கதெண்டனிட்டு அவரிடம் ஆசாரிய பிரபக்தி செய்து தனக்கந்த கணபதி உபதேசித்த ஸ்ரீதாரக மந்திரத்தை துதிசெய்துக்கொண்டிருந்தார் கணபதி உச்சிஷ்டமகிமையினால் நிம்பராஜனுக்குஞானபக்தி வைராக்கியங்கள் விசேஷித்தபடியால் அவரன்னியங்களைமறந்து அனவரதமும் பகவந்நாம சங்கீர்த்தனங்களைத் துதிசெய்திருந்தார்.

அவரிப்போது பண்டரிபுரத்திற்குவந்தபடியால் அவருக்கு கிருபைசெய்து சேவைகொடுமென்று ஸ்ரீபண்டரிநாதன் ஸ்ரீருக்குமணி பிராட்டிக்கு நேமிக்க அப்போது ஜெகன்மாதா வானவள் ஒரு தோட்டக்காரியைப்போல வேடந்தரித்து ஒரு கூடையினிடத்தில் வள்ளிக்கிழங்கை கொண்டுவந்து கோயில் வாசலில் உட்கார்ந்து கிழங்குகளை விற்பனை செய்பவளைப்போல அங்கிருக்க சுவாமியை தெரிசித்து வெளிப்பட்டுவந்த நிம்பராஜனைப் பார்த்து குழந்தாய் நான் வீட்டில்பிள்ளையை ஒண்டியாகவிட்டுவந்தேன் நீகொஞ்சநேரம் என்கூடையைக்காத்திருப்பையாகில் நான் துரிதமாக வீட்டிற்குசென்று பிள்ளையை எடுத்துவருகிறேனென்று பிரார்த்திக்க நிம்பராஜன் அந்தவனிதையைபார்த்து ஓஅம்மணி நானிங்குபார்த்துக் கொண்டிருக்கிறேன் நீதுரிதமாக போய்வாருமென்று சொன்னார் அந்தமாது கொஞ்சந்தூரஞ்சென்றுமறைந்துபோனாள் நிம்பராஜன் மெத்தநேரங் காத்திருந்தும அந்தப்பெண் வராததால் நானென்ன செய்வேனென்றுசிந்தித்துஅந்தக்கூடையின்மேல் மூடியிருந்த தட்டையெடுத்துப்பார்க்க அந்தக்கூடைநவரத்தினங்களுடன் தங்கம்நிறைப்பி வைக்கப்பட்டிருந்தது நிம்பராஜன் அதுகளைப்பார்த்து வியப்படைந்து என்னன்னையாகிய ருக்குமணிதேவி என்னை இப்பிரபஞ்சமாயையில் தள்ளுவதற்காக இப்படி செய்தாளென்று சொல்லிக்கொண்டு வைராக்கிய சீலனாகி சர்ப்பத்த

Koviloor Digital Library

கண்ட தவளையைப் போல பயமடைந்து ஓட்டமா
யோடி மகாதுவாரத்தில் நீர்க்கதெண்டனிட்டு பண்
டரிநாதா ருக்குமணிநாதா தேவாதிதேவா சர்வலோ
கசரண்யா உமதுபாதத்தாமரைகள் தவிர இன்னொரு
விஷயத்தில் எனக்குப்பிரியமில்லை பிரமாதிபதங்கள்
எனக்கு அறுவுபிரமாணங்களாய்தோற்றப்படுகிறது
நீர் என்னிடம் பூரண அநுக்கிரகஞ்செய்து மறுபடி
யும் என்பரிக்ஷைசெய்கிறீர் உம்மைப்போல நான்சா
மர்த்தனுகி யிருப்பதினால் உமது பரிக்ஷைக்கிச்சலியா
மலிருப்பேன் அசக்தனுகிய என்னையேன் அலைய‌ச்
செய்கிறீர் என்று கண்ணீர்விட்டு விண்ணப்பஞ் செய்
தார் ஸ்ரீருக்குமணிபிராட்டி விட்டலநாதனைப்பார்த்து
என்பிராணநாதா உமது நேமனப்படி இந்தநிம்பராஜ
னுக்கு அளவில்லாத சம்பத்தைக்கொடுத்தேன் இவர்
அதுகளை அலக்ஷியஞ்செய்து விட்டாரென்று தெரி
விக்க ஜெகநீசன் புன்சிரிப்புடன் ஓசகி என்பக்தன்
ஆசைபற்றவன் என்பாதத்தாமரைகள் தவிர இன்னொ
ன்றை அபேக்ஷிக்கமாட்டானென்று சொல்ல கேட்டு
ஸ்ரீருக்குமணிபிராட்டி களிப்படைந்தாள்.

மறுநாள் காலையில் நிம்பராஜனும் அநேகசாது
ஜெனங்களும் சந்திரபாகாநதிக்குவந்து ஸ்நான சந்தி
யாவந்தன அநுஷ்டானங்களைமுடித்து நடித்து கீர்த்
தனைகள் செய்துகொண்டிருக்க நிம்பாராஜனுக்குதிவ்
விய வஸ்திராபரணங்களை யளிக்கவேண்டு மென்னும்
எண்ணத்துடன் பண்டரிநாதன் ஒருபிராமண ரூபந்
தரித்துகழுத்தில் திருத்துழாய்மாலையும் சிரத்தில்குல்
லாவும் சரீரத்தில் காஷாயவஸ்திரமும்நீண்டசொக்கா
யுந்தரித்து சந்திரபாகாநதிக் கரைக்குவந்து தான்தரி
த்திருக்கும் திருத்துழாய்மாலையும் குல்லாவும் காஷா
யவஸ்திரமும் காஷாயசொக்காவும் நிம்பராஜன் அரு
கில்வைத்து அவரைப்பார்த்து ஓமகாத்துமாவேநான்
ஸ்நானஞ் செய்துவருகிறேன் நீர்கொஞ்சநேரம் இவ்
வஸ்துக்களை பாத்துக்கொண்டிரும் இவிடம் வெகு
ஜனங்கள் கூட்டமாயிருப்பதால்நான்வரும்பரியந்தம்
நீரிவ்வஸ்துக்களை காப்பாற்ற வேண்டுமென்று சொ
ல்லி ஸ்நானஞ் செய்பவனைப்போல ஜலத்தினிலிறங்கி
மறைந்துபோனார்.

நிம்பராஜன் வெகுநேரங்காத்திருந்து ஸ்நானத்
திற்குச்சென்ற பிராமணன் மறுபடியும் வரவில்லையே
நானென்னசெய்வேனென்றுசிந்தித்து அவிடமிருந்த
சாதுஜெனங்களிடம்சொல்லவேஅவர்கள் வியப்படை
ந்து ஓநிம்பராஜனே வந்தவன்பிராமணன் அல்ல ஸ்ரீ
ருக்குமணிநாதன் அந்தரூபத்தை தரித்துவந்துஉனக்
கிந்த வஸ்துக்களைக் கொடுத்து மறைந்துப் போனார்
ஆகையால்இதுகளை நீதரித்து கொள்ளுமென்று சொ
ன்னார்கள் நிம்பராஜனசந்தோஷித்து சாதுக்கூட்டங்
களுக்கு வந்தனஞ்செய்து அந்தகாஷாய வஸ்திரங்க
ளைத் தரித்தார் அப்போதங்கிருந்த சாதுக்கள் யாவ
ரும் அந்த பாகவதோத்தமனைப் பார்த்து நிம்பராஜ
னே எங்களெல்லோருக்கு மிகவும் தாகமாக விருக்கி
றது நீரிந்தவிடத்திலிருந்து பகவந்நாமசங்கீர்த்தனங்
கள் செய்வீராகில் அந்த அமிர்தப்பிரவாகம் எங்கள்
செவிகளில்புகுந்து எங்கள்தாகங்களை குளிரச்செய்து
எங்களுக்கு திருப்தியுண்டாகச் செய்யுமென்று சொ
ன்னார்கள் நிம்பராஜன் ஸ்ரீருக்குமணிநாதனை துதிசெ
ய்து அந்நதிக்கரையிலிருந்து ஆனந்தபரவசனுகி மெ
ய்மறந்து பகவந்நாமசங்கீர்த்தனஞ் செய்துக்கொண்
டிருந்தார்.

இந்தகீர்த்தனை யமிர்தத்தைப்புசிக்க நிச்சயித்த
முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணா
யிரம் ரிஷிகளும் யக்ஷகின்னராதிகளும் ஆகாயவீதியி
லிருந்து ஆனந்தபரவசர்களாகி கேட்டிருந்தார்கள்
இந்தகீர்த்தனைகளைகேட்பதினால் பூமிபந்தரத்திலிருப்
பவர்கள் யாவரும்மெய்மறந்து பரவசர்களாகி யிருந்
தார்கள் ஸ்ரீபுருஷோத்தமனும் புராண புருஷனுமா
கிய புண்டரீகவரதனுக்கு இந்தபரமபக்தன்கீர்த்தனை
களால் அளவுகடந்த களிப்புண்டாகி ஒருசிசு ரூபந்
தரித்து கையிலொரு விசிறியைப் பிடித்துக்கொண்டு
நிம்பராஜன் தோளில் உட்கார்ந்து அவர்முகத்தில்
வேர்வை வரவொட்டாமல் மெதுவாகவிசிறிக்கொண்
டிருந்தார் பக்தவச்சலனுகி பதிதபாவனனுகி பரமத
யாளுவாகிபரமயோகீஸ்வரர்கள்உள்ளத்தில்வாசனுகி
பிரம்மாதி சகல ஆத்துமகோடிகளுக்கும் அந்தராத்
மாவாகி ஸ்ரீருக்குமணிநாதன்தோளில் உட்கார்ந்து
அவருக்கு சிரமமில்லாமல் விசிறிக்கொண் டிருக்கும்
அதிசயத்தை என்னென்று சொல்லக்கூடும்.

அப்போதெல்லவரும் சிரவணானந்த மடைந்து
ஆனந்தக்கடலில் மூழ்கியிருந்தார்கள் இரவு நான்கு
ஜாமமுங்கடந்து சூரிய னுதயமாகியும் அல்லவரும்
தேகத்தின்மேல் அபிமான மில்லாமலே சொக்கியி
ருந்தார்கள் அச்சமயத்தில் ஒருவர்த்தகன் ஸ்நானஞ்
செய்வதற்காக சந்திரபாகாநதிக்குவந்து நிம்பராஜன்
தோளிலதிக அற்புதமாகி ரூபத்துடன்கூடி திவ்யமங்
கள விக்கிரகனுகி அவருக்கு விசிறிக்கொண்டிருக்கும்
பாலனைதெரிசித்து ஆச்சரியப்பட்டு கிட்டி நெருங்கி
வந்து நிம்பராஜனை ஆலிங்கனஞ் செய்துக் கொண்டு
அந்த பாலனைப்பார்க்க அவர்மறைந்துபோனார் அப்
போ தவ்வர்த்தகன் அழுதுகொண்டு ஈனசுரத்தோடு

Koviloor Digital Library

தேவாதிதேவா ருக்குமணிபிராட்டி பணவிடைக்குக் களிப்படையும் நீர் உமதுபக்தனுக்கு சிரமபரிகார மாக விசிறிக்கொண்டிருந்து நான் நெருங்கிவந்தமாத் திரத்தில் ஏன் மறைந்துபோனீ ரென்றுசொல்லிக்கொ ண்டிருக்கையில் அங்கிருந்தயாவரும் ஆச்சரியப்பட்டு அந்தவர்த்தகன் வார்த்தைகளுக்கிணங்க நிம்பாஜன் தோளில் சிலதிருஷ்டாந்தரங்களை கண்டு ஆனந்தபர வசர்களாகி துதிவந்தனங்கள் செய்தார்கள் கீர்த்தனை யும் நிறுத்தப்பட்டு யாவரும் ஸ்நானத்திற்குச் சென் றார்கள் உச்சவம் பூரணமானவுடனே பாகவதர்கள் யாவரும் பகவான் நேமனத்தைப்பெற்று சுதேசத்தி ற்குச் சென்றார்கள் ஸ்ரீபண்டரிநாதன் ஸ்ரீருக்குமணி பிராட்டியைப்பார்த்து பாகவதர்கள்யாவரும் தங்கள் தங்கள் ஊருக்குசென்றபடியால் பண்டரிபுரம் கிருஷ் ணபக்ஷசந்திரனைப் போலவிருக்கிறது எனக்கிவிடத் திலவாசம் ருசிக்கவில்லை தேவநகரத்திற்குச் சென்று துக்காராமனுக்கு தெரிசனங் கொடுத்து வருவோம் வாவென்றுசொல்லி அந்ததேவியுடன் கெருடவாகன மீதேறி தேவநகரத்திற்கு போகையில் வைணவசிகா மணியாகிய துக்காராம்சுவாமிமேகங்களை எதிர்பார்க் கும் சாதகபக்ஷியைப்போலும் தேதிநக்ஷத்திர மழை க்கு எதிர்பார்த்திருக்கும் முத்துசிப்பியைப்போலும் பண்டரிநாதன் வரவுக்கெதிர் பாாத்திருந்தஅப்போ து தனக்குண்டாகிய சுபசகுனங்களைக் கண்டு என் தாய்தந்தையர்களாகி ஸ்ரீருக்குமணி வாசுதேவரை நான் எப்போது தரிசிப்பேனென்று சிந்தனைசெய்தி ருக்க பண்டரிநாதன் ஸ்ரீருக்குமணிசமேதனாய் கெரு டவாகன ரூடராகி சேவைதந்தார் துக்காராம்சுவாமி ஆநந்தபரவசராகி பௌர்ணமிசந்திரனைகண்ட சமுத் திரம்போல ஜெயவிஜயபவாவென றுகூவி நிரேகம்பூரி த்து எதிர்கொண்டுசென்று தீர்க்கதெண்டனிட்டுகரங் குவித்துநின்று சொல்லத் தொடங்கினர்.

சுலோகம்.

ஓம்நம பரமார்திதார்த்த ஸ்தூலஸூக்ஷமக்ஷராக்ஷர, வ்யக்தாவ்யக்த கலாதீதஸதவேஷுசிரஞ்சன, குணஜ்ஜன குணகாம நிர்க்குணாத்மன் குணஸ்தித, மூர்த்தாமூர்த்த மகாமூர்த்தே ஸூக்ஷமமூர்த்தே ஸ்புட்டாஸ்ப்புட்ட.

காராளரூப சௌம்யாத்மன் விக்யாவித்யா மயாக்யுத, ஸகலஸ்ரூப ஸத்யாவ ஸதஸதயாவன, நித்யாநித்ய ப்ரபஞ்சாத்மநிஷப்ரபஞ்சா மலாஸ்ரித, ஏகாநேக நமஸ்தும்யம் வாசுதேவாதிகாரணி.

யன்றாஸ்ஸூக்ஷம ப்ராட்ட ப்ரகாசோ
யஸ்ஸர்வ பூதோ நச்ச ஸர்வபூத
விஸ்வம் பதஸ்ஸ்ச ததவிஸ்வ ஹேதோ
நஸ்மோஸ்து தஸ்மை புருஷோத்தமாய.

துக்காராம்சுவாமி பாண்டுரங்கனை துதிக்கும் விருத்தங்கள்.

அண்டர்களு முனிவர்களு மடியர்தாமு
மாலயனும் யோகிகளு மகிலந்தன்னில்
எண்டிசையு ளதிபர்களு மிறைஞ்சுபோற்று
மெம்பெருமா னின்னடிக்கி யேழையானுன்
தொண்டர்தன் திருவடிக்கித் தொண்டுசெய்ய
தூயனே கிருபைகூர்ந் தருளுமிந்தப்
பண்டரியில் பக்தர்க்காய் வந்தசோதி
பாண்டுரங்கா நின்பதத்திற் கபயந்தானே. க

தானுகி யெங்குநின்ற தனிச்சுடரே
தற்பரனே தயாநிதியே தமியேனுக்குத்
கோனுகிக் கோதகற்றிக் குணமுண்டாகிக்
குவலயத்திற் கொடியருட னுரவைப்போக்கி
மானுபிமானத்தை யொழித்து நின்பால்
மனதென்றுங் குவிந்திருக்க வரமேயீந்து
தேனுகு மமுதமதை யுண்டுமேலாய்
செழித்திடமுன் பதவிதந்து சிரமந்தீர்ப்பாயே. உ

எத்தனைநா ளிவ்வுடலைச் சுமந்துமண்மேல்
இடுக்கண்பட் டேளம்நைந்து நொந்துவந்தோ
மெத்தவனு குரைந்துமெய் நடுக்கங்கொண்டு
மேதினியில் நமனுக்கா ளாகிமேலும்
சித்தினிகள் கண்ணுகும் வலைபிற்சிக்கி
சேமமென்று வீணுட்கள் சழித்தநயேன்
அத்தனே நின்னுமை மரைநொடியினுனு
மகத்தில்வைத்து துதித்தறியே நன்பர்கோனே. ௩

பக்தர்களா முத்தமரை பக்ஷமோடு
பாலிப்பதாக்கீர்த்தி யுண்டோ யென்போல்
சுத்தமுடன் றனைக்காத்தல் சுகுர்தங்கீர்த்தி
சுந்தரனே மிகப்பெருவாய் புகழுமேலும்
இத்தலத்திற் பசிபில்லார்க் குணவையீந்து
பிறந்துபசி யென்போனைத் தள்ளினாற்போல்
சுத்தசத்வக் குணக்கடலே சுதனைநீக்கிச்
சுகமுடனீ ரிருப்பதி தழகோநாதா. ௪

என்னுள்ளத் திருந்துநீ யுனைப்புகழ்ந்து
யேதுபலன் பெறுவையோ வரியேன்சுவாமி
தன்னுள்ளு மண்டாண்டத் துரையுஞ்சிவா
தாரணைப் புறம்பெங்குந் தனித்துநின்ற
பன்னுள்ளும் பலசுருதிப் பொருளினுள்ளும்
படர்ந்துபல சொல்லினுள்ளும் பாந்தசோதி,

நின்னாத்தி னுலவுகின்ற நிலமகள்மேலாணை
நின்னாணை நீசன்முறைக் கிரங்கிக்காப்பாய். ௫

ஏழையா யெனையாண்டா லுன்புகழ்க்கு
இழிவுவந் தணுகுமோ யீரமில்லாக்
கோழைமனக் குரங்கதனைப் பொருந்தச்செய்து
கொடிய பெருவாடையா லடியற்றுவீழ்ந்த
வாழையென நினதடியா ரடிகளுக்கு
வாட்டமின்றி தொண்டுசெய்யும் வகையுணர்த்தி
சூழ்பிருமல்கள் வந்தணுகாமுன்னம்
இணையடியில்விடாய்திர விதிக்கச்செய்வாய். ௬

உலகெங்குமுலவுகின்ற யுயிர்கட்குள்ளும்
மொலிர்வச்சிரதாவுள்ளும் வேதனுள்ளும்
இலகுமதிச்சடையனுள்ளு மிரவியினுள்ளும்
எழில்முனிவர்தவயோகி யெதிகளுள்ளும்
கலைகளுள்ளுங்கவிவாணர் தங்களுள்ளும்
கருதுமிடந்தன்னுள்ளுங் களங்கமற்று
மலைகளுள்ளலைகளுள்ளு மேங்குந்தங்கும்
மாதவாமதுசூதா மகானுபாவா. ௭

அன்றுயாசுமெங்கு மடுத்துநின்ற
கையனேநினைக்கண்டு வீணைவல்லோன்
சென்றுரைக்காதையின்பா லம்மாதுதானும்
துரிதமுடன்நாரதரை வணங்கிபோற்றி
என்றுமெம்பெருமானென் னிடத்திருக்க
யிசைவித்தாலவர்நிறைக்கு பொன்னையீவேன்
என்றுரைக்கநின்றனைத் தராசிலேற்றி
யிருந்தபொருள்யாவும்வைத் தேங்கச்செய்தாய்.

அன்னதுகண்டன்புமிகு மம்புயமாது
வப்பொருளெலாமெடுத் தப்புறப்படுத்தி
நன்னயமாம் நாமத்துதி நவின்றுபோற்றி
நாதனே நினைவலமாய் வந்துபாரும்
என்னபக்தி யென்றுளத்தில் வியந்துமேற்ற
விருகரங்கள்குவித்துத் திருத்துழாய்களத்தை
அன்னநடை ருக்மணியைத் தட்டில்வைக்க
வதிந்தாய் நீமேலாய் நின்றகோனே. ௯

பக்திக்குச்சுலபனென பங்கயக்கண்ணநின்னைப்
பணிந்துமெந்நாளும் போற்றுபாவியாகிச்
சித்துக்குட்பட்டு மண்பெண்பொன்னிற்
சிறந்தவபாகொண்டுகந்து சிறுவர்தன்னைச்
சித்திக்குமுத்தென்று சீராட்டிக்கொஞ்சிக்கொஞ்சித்
தியவஞ்சகமாயை தனில்காள்போக்கி
முத்திக்குவித்தாகு முதல்வாமுடன்
முன்வந்துகாருமெனை யாதிமூலா. ௰

இத்தலத்திலைம்புலன்கள் தமையிமுன்ன
மிசைந்திருக்கவமைத்துன்னை யணுகாவண்ணம்
வைத்தமாமாயந்தன்னால் வரும்பலன்யாதோவந்த
வகையறிந்தானா யில்லேன்
சித்தசஞ்சலமுற்ற கொடியநின்புகழைச்
சிறிதுங்கருதா நாயேன்
பற்றொழிந்துனைப்பணியக் கண்பாருமையனே
பாமபாவனமூர்த்தி பாரில்கீர்த்தி. ௧௧

தொல்லுலகமதிலிந்தத் துர்க்கந்தொந்திக்காய்
திரிந்துவைதைத் தேடியான
அல்லல்பட்டதுபோது மாழிசெங்கையனே
யம்புயச் செங்கண்மாலே
பல்பிரிவியில்லாம லிப்பிரவியொடுமாரப்
பாருமுன் பாதமணுக
சொல்லுதற்கரிதான சோதிசொரூபனே
சுகுணாரஞ்சித நாதனே. ௧௨

பிள்ளையாலுன்றனைச் சேவிக்கவெண்ணினேன்
பிதாமனஞ் சலித்தவீதென்ன
கொள்ளையோமினையொத்த கல்மனத்பவரையிக்
குவலயமதிற் கண்டிலேன்
வெள்ளைமனமுடையவனென்று மறைமுறையிடுவ
தெள்ளளவு நம்பகில்லேன்
கள்ளமனங்கொண்டவ னென்றறியாமலுந்தன்
கழல்பணிந் திருந்தோநந்தோ. ௧௩

உனையன்றெத்தெய்வமுன்கீர்த்தியல்லால்வார்த்தை
யொருநாளுந் தொழுதுரைக்கிலேன
எனையுன்னிடம்வைத்தே னென்றும்பிரியாமலே
யிருக்கவு மென்பிரானே
உனையுன்னிடம்வைத்தேன் வைராக்கியங்கொண்டு
வுண்மையா யுரகசயனா
தினையளவுகிருபைகூர்ந்து தெகிட்டாதவமுதமே
தீனனெனை யாட்கொள்வாயே. ௧௪

வந்தனங்கோவிந்தா வந்தனம்வைகுந்தா
வந்தனம் நந்தநந்தா
வந்தனம்முகுந்தா வராதாபராத்பரா
வந்தனம் ஸ்ரீமுகுந்தா
வந்தனம்பவரோக வைத்தியனேவசுதேசா
வந்தனங் கமலநேத்திரா
வந்தனம்ஹரிஹரி வந்தனம்முரகரி
வந்தனம் வினைப்பரிகரி. ௧௫

என்று துதிசெய்து மறுபடியுந் தீர்க்கதெண்டனிட்டு ஸ்ரீருக்குமணிநாதன் பாதங்களைப் பிடித்துக் கொண்டு சரணாகதிசெய்திருந்தார் ஸ்ரீபாண்டுரங்கன்

Koviloor Digital Library

சந்தோஷமடைந்து துக்காராம்சுவாமியைப் பார்த்து உனக்கு வேண்டியவரம்சொல்லு தருகிறேனென்றனர் அந்தவைராக்கியசீலன்பகவானைப்பார்த்து புருஷோத்தமனே உமதுபாதத்தாமரையில் இடைவிடாதுபக்தியுண்டாகும்படி கிருபைசெய்தாயாகையால் நான் கிருதார்த்தனானேன் சகலஜெகத்துக்கும் காரணவஸ்துவாகிய உம்மிடம்எவனுக்கு சஞ்சலமில்லாது பக்தியுண்டாகுமோ, அப்படிப்பட்டவனுக்கு சர்வஉத்தமமாகிய மோக்ஷம் உள்ளங்கை நெல்லிக்கனியாகியிருக்கும் அப்படிப்பட்டவனுக்கு தர்மார்த்தகாமங்களினால் வேலையென்ன உமது அனந்தகல்யாணகுணங்களை புகழ்ந்து உமது அடியார்களுடன்கூடியிருப்பது எனக்குமிகவும் பிரியமாகியிருக்கிறது நான்பொய்யாகிய ஆசாரசீலனேயல்லாமல் வைராக்கியம் முதலாகிய வேஷங்களுடன்கூடி உமக்கும் உமது அந்தரங்க பக்தர்களுக்கும் அங்கிகாரமாகும்படி கிருபைசெய்யும் சிதசித்ரூபமாகிய சர்வபிரபஞ்சங்களும் உமதுசொரூபமாகப் பார்த்து இந்தவிபூதியாகிய சேதனாசேதனங்களிடத்தில் ராகத்துவேஷங்களில்லாமல் அன்னியர் லாபநஷ்டங்களையும் சுக துக்கங்களையும் என்னதாக நினைத்து நீசர்களிலே நானேமுதல் நீசனென்றுபாவித்து இருக்கத்தகுந்த திடமுதலானதுகளை எனக்குகொடும் பக்தவச்சலா அன்னியதோஷங்களும் என்குணமும் என்புத்திக்கு கோசரமாகாதிருக்கும்படி கிருபை செய்புமென்று விண்ணப்பஞ்செய்ய பகவான் களிப்புகொண்டு புன்னகையுடன் அவரைப்பார்த்து நீர்கோரினவரங்களை கொடுத்தேனென்றுசொல்லி கெருடபகவானை நோக்கி ஒபக்ஷிராஜனே இந்த துக்காராமனுடைய நல்லநடவடிக்கையும் வைராக்கியமும் மிகவும்நன்றாயிருக்கிறதென்று சொல்ல கெருடன், ஒசக்கரபாணி இவர் உத்தவாமிசனாகிய நாமதேவன் அவதாரமாகையால் இந்தமூர்த்திஉமது சொரூபமாகியிருக்கிறது இதற்கு அதிகமாக நானொன்றும் சொல்லமாட்டேனென்று விண்ணப்பஞ் செய்தார்.

அப்போது பண்டரிநாதன் துக்காராமனைப் பார்த்து, ஒசுதனே எனக்குமிகவும் பசியாயிருக்கிறது நின்வீட்டிலேதாகிலும் பலகாரங்களிருந்தால்எனக்கு கொண்டுவந்து வையுமென்று சொன்னார் துக்காராம் சுவாமி பரிசுத்த ஜலத்தைகொண்டுவந்து ஸ்ரீருக்குமணி வாசுதேவர்களுக்கு காலலம்பி அவர்களுக்கு ஆசனங்கொடுத்து உட்காரவைத்து தன்வீட்டிலிருந்தபழயரொட்டியைக் கொண்டுவந்து பகவானுக்கெதிரில் ஸ்தலசுத்திசெய்து ஓரிலையில் அந்தரொட்டியைவைத்து ஜலமுங்கொண்டுவந்து வைத்தார் அந்தரொட்டி இரண்டுமூன்று நாளைக்குமுன்சுடப்பட்டதாகையால் காய்ந்து சத்தியின்றி மிகவுங்கடுமையாகயிருந்தது ஸ்ரீபூளோதேவிகளும் பிரமாதிதேவர்களும் பிரார்த்தித்துக்கொடுக்கும் திவ்வியஅமிர்தத்தை அங்கிகரிக்காத பகவான் இந்தபாகவத உத்தமன் பரமபக்திக்கு சந்தோஷித்து அவர்கொடுத்த காய்ந்தரொட்டியை மிகுந்த பிரியத்துடன் புசித்தார்.

சுலோகம்.

“பத்ரம் புஷ்பம் பலம்தோயம்
போமே பக்த்யாப் ரயச்சதி
ததஹம் பக்த்ய பஹ்ருக்
வஸ்னாமி ப்ரியதாத்மந.”

என்றால் எவன்பக்தியுடன் எனக்கு பத்திரமாகிலும் புஷ்பமாகிலும் கனியாகிலும் ஜலமாகிலும் சமர்ப்பிக்கிறானோ அப்படிப்பட்டவன் கையினால், பக்திபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்ட அந்தபதார்த்தத்தை நான்புசிக்கிறேனென்று பகவற்கீதையில் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தத்தை துக்காராம்சுவாமி விஷயத்தில் அநுஷ்டித்துக் காட்டினார் திரௌபதை பிராமண சமாராதனையானபின்பு அலம்பிவைக்கப் பட்ட பாத்திரத்தில் ஒட்டியிருந்த எள்ளுமூக்கத்தனை அன்னத்தினால் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு திருப்தியுண்டாகச்செய்தாள் திருவேங்கிடமலைமேலிருந்த பரமபாகவதனாகிய ஒருகுயவன், மண்புஷ்பத்தை யர்ச்சித்து ஸ்ரீநிவாசனை சந்தோஷிக்கச்செய்தார் குருசிஸ்ருஷைபிரியமாகிய சபரிதன் எச்சில்கனியினால் ஸ்ரீராமருக்கு ஆநந்தத்தை யுண்டாகச்செய்தாள் அதிதிபூசை பிரியனாகிய ரந்திதேவன் அதிதியாகிய சண்டாளனை பகவான் சொரூபமாகப் பாவித்து தன்பாத்திரத்திலிருந்த தீர்த்தத்தைக் கொடுத்து சர்வசரீரகனாகிய பகவானுக்கு பிரியமுண்டாகச்செய்தார் இப்போதுக்காராம்சுவாமி காய்ந்தரொட்டியைக் கொடுத்து பகவானுக்கு இஷ்டசித்தியை யுண்டாகச்செய்தார் திரௌபதை தாருவாசர்பயத்தினால் சோதித்தபடியால் ஸ்ரீகிருஷ்ணபகவான் எள்ளுமூக்கத்தனை அன்னம் புசித்துப் பாண்டவர்கள் திகிலைப்போக்கினார் வேங்கடமலைவாசனாகியபக்தன் தன்பக்தியினால் அர்ச்சித்த புஷ்பத்தை ஸ்ரீனிவாசன் அங்கிகரித்தார் சபரிகுருநேமனத்தை சிரசாகவகித்து அவர்முநவுல்லாசத்திற்காக செய்தகனிகள் தானத்தை ஸ்ரீராமர் அங்கிகரித்தார் ரந்திதேவன் தாகவிடாய்கொண்டு ஜலம் வேண்டிய சண்டாளனை பகவான் சொரூபமாகிப் பாவித்ததிருப்தியடையச் செய்தார்.

Koviloor Digital Library

துக்காராம்சுவாமி வீட்டிற்கு பகவான் தானே வந்து உன்வீட்டிலுண்டான பழயவஸ்து எதுவாகிலும் எனக்குயிடுமென்றுகேட்டு அந்தபக்தசிகாமணி கொடுத்த ரொட்டியைப்புசித்து பரமாநந்த மடைந்தார் ஆகையால் திரௌபதைமுதல் நால்வர் ஆராதனைகளுக்காகிலும் துக்காராம்சுவாமிசெய்த ஆராதனை மிகுந்தவிசேஷமாகியிருக்கிறது ஸ்ரீபாண்டுரங்கனிப்படிபுசித்து தாம்பூலந்தரித்து துக்காராம் சுவாமியைப் பார்த்து நீகொடுத்தரொட்டியைப் புசித்து நாமிகவும் திருப்தியடைந்தேன் விதுரன் அன்னத்தை புசித்த அன்று எனக்கெத்தனை திருப்தி யுண்டாச்சுதோ இன்று அத்தனை திருப்தியுண்டாச்சுது நான் எனது ஆத்மா முதலானவைகளாயுனது ஆதீனஞ்செய்திருக்கிறேன் நீஎன்னை துதிசெய்யும்போது விரைவில்வருகிறேன் போய்வருகிறேனென்றுசொல்லி அவர்வந்தனங்களை யேற்றுக்கொண்டு ஸ்ரீருக்குமணி பிராட்டியுடன் கெருடன்மீதேறி பண்டரிபுரத்திற்குபோயினர்

:

பின்பு ஆனந்தியென்னும் கிராமத்தில் வசிக்கும் பிராமணனொருவன் தான்பெருத்த வித்தவானாகவேண்டுமென்று எண்ணி அளகாபுரத்திற்குப்போய்க்ஞானேசுவரரை துதிசெய்துக் கொண்டிருந்தார் க்ஞானதேவர் அந்தபிராமணன் சொற்பனத்திலெழுந்தருளி நீர் துக்காராம் சுவாமிகளிடத்திற்குச்செல்லும் அவர் கிருபையினால் உனதுகோரிக்கை சித்திக்கும் என்று சொல்லிமறைந்துபோனார் உடனேயந்த பிராமணன் தேவநகரத்திற்குவந்து துக்காராம்சுவாமிகளைதெரிசித்து தன்சொற்பன விருத்தாந்தத்தை அவருக்குவிண்ணப்பஞ்செய்தார் இதைக்கேட்டு துக்காராம் சுவாமி ஆச்சரியப்பட்டு க்ஞானக்கடலாகிய க்ஞானதேவர் எருமைக்கிடாவினால் சகலவேதங்களையும் சொல்லச் செய்தார் புலியின்பேரி லேரிக்கொண்டுவந்த சாரங்கதேவனுக்கு எதிர்கொண்டுபோக நினைத்துதான் ஏறியிருந்த குட்டிச்சுவரை நடக்கச்செய்தார் அப்படிப்பட்ட உலகதோத்திரன் இந்தபிராமணனை என்னிடத்திற்கு அனுப்பியது மிகவும் விந்தையாகயிருக்கிறது மந்திரபலத்தினால் அணுபிரம்மாஸ்திர மாவது போல நான் அந்தமஹாத்துமன் கிருபையாகி இந்த பிராமணன் கோரிக்கையைமுடித்து வைக்கிறேனென்றுசொல்லி பதினொருவிருத்தங்களை ஒரு சீட்டிலெழுதி அந்தசீட்டை ஒரு தேங்காயுடன் பிராமணன் கையிற்கொடுத்து ஓபிராமணோத்தமா இந்தவிருத்தங்களைவாசியும் இந்ததேங்காயை அன்னியர்களுக்குக் கொடாமல் நீரேபுசியும் உமக்கிஷ்டசித்தி யுண்டாகுமென்று சொன்னார் அந்தபிராமணன் துர்ப்பாக்கியவானாகையால துக்காராம்சுவாமி வார்த்தைகளை விசுவாசிக்காமல் இந்ததேங்காயை புசிப்பதினாலும் மகாராட்டிரபாஷையில் எழுதப்பட்ட விருத்தங்களைவாசிப்பதினாலும் எனக்கெப்படி பாண்டித்தியம் சித்திக்குமென்றுசொல்லி அவர் கிருபைசெய்து கொடுத்தவைகளை அவருக்கெதிரில்வைத்து தன்னூருக்குபோயினால் இவனுக்குபிராப்தியில்லையென்று துக்காராம் சுவாமிகள் சும்மாயிருந்தார் இப்படியிருக்க சிவாஜீ ராஜனுஸ்தானத்தி லிருக்கும் புராணிகராகிப் பிராமணன்குமாரன் பிரக்ஷாகுக்ஷியாகி சபைக்கியோக்யனாகாதிருந்தான் அப்படிப்பட்டவன் துக்காராம்சுவாமிகள் மகிமைகளைக்கேட்டு அவரிடத்திற்குவந்து அந்த மகாத்துமாவுக்கெதிரில் கைகளைகுவித்து நின்னுடன் கூடியிருக்கும்படி கிருபைசெய்யுங்களென்று பிரார்த்திக்க அந்தபிராமணர்கள் இவரைபார்த்து ஓவிஷ்ணுபக்தசிகாமணியே! விஷ்ணுபக்தன் பிராமணனுக்காகிலும் மேலானவனாகுவான் விஷ்ணுபக்தி யில்லாதவன் எதியாயினும் நாய் மாமிசத்தைப் புசிப்பவர்களில் அதமனாகுவான்.

சுலோகம்.

"யாயஸ்பதி சுபாசாரம்
வைஷ்ணவம் வீதகல்மஷம்
யஸ்மின் சஸ்மின் வுலேஜாதம்
ப்ரணமேத் தண்டவத் புவி."

என்றால், அனவரதம் ஆசாரசீலனாகி ஈஸ்வரன் திருவடியை சர்வகால சர்வதேச சர்வ அவஸ்தைகளிலும் துதிசெய்வதினால் வைஷ்ணவனென்று சொல்லப்பட்டு களங்கமற்றிருப்பவன் எந்தஜாதியில் பிறந்தவனாகிலும் அவனுக்கு தீர்க்கதெண்டனிடவேணுமென்று பகவான் நேமித்திருக்கிறானல்லவா பக்திபூர்வகமாகநாங்கள் வந்தனஞ்செய்யாமற்போனாலும் சாஸ்திரவிசாரணைசெய்துயிருப்பவர்கள் ஆகையால் பிரமாணப்படி பரதந்திரர்களாகி உமக்கு வந்தனஞ் செய்தோம் இன்னும் நாங்கள் செய்யும் பிரார்த்தனையை நீங்கள் அவசியமாக அங்கீகரித்து எங்கள் வாசபூமியாகிய சிஞ்சவடிக்குவந்து அவிடம்சிலகாலம் வசித்து ஹரிசங்கீர்த்தனைகளைச் செயது எங்களைகிருதார்த்தர்களாகச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்போது துக்காராம்சுவாமிகள் நீங்கள்கோரியபடி செய்கிறேனென்று சம்மதித்து அவர்கள் பின்தொடர்ந்துபோய் கொண்டிருக்க நடுவழியில் லோகநகரவாசிகள்வந்து துக்காராம்சுவாமிகளுக்கு வந்தனஞ்செய்து தங்கள் ஊரினில்சிலகாலம் வசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து அழைத்துக்கொண்டு போனார்கள்.

Koviloor Digital Library

சர்வக்ஞராகிய துக்காராம்சுவாமி அவன்மனதையறிந்து, ஆனந்திபிராமணன் தனக்கு வேண்டாமென்று வைத்துவிட்டுப் போனவஸ்துக்களை இந்த பிராமணனுக்கு கொடுத்தார் அந்தபிராமணன்மகாபிரசாதமென்று கைக்கொண்டு துக்காராம்சுவாமி பார்த்துகொண்டிருக்க, அந்ததேங்காயைப்புசித்து அவர்எழுதிய பதினொருவிருத்தங்களையும்வாசித்துப்பாடஞ்செய்து துக்காராம்சுவாமிகள் நேயனம்பெற்று தன்னூருக்கு போயிருந்தான்.

ஒருநாள் ராஜசபையினிடத்தில் புராணம்வாசித்துக்கொண்டிருக்கிறபோது. இந்தபிராமணன் அவிடஞ்சென்று கேட்டிருந்து அவிடத்திய வித்துவான்கள் யாவருக்கும் தெரியப்படாத பெருத்த அர்தமத்தை தான் உபந்யாசன் செய்தார். இதைக் கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டு நிரக்ஷரகுக்ஷியாகியஇவனுக்கு இந்தஅரிதாகிய பாண்டித்தியபிரபாவம் எப்படியுண்டாச்சுதென்று தங்களுக்குள் சங்கை யுண்டாகி இதற்குக் காரணங்கேழ்க்கவே, அந்தபிராமணன் துக்காராம் சுவாமிகள் கிருபையினால் எனக்கு உண்டாச்சுதென்று சொன்னார் புராணம் சொல்லிக்கொண்டிருந்த வித்துவான் இந்தப்பிராமணனை யழைத்து தன் கைபுஸ்தகத்தை அவர்கையில் கொடுத்து நீர்படித்து அர்த்தஞ் சொல்லுமென, அவரப்படியே செய்தார் அப்போதந்த சபையிலிருந்த வித்துவான்கள் யாவரும் இப்படிப்பட்ட உபந்யாச மிதுவரைக்கும் எங்கெங்கும் கேட்டறியோமென்றும், இவர்வித்தை சாமர்த்தியம மிகவும் அற்புதமாயிருக்கிற தென்று சொல்லி இதற்கு மூலகாரணமாகியதுக்காராம் சுவாமிகள் புகழை ஆயிரவிதங்களில் தோத்திரஞ் செய்தார்கள் அப்போது சிஞ்சவடியிலிருந்து ராஜசபைக்கு வந்திருந்த சிலசாஸ்திரிகள் துக்காராம் சுவாமிகளைப் பார்க்க வேண்டுமென்னும் அவாவுடன் அவரையழைத்து வரும்படி ஒருமனிதனை யனுப்பினார்கள் அந்த மனிதன் தேவநகரத்திற்குப்போய் துக்காராம் சுவாமிகளுக்கு வந்தனஞ்செய்து அவரனேக சாதுஜெனங்களுடன்கூடி செய்துகொண்டிருந்த ஹரிகீர்த்தனங்களைக்கேட்டு அவிடமிருப்பவர்களைப் போலத் தானும் மெய்மரந்து ஆனந்தபரவசனாகி. கீர்த்தனத்திற் சொக்கி தான்வந்தகாரியங்களைத் துக்காராம்சுவாமிகளுக்குத தெரிவிக்காமலிருந்தான் அவிடமிருந்த பாலியர் யௌவனர் விருத்தர்முதல் சமஸ்தஜனங்களும்பகவந்நாம சங்கீர்த்தனாமிர்தத்தைக் கேட்டு, உலகத்தை மரந்து சித்திரப்பதுமைகள்போலிருந்தார்கள் தீவட்டிபிடிப்பவன் முதலாக இப்படிப்பட்ட அவஸ்தையை யடைந்து தன்கைதீவட்டியை மேலுக்குத் தூக்கவே பந்தலில் நெருப்புப்பட்டு எரிந்து கொண்டிருந்தது கீர்த்தனங்களைக்கேட்டு ஆனந்தபரவசராகி யிருந்த அவிடத்தியயாவரும்இதையறியாமலிருந்தார்கள் இப்படியிருக்க கோதாவரி நதிவாசியும், க்ஞானவைராக்கிய பூஷணனாகிய சேகுமம்முதென்னும் சக்கிலியானவன் ஹரிகீர்த்தனை செய்துக்கொண் டிருக்கும் போது தேவநகரத்தில் துக்காராம்சுவாமி ஹரிபஜனை செய்துக்கொண்டிரும்குப இடத்தில் பந்தலிலநெருப்புபட்டு அதுபத்தியெறிகிறதென்று அறிந்து தன்கைகளை ஒனறோடொன்றைச் சேர்த்துத் தேய்த்துக்கொண்டிருந்தார் அப்போது அங்கிருந்த சாதுஜனங்கள் நீரிருந்தாப்போலிருந்து கைகளை தேய்த்துக் கொள்ளுவதற்குக் காரண மென்னவெனறு கேழ்க்கவே அவர் ஓசாதுக்களே! தேவநகரத்தில் துக்காராம்சுவாமி ஹரிநாமசங்கீர்த்தனஞ் செய்யுமிடத்தில் சிறுவர்பெரியோர்களுங் கூட்டங்கூடிகேட்டு மனஞ்சொக்கி மெய்மரந்து பரவசர்களாகியிருக்க இப்போது தீவட்டி நெருப்புப்பட்டு பந்தல் எரிந்துக்கொண்டிருக்க அதனை என்கைகளினால் தேய்த்துதேய்த்துக் குளிரச்செய்தேன் என்றுசொன்னார் அதைக்கேட்டு யாவரும் ஆச்சரியப்பட்டு உடனே தேவநகரத்திற்கு ஒருசேவகனையனுப்பி அவிடத்தில் பந்தலுக்குட்பட்ட நெருப்பைக் குளிரச்செய் திருப்பதையும், அவனால் கேட்டு வியந்தசித்தர்களாகி சேகுமம்முதைப் பார்த்து, தேவநகரத்திலுண்டாகிய அக்கினிபயத்தை நீர் எப்படியரிந்தீர், அக்கினியை நீர் குளிரச்செய்ய வேண்டிய வேலையென்ன சர்வக்ஞனாகி சர்வசக்தனாகி ஸ்ரீபண்டரிநாதன் துக்காராம் சுவாமிக்குண்டாகிய ஆபத்தையறிந்து அவரை ரக்ஷிக்கமாட்டாரோ வென்றுகேழ்க்க சேகுமம்முது அந்தசாதுஜனங்களைப்பார்த்துஉங்கள் கிருபையாகிய பலத்தினால் நானும் தேவநகரத்தில் விருத்தாந்தங்களை யறிந்தேன் ஸ்ரீபாண்டுரங்கநாதன் துக்காராம்சுவாமிகள் கீர்த்தனைகளைக் கேட்டும் தன்னைத்தான் மரந்து மனதுவசப்படாம லிருப்பதினால் அவர் சர்வக்ஞபலமும் சர்வசக்திவலுவும் பிரயோசனப்படாமல்போயிற்று என்றுசொல்லக்கெட்டு அவிடத்திய யாவரும் பிரம்மானந்தத்தையடைந்து சாதுஜெனங்கள் மகிமையை சாதுஜெனங்களே யறிவார்களென்றுசொல்லி சேகுமம்முதக்கு தீர்க்கதெண்டனிட்டு அவர்விபவங்களை ஆயிரம் விதங்களாகத் துதிசெய்திருந்தார்கள்.

இப்படிக்கிருக்க சிவாஜிராஜன் ஆஸ்தானத்திலிருந்த சிஞ்சவடிவாசிகளாகியபிராமணாள் துக்காராமசுவாமியை அழைக்கப்போன மனிதன்வரவில்லை யென்று இன்னொருமனிதனை அனுப்பினார்கள் அவனும்

Koviloor Digital Library

தேவநகரத்திற்குப்போய் முதல்போனமனிதனைபோலவே மெய்மறந்துபரவசனாகிமறுபடி வாராதிருந்தான் சிஞ்சவடிபிராமணர்கள் இன்னமொருவனை யனுப்பினார்கள் இவன்கெதியும் முன்னவர்கள்போலவேஆயிற்று துக்காராம்சுவாமிகள் கோஷ்டி இரண்டாவது பரமபதத்துக்குச் சமானமாகவிளங்கியது பரமபதத்திற்குப் போகுமவர்கள் பகவானது சமீபத்தையடைவதுபோல துக்காராம் கோஷ்டிக்குவந்த ஸ்ரீபாண்டுரங்கன் அவிடத்திய பாகவதர்களிட பரமசமீபத்தையடைந்தார் சிஞ்சவடிபிராமணர்கள் தங்களால் அனுப்பப்பட்ட மனிதர்மூவரும் மறுபடி வாராததற்குக் காரணமறியாமல் தங்களுள் இப்படி சொல்லிக்கொண்டார்கள் நாம் அனுப்பிய மனிதர்கள் துக்காராம் சுவாமிகள் கீர்த்தனைகளுக்குசொக்கி தாங்கள்போன காரியங்களை மரந்து யிருப்பார்களென்று தோற்றுகிறது. இன்னம் எத்தனைபேர்களை யனுப்பினாலும் அவர்களும் முன்போனவர்களைப்போலவே ஆவார்களென்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. ஆகையால் நாமேசென்று சந்தேகநிவர்த்திசெய்துகொள்ளுவோமென்று நிச்சயித்து புறப்பட்டார்கள் சர்வக்ஞனாகிய துக்காராம்சுவாமி இதனையறிந்து கோஷ்டியுடன் வெளிப்பட்டுவந்து சிஞ்சவடி பிராமணர்களை வழியில் எதிர்கொண்டு பிராமணகோஷ்டிக்கு வந்தனஞ்செய்து ஓமறையவர்களே! என்ஜீவாதார ரூகிய லட்சுமிநாதன் சொல்லிய பிரமாணமாவது:—

சுலோகம்.

"ஸதவா தினம் ஜகத்சர்வம்
மந்த்ராதினம் துதைவதம்
தன்மந்தரம் பிராஂமணாதீனம்
பிராஂமணோ மமதேவா."

என்றால் ஜெகம் யாவத்தும் தெய்வாதீனமாகியிருக்கும், அந்தத்தெய்வம் மந்திரத்திற்கு ஆதீனமாகியிருக்கும், அந்தமந்திரம்தன்னைஜெபிக்கும் பிரம்மநிஷ்டானுக்காதீனமாயிருக்கும்மாகையால் அப்படிப்பட்ட பிரம்மநிஷ்டன் எனக்கு தேவதையாகியிருப்பானென்று சொன்னர் அதினல் பிரம்மநிஷ்டைகள் செய்யும் நீங்கள் எங்கள்தேவதை யாகிறீர்கள் இப்படிப்பட்ட நீங்கள் என்மீது கருணைசெய்து பதார்த்தமில்லாத என்னையொரு பதார்த்தமாக பாவித்து தெரிசனந்தந்தீர்கள் ஆகையால் நான் சர்வவிதத்திலும் உங்கள் கிருபையினல் கிருதார்த்த னானேனென்று விண்ணப்பஞ்செய்தார் சிஞ்சவடிபிராமணர்கள் அவர் வினயசாந்தத்திற்கு மிகவுங்களித்து அவரையாலிங்கனஞ் செய்துக்கொண்டு, ஓமகாத்துமாவே உன்தெரிசனத்தைக்கோரி நாங்கள் வந்துக்கொண்டிருக்க ஸ்ரீ பாண்டுரங்கன் உன்னை இவ்விடத்திற்குக் கொண்டுவந்து எங்கள் கோரிக்கையைப் பூர்த்திசெய்தார் எங்களுக்கு அகப்பட்ட சந்தேகத்தை நீங்கள் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம் அதிக கொடூரமாகிய இந்தக் கலிகாலத்தில் நீஅனேக அற்புதங்களைக் காட்டிக்கொண்டிருக்கிறாய் நாங்கள் உன் விபவத்தைக்கேட்டுஆச்சரியப்பட்டு நீஎவனோஎன்று சங்கையாகினோம் சாதாரணமனிசனுக்கிந்த யோக்கியதை யுண்டாகாதென்று நினைக்கிறோம் நீர் எங்கள் சந்தேகத்தை நீக்கவேண்டுமென்று சொல்லக்கேட்டு துக்காராம்சுவாமிகள் ஒருகத்தியை எடுத்து தன்துடையை யறுத்துக்காட்டினர் அதிலஉதிரம்மாமிசங்களில்லாமல் மிகவும் வெண்மையாகிய பஞ்சுக்குகிகராணபதார்த்தம் சதை தோல்களா யிருப்பது போல அவர்களுக்குக் காணப்பட்டது அப்போதந்தப் பிராமணர்கள் ஆச்சரியப்பட்டு பஞ்சபூதம்சம்யந்தமாகிய மனிதசரீரம் உதிரம் சதைகளுடன்கூடி அசுசியாயிருக்கும் உன்சரீரம் பஞ்ச உபநிஷத் மயமென்று தோற்றுகின்றது.

ஆகையால் உதிரமாமிசங்கள் இல்லாமல் உன் திரேகத்தி னுள்ளிருக்கும் பதாரத்தம் அதிகவெளுப்பாகி மிகவும்பரிசுத்தமாகி மனதுக்கு மிகுந்தபரிமளமாகயிருக்கிறது இப்படிப்பட்ட உன்னைஎங்கள் அவிவேகத்தினல் மனிதர்களில் கேவலனென்று நினைத்தோம் என்றுசொல்லி, துக்காராம்சுவாமிகளுக்குதீர்க்க தெண்டனிட்டார்கள் துக்காராம்சுவாமி அந்தப் பிராமணர்களுக்கு தீர்க்கவந்தனஞ்செய்து என்பிராணநாதனுகிய ஸ்ரீருக்குமணிநாதனுக்கு வந்தனஞ்செய்யப்பட்டவர்களாகிய நீங்கள் எனக்கு வந்தனஞ்செய்வது ஞாயமல்ல என்னிடத்தில் காமக் குரோதாதி கெட்டகுணங்கள் நசித்து நான் பரமவைணவ லக்ஷணங்களாகிய வைராக்கிய முதலாகிய நற்குணங்களுடன் கூடியிருக்கும்படி கிருபை செய்யுங்களென்று பிரார்த்திக்க அந்தபிராமணர்கள் இவரைப் பார்த்து ஓவிஷ்ணுபக்த சிகாமணியே! விஷ்ணுபக்தன் பிராமணனுக்காகிலும் மேலானவனகுவான் விஷ்ணுபக்தியில்லாதவன் எதியாயினும் நாய்மாமிசத்தைப்புசிப்பவர்களில் அதமனகுவான்,

சுலோகம்.

"யாபஸ்யதி சுபாசாரம்
வைஷ்ணவம் விதகல்மஷம்
யஸ்மின் தஸ்மின் வுலேஜாதம்
ப்சணமேத் தண்டவத் புவி."

Koviloor Digital Library

என்றால், அனவரதம் ஆசாரசீலனாகி ஈஸ்வரன் திருவடியை சர்வகால சர்வதேச சர்வஅவஸ்தைகளிலும் துதிசெய்வதினால் வைஷ்ணவனென்றுசொல்லப்பட்டு களங்கமற்றிருப்பவன் எந்தஜாதியில் பிறந்தவனாகிலும் அவனுக்கு தீர்க்கதெண்டனிட வேண்டுமென்று பகவான்நேமித்திருக்கிறானல்லவா பக்திபூர்வகமாக நாங்கள்வந்தனஞ் செய்யாமற்போனாலும் சாஸ்திரவிசாரணைசெய்துயிருப்பவர்கள் ஆகையால்பிரமாணப்படி பரதந்திரர்களாகி உமக்குவந்தனஞ் செய்தோம் இன்னும்நாங்கள்செய்யும் பிரார்த்தனையைநீங்கள் அவசியமாக அங்கீகரித்து எங்கள் வாசபூமியாகிய சிஞ்சவடிக்குவந்து அவிடம் சிலகாலம் வசித்து ஹரிசங்கீர்த்தனைகளைச் செய்து எங்களை கிருதார்த்தர்களாகச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அப்போது துக்காராம்சுவாமிகள் நீங்கள்கோரியபடி செய்கிறேனென்று சம்மதித்து அவர்கள் பின்தொடர்ந்துபோய் கொண்டிருக்க நடுவழியில் லோகநகரவாசிகள்வந்து துக்காராம்சுவாமிகளுக்குவந்தனஞ்செய்து தங்கள் ஊரினில் சிலகாலம்வசிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து அழைத்துக்கொண்டு போனார்கள்.

துக்காராம்சுவாமிகள் அவிடம்வசித்து ஹரிகீர்த்தனங்கள் செய்துக் கொண்டிருந்தார் அந்தஊரார்கள் துக்காராம்சுவாமிகளிடத்தில் மிகவும்பக்திசெய்திருந்தார்கள் இப்படிக்கிருக்க ஒருவித்துவான் தன் சிஷர்களுடன் அவ்வூருக்குவந்தார் அப்போதந்த ஊரார் சூரியன் உதயமாகியும் எழுந்திராமல் நித்திரை செய்திருந்தார்கள் இதற்குக்காரணமென்னவென்று வித்துவான் விசாரிக்கையில் அவர்கள் அவனைப்பார்த்து துக்காராம்சுவாமிகள் என்னும்மகாத்துமா ஒருமாதமாக இந்தவூரில்வாசஞ்செய்து ஸ்ரீஹரிகீர்த்தனைகள் செய்துகொண்டிருக்கிறார்; நாங்கள்இரவெல்லாம் அந்தகீர்த்தனை யானந்தத்தை யனுபவித்துக் கொண்டிருப்பதினால் எங்களை இப்போது நித்திரைவாதிக்கிறது என்றுசொன்னார்கள் அதைக்கேட்டுவித்துவான் மிகுந்த வைராக்கிய சீலராகிய துக்காராம்சுவாமிகள் செய்யும் கீர்த்தனை யானந்தத்தை யனுபவிக்கும் இவர்களுக்கும் நம்விஷயத்தில் பிரியமுண்டாவது அரிது இப்போதிந்த ஊரினில் நமக்கெதுவும் பிரயோசனங் கிடைக்கமாட்டாது ஆகையால்நாம் இன்னொருஊருக்குத் தான் போகவேண்டுமென்று தனக்குள்தானே நிச்சயங்கொண்டு புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

இந்த விருத்தாந்தங்களைக் கேட்டு துக்காராம் சுவாமிகள் வந்து அந்தவித்துவானை மிகவும்கௌரவப்படுத்தி இந்தஊருக்குவந்த நீ இங்குசிலநாள்நிற்காமல் புறப்பட்டுப் போவதற்குக்காரணமென்ன நீஎங்கிருந்து எதற்காகஇவ்விடத்திற்கு வந்தாயென்றுகேழ்க்க அவ்வித்துவான் சொல்லுகிறான் நான்பண்டரிபுரத்தில் வசிப்பவன் என்குமாரனுக்கு மணஞ்செய்யவுத்தேசித்து திரவியத்திற்காக வந்தேன் ஞானவைராக்கிய நிதியாகிய உமதுகீர்த்தனையமிர்தத்தைபுசிப்பவர்களுக்கு கேவலம் திரேகத்தைப் போஷிக்குமனனாகியு என்னிடம் பிரியமுண்டாக மாட்டாதென்றுயெண்ணி இன்னொரு ஊருக்கும் போகிறேனெனக் கேட்டு துக்காராமசுவாமி அந்தவித்துவானைக் கூட அழைத்துக்கொண்டு வந்து அவரால்சில பகவந்நாமசங்கீர்த்தனங்களைச் செய்வித்து அந்தஊராரைப்பார்த்து இவர்மகானுபாவர் பண்டரிதலவாசன் இவரை சாக்ஷாத் பண்டரிநாதனைப் பாவித்து பத்திசெய்யுங்கள் இவர்தன் குமாரனுக்குத் திருமணஞ்செய்ய உத்தேசித்து திரவியத்திற்காக உங்களிடத்திற்கு வந்தவர் உங்கள் புண்ணியம் மெத்தவும்நன்று இப்படிப்பட்டமகாத்துமாவுக்குச்சகாயஞ்செய்தால்ஸ்ரீபாண்டுரங்கன் சந்தோஷிப்பார் நீங்களெல்லோரும் உங்கள் சக்திக்குத் தக்கபடி மூன்றுவகுப்புகளாகி முதல்வகுப்புக்காரர்களிலே ஒவ்வொருவன் மூன்று பணமும் இரண்டாவது வகுப்புக்காரர்களிலே ஒவ்வொருவன் இரண்டுபணமும் மூன்றாவது வகுப்புக் காரர்களிலே ஒவ்வொருவன் ஒருபணமும் இந்தமூன்றுவகுப்புகளிடஞ் சேராதஏழைகள் தங்கள் சக்திக்கிணங்க கிஞ்சித்துகொண்டுவந்து ஒருமொத்தமாகச்சேர்த்து இந்த வித்துவானுக்குக்கொடுங்கள் இதினால் ஸ்ரீபண்டரிநாதன் மிகவுஞ்சந்தோஷிப்பார் என்றுசொல்லக்கேட்டு அவர்கள் துக்காராம்சுவாமிகள் உத்திரவை சிரமேற்கொண்டு அந்தசாதுஜன சிகாமணியைப்பார்த்து ஓசுவாமிகளே! தங்களைபடுத்த வித்துவானது மனதை நாங்கள் பூர்த்திசெய்கிறோம் இவர்யாசகதிற்கு இன்னொரிடத்திற்குப்போவானேன் என்று விண்ணப்பஞ் செய்து எல்லோரும் ஓரிடத்தில் கூட்டங்கூடி தங்களிருப்புக்குத்தக்கபடி மூன்றுவகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுமுதல்வகுப்புக்காரர்கள் மூன்றுரூபாயும் இரண்டாம் வகுப்புக்காரர்கள் இரண்டுரூபாயும் மூன்றாம் வகுப்புக்காரர்கள் ஒருரூபாயும் இந்தவகுப்பில் சேராத ஏழைகள் சக்தியானுசாரம் கிஞ்சித்துக் கொடுக்கும்படி தங்களுள் நிச்சயித்துக்கொண்டு ஒருசீட்டில் கணக்கெழுதி திரவியத்தைச் சேர்த்துக் கொண்டு வந்து துக்காராம் சுவாமிகள் எதிரில்நின்று ஓசுவாமிகளே! இந்தத் திரவியத்தை உமது கையினால் இந்த வித்துவானுக்குக் கொடுமென்று துதித்தார்கள் சில

Koviloor Digital Library

துஷ்டர்கள் நாம் திரவியங் கொடுப்பவர்களாக யிருக்க துக்காராம் சுவாமிகள் தன்கையினால் இந்தத்திரவியத்வத வித்துவானுக்குக் கொடுத்துப் பெருமையடைவது ஞாயமல்லவென்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள் சர்வக்ஞராகிய துக்காராம்சுவாமிகள் களங்க மனதுடையவர்கள் எண்ணத்தை யறிந்து அவர்களைப் பார்த்து இந்த ஊரார் யாவரும் சத்தியானுசாரங்கிஞ்சித்துகொடுத்தார்களாவென்றுகேட்டார் அதற்கு அவர்கள் சொல்லுகிறார்கள் எல்லோருங் கொடுத்தார்கள் ஒருவன்மாத்திரம் கொடுக்கவில்லை அவன் சவுளிவியபாரத்தினால் தேகபோஷணை நடத்திக்கொண்டு யிருக்கிறான் அவன்மிகவுங் கெட்டவன் அவனுக்கணுவளவேனும் பக்தியில்லை சதாகாலமும்பாகவதர்களை தூஷிப்பதே அவனுக்குகாலம்போக்காகியிருக்கிறது அவன் ஒருவன்தவிர மற்றவர்கள் யாவரும் சத்திக்குத்தக்கபடி திரவியங் கொடுத்தார்களென்று சொல்லக்கேட்டு துக்காராம் சுவாமிகள்உங்களில்சிலர் அவனிடத்திற்குப்போய்என்பிரார்த்தனையாகச்சொல்லி அவன் சத்திக்குத் தகுந்த கிஞ்சித்து திரவியங்கொடுமென்று கேட்டு வாங்கிவாருங்களென்று கேமிக்கவே அவர்கள் நல்லதென்று அவன்வீட்டிற்போய் அவனுக்கெதிரில்நின்றார்கள், அவன்இவர்களுடன் பேசாமல் சொந்தகாரியத்தின் மீதே கவனமுடையவனாகவிருந்தான் அப்போதிவர்களுக்கு அவமானமுண்டாகி யிந்த துஷ்டனிடத்திற்கு நாம் வரத்தகாது ஆகிலும் துக்காராம்சுவாமிகள் கேமனத்தை இவனுக்கறிவிப்போமென்று தங்களுள்சொல்லிக்கொண்டு அவனைப்பார்த்து மகானுபாவராகியதுக்காராம் சுவாமிகள் கேமனத்தை யவனுக்கறிவித்தார்கள் அவனதைக் கேட்டமாத்திரத்தில் கோபித்துக் கொண்டு அந்ததுக்காராம் ராத்திரிக்கெல்லாம் தவளையைப்போல கத்துவதைப்பார்த்து நீங்கள் பிரமித்தவர்களாகி சொந்தகாரியங்களை மறந்து அவன்பின் திரிந்துக்கொண்டிருக்கிறீர்கள் நான் உங்களைப் போல பயித்தியக்காரனல்ல நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த திரவியத்தில் ஒருகாசாகிலும் இன்னொருவனுக்குக் கொடேன் நீங்கள்வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போங்களென்று சொன்னான் அப்போது புத்தியில் மிகுந்தவளாகிய அவன்மனைவி தன்கணவனைப் பார்த்து தர்மத்திற்காக வந்தவர்கள்பேரில் கோபங்கொள்ளவேண்டாம் இல்லையென்று சொல்லாமல் ஏதாகிலுங் கொடுத்தனுப்புவது மிகவும்நன்று அப்படிக் கொடுத்தனுப்ப இஷ்டமில்லாவிடில் நிஷ்டூரஞ் சொல்லாமல் நல்லவார்த்தைகளைச் சொல்லியனுப்பும் எப்படியெனில்,

சுலோகம்

"சத்வாரோ வித்தகாயதா
தர்மபூராக்கி தஸ்கரா:
ஜ்யெஸ்டபாத்ரவ மாகேன:
தாய குப்பந்தி ஸோதரா."

என்றால், திரவியத்தைப் பங்கிட்டுக்கொள்வதற்கு நால்வர் பங்காளிகளாகியிருக்கிறார்கள் அதில்முதல்வன் தர்மம் இரண்டாவதுராஜன் மூன்றாவது அக்நி நான்காவது சோரன் இந்தபங்காளிகள் புருஷனால் சம்பாதிக்கப்பட்ட திரவியத்தைப் பங்கிட்டுக்கொள்ளுபவர்களாகி யிருக்கிறார்கள் இதில்முதல்வனாகியதர்மத்தை செய்யாவிட்டால் ஜேஸ்டனுக்குவந்த அவமானத்தை சகிக்காமல் கோபங் கொண்டவர்களாகி மற்றமூவரும் இவன் திரவியத்தை நாசப்படுத்துவார்கள் ஆகையால் புத்திவான்கள் தர்மத்திறகதிக பாகங் கொடுப்பார்கள் இதினால் மற்றபங்காளிகள் மூவருஞ் சந்தோஷித்து தங்கள் பங்கைக் கோராதிருப்பார்கள் லோபியாகியவன் தர்மத்தைச் செய்யாமல் தானும் அனுபவிக்காமல் புதைத்துவைக்கும் பொருள், அன்னியர்பங்காகும் அந்ததிரவியத்திற்காக இவனால் செய்யப்பட்ட பாபங்கள்மாத்திரம் இவன் எந்தலோகத்திற்குப் போனபோதிலும் இவனைவிடாமல் பின்தொடர்ந்துவரும் நரகத்தை யனுபவிக்கிற போது இவன் சேர்த்துவைத்த திரவியத்தையும் அந்த திரவியத்தை அனுபவிப்பவர்களும் இவனை ரக்ஷிக்கமாட்டார்கள்.

ஆகையால் புத்திவான்கள் அனர்த்தத்திற்கேதுவாகிய திரவியத்தைக் கௌரவப்படுத்தார்கள் "ஜாதஸ்யஸ்ரீருக்குவோமருத்யு," என்பதுபோலப்பிறந்தவனுக்கு மரணம் தப்பாது இப்பவோ, அல்லது எப்பவோ மரணங் காத்துக்கொண்டிருக்கிறது, தோலைக் கடிக்கும் நாய்களுக்கு நெய்வெகுட்டாகி யிருப்பதுபோலப் பாவிகளுக்குத் தர்மம் கசப்பாக யிருக்கும் மனிதன் மரணமடைந்து அவன்திரேகம் மயானத்திற்குக் கொண்டு போகும்போது அவன் சம்பாதித்த திரவியத்தில் ஒன்றிரண்டு காசுகளையாகிலும், அவன் பிணத்துடன் பாடையில்வைக்கமாட்டார்கள் பந்துக்கள் யாவரும் மயானம்வரைக்கும் பின்தொடர்ந்தபிணத்தை யக்கினிக்கு ஆகாரஞ்செய்து திரும்பிவருவார்கள் இதுகளெல்லாம் அரிந்திருந்தும் லுத்தர்களானவர்கள் பாவவலுவினால் கர்மத்தை விரோதித்திருக்கிறார்கள் துக்காராம்சுவாமி மகானுபாவரென்று ஒருதரம் துதித்தமாத்திரத்தில் நமது பாவங்களெல்லாம் நசித்துப்போம் அப்படிப்பட்ட மகாத்துமா உனது

Koviloor Digital Library

பூர்வஜென்மபுண்ணியபலத்தினால் உனையொருபதார்த்தமாகஎண்ணி உன்னிடத்திற்கு இவர்களையனுப்பினார் உனக்கு அமிர்தம் கசப்பாகயிருக்கிறது, நானென்ன செய்வேனென்று கண்ணீர்விட்டு சோகமடைந்தாள்.

இதுகள் யாவற்றையுங்கேட்டு அடிஎன்ன பிதற்றுகிறாய் இவர்களுக்குப்பிடித்தபைத்தியம் உனக்கும் பிடித்தாப்போருக்கிறது, யாரென்ன சொல்லினும் நானொருக்கவடிகாசாகிலுங்கொடேன் வீட்டிற்குடையவன் தன்மனைவியை விரோதஞ்செய்துகொண்டால் அவனுக்குசுகமில்லை ஆகையால் உன்னுடன் போராடுவதற்கு சந்தேகிக்கிறேன் உனக்கு இஷ்டமானால் உன்னிடத்திலிருக்கப்பட்ட ஒட்டைசொம்பை இவர்களுக்குக் கொடுமென்றுசொல்ல, அந்த உத்தமிகளிப்படைந்து இதுக்காகிலும சம்மதித்தீரல்லவா. நாமெலோரும் கடைத்தேறி விட்டோமென்று சொல்லிக்கொண்டே அந்தஒட்டைச்சொம்பை கொண்டுவந்து ஓபாக்கியவான்களே! கிருபாநிதியாகிய துக்காராம சுவாமி இந்தஒட்டைச்சொம்பைத் தங்கப்பாத்திரமாகக் கைக்கொள்ள வேண்டுமென்று அவர்கையில்கொடுத்து. துக்காராம்சுவாமி எழுந்தருளி யிருக்கும் திக்கைநோக்கித் தெண்டனிட்டாள் அவர்களந்தச் சொம்பை வாங்கிக்கொண்டுவந்து துக்காராம்சுவாமி கையில் கொடுத்தார்கள். அவர்கைப்பட்ட மாத்திரத்தில் அதுஉலகத்திற்கு மேன்மையாகிய தங்கபாத்திரங்திரமாயிருந்தது துக்காராம்சுவாமி அவர்களைப் பார்த்து நீங்களந்த வர்த்தகன் மிகவும் உத்தமனென்று சொன்னீர்கள் அப்படிப்பட்டவன் எப்படி தங்கபாத்திரங்கொடுத்தானென்ன அதைக்கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டு அந்தசொம்பைப் பரீக்ஷிக்கவே, அது பத்தரைமாற்றுப்பொன் சொம்பாக அப்போதவர்களியாவரும் துக்காராம் சுவாமியைப்பார்த்து, ஓசுவாமி! அவன்மிகவும் உத்தமனென்பது சத்தியம், ஒருகவடியாகிலுங் கொடேனென்று சொன்னான் மிகவுங்கற்புடையவளாகிய அவன்மனைவி அவனை வெகுவிதத்தில் பிரார்த்தித்தாள் அவன காமிபாகையால் மனைவியின்மனதைச் சங்கடப்படுத்தக் கூடாதென்று யோசித்து என்கையினால் நான் ஒன்றுங்கொடேன் எனக்கிஷ்டமுண்டாகில் உன்னிடத்திலிருக்கப்பட்ட ஒட்டைசொம்பை இவர்களுக்குக்கொடுத்து அனுப்புமென்று சொன்னான்.

அப்போதந்த சாந்தகுணமுடையமாது இந்தச்சொம்பை எங்கள் கையிற்கொடுத்து, இதனை கிருபாநிதியாகிய துக்காராம்சுவாமி மேன்மையாகியதங்கப்பாத்திரமாகவெண்ணி கைக்கொள்ளவேண்டுமென்று சொல்லிதேவரீரெழுந்தருளியிருக்கும் திக்கைநோக்கி தெண்டனிட்டாள் அந்தகற்புடைய மாதின் பிரார்த்தனையையறிந்து அம்மாது கோரிக்கொண்டபடி கைக்கொண்டார்கள் சாக்ஷாத் பண்டரிநாதனே தேவரீர் உருவம்பெற்றுவந்திருக்க அபசாரமாகிய மகிமைகளுண்டாவது ஒருவிந்தையல்லவென்று விண்ணப்பஞ்செய்தார்கள் துக்காராம்சுவாமிகள்அந்தவித்துவானை உட்காரவைத்து சந்தனபுஷ்ப தாம்பூலவஸ்திரங்களைக்கொடுத்து தங்கப் பாத்திரத்தையும் அந்த ஊரார் கொடுத்த திரவியத்தையும் அவர்கையில் கொடுத்து உபசரித்து ஓவித்துவசிகாமணியே பண்டரிபுரத்திலிருந்துவந்த நீரெங்கள்பங்கில் பண்டரிநாதனாயிருக்கிறாயென்றுசொல்லி அவருக்கு ஆனந்தத்தை யுண்டாக்கச்செய்து பண்டரிபுரத்திற்கு அனுப்பினார்.

இப்படியிருக்க ஒருநாளிரவில்துக்காராம் சுவாமிகளுக்கு சொற்பனமாகியது அஃதென்னவென்றால் இந்தமகானுபாவர் இந்திராணிநதிக்கு ஸ்நானத்திற்குப் போனபோது பண்டரிநாதன் ஒருபிராமணருபந்தரித்து அவருக்கெதிரில் வந்துநின்றார் உடனே துக்காராம்சுவாமி ஸ்நானஞ்செய்து உலர்ந்த வஸ்திரத்தைத்தரித்து அந்தப் பிராமணனுக்கு தெண்டனிட்டு ஓசுவாமி! என்பூர்வஜென்ம புண்ணியபலத்தினால் ஸ்ரீ பண்டரிநாதன் நின்னுருவமாகவந்து எனக்கு அதிதியானார் ஆகையால் என்னிடம் கிருபைகூர்ந்து என்வீட்டிற்கெழுந்தருளி பிரசாதம்புசித்து என்னை தன்னியனாகச் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க அதைக் கேட்டு அந்தபிரமணன் ஐயா! நான்நன்றாய் புசிப்பவனாகையால் எனக்குஒருவேளைக்குக் கால்சேர் நெய் வார்ப்பையாகில் உன்வீட்டில்புசிக்கிறேனென்றுசொன்னார் அதற்கு துக்காராம் சுவாமி களிப்படைந்து அந்தமறையவனை தன்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்து தன்மனைவியைப்பார்த்து ஓபெண்ணே! ஸ்ரீ பண்டரிநாதன் இந்தபிராமணன் உருவங் கொண்டு நமதுவீட்டிற்கு அதிதியாகி எழுந்தருளினார் இவருக்கு நமதுவீட்டிலுண்டாகிய அன்னமளித்துக் கால் சேர் நெய்வாருமென்று சொன்னார் அப்போதந்த வனிதை! இந்தபிராமணன் எங்கிருந்துவந்தான் கால் சேர்நெய்நானெங்குபோய் கொண்டுவருவேன்என்று சொல்ல அதைக்கேட்ட பிராமணன் மறைந்துபோயினார் இப்படிச் சொற்பனங்கண்டு துக்காராம் சுவாமி விழித்துக்கொண்டு சொற்பனத்தை எண்ணி எனது பிராணநாதனாகியபண்டரிநாதன் கோரியபதார்த்தத்தையிடாமல் நிற்பாக்கியனானேனென்று சோதித்து பகவானைப் புகழ்ந்துக்கொண்டு அந்ததேவன்தனக்கு சொற்பனத்தில் எழுந்தருளிய மாசிமாத சுக்கிலபக்ஷ

Koviloor Digital Library

தசமியுடன்கூடின குருவாரத்தை அனேகதரம் துதி செய்துக் கொண்டிருந்தார்.

சிலர் பொறாமைகொண்ட பிராமணர்கள் இந்த துக்காராம் சுவாமிகள்செய்த புத்தகங்கள் பக்திமார்க்கத்திற் கனுகூலமாகிக் கர்மமார்க்கத்தை நசிக்கச் செய்கிறது, ஆகையால் இந்தபுத்தககட்டுகளைக் கொண்டுபோய்நதிப்பிரவாகத்தில்போடுவோமென்று நிச்சயங்கொண்டு அந்தக்கிரந்தங்கள் யாவற்றையும்ஒரே கட்டாகக் கட்டிக்கொண்டுபோய் ஜலத்திற் போட்டு வந்து துக்காராம் சுவாமிகளைப்பார்த்து, நீர்செய்த கிரந்தங்களை ஜலத்தில் போட்டிருக்கிறோம் அதுபதிமூன்றுநாள் ஜலத்தில்நனையாமல்மிதந்துகொண்டிருந்தால் நீரெழுதியது பகவானுக்குச் சம்மதியென்றுநாம் புகிறோமென்று சொல்லிப்போனார்கள் அதைக்கேட்டுத் துக்காராம்சுவாமிகள் விசனமடைந்து பண்டரிநாதா உன்னேமனத்தைச் சிரமேற்கொண்டு நாமதேவர் எண்ணியதிற் குறைவுபட்ட விருத்தங்களையெழுதினேன அதனை இந்தபிராமணர்கள் ஜலத்தில் போட்டார்கள் என்னுள்புகுந்து உன்னை நீயேபுகழ்ந்துகொண்டாய், நீர்சொல்லியவிருத்தங்களை நீரேகாப்பாற்றுமென்றுசொல்லி பகவந்நாம சங்கீர்த்தனங்களைச் செய்துக் கொண்டிருந்தார்.

அப்போது பண்டரிநாதன் ஒருபாலனாகிவந்து துக்காராம் சுவாமிகளைப்பார்த்து நீசிந்தைப் படவேண்டிய வேலையில்லையென்று சொல்லி மறைந்துபோய் ஜலத்தில் விட்டெறியப்பட்ட கிரந்தங்களை நனையாதிருக்கும்படி காப்பாற்றிக் கொண்டிருந்தார் பதிமூன்றுநாளும் கடந்தபின்பு அந்தபிராமணர்கள் போய்ப் பார்க்க தாங்கள் ஜலத்திற்போட்ட புத்தகங்கள் நனையாமல் ஜலத்தின்பேரில் மிதந்துக் கொண்டிருந்தது அதைப்பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டு விஷ்ணுபக்தனிடத்தில் அபசாரப் பட்டோமென்று அனுதாபமடைந்து அந்தக்கிரந்தங்களைக் கொண்டுவந்து துக்காராம் சுவாமிக்கெதிர்வைத்து, ஓமகானுபாவரே வேதசாஸ்திர இதிகாசபுராணங்களை வாசித்த வித்தியாகெர்வத்தினாலும், ஸ்நானுஷ்டான ஜெபதபங்களைத் திரிகாலமுஞ்செய்யும் பிராமணர்கள் நாமென்றுசாதிபேதபிருமாப்பினாலும், முன்னம் திரிமூர்த்தி சொரூபர்களாகிய ஞானதேவர் நிவர்த்திதேவர் சோபானதேவர் இம்மூவரையுஞ் ஜாதிப்பிரஷ்டர்களென்று நீக்கிவைத்தபிராமணர்களைப்போலும், தலத்தில்நமக்கிணையாகிய வல்லமை பெற்றவர்களில்லையென்றும் பரீக்ஷச் சக்கிரவர்த்தியி னிடத்தில் அபசாரப்பட்ட துருவாசரைப் போலும், தேவசபையில் அரிச்சந்திரன் சத்தியவந்தன் என்கிறவசிஷ்டரைப் பார்த்து அவ்வரசன் அசத்தியனென்று வாதாடிதன்தபோபலத்தையெல்லாமீந்து அவமானப்பட்ட விசுவாமித்திரரைப்போலும், எங்கள் அக்ஞானத்தினால் தங்கள்மகிமையை யறியாமல் அபசாரப்பட்டோம் என்றுசொல்லிதுக்காராமசுவாமிக்குத் தீர்க்கதெண்டனிட்டுமன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

பகவான் துக்காராம் சுவாமிக்குத் திரேகத்துடன் வைகுந்தபதவி யளித்த அத்தியாயம்

துக்காராம்சுவாமி அந்தபிராமணர்களுக்குத் தீர்க்கதெண்டனிட்டு என்பிராணநாதராகிய ஸ்ரீ ருக்குமணிநாதனுக்கு வந்தனஞ்செய்யப் பட்டவர்களாகிய நீங்கள் எனக்கு வந்தனஞ்செய்வது சரியல்ல, அடியேன் உத்தமகுணங்களுடன் கூடிய வைஷ்ணவனாகியிருக்கும்படி கிருபை செய்யுங்களென்று சொல்லி அவர்களையனுப்பிவிட்டுப் புஸ்தகங்களைப் பார்த்து ஆனந்த மடைந்தவராகி, தோத்திரஞ் செய்துக்கொண்டே ஸ்ரீபாண்டுரங்கன் கோயிலுக்குள் சென்று,

சுலோகம்.

"த்வமாதி தேவ: புருஷ: புராண
ஸ்த்வ வஸ்ய விஸ்வஸ்ய பரம் நிதானம்
வேத்தா ஸிவேத்மம் சபாம்சதாம்
த்வயாததம் விஸ்வ மனந்தரூப."

வாயுர்ய மோக்னிர் வருணஸ்ஸ ஸாங்க:
ப்ராஜாபதி ஸ்த்தவம் ப்ரபிதா மஹஸ்ச
நமோ நமஸ் தெஸ்து ஸஹஸ்ர க்ருத்வ:
புனஸ்ச பூயோபி நமோ நமஸ்தே

நம: புரஸ்தாத தப்ருஷ்ட தஸ்தே
நமமோஸ்துதே ஸர்வதயேவ ஸர்வ
அனந்த வீர்யாமித விக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்னோஷித தோஸ்ஸர்வ."

என்றால் ஓபகவானே! ஆதிதேவனும் புராணபுருஷனும் சகலஜெகத்திற்கும் பரமதார பூதனும் விஸ்வதேவனும் நீரே முத்தாத்துமாக்களா லடையத்தகுந்த மோக்ஷஸ்தானம் சகல ஜெகத்துக்கும், உம்மால் வியாபிக்கப்பட்டிருக்கிறது வாயுவும் அக்நியும் வருணனுஞ் சந்திரனும் பிரமனும் பிரமனுக்குத் தந்தையாகிய விஷ்ணுவும்நீயே, உனக்கு அனேகவந்தனஞ் செய்கிறேன், உமக்கு முன்னும்பின்னும் சகல திக்குகளிடத்திலும் வந்தனஞ்செய்கிறேன் புண்டரீகவரதா புராணபுருஷா புருஷோத்தமா போகிசயனா ஓசுவாமி! நினதுண்மைசொரூபம் வாசாமகோசரமா

Koviloor Digital Library

ியது பூமியும்ஜலமும் அக்கினியும் வாயுவும் ஆகாசமும்மேர புத்திமுதலாகிய நான்குவிதமாகி அந்தக்கரணங்களும் பிரகுருதியும், பிரக்ருதிக்காகிலும் மேன்மையாகிய புருஷனுமாகியிருக்கிறாய், அதெப்படியென்றால் பிரமமாமுதல் அணுவளவாகிய ரூபங்களும் அரூபாகிதங்களுமாகி காலதேசபேதகங்களுடன் கூடியிருக்கப்பட்ட இந்தப்பிரபஞ்சம் யாவும் உனதுசரீரமாயிருக்கிறது ஆதியில் உனதுநாபிக் கமலத்திலிருந்து சிருஷ்டிநிமித்தமாகி உண்டாகிய உமது பிரம்மசொரூபத்திற்கு வந்தனஞ்செய்கிறேன் இந்திரன்சூரியன் ருத்திரன் வசுக்கள் அக்கினிதேவதைகள் மருத்துகள் சந்திரன் என்னும் பேதங்களுடன் கூடியிருக்கின்ற உமதுதேவ சொரூபத்திற்கு தெண்டனிடுகிறேன் டம்பமதிகரித்து விவேகத்தில் சொற்பமாகிய பொருமையும் துஷ்ட காரியக்களில் சந்தோஷமும் நற்காரியங்களில் அசட்டையுங்கொண்டமனமுடைய உமது அசுரசொரூபத்திற்கு தெண்ட னிடுகிறேன், மற்றவிவேகமாகிஎந்தரூபத்திலும் பொட்டைகளுக்கு அதிகமாக க்ஞானசஞ்சாரமில்லாதிருக்கிறதோ அப்படிப்பட்ட சத்தாதிவிஷய ருசியுடன்கூடின உமது யக்ஷசொரூபத்திற்கு தெண்டனிடுகிறேன், மிகவுங்கொடூரமாகி பயங்கரமாகி மயமாகிக் கருப்பாகியிருக்கும் உமது அரக்கசொரூபத்திற்கு வந்தனஞ் செய்கிறேன் சொர்க்கத்தைச் சேரத்தகுந்த புண்ணியவானுக்குப் புண்ணியபலத்தையுண்டாகச்செய்யும்படிமனுதரு சொரூபத்திற்குத் தெண்டனிடுகிறேன், சந்தோஷம் அதிகமாகி சங்கமருணியாகிஎங்குஞ்சஞ்சரிக்கும் சத்தியுண்டாகிய சித்தர்பொருளாகியிருக்கும் உமது சித்தசொரூபத்திற்கு வந்தனஞ்செய்கிறேன், சேதனாசேதனங்களிடத்தில் வாசமாகி இந்த சகலபிரபஞ்சமும் வைகுந்தத்திலிருக்கும் சகல ஆத்துமாக்களையும் விகாரமற்றதாக்கி நித்தியனாகி யிருக்கப்பட்ட எவன் சொரூபமாகியிருக்கிறதோ அப்படிப்பட்ட நித்திய காரணமாகி சர்வசுவாமியாகிய சர்வசக்தனாயிருக்கும் ஸ்ரீபாண்டுரங்கா உனதுபயபாதங்களில் சரண்புகுந்தேனென்று துதித்து ஸ்ரீருக்குமணிநாதனை ஆலிங்கனஞ்செய்து ஆனந்த பரவசமேலிட்டு, சர்வக்ஞரும் சர்வசக்தரும் அபாரமகிமைகள் விளங்கச்செய்த துக்காராம்சுவாமி புண்டரீகவரதன் கடாக்ஷத்தினால் சரீரத்தோடு ஸ்ரீவைகுந்தமா நகரமடைந்தார். இந்த மகாத்துமாவினுடைய நீதியும் நற்குணங்களும் மகிமைகளும் புகழையுங் கொண்டாடுவதற்கு ஸ்ரீபாண்டுரங்கநாதனையன்றி அன்னியர்களுக்குச் சாத்தியமாக மாட்டாது மேலும் இந்த துக்காராம் சுவாமிகள் ஸ்ரீவைகுந்தமா நகரத்தையடைந்தும் இப்பூவுலகின்கண் அனேகபக்தர்கள் சொற்பனத்தி லெழுந்தருளி உபதேசித்துத் தன்னியராகும்படி கடாக்ஷித்துக்கொண்டிருந்தார்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மனேநமஃ

வாழிவிருத்தம்.

தேவமா நகர்வந்த நிரன்வாழி
 தெய்வமன் னியரைத்தொழ வுதாரன்நாம
தேவர்தங் குறைமுடித்த தூயோன்வாழி
 திசைகடல்சூழ் புவித்தொண்டர் துதிப்போன்வாழி
காவலரும் நாவலருங் களிப்போன்வாழி
 கணக்கடங்கா மகிமைவெளி யிட்டோன்வாழி
தேவாதி தேவனருள் பெற்றோன்வாழி
 துக்காராம் திருவடிகள் தினமும்வாழி.

துக்காராம்சுவாமிகள் திருவடிகளே சரணம்.

துக்காராம்சுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:



(பதின்மூன்றாவது)

ஏகநாதசுவாமி சரித்திரம்.

விருத்தம்.

சத்தியம் பொறுமை சாந்தம் சதலசற் குணம் பொருந்திச்
சித்தத்தி லரியைப் பாடுஞ் ஜெனார்த்தன சுவாமிபாதம்
பக்தியா யடுத்துப் போற்றிப் பண்புடை யருளைப்பெற்று
சித்தியை யடைந்த விவேக நிமலரை வணங்குவோமே.

ஸ்ரீ மகாலக்ஷ்மி கடாக்ஷம்பொருந்திய பைட்னிபுரத்தில் பிராமணகுலத்திற் பிறந்த மகானுபாவனாகிய பானுதாசரென்பவர் சாந்தம் பொறுமை தயை முதலாகிய நற்குணங்கள் பொருந்தி சதா ஸ்ரீபாண்டுரங்கநாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண் டிருந்தார். இவர் வித்தியாநகரத்திற்குச் சென்று அங்கு எழுந்தருளியிருந்த தேவாதிதேவராகிய ஸ்ரீபாண்டுரங்க நாதனை பண்டரிபுரத்திற்கு யெளப்பண்ணிக் கொண்டுவந்து முன்போலவே பிரதிஷ்டைசெய்து சகலலோகத்திற்கும் சகஜீவனத்தை யுண்டாக்கி சாதுஜெனங்களை சந்தோஷிப்பித்த மகானுபாவராகிய இவருக்கு சக்கரபாணியென்னும் ஒருபுத்திரன் உண்டாகினார் அவர் சகுணசிலராகி நிரந்தரம் ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனஞ் செய்திருந்தார் அவருக்கு ஒருபுத்திரன் பிறந்தார் அப்புத்திரனுக்கு சூரியநாராயணனென்று நாமகரணஞ்செய்து அருமையாகவளர்த்து தகுந்தகாலத்தில் க்ஷௌனம் உபநயனம் வேதத்தியாஸம் சாஸ்திர அப்பியாசங்களைக் கிரமமாகச்செய்து பின்பு ருக்குமணியென்னும் ஒருகன்னிகையை இவருக்கு விவாகஞ்செய்தார்கள் இவாளிருவருக்கும் உத்தமோத்தமரும் மகானுபாவருமாகிய ஏகநாதர் புத்திரராகியவதரித்தார் இந்தஏகநாதருக்கு தாய்தந்தையர்கள் தகுந்தகாலத்தில் உபநயன முதலாகியதும் நடத்திதிருக் கல்யாணமும் செய்வித்தார்கள்.

இவர் பூர்வஜென்ம வாசனையினால் அதிபால்யத்திலேயே சாது ஜெனங்களிடத்தில் விசுவாச முடைய

Koviloor Digital Library

வராகி சாதுக்கள்கூட்டத்தில்வசித்து ஸ்ரீஹரிநாமசங்
கீர்த்தனங்களை மிகுந்தபிரியத்துடன்பாடிக்கொண்டி
ருப்பார் அப்போதங்கு பரமஞானியாகி தத்தாத்தி
ரேய உபாசகராகிய ஜெனார்த்தனபண்டித ரென்னும்
ஒருமகாத்துமாவிருந்தார் அவரிடத்திற்கு ஏகநாதர்
சென்று நிர்க்கதெண்டனிட்டு பயபக்திகளுடன் அஞ்
சலியஸ்தராகி நின்றிருக்கையில் ஜெனார்த்தன பண்டி
தர் இவரைப்பார்த்து குழந்தாய் நீயாவன்! பாலனு
கிய நீவிளையாட்டில் ஆசையைவிட்டு தாய்தந்தையர்
களைப் பிரிந்து இவடத்திற்கென்னகாரணமாகி வந்தா
யென்று கேட்கையில் ஏகநாதர் ஓசுவாமீ இதுவரை
யில் நானெடுத்த ஜென்மங்களுக்கு கணக்கே யில்லை
அந்த ஜென்மங்களில் எனக்கு எத்தனைபேரோ தாய்
தந்தையர்க ளானார்கள் இந்த சரீரத்தைப் பெற்றெடு
த்த தாய்தந்தையர்களும் முன்னம் தாம் தந்தையர்
கணக்கில சேர்ந்திருந்தவர்களே அன்னியில் இவர்க
ளிடத்தில் விசேஷமெதுவுங் காணேன் நிற்பேதைக
ளுக்கு தாய்தந்தையாகிய ஸ்ரீமந்நாராயணன் எனக்
கும் உமக்கும் அகிலவுலகங்களுக்கும் தாய்தந்தையா
கியிருக்கிறார் அவர் நிர்ஹேதுகிருபையினால் உனக்கு
அரிதாகிய மானிடதேகங்கிடைத்தது இந்தஜென்ம
த்திலும் அந்த ஜெகந்நாதனைத்துதிசெய்யாமல் ஆகா
ரம் நித்திரைபயம் மைதுனங்களுக்கு வசியப்பட்டவ
னுகி காலத்தை வீண்போக்குவனேயாகில் நான் பசு
வுக்கு சமானமானவனுகுவேன் சாதுகூட்டத்திற் சே
ர்ந்து சாந்திசுகத்தை யனுபவிக்கவொட்டாமல்காமக்
குரோத லோபமோக மதமாச்சர்யங்களென்னும்அரி
ஷ்டவர்க்கங்கள் என்னைவாதைசெய்துக்கொண்டிருக்
கிறது இந்தபயசத்துருக்களை ஜெயித்தவ னல்லவா
ஜெனனமரண ரூபங்களாகிய வலையையறுத்துக் கொ
ண்டு பிரம்மானந்த சுகத்தை யடைவான் அப்படிப்
பட்ட பரமானந்தத்தை ஆசித்து.

சுலோகம்.

"த்ரிஜகதி ஸஜ்ஜன ஸங்கதி ரேகா
பவதி பவார்ணவ தரணே நௌகா."

என்றபடி பவக்கடலை தாண்டுவதற்கு சாது ஜெ
ன சங்கத்தைவிட வேறுஓடமில்லையென்றுநிச்சயித்து
சாதுக்களில் தலைவராகிய தேவரீர் செந்தாமரைப்பா
தங்களையடுத்து நிரந்தரமும் தொண்டுசெய்து கிருதா
ர்த்தனுகலாமென்று நிச்சயித்துவந்தேன் சரணமடை
ந்தவனை ரக்ஷிப்பது சர்வேஸ்வரனுக்கும்சாதுக்களுக்
கும் சுபாவகுணமல்லவா வென்று விண்ணப்பஞ் செ
ய்த இந்தபாலன் மதலைச்சொற்களுக்கு ஜெனார்த்தன
பண்டிதர் மிகவும் ஆச்சரியப்பட்டு நீயதிக பாலனுகி
யிருக்கிறாய் உனதுவிவேகம் அதிகவிசேஷமாகி நின்
மொழிகள் செவிகளுக்கமுதமாகி யிருக்கிறது இந்த
அருமைகளை யுண்டாகச்செய்வது பகவான் கடாக்ஷ
மேயென்று தோன்றுகிறது உலகத்தர் யாவரும் பக
வானைத்துதிப்பதைவிட்டு காமக்குரோதாதி அரிஷ்ட
வர்க்கங்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்க நீஇந்தபா
லியத்தில் அந்த அரிஷ்டவர்க்க சுபாவங்களை யரிந்து
இந்திரியசுகத்தை விரோதித்து பிரம்மானந்த சுகத்
தை ஆசித்தாய் ஆகையால் இந்திரியங்கள் உன்னைவா
திக்கமாட்டாது பயப்படவேண்டாம் நீ கோரினபடி
யேஎன்னிடத்தில் வசித்திருக்கும்என்றுகிருபைசெய்
தார் அப்போது நாரதசல்லாபத்தினுல்ஸ்ரீவேதவியா
சருக்கும் மகாரிஷிசல்லாபத்தினுல் துருவருக்கும் வி
சோபாகேசர் சல்லாபத்தினுல் நாமதேவருக்கும் ரா
மாநந்தசுவாமி சல்லாபத்தினுல் கபீருக்கும் எப்படிப்
பட்ட ஆநந்தமுண்டாச்சுதோ அப்படிப்பட்டஆனந்
தத்தையடைந்து ஏகநாதர்சந்தோஷித்து அதுமுதல்

சுலோகம்

"சரீரம் வசுவிஜ்ஞானம்
வாஸகர்மகுணா நஸூன்
குர்வர்த்தகம் தாரயேத்யஸ்து
ஸசிஷ்யோ ஸேதரஸ் ம்ருத்."

என்பதுபோல ஆத்துமாமுதலாகியதகளை குரு
வின் ஆதினஞ்செய்து குருகுலவாசஞ் செய்துக்கொ
ண்டு குருபாதங்களைத் துதித்தும் பரமபாவனமாகிய
அவர் உச்சிஷ்டத்தைப்புசித்தும் அவர்பாத நிழலைப்
போலத் தொண்டுசெய்துவந்தார் ஜெனார்த்தன பண்
டிதர் ஏகநாதருடைய திடபக்தி வைராக்கியகுணநன்
னடக்கைகளைப் பார்த்து எவ்வளவோசந்தோஷித்து
ஓகுமாரா நீநிரந்தரமும் எனக்குத் தொண்டுசெய்தும்
என்னைவிட்டுப் பிரியாமலிருக்கிறாய் உன் தாய்தந்தை
யர் முதலானோர்கள் அன்னவஸ்திரங்க ளில்லாமல்
விசனமடைந்திருப்பார்கள் தாய்தந்தையர்கள் கஷ்ட
ப்பட்டுக்கொண்டிருக்க நீயவர்கள்கவலையில்லாமலிருப்
பதுநுயமல்ல நான் உனக்கு கொஞ்சம்பொருள்
கொடுக்கிறேன் அந்தப்பொருளோடு உன்க்ஷேமலாப
ங்களுக்கும் ஒருசீட்டெழுதி உன்தாய் தந்தையர்களு
க்கு அனுப்பிவிட்டு நீஎன் வீட்டுகணக்குகளை எழுதிக்
கொண்டு உசாராக யிருவென்று நேமித்தார்ஏகநாதர்
மகாபாக்கியமென்று ஆசான் கட்டளையிட்டபடிசெய்
துக் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்க ஒருநாள் ஜெனார்த்தன பண்டி
தர் ஏகநாதர்சமர்த்தைப் பரிக்ஷிக்க வேண்டுமென்
றெண்ணி அவரைப்பார்த்து நீஇதுவரையில் எழுதிய

கணக்குகளைக் கூட்டி மொத்தஞ்செய்து எனக்குகொண்டுவந்து காட்டுமென்றுகட்டளையிட்டார் ஏகநாதர் அப்படியே செய்கிறேனென்று அன்று பகலெல்லாம் ஆசான் தொண்டுகளில் குறையின்றி நடத்தியிருந்து அன்றிராத்திரியில் ஆசான் சயனித்தபின்பு விளக்கு வைத்துக்கொண்டு கணக்குகளைக் கூட்டி. மொத்தஞ்செய்கிறபோது ஒருதடவையில் அரையும் மற்றொரு தடவையில் காலும் இப்படியேதடவைதட்வைகுறைந்து அரை கால அரைக்கா வீசம்வித்தியாசப்படுவதினால் ஏகநாதர் ஆகாரநித்திரைகளைநீக்கி அந்த இராத்திரியெல்லாம் அதுவேகவனமாய் கணக்குகளைபார்த்துக் கொண்டிருந்தார் அப்போது ஜெனார்த்தன பண்டிதர் ராத்திரி மூன்றுஞ்சாமத்தில்விழித்துக்கொண்டு ஏகநாதர்வழக்கமாய் சயனிக்குமிடத்தில் காணமல் தேடுகிறபோது அவர்ஒரு ஏகாந்தஸ்தலத்தில் உட்கார்ந்து விளக்குவைத்துக்கொண்டு அதுவே தியானமாய் கணக்குகளைப் பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டு அவருக்குத்தெரியாமல் கொஞ்சதூரத்தில்நின்றிருந்து பார்த்துக்கொண்டிருக்கையில் கொஞ்சநாழிகையானபிறகு ஏகநாதர்கணக்கு சரிப்பட்டுவந்தமையினால் சந்தோஷத்தை யடைந்து தன்குருவானவர் மரபில் நின்றிருப்பதை யறியாமல் கைகளைகொட்டி ஆஹாஹா சபாசுயென்றுசொல்லிநகைத்தார் அதைக்கண்டுஜெனார்த்தனபண்டிதர் ஏகநாதரெதிரில்நின்று நீஎன்ன ஆச்சரியத்தைப்பார்த்து சபாசென்று சொல்லி சிறித்து கைகளைக் கொட்டுவதற்குகாரணம் என்னவென்றுகேழ்க்க ஏசநாதர்தலையெடுத்துப் பார்த்து துரிதமாயெழுந்து குருவுக்கு நீர்க்க தெண்டனிட்டு தன் சிறிப்புசகுக்காரணம் தெரிவித்தார் அதைக்கேட்டு ஜெனார்த்தனபண்டிதர் சிறித்து அடா ஏகநாதா ஒருஜாமமாய் நான் உனனிடத்திற்கு வந்து நின்றுக்கொண்டிருந்ததை யரியாமல் அரைக்காலுக்காகிலும் வீசத்திற்காகியும் அதுவேதியானமாக உன் மனதை கணக்கினிடத்தில் லயிக்கச்செய்தாய் அப்படிப்பட்ட சஞ்சலமற்ற நிஷ்டை உனக்குபகவானிடத்தில் உண்டாகுமாகில் நீபகவத் சாயுச்சியத்தை யடைவதற்கு சந்தேகமேயில்லை இதுவே நீகோரிய பரமசாந்தி சுகமென்று ஹிதோபதேசஞ் செய்யவே ஏகநாதருக்கு தக்ஷணத்தில் வைராக்கியமுண்டாகி ஓசுவாமி தேவரீரது கிருபையினால் என்கோரிக்கை சித்தியாகி என் ஜென்ம சாபல்யமாச்சுது தேவரீரது ஹிதோபதேசமென்னும் பிரகாசம் அனாதிகாலமாக அநேகஜென்மங்களில் என்னை இனிபிரியாதிருந்த அக்ஞானயிருளை போக்கியது யென்றுசொல்லி ஓலைகளையும் எழுத்தாணியையும் பூமிமேல்வைத்து குருபுங்கவரே கணக்கிடக்கூடாத என்றாஞ்சிதபராய் தங்கள்தேவரீரது கடாக்ஷத்தினால் உருலமாய்ந்து இருந்தவிடம் தெரியாமற்போச்சுது இதுவரைக்கும் மானிடசிரேகத்தையடைந்து பசுவுக்குச் சமானமாகி யிருந்தேன் தேவரீரது உபதேசத்தினால் இப்போது நான் ஒருமனிதனாகினேன் ஆகிலும் என்னைவிசுவாசிககவேண்டாம் இந்த சரீரத்தில் கட்டப்பட்டிருக்கும் துஷ்ட இந்திரியங்களாகிய அசுவங்கள் என்சுவாதீனத்தில்நிற்காது இது வேதாந்தபதத்தை தப்பவைத்து யக்ஷயவீதியில் சஞ்சரித்து எமனிடபட்டணத்திற் சேர்க்குமென்றுபயப்படுகிறேன் எனக்குதிடமாகிய புத்தியென்னும் ராசிக்கயரைக் கொடுத்து அந்தக்கொடிய அசுவங்களிச்சைப்படி நடக்கும் வேதத்தைத் தடுத்து என்னையர்ச்சிராதி மார்க்கத்தில் நடக்கச்செய்து ஸ்ரீவைகுந்தமாநகரத்தில் சேர்க்கவேண்டிய பாரம் உமதாகியிருக்கிறது நான் உமதுசந்நிதியில் சரணாகதி செய்வதன்றே இந்த ஆத்துமபாரம் உமதாகி ரக்ஷிக்கப்பட்ட தாயிற்று இப்போது நான்மறுபடியும்பிரார்த்திப்பதுயனாவசியம் ஆகிலும் உம்முடையசல்லாபம் எனக்குத்தாரகபோஷக போக்கியரூபங்களாகியிருப்பதினால்முன் விண்ணப்பத்தையே மறுபடியும் தெரிவிக்கிறேன். என்றுசொல்லிய ஏகநாதர் வார்த்தைகளைக் கேட்டு ஜெனார்த்தனபண்டிதர் மிகவுஞ் சந்துஷ்டி யடைந்து அவரையாலிங்கனஞ் செய்துக்கொண்டு அவர் செவியில் ஸ்ரீதாரகமந்திரத்தை யுபதேசித்தார் ஏகநாதர் தன்னியனானேனென்று ஆனந்தித்து ஏமாராமல் ஆசாரியருக்குத் தொண்டுசெய்திருந்தார்.

இப்படிக்கிருக்க ஜெனார்த்தன பண்டிதர் ஏகநாதர் உண்மைக்ஞானத்தையுப்பயபக்தி விசுவாசங்களையுங்கண்டு இவர்சுபாவம் இனைசொல்லக்கூடாததாகியிருக்கிறது இவர்பகவானுடைய அவதாரமாகியிருக்கலாமென்று தோன்றுகின்றதுஇப்படிப்பட்டவனுக்கு ஸ்ரீதத்தாத்திரேய சுவாமிகள் தெரிசனஞ் செய்விப்பது உசிதமென்றெண்ணி ஏகநாதனைப் பார்த்து உனக்கு அஸ்தமாதாசாரியராகி ஜெகத்துக்கு குருவாகிய ஸ்ரீதத்தாத்ரேயசுவாமி தரிசனஞ்செய்விக்கிறேன் அந்தமகாத்துமா அசுசியாகியவேடம் புனைந்துவருவார் அவரைப்பார்த்து உன்மனதில் சந்தேகிக்கவேண்டாம் நான் அவருடன்கலந்து பேசுகிறபோது நீ அவர்பாதங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவரைத் துதிசெய்யும் அவருக்குடன்னிடத்தில் கிருபையுண்டாகி தன்உச்சிஷ்டத்தைக் கொடுப்பாராகில் உடனே சாப்பிட்டுவிடும் என்றுசொல்லவே ஏகநாததர் குருவைநோக்கி ஓசுவாமிதேவரீரதுபாததாமரைகளுக்காகிலும் மேலாகிய பெருத்த பதார்த்தம்

Koviloor Digital Library

வேறென்றும் நானறியேனென்றுசொல்லினர் அதை
கேட்டு ஜெனர்த்தனபண்டிதர் ஓஏகநாதா என்உபா
சனைத் தெய்வமாகிய தத்தாத்திரேயருக்கு என்கட்ட
ளேப்படி பக்திசெய்யும் அவர்கிருபைக்கு பாத்திரனு
குவையோ யாகில் நான்மிகவும் சந்தோஷிப்பேன்
என்றுசொல்லி ஏகநாதரை யழைத்துக்கொண்டுகாட்
டிற்குச்சென்று தன் ஆசாரியரைத் துதிசெய்துக்கொ
ண்டிருக்கையில் அசுசியை அனுஷ்டிப்பவராகிய தத்
தாத்திரேய பகவான் துலுக்கவேடம் புனைந்து முன்
வந்து சாக்ஷாத்கரித்தார் ஜெனர்த்தனபண்டிதர் தன்
குருவை ஏகநாதருக்குக்காட்டி இதோபாரும் எனது
குருநாதர் துலுக்கவேடம் புனைந்து குதிரையின்பேரி
லேறி வருகிறாரென்று சொல்லிக்கொண் டிருக்கையில்
தத்தாத்திரேயசுவாமி ஜெனர்த்தனபண்டிதருக்கெதி
ரில்வந்து குதிரைவிட்டிறங்கினர் அப்போது ஜெனர்
த்தனபண்டிதர் குருவுக்கு தீர்க்கதெண்டனிட்டு அவ
ருடன ஏகாந்தமா யுட்கார்ந்து பேசிக்கொண்டிருந்
தார்.

ஏகநாதர் இவர்யாரோவென்றுசந்தேகித்து தூர
த்தில் நின்று பார்த்திருந்தார் இப்படியிருக்க தத்
தாத்திரேய சுவாமி என்னைப் பசிவேதனை செய்கிற
தென்று சீடருடன்சொன்னார்ஜெனர்த்தனபண்டிதர்
தன்யோகபலத்தினால்ஷட்ரசங்களுடன் கூடினபிரசா
தத்தை அப்போதேயழைப்பித்து சொர்னபாத்திரத்
திலிட்டு குருநாதன்எதிரில்வைத்தார் அப்போதுகுரு
சிஷரிருவர்களும் கலந்து புசித்துக்கொண்டிருக்க தத்
தாத்திரேயசுவாமி ஜெனர்த்தன பண்டிதரைப் பார்த்
து உன்னைப் பின்தொடர்ந்துவந்த உன்சிஷ்யன் நம்
மோடு சமமாய்ப் புசிக்கத் தகுந்தவனல்ல வென்று
எண்ணினையோ அவரையழையுமென்று நேமித்தார்
இந்தவார்த்தையைக் கேட்டு ஏகநாதர் இதென்னவிப
ரீதம் ருஜுவில் துலுக்கனுடன் நானெப்படிபுசிப்பே
னென்று சொல்லிக்கொண்டே தூரமாக ஒதுங்கிப்
போனார் உடனே தத்தாத்திரேய சுவாமி மறைந்து
போயினர்.

அப்போது ஜெனர்த்தன பண்டிதருக்கு ஏகநா
தர் தீர்க்கதெண்டனிட்டு ஓசுவாமி இப்போ யிவிடம்
வந்த துலுக்கன்யாவன் தேவரீருக்கு சாஷ்டாங்கதெ
ண்டனிட்டு அவனுடன் புசிப்பதற்கு காரணம்யாதெ
னக்கேட்க ஜெனர்த்தனபண்டிதர் தன் சிஷியனாகிய
ஏகநாதனைப்பார்த்து அத்திரிமகாரிஷி புத்திரராகிய
தத்தாத்திரேய சுவாமிகளிவர்தான் முன்னமே உன்
னுடன் நான்சொல்லியும் நீவிசுவாசிக்காமற்போனாய்
இவரதுசேவை பரமயோகிக்கும் அரிதாகியது நமது
பாக்கியவசத்தினால் இந்த மகாத்துமாவின் சேவை
உனக்குகிடைத்தது நீகளங்கமுற்றசித்தனாகிஇவர்சடா
க்ஷகதிற்கு லக்ஷியமாகாமற் போனாயே கற்பகமாம்
மரங்களிலிழிவாகியதாகவும் காமதேனுபசுக்களிலிழி
வாகியதாகவும் என்றுமவர்களைப்போல அந்தமகா
த்மனை மனிதசாமானியனாக எண்ணினை அஷ்டாங்க
யோகங்களும் அணிமாதியஷ்டசித்திகளும் சித்தித்து
போதினும் இந்தமகாத்மாவின் தெரிசனங் கிடைப்ப
தரிது அப்படிப்பட்ட திவ்வியமூர்த்தியின் மகிமைக
ளையரியாமல் அவர்வேடத்தைக்கண்டு துலுக்கனென்
று கெர்வித்தாய் அந்தரங்கவேடமாகிய வைராக்கிய
மே ஆத்துமாவுக்கு முக்கியமான சொரூபமாகுமே
யல்லது மேல்வேடம் எப்படியிருந்தபோதினும் அது
பிரயோசனமான தல்லவெனும் அப்படிப்பட்டபரம
தர்மத்தை தத்தாத்திரேயாதி பரமயோகிகள் உல
கோர்க்கு அனுஷ்டித்துக் காட்டுவார்கள் ஆகையால்
நீஇந்ததத்துவத்தை யரியாமல்மோசம்போனாய் ஆகி
லும் குறைவில்லை இனியாகிலும் சாவதானத்துடன்
கூடியிருமென்று சொல்லக்கேட்டு ஏகநாதர் குருநாத
ரைநோக்கி குருபுங்கவரே! தேவரீரது பாததாமரை
யை அடுத்திருக்கும் எனக்குஇன்னொருவருடன் வெ
லையென்ன? நான்திரிகரணசுத்தியுடன் தேவரீரைஅடு
த்திருப்பது உண்மையாகில், சர்வக்ஞராகிய தத்தா
த்திரேயசுவாமி என்னிடம்பிரசன்னமாவாராக தருக்
களின்மூலத்தில் ஜலத்தைவார்க்க, கிளை கனிதருவது
போல தேவரீருக்கு தொண்டுபூண்டிருக்கும் என்னி
டத்தில் தத்தாத்ரேய சுவாமிக்குச் சந்தோஷமுண்
டாகுமென்பதற்குச் சந்தேகமில்லையென்று விண்ண
ப்பஞ்செய்த சிஷ்யன் சொற்களுக்கு களிப்படைந்து
அவர்பின்தொடர ஜெனர்த்தனபண்டிதர் தன்மனை
யைச் சேர்ந்தார்.

மறுபடி ஒருநாள் ஜெனர்த்தனபண்டிதர் ஏகநா
தரைக்கூட வழைத்துக்கொண்டு காட்டிற்கு வந்து
மனிதசஞ்சாரமில்லாத யிடத்திலிருந்து தத்தாத்ரேய
சுவாமியை தியானிக்கையில் அந்தமகாத்துமா ஒரு
பகிர்வேடம் புனைந்துக் கொண்டுவந்தார் காமதேனு
நாய்ரூபம்புனைந்து அந்தமகானுபாவரைப் பின்தொடர்
ந்து வந்தது ஜெனர்த்தனபண்டிதர் இந்தரூபத்தைக்
கண்டு மனதில் களங்கமில்லாமல் தீர்க்கதெண்டனி
ட்டு அவருடன் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்
டிருந்தார் அப்போது தத்தாத்ரேய சுவாமி தன்
ஜோல்னாவிலிருந்த ரொட்டியை எடுத்துக் கொண்டு
தன்னுடன்வந்த நாயின்பாலை தன்கமண்டலத்தில்கர
ந்து அந்தரொட்டியையிட்டு அந்தப்பாலில்தொட்டுப
புசித்துக்கொண்டிருந்தார் அப்போது ஏகநாதருக்கு
களங்கமனம் மாராதிருப்பதினால் அவர் தூரமாக

நின்று பார்த்துக்கொண்டிருந்தார் தத்தாத்ரேயசுவாமி ஜெனார்த்தன பண்டிதரைப்பார்த்து என்னைப்பின் தொடர்ந்துவந்தவன் உனக்கந்தரங்க சிஷியனுகையால் அவனை இவ்விடத்திற்கு அழைப்புமென்று கட்டளையிட்டார் அப்போது ஜெனார்த்தனபண்டிதர் தன்கையினல் சைகைசெய்து ஏகநாதனை சமீபத்தி லழைத்து தத்தாத்ரேயசுவாமி புசித்து மிகுந்த மகாபிரசாதத்தை அவனுக்குக்கொடுத்து தன்குருவின் தாட்டாமயில் விழச்செய்து இந்த ஆத்துமாவை நன்றாய்க்கடாக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து, அவன்சரித்திரம்யாவும் விண்ணப்பஞ்செய்தார் அதைக் கேட்டுதத்தாத்ரேய சுவாமி களிப்படைந்து, ஜெனார்த்தனபண்டிதரைப் பார்த்து இந்த ஏகநாதன் வேதவியாசரால் செய்ததாகி சகலவேதசாரமாகிய ஸ்ரீராமரிஷியினல் பரிக்ஷித்துமகாராஜனுக்கு உபதேசிக்கப்பட்டஸ்ரீமத் பாகவதபுராணம் மகாராஷ்டிர பாஷையில்செய்தான் அந்தக்கிரந்தம் உலகத்தில் மிகவும்கீர்த்தி யடையும் இவனும இவன்பரமபக்தயுக்தனுகி அநேக ஹரிகீர்த்தனங்களைச் சொல்லி பகவானைத் தொழாத சேதனர்களுக்கு பகவத்பக்தியுண்டாகச் செய்வானென்றுகிருபாநோக்கஞ்செய்யவே ஜெனார்த்தனபண்டிதர் சந்தோஷித்து ஏகநாதனைப் பார்த்து இப்பொழுதாகிலும் நான்சொன்னது உண்மையென்று தோன்றுகின்றதா, என்குருநாதன் புசித்தசேஷம் பரமபாவனமென்றும் புசித்தாயா அல்லது அவர் வேடத்தைப் பார்த்து சகித்து அந்தபிரசாதத்தை எறிந்துபோட்டையாவென்று கேட்கையில் ஏகநாதன் குருநாதனை நோக்கி மகாத்துமாவே! நான்பாக்கியயீனன் ஆகையால் உமது பரமகுருவின் மகிமைகளை யறியாமல் இவர்வேடத்தைப் பார்த்து மனதில்களங்கமடைந்து என்கைக்கெட்டிய மகாபிரசாதத்தைப் புசிக்காமல் விட்டேறிந்தேனென்று பயப்பட்டுக்கொண்டே சொன்னர்.

ஜெனார்த்தனபண்டிதர் கிஞ்சித்து சிந்தித்துகையிலிருந்த தாம்பூலத்தைத் தத்தாத்ரேய சுவாமிக்குக் கொடுத்தார் அவர் அதை வாயில்போட்டு மென்று கொண்டிருக்கையில அவர்வாயிலிருந்துகிஞ்சித்துதாம்பூலத்தை யெடுத்து ஏகநாதன்வாயில் போட்டார் பரமபாவனமாகிபரமகுருவின் உச்சிஷ்டமிவர்கையில் பட்டமாத்திரத்தில் இவருக்கு மனக்களங்கம் நீங்கி சகலபிரபஞ்சமும் பகவான் சொரூபமாகத் தோன்றியது உடனே தத்தாத்ரேயசுவாமி மறைந்துபோயினர் ஜெனார்த்தனபண்டிதர் ஏகநாதருடன் தன்வீடு வந்துசேர்ந்தார். ஏகநாதர் அகண்டஞானயுக்தாகி சேதனுசேதனங்களாகிய சகலபதார்த்தங்களும் பகவான் சொரூபமென்னும் சிதசித்ரூபமாகிய சகலபிரபஞ்சமும் அந்தபகவான் சரீரமென்றும் அவரேசகலத்திலும் சரீரியாகி யிருக்கிறுரென்றும் எண்ணிஅன்னியமறியாமல் ஆசாரியனுக்குப் பாதகிழலெனத் தகுந்து வசித்திருந்தார்.

ஜெனார்த்தனபண்டிதர் ஒருநாள்ஏகநாதருடைய மகிமாதிசயங்களைக்கண்டு இப்படிப்பட்டமகாத்துமா என்க்குத்தொண்டுசெய்வது தகுதியல்லவென்றுயோசித்து அவரைப்பார்த்து ஒஏகநாதரே! நீபைட்னிபுரத்திற்குப்போய் உன் தாய்தந்தையர்களுக்குவந்தனஞ்செய்து இல்லரத்தில்வசித்து தேவஅதிதி பிதுர்பூசைகளை சிரத்தையுடன் செய்துக்கொண்டு பஞ்சகாலபாராயணனுகி நிரந்தரமும் பகவானைப் பஜனைசெய்துக்கொண்டு உலகத்லவர்களுக்கு பகவான்பக்தியுண்டாகச்செய்துக் கொண்டிரும் நீ இப்படிசெய்வது எனக்கு மிகவும் சம்மதம் நல்லசிஷ்யனுக்கு ஆசாரியன் கட்டளை மிகவும் பிரியமல்லவாவென்று நேமிக்க ஏகநாதர் ஆசாரியருக்கு நிர்க்கதெண்டனிட்டு குருநாதா உமைப்பிரிந்தெப்படியிருப்பேன் ஆகிலும்உமதுகட்டளையை சிரமேற்கொண்டு தேவரீர்சொற்படி நடக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்து ஆசாரியரிடத்தில் விடைபெற்று பைட்னி புரத்திற்குவந்து தாய்தந்தையர்களுக்கு வந்தனஞ்செய்து க்ஷேமலாபங்களை விசாரித்து யாவரையும் சந்தோஷிக்கச்செய்துதன்ஆசான் கட்டளைப்படி இல்லறத்தில் வசித்து தன்வீட்டில் சந்நிதிசெய்திருக்கும் ஸ்ரீபாண்டுரங்கமூர்த்தியை பக்தியுடன் ஆராதித்துக்கொண்டு இடைவிடாது ஹரிகீர்த்தனைகள்செய்தும் அதிதிகளைப் பூசித்தும், அவர்களுச்சிஷ்டத்தைப் புசித்தும் புசித்தபின்பு புராணங்களைக் கேட்டும், காலத்தைக் கழித்துக்கொண்டு; வந்தார் இவர்ஞானஅனுஷ்டானங்களைப்பார்த்து சாதுஜெனங்கள் ஆனந்தமடைந்திருந்தார்கள்.

இப்படிக்கிருக்க ஒருநாள் ஏகநாதசுவாமி சொர்ப்பனத்தில் ஸ்ரீபாண்டுரங்கநாதன் எழுந்தருளி ஓஏகநாதரே! வால்மீகரால்செய்யப்பட்ட ராமாயணத்தை மகாராஷ்டிர பாஷையில்செய்யும் அதைப்படித்துமந்தமதிகள் உஜ்ஜீவிப்பார்கள்என்றுநேமித்துமறைந்துபோயினர். உடனே ஏகநாதசுவாமி விழித்துக்கொண்டு சொற்பன விருத்தாந்தங்களை போசித்துவிசுவாசித்து நல்ல முகூர்த்தத்தில் இஷ்டதேவதை பிரார்த்தனைமூல்மாக பாவார்த்த ராமாயணமென்று பேர்வைத்து கிரந்தம் யெழுதுவதற்குத் துடக்கஞ் செய்தார்.

இதையடுத்த வீட்டிலிருக்கு பிராமண னிருந்து பொருமை கொண்டவனுகி இவர்ஸமஸ்கிருதக்கிரந்

Koviloor Digital Library

த்தை மகாராஷ்டிரத்தில் எழுதுவதற்கு எப்படிசமர்த்தனுவான் ஒருவேளைசக்தியுண்டாகி எழுதியபோதிலும்உலகத்தில்இதையார்கௌரவிப்பார்கள்என்று சொல்லிக்கொண்டிருந்தான் ஏகநாதசுவாமி சொற்பனத்தில் ஜானகிநாதன் எழுந்தருளி, ஏகநாதர் நித்திரைசெய்தால் சாரியமாகாது உன்வாக்கினுல் ஸ்ரீமத்ராமாயண சாரமாகிய ஆனந்தரசமனுபவிக்க வந்தேனென்றுசொல்லி அவ்விடத்தில் பனையோலைகளையும் எழுத்தாணியையும் வைத்து மறைந்துபோயினர் ஏகநாதசுவாமி திடுக்கிட்டெழுந்துஸ்ரீராமச்சந்திரன் கிருபைக்குச் சந்தோஷித்து ஸ்ரீராமாயணத்தை எழுதிக்கொண்டிருந்தார் இப்படி எழுதிக்கொண்டு வரும்போது சுந்தரகாண்டத்தில் ஆஞ்சநேயர் சீதையைத் தேடுவதற்காக மயேந்திரபர்வதத்திலிருந்து லங்கைக்குப் பாய்ந்தாரென்று எழுதுகிறபோது ஸ்ரீராமச்சந்திர பாதத்தாமரை சேவைசெய்யுமவராகிய அநுமான் அப்போது பரிபூரணமாக ஏகநாதசுவாமி உள்ளத்தில் தங்கியிருப்பதினுல் தியாகப்பரவசமாகிஆகாயத்திற்செழும்பி அடுத்தவீட்டின் தலைக்கடையில்வீழ்ந்தார் அப்போது அவ்வீட்டுபிராமணன் இந்தசத்தத்தைக்கேட்டு பயப்பட்டுக்கொண்டே தலைக்கடையில் வந்து பார்க்கையில் ஏகநாதசுவாமி மூர்ச்சையாகி விழுந்துகிடந்தார் அவர்திரேகத்தைப் பரிசோதித்து பார்க்கையில் அவர்கையினிடத்தில் ஓலைகளும் எழுத்தாணியும் இருந்தது. அந்தஓலைகளை வாங்கிப் படித்துப்பார்க்கையில் ஆஞ்சநேயர் மயேந்திர பர்வதத்திலிருந்து இலங்கைக்குக்கிளம்பினுரென்று எழுதப்பட்டிருந்தது அந்தப்பிராமணன் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு நான்இந்தமகாத்துமாவின் பிரபாவங்களையறியாமல் தூஷித்துக்கொண்டிருந்தேன் இவர்மூர்த்திகரித்தபகவானென்பாற்குச் சந்தேகமில்லையென்று திடப்பட்டு மிகுந்தஉபசாரங்களினுல் ஏகநாதசுவாமியை மூர்ச்சைதெளியச்செய்து அவர்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் உட்காரவைத்து அவர்தாட்டாமரைகளுக்கு தீர்க்கதெண்டனிட்டு தன்வீடுசேர்ந்தார்

பின்னும் ஒருநாள் இந்தப்பிராமணன் ஏகநாதசுவாமிகளால் உபதேசம் பெறவேண்டுமென் றெண்ணி அவர்சந்நிதிக்குவந்து தன்கோரிக்கையை அவருக்கரிக்கைசெய்து ஒமகாத்துமாவே! உபது உபதேசபலத்தினுல் நான்கிருதார்த்த னுகிறேனென்று விண்ணப்பஞ்செய்தான் அப்போது ஏகநாதசுவாமி.

சுலோகம்.

"ஸம்வச்சரம் ததர்த்தப்வா
மாஸத்ரய மாதாபிதா
பரீக்ஷ்ய விவிதோ பாயை:
க்ருபயாஸி ஸ்ப்ருஹோ வதேத்"

என்றுல் ஒருவருஷமாகிலும் ஆறுமாதமாகிலும் அல்லது மூன்றுமாதமாகிலும், வெகுவித உபாயங்களினுல் சிஷ்யனை நன்றாய் பரிக்ஷைசெய்தபின் ஆசாரியன் அவனுக்கு கிருபையுடன் சிஷ்யனுக்குபதேசஞ்செய்யவேண்டுமென்னும வர்க்கியங்களை நினைத்து, இவனைப் பரிக்ஷைசெய்யாமல் நாமெப்படி உபதேசிக்கக்கூடும் பெருமையும்லாபமும் பூசைகளையும் அடையவெண்ணி சிஷ்யனுக் குபதேசித்தால் ஆசாரியனுக்கு அனர்த்தம் சம்பவிக்கும்.

சுலோகம் "சிஷ்யபாபம் குரோரபி."

என்னுமாப்போல, சிஷ்யன் செய்தபாவம்ஆசாரியனை யடையுமாகையால், ஆசாரியன் தன்னையடுத்த சிஷ்யனை வெகுவிதங்களினுல் பரிக்ஷைசெய்து,

சுலோகம்.

"ஸத்புத்திஸ்ஸாது ஸேவீஸ்முசித சரிதஸ்தத்வபோதாபிலாக்ஷீ, சுஸ்ரூஷஸ்த்யக்த மானப்ரணியதன பரப்ரஸ்ன காலப்ரதீக்ஷ:, சாந்தோதாந்தோ நஸூ புஸ்ஸரண முபகதசாஸ்திர விஸ்வாசசாலீ, சிஷ்யப்ராப்த! பரீக்ஷாப் க்ருதவிதபிதம்தத்வதஸ்விசிக்ஷணிய:"

என்னுமாப்போல. நல்லபுத்தியாகி சாதுசேவையுடையனுகி நன்னடக்கை யுடையவனுகி, தத்வபோதையி லபிலாக்ஷை யுடையவனுகி தொண்டுசெய்பவனுகி மானுபிமானத்தை விட்டவனுகி, கண்டவுடன் தீர்க்கதெண்டனிடுமவனுகி என்னமொழி வருகிறதேயென்று எதிர்பார்த்திருப்பவனுகி சாந்தனுகி வேதாந்தமரிந்தவனுகி பொறுமையில்லாதவனுகி சரணுகதனுகி சாஸ்திரவிசுவாசமுடையவனுகியிருப்பவனைசிஷ்யனுகச் செய்துகொள்ளத்தகும் சிஷ்யர்கள் திரவியத்தை அபகரிக்கும் அசாரியர்களும் குணயீனர்களாகிய சிஷ்யர்களும் இவ்விருதிறத்தாரும் அனர்த்தப்படுவார்களென்பதற்குச் சந்தேகமில்லையென்று தனக்குள் எண்ணி அந்தபிராமணனைப் பார்த்து நாளைவதினன் நான் ஸ்ரீபாண்டுரங்கனைப் பூசிக்குஞ்சமையத்தில் நீர்வாருமென்று சொல்லியனுப்பி உடனே தன் வீட்டிலிருப்பவர்களை யழைத்து நாளை பகவதாராதனை காலத்தினில் எதர்க்காகிலும் நான்உங்களிலாரையாகிலும் அழைத்தால் நீங்களது கேளாததுபோல தூரத்திலேதானே யிருங்களென்று நேமித்து அன்று மறுநாள் பகவதாராதனைக்கு தொடங்கிய வுடனே அடுத்தவீட்டு பிராமணன்வந்து அவரருகில் நிம்மதியாய் உட்கார்ந்திருந்தான் அப்போது ஏகநாதசுவாமி

Koviloor Digital Library

யாரங்கே யாரங்கே யென்று உறத்த சத்தத்தோடும்
அழைத்தழைத்து கோபித்து இதுவென்ன விபரீதம்
என்விட்டிலிருப்பவர் யாவரும் சொந்த காரியத்தில்
முயர்ச்சியுடையவர்களாகி சுவாமிகாரியத்தில் சிரத்
தையில்லாதவர்களா யிருப்பதுபோலதோன்றுகிறது
தினந்தினங்கொணடு வருபவர்கள் இன்றேன் பகவா
னுக்கு அபிஷேகஞ்செய்ய அபிஷேகதீர்த்தங் கொண்
டுவந்து வைக்கவில்லை யாராகிலும் துரிதமாய்ச்சென்
று தீர்த்தங்கொண்டு வரவேண்டுமென்று அனேகந்
தடவை யழைத்தும், நேமித்தபடி ஒருவரும்பேசாதி
ருந்தார்கள்.

ஏகநாதசுவாமி ஆரும் சமயத்தில் அக்கரைக்கு
வாவில்லை நானேசென்று அபிஷேக தீர்த்தத்தைக்
கொண்டு வருகிறேனென்று சொல்லிக்கொண்டே பா
த்திரத்தை எடுத்துக்கொண்டுபோய் தீர்த்தங் கொண்
டுவந்து பகவானுக் கபிஷேகஞ்செய்து ஆருதனைமுடி
வாகியபின்பு அதிதிபூஜைசெய்து மிகுந்தசேஷத்தைப்
புசித்துபரிசுத்தகாலத்தில்உட்கார்ந்து தன்மனதிலிப்
படியென்று யோசிக்கிறார் இந்த அடுத்தவீட்டுப் பிரா
மணனை சிஷ்யனாகவடைந்து நானெப்படி உபதேசிக்
கக்கூடும் அபிஷேகத்துக்காக தீர்த்தத்தை யாராகி
லும் கொண்டுவந்து கொடுங்களென்றுநான்பலவாறு
சொல்லிக்கொண்டிருந்ததை என்னருகி லுட்கார்ந்து
கேட்டிருந்தும் இவர் நான்கொண்டுவந்து தருகிறே
னென்று சொல்லாமல் வெருமனேயிருந்தான்என்னை
யாசாரியனாக அடையவந்து பூஜைக்காக எனக்கொரு
சொம்புதீர்த்தம் கொண்டுவந்துகொடுப்பதற்கு பக்தி
பூண்டு கொள்ளாதவன் ஆத்துமா முதலாகியதுகளை
எப்படி பரமாத்துமாவுக்கு அர்ப்பணம்செய்வான் ஆ
கையால் இவன் உபதேசஞ்செய்வதற்கு தகுந்த மன
முடையவனல்லவென்று திடங்கொண்டு இப்போது
உபதேசிப்பதற்கு வேளை நன்றாயிருக்கவில்லை இன்
னொருசமயம் பார்த்துக் கொள்ளுவோமென்றுசொ
ல்லி அவனை வீட்டிற்கனுப்பினர் பின்பு ஏகநாதசுவா
மி ஸ்ரீபாண்டுரங்கன்நேமனப்படி ஸ்ரீமத்ராமாயணத்
தை எழுதிமுடித்து ஸ்ரீதத்தாத்ரேய சுவாமிகிருபை
யினால் ஸ்ரீபாகவதபுராணத்தை மகாராஷ்டிரபாஷை
யிற்செய்து அனந்தவிரதமும் பகவந்நாம சங்கீர்த்த
னங்களினால்பரமானந்தத்தையடைந்து காலக்ஷேபஞ்
செய்துக்கொண்டிருந்தார்.

ஏகநாதசுவாமி வீட்டில் பண்டரிநாதன் வேலைக்காரனாகியிருந்த அத்தியாயம்.

இந்தப்படியாக ஏகநாதசுவாமி ஜெகதீசனைசகல
உபசாரங்களுடன் பூஜித்துக்கொண்டு அதிதிகளை பக
வான் சொரூபமாகவெண்ணி பக்திபண்ணி ஆருதனை
செய்துகொண்டிருக்கிற காலத்தில் ஸ்ரீருக்குமணி நா
தன் ஏகநாதசுவாமிபக்திபென்னும் வலையிலகப்பட்டு
ஒருபிராமணவேடம் புனைந்துவந்து பைட்டினிபுரத்தில்
பிரவேசித்து ஏகநாதசுவாமி வீடெதுவென்று அந்தப்
பட்டிணவாசிகளை கேட்டுக் கொண்டேவந்து அந்த
வீட்டினுள்புகுந்து ஏகநாதசுவாமிக்கு தீர்க்கமாகத்
தெண்டனிட்டு, ஓமகாத்துமாவே! நான் பிராமணன
ஒண்டிக்காரன் எனக்கு யாருந்திக்கில்லை நீர்பக்தியுட
ன்செய்யும் அதிதிபூஜை விபவத்தைகேட்டு நீரேகெதி
யென்றுவந்தேன், நேமனஞ்செய்வீராகில் உமதுவீட்
டில் வேலைக்காரனாகி யிருக்கிறேன் நான்சம்பளம் அ
பேக்ஷிதவனல்ல, அன்ன வஸ்திரங்கள் கொடுத்து
என்னையுன்மனிதனாக அபிமானித்தால்போதும் என்
றதைக்கேட்டு, ஏகநாதசுவாமி அந்தமறையவரைப்
பார்த்து உன்பேரென்ன உன்னூரெது என்றுகேழ்
க்க தேவகீசுதன் ஓசாதுஜெனசிகாமணியே, ஏகாங்கி
யாகிய எனக்கு என்னூதுயென்று அபிமானிக்கத்தகு
ந்தஸ்தலமில்லை நான் எங்கும் சஞ்சரித்துக் கொண்டி
ருப்பேன் எனக்குபந்துக்களில்லை சாதுஜெனங்களே
பந்துகளென்று நம்பியிருக்கிறேன்என்பேர்ஸ்ரீகண்டி
யாகிருஷ்ணன் நான்பாவற்றிலும் சஞ்சரித்துப்பார்த்
தேன் இந்தவிடம் எனக்குபிடித்திருக்கிறது, என்ற
தைக்கேட்டு, ஏகநாதசுவாமி! நல்லதுனக் கெத்தனை
காலம் இவிடம்வசிப்பதற்கு இஷ்டமிருக்கிறதோ அ
துவரைக்கும் சுகமாக இவிடமிரும்சகலபிரபஞ்சமும்
ஸ்ரீயஃபதியின் ஆதினமாகையால் இந்தவீடும் வீட்டி
லுள்ள பதார்த்தங்களும் ஈஸ்வரன்பிள்ளையாகி எனக்
கும் உனக்கும் அனுபவத்திற்கு யோக்கியமாயிருக்
கிறது.

ஆகையால் என்னேமனத்தைப் பெற்று என்
வீட்டில் வசிக்கவேண்டுமென்னும் எண்ணத்தைவிட்டு
என்னிஷ்டப்படி உன்வீட்டில் வசித்திரும் அதிதிபூ
ஜை வேளையில் எனக்குசகாயனாகியிரும் என்றுசொல்
லிய ஏகநாதசுவாமிக்கு உள்ள கம்பீர வெண்ணங்களு
க்கு பகவான் மிகவும் சந்தோஷித்து இகாளுககு
வேலைகொடாமல் அவர்வீட்டுக்காரியங்கள்யாவற்றை
யும் தானொருவரே செய்துக்கொண்டு வந்தார் அப்
போது இந்திராதிதேவர்களும் ஸனகாதியோகிகளும்
இந்த அற்புதத்தைப் பார்த்து ஆஹா இந்தஆச்சரிய
த்தை எனென்று கொண்டாடலாம் பிரம்மாதிகளுக்
கும் அரியக்கூடாத அபாரமகிமைக ளுடையவனாகி
சகல ஜீவாத்துமாக்களுடைய இருதயகமலத்தில் வசி
க்கும் பகவான் ஏகநாதசுவாமிகள் வீட்டில் வேலைக்
காரனாகி யிருக்கிறான் எவனது ஆனந்தம் வேதபுருஷ

Koviloor Digital Library

னுக்கு அகோசரமாகி யிருக்கிறதோ அப்படிப்பட்ட ஜெகதீசன் ஏகநாதன் செய்யப்பட்ட அதிதிபூசைக்கு ஆனந்தித்து அவருக்குச்சகாயனாகி யிருக்கிறான் ஸ்ரீமகாலட்சுமியினுடைய கோமளமாகிய கரஸ்பர்சத்தைத் தாளமாட்டாத திவ்யமங்கள விக்கிரக விசிஷ்டன் இப்போது ஏகநாதன்வீட்டில் சந்தனமிழைக்கும் முதலான காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறான் அஷ்டாங்கயோகங்களினால்சாதிக்கக் கூடாத சர்வேஸ்வரன் ஏகநாதன்வீட்டில் சாதனத்துடன் வாசனைதிரவியங்களைச் சேர்த்துக்கொடுத்துகொண்டிருக்கிறான் சகலதேவதைகளையும் தொண்டர்களாக ஆட்கொள்ளும் தேவாதிதேவன் ஏகநாதன்வீட்டுப் பாத்திரங்களை சுத்திசெய்துக் கொண்டிருக்கிறான் முக்திக்கு முதல்வனாகிய முகுந்தன் ஏகநாதன்வீட்டில் அதிதிகளுக்கு அன்னம்பரிமாறிக் கொண்டிருக்கிறான் பரமபவித்திரனாகிய உலகநாதன் ஏகநாதன்வீட்டில்அதிதிகள்புசித்த எச்சிலைகளையெடுத்து, ஸ்தலசுத்திசெய்துக்கொண்டிருக்கிறான் பாற்கடலை கடைந்து தேவர்களுக்கு அமுதம் பகிர்ந்துகொடுத்த இந்திரைமணாளன் ஏகநாதன்வீட்டில் சமையல் செய்துக்கொண் டிருக்கிறான் நினைத்தமாத்திரத்தில் பிரம்மாண்டங்களை சிருஷ்டிசெய்த ஸ்ரீகிருஷ்ணபகவான் வீட்டில் வஸ்திரங்களை வெளுத்துக்கொண்டிருக்கிறான் சூரியசந்திரர்களை நேத்திரமிரண்டாகப் பெற்றவன் ஏகநாதன் வீட்டில் விளக்குகளில் தீபமேத்திக்கொண்டிருக்கிறான் என்ன ஆச்சரியம் எப்படிப்பட்டபாக்கியம் இந்தஏகநாதன் பிரபாவமானது பரமயோகிகள் வாக்குக்கும் மனதுக்கும் அகோசரமாகி யிருக்கிறதென்று அனேகவிதங்களாகத் துதிசெய்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீகண்டயாகிருஷ்ணன் மிகுந்த ஜாக்கிரதையுடையவனாகி, "அஹமஸ்ர்வம் கரிஷ்யா" எனுமாப்போல ஏகநாதசுவாமிவீட்டு சமஸ்தவேலைகளையும்தானொருவனே செய்துக்கொண்டுவந்தார் இப்படியிருக்க ஏகநாதசுவாமிகள் தந்தைசிரார்த்தத்திற்கு பிராமணர்களை வரவழைத்து ஸ்ரீகண்டியா கிருஷ்ணனைப் பார்த்து இன்று சிரார்த்தநாளாகி யிருக்கிறது "சிரத்சயாதீயதே சிரார்த்தய" என்றுசாஸ்திரம் முறையிடுவதால் நாம்சிரார்த்தத்தை சிரத்தையுடன் நடப்பிக்கவேண்டும் சிரார்த்தத்திற்கு வேண்டிய பதார்த்தங்கள் யாவற்றையும்கொண்டுவந்துவெகு வகையாகிய பலகாரங்களுடன தளிகை செய்யுமென்று சொல்லிஸ்நானஞ்செய்துவந்து மெத்தைமேல் வஸ்திரம் உலரப்போட்டுக் கொண்டிருக்கையில் அவர்தோட்டவேலைக்காரனாகிய பஞ்சமனைப்பார்த்து அவன் மனைவி இன்றுநமது எஜமான்வீட்டில் சிரார்த்தமாகையால் அனேகமாயிரம் பிராமணர்கள் புசிக்க வருவார்கள் மடப்பள்ளியிலிருந்து காத்துவாடையினால் செய்யப்பட்ட பலகாரங்களின் திவ்யமாகிய மணம் வெளிப்பட்டு நம்மனதைக் கொள்ளைகொள்ளுகிறது பிராமணபோஜனமானபின்பு எச்சிலையிலிருக்கும் பலகாரங்கள் நமக்குமெத்தக் கிடைக்குமென்று சந்தோஷித்துக்கொண்டே சொல்லக்கேட்டு பறையன்தன்மனைவியைப்பார்த்து அடிபயித்தியக்காரி ஏனவீணாக மனங்களிப்படைகிறாய் இன்று சிரார்த்த நாளாகையால் எச்சிலைகளை அவர்கள் நமதுகண்களுக்குத் தெரியப்படாமல் பூமியில் புதைத்துவிடுவார்கள் நீஏன்எட்டாதமரத்தின் கனிகளுக்காக ஆசைப் படுகிறாயென்று சொன்னான்.

வஸ்திரங்களை உலரப்போட்டுக் கொண்டிருந்த ஏகநாதசுவாமிகள் இந்தவார்த்தைகளைக் கேட்டு சாயைப்போல விளங்கும் தன்மனைவியை யழைத்துஓ வனிதையே! நமது தோட்டவேலை செய்யும் பறையர்கள் பாகசாலையினிடத்தில பாகஞ்செய்யும் படியான பலகாரங்களின் வாசனைகளையுணர்ந்து ஆசைபட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆகையால் ஈஸ்வரவிபூதியை திருத்திசெய்வது நமக்குமேலாகியதர்மமல்லவா சகலசொரூபாகிய பகவானைப் பிதுரூபமாக ஆராதிக்கவேண்டுமென்று நாம் எண்ணங் கொண்டிருக்க பகவான் சண்டாளவுருவந் தரித்துவந்து நமதுபூசையை அங்கீகரிக்க வெண்ணியதும், அவன்நினைவைப் பூர்த்திசெய்வதைவிட்டு நமக்கு வேறுயெண்ணமேன், பகவானைக் களிக்கச்செய்வதுநமக்குமுக்கியதர்மமாயிருக்கிறது அவர் எந்தவுருவங்கொண்டபோதிலும் நமக்கது விசாரிக்கவேண்டியதில்லையென்று சொல்லியநாயகன் வசனங்களைக்கேட்டு அந்தப்பரம பதிவிரதை, எனபிராணநாதா உமதுவார்த்தைகள் மிகவும் விசேஷங்களாக யிருக்கிறது, உமதுஇஷ்டமே எனக்கும் இஷ்டமாகியிருக்கிறது மடப்பளியினிடத்தில் பாகஞ்செய்யப்பட்ட பதார்த்தங்களும் விசேஷமாகயிருக்கிறது, ஆகையால் நமதுதோட்ட பறையர்களை அவர்கள் பந்துமித்திரர்களுடன் திருப்திசெய்வது அவசியமாகையால் இப்போதுபாகஞ்செய்திருக்கும் வஸ்துக்களை அவர்களுக்கிட்டுப் பின்புவீட்டைசுத்திசெய்து சிரார்த்தத்திற்கு வேண்டியகாரியங்களை நீ செய்வோமென்று மனைவிசொல்லிய அந்தவார்த்தைகளைக் கேட்டு மிகவும் களிப்படைந்து ஏகநாதசுவாமிகள் பாச்சேரியிலுள்ளபுலையர்கள்யாவரையு மவரவழைத்து தெருவில் பந்தியாக உட்காரவைத்து, சிரார்த்தத்திற்காகச்செய்த சகல பதார்த்தங்களையும் இலைகளினிடத்தில் பரிமாறி பகவான சொரூபர்களாகிய சேதனர்க

ளே ஸ்ரீகோவிந்தநாம சங்கீர்த்தனத்துடன புசியுங்களென்று சொன்னார்.

அப்போதவர்கள் கோவிந்த நாமத்துடன் புசித்து திருப்தி யடைந்தவர்களாகி ஏகநாதசுவாமிகளை அனேகவிதங்களாகக் கொண்டாடிக் கொண்டே தங்கள் வீடுசேர்ந்தார்கள் பின்பு அந்தவூர்பிராமணர்கள் கூட்டங்கூடி இதுவென்ன விபரீதம் இந்த ஏகநாதன் தன்தந்தைக்கு சிரார்த்தமென்று பிராமணர்களை வரவழைத்துச் சிரார்த்தத்திற்காக பாகஞ்செய்த வஸ்துக்களைப் புலையர்களுக் கிட்டான் ஆகையால் இன்றுமுதற்கொண்டு இவன்வீட்டில் பிராமணர்கள் ஒருவரும புசிக்கக்கூடாதென்று தங்களுக்குள் நிச்சயமசெய்துக்கொண்டு ஏகநாதசுவாமிகள்வீட்டிற்குவந்து அர்தசுபிலனைப்பார்த்து அடே ஏகநாதா! நீபிதுர்நாளில் பிராமணபூசையை நீக்கி புலையர் பூசையைச்செய்தாய் வைதிகமார்க்கத்தை அதிக்கிரமித்து பிரஷ்டனாகினாய் என்று கடினவார்த்தைகளைச் சொல்லக்கேட்டு ஏகநாதசுவாமிகள் கரங்களைக்குவித்து, ஓ மறையோர்களே என்விண்ணப்பத்தைக் கேளுங்கள் சப்தசமுத்திரத்தை அகஸ்தியர் குரோதத்தால ஔபானம் செய்ததைப்போலஸ்ரீபகவத்விபூதியாகிய பிள்ளைகளிடத்தில் சாதுஜெனங்கள் குரோதத்தை கொண்டாடந்தகாது என்னிடத்தில் தப்புகளில்லை சிரார்த்தத்திற் காகச் செய்த பதார்த்தங்களின் வாசனையைப் பிடித்து இந்தப்புலையர்கள் அதுகள்பேரில் ஆசைப் பட்டார்கள் அவர்கள் அபேக்ஷித்த வஸ்துக்களை அவர்களுக்கே வினியோகித்து மறுபடியும் ஸ்தலசுத்திசெய்து சிரார்த்தத்திற்காக பாகம்செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது நீங்கள் என்னிடத்தில்கிருபைகூர்ந்து சிரார்த்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தார் அப்போது பிராமணர்கள் மிகுந்த சிந்தாக்கிராந்தர்களாகி பிண்டபிரசாதத்தை நாய்க்குக் கொடுத்தது போல சிரார்த்தத்திற் காகச்செய்த பலகாரப் பிரசாதங்களை பஞ்சமர்களுக்குக்கொடுத்த உன்னை குலப்பிரஷ்டனாகச் செய்தோமென்று சொல்லிக் கொண்டே தங்கள் வீட்டிற்குப் போயினார்கள்.

பின்பு ஏகநாதசுவாமிகள் சிரார்த்தத்தை எப்படி நிறைவேற்றுவேனென்று சிந்தித்துக் கொண்டிருக்க ஸ்ரீகண்டியாகிருஷ்ணன் அவரைப் பார்த்து, ஓ மகானுபாவரே! நீரேன்சோதிக்கிறீர் சாந்தசித்தமில்லாத இந்தப்பிராமணர்களை நீரேன் வேண்டிக்கொள்ளுகிறீர், அவர்கள் வாராமற் போவார்களேயாகில் சிரார்த்தம்நிறைவேறாதென்று வியாகூலப்படுகிறீரோ உமக்குஆறுதனைப்பெருமாளாகிய ஸ்ரீசோபாமூர்த்தி உமதுபிதுர்க்களை வரவழைத்து சிரார்த்தத்தைப் பூர்த்திசெய்வார் நீர் துக்கத்தைவிட்டு கால்கைகளலம்பிக்கொண்டு ஆசமனம்செய்து மேல்நடக்கவேண்டிய காரியங்களுக்கு எத்தனம்செய்யும் என்ற ஸ்ரீகண்டியாகிருஷ்ணனின் வார்த்தைகளைக் கேட்டு ஏகநாதசுவாமிகள் சிரார்த்தஞ்செய்ய எத்தனப்பட்டார்.

அப்போது பகவான் நேயனத்தினால் ஏகநாதசுவாமிகள் பிதுர்க்கள் சுயரூபங்களுடன்வந்துநின்றார்கள் உடனே ஏகநாதசுவாமிகள் வந்த பிதுர்க்களுக்குப் பிரதக்ஷிண வந்தனஞ்செய்து, வஸ்திரபுஷ்ப, சந்தன தூபதீபாதிகளினால் பூசித்தார் பின்புபிதுர்க்கள் உட்கார்ந்து புசித்து தாம்பூலாதிகளைப் பெற்றார்கள் அந்தச்சமயத்தில் ஏகநாதசுவாமிகள் அவர்களுக்குசிராஷ்டாங்க தெண்டனிட்டு துதிசெய்துகொண்டிருந்தார் அப்போதந்த வூர்பிராமணர்கள் இந்த அற்புதத்தைக்கேட்டு ஏகநாதசுவாமிகள் வீட்டிற்கு வந்து பிரத்தியக்ஷமாகி எழுந்தருளியிருக்கும பிதுர்க்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள் உடனே பிதுர்க்கள் மறைந்துபோயினார்கள் அப்போதந்த பிராமணர்கள் தங்களுக்குள்ளிப்படி சொல்லிக்கொண்டார்கள் அந்த ஏகநாதசுவாமிகள் மகானுபாவாஇவருக்கு ஸ்ரீகிருஷ்ணன் சகாயனாகியிருக்கிறான் ஆகையால் இவர்பிதுர்க்கள் பிரசன்னராகி புசித்துப்போயினார்கள் இப்படிப்பட்ட உத்தமனை குலத்தில் நீக்கிவைப்பது நமக்கு அவமானமாக யிருக்கிறது, நாம் இவருக்குப்பிராயச்சித்தம் நடத்தி எப்போதும்போல குலத்தில் சேர்த்துகொள்வதுநன்றென்று நிச்சயித்து, மறுநாள்காலையில் பிராமணர்கள் யாவரும் ஏகநாதசுவாமிகள் வீட்டிற்குவந்து வாசலில்நின்று அவரை யழைத்தார்கள். ஏகநாதசுவாமி வெளியில்வந்து பிராமணக் கூட்டத்திற்கு வந்தனஞ்செய்து என்னையேன் குலப்பிரஷ்டனாகச் செய்தீர்களென்று கேட்டார். பிராமணர்களவரைப்பார்த்து இந்ததோஷம் அவிவேகத்தினால் உண்டாகியது ஆகையால் இதற்குநீ பிராயச்சித்தத்தினால் பரிசுத்தனாகவேண்டுமென்றுசொல்ல ஏகநாதசுவாமிகள் அவர்களைப்பார்த்து எனக்குத்தாயுந் தந்தையும் சகலரும் ஸ்ரீகிருஷ்ணபகவானாகி யிருக்க நானெந்த பிராயச்சித்தத்தை யனுஷ்டிப்பேன் உங்களுக்கு இஷ்டமாகுமானால் நீங்கள் சொல்லியபடி செய்கிறேனென்று சொன்னார்.

இவ்வார்தைதயைக் கேட்ட பிராமணர்கள் ஏகநாதசுவாமிகளை கெங்காநதிக்கு அழைத்துக்கொண்டுபோய் சங்கல்பம்செய்வித்து மந்திரபூர்வகமாக ஸ்நானஞ்செய்வித்து, பிராயச்சித்தம் நடத்திக்கொண்டிருக்கையில் திரியம்பக க்ஷேத்திரத்திலிருந்து ஒருபிராமணன்வந்து ஓமறையோர்களே! ஏகநாத சுவாமிகள்

Koviloor Digital Library

யாரென்று கேட்டார் அவர்களந்த பிராமணனைப் பார்த்து ஏகநாதரால் உமக்கென்ன வேலையென்று கேட்டார்கள் அந்தப் பிராமணன் அவர்களைப்பார்த்து ஓபிராமணர்களே இதோபாருங்கள் நான் குஷ்டரோகத்துடன் வெகுகஷ்டங்களை அனுபவித்து, ரோகநிவாரணத்திற்காக பார்வதிநாதனை உபாசித்தேன் அந்ததேவன் என்னிடத்தில் கிருபைகூர்ந்து ஓபிராமணோத்தமா! பைட்னிபுரத்தில் ஏகநாதனென்று விஷ்ணுபக்த சிகாமணியிருக்கிறார் அந்தவைஷ்ணவ உத்தமன்பிதுர்சிரார்த்ததினத்தில் அனேகசண்டாளர்களை ததியாராதனத்தினால் திருப்தியடையச் செய்தார். அவர்கள் சண்டாளர்களென்று மனதிலெண்ணாமல் அவர்களை பகவத்சொரூபங்களாகப் பாவித்து ஆராதித்தார்.

ஆகையால் அந்த ஆராதனை பகவானுக்கு மிகுந்த திருப்திகரமாகியது பண்டரிபக்தவிலோசன மென்னும் ஸ்தானத்திலிருந்து ரிஷிபத்தினி பிரசாதத்தை அங்கீகரித்த கோபாலகிருஷ்ணன் இந்தபஞ்சமர்களிடத்தில் ஆவேசித்து, ஏகநாதன் பூசையைக் கைக்கொண்டார் ஆகையால் இந்ததியாராதனம் சொல்வதற்கரிதாகியும் எங்களுக்குக் கீர்த்தனங்க ளாகியுமிருக்கிறது அந்தத்ததியாராதனையில் ஒரு பெண்குழந்தை புசித்தபலத்தில் ஒருபங்கு ஏகநாதனால் அடைவையேயாகில்உன்னிடவியாதி நிவர்த்தியாவதுந்தவிர நீ மறுஜென்மமின்றி பகவத் ஸாயுச்சிய பதத்தையடைவாயென்று கைலாசநாதன் நேமித்த படியால் நான் ஏகநாதசுவாமியைத் தேடிக்கொண்டு வந்தேனென்றுசொல்லி அந்தப் பிராமணர்களால் ஏகநாதசுவாமியைக்கண்டு, வந்தபிராமணன் பாகவத உத்தமருக்கு சாஷ்டாங்க தெண்டனிட்டு தன்வரலாற்றைத் தெரிவிக்க ஏகநாதசுவாமி களிப்படைந்து அந்தபிராமணனைப் பார்த்து, நான் நிஷ்காமியமுடையவன் ததியாராதனையே மிகுந்த சுகிர்தபலமென்று பாகவதர்களை யாராதித்துக் கொண்டிருக்கிறேன் இந்த ஆராதனைக்கு மற்றொருபலத்தை யபேக்ஷிக்கவில்லை தேவரீர் சிவாக்ஞையை பெற்று வந்திராகையால் நீர்கோரியவற்றைக் கொடுக்கிறேன், உமக்கு பகவான் க்ஷேமமுண்டாகச் செய்வார் என்றுசொல்லிற்றான்செய்த ததியாராதனையில் ஒருபெண்குழந்தை புசித்த பலத்தில் ஒருபங்கு அவருக்கு எள்ளும் தண்ணீரும் விட்டு தத்தஞ்செய்தார் உடனே அவர் வியாதிநீங்கி திவ்விய சரீரத்துடன் கூடிவிளங்கினார்.

இந்த அதிசயத்தைப் பார்த்து பிராமணர்கள் லஜ்ஜை படைந்தவர்களாகி ஏகநாதசுவாமிக்குத் தீர்க்கமாக தெண்டனிட்டு ஓமகாத்துமாவே! உம்மையிப்போதுதான் சாக்ஷாத்பகவான் அவதா ரமென்றறிந்தோம், எங்கள் அக்ஞானத்தினால் துரபிமானங்கொண்டு உமதிடத்தில் அபசாரப்பட்டோம் லோகபாவனராகிய உமக்கு எங்கள் அவிவேகத்தினால் பிராயச்சித்தம் செய்வித்தோம் எங்கள் தப்புகளை மன்னித்து எங்களிடத்தில் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்போது ஏகநாதசுவாமிகள் அந்தப் பிராமணர்கள் யாவரையும் தன்வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் அவர்களுக்குஅறுசுவைகளோடு அன்னம்படைத்து சந்தனபுஷ்ப தாம்பூலங்களைக் கொடுத்து ஆதரித்து அவர்களை அவரவர்கள் வீட்டிற்கு அனுப்பினார்.

இப்படியிருக்க துவாரகையில் ஒருபிராமணன் ஸ்ரீருக்குமணிநாதனை தெரிசிக்க அபேக்ஷித்துவைராக்கிய சீலனாகி தபசுசெய்துக் கொண்டிருந்தான் அப்போது ஒருநாளிரவில் ஸ்ரீராதா ருக்குமணிக ளிருவரும் அவர்சொர்ப்பனத்திலெழுந்தருளி ஓபிராமணா நீ ஸ்ரீகிருஷ்ணபரமாத்துமாவின் தெரிசன நிமித்தியமாக இவ்விடத்திற்குவந்து தபசுசெய்துக்கொண்டிருக்கிறீர் அவர் இப்போது இவ்விடத்திலில்லை அந்தபக்தவச்சலன் பைட்னிபுர வாசியாகிய ஏகநாதரென்னும் பரமபக்தனுடைய பக்தியென்னும் வலையிற்சிக்கி ஸ்ரீகண்டியா கிருஷ்ணனென்னும் நாமத்துடன் பிராமணத்திருமேனிபுனைந்து பனிரெண்டுவருஷமாக அவர் வீட்டில் பரிசாரக கிருத்தியங்களைச் செய்துக்கொண்டிருக்கிறார் நீ அவ்விடத்திற்குப்போய் அந்தத் தேவதேவனை தெரிசித்து ஏகநாதனுக்காக பனிரெண்டுவருஷமாக எங்களைவிட்டு நீங்கியிருப்பது ஞாயமல்லவென்று தெரிவித்து எங்கள் இருதயேசனை இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வாருமென்று சொல்லி மறைந்துபோயினார்கள்.

பிராமணன் விழித்துக்கொண்டு சொர்ப்பனத்தை யோசித்து ஏகநாதசுவாமி பக்திக்கும் பக்தவச்சலனுக்கு அவரிடத்திலுண்டாகிய அன்பிற்கும் ஆச்சரியப்பட்டு உடனே புறப்பட்டு பைட்னி புரத்தைச் சேர்ந்து ஏகநாதசுவாமிவீட்டில் புகுந்தார். ஏகநாதசுவாமி இந்த பிராமணரைக்கண்டு வந்தனஞ் செய்து அர்க்கியபாத்தியங்களைக் கொடுத்து ஆசனத்தில் உட்காரவைத்து ஓதவசிரேஷ்டரே நீரெங்கிருந்து வருகிறீர் எந்தெந்த தீர்த்தயாத்திரை செய்தீர் இனி எங்கு போக வெண்ணியிருக்கிறீர் இன்றுயிவ்விடம்வசித்துஎன் பூசையை யங்கீகரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார், மேலும்பகவான் அதிதிரூபமாகிஇல்லறத்தோர்

பூசைகளை யேற்றுக்கொண்டு அவர்களை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறார் ஆகையால் சாக்ஷாத்பகவான்சொரூபராகிய உம்மைநான் ஆராதனைசெய்து பரிசுத்தனாகிறேனென்ற ஏகநாதசுவாமிகளைப் பார்த்து அந்தப் பிராமணன் ஓசாதுஜனசிகாமணியே உம்துவீட்டில் வேலைக்காரனாகியிருக்கும் ஸ்ரீகண்டியாகிருஷ்ணனைப் பார்க்கவேண்டு மென்று எண்ணங்கொண்டு துவாரகையிலிருந்துவந்தேன் அவனெங்கேயிருக்கிறானென்று கேட்க ஏகநாதசுவாமி ஓவிப்பிர உத்தமனே! அந்த ஸ்ரீகண்டியாகிருஷ்ணன் தீர்த்தங்கொண்டு வருவதற்காக கெங்கைக்குப் போயிருக்கிறான் அவனிப்போ வருவான் என்றுசொன்னான் இதற்குள் ஸ்ரீகண்டியாகிருஷ்ணன் தீர்த்தக்காவடியைத் தன்தோளில் வைத்துக்கொண்டு வரவே ஏகநாதசுவாமி இவனே ஸ்ரீகண்டியா கிருஷ்ணனென்று துவாரகையிலிருந்து வந்த பிராமணருக்குக் காட்டினார் அந்தப்பிராமணன் உடனேயெழுந்து ஆனந்தக்கண்ணீருநிரப் பூரிதநேத்திரனாகி ஸ்ரீகண்டியாகிருஷ்ணனுக்கு தீர்க்கதெண்டனிட்டு தன்து உத்தமமாகிய அங்கத்தினால் அவர் தாமரைப்பாதங்களை அலங்கரித்து எழுந்துநின்று இருகரங்களையும் சிரமேற்குவித்து லோசனாப்யாம் பிபன்னி என்பதுபோல தன்னேத்திரங்களினால் அவர் திவ்வியமாகிய உருவத்தை தெரிசித்து, ஓசுவாமி! அகில உலகங்களும் சரணமடையும் திவ்விய பாதாரவிந்தமுடைய மூர்த்தி ருக்குமணிமனோகரா சத்தியபாமை இருதயேஸ்வரா ராதையின்நாதா உமது தெரிசனத்தை அபேக்ஷித்துத் துவாரகையில் தபசு செய்துக் கொண்டிருக்கையில் தேவரீர் ஏகநாதன் பக்தியாகிய வலையிற்சிக்கி ஸ்ரீராதாருக்குமணிகளை விட்டுப் பிரிந்து இவ்விடத்தில் பரிசாரகனாகி யிருக்கிறீரென்று கேட்டு இவிடத்திற்குவந்தேன் இதுவென்னவேடம் சங்குசக்கரங்களை எவ்விடத்தில் ஒளித்துவைத்தாய் ஸ்ரீவச்ச சௌந்தவங்களை ஏன்மறைத்து வைத்தீர் ஏகநாதன் வீட்டுவேலைக்கு இந்திராதிதேவர்களைநேமிக்கக்கூடாதா வனிதை உச்சிஷ்டத்தை அபேக்ஷித்த காமாந்தனைப்போல, இந்தபரிசாரகக் கிர்த்தியத்தை நீயே செய்யவேண்டுமென்று இச்சித்தாப்போ லிருக்கிறது அன்னியிலும் நினைத்தமாத்திரத்தில் அனந்தவண்டங்களை சிருஷ்டிக்கும் தேவரீர் நினைத்தால் கெங்கைசமீபத்தில் வரமாட்டாளா இதற்காக காவடியொன்று சமந்துகொண்டுபோய் ஜலங்கொண்டுவர வேண்டுமா சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொழிலும்உமது சங்கல்ப சுவாதீனமாகி யிருக்க, ஏகநாதன் வீட்டுப் பரிசாரகத் தொழில்களை திரேகப் பிரயாசைப்பட்டு செய்வது விந்தையாக யிருக்கிறது உம்மைத்துதித்து அடுத்த பரமயோகிகளுக்கு அனந்தசரீர மெடுப்பது லீலையாகியிருக்க தேவரீர் ஏகநாதனுக்காக ஸ்ரீராதாருக்குமணிகளை விட்டுப்பிரிந்து வந்தீர்.

அங்கிருந்தபடியே வேறொருசரீரத்தை எடுத்து இங்குவசிக்க உமக்கு அசாத்தியமா உமது திருவடிகளை யடுத்துச்சரணம் புகுந்தவர்களிடத்தில் கொண்டவாச்சரியம் இப்படியெல்லாம்வெளிப்படுத்துகிறாய் அப்போதுயீன்றகன்றினிடத்தில் அதிகப்பிரியங்கொண்டு இதற்குமுன ஈன்றகன்றுகளையும் ஆகாரங்கொடுத்து போஷிப்பவர்களையும் கொம்பினாலமுட்டும் பசுவைப்போல நூதனபக்தர்களிடத்தில் மிகுந்தவாச்சியாதிசயத்தினால் இணைபிரியாதிருந்த ஸ்ரீமகாலட்சுமியை உபேக்ஷை செய்து உமது கல்யாண குணத்தை ஏகநாதன்வழக்கினால் வீட்டுவேலைக்காரனாகி நின்றாய் உமது அனுமதியில்லாமல் ராவணன்மேல் பாய்ந்து அவனை யவமானப்படுத்திவந்தசுக்கிரீவமகாராஜனைப் பார்த்து,

சுலோகம்

"த்வயிகிம் சித்ஸமா பன்னே
கிம்கார்யம் ஸிதயாமயா"

என்றால் ஓவானராதிபதியாகிய சுக்கிரீவமகாராஜனே! உனக்குகிஞ்சித்து ஆபத்துண்டாகில் சீதையினால் எனக்கென்ன காரியமென்று சொன்னீரல்லவா அந்த சொல்லனுபவத்திற்கு வெளியாகும்படி உன் அந்தரங்கபக்தனாகிய ஏகநாதனுக்காக ஸ்ரீராதாருக்குமணிகளை விட்டுப்பிரிந்து இவிடத்திற்கு வந்தாயென்று பிராமணன் விண்ணப்பஞ்செய்வதை கேட்டுபதில் சொல்லாதவராகி சுருங்கிய முகத்தாமரை யுடையவனாகி தலையசைத்து ஸ்ரீருக்குமணிநாதன் தன்தோளிலிருந்த தீர்த்தக்காவடியைக் கீழேவைத்து திருவாராதனை வீட்டிற்குட்புகுந்து மறைந்துபோயினார் இந்தப்பிராமணன் அவரைப் பின்தொடர்ந்து சென்று கிருஷ்ண பரமாத்மாவை தேவதாகிரகத்தில் காணாமல் தலையை மோதிக்கொண்டு பூமிமேல்விழுந்து புரண்டு பெருத்தகுரலோடு அழுதுக்கொண்டு ராதாபதியே! என்னைப் பார்த்தமாத்திரத்தில் ஏன்மறைந்துப் போயினாய் நானென்ன தப்புகள்செய்தேன் பகவத்தியான மில்லாதவனாகிய என்னை அனேகஜென்மங்களில் பின்தொடர்ந்து என்னிடத்தில்கிஞ்சித்தும் நன்னடக்கையைகாணாமல் வேசாரிவிட்டாய் இப்போது ஆதாரமற்று தேவரீரைவிடகெதி வேறொருவரையும் நாடாத விவேகத்துடன்கூடி உம்மைத்தேடிவந்த வென்னை நான் ஆதரணைசெய்து மறைந்துபோயினீர் ஏகநாதன்மாத்திரம் உனக்கென்ன லஞ்சங்கொடுத்தான்

Koviloor Digital Library

பனிரெண்டு வருஷமாக அவர்வீட்டில் வேலைக்காரனாகி யிருந்த தேவரீர் ஒருமுகூர்த்தமாகிலும் எனக்கு தரிசனங் கொடுக்கக்கூடாதா உமதுதர்மம் மிகவும் அதர்மமாகி யிருக்கிறதென்று பிரலாபித்துக் கொண்டிருக்கையில்ஏகநாதசுவாமியதுவுந்தோன்றாமல் இதுவென்னவிந்தை ஓவிப்பிரகுல சிகாமணியே! சோகத்தைவிட்டுவிடும் இந்தஜெகதீசன் பனிரெண்டு வருஷமாக என்வீட்டில் வசித்தும் நானவரை யறியாமல போனேன், தவசிரேஷ்டராகிய நீர் இந்த உலகநாதனையறிந்து வந்துதெரிசித்து பரிசுத்தனாகி உன்புண்ணியபலனை என்னென்று கொண்டாடுவே னென்று சொல்லி அவருக்குண்டாகிய துக்கத்தைபோக்கி அந்தப்பிராமணனுக்கு வந்தனஞ்செய்து ஓபிராமண உத்தமரே! நானறியாமல் இந்தமாதவன் கையினால்வேலைகள் செய்வித்தேன் என் துர்ப்பாக்கியத்திற்கு என்னென்று பயப்படுவேன் என்று சொல்லிக் கொண்ட அவசனாகி பூமிமேல்விழுந்துபக்தவச்சலா ஸ்ரீமகாலட்சுமி நாதனாகிய தேவரீர் என்வீட்டில்சேவகனாகியிருந்தீர், நான் உம்மையறியாமல் மோசம் போனேனென்று மனங்கரைந்து, தயாசித்து ஓதீனபந்து! புண்டரீகவரதா! ஸ்ரீமகாலட்சுமிநாதா! செந்தாமரைப்பாதா வேதவிநோதா மதுசூதா ஜெகநாதா நவகண்டங்களையும் ஆண்ட நளச்சக்கிரவர்த்தி தன்னைச் சேவித்துப் பகுதிகட்டும் ரிதுபர்ணமகாராஜனிடத்தில் உருமாரிவாகுகனென்றபேர் வகுத்து ஊழியஞ் செய்தாற்போல உமக்குத் தொண்டனாகி ஊழியஞ் செய்யுமவனாகி யானிருக்க, என்வீட்டிற்குவந்து எனக்குத தொண்டுசெய்தீர் இதுநாயமோ ஓகருணைக்கடலே என்று அழுதுக்கொண்டிருக்க ஏகநாதசுவாமிகள் மனையாள் இந்த விருத்தாந்தங்களைக் கேட்டு துக்கசாகரத்தில் மூழ்கினவளாகி, துவாரகைவாசனே! வெகுநாளாகத் தேவரீர் ஊழியக்கார வேடம்பூண்டு எங்கள் வீட்டு வேலைகள் யாவற்றையுஞ் செய்துக்கொண் டிருந்தீர், உமது சுகுமாரத்தை நாங்களறியாமல் உம்மைக் கஷ்டமான காரியங்களில்விட்டு சிரமப்படுத்தினோம் உலகமாதாவாகிய ஸ்ரீமகாலட்சுமிசெய்யும் வேலைகளுக்குக் களிப்பையடையும் தேவரீர் எங்கள் வீட்டிற்கு வரும் அதிதிகளுக்குவேண்டிய ஊழியங்களெல்லாம் செய்து நாங்கள் புசித்தபின் அனைவருடைய க்ஷேமமாகிய பிரசாதத்தை உமக்குநீரே பரிமாரிக்கொண்டு புசித்துக் கொண்டிருந்தீர் என்பிராணநாதன் கட்டவிழ்த்த வஸ்திரங்களை மகாப்பிரசாதமென்று தரித்தீர் என்புருடன் புச்சிஷ்டத்தை பரமபாவன மென்றுபுசித்தீர், என்கணவன் பாதஜலத்தை மகாதீர்த்தமென்றுபெற்றுக்கொண்டிருந்தீர்உமதுயாஸ்ரிதவாச்சல்யத்தை இப்படிக்கெல்லாம் வெளிப்படச் செய்தீர் நாங்கள் உம்மை எப்படிமரப்போம் கண்களுக்குப் புலப்படுமே சகலபதார்த்தங்களையும் உமதுசொரூபங்களாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகையால் தேவரீர் எங்கள் தப்புகளை எல்லாம் மன்னித்து எங்களைரக்ஷியும் என்று பிரலாபித்துகொண்டிருக்கும் தம்பதிகளைப் பிராமணன்தேறுதல்சொல்லி ஏகநாதரைப்பார்த்து உமது புண்ணியத்தை நானென்னென்று கொண்டாடுவேன் பிரமாதிகளுக்கும் காணவரிதாகிய லட்சுமிநாதன்உமக்குசேவகனுமாகி கண்கள்குளிர சேவைதந்தவனாகி உமக்கு சேவகனுமாகினான் ஆகையால் உம்மை அகில உலகத்திலும் கொண்டாடும் படியான கீர்த்தியைப் பெற்றாய். மேலும் உமதுஇருதயத்தில் எழுந்தருளியிருக்கும் மாதவன் உம்மை எப்படிவிட்டு நீங்கியிருப்பான் ஆகையால் என்னிடத்தில் தாங்கள் கிருபைசெய்ய வேண்டும் உம்முடையவருளினால் நான் காணக் கிடையாத தங்கமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானைக் கண்ணாரக் கண்டேன் இனிபோய் 'வருகிறேனென்றுசொல்லி அவரனுமதியைப்பெற்றுத் துவாரகைக்குபோயினார் பின்பு தன்வீட்டில் ஊழியனாகிச் செய்த விபரீதங்களை அனவரதமும் துதித்துக்கொண்டு ஏகநாதசுவாமி நிரந்தரம் பகவானைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்க, ஒருநாளிரவில் ஞானதேவர் ஏகநாதசுவாமி சொற்பனத்திலெழுந்தருளி ஓபகவத் பாகவத சிகாமணியே! தாங்கள் அளகாபுரத்திற்கு வந்து என்சமாதியைத் திறந்து என்னைத் தெரிசனஞ் செய்துபின்பு ஒரு அரசமரத்தின்வேர் என்சமாதிக்குச் சமீபமாக வளர்ந்துவருகின்றது அதினால் எனக்கு வாதையுண்டாகும் ஆகையால் தாங்களந்தமரத்தை உயரமாகச் சமூலமாய்ப் பேர்த்து தூரமாகவைத்து விருத்தியடையச் செய்து சமாதியையும் நன்றாகக் கட்டுமென்று சொல்லி மறைந்து போயினார் உடனே ஏகநாதசுவாமி விழித்துக்கொண்டு சாக்ஷாத் பகவதாவதாரமாகிய க்ஞானதேவர் பதார்த்த மாகாத என்னை பொருபொருளாக வெண்ணித் தன்வேலைகளுக்கு நேமித்தாராகையால் தன்னியனாகினே னென்று களிப்படைந்து அளகாபுரிக்கு வந்து சித்தேஸ்வர மூர்த்தியைத் தெரிசித்து, க்ஞானேஸ்வரர் சமாதிக் கருகில்வந்து, அந்தச்சமாதிக்குப் பிரதக்ஷணநமஸ்காரங்கள் செய்து சிற்பிகளை வரவழைத்து யோகாஸனா வீனராகி யிருக்கும் க்ஞானேஸ்வரரை தெரிசித்து, தீர்க்கதெண்டனிட்டு ஆனந்தாதிசய மி:ருந்து துதிசெய்து சமாதிக்கு இடையூராகயிருக்கும் அரசமரத்தின் வேரைப்பார்த்து அந்தமரத்தைப் பக்குவ

Koviloor Digital Library

மாகப்பேர்த்து வேறொரு இடத்தில்வைத்து, விருத்தியடையும்படியாக சிகிட்சைகள்சேய்து பழயபடிசமாதியை கட்டுவதற்கு கல்லும் சுண்ணும்பும் வரவழைத்து வேலைக்கு ஆரம்பிக்கையில் வேலைக்காரருக்கு வேண்டிய போஜனபதார்த்தங்கள் அந்தஅளகாபுரத்தில் அகப்படாமற்போயிற்று அப்போது சரணமடைந்தவர்களை இரட்சிக்குமதயாளநிதியாகிய பண்டரிநாதன் ஒருவர்த்தகனைப்போல வேடம்பூண்டு, அரிசிபருப்பு நெய்முதலாகிய சகலபதார்த்தங்களையும்விஸ்தாரமாகக் கொண்டுவந்து சமாதிக்குச் சமீபத்தில் கடைவைத்துக்கொண்டு சமாதிகட்டிக் கொண்டிருக்கும் வேலைக்காரர்களைப் பார்த்து உங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை எதேஷ்டமாக வாங்கிக் கொண்டு போங்கள் சமாதிவேலைமுடிந்து உங்களூருக்குப்போகும்போது எனக்குச் சேரவேண்டிய மொத்ததுகையைக் கொடுக்கலாம் நானும் ஏகநாதசுவாமிகளுடன் யாத்திரை செய்வதற்கு அபேக்ஷிக்கிறேனென்று சொல்லி அவர்கள்கோரிய வஸ்துக்களை எதேஷ்டமாக கொடுத்தார் அப்போது ஏகநாதசுவாமி ஸ்ரீபண்டரிநாதன் இந்தவடிவத்துடன் வந்து நம்மைக்காப்பாற்றிக் கொண்டிருக்கிறாரென்று ஆனந்தமடைந்து சமாதிக்கெதிரில் ஹரிபஜனை செய்துகொண் டிருந்தார்.

இந்தப்படி பகவந்நாமசங்கீர்த்தனஞ் செய்தும் சமாதிவேலைகளை கவனித்தும் வருகிறபோது, சமாதிவேலைமுடிந்து யாவரும் பைட்ணிபுரத்திற்குப் பிரயாணமாகியபோது இந்தவர்த்தகன் நானும் உங்கள்பின்னால் வருகிறேனென்று தன்சரக்குகளை எல்லாம் ஒரு வண்டியின்பேரில் போட்டுக்கொண்டு சமாதிவேலைக்காரர்களுடன்நடந்து நடுவழியில்மறைந்து போயினர் இந்த ஆச்சரியத்தை ஏகநாதசுவாமி முதலானோருங் கண்டு போஜனபதார்த்தங்கள் கிடைக்காத அளகாபுரிக்குவந்து இத்தனைநாளும் நம்முடன்வசித்து நமக்கு வேண்டிய வஸ்துக்களை அபாரியாகக்கொடுத்து நம்மிடத்தில் மொத்தபணத்தை பெற்றுக் கொள்ளாமல் மறைந்துபோனவர் ஸ்ரீபாண்டுரங்கனே அன்னியில் வேறல்லவென்று நிச்சயித்து ஆனந்தக்கடலில்மூழ்கினவர்களாகித் துதிசெய்துக்சொண்டே பைட்ணிபுரத்தைச் சேர்ந்தார்கள்பின்பு ஏகநாதசுவாமிநிரந்தரமும் தனக்கு ஆசானுகிய ஜெனார்த்தன பண்டிதரைத் துதிசெய்து ஜெகம்யாவையும் ஸ்ரீஜெனார்த்தனன் ஸ்வரூபமாக எண்ணிக்கொண்டு ஸ்ரீ பகவத் பாகவதர்களை ஆராதித்துக் கொண்டும் உலகத்தோர்களுக்கு பக்தியுண்டாகும்படி போதித்து அந்தியத்தில் ஸ்ரீ பகவத் சாயுச்சிய மடைந்தார்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மனேநம:

வாழிவிருத்தம்.

கார்முகில் கணங்கள்வாழி கடல்சூழிவ் வுலகம்வாழி
பார்மிசை பக்தர்வாழி பருதி சந்திரனும்வாழி
நீர்நிலம் செந்நெல்வாழி நெடியமால் கழலும்வாழி
சீருள ஏகநாதர் திருவடி வாழிவாழி,

ஏகநாதசுவாமிகள் திருவடிகளேசரணம்.

ஏகநாதசுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:



(பதினான்காவது)

நரசிம்மமேதா சரித்திரம்

துதிவிருத்தம்.

அரன்புருடா காரந்தன்னு லரிபரந் தாமனன்று
நூரிதமா யாயர்மாதர் சூழவே ராஜக்ரீடை
திறமுடன் செய்த கோலஞ் சிறக்கவே சேவைசெய்த
நரசிம்ம மேதாதூய நற்பதம் பணிகுவேனே.

ஸ்ரீமகாலட்சுமி கடாக்ஷம் பொருந்திய சிறப்புற்றோங்கிய புராதனக் கடமென்னுங் கிராமத்தில் ஒரு பிராமணனுக்கு ஓர்புத்திரன் அவதரித்தான் அப்புத்திர ரத்தினத்திற்கு தாய்தந்தையர்கள்நரசிம்மமேதாவென்று நாமகரணஞ் செய்தார்கள் அப்புத்திரன் நாளுக்குநாள் வளர்ந்து எழுவயதாகியபோது தாய்தந்தையர்கள் பரலோககதி யடைந்தார்கள் பின்பு அப்புத்திரனுடைய சிறியதந்தையும் தமையனும் இவரை வளர்த்துக்கொண்டு வந்தார்கள் இவர்தனக்கு நிகராகிய வயதுடைய பாலர்களுடன் விளையாடிக்கொண்டு காலத்தைக்கடத்தி போஜனவேளைக்குமாத்திரம் வீட்டிற்குவந்துகொண்டிருப்பார் இவரிப்படியிருப்பதால் இவர் அண்ணி முதலானோர்களும் இவரைப் பார்த்து ஓமைத்துனரே! இப்படிவிளையாட்டினால் காலத்தைக் கடத்தி இதாங்களை அரியாமலிருந்தால் மேலே உன் பெண்டுபிள்ளைகள்எப்படிஜீவனம்செய்வார்களென்று நிஷ்டூரமாகப்பேச நரசிம்மமேதா சிந்தாக்கிராந்தனாகி அவ்விடத்தைவிட்டுபுறப்பட்டு மனிதசஞ்சாரமில்லாத ஒருகாட்டின் நடுவில்போய் தன்மனதில்தானே சிந்திக்கிறார் என்பூர்வகன்ம மெப்படிபட்டதோ அதையானறியேன் என்தாயைப்போக்கடித்துக் கொண்டேன் பாலியத்தில் தாய்மரணமும் யௌவனத்தில் பத்தினிமரணமும் வார்த்திகத்தில் புத்திரமரணமும் ஜெகத்தில்ஜெனங்களுக்கு மிகுந்தகஷ்டமாகும் ஆகையால் நான்தாயற்றவனானபடியால் என்அண்ணிமுதலாகிய பந்துக்கள் என்னைநிஷ்டூரமாக பேசதுடங்கினார்கள்

Koviloor Digital Library

பாண்டுரங்கனுக்கு சிறியதாயார் சொல்லிய நிஷ்டூர வார்த்தைகள் விரக்திக்கு ஆதியாகியதுபோல தாயற்றவனாகிய எனக்கு இந்தபாலியதிசையில் அண்ணிமுதலாகிய பந்துஜனங்கள் கூரிய நிஷ்டூர வார்த்தைகள் கேவலம் விரக்திக்குக் காரணமாயிற்று ஆகையால் இனி அனித்திய சுகயிச்சையை நீக்கி நித்தியமாகிய சாயர்சியத்தை யடையும் மார்க்கத்தைத்தேட எத்தனிக்கிறேன் ஈஸ்வரன் கிர்ஹேதுகதியாயமான கடாக்ஷம் என்னிடத்தில் பொருந்தியதனுல்என்னெண்ணம் வீணுகமாட்டாது என்று சிந்தித்துக்கொண்டு அந்த காட்டின்நடுவில் ஒருசிவாலயத்தை கண்டு அதற்குள் புகுந்து மகாலிங்கத்தை தெரிசித்தார் அந்தசிவாலயம் ஆரணியமத்திய லிருப்பதால் மனிதசஞ்சார மில்லாதிருந்தது அப்படிக்கிருந்த போதிலும் நரசிம்மமேதா தைரியங்கொண்டவராகி சுவாமியின்வலதுபக்கத்தில் நின்று கூப்பினகரனுகி அநேகமாகத் துதிசெய்துக் கொண்டு ஏழுநாள் ஆகாரநித்திரையில்லாம லிருக்கப் பார்வதிநாதன் இவர்பக்திக்குக் களிகொண்டு பிரசன்னமாகினர்.

அப்போது நரசிம்மமேதா பரமசிவனுக்கு நீர்க்கதெண்டனிட்டு பக்தியுக்தனுகித்துதித்துக்கொண்டிருக்கப் பரமசிவன் சந்தோஷித்து, ஓபாலகனே உன் மனதிலெண்ணிய வரத்தைக் கேளுமென்றதைக் கேட்டு நரசிம்மமேதா சுவாமியைக்கண்டு ஒதேவா! தாங்கள் சர்வஞர் நான் அக்ஞன், இப்படிப்பட்ட எனக்கு உமக்குமிகவும் பிரியமாகிய வஸ்துவை அனுக்கிரகிக்க வேண்டுமென்று பக்திவினயத்துடன் விண்ணப்பஞ்செய்தார் அந்த சொல்லைக்கேட்டு பிணுகபாணி புன்னகைபுரிந்து நீமிகவும் புத்திமான் உன்னெண்ணம் மிகவும் சிலாக்கியமாகி யிருக்கிறது அதெப்படியெனில் எனக்குமிகுந்த பிரியமாகியவஸ்துவை அபேக்ஷித்தாய்,

சுலோகம்.

"ஈஸ்வரஸ் ஸர்வ பூதானம்
ஹருததேசேர்ஜுன திஸ்டதி
ப்ராமயன் ஷர்வ பூதான
யந்தர ரூடானி மாயயா."

என்றபடி சகல பூதங்களுடைய இருதயத்தில் வசித்து சூத்திரதாரன்பதுமைகளை ஆட்டுவதுபோல சகல ஆத்துமாக்களையும் தன்மாயையினுல் பிரமிக்கச் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவுக்காகிலும், எனக்குப் பிரியமாகிய பதார்த்தம் வேரொன்றில்லை ஆகையால் நான் நிரந்தரம் அந்தபகவானைத் தியானித்துக்கொண்டு அவர்நாமத்தை ஜெபித்துக் கொண்டிருப்பேன் இதுமிகவும் ரகசியம் சாந்தமதிகரித்த அந்தவஸ்துவைஉனக்குகாட்டுகிறேன் வாருமென்று அவர்கையைப் பிடித்துக்கொண்டு யமுனநதிக்குச் சென்றார் அப்போது அம்பிகைநாதன் அவ்விடத்திற் செழுந்தருளி பண்டுதன்னுல் செய்யப்பட்ட ராஜக்கிரீடையை தெரிசிக்கச்செய்தார் அது எப்படியெனில் சாக்ஷாத்திரியில ஸ்ரீகிருஷ்ண பகவான் கோபிகாஸ்திரிகளுடன் யமுனநதிக்கரையில் கூடியாடிக்கொண்டிருக்க அவர்களுக்கு ஆனந்தம் தலைமண்டை கொண்டபடியால் அதிகமழையினுல் நசிங்கும் பயிர்களைப்போல இந்த வபலைகளுக்கதிக ஆனந்தத்தால் பிராணபய முண்டாகுமென்று சந்தேகித்துப் பகவான் அந்தரத்தானமாய்ப்போக கோபிகாஸ்திரிகள் யாவருங் கூட்டங்கூடி ஸ்ரீகிருஷ்ணபகவான்குணசேஷ்டைகள் யாவற்றையுஞ் சொல்லிக்கொண்டு ஒருவரோடொருவர் சொல்லத் தொடங்கினர்கள்

எப்படியெனில், ஒருகோமற்ற ஷ்திரிகளைப்பார்த்து ஒசகிகளே கேளுங்கள் நானே ஸ்ரீகிருஷ்ணன் ஆகையால் நான்மெதுவாக நடக்கிறேன்பாருங்களென்ருள், மற்றொருத்தி நீகிருஷ்ணன் ஆகமாட்டாய் நானே ஸ்ரீகிருஷ்ணன் என்பாட்டுகளைக் கேளுமென்ருள் இன்னொருவனிதை அட்டதுஷ்ட காளிங்கனே ஓடாதேநில்லும் நான்கிருஷ்ணன் ஆம் இதோபாரும் உன்னைப் பிடிக்கிறேனென்று தோளைத்தட்டித் தன் கையையே பாம்பைப்போல பிடித்துக்கொண்டு நின்ருள் மற்றொருமாது, ஓ கோபாலர்களே மழைக்குப் பயப்படவேண்டாம் சஞ்சலமற்றிருங்கள் நானிந்த கோவர்த்தனகிரியை யெடுத்துக் குடையாகப் பிடிக்கிறேன் என்ருள் இன்னொருவனிதைகோபால பாலர்களே நான் தேனுகாசுரனை சங்கரித்தேன், நீங்கள் பாலவனத்தில் பிரவேசித்து இஷ்டத்தைப் போல விளையாடலாம் என்ருள் வேருெருமாது ஸ்ரீகிருஷ்ணைப் போலேநின்று பசுக்களை யழைத்துக் கொண்டிருந்தாள்.

இத்தன்மையாகக் கோபிகாஸ்திரிகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய திவ்வியலீலைகளைச் செய்துகொண்டு மெய்மரந்து தன்மையர்களாகி பிருந்தாவனத்தில் சஞ்சரித்திருக்க, ஒருமாது பூமியைப்பார்த்துத் திரேகத்தில் புளகாங்கித முண்டாகினவளாகி தனபக்கத்திலிருக்கும் ஸ்திரிகளைப்பார்த்து ஒதங்கைகளே பாருங்கள் இவ்விடத்தில் சங்குரதாங்க கற்பகத்துவச தாம

Koviloor Digital Library

ரையங்கு சவச்சிராங் சனங்களாகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய அடிகளுடைய ஜாடையகப்படுகின்றது இதனைப்பார்க்க அவன்கிரீடையுடன் விநோதமாக நடந்து போனானென்று தோற்றுகின்றது இதுவுமன்னியில் மகாபுண்ணியவதியாகிய ஓராரொருசுந்தரி அவனுடன்கூடி மங்கமாக நடந்திருக்கிறாள் ஆகையால்அந்த மாதின அடிகள்ஜாடை சேர்ந்திருக்கிறது இதோபாருங்கள் சகிகளே! இவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ண மலர்களைக் கொய்தான் ஆகையால் அந்தமகானு பாவனது பாதமூலம்மாத்திரம் பூமியில்ஊனிருக்கிறது இதோ பாருங்கள் இவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்து அந்தமலர்களினால் ஒருஸ்திரியை மங்கலமாக அலங்காரஞ்செய்தார் அம்மாது தன் பூர்வஜென்மத்தில் சகலசிரகனுகிய ஸ்ரீமந்நாராயணனை நன்றாக ஆராதித்தவள் மேலும் ஓகோபிகாஸ்திரிகளே இப்படிப் பாருங்கள் அந்தகோபால சூடாமணியைத் தான்புஷ்பங்களினால் அலங்கரித்து கௌரவிக்க அந்தவபலையை விட்டு இந்தவழியாக போயினர் அதுவன்னியிலும் இதோபாருங்கள் இவிடத்தில் ஒருஸ்திரியினுடைய அடியின்ஜாடை ஸ்ரீகிருஷ்ணனைப்பின்தொடர்ந்திருக்கிறது ஆகையால் அந்தமங்களவனிதை ஸ்ரீகிருஷ்ணனுடன் சேருவதற்காக புட்டத்தின் பாரத்தினால் சிரமப்பட்டு துரிதமாய் நடந்ததாகத் தோற்றுகின்றது ஓசுசீலைகளே இதோபாருங்கள் ஒருஸ்திரி அவன்கைமேல் கையை வைத்துக்கொண்டு கூடவே நடந்திருக்கிறாள். ஆகையால் அடிகள்நெருங்கி சுவாதீனமற்று வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் பாருங்கள் அந்தவஞ்சகன் அம்மாதின் கையைதொட்டதே யன்னியில் பதில்வெகுமதி ஏதுஞ்செய்யாமையால் அவன் அவமானமடைந்து ஆசையற்று திரும்பிப்போனது போல அடிகள் ஜாடை தெரியவருகின்றது இதோபாருங்கள் இவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனுடைய அடிகள் வேகமாகவைக்கப்பட்டிருக்கிறது இதினால் அவன் இவ்விடத்தில் ஒருமாதைப்பார்த்து ஓமாதே நீ இங்குதானே யிரு நான் துரிதமாகச் சென்று நாமிருவரும் கூடியிருப்பதற்குத் தகுந்தயிடத்தைப் பார்த்துகொண்டு உன்னிடத்திற்கு வந்து சேருகிறே னென்று சொல்லிப் போனதுபோல தோற்றுகின்றது ஓ கோபிகைகளே இதற்குமேல் அவன் அடிகள்ஜாடை அகப்படவில்லை அவன் எந்தவிடத்திலோ அன்னியர்களுக்கு காணப்படாத ஸ்தலத்திற்குப் போயினன் ஆகையால் நீங்கள் திரும்பிவாருங்கள் இதற்குமேல் நாம்போவகஷ்டமாகும் இந்தக் காட்டில் நிலவு முதலானதுகளும் பிரவேசிப்பதற்கு சாத்தியமாகாமலிருக்கிறது என்று சொல்லக்கேட்டு கோபிகள்யாவரும் ஸ்ரீகிருஷ்ணனை கண்டுபிடிப்பது கஷ்டமென்று சோகத்தை யடைந்தவர்களாகி மறுபடியும்யமுனாநதிக்கரையில்வந்து உட்கார்ந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய குண, சேஷ்டைகளைப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

இப்படிக்கிருக்கத் தாமரையைப்போலமலர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் திவ்வியமுக மண்டலத்துடன் சகலலோகரக்ஷகனுகிதிவ்விய சரித்திரனுகிய ஸ்ரீகிருஷ்ணன் வரப்பார்த்து அந்தக்கோபிகள் யாவரும் பரமானந்த மடைந்தவர்களானார்கள் அவர்களிலே ஒருவள் கிருஷ்ணகிருஷ்ணகிருஷ்ண என்றுசொல்லி மௌனமாக யிருந்தாள் இன்னொருவள் நேத்திரங்களென்னும் வண்டுகளினால் அந்தக் கிருஷ்ணனுடைய முகத்தாமரை மதுரமாகிய மதுவை பானஞ்செய்தாள் வேறொருவள் அவனைப்பார்த்து கண்களை மூடிக்கொண்டு அவன் திவ்வியரூபத்தைத் தியானித்தும், யோகநிஷ்டையுடன் கூடியிருந்தாள். இப்படி தன்னை யபேக்ஷித்த வெகுவித சேஷ்டைகளுடன் இருந்த ஸ்திரீகளிலே சிலரைப் பிரிய வசனங்களினாலும், சிலரைக் குளிர்ந்தகடாக்ஷத்தினாலும், சிலரைத் தொடுவதினாலும் சமாதானப்படுத்தினர் பின்பு களங்கமற்றவர்களாய்ப் பரிசுத்தஆத்துமாக்களாகிய அந்த கோபிகைகளோடு ராஜக்கிரீடைக்கு ஆரம்பித்தார். அது எப்படியெனில் அந்தஸ்திரீகள்யாவரும் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலேயே லயித்த மனதுடையவர்களாகி அவனருகில் பிரியாதிருந்தபடியால் வளையமாக ராசமண்டலக் கூட்டம் ஏற்படாமற் போயிற்று ஆகையால் ஸ்ரீகிருஷ்ணன் ஒவ்வொருவள் கையைப் பிடித்துக்கொண்டு அந்தஸ் பரிசுத்ததினால் பரவசமாகி கண்களை மூடிக்கொண்டிருக்குபவனிதையின் கையை மற்றொருவள் கையுடன் சேர்த்து அவர்களை வளையமாக நிறுத்தினர் அப்போதந்த கோபிகள் ஆனந்த பரவசத்தினால் ஸ்ரீகிருஷ்ணன் கையைப் பிடித்துக் கொண்டிருப்பது போல எண்ணி திருப்தி யடைந்தார்கள்

அப்போது ஸ்ரீகிருஷ்ணன் வேகமாய்ச் சுழன்று வரும் சித்திரவனு சாமர்த்தியத்தினால் ஒவ்வொருவளுக்கும் பக்கத்திலிருப்பது போல் காணப்பட்டது. பிறகு சரத்தால் வன்னிப்புடன் கூடிய பாட்டுகளும் அதற்குத் தாளமாகக் கைக்காப்புகளின் சத்தங்களும் கூடி ராஜக்கிரீடை சோபித்தது. அப்போது ஸ்ரீகிருஷ்ணன் மாத்திரம் சரத்காலசந்திரன் நிலவினுடைய சொகுசையும் மலர்ந்த தாமரையுடன்கூடி மனதுக்கு ரம்மியமாகிய தடாகங்களையும் வர்ணித்துப் பாடிக்

Koviloor Digital Library

கொண்டிருக்க, கோபிள் ஸ்ரீகிருஷ்ணனுடைய திவ்யநாமங்களைமாத்திரம் பாடிக்கொண்டிருந்தார்கள் இத்தன்மையாய்ப் பாடிக்கொண்டு சுழன்று வருகிறபோது சிரமத்தினால் ஒருகோபிகை கைப்புகள்சதகமிட்டிருக்கக் கொடிக்கு சமானமாகியிருக்கும் தன் கையை ஸ்ரீகிருஷ்ணனுடைய தோளின்பேரில் வைத்தாள் இன்னொரு கோபிகை பாட்டுகளைப் பெருமைபடுத்தும வியாச்சியத்தினால் யானைத் துதிக்கைக்குச் சமமாகிய தோள்களுடனகூடிய ஸ்ரீகிருஷ்ணனைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு முத்தமிட்டாள் இன்னொருவள் ஸ்ரீகிருஷ்ணன் கன்னத்துடன தன் கன்னத்தைச் சேர்த்துத் தனக்குண்டாகிய புளகாங்கிதமென்னும் பயிர்களுக்கு ஜலத்தைக்கொடுக்கும் மேகத்தைபபோல வேர்வையுடன் கூடியிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனுடைய தோள்களை ஆலிங்கனஞ் செய்துக் கொண்டாள் இப்படியவரவர்கள் ஆனந்தங்களையனுபவித்து உரந்ததொனியுடன் ஸ்ரீகிருஷ்ணன்செய்த ராஜகானத்திற்கு ஒத்தபிதமாக சாது சாதுகிருஷ்ணு நன்றாகியிருக்கிறது என்று இரண்டாங்குணமாகிய நாதத்துடன் பாடிக்கொண்டு அவன்போகிறபோது கூடவேபோய்க்கொண்டு அவனதிரும்புகிறபோது எதிர்முகமாக திரும்பிக்கொண்டு அவனை இணைபிரியாமலிருந்தார்கள் இப்படித் தன்பிரிவினால் ஒவ்வொரு நிமிஷமும் கோடிவருஷங்களாகத் தோன்றும்படி அந்தஸ்திரிகளுக்கு ஆனந்தத்தை யுண்டாக்கிக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணபகவான் ராஜக்கிரீடை செய்துக் கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட ராஜக்கிரீடை விபவத்தை இவனை தெரிசிக்கச்செய்து நரசிம்மமேதாவைப் பார்த்து இவனை இவிடத்திற்கே னழைத்து வந்தாயென்றுகேழ்க்கப்பார்வதிநாதன் நரசிம்மமேதாவை சுவாமிதிருவடிகளில் வீழ்த்தி நடந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பஞ்செய்ய பகவான் சந்தோஷித்து, அவருக்கபயங்கொடுத்து ஒகுழந்தாய்! எனக்கு பிரியனாகி சங்கரனுடைய புருஷாகாரத்தினால் நீ பிரம்மா முதலானோருக்கும் லபிக்கவரிதாகிய எனதுலீலைகளை தெரிசித்தாய் ஆகையால் இனிஎன்னந்தரங்கப் பக்தர்களிலே நீயும் ஒருவனாகினாய் உன்னால் தெரிசிக்கப்பட்ட என் லீலையாகிய அமுதமழையினால் ஜீவாத்துமாக்களாகிய பயிர்களைக் காப்பாற்றும் மேலும் ராஜக்கிரீடையில் உன்னால் பார்க்கப்பட்ட ஸ்திரிகள் புருஷோத்தமனாகிய எனக்கு மிகுந்த பரதந்திரர்களாகி என்னிடத்தில் அபேக்ஷைகொண்டவர்களாகி ஸ்திரீரூபங்களாகியிருக்குமவர்கள் என்பக்தர்களென்றும் அவர்கள் ஸ்திரிவேடம் புனைந்தவர்களாகிக் காணப்பட்ட படியால் ஆத்துமாக்களுக்கு பரதந்திரமே முக்கியமான சொரூபமென்றாய் அவர்கள் கண்கள் ஸ்தன நடுபாகங்களை க்ஞானபக்தி வைராக்கியங்களென்று,

சுலோகம்.

"ப்ரபன்னச் சாதகோயத்வத்
ப்ரபத்தவ்யஃ சுபோதவத்."

என்பதுபோல, அவர்கள் என்விஷயத்தில் சாதகபக்ஷிகளைப்போலும் நானவர்கள்விஷயத்தில் கபோதபக்ஷியைபோலும் நடந்துகொள்ளுவோமென்றும் நானவர்களிடம் இருப்பதும் அவர்களைவிட்டுப் பிரிந்திருப்பதும், அவர்களுக்குசொர்க்கநரகங்களாகியிருக்குமென்றும தெரிந்துகொள்ளும் அன்னியிலும் உலகத்தாருக்கு க்ஞானமார்க்கத்தை அனுக்கிரகஞ் செய்யும் சங்கரன உனக்காசானாகிய படியால் நீயும் அவரைப்போல உலகத்தாருக்குக்ஞானமார்க்கத்தை யுபதேசித்து என்னை சந்தோஷமடையச்செய்யும் இதுவே என்விஷயத்தில் நீசெய்யவேண்டிய கைங்கரியம் நானிதுமுதல் உன்னைப்பிரியாமல் உன்னோடுகூடவேயிருப்பே னென்று நரசிம்மமேதாவைப் பகவான் அனுக்கிரகஞ்செய்யவே, பார்வதிநாதன் சந்தோஷித்துப்பகவான் க்ஷேமனத்தைப் பெற்று நரசிம்மமேதாவை அழைத்துக்கொண்டு தன்ஆலயத்தைச்சேர்ந்து மரைந்து போயினா.

அதுமுதல் நரசிம்மமேதா இரவும்பகலும் இடைவிடாமல் ஸ்ரீகிருஷ்ண கல்யாணகுணசேஷ்டிகளை வர்ணித்து, அம்மூர்த்தியைத் துதிசெய்துக் கொண்டு அந்தசிவாலயத்தில் வாசஞ் செய்திருந்தார் இப்படிக்கிவர் இங்கிருக்க புராதனக்கடமெனும் கிராமத்திலிருக்கும இவர்சகோதரன் முதலாகியபந்துக்கள் இவரைக்காணாமல் வெகுதேசங்களெல்லாம் தேடிக்கொண்டுவருகிறபோது ஜனசூனியமாகியகாட்டில் ஏகாந்தமாகச் சிவாலயத்தில் வசித்திருந்த நரசிம்மமேதாவைக்கண்டு வீட்டிற் கழைத்துக்கொண்டு போயினார்கள் பின்பு அந்தஊரிலிருப்பவர்கள்பாலியர்முதல் விருத்தர்களும் இவர்பக்திவிரக்திகளுக்கு ஆச்சரியப்பட்டார்கள் நரசிம்மமேதாநிரந்தரம் ஸ்ரீபாண்டுரங்கனைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்க அந்தஊரிலிருந்தஒருபிராமண உத்தமன் இந்தநரசிம்மமேதாவினுடைய இருதயபரிபாகத்தை நன்றாயறிந்து தன்கன்னிகைக்கு இவர்தகுந்தவரனென்று நிச்சயித்து பந்துக்களை யுடன்படுத்தி அவரை சாக்ஷாத் விஷ்ணு சொரூபராகப் பாவித்து நன்கலங்கரித்து கன்னிகாதானஞ் செய்தார் பின்பு நரசிம்மமேதா இல்லர தருமத்தி லீடுபட்டுவர இவ

Koviloor Digital Library

ருக்கு எம்பெருமான் கிருபையினால் ஆண்பெண்ணிரண்டு பிள்ளைகளுண்டாகி சம்சாரமாகியும் இந்தமகானுபாவர் பிள்ளைப்பூச்சியைப்போல் எதிலும் ஒட்டாமல்நிரந்தரம்பகவத்தியானஞ் செய்துக் கொண்டிருந்தார்.

நரசிம்மமேதா தன்குமாரனுக்கு விவாகஞ் செய்வித்த அத்தியாயம்.

அவ்விதமாக நரசிம்மமேதா அனவரதமும் பகவத்கல்யாண குணங்களைத் தியானித்து சகலபிரபஞ்சங்களும் பகவான் சொரூபமென்று பாவித்துத்தான் பகவான் அனுக்கிரகத்தினால் சாக்ஷாத்கரித்த ஸ்ரீகிருஷ்ண லீலாமூர்த்தத்தை அனுபவித்துப் பரமசாந்தராகிக் க்ஞானவைராக்கிய சம்பன்னராகி சம்சாரிகளாகியசேதனர்களுக்கு தன்க்ஞானனுஷ்டானங்களினால் பக்தி விரக்திகள் உண்டாகச்செய்து காலக்ஷேபஞ் செய்துக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்க, புராதனக்கடத்திற்கு அருகிலிருக்கும் சியாமலாபுரத்தில் திரிபுராந்தக னென்னும் ஒருபிராமணன் வர்த்தகஞ்செய்து மிகவுந்தனவானாகியிருந்தான் அந்தத்திரிபுராந்தகன் தன்குமாரத்திக்கு விவாகஞ் செய்யவேணுமென்று நிச்சயித்து, தன்புரோகிதனாகிய கிருஷ்ணபட்டனை அழைப்பித்து தன் புத்திரிக்குத் தகுந்தவனைத் தேடவேணுமென்று சொல்லவே நற்குணராகிய அந்தபுரோகிதன் கிஞ்சித்து ஆலோசித்து நரசிம்மமேதா மகானுபாவராகிய பாகவதசிகாமணியாகிய பகவத்பிரசாத லப்தக்ஞானயுக்தராகி வைராக்கிய சீலராகி யாவருக்கும் பிரியராகியிருக்கிறார் அவர் குமாரனுக்குத் திரிபுராந்தகனுடைய குமாரத்தியைக் கொடுத்தால் மிகவும் மேலாகியிருக்குமென்று நிச்சயித்து நரசிம்மமேதா வீட்டிற்கு வந்து ஓபகவத்பாகவத சிகாமணியே கேளும் சியாமலாபுரத்திலிருக்கும் திரிபுராந்தகனென்னும்பிராமண உத்தமன் தன்புத்திரியை நின்புத்திரனுக்குக் கொடுத்து விவாகஞ்செய்விக்க வேணுமென்று நிச்சயித்திருக்கிறு னென்றும் இதுதகுந்த சம்மந்தமென்றும்சொல்லி அவரையுடன்படுத்தித் திரிபுராந்தகனருகிற் சென்று நின்புதல்விக்கு நரசிம்மமேதா குமாரனைவரனாக நிச்சயித்து வந்தேனென்று சொன்னன்.

அதைக்கேட்டு திரிபுராந்தகன் ஓபுரோகிதரே நரசிம்மமேதா மிகவும் ஏழைபாகி குடும்பபோஷணைத்திற் சிந்தையல்லாமல் நிரந்தரம் பகவந்நாமசங்கீர்த்தனைகள் செய்துக்கொண்டு ஜடனைப்போலிருக்கிறன் இப்படிப்பட்டவன் சம்பந்தமேலானதல்லவென்றும் இதை எப்படியாகிலும் நீக்கிவிட வேணுமென்றும் தன்மனதில் நிச்சயித்து புரோகிதனைப் பார்த்து நீர் நரசிம்மமேதா யிடத்திற்குப் போய் நாளையதினம் முகூர்த்தம் நிச்சயமாகியிருக்கிறது ஆகையால் எங்கள் கௌரவத்திற்குத் தக்கவரிசைகளுடன் துரிதமாக வரவேண்டுமென்றும் அப்படி வராத பட்சத்தில் கன்னிகையை வேறொருவனுக்கு நீகொடுக்கப்படுமென்று சொல்லிவிட்டு வாருமென்று அனுப்பினன் அப்போது கிருஷ்ணபட்டர் நரசிம்மமேதா வீட்டிற்குப் போய் அந்த மகானுபாவனிடத்தில் திரிபுராந்தகனுடைய அபிப்பிராயத்தைச் சொன்னன், அதைக்கேட்டு நரசிம்மமேதா புன்னகைசெய்து கிருஷ்ணபட்டரைப்பார்த்துத் திரிபுராந்தகன் புதல்வியை என்புதல்வனுக்குக் கொடுக்கச் சம்மதியில்லாமல் இப்படிசொல்லியனுப்பினன் ஆகையால் நான்செய்யத் தகுந்தது எதுமில்லை, தயாசிந்துவும் தீனபந்துவுமாகிய ஸ்ரீபாண்டுரங்கன் கிருபை எப்படியோயானறியேன் அந்த தேவாதிதேவன் கிருபையினால் திரிபுராந்தகன் கோரியபடி நாளையதினம் வருகிறேனென்று மந்தமாகச் சொன்னர். இதைகேட்டு கிருஷ்ணபட்டர் பரமானந்தத்தையடைந்து ஓபாகவதோத்தமரே ஸ்ரீபாண்டுரங்கன் உனக்கு வசமாகியிருப்பதினால் உனக்குசாத்தியமாகாத காரியமெதுவுமில்லை அந்த தேவாதிதேவன் ஏசவஸ்திரியாகிய மகாஜென சபையில் துர்சாதனனால் இழுத்துவரப்பட்ட திரௌபதையினால் அழைக்கப்பட்டு அந்தப்பதிவிரதா சிரோன்மணி மானத்தை காப்பாற்றினு ரல்லவா, மேலும் சிறியதாயார்நிஷ்டூர வார்த்தைகளினால் அவமானமடைந்து தன்னை ஆஸ்ரயித்த திருவனுக்கு சர்வஉத்தமபதம் அளிக்கவில்லையா, அன்னியிலும் பிரகலாதனனுக்காய் தூணிலவதரித்து அவர் சொற்களைக் காப்பாற்றவில்லையா அப்படிப்பட்ட மானுபாவர்.

சுலோகம்.

"அன்யாஸ் சிந்தயம தோமாந்
ஜனா பர்யுபா ஸ்தே
தேஷாம் நித்யாபி யுக்தானும்
யோகக்ஷேமம் ஸஹாம் யஹம்."

என்றுல் அபேக்ஷை யில்லாதவர்களாகி என்னையுபாசனை செய்யும் சஞ்சலசித்தமில்லாதவர்கள்யோகக்ஷேமங்களை நானேமுயன்று நடத்துகிறேன் என்று பகவத்கீதையிற் சொல்லியிருக்கிறபடி உமதுயோகக்ஷேமங்கள் ஸ்ரீவாசுதேவரே நடத்துவதற்கு சித்தமாகியிருக்க நீர் ஏதுக்கும் சிந்திக்கவேண்டிய தில்லை

Koviloor Digital Library

யென்று விண்ணப்பஞ்செய்து திரிபுராந்தகனிடத்திற்குப்போய் உன்கோரிக்கைபடி நாளையதினம் சித்தமாக நரசிம்மமேதா வருவார் சந்தேகிக்க வேண்டியதில்லை இந்தக் கலியாண மரியாதைகள் விஷயத்தில் உமக்குப்பின் வாங்கமாட்டார் மேலும் அவர்பெறுத்தக் கூட்டத்துடன் வருவாரென்று தோன்றுகின்றது ஆகையால்நீரும சர்வஜாக்கிரதையுடன் இருமென்று சொன்னார் அதைக்கேட்டு திரிபுராந்தகன் சிரித்து ஓ ஐயா புரோகிதரே நிர்ப்பாக்கியனாகிய நரசிம்மமேதா நாம் யோக்கியதைக்குத் தகுந்தவரிசைகளை ஜாக்கிரதை செய்துக்கொண்டு நாளைக்குள்ளாக வருவதற்கெப்படி சாத்தியப்படும் அவர் ஜடனைப்போல்சஞ்சரிப்பவர் ஆகையாலிதையோசிக்காமல்வருகிறேனென்று சொல்லியிருப்பார் அவர்சுபாவம் உலகத்தில் பிரசித்தியாகியிருக்கிறது அந்தமத்தனுடைய வார்த்தைகளை நீரெப்படி உண்மையென்று நம்பிக்கை கொண்டீர் என்று பரிகாசஞ்செய்து புரோகிதன்சொற்களை அலக்ஷியஞ் செய்தான.

அதைப்பார்த்து கிருஷ்ணபட்டர் ஓ திரிபுராந்தகா நீதனவானென்றும் நரசிம்மமேதா ஏழையென்றும் உன்கோரிக்கைப்படி நாளைக்கு அவர்வருவது அசாத்தியமென்றும் வசனித்தாய்அப்படிச்சொல்லாதே எவனதுகடாக்ஷம் அனுகினால்பிரம்மாதிகள் தங்கடங்கள் பதவிகளிற்பொருந்தி சுகத்துடன்திடமாகயிருப்பார்களோ எவன் லீலைகளுக்கு சமஸ்த பிரம்மாண்டங்களும் கிரீடைக்குகந்துகங்களாகி யிருக்குமோ அப்படிப்பட்ட ஜெகதீசன் நரசிம்மமேதாவினுடைய பக்தியெனும் வலையிற்சிக்கி அந்த மகாத்துமாவுக்கு தாசானுதாசனாகி யிருக்கிறான் மேலும் அந்த வைராக்கிய சீலனுக்கு பிரம்மாதிபதவிகள் அலக்ஷியமாகி யிருக்கிறது அவர்மகிமையை நீஅரியாய் பரம வைராக்கிய சீலர்களாகிய பாகவதஉத்தமர்கள் நிரந்தரம் பகவத்தியான நிஷ்டர்களாகிய பாலர் மத்தர் பைசாசங்களைப்போல நடப்பார்கள் ஆகையால்அப்படிபட்ட மகாபுருஷர்கள் பிரபாவம் பிரம்மாதிகளுக்கும் அரிதாகியிருக்கும் ஆதலால் என்சொல்லைக் கௌரவிக்காமல்அலக்ஷியம் செய்வையாகில்நாளையதினத்தில் அவமானமடைவாயென்றும், அந்தநரசிம்மமேதாவினிடத்தில் அபசாரிக்க பட்டதோஷம் நீங்கும்படி ஒரு திருஷ்டாந்திரம் சொல்லுகிறேன் என்று புரோகிதராகிய கிருஷ்ணபட்டர் சொல்லுகிறார் கேளும் திரிபுராந்தகனே! பண்டுபுண்ணியபுருஷனாகியும் பரமபாகவதனாகியும் அம்பரீஷச் சக்கிரவர்த்தியென்னும் உத்தமன் சப்ததீவுகளோடு கூடின பூமியையும் அளவில்லாத சம்பத்தையும் ஒப்பில்லாவாதிபத்தியுமாகிறஆக்கியாசக்தியையும் பெற்றிருந்தாலும் அந்தஐஸ்வரிய முதலானதுகளுடையநாசத்தையறிந்தவனாகி சமஸ்தத்தையும் சொற்பனத்திற்கண்ட வஸ்துவைப்போல அனித்தியமாக நினைத்து பகவானான வாசுதேவனிடத்திலேயும், அவருடையபக்தர்களான சத்புருஷரிடத்திலும், பரமமான யுக்தியுடையவனாகி இந்த பிரபஞ்சங்களெல்லாம் உடைந்த பானையோட்டுக்குச் சமானமாகவெண்ணித் தன்னுடைய மனதை ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதாரவிந்தங்களில் ஸ்தாபித்து சர்வகாலமும் தனதுகர்மங்களை யெல்லாம் எக்கியபலப் பிரதான பரமபுருஷரிடத்தில் சமர்ப்பித்து இந்த பூமண்டலத்தைப் பரிபாலஞ் செய்துக்கொண்டிருந்தான் அப்படிப்பட்ட மகாபாகவதனானவன் சுதர்மமான கர்மயோகத்துடன் கூடினபக்தியோகத்தினால் ஸ்ரீஹரியை சந்தோஷிக்கச் செய்துக்கொண்டு அனுவனுவாக சமஸ்தவிஷயங்கள் கிரகங்கள் பாரியை புத்திரர்கள் பந்துக்கள் ரதகஜதுரகப்தாதிகள் அக்ஷயங்களான வஸ்திராபரணாதி ஆயுதங்கள் அனந்தமான பொக்கிஷங்கள் இவைகளை யெல்லாம் அனித்தியமென்று நீக்கினான் அப்போது ஸ்ரீஹரியானவர் அந்த அம்பரீஷன்பக்திக்குச் சந்தோஷமடைந்தவராகி சத்துருக்களுக்கு பயங்கரமாகிய தம்முடைய சக்கரத்தை அவனுக்குக் கொடுத்தார்.

அந்த சுத்தவீரராகிய அம்பரீஷச் சக்கிரவர்த்தியானவன் தனக்குச் சமமான சீலவதிகளாகியஸ்திரீகளோடு கூடிக்கொணடு ஸ்ரீவிஷ்ணுவை ஆராதிக்கவேணுமென்ற இச்சையுடையவனாகிஒருவருஷபரியந்தம் துவாதசி விரதத்தை யனுஷ்டித்து அந்த விரதத்தினுடைய அந்தியத்தில் கார்த்திகைமாதத்தில மூன்றநாளுபவாசத்துடனிருந்து துவாதசியில் யமுனாநதியில் ஸ்நானஞ்செய்து மதுவனத்தில் ஸ்ரீஹரியை ஏளச்செய்து திருமஞ்சனம்செய்து ஆடையாபரணங்களாலங்கரித்து பக்திபூர்வகமாய் அர்ச்சனை ஆராதனைகளை நடத்தி சொர்னங்களினாலலங்கரிக்கப் பட்டதாயும் இளையவயதும் நல்லரூபமும் சாதுவாகியும் கன்றுகளுடையதுகளாகியுமிருக்கின்ற அறுபதுகோடி பசுக்களை கரவைப்பாத்திர முதலானதுகளுடன் சத்புருஷர்களான பிராமணர்களுக்கு தானஞ்செய்து அம்பரீஷச் சக்கிரவர்த்தியானவன் பாரணைசெய்யத் துடங்கினான்.

அப்போது தவசிரேஷ்டரும் கோபசொரூபருமாகிய துருவாச மகாரிஷியானவர் வந்தார் அவரைக்கண்டு அம்பரீஷன் எதிர்கொண்டுசென்று அர்க்கியபாத்தியாதிஉபசாரங்களினால் சாஸ்திரவிதிப்படி பூசித்துத் தன்வீட்டில் அவரைப்போஜனம் செய்யும்படி

Koviloor Digital Library

பிரார்த்தித்தான் அம்முனிவரும் அரசன் வேண்டு
கோளை அங்கீகரித்து மத்தியான ஸ்நானம் முதலா
கிய நித்தியகர்மத்தை முடித்து வருகிறே னென்று
சொல்லிச்சென்று காளிந்திதீரத்தில் ஸ்நானஞ்செய்து
பரப்பிரமத்தைத் தியானித்துக் கொண்டிருந்து விட்
டார் இங்கே அம்பரிஷன் வெகுநேரங் காத்திருந்தும்
துருவாசர் வராததால் வைதிகப்பிராமணர்களை வர
வழைத்து தனக்குநேரிட்ட தர்மசங்கடத்தை யறிவி
த்து, ஓ பிரம்மகுல சிரேஷ்டர்களே இதற்கு நானென்ன
செய்வேன் அதிதியாக வந்தவரைவிட்டுத் தனியே
நான் பாரணை செய்வேனேயாகில் பிராமண அதிக்கி
ரம தோஷம் சம்பவிக்கும் துவாதசிதிதியில் பாரணை
செய்யாவிட்டாலும் மகத்தாகியதோஷம் சம்பவிக்கா
மல் தகுந்தயோசனை சொல்லவேண்டுமென்று பிரார்
த்தித்தான் அப்பிராமணர்கள் யோசித்து அதிதிவரா
மலும் புசிக்கக்கூடாது துவாதசி பாரணையும் விடக்
கூடாது ஆகையால் ஒசக்கிரவர்த்தியே! திருத்துழாய்
தீர்த்தம் ஸ்வீகரித்தால் யாதொரு தோஷமுமில்லை
யென்று சொன்னார்கள்.

உடனே அரசன் எம்பெருமானுக்குத் தெண்ட
னிட்டு தீர்த்தம் திருத்துழாய் புசித்துத் துருவாசர்
வரவுக்கெதிர்பார்த்திருந்தான் ஸ்நானத்திற்குப்போ
னமுனிவன் இவிடத்தில் ராஜன் திருத்துழாய் தீர்த்
தம் பெற்றுக்கொண்டதைத் தன்யோக திருஷ்டியா
லறிந்து பற்களை நறநறவென்றுகடித்து கண்களிரண்
டுஞ்சிவந்து மிகுந்தகோபத்தினால் தேகம் துடிக்க
ஆர்ப்பரித்து வேகமாகவந்து அரசனைக்கண்டு அடா
மூடா நீவேண்டிக்கொண்டபடியால் உன்வீட்டில்புசி
ப்பதற்கு ஒத்துக்கொண்டேனே யல்லாமல் என்வீட்
டில் பிரசாதமில்லாமல் உன்னிடம்வரவில்லை இதையு
ணராமல் நான்வருவதற்குமுன் நீஎப்படி புசிக்கிறாய்
மேலும் நீஹரிபக்தனென்றும் பரமபாகவத னென்
றும் உன்வீட்டில் புசிக்க ஒத்துக்கொண்டே னல்லது
என்வீட்டில் பிரசாமில்லாம லல்லவென்று ரௌத்தி
ராகாரமாய் கண்டவர்நடுங்கக்கோபதீப்தராய்இதோ
உன்னை நாசப்படுத்துகிறேன் பாரென்று தன்ஜடை
யில் ஒன்றைப்பிடுங்கிக் காலாக்கினி ருத்திரனுக்குச்
சமானமான ஒருகிருத்தியைச் சிருஷ்டித்தார் அந்த
பூதமானது ஆக்ருஷத்துடன் கையில் கத்தியைப்பிடி
த்து அண்டாண்டங்களுமதிர கெர்ச்சித்துக் கொண்டு
தன்னை நோக்கிவருவதை அம்பரிஷன்கண்டு பயத்தை
விண்டு பகவானைத் துதிசெய்யப் பகவான்தனது சக்
கரத்தை நோக்கினார் அக்குறிப்புணர்ந்து சக்கரமா
னது கோபத்தினால் சீறிவராநின்ற பூதத்தைச்சங்கரி
த்துவிட்டு துருவாசரை தடர்ந்தது அப்போதுதுரு
வாசர் திகிலடைந்து திரும்பித்திரும்பி சக்கரத்தைப்
பார்த்துக்கொண்டு ஓடத்தலைப்பட்டார்.

பிரமனுலகத்திற்கும் கைலாயகிரிக்கும் தேவ
லோகம் முதலான திக்குகளெல்லாமோடி பிரார்த்தி
க்கும் ஒருவரும் இரக்ஷிக்காததால் வைகுந்தமா நக
ரஞ்சென்று பகவான் திருவடியில் வீழ்ந்து பிரார்த்தி
க்க சாக்ஷாத் லட்சுமிநாதன் ஓய்துருவாசரே! உன்
னைக் காப்பதற்கு என்னால்முடியாது நீ அபசாரப்ப
ட்ட அம்பரிஷச் சக்கரவர்த்தியின் திருவடியில் சரண
மடைவீராகில் அவன் உன்னைரக்ஷிப்பான் நானேபக்
தபராதீனன் ஆகையால் இந்தகாரியம் நடப்பது அ
சாத்தியம் சீக்கிரம் அவிடத்திற்குப்போம் என்ற பக
வான் மொழியைக்கேட்ட துருவாசர் "லஜ்ஜையான
லுமாகட்டும் பொஜ்ஜைபிட்டாற் போதுமென்பது
போலவும், "மானங்கெட்டாலும் பிராணனிருந்தால்
போதுமென்று" உயிரிருந்தால் உப்புமாரியாகினும்
ஜீவிக்கலாமென்று அதிவேகமாகி ஓடிவந்து அம்பரி
ஷச் சக்கிரவர்த்தி திருவடியில் சரணாகதியடைய அம்
பரிஷன் சக்கரத்தைத் துதிசெய்ய சக்கரமானது கட
லில் ஸ்நானஞ்செய்து முன்போலவே அந்நகரத்தில்
காவலாக விருந்தது.

பின்பு அம்பரிஷன் துருவாசருக்குப் பிரசாதமி
ட்டுப் புசிக்கச்செய்து ஆயாசம்போக்கினான் உடனே
துருவாசமுனிவர் அரசனிடத்தில் விடைபெற்றுதன்
மனதிற்கிசைந்தபடி சென்றார் ஆகையால் பகவானி
டத்தில் அபசாரப்பட்டால் பாகவதர்கள் புருஷாகா
ரத்தினால் மன்னிக்கப்படுவார்கள் பாகவதர்களிடத்
தில் அபசாரப்பட்டால் பகவானாலும் மன்னிக்கமுடி
யாது ஓதிரிபுராந்தகனே! பரமபாகவதர்கள் பெரு
மையை சாக்ஷாத் ஸ்ரீபாண்டுரங்கனே சொல்லவேண
டுமல்லால் அன்னியர்களால் சாத்தியமாகா தென்று
சொல்லிப் புரோகித கிருஷ்ண பட்டன் தன்வீடுசேர்
ந்தான்.

இவிடத்திவ விருத்தாந்த மிப்படியிருக்க அவிட
த்தில் நரசிம்மமேதா மறுநாள் காலையிலெழுந்து வா
மனஸ்திதிசெய்து ஸ்நானசந்தியா வந்தனதி நித்திய
கர்மங்களை நிறைவேற்றி புத்திரமித்திராதிகளையும்பா
கவதர்களையும் பின்னழைத்துக்கொண்டு தாளம் மிரு
தங்கம் முதலாகிய வாத்தியங்களுடன் பகவந்நாமசங்
கீர்த்தனங்களை செய்துக்கொண்டு வீட்டை விட்டுப்
புறப்பட்டு சியாமலாபுரத்திற்குப் போய்க்கொண்டி
ருக்கையில் புண்டரீகவரதன் ஸ்ரீருக்குமணிசத்தியபா
மை காளிந்தி ஜாம்பவதி நக்னஜித்து முதலாகிய பத்

Koviloor Digital Library

திரிசனும் கோபிகளும் உத்தவ அக்ரூரகுசேலஸ்ருத் தேவர் முதலாகிய பக்தர்களும் ஸூத்தகி சஞ்சயன் முதலாகிய பரமானந்த ரங்கர் பிரகல்தனன் நாரத பராசர புண்டரீக வியாசஅம்பரீஷ சுகசௌனகபீஷ்ம ருக்குமாங்கத அர்ச்சுனவசிஷ்ட விபீஷணர் முதலாகிய பரமபாகவதர்களும் மூர்த்திகரங்களாகிய சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களும் கங்கையமுனை கோதாவரி சரஸ்வதி நர்மதா சிந்து காவேரி முதலாகிய நதிகளும் இந்திராதி தேவர்களும் குபேராதி யக்ஷர்களும், அஷ்டவசுக்களும், பிரகஸ்பதி பிரமுகபுரோகிதர்களும், சநகாதிசேனுதிபதிகளும் பிருகுமுதலாகிய மகரிஷிகளும், நாரதாதிதேவரிஷிகளும்சித்திரரதாதிகந்திருவர்களும், கபிலாதிசித்தர்களும் சகலயாதவர்களும்,வியாசாதிமுனிவர்களும் சுக்கிராதிகவிகளும் மூர்த்திகரம் நிறைந்த மேருமுதலாகிய பர்வதங்களும் பின்றொடரவந்து நரசிம்ம மேதாவுடன் கலந்துவந்து கொண்டிருந்தார்.

அப்போது அருந்ததி அனுசூயை சாவித்திரி முதலாகிய பதிவிரதா சிரோன்மணிகள் மங்களபதார்த்தங்களைக் கொண்டுவந்தார்கள் சாதுவாதங்களும் தேவதுந்துபிகளும் கடலொலிபோல சப்திக்கதேவர்கள் மலர்மாரி பெய்தார்கள் அப்போதுபகவான்ரே மனத்தினால், தேவகின்னர கிம்புருஷ சித்தவித்தியாதிகள் சகலபண்டுபலாதி வரிசைக ளெடுத்துவந்தார்கள் இப்படிப்பட்ட விபவத்துடன் நரசிம்மமேதா பியமலாபுரம் வந்துசேர்ந்தார் அப்போது விட்டலதேவர் இரண்டுதூதர்களை யனுப்பி தமதுவரவை திரிபுராந்தகனுக்கு அறிக்கைசெய்தார் அவனந்த ஊராருடன் எதிர்கொண்டுவந்து இந்த கூட்டத்தைக் கண்டு லஜ்ஜையடைந்து ஸ்ரீமத் பாண்டுரங்கருக்கும் நரசிம்மமேதா முதலாகியபாகவதசிரேஷ்டர்களுக்கு வந்தனஞ்செய்தான் அப்போது புரோகிதராகிய கிருஷ்ணபட்டர் பரமானந்த மடைந்தவராகி அந்தக்கூட்டத்தின் நடுவிலிருக்கும் ஸ்ரீருக்குமணிநாதனுக்கு தீர்க்கதெண்டனிட்டு பண்டரிநாதா! உமக்- கந்தரங்கராகிய நரசிம்மமேதாவுக்காக எங்களை யனுக்கிரகித்து தெரிசனந்தந்தீர் ஆகையால்எங்கள்ஜென்மங்கள்சபல்லியமாயிற்று நாங்கள்தன்னியர்களானோம் இனிகர் மந்திர அம்சத்தை நீரேசிர்வதிக்க வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்தார் அப்போது பகவான்திரிபுராந்தகனைப் பார்த்து நேற்றைபதினம் நீர் கிருஷ்ண பட்டருடன் சொல்லியனுப்பியதைப்போல, நரசிம்ம மேதா தன் சக்திக்குத்தக்க வரிசைகள் கொண்டுவந்தார் எங்கள் கௌரவத்திற்குத் தகுந்தபடி என்ன நீ ஜாக்கிரதை செய்தாயென்று கேழ்க்கையில், திரிபுராந்தகன் அவமானமடைந்து பதிலொன் றுஞ் சொல்லுவதற்கு கூடாமல் மௌனமாக யிருந்தான்.

அப்போது பகவான் திரிபுராந்தகனைப் பார்த்து விவாகமாயினும் விவாதமாகினும் தகுந்தவர்களுடன் செய்வது மேன்மையாகையால் நினதுசம்பந்தம் எங்கள் கௌரவத்திற்குத் தகுந்ததல்ல ஆகினும் நீசங்கைப்படாமல் உன்னால் சேர்க்கப்பட்ட பதார்த்தங்களை எங்களுக்குக் காட்டிப்பின்பு உன்னிஷ்டப்படி சிலவு செய்யும் என்றார் அதைக் கேட்டுத் திரிபுராந்தகன் வாசுதேவனைப் பார்த்து நீங்கள்யாவர் எனக்குச்சொல்லுமென்ன? பகவான் புன்னகைசெய்து, ஓபிராமணா துவாரகைநகரத்தில்இந்நரசிம்மமேதாவுக்கு அநேக வர்த்தகசாலைகளுண்டு அதிலொரு வர்த்தகசாலைக்கு இந்த மகானுபாவர் என்னை காரியகர்த்தாவாக நேமித்திருக்கிறா என்பேர் சியாமளா நான் இவருக்கு மிகவும்பிரியன் ஆகையால் யாவத் துவேலைகளும் என்னைமுன்னிட்டுக் கொண்டேசெய்விப்பார் இந்தவிவாகத்திற்காக என்னை அழைப்பித்தபடியால் நான் வந்தேன் மேலும் இவருடைய சர்வலௌகிக காரியங்களையும் நானே நடப்பித்தேன் ஆகையால் நீஉமதுபந்துமித்திரர்களை அழைத்துக்கொண்டு துரிதத்தில்வாருமென்று சொல்லியனுப்பி விசுவகர்மனை நினைத்தார் அவன் துரிதமாகவந்து பகவானுக்கு தீர்க்கதெண்டனிட்டு அடியேனை வரவழைத்த காரணம்யாதோ தெரிவிக்க வேண்டுமென்று கைகுவித்துநிற்க பகவான் அவனைப்பார்த்து சிற்பசாஸ்திரத்தில் மிகவும்தேர்ந்த வல்லவனே! இவ்விடத்தில் கலியாணமண்டபம் ஒன்று இயற்றுமென்று நேமிக்க அவன் அப்படியே செய்கிறேனென்றுசொல்லிக் கொத்துசித்திரவேலைகளினால் பார்த்தவர்கள் கண் பிரமிக்கும்படி ஒருநிமிஷத்தில் மங்களகரமாக இயற்றினான் பின்பு காமதேனுங் கற்பகத்தருவும் அவ்விடத்திற்குவந்து சகல பதார்த்தங்களையும் அபாரியாகக் கொடுத்துக் கொண்டிருந்தது கள் அப்போதுதிரிபுராந்தகன்பந்துமித்திரர்களுடன் வந்துசேர்ந்தான் இந்திராதியர்கள் மாப்பிள்ளையை யலங்கரித்தார்கள் சசிதேவிமுதலாகியவர்களும் மணப்பெண்ணுக்கு மேன்மையாகிய அலங்காரத்தைச் செய்தார் பிறகு சுபமுகூர்த்தத்தில் பகவானுடைய நேமனத்தினால் கலியாண மகோற்சவம் நடத்தப்பட்டது.

பகவானு ஸ்ரீருக்குமணிதேவியும் வதுவரர்கள் அருகில் உட்கார்ந்தார்கள் தேவர்கள் சாதுவாதமும் விப்பிரர்கள் ஆசிர்வாதமும் தேவதுந்துமி ஒலியும் கடலொலிக்கு மிஞ்சியிருந்தது. அப்போது வாசு

Koviloor Digital Library

தேவனும் ருக்குமணிமுதலான பத்தினிகளும் தேவ ரிஷிசங்கமும், பிரம்மதேவன் சரஸ்வதியும், உமாம யேசனும், இந்திரன் சசிதேவியும் ஆசிர்வாதங் கூறி னர்கள் விவாககாரியங்கள் யாவற்றையும் பகவான் இஷ்டப்படியாக இந்திராதிதேவர் நிறைவேற்றினர் கள் சுமங்கிலிகள் செய்யவேண்டிய காரியங்களை அரு ந்ததிமுதலாகிய ரிஷிபத்தினிகளும் சசிதேவி முதலா கிய தேவபத்தினிகளும் நிறைவேற்றினர்கள் அந்த விவாகத்திற்காக வந்தவர்களுக் கெல்லாம் விசேஷ வஸ்திராபரணங்கள் முதலாகியதும் கொடுக்கப் பட் டது அப்போது சாக்ஷாத் பகவான்.

சுலோகம்.

"ஹரிர்யத்ர க்ருஹே புங்தே
தத்ரபங்த ஜகத்ரய,"

என்றால் விவாககூட்டத்துடன் உட்கார்ந்து புசி ப்பதினால், பூவுலகத்தோர்களும் திருப்தியாகினர்க ளென்று வேறுசொல்லவேண்டியதில்லை, இப்படி பக வான் அதிகவிபவத்துடன் விவாககாரியங்களை நிறை வேற்றி சம்பந்திகளை வெகுமானித்துஇருப்பிடத்திற் கனுப்பி நரசிம்மமேதாவை புத்திரமித்திராதி பந்துக் களுடன் அவர்வீட்டில்விடுத்து, ஓபாகவத சிகாமணி யே! நான் நிரந்தரம் உன்னருகில் இணைபிரியாமலிரு க்கிறேன் நீர் துதிசெய்த போதெல்லாம் உன்கண் முன்தோன்றி உன்காரியங்களை நிறைவேற்றுகிறேன் உனக்குத்தன் திரவியத்தைக் காப்பாற்றும் எனது விபூதியாகிய சேதனசேதனங்களை நானாக பாவனை செய்யும்உமக்கும் உம்மால் அபிமானிக்கப் பட்டவர் களுக்கும் எனதுசாயுச்சியம உள்ளங்கைநெல்லிக்கனி யைப் போலிருக்கும் என்று அனுக்கிரகஞ் செய்து தன் பரிவாரங்களுடன் மறைந்து போயினர்,

நரசிம்மமேதா தெரிசன

உண்டிகொடுத்த

அத்தியாயம்.

சுலோகம்.

"ஸமதுஃஸேதகஸ் வஸ்த்த
ஸ்ஸமலோஷ்டாஸ்மகாஞ்சந:
துல்யப்ரியா ப்ரியோதீர
ஸ்துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி."
"மானவமான யோஸ்துல்ய
ஸ்துல்யோ மித்ராரி பக்ஷயோ:
ஸர்வாரம்ப பரித்யாகி
குணாதீதஸ்ஸ உச்யதே."

பின்பு நரசிம்மமேதா சுகதுக்கங்களையும் பாஷா ண சொர்ணங்களையும், பிரிய அப்பிரியங்களையும் நிங் தை துதிகளையும் மானம் அவமானங்களையும்,சத்துரு மித்துருக்களையும், சமமாயெண்ணிக்கொண்டு சகல ஆத்துமாக்களையும் எம்பெருமானாகபாவித்து, உத்தி யோகங்கள் யாவற்றையும்நீக்கி மூன்று குணங்களுக் கும் அதீதனாகி அனவரதமும் பகவத்தியான குதூ கலராகி யிருக்குங்காலத்தில், துவாரகைக்கு யாத்தி ரையாய் போகும் பிராமணர்கள்சிலர் அவ்விடத்திற் குவந்து இந்தஊரில் துவாரகைக்கு உண்டிகொடுப் பவர்களுண்டோவென்றுவிசாரிக்க சர்து ஜெனங்கள் விபவங்களைக்கண்டு நிர்நிமித்தமாகப்பொறாமைப்படு கிற சிலதுஷ்டர்கள் அந்தப்பிராமணர்களைப்பார்த்து இந்தஊரில் நரசிம்மமேதா என்னும் ஓர்பிராமணனு ண்டு அவன்மிகுந்த தனவான் ஆகையால்எந்தஊருக் காகிலும் எவ்வளவு மொத்தத்தொகைக்காகிலும் உண்டி யைக் கொடுப்பான் என்றுசொல்ல, அந்தப்பிராமண ர்கள் நரசிம்மமேதா வீட்டை விசாரித்துக் கொண்டு போய் அவரைப்பார்த்து ஓவீப்பிரரே! நாங்கள்துவா ரகைக்கு யாத்திரை போகுமவர்கள் வழியில் சோரர் கள் பயத்தினால் திரவியத்தை எங்களுடன்கூடக்கொ ண்டுபோவதற்கு அனுகூலப் படவில்லை, அருநூறு விராகனுக்கு துவாரகைக்கு உண்டிகொடுக்க வேணு மென்று பிரார்த்தித்தார்கள் அதைக்கேட்டு நரசிம்ம மேதா தனக்குள்தானே சொல்லிக் கொள்ளுகிறார் நான் நிர்பாக்கியன் பிரதிதினமும் குடும்பத்தைப் போஷிப்பதற்கே நிர்வாகமில்லாமல் ஜீவனஞ் செய் வது அரிதாகியிருக்கிறது இப்படிப்பட்ட நான்பெரு த்ததொகைக்கு உண்டிகொடுப்பதற்கு எப்படி சமர்த்த னாகுவேன் இவையோசிக்க யாரோ பொறாமைகொ ண்டவர்கள் இவர்களை என்னிடத்திற் கனுப்பினர்க ளென்று தோன்றுகிறது ஆகிலுமென்ன.

சுலோகம்.

"சர்வஸ்ய சாஹம் ஹ்ருதிசன்னி விஷ்டோ
மத்தஸ்ம் ருதிக்ஞான மபோஹநஞ்ச:
வேதைஸ்ச ஸர்வை ரஹமேவவேத்யோ
வேதாந்த க்ருத்வே தவிதேவசாஹம்."

என்றால், சகலபிராணிகள் இருதயத்தி னிடத்தி ல் நான் வசிக்கிறே னென்றும், அவர்களுக்கு வித் தையும் க்ஞானமும் மந்தமும், என்னாலேயே உண் டாகி யிருக்கிறதென்றும், சகல வேதங்களை அரியத் தகுந்தவனும் வேதங்களை வெளிப்படுத்தி னவனும் வேதங்களினும் மர்மங்களை அரியப்பட்டவனும் நா னேயென்றும், ஸ்ரீபகவத்கீதையில் பகவான்சொல்லி

Kaviloor Digital Library

யிருக்கிறானல்லவா? அப்படியிருக்கபொறுமைகொண்டவர்களென்று சிலரை நான்என்னுவது ஞாயமல்ல சகலமும் பகவானே செய்துகொண் டிருக்கிறான் ஆகையால் துவாரகை யாத்திரை செய்யக் கோரிய பிராமணர்கள் மூலமாய் ஸ்ரீ துவாரகைநாதனே எனக்கு திரவியத்தைக் கொடுக்கிறார். இதை வேண்டாம் என்று சொல்லாமல் அவர்களெண்ணப்படி ஒருஉண்டி எழுதிக்கொடுத்து காணிக்க திரவியத்தைப் பெற்றுக் கொண்டு ஈஸ்வரன் பிள்ளைகளாகிய சேதனர்களில் ஏழைகளானவர்களுக்கு உபயோகப் படுத்துகிறேன் அவனியிலும் இவர்கள்மூலமாக எனக்கிந்த திரவியத்தைக் கொடுத்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமா துவாரகையில் இவர்களுக்குத் திரவியத்தை செலுத்தக் கடவர். ஆகையினால் சர்வக்ஞராகிசர்வத்தராசியபகவானுக்கிது ஒருலீலையாகி யிருக்கும் என்று தன்மனதில் நிச்சயித்துத்தானந்தத்திரவியத்தைப் பெற்றுகொண்டு அவர்கையில் ஒருஉண்டியை எழுதிக்கொடுத்தார்.

எப்படியென்றால், ஸ்ரீ துவாரகையி லிருக்கும் வர்த்தகசாலைக்கு அதிகாரியாகிய சியாமளாசா அவர்களுக்கு புராதனகடத்திலிருக்கும் நரசிம்மமேதா அநேகவந்தனங்கள் செய்து எழுதிக்கொண்ட விண்ணப்பம் என்னவென்றால், ஸ்ரீதுவாரகை யாத்திரைசெய்யும் சாதுக்களாகிய பிராமணர்கள் அறுநூறு விராகன் என்கையில் கொடுத்தார்கள் அதற்காக நான் கொடுத்த இந்த உண்டியைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள் இந்தவுண்டியைப் பார்த்தவுடனே இதற்குத் திரவியத்தை அவிடத்தில் செலுத்த வேணுமென்று பிரார்த்திக்கின்றேன் என்று எழுதிதன் கைபெழுத்துச்செய்து பிராமணர்களுக்குக் கொடுத்தார் அவர்கள் உண்டியைப் பெற்றுக்கொண்டு அதிக களிப்புடன் துவாரகைக்குப் போயினார்கள் பின்பு நரசிம்மமேதா,

ஸ்லோகம்.

"தேயம் தீனஜனய சவித்தம்"

என்றபடி, அந்ததிரவியத்தை ஜெகதீசன்பிள்ளைகளாகிய தீனர்கள்விஷயத்தில் வினியோகித்தார், பின்பு யாத்திரைக்கேகின பிராமணர்கள் துவாரகையைச் சேர்ந்து, ஸ்ரீகிருஷ்ணபகவானைசேவித்து அந்த ஊரிலிருப்பவர்களை நோக்கிப் புராதனகடத்தி லிருக்கும் நரசிம்மமேதாவி னுடைய வர்த்தகச் சாலைக்கு அதிகாரியாகிய சியாமளா யார்யென்று விசாரிக்கையில் அவர்கள் இந்தஊரில் நரசிம்மமேதாவுக்கு வர்த்தகசாலையில்லை அப்படிக்கிருக்க சாலைக்கு அதிகாரி எப்படியுண்டாகி யிருக்கலாமென்று பரியாசஞ்செய்தார்கள் அதைக்கேட்டு யாத்திரைவந்தவர்கள் திகைத்து துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள் இப்படிக்கிருக்க, தேவாதிதேவனாகிய ருக்குமணிநாதன் ஒரு வியாபாரியைப் போல வேடந்தரித்து உத்தவர் அக்ரூரர்கள் தன்னைப்பின் தொடர்ந்துவர, ஒருதிவ்வியமாகிய வண்டியின்மேலேறி அவிடத்திற்குவந்து துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பிராமணர்களைப் பார்த்து வண்டியைவிட்டிறங்கி ஓபிராமணகுல சிகாமணிகளே! புராதனகடத்திலிருக்கும் நரசிம்மமேதாவினுடைய வர்த்தகசாலைக்கு அதிகாரிநானே என்பேர் சியாமளசா! என்எஜமான துவாரகையாத்திரை செய்யும் பிராமணர்களுக்கு அறுநூறுவிராகனுக்கு உண்டிகொடுத்தனுப்பேறும் அந்தஉண்டியை அவர்களால்பெற்றுக் கொண்டு துரிதமாக அவர்களுக்குத் திரவியத்தைக் கொடுத்தனுப்பும்படி எனக்குஓலையெழுதியிருக்கிறார் நான் அந்தசாதுஜன சிகாமணியாகிய என்எஜமானது உத்தரவை சிரமேற்கொண்டு அந்தப்பிராமணர்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன் உங்களைப் பார்த்தால் அந்தயாத்திரை ஜெனங்களாயிருக்கலாமென்று தோன்றுகிறது எனது எண்ணம் உண்மையாகுமாகில். நீங்கள் என்னெஜமான் எழுதிக்கொடுத்த உண்டியைக் கொடுப்பீராகில் உங்களுக்கும் திரவியத்தைச் செலுத்துகிறேனென்றார்.

அப்போது அந்தப்பிராமணர்கள் செவிக்கமுதமாகிய அந்தவார்த்தைகளைக் கேட்டு பரமானந்தமடைந்தவர்களாகி ஓ சியாமளா! நாங்களே யாத்திரைவந்த பிராமணர்கள் இதோ நரசிம்மமேதா எங்களுக்கு எழுதிக்கொடுத்த உண்டியென்று அவர்கையில் கொடுத்தார்கள் அதை அதி வினயத்துடன் சியாமளசா இரண்டுகைகளாலும்வாங்கிக் கண்களில்ஒத்திக்கொண்டு சிரமேற்கொண்டு ஆனந்தக்கண்ணீர் உதிர்த்து உண்டியை வாசித்துக்கொண்டு ஓமகாத்துமாக்களே! என்எஜமானுக்கு அனந்தம் வர்த்தகசாலைக்கு அதிகாரியாயிருந்தபோதிலும் நான் அவருக்குப்பிராணனாகி யிருப்பேன் மேலும் நான் அவரிடத்தில சம்பளத்திற்காக யாசித்து அமர்ந்தவனல்லன் அவரது நற்குணமாது என்னைத் தொண்டனாக ஆட்கொண்டது நான் அவருக்கும் அவர் எனக்கும் பிராணபதமாகி யிருப்போம் அவரெப்படி நிரந்தரம் பிரியயுக்தராகி என்னையே துதிசெய்துக் கொண்டிருப்பாரோ அப்படிநானும் அவருக்கும் அன்னியமரியாமல்அனவரதமும்அவரையேதுதிசெய்துக்கொண்டிருப்பேன் அவரே எனக்கு சர்வவிதபந்துவாகி யிருக்கிறார் என் தேகம் மாத்திரம் இவிடத்தி லிருக்கிறதே யல்லது

Koviloor Digital Library

என்மனது அவரிடத்திலேயேலயித்திருக்கிறது ஆகை யால் மகானுபாவர்களாகிய உங்கள் முகாந்திரமாக என்னெஜமானன் கையெழுத்தைப் பார்க்கப் பெற் றேன் இன்றெனது ஜென்மசாபல்ய மாச்சுது இதோ உங்கள் திரவியத்தைப் பெற்றுக்கொள்ளுங்களென்று சொல்லி வண்டியில்கொண்டுவந்த திரவியத்தைஅவர் களுக்குக் கொடுத்து மறைந்து போயினர்.

அப்போது அந்தப் பிராமணர்கள் ஆச்சரியப் பட்டு திரவியத்தை எத்தனைதரம் எண்ணினும் மித மின்றி வளர்ந்துகொண்டிருக்கது. அவர்களிந்த அற் புதத்தைக்கண்டு இதுபகவான் லீலையென்று உறுதி கொண்டு அந்தத் திரவியத்தை தீன ஜெனங்களுக்கு உபயோகப்படுத்தி, மறுபடியுந்திரும்பி புராதநகட த்திற்குவந்து நரசிமமமேதாவுக்கு தீர்க்கதெண்டனி ட்டு நடந்த விருத்தாந்தங்களை அவருக்கு விண்ணப்ப ஞ்செய்து, ஓமகாத்துமாவே உமதுகிருபையினாலெங் களுக்கு ஸ்ரீகிருஷ்ணபரமாத்துமா தெரிசனங்கொடுத் தார் அதினால் நாங்கள் தன்னியர்களானோம் ஏழைக் குப் புதையலகப் பட்டதுபோல, உமது அனுக்கிரக ததினால் எங்களுக்கு அகஸ்மாத்தாய் பகவானுடைய தெரிசனம் லபித்தது ஆகையால் இனிஎங்களை உமது தொண்டர்களென்று அபிமானிப்பீரே யாகில் எங்க ளுக்கு மறுபடியும் ஜென்மம்சித்திக்கமாட்டாது என் று விண்ணாப்பஞ்செய்து அந்தமகாத்துமானது அனு க்கிரகமும் நேமனமும்பெற்று தங்கள் ஊருக்குப்போ யினார்கள் பின்பு நரசிம்மமேதா பகவானுடைய கல் யாணகுணங்களைக் கொண்டாடிக்கொண்டு ஆனந்த பரவசராகி பிரபஞ்சத்தை மரந்து பகவானைத் துதி செய்துக் கொண்டிருந்தார்.

நரசிமமமேதாதன்புதல்விக்கு வரிசைதந்த அத்தியாயம்.

இத்தன்மையாக நரசிம்மமேதா வைராக்கியசீல ராகியிரந்தாம் பகவத்தியானஞ்சேய்துக் கொண்டு சம்சாரத்திலிருந்தும்.

சுலோகம்.

"மிதிலாயாம் ப்ரத்தீப் தஸ்யாம்
நமே கிஞ்சித் ப்ரதஃபதி"

எனஞல், அச்னிபத்தி யெரிந்துக் கொண்டிருக் கும் மிதிலையில் என்திரவியமெதுவும் சாம்பலாக வில் லையென்று சொல்லிய பரமயோகிகளாகிய ஜனகசக்ர வர்த்தியைப்போல எதிலும் எட்டாதிருந்தார் இப்ப டிக்கிருக்க அவர்புதல்வி சம்பந்திவீட்டில் புஷ்பவதி யாகியதாய் சங்கதிதெரிந்து அவர்பாரியாள் பர்த்தா வைப்பார்த்து என்பிராணநாதா நமது புதல்விக்குச் சருக்க வரிசைகளைக் கொண்டுபோய் அவள்புருஷன் வீட்டில் கொடுத்துவருவது நமக்குகர்மமென்றுவிண் ணப்பஞ் செய்தாள் அதைக்கேட்டு நரசிம்மமேதா ஓவனிதையே! எனக்குண்டாகிய தனம் ஹரிநாமம் அதனை வரிசைகொண்டு போகிறேனென்றுசொல்லி கையில் தாளமும் தம்பூரையும் பிடித்துக் கொண்டு சம்பந்திவீட்டிற்குப் போயினார் அப்போதவிடத்திலி ருந்த பந்துக்கள் இவரைப்பார்த்து இந்தப் பாக்கிய வான் எவ்வளவு் ஆச்சரியமாக காரியத்தை நிறைவே ற்றுகிறான் பாருங்கள் புஷ்பவதியாகிய புத்திரிகைக் குத் தம்பூரையும் தாளத்தையும்வரிசையைக்கொண்டு வருவதைப் பார்த்தீர்களாயென்று பரியாசஞ் செய் தார்கள் இந்தவார்த்தைகளைக் கேட்டு அவர் புத்திரி சகிக்காமல் அழத்தொடங்கினாள் அதைக் கேட்டு நர சிம்மமேதா பந்துக்களை நோக்கி உங்களுக்கென்ன வரிசைகள் வேண்டும் உமக்கிஷ்டமான வஸ்துக்களைக் கொண்டு வந்துகொடுக்கிறேன் யாராருக்குஎந்தெந்த பதார்த்தங்களில் அபேக்ஷை யுண்டோ அப்படிப்ப ட்ட பதார்த்தங்களை அரிதாகுமென்று எண்ணங்கொ ள்ளாமல் ஒரு ஓலையிலெழுதித் தாருங்கள் நான் ஒரு க்ஷணநேரத்தில் அந்தவஸ்துக்கள் யாவற்றையும் வர வழைத்து, உங்கள் யாவர் மனோரதங்களையும் பூர்த்தி செய்கிறேன் என்றுசொல்லவே அவர்களில் ஒருவன் நான் எழுதுகிறேனென்று சொல்லி நரசிம்மமேதாவு க்கு எதிரில் உட்கார்ந்து ஒருஓலையை எழுத ஆரம்பி த்தான் அப்போது அவ்விடத்திலிருந்த பந்துக்கள் மருமகனுக்கும் புதல்விக்கும் பந்துக்களுக்கும் அரி தாகிய வஸ்திராபரணங்களும் வேண்டுமென்று அவர வர்கள் இஷ்டப்படி வெவ்வேறாக எழுதினார்கள்.

சுலோகம்.

"ஜீர்பந்தே ஜீர்பதஃ சேசா
தந்தா ஜீர்பந்தி ஜீர்பதஃ
சஹஸ்ரோத்ரே சஜீபதே
த்ருஷ்ணைகா நிருபத்ரவா."

எப்படியெனில்,புருஷனுக்குநாளுக்குநாள் தேரே கம் தளர்ந்து மயிர்களும் பற்களும் செவிகளும் கண்க ளும் துர்ப்பலம் அடைந்து கொண்டிருந்தாலும் ஆ சைமாத்திரம் உபத்திரயமின்றி விருத்தி யடைந்துக் கொண்டிருக்கும் என்ற வாக்கியத்திற் கிணங்க அவி டத்தில்கூடியிருக்கும் பந்துஜெனங்கள் பேராசையு டன் கூடினவர்களாகி ஒவ்வொருவரும் லக்ஷத்துக்கு மேற்பட்ட மிதமிஞ்சின ஆபரணங்களை அபேக்ஷித்து

Koviloor Digital Library

எழுதினார்கள் இதுகளையறிந்த நரசிம்மமேதா! யாவற்றிற்குஞ் சம்மதித்து, எழுதுமவனைப்பார்த்து உமக்கிஷ்டமாகிறவற்றையும் அந்தஓலையில் எழுதுமென்றார் அவன நரசிம்மமேதா நிர்ப்பாக்கியனென்றும்பயித்தியக்காரனென்றும் நினைத்து எனக்கொரு குண்டுக்கல் வேணுமென்று அந்த ஓலையில் எழுதினான் அப்போது நரசிம்மமேதா அந்தஓலையை வாங்கிக்கொண்டு திரும்புங்காலையில அவர்நினைவை யறிந்து ஊழியன் வேடந்தரித்தது தன்னருகில்வந்து நின்றிருக்குமஸ்ரீபாண்டுரங்கனைப் பார்த்து, அவ்வோலையை அவர்கையில்கொடுத்து ஓய்சியாமளா நீ அதிக வேகமாகச்சென்று இவ்வோலையிலெழுதியிருக்கப்பட்ட பதார்த்தங்களை ஒருவண்டியில் பத்திரமாக வைத்துக்கொண்டு வாருமென்று நேமித்தார்.

ஊழியன் வேடம்பூண்ட புண்டரீக வரதன் மகாபாக்கியமென்று சொல்லி அந்தஓலையைப்பெற்றுக்கொண்டு ஓட்டமாயோடி ஒருக்ஷணத்திற்குள்ளாக ஓலைச்சீட்டில எழுதியிருந்த சகல பதார்த்தங்களையும் வண்டிமேல் வைத்துக்கொண்டுவந்தார் உடனே நரசிம்மமேதா ஓலைச்சீட்டில் எழுதியிருக்கிறபடி அவரவர்கள் கோரிய பதார்த்தங்களை அவரவர்களுக்குக் கொடுத்து ஓலையை எழுதினவனுக்கு அவன்கோரியபடி குண்டுக்கல்லைக் கொடுத்தார் இந்த அற்புதத்தைப்பார்த்து யாவரும் ஆச்சரியப்பட்டு நரசிம்மமேதாவின் மகிமையைக் கொண்டாடிபின்பு ஓலையையெழுதினவனைப்பார்த்து ஓய்பிராமணா நீ கற்பகத்தருவைச்சேர்ந்தும் உனதரித்திரம் உன்னை எதையும் அபேக்ஷிக்கவொட்டாமல் செய்தது என்று அவனைப்பரியாசஞ்செய்தார்கள் மேலும் அப்போதவிடத்தில் கூட்டங்கூடியிருந்த பக்தஜனங்கள் பரிசாரகவேடம் பூண்டவராகிய கோபாலனை பார்த்து நீர்ஆரையா உமது வாசபூமியாது உனது பேரென்னவென்று கேட்கப்பகவான் சிரித்துக்கொண்டு அவர்களைப்பார்த்து இந்த நரசிம்மமேதாவுக்கு துவாரகையில் அனந்தம் வர்த்தகசாலைகளுண்டு அதிலொரு வர்த்தகசாலைக்கு நானே முதல்வன் இவர் அந்தரங்கத்தை எனக்குமாத்திரம் அறிவித்துக் கொண்டிருப்பார் அன்னியிலும் நான் இவரை ஒருநிமிஷமும் பிரியாமல் கூடவேயிருப்பேன் இவர் போகக்ஷேமங்களை நானே வகித்துக் கொண்டிருப்பேன் இவரும் என்னிடத்தில மிகுந்த பிரீதியுடையவராகி பயமற்றவராய் கோரிக்கை ஏதுமில்லாதவராகியிருப்பார் என்பேரோ சியாமளசா இவர்புதல்விக்கு வரிசைகள் கொடுத்துப் போவதற்காக எனது எஜமானன் நினைவையறிந்து வந்தேன் என்றுசொல்லித் தான் நினைத்த மாத்திரத்தில் சகலப்பதார்த்தங்களையும் வரவழைத்து பந்துக்களையும் மற்றவர்களையும் உட்காரவைத்து பஞ்சசர்க்கரான்னத்துடன் புசிக்கச்செய்து திவ்வியமாகிய பரிமளங்கள் கூடியசந்தனமும் புஷ்பதாம்பூலங்களையுங்கொடுத்து நரசிம்மமேதாவின கழுத்தில ஒருதிருத்துழாய் மாலையைப்போட்டு மறைந்துபோயினார்.

அப்போது அவ்விடத்தில் யாவரும் இது ஸ்ரீபாண்டுரங்கன் லீலையென்று திடங்கொண்டு நரசிம்மமேதாவின் மகிமைகளைக்கொண்டாடி அவர்விபவத்தை பலவிதங்களாகத் துதிசெய்தார்கள், பின்பு விட்டலநாதன் பரம கிருபையினால் நரசிம்மமேதாவின் கழுத்தில்போட்ட திருத்துழாய் மாலையானது அவர் பகவந்நாம சங்கீர்த்தனைகள் செய்யுங்காலத்திலெல்லாம் அவர்கழுத்தில் பிரகாசித்து, மற்றகாலங்களிலது மறைந்திருக்கும் இப்படியிருக்க இந்த அற்புதத்தைக் கேட்டு அந்த தேசத்தையாளும் ராஜன் நரசிம்மமேதாவினுடைய மகிமையைப் பரீக்ஷித்துப் பார்க்க வேணுமென்று அவரிடத்திற்குவந்து கழுத்திலிருக்கும் திருத்துழாய் மாலையைக் களைந்து தன் கையில் வைத்துக்கொண்டு ஓ நரசிம்மமேதா நீ உண்மையாக பகவத்பக்தனாகில் யாவரும் பார்த்துக்கொண்டிருக்க உன்கழுத்தில் முன்போல மற்றொருமாலை வரவேணும், அப்படி அம்மாலை வராவிடில வேடம்பூண்டவனென்று நிச்சயித்து உன்னை சிக்ஷைசெய்வேனென்று சொன்னான் அப்போது நரசிம்மமேதா பகவானைத் துதித்துக் கொண்டிருந்தார்.

எத்தனையாகத் துதிசெய்த போதிலும் அவர் கழுத்திற்கு மாலைவரவில்லை ஏனெனில் பகவான் நரசிம்மமேதாவின் வாக்கினால் நிர்தாஸ்துதிக்கு அபேக்ஷித்து மாலையை அளிக்காமலிருந்தார் இதைக் கண்ட அரசன் இந்தவேஷக்காரன் இந்திரஜாலங்கள் செய்து உலகத்தாரை பிரமிக்கச்செய்துகொண்டிருக்கிறானென்று சொல்லி கத்தியை யுருவிக்கொண்டு அவரைவெட்டுவதற்கு வந்தான் அப்போது நரசிம்மமேதா பகவானை யுத்தேசித்து அடேமாயாவதி ஜாரசோரசிகாமணி ஒருதிருத்துழாய்மாலை கொடுப்பதினால்உன்தர்க்கதயின் பொருள் குறைந்துபோகுமா இன்னம் என்னையேன் சோதிக்கிறாய் இப்போதுயான பிராணபயத்திற்காக சோகமடையவில்லை நின்னுமைப் பிரபாவத்திற்கு அகௌரவ முண்டாகுமே என்று சோகமடைகிறேன் ஆகையால் எனக்கொரு திருத்துழாய் மாலை தந்து உனதுநாமப் பிரபாவத்தைக் காப்பாற்றி பின்புவிரோதியாகிய இந்தபஞ்சபூதத் திரேகத்தை விடுக்கச்செய்யும் அதுவும் நான் பிரார்த்தியேன்.

Koviloor Digital Library

சுலோகம்.

"திவிவாபுவிவாம மாஸ்துவா ஸோ
நரகேவா னரச்சாந்தக் ப்ரகாமம்
அவதிரித சாரதார விந்தைள
சரணௌதே மரணேபி சிந்தயாமி"

என்றபடி, ஒ நாதனே! ஆகாயத்திலாகிலும் பூமியிலாகிலும் நரகத்திலாகிலும் எனக்கு வாசமுண்டாகும்லவா தாமரையை பழிக்கச்செய்யும் உமது சரணங்களை மரணத்திலும் துதிசெய்யும்படி கிருபை செய்யும் இதுவே என்பிரார்த்தனை சகலசேதன சேதனங்கள் உமதுசொத்தாகையால் அதுஉமக்கு இஷ்டவினியோகமாகி யிருப்பது உச்சிதம் ஆகையால் எனது க்ஷேமத்திற்காக நான் கோரவேண்டிய தொதுவுமில்லை ஆகிலும் இந்த ஆத்துமாவுக்கு சொரூபரூபமாகிய அனவரதம் பகவத்தியானத்தை பிரார்த்திக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்ய உடனே கெம்பீரமாகிய அவர்தோத்திரத்திற்கு களிப்படைந்து ஸ்ரீ புண்டரீகவரதன் அவர்கண்களுக்கு மாத்திரம் புலப்பட்டுக்கொண்டு அன்னியர்கள் காணுமல்வந்து அவர் கழுத்தில் ஒரு திருத்துழாய் மாலையைப் போட்டு மறைந்துபோயினர்.

பின்பு அரசன்முதலாக யாவரும் இந்த அற்புதத்தைக்கண்டு ஆனந்தபரவசர்களாகி நரசிம்மமேதாவுக்கு நீர்க்கதெண்டனிட்டு சரணம்புகுந்து அவரைப்பார்த்து ஒ மகாத்துமாவே மாத்துருயோனி பரிக்ஷைசெய்த மாபாவியைப்போல மாபாவியும் பெரியோர்கள்கண்டு நடுக்கப்பயமுறுத்திய சண்டாளனும் சகலரும்வணங்கப் பெற்றுத் தானென்ற ஆணவத்தினாலும் செல்வச்செருக்கினாலும் மும்மதம் பொழியும் யானையைப்போன்ற கெர்வங்கொண்டு பரமபாகவத சிகாமணியாகிய தேவரீரை பரிக்ஷைசெய்த பாமரனாகிய நாயேன் அவிவேகத்தினாலும் ஞ்ஞானசூனியத்தினாலும் தங்கள்மகிமையையறியாமல் அபசாரப்பட்ட அடியேன் குற்றங்களை மன்னித்து ரக்ஷித்தருளும் சுவாமீயென்று அவர்திருவடியை விடாது வேண்டிக்கொண்ட அரசனைக் கடாக்ஷிக்க அவர்கேமனம் பெற்றுசென்றான் பின்பு நரசிம்மமேதா பகவந்நாம சங்கீர்த்தனைகளைசெய்துகொண்டே தன்னிருப்பிடத்திற்குவந்து அனேக சேதனசேதனங்களை திருத்தி பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்யும்படிசெய்து சிலவருஷங்கழித்தபின்பு மகானுபாவராகிய நரசிம்மமேதா ஸ்ரீபகவத் சாயுச்சிய மடைந்தார்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மனேநமஃ

வாழிவிருத்தம்.

புராதன கடத்துதித்த புண்ணியன்வாழி பூமக ளருள் பெற்றோன் வாழி
நிராதாரனை யென்றும் நினைப்போன்வாழி நெடியமாலுக்குண்ட வரைந்தோன்வாழி
சராசரங்க ளனைத்தும் ஹரியென்றோன்வாழி சகலசீவன்களுமவனே றரைவோன்வாழி
காதலத்தில் தூயநரசிம்மமேதா தனதுபயதிருவடிக ளென்னாளும்வாழி.

நரசிம்மமேதா சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:



(பதினைந்தாவது)

சோகாமேளர் சரித்திரம்

துதிவிருத்தம்.

பஞ்சமன் நீபக்திசெய்தால் பகவான் சேவை
பலித்திடுமோ முடவன் தேனிச்சிதசாற்போல்
சஞ்சலமற்றிச் சந்நிதிபுகப் போமோயென்று
சாதுர்மறையோர் பொருமைகொண்ட வியல்பரிந்து
அஞ்சனவண்ணனழைத்தேகி யாண்டு
மவர்பெருமை வெளியிடவே கண்டுயாருர்
தஞ்சமென சரணடைந்தச் சோகாமேளர்
தாளிணையையனவரதம் தலைகொள்வோமே.

ஸ்ரீ பூமாதுக்குத் திலகம்போன்ற பண்டரிபுரத்தில் சோகாமேளர் என்றொரு பாகவதர் பஞ்சமகுலத்தி லவதரித்து, ஸ்ரீபாண்டுரங்கனிடத்தில் பரமபக்தியுடன் கூடியிருந்தார் அவர் அநுதினமும் சுவாமி சந்நிதிக்குப் பிரதக்ஷணஞ் செய்து, கோபுரவாசலில் பகவான் தெரிசனத்தைக் கோரி உட்கார்ந்திருப்பார் இப்படியிருக்க ஒருநாள் சிலபிராமணர்கள் வந்து,

சுலோகம்.

"ஸ்வபசோபி மஹீபால
விஷ்ணு பக்தோத் விஜதிக:"

என்றால் பிராமணன் அரசன் இவர்களுக் காகினும், விஷ்ணுபக்தி செய்யும் சுவபலன் மேலானவனென்ற பகவான் வாக்கியங்களை அலக்ஷியஞ்செய்து பொருமையினால், அடாசோகாமேளா! நீ ஏன் விட்டலநாதனை தெரிசிக்க வேணுமென்று விருதாவாய் பக்திசெய்துக் கொண்டிருக்கிறாய் உன்னிடத்தில் பகவானுக்கு கிருபையிருந்தால் உன்னை யவர் வரவழைத்து தெரிசனங் கொடாமலிருப்பாரா இதையோசிக்கில் பாகசாலைக்குள் சுவானம பிரவேசிக்கக் கூடாது போல், நீ சந்திக்குள் பிரவேசிக்கக் கூடாது ஆகையால் உனது அபேக்ஷை எப்படி சித்திக்கும் என்று சொல்ல அதைக்கேட்டுசோகாமேளர் எழுந்துநின்று அஞ்சலிபஸ்தனாகி ஓமறையோர்களே சூரியன் ஆகாயத்தில் வெகுதூரத்திலிருந்து தாமரைக் கமலங்களை தன்கிரணங்களினால்மலரச்செய்வதுபோல ஸ்ரீபாண்டு

Koviloor Digital Library

ரங்கன் ஆலயத்திற் குள்ளாகவே யிருக்கிறு ரென்று எண்ணவேண்டாம்.

சுலோகம்.

"ஈஸ்வரஸ் ஸர்வபூதாநாம்
ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி"

என்ற பகவத்கீதை வசனப்படி சர்வேஸ்வரன் சர்வபூதங்களின் இருதயகமலவாசனுகி யிருக்கிறார் நானு ஜாதியில ஈனனுகினும் என்னிருதய கமலத்தில் எழுந்தருளி என்னை இரக்ஷித்துக் கொண்டிருக்கிறார் என்றுசொல்லி ஒபுண்டரீகவரதா உமது திவ்வியமங்கள விக்கிரகதெரிசனம் எனக்கு லபிக்கும்படி கிருபைசெய்ய வேணுமென்று பிரார்த்தித்து தன்வீட்டிற்குப்போய் ஸ்ரீருக்குமணிநாதனை அனவரதமுய தியானம் செய்துக் கொண்டிருந்தார், இப்படிக் கிருக்க ஒருநாள் பகவான் சோகாமேளருடைய உண்மையான பக்திக்குக் களிப்பை யடைந்து அவருக்கு தெரிசனந் தரவேணுமென்று நினைத்து இரவில சந்நிதிக்கதவுகள் மூடினபின்பு அவன் வீட்டிற்குப்போய் எதிரில்நிற்கையில் அவரைப்பார்த்து சோகாமேளர் சிரசாஷ்டாங்க தெண்டனிட்டு பகவானை துதித்து ஒ கிருபைக்கடலே! ஆலயத்தில் எனக்கு உமது தெரிசனந் தரவேணுமென்று பிரார்த்திக்க, பகவான் அப்படியே செய்கிறேனென்று சொல்லி சோகாமேளர் கையைப் பிடித்துக்கொண்டு சந்நிதிக்கு அழைத்து வந்து தன்னருகி லுட்கார வைத்துக்கொண்டு ஒசோகாமேளரே நீரெனக்கு அந்தரங்க பக்தராகும் உம்மை க்ஷணநேரமாகிலும் மறவேன் நாமதேவருடன் புசித்திருக்கிறபோது மற்றபக்தர்களுடன் கலந்திருக்கிறபோதும் உமதுநினைப்பு வந்துகொண் டிருக்கும் என்று சொல்லக்கேட்டு சோகாமேளர் பகவானுடைய இரண்டு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஒசுவாமீ தீனபந்து அநாதைகளுக்கு நாதராகிய கிருபாநிதியே தேவரீர் பரிபூரண கடாக்ஷமே அடியேனுக்கு தாரகபோஷக போக்கியங்களென்று விண்ணப்பஞ் செய்தார்

இப்படி இவர்களிருவரும் பேசிக்கொண் டிருப்பதை சிலபிராமணர்கள் கதவிற்கு வெளியி லிருந்து கேட்டு ஆச்சரியப்பட்டு சோகாமேளர் சந்நிதிக்குள் சுவாமியுடன்பேசிக்கொண்டிருக்கிறுப்போலக் காணகிறது சாக்ஷாத் பண்டரிநாதன் சந்நிதிக்கு பஞ்சமன் வரத்தகுமா இவனிவடத்திற்கு வந்ததினலநமது ஆசாரங்கள் நசித்துபபோச்சுது யாகசாலையி னிடத்தில் சுவானம் பிரவேசிப்பதுபோல, ஷட்குணைவைஸ்வர்ய ஸம்பன்னராகிய பகவானுடைய ஆலயத்தில் இந்தப் பறையன் பிரவேசித்தா னென்றும் சொல்லிக்கொண்டே கதவைத்திறந்து உள்ளேபிரவேசித்துப் பார்த்து அடா, சோகாமேளா! ஈனகுலத்தோனுகிய நீ நாங்கள் கதவை மூடியிருக்கிற சமையத்தில் எப்படி உள்ளே பிரவேசிக்கக்கூடும் ஸ்ரீபாண்டுரங்கன்! என்கையை பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துவந்தார் நானிவிடத்திற்கு வந்தகுற்றத்தை மன்னித்துக்கொள்ளுங்கள் இனி வராதிருக்கிறேனென்று சொல்லப் பிராமணர்கள் இவனிடத்தில்தோஷமில்லை ஸ்ரீபண்டரிநாதரிப்படி லீலைகளைச்செய்தால் நாம்இவனைத் தெண்டனைசெய்து என்னபிரயோசனம் ஆகிலும்இனி இவனிங்கிருந்தால் தேவாதிதேவன்பலதடவைகளும்இவனை ஆலயத்திற்குள் அழைத்துக்கொண்டுபோவார்அப்படிச்செய்வதால் நம்முடைய ஆசாரத்திற்குக்குறைவருமென்றெண்ணி சோகாமேளரைப் பார்த்து நீ இப்போதே இவ்விடத்தைவிட்டு சந்திரபாகா நதியைத் தாண்ட அக்கரையில் குடிசேர்ந்திரும், அப்படிச்செய்ய மாட்டாயாகில் உனக்கு கடினமான தண்டனைகளை விதிப்போமென்ன அந்தபகவத்பக்தன் ஒமறையவர்களே! உங்கள் நேமனப்படிக்குச் செய்கிறேன் ஆகிலும் ஒருசிறிய மொழிகூறுகிறேன் அதென்னெனில் நான்பகவானை தெரிசிப்பது தகாதென்று சொன்னீர்கள் கெங்கையில் பஞ்சமர்கள் ஸ்நானஞ்செய்யவில்லையா அதினுல் கெங்கைக்குத் தோஷமுண்டாம் பூமியின்மேல் சகலஜாதியாரும் நடந்துக் கொண்டிருக்கவில்லையா, அதினுல் பூமிக்குத் தோஷமுண்டா, அப்படி சர்வவியாகியாகிய ருக்குமணிநாதன் சர்வசமனுகியிருக்க, அப்படிவ்பட்டபரிபூரணனுக்கு தோஷத்தை யுண்டாக்குவது ஞாயமல்ல என்றதைக் கேட்டு அவர்கள் பொறுமைகொண்டவர்களாகி அடா நீ சண்டாளனுகி, சகல ஜாதிகளுக்கும் தாழ்ந்தவனுகிய நீயா எங்களுக்கு க்ஞானேபதேசம் செய்கிறாய் உன் நடவடிக்கை விபரீதமாகியிருக்கிறது ஆகையால் இனி நீ பீமநதிக்கு அக்கரையில் குடிசை கட்டிக்கொண்டு வசிப்பாய் அப்படிச் செய்யமாட்டாயாகில்உன்னை சிக்ஷைசெய்து ஒட்டிவிடுவோமென்றூர்கள்.

அப்போதந்த சாதுவாகிய சோகாமேளர் அந்தப் பிராமணர்களுக்கு வந்தனஞ்செய்து ஒசுவாமிகளே நீங்களே தாய்தந்தையர்களென்று நம்பியிருந்தேன் சரணுகதியடைந்த அடியேனை வேலைப்படுத்தக்குமா, பகவான் சரணுகதியடையும் தர்மத்தை யனுஷ்டித்துக் காண்பிக்கவேயல்லவா ராமாவதாரம் எடுத்தார் ஆகையால் நீங்கள்நித்தியமும் ஸ்ரீமத் இராமாயணத்தைப் பாராயணஞ் செய்துக் கொண்டிருந்தும் அதின்சாரமாகிய சரணுகதிவிபவத்தை உங்கள்

Koviloor Digital Library

மனங்களில் ஊனிக்காமற் போனீர்கள் இப்போதாகினும் அந்தபெருத்த அர்த்தத்தை சிந்தித்து சரணாகதியடைந்த என்னை ரக்ஷியுங்கள் முன்னம் வீபிஷணர் சரணாகதியடைந்த காலத்தில் அவரைத் தங்களிற்சேர்க்கக் கூடாதென்று மறுத்த சுக்கிரீவன் முதலானோருக்கும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி தன் திருப்பவள வாயைத் திறந்து சொல்லுகிறார் கேளுங்கள் எனதன்பர்களே பண்டு எங்கள் வம்சத்துக்குள்வந்துதித்தபாட்டன் சிபிச்சக்கிரவர்த்தி யென்பவர் நீதிதப்பாமல் அரசபுரிந்து வருகிறபோது அவர்தர்மத்தையும் சத்தியகுணத்தையும் அறியும்பொருட்டு அக்கினிதேவன் புறாவாகவும் தேவேந்திரன் வேடனாகவும் உருவங்கொண்டுவர வேடன்விட்ட பாணத்தினா லடிபட்டுத் தப்பி அப்புறாவானது பறந்து ஓடிவந்து சிபிச்சக்கிரவர்த்தியினது மடியின்மேல் விழுந்து அடைக்கலம் புக, அவ்வரசன் அப்புறாவுக்கு அபயஸ்தம தந்து ஆகாரமுதலானதுகளிந்து ஒருசொர்ணக் கூட்டில்விட்டு அந்தப்புரத்தில் பத்திரப்படுத்தி வைத்தார்.

அப்போது வேடன்வந்து சக்கிரவர்த்தியைப் பார்த்து ஓதருமசொரூபராகிய பூமிபாலரே நான் கிராதகன் வெகுநாளாய் கன்னிவைத்துக் காத்துஅப்புறாவைப் பிடித்துப் பொசித்துப் புசிக்கவேணுமென்று மிகுந்த பிரியங்கொண்டிருந்தேன், அப்புறாவானது கன்னியை யறுத்துக்கொண்டு வெளிப்பட அதையோர் பாணத்தினாலடித்தேன் அவ்வடியைப்பட்டுக்கொண்டும் என்னை ஏமாத்திவிட்டுத் தங்களிடம் அடைக்கலம் புகுந்ததாகத் தோன்றுகிறது ஆகையால் தாங்கள் தயைசெய்து அப்புறாவைத் தந்து என்னுடைய பசியாறச்செய்யும் மகானுபாவரே என்றவேடனைநோக்கி அடாவேடனே அந்தப்புறாஎன்னையடைக்கலம் புகுந்தது ஆகையால் அதைத்தர மாட்டேன் உனக்குவேண்டிய அன்னம் பலகார வகைகளுடன் படைக்கிறேன் அதைப்புசித்து பசிதீர்ந்து இளைப்பாரிப்போம் என்ற சக்கிரவர்த்தியின் வார்த்தையைக் கேட்டு வேடன் ஓமகாராஜனே தேவாமுதத்தைத் தந்தபோதிலும் எனக்கு வேண்டுவதில்லை புறாவைக் கொடுத்தால் பசிதீர்ந்து போகிறேன் நீரதைக் கொடாமற் போவீராகில் உமதுசபையின்முன் என்பிராணனைவிட்டு விடுவேனென, அதைக்கேட்டரசன் அந்தப்புறா எடைக்கு என்மாமிசத்தைத் தருகிறேன் உனக்குச் சம்மதியாவென வேடன் சம்மதித்துநிற்க உடனே துலாவை வருவித்து அதில்புறாவை யேத்தி கத்தியைக்கொண்டு தன் மாமிசத்தை யறுத்து மற்றொரு தட்டில்வைக்க அதுநிறை சரியாகாமையால் தன் திரேகமெல்லாம் அறுத்துவைத்தும் புறாவிருக்கும் கட்டு கிளம்பாததால் நம்மிட சத்தியத்திற்கு அழிவுவந்ததே இதற்கென்ன செய்வேனென்று யோசித்து தடாலென்று தானே ஏறிநின்றார் உடனே அக்கினிதேவனும் தேவேந்திரனும் சுயரூபங் கொண்டு சக்கிரவர்த்தியை வெகுவாகக் கொண்டாடி தேவலோகஞ் சேர்ந்தார்கள்.

ஆகையால் ஓ சுக்கிரீவ மகாராஜனே இது ஒரு விசேஷமல்ல ஆரணியத்தில் கேவலப் பறவைஜாதிகளினுதித்த கபோதபக்ஷிகள் ஆண்பெண் ணிரண்டும் ஓர்வனத்தின் தருவில் கூண்டுகட்டிக்கொண்டு சரசசல்லாபத்துடன் மனதிற் கஷ்டமின்றி செருக்குடனிருக்கிற நாளையில், சர்வநாதனென்ற வேடன் வேட்டைக்காகியநாய்களும வலைகளுஞ்சிக்கமுங்கொண்டு கானகத்திற்குட் புகுந்து போகிறபோது, இவனைக் கண்டு மிறண்டு மிருகங்களெல்லாம் மூலைக்கொன்றாக ஓடிவிட்டதுகள் அதுகளைப்பிடிக்கு நிமித்தியம், ஓடியோடி வேசாரிமிகுந்தகோபத்துடன்மிருகங்கள்ஒன்றாகிலும் அகப்படவில்லை பக்ஷிகளாகிலும் உண்டோவென்றும் பதுங்கியும் ஒதுங்கியும் பார்த்துக் கொண்டே சலிப்புடன் விடாயினாலும் உள்ளமுருகி ஒரு மரத்தடியில் நின்றிருக்கிற வேளையில் அதில்வசிக்கும்கபோதபக்ஷிகளிரண்டும் வனத்தில் மேய்ந்து ஜலம்புசித்து வேகமாயோடிவந்து கொம்பில்நின்றிருக்க அதுகளை கொடியனாகிய வேடன்கண்டு வில்லில் நாணேரிட்டு வேகமாகிய அம்பைப்பூட்டி செடிநிழலிலும் புதர்கள் மரபினிலிருந்தும் அதிகசுருசுருப்பாய் எய்தபோது இந்த அரவமறிந்து பக்ஷிகளிரண்டும் திசைதப்பி ஓடிப்போயின அப்போதந்த வேடன் அதிகதுயரத்துடன் ஓகோ இதென்ன ஆச்சரியம் நமதம்புக்குத் தப்பிப் பிழைத்த ஜெந்துவை இதுவரையிலும் நாம்கண்டதில்லையே இது யாதுகாரணமோவென்று கிலேசித்து எப்படியாகிலும் இந்தகபோத பக்ஷிகளிரண்டையுங் கொன்றுதின்னுமல் விடுகிறதில்லை யென்றும் அதுபரியந்தம் நான் அன்னந் தண்ணீர் சாப்பிடேனென்றும், வைராக்கியங்கொண்டுத் தன்வீடுசேர்ந்து கவலையுற்று வாட்டத்துடன் வாயுடன் பல்வரண்டு கையுங்காலும் நிலத்தினிற் பொருந்தாமல் வயிற்றைப்பிசைந்துகொண்டு அந்தகபோதமிரண்டும் வேறு எங்கேயாகிலும் போய்விட்டதோ யானறியேன் ஆகிலும் இவ்வுலகைவிட்டு பாதாளத்திற்குபோய் ஒளித்துக்கொண்டபோதிலும் விடமாட்டேனென்று சபதஞ்செய்து பாயில்படுக்கைகொள்ளாமல் வேடுவச்சி சாப்பிடவழைக்க அவள்மேற்கோபித்து சூரியஉதய

Koviloor Digital Library

மானவுடன் தனக்குரிய வில்லம்பு முதவானதுகளு டன் வனததில்வந்து அம்மரத்தைக்கண்டு அதிலேறி கூண்டைசோதித்து கன்னிவைத்த மரத்தை விட்டு பூமியிலிறங்கி நின்று தன்குலதெய்வத்தைத் தொழுது அந்த பக்ஷிகளிரண்டும் இன்று எனக்ககப்பட்டால் உனக்கு பலிகொடுத்து அதின்இறைச்சியைச்சுட்டுப் படைக்கிறேனென்று பிரார்த்தித்து மறைவாயொளி த்து ஆண்பக்ஷியைப்போல கூவியழைத்தான்

இதன் குரலோசையைக் கேட்டு தன்தலைவன் அழைக்கிறானென்று பெண்கபோதம் வந்து கொம் பின்மேல்நின்று கூண்டில் புகுந்தவுடன்கன்னி கழுத் தில்பட்டுச்சேர்ந்து உடல்மெலிந்து கூண்டைச் சுற் றிப் பார்த்து சொல்லுகின்றது நாதனே! என்மீதிரு ந்தபிரியம் மாறிவிட்டதோ புகுந்தவுடன் என்கழுத் தைப் பிடிப்பது தருமந்தானோ எனதன்பிற் குறிய மணாளா அடியாள்பேரில் என்னகோபம் இப்போது மெலிந்துகிடக்கிறேன் சீக்கிரம்வந்து என்னைக்காரும் பிரியமாயழைத்திரென்று நிமிஷத்தில் ஓடிவந்த என் னுடன் பேசாமலிருப்பது நீதியாமோ பிராணநாதா உம்மோடுகூட வரவில்லையென்ற கோபமோ பேதை யின்மீது கோபங் கொண்டிருந்தால் அடியாளுக்கு உம்மைவிடதிக்குயாவர் என்னைரட்சிப்பதற்கு என்ற பெண்கபோதமானது ஒளிந்திருக்கும் வேடனைக்க ண்டு கள்ளமாக இவனழைத்த கடுமையான குரலைக் கேட்டு நமதுகணவனழைக்கிறானென்றுமனமகிழ்ந்து நானிங்கு ஓடிவந்தேன் பறவைகூட்டங்களைக் கொல் லும் பஞ்சமாபாதகன் செய்த வஞ்சனைதமென்றறி யாமல் என்பிராணநாதா உம்மைநொந்தேன் பிரமன் ருத்திரன் முதலானவர்களும் விதிவசத்தை யனுபவி த்தே தீரவேணும் என்றிப்படிபெண்கபோதம் புலம் பிக்கொண் டிருக்கிறபோது இவ்வார்த்தையைக் கே ட்டு வேடன் பொட்டெனமரத்தின்மீதேறி ரக்கைக ளிரண்டையும்ஒடித்து சிக்கத்தில் போட்டுக்கொண்டு மரத்தைவிட்டிறங்கி நின்றான். அப்போது மேகங்க ளானதுகறுத்து இடிகளிடித்து மின்னலுடன் குமிறி அவ்விடத்தில் அமோகமாக மழைபெய்து வெள்ளம் பெருக்கெடுத்து குளிர்ந்தவூ தக்காத்தினால் உள்ளம் நடுக்கமுண்டாகிப் பூமியில்விழுந்துநொந்து மூர்க்சை படைந்தான.

அப்போது ஆண்கபோதம் தன்மனைவியைநினை த்துக்கொண்டு என்னைப்பிரிந் திப்போது எங்குபோ யிற்றோவென்று கூவியழைத்து நான்வருந்தஇப்போ தவரி நீஎங்கு போய்விட்டாய் பதில்மொழி கூராத காரணமென்ன, நான்செய்த குற்றமென்ன என்பேரி னைக்கு இத்தனை கோபமுண்டாகிய விதமேதோ மிகவும் தழைத்துவளரும் பயிர்களெல்லாம் மழைக் காகிவாடுவதைப்போல்உன்வரவைக்காணாமல் யான் வாடுகின்றேன் ஒருக்கால் வேடன் அம்பெய்த அதற் குப்பயந்து நீஓடுகிறபோது இனியாராகிலும் குறுக் கேவந்து உயிரைவாங்கி விட்டார்களோ ஏதொன்றை யும் அறிகிலேனே என்றுநொந்து சோகங்கொண்டு காட்டிலுள்ள குன்றுகள் வனங்கள் முன்கூடி சுகித்தி ருந்த மரங்களிலெல்லாம் தேடித்தேடி மனங்குன்றி கூவியழைத்தும் வாராததால் தனக்குத் தானே யோ சனைசெய்கிறது என்னவெனில் ஓபெண்ணே உன்னை நான் தேடாயிடம் கிடையாது நினைத்துக் கொண் டால் நீஎன்கண்முன் நிற்பதுபோலவும் தோன்றுகி றது இதென்ன பெருத்தமாயமாகவிருக்கிறது இதின் விபரம் ஒன்றும்தோன்றவில்லையேஇதற்கென்னசெய் ய்வேன் ஓபிரமதேவனே ஒருயிரு மிரண்டுதேகமாகி இணைபிரியாதிருந்த எங்களை பிரியச்செய்து வீட்டை யே நாங்களிருவரும் ஒன்றாய்கூடி வாழ்ந்திருப்பது உமது கண்ணுக்குபொருக்கவில்லையோ ஹரிஹரியெ ன்றுநொந்துதன்வசமாகிய மரத்தின்கூண்டில்புகுந்து நொந்துபார்த்துபரதவித்து ஐயையோயிதென்ன இந் திரஜாலமென்னும் வித்தையோ, இங்கும் பெண்ணைக் காணோமே சங்கரா நீசெய்யும் சூதோயென்று ஆண் கபோதம் சொல்லிக்கொண்டே ஓர்கிளையில் நின்று ஏங்கித் தளர்ந்து முறையிடுவதை வேடன் சிக்கத்தி லகப்பட்டிருக்கும் பெண்கபோதங்கேட்டு ஓபிராண நாதா முன்னம் யான்செய்த பாவபலத்தால் வேடன் கையி லகப்பட்டுக் கொண்டேன் ஆகையால் நீர் யா தொன்றுக்கும் பயப்படவேண்டா மென்ன ஆண்க போதம் மெய்மறந்து சோகமிகுந்து மரத்தின்கீழே விழுந்துபுரண்டு ஓமாதே இப்போது நம்மையணுகிய கருமமேதோ இனியொரு நிமைபொழுதும் உனைப் பிரிந்து உயிர்தரிப்பேனோ என்ன பெண்கபோதம் நான் வழக்கப்படி இருப்பிடத்தைத் தேடிவந்தேன் கன்னிவைத்து வேடன் என்னைப்பிடித்து செட்டை களை யொடித்து கற்பனைசெய்து மரத்தைவிட்டு இறங் கியவுடன் அமோகமான மழைபெய்ய அதினால் குளி ர்ச்சியும் ஊதக்காத்தினாலும் நடுக்கி அவன் பூமியில் விழுந்து மூர்க்சைபடைந்தான.

என்னக்கேட்டு, ஓமாதே இனியுன்னைவிட்டு இவ் வுலகத்தி லிருக்கமாட்டேன் ஆகையால்மெல்லன அச் சிக்கத்தைக் கடித்து வெளிப்பட்டு வருவையேயாகில் இன்னுசிலகாலம் நாமுயிருடன்வாழலாமென்ற ஆண் கபோதத்தின் வார்த்தையைக்கேட்டுஓமணவாளனே

Koviloor Digital Library

எந்தவினைபயனாலோ அல்லதுவிதிவசத்தினாலோதெய்
வம்வேறுபடுத்திவிட்டால் அதற்குச்செய்வதை ஏதே
னுமுண்டோ ஆகையால்உம்முடன் பரக்கத்தக்க செ
ட்டைகளில்லையே அப்படிக்கிருக்க சிக்கத்தைக்கடிப்
பதினால் பிரயோசனம் ஒன்றுமில்லை ஆசையால்நாதனே
பெண்கள் இப்பூமியில்விசேஷமுண்டு இஷ்டமானபெ
ண்ணுடன்கூடி இல்லறதருமம்நடத்திரும் இனிஎன்
னை பிரிப்பது தருமமல்ல என்றால் உமதுபிராணனை
விடுவதும்ஞாயமல்லவென்றுபெண்கபோதம்சொல்ல
பெறுக்க கோபத்துடன் கண்கள் சிவந்து கொப்பெ
னக்கிளம்பி அவ்வேடனை கிழித்தெரிகிறேனென்று
வேகமாய் செல்லும் ஆண்கபோதத்தை நோக்கி, ஓ
சுவாமி இப்பூமியில் பிறந்தபோதே ஒருநாளைக்குஇற
ப்பதென்பது உண்மையானதால் சகலசீவராசிகளுக்
கும் பிறப்பதும்இறப்பதும் சுபாவமாக ஏற்படுத்தி
யது பகவான்செயலேயன்றி இவ்வேடனால் ஒன்றும்
நடவாது ஆகையாலிவனைக் கொன்றால் உமக்கொரு
லாபமுமில்லை பாவமேயன்றி இதினால் எனக்கு செட்
டைகள் வந்து உயிர்பெறப் போகிறதில்லை இவனை
ரக்ஷித்தால் உடனேஉமக்குசொர்க்கமுண்டாவதுடன்
தேவர்களும் மகிழ்ந்து கொண்டாடுவார்கள் என்ற
பெண்கபோதத்தின் சொல்லைக்கேட்டு ஆகாயத்தில்
கிளம்பி நான்குதிசையும் பார்த்து அந்தக்காட்டில்
அக்கினி எரிந்துகொண்டிருப்பதை நோக்கி மனமகி
ழ்ந்து அங்குசென்று ஒருகொள்ளியைத் தன் வாயி
னால் கொண்டுவந்து வேடன் அருகில்வைத்து சுள்ளி
களை சேர்த்துத் தன்செட்டைகளால் விசிறிஎறிவித்த
போது அச்சூட்டினால் வேடனுக்குண்டாகிய நடுக்க
முதலானதுகள் நீங்கி தலையெடுத்து நான்கு திசை
யையும் பார்த்து அங்கிருக்கும் பரவைகளை நோக்கி
நேசர்களைப்போல பாவித்து, நிலத்தினைப் பார்த்து
தாயைப்போன்ற பரவைகளே என்பிராணனைக் காப்
பாற்றினீர்கள் இதுஒருபெரிதல்ல நேற்றுமுதல் என
க்கு ஆகாரங் கிடையாதாகையால் பசியென்னைபெத்த
வருத்துகின்றது இந்தச்சமயத்தில் இவ்வளவு அன்
னந்தருவீராகில் உங்களுக்குமேலான புண்ணியமுண்
டாகும் என்றவேடனை நோக்கிப்பரவைகள் காட்டி
லே வசிக்கும்படியான எங்களுக்குக் கனிவர்க்கங்க
ளேயன்றி அன்னமேது மானுடர்களுக்கல்லால் எங்க
ளுக் கன்னங் கிடையாதென்ன வேடன் போஜனமே
எனக்கு வேணுமென்ற அவசியமில்லை என்பசி தீரும்
படி இறைச்சி யாதாகிலும் கொடுத்தாலுங்க ளுக்குப்
புண்ணியலோகம் கிட்டிப் புகழையும் அடைவீர்களெ
ன்ன அப்போது பெட்டைப்பெண்கபோதம் தன்
நாயகனைநோக்கி செட்டைகளில்லாத என்னை இந்த
வேடனுக் கிந்திராகில் தடையின்றிதேவர்களெனக்கு
பொன்னுலகத்தை யளிப்பார்கள் என்றதைக்கேட்டு
ஆண்கபோதமானது பெண்பழிநேரிடுமென்று யோ
சித்துத் தானே அக்கினியில்விழுந்தது அதைக் கண்ட
வேடன் அபராமுற்றவனைப்போல அபிநயித்து நான்
போஜனங்கேட்க கிடையாதென்று சொன்னதால
இறைச்சியாகிலும் கொடுங்களென்றுசொன்னேனன்
னியில் உன்கணவனை தீயில்விழச் சொன்னேனா அல்
லது இந்த ஒருபக்ஷியின் இறைச்சியைப் புசித்தால்
என்பசி தீர்ந்துவிடுமோஎனறுசொல்லி அந்தவேடன்
பெண்கபோதத்தை நோக்கி நீசென்றுசுகமாக வாழ்
ந்திருமென்று சிக்கத்தை யவிழ்த்துவிட்டான்.

உடனே அப்பெண்கபோதம் நாயகனிறந்தபின்
இவ்வுலகி லெனக்கென்ன வாழ்வென்றுபுரண்டு அக்
கினியில் வீழ்ந்தது இவ்வதிசயங்களை யெல்லாம் அண்ட
ர்கள் ஆகாயத்திலின்று நாமிதுவரையிலும் பார்த்த
துமில்லை கேட்டதுமில்லை யென்று சந்தோஷித்து அ
ப்பரவைகள்மீது புஷ்பமாரி பொழிந்தார்கள் ஈசனும்
பிரமனும் மாலும் மெச்சிக்கொண்டாடி மெத்த சந்
தோஷமடைந்து தூதர்களால் விமானத்தை யனுப்பி
கபோதங்களிரண்டையும் அழைத்து வரும்படி சொ
ன்னார்கள் உடனே தூதர்கள் சென்று அப்பரவைக
ளிரண்டையும் விமானத்தி லேறும்படி சொல்ல அத்
தூதர்களை நோக்கி பரவைக ளிரண்டும் ஐயனே
அந்த வேடனல்லவோ எங்கள் தருமம் விளங்கிற்று
ஆகையால் வேடனுடன் நாங்களும் வருகிறோமென
மொழிந்ததுகள் அம்மொழிகளைக் கேட்டுத் தூதர்
கள் ஆச்சரியப்பட்டு ஓ கபோதபக்ஷிகளே! நிங்களை
யும் பொய்யுஞ் சூதும் நிறைந்த நீசன் தன்னை இந்திர
விமானத்தி லேற்றுவதற் கிசையுமோ இசையமாட்
டார் எமதூதர்கள் பாசக்கயிற்றினால் கட்டிக்கொ
ண்டுபோய் அவனை நரகத்தில் வீழ்த்துவார்கள் அல்
லாமல் அவனுக்கு மேலாகிய பதவி கிடைக்காது.
என்ற தூதர்களை நோக்கி நீங்கள் எங்களுக்கு எந்தச்
சமாதானஞ் சொன்னபோதிலும் சம்மதிக்காது ஏ
னெனில் அவன் எங்களுக்குப் புகழுங் கீர்த்திகளும்
உண்டாகச் செய்தானே யல்லாமல் எங்களுக்குக்கிஞ்
சித்து அபசாரமும் செய்யவில்லை ஆகையால் தேவ
தூதர்களே! அவனைவிட்டு நாங்கள் வரமாட்டோமெ
ன்ன உடனே தூதர்களோடி நடந்த விருத்தாந்தங்
களை சிவனுடைய சபையிற்சொல்ல மூவரும் சந்தோ
ஷித்து ஓ தூதர்களே பூலோகத்திற்சென்று அப்பர
வைகளுடன் யார்வந்தபோதிலும் அழைத்துவாருங்க
ளென்றனர்கள் அம்மொழியைக் கேட்டுத் தூதர்க
ளோடி கபோதபக்ஷிகளையும் வேடனையும் விமானத்

திரேற்றிக் கொண்டுபோய் சொர்க்கலோகம் சேர்ந்தார்கள்.

ஆகையால் சுக்கிரீவமகாராஜனே! அந்தப்பரவை சவரிஞல வேடனுக்குப் பதவிகிடைத்தது இதைத்தெரிந்திருந்தும் விபீஷணனை இரக்ஷிக்காவிட்டால்காவிருந்தும் செகதவனேயல்லாது வேறென்ன புகழெனக்கு அடைக்கலமென்றுவந்தவனை ஆதரிக்காமற்போவேனேயாகில் நானொரு சுத்தவீரனேயென்று சொல்லி விபீஷணனையாதரித்தார்.

அப்படிப்பட்ட தர்மத்தையனுசரித்துக் காட்டிய பகவானுக்கு பக்தர்களாகியஉங்களைப்போலொத்தவர்களுக்குக் கிஞ்சித்தும் சபையில்லா திருப்பது தகாதென்று விண்ணப்பஞ்செய்தார் இவரெததனை பிரார்த்தித்தும் அவர்கள் கடினசித்தர்களாகி முன்போலவே சொல்லிக் கொண்டிருக்க சோகாமேளர் துக்காக்கிராந்தராகிக் கண்ணீர் விட்டுக்கொண்டு பகவானுக்கு வந்தனஞ்செய்து வீட்டிற்குசென்று பத்தினியையுமழைத்துக்கொண்டு சந்திரபாகா நதியைத் தாண்டி அக்கரையிலொரு குடிசை கட்டிக்கொண்டு அதில்வசித்தும் தசமிமுதல் ஏகாதசிதுவாதசி இம்மூன்றையும் அநுட்டித்து வருகிறபோது சாக்ஷாத் ஸ்ரீ பாண்டுரங்கன் துவாதசியில்வந்து இவருடன் புசித்து சந்தோஷித்துப்போவார் இப்படிக்கு நடந்துவருகையில் ஒருஏகாதசியில் சோகாமேளர் ஸ்நானஞ்செய்து சுசியாகி பகவானுக்கு சோடச உபசாரங்களுடன் தூபதீப நைவேத்தியங்களைத் தந்து திருவாராதனை நடத்தி திருத்துழாய் தீர்த்தம் பெற்றுக்கொண்டு பகவந்நாம சங்கீர்த்தனஞ்செய்து பகல்காலத்தைப் போக்கி இரவுவந்தவுடன் பத்தினியுந்தானும் ஹரிபஜனை செய்துக் கொண்டே நித்திரை போய்விட்டார்கள்.

அதில் சோகாமேளர் விழித்துக்கொண்டு பொழுதுவிடிந்துபோயிற்றேயென்று கிலேசித்துத் தன் பத்தினியினருகிற் சென்று, அடிபெண்ணே தளிகை செய்வதற்கு எழுந்திரடி உதயமாயிற்று இருஷிகேசன் போஜனத்திற்கு வருவார் வெகு நாழிகையாய் விட்டது என்று தன்பத்தினியை எழுப்பும் வார்த்தைகளை அம்மார்க்கமாய் ஸ்நானத்திற்குப் போகும் ஒருபிராமணன் கேட்டு இந்தநீசனவீட்டில் சாக்ஷாத் பகவான்வந்துபுசிப்பாரா இதென்ன ஆச்சரியம்இவன் கெர்வத்தினுல் என்னவார்த்தை சொன்னன் ஆஹா ஹா நாம் நான்குவேதம் பஞ்சகாவியம் ஆறுசாஸ்திரம் பதினெண்புராணங்களை யுணர்ந்தும் அதற்கிணங்க ஸ்நானம் ஜெபதபங்களை யனுஷ்டித்தும், மிகுந்த சுசியாயிருக்கும் நமதுவீட்டில் பகவான் வந்துபுசித்தது அரிதாகியிருக்க எழுத்துவாசனை யறியாதவனும் இறைச்சியைப் புசிப்பவனும் பல அசுசியோடுங் கூடியிருப்பவனுமாகிய இந்தசண்டாளன்வீட்டில்சாக்ஷாத் ஸ்ரீபாண்டுரங்கன் புசிக்கிறனென்றல் நமக்கு அவமானமாகி யிருக்கிறதென்று குரோதங்கொண்டு நல்லது இவனை இராஜனுல் தெண்டிக்கவேணுமென்று எண்ணங்கொண்டு ஸ்நான அநுஷ்டானங்களை முடித்து பகவானைச் சேவித்து வீட்டுக்குச் சென்று துவாதசி நடத்தி அன்றையதினம்போக்கி மறுநாள் அரசனிடசபைக்குச்சென்று பஞ்சமன்சொல்லிய வசனங்களைத் தெரிவிக்க, இராஜன் அந்தப்புலையனுக் கித்தனை கெர்வமா, ஆரடா தூதர்களே அந்தச் சண்டாளனுகிய சோகாமேளனைப் பிடித்து வாருங்களென்று கட்டளையிட்டான்.

உடனே தூதர்கள் வேகமாய் நடந்துவந்துகொண்டிருக்க இங்கே சோகாமேளர் பத்தினி எழுந்து அன்னபாதிகளைச் செய்பகவான் வழக்கப்படி புசித்துப்போயினர் சோகாமேளர் மறுநாள் பிரம்மானந்தமாய் பஜனைசெய்துக் கொண்டிருக்க அப்போது தூதர்கள்வந்து அடே சோகாமேளா! இராஜன் உன்னை அழைத்துவரச்சொன்னர். சீக்கிரம்வெளியில் வாடாவென சோகாமேளர்பயந்து என்றுமில்லாமின்று நம்மை ராஜனழைத்த காரணமேதோவென்று மனந்தளர்ந்து அவன்சங்கற்பமில்லாமல் ஒன்றும் நடவாதென்று திடங்கொண்டு இராஜதூதர்களுடன் புறப்பட்டுவந்தார் தூதர்கள் இவரைச் சபையிற்கொண்டுபோய்நிறுத்தி அரசனுக்கு அறிக்கையிட்டார்கள் அரசன் சோகாமேளனைநோக்கி தன்மந்தமதியால் சொல்லுகிறன் அடாகுலப்பிரஷ்டா சண்டாளா நீமுந்தியநாள் காலையில் என்னசொன்னயென சோகாமேளர் மகாப்பிரபூ! அடியேன் குற்றமாகிய மொழியொன்றும் சொல்லவில்லையே, அது இன்னதென்று எனக்குத் தோன்றவில்லையே, தேவரீர் தயவுசெய்து இந்த ஏழைக்கு இன்னதென்று தெரியபடச்சொல்லவேண்டும் சுவாமீயென்று பிரார்த்திக்க அப்போது அரசன் அடாதுஷ்டா நீஅந்த வார்த்தையைச் சொன்னபோது கேட்டபிராமணன் இதோயிருக்கிறர்பாரடாநீசாவென சோகாமேளர் அந்தப்பிராமணரைப் பார்த்து யோசித்து ஞாபகத்துக்கு கொண்டுவந்து இராஜனை நோக்கி ராஜமார்த்தாண்ட ராஜஉத்தண்ட ராஜகெம்பீரா அன்று நடந்ததும் பூசுரர் சொல்லியது யாவத்தும் உண்மையே, என்ற சோகாமேளர் வார்த்தையைக்கேட்டு அரசன் கண்களிரண்டும் சிவந்து மீசை

படபடவென்று துடிக்க பற்களை நறநறவென்றுகடித்
து மிகுந்தகோப தீப்தனாகி தூதர்களைநோக்கி அடா
தூதர்களே மேல்வரம்பு கீழ்வரம்பு யோசிக்காமலும்
பயமின்றி இவன்சொல்லிய வார்த்தைகளுக்காக இவ
னை வனத்திற்கொண்டுபோய் நமதுஎருதுமந்தையின்
நடுவே இவனைத் தள்ளுங்களென்று நேமிக்கத் தூதர்
கள் சோகாமேளரை யழைத்துக்கொண்டு வனத்திற்
கேகி தானேமேய்ந்தும் தானேபடுத்து ஒருவருக்கும்
கட்டுப்படாத எருது மந்தைகளின் நடுவில் தள்ளி
னார்கள்.

அப்போது சோகாமேளர் பகவானைத்துதிசெய்
கிறார் ஓபுண்டரிகாக்ஷா உனக்குவந்தனம், புருஷோ
த்தமா உனக்குவந்தனம், சர்வலோகசொரூபா உன
க்குவந்தனம் உக்கிரமாகிய சக்கிரந்தரித்த தேவா உ
னக்கு வந்தனம் தவம் வேதம் முதலாகியதற்கு தேவ
னாகி கோக்களுக்கும் பிரம்மநிஷ்டர்களுக்கும் நேச
னாகி சகலபிரபஞ்சத்திற்கும் ரக்ஷகனாகி ஸ்ரீகிருஷ்ண
னென்றும், கோவிந்தனென்றும், திவ்வியநாமங்களு
டன் கூடியிருக்கும் உனக்கனேகவந்தனங்கள் பிரம்ம
ரூபனாகி ஜெகத்தைசிருஷ்டித்து நின்சொரூபத்தினால்
ரக்ஷித்துகல்பாந்தியத்தில் ருத்திரரூபனாகி சங்கரித்து
திரிமூர்த்தி சொரூபனாகி பிரகாசிக்கும் உனக்குவந்த
னங்கள் ஓஅச்சுதா தேவசுர கெந்தர்வகின்னர சித்த
சாத்திய பன்னக யக்ஷ ராக்ஷஸ பிசாச மனித பசு
பக்ஷி ஸ்தாவர பிபீதிகாதிகள் பிரிதிவு அப்பு தேயு
வாயு ஆகாசங்கள் சத்தஸ்பரிசரூப ரசகந்தங்கள் மன
ம்புத்தி சித்த ஆங்காரங்கள், காலம் அதின்குணங்கள்
இதுகளின் பரமார்த்தமாகி ஆத்துமா இவைகள் யா
வும் நீரேவித்தை அவித்தைகள் சத்திய அசாத்தியங்
கள் பிரவிருத்தியும் நிவர்த்திகளும் துவசயுந்தச கர்ம
ங்கள் இவைகள்யாவும் நீரே. ஓபகவானே சகலகர்ம
போகங்களை அனுபவிப்பவனும் கர்மசாதனங்க ளா
கிய திரவியங்களும் நீரே ஓமாப்பிரபுவே என்னிடத்
திலும் அன்னியர்களிடத்திலும் சேஷபூதங்க ளாகிய
சகல உலகங்களிடத்திலும் நீவியாபித்திருப்பதுஉபா
தன நிமித்தகாரண ரூபமாகிய சம்பத்தும, அனந்த
க்ஞானசத்தியாதி கல்யாணகுணங்களை நன்றாகவிளங்
கச்செய்கின்ற ஓமகானுபாவரே பரமயோகிகள் உன்
னைத் தியானஞ் செய்கிறார்கள் யாசிலர்கள் நின்னை
யுபதேசித்து யாகங்கள் செய்கிறார்கள் நீரேபிதுர் ரூப
மும் மேவரூபத்தையுந் தரித்து அவயவங்களை புசிக்
கிறீர் ஓஅச்சுதா என் ஆங்காரதிருக்ஷங்களும் பிரீதி
வ்யா பூதங்களும் அதினிடத்தி லிருக்கப்பட்ட சூக்ஷ
மாகிய ஆத்துமதத்துவங்களுமாகி இந்தசூக்ஷமா பிர
பஞ்சம் யாவும் எவ்விடமிருக்கிறதோ எங்கிருந்துஉதி
க்கின்றதோ அதுசொரூப குணங்களினாகி பெருத்த
தாகிய நினதுமகாரூபமாயிருக்கிறது சூக்ஷாதிவிசே
ஷணியங்களாகி சிந்திக்கக்கூடாத தாயிருக்கும்
ரூபம் நினது பரமாத்துமசொரூபமாகி யிருக்கிறது
இப்படிப்பட்ட அபாரமகிமைகளும் பிரபாவங்களும்
நிறைந்த புருஷோத்தமராகிய் உனக்கு வந்தனம் ஓ
சர்வாத்மகனே சகலபூதங்க ளிடத்திலும் சத்வாதி
குணங்களுடன் கூடியிருக்கும் நினது பிராகிருத சத்
தியாகும் ஜீவசொரூபத்திற்கு நமஸ்காரஞ் செய்கி
றேன் எதுமனம் வாக்குக்கெட்டாததோ எந்தவிசே
ஷத்தினாலும் விசேஷிக்கக் கூடாததோ க்ஞானிகளு
டைய க்ஞானததினால்நிரூபிக்கக்கூடாதோ அப்படிப்
பட்டசிலாக்கியமாகும் நினதுமுக்தாத்தும சொரூப
த்திற்கு வந்தனம் எவனுக்கு தனக்கன்னிய மாகும்
பதார்த்தமில்லையோ எவன்பாவத்திற்கும்வேறாகியிரு
க்கிறானோ அப்படிப்பட்ட பகவானாகும் வாசுதேவ
னுக்கு நமஸ்கரிக்கிறேன் கர்மாதீனமாகுமநாமரூபமி
ல்லாமல் கேவலவிலக்ஷண சொரூபராகும் மகாத்தும
னுக்கு மேலுமேலும் அதிகவந்தனஞ்செய்கிறேன்சங்
கரபூஷணாதி வியூகரூபமாகும் உனக்கு வந்தனஞ்செய்
கிறேன் தேவரீருடைய பரத்பரரூபத்தைத் தெரிசிக்
கக்கூடாமல் மச்சகூர்மாதி யவதாரரூபங்களையே அர்
ச்சித்துக்கொண்டிருக்கிறார்களே அப்படிப்பட்ட பர
மாத்துமனுக்கு வந்தனஞ் செய்கிறேன்.

எமன் ருத்திரன்முதல் சகலபூதங்களுக்கும் அந்
தரியாமியாகியசுபாசுபங்களை பார்த்துகொண்டிருப்ப
னோ அப்படிப்பட்ட சர்வம் சாயுக்ஷி பரமேஸ்வரனு
மாகும் ஸ்ரீவிஷ்ணுதேவனுக்கு வந்தனஞ்செய்கிறேன்
அனித்தியமாகும் இந்த ஜெகமெல்லாம் என்னுடன்
பேதமின்றி யிருக்கிறதோ அப்படிப்பட்ட விஷ்ணுவு
க்கு வந்தனஞ்செய்கிறேன் சகலத்திற்கும் ஆதியாகிய
அந்த ஸ்ரீபண்டரிநாதன் எனக்குபிரசன்ன மாவாருக
எழுத்துகளும் நாமங்களும் உண்டாகி யிருக்கப்பட்ட
யவனிடத்தில் பிரபஞ்சம் யாவும் நூலிழை வஸ்திரத்
தில் கலந்திருப்பது போல கோர்க்கப்பட் டிருக்கிற
தோ அப்படி சகலத்திலும் பொருந்தியிருக்கும் எம்
பெருமானுக்கு வந்தனஞ் செய்கிறேன் சர்வசுவாமி
யாகியும் சர்வசேஷியாகியிருக்கும் அந்த ஸ்ரீமகாவிஷ
ணுவுக்கு வந்தனஞ் செய்கிறேன் என்று மெய்மறந்தி
ருக்க அவ்வெருது கூட்டங்கள் இவரைக் கண்டவு
டன் அதிகரோஷத்துடன் குத்தியும்முட்டியும் உதை
த்தும் கொல்ல எண்ணங்கொண்டு நெருங்கிவந்தவை
கள் எம்பெருமான் கிருபையினால் அந்த எருதுகள்

Koviloor Digital Library

இவரை மூகந்துபார்த்து தூரத்தில் ஓடிவிட்டதுகள் இந்த ஆச்சரியத்தைக் கண்டதூதர்கள் ஓடி இராஜனு க்கறிவிக்க, இராஜன் மந்திரிப்ரதானிகளுடன் சோகா மேளரைப் பார்க்கப் புறப்பட்டான்.

இப்படிக்கிருக்க அங்கே சோகாமேளர் மனைவி தூதர்கள் ராஜாவைக்கு அழைத்துக்கொண்டுபோன தன்கணவன் வாராததால் யாதுகாரணமோ வென்று விசனத்துடன் வேகமாகப் புறப்பட்டு ராஜனரண்ம னைக் கருகில்வந்து விசாரிக்க, உன்கணவனை எருது மந்தையில் தள்ளிக் கொல்லும்படி ராஜன் சட்டளை யிட்டார் தூதர்கள் ராஜன் கட்டளைப்படி காட்டிற்கு அழைத்துப் போயினர்களென்று சொல்லக் கேட்டு அம்மாது பதறிக் கதறியழுது பிலாபித்துஓதேவாதி தேவா நினதன்பனைக் காட்டிக்கொடுத்துக் கடக்கப் போய் நிற்பது தர்மமா யிதென்னமர்மமா நாங்கள் செய்த பூர்வகர்மமா, இப்படிச்செய்வது வர்மமா, நினைத்த மாத்திரத்தில் பிரம்மாண்டங்களையும் சிருஷ் டித்தும் போஷித்தும் சங்கரிக்கும் சர்வபக்திபூரண னாகிய உனக்கு இந்தொண்டர்களை ரக்ஷிப்பதோர் மலையா, உன்மனந்தானென்னசிலையா அல்லதுநின்கி ருபையிலையா, உன்வாயைத்திறந்தோர்வார்த்தைசொ லையா முனனம்பிரகலாதனனுக்காய் தூணில் வந்து தோன்றி இரணியகசிபனைக் கொன்று அன்பனைக்கா க்கவில்லையா அன்னியினும் திரௌபதிக்காக அபார வஸ்திரங்களைத் தந்து மானத்தைக் கார்க்கவில்லையா பரமபாகவதர்களாகிய புரந்தர தாசரையும் கோரா கும்பரையும் ரட்சித்த மகானுபாவனே நீர் நினைத் தால் முடியாத காரியங்களும் உண்டோ எனிப்படி எங்களை சோதனைசெய்கிறீர் இப்படிசெய்து பார்ப் பது உமக்கிதோர் விளையாட்டோ என்று துதித்துக் கொண்டே சென்று வனத்தையடைந்து கணவனைக் கண்டு அவருடன் பகவத்தியானம் செய்திருந்தாள்.

இப்படிக்கிருக்க அரசன் மந்திரிகள்சமேதனாகி வனத்திற்குவந்து சோகாமேளரைகண்டு வியப்படை ந்து யான்செய்த அபசாரத்தைப் பொருத்தருளவே ண்டும் பாகவதசிகாமணியே என்னிட அக்ஞானத்தி னாலும் பூபாலன்என்ற கெர்வத்தினாலும் திரவியமத த்தினாலும் உம்மை அலக்ஷியமாகிய சண்டாளனென் றும் புலையனென்றும் நீச்சனென்றும் வைதேன் அன் னியினும் எருதுக் கூட்டங்களில் தள்ளிக் கொல்லும் படி உத்திரவளித்த மாபாவி சண்டாளன் நீச்சனுமா கிய என்குற்றங்களை மன்னித்து ஸ்ரீ பாண்டுரங்கன் திருவடிக்காளாகும்படி கிருபை செய்தருளவேண்டு மென்று பிரார்த்திக்கும் அரசனை நோக்கி சோகா மேளர்,

"கர்மமுனபுட்டு சந்துவு
கர்மமுநன் ப்ருத்திபோந்து கர்மமுனசெடுன்
கர்மமுஜெனுவகு தேவத
கர்மமுசுகதுக்கமுலகு காரணமநியா."

என்றால் உலகத்தில் ஜீவராசிகள் கர்மத்தினால் பிறப்பதும் விருத்தியடைவதும் கர்மத்தினாலேஇறப் பதும் கர்மத்தினாலேயே கர்மமே ஜெனங்களுக்குதே வதையாகியும் கர்மமே சுகதுக்கங்களுக்குக் காரண மாகியிருப்பதால் உம்மாலும் எம்மாலும் அணுவும் அசையமாட்டாது எல்லாம் ஸ்ரீபாண்டுரங்கன் செய லேயன்றி வேறில்லை இதற்காகத் தாங்கள்வருந்தவே ண்டாம் அரசனே என்றுசொல்லி சோகாமேளர் அர சனிடம் செமனம்பெற்றுத் தன்மனையாளுடன் விட் டலதேவனைத் துதிசெய்துக் கொண்டே தன்வீடுசேர் ந்தார்.

பின்பு சோகாமேளர் பகவானை யனவரதமும் தியானஞ்செய்து கொண்டிருக்க ஒருநாள் அவர்போ ஜனத்திற்கு உட்காருகையில் புண்டரீகவரதன்எழுந் தருளி தான் உன்னுடன் புசிக்கவேணுமென்று சொ ன்னார் அதைக்கேட்டு அவர் சந்தோஷித்து அந்தக் குடிசைக்குப் பக்கத்திலிருந்த ஒருவேப்பமரத்தினடி யில் பகவானை அழைத்துக் கொண்டுபோய் இருவரு மாக உட்கார்ந்து புசித்துக்கொண்டிருக்கையில் சோ காமேளர் மரத்தின்மேலிருந்த காகங்களைப் பார்த்து ஓகாகங்களே எனதுபாக்கிய ராசியாகும் பகவான் மரத்தினடியில் புசித்துக் கொண்டிருக்கிறார் ஆகை யால் கொஞ்சநேரம் நீங்கள் தூரமாக ஒதுங்கிப்போ ங்களென்று சொல்லிக் கொண்டிருக்க, அவர்மனைவி எடுத்துவந்த தயிர்பாத்திரம் அம்மாதின் கையிலிரு ந்து தவறி பூமிமேல்விழுந்து தயிர் சுவாமியினுடைய பீதாம்பரத்தின் பேரில் சிதரக்கண்டு சோகாமேளர் ஓசகியே! நீ என்னகாரியஞ் செய்தாய் சாக்ஷாத் பக வானல்லவா என்னுடன் புசித்துக்கொண்டிருக்கிறார் கிஞ்சித்தும் லயமின்றி நீ இப்படி செய்யத்தகுமா.

"பரோபகார மிதம் சரீரம்."

என்னும் பெறுத்த தர்மத்தைவிட்டு தயையற்ற வர்களாகி நம்மை ஓட்டிவிட்ட பிராமணர்களை அல க்ஷியஞ்செய்து இந்த தீனபந்துவானவர் நமதுவீட்டி ற்கு வந்ததை நீயறியாமல் அபசாரப்படுகிறையாவெ ன்றுசொன்னார். அப்போது அம்மார்க்கத்திற்போய் க்கொண்டிருந்த அர்ச்சகனொருவன் இந்த வார்த்தை

Koviloor Digital Library

களைக் கேட்டு ரோஷமும் கோபமும் பிரகாசிக்க, அடாசண்டாளனே? என்னவததிமொருவுகிறுய்என் றசொல்லிக் கொண்டேவந்து சோகாமேளர் கன்ன த்தின் மேலடித்து பிமநதியில் ஸ்நானஞ்செய்துசந்நி திக்குப் போயினுன்.

அவ்விடத்தில் பகவான் பீதாம்பர மெல்லாம் தயிரினுல் நனைந்திருப்பதையும் கன்னம் வீங்கியிருப் பதையும் பார்த்துப் பிரம்மித்து ஒகோ அவிடத்தில் நடந்ததெல்லாம் இவடத்தில் பார்க்கப் பிரத்தி யக்ஷ மாகயிருக்கிறது நான் பகவானுக்கு அந்தரங்க பக் தனுகிய சோகாமேளர் பிரபாவத்தை யறியாமல் அவ ருக்கு அவமானமுண்டாகச் செய்தேன் என்றுதவித் துப் பதறிக் கதறி முன்னம் அம்பரிஷச் சக்கிரவர்த்தி யினிடம் அபசாரப்பட்ட தூருவாசர் பகவானிடத் தில் சரணுகதி யடையப் பகவான் உன்னை ரக்ஷிப்ப தற்கு என்னுலாகாது நான் பக்தபராதீனனுகையால் என்பக்தன் திருவடியில்சரணுகதியடைந்தால் அவன் ரக்ஷிப்பானென்ற சொல்ல நாமறிந்திருக்கும் பகவா னைச் சரணம் புகுந்தால் க்ஷமித்து ரக்ஷக்க மாட்டா ரென்று சிந்தித்து சோகாமேள ரிடத்திற்கு வந்து ஓ மகாத்துமாவே! உமது பிரபாவத்தை நானறியா மல் உம்மைக் கன்னத்தி லடித்தபடியால் பகவான் கன்னம் வீங்கியிருக்கிறது நீர் பகவானுக்கு உண்மை யான பக்தனுகையால் சந்நிதிக்குவந்தால் அவர்சரீர வீக்கம் நீங்குமென்று பிரார்த்தித்து, அவர்கையைப் பிடித்துக்கொண்டு சந்நிதிக்கு ளழைத்து போயினுள் அப்போது சோகாமேளர் பக்தவச்சலனை ஆலிங்க னஞ் செய்துக்கொண்டு அப்பிரமேயா மனித ஆனந் தம்தடங்கி பிரம்மானந்த பரியந்தம் துதித்துக்கொ ண்டுபோய் பரப்பிரம்மானந்தம் மனதிற்குஎட்டவில் லையென்று வேதம் திரும்பிவிட்டது சதுர்முகாதிகள் உன்னை துதிக்கும் விதமறியாமலிருக்கிறுர்கள். அப்ப டிக்கிருக்க யதார்த்தமாகாத நானும் உம்மைத்துதிக் கிறேன் இது பிரமாதமல்ல,

சுலோகம்,

"மஹார்ணவாந்த: சோரஜ்ஜதோ
ரணுகுலாசலயோர்விசேஷ:

என்றுல் கடலில்மூழ்கும் அணுவுக்கும் மேருபர் வதத்திற்கும் பேதமெதுவுமில்லை யல்லவா வென்று விண்ணப்பஞ் செய்து பகவானுடைய கன்னத்தைத் தடவிய மாத்திரத்தில் வீக்கம்வீங்கி பண்டரிநாதன் பிரசன்னமுகமாகி யிருந்தார் இந்தவிசித்திரத்தை யா வரும் பார்த்து ஆச்சரியப்பட்டுபக்தவச்சலனது ஆஸ் ரித பாரதந்திரத்தை வெகுவிதங்களாக கொண்டாடி னுர்கள் முன்னம் இவர்மகிமையை யறியாமல் அபசா ரப்பட்ட பிராமணர்கள்யாவரும் அம்பரீஷ தூருவா சர்கள் விருத்தாந்தங்களைத் துதித்து பயமடைந்த சரீரர்களாகிஜாதி அபிமானத்தைவிட்டு சோகாமே ளருக்கு வந்தனஞ்செய்து, ஓ மகானுபாவரே! ஜாதி அபிமானத்தினுல பாகவத உத்தமராகிய உம்மைதூ ஷித்து புண்டரீகவரதன் மனதைப் புண்ணுக்கினேம் முன்னம் திருக்குறுங்குடியென்று திவ்வியதேசத்திற் கிடையில் சேரியொன்றுளது அதில் மகாவீர வைஷ் ணவராகி நற்குண நற்செய்கைகளென்னுந் தயைசாந் தம் பொருமைசத்தியமுதலான தக்ளிற் சிறந்து அனு தினமும் பகவானைமறவாதுதிருக்குருங்குடிக்குவந்து சேவித்து வீணைமீட்டி தூரத்தில்நின்று பகவான் திரு வடியில் லயித்துப்பாடுவதால் பகவான் செவியாரக் கேட்டு ஆனந்தித்து பிராமணர்களை நோக்கி ஓமறை யவர்களே நம்மைப்பாடுவான் வந்திருக்கிறுர் ஆகை யால் விலகி சந்நிதிவிடுங்க ளென்றமையால் அன்று முதலிவருக்கு நம்பாடுவான்என்று பேருண்டாயிற்று இவர் அடாமழைபாயிருக்கினும் அதிகஇருளாயிருக் கினும் மிகுந்த வைராக்கியசீலராகையால் ஒருநாளுந் தப்பாமல் திருக்குருங்குடிக்குவந்துமாடவீதியை வல மாகவந்து பகவானை கோபுரதுவாரத்திற்கு வெளியி லிருந்து சேவித்துப் போவார்.

இப்படி சேவித்துப் போகிறபோது கார்த்திகை மாதம் சுக்கிலபக்ஷ ஏகாதசியினன்று இவர் அனுஷ் டானங்களை முடித்து திருத்துழாய் தீர்த்தம் சுவீகரி த்து பகலெல்லாம் பகவத் தியானஞ் செய்திருந்து மாலையனுஷ்டானங்களையும் முடித்து கையில்வீணையு டன் திருக்குருங்குடி நம்பியைப் பாடிக்கொண்டே தன்னைமறந்து மார்க்கத்தைவிட்டு வனத்திற் பிரவே சித்து வெகுதூரம் போகிறபோது, அங்கு அடர்ந்த சோலையில் பிரம்மராக்ஷஸ் இவரைக் கண்டவுடன் ஆர் போகிறவன் நில்லுநில்லுமென் றதட்டின மாத்திரத் தில் நம்பாடுவான் பக்திகெட்டு திடுக்கிட்டுமரத்தைப் போல் திப்பிரமை கொண்டுநின்ருர்.

அப்போது பிரம்மராக்ஷஸ் நான் வெகுநாளாய் நரமாமிசத்தை புசிக்கவேணுமென்று எண்ணியிருந்த எனக்குபகவான் புசித்துப்பசிதீரும்படி உன்னையனு ப்பினுர் என்பாக்கியம் மிகவும் நன்றுயிருக்கிறது ஆ கையால்சீக்கிரம் எனக்குணவாக வாடாவென்றதைக் கேட்ட நம்பாடுவான் ஓபிரம்மராக்ஷஸே யான் திருக் குருங்குடி நம்பியைச்சேவித்துவந்து உன்பசிதீரஎன் திரேகத்தைத் தருகிறேனென பிரம்மராக்ஷஸ் அடா

Koviloor Digital Library

புலையா உனக்கு திருக்குருங்குடிநம்பிதெரிசனங்கூட
வேண்டுமா, மாட்டிறைச்சி புசிக்கும் சண்டாளனாகிய
உனக்கு எம்பெருமாள் தெரிசனங் கிட்டுமா பொய்
வார்த்தைசொல்லி தப்பித்துக்கொண்டு ஓடிப்போக
லாமென்று பார்க்கிறையோ, நீஎத்தனைசாக்குப்போக்
குகளைச் சொல்லினும் உன்னைவிடுவே னென்று கிஞ்
சித்தும் உன்மனதிலெண்ணாதே யென்றுசொல்ல நம்
பாடுவான் ஓபிரம்மராக்ஷஸேஎன்மையாகியஎன்மீது இத்
தனை வைராக்கியஞ்செய்தால் நன்றோ, உனக்கிணை
யானவனல்லவே அற்பனாகிய என்வார்த்தையை அங்
கீகரித்து விடைதந்தால் இன்று ஏகாதசியா யிருப்ப
தால்நம்பியைத்சேவித்துவந்து உனக்குணவாகிறேன்
நான் ஒருக்காலும் பொய்சொல்லேன், இதுசத்திய
மென்று நம்பும் என்ன பிரம்மராக்ஷஸ் அடா புலையா,
உனக்கு ஏகாதசியும்உண்டோ சபாசு உன்வார்த்தை
யைக் கேழ்க்கக்கேழ்க்க விபரீதத்தையும் ஆச்சரியத்
தையும் விளைவிக்கின்றது என்று நெக்கலி கொட்டிச்
சிரித்தது அதைக்கேட்டு நம்பாடுவான் ஐயா பிரம்ம
ரக்ஷஸே திருக்குருங்குடி நம்பியைப்பாடி திரும்பி
வந்து உனக்கு இத்தேகத்தை பசிதீர உணவாகக்
கொடாமல் தவறிப்போவனேயாகில் சகலலோகரக்ஷ
கனும் தேவாதிதேவனும் பரப்பிரம்ம சொரூபனுமா
கிய ஸ்ரீமந்நாராயணனை யிகழ்ந்து அன்னியதேவதை
களைப் பரனென்று புகழ்ந்து கொண்டாடும் பாமரர்
கள்சேரும் நரகத்தையான் சேரக்கடவே னென்று
சொல்லியதைக்கேட்டு பிரம்மராக்ஷஸ் நம்பிக்கை கொ
ண்டு ஐயாபாகவதரே இனித்தடையில்லாமல்சென்று
நம்பியைசேவித்து உமதுஆசைதீரப்பாடி சீக்கிரமாக
வாரும் நான் மிகுந்தபசியால் வாட்டமுற் றிருப்பது
மக்கு நன்றாய்த் தெரிமல்லவா, ஜாக்கிரதை யாய்ப்
போய்வாருமென்ற பிரம்மராக்ஷஸின் வார்த்தையைக்
கேட்ட நம்பாடுவான் ஆனந்தசாகரத்தில் மூழ்கின
தைப்போற் சந்தோஷங்கொண்டு வேகமாகத் திருக்
குருங்குடி யடைந்து வீணைமீட்டிப்பாடி மாதவீதிபிர
தக்ஷணஞ்செய்து நம்பியைக் கண்குளிரச் சேவித்து
ஓதேவாதி தேவனே இனிஎன்று உம்மைச்சேவிக்கப்
போகிறேன் அடியேன எத்தனை ஜென்ம மெடுத்தப்
போதினும் உமது திவ்விய நாமபக்தியுண்டாகும்கிரு
பை செய்தருளவேண்டும் தீனபந்து என்றுதொழுது
ஆனந்தக்கண்ணீ ருதிர்த்து உதையராகமபாடி பக
வான் சேமனம்பெற்று குமரிபிருளாகையால் வெகு
ஜாக்கிரதையாய்வழிநடந்துவேகமாய் வருகிறபோது
மார்க்கத்தில் திருக்குருங்குடி நம்பி பிராமணனைப்
போல்வந்து ஓநம்பாடுவானே இன்றேன் அதிகதுரி
தமாகப் போகிறீர், நில்லும் என்று தடுத்தார் அப்
போது நம்பாடுவான் ஓசுவாமி யிவிடத்திற்கூப்பிடு
தூரத்தில் சோலைபொன்றிருக்கிறது அதில் பிரம்மரா
க்ஷஸ் நான் வீட்டிலிருந்துவர என்னைத்தடுத்து தனக்
கு மிகப்பசியா யிருப்பதால் என்னை உணவாகும்படி
கேட்டுக்கொண்டது ஆகையால் அதுபசியினால் பரத
வித்திருக்குமே யென்று நான் துரிதமாகச் சென்று
அதற்குணவாகப் போகிறேன். என்றார் அதைக் கே
ட்டு மாயாமறையோன் அதுஅநேகபாபங்கள்செய்து
பிரம்மராக்ஷஸாகி யிருக்கிறதே நீ அதற்குணவாகுவை
யேயாகில் உனக்கு மீளாநரகம் சம்பவிக்குமே என்
றார் அதைக்கேட்டு நம்பாடுவான் பகவான்சங்கற்பம்
எப்படியான போதினும் சரி நான்சொன்ன சொல்
லைத்தவறி அதற்குணவாகாமல் இப்பிர பஞ்சத்தில்
உயிர்பெற்றிருக்க மாட்டேனென்றுசொன்னார் மறை
யோர் அவர்வைராக்கியத்தைக் கண்டு வியந்து இனி
யன்னிஷ்டமென்று மறைந்துபோனார்.

நம்பாடுவான் துரிதமாக நடந்து சோலைக்குட்
புகுந்து ஐயாபிரம்மராக்ஷஸே! வேகமாகவாரும்என்னை
புசித்துஉமதுபசியைதீரும்என்றழைக்க பிரம்மராக்ஷ
ஸுக்கு ஆச்சரியமேலிட்டு இவர் தெரிசனத்தினாலே
க்ஞானோதய முண்டாகி இவர் மகானுபாவர் பரம
பாகவதரென் றறியாமல் இவரிடத்தில் அபசாரப்பட்
டோமென் றெண்ணி மெய்நடுங்கி அவர் திருவடியில்
விழுந்து ஐயா பரமபாகவத சிகாமணியே! எனது
அக்ஞானதத்தினாலும் பிரம்மராக்ஷஸென்றகெர்வத்தினா
லும் தங்களுடைய மகிமையையறியாமல்உம்மைஉண
வாகும்படிசொன்னதுமல்லாமல் வாயில்வந்தபடியெ
ல்லாம் வைதேன் இக்குற்றமாகிய அபசாரத்தைமன்
னித்து தாங்கள் அனவரதம் பாடிவரும் கைசிகிராக
பலத்தின் ஆயிரத்திலொருபங்கு எனக்கு தத்தஞ்செ
ய்து ஆண்டருள்புரிய வேண்டும் சத்தியசீலரே என்ற
தைக்கேட்டு நம்பாடுவான் ஐயாபிரம்மராக்ஷஸே முன
னம் நீகேட்டபடி என்தேகத்தை கொடுப்பனேயல்
லது கைசிகியின் பலத்தைத் தரமாட்டேன் ஆனால் நீ
இந்தபலத்தைக் கேட்கிறவிஷயத்தில் எனக்குன்னிட
த்தில் சந்தேகம் உண்டாகிய தாகையால் உனக்கிந்த
பிரம்மராக்ஷஸ் உருவம் எந்தக் காரணத்தினால் சம்ப
வித்தது இதற்குமுன் நீ எக்குலத்திற்பிறந்தவன் இது
களை ஒளிக்காமற் சொல்லவேண்டு மென்றதைக் கே
ட்டு பிரம்மராக்ஷஸ் சொல்லுகின்றது ஓசாதுகுணசிகா
மணியே! நான் பிராமணகுலத்திற் பிறந்தவன் ஒரு
யாகஞ் செய்யவெண்ணி நடத்திவருகிறபோது அந்த
யாகத்திற்கு மந்திரலோப முண்டாகியபடியால் என
க்கிந்த பிரமராக்கத வுருவம் லபித்தது இதுநடந்த

உண்மை இதில்எவ்வளவும்பிசகில்லை இவ்வுருவம்மாறி பழையபிராமணருபம்பெற்று மேலாகிய பதவியை யடையும்படி கிருபைகூர்ந்து கைசிகபலத்தைதத்தஞ் செய்யவேண்டும் சுவாமியென்று புகழ்ந்துகொண்டாடும் பிரம்மராக்கதனிடத்தில் நம்பாடுவாருக்கு அன்புண்டாகி கைசிகிராகபலத்தில் ஆயிரத்திலொருபங்கு தத்தஞ்செய்தார்.

உடனே பிரம்மராக்கத உருவம்மாறி பழைய பிராமணருபந் தரித்து, தேவவிமானத்திலேறி சாயுச்சியபதவியை யடைந்தார் அந்தபாகவத உத்தமரைப்போல பிரமஞ்ஞான சம்பன்னராகிய உம்மைப் பலவித கஷ்டப்படுத்தினேம் கொடிய பாதகர்களாகிய எங்கள் அபசாரங்களை மன்னித்துநாங்கள் பகவானது அபிமானம்பெறும்படி அனுக்கிரகிக்கவேணுமென்று மிகவும் பிரார்த்தித்து அவரபிமானத்தை யடைந்து களங்கமற்றவர்களாகி தன்னியரானார்கள் அதுமுதல் பகவான் சேமனத்தினால் சோகாமேளர் அனுதினமும் சந்நிதிக்குவந்து பகவானை தெரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணேநம:

வாழிவிருத்தம்.

திருமிறை யுலகம்வாழி தேவர்தி தேவன்வாழி
தருமமென்னுளும்வாழி தழைத்தபங் கூழ்கள்வாழி
குருதிரு வடிகள்வாழி குணமுள்ள தொண்டர்வாழி
இருவினை யகன்ற சோகாமேளர் தாட்கமலம்வாழி.

சோகாமேளர் சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:



(பதினொருவது)

மீராபாய் சரித்திரம்

துதிவிருத்தம்.

கார்மலிக்கடல்சூழ் பாறிக்களிதரும் நீதிநிறைந்த
ஊர்களிற் சிறந்துமேலாம் உதயமா புரியிற்றோன்றி
ஏர்பொலி கிருஷ்ணநன்றி இதாரைவரரென் றெண்ணுச்
சீர்நிறை மீராபாய்தன் திருவடி சிரமேற்கொள்வாம்.

மார்க்ஷிமைதங்கி சிறப்புற்றோங்கிய நகரங்களில் மேன்மையாகியும் பூமாதுக்கோ ரணிகலமாயும் விளங்கும் உதயபுரத்தில் வித்தையில் அகஸ்தியருக்கும் அறிவில் ஆதிசேஷருக்குப் ஆண்மையில் விக்கிரமாதித்தனுக்கும் சாந்தத்தில் தருமநந்தனருக்கும் வாய்மையில் அரிச்சந்திரனுக்கும், நீதியில் மநுச்சக்கிரவர்த்திக்கும் நிகரான புத்திசாதுர்யமுடைய பூநாயகனென்றோர் அரசனிருந்தார் அவர் பரமவைராக்கிய நிதியாகி,

சுலோகம்.

"ஆத்ம வச்சர்வ பூதானி
பரத்ரவ்யாணி லோஷ்டவத்
மாத்ரு வத்பரதா ராஞ்ச
யப்பஸ்யதி ஸபஸ்யதி."

என்பதுபோல, ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட சகலஜீவராசிகளையும் தன்னைப்போலும் இதரர்கள் திரவியத்தை மண்ணாங்கட்டியைப் போலும் அன்னியஸ்திரீகளைத் தாயைப்போலும் பார்த்துக்கொண்டு நீதி தப்பாமல் அரசுசெலுத்தி சிரத்தையுடன் பகவத்பாகவத ஆராதனை செய்துக்கொண்டு வந்தார் இவருக்கு ஸ்ரீபாண்டுரங்கன்கிருபையினால் ஒருபுத்திரி பிறந்தது அப்புத்திரிகைக்குப்,

பாசுரம்.

"பத்துநாளுங் கடந்த விரண்டநா
ளெத்திசையும் சயமாங் கோடித்து
மத்தமாமலைத் தாங்கிய மைந்தனை
உத்தானம்செய் துகந்தனராயரே."

Koviloor Digital Library

பத்துநாளுங் கடந்த பனிரெண்டாநாளில் சகல பந்து மித்திரர்களையும் வரவழைத்து புரோகிதர்களால் ஜாதகர்மம் எழுதி மீராபாய் என்று நாமகரணஞ்செய்து, கோதான முதலாகிய சோடச தானங்கள் உத்தமர்களாகிய பிராமணர்களுக் கீய்ந்து புத்திரோற்சவத்தைப் பிரம்மோற்சவமாகக் கொண்டாடி பந்துமித்திரர்களுடன் புசித்து சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளை யளித்து பந்துமித்திரர்கள் தங்களிடஞ்சேர்ந்தபின் அப்புத்திரியை சாக்ஷாத் ஸ்ரீமகாலட்சுமியென பாவித்து மிகவும் பிரியத்துடன் வளர்த்து வந்தார்கள். அக்குழந்தை நாளுக்குநாள் விருத்தி யடைந்து விளையாட்டில் சிலதுநாள்போக்கி எட்டுவயதில் பிரகலாதனைப்போல பூமியில் புலப்படும் சகலஜீவராசிகளையும் பகவான் சொரூபமென்று நினைப்பதும் பெரியோர்களைக்கண்டால் ஊழியக்காரியைப்போல நெருங்கி வந்தனஞ்செய்வதும் அதிதியப்பாகவதபகவத் பாகவதர்களையாராதிப்பதும் இத்தன்மையாகிய சத்கருமங்கள்யாவற்றையும் அனுஷ்டித்துக் கொண்டுவர, இந்த மீராபாய் தனக்குத் தகுந்த வயதுவந்தபின்பு தன் தந்தை ஸ்ரீகோபாலகிருஷ்ணனை சிரத்தையுடன் ஆராதிப்பதையும் அந்த தேவாதி தேவனுக்கு வெகுவிதங்களாகிய அலங்காரங்கள் செய்வதையும் உபசாரங்கள் செய்வதையும் தன் தந்தையினருகி லிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்படி இந்தகன்னிகை யநுதினமும் ஸ்ரீகோபாலகிருஷ்ணன் திவ்வியமங்கள விக்கிரகத்தைச்சேவித்தும் அந்தபகவானை மனதில் தியானித்து மிருந்தபடியால் சாக்ஷாத் மன்மதன்மதனாகிய ஸ்ரீருக்குமணிநாதனிடத்தில் மீராபாயின் மனதுலயித்தது அவரே தனக்குப் பதியாகவேணுமென்று இடைவிடாதுததி செய்துக் கொண்டிருக்காள் இப்படிக்கிருக்க அம்மாதின் தந்தை நமது புத்திரிகைக்கு சகலகர்மாதிபோகங்களை யநுபவிக்கத் தகுந்தவயதுவந்தது ஆகையால் இப்பெண்ணுக்குத் தக்க வரனைத்தேடி மணம் முடிக்க வேணுமென்று தனது நேசர்களுடன் சொல்லிக் கொண் டிருக்கையில் கேட்ட மீராபாயி தன்தந்தையைப் பார்த்து ஓ தந்தையே, நீர் எனக்குப் புருஷனைத் தேடவேண்டியதில்லை எனக்குத் தகுந்தவரனை நான் மனதில்தானே மணஞ்செய் திருக்கிறேன் அவரரென்றால் சகல பிரபஞ்சத்திற்கும் எவன் திரிவித காரணமாகி யிருக்கிறானோ எவன் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டி திதி சங்காரங்கள் நடந்துக் கொண்டிருக்கின்றதோ எவன் ஜென்மரகிதனாகி யிருந்தும் பக்தருக்காக நாமரூபாதிகளுடன் கூடியிருப்பனோ எவனது திவ்விபாத்தும சொரூபத்தை தெரிசிக்க மாட்டாமல் தேவர்கள் விக்கிரம டபாசனை செய்வார்களோ எவன் சகலபிரபஞ்சத்திற்குந் தந்தையாகி ரக்ஷகனாகி சேஷியாகி பர்த்தாவாகி மித்திரனாகி சுவாமியாகி ஆதாரமாகி ஆத்துமாவாகி போக்தாவாகி யிருக்கிறானோ சகலபிராணிகளுக்கும் எவன் கிருபாநிதபந்துவாகி சமஸ்த லாபங்களையும் உண்டாகச்செய்து கொண்டிருப்பனோ எவன் ஆஸ்ரித்துக்கங்களை சுகிக்காதவனாகி அசுரர்களை சிக்ஷித்துக்கொண்டிருப்பனோ பிராணிகள் விசனத்திற்கு எவன் அதிகமாகிய துக்கத்துடன் கூடியிருப்பனோ எவன்பக்தவச்சலனாகி பக்தசரண்யனாகி பக்தபாதந்திரனாகி பக்த அபீஷ்டபலபிரதனனாகி யிருப்பனோ, எவன் கிருபையில்லாத போது சேதனங்கள் அசேதனங்களாகுமோ எவன் அர்ச்சா ரூபத்தையடைந்து நமதுவீட்டில் வசித்துச் சகலத்தை வெருத்துத் தன்னை யாராதிக்கும் உனக்குப் பராதீனமாகும் அகிலாத்துமப் பொருளானவனாகியிருப்பனோ அப்படிப்பட்ட கோபால கிருஷ்ணனை என் பிராண நாதனாக மணஞ் செய்திருக்கிறேன்.

ஆகையால் தந்தையாகிய நீங்கள் அந்தஜெகதீசனுக்கு என்னைத் தத்தஞ்செய்து வைகுந்தநாதனுக்கு மாமன்மார்களாகி மூன்று லோகங்களில் பிரசித்தர்களாகும் வருணன் பிருகு ஜனகபீஷ்மர்களைப் போல நீரும் கோபால கிருஷ்ணனுக்கு மாமனாகி பெருமையையடையும் மேலும் என்னை மனிதர்களுக்குக் கொடுக்க எத்தனப்படுவீராகில் என்தேகத்தில் பிராணனிருக்கமாட்டாது தேவகைக்கு உபயோகப் படுத்தும் பிண்டப்பிரசாதத்தை மறுத்த சுவானத்திற்கு வினியோகப்படுத்துவதைபோல ஸ்ரீபுருஷோத்தமனுக்கு தொண்டுசெய்ய வெண்ணினநான்காம் பரதந்திரர்களாகிய மானிடர்களுக்கு மாலையிட மாட்டேன் என்றுசொல்லிய மீராபாய் வசனங்களைக்கேட்டு அக்கன்னிகையைப் பார்த்து இதென்ன ஆச்சரியம் அர்ச்சாரூபத்தை யடைந்திருக்கும் நமது கிருஷ்ணமூர்த்தி உனக்கெப்படி பிரசன்னனாவார் இராஜபுத்திரியாகி சுகுமாரியாகி அதிசுந்தரியாகிய நீரூபகயளவனசம்பன்னனாகும் ஒரு இராஜகுமாரனைப் புருஷனாக விவாகஞ் செய்துகொள்வது உசிதம் அப்படி விவாகமாகி உன்கணவனுடன் நீ அனவரதமும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவை ஆராதித்துக் கொண்டிரும் பாலசுபாவத்தினால் நின்மனதுபோகும் வழியெல்லாம் போகாதே மேலும் இந்தகிருஷ்ண விக்கிரகத்தினால் உனக்குக் கிஞ்சித்தாகிலும் சௌக்கியம் உண்

Koviloor Digital Library

டாகாது இந்த புத்தியைவிட்டு என்நயமாகிய புத்தி
யைக்கேட்டு சுகப்படும் என்றுசொல்லிய தந்தையின்
மொழிகளைக் கேட்டு ஓ தங்கையே! இந்த பக்தவச்ச
லன் சத்தியவிரதனுக்காக மச்சரூபமாகி தெரிசனந்
தந்து முனிகளுடன் அவனையும் பிரளயார்ணவத்தில்
ரக்ஷித்து அவருக்கு மநுபதத்தை யளிக்கவில்லையா
கூர்மரூபமாகி மந்திரகிரிபர்வதத்தை முதுகில்தாங்கி
தேவர்களுக்கு அமுதமளித்து ரக்ஷிக்கவில்லையா பன்
றிரூபமாகி கடலில் மூழ்கப்போகும பூமியை எடுத்து
நிலைநிறுத்தவில்லையா பிரகலாதனன் சொல்லை உண்
மையாக்கும்பொருட்டு நரசிங்கரூபமாகி தூணிடம்
தோன்றி அவர் பக்திமான் என்பதை யாவருக்கும்
விவரமாகப் புலப்படக் காட்டவில்லையா அதிதியிற்
றில் வாமனரூபமாகி யுதித்து பிரம்மாதிகளுக்கு சண்
டாதிபத்தியங்களை யளிக்கும் பரமஉதாரன் ஆஸ்ரித
சவாக்ஷணைநிமித்தம் யாசகனாகி மாபலி சக்கிரவர்த்தி
யினிடம் மூன்றடி பூமியைவேண்டி திரிவிக்கிரமனாகி
மூன்றுலோகங்களையுமிரகித்து தேவேந்திரனுக் களி
த்து உபேந்திரனென்று கீர்த்திபடையவில்லையா ஜம
தக்கினி தனயனாகி துஷ்டர்களைக்கொன்று பூமியைக்
காக்கவில்லையா, கோசலைசுமித்திரை கைகேசி இம்மூ
வர் கெர்பத்தில் நான்குரூபத்துடன் அவதரித்து ஸ்ரீ
ராமரூபத்தினால் பகவத்சேஷத்வ ரூபமாகும்விசே
ஷதர்மத்தையும், பரதரூபத்தினால் ஈஸ்வர பாதந்திர
ரூபமாகும் விசேஷதர்மத்தையும், சத்துருக்கள்ரூபத்
தினால் பாகவத பாதந்திரமாகும் விசேஷ தர்மத்தை
யும் வெளிப்படுத்தி சரணாகதி விபவத்தை சாதுஜெ
னங்களுக்கு அநுஷ்டித்து காட்டி மகாரிஷிகளுக்குப்
பாதகராகும் ராவணாதிகளை சங்கரித்து ஸ்ரீவிபிஷண
வியாஜ்ஜியத்தினால் உலகத்தாருக்கு அபயப்பிரதான
மளிக்கவில்லையா எதுகுலத்தில் ஸ்ரீராமகிருஷ்ண ரூப
ங்களாக அவதரித்து, பூதகிசகடாசுர திருணாவர்த்த
காளிங்க தேனுக அபிஷ்ட பிரலம்பகேசித்விவித சா
ணூர முஷ்டிகாதி துஷ்டர்களை சங்கரித்து பாண்டவ
தூதனாகி பார்த்தசாரதியாகி இறந்தவர்களை பிழைப்
பித்தும் சரணாகதிகளை ரக்ஷித்தும் அர்ச்சுனன்பிரு
ர்த்தனையினால் பிரம்ம வித்தையாகிய கீதாநுசாரத்
தை உலகோர்க்கு அளித்து தனது ஆஸ்ரிதவாச்சல்
யத்தை வெளிப்படுத்தவில்லையா கலியுக அந்தியத்தில்
வர்ணாசிரம தர்மம்கெட்டு தர்மம் மறைந்து உலகம்
பாஷாண்ட மயமாகியிருக்கும்.

அப்போது கலிகாவதாரமெடுத்து துஷ்டர்களை
சங்கரித்து வர்ணாசிரதர்மங்களை ஸ்தாபித்து கிருதயுக
தர்மத்தைப் பிரவர்த்திக்கச் செய்யப்பட்ட மகானு
பாவரிவரேயல்லவா மேலும் இந்தக்கலி காலத்தில்
பீமாநதிக்கரையில் ஸ்ரீபாண்டுரங்க மூர்த்தியாகி யர்ச்
சாரூபமாகியிருந்தும் நாமதேவருக்குப் பிரசன்ன
ராகி அவருடன் சம்பந்தி போஜனஞ்செய்து ஜெனா
பாயியுடன் பரிசாரக வேலைகளைச்செய்து சாவந்தியா
மாலி வயிற்றிலொளித்து கூர்மதாசருக்கு மருளாபுர
த்தில் தெரிசனமளித்து சோகாபரமானந்தர் திரோக
காயங்களை போக்கி ரோஹிதாசர் பூஜையை யங்கீகரி
த்து, கோராகும்பார் குழந்தையைப் பிழைப்பித்து
அவர் வெட்டிக்கொண்ட கைகளை வுண்டாகச்செய்து
நரஹரிதாசருக்கு ஸ்ரீஹரிதிரேகத்தைக்காட்டி சோ
காமேளர் வீட்டிற்குச்சென்று அவருடன் திவ்வியப்
பிரசாதத்தைப் புசித்து மேலும் பக்தபராதந்திரராகி
அனேகலீலைகளைச் செய்யவில்லையா ராமதாசருக்காக
துவாரகையைவிட்டு டாக்கூரென்னும் ஊருக்குவந்
து கராசுத்தட்டிலிருந்து அவர்பத்தினிமூக்குத்திக்கு
சரிநிறையாகிநிற்கவில்லையா மதுரையிலிருந்து கல்யா
ணதாசருக்காய் சாக்ஷிசொல்லுதற்கு ஹரித்துவாரத்
திற்கு நடந்துவரவில்லையா சக்குபாயிக்காய் கட்டுபட்
டு வீட்டுவேலைகள் செய்து அவள் புருடனுக்குச் சே
வை தரவில்லையா அப்படிப்பட்ட நமது கிருஷ்ணபர
மாத்துமா என் னெண்ணத்தை நிறை வேற்றமற்
போவாரா ஆகையால் நீர் சங்கைப்படாமல் என்னை
யவருக்கு அர்ப்பணஞ் செய்யும் என்ற புதல்வியின்
சொற்களைக் கேட்டு இராஜன்மிகுந்த ஆச்சரியப்பட்டு
இக்கன்னிகை சாஸ்திரங்களைக் கேட்டறியாள் புத்தி
கோசரத்தினால் வசனித்துக் கொண்டிருக்கிறாள் இந்
தப்பெண்ணின் பூர்வஜென்மபுண்ணியமெப்படிப்பட்
டதோ இக்கன்னிகையின்விஷயத்தில் நமதுகிருஷ்ண
பரமாத்துமா என்ன யெண்ணியிருக்கிறாரோ நானறி
யேன் ஆகிலும் குணவதியாகிய இப்பெண்ணை நிர்ப்ப
ந்தப் படுத்தாமல் அதி னிச்சைப்படி நடத்துகிறே
னென்று மனதில் திடஞ்செய்துகொண்டு தான் ஆரா
தனைசெய்யும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்துமாவை அக்கன்
னிகையில்கொடுத்து அம்மா நீகோரியபுருடனை உன்
கையில் கொடுத்தேன் நீ அவருடன் கூடியிருந்து சுக
த்தை அநுபவியும் என்றுசொன்னார்.

செவிகளுக் கமுதமென்னும் அம்மொழிகளைக்
கேட்டு மீராபாயி ஆனந்தக்கடலில் மூழ்கினவளாகி
இனியில்லாத சந்தோஷமடைந்து அன்றுமுதல் அன
வரதமும் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு சர்வாலங்காரம்
செய்தும் நானாவித உபசாரங்கள்செய்து நல்லபலகா
ரங்களுடன்கூடிய திவ்வியபிரசாதத்தைநிவேதித்து, அ
வாருகில்உட்கார்ந்து வீணாகானத்துடன்பகவந்நாம

சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டு பகவத் பாகவதர்களை ஆராதித்து, இப்படி யநுதினமும் இத்தககாரியங்கள் யாவற்றையும் சாஸ்திர விதிப்படி நடத்திப் பின்பு பகவத் பாகவதசேஷத்தைப் புசித்துபோசனமானபின் சாதுகோஷ்டியிலிருந்து ஸ்ரீபாகவதபுராணத்தை சிரவணஞ் செய்துக்கொண்டு காலக்ஷேபம் செய்திருந்தாள் இப்படிக்கிருக்க, சில பொறாமையுள்ளவர்கள்.

“பாசதி சுசிலயை நறு
காருசங்கதி நுன்ன நித்தபாலகு சுமதி.”

எம்பதுபோல, வனிதையாகிய இராஜ புத்திரிக்குப் புருஷர்கள்நேசம் அபவாதத்துக் கிடமாகுமென்றும் இராஜனுக்கு அபகீர்த்திக் கேதுவாகு மென்றும், இராஜன் செவிபிற் படும்படியாகச் சொல்லத் தலைப்பட்டார்கள்.

அதைக்கேட்டு அரசன் விசனமடைந்து தன்பத்தினியைப் பார்த்து ஓமங்கையே! நமதுபுத்திரி மீராபாயி நமக்குமிகவும் அவமான முண்டாகச் செய்துக்கொண்டிருக்கிறாள் அவளைப்பற்றி துன்மார்க்கர்கள் சொல்லும் கெட்டவசனங்களைக் கேழ்ப்பதற்கு எனக்கு அதிககஷ்டமாக யிருக்கிறது நான்எத்தனை நயவசனங்களைச் சொன்னாலும் என்வார்த்தைகளைக் கேளாமல் தன்மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருக்கிறாள் ஆகையால் நீயாகிலும்நமதுபுதல்விக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லி விவாகத்தில் பிரியமுண்டாகும்படி செய்யுமென்று சொல்லியனுப்பினார் அம்மாது தன்புதல்வியைப் பார்த்து அடியம்மா மீராபாயி என்வார்த்தைகளைக் கேட்டொரு இராஜகுமாரனை விவாகம்செய்துக்கொள் நீ அப்படி செய்யாம லிருப்பையாகில் நமது உத்தமமாகிய குலத்திற்கு உன்மூலமாகநிந்தையுண்டாகும் பெண்ணாகி ஜெனித்து ஆத்துமா தனக்குத்தக்கவர்களைமணம்புரிந்து குடுத்தனம் செய்யவேண்டும் அப்படி செய்வதற்குச் சம்மதி யில்லையாகில் மரணமடைவது கீர்த்தி ஆகையால் என்வார்த்தைகளைக் கடக்காமல் என்பிரார்த்தனையை அங்கிகரிக்கக்கடவாயென்று சொல்லக்கேட்டு அன்னையே நான்நமது ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு தத்தஞ்செய்யப் பட்டவளாகினேன் அப்படிக்கிருக்கபெற்றவளாகிய நீஎன்னை எப்படி அன்னிய புருஷனையடையும்படி நேமிக்கிறாய் இப்படிப்பட்ட நடவடிக்கை பகையாளிகளுக்காகிலும் மேன்மையாகாதுஎன்னைப் பெற்ற அன்னையாகிய நீகிஞ்சித்தாகிலும் சங்கையில்லாமல் எனக்குகெட்ட மார்க்கங்களை போதிக்கிறாய் இனியுன் உபதேசம்போதும் உன்வழியைப் பார்த்துக் கொண்டுபோம் என்று சொல்லிய மீராபாயின் வார்த்தைகளை அந்த உத்தமி தன்கணவனுக்கு விண்ணப்பஞ்செய்தாள்.

அரசன் தனக்குத்தானே துக்கித்து ஓவனிதையே நமது கட்டுக்குட்படாத சிறுவளை வீட்டில்வைத்துக்கொண்டு அபகீர்த்தியை யடைவதைப் பார்க்கிலும் அந்தக் கன்னிகையை நல்ல உபாயத்தினால் கொன்று உலகநிந்தனை யில்லாமல் சுகிப்பது மேலென்று சொல்லி அம்மாதினகையில் விஷத்தைத்தந்து இதை எவ்விதத்திலாகிலும் உன்புதல்விக்குக் கொடுத்துச் சிறுவளை எமனுக்கு ஆளாகச் செய்யுமென்று நேமித்து அனுப்பினார் அந்தராஜபத்தினி தனது பர்த்தாவின் சொல்லைக்கடக்காத பதிவிரதையாகையால் தன் புதல்வியி னிடத்திற்குச் சென்றும் ஒன்றும் செய்யக் கூடாமல் அழுதுக்கொண் டிருந்தாள் அதைக் கண்டு மீராபாயி! அன்னையினால் தந்தையின் எண்ணத்தை யறிந்து ஓஅன்னையே! இதற்காகவா துக்கப் பட்டாய் முன்னம் பரமபாகவதராகிய பிரகலாதனைக் கொல்லவேணுமென்று எண்ணி இரணியகசிபன் றன்பத்தினியாகிய லீலாவதியினிடத்தில் விஷத்தைக் கொடுத்தனுப்ப அதையவர் பகவான் பாதாமுர்தமாகப் புசித்து பகவத்தியானஞ் செய்திருந்த அந்த உத்தமசிகாமணியை ரக்ஷித்தவனும் பஞ்சவர்களில் முதல்வனுக்கிளைய பீமனைக்கொல்லவெண்ணி துரியோதனாதிகள் அந்த வாயுபுத்திரனுக்கு அபாரியாக விஷத்தை யூட்டி கயிறைக்கொண்டு குண்டாகக்கட்டி அந்தஉத்தமனை வாவியில்யோட்டபோது சகலபுவன கர்த்தாவாகிய ஸ்ரீகிருஷ்ணபரமாத்துமா ஒர்வண்டாகிஅதில் முனனுதாய் நட்டிருந்த வாசியின்மேலிருந்து கெதாதரனை ரக்ஷித்தவனுமாகியபகவான் எனக்குப்பிராணநாதனாகியிருக்க நீ துயரப்படவேண்டிய அவசியமேயில்லை மேலும் இந்தத்திரேகத்திற்கும் ஆத்துமாவுக்கும் சம்பந்தமே கிடையாது அதெப்படியெனில் ஆத்துமா பிரிந்து போனவுடன் கட்டை வீழ்ந்து விடுகிறது உண்மை அதைச்சுட்டெரிக்க என்னுவார்களேயொழியப் பூசிப்பவர்களுண்டோ ஆகையால் இக்கூடுக்குள் காத்து வசிக்கும் பரியந்தமே தாய் என்றும் தந்தையென்றும் பிள்ளைகளென்றும் பந்துக்களென்றும் பிரியம் வைத்திருப்பது பகவான் மாயையே அன்றியில் அன்னியமில்லை இதற்குமுன் எத்தனைஜென்மங்களில் எத்தனை தாய் தந்தையர்களோ என்கிந்த ஜென்மத்தில் தாய் தந்தையர்களாக விருக்கிறீர்கள் இருக்கினும் முன்னம் தாய் தந்தையர்கள் கூட்டத்தில் நீங்களும் சேரத்தக்கவர்களே யல்லால் உங்க

Koviloor Digital Library

ளால் எனக்கு ஆத்மலாபமில்லையாது ஆசையால்
வீண்பிரமை கொண்டு புதல்வியென்று அபிமானம
வைத்திருப்பதை நீக்கிவிட்டு,

சுலோகம்.

"கார்யேஷுதாஸிகரணேஷுமந்த்ரி
ரூபேச லக்ஷ்மி க்ஷமயா தரித்ரி
போஜ்யேஷுமாதா சயனேஷுவேஸ்யா
ஷட்கர்மநாரீகுலதர்மபத்நினீ." என்றபடி,

வீட்டுவேலைகளில் வெள்ளாட்டிக்கு நிகரும் புக்
தியில் மந்திரிக்கு நிகரும் ரூபத்தில் லக்ஷ்மிக்குநிகரும்
பொறுமையில் பூமாதுக்குநிகரும் கணவனைப்போஷி
ப்பதில் அன்னைக்குநிகரும படுக்கையில் வேசிக்குநிக
ரும் ஆகிய இந்தஷற்குணங்கள் ஆறும்பொருந்தி கட
ப்பவள் கற்புடைய மாதென்று கருதி சொல்லியபடி
பதிவிரதையாகிய, நீ பர்த்தாவினுடைய கட்டளையை
மீறி நடக்கப்போகாது அப்படி நடந்தால் விபசாரி
யெனும் பேர்மேலிட்டு கற்பில்லதாழ்ந்துநரகத்திற்கு
ஆளாகவேண்டிவரும் ஆகையால் எனக்காக பாத்தி
யப்பட்டு சுதந்தரப் படவேண்டாம் பரதந்திரமாக
வே என்தந்தை கொடுத்த விஷத்தை என்வாயில் வா
ரும்மம்மணீ அகிலத்திலும் நிறைந்த எவ்பிராண நா
தன் இந்தவிஷயத்திற்கு மாத்திரம் அந்தர் யாமியா
காம லிருக்கிறார் அவன் பிரவேசத்துடன் கூடின
சகலபதார்த்தங்களும் அவன் சொரூபங்களாகி யிரு
க்க நாம் எதற்கும் பயப்படவேண்டியதில்லை ஸ்ரீகிரு
ஷ்ணபகவான் பாத அமிர்தத்தை விஷமென்று பிர
மித்தாய்.

சுலோகம்.

"இதம் சரீரம்பரிணாம பேசலம்
பதத்ய வஸ்யம் ஸ்லத ஸந்தி ஜர்ஜரம்
கிமௌஷதைக் லிஸ்யசிமூடதுர்மதே
நிராமயம் க்ருஷ்ண ரஸாயனம்பிப."

என்றால் இந்ததேகம் கில்கள்தளர்ந்து முதிர்
ந்து அவசியம் நசித்துப்போம் இதன் சுகத்திற்காக
அவிழ்தப்புசித்து சிரமப்படுவதைப் பார்க்கிலும் பவ
ப்பிணியைப் போக்குவதற்காகஸ்ரீகிருஷ்ணபகவான்
பாத அமிர்தத்தைப் புசிப்பது மேன்மை யென்று
சொல்லி அன்னையின் கையிலிருக்கும் விஷக்கை வா
ங்கி தன்கையில் வைத்துக்கொண்டு ஓஎன்னை யீன்ற
தாயே நான் ஸ்ரீகிருஷ்ணபகவான் திவ்விய அவிழ்தத்
தைப் புசித்து பாவபந்தங்களைப்போக்குகிறேன்விஷ
த்தைப் போக்கும்பமயாய் ஜெகந்நாதன் என் இருத
யாலயத்தில் வசித்துக் கொண்டிருக்க இந்த விஷத்தி

னால் எனக்குகெடுதி யுண்டாகாது மிதமாகிய க்ஞான
ர்களாகும் உங்களுக்கிது விஷமென்று தோன்றுகிற
தேயன்றி ஸ்ரீகிருஷ்ணபகவானால் மாலைசூட்டப் பட்
டவளாகி அவன கடாக்ஷம் லபித்து திவ்விய க்ஞான
த்துடன் கூடியிருக்கும் நான் அந்த பகவானுடைய
பரமகிருபையினால் இந்த விஷத்தை அமிர்தமாகப்
பார்த்து இருப்பவளானேன் என்றுசொல்லிதன்மன
தில் உத்தேசித்து,

சுலோகம்.

"வ்யாமோஹப்ரச மௌஷதம்
முனிமனோ வ்ருத்திப்ரவ் ருத்யௌஷதம்
தைத்யேந்திரார்த்தி கரௌஷதம்
த்ரிபுவனே ஸஞ்சீவனை கௌஷதம்
பக்தாத்யந்த ஹிதௌஷதம்
பவபய ப்ரத்வம்சனை கௌஷதம்
ஸ்ரேயஃப்ராப்திகரௌஷதம்
பிபமன ஸ்ரீகிருஷ்ண திவ்யௌஷதம்"

என்றால் அன்னியர்பேரில் உண்டாகும்மோகத்
தையளக்கு அவிழ்தமும் முனிவர்கள் மனவிருத்தி
பிரபலிக்கச் செய்யும் அவிழ்தமும் அரக்கவரசருக்கு
ஆர்த்தியை யுண்டாகச்செய்யும் அவிழ்தமும், மூவுல
கங்களையும் உஜ்ஜீவிக்கும் முக்கியமாகிய அவிழ்தமும்
பக்தர்களுக்கு மிகுந்த பிரியமாகிய அவிழ்தமும் சம்
சார பயத்தைத் தும்சம்செய்யும் மேலான அவிழ்த
மும் கீர்த்தியும் பிராப்தியுமுண்டாகச்செய்யும் அவிழ்
தமுமாகிய ஸ்ரீகிருஷ்ண திவ்விய அவிழ்தத்தைப் பா
னம்செய்கிறே னென்றுசொல்லி அந்த விஷத்தைச்
சாப்பிட்டாள் அப்போதந்தவிஷம் மீராபாயியையொன்
றுஞ்செய்யாமல் ஸ்ரீகிருஷ்ணபகவான் திவ்வியமங்கள
விக்கிரகத்தில் வியாபித்து சொர்ணமயமாகி யிருந்த
அவர் திரேகமெல்லாம் கறுத்த நீலநிறமாச்சுது அப்
போதுராஜனும் அவர்பத்தினியும் அவிடத்தி லிருந்த
சாதுஜெனங்களும் இந்த அற்புதத்தைப் பார்த்துமிக
வும் ஆச்சரியப்பட்டு அரசன் தான்செய்த அபசாரத்
திற்காகச் சோதித்து மீராபாயியைப் பார்த்து ஓஅம்
மணீ தேவர்களுக்கு அமிர்தம் தந்து ரக்ஷித்தவனு
க்கு நான் விஷத்தைத் தந்தேன் ஆகையால் இந்தபக
வான் உனக்கந்தரியாமியாகி நான் அனுப்பிய விஷத்
தை தான்சாப்பிட்டு உன்னை ரக்ஷித்தார்.

இந்த புருஷோத்தமன் திரேகம் முன்போல
சொர்ணமிரமாகி பிரகாசிக்கும்படி நீபகவானை பிரார்
த்தியும் என்றுசொல்லிய தந்தையின் வார்த்தையைக்
கேட்டு மீராபாயி ஸ்ரீகிருஷ்ண பகவானைப் பார்த்து

Koviloor Digital Library

ஓ தேவாதிதேவா தீனரக்ஷகா மகானுபாவா அந்தியமில்லாததாகி தாண்டக் கூடாததாகிய காமக்குரோத மோகாதி திமிங்கலங்களினால்பயங்கரமாக்கும் நதியாகிய சம்சாரத்தை தாண்டுவதற்கு ஓடமாகி அதற்கு சீமை பூமியாகி யிருப்பவனும் உபதேச பரம்பரையினா லறியப்படத் தகுந்தவனும் அனந்தசக்தி யுக்தனும் தேசகாலவஸ்துக்களினால்அபரிச்சேதனும்உண்மை நாமப்பிரபாவத்தினால் கர்மயோகாதிகளுக்கு பலம்பிரதான சத்தியைக் கொடுப்பவனும் பிரம்மாதிசகலாத்துமகோடிகளுக்கு மேலானவனும் நிரதிசயானந்தருபனும் பிரம்மாதிகளைப் போல காலவசிய னாகாமல் சகலசக்தி யுக்தனாகி நித்தியமாகி சோதிருபமேயாகி பிரகாசிக்கும் திவ்வியமங்கள விக்கிரகத்துடன் கூடி ஆனந்தசொருபனாகி யிருப்பவனும் பிரதானத்திற்கு சீமை பூமியாகிய வேதவைதிகங்களை பரியாலிக்குமவனாகி பிரதானமும் ஜீவனமும் பிரளயகாலத்தில் லயிக்கும் ஸ்தானமாகி சர்வத்திற்கும் சௌக்கியமில்லா திருப்பதுபோல சேதுவாகி முத்தாத்துமாக்களுக் காகினும் மேலானவனென்று சொல்லத் தக்க காரண சேஷியுக்தனாகி, பிரபஞ்சத்திற்கு வியவசாய காலத்தில் வியவசாயஸ்தானமாகி ஆகாசாதி சகலதிரவியங்களிடத்திலும் நிறைந்தவனாகியிருக்கும் ஸ்ரீவிஷ்ணுதேவர் ஜெகத்திற்குக் காரணமாகும் விராட்புருஷனும் அவற்றிற்குக் காரணமாகும் ஆங்காரமும் அதற்குக் காரணமாகும் பிரகிருதியுமாகி இந்த தத்துவங்களினுடைய முக்கியகாரியங்களாகி காரியகாரணரூபமாக காணப்பட்டிருக்கும் சுபாவீகங்களும் அனந்தங்களுமாகும் க்ஞான பல ஐஸ்வர்யவீயசக்தி பிரகாசசுசீல வாச்சல்ய சௌரிய தைரியங்கள்முதல் சகல கல்யாண குணங்களுக்கு மிருப்பிடமாகிகிரியாசொருபத்தினாலும் கர்த்ரிய சொரூபங்களினாலும் சேதனசேதனர்களை ரக்ஷிக்கிறீர் வேதங்களுக்கதிபதியும்வேதாங்கங்களுக்குள்ளிருப்பவனும் வேதவேதாங்கசாஸ்திரசொரூபியும் நீரேயல்லது வேறல்ல சாஸ்திரஜெனிதமென்றும் விவேக ஜெனிதமென்றும் சொல்லப்பட்ட இரண்டு க்ஞானங்களும் வேதப்பிர வர்த்தனுகும் பிரம்மாவும் சுருதிப்பிர வர்த்தகர்களாகும் மனுவாதிகளும் நீரே பக்ஷபாத முதலாகிய தோஷமில்லாதவனாகி ஜெனனமில்லாதவனாகி மரணமில்லாதவனாகி நித்தியனாகும் பரப்பிரம்மமும் நீரே அப்படிப் படும பக்தபரிபாலனை நிமித்தியம் எங்கள்வீட்டில்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யென்னும் நாமத்துடன்கூடி அர்ச்சாரூபனாகி வீற்றிருக்கும் என்பிராணநாதரே விஷத்தைக் தரிக்கவைக்காகும் நாகங்களிலேபிரதானனாகிய ஆதிசேஷன்மேல் சயனித்தயிருக்கும் உமக்குஇந்தவிஷம் பாதையுண்டாகமாட்டாது என்னிடத்தில் தேவரீருக்கிருக்கும பிரியத்தை உலகத்தில்யாவருக்கும் தெரியப் படுத்துவதற்காகி, எனக்கு அந்தரியாமி நான் சாப்பிட்ட விஷத்தை நீர்புசித்து உமது சரீரத்தில் நீலவர்ண முண்டாக்கிக் கொண்டீர் ஆகையால் என்னைப்பற்றி என்தந்தைசெய்த குற்றத்தை மன்னித்து இவ்விடத்திய சாதுக்களுக்கு ஆனந்த முண்டாகும்படி எப்போதும்போலசொர்ணவர்ணனாகிதெரிசனங்கொடும் என்று பிரார்த்தித்த பிரியலதியின் பிரார்த்தனையை அங்கீகரித்து முன்போல தெரிசனந்தந்து அதைப்பார்த்து அரசன் இனியில்லாத ஆனந்த மடைந்து புதல்வியைப் பலவிதங்களாகத் துதித்து ஒசாதுமாது சிகாமணியே நான் உமது மகிமையை யரியாமல் அபசாரப்பட்டேன் இந்தஅபசாரத்தை மன்னித்து பகவான் கிருபைக்குப்பாத்திரனாகும்படிகிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து அந்த மீராபாயின் அருளைப்பெற்றுப் போயினர்.

பின்பு இன்னம் மீராபாயின் விஷயத்தில் அபவாதங் கற்பனைசெய்த துஷ்டர்கள் லஜ்ஜை யடைந்து பகவானை சரணமடைந்து முமூட்சுகளானார்கள் ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்திவ்விய ரூபதெரிசனை யனுபவத்தினால் மீராபாயை சந்தோஷிப்பித்தும் அந்தப்புரத்தில் வசித்து அம்மாது ஒருநாள் பகவானுக்காராதனை செய்து அதிதியப் பாகவதர்களை போசனத்தினால் திருப்தி யடைவித்து மிகுர்தசேஷத்தைப்புசித்து ஏகாந்தமாக வீணையைமீட்டி,

சுலோகம்.

"கசவன் பாமேசாண
பக்திர வயபிசாரிணி
ப்ராப்தம் புஜயமானஸ்ய
ததம்பவதிஹேற பாபோ."

என்றால், ஒசுவாமி பிராப்தத்தை அனுபவிப்பவர்களுக்கு சஞ்சலமில்லாத பக்தி எப்படி யுண்டாகுமென்று பகவானை பூமாது கேழ்க்கையில்,

சுலோகம்.

ப்ராப்தம்பு;ஞ்ஜமானோபி கோப்யாஸாதஸ்ஸதா
ஸமூந்தஸ்ஸங்லோகே கர்மணோனுபலிப்யதே
மஹாபாபாதிபாபானி கோதத்யானப்சுரோதிசேத்
க்வசிச்வர்சமநகுர்வந்தி நலிநீதளமம்பசா.

கோதாயாவ்புஸ்தகம் யத்ரபாடஃப்ரவர்த்ததே
தத்ரஸர்வாணிதீர்த்தானி ப்யாகராகிநித்ரவை

சர்வவேதாஸ்சருஷயோயோக்லைபேன்னகாஸ்சயே
கோபாலகோபிகாவரபி நாரதோத்தபார்ஷதைஃ
ஹறுபாயோஜாயதேசிக்ரம்பத்ரகிதாபாவர்த்ததே
யாகிதாவிசாரஸ்ப படனம்பாடனமஸ்ருதம்
தத்ராஹம்கிஸ்சிதம் ப்ருத்விநியஸாமிஸதைஹரி
கிதாஸ்யகந்திஷ்டாமிதேமோசோத்தமமக்ருஹம்
கிதாக்ஞானமூபாஸ்த்யத்ரின் மவாகான்பாலயாமப
ஹம்

என்றால் பிராப்தமனுபவிக்கு மவர்களாகிலும் பகவதகீதையை சதாபிரியத்துடன் பாராயணம்செய்யுமவர்கள் முக்தர்களாகி சுசவான்களாகி சர்வத்தினால் கட்டுப்படாதவர்களாகி யிருப்பார்கள் பகவத்கீதையை மனதில் தியானிக்குமிடத்தில் தாமரையில் ஜலம் ஒட்டாததுபோல கொடியபாபங்கள் ஒட்டாது பகவதகீதை புத்தகமிருக்கு மிடத்திலும் கீதாபாராயணம் நடக்குமிடத்திலும் பிரயாகை முதலாகிய சகலபுண்ணிய தீர்த்தங்களும் பொருந்தியிருக்கும் கீதாபாராயணம் செய்பவர்களுக்கு, சகல தேவர்களும் ரிஷிகளும்போகிகளும்பன்னகர்களும் கோபாலகோபிகைகளும் நாரதரும்உத்தமரும் உபயநாச்சியாரும் துரிதமாக சகாயர்களாவார்கள் எந்திடத்தில் கீதை வாசிக்கப் படுகின்றதோ அல்லதுஉபதேசிக்கப்படுகின்றதோ கேழ்க்கப்படுகின்றதோ உரைவிசாரணைசெய்யப் படுகின்றதோ அந்தவிடத்தில் நான் அவசியமாக வசித்திருக்கிறேன் மேலும் பகவத்கீதையை நான் ஆஸ்ரயித்திருக்கிறேன் அதுவே எனக்கு உத்தமமாகிய வீடு அதையாதாரமாகக்கொண்டு சகலலோகங்களையும் பாலித்துக் கொண்டிருக்கிறேன் என்று பகவான் சொல்லியிருப்பதால் இந்த சுலோகங்களைப் பாடி லயித்திருந்தாள் பின்பு அம்மாதுக்கு அந்தியத்தில் திவ்விய சாயுச்சியபதவியைத்தந்தார், மீராபாயிக்கு பிராணநாதனுகும் அந்த ஸ்ரீகிருஷ்ண பகவான் நாளைக்கும் உதயபுரத்தில் சந்நிதிசெய்திருக்கிறார் தீர்த்தயாத்திரைசெய்யும் சாதுக்கள் அந்ததேவனை தெரிசித்து கிருதார்த்தர்களாகி யிருக்கிறார்கள்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணேநமஃ

வாழிவிருத்தம்.

மனதிலே கண்ணன்றனை வகித்தாள் வாழி
மற்றவர்கள் தமைக்கனவில் நினையாள்வாழி
தனதுதந்தை தந்தவிடம் குடித்தாள்வாழி
தனையழுந்து நீலநிறம் பெற்றோன்வாழி
கனமுடனே யதைநீக்கி நின்றோன்வாழி
கயவர்களை யாட்கொண்ட கழலோன்வாழி
தினமுமந்தப் புரத்திற்செழித் திருந்தோன்வாழி
சீர்கொண்ட மீராபாய் திருப்பதங்கள்வாழிவாழி.

மீராபாய் சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:



(பதினேழாவது)

தாமாஜிபண்டிதர் சரித்திரம்

அகிவிருத்தம்.

காமாதிகளைக் கடிந்து கடுவிரக்தக் கனபொருந்தும் வைராக்கிய சீலராகிப்
பூமாது கணவன்றிரு வுருவமென்றிப் பூதலத்திற் சகலவுயிர்களையுமெண்ணி
ஏமார்ந்தி ராதேதற்மை களைப்புரிந்து இருநிலத்தில் பக்தபுகழதனைப் பெற்ற
தாமாஜி பண்டிதர்தம் திருபொற்பாத தாமரையை யணியாகத் தலைகொள்வோமே.

ஸ்ரீமாதின் அருணோக்கம் நிறைந்தப் பட்டணங்களில் ஒன்றாகிய பெதரி என்னும் பட்டணத்தில், பிராமண குலத்திற்பிறந்தவர் பந்தபாசங்களிற்குறைந்தவர், மந்தபுத்திகள் யாவும் மறந்தவர் இந்திரிய சேஷ்டைகளிறந்தவர் தொந்தங்கள் யாவும் துறந்தவர், நிந்தையிலிருந்து பிரிந்தவர் எல்லா சாஸ்திரங்களுமறிந்தவர் இவ்வாழ் வற்பமென தெரிந்தவர் நந்தநந்தபக்தி நிறைந்தவர் விந்தையாம் நீதியிற்சிறந்தவர் சிந்தை மாய்த்தருளி லுறைந்தவர், அந்தமாம் பிரமத்தில் மறைந்தவர் சுந்தரானந்தத்திற் கரைந்தவருமாகிய தாமாஜிபண்டிதர் என்ற பேரமர்ந்த ஓர்வைஷ்ணவ உத்தமரிருந்தார் அவர் பரிசுத்தமன முடையவராகி சகல பிரபஞ்சத்தையும் பகவான் சொருபமாகப் பாவித்து அன்னியர்கள் துக்கத்தைக் கண்டு சகிக்காதவராகி, பரவுபகார சீலராகி அனவரதமும் பகவான் தியானதில் தானே முயர்ச்சி கொண்டவராகி இருந்தார் அந்த தேசத்தையாளும் ராஜன் இவருடைய நன்னடக்கைகளைக் கண்டு இந்த தாமாஜி பண்டிதரை மங்களபடமென்னும் கிராமத்திற்குஅதிகாரியாக நேமித்து அனுப்பினான். தாமாஜி பண்டிதர் குடும்ப சமேதராகி மங்களபடத்தில் வசித்து ராஜன் உத்தரவின் தனைதிகாரத்தைச் செலுத்தியும் சகல காரியங்களையும நன்றாக நடத்தியும் ஸ்ரீ பாண்டுரங்க பதத்தாமரை தியானத்தை யேமாராமல் செய்துக்கொண்டும் கெடுவுதப்பாமல் குடிகளிடத்தில் வாயிதாப்பணத்தை வசூல்செய்து இராஜனுக்கு

Koviloor Digital Library

இருசால் அனுபவிக்கொண்டேவந்தார் இவர் பொரு
மையும் சாந்தமும் கலவிதநிறமையும் ஈகைமுதலான
நற்குணங்களையும கண்டு குடிகள் மிகுந்த களிப்படை
ந்து என்றும் இந்தஉத்தமரே இவ்வூருக்கு அதிகாரி
யாக யிருக்கவேண்டுமென்று யாவரும் தெய்வத்தை
தொழுதுகொண்குருந்தார்கள் அவ்விடத்தில் அரசன்
காலம்தவராமல்அந்தஊருக்கு இருசால்வந்துசேர்ந்துக்
கொண்டிருப்பதால இந்த தாமாஜிபண்டிதர் பேரில்
மிகுந்த பிரியம் வைத்திருந்தான்.

இப்படிக்கிருக்க மழையில்லாததினுல் அவ்வூரு
க்கு பெருத்தக்ஷாமம் உண்டாகி பிரஜைகள் அன்ன
த்திற்கில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள்
அப்படிப்பட்ட கடுமையானகாலததில் தாமாஜிபண்
டிதர் தனக்குண்டாகிய பதார்த்தங்கள் யாவையும்
ஏழைகளுக்கு விநியோகப்படுத்திக்கொண்டுவந்தார்
அந்தக் கொடூரமான காலத்தில ஆகாரம்மிகவும் அரி
தாகி வெகுபிரஜைகள் மடிந்துபோனுர்கள் அநேகர்
அந்தஊரைவிட்டு தேசாந்திரியாய்ப் போயினுர்கள்
அப்படிப்பட்ட துர்க்காலத்தில் பண்டரிபுரத்தில் வா
சஞ்செய்யும் ஓர்பிராமணன் தன்வீட்டையும் குடும்ப
த்தையும்விட்டு தேசாந்திரியாய்ப் போகும் மார்க்கத்
தில் நடுவிலிருக்கும் மங்களபடத்திற்கு வந்து தாமா
ஜிபண்டிதரைப் பார்த்தான் இந்த வைணவசிகாமணி
வந்த அதிதி சாக்ஷாத் பாண்டுரங்கநாதனென்று பக்தி
செய்து, அர்க்கியபாத்திய முதலானதுகளைத் தந்து
க்ஷேமலாபங்களை விசாரித்து தன்வீட்டில் புசித்துப்
போகவேண்டுமென்று பிரார்த்தித்து பரிசுத்தமான
யிடத்தில் ஓராசனத்தில் உட்காரவைத்து தலைவாழை
யிலைபோட்டு மிகவும்வெளுப்பாகி அதிக மெதுவாகி
மனதுக்குப் பிரியமாகும் அன்னமிட்டு திவ்வியபரிம
ளமாகும் பருப்புடன் நெய்யைவட்டிக்கையில் அந்த
அதிதி ஆனவர் போசனம் செய்கிறபோது கண்ணீர்
விட்டழுதான்

அதைப்பார்த்து தாமாஜிபண்டிதர் விப்பிரசிகா
மணியே புசிக்கிறகாலத்தில் கண்ணீர்விட்டழுவதற்கு
காரணமென்ன சங்கைப்படாமல்சொல்லும் எனக்கு
சாத்தியமாகுமாகில் உன் துக்கத்தைப்போக்கி உனக்
கானந்த முண்டாகச் செய்கிறேன் ஜெகதீசன் அதிதி
ரூபத்தைப் புனைந்து சேதனர்கள் பூசையை அங்கி
கரித்து அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்
ஆகையால் ஸ்ரீபாண்டுரங்கசொரூபராகும் உமக்கு சந்
தோஷ முண்டாகச்செய்வது எனக்குபெருத்தது கிதி
யென்ற தாமாஜிபண்டிதருடைய நயவினய மொழி
களைக்கேட்டு அதிதியாகும் பிராமணன் அவரைப்
பார்த்து ஓமகாத்துமாவே நினது பிரியவசனங்கள்
உனது ஆத்துமாகுணங்களை வெளிப் படுத்துகிறது
நான் பண்டரி புரத்தைவிட்டு நான்கு நாளாயிற்று
இந்த நான்குநாளாக நிராகாரனுகி யிருக்கிறேன் மே
லும் பண்டரிபுரத்தினில்என்குடும்பம் அன்னமில்லா
மல் வாதைப்பட்டிருக்கிறது ஆகையால் இந்த அன்
னத்தைப் பார்த்தவுடனே என்பெண்டு பிள்ளைகளை
நினைத்துகொண்டு அவர்கள்பட்டினியாகியிருக்கநான்
மாத்திரம் அன்னத்தைப் புசிப்பதற்கு சயிக்காமல்
துக்காக்கிராந்தனுகி கண்ணீர் விட்டே னென்றதைக்
கேட்டு தாமாஜிபண்டிதர் அவர் கஷ்டத்திற்கு அனு
தாபப்பட்டு ஓபிராமண வுத்தமரே துக்கப்படாமல்
புசியும் உன்குடும்ப போஜனத்திற்கு ஒருவருஷத்தி
ற்கு வேண்டிய தானியத்தை நான் கொடுக்கிறேனெ
ன்று சொன்னுர் அம்மொழிகள் அமிர்தப் பிரவாக
மாகி அதிதிசெவியின் துவாரத்தினில் பிரவேசித்து
அவர் இருதயசாகரம் பூரித்து ஆனந்தபிந்துக்களாகி
நேத்திரங்களினின்றும் வெளிப்பட்டதுபின்பு அந்த
அதிதிபோஜனம் செய்து ஷட்ரசங்களுடன் கூடிய
அன்னத்தை கோவிந்தகர்ம கோஷ்டத்துடன் புசித்
து எழுந்து கைகால் சுத்திசெய்துக்கொண்டு சுத்தாச
மனம்செய்து சுத்தமாகிய யிடத்தில் சுகமான ஆசன
மதின் மீதிருந்து இருதயகமல வாசனுகிய பகவானை
தியானித்துத் துதித்து தாமாஜிபண்டிதர் சிரத்தை
பக்தியுடன் தந்த சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளை அங்கி
கரித்தார்.

பின்பு தாமாஜிபண்டிதர் அதிதி சேஷமாகும்
அன்னத்தை பரமபாவனமென்று புசித்து தன்சேவ
லர்களை யழைத்து நானூறுகலம் தானியத்தை ராஜா
வினுடைய தானியராசியி லிருந்து அளந்து இந்தப்
பிராமணனை பின்தொடர்ந்துகொண்டுபோய் இவர்வீட்
டிற் சேர்த்து வாருங்களென்று நேமித்தார் அந்தச்
சேவகர்கள் தங்கள்அதிகாரியின்கட்டளையைசிரமேற்
கொண்டு தானியத்தை வண்டிகளி லேத்திக்கொண்டு
அந்தப் பிராமணன் பின்னடைந்து பண்டரி புரத்தி
ற்கு போயிக்கொண்டிருக்கையில், மெத்தபசியுடைய
ஜெனங்கள் மேல்விழுந்து அந்ததானியம் யாவத்தை
யும் கொள்ளைகொண்டு போயினுர்கள் அப்போதுஅந்
தப்பிராமணன் "தரித்திரன் தலைகழுகபோகையில்
வானிருந்து விரைவாய் மழைப்பின் தொடர்ந்தேவந்த
தென்றபடி" பரம உத்தானுகிய தாமாஜி பண்டித
ருடைய அனுக்கிர கத்தினுல் என் தரித்திரம் உரு

Koviloor Digital Library

மாய்ந்து போயிற்றென்று சந்தோஷித் திருக்க, என் பாப ராசியானது வெகுஜென ரூபமாகி வந்து தானியத்தை அபகரித்துக் கொண்டு போயிற்றே கடல் அபாரமாகிலும் பாத்திரத்திற்கு தக்க ஜலமல்லவா கொள்ளும் ஆஹாஹா அந்த தாமாஜி பண்டிதன் அன்னம் ஒருவேளைக்குத் தான் பிராப்தமாகி யிருந்தது என்பாபத்திற்கு அவரென்ன செய்வார் முன் ஜென்மத்தில் அதிதிகளுக்கு அன்னமிடாத எனக்கு இப்போது அன்னமெப்படிக் கிடைக்கும் அன்னதானஞ் செய்யாமல் தவபலத்தினால் சத்திய லோகத்தையடைந்த சுவேதமகாராஜன் அந்த உத்தமமாகிய உலகத்திலும் பசிவாதை யுடையவனாகி பிரமனால் அனுப்பப்பட்டு பூலோகத்திற்குவந்து அதிதிகளுக்கு அன்னமிடாமல் தன்னால் போஷிக்கப்பட்ட உண்மை சரீர இறைச்சியைப் புசித்து பசிதீர்ந்து மறுபடியும் சத்திய லோகத்தைச் சேர்ந்து இப்படி தினந்தினம் பிரம்மாவினுடைய அனுக்கிரகத்தினால் எப்போதும் போல வாடாமல் வதங்காமலிருக்கும் பிரேதத்தின் மாங்கிசத்தைப் புசித்து பசிதீர்த்துக்கொண்டு வெகு காலம் போக்கி பகவான் கடாக்ஷத்தினால் தன்கண்களுக்குப் புலப்பட்ட பரமதபோநிதியாகிய அகஸ்திய மகாமுனிவரை தெரிசித்துத் துதித்துப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து தான் அபிமானித் திருந்த ரத்தினமாலையை அவருக்குக் கொடுத்து அவரனுக்கிரகத்தைப் பெற்று பரிசுத்தனாகி பசிவாதை யில்லாதவனாகி தன்னால் விடப்பட்ட பிரேதரூப சரீரம் மறைந்து போயினதற்கு அற்புதமடைந்து பரமானந்த மடைந்தவனாகி சத்தியலோகத்தில் தங்கிவசித்திருந்தானென்று ஸ்ரீமத் இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா ஆகையால் பூர்வகர்மத்திற்கு இப்போது விசனப்படுவதில் பிரயோஜன மில்லையென்று நினைத்து பண்டரிபுரத்திற்கு சென்று பெண்டு பிள்ளைகளைப் பின்னழைத்து கொண்டு மங்களபடத்திற்கு வந்தார் அவரைக்கண்ட தாமாஜிபண்டிதர்தைரியஞ்சொல்லி அவர் குடும்பத்தைப் போஷித்துக் கொண்டுவந்தார் பின்பு அந்த தேசவாசிக ளாகும் ஏழை ஜெனங்கள் யாவரும் தாமாஜிபண்டிதர்உதாரத்தைக் கேட்டு அன்னத்திற்காக ஆயிரங் கணக்காக வந்து மங்களபடத்தைச் சேர்ந்து தாமாஜி பண்டிதரைப் பார்த்து ஓமகாத்துமாவே! அன்னத்திற்கில்லாமல் அநேகர் மடிந்துபோனார்கள் மிகுந்திருக்கும் நாங்கள் மேகங்களை எதிர்பார்க்குஞ்சாதகப்பக்ஷிகளைப்போல உமதுகடாக்ஷத்தை எதிர்பார்த்திருக்கிறோமென்று சொல்லக்கேட்டு, தாமாஜிபண்டிதர் கர்ணனது உதாரத்திற்காகிலும் அதிகமாகும் உதாரத்துடனும் பூதகதயையுடனும்கூடிசொல்லியதிரேகமும்திவ்வியயோகமும் வண்டுபோல் மொழியும் கெண்டைபோல் விழியும் கமலநிகர்த்தாள்களும் விமலமுளாந்தோள்களும், மதியின் பாலடக்கமும், துதியுடனொடுக்கமும், கற்புடன்மானமும், விற்பனத் தியானமும், கருணையுளதானமும் ஸ்மரணையொடுமோனமும், மேகத்தைப்போன்ற கூந்தலும் சந்திரனைப்போன்ற முகமும் பவளத்தையொத்த பற்களும் மெதுவானநடையும் மெலிவானஇடையும் உடைய பதிவிரதையாகும் தன்பத்தினியைப் பார்த்து ஓவனிதையே!இப்போது நமக்கு கார்த்திபமெது ஆயிரங்கணக்கால் ஏழைஜெனங்கள் அதிதிகளாகி நம்மிடத்திற்கு வந்தார்கள் அனந்தரூபராகிய பண்டரிநாதன் அந்த அனந்த நாமங்கொண்டவராக வெகுஜெனரூபராகி தரிசனம்தந்தார் ஆகையால் யான்தேடிய தானதிரவியம் யாவற்றையும் அதிதிகளுக்கு விநியோகப்படுத்தி ஏழையாகினேன் ஓகோபெண்ணே, மறந்து நான் தப்புசொன்னேன் இப்போதென் ஞாபகத்திற்கு வந்தது அது என்னவெனில், எனது பிராணநாதராகிய பண்டரிநாதன் சகலத்திற்கும் அதிபதியாகியிருக்க அவர்புதல்வனாகிய நானெப்படி ஏழையாகுவேன், நான்லக்ஷ்மீபுத்திரனல்லவா, அப்படிப்பட்ட எனக்கு "ஸ்வதேசம் புவனத்ரயம்" தெய்வாதீனமாகும் சகலபிரபஞ்சமும் என்னதாகியிருக்க நானெப்படிஏழையாகுவேன் ஆகையால் பகவான் திரவியத்தினால் பகவான்சொரூபர்களாகிய இவர்களை யாராதிக்கிறேன் அதெப்படியெனில் ராஜனுக்குச் சேரவேண்டிய அநேகமாயிரம் கரிசைதானியம் என்சுவாதீனத்திலிருக்கிறது அதனை ஸ்ரீபாண்டுரங்கனுக்கு பிரியமாய் விநியோகிக்கிறேன் எனக்குள் புகுந்து கொடுப்பது இவர்களுக்குள் ளிருந்து பெற்றுக்கொள்ளுவதும் ஸ்ரீபாண்டுரங்கனே யல்லவா சகலருக்கும் கெதியாகும அந்ததேவன் ராஜனுக்கும அந்தரியாமியாகி யிருப்பவன் ஆகையால் நான் செய்யும் காரியத்திற்கு அரசன் சந்தோஷிப்பானென்று நினைக்கிறேன் ஒருவேளை ராஜனுக்கு என்னிடத்தில் கோபமுண்டாகில் என் ஒருவனை மாத்திரமே அல்லவா, சிக்ஷைசெய்வான் அந்தஜெகதீசன் கிருபையினால் இத்தனை யாத்துமாக்களும் சந்தோஷிப்பார்களல்லவா, அதுவே எனக்கு பெருத்த பலனென்று சொல்லி தானியச்சாலைகளைத் திறந்து பகவான் சொரூபர்களாகும் ஜெனங்களே: உங்களுக்கு வேண்டியபடிதானியகளை எடுத்துபோங்களென அப்படியேகுடிகள் தானியங்களைக் கொண்டுபோயினார்கள் இப்படியாக மூன்றுமாதத்திற்குள் தானியசாலைகள் யாவும் காலியாய்விட்டது தாமாஜி பண்டிதர் உதாரணமானது உலகமெங்கும் பரவியது சகல பிராணிகளும்

Koviloor Digital Library

ஆனந்தமடைந்தார்கள் அதிலொருவன் முன்னமொரு ப்ராமணன் தன்புதல்வனுக்கு மணஞ் செய்வதற்கு சகல சாமக்கிரியைகளும் தயார்செய்து விடாமழையால் விறகு அகப்படாமல் பெருத்த கஷ்டப்பட்டுக் கர்ணமகாராஜனிடத்திற்குவந்து அந்தப்பிராமணன் தன்குறையைச் சொல்லக் கேட்ட கர்ணமகாராஜன் யோசித்து பெருத்த ஓர்மாளிகையை இடித்துத் தள்ளி அதிலிருக்கும் மரங்களைக் கொண்டு போகும்படி சொல்ல அதைக்கேட்டுப் பிராமணன் மரங்களையெல்லாம் வண்டியிலேற்றிக் கொண்டுபோய் அச்சுபகாரியத்தை முடித்து சந்தோஷமடைந்தது ஓர்பெரிதல்ல இந்த க்ஷாமகாலத்தில் ராஜனுடைய தானியமென்று யோசிக்காமல் ஆயிரங்கணக்கான வெகு ஜனங்களுக்கு கொடுத்துக் காப்பாற்றின பிரபுவின் உதாரத்துக்குமுன் கர்ணனுடைய உதாரம் தாழ்ந்ததென்றே சொல்லவேண்டும் என்று கொண்டாடிப்போயினன்.

இப்படியாக உலகமெங்கும்புகழ கீர்த்தியடைந்த மகானுபாவராகிய தாமாஜிபண்டிதர் பகவான் கல்யாண குணங்களைப் பாடிக்கொண்டும் கிராமாதிகாரத்தை செலுத்திக்கொண்டும் நாள் போக்கிக் கொண்டிருந்தார் அப்போது தாமாஜி பண்டிதரிடத்தில் ராயசவேலை பார்ப்பவர்களில் குரூரகுணமுடைய ஒரு துஷ்டன் இந்தவிருத்தாந்தங்களை யெல்லாம் ராஜனுக்குத் தெரிவித்தான் அப்போதந்த இராஜன் கோபதிப்தனாகி என்னுடைய அனுமதியின்றி தானியங்களைக் கொள்ளைக்குவிட்ட அந்ததாமாஜி பண்டிதனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வாருங்களென்று தூதர்களை யனுப்பினன். அவர்கள் உடனே மங்களபடத்திற்கு வந்து ராஜன்கட்டளையை தாமாஜி பண்டிதருக்கு தெரிவித்து அவரையழைத்துக்கொண்டு வருகையில் நடுவழியிலிருக்கும் பண்டரிபுரத்துக்குள்புகுந்து வருகிறபோது தாமாஜிபண்டிதர் அந்த ராஜ தூதர்களை வெகுவிதங்களாகப் பிரார்த்தித்து அவர்களனுமதியைப் பெற்று பகவான்சந்நிதிக்குட் பிரவேசித்து ஸ்ரீமத்பண்டரி நாதனைசேவித்து பகவானை துதிக்கத் தொடங்கினர் ஞான மாத்திரரூபமாகி அசித்து மகிமையுக்தனாகி சர்வவியாபியாய் அநேகரூபமாகி ஏகரூபமாயிருக்கும் பரமாத்துமாவுக்கு அநேக வந்தனஞ் செய்கிறேன் அப்பிரமேயா சகலசொரூபமாகி தேவர்கள் எக்கியத்தில் அவிர்ப்பாகமாகி யிருக்கும் உமக்கு நமஸ்கரிக்கிறேன் மகாப்பிரபூ விக்ஞானத்துக்குச் சீமை பூமியாகி பிரகிருதிக்காகிலும் அன்னியனாகிய உமக்கு வந்தனம் செய்கிறேன் பஞ்சபூத ஆத்துமாவாகி ஏகாதசேந்திர ஆத்துமாவாகி பேதமை யாத்துமாவாகி ஆத்துமாவாகி பரமாத்துமாவாகி யிருப்பதினால் நீயொருவனே ஐந்துவிதங்களாகி யிருக்கிறாய் சகலமுமாகி சகலத்துக்கும் ஆத்துமாவாகி சராங்களாகிய சகல பிராணிகளுக்கும் அசராங்களாகும் ஆத்துமாவுக்கும் நேமனாகி பிரம்மா விஷ்ணுசிவநாமங்க ளென்னும் கற்பனையினால் சொல்லப்பட்டவனாகி யிருக்கும் பகவானே நீர்பிரசன்னமாகவேணும் அனந்த குணங்களுடன் கூடின ஆத்துமாவாகி ஆனந்தயுக்தனாகிய பரமேஸ்வரா அனந்தநாமங்களுடன் கூடியிருக்கும் உனக்கு நமஸ்காரம் செய்கிறேன் ஜீவாத்துமாக்களைப் போல கர்மஉபாதியாகும் தேவமனிதர்கள் நாமரூப கற்பனைகளில்லாமல் நித்தியமாகிய உத்தமமாகிய விகாரமில்லாததாகும் பரப்பிரமம் நீரே நாமரூபகற்பனைகளில்லாமல் ஒருபதார்த்தத்தை யறிவது அசாத்தியமாகையால் நீர் கிருஷ்ண அச்சுத ஆனந்தவிஷ்ணுவாதி நாமங்களினால் துதிக்கப் பட்டிருக்கிறீர். அயனாகி அனந்தனாகிய ஓ தேவனே இந்ததேவாதி கற்பனைகளுடன்கூடிய சகலபிரபஞ்சங்களும் நீரே விகாரமில்லாததாகும் ஆத்துமாவும்நீரே இப்படி சகலமும் நினது விபூதியாகியிருப்பதினால் உனக்கன்னியம்எதுவுமில்லை ஆகையால் நீரேபிரம்மாவாகி சிவனாகி சூரியனாகி சிருஷ்டிகர்த்தாவாகி தாதாவாகி இந்திரனாகி வாயுவாகி அக்கினியாகி வருணனாகிகுபேரனாகி எமனாகி யவ்வேறுகாரியங்களுடன் கூடிய சொரூப பேதங்களினால் உலகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறீர் மேலும் சூரியகிரணரூபியாகி பிரபஞ்சத்தை சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறீர் ஆகையால் இந்தபிரபஞ்சம் யாவும் நினக்கு சேஷபூதங்களாகியிருக்கிறது சத்து என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட விகாரசூனியமாகும பரசொரூபமாகி சுத்தக்ஞான சொரூபமாகி சராசரங்களுக்கு எஜமானனாகியிருக்கும் நினக்கனந்த வந்தனங்கள் பிரணவ பிரதி பாத்தியனாகும் ஸ்ரீவாசுதேவனுக்கு தெண்ட னிடுகிறேன் சங்கர்ஷணுக்கு நமஸ்காரம் பிரத்தியும்னனுக்கு தெண்டனிடுகிறேன் அநிருத்தனுக்கு வந்தனம் செய்கிறேன் இப்படி நான்கு வியூகரூபியாகிய நினக்கு நமஸ்கரிக்கிறேன் அப்பா கருணாநிதியாகிய நீர் பக்தர்களைப் பரிபாலிக்கும் நிமித்தியம் பண்டரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பாண்டுரங்க நாமத்துடன்கூடிய அர்ச்சாரூபமாகிவீற்றிருந்து பிரகாசிக்கிறீர் ஆகையால்நின்னைச்சேவித்து சிந்தித்து சரணடைந்த என்விஷயத்தில் நன்மார்க்க யோகங்களுக்கு இடையூறாகும் ராகத்துவேஷ லோபமோகாதி துர்க்குணங்கள் சாந்தமாகவேணும் என்று துதித்துப் பண்டரிநாதா நின்ஐஸ்வரியத்தைத் தன்னதென்று பாவித்து தூரபிமானங்கொண்

டவனாகும் ராஜன் என்னை சிக்ஷை செய்வதற்காக வரவழைத்திருக்கிறான், நின் சொத்தாகும் நான் எவ்விடத்தில் எந்தகஷ்டம் அடைந்தபோதிலும் என்னிருதயத்தில் நின் தியானம் மாத்திரம் விடாமலிருக்க வேண்டும் அரசன்தெண்டனையை யடைந்து நின்சந்நிதிக்குவந்து பீமநதியில்குளித்து உம்மைச் சேவிக்கிறேன் அப்படிக்கல்லாமல் அந்தராஜன் ஆக்கிரமமுடையவனாகி என்சரீரத்தை வெட்டிவிடுவானாகில் பிரகிருதியைக் கடந்தவனாகி விரஜாநதியில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீவைகுந்தத்தில் உம்மை தெரிசிக்கிறேனென்று விஜ்ஞாபனஞ்செய்து ஸ்ரீபாண்டுரங்கன் திவ்யரூபத்தைத் தன்மனதில் பத்திரப் படுத்திக்கொண்டு ராஜன் தூதர்கள் பின் தொடர்ந்து பெதரிபட்டணத்திற்கு போய்க் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்கபக்தபரிபாலனாகும் ஸ்ரீபாண்டுரங்கன் ஒருதலையாரி வேடம்பூண்டு இடுப்பில் ஒருகந்தல் வஸ்திரம்சுற்றி கையிலொரு கோலையூன்றிக் கணக்கோலை மற்றொருகையில் பிடித்துக்கொண்டு பணப்பையை தலையின்மேல் வைத்துக்கொண்டு மிரண்டு ஓட்டமாயோடி பெதரி பட்டணத்திற்கு வந்து ராஜனரண்மனைத் துவாரத்தில் நின்று வாசர் கார்ப்போரைப் பார்த்து ஓ ஆண்டமாரே! நான் மங்களபடத்திலிருந்து தாமாஜி பண்டிதரால் அனுப்பப்பட்ட தலையாரி தானியவிக்கிரயம் செய்த திரவியத்தை கணக்குடன் கொண்டுவந்திருக்கிறேனென்று உங்கள் ராஜனுக்கு தெரியப்படுத்துங்களென்று சொல்லியனுப்பி அவர்களால் ராஜன் அனுமதியைப்பெற்று உள்ளேசென்று கொலுமுக மண்டபத்தின் எதிரிலேகி தெண்டனிட்டு கைகளைக் கட்டிக்கொண்டு அதிகவினயத்துடன் நின்றான் அப்போது அந்தத் தலையாரியை அரசன்பார்த்து என்ன விருத்தாந்தமென்று கேட்டான் அதற்குத் தலையாரி அரசனைப்பார்த்து எங்கள் ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட மகாப்பிரபூ தாமாஜி பண்டிதர் ஆஜாருக்குச் சேரவேண்டிய தானியத்தை நல்லவிலைக்கு விற்று எண்பத்திநான்கு லக்ஷம் விராகன்களை கணக்குகளுடன் என்கையில் கொடுத்தனுப்பியதால் தேவரீர் சமுகத்திற்குக் கொண்டு வந்தேன் கிருபைசெய்து அங்கிகரிக்க வேண்டுமென்றுசொல்லி தானெடுத்துவந்த கணக்குகள்கட்டையும் பணப்பையையும் ராஜனுக்கெதிரில்வைத்தார் அதைப் பார்த்து மன்னன் ஆச்சரியப்பட்டு அடா தலையாரி உன்னைப் பார்த்தால் தலையாரியாகக் காணப்படவில்லை உன்சரீரத்தினிடத்தில் பிரகாசம் மிகவும் அதிசயமாக யிருக்கிறது நின்முகசுந்தரம் சித்தத்தை யபகரிக்கிறதாகி யிருக்கிறது நின்னவயவங்கள் சாமுத்திரிகா சாஸ்திரப்படி சகலலக்ஷணங்களும்பொருந்தியிருக்கிறது இப்படிப்பட்ட உன்னையாவெப்படி காவற்காரனாகவைப்புவேன் மேலும் நீ கொண்டுவந்த இந்த சின்னப்பையனிடத்தில் எண்பத்துநான்குலக்ஷம் விராகன்களடங்கியிருப்பது மிகவும்விந்தையாயிருக்கிறது என்றுசொல்லி அரசன் ஓ தலையாரி உன்னூரெது? உன் பேரென்ன? உன்தாய் தந்தையர்கள் யார் உன்னை வளர்த்தவர்கள் யாவர்? நீஎன்னகற்றாய் நின்பந்துக்களெங்கிருக்கிறார்கள் இந்ததாமாஜிபண்டிதர்உனக்கு என்ன படிகொடுக்கிறார்? என்றுகேழ்க்க அந்தத் தலையாரி ஓராஜப்ரபூ என்விருத்தாந்தங்களைச் சொல்லுகிறேன் கேளும் நான் ஊரில்லாதவன் ஆகிலும்உலகம்யாவும் என்னதாகியிருக்கும், நான் பேரில்லாதவன் ஆகிலும் உலகத்தில் சகலசேதனா சேதனாத்துமாக்களாக்கும் சமஸ்தநாமங்களும் என்னதாகியிருக்கும் எனக்குத் தாய் தந்தையர்களில்லை சர்வத்திற்கும் நானே உற்பத்தி தானமாகியிருப்பேன் என்னை வளர்த்தவர்களில்லை நான் யாவருக்கும் போஷகனாயிருப்பேன் நான்ஒன்றுகற்று ஒன்றுகல்லாதவல்ல யாவத்தும் கற்றவன் எனக்கு பந்துக்களில்லை எல்லோரும் என்னாரவாகியிருப்பார்கள் தாமாஜிபண்டிதர் கொடுக்கும்படியினால் ஜீவனஞ் செய்கிறவனல்லன் சகலபிராணிகளுடைய கர்மபரிபாகத்தை யறிந்து அவரவர் கர்மத்தை யனுசரித்துப் படியளந்துக் கொண்டிருக்கிறேன் இப்படிக்கிருந்தும் சகலத்திலும் வாசனாகும் நான் ஸ்ரீபண்டரிபுர க்ஷேத்திரவாசனாகி யிருக்கிறவன் புண்டரீகன் என்னை இங்கிருமென்று நேமித்தார்ஆகையால் எனக்கிது அயோக்கியதையான ஸ்தானமாகியிருக்கிறது அனந்தநாமனாகும் நான் விட்டலநாயகன் என்னும் நாமத்தினால் அழைக்கப்பட் டிருக்கின்றேன். என் துரையவர்களாகிய தாமாஜிபண்டிதர் முதலாகிய சாதுஜெனங்கள் என்னை இப்பேர் வைத்தழைத்துக் கொண்டிருப்பார்களாகையால் எனக்கிதுபேராகியிருக்கிறது சகலத்திற்கும் காரணமாகும் எனக்கு தாய்தந்தையர்கள் தேவகி வசுதேவர்கள் முன்ஜென்மத்தில் புத்திரனில்லாமல் என்னைக் குறித்து தவஞ்செய்து என்னைப்போல பிள்ளைவேணுமென்றுவேண்டிக்கொண்ட படியால் நானவர்களுக்குப் புதல்வனானேன் சர்வரக்ஷகனாகும் என்னை வளர்த்தவர்கள் நந்தகோபன் யசோதைகள் அவர்கள் அன்னிய மரியாமல் என்னையே கோரியிருப்பார்கள் ஆகையால்நான் அவர்களுக்குப் போஷகனாகி யிருக்கிறேன் என்னை படைத்தவர்களுக்காக நானகேவலம் மிருந்த நீசனைப் போலாகிலும அனுஷ்டிக்கக் கற்பேன அவர்கள்

Koviloor Digital Library

எனது வெளிப்பிராணன்க ளாகையால் அவர்களுக்
காக நான் எல்லாகாரியங்களும் செய்வேன் ஆத்மா
க்களுக்கும் ஆபத்பந்துவாகும் எனக்கு என்னுடைய உச்
சாரணை செய்தும் அனவரதம் தியானஞ் செய்யுமவர்
களாகி சகலத்தையும் என் சொரூபமாகப் பார்த்து
வைராக்கிய சீலராகி அன்னியர் துக்கத்தை சகிக்கா
தவர்களாகி ஜீவகாருண்ணியத்துடன் கூடியிருக்கும்
பரமபாகவதர்கள் எனக்கு இஷ்டபந்துக்கள் அவர்
கள் தங்களுடைய ஆத்தும பாரத்தை என்பாதங்க
ளில் காணிக்கையாக வைத்து நிற்பவர்களாகித் திரி
வார்கள் ஆகையால்அப்படிப்பட்டமகாத்துமாக்களை
நான் ஆத்துமபந்துக்களாக அபிமானித் திருக்கிறேன்
சர்வாத்துமாக்களுக்கும ஜீவனங் கொடுக்கும் எனக்
கும் தாமாஜிபண்டிதருடைய ஜீவகாருண்ணியாதிநற்
குணங்களே சம்பளமாகி யிருக்கிறது மேலும் நான்
அபேக்ஷையில்லாதவனுகையால் அந்த நற்குண நிதி
யினிடத்தில் சுகுணங்கள் யாவத்தையும் சம்பளமாக
அங்கீகரித்து யாவத்தையும் சேவகனுகி யிருப்பேன்
மேலும் என்விருத்தாந்தங்களைக் கேளும் பரமயோகி
கள் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவனுகும்நான்
பக்தபராதீனனுகி அவர்கள் வீட்டின் வாசற்படியில்
சேவகனைப்போல்காவலிருப்பேன் பிரம்மாதிகள் கிரீ
டங்களினுல் அலங்கரித்ததாகும் தாமரைப் பாதங்க
ளுடைய நான் பக்தர்களுடைய பாததூளியைஎன்கிரீ
டத்தின்மேல் தரித்துக்கொள்வேன் என்னுடையபா
தசலமாகும் கெங்கையினுல் திரிலோகங்களையும்பவா
னம்செய்யும் நான் பரமபக்தர்களுடைய பாததீர்த்த
ங்களை மகாப்பிரசாதமென்று உட்கொள்ளுவேன்வே
தபுருஷன் தோத்திரத்திற்கு எட்டாதவனுகு நான்
பாகவதர்கள் கீர்த்தனைகளுக்கு சிரக்கம்பம் செய்துக்
கொண்டிருப்பேன் என்பாவம் இப்படிப்பட்டதென்
று குறிப்பிட்டு சொல்லுவதற்கு நான் சக்தியுடையவ
னல்ல என்துரையவர்க்கும் தாமாஜிச்குரீர்துரையாகி
யிருக்கிறபடியால் உம்மை கௌரவப்படுத்தி உமது
கேழ்விக்குஒருவிதமாக பதில்வார்த்தைசொன்னேன்
என்றுசொல்லி தன்சொரூபம் அவடத்தி லிருப்பவர்
களுக்குத் தெரியப்படா திருக்கும்படி தன்னுடைய
மாயையினுல் அவர்களை மோகிக்கச்செய்து விராகன்
களை அவிழ்த்து பலையைப்போல திரவியத்தை ராச
னுக்கெதிரில் கொட்டி நான் இந்ததிரவியத்தை தங்க
ளுக்கு செலுத்தினதற்கு ரசீது கொடுமென்று கேட்
டார் ராஜன் களிசாகரத்தில் மூழ்கினவனுகி உடனே
எண்பத்திநான்கு லக்ஷம் விராகன்களுக்கும் இரசீது
எழுதி அவர்கையில்கொடுத்து வஸ்திராபரணங்கள்
வெகுமதியாக தாமாஜிபண்டிதருக்கும் சிவிகையானை
குதிரைக்கும் சகலவஸ்திராபரணங்களும் வெகுமதி
யாகக்கொடுத்து அனுப்பினுன் விட்டலநாதன் அந்த
வஸ்துக்களை மங்களபடத்திற்குக் கொண்டுவந்து தா
மாஜிபண்டிதர் வீட்டிற்சேர்ந்து மறைந்து போயினுர்
அன்றுமறுநாள் ராஜதூதர்கள் தாமாஜி பண்டிதரை
அழைத்துக்கொண்டுவந்து ராஜனுக்கெதிரில் நிறுத்தி
னுர்கள்.

அதிபோது ராஜன் வாருவாருமென்று சொல்லி
கொண்டே தாமாஜி பண்டிதருக்கு வந்தனம்செய்து
ஓமகாத்துமாவே உன்னுல் அனுப்பப்பட்ட விட்டல
நாயகனென்னும் தலையாரி எண்பத்திநான்கு லட்சம்
விராகனையும் செலுத்தி ரசீதுபெற்றுக்கொண்டு போ
னுன் நீர்ஒன்றும் அறியாதவரைப்போல் இந்தச்சேவ
கரைப் பின்தொடர்ந்து வந்தீர் என்றுசொல்லக்கேட்டு
தாமாஜிபண்டிதர் இது ஸ்ரீபண்டரிநாதன் லீலையெ
ன்று நிச்சயித்து மனம்கரைந்துக்கொண்டிருக்கதயா
சிந்து தீனபந்து அபாரகருணாநிதி புண்டரீக வரதா
லக்ஷ்மீநாதா பெருத்தநீச்சனுகும் என்னிமித்தியமாய்
இப்படிப்பட்ட நீச்சகாரியங்களை செய்தீரல்லவா அன
வரதமும் சங்கற்பமாத்திரத்தில் சிருஷ்டி திதி சங்கார
ங்களைச் செய்துக்கொண்டிருக்கும் நீர் நின்னையடுத்த
வர்கள் விஷயத்தில் வாச்சல்லியத்தை வெளிப்படுத்த
நினைத்து கணக்குகளுடன் பணப்பையைச் சுமந்து
தலையாரி வேடமெடுக்க ஆசைபபட்டது விந்தையாகி
யிருக்கிறது நான்கொடியபாவிகளிலே முதலவனுகை
யால் எனக்காக நீரிந்த நீச்சவேடமெடுத்து நீச்சகாரி
யங்களைச் செய்யவேண்டி வந்ததென்று சொல்லிக்
கொண்டே அவசனுகி பூமிமேல் விழுந்து அழுதுக்
கொண்டிருக்க ராஜன் அற்புதமித்தனுகி யினசுவர
னுகி ஆனந்தக் கண்ணிருடன் கூடி ஓபுண்ணியபுருஷ
னே உனது நிமித்தியத்தால் எனக்கு பிரம்மருத்திர
இந்திரசனகாதிகள் தியானங்களுக்கும் எட்டாதபரம்
பொருளாகிய பகவான்தெரிசனம் சுலபமாய்க்கிடை
த்தது என்று சொல்லிக்கொண்டே அவருக்கு உபசா
ரஞ் செய்திருந்தார். தாமாஜிபண்டிதர் தெளிவடை
ந்து ஓமகாராஜனே நின்புண்ணியமே புண்ணியம் நீர்
வசித்திருந்த கெர்ப்பத்தினுடைய யோகமே யோகம்
நின்பிதர்க்கள் பாக்கியமே பாக்கியம் ஸ்ரீபாண்டுரங்
கனை சேவித்த நின்னையான் தெரிசித்தேன் என்று
சொன்னுர் அதைக்கேட்டு அரசன் ஆனந்தமடைந்து
என்தப்புகளை மன்னித்து முன்போலவே கிராமாதி
காரத்தைப் பாருமென்று பிரார்த்தித்தான் அதைக்
கேட்டு தாமாஜிபண்டிதர் எனக்கினிமேல் நின்சேவ
காவிருத்தி வேண்டியதில்லை நான் இனிமேல் எனது

பிராணநாதராகும் பண்டரிநாதன் சந்நிதிக்குள் வசித்து காலத்தை கடத்துகிறேனென்று சொல்லி வேகமாக மங்களபடத்திற்கு வந்து ராஜன் விட்டலநாதன் மூலமாக அனுப்பிய வெகுமதிகள்யாவற்றையும்சாதுஜனங்களுக்குங் கொடுத்து பண்டரிபுரத்தைச் சேர்ந்து ஸ்ரீருக்குமணி நாதனை அனவரதமும் தெரிசித்தும் எம்பெருமானால் கற்பனையாகிய கைகளினால் நாவினால் நாமங்களைத் துதித்தும் செவிகளினால் பகவான் கல்யாண குணங்களைக் கேட்டும் கண்களினால் பகவானைச் சேவித்தும் கால்களால் ஆலயத்தை வலம் வந்தும் சிரத்தினால் பகவான் திருவடிகளுக்கு தீர்க்க தெண்டனிட்டும் சிரேகத்தினால்வணங்கியும், இப்படி சகலதொண்டுகளும் பகவானுக்கு சந்தோஷமுண்டாகும்படி செய்துகொண்டும் அனேகசேதனு சேதனர்களை பகவத்பாகவதர்களாகத் திருத்தியும் அந்தக்ஷேத்திரத்தில் சிலகாலம் வாசம் செய்திருந்து பின்னர் ஸ்ரீபாண்டுரங்கன் கிருபா நோக்கத்தினால் ஸ்ரீவைகுந்தமாநகரை யடைந்தார் இந்த மகானுபாவராகிய தாமாஜிபண்டிதர் சற்சரித்திரத்தை நித்திய அனுசந்தானத்திற்கு யோக்கியதை யுடையதென்று கௌரவித்து சாதுஜனங்கள் இடைவிடாது துதிசெய்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணேநம:

வாழிவிருத்தம்.

பூமாது கொழுநன்வாழி புகழ்சதுர் மறைகள் வாழி
மாமாயை தனையொழித்து மன்னுமா தொண்டர்வாழி
ஸ்ரீமான்கள் தினமும் வாழ்த்திச் சிறந்தநற் பதத்தினுய்யுந்
தாமாஜிபண்டிதர் பொற்றுமரைபி னடிகள்வாழி.

தாமாஜிபண்டிதர் சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:



(பதினெட்டாவது)

போசலபாவா சரித்திரம்

துதிவிருத்தம்.

பாசபந்தமெனு மூவாசைக்காதி பகருமைம்புவனையுரு மாயச்செய்து
தேசத்தி னுளஜெந்து ஜாலந்தன்னை ஜெகதீச னுருவென்று நினைத்துநாளும்
பாசமதாய் பணிந்தாரா தனைநடத்தி பார்க்கவிமணாளன் றன்னருளைபெற்ற
போசலபாவாவுபய புகழுடைந்த பொற்பதங்கள் தொழுதுதினம் போற்றுவோமே.

ஸ்ரீபொற்றாமரை மலரினுதித்த திருமாது கடாக்ஷம் பொருந்திய ஸ்ரீபண்டரி புரத்திற் கிடையில் பால்காட்டுப் பட்டணத்தில் ஒருகுடியானவர் மிகுந்த சாதுவாகி பரமபக்திவிரக்தராகியிருந்தார் அவருக்கு மானுகோசி போசலபாவா என்று பட்டப்பெயராகியிருந்தது அவருக்கு மமதாபாயி என்றோர் வனிதையுண்டு அப்மாது மகாபதிவிரதை யாகையால் பர்த்தாவின் தொண்டுகளில் எமாராது சம்சாரம்செய்துக் கொண்டிருந்தாள், இப்படிக்கிருக்க பகவானருளால் இவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு எமாஜியென்று நாமகரணமிட்டு செல்வமாக வளர்த்து கல்விப்பயிற்சி செய்து அந்த எமாஜிக்குத் தக்கவயதில் திருமணஞ் செய்விக்க வேணுமென்று தாய்தந்தையர்களெண்ணி குலஸ்திரீயும் சாமுத்திரிகா சாஸ்திரவிதிப்படி அவயவாதிகள் பொருந்திய பாகீரதி பாஎன்ற கன்னிகையைப்பேசிப் பலருக்கும் அறிவித்து பந்துவர்க்கத்துடன் பலரும்சேர்ந்து விந்தையாய் மணஞ்செய்ய மிகக் களிகூர்ந்து அன்பாய் தென்பாய் அருமையாய்ப் பச்சைப்பந்தல் பட்சமாய்ப்போட்டு உச்சிதவாழைகளுயர்ந்ததாய்கட்டு மலர்களின் தோரணம் மாவிலைத்தோரணம் யலருமேமெச்சப் பரிவாகக்கட்டி எமாஜிக்கு மிகப்பணிபூட்டி நயபாகீரதிக்கு நகைபலபூட்டி மணக்கோலஞ் செய்து மலர்ப்பந்தற்கீழ் இணக்கமா யிருவரை யிருந்திடச் செய்தும், ஓமம்வளர்த்திஉச்சிதம்நடத்தி நேமமனைத்தும் நேசமாய்ச்செய்து க்ஷேமமீவேளையிற் றெரிவையர்சூழ, க்ஷேமமாயிருவரும் சேர்ந்தென்றும்வாழவேதியர் வேதகோஷ்டங்களை யோத கோதையர் மங்கள கோஷ்டமு மோத தாளமும் மேளமும் சதிருடன் முழங்க ஆளுப்பதிபதம் அன்புடன்வணங்க அமரர்கள் சாக்ஷியாய் அக்கினி சாக்ஷியாய் குமாரன் கைகளால் கோதையின் கழுத்தில் மங்கிலியந்தனை வகையுடன் தரித்து அங்கையாற் பலரும் அக்ஷதை தூவி ஆசிகள்கூரி யலர்மழைபெய்து மாசுகோத்தமலர்கள்

Koviloor Digital Library

மன்மிகமகிழ்ந்து வர்க்கத்துடன் பலருமேவுணடு விங்கையிதெனத் தாம்பூலமெச்சி யுட்கொண்டு உள்ளங்களித்து உடல்பூரித்து விள்ளொணு வின்பிணைமேவியே வதுவை முடிந்தபின் தங்கடங்க ளிருப்பிடஞ்சேர்ந்தார்கள் பின்பு தம்பதிகளிருவரும் மனமொத்து மலரும்மணமும் பாலும்நீரும் கரும்பும் உருசியும் போலப் பிரியாது வாழ்ந்திருந்தார்கள்.

சிலநாளைக்குப்பின் போசலபாவா மமதாபாயி எமாஜி பாபிரதிபாயி இந்நால்வருமிகுந்தவைராக்கிய சீலர்களாகி அதிகபக்தி யுடையவர்களாகி பண்டரி நாதனை அனவரதமும் த்யானித்து ஏழை ஜெனங்களைப் போஷித்து யாசகர்களை சந்தோஷிப்பித்து ஏகாதசி தவறாமல் பண்டரி புரத்திற்குச் சென்று பாண்டுரங்கனை சேவித்து அன்றெல்லாம் உபவாச மிருந்து துவாதசிநாளில் மிதமில்லாத போஜனத்தினால் அதிதிகளையும் தீன ஜெனங்களையும் சந்தோஷிக்கச் செய்து விட்டலநாதனுக்கு ஆனந்தமுண்டாகச் செய்திருந்தார்கள் வெகுகாலம் இப்படி நடந்துக் கொண்டிருக்கையில் அந்ததேசத்தில் மழையில்லாமல் க்ஷாமம்நேரிட்டது அதினால் ஜெனங்கள்யாவரும் அன்னத்திற் கில்லாமல் வாதைப்பட் டிருந்தார்கள் இவர்கள் படுகிற வாதைகளைப் பார்தது போசலபாவா அனுதாபமடைந்து தன்பத்தினியைநோக்கி ஒபெண்ணே இந்தக்ஷாமம் தெளிந்து தேசத்திற்கு க்ஷேமமுண்டாகும் பரியந்தம் பசியென்று வந்தவாகளுக்கு இரவிலாகிலும் பகலிலாகிலும் சோம்பலும் வெறுப்புமீக்கி பூததய்யயுண்டாகி இல்லையென்ற சத்தம் உன்வாக்கில வர்வொட்டாமல் அன்னம் வட்டிததுக் கொண்டிரும் உலர்ந்தமரத்துக்கு ஜலம் வார்ப்பதும் பசிகொண்டவாகளுக்கு அன்னமிடுவதும் ஆடையில்லாமல் குளிரினால்கஷ்டப்படுபவர்களுக்கு ஆடைகொடுப்பதும ரோகிகளுக்கு உபசாரஞ் செய்வதும் ஏழைகளுக்கு விடுகட்டிக்கொடுப்பதும் தீனர்களுக்குவிவாகம் செய்விப்பதும ஏழைகளுடைய பிள்ளைகளுக்கு கல்விகற்பிப்பதும் ஆங்காரமமகார முடையவர்களுக்கு வைராக்கியம் ஜெனிக்கச்செய்வதும் பொருமையுடையவர்களுக்கு சாந்தியை சற்பிப்பதும் அசத்தியவாதிகளுக்கு சத்தியங் தெரிவிப்பதும் பகவத்பக்தியில்லாதவர்களுக்கு பகவான் பக்திபுண்டாகச் செய்வதும் இவைகளெல்லாம் பகவானுக்குமுக்கியமாகிய ஆராதனைகளாகியிருக்கும் இதுகளில்லாமற் செய்யும் ஜெபதப எக்கியாதிகளும் ஆலயம், தடாகம், வனம், முதலானதுகளும் மோக்ஷகாலங்கள் ஆகமாட்டாது ரசங்களிலே உப்பும் அவயவங்களிலே சிரசும் இந்திரியங்களிலே நேத்திரங்களும் எப்படிப் பிரதானமோ அப்படி ஆத்துமகுணங்களிலே ஆதரிப்பது பிரதானமாகி யிருக்கும்.

"ஆஸ்ருசம்ஸ்யம் பரோதர்மஃ"

என்று சாஸ்திரம் சொல்லுகிறது ஆகையால் க்ஷாமகாலத்தில் பசிகொண்டவர்களாகும் சகலஜெனங்களையும் தின்பிள்ளைகளைப்போல பாவித்து ஆதரியும் என்றுசொல்லிய புருஷன் கட்டளையை சிரமேற்கொண்டு மிகவும் ஜாக்கிரதை யுடையவளாகி ஏழை ஜெனங்களை அன்னபானதிகளால் திருப்தி படுத்திக் கொண்டு வந்தாள். இந்தவிருத்தாந்தங்களைக் கேட்டு அனேக தேசங்களிலிருக்கும் ஏழைஜெனங்கள் போசலபாவா வீட்டிற்குவந்துகொண்டிருந்தார்கள் எத்தனைபேர்கள் வந்தபோதிலும் மமதாபாயி கிஞ்சித்தாகிலும் சலிக்காமல் அவர்கள் ஏகாதசிதினத்தில் பண்டரிபுரத்திற்கு போவதையாகிலும் துவாதசியின்று ததியாராதனை செய்விப்பதையாகிலும் விடாதிருந்தார்கள் இப்படி நடந்துக் கொண்டிருக்கையில சிலநாளைக்குள் தனக்குண்டாகிய திரவியம்யாவும் சிலவாகி விட்டதால் போசலபாவா தன்வீட்டிலிருந்த ஆபரணங்கள் முதலானவைகளை விற்பனைசெய்து ஏழைகளுக்கு வினியோகப்படுத்தினர் அதற்குமேல் பசுக்கள் குதிரைகள் முதலானவைகளை விற்பனைசெய்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார் இப்படித் தன் சகலசொத்துக்களையும் ஏழைபரதேசிகளுக்கு வினியோகப்படுத்தி சிலநாளைக்குள் போசலபாவா தரித்திரரானர் இப்படிப்பட்ட காலத்திலும் போசபாவா சலிக்காமல் தைரியத்தையும் குதூகலத்தையும் விடாமல் கூலிவேலைசெய்து அதினால் கிடைத்த திரவியத்தை ஏழைகளுக்கும் தன் குடும்பத்திற்கும் உபயோகப் படுத்திக்கொண்டு நிரந்தரம் பாண்டுரங்கனை தியானித்தும் ஆனந்தபரவசராகி யிருந்தார்.

போசலபாவாபாண்டுரங்கனுக்கு மாவு கொடுத்த அத்தியாயம்.

இப்படிக்கிருக்க, ஒரு ஏகாதசிநாளில் பண்டரி புரத்திற்குப் போக எத்தனித்து தன்கையில் திரவியமில்லாததினால் வனத்திற்குச்சென்று சாய்ந்தசுள்ளிகளைப் பொருக்கிக் கொண்டுவந்து அச்சுள்ளிகளை மூன்றுதட்டுக்கு விற்பனைசெய்து பண்டரி புரத்திற்குப் போய் சந்திரபாகா நதியில் ஸ்நானஞ்செய்து சங்கல்பம் சொல்லி பிராமணனுக்கு ஒருதட்டு தக்ஷிணைக் கொடுத்து ஒருதட்டுக்கு வாழைப்பழங்களும் பேரீச்

Koviloor Digital Library

சம் பழங்களும் கெந்தபொடியும் வாங்கிக் கொண்டு பகவான சந்நிதிக்குள் பிரவேசித்து ருக்குமணி நாதனை தெரிசித்து தான்கொண்டுவந்த வஸ்துக்களை பகவானுக்கு சமர்ப்பித்து உபவாசமிருந்து துஜஸ்தம்பத்தினருகில் உட்கார்ந்து ராத்திரி நான்கு சாமங்களும் ஹரிகீர்த்தனைகளைச் சொல்லி சாகரவிருதத்தை அநுஷ்டித்து மறுநாளுதையத்தில் ஸ்நானாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தன்கையிலிருந்த ஒரு துட்டிற்கு அரைப்படி மாவுவாங்கி சந்திரபாகா நதிக்கரையில் உட்கார்ந்து தனக்குள்தானேசிந்திக்கிறார் எப்படியெனில் நான் இந்தமாவை எந்த அதிதிக்குக் கொடுப்பேன் எந்த அதிதிபெற்றுக்கொள்வார் இந்த ஊரில் புண்ணியவான்கள் அநேகர் பிராமண போஜனம் அபாரியாகச் செய்வித்துக் கொண்டிருக்கிறார்கள் அநேகர் ஏழைகளை ஷட்சாரங்கள்கூடிய அன்னத்தினால் திருப்தியுண்டாகச் செய்கிறார்கள் இப்படியிருக்க அவைகள் யாவற்றையும்விட்டு இந்த கேவலமாகிய மாவைப் புசிப்பதற்கு எவர்வருவார் அன்னியிலும் ஒரு அதிதிக்காகிலும் இப்படிப்பட்ட புண்ணிய காலத்தில் ஆகாரங்கொடாமல் நான் எப்படி புசிப்பேன் நான் புசிப்பது அவ்வளவுமுக்கியமல்ல அதிதிரூபமாகும் பகவானை யாராதிக்காதநான் கெட்டநாளே அல்லது நன்னாளல்ல அதிதிகளுக்கு யிடாமல் தான்மாத்திரம் புசிப்பவன் கரங்கள் துக்ககரங்களேயல்லாமல் சுககரங்களல்லவென்று சிரித்துக்கொண்டிருக்கையில் தேவாதிதேவனும் லக்ஷ்மிநாயகன் ஒரு ஏழைப்பிராமண வேடம்பூண்டு கந்தல்வஸ்திரத்தையுடுத்தி குளிரினால் வெடவெடென்று நடுங்கி போசலபாவாயிடத்திற்கு வந்து அவர்நமஸ்காரங்களை அங்கிகரித்து அவரை யாசீர்வாதம் செய்து ஓ உத்தமசிரேஷ்டரே நீர்வெகுநாளாக ஏகாதசிதோறும் இவ்வூருக்குவந்து துவாதசிநாளில் அநேகர்களை போஜனத்தினால் திருப்திபடுத்திக் கொண்டிருப்பீர் நானும்துவாதசிதப்பாமல் உன் அன்னத்தைப் புசித்துச் சந்தோஷித்திருப்பேன் இவ்வூரிலநேகர்கள் ஆயிரங்கணக்காக பிராமணர்களுக்கு சமாராதனைசெய்துக்கொண்டிருக்கிறார்கள் பலவான்கள் அவிடத்திற்குப் போகிறார்கள் நான் பலயீனனாகையால் அவிடத்திற்கு போவதற்கு சக்தியில்லாமல் உன்னிடத்திற்கு வந்தேன் ஆகையால் இப்போது என்பசிக்கேதாகிலும் கொடுமென்று கேட்ட பிராமணன் வார்த்தைகளுக்குப் போசலபாவா மிகவும் சந்தோஷித்து என்பிராணநாதனும் பண்டரிநாதனே என்குறையைத் தீர்ப்பதற்காக இந்தரூபத்தைத் தரித்து எழுந்தருளினானென்று ஆனந்தித்து அந்தப் பிராமணனைப் பார்த்து ஓ விப்பிரசிகாமணியே! என்னிடத்தில் கொஞ்சம் மாவிருக்கிறது அதில் சேர்ப்பதற்கு என்னிடத்தில் உப்பு முதலானதும் யில்லை நான் என்னசெய்வேனென்று சொல்லக்கேட்டு வைகுந்தநாதன் உன்கையிலிருக்கும் பதார்த்தத்தை கொடுத்து இப்போது என்களையைப் போக்கும் "க்ஷுதாதுராணும் நருசிர்நபக்வம்" என்னும் வாக்கியத்தை நீகேட்டிரியாயோ என்றுசொல்லக்கேட்டு போசலபாவா இந்த மாவையார் புசிப்பார்களென்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில் இந்த பிராமணன் என்புண்ணிய விசேஷத்தினால்அதிதியாகி வந்தார் இப்படி யனுகூலப்படுத்திய பாண்டுரங்கநாதன் கிருபையை நானென்னவென்று கொண்டாடுவேன் என்றுசொல்லிக் கொண்டே தன்னிடத்திலிருந்தமாவை அந்தப் பிராமணன் முந்தானையில் கொட்டினார்.

அந்தப் பிராமணன் அந்தமாவைத் தன்கந்தை துணியில் முடிந்துக்கொண்டு போசலபாவாவைப்பார்த்து ஓபக்தசிகாமணியே! நான்மிகவும்ஏழைமையுடையவன எனக்கென்று ஒருயிடமில்லை இந்தஆலயத்தில் ஒருமூலையில் பாகஞ்செய்துக்கொள்ளலாமென்று எத்தனப்பட்டால் கோயில் அதிகாரிகள் என்னையவிடத்தில் சேரவொட்டாமல் ஓடஅடிப்பார்கள் ஆகையால் நான் இவடத்திலேயே ரொட்டிகளைச் சுட்டுப் புசிக்கிறேன் நீகாட்டு விராட்டிகளைப் பொருக்கிக் கொண்டுவந்து கொடுமென்று சொல்ல போசலபாவாசந்துஷ்டியடைந்து துரிதமாககாட்டுக்குச் சென்று உலர்ந்த விராட்டிகளைப் பொருக்கிக்கொண்டுவந்து அந்தபிராமணருக்குக் கொடுத்தார் இதற்குள் அந்தப் பிராமணன் ஒருபுதுவோடு சம்பாதித்து ஸ்நானஞ் செய்து ஈரவேஷ்டியைப் பிழிந்துக் கட்டிக்கொண்டு நெருப்புமூட்டி யாகத்திற்கு எத்தனப்பட்டார்பாக போக்தாவாரும் தேவாதிதேவன் போசலபாவா கொடுத்தமாவைப் பாகஞ்செய்வதற்கு எத்தனப்படுகையில்ஸ்ரீருக்குமணிபிராட்டி ஒருவிருத்த பிராமண சுமங்கிலி வேடம்பூண்டு கையிலொருகொம்பை யூன்றிக்கொண்டு மணல் மேட்டின்மேல் ரொட்டிகள் சுடுவதற்கு எத்தனமாயிருக்கும் தன்மணாளனிடத்திற்குவந்து அவரைப்பார்த்து நீர்இவ்விடத்தில் ஒண்டியாகவந்துபாகஞ்செய்து புசிக்க யெத்தனப்படுகிறீர் அந்த மாவை என்கையில் கொடுத்தால் நான்ரொட்டிகள் சுடுகிறேனென்று சொல்லி ஸ்நானஞ் செய்துவந்து ரொட்டிகள்சுட ஆரம்பித்தார். இதைப் பார்த்த போசலபாவா மாவு கொஞ்சமாயிருக்கிறதே இவர்களிருவர் பசியை இது எப்படித் தீர்க்குமென்று கவலையுற்றிருந்தார்.

பின்பு ஜெகத்துக்கு மாதாவாகிய ஸ்ரீருக்குமணி பிராட்டி அந்தமாவை தொட்ட மாத்திரத்தில் அது அதிகமாயிற்று அந்த இந்திராதேவியும் விஸ்தாரமாக ரொட்டிகளைச்சுட்டு அடுக்கிவைத்து தன் கணவனை நோக்கி ஓபிராணநாயகரே நாமிருவரும் இந்தரொட்டிகளை போசலபாவாவுடன் புசிக்கலாமென்று சொல்ல போசலபாவா அவர்களைப்பார்த்துஎன்தெய்வங்களே நீங்கள் புசித்து மிகுந்தசேஷத்தை எனக்களிக்க வேணுமென்று பிரார்த்தித்தார் அவர் பிரார்த்தனையை அங்கிகரித்து அந்ததம்பதிகளிருவரும் உட்கார்ந்து புசித்துக்கொண் டிருந்தார்கள் அப்போது சகலதேவர்களும் ஆகாயத்திலிருந்து இந்த அற்புதத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள் ஸ்ரீருக்குமணி வாசுதேவர்கள் புசித்து மிகுந்தசேஷத்தை போசலபாவாவுக்குக் கொடுத்து மறைந்து போயினார்கள்.

அந்த சேஷபிரசாதம் மிகுந்த மதுரமாகி யிருந்ததினால் போசலபாவா ஆச்சரியப்பட்டுசாக்ஷாத் ஸ்ரீ பண்டரிநாதன் ஸ்ரீருக்குமணி சமேதராகிவந்து இப்படி செய்தாரென்று திடங்கொண்டு அப்பிரசாதத்தைத் தான்புசித்து பகவான் சந்நிதிக்குள் பிரவேசித்து பாண்டுரங்கனைச் சேவித்து ஓபக்தப் பிரியரே இன்று நெய்சக்கரை யில்லாமல் வெறும்ரொட்டிகளை புசித்து சந்தோஷித்தீரா இந்தக்ஷேத்திரத்தில் அநேகர் ஷட்ரச அன்னங்களுடன் சமாராதனை செய்துக் கொண்டிருக்க அதை யலக்ஷியஞ்செய்து இந்த ஏழையினிடத்தில் கிருபைசெய்தி ரல்லவா உமது ஆஸ்ரித பிரியத்தை நானென்னவென்று கொண்டாடுவே னென்று விண்ணப்பஞ்செய்ய, தேவகி வசுதேவ புத்திரர் இணையில்லா வானந்தமடைந்தஓவைஷ்ணவசிகாமணியே அநேகர் சமாராதனை செய்கிறார்களென்ற போதிலும் நான் அவிடத்திற்குப் போனால் அவர்கள் எனக்கு அன்னமிடார்கள்டம்பத்திற்காகப் பாடுபடுகிறார்களே தவிர அவர்களுக்கு என்னிடத்தில் பக்தியில்லை நாளையதினம் அந்தமர்மத்தை விவரிக்கிறே னென்று சொன்னார்.

அன்று மறுநாள் வர்த்தக னொருவன் ஆயிரம் பேர்களுக்கு சமாராதனைசெய்ய'எத்தனப்பட்டுசந்திரபாகா நதிக்கரையின் மணல்மேட்டில் பந்தல்போட்டு திரைகள்கட்டி பிராமணர்களை உட்கார வைத்தான் அப்போது பண்டரிநாதனொரு கிழப்பிராமணராகி கந்தல் வஸ்திரத்தைத்தரித்து, கையிலொருகோலூன்றி கொண்டு போசலபாவாவைப் பார்த்து நீர் தூரத்தில் நின்றிருமென்று நேமித்துத் தான்பந்தலுக்குள்புகுந்து ஐயா புண்ணியவான்களே எனக்குமிகவும் பசியாயிருக்கிறது ஆகையால்கொஞ்சம்அன்னம் தயவுசெய்ய வேணுமென்று பிரார்த்திக்கையில் அவடத்திய காரியக்காரர்கள் இந்த பிராமணரைப் பார்த்து உனக்கு இவிடத்தில் அன்னம்கிடைக்காது ஏற்படுத்திய கணக்குப்படி முன்னமே பிராமணர்கள்வந்துட்கார்ந்து விட்டார்க ளென்றுசொல்ல அதைக்கேட்ட லட்சுமிநாயகன் அவர்களைப் பார்த்து ஆயிரம் பிராமணர்கள் புசிக்குமிடத்தில் என்போலிய கிழவனொருவனுக்கு அன்னமிடுவதுகஷ்டமா, நானோ மிகுந்தகளைபுடன நடக்க மாட்டாதவனாயிருக்கிறேன எனக்கு மூர்ச்சை வருகிறதென்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தார்.

அப்போதந்த வர்த்தகன் கோபித்துக்கொண்டு இந்தபிராமணன் ஆகாத்தியம் செய்துக்கொண்டிருக்கிறான் இவனுக்கு கிஞ்சித்துயிடங்கொடுத்தால்அநேகர் இவனைப்போலவந்து நம்மை நிர்ப்பந்தப்படுத்துவார்கள் ஆகையால் இக்கிழவனைத் தூக்கிக் கொண்டு போய் பந்தலுக்கு வெளியில்விட்டு வாருங்களென்று சொல்ல சேவகர்கள்வந்து அக்கிழப்பிராமணனை எடுத்துக் கொண்டுபோய் தூரமாக விட்டு விட்டார்கள். பின்பு அப்பந்தலுக்குள் உட்கார்ந்திருந்த பிராமணர்கள் ஆபோஜனஞ் செய்யுஞ் சமையத்தில் அகஸ்மாத்தாய் ஒருசுழல்காற்று மிகுந்தவிசையுடன் அடித்ததனால் பந்தல் ஆகாயத்தில் பறந்துபோய்போஜனபதார்த்தங்கள் யாவற்றிலும் மணல்நிறைந்திருந்தது அப்போது அவிடத்திலிருந்தயாவரும் கைகளை யுதறிக்கொண்டு தங்கள் பிராணன்கள் தப்பினால் போதுமென்று ஓடிப்போய்விட்டார்கள் இதுகளையெல்லாம்பகவான் போசலபாவாவுக்குக் காட்டி இவர்கள் எண்ணம் நல்லதாகாததால் நானவிடத்திற்குப் போகாமல் மனசுத்தியுடைய உன்னிடத்திற்குவந்தேன்முன்னம் துரியோதனன் அன்னத்தை அலக்ஷியஞ்செய்து "விதுரான்னானி புபுஜே சுசீனிகுணவந்திச" என்றால் விதுரன் அன்னத்தை சிலாகித்து புசித்ததே னென்பதை நீகேட்டறியாயோ ரிஷிபத்தினிகள் பக்தியுடனிட்ட அன்னத்தைப புசித்ததவும் சபரி எண்ணத்திற்கு சந்துஷ்டியடைந்து அந்த உத்தமிகொடுத்த எச்சில் பழங்களைப் புசித்ததவும் யாருமறியார்கள் நான் தரித்திரனல்ல! உன்பக்திக்குக் களிப்படைந்து ஸ்ரீருக்குமணி பிராட்டியுடன்வந்து நீகொடுத்தமாவைப் புசித்தேனல்லது வேறல்ல "ஹரிரயஸ்யச்ரு ஹேயுங் கதேதத்ரபுக்தேஜெக்ரயம்" என்றபடி நான்சந்தோஷத்துடன் உன் அன்னத்தைப் புசித்ததினால் சகல லோகங்களும் திருப்தியடைந்தது திரௌபதை கொடுத்த பாத்திரத்திலிருந்த எள்ளுமூக்கத்தனை அன்னம்

Koviloor Digital Library

புசித்து பதினாயிரம் சிஷர்களுடன் வந்த தூருவாசரைத் திருப்தியடையச் செய்தேனென்று நீகேட்டிருப்பா யல்லவா ஆகையால் இத்தனைநாளைப் போல அனேகர்களுக்கு அன்னம் கொடாதவ னாகினேனென்று சோகமடைய வேண்டாம் நீயெனக்கு கொடுத்த மாவினால் சகலலோகத்தாரும் திருப்தியானார்கள் என்று சொல்லிய பகவான் வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தக் களிப்படைந்து பலவிதங்களாகத் துதித்து நமஸ்காரம் செய்து தேவாதிதேவன் அனுமதியைப் பெற்றுத் தன்னூருக்குப் போயினார்.

இப்படி போசலபாவா தன்னூருக்குப் போய்க்கொண்டிருக்க நடுவழியில் பசியினால் மிகவும் வாதைப்படுவதையறிந்த பண்டரிநாதன் அந்தமார்க்கத்தின் நடுவில் பழவர்க்கங்கள் நிறைந்த ஒருதோட்டத்தையும் கிணரையும் உண்டாக்கித் தானொரு தோட்டக்காரனாகி சம்சார சமேதமாக அவிடத்தில் வசித்திருந்தார் அப்போது போசலபாவா ஆனந்தத்துடன் பகவத்தியானத்தோடும் பசியைப்பொருத்துக் கொண்டு அந்த தோட்டத்திற்குள் போகாமல்வழியைபிடித்து போய்க்கொண்டே யிருந்தார் அப்போதுருக்குமணி பிராட்டி மடிநிறையப் பழங்களைக் கட்டிக் கொண்டு ஒருகூடையில் ரொட்டிகளை வைத்துக்கொண்டுவந்து போசலபாவாவைப்பார்த்து நீபண்டரி புரத்திற்குப் போய்வந்துகொண்டிருக்கிறாய் நின்பசியைப்போக்கி உன்னை யாதரிப்பதற்காக நானும் என்நாயகரும் பழங்களையும் ரொட்டிகளையும் ஜாக்கிரதைசெய்து வைத்துக்கொண்டு உன்வரவுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் ஆகையால் நீஇந்த தோட்டத்துக்குள் வந்து பசிதாகங்களை தீர்த்துக்கொண்டுபோக வேணுமென்று உபசாரத்துட னழைக்கையில் போசலபாவா சந்தோஷித்து தோட்டத்திற்குள் புகுந்து செடிகள்நிழலில் உட்கார்ந்து தென்றல் காற்றினால் மார்க்காயாசத்தைப் போக்கி தனக்கந்த தம்பதிகள்கொடுத்த பழங்களையும்ரொட்டிகளையும் திவ்வியதீர்த்தமும் புசித்தார் உடனே அந்தமங்கையும் மணாளனும் மறைந்துபோயினார்கள் செடிகளுடன் கூடிய தோட்டமும் கிணறும்காணாமல் வெளியாகியிருந்தது இதைக்கண்டு போசலபாவா மிகுந்த ஆச்சரியப்பட்டு இது என் தாய் தந்தையர்களாகும் ஸ்ரீருக்குமணி வாசுதேவர்கள் லீலையென்று திடங்கொண்டு அவர்கள் வாச்சல்ய குணங்களைக் கொண்டாடிக்கொண்டு தன்னூருக்குப் போயினார்.

போசலபாவா சோளக்கொல்லைக்கு கட்ட வேண்டிய தீர்வையை பகவான் தலையாரியுருவங்கொண்டு ராஜனுக்கு செலுத்திய அத்தியாயம்.

இந்தப்படி தன்னூருக்குச்சென்று போசலபாவா கொல்லையில் சோளம்விரைத்து அச்சோளக்கொல்லைக்கு காவலாகி யிருக்கிறபோது பகவானை துதித்துக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் பக்ஷிகள் வந்து வயலி லுள்ள தானியங்களை எதேஷ்டமாகப் புசித்துக்கொண்டிருந்தனுகள் அன்னியிலும் ஏழைகளாகும் மாட்டைசாரிகளுக்குப் போசலபாவா கதிர்களை யொடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார் இப்படிப்பட்ட சமயத்தில் தன்பத்தினியான மமதாபாய் ஆகாரங் கொண்டுவந்து தன்பர்த்தாவை புசிக்கச்செய்து ஓமணவாளரே நீரிப்படி சோளக்கதிர்களை யொடித்து பாட்டைசாரிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தால் துரைத்தனத்தாருக்கு தீர்வை எவ்விதத்தில் செலுத்துகிறது நாமென்ன புசிக்கிறது போனது போகட்டும் இனிமேலாகிலும் அப்படி செய்யாமல் வயலை ஜாக்கிரதையாகக் காத்திரும் நீரினி கதிர்களை யொடித்து பாட்டைசாரிகளுக்குக் கொடுத்தால் விட்டலநாதன்மேல் உமக்கானை யிருக்கிறது என்றுசெல்லி வீட்டிற்குப் போயினாள் பின்பு போசலபாவா ஆனந்தத்துடன் பகவானை துதிசெய்துக் கொண்டிருந்தார் அப்போது பண்டரியாத்திரைசெய்யும் பாட்டைசாரிகள் போசலபாவாவைப் பார்த்து எங்களைப் பசிமிகவும் வாதிக்கிறது நான்குசோளக் கதிர்களைக் கொடுத்தால் பசிதீரப் புசித்துப் போகிறோமென்று சொன்னார்கள் அதைக்கேட்டு போசலபாவாதன்பத்தினியாகும் மமதாபாயி பண்டரிநாதன்மேல் தனக்கானைவைத்ததை நினைத்து கதிர்களைத் தன்கையால் தொடாமல் ஓபரமபுருஷர்களே உங்களுக்கு எத்தனை வேண்டியதோ அத்தனைக்கதிர்கள் ஒடித்துக்கொண்டு புசித்துப் போங்களென்று சொல்லினர் அதைக்கேட்டு வழியே போகிறவர்கள் யாவரும் யதேஷ்டமாகக் கதிர்களையொடித்து புசித்துபோய் கொண்டிருந்தார்கள் இப்படி பலரும் சோளக்கதிர்களை யொடித்துக்கொண்டுபோயினதால் ஒருக்ஷணத்திற் குள்ளாக சோளக்கொல்லையாவற்றும் பைசலாய்விட்டது இந்த விருத்தாந்தத்தை அந்த ஊரார்கேட்டு இவர்மிகவும் உதாரவைராக்கியசீலர் இப்படிப்பட்டவருடைய சம்சாரத்தைப் பண்டரிநாதன் நன்றுகக் காப்பாற்றவேண்டும் துரைத்தனத்தாருக்குஇவரென்னசமாதானம்

சொல்லுவரோ தெரியாதென்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இதுகள் யாவற்றையும்கேட்டு இவர் புதல்வராகிய ஏமாஜிவந்து பார்த்து யாதொன்றும் சொல்லாமல் துக்கத்துடன் உட்கார்ந்தார் அதைப் பார்த்துப் போசலபாவா ஓகுமாரனே நீசோகப்படவேண்டாம் மனிதன் லோபியாகி அன்னியருக் கிடாமல் தானும் புசிக்காமல் தன்திரவியத்தை பூமிக்குள் புதைத்து வைப்பான் கடைசியில் அந்தத்திரவியம் காட்டில் ஈக்கள்சேர்ந்துவைத்த தேனைப்போல அன்னியர் பாலாகும் ஆகையால்நான் ஜீவனத்துடனிருக்கிற போதே பகவான் சரிபூதர்களாகும் ஏழைஜெனங்களை யாராதிப்பது பகவானுக்கு மிகுந்தபிரியமாகி யிருக்குமென்று தெரியமாட்டாயாவென்று தந்தைசொல்லிய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் துக்கத்தை விட்டு சந்தோஷித்து தந்தையை வீட்டிற் கழைத்துவந்து அவிடத்தில் நடந்த விருத்தாந்தங்களைத் தனதாய்க்குச் சொன்னார் மமதாபாயியும் புதல்வன் வார்த்தைகளைக் கேட்டு சந்தோஷித்து பூரிப்புண்டாகி யிருந்தாள்.

இப்படிக்கிருக்க துரைத்தனத்தார்கள்திர்வைப் பணங்களைக் கேழ்க்கவந்தார்கள் அவ்வூரிலிருந்த சில துஷ்டர்கள் ராஜசேவகரைப்பார்த்து போசலபாவா கொடுக்கவேண்டிய திர்வைப்பணங்களை முன்னம்வாங்கிக்கொண்டு வந்தால் நாங்கள் பின்னே கொடுக்கிறோமென்று சொன்னார்கள் அதைக்கேட்டு ராஜசேவகர்கள் வேகமாகவந்து போசலபாவா வீட்டில் வாசலில் உட்கார்ந்து இந்தவருஷம் நீர்ராச சமஸ்தானத்திற்கு செலுத்தவேண்டிய எழுவிராகன்களையும் இப்போது செலுத்தவேணும் என்றுகேட்டார்கள் அப்போது போசலபாவா தன்னிடத்தில் மூன்றுவிராக விருந்ததனால மற்றநான்கு விராகன்களைக்கடன்வாங்கிக் கொடுக்கவேணுமென்று நிச்சயித்து அந்தவூரில் யிருந்த திரவியவாதியாகியும் லோபியாகியு மிருந்த நாகாபாயியெனும் அமங்கலியினிடத்திற்சேகி ராஜசேவகர்கள் செய்யும் நிர்ப்பந்தத்தைச் சொல்லி எனக்கு நால்குவிராகன் கடன்தந்தால் நான் துரிதமாக வட்டியுடனுனக்கு செலுத்துகிறேனென்று கேட்டார் அந்தக் கைம்பெண் நாளைகாலையில்வந்தால் தருகிறேனென்றுசொல்லி போசலபாவாவை வீட்டிற்கனுப்பி தான்பூமியில் புதைத்துவைத்த திரவியத்தி லிருந்து நான்குவிராகனை எடுத்து வெளியில் வைத்துக்கொண்டிருக்கையில் சிலதுஷ்டர்கள் வந்து ஓஅம்மா எங்கள் வார்த்தையைக்கேளு நீஒளித்துவைத்த திரவியத்தை தானவார்ப்பாய் போலிருக்கிறது கடனசம்பன்னர்களுக்குக் கொடுக்கவேணுமே யல்லது நிர்பேதைகளுக்குக் கொடுக்கக்கூடாது அதென்னகாரணமென்றால நீ போசலபாவாவுக்கென்னமோகடன்கொடுக்கநினைத்திருப்பதுபோலக் கேழ்விபட்டோம் அதுசரிதான் அவன்தரித்திரன் வாங்கினகடன்செலுத்தமாட்டான் அவனுக்குப்பிடிப்பதும் விடுவதும்தெரியாது அகப்பட்டுக்கொண்டு முழிக்கவேண்டாம் இருக்கிறவுண்மையைச் சொன்னோம் அதன்பின்பு உன்னிஷ்டம் பத்திரம் போய்வருகிறோம் மேலும் அந்த போசலபாவா சம்சாரத்தில் ஒட்டாமல் விரக்தனாகி திரிந்துக்கொண்டிருக்கிறான் ஆகையால் அவருக்குக்கொடுக்கும் திரவியம் மறுபடி யுன்கைக்குவரமாட்டாது என்றுபோதனை செய்தார்கள் பின்பு போசலபாவா மறுநாள் காலையில்வந்து கேட்கையில் நாகாபாயி எனக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிக்காரர்கள் இப்போதுபாக்கிகொடாமையினால் உனக்குகடன்கொடுப்பதற்குச் சாத்தியப் படாதென்றுசொன்னாள் அப்போதுபோசலபாவா யாதொன்றும் செய்வதற்கு தோன்றாமல் கொஞ்சம் சிந்தித்து வீராளக்கிராமத்தி லிருக்கும் வர்த்தகனைக் கேட்டு கடன் வாங்கிக்கொண்டு வருகிறேனென்று தன்பெண்டு பிள்ளைகளுடன் சொல்லி பகவானை தியானத்துடனே அவ்வூருக்குப்போய்க் கொண்டிருந்தார் இவடத்தில் சிலதுஷ்டர்கள் போசலபாவா ஓடிப்போய் விட்டானென்று புகார்செய்தார்கள் அதைக்கேட்டு ராஜசேவகர்கள் திர்வை செலுத்தும் பரியந்தம் வீட்டிலிருப்பவர்கள் வெளியில் போகக்கூடாதென்று நிர்ப்பந்தப் படுத்தினார்கள் அச்சமயத்தில் பண்டரிநாதன் அந்த ஊர்வெட்டியான் வேடம் புனைந்து அதிகாரஸ் தானத்திற்குப் போய் போசலபாவா செலுத்தவேண்டியஎழுவிராகன்களைசெலுத்தி ரசிது பெற்றுக்கொண்டு வந்து அவர்வீட்டின் வாசலிலிருக்கும் ராஜசேவகர்களிடத்தில்கொடுத்தார் அவர்களந்த ரசிதைப் படித்துப் பார்த்துக்கொண்டு களிப்படைந்து போயினார்கள் அப்போதந்த ஊரார்கள் போசலபாவாவுக் கெப்படி விராகன்க ளகப்பட்டதென்று ஆச்சரியப் பட்டார்கள்.

இப்படிக்கிருக்க வீராளக் கிராமத்திற்குச் சென்ற போசலபாவா வர்த்தகனைக்கேட்டு நான்கு விராகன் கடன் வாங்கிக்கொண்டு மறுநாள் தன்னூருக்கு வருகிறபோது ராஜசேவகர்கள் போசலபாவாவைப் பார்த்து நீயனுப்பிய எழுவிராகன்களை வெட்டியான் அதிகாரஸ்தானத்தில் செலுத்தி எங்களுக்கு ரசிதைக் கொண்டுவந்து கொடுத்தான் என்று சொன்னார்கள் அதைக்கேட்டு போசலபாவா ஆச்சரியப் பட்டுக்

Koviloor Digital Library

கொண்டு தன்வீட்டிற்குவந்து தன்பெண்டு பிள்ளைகளைப் பார்த்து நீங்கள்விராகன்கள் எங்குசம்பாதித்து அதிகாரஸ்தானத்திற்கு அனுப்பினீர்கள் என்றுகேட்டார் அவர்களவரைப் பார்த்து நீர் வீராளகிராமத்திற்குப் போனபின்பு தீர்வைசெலுத்தாமல் வீட்டுக்குள்ளிருப்பவர்கள் வெளியிற் போகக்கூடா தென்று ராஜசேவகர்கள் நிர்ப்பந்தப் படுத்தினார்கள் ஆகையால் நாங்கள் ஜலம் முதலானதுகள் கொணடுவருவதற்குக்கூட சாத்தியப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம் இதற்குள் வெட்டியான் ரசீது கொண்டுவந்து கொடுத்தபடியால் ராஜசேவகர்கள் புறப்பட்டுப் போயினார்கள் விராகன்கள் நீரே அனுப்பியிருப்பீரென்று நாங்களெண்ணினோ மென்றார்கள் அப்போது போசலபாவா வெட்டியானை வரவழைத்து நீ அதிகாரஸ்தானத்தில் செலுத்திய விராகன்க ளேது என்றுகேட்டார் அதைக்கேட்டு அந்த வெட்டியான் ஐயா, "ஹரியெங்கே நாகலோகமெங்கே" ஒருவேளை கஞ்சிக்கே கதியில்லாத நான் எழுவிராகன்களை செலுத்தினேனென்றால் இதையார் நம்புவார்கள் நானேது மறியேனென்று சொன்னான் அப்போது போசலபாவா யோசித்து இது ஸ்ரீபண்டரிநாதன் லீலையென்று திடங்கொண்டு ஓபக்தவத்சலா தீனதயாளா ஆபத்மித்திரா ஏன்னிமித்தியமாகி நீரேன் கஷ்டப்படுகிறீர் அகிலலோக நாயகராகும் உமக்கு இந்த நீச்சவேஷம் தரிக்கத்தகுமா பிரமருத்திரன் முதலாகிய சகலதேவர்களும் உனக்குத் தொண்டர்களாகியிருக்க நீரேன் தொண்டன்வேஷம் புனைந்தீரென்று சொல்லிக் கண்ணீருங் கையுமாய் அழுதுக்கொண் டிருக்க சங்குசக்கரம் கெதைவாள் சாரங்கமெனும் பஞ்சாயுதங்களும் மார்பில் பெரியபிராட்டி வசிக்க ஆகிரீட கேயூர கௌத்துவ வனமாலைகளும் தரித்து சாக்ஷாத் பாண்டுரங்க நாதன் பிரத்தியக்ஷமாகினார் அப்போது போசலபாவா பகவானுக்கு சிரசாஷ்டாங்க தெண்டனிட்டு.

சுலோகம்.

"நமோ நமோவாங் மனஸாதி பூமயே
நமோ நமோவாங் மனஸைக பூமயே
நமோ நமோநந்த மஹா விபூதயே
நமோ நமோநந்த தயைக ஸிந்தயே"
"நதர்ம நிஷ்டோஸ்மின சாத்மவேதி
நபத்திமான் த்வச் சரணா விந்தே
அதிஞ்சனோ நன்யகதி ஸ்ஸாண்ய
த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே."

என்று விண்ணப்பஞ்செய்து ஒ பண்டரி நாதா! என் பிராணநாதா ருக்குமணிநாதா வேதவிநோதா வெட்டியானாகிய உமக்கு விராகன்களேது யென்று கேட்டார் அதைக்கேட்டு பண்டரிநாதன் புன்னகை புரிந்து எனதன்பனே! நீவீராளக்கிராமத்திற்கு போனபோது ஊரைவிட்டு நீரோடிப்போய் விட்டாயென்று சிலநஷ்டர்கள் கலகஞ்செய்தார்கள் அதைகேட்டுராஜசேவகர்கள் உன்பெண்டு பிள்ளைகளை மிகவும்நிர்ப்பந்தஞ் செய்தார்கள் அதைநான் தாளமாட்டாமல் அப்போது நாகாபாயி திரவியத்திலிருந்து நான்கு விராகன் எடுத்துக் கொண்டுவந்து உன்வீட்டிலிருந்த மூன்றுவிராகனுடன் சேர்த்து அதிகாரி ஸ்தானத்தில் செலுத்தினே னென்றுசொன்னார் அதைக்கேட்டு போசலபாவா அனாதைகள் பந்துவே நீரேன்கர்மசிகாமணியாகும் நாகாபாயி விராகன்களைக் கொண்டு வந்நீர் இதையறிந்தால் அம்மாதுக்கு பிராணன் அப்போதே போகும் ஆகையால்தான் வீராளகிராமத்திலிருக்கும் வர்த்தகனைக் கேட்டு நான்குவிராகன் கொண்டு வந்தேன் இந்த விராகன்களை அம்மாதுக்குக் கொடுக்கிறேனென ஜெகநீசன்ஓபாகவதசிரேஷ்டனே நீ அப்படி செய்யவேண்டாம் என்னனுமதியை மீறி நாகாபாயிக்கு விராகன்களைக் கொடுப்பாயாகில் அந்தவமங்கலி சேர்த்துவைத்த பொருள் யாவும் மாயமாகிப் போகும்படி செய்வேன் அது ஏனென்றால் என்பக்தனாகும் உனக்குக்கடன் கொடுக்கிறேனென்று சொல்லிக் கொடாமல் தப்பிப்போயின படியால் இது அபராதமென்று சொல்லி போசலபாவாவை கிருபையென்னும் கண்களினால் கடாக்ஷித்து மறைந்து போயினார் அப்போது போசலபாவா வீடெல்லாம் தனதான்னியங்களினால் நிறைந்திருந்தது இதவன்னியினும்இவர் வயல்களில் தானியம் பூரணமாகியிருந்தது இதுகளைப்பார்த்த ஜனங்கள்பகவானுக்கு போசபாவா விடத்திலுண்டாகியிருக்கும் வாச்சல்லியத்திற்காக யாவரும் கிஞ்சித்தானந்த மடைந்தார்கள் பின்பு போசலபாவா பகவானுடைய கிருபையைகொண்டாடி அவர் கடாக்ஷத்தினால் தனக்குக்கிடைத்த பொருள்களையும் தானியங்களையும் முன்போலவே ஏழை ஜெனங்களுக்கு வினியோகப் படுத்திக் கொணடுவந்தார்.

போசலபாவா ஹரிகீர்த்தனைகள் செய்யுங் காலத்தில் பாம்புகடித்திறந்தஒருவனை ஸ்ரீபண்டரிநாதர் எழுப்பிய அத்தியாயம்.

இப்படிபோசலபாவா பகவான்கடாக்ஷத்தினால் கிடைத்த சம்பத்தை ஏழை ஜெனங்களுக்கு வினியோகப் படுத்தினதன்னியில் வயல்களில் பூரணமா யிருக்

Koviloor Digital Library

பிற கதிர்களையொடித்து சாது ஜெனங்களுக்கு கொடுத்து விளைமுதலுக்கு ஒருகதிருமில்லாமல் காலிசெய்துவிட்டார் மறுபடியும் அந்த சோளப்பயிர் தழைத்து அபரிமிதமாக பலத்தைக் கொடுத்தது அதனைப் பார்த்த ஜெனங்கள் ஆச்சரியப்பட்டு சாதுஜெனங்களுடைய மகிமைகள் அதிவற்புதமாகியிருக்கிறதுமேலும் ஜெகதீசன் ஒன்றிலும் பிரியமில்லா விரக்தர்களுக்குப் பிரசன்னராகி அவர்கள் யோகக்ஷேமங்களைத் தான் நிறைவேற்றுகிறனென்று பாகவதவிபவத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

பின்பு ராதாமனமென்ற பட்டணத்திற் கடுத்த கிராமத்தில் மொதகமகா னென்னும் ஒருகுடியானவன் போசலபாவாவுக்கு நெருங்கினபந்துவாகியிருந்தான் அவன் தம்பிகளிருவர் ஆங்காரமுடையவர்களாயும் துராசாரர்களாகியு மிருந்தார்கள் அந்த மொதகமகானுடைய வயல் போசலபாவா வயலுக் கருகாமையிலிருந்தது அந்தகுனிக்கு ஆசியெனுமொருபெண்சாதியிருந்தாள் அந்தவபல போசலபாவாவின்பிரபாவத்தைக் கேட்டு ஆனந்தமடைந்து பூர்வஜென்மபுண்ணியபலத்தினால் போசலபாவா விடத்தில் பக்தியுண்டாகி அவரைச் சரணமடைந்து ஓசுவாமி நான் அனேககாலமாகப் பவப்பிணியினால் பிடிக்கப் பட்டவளாகு மாகையால் இப்பிணிதிரும்படி எனக்கு அவிழ்தங் கொடுத்து தருந்த பத்தியத்தை சொல்லி என் வ்யாதியைப்போக்கி எனக்கு மோக்ஷப்பிராப்தியுண்டாகச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தாள் அதைக்கேட்டு போசலபாவா ஓஅம்மா உனக்கிப்படிப்பட்ட அனுதாப முண்டாகியதற்கு மிகுந்த சந்தோஷமடைகிறேன் உன்எஜமானனுடைய அனுமதியைபெற்று ஏகாதசிதோறும பண்டரிபுரத்திற்குப்போய் பாண்டுரங்கனை சேவித்தும் அனுதினமும உன்னெஜமான் நேமிக்கும்வேலைகளைச்செய்தும் இராத்திரியில் வந்து நான்செய்யும் பகவான்நாம சங்கீர்த்தனைகளை கேட்டுக்கொண்டிரும் மேலும் எந்தவேலைசெய்துக் கொண்டிருந்த போதிலும் வாக்கினால் பகவான்நாமங்களைச் சொல்லிக்கொண்டு மனதினால் பகவானைத் தியானித்துக் கொண்டிருமென்று உபதேசஞ் செய்தார் அந்த பெண்பிள்ளை போசலபாவா நேமித்தபடி செய்துக் கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க போசலபாவா பக்திப்பிரபாவத்தை ராஜோராசகக் கிராமத்தார்கேட்டு அவர்கள் கிராமத்தைவிட்டு வந்து போசலபாவாவை தெரிசித்து சந்தோஷானந்த மடைந்து தினமும்வந்து அவர் செய்யும்பஜனையை கேட்டுக்கொண்டிருந்தார்கள்இப்படி நாள்தோறும்கேட்டுக்கேட்டு ஆனந்தித்துப்போவார்கள் இப்படியிருக்கஒருநாள் அந்தஊரார்பத்து பேர்கள் சேர்ந்து வழக்கப் பிரகாரம் கீர்த்தனைகள் கேட்பதற்காக வந்துகொண்டிருக்கையில் வழிநடுவில் அவர்களில் ஒருவன் பாம்புகடித்து மரணமடைந்தான் மற்றவர்கள் கீர்த்தனைகளைக் கேட்கவேணுமென்ற ஆவல் மிகுந்தவர்களானபடியால் அந்தபிணத்தை ஒருவேட்டியினால் மூடிக்கொண்டுபோய் பஜனை நடக்குமிடத்தில் அதையொரு பக்கத்தில் உட்கார வைத்துத் தாங்களும் உட்கார்ந்துகேட்டிருந்தார்கள் இந்தரகசியம் யாருக்கும் தெரியாது போசலபாவா ஹரிகீர்த்தனஞ் செய்துக்கொண்டே அவிடத்திற்கு வந்திருந்தவர்களைப்பார்த்து ஓஜெனங்களே நித்திரை செய்யாமல் பகவத் கீர்த்தனங்களைக்கேளுங்கள் யாவரும் பக்தியுடன் பகவான் நாமங்களை உச்சரித்தும் கையில் தாளம்போட்டும் நடனஞ்செய்யுங்களென்று சொல்லுகிற போதெல்லாம் இவர்கள் யாவரும் அப்படியே செய்துக்கொண்டு வந்தார்கள் பிணம்மாத்திரம் வெறுமனே உட்கார்ந்திருப்பதைப்பார்த்துபோசலபாவா நித்திரையில் சொக்கியிருக்கும் மனிதனென்று நினைத்து கிட்டிநெருங்கிவந்து ஓபாக்கியவானே இந்தகூட்டத்தி லனைவரும் நான்சொன்னது போல ஸ்ரீபாண்டுரங்கநாமத்தை பஜித்துக்கொண்டு நடனஞ் செய்திருக்கையில் நீமாத்திரமேன் சும்மா உட்கார்ந்து நித்திரை செய்துக் கொண்டிருக்கிறாய் நான் பகவான் விஷயத்தில் அவயவாதி தேகங்களை விநியோகித்து கிருதார்த்தர்களாகும்பொருட்டு நமக்குஈஸ்வரன் அரிதாகும் மானிடதேகங் கொடுத்தார் ஒரு நிமிஷத்தில் பங்கமடைந்து அழிந்துபோகும் இந்த சரீரத்தை நம்பி வீண்காலம்போக்குவது ஞாயமல்ல மற்றவர்களைபோலவே நீயும்எழுந்து நடனஞ்செய்து உன்வாக்கினால் பகவான்நாமத்தை யுச்சரியும் என்று சொல்லிக்கொண் டிருக்கிறபோது மரணமாகிய அந்த புருஷன் பண்டரிநாதன் கிருபையினால் பிணசொரூபம் நீங்கியெழுந்து ஸ்ரீபாண்டுரங்க நாமத்தைப்பாடிக்கொண்டு நடனம்புரியத் தலைப்பட்டான் பாம்புகடித்து மரணமாகிய சரீரத்தை மூடமாகவெடுத்து வந்தவர்கள் ஆச்சரியப்பட்டு போசலபாவாவுக்கு நமஸ்காரஞ்செய்து உண்மையை யறிவித்தார்கள் அதைக்கேட்டு போசலபாவா ஆனந்தபரவசராகி இது ஸ்ரீபண்டரிநாதனுடைய லீலையென்று சொல்லி பகவானுடைய கல்யாண குணங்களைப் பாடிக்கொண் டிருந்தார்.

இப்படியிருக்க ஆசியெனும் காவல்காரியினுடைய எஜமான் பரலோககதியடைந்தான் அவன்பத்

Koviloor Digital Library

நினி அவிடத்தில் தனக்கிருக்க சம்மதிபடாமல் தாய் வீடுபோய்ச் சேர்ந்தாள் பின்பு அவன் தம்பிமார்கள் தங்கள் சொத்துக்களை பாகித்துக் கொள்வதற்கெத்தனப்பட்டு ஆசியெனும் வேலைக்காரியை விற்பனைசெய்ய முயற்சி கொண்டார்கள் இதையறிந்த ஆசியானவள் துக்கப்பட்டு போசலபாவா விடத்திற்கு வந்து ஒசுவாமிகளே தேவரீரது தெரிசனத்திற்கும் தீர்த்தஜை கேழ்ப்பதற்கும் விரோதமாக என் எஜமான்கள் என்னை அனனிபருக்கு விற்பனைசெய்யநினைத்திருக்கிறார்கள் தொலைதூரத்திலிருந்து வர்த்தகர்கள் எனக்காக என்னெஜமான்கள் கூரிய விலைகொடுத்துக் கொண்டு போவதற்கு சித்தமாகி யிருக்கிறார்க ளென்று அழுதுக்கொண்டே சொன்னாள். அந்த வார்த்தைகளைக் கேட்டு போசலபாவா அனுதாபப்பட்டு துக்கப்படாதே நீயெங்கிருந்தபோதிலும் பரமாத்துமாவுக்கு சேஷமாகியிருப்பவளாகும் சர்வத்திற்கும் கெதியாகும் அந்த பரமாத்துமாவைவிட்டு நீயெங்கு போகக் கூடும் ஆகையால் வுன் துக்கத்தைவிட்டு அந்தபகவானை தியானித்துக் கொண்டிரும் என்றதைக் கேட்டு ஆசியானவள் ஒசுவாமி தேவரீர்மொழி சத்தியமாகி யிருக்கிறது நான் அதற்காக துக்கப்படவில்லைதேவரீரைவிட்டுப் பிரியமனமில்லாமல் துக்கிக்கிறேனென்று சொல்லி அவர் பத்தினியான மமதாதேவி யிடத்திற்குப்போய் ஓஅன்னையே என்னெஜமான்கள் என்னை விற்பனைசெய்ய முயற்சிகொண்டிருக்கிறார்கள்.

உமது நாயகன்பிரிவு எனக்கு மிகுந்த துக்ககரமாகியிருக்கிறது ஆகையால் என் னெஜமானர்கள் கூறும் விலையைத்தந்து என்னைவாங்கிக்கொள்ளும்படி உமது மணாளருக்குப் புருஷாகாரம் செய்யவேண்டுமென்று அதிகதுக்கத்தோடும் பிரார்த்தித்துக் கொண்டாள் அப்போது மமதாபாயிக்கு கிருபை யுண்டாகிஆசிக்குதைரியஞ்சொல்லி யனுப்பிவிட்டுத் தன் கணவனைப் பார்த்து பிராணநாதரே சரணாகதியடைந்தவர்களை ரக்ஷிப்பது தர்மங்களில் பெருத்த தர்மம் ஆகையால் நம்மைச்சரணமடைந்த ஆசிக்காக நமது வயல்களை விற்பனை செய்தாகிலும் அவள் எஜமான்கள் கூறும் விலையைத்தந்து அவளடிமையை மீட்கவேணுமென்று சொன்னாள் அதைக்கேட்டு போசலபாவா சம்மதித்து ஆசி எஜமான்களிடத்திற்குப் போய் இந்த ஆசிக்காக நீங்கள்சொல்லும் விலையைத் தருகிறேன் இவளையுங்கள் அடிமையிலிருந்துவிடுவித்துவிடுங்களென்று சொன்னார் அந்த துஷ்டாத்து மாக்கள் கோபித்துக்கொண்டு நீ அதிகமாக விலைகொடுக்கினும் நாங்களங்கிகரிக்க மாட்டோம் குறைந்த விலைக்காகிலும் அன்னியர்களுக்கே விற்பனை செய்வோமென்று சொன்னார்கள் அதைக்கேட்டு போசலபாவா எதுஞ் சொல்லாமல் தன்வீட்டிற்குவரும் மார்க்கத்தை ஆசியழுவதைப் பார்த்து நீ அழவேண்டாம் என்பிராணநாதராகும் பாண்டுரங்கனைப் பிரார்த்தித்து உன்னை விடுவிக்கிறேனென்றுசொல்லி தன்னூருக்குச்சென்று இந்த விருத்தாந்தத்தை தன்பத்தினிக்கு அறிவித்தார்

பின்பு ஆசியினுடைய எஜமான்கள் ஆசியை அவன்புகல்வியுடன் இருபத்தைந்து விராகனுக்குதூர தேசத்திலிருந்து வந்தவர்த்தகர்களுக்கு விற்பனைசெய்து அவர்களுக்கு விக்கிறைய பத்திரமெழுதிக்கொடுத்து அவர்களிடமிருந்து வராகன்களையும் பெற்றுக் கொண்டார்கள் அப்போது பண்டரிநாதன் ஒருபிராமணனாகிவந்து ஆசியைப் பார்த்து போசலபாவா உனை யழைத்துக்கொண்டுவரும்படி என்னையனுப்பினுரென்றுசொன்னார் அப்போது ஆசியினுடைய புதல்வி மரணமடைந்தாள் அதுசமயத்தில் விப்பிர வேஷம் புனைந்த பண்டரிநாதனும் ஆசியும் மறைந்து போயினார்கள் அப்போது வர்த்தகர்கள்விசனமடைந்தவர்களாகி ஆசியின் எஜமான்களைப்பார்த்து நீங்களெங்களுக்கு விக்கிறயபத்திரம் எழுதித்தந்து எங்களிடத்தில் விராகன்களையும் பெற்றுக் கொண்டபடியால் எங்களுக்கு அந்தஆசியை நீங்கள் ஒப்பிக்க வேணும் அப்படிக்கில்லாவிடில் எங்கள்விராகன்களை என்களுக்குக் கொடுத்துவிட வேணுமென்று வாதித்தார்கள் அப்போது ஆசிஎஜமான் வர்த்தகர்களைப் பார்த்து நாங்கள் விக்கிறையபத்திரம் எழுதித்தந்து உங்களால் விராகன்களை வாங்கியபோதே ஆசி உங்கள் சொந்தக்காரியாயினாள் இனியவளுடன் சேர்ந்தலாப நஷ்டங்கள் எங்களுக்கு நிமித்தியமில்லை இப்போது ஆசியை மாயஞ்செய்து கொண்டுபோன பிராமணனை தான்போசலபாவாவினால் அனுப்பப்பட்டது போல சொன்னான் ஆகையால் நீங்களவிடத்திற்குப் போய போசலபாவாவுடன் சண்டைசெய்யுங்களென்று கொன்னார்கள் மத்தியஸ்தர்களாகும் கிராமத்தார் இதைக் கேட்டு இதுநியாயமாகவே யிருக்கிறது அதெப்படியெனில் இதற்குமுன் துக்கப்பட்டுக் கொண்டிருந்த ஆசியைப்பார்த்து போசலபாவா நீயழவேண்டாம் பண்டரிநாதரிடத்தில் சொல்லி உன்னை வரவழைத்து கொள்ளுகிறேனென்று சொல்லிப்போயிருக்கிறார் ஆகையால் நீங்கள்போசலபாவாவிடத்திற்குப்போவது உசிதமென்று சொன்னார்கள் அதைக்கேட்டுவர்த்தகர்கள் போசலபாவாவுக்கும்எங்களுக்கும என்னசம்பந்தம் பத்திரம் எழுதிக்கொடுத்து எங்கள் கையில் விராகன்களைப் பெற்றுக்கொண்ட நீங்களே யெங்களுக்குசமாதானம் சொல்லவேண்டுமேயொழிய போசல

பாவா விடம் போகவேண்டிய வேலையில்லை யென்று பிடிவாதமாய் கலகம்செய்துக் கொண்டிருந்தார்கள்.

இங்கிப்படியிருக்க, அவிடத்தில் பால்காட்டுப் பட்டணத்திலிருக்கும் புலையனொருவன் போசலபாவாவிடத்திற்கு வந்து தீர்க்கதெண்டனிட்டு ஓசுவாமிகளே தயவுசெய்து அடியேனுக்குபதேசித்து என்னை யனுக்கிரகிக்க வேணுமென்று வெகுநாளாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான் போசலபாவா அவன் விஷயத்தில் சந்தோஷித்து ஸ்ரீபண்டரிநாதனை தியானித்து பலபலவிதங்களாகத் துதித்துக்கொண்டிருக்க பகவான்வந்து தெரிசனந்தந்தார் அப்போதுபோசலபாவா அந்ததேவர்கோமானுக்குத் தீர்க்கதெண்டனிட்டு எழுந்துநின்று கைகுவித்து ஓசுவாமி ஓர்புலையன் தனக்குபதேசம் செய்யவேண்டுமென்று என்னை மிகவும் நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கிறான் இவன் உபதேசம் பெருவதற்கு தகுதியில்லாதவனென்று நான் சங்கை யடைந்திருக்கிறேன் எனக்கிந்த சந்தேகத்தை நீக்கி உமக்கிஷ்டமாகும்படி நேமிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார் பகவான் போசலபாவாவைப் பார்த்து ஓபக்த சிகாமணியே!

சுலோகம்.

"இதம் தேனதபஸ்காய
நாபக்தாய கதாசன
நசாஸுஸ்ரூஷவே வாச்யம்
நசமாம்யோப்யஸூயதி."

என்றால் தபநிஷ்டை யில்லாதவனுக்கும் பக்தியினனுக்கும், தொண்டுசெய்யாதவனுக்குமகளங்கமுடையவனுக்கும் உபதேசிக்கக் கூடாதென்று பகவத்கீதையில் சொல்லியிருக்கிறேனல்லவா இவன் உபதேசத்துக்குத் தகுந்தவனல்ல நீஇப்போது நான்நேமிப்பதுபோலச் செய்யும் அதினால் இவன் மனததெளிவு வெளிப்படும் அதென்னெனில் நீயந்தபுலையனை வரவழைத்து வயலிலிருக்கும் ஒருஅன்னிய தேவதைக்கு பூசை செய்யவேணுமென்று அபிநயித்து ஒருபசுவையவனிடத்தில் கொடுத்து இதைக்கொன்று இதின்யிறைச்சியைக் கொண்டுவந்துகொடுத்து இந்தரகசியத்தை வெளிப்படுததாதே,யென்று சொல்லி யனுப்பி அவன்கொண்டுவந்துகொடுக்கும் இறைச்சியை வாங்கிக்கொண்டு பாகஞ்செய்வித்து வயலிலுள்ள தேவதையைப்பூசித்து இறைச்சியைப் புசிப்பவர்களாகும் சிலரை வரவழைத்து புசிக்கும்படிசெய்யும் உன்சொல்லுக்குப் பயந்து இந்தரகசியத்தை வெளிப்படுத்தாமலிருப்பானேயாகில் அவனுக்குபதேசஞ் செய்யும் ஆனால் பழிதொழில் செய்கிறேனேன்றும் அன்னிய தேவதையை யாராதிக்கிறோமென்றும் நீவிசனப்படவேண்டாம் எனக்கு மனத்திருப்தியாக என்னேமனத்தினால் செய்யுங்காரியமெல்லாம் என்னாராதனையாகியிருக்கும் நானேயந்த அன்னியதேவதை ரூபமாகயிருந்து உன்னாராதனையை அங்கீகரிக்கிறேன் என் நாமரூபங்களுக்கு அநித்தியமில்லை ஆகையால் நீஎப்படிப்பட்ட நாமரூபாதிகளுடனாகிலும் என்னை யாராதனை செய்யலாம் என்னனுமதியினால் நீசெய்யும்வதை வதையாகமாட்டாது ஜீவவதைசெய்யக்கூடாதென்று விதிக்கப்பட்ட சாஸ்திரம் பாகத்திற்காக பசுக்களை வதைசெய்யலாமென்று சொல்லியிருக்கிறதல்லவா ஆகையால் விசேஷமாகிய விதி சாமானியவிதிக்குப் பாத்திரமல்ல,

"அஸ்வாலம்பம் சுவாலம்பம்
ஸ்ன்யா ஸம்பல பைத்ருகம்
தேவரேணசுதோற்பத்தி:
கலௌபஞ்ச விவர்ஜயேத்."

என்பதுபோல இம்சைகள் முதலானதாகும் யாகங்கள் முதலாகியதுகள் கலியுகத்தினில் நீக்கப்பட்டிருக்கிறதென்று பந்திக்கவேண்டாம் சாஸ்திரம் என் சொல்லாகியிருக்கிறது என்கட்டளையை அனுசரிப்பதினால் சாஸ்திரத்தைமீறி நடந்ததோஷம் உனக்குக் கிடையாது இத்தனை சொல்லவேண்டியதேன் சரீரத்தைப் போஷிக்கும்பாரம் சரீரியா தீமையாகியிருப்பதுபோல எனக்கு சரீரமாகும் உன்னை ரக்ஷிக்கும்பாரம் சரீரகனாகும் என்சுவாதீனமாகியிருக்கிறது ரத்தியினால் சமுத்துகளை யெடுத்தபோதினு அதின்குணதோஷங்கள் அறுத்தவனைச்சேருமே யந்நியில் கத்தியைச்சேராது அப்படி சகலவிதத்திலும் எனக்குப் பரதந்திரனாகியிரும் மேலும் நீயென் கட்டளைப்படி செய்யுங் காரியங்களினால் நீயேமனுக்கு வசமாகமாட்டாய், என் அனுக்கிரகத்தினால் பசுவுக்குப்பிராணபயமும் எனக்கு சாஸ்திரத்தைமீறி நடந்த தோஷமும் உண்டாக மாட்டாதென்று சொல்லி மறைந்துபோயினார் அதைக்கேட்ட போசலபாவா களிக்கடலில்மூழ்கினவராகி அந்தப்புலையனை வரவழைத்து அடா என் வயலினிடத்திலிருக்கு மொருதேவதைக்குபூசைபோடவேண்டி யிருக்கிறது ஆகையால் பசுச்சாலையிலிருக்கும் சிவந்தபசுவைப் பிடித்துக்கொண்டுபோய் அறுத்து அதினிறைச்சியை எனக்குக்கொண்டுவந்து கொடுத்து இந்தரகசியத்தை வெளிப்படுத்தாமலிருமென்று நேமித்தார் அந்தவார்த்தையைக்கேட்டுப் புலையன் பசுவைப்பிடித்துக் கொண்டுபோய் அறுத்து அதின் தலையையுங்கால்களையும் ஒளித்துவைத்துமற்றஇறைச்

Koviloor Digital Library

சியைக் கொண்டுவந்து போசலபாவாவுக்குக் கொடுத்தான் அந்தபோசலபாவா தருந்தவர்களைக் கொண்டு பாகஞ்செய்வித்து அன்னம ரொட்டிகள் முதலானவைகளுடன் அந்தயிறைச்சியைச் சேர்த்து வயலினிடத்திலிருக்கும் தேவதைக் காராதனை செய்து இறைச்சியைப் புசிப்பவர்களாகும் சிலரை வரவழைத்து புசிக்கச்செய்தார் அவர் பூரணமாகப் புசித்தத் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள் அதென்னவெனில் இந்தப்போசலபாவா வயலிலுள்ள தேவதைக்கு ஆட்டைப பலிகொடுத்தது ஆச்சரியமாகயிருக்கிறது இதினால் இவன் வைராக்கியசீலன் ஆகானென்றும்வேஷக்காரனென்றும் தெரியப்படுத்துகிற தென்றுசொல்லிக்கொண்டே தங்கடங்கள் வீட்டிற்குப் போயினார்கள் பின்புபோசலபாவா மிகுந்தயிறைச்சியைப்புலையனுக்குக் கொடுத்து ரகசியத்தை வெளிப்படுத்தவேண்டாமென்று பலதடவை சொல்லியனுப்பி பாண்டுரங்கனைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

அன்றுமறுநாள் காலையில் அந்தப்புலையன் ஒரு குடியானவன் வீட்டிற்குப்போய் தெருவில் நிற்பதைவிட்டு பயமில்லாமல் உள்ளேபோனான் அவனைக்கண்டஅவ்வீட்டின் எஜமான்கோபித்துக்கொண்டு அடா சண்டாளனே நீவாசலிற் நிற்பதைவிட்டு கிஞ்சித்தேனும் பயமில்லாமல் வீட்டிற்குள்வந்தாயென்றான் அதற்கந்த புலையன் எஜமானைப் பார்த்து உங்களுக்கும் எனக்கும் பேதமென்ன நீங்களும் எங்களைப் போல மாட்டினிறைச்சியை புசிப்பவர்களே யல்லவா யென்றதைக்கேட்டு எஜமான் மிகவும்கோபித்து கொண்டு அடாமூடனே? நீஉள்ளேவந்தது மல்லாமல் வாயிக்குவந்தபடி உளருகிறாய் வெளியே போடாவென்று சொன்னான் அதைக்கேட்டுப் புலையன் ஐயாஉண்மையைச்சொல்லுகிறேன் கேளும்நேற்று நீங்கள் யாவரும் போசலபாவா புலத்தில் புசித்தது மாட்டினிறைச்சி அவர் ஒருபசுவை என்கையில் கொடுத்து கொன்றுகொண்டுவரும்படி அந்தயிறைச்சியை உங்களுக்கு சமைத்துவந்தார் அதின்தலையும் கால்களையும் ஒளித்துவைத்திருக்கிறே னென்றுசொல்லி விடுகள்தோறும் சேன்று இப்படி சொல்லிக்கொண்டு வந்தான். புசித்த யாவரும் ஓரிடத்தில் கூட்டங்கூடி நாமெல்லோரும் பிரஷ்டர்களானோம் போசலபாவா ஹரிபக்தனென்று பேர் வைத்துக்கொண்டு இத்தனைபிரமாதம் செய்துவிட்டான் இதைநன்றாக விசாரித்துப் பரிக்ஷைசெய்து இந்தப்புலையன்வார்த்தை உண்மையாகுமாகில் போசலபாவாவை அந்தப் புலத்திலுள் தானே கொன்றும் நாம் பிராயச்சித்தம் செய்துக்கொள்வோமென்று தங்களுக்குள் நிச்சயித்து புலையனைப் பார்த்துநீசொல்லுவது உண்மையாகில்ருஜூவுகொடுமென்று கேட்டார்கள் அதற்குசண்டாளன் அவர்களைப் பார்த்து ஆண்டமாரே உங்களுக்கு என்மேல் சந்தேகமேன் போசலபாவா மாடுகளில் சிவந்த பசு கொட்டாயில் இல்லாததைப்பார்த்து கொள்ளுங்கள் அந்தப்பசுவு யென்னால்சொல்லப்பட்டது அதினிறைச்சியை நீங்களெல்லோரும் நேற்றுப் புசித்தீர்கள். அதின் தலையையும் கால்களையும் ஒளித்து வைத்திருக்கிறேன் என்றுசொல்லக்கேட்ட அவர்கள் ஆத்திரமடைந்தவர்களாகி போசலபாவாயிடத்திற்குப் போய் அவரை வெகுவாகதூஷித்து அடாநீச்சனே நீமிகவும் துஷ்டன் அரிபக்தனென்று வேஷம் போட்டுக் கொண்டு இந்த ஊரைக்கெடுத்தாய் உண்மையைச் சொல்லும் தியானஞ்செய்வதுபோதும் உன்னைப்போலபிரஷ்டனுக்கு பாண்டுரங்கன் எப்படி பிரசன்னமாவார் மாட்டிறைச்சியை வைத்து எங்கள்யாவரையும்பிரஷ்டர்களாகச் செய்தாய் ஆகையால் இப்படிப் பட்ட கொடியபாவியாகிய உன்னைக்கொன்று நாங்கள் பிராயச்சித்தம் செய்துக் கொள்ளுகிறோமென்று சொல்லிக்கொண்டிருக்க போசலபாவா எதுஞ்சொல்லாமல் ஸ்ரீபாண்டுரங்கனை தியானித்துக் கொண்டிருந்தார்.

பின்புசிலர் அப்புலையனைப்பார்த்து நீஅந்தமாட்டின்கால்களையும் தலையையும் புதைத்துவைத்ததாகச் சொன்னாயே அதைக் காட்டுவாயா வென்று கேட்க அந்தப்புலையன் அதற்கென்ன சந்தேகம் காட்டுகிறேன் வாருமென்றான் அப்போது அவர்களந்தப் புலையனை யழைத்துக்கொண்டு அவன் பசுவின்தலையையும் கால்களையும் ஒளித்துவைத்த யிடத்திற்குப் போய்த் தோண்டிப் பார்க்கையில் பண்டரிநாதன்அருளினால் அது ஆட்டின்தலையும்கால்களும் ஆகியிருந்ததுஅதைக்கண்டு புலையன் திடுக்கிட்டு எதுவும்தோன்றாமல்திப்பிரமையடைந்தான் அவனுடன்கூடப்போய்பார்த்து வந்தவர்கள் அடாநீச்சனே இல்லாததை கற்பனை செய்து எவ்வளவு பிரமாதம் செய்தாயென்று சொல்லி அந்தத்தலையையும் கால்களையுங்கொண்டுவந்து அனைவர்க்கும் எதிரில்வைத்தார்கள் அப்போது யாவரும் நன்றாய்ச் சந்தேகநிவர்த்தி செய்துக் கொள்ளவேணுமென்று மாட்டின் கொட்டாயருகிற் போய்ப் பார்க்கையில் சிவந்தபசு கொட்டாயில் கட்டப்பட்டிருந்தது அப்போது யாவரும் அனுதாபமடைந்தவர்களாகி போசலபாவாவுக்குதெண்டனிட்டு ஒமகாத்துமாவே ஆகியந்தமாக விஷயத்தை விசாரிக்காமல் உம்மையவமானப் படுத்தினோம் அக்கினிக்குச்சூடும் ஜலத்திற்குசீதளமும் சுபாவகுணமாகுவதுபோல உன்னைப்போல பாகவத உத்தமர்களுக்கு சாந்தமே சுபாவகுணமாகியிருக்கிறது ஆகிலும் பாகவத அவமானத்தை சகிக்காத ஸ்ரீபண்டரிநாதருக்கு யெங்களிடத்தில்

Koviloor Digital Library

கிருபையிராதென்று பயப்படுகிறோம் நினது புருஷாகாரத்தினால் அந்தபகவான் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராகவென்று விண்ணப்பஞ்செய்து இத்தனை பிரமாதத்திற்குங் காரணமாகும் புலியைக் கொல்லவேணுமென்று சொல்லவேபோசலபாவா அவர்களைப்பார்த்து இது ஸ்ரீபண்டரிநாதன் லீலையாகியிருக்கிறது இதனையறிந்து எனக்காக இந்தப்புலியை ரக்ஷிக்கவேணுமென்று பிரார்த்தித்தார் அப்போதுயாவரும் இவர் பரமசாந்தத்திற்கு ஆச்சரியப்பட்டு அனேகவிதங்களில் துதித்து தங்கடங்கள் வீட்டிற்குப் போயினார்கள் பின்பு அந்தப்புலியும் வெட்கையடைந்து அதுமுதல் போசலபாவாவுக்கெதிரில் வராமலிருந்தான்.

இப்படியிருக்க, ஒருவருஷம் காலமழைபொழியாமையினால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள் அப்படியிருக்க கார்த்திகை மாதத்தில் ஒருநாள்மழைபெய்தது அப்போது போசலபாவா கொஞ்சம் தானியங்கடன்வாங்கி அதைபுலத்தில் விரைத்துவிட்டு வீடுவந்து சேர்ந்தார். அப்போது பண்டரிபுரத்திற்கு யாத்திரை போகுமவர்களில் சிலர் போசலபாவா வீட்டிற்குவந்து அவரைப் பார்த்து ஐயா நாங்கள் பண்டரிபுரத்திற்கு யாத்திரை போகுமவர்கள் இன்றெங்களுக்குப் புசிப்பதற்கொன்றுமில்லாமையால் பசியானது எங்களை மிகவும் வருத்துகிறது ஆகையால் தாங்கள் ஏதாவது உதவி எங்கள் பசியை நீர்க்கவேண்டுமென்றார்கள் இதைக் கேட்ட போசலபாவா தன்வீடெல்லாம் சோதித்துப் பார்த்ததில் கொஞ்சம் புழுத்த சோளமகப்பட்டது அதைப்பார்த்து இதையெப்படி சாதுக்களுக்குக் கொடுப்பேனென்று சிந்தித்து தன்புதல்வனாகும் ஏமாஜியையழைத்து அடாமகனே மகாத்துமாக்களாகும் சாதுக்களுக்கு புழுத்தசோளம் கொடுக்கக்கூடாது இன்று புலத்தில விரைத்ததானியத்தை கும்பலாகக் கூட்டி இல்லடையினால் சலித்துக் கொண்டுவந்து அதனைச்சிர்படுத்தி சாதுக்களுக்குக் கொடுத்து இந்த புழுத்ததானியத்தைபுலத்தில் விரையுமென்றுநேமித்தார் ஆகையால் ஏமாஜி தந்தைசொல்லிபடியேசெய்தார்பின்பு அந்தப்புழுத்த தானியம் பண்டரிநாதன் கிருபையினால் முளைகிளம்பி கன்றாய்ச் செழித்தது அதைக்கேட்ட அந்தவூரார் ஆச்சரியப்பட்டு புலத்திற்கு வந்து பார்க்கையில் அளவில்லாத சுரைக்காய்கள் காய்த்து இருந்தது அதிலொரு காயை யுடைத்துப் பார்க்க அதுகோதுமை யரிசியினால் நிறைந்திருக்கப் பட்டிருந்தது அதனைப்பார்த்து அற்புத மடைந்தவர்களாய் அந்தவூராரெல்லாருந் துலுக்கனுக்கு இந்தசங்கதி தெரிவித்தார்கள் அவன் போசலபாவாவை யழைப்பித்து புழுத்தசோளம் முளைத்து சுரைக்காய்கள் காய்ப்பதற்கும் அந்தச்சுரைக்காய்கள் கோதுமை யரிசியினால் நிறைந்திருப்பதற்குக் காரணமென்னவென்றுகேட்டான் அதைக்கேட்ட போசலபாவா மன்னனைப் பார்த்து எனக்கு யாதொன்றுந்தெரியாது இதுபண்டரிநாதன் லீலையென்று சொன்னார்.

அப்போதந்த துலுக்கவரசன் இந்த போசலபாவா இந்திரஜாலத்தில்மெத்தசமர்த்தனை இவனைபிரஷ்டனாகச் செய்கிறேனென்று நினைத்து தனக்கு உச்சிதமாகும் போஜன பதார்த்தங்களை வரவழைத்து போசலபாவாவெதிரில்வைத்து இதனைப் புசியுமென்றுநிர்ப்பந்தித்தான் அப்போது அந்த பதார்த்தம் யாவும் பண்டரிநாதன் கிருபையினால் திருத்துழாயாகியிருந்தது இதைப்பார்த்து அரசன் மெய்மறந்துபோசலபாவாவுக்கு வந்தனம்செய்து உனக்கு வேண்டிய பதார்த்தங்களைக் கேளும் தருகிறேனென்றான் போசலபாவா அவ்வரசனைப்பார்த்து காமதேனுவை யுடைத்தவனுக்கு குறைவில்லாதது போல ஸ்ரீபாண்டுரங்கநாமஜபசீலனாகும் எனக்கெதுவும் குறைவில்லையென்றுசொல்லி தன்வீட்டிற்குச் சென்று பாண்டுரங்கனை துதித்துக்கொண்டு ஆனந்தமடைந்திருந்தார்போசலபாவா வசிக்கும்படியான அந்தவூர் அவர்மகிமையினால் பண்டரிபுரத்தைப்போல பிரகாசித்துக் கொண்டிருந்தது.

இந்நூல்செய்தவரின் கருத்து.

ஆசையால் அநித்தியமாகிய சுகபிச்சையைநீக்கி. நித்தியமாகிய லாபத்திற்குப் பிரயத்தினம் செய்யுங்கோள் திரேகம் நீர்க்குமிழியை பொத்தது, "ஜாதஸ்யஹித்ருவோம்ருத்யுஃ" என்றபடி ஜெனித்தவனுக்கு மரணங்கிடைப்பது சித்தம்.

சுலோகம்.

"வாஸாம் விஜீர்ணாநியதா விஹாய
நவாநிக்ருஹ்ணாதி நரோபராணி
ததாசரீராணி விஹாயஜீர்ணா
ன்யந்யாநி ஸம்யாதி நவாநிதேஹி"

என்றபடி, மனிதன் கிழிந்த வஸ்திரங்களை நீக்கி நூதனவஸ்திரங்களைத் தரித்துக் கொள்வது போல, ஆத்மாவானது தளர்ந்து மெலிந்த சரீரங்களை விட்டு நூதனசரீரங்களில் பிரவேசிக்கும் இப்படிப் பட்ட சரீரங்களில்,

"துர்லபோ மானுஷோதேகஃ"

என்பதுபோல், மனிதசரீரங்கிடைப்பது அரிது. ஞானவானாகியிருப்பது அதற்காகிலும் அரிது அங்

Koviloor Digital Library

தர்ஞானம் விஷயாதிகளில் விநியோகப்படாமல்பகவான் விஷயத்தில் விநியோகப்படுவது அதர்க்காகிலும் அரிது விஷயாதிகள் விஷதநிற்காகிலும் கொடியது எப்படியெனில்,

சுலோகம்.

"விஷயஸ்ய விஷயாணாஞ்ச
தூரமப்யந்தராந்தம்
உபபுஜ்ய விஷர்ஹந்தி
விஷயாஸ்மரணாதபி."

என்னும் பிரமாணப்படி விஷயங்களுக்கும் விஷயாந்தியங்களுக்கும் மிகுந்ததாரதம்யமுண்டு விஷம் தன்னைப் புசிப்பவர்களைக் கொல்லும் விஷயங்கள் தன்னை யநுஷ்டிப்பவர்களை கொல்லும் ஆகையால் புத்திமான்கள் விஷயாசக்தர்களாகியிருக்கத்தகாது.

சுலோகம்.

'யதாஹி க்ரஸ்த மண்டூகோ
தமசான பக்ஷிநு மிர்ச்சதி
ததாம் ருத்யுவ சோலோகோ
போகான் போக்து மிஹேச்சதி"

என்றல் பாம்பின் வாயிலகப்பட்ட தவளை கொசுவைப் புசிக்க யிச்சிப்பதுபோல ம்ருத்யுவின் வாயிலகப்பட்டிருக்கும் உலகத்தோர் இம்மைபோகங்களை அபேக்ஷித்துக்கொண்டிருக்கிறார்கள் புத்திவான்களாகிய உத்தமர்கள் அடியேன்வரைந்த இதைவாசித்தும் கேட்டும் மோக்ஷத்திற்குவிரோதமாகும் மண் பெண் பொன்னாசையைவிட்டு பரம புருஷார்த்தமாகும் மோக்ஷ சித்திப்பதற்காக பகவான் அடியார்களை யாசித்து நேசித்துவிசுவாசித்து பூசியுங்கள் ஜீவகோடிகள் அந்தராத்மாவாகி அற்ப சக்தியுடையவர்களாகும் அன்னிய தேவதைகள் பிரபஞ்சங்களைக் கொடுக்க சமர்த்தர்களே அல்லது மோக்ஷபலத்தை யளிப்பதற்கு சமர்த்தர்களல்ல.

சுலோகம்.

"ஆப்ரஹ்ம பவனால் லோகா:
புனராவர்த்தி னோர்ஜுன
மாமுபேத்யது கௌந்தேய
புனர் ஜன்ம நவித்யதே."

என்றால் பிரம்மாண்டங்களுக் குட்பட்ட சகலவுலகங்களும் மாயாசம்பந்த இருளாகையால்மாயைக் குட்படுத்தி மறுஜென்மத்தையுண்டாகச்செய்யும்என்னையடைந்தவர்களுக்கு மறுஜென்மமில்லையென்றுபகவான் பகவத்கீதையில் சொல்லியிருக்கிறாராகையால் மறுஜென்மம் வராமலிருக்கும் மோக்ஷ பத்திற்காக அந்தரேவசேனையும் அவனடியார்களை இடைவிடாது துதிசெய்யுங்கள் அதற்குத்தக்க உபாயஞ் சொல்லுகிறேன் அதென்னெனில் ஞானவைராக்கியசீலர்களாகும் பாகவதர்களை அடிப்பிரகளாயாகில் அவர்கள் தங்கள்பிரிய உபதேசங்களினால் உங்களைக்ஞானங்களைப் பஞ்சுபோல்பாக்கடித்து உங்களுக்குசதாசாரிய சம்பந்தத்தை யுண்டாகச் செய்வார்கள்.

வெண்பா.

ஞானமநுட்டானமிவை நன்றாகவேயுடைய
ஞானகுருவையடைந்தக்கால்-மானிலத்தில்
சேனர்கமலத் திருமாமகள்கொழுநன்
றானேவைகுந்தம் தரும்.

என்றபடி க்ஞானநுஷ்டான சம்பன்னராகும் ஆசாரியனை யடுத்தவர்களுக்கு பகவான்தானே மோக்ஷங்கொடுப்பார் இத்தனையும்உங்கள் பேரிலே கோரி யுண்மையைச் சொன்னேன் வைராக்யமும் முதலாகும் அந்தரங்கவேடங்களுடன் கூடியிருக்கும் பாகவதர்கள் சேவைகிடைப்பது மிகவும் அரிது,

"ஸோதூரமேகம் தவ்பம
யத்ரபாகவ தாஸ்திதா."

என்பதுபோல அப்படிப்பட்ட பாகவதர்களைத் தன தூரத்திலிருந்தபோதிலும் அவர்களைத் தேடிச் சென்று ஆசித்தடுத்திருக்கவேண்டும் இதற்கு திருஷ்டாந்திரமென்னவெனில் மங்களபடமென்னு நகரத்தில் பிபாஜியென்றபேருடைய ஓர் அரச னிருந்தார் அவர்சௌரியம் ரூபம்தைரியம் சாமர்த்தியம் யுத்தத்தில்புறங்காட்டியோடாதிருத்தல் தானம் பிரபுத்துவம்என்னும் க்ஷத்திரியசுபாவகர்மங்களுடன்கூடியிருந்தார் இவர் மிகுந்த சிரத்தையுடன் காளிதேவியைஆராதித்து அக்காளிதேவியின் கடாக்ஷத்தினால் உலகசுகங்களில் கிஞ்சித்தாகிலும் குறைவின்றி யிருந்தார் அநுதினமும் வைகறைப்பொழுதி லெழுந்து ஸ்நானசந்தியாவந்தனாதி நித்தியகர்மங்களை நிறைவேற்றிக் காளிதேவியைப் பூசித்துவருகிறபோது ஓர்நாள்.

"மாஹாத்மஸ்ஸே ஸம்ஸித்ய ப்ரசாந்தம்
ஹிரண்யவஸ்ஸோ ஸ்நதஸ்ஸாகவேயே"

என்றபடி ஈஸ்வரவிபூதியாகும் சேனைசேதனங்களிடத்தில்சமசித்தமுடையவர்களும் அதிசாந்தயுத்தர்களும், பொறுமையில்லாதவர்களும, சகலஜீவங்களிடத்திலும் பிரியங்கொண்டவர்களுமாகாதுக்களுமாகும் சிலமகாத்மாக்கள் தீர்த்தயாத்திரை செய்து அந்தராஜன்செய்த புண்ணியவசத்தினாலே அந்நபட்டணத்திற்கு வந்தார்கள் அவ்வரசன் சற்குணமுடையவனாகையால் வந்தசாதுக்களுக்கு சகல உபசாரங்களுஞ் செய்து ஆகாரத்திற்குவேண்டியசகலபதார்த்தங்களையும் விசேஷமாகக் கொடுத்து வழக்கப்படி காளிதேவியைப்பூசிக்க ஆரம்பித்தார் மகாகூரவைத்திபசமை

Koviloor Digital Library

யத்தில் இத்தனைகாலைப்போல காளிதேவிசேவைதரு ததால் இராசன் விசனமடைந்து பிரார்த்திக் அந்த தேவிபிரசன்னமாகி ஓஅரசனே நின் பட்டணத்தில் சிலர் பரமசாதுக்கள்வந்திருக்கிறார்கள் அவர்கள் பக வானுக்கு மிகுந்தபிரியர்கள் அப்படிபட்ட பரமஏகா ந்திகள் தெரிசனங்கிடைப்பது மிகவுமரிது நின்பூர்வ புண்ணியபலத்தினால் அந்த மகாத்துமாக்கள் நினது பட்டணத்திற்கு வந்தார்கள் அவர்கள் நிரபேக்ஷையு டையவர்கள் அன்னத்திற்காகிதது வந்தவர்களல்ல நினது பூர்வஜென்மசுகிர்தத்தினால் அவர்களை தெரிசி த்து ஆராதிக்கப் பெற்றாய்

சுலோகம்.

"ஸம்ஸாரவிஷவ்ருக்ஷஸ்ய
த்வேபலேஹ்யமருதோபமே
கதாசித்கேசவேபக்தி:
ஸத்தக்தைர்வாஸமாகமம்."

ஓஇராஜனே இந்தசாரமில்லாத சம்ஸாரம் விஷச் செடியென்று அறியும் அப்படிப்பட்ட விஷச்செடியில் அமிர்தத்திற்கு நிகராகும்'இரண்டுகனிக ளிருக்கிறது அடுத்தவர்கள் விரோதி நிரஞ்சனசீலனாகும் சேவக னிடத்தில் கொஞ்சமாகினும் பக்திசெய்வது ஒருகனி அவர்பக்தர்கள் கூட்டத்தைசேவிப்பதுமற்றொருகனி இவ்விரண்டில் இரண்டாவதுகனி மேன்மையாகியது நின்புண்ணியவிசேஷத்தினால் இன்று நினக்கிப்படிப் பட்ட கனிகிடைத்தது இப்படிப்பட்ட கனிகிடைத்த போதுமற்றகனிகள்யாவும் நின்கைக்குளிருக்குமென் பதற்கு சந்தேகமில்லை எப்படியென்றால் குளவிபுழுவு க்குத தன்சொருபத்தை யுண்டாகச்செயிவது போல பரமேகாந்திகளாகும் பாகவதர்களை யடைந்தமனித னை அவர்கள் தங்கள்பிரிய உபதேசங்களினால் தங்க ளைப்போல குற்றமற்ற ஆததுமாவாகச் செய்வார்கள் உத்தமனுக்கு சர்வேஸ்வரன் வசப்பட்டிருப்பார் ஈஸ் வரன் சுவாதீனமாகியபோது மேன்மையாகிய மோ க்ஷம் இவனுக்கு கைபிலிருக்குமென்று யோரகச்சொ ல்லவேண்டியதில்லை ஆகையால்நீ இதுவரையில் சிரத் தையுடன் என்னையாராதனை செய்திதாய் நின்உத் தமாாசிபலத்தால் அப்படிப்பட்ட பரமபாகவதர்கள் வலிய நின்பட்டணத்திற்கு வந்தார்கள் இனிவீண்கா லம்போக்கவேண்டாம் 'சுபஸ்யசீக்ரம்" என்பது போல வேகமாய் அவர்கள்சந்நிதிக்குச்செல்லும்என் றுகாளிகாதேவி சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு ராஜன்சந்தோஷித்து அத்தேவிக்கு வந்தனஞ்செய்து ஓஅன்னையே இப்படிப்பட்ட உபதேசஞ் செய்தபடி யால் நீஎனக்கு முதற்குருவாகினாய் இத்தனைநாள்நின் னையாராதனை செய்ததற்கு இந்தமேலானபலன்கிடை த்தது நான் கிருதார்த்தனாகினேன் நீநேமித்தபடிசெ ய்கிறேன் என்றுவிண்ணப்பஞ்செய்து அந்ததேவியின விடைபெற்று உடனேபுறப்பட்டு பாகவதர்கள்சமூக த்திற்குவந்து வினயத்துடன் தெண்டனிட் டெழுந்து நின்று எனதுதேவதைகளே!பகவானாகும்ஸ்ரீராமபத் திரன் ஸ்ருங்கிபேரபுரத்திற் கெழுந்தருளி குகனுக்கு சேவையளித்ததுபோல நான்கோராமலிருக்க என்பு ண்ணியபலத்தினால் இங்கெழுந்தருளி எனக்குசேவை யளித்தீர்க ளென்றுசொல்லி துதித்து அவர்களனுக் கிரகத்தைப்பெற்று ராமானந்தசுவாமிகளின் பாதச் சாயைப்போல்வாசித்து பரமயோகியைப்போல அன வரதமும் ஸ்ரீபகவத்தியானஞ் செய்திருந்தார் ஆகை யால்சாதுக்கள்சேவையாலும் அவர்கள்சரித்திரத்தை படிப்பதாலும் சுலபமாக வைகுந்தபதவியை யடைய லாம் என்பதற்குச் சந்தேகமில்லை.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணேநம:

வாழிவிருத்தம்.

சீர்கொண்ட சக்குபாய் கழல்கள்வாழி திகழ்புரந்தர தாசர்தாள்கள்வாழி
ஏர்கொண்ட கோராகும்பாரும்வாழி யிலகுபத்திரா சலராமதாசர்வாழி
பேர்கொண்ட புகழ்பெரிய தாசர்வாழி பெருமைமிகு துக்காராம் சுவாமிவாழி
பார்கொண்ட கீர்த்தி பேகநாதர்வாழி பரவுநரசிம்மமேதா வாழிவாழி.

சுகுணமிகு சோகாமேளர்வாழி சுந்திரஞ்சே ரழகுமீரா பாயும்வாழி
தருந்தயாள தாமாஜிபண்டிதர்வாழி தரைதனிற் சாதுக்கடமை யெந்நாளும்
மிகுவினயமுட னாராதனைகள்செய்து யேன்மைபெறு மரிநாமமதைத் துதித்து
வெகுமகிமைதங்கிடும் போசலபாவாவி னிணையடிகள் செழித்தென்றும் வாழிவாழி.

போசலபாவா சரித்திரம்

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நமః

ஐந்துதாசர்களின் சரித்திரங்களில்

ஜெயதேவசுவாமிகளின் சரித்திரம்.

பிற்பாதி.

உத்தவசித்தர் முதலானோர்கள் நாபாஜி சித்தரைப்பணிந்து, ஓசுவாமி? ஜெயதேவர்கபீர்தாசர் துளசிதாசர் நாமதேவர் ஞானேசுவரர் இவ்வைவர்களின் சரித்திரமும் தங்களால் சொல்லக்கேட்டுமுடிவுபெறுமல் குறைவுபட்டிருப்பதால் அவர்கள்பதவியடைந்தமட்டும் பூரணமாய்ச்சேர்க்க அவா கொண்டோமாகையால் திருவுளமிரங்கி பிற்பாதி சரித்திரங்களையும் கிருபையுடன் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க நாபாஜிசித்தர் சொல்லத்துடங்கினர் கேளுங்கள் சித்தர்களே இப்படிக்கிருக்க விந்தியதேசத்தரசன் ஜெயதேவ சுவாமிகளுக்கு இடைவிடாமல்தொண்டுசெய்து வருவதால்நாளுக்குநாள் குருபக்தி விசேஷித்து வைராக்கிய மேலிட்டு தன்புதல்வனுக்கு மணம் முடித்து விந்தியதேசத்தைப் பட்டாபிஷேகஞ் செய்து, ராஜர்கள்நடத்தும் நீதிகளை வெகுவாகப் போதித்து தன் தேசத்தைவிட்டு ஜெயதேவ சுவாமிகளுடன் வெளிப்பட்டு அஸ்தினபுரம் காசி பிரயாகை ஹரித்துவாரம் இமாசலம் சாளக்கிராமம் நைமிசாரணியம் கயாவைத்தேஸ்வரம் ஸ்ரீகூர்மம் பிமேஸ்வரம் ராஜமந்திரம் சிம்மாசலம் மங்களகிரி ஸ்ரீசைலம் திராக்ஷாராமம் விருபாக்ஷம் அகோபிளம்வெங்கடாசலம் காளஸ்திரி கடிகாசலம் காஞ்சீவரம் வேதகிரி அருணாசலம் ஸ்ரீமுஷ்ணம் சிதம்பரம் மாயவரம் கும்பகோணம் ஸ்ரீரங்கம் சம்புகேஸ்வரம் ரிஷியாசலம் ஆலாசியம் தோதாத்திரி மகேந்திரகிரி கன்னியாகுமரி ராமேஸ்வரம் தெர்ப்பைசயனம் அனந்தசயனம் பத்மநாபம் ஜனார்த்தனம் பாபநாசனம் குத்தாலம் கோகர்ணம் திரியம்பகம் யாதவாத்திரி முதலாகிய திவ்வியக்ஷேத்திரங்களில் பகவான் தெரிசனஞ்செய்து யாதவாத்திரியில் சிலநாள்வசித்திருக்கிறபோது அவ்வூரிலுள்ள பிராமணன் ஒருவன்ஜெயதேவசுவாமிகள் விஷயத்தில் பொறாமைகொண்டவனாகி தனக்குத்தானே யோசிக்கிறான் எப்படியெனில் இவன் உண்மையான பக்தனாகில் காட்டில் அரசன்சேவகர் இவன்கைகால்களை வெட்டி பாழுங்கிணற்றில் போட்டபோது அனாதைகளுபந்தவும் ஆதிதேவனுமாகியபகவான் அந்த துஷ்டர்களை சிட்சித்து இவனையேன் ரக்ஷிக்கவில்லை வேஷக்காரனானபடியால் உபேக்ஷைசெய்தார் அன்னியினும் இவன்பாகவதம் தசமஸ்கந்தம் செய்தானென்று சொல்லுகிறார்கள் அதுஉண்மையாகில்பரிக்ஷைசெய்கிறேனென்று ஜெயதேவசுவாமி யெதிரில்வந்து ஓஜெயதேவரே நீர்செய்தபாகவதம் தசமஸ்கந்தம் பத்திமார்க்கத்திற்கனுகூலமாகி கர்மமார்க்கத்தை நாசப்படுத்துகிறது ஆகையால் இந்தப்புத்தகக்கட்டைக் கொண்டுபோய் தடாகத்தில் போடுகிறேனென்றுசொல்லி அக்கிரந்தத்தை ஜலத்தில் போட்டுவந்து ஓஜெயதேவரே இதுபன்னிரண்டுநாள் ஜலத்தில் நனையாமல் மிதந்துகொண்டிருந்தால் நீர் எழுதியது பகவானுக்குசம்மதியென்று நம்புகிறேன் என்றுசொல்லிப் போயினான் அதைக்கேட்டு ஜெயதேவசுவாமி விசனமடைந்து,

சுலோகம்.

"ஹே கோபாலக ஹேக்ருபாஜலநிதே ஹேஸிந்துகன்யாபதே, ஹேகம்ஸாந்தகஹேகஜேந்த்ரகருணாபாரிண ஹேமாதவா, ஹேராமாநுஜ ஹேஜகத்ரயகுரே ஹேபுண்டரீகாக்ஷமாம், ஹேகோபீ ஜனநாத பாலய பரம் ஜானாமி நத்வாம் வினா."

என்றும் ஜெகன்நாதா அனாதைகள்நாதா என் பிராணநாதா துரிதமாகவாரும் நான் அழைத்துக் கொண்டிருக்க தேவரீர் வாராதிருப்பதற்குக் காரணமென்ன ஸ்ரீருக்குமணி பிராட்டியுடன் சரசசல்லாபமாடிக்கொண்டு என்னைமறந்தீரோ, அல்லது பக்தர்கள் கீர்த்தனைகளைக் கேட்டு சொக்கினீரோ, யோகி-

Koviloor Digital Library

கள் இருதயத்திலகப்பட்டு நின்றீரோ நின்னையடுத்த வர்கள் சங்கடங்களைத் தீர்க்கும்பொருட்டு எங்காகி லும் போயினீரோ ஜெகன்னாதத்தில் நின்தெரிசனை நிமித்தியம் யாராகிலும் பரமபக்தர்கள்வந்தார்களோ நின்விஷயமா யெழுதிய தாமஸ்கந்த பாகவதத்தைப் பிராமணர் ஒருவர் ஜலத்திற்போட்டார் என்றுள்ள த்திலிருந்து உன்னையே துதித்துக் கொண்டாய் ஆ சையால் நீசொன்ன விருத்தங்களை நீரேகாப்பாற்றிக் கொள்ளும் என்றுசொல்லி பகவத்தியானஞ் செய்து கொண்டிருந்தார்.

அப்போது பகவான் ஜெயதேவர் முறையைக் கேட்டு பிராமணன் குளத்தில்போட்ட பாகவத தச மஸ்கந்த புத்தகத்தை ஜலத்தில் நனையாம லிருக்கும் படி கடாக்ஷித்தார் பனிரெண்டுநாள் சென்றபிறகு அந்தப் பிராமணன் தடாகக்கரையில் நின்று பார்க்க தான் தண்ணீரில்போட்ட புஸ்தகம்நனையாமல் ஜலத் தின்பேரில் மிதந்துகொண்டிருந்தது அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு,

சுலோகம்.

"ஆத்ம வச்சர்வ பூதானி
பாத்ரவ்பானி லோஷ்டவத்
மாருருவத் பரதாராஞ்ச
யஃபஸ்பதி ஸபஸ்பதி."

என்றபடி, ஈஸ்வரசொரூபங்களாகும் சகலஜீவ ஜெந்துக்களையும் தன்னைப்போலும் அன்னியர்கள்திர வியத்தை மண்ணாங் கட்டியைப்போலும், அன்னியர் கள் பத்தினிகளைத் தாயைப்போலும் எண்ணி.

சுலோகம்.

"அமானித்வ மதம் வித்வ
மஹிப் சாக்ஷாந் திரார்ஜவம்
ஆசார்யோ பாஸனம் சௌசம்
ஸ்தைர்ய மாத்ம வினிகரஹஃ
இந்த்ரியார்த் தேஷு வைராக்கியு
மனஹங்கார யேகச
ஜன்ம மருதவு ஜாரவியாதி
துக்க தோஷானு தர்சனம்
அசக்திரன பிஷவங்கஃ
புத்ரதார க்ருகாதிஷு
நித்யஞ்ச ஸமசித்தத்வ
மிஷ்டா நிஷ்டோப பத்திஷு
மயிசா நன்ய யோகேன
பக்திரவ்ய பிசாரிணீ
விவிக்த தேசசேவித்வ
மாதிரஜன ஸம்நதி
அத்யாத்ம க்ஞான நித்யத்வம்
தத்வக்ஞானார்த்த தர்சனம்
எதத் க்ஞான மிதிப்ரோக்த
மக்ஞானம் யததோன்யதா."

என்றால் வாசிப்பு குணம் முதலானவைகளால் சீமானென்று நினைக்காமலிருப்பதும் டம்பமில்லாதி ருப்பதும், ஜீவஹிம்சை செய்யாமலிருப்பதும், மனம் வாக்குகாயம் மூன்றும் ஒன்றாயிருப்பதும், ஆசானை யடுத்திருப்பதும் சதாசீலமாகியிருப்பதும் நிஷ்டை யில் சலிக்காமலிருப்பதும், மனோநிக்கிரகத்திலிருப்ப தும், இந்திரியங்கள்விஷயத்தில் பிரியமில்லா திருப்ப தும், அகங்காரமில்லாதிருப்பதும் ஜெனனமரண வார் த்திகவியாதி துக்கங்களுடைய தோஷங்களை அறிந்து க்கொண்டிருப்பதும், பெண்டுபிள்ளை வீடுமுதலாகிய தால் உண்டாகும் சுகதுக்கங்களில் சம்பந்தப்படாம லிருப்பதும் அன்னிய சிந்தையில்லாமல் என்னிடத் தில் திடபக்திசெய்வதும், ஏகாந்தத்தலத்தில் வசிப்ப தும், ஜெனக்கூட்டத்தில் பிரியமில்லாதிருப்பதும் நிர ந்தரமும் ஆத்மக்ஞானத்துடன்கூடி யிருப்பதும் தத் வக்ஞான பொருளையறிவதும் என்னுமிவை க்ஞான மென்றும் இதற்கு அன்னியமாகுமவை அக்ஞான மென்று சொல்லப்படுமென்று பகவத்கீதையில் பக வான் சொல்லியிருப்பதுபோல, ஆத்துமகுணங்களு டன் கூடியிருக்கும் இந்த ஜெயதேவசுவாமிகள் மகி மையையறியாமல் அபசாரப்பட்டேன், மதிகெட்டே ன் கெதியற்றேன் என்று சிந்தித்துக்கொண்டேஜெய தேவர்முன்வந்து தீர்க்கதெண்டனிட்டு ஒசுவாமிமுன் னம் ஸ்ரீராமமூர்த்தியின் மகிமைகளை யறியாமல் தன் அஞ்ஞானத்தினால் பிரம்ம சொரூபத்தை சாமானிய நாரென்றும் தனக்கு நிகரானவர்க ளில்லையென்ற கெர்வத்தினால் வைதேகியை யெடுத்தேகி அசோக வனத்தில் சிறைவைத்து ஸ்ரீராமருடனெதிர்த்து யுத் தஞ்செய்து அவர்பாணயினால் மடிந்த இராவணனைப் போல தங்கள்மகிமையை அறியாமல் தாங்கள்செய்த கிரந்தத்தை ஜலத்தில் போட்டு அக்கிரமஞ் செய்த பாவியாகிய அடியேன் மீதுகோபங்கொள்ளாமல் மன் னித்து ரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க ஜெய தேவர் அப்பிராமணனை குளிரகடாக்ஷித்து ஜலத்தில் விட்டெறிந்த புத்தகத்தை எடுத்துவரச் செய்து மிகு ந்தகளிகொண்டு அக்கிரந்தத்தைஅழிவில்லாமல் ரக்ஷி த்தசின்மாத்திர ரூபியாகிய அசிந்தாமகிமையுக்தராகி

Koviloor Digital Library

சர்வவியாபியாகி அனேக ரூபமாயியேகரூபமாகியிருக்கும் பரமாத்துமாவுக்கு அனந்த வந்தனங்கள் அப்பிரமேயா சசலசொருபமாகி தேவர்கள் எக்கியத்தில் அவிர்ப்பாகமாகி யிருக்கும் நினக்கு வந்தனம் மறைப்பிரபூ விக்ஞானத்திற்கு சீமைபூமியாகிய பிரகிருதிக்காயிலும் பரம்பொருளாகிய உமக்கு வந்தனம் பஞ்சபூதாத்துமாவாகி ஏகாதசேந்திர ஆத்துமாவாகி அவ்யகாத்துமாவாகி ஆத்துமாவாகிய பரமாத்துமாவாகி யிருப்பதினால் நீஒருவரே ஐந்துவிதங்களாகி யிருக்கிறீர் சாரங்களாகும் சகலபூதங்களுக்கும் அசரங்களாகும் ஆத்துமாவுக்கும் நேமகனாகி பிரம்மா விஷ்ணு சிவநாமங்களென்னும் கற்பனையினால் சொல்லப்பட்டவனாகியிருக்கும் பகவானே உனக்கு வந்தனம் அனந்த குணங்களுடன் கூடிய வாத்துமாவாகி ஆனந்தயுக்தராகி பரமேசனே அனந்தநாமங்களுடன் கூடியிருக்கும் நினக்கு தெண்டனிடுகிறேன் ஜீவாத்துமாக்களைப் போல கர்மவுபாதியாகும் தேவ மனிதாதி நாமரூப கற்பனையின்றி நித்தியமாகியுத்தமமாகி விகாரமற்றதாகும் பரப்பிரம்மநீரே நாமரூப கற்பனையில்லாமல் ஒருபதார்த்தத்தை யறிவது அருமையாகையால் நீர்கிருஷ்ண அச்சுத அனந்தவிஷ்ணுவாதி நாமங்களினால் துதிக்கப்பட்டிருக்கிறீர் அயனாகி யனந்தனாகிய ஓதேவா இந்ததேவாதி கற்பனைகளுடன்கூடிய சகலபிரபஞ்சமும் நீரேவிகார ரகிதமாகும் ஆத்துமாவும்நீரே இப்படிச்சகலமும் நின்சொரூபமாகி யிருப்பதினால் நினக்கு அதுவும் எதுமில்லை ஆகையால் நீரே பிரமமாகி தாதாவாகி இந்திரனாகி வாயுவாகி அக்கினியாகி வருணனாகி குபேரனாகி இயமனாகி வெவ்வேறு காரியங்களுடன் கூடிய சொரூப தேகங்களினால் லோகத்தை ரக்ஷித்துக்கொண் டிருக்கிறீர் மேலும் சூரிய கிரணரூபமாகி பிரபஞ்சத்தை சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறீர். ஆகையால் இந்தப் பிரபஞ்சம் யாவும் நினக்கு சேஷபூதமாகி யிருக்கின்றது சத்என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட விகார சூனியமா சூனியமாகும் பரசொரூபமாகி சுத்தக்ஞான சொரூபமாகி சராசரங்களுக்கு அதிஷ்டாதாவாகி யிருக்கும் நினக்கனந்த வந்தனங்கள் பிரணவ பிரதிபாதிதமாகும் ஸ்ரீ வாசுதேவனுக்கு தெண்டனிடுகிறேன் சங்கர்ஷணனுக்கு வந்தனம் ஓ புண்டரீகாக்ஷனே! சங்குசக்ராதி திவ்வியாயுததரனே நினக்கு தெண்டன் சமர்ப்பிக்கிறேன் பண்டுகரண அவயவங்களின்றி மூலப்பிரகிருதியில் கிடந்திருந்த வெனக்கு கருணையுடையமனத்தனாகி கரண அவயவங்களை யளித்தாய் அப்படிப்பட்ட கிருபையுடைய நீர் அடியேனை ரக்ஷிக்க வேண்டும் ஓஜனார்த்தனனே நின் கடாக்ஷத்தினால் ரக்ஷிக்கப்பட்ட நான் நினக்கு சரீரமாகி யிருக்கிறேன் யான் மாத்திரமல்ல பிரிதிவி அப்புதேயு வாயு ஆகாயங்களும் விகுதியாகிய அங்காரதன்மாத்திரைகளும் பிரகிருதியும் ஜீவனும் நின்சரீரமாகி யிருக்கிறது என்றிந்தப்படி ஜெயதேவசுவாமிகள் துதித்துக் கொண்டாடி ஆனந்தபரவசமடைந்து சிலநாளங்கு வசித்திருந்து பின்பு அதைவிட்டுப் பிரயாணப்பட்டு பழையபடி கௌஞ்ச நாடுசேர்ந்து அரசனால் பூசிக்கப்பட்டிருந்தார்.

இப்படியிருக்க ஜெயதேவ சுவாமிகள் விஷயத்தில் சிலர் பொறாமை கொண்டவர்களாகி பரிக்ஷிக்க வேணுமென்ற யெண்ணங்கொண்டு ஜெயதேவசுவாமிகளிடத்திற்கு வந்தார்கள் சர்வக்ஞராகிய ஜெயதேவ சுவாமிகள் இவர்க ளெண்ணத்தை அறிந்து அவர்களுக்கு வந்தனஞ்செய்து ஓதொழுகுலத் தவர்களே! என் பிராணநாதனும் ருக்குமணிமணாளன்.

சுலோகம்.

"தைவாதீனம் ஜகத்ஸர்வம்
மந்த்ராதீனந்து தைவதம்
தன்மந்த்ரம் ப்ராஹ்மணாதீனம்
ப்ராஹ்மணா மமதேவதா."

என்றபடி உலகம்யாவத்தும்தெய்வத்திற்காதீனமாகியிருக்கும் அத்தெய்வம் மந்திரத்திற்காதீனமாகி யிருக்கும் அம்மந்திரம் தன்னைத் தியானிக்கும் பிரமநிஷ்டனுக்கு ஆதீனமாகியிருக்கும் ஆகையால் அப்படிப்பட்ட பிரம்மநிஷ்டன் எனக்கு தெய்வமாகியிருப்பானென்று பகவான் சொல்லியிருக்கிறார் அதினால் பிரம்மநிஷ்டர்களாகும் நீங்கள் எனக்கு தேவதைகளாகி யிருக்கிறீர்கள் இப்படிப்பட்ட நீங்கள் என்மீது கருணைசெய்து பதார்த்தமாக என்னை ஒருபதார்த்தமாகப் பாவித்து தெரிசனந் தந்தீர்கள் ஆகையால் நான் சர்வவிதங்களில் உங்கள் அனுக்கிரகத்தினால் கிருதார்த்தனாகினேனென்று விண்ணப்பஞ்செய்தார் இம்மொழிகளைக் கேட்ட பிராமணர்கள் அவர்வினயவார்த்தைகளுக்கு மிகுந்த களிப்படைந்து அவரையாலிங்கனஞ் செய்துக் கொண்டு ஓ மகாத்துமாவே! நினது தெரிசனத்தைக் கோரி நாங்கள் இவிடம் வந்தோம் எங்களுக்குண்டாகிய சந்தேகத்தைநிவர்த்திசெய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம் அதென்னெனில் மிகுந்த கொடூரமாகிய இந்த கலிகாலத்தில் நீரனேக

Koviloor Digital Library

வற்புதங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறீர் நாங்கள் கினது விபவத்தைக்கேட்டு ஆச்சரியப்பட்டு நீர்யாரோவென்று சந்தேகிக்கிறோம் மேலும் சாமானிய மனிதனுக்கு இத்தனையோக்கியதை யுண்டாகியிருக்காதென்றும் என்னுகிறோம் ஆகையால் நீர் எங்கள் சந்தேகத்தைப் போக்க வேணுமென்று சொல்லக்கேட்டு ஜெயதேவசுவாமிகள் துக்காராம் சுவாமிகளைப்போல் ஒருகத்தியை எடுத்து தன் துடையை யறுத்துக் காட்டினார் அதில் ரத்தமாங்கிஷங்க ளில்லாமல் மிகுந்த வெண்மையாகும் பஞ்சுக்கு நிகராகிய பதார்த்தம் தோலுக்குள்ளாகி யிருப்பதுபோல அவர்களுக்குக் காணப்பட்டது.

அப்போதந்த பிராமணர்கள் ஆச்சரியப் பட்டு பஞ்சபூதமாகும் மனிதசரீரம்ரத்தமாங்கிஷங்களுடன் கூடி அசங்கிதமாகியிருக்கும் உமதுசரீரமோபஞ்சவுபநிஷத் மயமென்று தோன்றுகிறது ஆகையால் ரத்தம் இறைச்சியில்லாமல் உமதுசரீரத் துள்ளிருக்கும் பதார்த்தம் மிகுந்தவெண்மையாகி அதிபரிசுத்தமாகி மிகவும் மனோகரமாகியிருக்கிறது இப்படிப்பட்ட மகிமைகள் நிறைந்த தங்களை எங்களக்ஞானத்தினால் சாமான்ய மனிதனாக எண்ணினோம் என்றுசொல்லி ஜெயதேவ சுவாமிகளுக்கு நிர்க்க தெண்டனிட்டார்கள் ஜெயதேவசுவாமிகள் அந்தப் பிராமணர்களுக்கு வந்தனஞ்செய்து என்பிராண நாதனாகும் ஸ்ரீருக்குமணி மணாளனுக்கு வந்தனஞ்செய்யப் பட்டவர்களாகிய நீங்கள் சாமானியனாகிய எனக்கு வந்தனஞ்செய்வது ஞாயமல்ல எனவிடத்தில் காமக்குரோதலோப மோக மதமாச்சரியங்கள் நசித்து நான் பரமவைஷ்ணவலக்ஷணமாகும்வைராக்கியமுதல்ஆத்துமகுணங்களுடன் கூடியிருக்கும்படி அருள்புரியுங்க ளென்று பிரார்த்திக்க அப்பிராமணர்க ளிவரைப்பார்த்து ஒவிஷ்ணுபக்தசிரேஷ்டரே! தங்களிடத்தில் நாங்கள் உபதேசம் பெறவேண்டுமென்ற அவா கொண்டோம் தயைசெய்து கிருபை கூறவேணுமென்று பிரார்த்திக்க ஜெயதேவர் அருட்கண்பார்த்து அப்பிராமணர்களை நோக்கி கேளுங்கள் சாதுக்களே இவ்வுலகத்தில் சுகமுண்டா ஒவ்வொருபதார்த்தமும் துக்கத்தையுண்டாகச் செய்துக் கொண்டிருக்கிறது அந்தந்தபதார்த்தங்களை புசிக்குமவர்களாகும் சேதனர்கள் கர்மத்துக்குத் தக்கபடி மதுரமாகவும் கசப்பாகவும் தோன்றுகிறதேயல்லது தத்துவத்தை விசாரணை செய்தால் மதுரமும் கசப்பும் அவ்வஸ்துக்க ளிடத்திலில்லை எப்படியென்றால் ஒருவனுக்கு மதுரமாகியிருக்கும் பதார்த்தம் அதேகாலத்தில் மற்றொருவனுக்கு ருசிக்காமலிருக்கிறது ஒருவனுக்கே ஒருகாலத்தில்ருசியாகயிருக்கும் பதார்த்தம் மற்றொரு காலத்தில் ருசிக்காமலிருக்கிறது பசியுடையவனுக்குஇனிப்பாகியிருக்கும்அன்னம் அஜீர்ணத்துடன் கூடியிருப்பவனுக்கு இனிப்பில்லாமலிருக்கிறது ஒருவனுக்குக் குளிர்காலத்திற்கு சுகமாகியிருக்கும் போர்வை அவனுக்கே உஷ்ணகாலத்தில் சுகமில்லாதிருக்கும் இதுயிப்படியிருக்கட்டும் ஸ்ரீபுருடர்களுக்கு பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சம்பந்தப் படவேண்டுமென்பதே சுகமாகத்தோன்றும் ஸ்ரீபுருடர்களால் இச்சிக்கப்பட்ட சுந்தர்அங்கர்களாகும் புருஷர்களாகும் ஸ்திரீகளும் வார்த்திகதிசையையடைந்து தங்கள் சரீரம் ரெணதுர்க்கந்தங்களுடன் கூடிய காலத்தில் அவர்கள் அங்கஸ்பரிசம் கேவலம் அசுசியாகத் தோன்றும் மனிதர்கள் சரீரங்கள் அன்னைவயற்றி லுண்டாவதும் பிறப்பதும் வளர்வதும்ஸ்தூலிப்பதும் இளைப்பதும் நசிப்பதுமாகிய ஷட்பாவவிகாரங்களுடன் கூடினதாகையால் எப்போதும் ஒருவிதமாக யிருக்கமாட்டாது ஒருமனிதனுக் காகிலும ஒருஸ்திரீக்காகிலும் அழகு எத்தனை நாள்வரையில் ஸ்திரமாகயிருக்கும் உலகத்தில் காமுகர்களால் கிரகிக்கப்பட்ட சுந்தரவதிகளாகும்ஸ்திரீகள் வார்த்திகத்தினாலும் சக்தியற்றதினாலும் தங்கள் சுந்தரரூபம் மாறியபோது அக்காமுகர்களால் நீக்கப்பட்டு அன்னவஸ்திரங்கள் அரிதாகி மிகுந்த கஷ்டப்படுவதைக் கண்டுங் கேட்டுமறியீர்களோ ஒசாதுக்களே நான்சாமானியனாகிலும் என் இருதயவாசனாகும் பகவான் கடாக்ஷத்தினால் என்னறிவுக்கெட்டிய அர்த்தத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்:

சுலோகம்.

"அமேத்திய பூர்ணம க்ரிமிஜாலஸங்குலம்
ஸ்வபாவதுர்க்கந்த மசௌசமத்ருவம்
களேபரம்முக்ர புரீஷபாஜனம்
ரமந்திமூடாநாமந்தி பண்டிதா."

என்றால் எந்தசரீரம் நரகலில் நிறைப்பட்டுபுழுக்கள் கூட்டங்களுடன் கூடினதாகி துர்க்கந்தமே சுபாவமாக உடையதுமாகி சுசியில்லாததாகி அழிந்துப் போவதாகியிருக்கும் மலமூத்திரங்களுக்கு வீடாகும் இந்தசரீரத்தை மூடர்கள் மேன்மையாகக் கொண்டாடுவார்கள் யண்டிதர்கள்கஷ்டத்திற்குஹேதுவென்று துக்கப்படுவார்கள் மிகுந்த இனிப்பாகி ஆயுள் சத்துபல ஆரோக்கியங்களை யுண்டாகச்செய்யுவதாகி சுகப்

Koviloor Digital Library

பிரிய வஸ்துக்களாகி ரஸபுத்தங்களாகி நெய்யுடன் கூடினதாகி சதாகாலமும் விருத்தியாகும் வெகுபதார்த்தங்கள் மனிதர்களால் புசிக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தத்தினால் ஒருஜாமத்திற்குள்ளாக ஜீரணமாகி தெரிசனபரிசசா உத்தாரணத்திற்கும் அவசியமாகும் மலமாகின்றது நரர்கள் தங்கள் சரீரங்களிடத்தில் துர்நாற்றத்தை மறைப்பதற்காய் மிகவும் சிலாக்கியங்களாகும் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளை தரித்துக்கொள்ள அந்தபதார்த்தங்கள் கொஞ்சநாழிகைக்கு அவர்கள் அநுசிதசுவாசத்தினால் இதாளுக்கு துர்க்கந்தமாகி அசுசியாகின்றது ஆகையால் புத்திமான்கள்.

சுலோகம்.

"நாரீஸ்தன ப்ரநாபிதேசம்
த்ருஷ்டவா மாசுர மோதா வேதம்
எதன்மாம் சவஸாதி விகாரம்
மனவிவிசிந்தய வாரம்வாரம்."

என்றால், பார்த்தமாத்திரத்தில் புருஷர்களுக்கு காமவிகாரத்தை யுண்டாகச்செய்யும் ஸ்திரீகளுடைய ஸ்தனபார நாபி பிரதேசங்கள் இறைச்சி கொழுப்பு முதலாகும் அசுசிபதார்த்தங்கள் சமுதாயமாகி மிகவும் விகாரமாகியதென்று பலதடவைசிந்தித்து கொண்டிருக்கவேண்டும்ஒருவனுக்கு இப்படிப்பட்டஎண்ணம் உண்மையாக உண்டாகுமாகில் இந்த அசுசியான பதார்த்தங்கள் இனிப்பென்று தோன்றாது.

சுலோகம்.

"சரீரம் ப்ரவத் பஸ்யே
தன்னந்து வ்ரண லேபனம்
வ்ரணஸேஜனவத்தாஹம்
வஸ்தாந் தவ்ரண பட்டவத்."

என்றால், ஒசாதுக்களே சரீரத்தைப் புண்ணாக நினைக்கவேண்டாம் புருடர்கள்சரீரங்களி லொருபுண்ணுண்டாகில் அதுமிகவும் அசங்கிதமென்றும் அதற்குத்தக்க உபாயத்தினால் துரிதமாகநிவர்த்தியாகுமென்று தோன்றும்படி ஆத்துமாவுக் குண்டாகிய இரணரூபமாகும் சரீரங்களினிடத்தில்புத்திவான்கள்அசிங்கிதப்பட்டும் அதில் அழிவுகாலத்தை எதிர்பார்த்துகொண்டிருக்கவேண்டும் இப்படிப்பட்டஅசுசியாகிய சரீரங்களை நவரத்தின பரணங்களினாலும், திவ்விய மாகும் சந்தனாதிகளினாலும் அலங்கரித்துஅதின்மூலமாக ஆனந்தத்தை யடையுமவர்கள் புண்ணை யலங்கரித்து ஆனந்திப்பவர்கள் பசியைத் தீர்ப்பதற்காக அசிங்கப்படும் பிரசாதத்தை புண்ணுக் கரைத்துக் கட்டும் அன்னமாகநினைக்கவேண்டும் இப்படிப்பட்ட எண்ணம் இனிப்பாக யிருக்கவேண்டுமென்று கோறிக்கை யுடையவர்கள் புண்ணுக்கு அரைத்துக் கட்டும் அன்னம் பதார்த்தங்களுடன் கூடி ருசியாக யிருக்க வேணுமென்று கோருகிறவருக்குநிகராவார்கள் தாக நிவர்த்திக்காக புசிக்கப்பட்டஜலத்தைப் புண்ணையலம்பும் ஜலமென்று நினைக்கவேண்டும் இந்தஜலம் வாசனை கலந்ததாகி யிருக்கவேணுமென்று கோருகிறவர்கள் புண்ணை யலம்புவதற்கு சுகந்த வாசனையாகும் ஜலத்தை அபேக்ஷிப்பவர்களாவார்கள் மனதிற்காய் சரீரத்தின்மேல் சுற்றிக்கொள்ளும் வஸ்திரத்தை புண்ணின்மேல் சுற்றும் ஆடையென்று எண்ணவேண்டும் மனிதர்கள் ஆடையற்றவர்களாகி தங்கள்ரூபங்களைக் கண்ணாடியினிடத்தில்பார்க்கத் தங்களுக்குள்ளேஅசிங்கிதமாயிருக்கும் ஆகையால் விகாரமாகிய புண்ணை அன்னியர் கண்களுக்கு அகப்படாமல் துணியினால் சுற்றிமறைப்பது போல, மனிதசரீரத்தின் விகாரம் அன்னியர் கண்களுக்கு புலப்படாமல் வஸ்திரத்தினால் மறைக்கவேண்டி யிருக்கிறது இப்படிப் பட்ட வஸ்திரம் மனதுக்குப் பிரியமாகி நூதனமாகியிருக்க வேணுமென்று நினைப்பது புண்ணுக்குச் சுற்றும் துணி திவ்விய பீதாம்பரமாகி யிருக்கவேண்டுமென்று கோருவதற்கு நிகராகும் ஒசாதுக்களே நன்றாகி விட்டாலும் பாருங்கள் தன்னைத்தான் நன்றாகயறியாதவர்களும் அறிந்தாலும் பகவான்விஷயத்தில் சரணாகதி யடைந்தவர்களால் அவர்சரணாரவிந்தத்தில் ஆத்துமாவைச் சமர்ப்பித்தவர்களாகி பயமற்றவர்களாகி பரதந்திரர்களாகி,

சுலோகம்.

"க்ருதா க்ருத்யாः ப்ரதீக்ஷந்தே
ம்ருத்யும் ப்ரிய் மிவாதிதம்."

என்பதுபோல, மிர்த்தியு தேவதையைப் பிரியமாகிய அதிதியைப்போல யெதிர் பார்த்திருப்பது இந்த ஆத்துமாவுக்கு பிராப்தமாகி யிருக்கையில் அப்படிச் செய்யாமல்.

சுலோகம்.

"நலினீதள கதஜலம் மதிதானம்
தத்ரீஜ் ஜீவித மதிசய சபலம்
வத்திவ்யா த்யபிமான க்ரஸ்தம்
லோகம் சோக ஹதங் சஸ்மஸ்தம்."

என்பதுபோல, தாமரை யிலையையடைந்த தண்ணீரைப்போல ஜீவிப்பது மிகவுஞ் சஞ்சலமென்றும் உலகங்களில் சகலபதார்த்தங்கள் சோகஹேதுவாகி யிருக்கிறதென்றும் கிஞ்சித்தாகிலும் சிந்திக்காமல்நேர்ச்குபிறியை பொருந்த சரிரத்தை நிலையென்று நம்பி.

சுலோகம்.

"ஈஸ்வரோ ஹ்ரஹம் யோகி
ரோன்யோஸ்தி சத்ருசோமய:"

என்பதுபோல, நானே பிரபுவென்றும், போகியென்றும் எனக்கு நிகரானவர்க ளிலலை யென்றும் நினைத்து தாமிமான முற்றவர்களாகி சாஸ்திரங்களை தூஷித்து நாஸ்திகர்களாகி சதாகாலமும் ஆத்துமத்துதி அன்னியர் நிந்தை அன்னியாவமானம் அன்னியர்பீடை விஷய அநுபவத்தினால் வீணாள் போக்கி அன்னைதந்தை அதிதிகுருமுகவானோரை ஈஸ்வரசொருபமென்றெண்ணுமல அவர்களை அகௌரவப் படுத்தி நாஸ்திகர்களாகிய மஹரிஷ் மனியோசை சிரவண குதூகர்களாகியிருக்கும் மனிதர்களிடத்திற்சேர்ந்துயிருப்பது சரியல்லவென்று சொல்லிய ஜெயதேவசுவாமிகளை நோக்கி பிராமணர்கள் ஒசுவாமிமகாத்துமாவே அடியேங்களை பரிக்ஷிக்காமல் துரிதமாக தங்களுபதேசத்தினால் கிருதார்த்தர்களாகும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அப்போது ஜெயதேவசுவாமிகள்.

சுலோகம்.

"ஸம்வச்சரம் ததர்த்ததத்வா.
மாஸத்ரய மாதாபிவா
பரிக்ஷய விவிதோ பாயை:
க்ருப்யா விஸ்ப்ருஹோ வதேத்"

என்றால் ஒருவருஷமாகிலும் ஆறுமாதமாகிலும் மூன்று மாதமாகிலும் வெகுவித உபாயங்களினால் சிஷ்யனை நன்றாய்ப்பரிக்ஷித்து கபடற்றவனாகி கிருபையுடன் ஆச்சாரியன் சிஷியனுக்கு மாத்திரம் உபதேசஞ்செய்ய வேண்டுமென்னும் வாக்கியத்தை நினைத்து இவர்களை பரிக்ஷைசெய்யாமல் நான் எப்படியுபதேசிக்கக்கூடும் கீர்த்திலாபப் பூசைகளை யடைய்க்கோரி சிஷியனுக் குபதேசித்தால் ஆசாரியனுக்குஅனர்த்தம் சம்பவிக்கும் சிஷ்யாபாவம் குரோரபி என்பதுபோல சிஷியன் பாவம் குருவைச் சேரும் ஆகையால் குருவானவர் தன்னையடுத்தசிஷியனை வெகுவிதங்களினால் பரிக்ஷிதது.

சுலோகம்.

"ஸத்புத்திஸ்ஸாது ஸேவிசமுபித சரிதஸ்தத்வ போதாபிலாஷீ, சுஷ்ருஷூஸ்த்யக்தமாயை: ப்ரணிபவன்பர: ப்ரஸ்னகாலப்ரதீக்ஷ சாந்தோதாந் தேதயு யுஸ்ஸான முபகதஸ் ஸாஸ்த்ர விஸ்வாஸசாலி, பிஷ்யப்ராப்த: பரீக்ஷாங் க்ருதவிதபிமதம் தத்ததஸ்வஷியி:

என்பதுபோல, நற்புத்தியாகி சாது சேவையுடையவனாகி நன்னடக்கை யுடையவனாகி தத்துவபோதையி லபிலாஷை யுடையவனாகி பணிவிடைக்காரனாகி மான அவமான மென்பதற்றவனாகி துதிப்பவனாகி, ப்ரஸ்னகாலத்தை எதிர்பார்ப்பவனாகிசாந்தனாகி கல்விகற்றவனாகி, பொறாமை யில்லாதவனாகி சாந்தெகதி யடைந்தவனாகி சாஸ்திரவிசுவாச முடையவனாகியிருக்குமவனை சிஷ்யனாய் அங்கீகரிக்கத்தகும் சிஷியன் தனதை அபகரிப்பவர்களாகும் தேசிகர்களும்குணயினர்களும் சிஷியர்களும் அனர்த்தப் படுவார்க ளென்பதற்கு சந்தேகமில்லையென்று தனக்குள் யோசித்து அந்தசாதுக்களை மூன்றுமாதம் பரிக்ஷைசெய்து பக்குவகாலமறிந்து இப்பேர்க் கொத்த அதிதீவிர வைராக்கியமுடையவர்களுக்கு அகத்தியஞ் சொல்லவேண்டுமென்று யெண்ணி ஒசாதுக்களே நீங்கள் மிகவும் புண்ணியவான்க ளாதலால் உங்களுக்கிந்த மகாவாக்கியஞ் சொல்லத் தொடங்கினேன் பனிரெண்டுமாதம் பரிசோதித்தபின்பே பெரியோர்கள் இம்மர்மம் வெளிப்படுத்துவார்கள் பாறையின்மேல் விறைபோட்டாற்போல் அபக்குவருக்குச்சொன்னால் அபலமாய்ப் போவதன்றி உரைப்பவர்க் காயாசமும் கேட்பவர்க் கதோகதியும் உண்டாகும் நீங்களிதற்கு கர்த்தவர்க ளென்று சம்மதித்தேன் நீங்கள் செய்தபாக்கியம் ஏகமனதுடன் கேழ்ப்பீர்களாக மறப்பின்றி மனதிற் றரிப்பீர்களாக அதேனெனில் க்ஞானமே பிரமமென்னும் ஓர்மொழிபி னர்த்தமே இருக்குவேதம் முறையிடுகின்றது வேதபுருஷனால் நான்குவேதங்களால் விரித்துரைத்தும் அதாக் கர்த்தமாகாமல் தியக்கமுற்றான் தேவர்களுக்குக்காரணகுருவான பிரகஸ்பதி யென்பவரும் மற்றரிஷிகளும் ஞானகாண்டத்தில் தங்களாலானமட்டும் மகாவாக்கியத்தை விரித்துரைத்து முடிவுபெறாமல் தியக்கமுற்றார்கள். அப்படிப்பட்ட வாக்கியலக்ஷணத்தை என்னாலுரைக்கப் போமோ ஆகிலும் என் சற்குருநாத ரருளோடுரைக்க செவியால் கேட்டபடி விரித்துரைக்காமல்,சங்கிரகமாகச் சொல்லுகின்றேன் அதாவது ஞானமென்

Koviloor Digital Library

பது ஆத்துமா பிரமமென்பது பரமாத்துமா ஞான சொருபமே பிரமமென்றுரைக்கப்படும் இது தானந் தார்த்தமென்றுரைக்க.

பிராமணர்கள் ஞானமென்பதெது பிரமமென்பதெது ஆத்துமாவே பரமாத்துமாவான தெவ்வண்ணம் இதுகளை விரிதருரைக்கவேண்டும் சுவாமியென்றுகேட்க ஜெயதேவசுவாமிகள் ஒசாதுராஜ்ஜனர்களே ஞானமென்பது விஷயங்களையறியும் இந்திரியங்களை இந்திரியங்களறியும் அந்தக்கரணங்களை அந்தக் கரணங்களறியும்பிகாபாசனேகளிபாவலெ மாடுங்கும் அவித்தையை சாக்ஷியாயிருந்தறிவதெதுவோ அதையேஞானமென்பார்கள் இப்படியே சுபஸ்தவஸ்துக்களிறு மிருந்தறியும் சர்வசாக்ஷியே பிரம்மமென்றும் வேதம் முறையிடுகின்றது அன்றியும் கூடஸ்தன பிரத்தியேகாத்துமா திருக்குபோதம் சைதன்னியம் சத்துசித்து ஆனந்தம் நித்தியநிர்மலம் நிறகுணம் நிர்விகாரம் நிரஞ்சனம் என்கிற பலநாமங்களுங்காதாரமாகிய சாக்ஷியாகிய ஞானமே ஆத்துமாவென்னும் பரப்பிரம்மம் பரிபூரணம் பராபர பரமேசுவரம் பரஞ்சோதி பராத்பரம் நிருபம நிர்ஞமம் நிஷ்களங்கம் அசலம் அகண்டாகண்டம் அக்ஷபம் ஆதிஅநாதி யென்கிற பலநாமங்களுக் காதாரமாகி சர்வசாக்ஷியாகிய பிரம்மமேபரமாத்துமாவென்றும் ஈசுவரவாக்கிய மிருக்கின்றதென்று சொல்ல சாதுக்கள் ஒசுவாமி ஓர்தேகத்திலிருக்கும் சாக்ஷியாகிய ஆத்துமா சர்வசாக்ஷியாகிய பரமாத்துமா வெபபடியாகுமென்று சங்கைசெய்ய ஜெயதேவ சுவாமிகள் திரிநிவட்டியென்று நாமம் வேறுபட்டாலும் சுபாவமொன்றுகவேயிருக்கிறது எப்படியென்றுல் பெரியதாயிருப்பதால் ஏறியெனறும் சிறியதாயிருப்பதால் மடுவென்றும் பெரியதாயிருப்பதால ஓடையென்றும் பலமனிதர்களுக்குக்கூட்டமென்றும் ஒருமானிடனுக்கு மனிதனென்றும் பலவிருக்ஷங்களுக்குத் தோப்பென்றும் ஓர்தருவுக்குவிருக்ஷமென்றும் நாமம் விகாரப்பட்டால் ஜலமனித விருக்ஷ பாவம் வேறுபடாமல் யேகமுா யிருப்பதுபோல அனேக சரீரங்களைக் குறித்து சர்வசாக்ஷிபரமாத்துமாவென்றும் ஓர்சரீரத்தைக் குறித்து சாக்ஷி ஆத்துமா வென்றும் உபாதிபேதத்தால் நாமம் வேறுபட்டதேயன்றி ஆத்துமா பரமாத்துமாக்களில் சற்றும் பேதமேயில்லை பரமாத்துமாவென்கிற வேதப்பிரமாணமு மிருப்பதன்றி ஆத்துமா பரமாத்துமாவைபேதப்படுத்தினவன் ரௌரவாதிநரகத்தை யடைவானென்று வியாசர் விஷ்ணு புராணத்திலும் இவ்வியாசர் தந்தைக்குப் பாட்டனுன வசிஷ்டர் ஞானவாசிஷ்டத்திலும் வால்மீகர் அத்தியாத்மீக இராமாயணத்திலும் மகாவிஷ்ணு பகவத்கீதை உத்திரகீதையிலும் ஸ்ரீராமர் ராமகீதையிலும் உருத்திரன் சிவகீதையிலும பிர்மாபிரம்மகீதையிலும் திருவாய் மலர்திருப்பதன்றி சுகபிரம்மரிஷிகளுக்கு நாரதரும் சனகசனந்தனதிகளுக்கு சாம்பவனும் பாத்வாசருக்கு வால்மீகரும் ஸ்ரீராமருக்கு வசிஷ்டரும் சுக்கிராசாரியருக்கு பிருகுரிஷியும் பிரகலாதனன் அர்ச்சுனன் உத்தவர் முதலானேருக்குபகவானும் சுவேதகேதுவுக்கு உத்தாலகரும் இந்திரனுக்கு பிரகஸ்பதியும் விதுரனுக்கு மைத்திரேயரும்தருமருக்கு தாருவாசரும் மாபலிக்கு சுக்கிராசாரியரும் அநுமானுக்கு சீதையும் அகஸ்தியருக்கு சுப்பிரமணியரும் புஜண்டருக்கு அமபிகையும் சதானந்தருக்கு கௌதமரும் பகிரதனுக்கு திரிதலரும் தேவவுதிக்கு கபிலரும் பொதித்திருக்கின்றுர்கள்.

ஆதலால் மறந்தும் ஆத்துமபரமாத்து மாக்களில் பின்னபாவஞ் சொல்லக்கூடாது யென்றுசொல்ல சாதுக்கள் ஓஜயனே ஆத்துமா பரமாத்துமாலுல் முத்தியடைவது யெது ஆத்துமாவுக்கு கைவல்லியங் கொடுப்பவர் யார் மீளாக்கெதிக்கு முயர்ச்சி செய்யுங் காரணமேன், சாதுக்கள் சேவையேன் புண்ணியத்தை யீட்டுவந்தேன் சாஸ்திர விசாரணை யேன் குருவிசுவாசமேன் யீஸ்பரபக்தியேன் எனகிறபலசங்கைகளுக்கு இடமாகின்றதேதவிர அறிவிலாச் சிறுவருக்கு அன்புடனநுக்கிரகஞ் செய்யுமப்பா வென்றுதிக்க ஜெயதேவசுவாமிகள் ஒவிவேக விசாலர்களே முக்தியடைவது ஜீவனென்றுரைக்கத்தகும் அச்சீவனை நன்றுயறிவூன்றி விசாரிக்கில் சுத்த சூன்னியமாயிருக்கும் நிழலோடு போராடுவதுபோல் மதபேதர்கள் புரக்கரண அக்கரணதிகளின்கூட்ட விசேஷத்தால் நானென்றபிமானம் பூண்டிருக்கும ஜீவத்துவத்தை சிறுபிள்ளைகள் விளையாடலில் இவனிராஜன் இவன்மந்திரியென்கிற பலகோட்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு விவரிப்பதுபோல இல்லாதஜீவத்தை யேற்படுத்தி அதன்மேல் பாரத்தைச் சுமததி அனித்தியமான மாயாசம்சாரத்தில் மனப்பிரமைகொண்டு இல்லரத்தையுண்டாக்கும் மாயாசம்பத்துக்குள்ளாகி ஜெனனமரணசாகரத்துக்கு ளமிழ்ந்திருக்கிறுர்கள் தான் சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்துமாவாகி யிருக்க மாயாந்தகாரத்தால் மறந்து தானல்வாத் தேவாதி

Koviloor Digital Library

களைத் தானென்று பிருமாப்புற்று நாடுநகர் பெண்டு பிள்ளை பண்டம் பதார்த்தங்களைச் சதமென்றும்சுகர் தருமிகமென்றும்நம்பி பிரத்தியக்ஷ துக்கமான யிவைகளை நித்தியானந்தமாக பாவித்து "தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி யென்செய்வா" னென்கிற பழமொழிக்கிணங்க க்ஷணபங்கமான காயத்தைக் காப்பாற்றிக் காந்தையரைப்போற்றித் தானின்னவஸ்துவென்றறியாமல் தேகேந்திரிய பாவமடைவதே பந்தம் இவர்கட்குத் துக்கமயமான சரீரமே கர்மகாலங் கடந்தும் சொந்தம் தானல்லவா வாழ்க்கையைத் தானெனப் பிரமிப்பதே பவதொந்தம் ஸ்தூலசூட்சம காரணமென்னும் திரிசரீரத்தை யாராய்ந் தறியாததே மதிமந்திரம் என்தேகம் என்கண் என்செவிஎன்வாய் என்மனம் என்பிராணன் என்ஜீவனென் றுரைக்கும் நீவேறுபிருந்து சாக்கிராவஸ்தையில் மனோவியாபாரத்தையும சுழுப்தியவஸ்தையில் சுத்தசூன்னியமா யிருக்கும்ஜீவத்தன்மையும் சாக்ஷியா யறிந்து கொண்டிருக்கும் உங்களைக் கரதல நெல்லிக்கனிபோல காட்டும் காரணகுருவே மோக்ஷமளிக்கும் ஜெகதீசவரனுகும் வைகுந்தமா தியடைந்த ஜயவிஜயர்களுக்கு ஜென்மம் வந்ததுபோல் தனக்குப் பிரத்தியக்ஷாகரமான தேகமுண்டாகாமல் ஜெலத்தில் சுழுப்திநிலையை யடைய முயர்ச்சிப்பதே பரமாத்துமாவி லைக்கியப்படுங் காரணமாகும் துர்க்கந்தமான விஷயானந்த போதத்தில் மலத்தையாசித்த சிறுவண்டைப் போலவும் பன்றியைப்போலவும் அமிழ்ந்துயிடையூறுசெய்யும் எமனுக்கிரையாகும் சரீரவாஞ்சையையும் துக்கத்தையும்சுகமாகக்காட்டும் இந்திரிபோகத்தை மென்மேலும் வாஞ்சிக்கச்செய்யும் துர்ச்சங்கம்நீங்கி இந்திரிய நிக்கிரக வைராக்கியசீலராய் சதாசமாநிஷ்டானுபூதியால் அகண்டானந்தத்தால்திருப்தியடையச்செய்யும் சற்சங்க சகவாசஞ் செய்யவேண்டிய தவசியமாகும் அனித்தியமாகிய தேகத்தைக்காக்கும் புண்ணியத்தை யளித்து நித்தியமான பரமபதத்தை யபேக்ஷித்து ஸ்ரீஹரிபாந்தாமனை அந்தியகாலத்தில் தெரிசித்து மறுஜெனனத்தில் சிறுத்தொண்டனாய் பிறந்து கார்த்திகேயரால் பிரமஞான முபதேசிக்கப் பெற்று புண்ணிய பதவிகளை தெரிசித்துவிவேககைவல்லியத்தை படைந்தகர்ணனைப்போலத் தர்மத்தைப் பெருக்குவதே உத்தமர் துதிக்கும் முத்திக்குவழியாகும் மூட சிரோன்மணிகளாகிய சிலர்காரியகுருக்கள் போதிக்கும் யாதோர் நிலையில் மனதைநிறுத்தி எதையோ உம்மைத் தியானித்து மற்றொருவர் வேரோர் மார்க்கத்தை சிரேஷ்டமாய்ப்பேச அதில்வாஞ்சைகொண்டுமுன்னம் அனுஷ்டித்ததை வெறுத்துச் சஞ்சலமடையச் செய்யும் அவிவேக ஞானத்திற் புகாமல் மனோநிடத்தையும் சம்பாவனையையும் சந்தோஷத்தையும் சாந்தத்தையும் ஏகத்தியானத்தையும் நிர்ச்சல சித்தத்தையும் அனுபவஞானத்தையும் திரியாவஸ்தைகளின் மர்மத்தையும் மனோவுற்பத்திநாசத்தையும் பவபந்தம்வந்த சம்பத்தையும் பழயசாஸ்திரமான கர்மகாண்டத்தையும் நான் நீஎன்னும் அகம்பாவத்தையும் மற்றும்ஞானசாஸ்திரவிசாரணைதய அவசியஞ் செய்யவேண்டும் மரணபவ மென்னும் காலநேமியிற் சுழன்றலுத்துத் துன்பம்வறுத்து மோகாந்தகார கூபத்தி லமிழ்ந்து கன் அதிதரியாய் பசுவைப்போலாகிப் பசுவென்றபேரையே யடைந்து மேலுமுழலாமல் ஊனக் கண்களை மறைத்து ஞானக்கண்களைத் திறந்து அனேகஜென்மங்களுக்கு வித்தான சஞ்சிதகர்மமாகும் பஞ்சு மூட்டையைப்பற்றிய ஊழித்தீயைப் போலெரித்துச் சத்காரமாயிருந்து சதாகாலமும்ஆனந்தமயமாயிருக்கச் செய்யும் ஆசிரியர்மேல் விசுவாசம் அகத்திய மிருக்கவேண்டும் அபமிருத்துவாதிகளை நீக்கி அதோகெதிக்காளாக்கும் கொடியமனைப்போக்கிப் பூரணஞானியாகாமல் மரித்த உத்தமருக்கு மறுஜென்மத்திற் றெளிவளித்த அப்பா பிரகலாதனே! இனிப்பிறவாவரங் கேளென் றுரைத்ததுபோ லுரைத்து சங்கடமான காலத்தில் பிரசன்னமாய்வந்து களிப்படையும் படியான வரங்களைத்தந்து காத்துரக்ஷிக்கும் இஷ்டதேவதைமேல் பூரணபக்தியு மிருக்கவேண்டுமென்று சாதுக்கள்கேட்ட ஒன்பதுசங்கைகளுக்கும் இனிநீ உத்தரமுரைத்து இனிநீங்கள் தேவாதிகளை நியதிசெய்து ஆத்துமாவாகி ஆத்துமாவேபரமாத்துமாவெனநம்பி ஆனந்தமடையலா மென்றறைய சாதுக்கள் ஆத்துமாவே பரமாத்துமா வென்றறிந்ததனால் ஆனந்தமடையலாமோவென ஜெயதேவசுவாமிகள் மந்தகாசம் புரிந்து நீங்களானந்த சொரூபமாயிருக்க வேறு ஆனந்தத்தைத் தேடுவானேன் எனசாதுக்கள் நாங்கள் ஆனந்தசொரூபமெப்படியாவோம் ஆனந்தமாயிருப்பவர்களுக்கு இந்ததுக்க மிருக்குமோவென ஜெயதேவசுவாமிகள் உங்களைதார்த்தசொரூபத்தை இன்னம் நீங்களறியாமல் அஞ்ஞான மயமாகவே யிருப்பதால் ஆனந்தமயமாக வில்லையெனசாதுக்கள் தேகேந்திரிய கரணபிராண ஜீவவிருளையறியும்ஆத்துமாக்களே நாங்களென்றறிந்து கொண்டும் ஆனந்தமுதய மாகவில்லையேயென ஜெயதேவசுவாமிகள் தேகாதிகள் தானல்ல

Koviloor Digital Library

ஆத்துமாவே தானென்றறிந்தபடி ஆத்தும சொரூபமாயிருந்தா லல்லவோ ஆனந்த ரூபமாவீர்களென்றார்.

சாதுக்கள் ஆத்தும சொருபமாவதெப்படி அதற்குச் சாதனமென்ன திருவாய் மலர்ந்தருளுமையாவென ஜெயதேவசுவாமிகள் தேகாதிகள் தானல்லவென்று நிபதிசெய்தவண்ணம் தேக பாசங்களுக்கும் இந்திரிய காரணங்களுக்கும் மனோ ராஜ்ஜியங்களுக்கும் இடங்கொடுக்காமல் நிக்கிரகஞ்செய்து ஆத்துமாவே தானெனுநிவிஷயாதிகளை யடக்குங் கோனுகி மானாபிமானங்களைக் கடந்து மௌன முத்திரையை யடைந்து சங்கல்ப விகல்பத்துக்குட் படாமல் நிர்விகற்ப சமாதியை விடாமலிருப்பதே பிர்மானு சந்தானமென சாதுக்கள் பகிர்முக திருஷ்டிநீங்கி அந்தர்முகதிருஷ்டிஓங்கி நிர்ச்சலனமா யிருப்பதால் அகண்டானந்தத்தை யனுபவிக்கக்கூடுமோவென ஜெயதேவசுவாமிகள் நனவிற் சுழுப்தி நிலையடைவதே ஆனந்தமென சாதுக்கள் நியதிசெய்து சூனியமாக்கிச் சாக்ஷிசொரூபமாகி அசையாச் சித்திரம்போலிருந்தும் ஆனந்தமுதயமாக வில்லையேயென ஜெயதேவ சுவாமிகள் கருவிகருணங்க ளொழிந்த சுழுப்தி யெவ்விதமாயிருக்கிறதென சாதுக்கள் ஆனந்தமா யிருக்கிறதென்ன ஜெயதேவசுவாமிகள் என்னகாரணத்தால்ஆனந்தமாயிருக்கிறதென சாதுக்கள் பிரபஞ்சவியாபாரமும் மனோவிகல்ப மில்லாமையினால் ஆனந்தமா யிருக்கிறதென ஜெயதேவசுவாமிகள் சுகதுக்கங்கள் மனதிலிருப்பதாலும் மனம் சுழுப்தி யவஸ்தையில் மறைந்ததாலும் வேறுகருவிக ளில்லாமல் எல்லாஞ்சூனியமாகி ஆத்துமா ஒன்றுமாத்திர மிருந்ததால் ஆனந்தமாயிருந்தது அந்தஆனந்தமே ஆத்தும சொருபமென சாதுக்கள் இந்த ஜாக்கிராவஸ்தையில் ஆனந்தமா யிருப்பதெப்படியென ஜெயதேவசுவாமிகள் அந்தக்கரண புறக்கரணங்க ளெப்போதும் துக்கமயமேயாகும் இதைதெரியாமல் தேகாதிகளின் பீடையை ஆத்துமாவின் மேலேன் சுமத்துகிறீர்களென சாதுக்கள் தேகேந்திரியாதிகளின் துன்பங்களால் ஆத்துமானந்தம் மறைபப்படுகிறதேயென ஜெயதேவசுவாமிகள் மரணபரியந்தம் தேகாதிகளுக்குச்சுகதுக்கம் வந்துகொண்டேயிருக்கும் ஆத்துமானுபவ முடையவர்களுக்குச் சுகதுக்கங்கள் சொற்பனக்காக்ஷி போலத் தோன்றியும் தோன்றுமலுமிருக்கும் இப்படித் தோன்றுவது அப்பியாசிக் கல்லாமல், ஆரூபர்களுக் கொன்றுந் தோன்றாமல் ஆனந்தமாகவே யிருப்பார்களென சாதுக்கள் இப்படியானந்தமா யிருப்பவர்கள் தானே மோக்ஷபாக்கியம் பெறுவார்கள் மற்றவர்களடையக் கூடாதோவென ஜெயதேவசுவாமிகள் பிர்மவித்து பிர்மவான் பிர்மவரியான பிர்மவரிஷ்டன் என்கிற நால்வரும் மோக்ஷமடையவர்களே யானாலும் தானின்னதேசத்திலிருக்கிறதும் காலின்னதென்பதும் மலசலவிசர்ச்சனையாவதும் வெகுட்டியின்சுவையறியாதவனே பிர்மவரிஷ்டன் இவனே பிர்மானந்த வாரியில் மூழ்கித் தன்னைமறந்து ஜீவன்முக்தித் தன்மையைக் கரதலக் கனிபோலடைந்தவன் அவ்வரிஷ்டபததனதயே நீங்களடைந்து ஆனந்தானுபோகம பெறக்கடவீர்களென சாதுக்கள் ஜீவனிருக்கும்போதே மோக்ஷமடையக் கூடுமாமென ஜெயதேவசுவாமிகள் மோக்ஷமென்பதின் அர்த்தம் மோசனமாம் மோசனமென்பது பக்க விமோசனமாம் பந்தமோசகம பந்தநிவர்த்தியே மோக்ஷம் துக்கமோசகம பிரம்மானந்தமே மோக்ஷமன்றி வேறு மோக்ஷஸ்தானம் எங்குமில்லை.

ஆகலால் துக்கமயமான வியாபாரங்க ளொழிந்து சதா ஆனந்தமயமா யிருபபீர்களென, சாதுக்கள் யாங்கள் பேரின்பவாரியில் மூழ்கி ஜீவன்முக்தியடைய பெத்தனை நாட்செல்லுமோ தேவரீருடைய பரிபூரணதயை எக்காலத்தில் வருமோவென்றயர்ந்து நிற்க. ஜெயதேவசுவாமிகள் அப்பா ஒப்பிலா பிரமஞானிகளே இன்றுடன் தேகாபிமானத்தை விடுத்து வலிமையான யிச்சையைத்தடுத்து குக்ஷிபாதையிநிமித்தியங் கிடைத்ததுண்டு உங்களை அணடினோருக் காத்து மானுபலத்தை விண்டு மனவெண்ணங்களை மாய்த்து மானாபிமானத்தைத் தேய்த்து ஆத்துமசொருபமாய்ப் பரமாத்துமாவி லயிக்கியமாய்ப் பரிபூரணமாய்ப் பரமானந்த பரவசர்களாய் மௌனசமாதியையடைந்திருக்கக் கடவீர்களென்று பூரணாபிஷேகஞ்செய்து தானும் பரமசாந்தியையடைந்து ஆனந்தமேலிட்டால் தன்னைமறந்து அசைவற்றிருந்தார் சாதுக்களியாவரும் ஆசாரியருடைய பூரணகடாக்ஷம் பெற்றுக்கொண்டதால் பஞ்சுமூட்டையில நெருப்புப்பற்றியதுபோல, சங்கல்ப முதலானதுகளும் பஸ்பமாய்ப் பரமானந்த நிஷ்டையில் பசுமரத் தாணிபோற் பதிந்து தலைவனிற்கலந்து பேய்பிடித்தவர் போலவும், சேய் இருப்பதுபோலவும் கிரவுஞ்சநாட்டில் பிரகாசித்துக் கொண்டிருந்தார்கள் கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

கேளுங்கள் சித்தர்களே! இந்தப்படியாக ஜெயதேவசுவாமிகள் அனேகரைத் திருத்திப் பிரம்மோபதேசஞ்செய்து ஜீவன் முத்தர்களாகக் கடாக்ஷித்துக் கொண்டிருந்தார் இப்படியிருக்க ஜெயதேவசுவாமிகளுக்கு பஞ்சபூத சரீரம் அசுசியாகத்தோன்றி நித்திய தேகத்தைப் பெறவேண்டுமென்று நிவிரமுண்டாகி தன்பத்தினியாகி பத்மாவதியைநோக்கிப்பெண்ணே நான் நித்தியவிபூதியையுடைய நிச்சயித்திருக்கிறேன் ஆகையால் நினக்கு வேண்டியவைகளைக் கேட்டுகொள்ளுமென பத்மாவதி நாயகனைநோக்கி ஓசுவாமிதேவரீரைவிட வேறுபொருள் அடியாளுக்கு வேண்டியதொன்றுமில்லை ஆகையால் தாங்களுடன் தங்கள்தேகச்சாயைப்போல அடியாளும் வருகிறேனென, ஜெயதேவர் இனியில்லாச் சந்தோஷமடைந்து கிரவுஞ்சராஜனையழைத்து ஓ உத்தமகுணதநிற் சிறந்த பரிசுத்தசீலனே நான் வாரணாசிக்குச் சென்று சிலநாளிருக்க வெண்ணினேன் ஆகையால் தடை யொன்றுஞ் சொல்லாமல விடைதாருமென அரசன் குருசுவாமிகள் பிரிவைச் சகியாதவனாகி கண்களில்ஜலத்தை சிறுகால்வாயைப் போலப் பெருகவிட்டு துக்கிப்பதைக் கண்ட ஜெயதேவர் ஓபரமபக்தனே நீசிந்திக்குங் காரணமென்ன நினதுமனதின் எண்ணத்தை வெளிப்படுத்துமென, அரசன் ஓஎன் சற்குருநாதரே உம்மைப் பிரிந்து ஒருநிமிஷமும் உயிர்தரியேனென, ஜெயதேவர் அரசனுடன் பத்தினிசமேதராய் வாரணாசியையடைந்து தேவரும் மூவரும் மற்றயாவரும் கொண்டாட சிலநாள்வசித்திருந்து ஜீவன்முக்தியடைந்தார் இதையறிந்த பத்மாவதியும் தானும் ஜெயதேவருடன் முக்தியடைந்தாள் இவ்விருவருக்கு முண்டாகியபிரியத்தை அரசனுணர்ந்து மிகுந்த விசனப்பட்டு ஒருவாராய்த்தேறி அவ்விருவரையும் எடுப்பித்துக்கொண்டு தன்னகரஞ்சேர்ந்து இரண்டு திருப்பள்ளிகட்டி அதிலிருவரையும் அமர்த்திமூடி அநுதினமும் மூன்றுகாலமும்சென்று சேவித்துக்கொண் டிருந்தார் கேட்டீர்களோ சித்தர்களேயென்று நாபாஜிசித்தர் சொல்ல உத்தவசித்தர் முதலானோர்கள் பரமானந்தமடைந்து அதிக பயபக்தியுடன் தொழுது விடைபெற்று அவரவரிருப்பிடம் சென்றார்கள்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணேநமஃ

ஜெயதேவசுவாமிகளின் சரித்திரம்.

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

ஐந்துதாசர்களின் சரித்திரங்களில்

கபீர்தாசர் சரித்திரம்.

பிற்பாதி.

உத்தவசித்தர் முதலானோர்கள் மறுநாட் காலையிலெழுந்து ஸ்னானுனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு நாபாஜிசித்தரிடம் வந்து வினயத்துடன் பணிந்து நயந்து ஓசுவாமி சகலமும் உணர்ந்த சற்குருநாதரே நேற்றையதினம் ஜெயதேவசுவாமிகளின் சரித்திரத்தைப் பூரணமாய்ச் சொல்லி முடித்தீர் அதைக் கேட்க நாங்களனைவரும் பரமானந்த மடைந்தோம் தாங்கள் அதற்குப்பின்சொல்லியகபீர்தாசர்சரித்திரத்தின்குறைவையுங் கேட்க ஆவல்கொண்டோம்ஆகையால் அதைப் பூரணமாய் அடியேங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளுஞ்சுவாமி யென்று துதிக்க உத்தவசித்தர் முதலானோர்களை நோக்கி நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினர்.

கௌநகள் சித்தர்களே பரிசுத்தர்களே நற்றவர்களே பிரசித்தர்களே பலகலை கற்றவர்களே முக்திமார்க்கத்துக் குற்றவர்களே கபீர்சுந்தரா கமாலுடன் பிரமத்தியானத்தின் நாளைப்போக்கிக் கொணடுவர பகவானனவர் மறுபடியும் கமால்மனதைச் சோதிக்கும் பொருட்டு பிரகலாத நாரத பாராசர புண்டரீக வியாசி அம்பரிஷ சோனக பீஷ்ம தார்ப்பிய ருக்குமாங்கத அர்ச்சுனவசிஷ்ட விபீஷண உத்த அக்ரூர குசேலசுருத தேவாதி பக்தர்களும் தேவரிஷிகளும் கந்திருவர்களும் சித்தர்களும் பிரம்மரிஷிகளு மாகிய பதினுபிரம்பேர்கள் பைராகிவடிவத்துடன் தன்னைச் சூழ்ந்துவரத் தான்யாவருக்கும் தலைவனுகி நடுராத்திரியில் புறப்பட்டு கபீர்வீட்டை யடைந்து ஓபுண்ணியவான்களே இன்றையதினம் சூரியோதயமானது முதற்கொண்டு எங்களுக்கெங்கும் அன்னம் அகப்படாக்குறையால் பலவிடங்களிற்றிரிந்துமிகவும்நொந்து தர்மத்திற்சிறந்த பிரபுநீரெனக் கேள்விப்பட்டு உம்மிடமடைந்தோம் ஒசீமான்களே இக்ஷணம் பக்ஷத்துடன் எங்கள்குக்ஷிநிறை பக்ஷணமிடுங்க ளையாவெனத் துதிக்க கபீர் தன்குமாரனை நோக்கி ஒஎன்னருமை புதல்வனே நினதுதாய்முதல் நாம்மூவரும் பசியினல்வாட்டமடைந்து ஆபாசம்மேலிட்டிருக்கும் நம்மை அனேகசாதுக்கள் வந்ன்னங் கேட்கிறார்களே இல்லையென்போர்க்கில்லையெனல் இல்லறத்தார்க்குரிய தாமமல்லவே "இறந்தும் பறந்துக்கிடுமென" தர்மசாஸ்திரம் முறையிடுகின்றதே ஒகுமாரனே இச்சாதுக்களின் குக்ஷிபாதை நீக்குவதற் கேதேனு மோருபாயக் தேடுவாயென கமால் தந்தையைநோக்கி எந்தையே இப்போது நடுராத்திரியாகையால் ஊரார்யாவரும் நித்திரையி லிருப்பார்கள் ஆகையால் நாமென்ன செய்யலாம் ஆகிலும்தாங்கள் புறப்பட்டுவாரும் தெய்வச்செயலின் படியாகிறது யென்றுசொல்ல கபீர் தன்புதல்வனோடு கையில் தாளம் எடுத்துக்கொண்டு வெளிப்பட்டு அந்தநடுராத்திரி யெல்லாம் பகவந்நாம சங்கீர்த்தனத்துடன் வீதிகளெல்லாஞ் சுற்றியும் ஒருபிடி அரிசியுங் கிடைக்காததால் தந்தையும்பிள்ளையும் மயங்கித்தியங்கி ஒன்றுந்தோன்றுமல் திப்பிரமை கொண்டு முடிவில் அவ்வூரில் பெருந்தவர்த்தகன் கடைக்குச் சமீபத்திலடைந்து கமால்தந்தையை நோக்கி ஒதந்தையே இந்தக் கடையில் கன்னம்வைத்து யான் உள்ளேபோய் பைராகிகளுக்கு வேண்டியகோதுமைமாவும் சற்கரை பருப்பு நெய் எறிகரும்பு முதலாகிய வஸ்துக்களை யெடுத்துத்தருகிறேன் நீர் துரிதமாகக் கொண்டுபோய் சாதுக்கள்பசிதீர உணவுகொடுமென கபீர் களவுசெய்வது பாபத்தொழி லல்லவா வென கமால் களவுசெய்தபொருள் நாம்சொந்தத்திற் குபயோகப் படுத்தினுல் பாவமேயாம் சாதுக்களுக்கு வினியோகப் படுத்தினுல் நம்மைப் பாவமணுகாதென கபீர் சந்தோஷித்து அப்பாகுமாராமேற்கண்ட பதார்த்தங்கள் யாவற்றும் எடுத்து வெளிப் படுத்துவதற்

குள்ளாக வர்த்தகன் உன்னைப்பிடித்துக்கொண்டால் என்னசெய்வதெனகமால் உப்பானது ஜலத்திலே தன்னுருமாறி ஜீவருக்கினிப்பை யுண்டாகச் செய்வது போல என்னைவர்த்தகன்பிடித்து எதுதண்டனை யெனக்கு விதித்தபோதிலும் எனக்குப் பெரிதல்ல சாதுக்கள்பசியைத் தீர்த்து உபசரிப்பதே எனக்குமேலான சுகமென கபீர் சந்தோஷசாகரத்தில் மூழ்கி குமாரனைக் கட்டித்தழுவி முத்தமிட்டு அடா என் கண்ணே உன்னைப்போல உத்தமகுணசீலனிவ்வுலகிலுண்டோ வென்றுபுகழ கமாலதற்கு கிஞ்சித்தும் களிப்படையாமல் தந்தையின் கையிலிருந்த தாளமொன்றை வாங்கிக்கொண்டு வர்த்தகன்சரக்குகளை பத்திரமாய்வைத்திருக்கும் சுவற்றில் தாளத்தினால் கன்னமிட்டுப் பேர்த்து சத்தஞ்செய்யாமல் கல்லுகளைப் பிடுங்கித் தான் உள்ளே நுழைவதற்கு தக்கதாக செய்துகொண்டு உள்ளே நுழைந்து வேண்டிய வஸ்துக்களை எல்லாம் எடுத்துவந்து அத்துளையின்வழியாய்த் தந்தையிடங் கொடுக்கக்கபீர் அப்பாகமால் போதும்போதும் திருப்தியானதென கமால புளகாங்கிதங் கொண்டு தேகபூரித்து பரமானந்தமடைந்து நித்திரை செய்யும் வர்த்தகனைத் தாண்டி யாரோ திருடன்வந்து நின் மண்டியைக் கொள்ளையடிக்கிறானென்று சொல்லி வேகமாயோடி அத்துளையில்புகச் சிரசுமாத்திரம் வெளிப்பட தேகம் வாராமையாற் தந்தையைநோக்கி ஓ அண்ணா என்சரீர தேகத்திற்குச் சிரசுபிரதான மானதால ஒன்றும் யோசிக்காமலிந்தத் தாளத்தினால் என் சிரசை யறுத்துக்கொண்டு போமெனக்கபீர் தீவிரமாய்க் கமால் சிரத்தைப்பற்றித் தாளத்தினால் அறுத்துக் கொண்டுபோய்த் தன்மனைவியிடங்கொடுக்க அப்புண்ணியவதி யதைவாங்கிப் பழங்கலத்தில் பத்திரப்படுத்தி நாயகனும்தானுமாக சாதுக்கள்பசிதீர உணவாதிகளை யளித்துபசரித்துக் கொண்டிருந்தார்கள்.

இவ்விடத்திலிப்படியிருக்க அவிடத்தில்கமாலால் எழுப்பப்பட்டவர்த்தகன் திடுக்கிட்டெழுந்து ஒன்றுந் தோன்றாமல் திகிலடைந்து சற்று நிதானித்து விளக்கேற்றிக் கொண்டு தன்காரியஸ்தர்களுடன் யாவற்றையும் பரிசோதித்துக் கொண்டுவந்து முண்டமாய்த் துளையில் மாட்டிக்கொண்டிருக்கும் கமால்தேகத்தைப்பற்றிப்பிழுத்து சிரமில்லாதிருப்பதைக் கண்டு பயந்து அவ்வூர் கொத்தவாலுக் கறிக்கையிட்டான் கொத்தவால் வந்துபார்த்து ஆளின்னானென்று தெரியாமல் கொண்டுபோய்க் கச்சேரியில் சேர்த்துப் பொழுதிடிந்தபின் அம்முண்டத்தை ராசன் சபையில் சேர்த்து விசாரணையில் விட்டு அன்றெல்லாம் அங்கு தானே போட்டு வைத்தார்கள் அம்முண்டத்திற்குச் சொந்தமானவரொருவரும் வாராமையால் அரசன்முச்சந்தியிலே ஒருமரத்தில் மாட்டி தொங்கவிடும்படி கட்டளையிட்டான் ஏவலர்களந்தப்படியே செய்தார்கள்.

இங்கே பைராகிகள் மூன்றுநாள்பரியந்தம் பரமானந்தமாய்ப் பஜனைசெய்திருந்து மூன்றாநாள் சாயந்திரம் பைராகிகள் பெருத்தகோஷமாய் பகவந்நாமசங்கீர்த்தனம் பாடிக்கொண்டு அவ்வூரை வலமாய் வருகிறபோது முச்சந்தியில் மரத்தில்மாட்டித் தொங்கவிட்டிருக்கும் முண்டமானது பகவானருளால் கைத்தாளம் போடக்கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டுத் தலைவனாகிய பைராகி கபீரையழைத்து இதேது முண்டம் கைத்தாளம்போடுகிறதென கபீர் அவன்யாரோ யன்றோ இம்மொழியைக்கேட்ட மாயபைராகி உத்தமியாகிய சுந்தரா அடுக்குப்பானையில்ஒளித்துவைத்த கமால்சிரசை முண்டத்தினிடம் வந்து ஒட்டும்படி கடாக்ஷித்தார் அந்தப்படியே அச்சிரசானது பானையைவிட்டு வெளிப்பட்டு ஆகாயமார்க்கமாய்க்கிளம்பி வந்து கண்டத்தில்ஒட்டியது உடனேகமால் பகவந்நாமசங்கீர்த்தனம் கைத்தாளத்துடன்பாட இதைக் கண்டயாவரும் பரமானந்தசாகரத்தில் மூழ்கினவர்களாகி அம்மரத்தில் கட்டியிருந்தகட்டுகளை அவிழ்த்துவிட கமால் அப்பைராகி கூட்டத்தில்சேர்ந்து தன்னை மறந்து பஜனைசெய்துக்கொண்டுவந்தார் இவ்வாச்சரியத்தைக் கண்டசிலர் கொத்தவாலுக் கறிவிக்க கொத்தவால்வந்து கமாலைப் பிடித்துக்கொண்டுபோய் கைதியாக்கி ராஜன் கொலுமுன் ஆஜர்படுத்தி விசாரணை செய்கிறபோது மாயாபைராகி கமாலுக்கு வரிசாகி இம்மனிதன் திருடியவஸ்துவேது இதற்கு சாக்ஷிகளிருந்தால் கொண்டுவரலாமெனகொத்தவால் இக்களவுக்கு கன்னமிட்டசுவரே சாக்ஷியென்றான் அதற்கு மாயாபைராகி கன்னமிட்ட சுவரைக் காட்டுமென கொத்தவால் அப்படியே காட்டுகிறேனென்று வர்த்தகன் வீடிற்கழைத்துக் கொண்டுபோய்க் காட்டும் நிமித்தியம் பார்க்கிறபோது அச்சுவர் மாசி மருவின்றி பழையபடி யிருப்பதைக்கண்டு வியந்து ஒன்றுஞ்சொல்ல வாயெழாமல் பிரமித்து அவமானப்பட்டான் பின்பு மாயாபைராகி கபீரை நோக்கி ஓ சாதுசற்குணசீலனே இந்தகமாலே நின்புதல்வனென்று அநேகர் சொல்லுகிறார்களே இதை மறைத்து

Koviloor Digital Library

நான்முன்னம் கேட்டபோது அவன் யாரோவென்று
பொய்மொழி புகன்றாய் உன்னைப்போலஉத்தமர்கள்
நரகத்துக் கேதுவாகிய பொய்வார்த்தையை எம்போ
லியரிடத்தில் சொல்லலாமோ வென கபீர் ஓ சுவாமி
யான் கனவிலும் பொய்சொல்லேன் இருக்கும் உண்
மையைச் சொன்னேனே யல்லது அசத்தியம் புகலே
னென மாயவைராகி பிரத்தியக்ஷத்திலே அசத்தியொ
ழிந்து நானிருக்க சத்தியவா னென்பது சரியாகு
மோவென கபீர ஐபாவைராகியே இந்த தேகத்துக்
கும் ஆத்துமாவுக்கும் சம்பந்தமில்லை அதெப்படியெ
னில் ஆத்துமா பிரிந்தவுடன் கட்டை வீழ்ந்துவிடும்
கர்மத்தினால் வந்த சரீரமாகையால் கர்மம் நீங்கினால்
தேகத்தைவிட்டு ஆத்துமா பிரிந்துபோகிறது குண
சம்பந்தமாகி யவதரித்து குணம் தண்டிக்கொண்டு
போகுமவனாதலால் இவனுக்கு மெனக்கும் என்ன
சம்பந்தம் மேலும் இவனைஜன்மாதியாய் எத்தனைப்
பேர்களுக்கும் பிறந்துபிறந்து இறந்தானோஅதுபோ
லவே எனக்கும் பிறந்து புத்திரனாகியிருக்கிறான் இவ
னிறந்து மறுபடி எத்தனைபேர்களுக்குப் பிள்ளையாக
உதிப்பானோ ஆகையால் இவனை என்குமாரனென்று
எப்படி நிச்சயித்துச் சொல்லுவது இந்தஉண்மையை
யுணர்ந்தே எதார்த்தத்தை தங்களுக்கு விண்ணப்பஞ்
செய்தால் அடியேனைப் பொய்யனென்று சொல்லுகி
றீரென மாயாவைராகி மிகுந்த களிப்படைந்து உட
னே தன்சுயரூப தெரிசனந்தந்து கபீர் கமாலிருவரை
யுங் கட்டித்தழுவிப பலவிதமாகக் கொண்டாடிப் பக
வான் மாயமாய் மறைந்துபோயினர்.

பின்புகபீர் தன்புதல்வனாகிய கமாலுடன் கூடி
பிரமக்ஞான நிஷ்டராகியிருக்க அஷ்டமா சித்தியில்
தேர்ந்து மிகுகெர்விஷ்டனாகிய கோரக்கன் காசிக்ஷே
சத்திற்குவந்து கபீரைக்கண்டு தர்க்கஞ்செய்து அப
ஜெயமடைந்து அவ்வூரெங்கும் ஜலமில்லாமற் செய்
தான் அதையறிந்து கபீர் இருந்தவிடத்தில் தானே
பெருவிரலால் பூமியை அழுத்தவோர்க் கெல்லாம்
ஜலம் பெருகும்படியருளி அக்கோரக்கனை அவ்வூரில்
மறுபடியும் தலைகாட்டவொட்டாமலோட்டித் தன்
ஆசானாகிய ராமானந்த சுவாமிகள் திருவடியைப்
பணிந்து பிர்மக்ஞானத்தில் சொக்கியிருந்தார் கேட்
டீர்களோ சித்தர்களே யென்று நாபாஜிசித்தர் பின்
னுஞ் சொல்லத் தொடங்கினர்.

இந்தப்படி கபீர் அந்தக் காசிக்ஷேத்திரத்தில்
வெகு மகிமைகளைக்காட்டி பிர்மக்ஞான சீலராயிரு
க்கையில் அவ்வூரில ஓர்பண்டிதன் மரித்துப் போன
தன்தந்தைக்கு அர்க்கிய நீரளிப்பதைக்கண்ட கபீர்
ஓபண்டிதரே இறந்துபோன நின்தந்தை வந்தாரா?
நீரளித்த அர்க்கியஜலத்தைக் கைக் ! கொண்டாரா?
இதினால் சகலபாபங்களையும் போக்கினாரா? முத்தி
மார்க்கத்தைப் பெற்றாரா? மோனநிலையை யுற்றாரா
வென்று சொல்லிக் கெக்கலி கொட்டிச்சிரித்து யீதெ
ன்ன அறிவீனம் இறந்தவன வருவதேது அவனெந்த
ஜென்மமெடுத் திருக்கிறானோ அதைதேரியாமல் அஞ்
ஞானத்தினால் இப்படிச்செய்வது தகாதென பண்டி
தன் ஓசாதுசஜ்ஜனசிகாமணி "ஊரோடேஒக்கவோடு
மென்ற" பழமொழிக்கிணங்க முன்னோர்களும் மற்ற
அன்னியர்களும் இல்லறதருமத்தி லிருப்பவர்கள் யா
வரும் இறந்தபிதுர்தேவதைகளுக்கு எள்ளுந் தண்ணீ
ரும் இறைக்கிற வழக்கத்தைப்போல யானும்இச்சித்
தேன் இதைக்கண்டு நீர்பரிகாசம் பண்ணுவது தங்க
ளையொத்த தொண்டர்களுக் கழகாகுமா மேலும்எள்
ளுந் தண்ணீரும் ஏதோ வார்த்தையைப்பற்றி யிறை
ப்பார்களேயன்றி சகலரும் வீணாக இதற்குடன் பட
மாட்டார்கள் இப்படியிருக்க நீர் கேலிசெய்வது தகா
து போதமையாவென, கபீர்மிகுந்த கோபங் கொ
ண்டு ஓபண்டிதரே இதற்கு திருஷ்டாந்தரங் காட்ட
வேணுமென்றால் என்பின் வாரும் நின் தகப்பனைக்
காட்டுகிறேனென பண்டிதன் நீரப்படி என்தந்தை
யைக் காட்டாவிட்டால் உண்மையான பக்தரல்லவே
ஷக்காரனென்றே இக்காசியிலுள்ள யாவரும் இகழும
படிச் செய்வேனெனக் கபீர் ஓபண்டிதரே நின்தந்
தை யெடுத்திருக்கும் ஜென்மத்தை யுமது கண்முன்
காட்டினால் நீரென்ன பிராச்சிதம் செய்துக் கொள்ளு
கிறீரென பண்டிதன் இப்போது என்தந்தை எடுத்தி
ருக்கும் ஜென்மத்துடன் சிலதிருஷ்டாந்தங்கள் என
க்குத் தோன்றுமாகில் உமக்கு சிஷியனாகிறேன் அப்
படியாகாமல அத்தர்மத்துக் குட்படுவேனாதல் குரு
வை வஞ்சித்தவன் சேரும் நரகத்தை யடையக் கட
வேன் என.

கபீர்உடனே அப்பண்டிதனை யழைத்துக் கொ
ண்டு அவ்வூரில் ஓர்வணிகன் வீட்டிற்குச் சென்று
அங்கு யிரண்டுகண்ணு மில்லாரிஷபத்தின் மஸ்தகத்
தின்பேரில் வலக்கரத்தைவைத்து நினக்கு பகவான
ருளால் பூர்வக்ஞான முண்டாகக் கடவதென்று ஆசி
கூறி உனது பூர்வஜென்ம விருத்தாந்தத்தைச் சொ
ல்லுமென்றவுடனே அவ்வெருதிறந்து பூர்வக்ஞான
முண்டாகி ஓயுத்தம பக்தர்களிற் சிறந்த நற்றவமணி

யே யான் முன்ஜென்மத்தில் நின்னுடன் கூட வந்த பண்டிதனுக்கு தந்தையாகியிருந்து அந்த மேலாகிய ஜென்மம்நசித்து கர்மவாசனையினால் இருகன்றுமற்ற எருதுஜென்மம் வாய்ந்து யிருந்த இடுக்கண் பட்டுக்கொண்டிருக்கும் என்னையாண்டு ரக்ஷிக்க வெழுந்தருளியசற்குருநாதரே இதுவரையில் நானெடுத்த ஜென்மங்களுக்குகணக்கேயில்லை அந்தஜென்மங்களிலெனக்கெத்தனை பேரோ தாய்தந்தையர்களானார்கள் இந்த சரீரத்தைப் பெற்று வளர்த்த தாய் தந்தையர்களும் அண்டு தாய்தந்தையர்களுடன் சேரத்தக்கினவர்களேயன்றி இவர்களிடத்தில் விசேஷ மெதுவுங் காணோம் நிற் பேதைகளுக்கு தந்தையாகும் ஸ்ரீமந்நாராயணன் எனக்கும் தேவரிருக்கும் சகல லோகங்களுக்கும் தந்தையாகி யிருக்கிறார் அவரது நிர்ஹேதுகிருபை யில்லாமையால் எனக்கிந்த க்ஞானமில்லாத ஜெமங் கிடைத்தது இவை நற்கெதி யடைவிக்க தேவர் தெரிசனம் லபித்தும் அந்த ஜெகந்நாதனை தியானிக்காமல் ஆகாரம் நித்திரை பயம் துன்பங்களுக்குவசப்பட்டு காலத்தை வீண்போக்குவனே யாகில் கேவல நரகத்துக்கு ஹேதுவாகுவேன் சாதுவாகிய தேவருடைய தெரிசனங் கிடைத்தது எதுக்கெனில் சாந்திசுகத்தை யனுபவிக்கவல்லவா இதையனுபவிக்கவொட்டாமல் காமம் குரோதம் லோபம் மோகமதம்மாச்சரியமெனும் அஷ்டவர்க்கங்களென வாதைப்படுத்திக் கொண்டிருக்கிறது இந்த பயங்கர சத்துருக்களை ஜெயித்த ஜெந்துவல்லவா ஜெனனமரண ரூபமாகும் வலையை யறுத்துக்கொண்டு பிர்மானந்த சுகத்தை யடையும் அப்படிப்பட்ட பரமானந்தத்தையே யபேக்ஷித்து,

ஸ்லோகம்.

"த்ரிஜகதிஸஞ்ஜனஸங்கதிரேகா
பவதிபவார்ணவதரேணநெளகா."

என்பதுபோல பவக்கடலைத் தாண்டுதற்கு சத்புருஷர்கள். சங்கமமல்லாமல் வேறுஓடமில்லை என்று நிச்சயித்து சாதுக்களில் சிரேஷ்டராகும் தேவரீருடைய திருவடித்தாமரைகளை எடுத்து அனவரதமும் துதித்து கிருதார்த்த மடைய வேணுமென்று நிச்சயித்தேன் மேலும் சரணாகெதி லக்ஷணம் சர்வேஸ்வரனுக்கும் சாதுக்களுக்கும் சுபாவகுணமல்லவா என்று வினயத்துடன் மொழிந்த எருதின் வசனங்களைக் கேட்ட பண்டிதன் முதலின்னுமனேகரும் மிகவும் ஆச்சரியப்பட்டு கேவலம் எருதுஜென்மமா யிருந்தபோதிலும் இதின் வார்த்தைகள் செலிக்கமுர்தமாகி யிருக்கிறதென்று பிரமானந்த மடைந்தார்கள் பண்டிதன் கபீரைநோக்கி ஓசுவாமி நாங்கள் சொல்லியபடியிரத்யக்ஷத்தில் அடியேன் தந்தை ரிஷபரூபமாய் இரண்டு கேதநிரமுமில்லா திருப்பதையும் அந்தரிஷபம் சொல்லிய வார்த்தைகளையும்கேட்டு ஆனந்தமடைந்தேன் எனது பூர்வபுண்ணிய பலனை என்னென்று சொல்லுவேன் என்பாக்கியமே பாக்கியம் பகவான் தங்கள் ரூபமாகத் தோன்றி தெரிசனங் கொடுத்தார் தங்கள் சேவையால சஞ்சிதகர்மங்கள் யாவும்நசித்துசன்னியனுகினே னென்றுசொல்லி கபீர் திருவடிகளில் சாஷ்டாங்க தெண்டனிட்டெழுந்து வினயத்துடன்நிற்கும் பண்டிதனைக் கபீர் பூரணமாகக் கடாக்ஷித்து சிஷ்யனாக ஆட்கொண்டு சிலநாள் பிர்மக்ஞான சம்பன்னராகியிருக்க அவ்வாரணாசியி லுள்ள ஓர்பிராமணன் கபீரிடத்திற்குவந்து ஓசுத்த சாந்தக் குணத்திற் சிறந்த உத்தமரே அடியேன் ஓர்சந்தேகம் நிவர்த்திசெய்துக் கொள்ளும் பொருட்டு உமதிடம் வந்தேன் அச்சங்கையை நீக்கியருள வேணுமென்ற பிராமணனை நோக்கி கபீர் ஓதொழுகுலததவரே! உமக்குநேரிட்ட சந்தேகமேதென பிராமணன் நீரும் சம்சாரி நானும் சம்சாரி இப்படியிருக்க நினக்கு மாத்திரம் பகவான் தெரிசனங் கிடைத்ததென்ன எனக்குகிடைக்காமல் போயதென்ன இந்தக்காரணமே எனக்கு மெத்த சங்கையா யிருக்கிறது இதைப் பூர்த்திசெய்ய வேணுமென கபீர் ஐயா பிராமணரே நின்துபெண்டு பிள்ளைகள் செய்யும் தொந்தரவினால் உமது மனஞ் சஞ்சலமடைந்து பகவான் திருவடிகளில் மனங்குவியா திருப்பதினால் நினக்கு பகவான்தெரிசனங்கிடைப்ப தரிதாயிற்று பகவத் தெரிசனம் செய்ய வேணுமென்ற பிரியமிருந்தால் பெண்டு பிள்ளைகளைவிட்டு வைராக்கியத்தை யனுஷ்டிப்பீரே யாகில் அவசியம் உனக்கு பகவான்சேவை சுலபமாக லபிக்கும் என்ற கபீர் வாக்கியங்களைக்கேட்ட பிராமணன் சற்குருநாதரே எம்பெருமான் கிருபையினால் எனக்கு மேன்மையாகிய மானிடசரீரங் கிடைத்தது இந்தஜென்மத்திலும் அந்தபகவானை தியானஞ்செய்யாமல் உணவாதிகளுக்கு வசப்பட்டவனாகி வீண்காலம் போக்குவனேயாகில் பசுவுக்குச் சமானமாகுவேன் சாதுக்கூட்டத்திற் சேர்ந்து சாந்தசுகத்தை யனுபவிப்பதல்லவா மனிதஜென்ம மெடுத்ததற்கு பலன் அப்பப்பட்ட சுகத்தை யனுபவிக்க வொட்டாமல் காமக் குரோத லோப மோகமத மாச்சரியங்களென்னும் அரிஷ்டவர்க்கங்களென்னை வாதனைப்படச்செய்கிறது இந்த பயத்தைத்தரும் சத்துருக்களை வென்றவ னல்லவா

Koviloor Digital Library

பரமானந்த சுகத்தையடைவான் அப்படிப்பட்ட பரமானந்தத்தை ஆசித்து உத்தம சிரேஷ்டராகும் தேவரிருடைய திருவடித் தாமரைகளை யடுத்து சதாகாலமும் தொண்டுசெய்துக் கொண்டு தன்னியனாகலாமென்று நிர்சயித்து வந்தேன் என்று விண்ணப்பஞ் செய்ய ஒவிப்பிரே பயப்படவேண்டாம் நீர்கோரிய படி என்னிடத்தில் வசிகநிரும் என்று அருள்புரிந்தார் அப்போது நாரகசல்லாபத்திஞல் ஸ்ரீ வேதவியாசருக்கும் மகாரிஷி ஸல்லாபத்திஞல் அருவனுக்கும் எப்படிப்பட்ட ஆனந்தமுண்டாச்சுதோ அப்படிப்பட்ட ஆனந்தத்தை யடைந்து பிராமணன் சந்தோஷித்து அதுமுதல்,

சுலோகம்.

“சரீரம்வஸ¬ விக்ஞானம்
வாசகேர்மகுணூஸ¬ ன்
குராவர்த்தம் தாரயே தயஸ்து
ஸ்ஸிஷ்யோ ஸேதாஸ்மருத,”

என்பதுபோல ஆத்துமா பொருள் முதலாகியதுகளை அந்தகுருவின் ஆதீனஞ்செய்து அப்பிராமணர் குருகுலவாசஞ் செய்திருந்தார் மேலும் “குருபதாம்புஜக்யாயேத்” என்பதுபோல குருவின் பாதத்தாமரை தியானஞ்செய்து அவர்திருவடி கிழலெனத்தருந்து வாசஞ் செய்திருந்தார் கபீர் பிராமணன் சக்திமுதலாகிய நாற்குணங்களைக் கண்டு மிகவும் சந்தோஷித்து உபதேசஞ் செய்யவே பிராம்மணனுக்கு தக்ஷணத்தில் வைராக்கியமுண்டாகிய ஒசுவாமி தேவரீரது கிருபையினுல் அடியேன்கோரிக்கை சித்தியாகினாவேன் ஜென்மம்பாவனமாகியது தேவரீரதுஇதோபதேசமெனும பிரகாச அனுகூலமாக வெகுஜென்மங்களில் என்னைவிட்டு நீங்காதிருந்த அக்ஞான விருளைப் போக்கியது என்றுசொல்லி குருநாதரே கணக்கிடக்கூடாத எனதுசஞ்சித பிராப்தகர்மங்கள் தேவரீரது கடாக்ஷத்திஞல் உருமாய்ந்து இருக்குமிடந்தெரியாமற் போச்சுது இதுவரையில் நாசரீர மெடுத்து தோவிருத்தியுடன் கூடியிருந்தேன் தேவரீரது உபதேசத்திஞல் இப்போது நானொருமனிதனுகி யிருக்கிறேன் ஆகிலும் என்னை விசுவாசிக்க வேண்டாம் இந்த சரீரத்தி லகப்பட்டிருக்கும் துஷ்ட இந்திரிய அசுவங்கள் என்சுவாதீனத்தில் நிற்கமாட்டாது இது வேதாந்தபதத்தைப் படைத்து விஷய வீதியிடத்திற் சென்று என்னை எமனுடைய பட்டணத்திற் சேர்க்குமென்று பயப்படுகிறேன் எனக்குத்திடமாகும் புத்தியெனனும் கடிவாளக் கயறைக்கொடுத்து அந்த அஷ்டக் குதிரைகளின் இஷ்டப்படி செல்லும் வழியை மாற்றி என் அர்ச்சாதி மார்க்கத்தில் நடப்பித்து ஸ்ரீவைகுந்தமா நகரத்தில் சேர்க்கவேண்டிய பாரம் உமதாயிருக்கிறது மேலும் அடியேன் உமதுசந்நிதியில் சரணமடைந்த அன்றே இந்த ஆத்துமாவின் பாரம் உம்மால் சுமக்கப்பட்ட தாச்சுது இப்போது நானமறுபடியும் பிரார்த்திப்பது அனுவசியம் ஆகிலும் உம்முடன் ஸல்லாபமெனக்கு தாரக போஷக பாக்கிய ரூபங்களாகி யிருப்பதிஞல் முன்விண்ணப்பத்தையே மறுபடியும் தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்றுசொல்லிய பிராமணன் வாக்கியங்களைக்கேட்ட கபீர்தாசர் மிகவுங் களிப்பையடைந்து அவரை ஆலிங்கனஞ் செய்துக் கொண்டு அவர்செவியில் தாரகமந்திரத்தை உபதேசித்தார் பிராமணர் தன்னியனுமினே னென்று ஆனந்தித்து எமாராமல் ஆசாரியருக்குத் தொண்டு செய்துக் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்க கபீர்தாசர் பிராமணருடைய நிச்சயக் ஞானத்தையும் பயபக்தி விசுவாசங்களையும் கண்டு மிகுந்த சந்தோஷ மடைந்திருக்க அவ்வூரில் வசிக்கும் நானக்ஷாவென்னும் துலுக்கன் கபீர்தாசரிடத்திற்குவந்து ஒகபீர்நீ துலுக்கனுகப்பிறந்து நமது மதத்தைவிட்டு இந்துக்கள் மதத்தைச் சேர்ந்திருக்கிறையே இந்தமதத்தில் சேர்ந்து என்னபலனைப் பெற்ருய் அன்னியிலும்இதிலென்ன உண்மையைப்பார்த்து இந்த வைராக்கியங் கொண்டாய் அதனை எனக்குத் தெரியச் சொல்லாவிடில் உன்னை எளிதில் விடேனென்ற நானக்ஷாவை நோக்கிக் கபீர்தாசர் சொல்லுகிருர் ஓ நானக்ஷாவே,

சுலோகம்.

“ஜீவஜன்ம சதகோடிஷ¬மானுஷத்வம்
தத்ராபிஜென்ம சதகோடிஷ¬பிராமணத்வம்
தத்ராபிஜன்ம சதகோடிஷ¬வைஷ்ணவத்வம்
தத்ராபிஜன்ம சதகோடிஷ¬மத்தாபவம்.”

என்பதுபோல எண்பத்துநான்கு ஜீவராசிகள் யிப்பூமியி, லுற்பத்தியாவது அதிலொவ்வொரு ஜீவஜெந்துவிலும் நூறுகோடி ஜென்மங்களெடுத்து அரிதாகிய மானிடஜென்மம் வந்தது இந்தமானிட ஜென்மங்களில் நூறுகோடி ஜென்மமெடுத்தபின் பிராமணனுகி யுதித்தபின் இப்படிபிராமணஜென்மங்கள் நூறுகோடி யெடுத்தழிந்தபின் வைஷ்ணவ னுகப் பிறப்

Koviloor Digital Library

பான் வைஷ்ணவனாக நூறுகோடி ஜென்மங்களெடுத் தழித்தபின் பரத்துவமாகிய எனது நித்தியபதத்தை யடைவானென்று கீதையில் பகவான்சொல்லி யிருப்பதால் இதுவே எனக்கு பெருத்த நம்பகமாகி யிருப்பதுடன்.

சுலோகம்.

"கீதாஸ்ரயோ ஹந்திஷ்டாமி
கீதாமேசோத்த மமக்ருஷம்
கீதாக்ஞான முபாஸ்ரிதய
தரினிலோகான் பாலயாம்யஹம்"

பிராப்த மனுபவிப்பதினாலும் பகவத்கீதையைச் சதாகாலமும் ஆசையுடன் பாராயணஞ் செய்யுமவன் முக்தனாகி சுபிபாகு கர்மத்தினால் கட்டுப் படாதவனாகி யிருப்பான் பகவத்கீதையை தியானிக்கும் விஷயத்தில் தாமரையிலையில் ஜலம் ஒட்டாதது போல மகாபாவங்க ளொட்டாது பகவத்கீதை புத்தகமிருக்குமிடத்திலும் கீதாபாராயணம் நடக்கு மிடத்திலும் பிரயாகை முதலான சகலபுண்ணிய தீர்த்தங்களும் சந்நிதி செய்திருக்கும் கீதாபாராயணஞ் செய்யுமவனுக்கு சகலதேவர்களும் ரிஷிகளும் யோகிகளும்பன்னகர்களும் கோபால கோபிகைகளும் நாரதரும்உத்தவரும் துவாரபாலர்களும் துரிதமாக சகாயர்களாகுவார்கள் எந்திடத்தில் கீதை வாசிக்கின்றார்களோ எந்திடத்தில் கீதையை உபதேசிக் கின்றார்களோ எந்திடத்தில் கீதையை அர்த்தவிசாரணை செய்கின்றதோ அங்குநான் சித்தமாக வசித்துக்கொண் டிருக்கிறேன் மேலும் நான் பகவத்கீதையை ஆரம்பித்திருக்கிறேன் அதுவே எனக்கு உத்தமமாகியவீடு அதனையடுத்து சகலவுலகங்களையும் பாலனஞ் செய்திருக்கிறேன் என்று பகவான் அனுக்கிரகம் செய்ததுபோல வராஹபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதுபகவத்கீதையிலும்,

சுலோகம்.

"அத்யேஷ்யதேசயபிமம்
தர்ம்யம்ஸம்வாத மாயயோ
ஞானயக்ஞேன தேனாஹ
மிஷ்டஸ்யாமிதமேமதி."

என்றால் ஒசஞ்சயனே நமதுஸம்வாத ருபமாகி மகத்தாகிய இக்கீதையை அனுதினமும் பாராயணஞ்செய்யுமவன் க்ஞானுக்னங்களினால் என்னை யாராதனை செய்யுமவனென்று பகவான் சொல்லி யிருப்பதால் இந்தமதம் மற்ற மதங்களுக்காகிலும் மேலானது என்பதற்கு சந்தேகமேயில்லை ஆகையால் இந்த மதத்தை யாவரும் இச்சிப்பார்கள் மேலும் இம்மதங்களுக் கெல்லாம ஆதிதெய்வமாகிய ஸ்ரீமகாவிஷ்ணு விகாரகிதனாகி எப்போதும் ஒரேவிதமா யிருப்பவன சகலமும் சாதிக்கும்சக்தன் தன்பிரகாசத்தினால் சகலத்தையும் பிரகாசிக்கச்செய்பவன் நிடமாகிய ஆனந்தத்துடன் கூடினவன் சகலத்தையும் தனக்குவசியஞ் செய்துக் கொண்டிருப்பவன் அதிகபுத்தியுடன் கூடினவன் சஞ்சலமில்லாதவன் சிலாக்கியமாகும் வாக்குடையவன் பெருத்தசம்பத்துடன் கூடினவன் விரோதிகளை வெல்லும் சீலன் உன்னிதங்களாகும் புஜபலன்களுடனும் சுந்தரமாகிய கைகளுடனும் சங்குக்கு நிகரானகண்டத்துடனும் கிஞ்சித்து உப்பலாகி யிருக்கும் கன்னங்களுடனும் விசாலமாகி உன்னிதமாகிய கடினமாகிய மார்புடனும பயம் ஜெனிதமாகும்தேக ஒளியுடனும் முழங்காலுக்குக் கீழ்தொங்கும் கைகளுடனும் குண்டாகும் சிரத்துடனும் விசாலமாகும்நெற்றியுடனும் யானையைப்போல கெம்பீரமாகிய நடையுடனும் மிகவும் உன்னிதமும்மிகுந்தகுள்ளமுமாகாமல் தொண்ணூத்தி யாறு அங்குல உயரத்துடன் கூடியதேகத்துடனும் வித்தியாச மாகாமல் சமமாக பாகிக்கப்பட்டிருக்கும் அவயவங்களுடனும் தன்னைப் பார்க்கப் பட்டவர்கள் கண்களையும் மனதையும் கிரகிக்கும் சுந்திர விக்கிரகத்துடனும், மிகுந்த தேஜஸுடனும் தாமரை யிதழ்களையொத்த விசாலமாகிய நீண்ட சிவந்தரேகைகளுடன் கூடியிருக்கும் நேத்திரங்களுடனும் சாமுத்திரிகா சாஸ்திரவிதிப்படி சகல சுபலக்ஷணங்களுடனும் கூடினவன் சகல தர்மங்களையும் அறிந்தவன் சத்தியந்தவராதவன் சகலபிராணிகளுக்கும் நன்று செய்யுமவன் சகலமுமறிந் திருப்பவன் மிகவும்பரிசுத்தன் ஆசித்த அடுத்தவர்களுக்கு சுவாதீனமாகி யிருப்பவன் அடுத்தவர்களைரக்ஷிப்பது முதலாகிய நற்காரியங்களையே யோசிப்பவன் பிரம்மாதிகளுக்கு முன்னவன் லட்சுமீ விலாசத்துடன் கூடினவன் யாவரையும் ரக்ஷிப்பதற்குசமர்த்தன் தன்னையடுத்தவர்களுக்கு விரோதிகளை தண்டிக்குமவன் அவரவர்கள் குணங்களை யோசிக்காமல் சுபகாரியமாக யாவரையும் ரட்சிப்பவன் பாவிகளை தண்டித்து தர்மத்தை ஸ்தாபனஞ் செய்யுமவன் அடுத்தவர்களை நழுகவிடாதவன் வேதசாஸ்திர பிரவர்த்தகன் யாவருக்கும் பிரியனாகி யிருப்பவன் கெம்பீர இருதயமுடையவன் மிருதுபாஷி நதிகளினால் சேவிக்கப் பட்டவனாகும் வருணனைப் போல சாது ஜெனங்களினால்

Koviloor Digital Library

சேவிக்கப் பட்டிருப்பவன் யாவரும் தன்னையடையத் தகுந்த பிறபுத்வத்துடன் கூடியிருப்பவன் பக்ஷ பாதமில்லாதவன ஞானத்தை நடத்துமவன ஓ நான க்ஷாவே நானென்னவென்று சொல்லுவேன் இப் போது என்னால் சொல்லப்பட்டதும் சொல்லப்படா ததுமான சகல சத்குணங்களுடன் கூடினவனும் மே லும் உலகதிருஷ்டாந்தரங்களினால் அவன் குணங்க ளைச் சொல்லுகிறேன் கேளும் கெம்பீரதத்தில் சமுத்தி ரத்திற்கும் தைரியத்தில் மேருபர்வதத்திற்கும் சகல மும் சாதிக்குஞ் சக்தியில் சுயசொரூபமாகிரக்ஷிக்குங் கர்த்தாவாகும் விஷ்ணுவிற்கும் பார்க்கப் பார்க்கப் புதுமையாகும் ஆனந்தத்தை யுண்டாகச் செய்வதில் சந்திரனுக்கும் ஆஸ்ரித சவரக்ஷணை நிமித்தியம் அசுரர் களிடத்தி லுண்டாகும் காலத்தில் பிரளயாக்கினிக் கும், பொருமையில பூமிக்கும் உதாரத்தில் குபேரனு க்கும் சத்தியத்தில் தர்மதேவதைக்கும் சமமாகி யிரு ப்பார் என்று சவிஸ்தாரமாகச்சொல்ல நீயந்ததேவ தேவன் பஜனை செய்வதினால் யாவருக்கும் மேன்மை யாகி யிருப்பாய் அந்த தேவசிகாமணியை தியானித் துத் துருவன் சர்வோத்தம பதவியை யடைந்தான் அந்தஜெகதீசன் தன்பக்தனாகும் பிரகலாதனனுக்காக சபைத்தூணி லவதரித்து அந்த பாகவதோத்தமன் வார்த்தை உண்மை யாகும்படிச் செய்தார். பலிச்சக் கிர வர்த்திக்கு தேவேந்திராதி பத்தியமளித்து எப் போதும் அவன் வீட்டின்துவாரத்தில் வசித்து அந் தச்சிலனை ரக்ஷித்துக்கொண் டிருக்கிறார் மேலுமந்த சகலாத்துமன் நிஜபக்தர்களுக்காகச் செய்த அற்புத காரியங்களைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது ஆகை யால் நீஅந்த ஸ்ரீராமமூர்த்தியை பக்தியுக்தனாகித்துதி செய்யும் அந்தலட்சுமிநாதனை யாராதிக்கும் கிரமத் தைச் சொல்லுகிறேன் கேளும்.

சுலோகம்.

ஜிஃவே கீர்த்தயகேசவம் முராரியும் சேதோபஜ ஸ்ரீதரம், பானித்வம் த்வஸமார்ச்சயா ச்யுதககாஸ் ரோ த்ரத்வயபவமஸநுணும், க்ருஷ்ணம் லோகய லோசனத்பவ ஹரோர்க்கசசாங்க்ரி புக்மாலயம், ஜிக் ரக்ராணமுருந்த பாததுலஸீம் மூர்த்தம் நமாதோ க்ஷஜம்.

என்றால் வாக்கினால் கேசவனைப் புகழப் பாடும் மனதினால் முராஹரியைப் பஜனை செய்யும் கைகளி னால் ஸ்ரீதரனை யர்ச்சனைசெய்யும், செவிகளினால் அச் சுதன் திவ்விய சரிதையைக் கேளும், கண்களினால் ஸ்ரீகிருஷ்ணனை தெரிசனஞ் செய்யும் பாதங்களினால் ஸ்ரீஹரி சந்நிதிக்கு நடந்துசென்றும் மூக்கினால் முகு ந்தன்பாதத் திருத்துழாயை. முகரும் சிரசினால் அ தோக்ஷஜனுக்கு வந்தனஞ் செய்யும் அனாதிகாலமாக அநேக ஜென்மங்களை யெடுத்து இந்திரியவசனாகி சம் சார மருகாந்தாரத்தில் வழிதெரியாமல் பரிதபித்துக் கொண்டிருந்த நினக்கு பகவான் பரமகிருபையினால் உத்தமமாகும் மானிடஜென்மம் கொடுத்தார் இந்த மானிட தேகத்தினால் யாவற்றையும் சாதிக்கலாகும் இந்த சரீரதத்தினால் முமூட்சுவாகி பகவத் பதவியைய டைய மாட்டையே யாகில் மறுபடியு முனக்கிப்படி ப்பட்ட மானிடஜென்ம முண்டாவது அரிது,

சுலோகம்.

"விசித்ரா தேஹஸம்பத்தி
ரீஸ்வராய் நிவேதிதும்
பூர்வமேவ க்ருதாபிரஹ்மன்
ஹஸ்தபாதாதி ஸம்யுதம்."

என்றால் பகவான் விஷயத்தில் விநியோகித்து உஜ்ஜீவிப்பதற்கு சாதனமா ககரசரணாதி அவயவங்க ளுடன்கூடி விந்தையாகும் தேகசம்பத்தை உனக்கு பகவான் அனுக்கிரகத்தினால் கிடைத்தது இந்த அவ யவங்களமர்ந்த தேகத்தை அந்த ஜெகதீசன் விஷயத் தில் விநியோகப் படுத்தும் அப்படி செய்யாமல துர் விநியோகஞ் செய்வையாகில அது சோரமாகும் எமன் தண்டனை தப்பாது ஆகையால் ஜாக்கிரதையு டையவனாகி விஷயங்களென்னும் கொடிய மிருகங்க ளின் வேதனைகளுக்குத் தப்பி ஸ்ரீராம மூர்த்தியின் திருவடிகளை யடுத்து ஜீவனம் செய்யும் என்ற கபீர் தாசர் வார்த்தைகளைக் கேட்ட நானக்ஷா கபீர் திரு வடிகளில் விழுந்து சாஷ்டாங்க தெண்டனிட்டு வின யத்துடன் யெழுந்து நின்று.

சுலோகம்.

"நவைராக்யத்ய லோலாபஃ
கபோதாத பரமஞ்சுகம்
நகுரோர பரஸ்த்ராதா
நஸம்ஸாரத்பரோரிபு."

என்றால், வைராக்கியத்திற்கு மிஞ்சிய லாபமும் நற்போதத்திற்கு மிஞ்சியசுகமும் குருவுக்கு மிஞ்சிய ரக்ஷகனும், ஸம்சாரத்திற்கு மிஞ்சிய சத்துருவமும்

இல்லை என்பதுபோல தேவரீர் ரக்ஷகனுக்கும் மேலானவராகையால் தயவுசெய்து இப்பாமரனை யாண்டிரட்சிக்க வேண்டுமென கபீர் ஓநானக்ஷாவே!

சுலோகம்.

"த்யஜதுர்ஜன ஸம்ஸர்க்கம்
பஜஸாது ஸமாகமம்
குருதர்ம மஹோராத்ரம்
ஸ்மாநித்ய மநித்யதாம்,"

என்பதுபோல துஷ்டர்கள் நேசத்தை நீக்கும் சாதுக்கள் சங்கமத்தைக் கோரிக் கொண்டிரும் இரவும்பகலும் ஓயாமல் சாஸ்திர சம்மதமாகும் தர்மங்களை யனுஷ்டியும் தேகம் நீர்க்குமிழியை யொத்ததென்றெண்ணி அதின் அநித்தியத்தை எப்போதும்தியானித்துக் கொண்டிரும்.

சுலோகம்.

"மஸ்தகஸ்தாயிநம் ம்ருத்யும்
யதிபஸ்யேதயஞ்சந
ஆஹாரோபி நரோசேத
கிமுதாகார்யி காரிதா."

என்றால், தன்தலையின்மீது உட்கார்ந்திருக்கும் மிருத்யுவை தெரிந்துக் கொண்டவனுக்கு ஆகாரம் முதலாகியதும் ருசிக்காதென்றால் நரகானுபவங்களாகும் கெட்ட காரியங்களில் எப்படி மனது பிரவேக்கும் என்று ஹிதோபதேசம் செய்த கபீர்தாசர் வாக்கியத்தைக்கேட்டு நானக்ஷா ஆர்த்தஹிருதயனாகி ஜயசங்கத்தி லிடுபட்டு கபீருடன் சாதுக் கூட்டத்திலிருந்தார்.

இந்தப்படியாக சிலநாள் சென்றபின்பு காசி க்ஷேத்திரத்திற்குக் கொஞ்ச தூரத்திலிருக்கும் சேரியில் சக்கிலிகுலததிலுதித்த ரோஹிதாசனெனும் பரமபாகவதன் சதாசார சம்பன்னனாகி பகவத் உபாசனை செய்துக் கொண்டு பக்தி வைராக்கியங்களில் தனக்கு நிகரானவர்களில்லையென்று பிரசித்தியடைந்திருப்பதைக் கேட்டு அவரைப் பார்க்க வேணுமென்ற அபேக்ஷைகொண்டு கபீர்தாசர் ஓர்நாள் காலையிலவிடத்திற்குச் சென்றார் அப்போது ரோஹிதாசர் ஸ்நானாநுஷ்டானங்களை முடித்து த்வாதச ஊர்த்துவ புண்டரங்களை தரித்து கண்டத்தில் வனமாலை வனசமாலை தாழ்வடமணிந்து கிருஷ்ணாசனத்தின் மீதுட்கார்ந்து திருத்துழாய் தளங்களினால் தனக்கிஷ்டதெய்வமாகிய ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப் பக்திப் பிரரப்திகளினால அர்ச்சித்துக் கொண்டிருந்தார் அப்போது வீட்டிலிருப்பவர்கள் ரோஹிதாசரிடஞ் சென்று கபீர்தாசர் வந்திருக்கிறாரென்று சொல்லவே அவர் பரமானந்தமடைந்து திருவாராதனையை நிறுத்தி சடக்கென எழுந்தெதிர் சென்று பயபக்தி வினயத்துடன் நமஸ்கரித்து வீட்டிற்குள் அழைத்துச்சென்று உச்சிதமாகிய ஆசனத்திலெழுந்தருளச் செய்து தாங்கள் ஏழைமீது கிருபைசெய்து இக்குடிசைவீட்டிற் செழுந்தருளிய படியால் தன்னியனாகினேன் எங்கள் பிதுர்க்கள் யாவரும் கிருதார்த்தர்களானார்கள் தங்கள் பாதம் பட்டபடியால் பவித்திரமடைந்தேன் என்றுசொல்லி அவரை வெகுவிதங்களாகப் புகழ்ந்துக் கொண்டாடினார் அவர் நயவசனசாந்தத்திற்கு கபீர்தாசர் சந்தோஷித்து ரோஹிதாசருக்கு வந்தனஞ்செய்து அவர்செய்யும் ஆராதனையைப்பார்த்துக் கொண்டிருந்தார் அப்போது ரோஹிதாசர் ஓகோ இவரென்ன பாகவதாராதனை நடக்கிறபோது நிம்மதியாயுட்கார்ந்துக் கொண்டிருக்கிறார் இவரைப் பரமபாகவதரென்று பலரும் புகழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள் இவர் நடவடிக்கையைப் பார்க்கையில் மிகவுமாச்சரியமாகியிருக்கிறது என்றுதனக்குள் தானாலோசனை செய்துக்கொண்டு ஐயாநீங்கள் விஷ்ணுபக்தரா யிருந்தும் சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு என்வந்தனஞ் செய்யாமலிருக்கிறீர் இப்படிக் கிருப்பது வைஷ்ணவ தர்மமல்லவே பகவான் ரூபத்தைப் பார்த்தவுடனே பிரபக்திசெய்ய வேண்டியதென்று சாஸ்திரங்கள் முறையிட்டுக் கொண்டிருக்க அதற்கு விரோதமாக நடக்கிறபக்ஷத்தில் சொரூபத்திற்குக் கெடுதி சம்பவிக்குமல்லவாவென்று வற்புறுத்திச் சொன்னார் அதற்குக் கபீர்தாசர் புன்னகைப் புரிந்து நீர்சொல்லியவார்த்தை உண்மையேயாகிலும் நினது ஆராதனையைப் பார்க்கையில் அசுசியாகயிருக்கிறது இப்படிப்பட்ட க்ஞானத்தை நினக்கு யாவர் கற்பித்துவைத்தார்களோ ஆகிலுமஇதுமிகவும் துராசாரம் என்னென்றால் பாத்திரங்கள் முதலாகிய பரிகாரங்கள் யாவும் தோல்மயமாகி யிருப்பதுந் தவிர ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைக் கூட தோலினால் தானே செய்யப்பட்குருக்கிறாய் இப்படிப்பட்ட அசிங்கமாகிய தோல் பொம்மைக்கா நான் தெண்டனிட வேண்டும் சரிசரி மெத்த நன்றாயிருக்கிறது. ஜாதிக்குத் தகுந்தநீதி" என்றவசனம உன்னிடத்தில் பிரத்தியக்ஷத்தில் கண்டேன் உன்குணம் எவ்வளவு சீலமோ அவ்வளவே நின்பூசையும் என்றதைக் கேட்ட ரோஹி

Koviloor Digital Library

தாசர் சிறித்து நீங்கள்சொல்லும் வார்த்தைகளேயே மிக்க மிகவும் ஆச்சரியமாக யிருக்கிறது உலகத்தில் தோல்மயமாகாத பதார்த்தம் ஒன்றேனு முண்டோ பபீலிகாதி பிரம்ம பரியந்தமாக சகல ஜெந்துக்களும் தோல்மயங்களா யிருக்கிறது பேரிமிருதங்காதிகருவி விசேஷங்கள் சர்வமும் தோலால் செய்யப்பட்டதாகி யிருந்தும் ஹரிபஜனை முதலாகியசமயங்களில் தோற் கைகளினல வாசிக்கப்பட்டு தோற்செவிகளுக் கின்பமாக சப்தித்துக் கொண்டிருந்தது நீலவர்ணத் தோலுடைய பசுவின் பால்மிசவும் மேலானதென்று யெண்ணப்பட்டு தேவாதி தேவன் திருமஞ்சனத்திற்கு உபயோகப் படுகின்றது பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரவர்னத்தார் யாவரும் தோற்போர்வை யுடையவராகியே யிருக்கிறார்கள் தோற்கைகளி னலேயே ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப் பூசிக்கிறார்கள் தோல்மயமாகிய சரீரத்திற்குள்ளே சர்வாந்தரியாமியாகி பரமாத்துமன் வசித்துக் கொண்டிருக்கிறான் பூமிப்பாரத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு விஷ்ணுவானவர் கிருஷ்ணமூர்த்தியாய் அவதரித்தபோதும் பஞ்சபூத சம்பந்தமாகிய தோல்மய சரீரத்தையே தரித்தார் தத்துவமிப்படியிருக்கையில் தோல்விக்கிரகத்தை சேவிக்கக் கூடாதென்று நீங்கள் நிவர்த்தி செய்ததைப் யோசிக்கையில் யுக்தமல்லவென்று தோன்றுகிறது சகலத்திலும் அந்தரியாமியாகி சகலவியாபியாகி யிருக்கும் பரமாத்துமனுக்கு இந்தயிடம் அந்தயிடமென்றபேதமேது புண்டரீகவரதன் தனது சுதந்தரத்தினல் பக்தி சுலபனுகி ஸ்ரீபண்டரி க்ஷேத்திரத்தில் எல்லாஜாதியாரும் தன்னை ஆலிங்கனஞ்செய்துக் கொள்ளுவதாகும் ஆராதிப்பதற்கும் சம்மதித்து யிருக்கிறாரல்லவா சண்டாளயோனியில் ஜென்மித்தவனுகிய சோகமேளர்பக்திக்குப் பரவசனுகி அவர்வீட்டில் புசித்து அவர்கையைப் பிடித்துக்கொண்டு ஆலயத்திறகுள்போ யிருந்தது ஜெகத்தில் பிரசித்தமாகி யிருந்தது மேலும் பகவான் நாமதேவருடைய எச்சிலை புசித்ததுவும் ஜெனுபாயுடன் ஏகபாத்திரத்தில்அன்னமபுசித்ததுவும் அமமாது செய்யவேண்டிய பரிசார கிருத்தியங்கள் யாவற்றையும் தானே செய்ததும் ரகசியமல்ல அப்படிப்பட்ட தீனபந்துவாகிய உத்தமப்பிரியன் பக்தர்கள் மனசிலத்தைப் பார்த்து ஆவந்திப்பிரேயல்லது ஜாதி பேதத்தை எண்ணமாட்டார் அந்த பக்தவச்சலன் லீலைகளுக்கு ஆனந்திக்க வேணுமேயல்லது அசிங்கியப்படுவது தங்கள் நேத்திரங்களுக்கு தர்மமல்லசபரியெச்சிலைப் புசித்தவனுக்கு தோல்மாத்திரம் நீக்கப்பட்டதல்ல.

சுலோகம்.

"பக்தைான் வப்யுபாநீதம்
ப்ரேம்ணு பூரியேவமேபவத்
பூர்யப்யபக்தோ பஃருதம்
நமேதோஷாக கல்பதே."

என்றால் என்பக்தன் அணுவைக் கொடுத்தாலும் பிரியத்துடன் பெருத்த மலையாக அங்கீகரிப்பேன் பக்தியில்லாதவன் விசேஷயாகக் கொடுத்தாலும் நான் சந்தோஷிக்க மாட்டேனென்று பகவான் தானே சொல்லியிருக்க வில்லையா இப்படிப் பட்ட பிராமணர்கள் தங்கள் நேத்திரங்களுக் கரிக்கையாகி யிருந்தும் ஏனிப்படி வசனிக்கிறீர், எங்குலத்தோர் பகவானை ஆராதனைசெய்யினும் பக்தியொன்றே முக்கியமாகியதுபோல பரமபுருஷனுகிய கிருஷ்ணமூர்த்தி யொருவரே உலகத்தில் யாவரும் ஆராதிக்கத் தகுந்த தெய்வமல்லாமல அன்னியர்களல்லர் அப்படிப்பட்ட மகானுபுருஷன் விஷயத்தில் அகௌரவமாக எண்ணுவது தங்களை யொத்தவர்களுக்கு உசிதமல்லவென்று சொல்லக்கேட்டு கபீர் புன்னகை செய்து எங்கள் ராமமூர்த்திக்காகிலும் உத்திருஷ்டமாகிய தெய்வ மொருவனுமில்லை உமதுகிருஷ்ணன்நேற்றைய துவாபரயுகத்தி லுற்பவித்தவன் அவனிடத்திலப்படிப்பட்ட மகிமைகளொன்று மில்லை ஏதோ சிலது இல்லாததும் பொல்லாததுமாகிய யுக்திகளைச் செய்து அன்னியர்கள் குடியைக் கெடுத்ததால் பரத்துவமும் பிரமசாரியு மாவனே எங்கள் ஸ்ரீ ராமமூர்த்தியின் மகத்துவம் உனக்கு தெரியாது என் வீணுய் அவதரித்துக் கொண்டிருக்கிறாய் போதும் போதும கினதுவாயைமூடும் என்று கடிந்துரைததார்.

ரோகிதாசருக்கும்கபீருக்கும் தர்க்கம்.

ரோஹிதாசர்—சர்வ உத்தமமாகிய தெய்வம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே என்பதற்கு சுகர் முதலாகிய பரம பாகவதர்களுக்கு சதாநிவாசஞ் செய்யப் பதவி தருவதாகி யாவர்களாலும் ஆதரிக்கப் பட்டிருக்கும் ஸ்ரீமகாபாகவதமேபோதுமான சாக்ஷயாயிருக்கிறது உங்கள் ராமனைப் போலொத்தவர்கள் பதினயிரம் பேர்களானுலும் எங்கள் கிருஷ்ணமூர்த்திக்குச் சமானர்களாகார்கள் அதிருக்கட்டு வேதங்கள் துசிப்பதாகிய பரப்பிரமமே தர்மத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு ஸ்ரீராமமூர்த்தியாய் அவதரித்தபக்ஷத்தில் வேத வேதாந்தங்கள் யாவையும் விதிப்படியனுஷ்டித்திருக்

Koviloor Digital Library

கும் பிரேஷ்டமாகிய பிராமணகுலத்தி லவதரிக்காமல க்ஷத்திரிய குலத்தி லவதரிப்பதற்குக் காரணமென்ன?

கபீர்—துஷ்டர்களை சிக்ஷைசெய்வது பிராமணர்களுக்கு விதியல்ல ஆகையால் அவர் உத்தம க்ஷத்திரிய வம்சத்தி லவதரித்தாரே யல்லது உங்கள் கிருஷ்ணனைப்போல மதிப்பிரஷ்டர்களாகிய ஆயர்குலத்தில் பிறந்தவனல்லன்.

ரோஹி—எங்கள் கிருஷ்ணமூர்த்தி ஆயர்கள் குலத்திற் பிறந்தபோதிலும் கரித்துணி யதனில மாணிக்கததிற்கு நிகராகி பரவியாகாசத்தில் நான்குபுயங்களோடு சங்குசக்ராதி பஞ்சாயுதங்களையும் தரித்து நிஜஅம்சத்துடனவதரித்தார் அல்லது உங்கள் ராமனைப்போல கேவலம் மானிடரூபத்துடன் அவதரித்தவனல்ல இதினாலேயே பக்தரக்ஷணத்தில் அவருக்கும் இவருக்கும் உண்டாகிய சக்தியின் தாரதம்மியங்கள் வெளிப்பட்டிருக்கின்றது.

கபீர்—ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய வெண்மைநீல கேசாம்சங்களே ராமகிருஷ்ணர்களாகி ஜென்மித்ததாக பாகவதாதி கிரந்தங்கள் சொல்லப்பட் டிருக்கிறது எங்கள் ராமமூர்த்தி விஷ்ணுவினுடைய யர்த்தாம்சத்தில் அவதரித்தவரென்றும் இதினாலேயே யவருக்கு இருதயங்களாகி யம்சங்களுண்டாகிய தென்றும் மிகுந்தபாதியில் பாதனோம்ச மென்றும் லக்ஷமண சத்தருக்கரொரு யம்சமென்றும் முக்கியப் பிரமாணங்களாகிய இராமாயணாதி அநேக கிரந்தங்களில் முறையிடுகின்றது ஆகையால் எங்கள் ராமமூர்த்தி விஷ்ணுவினுடைய பூர்ணகலை என்பதற்கு அணுவாகிலும் சந்தேகமில்லை வெள்ளை நீலகேசாம்சங்கள் ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய பூர்ணகலையில் எத்தனை யம்சங்கள் குறைந்திருக்குமோ அதைநீயேயூகித்துக்கொள்ளென்றார்.

ரோஹிதாசர்—அன்னியர்களால் சண்டமாருதமெடுத்து கோபிகோப கோகணங்களைக் காக்கவரிதாகிய கோவர்த்தன கிரியைச் சுமந்து கோபாலாதியர்களை ரக்ஷித்த அமானுஷக் கிருத்தியங் களினாலேயே வெண்மைநீல கேசாம்ச சம்பவர்களுடைய மகத்துவமிப்படிப்பட்டதென்று யாவத்திராளுக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கின்றது உங்களிராம னேதாகிலும் அப்படிப்பட்டஅமானுஷகிருத்தியங்கள் ஒன்வேனும் செய்திருக்கிறாரா அதைச் சொல்லும் என்றார்.

கபீர்தாசர்—சபாசு ஆச்சரியத்தைத் தருவதாகிய விஷயத்தைச் சொல்லவந்தாப் சடன்பட்டவனைப்போல எங்கையோ விழுந்துவிழுந்து கிடந்த உபயோகமற்ற குன்றொன்றை சுமந்ததினாலேயே என்ன விசேஷம் எங்களிராமமூர்த்தியின் பாததூளியின் அனுவம்பிரமாத்திரத்தினால் கல்லைப் பெண்ணாகச் செய்து அவர்சேவகர்கள் ஆகாயத்தை யளாவிய பெருத்தபர்வதங்களைப் பேர்த்துக் கொண்டுவந்து ஜலத்தின்மேல் பூச்செண்டுகளைப் போல மிதக்கச் செய்தார்கள். இப்படிப்பட்ட தேதாகிலும உங்கள் கிருஷ்ணன் செய்திருக்கிறாரா அதைத் தெரியச் சொல்லும் என்றார்.

ரோஹிதாசர்—கல்லைப் பெண்ணாகச் செய்து கீர்த்தியையடைந்த உங்களிராமன் கிஞ்சித்தேனும் மனதில் நீதியைபெண்ணாமல் தாடகையை சங்கரித்தாரே அவர்உத்தம க்ஷத்திரியனாயிருந்தும் இப்படிப்பட்ட ஸ்ரீஹத்தி செய்யலாமா வென்றார்.

கபீர்தாசர்—அன்ன மிட்டவர்கள் கண்ணைக் குத்தியதுபோல பிரியத்துடன் முலைதந்த பூதகியை காரணமில்லாமல் கொன்று பாவமூட்டையைக் கட்டிக்கொண்ட உங்கள் கிருஷ்ணனைப் போல எங்களிராமமூர்த்தி யன்னியாயமா யெதுவுஞ் செய்தவரல்ல தர்மத்தை யனுஷ்டிப்பவர்களை அதுசெய்ய வொட்டாமற் கொடுத்து துஷ்கர்மங்களை யனுஷ்டித்துக்கொண்டிருந்த துன்மார்க்கியாகிய அரக்கியை தண்டனை செய்தாரேயன்றி அநீதி யொன்றும் செய்யவில்லை என்றார்.

ரோஹிதாசர்—பாபாத்துமாக்களை வதைசெய்வது அவசியமான விதியென்று சாஸ்திரங்கள் முறையிடுவதால் எங்கள் கிருஷ்ணமூர்த்தி நகரங்களிலும் குக்கிராமங்களிலும் உள்ளசிறுபிள்ளைகளை யெல்லாம் கொன்று சிசுஅத்தியினால் உலகங்களைக் கலங்கச்செய்துக் கொண்டிருந்த பாபத்துகளாகிய அரக்கியை வதைசெய்தா ராகையால் அவருக்குப் பாபமில்லை யென்று சொன்னார்.

கபீர்தாசர்—பல்லைக்குள் வசித்து பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த இடையனுக்குக்கூட அவ்வளவு சாஸ்திர க்ஞானமுண்டாகி யிருந்ததாவென.

ரோஹிதாசர்—சர்வக்ஞ ராகிய பரப்பிரம்ம சொரூபனுக்குத் தெரியாத விஷயமென்ன யிருக்கிற தென்றார்.

Noolaham Digital Library

கபீர்தாசர்—சர்வ சந்தியாதிகுண விசிஷ்டமுடைய சச்சிதானந்த பரப்பிரம்மமே பூரணாம்சம் பொருந்தி யவதரித்து யிருக்கிற பக்ஷத்தில காலங்கடந்த பின் சாந்தீபரிடத்தில் வித்தையைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமென்னவென.

ரோஹிதாசர்—உங்களிராமன் மாத்திரம் குருசேவைசெய்து வித்தை கற்றுக்கொள்ள வில்லையாவென்றார்.

கபீர்தாசர்—பூரண அம்சமாகையால் சர்வசக்தியுக்தனாகிய விசுவாமித்திரரிடத்தில் பூர்வம் தான் வைத்திருந்த பலா அதிபலவென்னும் திவ்விய வித்தைகளை யோர்நிமிஷமாத்திரத்தில் கற்று அதின் மகிமையினாலேயே சர்வக்ஞானத்தியாதி குணங்களை சம்பூரணமாக வடைந்தார் உங்கள் கிருஷ்ணனுக் கேதாகிலும் அப்படிப்பட்ட சக்தியுண்டாவென.

ரோஹிதாசர்:—ஆஹா! என்னவார்த்தைசொன்னீர் எங்கள் கிருஷ்ணபகவான் சர்வசந்தன் என்பதற்குச் சந்தேகமென்ன? அக்னி முகத்தால் தேவர்களென்பதுபோல, குருமுகமாயிருந்து வித்தையென்ற வேதரூபமாகும் தன்கட்டளையைத் தானே பரிகரிக்கும் பக்ஷத்தில் தர்மத்திற்கு அழிவுவந்துசம்பவிக்குமென்றுயெண்ணி குருசேவைசெய்து அறுபதுநாளையில் அறுபத்துநான்கு வித்தைகளையும் பூரணமாகக் கற்றுக்கொண்டார் இதற்காக அவரை சர்வக்ஞானரல்லவென்று நீக்கிவிடலாமாவென்றார்.

கபீர்தாசர்:—இவ்வளவு தர்மத்திற்தேர்ச்சியுண்டாகிய யதினால்தானோ யாதவர்கள் வீட்டில் பால்வெண்ணை தயிர்களைத்திருடி பொய் சொல்லுவதற்கு ஆரம்பித்தாரென.

ரோஹிதாசர்:—வேதங்களைக் கற்று தேர்ச்சியடைவதற்கு சிக்ஷை சொல்லிக்கொள்ள வேண்டியது முக்கியமாகியதுபோல பகவத் விசாலங்களினுடைய உண்மையை யறிவதற்கு வேதாந்தசாஸ்திரவிசாரணை அவசியமாக வேண்டியதாயிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பால் தயிர் வெண்ணை முதலாகிய பதார்த்தங்கள் யாவையும் இடையர்கள் வீட்டில் புகுந்து புசித்தாரென்ற காரணத்தால் கர்மப்பிரவாக பிராப்தங்களாகிய தேகங்களென்னும் வீட்டினிடத்தில் புகுந்து சத்குருநாதன் கிருபையினால் சம்பவித்த பக்திக்ஞான வைராக்கியங்களென்னும் போக்கியபோக உபகரணங்கள்யாவையும் புசித்தாரென்ற தாத்பரியமேயல்லது வேறல்ல பகவான் லீலாகாரியங்கள் யாவும் கர்மசாரசுருதியுண்மைகளாகையால் சுப்பிரசித்தங்களே யல்லது அபபிரசித்தங்களும் அசுத்தங்களுமல்ல அவர் சர்வக்ஞரென்பதற்கும் சர்வ சக்தரென்பதற்கும் சர்வததிற்கும் மேலாகியவ ரெனயதற்கு பரதுவனென்பதற்கும் மண்ணைத் தின்றாரென்ற சந்தேகத்தினால் தன்னைப் பரிசோதிக்கவந்த அசோதைக்கு விஸ்வரூபத்தைக் காட்டினாரென்று விஷயமே முக்கியமான சாக்ஷியாயிருக்கின்றது அதுபோல் உங்களிராமனே தாகிலும் விசுவரூபம் காட்டி யிருக்கிறாரா சொல்லுமென்றார்.

கபீர்தாசர்:—பாமரஜெனங்கள் மனங்களிக்கும்படியாக கண்கட்டு முதலாகிய ஜாலவித்தைகளைக் காட்டும் இந்திரஜாலங்களைப் போலவும், யான உபாசனைகளுடைய வாசனைகளேது மரியாத பாமரவனிதைக்குக் காட்டிய விசுவரூபமத்தனை சிலாக்கியமானதல்ல மனபரிபாக மில்லாதவர்கள் முன்னம் தன்மகிமைகளைக் காட்டியதினால் அவருக்கேதும் கௌரவமில்லை பக்திப்பிர பக்திகளுடன் அனேகமனுவந்தரங்கள் பிரயத்தின பூர்வமாக ஆராதித்து எத்தனையாகப் பிரார்த்தித்த பார்வதி பரமேஸ்வரர்களுக்கு பரிபாகநிசையை குறிப்பறிந்து எங்களிராம மூர்த்தி விசுவரூப தெரிசனையைப் பிரசாதித்தார். இதுவரையில் இந்தவிஷயம் எப்போதும் நீர்கேட்டதில்லையோ விருக்கிறதென.

ரோஹிதாசர்:—குரு உபாசனைகளை அறியாதவர்களென்று கோபிகாஸ்திரீகளைக் கேவலப் படுத்துவது நன்றல்ல. பரமசலபாதி கல்யாண குணங்களுடன் பிரகாசித்திருக்கும் பரப்பிரமம் கேழ்வி மன்னாதிகளிடத்தில் அவிச்சின்ன தைல தாரைகளைப்போல நிர்ச்சலனமடைந்த அந்தக்கரண விருத்தியைப் போலவெ லபிக்கவேண்டியதல்ல அந்த எதிருகதங்களாகிய தன்னை மறந்திருப்ப தில்லாததினாலும்லபிப்பதுமல்ல ஆகையால் நேசர்களாகியஉத்தவாதிகளும் சத்துருககளாகிய சைத்தியாதிகளும் காமமோகிதர்களாகிய கோபிகாஸ்திரீகளும்தேகத்தியானத்துடனிருந்தபடியால் அனுக்கிரகத்திற்குப் பாத்திரராகினர்கள் என்றார்.

கபீர்தாசர்:—நீர் சொல்லியதுபோல உங்கள் கிருஷ்ணன் யாவத்திரார்களும் தியானிக்கத்தகுந்தவனாகி விஷயப்பிரவி கத்தியில்லாத சற்பாவனையினால் பாலிக்கத் தகுந்தவனாகி யிருப்பது உண்மையாகிய பக்ஷத்தில் அற்பவிஷயங்களிடத்தில் ஆசையுண்டாகி தன்னைநத்திய இடப்பெண்களை எல்லாம் மோகித்து மன்மதவிகார சம்பந்தமாகிய சாரபாவங்களை யுண்

டாக்கி ஜாரிருத்திக்கேன்புகுந்தான் இதினால் அவனுக்குண்டாக்கிய கௌரவ மென்னவென.

ரோஹிதாசர்:—தாமரை இலையில் ஒட்டாத தண்ணீர்போல, எதிலும் ஒட்டாம லிருந்ததினாலும் சௌலப்யாதி கலியாண குணங்களுண்டாகி யிருந்ததினாலும் சத்விஷயிக வியாபாரந்தன்னில் தர்மங்களினால் ரிஷிகேசனாகி யிருந்ததினாலும் சதா தன்னை யாராதிக்கும் கோபிகாஸ்திரிகளை ரமிக்கச்செய்து பரிபூரண பிரம்மானுபவத்தை பிரசாதித்த எங்கள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு இந்திரிய தர்மங்களெவ்வளவும் உண்டாகமாட்டாது அவர்யாவத்திராளுக்கும் சொற்பமாக உபாசிக்கத் தகுந்தவரே யல்லது உங்களிராமனைப்போல வைராக்கியர்களுக்கு மாத்திரமே உபாசிக்கத் தகுந்தவரல்ல இதினால் உங்களிராமர் விஷயத்தைப் பார்க்க வித்தையுமில்லை கௌர்யமுமில்லை யென்னுமாபோல் சம்சாரமெனும் கூபத்தினுள் அகப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் ஆதரிக்கத்தக்கசக்திதனக்கில்லாமையைப் பற்றி அத்த மேலாகிய விஷயத்தில் பிரவேசித்தவ ரல்லவென்று தோன்றுகிறது சர்வசக்தித்துவமில்லாமற் போனபின்பு தன்னை யுபாசித்த வைராக்கியர்களை யாகிலும் ரக்ஷிப்பாரென்ற சொல் எப்படி விசுவாசிக்கக்கூடும் என்றார்.

கபீர்தாசர்:—விரக்தியடைந்து தன்னை ஆஸ்ரயித்த முமுட்சுகளுக்கு சுயதர்ம பிரஷ்டத்துவத்தை யுண்டாக்கவேண்டியமுயர்ச்சியை யெடுத்துகொண்ட மாரிசாதி நிசாசரர்களை யெல்லாம் சிக்ஷைசெய்து மோக்ஷமளித்தபடியால் எங்களிராமமூர்த்தி சர்வசக்தியுடைய வல்லவனென்று பிரசித்தமாய் விளங்குகின்றது இதை யுணராமல் சேர்க்கவும் தியானிக்கவும் புகழ்வதற்கும் பிரியங்கொண்டிருக்க கோபிகாஸ்திரிகளுடைய இஷ்ட தெய்வங்களை யெல்லாம் உங்கள் கிருஷ்ணன் எச்சலுமிழ்ந்து அவர்கள் லக்ஷ்ய உபாசனையைக் கொடுத்து வைராக்கியங்களைசாதகர்களாகச் செய்வதுபோல எங்களிராமபரமாத்துமா ஏதாகிலும் செய்திருக்கிறாரா சொல்லுமென.

ரோஹிதாசர்:—"ஸர்வம் கல்விதம் பிரஹ்ம" என்னும் சுருதிவாக்கியபடி, தேவதிரிய மனிதாஸ்தாவரங்களாகிய சகல பிரபஞ்சங்களுக்கும் தானேமுதற்காரண வஸ்துவாகி யிருக்கிறதனை தெரிந்துக் கொண்டு தன்னிடத்தில் லக்ஷிய தியானஞ் செய்யாமல் தனக்குக் கீழ்ப்பட்ட அற்ப பதார்த்தங்க ளிடத்தில் கோபிகாஸ்திரிகள் லக்ஷியம்வைத்த பக்ஷத்தில் பரமார்த்த அந்தரங்தோன்றிப் பிரசன்னத்திற்கு விபர்த்தம் சம்பவிக்குமென்று யெண்ணி அந்தலக்ஷியத்தை நீக்கும்பொருட்டு அவ்வனிதைகளுக்கு லக்ஷியங்களாகிய அன்னியதேவதைகள் பூசையை நிவர்த்தி செய்வதற்கே கேவலரூபமாகி நீக்கப்பட்ட நிலையையுடைய ஒருமாயையை யுண்டாக்கினரே யல்லது வேறொன்றிற்காகவல்ல சொந்தப் பிரசாதத்தைவிட்டு பிக்ஷையன்னத்திற்கு ஓடுகிறதைப்போல சகலத்திற்கும்காரணவஸ்துவாகிய தானே பிரசன்னராகி யிருக்கையில் அன்னிய தேவதையை சேவிப்பது என்ன ஞாயமோ அதைநீரே யோசித்துக் கொள்ளும் சதாகாலமும் நற்குணங்களினால் இந்திரியங்களை நீக்கி பரமேகாந்திகளை வசித்திருக்கின்ற விஸ்வாமித்திரர் முதலாகிய முனி சத்தமர்களுக்கு தன்னகண்ட சச்சிதானந்த சொரூபத்தை கிஞ்சித்தாகிலும் தெரியச் செய்யாமல் திரவியமுண்டாகிய ஒருதன் தரித்திரனைப் போல பிக்ஷையெடுக்க ஆரம்பித்ததற்கு நிகராக சத்தவேழ்மையையடைந்து அந்தமுனிவர்களையடுத்து உங்களிராமன் சுயரூப க்ஞானத்தை சம்பாதித்துக் கொண்டதைப் பார்க்கையில் மிகவும் விந்தையா யிருக்கிறதென்றார்.

கபீர்தாசர்:—"தர்மசம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" யென்றும், "ஸ்ருதிஸ்ம்ருதிர் மமைவாக்ஞா", யென்றும் பகவான் தானே சொல்லியிருப்பதினாலே தர்மத்தை நிலைநாட்டுவதாகிய தன் பெருமைக்கு அழிவுவராமற்படிக்குக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது முக்கியமான தர்மமாகையால் வைராக்கியமுதலாகிய தர்மங்களை அனுஷ்டிக்கும்முனி சிரேஷ்டர்களுடைய உண்மைக்ஞானத்தை யறிந்து கொள்வதற்காக அம்முனிவர்களை யடுத்து வேண்டிக் கொண்டாரே யன்றியில தனக்குக் ஞானமார்க்கம் தெரியாமலல்ல இப்படிப்பட்ட எங்களிராமபரப்பிரமத்தினுடைய மகிமைக்கொருநாளும குறைவுவராது சந்திரகுலத்தரசர்களிற் பிறந்தவனாயிருந்தும் விதிப்படி உபநயனமுதலாகிய சம்ஸ்காரங்களை யடைந்து சாந்தீபரிடத்தில் வேதங்களை ஆதியந்தமாகஅப்பியாசித்திருந்தும் நிர்மல சித்தத்துடன் அத்தர்மங்களை கிரமமாக நடத்தாமல் பிரம்மசாரியிடத்தில் கூட சாஸ்திரத்தில் நீக்கப்பட்டதாகிய குப்ஜையின் சங்கம் அற்பகாரியங்களில் பிரவேசித்த உங்கள் கிருஷ்ணனுக்கு வேதவித்து வேதவிகிதனென்றும்நாமம் எப்படி சித்திக்கும் 'வேதவிதேவசாஹாம்ம" என்றும் "ஆசார பிரதமோதர்ம" யென்றும், "தர்மஸ்ய ப்ரபுரச்யுத" யென்றும் சுருதிஸ்ம்ருதிகள் முறையிட்டுக்கொண்டிருக்க அதற்கு விரோதமாக நடப்பவர்களுக்கு குருபக்தி எவ்விதமா யுண்டாகும் என.

Koviloor Digital Library

ரோஹிதாசர்:—அடா துலுக்கனே நின் துடுக்கு புத்தியை விடமாட்டாயல்லவா சீதையை சாதலத்தி லழுந்தச்செய்து பிழைப்பில்லாமல் சரயூநதியில் விழ்ந்து பிராணனை விட்டுவிட்ட நின்னிராமனை என்னமோ மிகவும் மேலானவனென்றுசொல்லி ஏமாற்ற வந்தாய் ஆகா நினது விவேகத்தை என்னென்றுசொல்லலாகும போதும்போதும் இத்துடன் நினதுபிரசங்கத்தை நிறுத்துமென்றார்.

கபீர்தாசர்:—அடா சக்கிலிப்பயலே உனக்கித் தனை கெர்வமா? தறுதறி சமஸ்காரங்களுக்கு திக்கில்லாமல் அர்ச்சுனன்வந்து நிறைவேற்றும பரியந்தம் அநாதிபிணத்தைப்போல காட்டினில்விழுந்து கிடந்து முடிவில் பாதிவெந்தும் வேகாமலும் குறைகொள்ளியாய் கடலுக்குள் அடித்துக்கொண்டு போன நினது கிருஷ்ணன் பிரதாபத்தை என்னமோ வெகுவாக என்முன்னம்பிதற்றவந்தாய் அர்ச்சுனனைவிட்டு பதினாயிரம் ஸ்திரீகளை வழியில் திருடர்க ளடித்து ஆபரணங்கள் யாவற்றையும் கொள்ளையடித்தபோது உங்கள் கிருஷ்ணன் பிரதாபம் எவ்வளவு பரிமளித்ததோ அதை நீயறியாயோ அதைவிட்டு வீணாகவோ வென்று கூக்குரலிட்டு சர்வ லோக சரண்யனாகிய எங்களிராம பிர்ம்மத்தை நிந்தைசெய்கிறையா உன்னை என்ன செய்கிறேனோ பாரென்று கோபத்தினால்கண் சிவக்கப் பற்களை நறநறவென்று கடித்து இடையில் வைத்துக் கொண்டிருந்த சோடாதடியை கையிலெடுத்துக்கொண்டு ரோஹிதாசர் தலையின் மேலடிக்கப் போயினார் அப்போது மகா விஷ்ணுவானவர் நாம் இவர்கள் வாதத்தை நீக்கிச் சமாதானப் படுத்தாமலிருந்தால் விபரீதம் நேரிடுமென்று எண்ணி விநாயகர் ஆதித்தன் பிரம்மா சரஸ்வதி முதலானவர்களையு மனுப்பி அவர்கள் வாதத்தை நீக்கிவரும்படி நியமிக்க அவர்கள் சென்று வெகுவாய் சமாதானப்படுத்தியும் வாதம் தீராமற் போனபடியால் பரமசிவனை நோக்கி நீராகிலும் சென்று அவர்கள் வாதத்தை நீக்கி சமாதானப்படுத்தி வாருமென்று சொல்லி அனுப்பினார் அவர் மகா பிரசாதமென்று உடனே ரிஷபவாகனத்தின் மீதேறி பார்வதிசமேதராக புறப்பட்டு கபீரிடத்திற்கு வந்து ஐயா பரமபாகவத சிகாமணியே ரோஹிதாசருக்கும உனக்கும் நேரிட்ட தர்க்கத்தைத் தீர்த்துசமாதானப்படுத்திவரும்படியாய்பகவான்கட்டளையிட்டபடியால் நான் இவ்விடம் வந்தேன் நீங்களிருவரும் என்வார்த்தையைக் கேழ்க்க வேண்டியது அதென்ன வெனில் ரோஹிதாசர் சொல்லியது தேவர் மூவர் யாவருக்கும் சம்மதி யாகியது அவர்பத்தி மிகவும் பரிசுத்தமாகியது கிருஷ்ணபகவான் பரன் விராட் டென்பதற்கு அணுவளவும் சந்தேகமில்லை இந்த விஷயத்தில் நீங்கள் பேதமனதுடைய வர்களாகி வாதுசெய்வதினால் லாபமேதுமில்லை கோபதாபங்களை விட்டு நீங்களிருவரும் சமாதானமாவது உத்தமமென்று சொன்னார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே கபீர்தாசருக்கு கோபமிகுந்து ருத்திரனைத் தன்கண்களால் உருட்டிப்பார்த்து நீ இராமபக்தனாகி யிருந்தும் இப்படிச் சொல்லலாமா இஷ்டதெய்வ மென்கிற அபிமானங் கிஞ்சித்து மில்லாமல் ஜெகதீசனாகிய ராமபரப்பிரம்மத்தை கேவலப்படுத்தி துஷ்டநடவடிக்கையையுடைய கிருஷ்ணனை மேலாகிய தெய்வமென்று புகழ்த்தொடங்கினாய் சரிசரி ஒருவரும் நிகரில்லாமல் கெஞ்சாவைக்குடித்து ஊமத்தம் விறைகளைத் தின்று போதையேறி தள்ளாடிக் கொண்டு பேய்களுங்கூடி இரவும்பகலு மயானத்தில் வாசஞ்செய்து மெய்மறந்து யிருக்கும் உனக்கு ராமதத்துவம் எப்படி பிடிபடும் ஈஸ்வரன் தத்துவம் இன்னமும் உனக்கு சித்திக்கவில்லை ராக்கதர்களை மோகிக்கச் செய்வதற்காக மகாவிஷ்ணுதரித்த மோகினி வேடத்தைப் பார்த்து பிரம்மித்து காமாதுரந்தனாகியும் தாருகா வனத்தில் ரிஷிபத்தினிகள் பதிவிரதா தர்மத்தைக் கெடுத்தும் சங்கடப்பட்டவனாகையால் கிருஷ்ணன் செய்ததுஷ்ட காரியங்கள் யாவும் உனக்கிஷ்டமாகாமற் போகுமா முன்நடக்கப்போகிறகாரியங்களை கிரகிக்காமல்பத்மாசூரனுக்கு வரமதைக் கொடுத்து முடிவில் அவன்வார்த்தைக்குப் பயப்பட்டு ஐவேலங்காயில் புகுந்துகொண்ட மங்கநீதி நீயாகையால் நினக்கு தீர்க்காலோசனை கிஞ்சித்தாகிலு மில்லை பார்வதியுடன் சூதாடி தோற்படைந்தும் கெலித்தேனென்று சொல்லி சாதிக்க வெண்ணி சாட்சி சொல்லுமென்று சர்வவியாபியாகிய விஷ்ணுவைப் பிரார்த்தித்த அசத்தியவானாகையால் எங்கள் ஞாயம் இப்போது பக்ஷபாதியாய் தீர்ப்பு செய்வா யென்பதற்கு சந்தேகமே யில்லை மேலும் எப்போதாகிலும் இவன்கிஞ்சித்து கெஞ்சாயிலையுனக்கு கொடுத்திருக்கிறானோ வென்று கேலிசெய்யத் தொடங்கினார்.

அப்போது பரமசிவன் கோபமிகுந்த மனத்தனாகி கண்களில் நெருப்புப்பொறிபறக்க பற்களை நறநறவென்று கடித்து சூலத்தைக் கையிலேந்திக் கொண்டு அடா மூர்க்கனே என்னசொன்னாய் பெரியவர் சிறியரென்ற தாரதம்மிய மில்லாமல் கேலிசெய்ய வாரம்பித்தா யல்லவா இதோபாருன்னை இப்போதென்ன செய்கிறேன் ஒருநிமிஷத்திற் குள்ளாக நின்

Koviloor Digital Library

மூர்க்கத்தை யோடிப்போகும்படி அடித்துத்ரத்துகி றேனென்று அட்டகாசஞ் செய்தார்.

அதைக்கேட்டு கபீர் குலுக்கென்று சிறித்து ஐயா என்னையாவனென்றெண்ணிக்கொண்டாய் இந்த வுருட்டுமிரட்டுகளுக்கு பயந்துபோகுமவன் நானல்லன் விஷயானந்தங்களுக் கெல்லாம் அதிதேவதையாயிருக்கிற மன்மதனிடத்தில் நினது மூன்றும் கண்ணோதிரமும் துஷ்டர்களுககெல்லாம் ஜெனமஸ்தானமாகிய அந்தகன் முன்னம் நினது சூலாயுதத்தைத் திருப்பும் ராமபக்தனுகிய கபீர்தாசரிடத்தில் நினது ஆட்டங்களொன்றுவும் சாயாது என்ற வார்த்தையைக் கேட்டு சங்கரன் மிகுந்த கோபங்கொண்டு அடா துஷ்டா இப்போ துனக்குத் தகுந்த சிக்ஷை செய்தாலல்லது நீவழிக்கு வரமாட்டாய் என் சமர்த்தைப் பாரென்று பயங்கரமுண்டாகும்படி பெருத்த கூக்குரலிட்டு சூலத்தை யிருகிறெனறு சுழட்டி கபீரைக் குத்துவதற்கு நெருங்கினர் அப்போது கபீர் சிவனை முறைத்துப்பார்த்து கையிலிருந்த சோட்டாதடியை விருவிறென்று சுழட்டி அடே கெஞ்சா வெறியனே என்சமர்த்தையுங் கொஞ்சம் பாரென்று ராமமந்திராபி மந்திரமாகும் இத்தடியடியை தப்பித்துக்கொள்ளும் பார்ப்போம் இப்போதல்லவோ நின்சமர்த்து வெட்ட வெளியாகப் போகிறது என்றுசொல்லி அட்டகாசம்செய்து ரௌத்திராகாரமாய் எதிர்கொண்டு நின்றார் இவ்விநோதங்களைப் பார்க்கும்பொருட்டாக விமானங்கள் மீதேறி ஆகாயத்தில் வரிசைகள் தீர்ந்து நின்றிருக்கும் தேவர்கள் யாவரும் வியப்படைந்து என்ன விபரீதம் நேரிடுமோ வென்று பார்த்திருந்தார்கள்.

அப்போது பகவான் சங்கரனுக்கும் கபீருக்கும் நேரிட்ட விரோதத்தைக் கண்டு தான்சென்று சமாதானப் படுத்தாவிட்டால் பெருத்த விபரீதம் நேரிடுமென்று வேகமாக அவ்விருவருக்கும் நடுவில்புகுந்து ஒகோ கபீர் என்ன செய்துகொண்டிருக்கிறாய் கோபத்தைநீக்கி சாந்தத்தை வகிதிரும் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே கபீர் ராமமூர்த்தி உருவந்தரித்துத் தன்னை தடைப்படுத்தும் பகவானைக்கண்டு பரமானந்தமடைந்து கையிலிருந்த சோட்டாதடியை விட்டெறிந்து ஓட்டமாகஓடி வாடைக்காற்றினால் சல்லி வேரற்றுவிழும் மரத்தைப்போல விழுந்ததெண்டனிட்டு எங்களிராமபரப்பிரம்மமே மேலாகிய தெய்வமென்று கோஷித்துத் தன்னைமறந்து நடிக்கத் தொடங்கினர் உடனே ராமமூர்த்தி உருவம்மாரி புள்ளாங்குழல் தரித்து மயிலிறகைச் சிரத்தில்பூண்டு ஜெகன்மோகனு காரத்துடன் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியாகி சேவைதந்து யாவத்திராளுக்கும் நேத்திரோச்சவத்தை யுண்டாக்கினர் அதைப் பார்த்து தேவர்கள் யாவரும் பரமானந்தமடைந்த வர்களாகி ஜெயஜெய சப்தம் கூறிக்கொண்டு மலர்மாரி பொழிந்தார்கள்.

அப்போது ரோஹிதாசர் கிருஷ்ண மூர்த்தியை சேவித்துப் பரமானந்தமடைந்து எங்கள் கிருஷ்ண மூர்த்தியே மேலாகிய தெய்வமென்று கூக்குரலிட்டு தீர்க்கதெண்டனிட்டு ஜெயஜெயசத்தத்துடன் தன்னை மறந்து நடிக்கத் தொடங்கினர் அப்போது பகவான் புன்சிறிப்பு கொண்டு கருணகடாக்ஷங்களினால் கபீர் ரோஹிதாசர்களைநோக்கி பரமபக்தர்களேஉங்களிருவருடைய பக்திஞான வைராக்கியங்கள் சமமாகியதே உங்கள் சரித்திரங்கள் மிகவும் பவித்திரமாகியது நான் ஒவ்வொருயுகத்திலும் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு லீலாமானுஷ ரூபமாய் அவதரித்து அநேக விநோதங்களைச் செய்துக் கொண்டிருப்பேன் நான் விஷயத்தை நிவர்த்திசெய்த பிரம்ம சாயாகையால் உள்ளும் புறம்பும் யாவற்றிலும் நிறைந்துக் கொண்டிருக்கினும் எதிலும்ஒட்டாதிருப்பேன் நான் நிர்மலம் ஆனகையால் என்னைஎந்ததோஷங்களும் ஒட்டாது மானிட உருவத்தை யடைந்த பிறகு தேசத்திற்குதகுந்தவேஷமும் வேஷத்திற்குதகுந்த பாஷையும் பாஷைக்குத்தகுந்த நடவடிக்கையும் அனுசரிக்க வேண்டியது முக்கியமாகையால் சமயத்துக்குத் தக்கபடி பண்டிதனைப்போலும் பாமரனைப்போலும் நடித்துக்கொண்டிருப்பேன் இந்தகலியுகத்தினில் ஜெனங்கள் யாவரும் அற்பமதியும் அற்பாயுளுமுடையவர்களாகையால் தவயோகத் தியான தாரணைகளினால் கடைத்தேருவது மிகவும் அரிதென்றெண்ணி ஹரிராம ஹரிராம ராமராம ஹரிஹரி ஹரிகிருஷ்ண ஹரிகிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரிஹரி என்று இந்தபதினறு நாமங்களையும் பக்தியுடன் உச்சரித்த மாத்திரத்தில் பவக்கடலைக் கடந்து பரமபதத்தை யடைய அனுக்கிரகம் செய்தேன் திரேதாயுகத்தில் நான் இராமமூர்த்தியாகி அவதரித்தபோது வனங்களில் வசித்திருந்த முனிவர்யாவரும் சர்வாங்க சுந்தரனுகி பிரகாசித்துகொண்டிருந்த என்னை கண்களில் குளிர்ச்சியாய்க் கண்டுகொண்டு ஆச்சரியப்பட்டு ஆலிங்கனஞ் செய்துக்கொள்ள அபேக்ஷிக்கையில்துவாபரயுகத்தில் கிருஷ்ணமூர்த்தியாகி அவதரித்து உங்கள் இஷ்டார்த்தங்களை யெல்லாம் பூர்த்தி செய்கிறேனென்று அவர்களுக்கு வாக்குதத்தஞ் செய்திருந்தேனுகையால் அவர்களுமந்தப்படியே கோபிகாஸ்திரீகளாகப் பிறந்து தைலதாரைகளைப் போல அவிச்

Koviloor Digital Library

சின்னமாகிய தியானத்துடன் என்னையாபித்து விஷய
சுரூபத்தில் பரமானந்தத்தைச் சம்பூரணமாக அநுப
வித்து சந்தோஷத்தையடைவார்கள் ஆகையால் ராம
மூர்த்தியேயொன்றும் பேதப் பிரதிபத்தி செய்யக்
கூடாதுயில்லைகள் விசேஷத்தைப்பற்றி என்னவதார
விசேஷங்களிடத்தில் பேதங் காணப்படுமல்லது தத்
துவத்தை விசாரணைசெய்கிற பக்ஷத்தில் பதார்த்த
மொன்றே என்றால் எதார்த்தக்ஞானம்தப்பாமலுண்
டாகும் உண்தமயாகிய தெளிவில்லாத நீசர்கள் சிலர்
என் மாயையினால் மோகிக்கப்பட்டு என் மகத்துவத்
தைக் குறிப்பறியாமல் என்னவதார விசேஷங்களில்
சாமானிய மனிதனென்றுமனதிலெண்ணிக் கெட்டுப்
போவார்கள் ராஜஸதாமஸசாத்துவிகம்யமாகிய இந்த
சர்வப் பிரபஞ்சமும் பளிங்கினிடத்தில் தன்னைக்கண்
டுகொண்ட புருஷன் அகற்றுள் பிரவேசித்தவனாகா
மற் போனபோதிலும் பிரவேசித்தவனைப் போலக்
காணப்படும் அந்தப்படியாக சர்வ பிரபஞ்சங்களினி
டத்திலும் நான் உள் புகாமலிருக்கினும் புகுந்தவனை
ப்போல தோன்றிக் கொண்டிருப்பேன் தன்னிடத்தி
லுண்டாகி நூலிழையினாலழகாய்க் கூண்டு கட்டிக்
கொண்டு அதினுள்வசித்திருக்கும் சிலந்திப்பூச்சுக்கு
நிகராய் என்னிடத்திலகப்பட்டு எனக்கன்னிய மா
காமல் விளங்கியிருக்கின்ற மாயையினால் கற்பனை
செய்யப்பட்ட உலகங்களுக்குள் நானும் எனக்குள்
உலகங்களும் உழன்றுக்கொண் டிருக்கும்படி விளங்
கிக் கொண்டிருப்பேன் சச்சிதானந்த நித்திய நிர்மல
சொரூப லட்சணங்களுண்டாகி பரமாத்துமனாகி சர்வ
வஸ்து சர்வகால சொரூப சர்வநாம சர்வ விகாரங்க
ளும் சொரூபமாக முடையவனாகி ஆதிமத்தியாந்த
ரகிதனாகி அவாங்மான சகோதரனாகி பிரபஞ்சத்தினி
லெந்த விடத்திலும் நிறைந்து கொண்டு சர்வ வியா
பகனாகியிருப்பேன் இப்படிப்பட்ட சொரூப சுபாவ
ங்களை தெரிந்து கொண்டவர்களுக்கே சதானந்த மு
ண்டாகும் ஆகையால் இன்றுமுதல் நீங்களிந்த பேத
புத்தியை நீக்கி என்னவதார விசேஷங்க ளிடத்தில்
பேதாபேதங்களை நினைக்காமலிருக்க வேண்டியதெ
ன்று போதித்து அவர்களிருவரையும் சமாதானப்ப
டுத்தி ஆசிகள்கூறி பகவான் மாயமாய் மறைந்துப்
போயினர். அப்போது பிரம்ம ருத்திரேந்திராதி தே
வர்கள் யாவரும் பரமானந்த மடைந்தவர்களாகி அ
வர்கள் பக்திக்ஞான வைராக்கியங்களை பவிதங்க
ளில் கொண்டாடி உங்கள் வைராக்கியநிலையைப் பரி
சோதனை செய்யும் பொருட்டாக இந்த விநோதம்
நடத்தப் பட்டதென்று சொல்லி அதிக பிரியத்து
டன் அவர்களிருவரையும் ஆலிங்கனஞ் செய்துக்கொ
ண்டு வெகுவிதங்களில் ஆசீர்வதித்து தங்கடங்களிரு
ப்பிடஞ் சென்றார்கள்.

அதின் பின்பு கபீரும் ரோஹிதாசரும் ஒருவ
ருக்கொருவர் விரோதம் நீங்கி மித்திரபாவத்துடன்
ஒருவரை யொருவர் கட்டி யாலிங்கனஞ் செய்துக்
கொண்டு சல்லாப சுகமனுபவித்து ரோஹிதாசர் மிக
வும் பிரார்த்தித்துக் கொண்ட விஷயத்தைப் பற்றி
கபீர்தாசர் மூன்றுநா ளவ்விடத்தில் வசித்திருந்து
நான்காவதுநாள் அவரிடத்தில் விடைபெற்றுக் கொ
ண்டு காசி க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார். இப்
படியாக ரோஹிதாசர் கபீர்தாசர்களுக்கு நேர்ந்த
தர்க்கத்தைப்போல திடவைராக்கிய சம்பத்தினால்
பிரமருத்திர இந்திராதி தேவர்கள் யாவரையும் சமா
தானப் படுத்தியது சகல தேசங்களிடத்திலும் பக
வான் வியாபித்து சமஸ்த ஜனங்களையும் அற்புதா
முதசாகரத்தை யடையச்செய்தார் பின்பு கபீர்தாசர்
சிலநாள் பிரம்மநிஷ்டராகி பரமானந்த சுகத்தைய
டைந்துக் கொண்டிருக்கிற போது அவரிடத்திற்கு
விநாயகர் எழுந்தருளக்கண்ட கபீர் அவரையழைத்து
ஆசனத்திலிருக்கச் செய்து க்ஷேமங்களை விசாரித்து
இவ்விடம்வந்த காரியமென்னவென்று வினவ அதைக்
கேட்ட விநாயகர் ஓசாதுக்கள் சிகாமணியே மந்திரங்
களில் மேலாகிய மந்திர மெதுவென,

கபீர்:—தாரகபோஷகபோக்கியமாகிய ஸ்ரீராம
மந்திரத்திற்கு நிகரான தெதுவுமில்லை இதுவே எல்
லா மந்திரங்களையும்விட மேலானது மேலும் இது
மகாவிஷ்ணுவினுடைய ஆயிரநாமங்களில் சிரேஷ்ட
மாகிய ஆதியிலின்னும மந்திரத்தை நாரதர் வால்மீக
ருக்குரைக்க இந்த ஸ்ரீராம மந்திரத்தைத் தியானிக்க
வால்மீகருக்கு விசேஷக்ஞானமுண்டாகி ஸ்ரீராமமூர்
த்தியவதரிக்கா முன்னம் சுலோகரூபமாக ஸ்ரீராமா
யணத்தைச் செய்தார் மேலும்.

சுலோகம்.

"ஸ்ரீராம ராமராமேதி
ராமேராமே மனோரமே
ஸஹஸ்ரநாம தத்துல்யம்
ராமநாம வராநனே."

என்பதுபோல இந்த தாரகமான விபவத்தை
தேவர்களுக்கும் மகாரிஷிகளுக்கும் கணக்கிட்டுச்சொ
ல்வதற்கு சாத்தியமாகாது என்றார்.

விநாயகர்:—அஷ்டாக்ஷரமெனும் பெரிய திரும
ந்திரமிருக்க, அதைவிட்டு யாரோ ஒருராஜ குமாரன்
பேரை மிகவுஞ் சிலாகித்துச் சொல்லுகிறீரென.

Koviloor Digital Library

கபீர்:— ஸ்ரீ தாரகப் பிர்மம் ராமவதாரம் செய்ததற்குக் காரணமென்னவெனில் சாதுக்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களை சிக்ஷிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் செய்யப்பட்டதாகும் இந்த அவதாரத்தில் சமஸ்த கல்யாண குணங்களும் மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இந்த பகவான் கடாக்ஷத்தினால் கோசலதேசத்துடன் சகல சராசரங்களும் முத்தியடைந்தது இந்த மகாத்மாவினால் வர்ணாசிரம தர்மங்கள் ரக்ஷிக்கப்பட்டது இந்த புருஷோத்தமனுடைய நாமங்களை ஜெபிப்பவர்களுக்கு புத்திமுத்திகள் உள்ளங்கனி நெல்லிக்கனிபோ லிருக்கும் நாரதவால்மீகாதிகள் இந்த நாமத்தின் பிரபாவத்தை யறிவார்கள் நித்திய விபூதியில் அயோத்தியா நகரமெனுந்திவ்விய நகரத்தில் பகவான் ஸ்ரீராமரூபமாகி சந்நிதிசெய்து ஸ்ரீ தாரகமந்திர உபாசகர்களுக்கு தியானத்தை தக்கொண்டு புத்தி முத்திகளையளித்துக் கொண்டிருக்கிறார். இந்த ராமபத்திருடையவும் அவர் நாமங்களுடையவும் விபவத்தை ராமதாபநீயமெனும் உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது மேலும் பகவான் ராமரூபத்தையடைந்து கிம்புருஷ வர்ஷாதிபதியாகி அந்த தாச ஜனங்களினால் உபாசிக்கப் பட்டிருக்கிறார். பிரம்மாதி தேவர்களினால் பிரார்த்திக்கு மலராகி இந்த வைஷ்ணமத மநுவந்தரத்தில்|தசரதபுத்திரராகி யவதரித்து சரணாகதி விபவத்தை பிரசித்தப் படுத்தினார் இந்த பக்தவச்சலனுக்கு வாசகமாகும் ஸ்ரீ தாரகநாமத்தை தியானிப்பதினால் ஆயிரம் நாமங்களையும் தியானித்தபலன் சித்திக்கும் இந்தராமபத்திரன் சரித்திரம் சகலஉலகங்களிடத்திலும் யாவராலும் சிரத்தை பக்தியுடன் பாராயணஞ் செய்யப்படுகின்றது விஷ்ணுலோகத்தில் ஸ்ரீமகா விஷ்ணுவுக்கு விஸ்வக்ஸேனரும் சத்தியலோகத்தில் இரணிய'கருப்பனுக்கு மார்க்கண்டமா முனிவரும் கைலாயத்தில் சங்கரனுக்கு நந்திகேசரும் சதகோடி விருத்தங்களாகும் ஸ்ரீ ராமாயணத்தைக் கேழ்க்கச்சொல்லிக் கொண்டிருக்கிறார்களென்று இந்திராதி லோகங்களிடத்திலே பத்துகோடி யொன்று இன்னும் பத்துகோடி இரண்டு பின்னும் ஒருகோடி மூன்று கலாக்குகளினால் செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ ராமாயணம் பாராயணஞ் செய்யப்பட்டிருக்கிறதென்றும் பிரம்மாண்டாதி புராணங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறது மேலும்நாரதர்உபதேசத்தினால் பிரம்மாவின் அனுக்கிரகத்தையடைந்த வால்மீகமகாரிஷி இந்தமனித உலகத்திற்கு ஸ்ரீராமாயணம் இருபத்தி நான்காயிரம் சுலோகங்கள் செய்தார் ராமபத்திரனுடைய தாரக மந்திரத்தை உபாசித்து சமஸ்ததேவர்களும் அவரவர்கள் பதங்களையடைந்தார்கள் இப்படிப்பட்ட தாரக மகாமந்திரத்தை சகல கல்யாண குணாகரனாகிய ஸ்ரீராமானந்தசுவாமிகள் பூர்வத்தில் எனக்குபதேசித்தார். அந்த பரமமந்திரத்தை சிரத்தை பக்திபிர்சமனாகிய உனக்குச் சொன்னேன் இதைநீ கேட்டதற்கும் நான்சொல்லியதற்கும் பலன் சித்திக்கும்படி ஸீதாராமா வென்று சொல்லுமையா வென்றார்.

விநாயகர்:—ஓ! கபீர்தாசரே நீரிப்போது எனக்குசொல்லிய தாரகமந்திரத்திற்கு அதிதேவதையாகிய ஸ்ரீராமன் சுத்தவீரனாகில் பெண்பாலாகிய தாடகையை வதைசெய்வானேன் அன்னியிலும் கானகத்திலோடித் திரியும் இழிகுலமாதாகிய சபரியின் எச்சிலைப் புசித்தவனொரு சீலனுருவனோ மேலும் பராக்கிரமமுடையவனாகில் வாலிக்கெதிரில் நின்று யுத்தஞ் செய்ய சக்தியற்று மறைந்துநின்று பாணத்தைவிட்டு வாலியைக் கொன்றவனொரு சூரனோ இலங்கையில் இந்திரசித்தனால் யுத்தபூமியிலடிபட்டு வீழ்ந்த தன்தம்பிக்காக அழுதுபுலம்பியவனொரு தெய்வமென்றும் அவனுடைய நாமத்தை எனக்கு வெகுவாக்கி சிலாகித்துப் போதித்து அந்தவீரசூர பிரதாப மற்றவன் நாமத்தை நீரென்னைத் துதிக்கச் சொல்வது எப்படியிருக்கிறதெனில் பெண் புருஷனுக்கு தர்ம நிலையை போதிப்பதுபோலும், திருடன் தர்மாத்துமனுக்கு நீதியுரைப்பது போலும், சிறிய செல்லானது துள்ளி கெருடனுக்கு பரக்கும் மார்க்கம் கற்பிப்பது போலும் வனந்தனில் கண்ணுடையவனுக்குக் கண்ணற்றவன் வழிகாட்டுவதையுமொத்திருக்கிறதென்றார்.

கபீர்:—இதைக் கேட்டவுடன் மிகுந்த கோபங்கொண்டு அந்த தாடகை பெரியோர்கள் செய்யும் யாக எக்கியங்கள் தவநிலை முதலாகிய நன்மார்க்கங்களைக் கெடுப்பதுடன் முனிவர்களையும் பிடித்து வாழைப் பழம்போல் விழுங்குவதுமாயிருந்த படியால் விஸ்வாமித்திரர் அவள் செய்யும் கொடிய துன்மார்க்கங்களை யுத்தேசித்துத் தான்செய்யும் யாகத்தைரக்ஷிக்கும் நிமித்தியம் ஸ்ரீ ராமபத்திரருக்கு அக்கொடிய தாடகையைக் காட்டிக் கொல்லும்படி நேமித்த ஆசான் வார்த்தையை தடுக்கக் கூடாத தர்மத்தையோசித்து அவள் தன்னை நோக்கிவரும் ஆடம்பரத்தை பார்த்து ஆசாரியாதிக் கிரமதோஷ சம்பவிக்கும் என்ற பயத்தாலும் அவள் செய்யும் அதிகிரமங்களை யனுசரித்தும் பாணத்தைத் தொடுத்து கொன்றார். இதனால் சுத்தவீரனென்பதற்குச் சந்தேகமென்ன அன்னியிலும் வனத்தில் மாங்கனியை கடித்து தின்றுபார்த்து உருசியுள்ள கனிகளை ஸ்ரீராமமூர்த்

Koviloor Digital Library

திக்கென்று பக்தியாய்ச் சேகரித்துவைத்த சபரியின் பக்தி என்னுங்கனியைப் புசித்தார்.

சுலோகம்.

"ஸ்வபசோபி மஹீபால
விஷ்ணுபக்தோ த்விஜாதிக:
விஷ்ணுபக்தி விஹீனஸ்து
யதிஸ்சஸ்வபசாதம:"

என்பதுபோல ஸ்வபசனாகிலும் விஷ்ணுபக்தனாகிய பக்ஷத்தில் பிராமணனுக்காகிலு மேலானவனாகிறான் விஷ்ணுபக்தி யில்லாதவன் எதிரியாயிருந்தபோதிலும் ஸ்வபசனுக்காகிலும் அதமனாகும்.

சுலோகம்.

"மத்யக்தஜன வாச்சல்யம்
பூஜாயாஞ்சானு மோதனம்
ஸ்வயமப்யர்ச்ச னஞ்சைவ
மதர்த்தேடம் பவர்ஜனமா.

மத்கதாஸ்ரவணேபக்தி:
ஸ்வரநேத்ராங்கவிக்ரியா
மமா நுஸ்மரணம் நித்யம்
யச்சமாம்நோபஜீவதி."

பக்திரஷ்ட விதஃயேஷா
யஸ்மின் ம்லேச்சேபி வர்த்ததே
ஸவிப்ரேந்திரோ முனிஸ்ஸ்ரீமான்
ஸபதிஸ்ஸச பண்டித:
தஸ்மைதேயம் த்தோக்ராஃயஹம்
ஸசபூஜ்யோ யதாஃயேஹம்."

என்றால் பகவத் பக்தர்களிடத்தில் வாச்சல்யபுத்தராகி பகவத் விஷயத்தில் ஒருவர் செய்யும் பூசைக்கு சந்தோஷிப்பவனாகி தானும் பகவதாராதனை செய்யுமவனாகிய பகவான் விஷயத்தில் டம்பமில்லாதவனாகிய பகவான் கதைகேட்பதில் பக்தியுக்தனாகி பகவன் குணானுபவ காலத்தில் ஈனஸ்வரா கண்டமும் ஆனந்த பாஷ்பம் புளகாங்கிதம் முதலாகியதுடன் கூடினவனாகி நிரந்தரம் அன்னிய சிந்தையில்லாமல் பகவானை துதிப்பவனாகி பகவான் சந்நிதானத்தில் நிஷ்கர்மனாகி இந்த அஷ்டவித பக்தியுடன் நடப்பவன் ம்லேச்சனாகிலும் அவனேபிராமண சிரேஷ்டன் அவனேமுனி அவனேஸ்ரீமான் அவனே யெதி அவனேபண்டிதன் அவனுக்குபதேசிக்கத் தகுமென்றும் அவனால் உபதேசத்தைப் பெறத்தகுமென்றும் அவன் பகவானைப்போல கீர்த்தி யுடையவனென்றும் பகவான் வாக்கிய மிருக்கிறதல்லவா! ஓ கணபதியே! இந்தப் பிராமணனை நீரேன் சிந்திக்கமாட்டீர் பகவான் ஏற்படுத்திய சட்டத்துக்குத் தானே விரோதமாக நடப்பது நீதியல்லவென்று அந்தசபரியின் பக்தியைக் கைக்கொண்டார் அதுவன்றியிலும் இந்திரசித்தனா லடிப்பட்டு ரணகளத்தில் விழுந்த லட்சுமணருக்காகத் தளர்ந்தழுதாரென்றீர் அதேனெனில்? தன்னை இன்னானென்று கபடவஞ்சக ரறிந்துகொள்ளாதிருக்கவும் தானெடுத்த அவதாரத்திற்கிணங்க நடித்துக்காட்டி மனிதர்களில் தானொருமனிதரென்றெண்ணிக் கொண்டிருக்கவும் அபினயஞ்செய்தாரேயன்றியில் பரப்பிரம்ம வஸ்துவாகிய ஸ்ரீராமபத்திரர் அழவேண்டிய காரணமேயில்லை இதை யுணராமல் வாலியை மறைந்திருந்து கொன்றாரென்று சொன்னீர் அந்த வாலிசெய்த குற்றத்திற்காக வதைசெய்தாரே யல்லாமல் தருமத்திற்குவிரோதமாக ஒருபோதும் நடக்கமாட்டார் இதை யறியாமல் வாயில் வந்தபடி பேசுவது நீதியல்லவென்று கடுகடுத்து தேகம் நடுக்கமுற கோபத்துடன் அட்டகாசஞ் செய்து சீதாராம் என்றுசொல்லு சொல்லாவிடி லுடைப்பேனுந்தன் பல்லையென்று ருத்திராவேசங்கொண்ட பிரம்மதேவன் என்னபிரமாதம் நேரிடுமோ வென்கிற பயங்கொண்டு அன்னவாகனத்தின் மேலேறித் துரிதமாகவந்து கபீரைத்தடுத்து அனேக சுருதிகளைகொண்டு தாக்கஞ்செய்து தானும் தோல்வியடைய இதையறிந்து ஆதிசக்திவந்து வெகுவாக வாதாடி தோற்படைய அதையறிந்தருத்திரன்வந்து வாதாடித் தானுமோடிவிட கபீர் அந்நால்வரையும் சீதாராம்மென்று சொல்லச்செய்து அந்நால்வர்களால் வெகுவாகப் புகழடைந்த பத்திராசல ராமதாசருக்கு தாரகமந்திரமுபதேசித்த சிஷனைக்கொண்டு பகவான்தெரிசனந் தருவித்து அவ்வூர் ஜெனங்களைப் பார்த்து.

சுலோகம்.

"ஹேலோகாஸ்ருணு தப்ரஸ்ருதி மரணவயா
தேஸ்ஸிக்ஸ்சாமிமாம் யோகஞ்ஞஸ்ஞ்முதா ஹாந்திமுனயோயாம் யாக்ருவலக்யாதய: அந்தர்ஜ்யோதிர
மேயமேகமம்ருதம் க்ருஷ்ணாக்ய மாபியதாம் தத்பிதாம்பரமோஷதம் வித்துதேநிர்வாணமாக்யங் சிகம்.

ஓ ஜெனங்களே ஜனனமரண வியாதிகளுக்கு ஒரு உபாயஞ் சொல்லுகிறேன் கேளுங்கள் யாக்ஞவல்லாதி முனிவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அந்தரசோதி சொருபமும் அப்பிரமேயமும் முக்கியமாகும் ஸ்ரீராமனென்ற நாமமாகிய அமுர்தத்தைப் புசியுங்கள் அந்தப்பரம அமிழ்தம் மிகுந்த சவுக்கியத்தை யுண்டாகச் செய்யும் என்று உபதேசித்து பகவானை பலவிதங்களாகத் துதிசெய்து பாகவதர்களையும் தீனர்களையும் ஆராதித்துக்கொண்டு நிரந்தரம் பகவான் விஷயத்தில் கீர்த்தனைகளைச் செய்து அந்தியத்தில் தன்பேரை சேர்த்துக்கொண்டு வந்தார்.

இப்படிக் கிருக்கையில் மக்காதேயத்தி லிருந்தொரு துலுக்கன் வந்து கபீரைப்பார்த்து நமதுகுல தர்மத்தைவிட்டு அன்னியகுலத்தில் புகுந்து ஜாதிப்பிரஷ்டனாகி என்னசுகத்தை யடைந்தாய் மேலும் நமது வேதமாகிய குரானைவிட்டு இந்த வேதத்தைத் தொட்டு வீணாய்க் கெட்டுப்போனாயே யென்ற துலுக்கனைப் பார்த்து ஓ குரான்வேதத்தை யடுத்த குணாயிவனே! அந்த குரானிற் சொல்லியிருப்ப தெல்லாம் பொய்யே யொழிய ஒன்றாகிலும் மெய்யல்ல அது அசத்தியவேதம் இவ்விந்துக்க ளனுஷ்டிப்பது சத்தியவேதம் இந்த வேதத்தை யானனுஷ்டித்து அனேக திருஷ்டாந்தங்களுடன் பகவானை பிரத்தியக்ஷத்தில் சேவித்து ஆனந்தமடைந்தேன் அந்தபகவான்யாரென்றால் சகல பிரபஞ்சத்திற்கும் எவன் மூன்றுவிதக் காரணமாகி யிருக்கிறானோ எவன் சங்கல்ப மாத்திரத்தினால் சிருஷ்டி திதி சங்காரங்கள் நடக்கின்றதோ எவன் ஜென்மரகிதனா யிருந்தும் பக்தர்களுக்காக நாமரூபாதிகளுடன் கூடி யிருப்பனோ எவனது திவ்விய ஆத்மசொரூபத்தை தெரிசிக்கக் கூடாமல் தேவர்கள் விக்கிரக உபாசனை செய்வார்களோ எவன் சகல பிரபஞ்சத்திற்குந் தந்தையாகி ரக்ஷகனாகிய சேஷியாகி பர்த்தாவாகி நேசனாகி சாமியாகி ஆதாரமாகி ஆத்துமாவாகி போக்தாவாகி யிருக்கிறானோ சகலபிராணிக்கும் எவன் நிருபாதிகபந்துவாகி சகலலாபங்களையும் உண்டாகச் செய்துக்கொண் டிருப்பனோ எவன் அடுத்தவர்கள் துக்கத்தைச் சகியாதவனாகி அசுரர்களை சிக்ஷிப்பனோ பிராணிகள் விசனத்திற்கு எவன் அதிகமாகும் துக்கத்துடன் கூடியிருப்பனோ எவன் பக்தவச்சலனாகி பக்தசரண்யனாகி பக்தபராதந்திரனாகி பக்தர்கள் கோரியபலத்தைத் தருபவனாகியிருப்பனோ எவனுடைய அதிஷ்டானமில்லாத போது சேதனங்கள் அசேதனங்களாகுமோ எவன் அர்ச்சாரூபத்தை யடைந்து கிருகங்களில்வசித்து சகலத்தையும் சகிக்காதவனாகி தன்னை யாராதிப்பவர்களுக்கும் பராதினமாகும் அகிலாதநும் ஸ்திதியுடையவனாகி யிருப்பனோ அப்படிப்பட்ட ஸ்ரீராம பரப்பிரமத்தைஎனக்காதாரமாக வடைந்திருக்கிறேன் மேலும் அந்தபகவான் எப்படிப்பட்டவ னென்றால் சத்தியவிரதன் முன் மச்சமாகி தெரிசனந்தந்து முனிவர்களுடன் அவரை பிரளயார்ணவத்தில் ரக்ஷித்து அவருக்கு மேலாகியபதத்தை யளித்தார் கூர்மமாகி மலையை முதுகில் தாங்கி தேவர்களுக்கு அமுதம் கொடுத்தார் வராகமாகி கடலில் முழுகிப்போகும் பூமியைத் தன்கோட்டினால் சுமந்து பழயபடியே திருத்தமா யிருத்தினார் பிரகலாதனன் வார்த்தை உண்மையாக்க நரசிங்கரூபமாகி சபையின்தூணில் தோன்றிப் பக்திமானென்று யாவருக்கும் நன்றாய்விள்ளும்படி தெரியச் செய்தார் அதிதிகெர்ப்பத்தில் வாமனனாகிப் பிறந்து பிரம்மாதிகளுக்கு கண்டாதிபத்தியங்களைத்தந்தபரமஉதாரன் ஆஸ்ரிதசவரக்ஷணை நிமித்தியம்பாசகனாகி மாபலிசக்கிரவர்த்தியிடம் மூன்றடிபூமியைவேண்டி திரிவிக்கிரமனாகி மூவுலகங்களையும் கைக்கொண்டு தேவேந்திரனுக்குக் கொடுத்து உபேந்திரனென்று பேர்படைத்தார் ஜமதக்கிகுமாரனாகிய துஷ்டர்களைவதைத்துஉலகத்தைக்காப்பாற்றினார் கோசலை சுமுத்திரை கைகேசிகளிடத்தில் நான்குரூபங்களுடன் அவதரித்து, ராமரூபத்தினால் சாமானியதர்பத்தையும் லட்சுமணரூபத்தினால் பகவத்சேஷத்த ரூபமாகும் விசேஷதர்மத்தையும் பரதரூபத்தினால் ஈஸ்வரதந்திரரூபமாகும் விசேஷதர்மத்தையும் சத்துருக்கன் ரூபத்தினால் பாகவதபரதந்திரரூபமாகும் விசேஷதர்மத்தையும் வெளிப்படுத்தி சரணாகதிவிபவத்தை சாதுஜெனங்களுக் கனுஷ்டித்துக்காட்டி மகாரிஷிகளுக்குவாதை தருமவர்களாகும் ராவணாதிகளை வதைசெய்து, விபீஷணவியாச்சியத்தினால் உலகத்தாருக்கு அபயப்பிரதானங்கொடுத்த மகானுபாவர் ஆயர்குலத்தினில் ஸ்ரீராமகிருஷ்ணரூபமாக அவதரித்து பூதகிசகடா த்ருணாவர்த்தகாளிங்கதேனுக அரிஷ்டபிரலம்பகேசிக் த்விவிவிதசாணூர முஷ்டகன்முதலாகிய துஷ்டர்களைக்கொன்றுபாண்டவர்களுக்கு தூதுசென்று பார்த்தசாரதியாகி இறந்தவர்களை பிழைப்பித்தும் சரணாகதி யடைந்தவர்களை ரக்ஷித்தும் அர்ச்சுன வியாச்சியத்தினால பிரம்மவித்தையாகியகீதோபநிஷத்தை உலகோர்க்கனுக்கிரகித்து தனதுஆஸ்ரித வாச்சல்லியத்தை வெளிப்படுத்திக் கலியுக அந்தியத்தில் வர்ணாசிரம் தருமங் குறைந்து தர்ம்ம மறைவாகி உலகம் பாஷாண்ட மயமாகியிருக்கும்போது கற்கிரூபந் தரித்து துஷ்டர்களைக் கொன்றுவர்ணாசிரம் தர்மத்தை நிலைக்கச்செய்து கிருதாயுகதர்மம் நடக்கும்படிசெய்த மகானுபாவன்ஆகை

Koviloor Digital Library


யால் இவ்விந்துமதமே மிகுந்த சிரேஷ்டம் இம்மதத்துக்குரிய ஸ்ரீமகாவிஷ்ணுவே மேலாகிய தெய்வம் என்று கபீர்மொழிந்த மேலாகிய வேதசாஸ்திர சம்மதமாகிய வசனங்களைக்கேட்டு மனகளிப்படைந்து ஏகாந்தகுணத்திற் சிறந்த உத்தமசீலரே எம்முடைய தேசத்திற்குத் தாங்களெழுந்தருளி சிலநாள் அவ்விடம் தங்கியிருக்க வேணுமென்று பிரார்த்தித்துக் கொள்ள கபீர் அம்மகமதியின் பின்சென்று மக்காதேசம் சேர்ந்து இரவும்பகலும் இடைவிடாமல் ராமபஜனை செய்துக் கொண்டிருக்கச் சிலதுலுக்கர் வந்து அவர்செய்யும் பஜனையைக்கேட்டு பரிகாசஞ் செய்யக்கண்ட கபீர் அவர்களைநோக்கி ஒமுடிக்கு வார்த்தைகளைப்பேசும் துடுக்கர்களே முன்னம் புரந்தரதாசரென்பவர் வித்தியா கெர்வத்தினால் வேமனபுரியிலுள்ள பஜனை மடத்திற்குச்சென்று அங்கு பஜனை செய்துக்கொண்டிருந்த சாதுக்களை நோக்கி இது என்னராகம் என்னதாளம் என்ன கீர்த்தனைகள் என்று பரியாசத்துடன் கேலிசெய்தார் பஜனை செய்திருந்த சாதுக்கள் யாவரும் அவர் திருவடியில் விழுந்து வெகுவாய் பிரார்த்தித்துக் கொண்டும் அவர் க்ஷமித்துக் கொள்ளாமலதிககோபத்துடன் யாவரையும் வைது தன்னகத்திற்குச் சென்று வீணையைச் சுத்திசெய்து அதில் லயித்துப் பகவந்நாமம் பாடுவதற்கு வேண்டிய முயர்ச்சிகளைச்செய்தும் நாவெழாமல் உள்ளிழுத்துக்கொண்டு ஒருவருடன் பேசுவதற்குக்கூடாமல் நான்குநாளிரவும்பகலும் பகவானை மானசீகத் தியானஞ் செய்துக்கொண்டிருக்க ஐந்தாவது நாளிவர் படுந்துயரத்தை சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் சகிக்காதவராகி அன்றிரவிலவர் சொற்பனத்திலெழுந்தருளி நீர்சாதுக்கள் விஷயத்தில் அபசாரப்பட்ட குற்றத்தினால் உனது நாவெழாமலிருக்கிறது நாளையதினம் நீ அவர்கள் மடத்துக்குப்போய் அனைவருக்கும் வந்தனஞ்செய்து வேண்டிக் கொள்ளுவையே யாகில் அவர்களுன்னிட குற்றத்தை மன்னித்து ரக்ஷிப்பார்கள் என்றுசொல்லி மறைந்துபோயினர் உடனே புரந்தரதாசர் விழித்துக்கொண்டு சொற்பனங்கண்ட விசித்திரத்தை யோசித்து நாமசங்கீதத்தில் தேர்ந்த வித்துவானென்ற கெர்வத்தினால் சாமானியர்களென்றெண்ணி சாதுக்களிடத்தில் அபசாரப்பட்டோம் ஆகையால் நம்மைப்பகவான் நாவெழகமலிருக்கும்படி சிக்ஷை செய்தாரென்று தனக்குத்தானே உணர்ந்து பகலெல்லாம்போக்கி இரவில் மடத்துக்குச் சென்று அச்சாதுக்கள் திருவடிகளில்விழுந்து பலவாறாக வேண்டிக்கொண்டார்.

அப்போது சாதுக்கள் யாவரும் பதில்வந்தனஞ் செய்து உட்காரச்சொல்லித் தங்களுடன் பகவந்நாமகீர்த்தனைகளை பாடுமென்று கிருபை செய்தார்கள் புரந்தரதாசர் அந்த சாதுக்களுடன்கூடி பகவந்நாம சங்கீர்த்தனம் பாடல்பாட நாவெழுந்ததைக் கண்டு யாவரும் களித்தார்கள் ஆகையால் நீங்களிப்போது யான்செய்யும் பகவந்நாம சங்கீர்த்தனங்களை கேட்டு பரிகாசஞ் செய்கிறீர்கள் இதனாலுங்களுக்கு பகவான் என்னதண்டனை செய்வாரோவென்று துக்கப் படுகிறேன் என்ற கபீர் வார்த்தைகளைக்கேட்ட துலுக்கர்கள் ஒருவருக்கொருவர் இவனுடைய தெய்வம் நம்மை தண்டிக்குமென்று சொன்னானே அந்த பரிக்ஷை செய்வோமென்று யோசனைசெய்துக் கொண்டவர்களாகி மேலுமேலும் கேலிசெய்து அவ்விடத்தைவிட்டு எழுந்திருக்கக் கூடாமல் புட்டங்கள் பூமிமேல் ஒட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்து இவன மந்திரவாதியென்று யோசித்து அவ்வூரில் வல்லமைமிகுந்த மந்திரவாதிகளை வரவழைத்து வேண்டிய சிகிச்சைகளைச் செய்தும் பூமியைவிட்டுப் புட்டம்வராமல் மூன்றுநாள் பரியந்தம் மிகுந்த சிரமப்பட்டு நான்காவது நாள் அவர்கள் கபீரை அநேகவிதமாகக் கொண்டாடி வேண்டிக் கொண்டதின் பேரில் கபீர் பகவானைத் துதிசெய்து இவர்கள்குற்றத்தை மன்னித்துக்காக்க வேணுமென்று புருஷாகாரஞ் செய்துக்கொள்ள பகவான் கிருபையால் அவர்கள் புட்டம் பூமியினின்று விடுபட்டதைப் பார்த்து யாவருமாச்சரியப் பட்டார்கள் பின்பு கபீர் அவ்வூரிலுள்ள துலுக்கருடன் வாதுபுரிந்து ராமநாமஞ் சொல்லும்படிச்செய்து சிலநாளைக்குப்பின் அந்த மக்காதேசத்திலேயே திருப்பள்ளியலங்கரித்தார் இதையறிந்த சிலதுலுக்கர்கள் மல்லிகைப்பூவை கொண்டுவந்து அவர் சிரசின்பேரில்கொட்டினார்கள் அம்மலர்கள் ஒருபக்கம் திருத்துழாயாகவும் மற்றொருபக்கம் மல்லிகை மலர்களாகவும் இன்றைக்குமிருக்கிறது இக்கபீர்தாசர் திருப்பள்ளியை நாளைக்கும் அம்மக்காதேசத்திலுள்ளவர்கள் தினமும் வலஞ்செய்து தொழுதுக்கொண்டு வருகிறார்கள் கேட்டீர்களோ சித்தர்களே யென்றருளிச் செய்த நாபாஜிசித்தர் வாக்கியங்களைக்கேட்ட உத்தமசித்தர் முதலானோர்கள் ஆனந்தசாகரத்தில் மூழ்கினவராகி நாபாஜிசித்தரின் விடைபெற்று தங்கள் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள் இந்த மகானுபாவர் புகழைக் கொண்டாடுவதற்கு ராமபத்திரர் அன்னியில் அன்னியர்களுக்கு சாத்தியப்படமாட்டாது.

பாண்டுரங்க பரப்பிரம்மணேநம:

கபீர்தாசர்சரித்திரம்முற்றிற்று.

Koviloor Digital Library





Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

ஐந்துதாசர்களின் சரித்திரங்களில்

துளசிதாசர் சரித்திரம்.

பிற்பாதி.

மறுநாள் காலையில் உத்தவசித்தர் முதலானோர்கள் தங்கள் நித்தியகடமைகளை முடித்துக் கொண்டு நாபாஜி சித்தரிடஞ் சென்று அதிக பயபக்தியுடன் வணங்கித் தெண்டனிட்டு எழுந்து அஞ்சலியஸ்தராய் நின்று ஓ சுவாமி வாலமீகாவதாரமான துளசிதாசர் சரித்திரம் தங்களால பாதிகேட்டு பிரமானந்தமடைந்தோம், மற்ற பிற்பாதிக் கதையும் தயவுசெய்து சொல்ல வேண்டுமென்று வேண்டிக்கொள்ள நாபாஜீசித்தர் அகமுக மலர்ந்து சொல்லத் தொடங்கினார். கேளுங்கள் சித்தர்களே! அதின்பின்பு துளசிதாசர் முக்திபத க்ஷேத்திரமாகியும், ஸ்ரீ பகவான் நிவாச யுக்தமாகியும் ஸ்ரீ வாமன தலபூமியாகியும் ஸ்ரீ சத்துருக்னரால் நிர்மிக்கப் பட்டதாகியும் ஸ்ரீ கிருஷ்ண ஜெனனஸ்தல மாகியுமுள்ள மதுரமாநகரத்திற செழுந்தருளிய கோகுல பிருந்தாவன கோவர்த்தனகிரி முதலான க்ஷேத்திரங்களை தெரிசித்து பாவனமாகும் யமுனாநதியில் மூழ்கி அவ்விடத்தில் ஒருமாதம் வசித்து அநேகரை ஸ்ரீராமபக்தர்களாகச் செய்து அடியார்களுடன் கூடி ஆனந்தித்துக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்க, அவ்விடத்தில் பிரியதாசரென்றொரு பிராமண உத்தமர் பகவான் பக்தியிற் சிறந்தவராகியிருந்தார் அந்தசாது கலியுகத்தினில் உலகவுஜ்ஜீவனத்தின் பொருட்டு பகவான் நேமனத்தினால் அவதரித்த ஸ்ரீஜெயதேவர் முதலாகிய பக்தர்களுடைய சரித்திரங்களை தேவபாஷையில எழுதப்பட்டிருப்பதைக்கேட்டு துளசிதாசர் பிரியதாச ரிடத்திற்கு வந்து வந்தனந் தந்து,

சுலோகம்.

"தமோபாஹ்பம் விநஸ்தேயேத்து
பாவகாதித்ய ஸன்னிதௌ
பாஹ்பமாம் யந்தாம்சைவ
விஷ்ணுபக்தார்க்க ஸன்னிதௌ."

ஓ நற்குணத்திற் சிறந்த உத்தம பக்தரே சூரியாக்கினியின்முன் வெளியிருள் நசிக்கும் உம்மைப்போலொத்த விஷ்ணுபக்தர் பாரதியின்முன நாஸ்திகசகதினலுண்டாகும் வெளியிருளும் காமக்குரோதாதிகளினாலுண்டாகும உள்ளிருளும் நசிக்குமென்பதுபோல, தேவரீர் சேவையினால் அக்ஞானவிருள் நசித்துத் தன்னியனானேன் இந்தப் பாமரன் விஷயத்தில் கவலையைவிட்டு என் மனோரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும் அதென்னெனில் தாங்கள் செய்திருக்கும் பக்தர்கள் சரித்திரத்தைக் கேழ்க்க அவாகொண்டேனாகையால் தயவுசெய்து கோரிக்கையை அனுக்கிரகம் செய்வீரென்று வேண்டிய துளசிதாசர் வந்தனஞ்செய்து ஓசாதுசற்ஜன சிகாமணியே தந்தை தன் பிள்ளையின் மழலைச் சொற்களை பிரியத்துடன் கேழ்க்க அபேக்ஷிப்பதைப் போல தேவரீர் என்வாக்கினால் பக்தர்கள் சரித்திரத்தைக் கேழ்க்க அவாகொண்டு இத்தனையுபசாரம் சொல்லுகிறீர் நேமனப்படிக்கு தேவரீருடைய பரமகிருபையினால் செய்யப்பட்ட பக்தவிஜயத்தை சொல்லுகிறேனென்று பிரியதாசர் சொல்லத் தொடங்கினார் ஓமகானுபாவரே துளசிதாசர் அவதாரத்திற்கு பூர்வோத்தரகாலத்தினில் அவதரித்த பகவத்பக்த சரித்திரங்கள் பகவானுடைய கடாக்ஷத்தினால் சாக்ஷாத்கரிக்க அதுகளை விபரமாகப் புகழ்ந்து எழுதினேன் பகாத்துமாவாகியும் நற்குணக் கடலாகியும் விளங்கும் துளசிதாசர் சரித்திரத்தை மாத்திரம் எழுதாமல் புத்திமந்தத்தினால் மோசம் போயினேனென்று விசனப்படுகிறேன் ஆகிலும் என்னால் எழுதப்பட்ட பக்தர்கள் சரித்திரங்களை தேவரீரிஷ்டப்படி வாசித்து தெரிவிக்கிறேனென்று ஆரம்பித்து வாசித்துக் கொண்டிருக்க பிரியதாசருக்குத் தெரியாமல் ஸ்ரீராமபிரம்மம் துளசிதாசர் சரித்திரத்தை அந்தனி கோசத்தில எழுதிவைத்தார் பிரியதாசர் வரிசைக் கிரமமாக பகவான் பக்தர்கள் சரித்திரங்களை வாசித்துத் தனக்குத்

Koviloor Digital Library

தெரியாமலே தன்புத்தகத்தி லெழுதப் பட்டிருக்கும் துளசிதாசர் சரித்திரத்தைப் பார்தது அதில்எழுத்துகள் தப்பின்றி சப்தக்குறைவு படாமலிருக்கும் அர்த்தபுஷ்டி செய்பிர பூர்த்திகளுக்கு அற்புதமடைந்து அவ்விடத்திலிருந்த சகலபாகவதர்களில் செவிக்கமுதமாக வாசித்துத் தெரியப்படுத்தினர் அப்போது அவ்விடத்திலிருந்த பாகவதர்கள் யாவரும் ஸ்ரீராமச்சந்திர சவஸ்த விதமாகும் துளசிதாசர் விபவக்கிரந்தத்தை பிரமேல் தரித்து பரமானந்த பரிதர்களாகி பிரியாமல துளசிதாசர்களை பலவிதங்களாகத் துதித்துத் தங்கள் தங்களிருப்பிடத்திற்குச் செல்லுகிறார்கள்.

இந்த அற்புதத்தைப் பார்த்துத் துளசி தாசர் ஆச்சரியப்பட்டு பிரியதாசரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஓ பிரியதாசரே! ஸ்ரீபாஞ்சதன்னியதார் நினக்கு சுவாதீனமாகி யிருக்கிறார்.

சுலோகம்.

"பித்ருமாத்ரு சுதப்ராத்ரு
தாராமித்ரா தயோபிவா
ஏகைக பலஸாபாய
சர்வ லாபாய கேசவ."

என்னும் வாக்கியத்தை பகவான் நின் விஷயத்தில் அனுஷ்டித்துக்காட்டினர் ஜெகன்நாதன்நினக்கு அனுகூலமாகியிருக்க நினக்கு சாத்தியமாகாத காரியமுண்டா என்று சல்லாபஞ் செய்தார் இதைக்கேட்ட பிரியதாசர் சந்தோஷிக்காமல் தன்விஷயத்தில் பிரியங்கொண்டு பகவான் எழுதிவைத்த துளசிதாசர் சரித்திரத்தைப்பற்றி பகவானுக்கு சாஷ்டாங்க தெண்டனிட்டுத் துதிசெய்தார் எப்படியெனில் அனந்தபிரம்மாண்டங்கள் எவனுடைய நினைப்பு மாத்திரத்தில் சிருஷ்டிக்கப்பட்டு எவனது சகதியினல் நிலைத்திருக்கின்றதோ அந்த மகா புருஷனுக்கு வந்தனம் அபாரமான சாகரம் எவன்கட்டளைக்குப் பயந்து பூமிமேல் பிரவேசிக்காமல் தங்களத்துகளில் நிறைந்திருக்கின்றதோ அந்தபகவானுக்கு வந்தனம் சூரியசந்திரர் முதலாகிய கிருகங்கள் என் கட்டளையினல் நிரந்தரமும் காலசக்கிரத்திற் குட்பட்டு சஞ்சரித்துக்கொண்டிருக்கிறதோ அந்தஜெகதீசனுக்கு வந்தனம் என்னுடைய சக்தியினல் பிரம்மாதியர்கள் தங்கள்தங்கள் காரியங்களை நிர்வகிக்கும் திறமையுடன் கூடியிருக்கின்றாரோ அந்தமுகுந்தனுக்கு வந்தனம் சகல ஜீவராசிகளும் பொம்மைகளாகி சூத்திரத்திற் குட்பட்டு கர்மானுசாரமாக ஆடுகின்றதோ அந்தலட்சுமிசனுக்கு வந்தனம் எவன் கிருபையில்லாதபோது பிரம்மாதிகளேயும் செய்யக்கூடாமல் ஜடத்தைப்போலிருப்பார்களோ, அந்தவிஷ்ணுவுக்கு வந்தனம் எவன் அன்னரூபமாகி பிரமனுக்கு வேதமென்னும் பரமரகசியத்தைக் கொடுத்தாரோ அந்த ஸ்ரீதரனுக்கு வந்தனம் சிருஷ்டித்து சங்காரங்களெவனுக்கு விளையாட்டுகளாகி யிருக்குமோ அந்தபரனுக்கு வந்தனம் அநந்தகோடி பிர்மாண்டங்களெவன் லீலைகளுக்கு விளையாட்டு கந்துகங்களாகி யிருக்கிறதோ பிரம்மாதிகள் எவன் விபுசொரூபத்திற்கு புழுக்களாகி யிருப்பார்களோ, எவன் சூக்ஷசொரூபத்திற்கு பரம அணுக்கள் மேருபர்வதத்திற்கு நிகராகியிருக்குமோ எவன யாவத்துக்கும் ஆதாரமாகிதனக்குவேறொரு ஆதாரமுமில்லாம லிருப்பானே சகலபூத ஜாலங்களும் எவன்சொரூபங்களாகி யிருக்குமோ அப்படிப்பட்ட புண்டரிகாக்ஷனுக்கு தீர்க்க தெண்டனிடுகிறேனென்று தன்னை மறந்து பிரம்ம நிஷ்டராகி யிருந்தார் இப்படிப்பட்ட அகண்ட பக்திர்ஞான சம்பன்னராகிப் பிரியதாசரை கண்டு துளசிதாசர் ஆனந்தபரவசராகி பூரணச்சந்திரனைக்கண்ட சாகரத்தைப் போல ஆனந்தமேலீட்டால் ஜெயவிஜயீபவா என்று கோஷித்து சரீரம் பூரித்து பிரியதாசருக்கு தீர்க்க தெண்டனிட்டு ஓ மகானுபாவரே.

சுலோகம்.

"ப்ருத்விரேணுரணுஃ பயாம்ஸவிகா பல்குஸ்புரிங்கோலகுஸ்தேஜோ நிஸ்வஸனம் மருத்தனுதாமரந்தரம்ஸூக்ஷ்மபகஃ க்ஷூத்ராருத்ரபிதாமஹப்ரப்ருதஃ கிடாஸ்ஸமஸ்தாஸ்ஸூ ராத்ருஷடேயத்ரஸதாவரோவிஜபதே பூமாநு தாவதி."

எந்த மகிமை பார்க்கப்பட்டபோது பூமிசிறிய அணுவாகிஜலங்கள் சிறுதுத்தலாகி தேஜசுசிறியமின்மினியாகி, வாய்வு மெல்லிய கண்களுக் ககப்படாததாகி வானம் சிறியரந்திரமாகி பிரமருத்திராதி சகல தேவர்கள் சிறியபுழுக்களாகி யிருக்குமோ அப்படிப்பட்ட நினதுமகிமை எல்லையில்லாமல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. என்று விண்ணப்பஞ் செய்து ஓ மகாத்துமாவே! நினது மகிமையை யானறியாமல் சாதுக்கள் மொழியைக் கேட்டுத் தங்களை பக்தர்கள் சரித்திரத்தை சொல்லும்படி வேண்டிக் கொண்டேன் இந்த மாபாவி தங்களை சோதிக்கவெண்ணின அபசாரத்தை மன்னித்து ரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்

Koviloor Digital Library

திக்கும் துளசிதாசரை அநேகவிதங்களாகத் துதிசெய்து பிரம்ம நிஷ்டராகி யிருக்கிறபோது காசி க்ஷேத்திரத்திலிருந்து ஒரு பிராமணர் அவ்விடத்திற்கு யாத்திரையாகி வந்து துளசிதாசரைப் பார்த்து விநயத்துடன் வணங்கி ஓசுவாமி தேவரீரில்லாத அந்த காசி க்ஷேத்திரம் லட்சுமி கடாக்ஷமில்லாதநகரம்போலவும் தாமரையில்லாத் தடாகம்போலவும் சந்திரனில்லா யிருள்போலவும் நாதனில்லாத மங்கைபோலவும் மந்திரியில்லாத ராஜசபை போலவும் சூரனில்லாத ரணக்களம்போலவும் மைந்தனில்லா விடுபோலவும்பக்தியில்லாப் பூஜைபோலவும் இருக்கிறதென்று சொல்லிய பிராமணரை நோக்கி ஓ பிராமணரே "ஆதிமத்யாந்தரஹிதனாசி சர்வம் விஷ்ணுமயம் ஜெகத்" என்னும் பிரமாணப்படி திரியக்தா வ:ஜங்க சகலஜீவராசிகளும் பகவான் சொரூபமாகி யிருப்பதோடும் அநேகசாதுக்களும் அவ்விடம் எழுந்தருளியிருக்க ஒன்றுக்குமுதவியில்லாத அடியேனில்லாததால் அந்தவாரணசிக்ஷேத்திரத்திலிருக்கும் பெரியோர்கள் பகவத்பக்தி செய்யவில்லையா அரசன் செங்கோல் நடத்தவில்லையா தேவபூஜை நடக்க இதுகளெல்லாம் பிரத்தியக்ஷத்தில்நடந்துக் கொண்டுவர நானொருவ னில்லாமல அந்த காசி க்ஷேத்திரம் களைமாரி யிருக்கிறதென்பது சரியல்ல வென்று சொல்லிய துளசிதாசரைநோக்கி யாத்திரை பிராமணன் ஓசுவாமி அந்த காசிக்ஷேத்திரத்தில் ராஜன் முதலாக அநேகலக்ஷம் ஜெனங்களிருக்கினும்தங்களைப்போன்ற உத்தமவைஷ்ணவருக்கு நிகராவார்களோ ஒருதேவதையை யுபாசித்துகடைத்தேரும் புருஷரொருவருமில்லை பலதேவதைகளை யுபாசித்து நகரத்திற் காளாகும் மனிதரேயன்னியில் தேவரீரைப் போல ஒருதெய்வத்தைத் தொழும் புண்ணிய புருஷரொருவரையும் யானறியேனென்ற பிராமணனை நோக்கித் துளசிதாசர் ஓ யாத்திரை பிராமணரே வைஷ்ணவக் கிரந்தங்களில் சிவன் ஜீவாத்துமா வென்றும் சொல்லி யிருப்பதால் வைஷ்ண சித்தாந்தப்படி விஷ்ணுரூபியாகும் பரமாத்துமாவினால் சிருஷ்டிக்க பட்ட ஜீவகோடிகளுக்குள் சிவனொரு ஜீவனென்றும் இவர் விஷ்ணு கடாக்ஷத்தினால் சிவபதத்தை யடைந்தாரென்றும் அந்தவிஷ்ணு கடாக்ஷத்தினாலேயே இனிமோக்ஷமடைவாரென்றும் இந்த விஷ்ணுவுக்கு மோக்ஷம் பிரதானத்தில் சக்தியில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது இதற்கொரு சாக்ஷியாக திருஷ்டாந்திரம் சொல்லுகிறேன் அதென்னவெனில் ஒருவீட்டில்தேவதத்தன் எஜமானனாகி எக்ஞானதத்தன் சேவகனாகி யிருக்கிறான் மற்றொரு வீட்டில் எக்ஞானதத்தன் எஜமானனாகி தேவதத்தன் சேவகனாகியிருக்கிறான் இந்த எக்ஞானதத்த தேவதத்தர்கள் முன்னிருந்தவீட்டுசேவக எஜமானர்களல்ல இப்படியிருக்க தேவதத்தன வீட்டில் சேவகனாகும் எக்ஞானதத்தன் சிக்ஷிக்கப்பட்ட விஷயத்தில் எக்ஞானதத்தன் வீட்டார்களுக்கு அவமானமில்லை அந்தபடியாக எக்ஞானதத்தன் வீட்டில் தேவதத்தனென்னும் சேவகன் சிக்ஷிக்கப்பட்டால் தேவதத்தன் வீட்டாருக்கு அவமானமில்லை இந்தவிதமாக சிவன் விஷயமாகும் சைவக்கிரந்தங்களில் விஷ்ணு ஜீவாத்துமப் சிவன் பரமாத்துமா வென்பதற்கு வைஷ்ணவர்கள் சோதிக்கவேண்டுவதில்லை விஷ்ணுவிஷயமாகும் வைஷ்ணவக்கிரந்தங்களில் சிவன் ஜீவாத்துமா விஷ்ணுபரமாத்துமா வென்பதற்குசைவர்கள் சோதிக்கவேண்டுவதில்லை இனியிதை சங்கிரகித்துச் சொல்லுகிறேன் சகல சித்தாந்தங்களிட்த்திலும் முமூட்சுஜெனங்கள் வெகுவிதநாமரூபங்களினால் ஆராதிக்கும் பரமாத்துமா ஒன்றாகி அந்தந்தசித்தாந்தங்களிடத்தில் நிகிருஷ்டமாக சொல்லப்பட்டிருக்கும்தேவதைகள் ஜீவாத்துமாக்களாகி யிருக்கிறார்கள் ஆகையால் புத்திவான்கள்நாமரூபவிஷயத்தில்அவ்வளவாக ஊனுதலாயிருக்க வேண்டியதில்லை அவரவர்க் கிஷ்டமாகும் நாமரூபங்களுடன் பரமாத்துமாவை ஆராதிக்கலாம் பரமாத்துமா பாபத்தினால் செய்யப்பட்ட ஆராதனை சொரூபத்திற்கு உசிதமென்றும் ஜீவாத்துமா பாவத்தினால் செய்யப்பட்ட ஆராதனை சொரூபத்திற்கு கெடுதியென்றும் அவரவர்கள் மனதினிடத்தில் ஊனுதலாயிருப்பது சாதுஜெனங்களுக்கு அவசியமாகும் இனிவைஷ்ணவ கிரந்தங்களிடத்தில்வைஷ்ணவர்களுக்கு சிலகுறிகள்விதித்து இவர்களுக்கு சைவகுறிகள் நீக்கப்பட்டதென்று சைவர்களுக்கு சிலகுறிகளை விதித்து வைஷ்ணவக்குறிகள் நீக்கப்பட்டதென்று சொல்லியிருப்பதற்கும் காரணமென்னவென்றால் இதற்கொரு திருஷ்டாந்திரம்சொல்லுகிறேன் விஷ்ணுவர்மாவென்றும் சோமவர்மாவென்றும் இருவர்ராஜபுத்திரர்களிருந்தார்கள் இந்த இருவருக்கும் ஒரேகாலத்தில் சரீரத்தில் ஒரேவிதமாகும் வியாதியுண்டாச்சுது இந்தஇருவரும் சிகிச்சைக்காக வைத்தியனிடத்திற்குப் போயினார்கள் அந்தவைத்தியன் இவர்கள் வியாதி சுபாவத்தையும் இவர்களுக்குண்டாயிருக்கும் ஆரோக்கிய அபேக்ஷையையும் தெரிந்துக் கொண்டு இவர்கள் சரீரசுபாவத்தை யறியவேண்டுமென்று நாடியைப்பிடித்து பரிக்ஷை செய்கையில் விஷ்ணுவர்மா சரீரம் சூட்டைப்பற்றியும் சோமவாமா சரீரம் சீதளத்தைப் பற்றியு மிருந்தது அப்போது வைத்தியன் இந்த இருவருக்கும் வியாதி யொன்றாகையால் ஒரே அமிழ்தங்கொடுத்து அவர்கள் சரீரசுபாவங்களை

Koviloor Digital Library

யனுசரித்து அனுபானத் தியங்களை வேறு வேறாக விதித்தான்.

எப்படியென்றால், விஷ்ணுவர்மாசரீரம் சூட்டைப்பற்றியதாகையால் அமிழ்தம் நெய்யிற்கலந்து புசிக்கவேண்டுமென்று இதற்கு வெண்டக்காய் பத்தியமென்றும் கத்தரிக்காய் கூடாதென்றும் சொன்னான் சோமவர்மாசரீரம் சீதளத்தைப்பற்றின தாகையால் அமிழ்தம் தேனிற்கலந்து புசிக்கவேண்டுமென்றும் இதற்கு கத்தரிக்காய் பத்தியமென்றும் வெண்டக்காய் நீக்கப்பட்டதென்றும் சொன்னான் இப்படி இவ்விடத்தில வைஷ்ணவனென்றும் சைவனென்றும் இரண்டாத்துமாக்களுண்டானார்கள் இவ்விருவருக்கும் பவரோகம் சம்பவித்தது இருவரும் மோக்ஷ ஆரோக்கியத்தை யபேக்ஷித்து பரமாத்துமாவென்னும் வைத்தியனை யடுத்தார்கள் அந்த பரமாத்துமா இவ்விருவர்கள் வியாதியையும் அரோக்கியாபேக்ஷையும் தெரிந்துகொண்டு இருவருக்கும் வியாதி ஒன்றாகியிருப்பதினால் பகவானுபாசனை என்னும் ஒரேயமிழ்தத்தை இருவருக்குங் கொடுத்தார். இனியனுபான பத்தியங்கள் நேமிப்பதற்காக நாடியைப்பிடித்துபரிக்ஷித்தார் எப்படியென்றால் பகவத்கீதையில் அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பார்த்து ஓசுவாமி!

சுலோகம்.

"கச்சின்னோபய விப்ரஷ்டஸ்
சின்னாப்ரமிவ நஸ்யதி
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ.
விமூடோ ப்ரஹ்மண:பதி"

என்றால் பரமாத்துமாவை அனுசந்தானஞ்செய்யாதமுடன் கிராஸ்யானாகி கர்மஞானங்கள் இரண்டிலிடத்திலும் பிரஷ்டனாகி தெரித்த மேகத்தைப்போல நசிப்பவ னல்லவா வென்று கேழ்க்க.

சுலோகம்.

"பார்த்தநைவேஹ நாமுத்ர
வினாசஸ்தஸ்ய வித்யதே
நஹிகல்யாண க்ருத்கச்சித்
துர்கதிம் தாத கச்சதி.
ப்ராப்யபுண்ய க்ருதாம்லோகா
நுஷித்வாசாஸ்வதீஸ்ஸமா:
சுசீனம் ஸ்ரீமதாம் கேஹே
யோகப்ரஷ்டோ பிஜாயதே,
அதவாயோகினாமேவ
குலேபவதி தீமதாம்
ஏதத்தி துர்லபதரம்
லோகேஜன்ம யதீத்ருசம்
தத்ரதம்புத்திசம்யோகம்
லபதேபௌர்வ தேஹிகம்
யததே சததோபூயஸ்
ஸம்ஸித்தௌ குருநந்தன."

என்றால் பரமாத்துமானுசந்தானத்திற்கு யத்தனித்து சாமர்த்தியமில்லாமல் பிரஷ்டனானவனுக்கு இகபரலோகங்களில்நாசமில்லை நன்றுசெய்தவனொருபோதும் துர்க்கெதியை யடையான் இவன் புண்ணியம் செய்தவர்களடையும் உலகையடைந்து அவ்விடத்தில் வெகுகாலம் வசித்துப்பின்புசதாசீலத்தை யனுஷ்டிப்பவர்களாகிய ஸ்ரீமான்கள்வீட்டில் பிறந்திருப்பான் அப்படியாகாமற் போனபோதிலும் உண்மைப் புத்தியையுடைய யோகிகள் குலத்தில் பிறக்கிறான் உலகத்திலிப்படிப்பட்ட ஜென்மம்மிகவுமரிதது அப்படிப்பிறந்தவன் பூர்வஜென்மத்தில்சம்பாதித்த தத்வத்ரயஞானத்தை மருபடியுமடைந்து சித்திக்காக யத்தினஞ்செய்துக் கொண்டிருக்கிறான் என்று பகவான் பகவத்கீதையில் சொல்லியிருப்பதைப் போல பவரோக வைத்தியனுகும் பகவான் இந்தபவரோக பீடிதர்களை பூர்வஜென்மவாசனை என்னும் நாடியை பரிக்ஷைசெய்து அனுமான பத்தியங்களைச் சொன்னார் அதில் வைஷ்ணவனுக்கு ஈஸ்வரஉபாசனமென்னும் அவ்விதமும விஷ்ணுநாம ரூபங்களெனும் அனுபானத்துடன் சேர்த்து புசிக்கவேண்டுமென்றும்இதற்கு பத்தியம் ஊர்த்தவ புண்டர சங்குசக்கர வனமாலை வனசமாலைகளைத் தரிக்கவேண்டுமென்றும்அப்பத்தியம் திரிபுண்டர ருத்திராக்ஷங்களைத் தரிப்பதென்றும் விதித்தாக சைவனுக்கு ஈஸ்பரபாசனை யென்னும் அமிழ்தத்தை சிவநாமரூபங்களெனும் அனுபானத்துடன் சேர்த்து புசிக்கவேண்டுமென்றும் இதற்குப் பத்தியம் திரிபுண்டர ருத்திராக்ஷங்களை தரிப்பதென்றும் அபத்தியம் ஊர்த்வ புண்டர சங்குசக்ராதிகளென்றும் விதித்தார் ஆகையால் விஷ்ணு பக்தர்களுக்கு வைஷ்ணவக் குறிகள் உபாதேயங்களென்றும் சைவக்குறிகள் நீக்கப்பட்டதென்றும் சிவபக்தர்களுக்கு சைவக்குறிகள் உபாதேயமென்றும் வைஷ்ணவக்குறிகள் நீக்கப்பட்டதென்றும் நிர்ணயிக்கப்பட்டது.

அகண்டஞானவான்கள் பரப்பிரமத்தை பாவங்களினால் உபாசிப்பார்கள் அந்தந்த உபாசனைக்கு தகுந்த குறிகளை உபாசனை காலங்களில் தரித்துக்கொள்ளுவார்கள் மேலும் சிலர் தோராகாதி அந்தர

வேடங்களையே கௌரவிப்பார்கள் வெளிவேடங்கள் இல்லாதிருப்பார்கள்.

சுலோகம்.

"வைஷ்ணவம் த்விவிதம்ப்ரோக்தம்
பாஹ்யப்யந் தரம்ததா
பாஹ்யபந்து சங்கசக்ராதி
ஹ்யபாந்தரா விதாரகதா."

என்றால் அந்தரமென்றும் வெளியென்றும் வைஷ்ணவம் இரண்டுவிதம் இதில் சங்கு சக்கராதிகள் தரிப்பது வெளி வைஷ்ணவம் வைராக்யம் அந்தர வைஷ்ணவம் இந்த இரண்டிலும் அந்தரவைஷ்ணவமே முக்கியம் இதனை வேசாவேசுவரனும் சாதுக்களும் மிகவும் கௌரவிப்பார்கள் ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் எமதூத சம்வாதத்தினால் வைஷ்ணவர்களெப்படிப் பட்டவர்களென்று கேட்டதூதர்களுக்கு எமன் அந்தரவேடத்தையே விஸ்தாரமாகச்சொன்னானேயல்லது வெளிவேடமொன்றையாகிலும் சொல்லவில்லை அன்னிய சித்தாந்தங்களிலும் இந்தப்படியாகவே அந்தர வேடமே மிகவும் ஜொலிக்கப்பட்டிருக்கிறது.

சுலோகம்.

"சக்ராதிதாரணம் பும்ஸாம்
பரஸம் பந்தவேதனம்
பதிவ்ரதா நிமித்தம்ஹி
வஞ்பாதி விபூஷணம்"

என்பதுபோல பதிவிரதைக்கு நடவடிக்கைவெளிவேடத்தைப் போல வைஷ்ணவனுக்கு சக்கராங்கிதந்து விஷ்ணுசம்பந்தப் பிரகாசபாத்திரமே அல்லது அந்தர வேடத்தைப்போல முக்கியமாகாது.

சுலோகம்.

'நஜாதிபேதம் நகுலம்
நலிங்கம் நகுணக்ரியா
நதேசகாலௌ நாவஸ்தாம்
யோகே ஹ்யபமபேக்ஷதே."

என்றால் பிரபத்தியோகம் ஜாதி பேதத்தையுங் குலத்தையும் வேடத்தையும் குணக்கிரியைகளையும் தேசகால அவஸ்தைகளையும் அபேக்ஷிக்காதென்று பாரத்துவாச சங்கிதையினில் சொல்லப்பட்டிருக்கிறது சில ஸ்தலங்களினில் வெளிவேடத்தைக் கொண்டாடப்பட்டிருந்தபோதிலும் அதுபிரசம் சாபமென்று புத்திமான்கள் ஊகிக்கவேண்டும் பராசர சுருதியில்.

சுலோகம்.

"அக்னிதபதேனே சக்ரேண
பாஹுமூலே தலாஞ்சிதா:
தேயாந்தி பரமம்ஸ்தானம்
புனராவத்திவர்த்தி வர்ஜிதம்."

என்றால் கைகளின் மூலத்தில் சங்குசக்கரங்களுடையவர்கள் மறுஜெனனமில்லாததாகும் பரமபதத்தை யடைவார்கள் என்று சொல்லியிருக்கிறது மேலும் சிவஸ்தலங்களினிடத்தில் சங்குசக்ரஊர்த்வபுண்டர துளப வனமாலை தரிப்பதுகளை மிகவுங் கௌரவித்துச் சொல்லியிருக்கிறது சைவ சித்தாந்தங்களிலும் வெளிவேடங்களை கௌரவித்து சிவஸ்தலங்களில்சொல்லியிருக்கிறது இந்தவசனங்களை பிரசம்ஸா பரமென்று அங்கீகரிக்காமல் உண்மையென்று சொன்னால் வெகுபிரமாதத்திற்கு ஆஸ்பதமாகின்றது. எப்படியெனில் வெளிவேடத்தை கௌரவித்து நிலபிரமாணங்களை சொல்லுவதினால் இந்த வாக்கியங்களுக்கு ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் அர்த்தம்நிர்வகிக்கவேண்டும் அப்படி செய்யாதபக்ஷத்தில் அந்தவாக்கியங்கள் பயித்தியக்காரர் சண்டைசெய்வது போலாகும் வெளிவேஷத்தை மாத்திரம் தரித்துக் கொடிய பாவஞ் செய்யுமவர்களுக்கு மோக்ஷ பிராப்தி தப்பாதென்று சொல்லவேண்டியதாகவரும் மேலும் ஜகாமுனிதலாகும் பரமயோகிகள் வெளிவேடமில்லாதிருந்தார்களென்று பிரமாணங்கள் சொல்லி கொண்டிருக்கிறது இந்த வெளிவேடத்தைத் தரித்திருந்த சிலர் நீக்கப்பட்டதை அனுஷ்டித்ததினால் நரகத்தையடைந்தார்களென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த சமாதானங்களினால் வெளிவேடங்களை கௌரவிக்கும் வசனங்கள் பிரஸம்ஸாபரங்களென்பதற்கு சந்தேகமில்லை ஆகையால் சிலர் பூரண அதிகாரிகள் வெளிவேடத்தை அவ்வளவாக கௌரவித்தார்கள். ததீயர்களுக்கு முக்கியமாக லட்சணங்களாகும் வைராக்கிய அந்தரவேடங்களை பரீட்சைசெய்து அறிவது மிகவும் அசாத்தியம் உபதேச அனுவர்த்தனாதிகளுக்கு இத்தனை பரீட்சை வேண்டுமேயல்லது சத்கார மாத்திரத்திற்கு அவ்வளவு நிர்ப்பந்தமில்லை பகவத் விபூதியாகும சேதனர்கள் யாவரையும் ததீயர்களென்று பாவித்து சத்தரிக்கவேண்டும் ராஜகுமாரன்உன்மத்தனாகி தன்னையும் தன் தாய் தந்தையர்களையும் மறந்திருந்தபோதிலும் உலகத்தார் அவனைராஜபுத்திரனென்று கௌரவிப்பதுபோல ஈஸ்வரன் பிள்ளைகளாகும் சேதனர்களில் சிலர் சுயசொரூபத்தையும்ஈஸ்வரசொரூபத்தையுமறந்து விவேகசூனியர்களாகியிரு

க்தபோதிலும் அவர்களை அகௌரவிக்காமல் ததியர்கள் பாவத்தினால் உபசரிப்பது உசிதம். இப்படிப்பட்ட கெம்பீர சுபாவமுடையவர்களுக்கு ஜெகதீசன் வசப்பட்டிருப்பா னென்பதற்கு கிஞ்சித்தாகிலும் சந்தேகமில்லை நிரந்தரம் பகவத்தியானத்தில் மனதலைவிக்காதவர்கள் வெளிவேடத்தை தரிக்கும்போது அந்த வேடத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் மந்திரங்களை உச்சரித்து மந்திரார்த்தத்தைமனனஞ்செய்துமந்திராதி தேவதைகளை தியானித்துக்கொண்டிருப்பதினால் இதுவரிசைக்கிரமமாய் நிரந்தரம் தியான நிஷ்டையையும் வைராக்கியாதி அந்தரவேடத்தை யுண்டாகச் செய்து பின்பு மோட்சத்தைக் கொடுக்குமென்பதுவே வெளிவேடங்கள் மோக்ஷ பிரதங்க ளென்பதற்கு முக்கியமாகிய பாயம் சிலர் ஒவ்வொரு மற்றொன்றாக பிரமிப்பவர்களுக்குக் கோரிய பலன் சித்திக்காதென்றும ஒருவன் புளியன்கொம்பென்று முருங்கைக் கொம்பைப் பிடித்துக்கொண்டு தொங்கினால் அந்த முருங்கைக் கொம்பு முறிந்து இவன பூமியில்விழுந்து மரணமடைவனே யல்லது இவன் நம்பிக்கைக்காக அந்த முருங்கைக்கொம்புபுளியன்கொம்பாகி இவனை ரக்ஷிக்கமாட்டாதென்றும் அப்படி ஜீவாத்துமாவை பரமாத்துமாவென்று பிரமித்து ஆசரித்தால் பரமாத்துமாவினால் சித்திக்கவேண்டிய மோக்ஷபலன் சித்திக்கமாட்டாதென்றும் சொல்லுவார்கள் இதற்குசமாதானம் சொல்லுகிறேன் இவன் நம்பிய புளியன்கொம்பு அசேதனமாகையால் இவனது நம்பிக்கை வீணாச்சுது அந்தபுளியன் கொம்பிற்கு சர்வேஸ்வரனைப் போல சர்வக்ஞானத்துவ சர்வசக்திகள் இல்லையாகையால் இவன் விசுவாசத்தை யறியும்பொருட்டு இவன் பிடித்த முருங்கைக்கொம்பினில் ஆவேசித்து ரக்ஷிப்பதற்கும் அவகாசமில்லாமற் போச்சுது ஒருவன் பரமாத்துவ பாவத்தினால் மற்றொரு வஸ்துவை ஆஸ்ரித்தாலும அந்தபரமாத்துமா சர்வக்ஞனற்ற சர்வசக்திபூரணமாகையால் இவன் மனபாகத்தையறிந்து ஆசரித்த வஸ்துவினில் ஆவேசித்து இவன்கோரிக்கையைகொடுக்கும் இதற்கு திருஷ்டாந்திரமென்னவெனில்ஏகலைவனெனும் ஒருகிராதகன் துரோணாசாரியரைவில்வித்தைக்காக ஆசரிக்க அவர் சம்மதிக்காதலால் அந்த ஏகலைவன் மனிதசஞ்சாரமில்லாத காட்டினில் துரோணரைப்போல பொம்மை செய்துவைத்துக் கொண்டு பக்திசெய்யும்போது துரோணால அர்ச்சுனனுக்கு கிடைத்த அரிதாகிய வில்வித்தையாவற்றும் அவனுக்குக் கிடைத்தது இந்த ஏகலைவனுக்கு துரோணரும் துரோணரூப பொம்மையும் உபதேசிக்கவில்லைஇவன ஆசாரியபக்தி செய்ததினால் ஜெகதாசாரியனும் சகல குரு பரம்பரைகளுக்கும் முதலாசானுமாகும் சர்வேஸ்வரன் இவன்பக்திக்குக்கிருபைசெய்து அந்ததுரோணரூப பொம்மையில் ஆவேசித்து இவன்கோரிக்கையை நிறைவேற்றினார் ஆகையால் பரமாத்துமாபாவத்தினால் எந்த பதார்த்தத்தை ஆசரித்தபோதிலும் சர்வக்ஞானத்துவ பாவசக்தி பூரணனாகும் ஜெகந்நாதன் இவனெண்ணத்தையறிந்து இவனாசரித்த வஸ்துவினிடத்தில் ஆவேசித்து இவனிச்சையை நிறைவேற்றுவதற்கு சந்தேகமில்லை ஆகையால் ஓ! யாத்திரை பிராமணர்கா! இன்றுமுதல் பேதபுத்தியை யொழித்துச் சகலசேதனங்களை பகவான் சொரூபமாக பாவித்து கடைத்தேருமென்று சொல்லிய துளசிதாசரை பிரியதாசர் கொண்டாட பிரியதாசரைத் துளசிதாசர்கொண்டாட ஒருவருக்கொருவர் ஆனந்த மேலீட்டால் இருகத்தழுவிக்கொண்டு இரவும்பகலும் பரமானந்த நிஷ்டராகி யிருந்தார்கள்.

இப்படிக்கிருக்க துளசிதாசர் பிரியதாசரைநோக்கி, மகானுபாவரே தேவரீர் காசிக்ஷேத்திரத்திற்கெழுந்தருளி எம்போலொத்த பாமரர்களை திருத்தியாளுமென்று வேண்டிக்கொண்ட துளசிதாசருடன் பிரியதாசர் வாரணாசிக்குச் சென்று சிலநாளங்கு தங்கியிருந்து துளசிதாசரிடம் விடைபெற்று பிரியதாசர் தமது நிவாசமாகிய யமுனாநதி க்ஷேத்திரஞ் சேர்ந்தார் பின்பு துளசிதாசர் அந்த காசி க்ஷேத்திரத்தில் வசித்து அநேக பாமரர்களைத் திருத்தி பகவானையாராதிக்கும்படி செய்து ஓர்நாள் ஸ்நானனுஷ்டானங்களை முடித்துக் கோஷ்டியுடன் பிரசாதம் புசித்து பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டே மோக்ஷவீடடைந்தார் கேட்டீர்களோசித்தர்களேயென்று நாபாஜிசித்தர் சொல்லிமுடித்து அனுஷ்டானத்திற்கெழுந்தருளினார் உடனே உத்தவசித்தர் முதலான யாவரும் பிரமானந்தசாகரத்தில் மூழ்கி ஆனந்தபரவசராகி தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணேநம:

துளசிதாசர் சரித்திரம்.

முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஸ்ரீபாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

ஐந்து தாசர்களின் சரித்திரங்களில்

நாமதேவர் சரித்திரம்.

பிற்பாதி.

நாமதேவர் ஞானேசுவருடன் யாத்திரைசெய்த அத்தியாயம்.

மறுநாள் காலையில் உத்தவசித்தர் முதலானோரும் எழுந்து ஸ்நானநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நாபாஜி சித்தரிடம்வந்து அவர் தாமரை பொற்பாதங்களுக்கு வந்தனஞ்செய்து அஞ்சலியஸ்தராய் நின்று ஓசுவாமி நேற்றையதினம் ஞானதாசர் சரித்திரத்தின் பாதியையுங்கேட்டு பரமானந்த மடைந்தோம் இனி நாமதேவர்சரித்திரம் மீதியையும் ஞானதேவர் சரித்திர பாதியையுஞ் சேர்ந்த அவா கொண்டோம் அடியேங்கள் பேரில் கிருபைசெய்து சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்த உத்தவசித்தர் முதலானோரை நோக்கி விரிஞ்சாவதாரரான நாபாஜிசித்தர் சொல்லத்தொடங்கினார் சேனுங்கள் சித்தர்களே பாண்டுரங்கன் சந்நிதியில் பகவத்தியானஞ் செய்து பரமானந்த பரிதராகியிருக்கும் நாமதேவரை தெரிசிக்க எண்ணங்கொண்டு ஞானேசுவரர் பண்டரீபுரத்திற்குவந்து அவர் வீட்டிற்குப் போகையில் அவரெதிர்கொண்டு,

சுலோகம்.

"வைஷ்ணவம் வைஷ்ணவோ த்ருஷ்டவா
ப்ரண மேத்தண்ட வத்புவி."

என்பதுபோல தீர்க்கதெண்டனிட்டு வந்தனஞ் செய்து அழைத்துக் கொண்டுபோய் சகல உபசாரங்களுடன் பூசித்து ஞானநிதியாகிய ஓசுவாமி சம்சார சாகரத்தில் மூழ்கினவராகும் ஜீவராசிகளைக்காப்பாற்றுவதற்காக அவதரித்த தேவரீர் பரமகிருபையினால் இந்த குடிசைக்கு எழுந்தருளினீர் தங்கள் சேவையினால் அடியேன் கிருதார்த்தனாகினேன் என்று சொல்லி மறுபடியும் தெண்டனிட்டு எழுந்திருக்சாமலிருந்தார் அப்போது ஞானேஸ்வரர் நாமதேவரை யெடுத்தாலிங்கனஞ் செய்துக் கொண்டு ஓ! மகாதேவா நினது பாக்கியத்திற்கு அளவுகிடையாது பகவத்பக்திசுகம் உனக்கே பிராப்தமாகியிருக்கிறது காமக்குரோத லோபமோக மதமாச்சரியங்களை சமூலமாக வெட்டி ஸ்ரீ ருக்குமணி நாதனிடத்தில் பரமப்பிரியயுக்தமாகும் பக்தியை செய்துக் கொண்டிருக்கிறாய் நின் பாக்கியமே பாக்கியம்.

சுலோகம்.

"அஸ்போடயந்தி பிதா:
ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:
வைஷ்ணவோய குலேஜாத:
ஸநஸ்ஸந்தா ரயிஸ்யதி."

என்பதுபோல நின்பிதாக்கள் நமது குடும்பத்தில் ஒருவைஷ்ணவன் பிறந்தான் நம்மைக் காப்பாற்றுவானென்று சப்தமிட்டுக் கொண்டிருக்கிறார்கள் நினது பிதாமஹர்கள் பரமானந்த பரிதர்களாகி நடனஞ் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புண்ணியத்தை நானென்னென்று சொல்லுவேன் என்று சொல்லி உன்னுடன் என்மனோரதத்தை அந்தரங்கமாக சொல்லவேண்டி யிருப்பதினால் யேகாந்தத் தலத்திற்குபோகலாம் வாருமென்று அவர் கையைப்பிடித்து. அழைத்துக் கொண்டுபோய் ஏகாந்தமாக உட்காரவைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரையுந்தேவதை தெரிசனமும் நாமிருவருமாகச் சேர்ந்து செய்ய வேண்டுமென்று அபேட்சிக்கிறேன் நீ என்மனோரதத்தை யீடேற்ற வேண்டுமென்று மிகவும் வேண்டிக் கொண்டார். நாமதேவரந்தச் சொல்லைக்கேட்டு விசனாக்கிராந்த சித்தராகி ஸ்ரீபண்டரிநாதன் நித்திய சேவையும் இந்தக்ஷேத்திரத்தினில நித்தியவாசத்தையும் விட்டு வேறொன்றை யபேட்சிப்பது கையிலிருக்கும் ஜலத்தைக் கொட்டிவிட்டு மோஜலத்தை அபேட்சிப்பதுபோ லிருக்கிறது. என்று சிந்தித்து ஞானேஸ்வரரைப் பார்த்து ஓ! சுவாமி நான் பண்டரிநாதனுக்கு சுவாதீனம் நான் பிறந்ததுமுதல் இன்றைய வரைக்கும் என் தேசயாத்திரையும் ஆத்தும யாத்திரையும்

ஸ்ரீ பாண்டுரங்கனுடைய ஆதீனமாகி யிருக்கிறது. மனோவாக்குக் காயங்களினால் அவருக்கே சேஷமாகி யிருக்கிறேன் அந்த தேவன் தெரிசனம் இடைவிடாமல் செய்துக் கொண்டிருக்கும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க ஞானேசுரர் நாமதேவரை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு ஓ நாமதேவா! நின்னந்தரங்கபாவம் எனக்கு நன்றாக வெளிப் பட்டது நின்னென்னை மப்படியானால் ஸ்ரீ பண்டரிநாத விஷயதிற்குப் போகலாம் வாருமென்று அவர்கையைப் பிடித்துக்கொண்டு சந்நிதிக்குள் புகுந்து பலிவிடத்தினருகில் நமஸ்கரித்து உள்நுழைந்துசெங்கல்லின்பேரில் நின்றிருக்கும் சுவாமியை நேத்திரோர்ச்சவமாகச் சேவித்து விதிப்படிபூசித்து ஞானேசுவரர் தோத்திரஞ்செய்து தன்மனோரதத்தை விண்ணப்பஞ் செய்துக்கொள்ள ஸ்ரீநிவாசன்கேட்டு ஞானேஸ்வரரை சுத்தப் படிகத்தைப்போல களங்கமில்லாதவனுகும் நீ மனஞ்சலித்து தீர்த்த யாத்திரைக்கு அபேட்சிப்பது சூரியன் ஒளியையும் சந்திரன் குளிர்ச்சியையும் அபேட்சித்ததுபோ லிருக்கிறதென்றார் ஞானேசுவரர் ஜெகதீசா! தேவரீர் ஸ்ரீசூக்தி உண்மையாகிலும் பக்தி மிகவும் சிரேஷ்டமாகியது இந்த நாமதேவர் பரமானந்தத்தை பானஞ்செய்ய வபேக்ஷித்து விண்ணப்பஞ் செய்தேன் ஆகையால் தேவரீர்கிருபை கூர்ந்து என்மனோரதத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்போது ஸ்ரீ பண்டரிநாதன் புன்னகையுடன் நாமதேவரைப் பார்த்து ஒ குமாரனே! ஞானேசுவரரை சாக்ஷாத் பரப்பிரம்ம சொரூபமென்று அறியும் அவர் நின்னுடைய நேசத்தை அபேக்ஷித்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் நீஅவருடன் கூடிப்போய் அவரிஷ்டப்படியாக நடந்துக்கொள்ளும் சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலு மென்னை மறக்கவேண்டாம் எனக்குபிராணபதமாகும் நின்பிரிவு கஷ்டமாகயிருக்கிறது துரிதமாக திரும்பி வாருமென்றுசொல்லி ஞானேசுவரரைப் பார்த்து நீர் சத்தசாந்தமூர்த்தி சர்வக்ஞானி நின்னையொன்று வேண்டுகிறேன் நாமதேவர் எனக்குருக்குமணியைவிட அதிகபிரியன் அப்படிப்பட்டவனை நினது தாக்ஷண்ணியத்திற்காக நின்னுடன் அனுப்புகிறேன் அவனை பரமபிரியத்துடன் காப்பாற்றித் துணைபற்றிக்கொண்டு வரவேண்டுமென்றுசொல்லி நாமதேவர் கையைப்பிடித்து ஞானேசுவரர் கையிலொப்பிவித்து, நாமதேவர் பிரிவைசகிக்காமல் கண்ணீருதிர்த்து ஞானேசுவரரே! என் பிராணபதமாகும் நாமதேவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்து கொள்ளுமென்று சொல்லிய வார்த்தையை ஞானேசுவரர்கேட்டு ஆனந்தமடைந்தவராகி ஸ்ரீபண்டரிநாதனைச் சேவித்து நாமதேவர் கையைப் பிடித்துக்கொண்டு சந்திரபாகாவென்னும் நதிக்குவந்து இருவரும் ஸ்நானஞ்செய்து தீர்த்தயாத்திரைக்கு சங்கல்பம் செய்துக்கொண்டு புண்டரீகவரதன் பாததாமரைகளுக்கு சாஷ்டாங்க வந்தனஞ்செய்து வாருதேன் சிந்தயகேசவம் என்பதுபோல கேசவநாமத்துதியுடன் வெளிப்பட்டு போயினார்கள்.

ஸ்ரீ பண்டரிநாதன் கொஞ்சதூரம் பின் சென்று இந்தஇருவரையும வழிவிட்டு சந்நிதியைச் சேர்ந்தார் அப்போது சுவாமியின் பாததாமரைகளை அலம்புவதற்கு தீர்த்தத்தைக் கொண்டுவந்து ருக்குமணி பிராட்டி அவர் நேத்திரங்களில் சோக ஜலத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு உன்தன்புள்ளாநாதா இந்த விசனத்திற்குக் காரணமென்னவென்று கேழ்க்க, பக்தவச்சலன் ஓ பெண்ணே! எனது பிராணபதமாகும் நாமதேவன் தந்தை தாய் தனயன் தமையன் பெண்டு நேசர் ஆதிசகலமும் நானேயென்று என்னிடத்தில் வசித்திருப்பான் அப்படிப்பட்டவனை ஞானேசுவரர் பின்னனுப்பினேன் அவரவனை எப்படி துணைபற்றிப் போவரோ அறியேன் அந்த நாமதேவன் பிரிவு எனக்கு விசனத்தை யுண்டாகச் செய்துக் கொண்டிருக்கிறது பரம பக்தரத்தினமாகும் நாமதேவன் ஒருபோதும் என்னைவிட்டுப் பிரிந்தவனல்ல அப்படிப் பட்டவனை விட்டிருப்பதினால் என்மனது எதினிடத்திலும் ஒட்டாமலிருக்கிறது நான்சகல ஜெகத்ரூபமரத்துக்கு மூலமாகியிருக்கிறேன் நாமதேவன் அந்த மரத்தின் வேருக்கு தாரகமாகும் ஜலமாகியிருக்கிறான் அப்படிப்பட்ட ஜலத்தை ஞானேசுவரரெனும் மேகம் கைக்கொண்டு போனதென்று விசனப்பட்டிருக்க ருக்குமணி பிராட்டி ஓபக்திக்கு வசப்பட்டவரே நினது மொழிகள் சத்தியமாகிலும் "ஸர்வஸ்யசாஹம் ஹ்ருதிஸன்னிவிஷ்ட" என்று நீரேசொல்லியிருக்கிறீரல்லவா சகல ஜீவஹ்ருதப்கமலவாசராகும் உமக்குநாமதேவன் பிரிவு எப்படிசித்திக்கும் ஏனிப்படி விசனப்படுகிறீரென்றுசொல்ல அனந்த கல்யாணகுண நிதியாகும் பகவான் ஜெகன்மாதாவைப் பார்த்து நான் அரூபியாகும் பக்தர்கள் அனுபவத்திற்காக திருவைகுந்தாதி ஸ்தலங்களில் சொரூபியாகி யிருக்கிறேன் அப்படிப்பட்ட திவ்வியமங்கள விக்கிரக விசிஷ்டனாகும் எனக்கு அந்தந்த தேசவாசிகளாகிய பக்தர்களும் அவர்களுக்கு நானும் பிராணபத நிதியாகி யிருப்போம் சூரியனுடன் தன் கிரணங்களுக்கும் புஷ்பங்க

Koviloor Digital Library

ளுடன் அதின் பரிமளத்திற்கும் பிரிவிராததுபோல என்னுடன் ஏகத்துவேஷாதிகளை யென்றவர்க ளாரும் என் அந்தரங்க பக்தர்களுக்குப் பிரிவுகிடையாது அப்படிப்பட்டவர்களில் சிரேஷ்டனாகிய நாமதேவன் பிரிவை நானெப்படி சகிப்பேன் என்றுசொல்லி சிந்தாக்கிரந்தராகி யிருந்தார் ஸ்ரீ ருக்குமணி பிராட்டியும் அநேகபக்தர்களும் பக்தவர்சலனுக்கு அநேகவிதங்களாக சமாதானஞ்சொல்லி துக்கசாந்தி செய்துக்கொண்டிருந்தார்.

இவிடத்திய விருத்தாந்த மிப்படியிருக்க அவிடத்தில் நாமதேவரும் ஞானேசுவரரும் வழியே போய்க்கொண்டிருக்கையில் நாமதேவர் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓகிருபாநிதி ஓஜெகந்நாதா ஓபண்டரிநாதா ஓபிராணநாதா.

சுலோகம்.

"த்வமேவமாதா சபிதாத்வமேவ
த்வமேபந்துஸ் சகுருஸ்த்வமேவ
த்வமேவித்யாத்ர விணம்த்வமேவ
த்வமேஸர்வம் மம்தேவதேவ."

என்பதுபோல, எனக்கு மாதாபிதா குருதெய்வம் யாவத்தும் நீயாகியிருக்க இப்போ தும்மைப் பிரிய வேண்டியதாய் வந்தது என்று துக்கித்து மூர்ச்சையடைந்து பூமியின்மேல் விழுந்து அன்னையைப் பிரிந்த பிள்ளையைப்போல பிரலாபித்துக்கொண்டிருந்தார் அவரைப் பார்த்து ஞானேசுவரர் ஓபக்தசிரோமணியே பரிபூரணனாகிய சர்வாந்தரியாமியாகும் ஸ்ரீ விட்டலதேவன் நின்னிருதய கமலத்தினில் வசித்து சர்வசாக்ஷியாகியிருக்க நீஎன்விசனுக்கினிக்கு ஆதாரமாகிறுப் பாக்கியயினை அவன்பெரியோர்கள் புதைத்துவைத்த தனத்தைக் கண்டுபிடித்து அனுபவிப்பதற்கு விதரணையில்லாமல் கஷ்டப்படுவதைப் போல சாதுஜெனங்கள் பங்கில் புதையலாகும் கோபாலசூடாமணி நின்னிருதயத்தில் நிவாசனாகியிருக்க அவரை நிரந்தரம் தெரிசித்து ஆனந்திக்காமல் பாண்டுரங்கனைப் பிரிந்து விட்டேனென்று பேன் துக்கப்படுகிறுப் என்றுசொல்ல நாமதேவர் ஓசுவாமி அரூபமாகும் அந்தர்யாமித்தும் உபாசிப்பதற்கு நான் யோகாரூடனல்ல திவ்வியமங்கள விக்கிரக விசிஷ்டனாகி அனந்த கல்யாணகுணநிதியாகி ஸனகாதிப்ரமயோகி நாதவினோதனாகி புண்டரீகவரதனாகி ஜீவன் முக்தநிதியாகி பீமநதிக்கரையில் கடிதடத்தில் கைகளைவைத்தவனாகி சேதனர்கள் அபிமுக்கியத்தை எதிர் பார்த்திருக்கும் ஸ்ரீ பாண்டுரங்கனைவிட என்மனது வேறொன்றிலில் நில்லாது அந்தபகவான் திவ்விய பாததாமரைகளை நான் நிரந்தரம் தரிசனஞ்செய்துக் கொண்டிருக்கும்படி யருள்புரியும் அப்படியாகாத விஷயத்தில் என்பிராண நில்லாது அந்தஜெகதீசன் தெரிசனகீர்த்தனை தியானங்களே எனக்கு தாரகபோஷக போக்கியங்களாகி யிருக்கிறது என்றிப்படி நிரந்தரம் சொல்லிக்கொண்டு தன்முக்தாபுரபத்தனால் ஞானேசுவரருக்கு பரமானந்தத்தை யுண்டாக்கிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் ஞானேசுவரர் நாமதேவரைப்பார்த்து ஓ பரமபக்த சிகாமணியே நீஎப்படி பஜித்தாய் எப்படி தியானஞ் செய்தாய் ஆத்தியாத்மிக ஆதிபௌதிக ஆதிதெய்விகரூபமாகும் தாபத்திரய அக்கினியைக் குளிரச்செய்து ஜனனமரண பிரவாகத்திற்குத்தப்பிநாக அக்கினியை தணிப்பதாகும் வாசுதேவ விருக்ஷசாயை எப்படியடைந்தாய் என்றுகேழ்க்க நாமதேவரவருக்கு வந்தனஞ்செய்து ஓசுவாமி! நான்பாமரன் மூடன் பண்டரிநாதன என்னைக் காப்பாற்றும்படி தேவரீர் சுவாதீனஞ் செய்திருக்க அக்ஞர்களிலேமுதல்வனாகும் என்னை திவ்யக்ஞானானந்த மூர்த்திகளாகும் தேவரீரிப்படிக் கேழ்ப்பது காமதேனு அன்னியர்கள் புல்லை யாசித்ததுபோலிருக்கிறது என்றுசொல்லி மௌனமாக யிருந்தார் அப்போது ஞானேசுவரர் ஓநாமதேவரே! நினது மதுரமொழிகள் சுவானுபவானந்த ரஸத்திற்காகிலும் அதிசய ஆனந்தத்தை யுண்டாகச் செய்கிறது அமுர்தத்திற்கு நிகராகியதாகும் நினது திவ்விய கீர்த்தனையை நிரந்தரம் சிரவணானந்தமாகக் கேழ்க்கக்கோருகிறேன் நினக்கு சமமாகும் பக்தர்கள் இந்த உலகங்களிலில்லை இப்படிப்பட்ட அனுபவத்தினில் அபேக்ஷையினால் நினதுநேசம் ஸ்ரீ பாண்டுரங்கன் கிருபையினால் அடைந்தேன் நின்னைப்போல அபாரபக்திசுகத்தை யனுபவிப்பவர்கள் பூவுலகினிலில்லை.

சுலோகம்.

"த்மோயாஹ்பம் விஸ்யேத்து
பாவகாதித்ய ஸன்னிதெள
பாஹ்பமாம் யந்தரம்சைவ
விஷ்ணுபக்தார்க்க ஸன்னிதெள."

என்பதுபோல சூரியன் அக்கினி இவர்கள் சந்நிதியில் வெளியிருள் நசிக்கும் நின்னையொத்தவிஷ்ணு

பக்த சூரியன் எதிரில் நாஸ்திக சகவாசத்தினு லுண்டாகும் வெளியிருளும் காமக்குரோதாதிக ளுண்டாகும் உள்ளிருளும் நசிக்கும் ஆகையால் நீ சங்கையை விட்டு எனக்குள்ள அனுபவத்தைச் சொல்லி என்மனோரதத்தைப் பூர்த்தி செய்யுமென்று பிரார்த்தித்தார் உடனே நாமதேவர் வந்தனஞ்செய்து அதிக விநயமாக ஓசுவாமி உலகத்தை ரக்ஷிக்கும் நிமித்தியமாக அவதரித்த ஜெகத்குருவே தந்தைதன்பிள்ளையின் மிருதமதுரவாக்கியங்களை பிரியத்துடன் கேட்க அபேக்ஷிப்பதைப்போல தேவரீர் என்வார்த்தைகளினால் என் அனுபவத்தைக் கேட்க அபேக்ஷித்து இத்தனை உபசாரங்களைச் சொல்லுகிறீர் நியமித்தபடியாகவே தேவரீர் பரமகிருபையினால் கிடைத்ததாகும் அநுபவத்தை விண்ணப்பம் செய்கிறேன் முதலில் சஞ்சலமற்ற வைராக்கியம் உண்டாகவேண்டும் அஃதுண்டாயபிறகு பூததயாளம் செழிக்கும் அப்போது நீர் நானென்னும் விகாரங்கள் நசிக்கும் இப்படிப்பட்ட ஸ்திதி எவனுக்குண்டோ அவனே சுத்தபஜனைக்கு அதிகாரியாகுவான் இப்படிப்பட்ட லக்ஷணங்களுடன் கூடாதபஜனை கெயுடன் புசித்த அன்னத்திற்கு நிகராகும் எனதிருதயத்தில் ஞானானந்த சொரூபியாகும் ஸ்ரீ பாண்டுரங்கநாதனை சர்வசுவாமியாக எண்ணியிருக்கிறேன் அதுவே எனக்கு தியானம் இத்தஞானமே எனக்கானந்தத் தன்மையாகியிருக்கிறது இது நாசமாகாதது அசுணமெனும் பக்ஷி தேகத்தை மறந்து நாதத்தி லயிப்பதுபோல கிலேசங்களைவிட்டுப கவத்விஷய சிரவணங்களில் லயிக்கவேண்டியது ஒருபணஞ்சேருமவன் சித்தத்தை நானாவித விவகாரங்களில் வைத்தபோதிலும் திரவியத்தை சம்பாதிப்பதில் முயற்சி கொண்டிருப்பதுபோல ஸ்ரீமந்நாராயணனே நாசமில்லாத திரவியமென்று தன்மனதில் பதித்திருக்கவேண்டியது சாதகப்பக்ஷி ஆகாயத்தில் சஞ்சரித்து மேகங்களை லக்ஷியம் பண்ணுவதைப் போலவும் பசு மலைகாடு பூமிகளிடத்தில் மேய்ந்தும் தன்கன்றினிடத்தில் மனதை வைப்பதுபோலவும் சம்சாரத்தில்வசித்திருந்தும் இருதயத்தில் சகல பாவங்களினால் ஸ்ரீ பாண்டுரங்கனை பாவிக்கவேண்டும் ராஜஸகுணங்களை விட்டு சாந்தகுணசீலனாகிய பகவத் பிரியபக்தனாகி நேமத்துடன் ஏகாந்தமாக உட்கார்ந்து ஸ்ரீஹரியைத் தியானிக்கவேண்டும் இது பரமசாதனம் மற்றசாதனங்கள் வெகுபந்தங்களாகும் இப்படி என்மனம் வாக்குக்காயங்களினால் செய்யும்அனுபவத்திற்கு ஸ்ரீருக்குமணிநாதன் சாட்சியாகி நிர்வாகனாகி யிருக்கிறார். என்று சொல்லிய நாமதேவர் அனுபவ வாக்கியங்களைக்கேட்டு ஞானேசுவரர் சந்தோஷித்து ஓநாமதேவரே முனையுகாலங்களிலும் விஷ்ணுபக்தர்களில் நினக்குச் சமமானவர்களில்லை நினது வாக்கமுர்தம் எனக்குக் கிடைத்ததுபோல காலாகாலங்களில் ஒருவருக்கும் கிடைக்கமாட்டாது மகாயோகிகளும் ரிஷிகளும் ஞானவியோகஞ் செய்யுமவர்களாகிலும் அவர்களிலே நின்னைப்போல பரமபக்த ரொருவருமில்லை என்றுசொன்னார் இப்படி கிரந்தமும்.

சுலோகம்.

“மச்சித்தா மத்தப்ராணா
போதயந்தே பரஸ்பரம
கதயந்தஸ்சமாம் நித்யப்
துஷ்யந்தி சரமந்திச.”

என்பதுபோல் பரமானந்தத்தை யனுபவித்து அஸ்தினாபுரத்திற்கு வந்தார்கள் நாமதேவர் ஸ்ரீஹரி கல்யாணகுணங்களைப் புகழ்ந்துக் கொண்டிருக்கும் பரமானந்தத்தை அந்த பட்டணவாசிகள் யாவரும் பார்த்து வியப்படைந்து ஸ்ரீ புருஷர்களென்ற லஜ்ஜையில்லாமல் பகவந்நாம சங்கீர்த்தனைகளைச் செய்து மெய்மறந்து பரவசர்களாகி யிருந்தார்கள்.

இந்த விருத்தாந்தங்களை அவ்வூரரசன் கேட்டு நான் இவர்கள் உண்மையான பக்தியை பரீக்ஷை செய்து பார்க்கிறேன் பொய்யாயிருந்தால் இவர்களுக்கு அவமானம் தப்பாமலுண்டாகச் செய்கிறேனென்று திடஞ் செய்துக்கொண்டு நாமதேவர் பரமானந்தமடைந்தவராகி கீர்த்தனைகள் செய்யுமிடத்திற்கு ஒரு இறந்த பசுவைக் கொண்டுவந்து அவரைப் பார்த்து இந்தபசுவை நீர் பிழைக்கச்செய்தால் நின்பக்தி உண்மையென்று நம்புவேன் அப்படிசெய்யாதபட்சத்தில் கேவலவேடந்தரித்த உன்னை சிட்சை செய்வேன் என்று சொல்லிக் கொண்டிருக்க நாமதேவருடன் பஜனை செய்திருந்தவர்கள் யாவரும் நாமதேவருடன் பஜனை செய்திருந்தார்கள் அப்போதந்த துலுக்க வரசன் நாமதேவரைப் பார்த்து இந்தப்பசுவை எத்தனை நாளில் பிழைக்கச் செய்வாயென நான்கு நாளுக்குள் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்துமா இந்தப்பசுவை பிழைக்கச் செய்வாரென்று நாமதேவர்சொல்ல அதைக் கேட்ட ராசன் சில சேவகரைக் காவல்வைத்து தன்னரண்மனைக்குப் போயினான் அப்போது நாமதேவர் ஸ்ரீஹரியைத் தியானித்து,

Koviloor Digital Library

ஸ்லோகம்.

"ஹேகோபாலக ஹேக்ருபாஜலநிதே ஹேஸிந்
துகன்யாபதே, ஹேகம்ஸாந்தக ஹேகஜேந்திரகருணா
பாரீண ஹேமாதவ, ஹேராமாநுஜ ஹேஜகத்ரயகு
ரோ ஹேபுண்டரீகாக்ஷமாம். ஹேகோபீஜனநாதபால
யபரம ஜாநாமித்வாம்விநா."

என்று வெகுவிதங்களாகத் துதித்து அந்தப்பசுவின் தலையை தன்மடிமேல் வைத்துக்கொண்டு ஸ்ரீ பண்டரிபுரவாஸா லக்ஷ்மீகேசா பக்தர்கள் உளத்தில் வாசசர்வேசா ஜெகதீசா துரிதமாகவாரும் நானழைத்துக்கொண்டிருக்க நீர் உபேக்ஷையாயிருப்பதற்குக் காரணமென்ன ஸ்ரீ ருக்குமணி பிராட்டியுடன் சல்லாபமாடிக்கொண்டு என்னை மறந்தீரோ, பக்தர்கள் கீர்த்தனைகளைக்கேட்டு சொக்கினீரோ, யோகிகள் மனதிலகப்பட்டு நின்றீரோ அடுத்தவர்கள் சங்கடங்களைப் போக்குவதற்காக எங்காகிலும் போனீரோ பண்டரிபுரத்திற்கு நின்தெரிசனை நிமித்தியம் யாராகிலும் பரமபக்தர்கள் வந்தார்களோ என்று ஆபத்தையடைந்த மனத்தனாகி அழைக்கையில் ஸ்ரீபாண்டுரங்கநாதன் வந்து தெரிசனந்தர நாமதேவர் எழுந்து பகவான் பாதத்தாமரைகளை பிடித்துக்கொண்டு அனாதைகள் பந்துவே ஆபத்பாந்தவா என் நாலுநாளாய் உபேக்ஷை செய்தீர் இது உமக்கு தர்மமா என்று கேழ்க்க பகவான் ஓநாமதேவரே என்பேரில் குற்றமில்லை இந்தபசு நான்குநாளைக்கும் பிழைக்குமென்று நீசொன்னபடியால் நான் தாமசமாகவந்தேன் உடனே பிழைக்குமென்று நீசொல்லியிருந்தால் நான்அப்போதே வந்து பசுவை பிழைக்கச்செய் திருப்பேன் என்பக்தர்கள் வாக்கில்வரும் சொற்களை உண்மை செய்வது எனக்கு முக்கியமாகிய விரதம் நான் அந்தரங்கபக்தர்களுக்கு பரதந்திரனாகி யிருக்கப்பட்டவன் என்றுசொல்லி பசுவை எழுப்பி மறைந்து போயினார் ராஜசேவகர் இந்த ஆச்சரியத்தை இராஜனோடு சொல்ல அவன்வந்து நாமதேவர் பாததாமரைகளுக்கு வந்தனஞ்செய்து ஓசுவாமி தேவரீரே தன்னியர் ஸ்ரீஹரிக்கு அந்தரங்கதாசர் தேவரீரது பரமபக்தி விபலம் தேவர்களுக்கும் வாசாகோசரமாக யிருக்க மூடனாகும் நான் தேவரீரை பரீக்ஷைசெய்ய வந்தக் குற்றத்தை மன்னித்து என்னை தொண்டனாக ஆட்கொண்டு ரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துத் தானும் பகவந்நாம சங்கீர்த்தனை செய்தக் கொண்டிருந்தான் அப்போது அவிடத்தில்யாவரும் நாமதேவர் பிரபாவங்களை பலவிதங்களாகப் புகழ்ந்துக்கொண்டிருந்தார்கள் கேட்டீர்களோ சித்தர்களே யென்று நாபாஜிசித்தர் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்.

ஞானேசுவரரும் நாமதேவரும் கபீர்தாசர் வீட்டிற்குவந்த அத்தியாயம்.

பிறகு நாமதேவர் ஞானேசுவரருடன் அஸ்தினாபுரத்திற் சிலநாள் வசித்து அவ்விடத்தில் சிலரைப் பகவத் பக்தியுக்தர்களாகச் செய்து அவ்விடத்தை விட்டு காசிக்குவந்து கெங்கையில் ஸ்நானஞ் செய்து அங்குள்ள தேவாலயங்களுக்குப் போய் பகவானைத் தெரிசனை செய்துக்கொண்டு நான்குமாதம் அந்த க்ஷேத்திரத்தில் வசித்துவரும்போது ஒருநாளிரவில் இவ்விருவரும் கபீர்தாசர் வீட்டிற்குப் போகையில் கபீர்தாசர் பத்தினிசமேதராய் எதிர் கொண்டுவந்து அவ்வைஷ்ணவ உத்தமர்களுக்கு சாஷ்டாங்கவந்தனங்கள் செய்து வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அந்த சுசீலன்வீட்டில் தரித்திரஸ்திதியினால் ஒருநாள் உணவிற்குக்கூட எதுவில்லாமல் சிசுக்கள் முதலாக பட்டினியாக நித்திரை செய்துக்கொண்டிருந்தார்கள் இப்படி யிருக்கையில் வந்த அதிதிகளை ஆதரிக்கவேணுமென்று கபீர்தாசர் தன்பத்தினியோடுசொல்ல, அந்தகுணவதி நல்லதென்று சொல்லி சிந்தாக்கிராந்தையாகி கடைத்தெருவுக்குப் போயினாள் அப்போது ராத்திரி ஜாமமாகியதினால் கடைகள்மூடப்பட்டிருந்தது ஒரு கடைக்காரன் மாத்திரம் விழித்துக்கொண்டிருக்கையில் கபீர்தாசர் பத்தினி அவன் சமீபத்திற்சென்று தைரியத்துடன் ஓ! பாக்கியவானே தீர்த்தயாத்திரை வாசிகளாகும் பரமசாதுக்கள் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள் அவர்களுக்குப் பிரசாதம் செய்வதற்கு என்வீட்டில் பதார்த்தங்களெதுவுமில்லை ஆகையால் நீங்கள் தயைசெய்து அரிசி பருப்பு முதலாகும்வஸ்து சம்பாரங்கள் கொடுக்கும் பக்ஷத்தில் அதின் கிரயத்தை நாளை உதயத்தில் உனக்கு கொண்டுவந்து தருகிறேன் என்றுகேட்ட கபீர்தாசர் பத்தினியை வர்த்தகன் பார்த்து அகாலத்தில் ஒண்டியாகவந்து பதார்த்தங்களைக் கேட்கும் நீயாரென்று வினவ அந்தஉத்தமி நான் இவ்வூரில் வாசஞ்செய்யும் வைஷ்ணவ உத்தமராகும் கபீர்தாசர் பாரியாளென்று சொன்னாள் வர்த்தகன் மன்மதபரவசனாகி அந்தபதிவிரதையைப்பார்த்து உன்னைகண்டது

முதல் நான் கரும்பு வில்லினன் பாணங்களினால் பீடிக்கப்பட்டவனாகி யிருக்கிறேன் என்மனோரதத்தை யீடேற்றினால் நீ கோரியவஸ்துக்கள் யாவுந்தருகிறேன் எனக்கதின்விலை வேண்டியதில்லை யென்றான் அந்த சாதுவானவன் இந்த மொழிகளைக் கேட்ட நானென்ன செய்வேன் சாதுக்களாகும் அதிதிகள் உபவாசமாயிருக்கிறார்கள் இந்தவர்த்தகன் அங்கியில் மற்றவர்கள் கடைகளை மூடிக்கொண்டு வீட்டிற்குப்போயினார்கள் பர்த்தாவின் சித்தத்தை யறிந்து அதற்கனுகுணமாய் நடப்பது பத்தினிக்கும் பரதர்மம் பண்டு அதிதிசுஷ்ருஷைபரனாகும் சுதர்சனன் பத்தினி தன் கணவன் மனோபாவத்தை யனுசரித்து அதிதியாகி வந்த தர்மதேவதையினுடைய தேகஸ் பரிசத்துக்குடன்பட்டாளல்லவா நானிந்தவர்த்தகன் அபேக்ஷைக்கு சம்மதித்தாகிலும் வேண்டிய வஸ்துக்களைக்கொண்டுபோய் பர்த்தாவின் நேமனப்படியாக பாகவதர்களை யாராதிக்கிறேன் சாஸ்திரத்தில் தர்மஅதர்மநிருபணஞ் செய்யப்பட்டிருந்தாலும் சமயோசிதமா சில தர்மங்கள் அதர்மங்களாகி அதர்மங்கள் தர்மங்களாகின்றது பொய்சொல்லக் கூடாதென்று வேதம் விதித்திருக்க.

சுலோகம்.

"விவாஹகாலே ரதி ஸம்ப்ரயோகே
ப்ராணாத்யயே ஸர்வதனாபஹாரே
விப்ரஸ்யசார்த்தேஹ்யன்ருதம்வதேயுஃ
பஞ்சான்ருதான் யாஹு பாதகானிஃ"

என்பதுபோல, விவகாராதிகளில் பொய்சொல்லுவது பாவமல்லவென்று விசேஷ விதியுண்டாகியிருக்கிறது வேதம் ஜீவவதை கூடாதென்று விதித்து மறுபடியும் யாகங்களினில் செய்யப்பட்ட ஜீவவதை தோஷமல்லவென்று விதித்திருக்கிறது பதிவிரதையாகும் மாது பர்த்தாவின் வாக்கியத்தை வகித்து அவரிச்சைப்படி செய்யும் சகல காரியங்களும் பரமதர்மங்களாகியிருக்கும் சகல விதத்திலும் சுதந்திரத்தைவிட்டு நாதனிஷ்டப்படி நடக்கும் வகையல்லாமல் ஸ்திரீகளுக்கு சுதந்திரமாக நடப்பது நரகயேதுவாகுமே யல்லது நாயகனுக்கு வசப்பட்டு நடக்கும் எனக்கு கணவன் பிரியமடையும்படியாக செய்யுங்காரியங்கள் நரகத்துக் கேதுவாகாதென்று சிந்தித்து தன் கணவனுக்கு யாராத்தியனாகும் ஸ்ரீ ராமச்சந்திரன் பாதத்தாமரைகளை துதித்து வர்த்தகனைப் பார்த்து நான்கேட்ட வஸ்துகளைக்கொடும் நான்வீட்டிற்குப்போய் நாயகன் நேமனப்படியாக சாதுக்களை யாராதனை செய்து மறுபடியும்வந்து நின்கோரிக்கையை நிறைவேற்றுகிறே னென்றதைக்கேட்டு வர்த்தகன் நின்வார்த்தையை நானெப்படி நம்புவேன் என்னிஷ்டத்தை முன்னம் நிறைவேற்றினால் நினக்குவேண்டிய வஸ்துக்களை யதேஷ்டமாகக் கொண்டுபோம் அப்படி செய்வதற்கு சம்மதிக்காவிடில் நீவந்தவழியை பார்த்துக் கொண்டுபோ நீ கேட்ட பதார்த்தங்களைக் கொடுக்க மாட்டேனென்றான்.

அதைக்கேட்டு அந்த பதிவிரதை வர்த்தகனைப் பார்த்து நீர் என்வார்த்தைகளை நம்பமாட்டாயாகில் நான் செய்யும் சத்தியத்தையாகிலும் நம்பி நான்கேட்ட வஸ்துக்களைக்கொடும் உலகம் சத்தியமூலம் சத்தியத்தினாலேயே ஜெகம் கட்டுபட்டிருக்கிறது ஆகையால் நான் சத்தியமே வசனிக்கிறேன் நான்மறுபடியும் வாராதவிஷயத்தில் சகல காரணமாகும் சத்தியத்தை தப்பி நடப்பவர்கள் சேரும் கெதியை யடைகிறேன் மாமியை தூஷிப்பதும் கணவன் விஷயத்தில் கெட்ட மனமுடையவளாவதும் பாயாசம் அன்னியர்களுக்குக் கொடாமல் ஒருவளாய்ப் புசிப்பதும் தனிமைசெய்து தான் முன்னம் புசிப்பதும் வேலைகள்விஷயத்தில் கபடியாயிருப்பதும் பொய் சொல்லுவதும் புத்திரியை விலைகுக் கொடுப்பதும் நல்லோருக்கும் தீமை செய்வதுமாகு மிந்த துஷ்ட நடவடிக்கைகள் செய்பவளடையும் பலனை நானனுபவிக்கிறேனென்று பிரமாணஞ்செய்த அந்த பதிவிரதையின் வார்த்தையை வர்த்தகன் மிகவும் நம்பி அம்மாது கோரிய வஸ்துக்களைத் தந்தான் அந்த வஸ்துக்களைப் பெற்றுக் கொண்டு அவ்வனிதை தன்வீட்டிற்கு வந்து நடந்த சவிஸ்தாரங்களை கணவனுக்குச் சொன்னாள். அவரிந்த வஸ்துக்களைத் தன்வீட்டிற்கு வந்திருக்கும் சாதுக்களுக்குக் கொடுத்து அவர்களை திருப்திப் படுத்தி அவர்கள் பாகவதாராதனை செய்த அந்தசேஷான்னத்தைப்புசித்து நித்திரைசெய்தபின்பு கபீர்தாசர் தன் பத்தினியைப்பார்த்து ததீயாராதனத்திற்காக இப்படிப்பட்ட தருணத்தில் நமக்குபகாரஞ் செய்த மகா புண்ணியாத்துமனுக்கு என்னசெய்தபோதிலுந்தகும் சாதுக்கள் விஷயமாக நின்சரீரத்தை வர்த்தகனுக்குக் கொடுப்பதற்கு சம்மதித்த நீயும் புண்ணியவதி இப்போது நடுராத்திரியாச்சுது வழிநேராக விருக்கிறது சேரைமிதிக்கக் காலுடன் அவ்விடத்திற்குப் போகிறது உசிதமல்ல நடுராத்திரியில் ஸ்திரீகள் ஒண்டியாகத் தெருவே போவதுஞ் சரியல்ல நீசேரினிடத்தில் சரிக்கிழுவையாகில் பெருத்த உபகாரியாகும் வர்த்தகனுக்கு நீசெய்திருக்கும் வாக்குதத்தம் வீணாம்

Koviloor Digital Library

என்றுசொல்லி தன்பத்தினியை முதுகின்மேலெடுத்துக்கொண்டு அந்தவர்த்தகன் கடைக்கு சமீபத்தில் கொண்டுபோய்விட்டு நீவர்த்தகன் இஷ்டத்தை நிறைவேற்றி வாவென்று நேமித்து தான் வீடுபோய்ச் சேர்ந்தார்.

பிறகு அவ்வனிதை காமதூரந்தரனுகி தன்வரவையெதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வர்த்தகன் கடைக்குள் பிரவேசித்து நின்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும் என்றுள் அப்போது சூரியஉதயத்தினால் இருள் நீங்குவதுபோல வர்த்தகனுக்கு ஸ்ரீராமச்சந்திரன் கடாக்ஷத்தினால் அஞ்ஞானம்நசித்து அந்த பதிவிரதைக்கு பயபக்தியுடன் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து ஓ அன்னையே! நினதுநாயகராகும்கபீர்தாசர் ஸ்ரீராமபக்த நிதியாயிருக்கிறார் அப்படிபட்ட மகானுபாவருடைய பத்தினியாகும் நின்னை சாக்ஷாத் உலகமாதாவெனத்தகும் அப்படிப்பட்ட நினதுவிஷயத்தில் தப்பு எண்ணினதினால் என்ஜென்மம் வீணுகி விட்டது கணக்கில்லாத ஜென்மங்களெடுத்து இப்படி விஷயப்பிரியத்தினால் துர்ச்செநியையடைந்த நான் பகவான்) கடாக்ஷத்தினால் அரிதாகிய மானிடதேகமடைந்தும் மிகுந்த பாவியாகினேன் நான் பிதுர்க்களுடன் ரௌரவாதி நரகங்களை யடைவதற்கு பாத்திரனுகினேன் நினதுகடாக்ஷ அமிர்த மழையை என்பேரில் பொழிந்து என்னைப் புதல்வனுக அபிமானித்து எனக்கபயங்கொடுத்து நின்னுயகன் எதிரில் சரணங்கதனுகச் செய்து என்னைரட்சிக்க வேண்டுமென்று வெகுவிசங்களில் பிரார்த்திக்க கபீர்தாசர் பத்தினி சந்தோஷித்து அந்தவர்த்தகனுக்கு அபயஸ்தங்கொடுத்து அவனைப் பின்னழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குவந்து கணவனுக்கு வந்தனங்கள் செய்து வர்த்தகனைக் காட்டி நடந்த சங்கதிகள் யாவத்தும் விண்ணப்பஞ்செய்து இந்தஆத்துமாவை தங்கள் சிஷ்யனுக அங்கிகரித்து ஸ்ரீராமபூதிருக்கு அங்கிகார யோக்கியமாகும்படி அருள்புரிய வேண்டுமென்று புருஷகாரஞ்செய்ய கபீர்தாசர் தன் பாதங்களைப் பிடித்துக்கொண்டு பூமிமேல் விழுந்திருக்கும் அவனை கடாட்சித்து யெடுத்து ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு அவன் கண்ணீரைத் துடைத்து நீ விசனப்பட வேண்டாம் நிரந்தரம் ஸ்ரீ ராமச்சந்திரரை தியானித்துக்கொண்டும் அவர்நாமங்களை உச்சரித்தும் அவர்தாசர்களை ஆராதனைசெய்துக் கொண்டுமிரும் துஷ்டவிஷயமானயிச்சையை சமூலமாகவெட்டி யெரிந்துவிடும் ராஜச தர்மங்களை விட்டு சாந்தநிஷ்டனுகியிரும் மூவாசை நீக்கிவிடும்.

சுலோகம்.

"த்யஜதுர்ஜனஸம் ஸர்க்கம்
பஜசாதுஞ் மாகமம்
குருதர்மம் ஹோராத்ரம்
ஸ்மரநித்ய மனித்யதாம்."

என்றபடி துஷ்டர்கள் நேசத்தை நீக்கிவிட்டு சாதுஸங்கத்தைக் கோரிக்கொண்டிரும் இரவும் பகலும் சாஸ்திரஉக்மதமாகும் தர்மங்களை அனுசரியும் சரீரம் நீர்க்குமிழியை யொத்தது அனித்தியத்தைஎப்போதும் நினைத்துக்கொண்டிரும்.

சுலோகம்.

"மஸ்தகஸ்தாயினம் ம்ருத்யும்
யதிபஸ்யே தயஞ்சுசு:
ஆஹாரோபி நரோசேத
கிமுதாகர்ய காரிதா:"

என்றால் தன் தலைமேல் உட்கார்ந்திருக்கும் ம்ருத்தியு தேவதை தெரிந்து கொண்டவனுக்கு ஆகார முதலாகியதும் ருசிக்காதென்றால் நரகம் பிறுப்தியாகும் நீக்கப்பட்ட காரியங்களில் எப்படிமனதுபிரவேசிக்கும் என்று இதோபதேசஞ் செய்த கபீர்தாசர் வாக்கியங்களைக் கேட்டு வர்த்தகன் திவிரமனத்தனுகி.

சுலோகம்.

"நவைராக்யத் பரோலாப:
நபோதா தபரம்சுகம்
நகுரோரபரஸ் த்ராத்திரி
நசம்சாராத்ப ரோரிபு."

என்பதுபோல வைராக்கியத்திற்கு மிஞ்சிய லாபமும் நற்போதத்துக்கு மிஞ்சியசுகமும் குருவுக்கு மேலானரக்ஷகனும் சம்சாரத்திற்கு மேலாகிய சத்துருவும் இல்லையென்று திடஞ்செய்து சன்மார்க்கத்தில் பிரவேசித்து சாதுக்கூட்டத்தி லிருந்தான் இந்த அற்புதத்தை நாமதேவரும் ஞானேசுவரரும் பார்த்தாச்சரியப்பட்டு கபீர்தாசர் அனுமதியைப்பெற்று வெளிப்பட்டுப் போய் தீர்த்தயாத்திரைசெய்து மறுபடியும் கபீர்தாசர் வீட்டிற்கு வந்தார்கள்.

கபீர்தாசர் அவர்களை எதிர்கொண்டு சாஷ்டாங்க வந்தனஞ்செய்து உபசரித்தார் அப்போதுஇவர்கள் மூவரும் சந்தோஷ மடைந்தவர்களாகி பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்து ஆனந்தரசக் கடலில் மூழ்கியிருக்க ஞானேசுவரர் நாமதேவர் கபீர்தாசர்

Koviloor Digital Library

களுக்கு பூர்வஜென்மத்தையும் இந்த ஜென்ம காரணமாரும் பகவான் நேசமனத்தையும் தெரியப்படுத்த அவர்களிருவரும் சந்தோஷமடைந்து ஞானேசுவரருக்கு சாஷ்டாங்க வந்தனஞ் செய்தார் அப்போது ஞானேசுவரர் கபீர்தாசரைப்பார்த்து ஓபகவத்பக்தசிரேஷ்டரே! ஸ்ரீமந் நாராயணன் புண்டரிகனுக்குத் தெரிசனங் கொடுப்பதற்காக ஸ்ரீ பண்டரி க்ஷேத்திரத்திற் கெழுந்தருளி இப்போதுக்கும் ஆஸ்ரயித்தவர்களை அநுக்கிரகித்துக் கொண்டு ஸ்ரீ பீமநதிக்கரையினில் சந்நிதி செய்திருக்கிறார் அந்த தேவசிகாமணி இந்த நாமதேவருக்கு பிராணபதமாகி வசப்பட்டிருக்கிறார் அந்த புண்டரிகவரதனை நீர் தெரிசனைஞ்செய்யவேணுமென்ன கபீர்தாசர் ஆனந்த மடைந்தவராகி ஓசுவாமி தேவரீர் கட்டளையை சிரமேற்கொண்டு கார்த்திகை மாதம் சுக்லபக்ஷத்தில் உத்தானயேகாதசிக்குவந்து சேருகிறேனென்று விண்ணப்பஞ்செய்தார் ஞானேசுவரரும் நாமதேவரும் கபீர்தாசர் அநுமதியை பெற்றுத் தீர்த்தயாத்திரைக்குப் போயினார்கள்.

பின்பு நாமதேவரும் ஞானேசுவரரும் பிரியாகைக்குவந்து மூன்றுநதி சந்திப்பில் ஸ்நானஞ்செய்து அயோத்தி மதுரை கோகுலம் துவாரகை முதலாகிய ஸ்தலங்களை தெரிசித்து அவிடத்திய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து மார்வாடி தேசத்திற்கு வருகிறபோது இரண்டுபேரும் தாகத்தினால் மிகவும் பிடிக்கப் பட்டவர்களாகி எங்குந்தேடிச் செல்லுகையில் அம்மார்க்கத்தின் பக்கத்திலிருந்த ஒருகிணற்றை பார்த்து அதின் சமீபத்திற்குப் போய் பார்க்கையில் அதின்ஜலம் பாதாளத்திலிருந்தது ஞானேசுவரருக்கு கிணற்றிலிறங்கும் வழக்கமுண்டானதையால் அவரந்த கிணற்றிலிறங்கி தாபம் தீரும்படி தாகமருந்தி வெளியில்வந்தார் நாமதேவர் தாகதாபம் சகிக்கமாட்டாமல் ஸ்ரீ பண்டரிநாதனை நினைக்க சர்வக்ஞனும் சர்வசக்தனுமாகிய ஸ்ரீ ருக்குமணிநாதன் நாமதேவர் தாகதாபத்தை யறிந்து அந்தகிணற்று ஜலம் மேலுக்குவந்து பெருகும்படி நினைத்தார் நாமதேவரந்த ஜலத்தையருந்தி தாகசாந்தி செய்துக் கொண்டார் இந்த அற்புதத்தைக் கண்டு ஞானேசுவரர்ஆச்சரியப் பட்டு நாமதேவரை ஆலிங்கனஞ்செய்துக் கொண்டு ஓநாமதேவரே ஸ்ரீ பாஞ்சசன்னியதரன் உனக்குசுவாதினனாகி யிருக்கிறார்.

சுலோகம்.

“பித்ருமாத்ரு ஸுதப்ராத்ரு
தாராமித்ரா தபேபிவா
ஏகைக பலலாபாய
ஸர்வலாபாய கேசவம்.”

என்னும் வாக்கியத்தை பகவான் உன் விஷயத்தில் அநுஷ்டித்துக்காட்டினார் ஜெகந்நாதன் உனக்கு வசப்பட்டவனாகியிருக்க உனக்கு அசாத்திய மொன்றுண்டாவென்று சல்லாபமாடிக்கொண்டு இருவரும் அந்த ஜலத்தைவிட்டுப் போயினார்கள் அந்த ஜலம் நாமதேவர் தீர்த்தப் பிரவாகமெனத் தகுந்து இப்போதைக்கும் பெருகிக்கொண் டிருக்கின்றது அங்கு தனுர்மாசத்தில் சாது ஜனங்கள்வந்து ஸ்நானஞ்செய்வார்கள்.

பின்பு அந்த மகாத்துமர்க ளிருவரும் ஹரித்துவாரத்திற்குப்போய் கெங்கை ஸ்நானஞ்செய்து ஹிமயமலையேறி கெங்கோத்திரியில் ஸ்நானஞ்செய்து கேதாரீசனையும் பதரிநாராயணனையும் தெரிசித்து ஹிமயமலையை விட்டிறங்கி சாளக்கிராம நைமிசாரணியங்களை தெரிசித்து கயாக்ஷேத்திரத்திற்குப் பற்குணநதியில் ஸ்நானஞ்செய்து விஷ்ணு பாதத்தைத் தெரிசித்து பிதுர்க்களை யுத்தேசித்து பிண்டப்பிரசாதம் செய்து வைத்தீசுவரம் ஜெகந்நாதம் ஸ்ரீவர்மா பீமேசுவரம் ராஜமஹேந்திரம் சிம்மாசலம் மங்களகிரி ஸ்ரீசைலம் திராக்ஷாராமம் விருபாக்ஷம் அகோபிளம்வேங்கடமலை காளஸ்திரி கடிகாசலம் காஞ்சீரம் வேதகிரி அருணாசலம் ஸ்ரீமுஷ்ணம் சித்திரக்கூடம் மாயவரம் கும்பகோணம் ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் ரிஷபமலை ஆலாசியம் தேவாகாத்திரி மகேந்திரகிரி கன்னியாகுமரி ராமேஸ்வரம் தெர்ப்பசயனம் அனந்தபத்மநாபம் ஜனார்த்தனம் பாபநாசனம் குத்தாலம் கோகர்ணம் திரியம்பகம் யாதவாதித்ரி முதலாகிய திவ்விய க்ஷேத்திரங்களில் பகவான் தெரிசனஞ்செய்து கெங்கா யமுனை ஸரயுபிரயாகை சோபனத்திரை நாராயணி கிருஷ்ணவேணி கோதாவரி நர்மதை சிந்து புஷ்கரம் பாகுதை பம்பை க்ஷீரநதி காவேரி கிருதமலை தாம்பிரபரணி தனுஸ்கோடி முதலாகிய புண்ணிய தீர்த்தங்களில்மூழ்கி அவிடத்தில வசிக்கும் பகவத்பக்தர்களுடன் கலந்து பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்து மாசிமாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி மகாசிவராத்திரி நாளில் நாகநாதபுரத்திற்கு வந்தார்கள் அவிடத்தில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானங்களைமுடித்து நாகநாதர் சந்நிதிக்குவந்து சாஷ்டாங்க வந்தனஞ்செய்து மஹாமண்டபத்தில் பகவந்நாமசங்கீர்த்தனஞ் செய்துக் கொண்டிருந்தார்கள்.

Koviloor Digital Library

இவர்களிப்படி பகவானை தியானித்து ஹரிநாம சங்கீர்த்தனை செய்யும் பக்ஷத்தில் சகல ஜெனங்களும் வந்து ஆனந்தக்கண்ணீர்விட்டு சிரவணானந்த மாகக் கேட்டிருந்தார்கள் சிலர் ஆனந்தாதிசயத்தினால் சரீரத்தைமறந்து ஸ்தம்பித்தவர்களாயிருந்தார்கள் இப்படியிருக்க அந்த தேவாலயத்தில் அர்ச்சகர்கள் ஸ்நான சந்தியாவந்தனங்கள் செய்து சுவாமியைப் பூஜிப்பதற்கு வந்து இந்த கூட்டத்தைப்பார்த்து உள்ளேபோவதற்கு வழியில்லாமையால் அருவை யடைந்தவர்களாகி கூட்டத்தைப்பார்த்து நாங்கள் உள்ளே போவதற்கு வழிவிடுங்கள் எங்களைத்தொடாதிர்கள் இது என்னகூச்சல் இந்த ஆட்ட பாட்டங்களைப் பண்டரிபுரத்திற்குப் போய் செய்யுங்களென்று சொல்லியும் அவர்கள் பகவான் குணானுபவத்தில் சொக்கி வழிவிடாம லிருப்பதையும் அர்ச்சகர்கள் முதலாகிய பிராமணர்கள் கோபித்துக் கொண்டு நாமதேவர் சமீபத்திற்குவந்து ஓய் இதுவென்ன ஆட்டபாட்டங்கள் பகவான் சந்நிதிக்கு வருபவர்களுக்கு வழியில்லாம லிருக்கிறது தேவாலயத்திற்குப் பின்னால் போய் உங்களுக்கிஷ்டமானபடி ஆடிபாடி கொண்டிருங்கள் என்றுசொல்ல நாமதேவர் நல்லதென்றுகூட்டத்துடன் சந்நிதிக்குப் பின்னால்போய் பகவந்நாம சங்கீர்த்தனைசெய்துக் கொண்டிருந்தார்கள் அப்போது நாமதேவர் பண்டரிநாதனை நினைத்துக் கொண்டு பசுவைப்பிரிந்த கன்றைப்போல அவரைவிட்டுப் பிரிந்ததற்கு சகிக்காமல் வெகுவிதங்களாக தோத்திரஞ் செய்துக் கொண்டிருக்க ஆகாயத்திலிருந்து ஒன்பது லக்ஷம் பகவான் பக்தர்கள் மின்னற் கொடியைப் போல பிரகாசிக்கவும் துவசங்களை கையிற் பிடித்துக் கொண்டு வந்தார்கள் அவிடத்திலிருந்தயாவரும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீவைகுந்தநாதன் வந்துக்கொண்டிருக்கிறாரென்று பிரமித்துப் பார்த்துக்கொண் டிருந்தார்கள் அப்போது நாமதேவர் ஆனந்தபரவசராகி பகவானை தோத்திரஞ் செய்துக்கொண்டிருந்தார் இந்த ஒன்பதுலட்சம் பக்தர்கள் ஒன்பதுலட்சம் சூரியர்கள் போல உண்மை கிரணங்களினால் உலகெங்கும் வியாபித்துவர இந்திராதி தேவர்கள் ஆகாயத்தி லிருந்து மலர்மாரி பொழிந்தார்கள் அப்போது கிழக்கு முகமாயிருந்த நாகநாதர் ஆலயத்துடன் மேற்குமுகமாகத் திருப்பி நாமதேவரை கடாக்ஷித்துக் கொண்டிருந்தார் யாவரும் ஆனந்தாதிசயத்தினாலே தாளங்களை போட்டுக்கொண்டும் ஹரிநாம சங்கீர்த்தனங்களைச் செய்துக்கொண்டும் தனது சரீரங்களை மறந்தும் மிகுந்தபரவசர்களாகினார்கள்.

நாமதேவரந்த இரவெல்லாம் பகவான்கல்யாண குண அமுர்தமழைகளினால் சகலபிராணிகோடிகளும் சுசஜீவனம் அளித்துக் கொண்டிருக்க, சூரியோதயமாகச்சுது அப்போதந்த அர்ச்சகர்கள் நான்கு ஜாமங்களிலும் சிவபூசைசெய்தும் உதையகாலத்தில் ஸ்நானத்திற்காக வெளியில்வந்து நாமதேவர் கூட்டத்துடன் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்திருப்பதைப் பார்த்து தங்களுக்கு சூரியன் மெற்குதிக்கில் உதையமாகியதுபோல தோற்றியதினால் ஆச்சரியப் பட்டு இஃதேன் சூரியகதி விபரீதமாச்சுது ஒருவேளை இரவெல்லாம் நாம் விழித்துக்கொண்டு சிவபூசைசெய்திருந்தபடியால் பித்தமதிகரித்து நமக்கு திக்குபிரமையுண்டாகியிருக்கலாமென்று சிலநேரஞ் சிந்தித்து நிதானமாக ஆலோசித்து நிர்த்தங்கள்யாவும்முன்னிருந்தபடியே யிருக்கிறது சூரியன் வழக்கப்படியாக கிழக்குதிக்கிலேயே உதித்திருக்கிறான் நாகநாத சுவாமி மாத்திரம் ஆலயத்துடன் மேற்குமுகமாகிநாமதேவர் பக்திக்கு ஆனந்தித்தியிருக்கிறான் சந்திரஜடாதரராகிய ஈஸ்வரன் நாமதேவர் கீர்த்தனைகளுக்குச்சொக்கி இப்படி செய்தார்போலிருக்கிறது இதுமிகவும் அற்புதம் நாம்கேவலம் பாமரர்களாகையினால் இந்த பாகவத உத்தமர் விஷயத்திலில் அபசாரப் பட்டோம் என்று மிகுந்தபயபக்தியுக்தர்களாய் நாமதேவருக்கு வந்தனஞ்செய்து ஓபக்தசிகாமணியே நீயே பகவானுக்கு அந்தரங்க பக்தர்நீரே பாக்கியவான் நின்பிதுர்க்கள் என்னநோன்பு நோற்றார்களோதெரியாது ஆனந்தத்துடன் உன்னைப்பார்த்தும் நீர்செய்யும் பகவத்கீர்த்தனைகளைக் கேட்டு காலங்கழிக்கின்ற ஜனங்கள் பாக்கிய விசேஷத்தைச் சொல்ல என்னால்தாமா நீர் உத்தம அம்ச ஜனிதரென்று இப்போதல்லவோதெரியவந்தது துவசக்காரர்களாகும் ஸ்ரீமந்நாராயணன் பக்தர்கள் இதோ நினது தெரிசனை நிமித்தியம் வந்திருக்கிறார்கள் நினது சரித்திரம் பரமபாவன மாகியது ஞானேசுவரர் தன்னை ஜாதிபிரஷ்டரென்ற பிராமணர்களுக்காக மஹிஷத்தினால் வேதங்களை யுச்சரிப்பித்ததைப்போல. நீயும் அருவை யடைந்தவர்களாகும் எங்களுக்கு இன்னதென்று சொல்லமுடியாதவைகளை செய்துக்காட்டினாய் என்று தோத்திரஞ்செய்து அஞ்சலிசெய்து நின்றிருக்க, துவசக்காரர்களாகும்பகவத் பக்தர்கள் மறைந்து தேவதேவன் சந்நிதிக்குப் போயினார்கள் சகலஜெனங்களும் ஆனந்த மடைந்தவர்களாகினார்கள் ஞானேசுவரர் நாமதேவரை யாலிங்கனஞ் செய்துக்கொண்டு தன்கைகளினால் பாதம் முதல் சிரம்வரையில் தடவினார் நாகநாதர் சந்நிதி எப்போ

Koviloor Digital Library

தார்கும் மேற்குமுகமாகி நாமதேவர் கற்பிர்த்தியைப் புரிந்துக் கொண்டிருக்கிறது.

பின்பு ஞானேசுவாரும் நாமதேவரும்நாகநாதர் நேமனத்தைப்பெற்று புறப்பட்டு பண்டரிபுரத்திற்கு வந்து ஆனந்தத்தினால் மெய்மறந்து தூரத்திலிருக்கிறபோதே கோபுரமகலசங்களுக்குக் காணப்பட்ட வுடனே தெண்டனிட்டு பண்டரிநாதன் சேவையின் ஆர்த்தியினால் துரிதமாகவந்து பீமநதியில் ஸ்நானஞ்செய்து ஹரிகீர்த்தனைகள் செய்துக்கொண்டு கோபுரதுவாரத்தில் நமஸ்கரித்து உள்ளே பிரவேசித்து பலிபீடத்தினருகில் வந்தனஞ்செய்து பகவானுக் கெதிரில்வந்து பரமபக்தியுடன் சேவித்துக் கொண்டிருந்தார்கள் அப்போது பகவான் இவர்களை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு சந்தோஷித்தார். நாமதேவர்சுவாமி திருவடிகள் தன்சிரசிலைச்சேர்த்து ஆனந்தக்கண்ணீரால் அலம்பி ஓசுவாமி! தேவரீர் நேமனத்தை சிரமேற்கொண்டு ஞானேஸ்வரருடன் தீர்த்தயாத்திரைபோய்வந்தேன் தேவரீரைப் பிரிந்தநாள்களை யுகங்களாக கழித்தேன் இனி எப்போதைக்கும் இப்படிப் பட்டபிரிவு எனக்கில்லாம லிருக்கும்படி அனுக்கிரகஞ்செய்யும் உம்மைப் பிரிந்ததுமுதல் நிரந்தரமும் நினது ரூபத்தையே தியானித்துக்கொண்டிருந்தேன் உமது பாதத் தாமரைகளே எனக்கு சாதனமாகியிருக்கிறதென ருக்குமணிநாதன் ஒபுதல்வனே நீ செய்திருக்கும் பஜனை எனக்கு இரவும்பகலும் ஆனந்தத்தை யுண்டாகச்செய்துக் கொண்டிருந்தது நீஎன்னைப் பிரிந்தபின்பு அப்படிப்பட்ட சந்தோஷத்தைஎனக்கு உண்டாகச் செய்யத்தகுந்த பக்தர்கள் யாவரும் இல்லாததினால் ஆகாரங்கள் ருசிக்காமல் தைரியமடைந்து உன் வரவுக்கெதிர் பார்த்திருந்தேன் நிரந்தரம் உன்னையே நினைத்துக்கொண்டிருந்தேன் என்பிராணபதமாகிய பக்தசிகாமணியே உனக்காகிலும் பிரியர்களுண்டு எனக்குன்னைவிட அன்னியர்களில்லை நீசர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் என்னையே நினைத்துக் கொண்டிருந்தாய். என்னைவிட்டு வெகுதூரம்போய் வந்தாய் என்றுசொல்லி பக்தர்கள்யாவரும் பார்த்துக்கொண்டிருக்க, மறுபடியும் ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு முகத்தை துடைத்து தன் கழுத்திலிருந்த திருத்துழாய்மாலையை அவர் கழுத்தினில் போட்டுக் கிருபைக்கண்ணால் கடாக்ஷித்தார். அப்போதவிடத்திற்கு வந்திருந்த வைஷ்ணவ உத்தமர்களாகும் நிவர்த்திதேவ ஞானேசுவர சோபான விசோபாகேசர் முதலாகிய அனேகர்கள் பண்டரிநாதனுக்கு தீர்க்கதெண்டனிட்டு நாமதேவரையாலிங்கனஞ் செய்துக்கொண்டு சடலோசையைப் போல ஜயஜய கோலாகல சப்தங்கள் செய்தார்கள் அப்போது ஆகாயத்திலிருந்து தேவர்களும் ரிஷிகளும் பகவந்நாம சங்கீர்த்தனம் செய்துக்கொண்டே சந்நிதிக்கு வந்தார்கள் உலகமாதாவாகிய ருக்குமணிபிராட்டி ஆசீர்வசனங்களைச் சொல்லி நாமதேவர் முகத்தைப் பரிபூரண கிருபையுடன் பார்த்து சந்தோஷித்துக் கொண்டிருந்தனள்.

பின்பு பகவான நாமதேவரைப் பார்த்து நீ மிகவும் கஷ்டப்பட்டு சிரத்தையுடன் தீர்த்த யாத்திரை செய்துவந்ததினால் ததியாராதனை செய்யவேண்டும் அப்படி செய்யாதவிஷயத்தில் அறுசுவையன்னத்தை பாகஞ்செய்து புசிக்காமல்போனால் எப்படி வீணாகுமோ அந்தப்படி யாத்திரைசெய்து வந்ததினால ததியாராதனை செய்யாவிட்டால் நிஷ்பலமாகும் என்று சொல்லி அவர்கையைப் பிடித்துக்கொண்டு அந்தப்புரத்திற்கழைத்துக்கொண்டுபோய் புன்னகையுடன் ருக்குமணி பிராட்டியைப் பார்த்து ஒருக்குமணி என் பிராணசகாயனாகிய நாமதேவன் தீர்த்த யாத்திரைச் செய்துவந்தான் அவருக்கு ததியாராதனை செய்யவேண்டுமென்ன அந்த ஜெகத்மாதா இந்த நாமதேவனுக்கு உமது பாதத்தாமரைகளை விட வேறேயொருவரில்லை ஆகையால் அவன் காரியங்கள் யாவற்றையும் நீரேமுயன்று செய்யவேண்டும் இவன் சரித்திர மிகவும் அற்புதமாகியது இவன் பிரபாவம் தேவர்களுக்கும் தெரியாது ஆகையால் நீதுரிதமாக நாமதேவனை அழைத்துக் கொண்டுபோய் இவ்வூரிலிருக்கிற பிராமணர்கள் யாவருக்கும் விருந்து செய்யச்சொல்லி வாரும் என்றுசொல்ல ஒநாதனே நினதுஎண்ணத்திற்கு அசாத்தியமெது இச்சித்த மாத்திரத்திலேயே சகலமும் நடந்துக் கொண்டிருக்கும் என்றுசொல்லிய ருக்குமணிபிராட்டி மொழிகளுக்கு வைகுந்தவாசன் சந்தோஷித்து நிவர்த்திதேவ ஞானதேவ சோபானதேவர் முதலானோர்கள் துவசங்களைப் பிடித்திருக்க மகாரிஷிகளந்த அற்புதத்தைப் பார்த்துக் கொண்டு பின்தொடர நாமதேவரை முன்னிட்டுக்கொண்டு தான் பின்சென்றார்.

சுலோகம்.

"நிரபேக்ஷம் முனிம்சாந்தம்
நிர்வைரம் ஸமதர்சினம்
அனுவ்ராஜாம் யஹம்நித்யம்
பூயேயேத வக்க்ரிரேணுபி."

Koviloor Digital Library

என்றால் ஈஸ்வரன் தவிர அன்னிய மாயையில் சகல பதார்த்தங்களிலும் அபேக்ஷையில்லாதவனாகி பகவானை மனதில் தியானித்து மகிஞுங்கிங்கிசஞ்செய்து எவர்களிடத்திலும் துவேஷமில்லாமல் சுகதுக்கங்களிடத்திலும் ஓடுபொன்களிடத்திலும் பிரியமில்லாத விரோதங்களிடத்திலும் மானாவமானங்களிடத்திலும் சேரத்துவேஷிகளிடத்திலும் சமகாசியானாகிய மகாத்துமன் பாதஅறுவுகளினால் பரிசுத்தனாகுவதற்காக அப்படிப்பட்டவனை பின் தொடருகிறேனென்றும் தன் மகிஞாதத்திற்கு நல்லசமயம் வாய்த்ததென்று ஸ்ரீ பாண்டுரங்கநாதன நாமதேவரை பின் தொடர்ந்தாரென்பதற்கு சந்தேகமில்லை பின்பு பகவான் நாமதேவ சமேதராகிச் சென்று அந்த ஊரிலிருக்கும் பிராமணர்கள் யாவரையும் விருந்திற்கு அழைத்துவந்து பட்டணத்திற்குள்பிரதக்ஷணமவந்தார் பகவான் அந்தர்சமயத்தில் பிராமணவேடம்பூண்டு வர அவர் தேஜஸ் விசேஷத்தை சகலமானவர்களும் பார்த்து இவர் சாமானிய பிராமணரூபனல்லன் பகவானாயிருக்கவேண்டுமென்று யாவரும் சங்கித்தார்கள் இவர் முகத்தைப் பார்த்தமாத்திரத்தில் யாவருக்கும் ஆனந்தாதிசயமும் தாபசாந்தியும் உண்டாச்சுது பிராமணர்கள் யாவரும் சந்தோஷ மடைந்தார். தேவரீர்வசிக்கும் ஊரெது? தங்கள்நாமதேயமென்னவென்று கேழ்க்க சக்கிரக்கையன் அவர்களைபார்த்து ஓ பிராமணர்களே! என்பூர்வோத்திரம் நாமதேவருக்குத்தெரியும் என் பிராணநேசனாகிய இவர்தீர்த்த யாத்திரை செய்துவந்து இன்று பண்டரிநாதன் சந்நிதிக்குள் விருந்துசெய்கிறார் அதற்கு நீங்களெல்லோரும் வரவேண்டும் என்பேர் அனந்தையன் நீங்கள் துரிதமாக வரவேண்டும் என்று உபசாரமாகச்சொல்லி சந்நிதிக்குள்வந்து ருக்குமணி. பிராட்டியைப் பார்த்து பிராமணர்களுக்கு விருந்து சொல்லியதும் அவிடத்தில்நடந்த அதிசயங்களையும் சொன்னார். அதைக் கேட்டு ருக்குமணிபிராட்டி உம்மை பிரம்மாதிகளரியார்களென்றால் நிரேகாபிமானிகளுக்கெப்படி சாத்தியமாகும் நாமதேவன் உண்மை தெய்வமாகும் நீர் இன்று ஆனந்த பரவசர்களாகிவீர்களென்று உலகமாதா சொல்லிக் கொண்டிருக்க காமதேனு கற்பக விருக்ஷங்கள் பகவான் நினைவறிந்துவந்து அறுசுவையன்னமும் நானாவித பலகாரவகைகளையும் பரிமளங்கூட்டிய தீர்த்தங்களையும் சந்தனபுஷ்ப தாம்பூலாதி போக்கிய பதார்த்தங்களையும்; அபாரமாகநிர்மித்தது அப்போது ருக்குமணி சத்தியபாமை முதலானவர்கள்நாமதேவருக்கு ஸ்நானம்முதலானவைகள் செய்வித்துசுபவசனங்கள்சொல்லி திருஷ்டிகழித்தார்கள் ஸ்ரீமந்நாராயணன் நாமதேவரை ஆடையாபரணாதிகளால் அலங்காரஞ்செய்து உட்காரவைத்து யாவருங் கொண்டாடிக் கொண்டிருக்க வந்த பிராமணாதிகளுக்கு ஆசனமுதலாகிய உபசாரங்களைச் செய்தார் அந்த ரதத்திலிருக்கும் தேவசகள் நமக்குபகவான் அமுர்தமளிக்காரோயல்லை இப்படிப்பட்ட பிர்மாமுர்த்தத்தை அளிக்கவில்லை என்றுசொல்லி பக்தர்கள் விபவத்தை துதித்திருந்தார்கள்.

இப்படியிருக்க ருக்குமணிநாதன் முன்போல பிராமண வேடத்துடன் வந்து அங்குவந்திருக்கும் பிராமணர்கள் திருவடிகளை யலம்பி கன பீதாம்பரத்தினால்துடைத்து அவர்கள்யிடத்திற்கு பூமாலைகளைப் போட்டு கஸ்தூரி திலர்தமிட்டு புது வஸ்திரங்களைக் கொடுத்து வரிசையாக உட்காரவைத்து நானாவித அறுசுவை அன்னங்களை பலகாரங்களுடன்வட்டித்து சங்கல்பம் சொல்ல நாமதேவர் கையினால் ஜலத்தை விடும்படிச் செய்தார் பின்பு பிராமணர்கள் பரிஷேசன ஆபோசன அஹூதிகள்செய்து கோவிந்த நாமத்துதியுடன் புசித்துக் கொண்டிருக்க வைகுந்தவாசன் வேணடிய வஸ்துக்களைக்கேட்டு பரிமாரிக் கொண்டிருந்தார் யாவரும் திருப்தியாகப் புசித்து உத்தராபோசனஞ்செய்து எழுந்து கண்டூஷபூர்வமாக கைகாலகள் சுத்தி செய்துக்கொண்டு சுத்த நேமனத்துடன் பரிசுத்தமானயிடத்தில் சுகமாயுட்கார்ந்து செகதீசனை தியானித்துக் கொண்டிருக்க பண்டரிநாதன் சந்தனபுஷ்ப தாம்பூலங்களைக் கொடுத்து அவர்கள் தந்த மந்திராக்ஷதைகளை தன் பீதாம்பரத்தினால்வாங்கிக்கொண்டு அந்த அக்ஷதைகளை தன்கையினால்நாமதேவர் சிரத்தில்வைத்து உனக்குபரமபக்தி நாளுக்குநாள் விருத்தியாயிருக்கத் தக்கதாக என்று அனுக்கிரகித்து அவரை யழைத்துக்கொண்டுவந்து நிவர்த்திதேவ ஞானதேவ சோபானதேவ விசாகேசர்முதலானோருடன் போஜனத்திற்கு உட்கார்ந்தார் அப்போது ருக்குமணி பிராட்டி அறுசுவை யன்னத்தைப் பரிமாறினாள்நாமதேவர் மெய்மறந்து பகவத் தியானஞ்செய்திருந்தார் அப்போது பகவான் எழுந்த வந்து நாமதேவருக்கு எச்சரிக்கைசெய்து அவரைத் தன்னுடன் உட்கார வைத்துக்கொண்டு அவர் சிரத்தைத் தடவி தன்கை கவளத்தைத் தந்து பெருமையாக புசியுமென்றார் நாமதேவர் பகவான் தியானபரனாகி அந்த கவளத்தை பகவான் கொடுப்பதை அறியாமலிருந்தார் அப்போது பகவான் ஓநாமதேவா உமக்கும் நமக்குங் கிஞ்சித்தாகிலும் பேதமில்லை.

Koviloor Digital Library

சுலோகம்.

"யோமாம் பஸ்பதி ஸர்வத்ர
ஸர்வம் சமயி பஸ்யதி
தஸ்பாஹம் நப்ரணஸ்யாமி
ஸசமேந ப்ரண யஸ்யதி.,,

என்றால் எவன் சகல பூதங்களிடத்திலும் என்னையும் என்னிடத்தில் சகல பூதங்களையும பார்த்திருக்கிறானோ அவனுக்கு நானும் எனக்குஅவனும் பிரதியக்ஷ சொருபர்களாகி யிருப்போம் என்று கீதையில் சொல்லி யிருக்கிறேனல்லவா ஆசையற்றவனாகி நான் உன்னிடத்தில் பிரேமாதிசயத்தினால பிரியமுடையவனாகி உன்னருகிலிருக்கிறேன் உன் தெரிசனை அபேக்ஷயினால் பரமபக்தர்கள் வந்திருக்கிறார்கள் அவர்களுடன் சல்லாபஞ்செய்யும் இந்த நிவர்த்திதேவன் சிவசொரூபமென்று ஞானதேவர் என்சொரூபமென்றும் சோபானதேவர் பிரமசொரூப மென்றும் அரியும் என்றுசொல்லி கிருபைக் கண்ணால் கடாக்ஷித்துக் கொண்டிருக்க நாமதேவர் பகவானைபார்த்து

சுலோகம்.

"நாஸ்தாதர் மேனவஸு நிசயேவாநவகாமே. பயோமே யத்யத்பவ்யம்பவது பகவன் பூர்வகர்மானுருபம் எதத்ப்ரார்த்யம் மமபஹுமதம் ஜன்மஜன்மாந்தரேபி த்வத்பாதாம பொருஹுபுககதாங்ஸ் சலா! பக்திரஸ்து."

என்பதுபோல ஓபகவானே எனக்குதர்மார்த்த காமங்களிடத்தில் ஆசையில்லை பூர்வகர்மானுருப மாம வரப்பட்டது வருமல்லாமல் நான் மேலாகக் கோரத்தகுந்தது ஒன்றுண்டு ஜென்ம ஜென்மாந்திரங்களிலும் நமது பாதத்தாமரைகளிடத்திலுஞ் சஞ்சலமில்லாத பக்தி உனக்குண்டாக வேண்டும் என்று பிரார்த்திக்க கிருபைக்கடலாகிய பகவான் அப்படியாகுமென்று அனுக்கிரகித்து அவர் வாயில் கொடுத்தகவளத்தில் கொஞ்சமெடுத்துத் தான் புசித்தார் அவிடத்திலிருந்த பக்தர்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு ஆனந்த பரவசர்களானார்கள் பிராமணர்கள் யாவரும் ஒருவரோடொருவர் இன்று நமது ஆசாரங்கள் யாவும் பூமியிற்கலந்தது இதோ வட்டித்துக்கொண்டிருக்கும் ஸ்திரீகள் எந்தெந்த சாதியுடையவர்களோ தெரியவில்லை நமக்கன்னம் வட்டித்தவளை பார்த்தால் நான்கு ஜாதிகளிடத்திலும் சேர்ந்தவளென்று தோன்றுகிறது. நாமதேவனுக்கு தந்தையாக யிருக்கலாமென்று ஊகிக்கத்தகும் திருக்கிறது திரிகரணங்களினாலும் அவனிடத்தில் பிரியத்துடன்கூடி யிருக்கிறான் அவனைக் கொண்டு சங்கல்பத்திற்கு ஜலம்விடச்செய்தான் நாம்கொடுத்த அக்ஷதைகளை அவன் தலைமேல் போட்டான் ஆகையால் அவனதந்தை என்பதற்குச் சந்தேகமில்லையென்று யோசித்துக் கொண்டு மனக்கிலேசமடைந்து பிராமணர்கள் யாவரும் பண்டரி நாதனைப்பார்த்து அவன்மிகவும் அக்கிரமம்செய்துக் கொண்டிருக்கிறான் இவன் எவனோதெரியவில்லை இவன் அன்னத்தைப் புசித்ததினால் நமது அநுஷ்டானங்கள் யாவுங் கெட்டுப்போச்சுது இனிஅவசியமாக பிராச்சிதம்செய்துக்கொள்ள வேண்டும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு கூட்டங் கூட்டமாய்கூடி போய்க்கொண்டிருக்க பகவான் குறுக்கே வந்து அவர்களை போகவொட்டாமல் தடுத்து ஓவிப்பிரர்களே தக்ஷிணை பெற்றுக்கொண்டு போகலாமென்றுசொல்லி அழைத்துக்கொண்டு உட்காரவைத்து சொர்ன நவரத்தின தாளிதங்களை ஒன்றாய்க்கலந்து யாவருக்கும் சம்பாவனைகொடுத்து நாமதேவர் முதலானவர்களினால் அந்தபிராமணர்கள் பாதங்களுக்கு தீர்க்க தெண்டனிடச் செய்வித்து இனிமேல் நீங்கள் பூரணமாகக் கிருபைவைக்கவேண்டுமென்று சொல்லி ஓபிராமணர்களே உங்கள் முகங்களைப் பார்த்தால் மனதில் எதுவோ களங்கமிருப்பதுபோல தோன்றுகின்றது அதற்குக் காரணஞ் சொல்லுங்களென்றுகேட்டார் அப்போது பிராமணர்கள் ஓ புருஷோத்தமா நாமதேவன் குறைந்த ஜாதியென்று எல்லவருக்கும் தெரிந்திருக்கிறது அப்படிப்பட்டவனை சமபந்தியில் வைத்துக்கொண்டு புசித்ததுமல்லாமல் அவன் எச்சிலையும் பிரியத்துடன் புசித்தீர் ஆகையால் உன்னைப் பார்த்தால் வேடந்தரித்தவனென்று தோற்றுகிறது உன் குலமின்னதென்று தெரியவில்லை நிமைக்கொரு விதமாக யிருக்கிறாய் உனக்கு நிந்திப்பதும் துதிப்பதும் சமமாகவிருக்கிறது நீபிராமணவேடந் தரித்தவனாகி வந்ததினால் நாங்கள் ததியாராதனைக்கு வந்து புசித்தோம் பிராமணர்கள் வேதம்விதிப்பது நடக்க வேண்டுமல்லவா உன்னைப் பார்த்தால் சர்வக்ஞனென்று தோன்றுகின்றது அப்படியிருக்க நாமதேவனிடப் பிரீதியினால் இப்படிச் செய்தாய் என்று சொல்லிய பிராமணர்கள் வார்த்தைகளைக் கேட்டு பகவான் ஓ விப்பிரர்களே! நான் நாமதேவன் சமபந்தினில் புசித்ததும் அவன் எச்சிலைப் புசித்ததும் தோஷமென்று சொன்னீர்கள். அது தோஷமாகுமா அனைவருக்கும் அந்த ஆத்துமாவாகும் பரமாத்துமா

Koviloor Digital Library

ஒருவனே யல்லவா அவனுக்கு உயர்ந்தஜாதி யென்றும் தாழ்ந்த ஜாதியென்றும் ஆதியென்றும் நீசனென்றும், பேதமென வெண்ணமில்லை ஆத்துமாக்களுக்கு கர்ம சம்பந்தத்தினு லுண்டாகிய சரீரங்கள்வெவ்வேறு விதங்களாகி யிருக்குமேயல்லது ஆத்தும சொரூபத்தில் சிருஷித்தாகிலும் பேதமில்லை.

சுலோகம்.

"நித்தியஸ்ஸர்வ சுதஸ்தாணு
ரசலோயம் ஸநாதன."

என்றதுபோல ஆத்துமா நித்தியனாகி ஸர்வவியாபகனாகி ஸ்திரனாகி சஞ்சலமில்லாதவனாகி அநாதியாகியிருக்கிறான் இப்படிப்பட்ட நாமதேவனைத் தாழ்ந்த ஜாதியென்று சொன்னீர்கள் ஆத்துமாக்கள் ஞானந்த சொரூபமாகி ஏகாகாரமாகியிருப்பதினால் ஜாதிபேதமில்லை சரீரங்கள் பஞ்சபூதங்களாகி ஏகாகாரமாகியிருக்கிறது அப்படிக்கிருக்க மேன்மை தாழ்மை எப்படி சித்திக்கும் நீங்கள் வேதசாஸ்திரங்களில் நிபுணர்களாகியும் அகண்டஞான மில்லாமல் ஜாதிபேதம் வைத்தவர்களாகி யிருக்கிறீர்கள்.

சுலோகம்.

"வித்யாவன யஸம்பன்னே
பிராஹ்மணே ரவிஹஸ்தினி
சுனிசைவ ஸ்வபாகேச
பண்டிதாஸ் ஸமதர்சின:"

என்பதுபோல வித்தை வினய சம்பன்னனாகிய பிராமணனிடத்திலும் கோவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் அதின்மாம்சம் தின்னுமவனிடத்திலும் பண்டிதர்கள் சமதர்களாகி யிருப்பார்கள்.

சுலோகம்.

"இஹைவதைர்ஜித ஸ்வர்க்கோ
யேஷாம்ஸாம் யேஸ்திததம்மன:
நிர்த்தோஷம் ஹிதமமபிர்ஹம
தஸ்மாத்ப்ரஹ்மணி தேஸ்திதா:"

என்பதுபோல யாருடைய மனது சகலங்களிலும் சமபாவத்தை யடைந்திருக்கிறதோ அப்படிப்பட்டவர்களினால் இந்தஜென்மத்தில்மோக்ஷம் சாதிக்கப் பட்டிருக்கிறது எந்தகாரணத்தினால் பிரம்மம் ஏகமாகி தோஷமில்லாதிருக்கிறதோ அந்த காரணத்தினால் சமதிருஷ்டி யுடையவர்கள் பிரமத்தினிடத்திலேயே யிருக்கிறார்கள் இப்படிக்கிருக்க சகலசிரவிசாரணை செய்தவர்களாகும் நீங்கள் சமபாவத்தை விட்டு நாமதேவனை எப்படி தாழ்ந்த குலத்தனாக சொல்லலாகும் வேதவிகிதமாகும் வர்ணாசிரம தர்மங்கள் அவசியம அனுஷ்டிக்க வேண்டிய தாகையால் அற்ப குலத்தோனாகிய நாமதேவன் சம்பந்தி போஜனத்திற்குத் தக்கவனல்லவென்று நீங்க ளென்றுவீர்களாகில் அதற்கு சமாதானஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்.

சுலோகம்.

"ஸ்வபசோபி மஹீபால
விஷ்ணுபக்தோ த்விஜாதிக
விஷ்ணுபக்தி விஹீனஸ்து
யதிஸ்ச ஸ்வபசாதம."

என்பதுபோல சுவசனாம்னும் விஷ்ணு பக்தனாகிய பக்ஷத்தில் பிராமணனுக்காகிலும் மேலானவனாவான் விஷ்ணுபக்தி யில்லாதவன் எதியாகிலும் சுவபசனுக்காகிலும் அதமனாகுவான்.

சுலோகம்.

"மத்பக்தஜன வாத்ஸல்யம்
பூஜாயாஞ் சானுமோதனம்
ஸ்வயமப்யர்ச்சனம் சைவ
மதர்த்தே டம்பவர்ஜனம்
பக்தாசிரவனே பக்தி:
ஸ்வரநேத்ராங் களித்தியா
மமானுஸ்மரணம் நித்யம்
யச்சமாம நோபஜீவதி
யக்திரஷ்ட விதாஹயேஷா
யஸ்மின் ம்லேச்சே பிவர்த்ததே
ஸவிப்ரேந்த்ரோமுனி ஸ்ரீமான்
ஸயதிஸ் ஸசபண்டித:
தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம்
ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்."

என்றால் பகவான் பக்தர்களிடத்தில் வாச்சல்யயுக்தனாகி பகவான் விஷயத்தில் ஒருவர் செய்யும் பூசைக்கு சந்தோஷிக்குமவனாகி தானும் பகவதாராதனை செய்யுமவனாகி பகவான்விஷயத்தில் டம்பமில்லாதவனாகி பகவான் சரித்திரத்தைக் கேட்பதில் பக்தியுக்தனாகி பகவான் குணானுபவ காலத்தில் மெலிந்தகுரலும் ஆனந்தக்கண்ணீரும் புளகாங்கித முதலானவைகளுடன் கூடினவனாகி நிரந்தரம் அன்னிய சிந்தையில்லாமல் பகவானை நினைப்பவனாகி பகவான்

சந்நிதானத்தில் எந்த கோரிக்கையு மில்லாதவனாகி இந்த எட்டுவித பக்தர்களுடன் வசிப்பவன் மிலேச்சனாகிலும் அவனே பிராமண சிரேஷ்டன் அவனே தபசி அவனே ஸ்ரீமான் அவனேயெதி அவனே பண்டிதன் அவனுக்கு உபதேசிக்கத் தகுமென்றும் அவனால் உபதேசம் பெறத்தகுமென்றும் அவன் பகவானைப்போல் பூசிக்கத் தகுந்தவனென்றும், பகவான் வாக்கிய மிருக்கிறதல்லவா ஓ பிராமணர்களே இந்த உறுதிவாக்கியங்களை நீங்களென் கவனிக்க மாட்டீர்கள் உங்களுக்கு சம்மதியில்லாத பக்ஷத்தில் முதலிலே ஆக்ஷேபனை செய்திருக்கவேண்டும் நான் நாமதேவனால் சங்கல்பம் செய்வித்தபோதும் நீங்கள்கொடுத்த அக்ஷதைகளை நான் அவன் சிரத்தில் வைத்தபோதும் ஏன் மௌனமாக யிருந்தீர்கள். பிரமக்ஞானத்தினால் உங்கள் யாவருக்காகிலும் நாமதேவன் மேலாகியவன் யாவருக்கும் சனவான் ஆகையால் அவன் எச்சிலைப்புசித்தேன் இந்தப் பண்டரிபுர க்ஷேத்திரத்தில் என்தாசர்கள் இரவும் பகலும் ஓயாமல் என் கீர்த்தனைகளைப் பாடியாடிக் கொண்டிருக்கிறார்கள் நான் அவர்களுடன்கூடி ஆனந்தித்து நாமதேவனையொத்த பரம பக்தர்கள் எச்சிலை பிரார்த்தித்து அது கிடைத்தபோது கிடைக்கவரிதாகிய பொருள் கிடைத்ததென்று ஆனந்தத்துடன் புசிப்பேன் இப்படிப்பட்ட எச்சில் மகத்துவத்தினாலேயே யாவருக்கும் வந்தனஞ் செய்யப்பட்டவனாகியிருக்கிறேன் என்றதைக்கேட்டு பிராமணர்களே ஓமகானுபாவரே நீர் அனந்தகல்யாண குணநிதியாகிய பகவானென்றதிப்போது திடஞ்செய்தோம் எங்கள் சந்தேகம்நீங்கியது ஆகிலும்,

சுலோகம்.

"யச்சாஸ்திரவிதி முத்ஸ்ருஜ்ய
வர்த்ததே காமசாரத:
நஸஸித்தி மவாப்நோதி
நஸுகம நபராங்கதிம்
தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணந்தே
கார்யவ்ய வஸ்திதௌ
ஞாத்வாசாஸ்திர விதானோக்தம்
கர்மகர்த்து மிஹார்ஹஸி"

என்றால் சாஸ்திரவிதியை அநுசரிக்காமல் இஷ்டப்படி நடப்பவனுக்கு சித்தியும் சுகமும் பரகதியு மில்லை ஆகையால் ஓ அர்ச்சுனா சாஸ்திரத்தை சத்தியமென்று நம்பி காரியாகாரியங்களை தெரிந்துகொண்டு சாஸ்திர சம்மதமாகும் காரியங்களை நடத்தும் என்று கீதையினில் நீரேசொல்லி யிருக்கிறீரல்லவா புத்திமான்களுக்கு வர்ணாசிரம விபரீதமாகும்நடவடிக்கை யொப்பாதல்லவா, "தர்மஸ்ய ப்ரபுரச்யுத" என்பதுபோல தர்மத்திற்கு அச்சுதன் பிரபுவாகியிருக்கிறான் நீர் எங்களைப் போல கர்ம பாதந்திரனாகாம லிருந்தாலும் முதலாசாரியனாகியதால், சாஸ்திரவிதியை உலகோர்க்கு நடந்துகாட்டுவது உசிதம் ஆகையால் எங்கள்பிரார்த்தனையை அங்கீகரித்து நாமதேவன் எச்சிலைத்தின்ற தோஷத்திற்கு பரிகாரமாக பீமாநதியில் விதிப்படி ஸ்நானஞ்செய்து பஞ்சகவியத்தை புசிக்கவேண்டுமென்று சொன்னார்கள் அந்தவார்த்தைகளைக் கேட்டு பகவான் ஓவிப்பிரர்களே,

சுலோகம்.

"சரசரண ஸ்ரோஜேசாந்தி மன்னேத்ரமீனேர் ஸாமமுஞ்சி புஜவிசிப்பாகுலே காதமார்க்கே ஹரிஸரஸிவிகாஹபாபியதே ஜோஜலௌகம் பவமருபரிகின்னகேத மத்யத் யஜாமி"

என்றால் சம்சார மருகாந்தாரத்தில் அலைந்து நான் பாதங்களெனும் தாமரைகளுண்டாகியதும் மனதிற்கு பிரியமாகும் நேத்திரங்களெனும் மச்சங்களுண்டாகியதும் புயங்களெனும் அலைகளினால்வியாகுலமாகியதும் அகாதமானது மாகிய ஹரியெனும் தடாகத்தினில் பிரவேசித்து ஒளியெனும் ஜலத்தைக் குடித்து இப்போது என்துக்கத்தை விடுகிறேன் என்று முமுட்சுக்களினால் பிரார்த்திக்கப்படும் ஸ்நானத்திரந்தரஞ் செய்துகொண்டிருக்கும் பாகவத உத்தமனாகிய நாமதேவன் பரமபாவனமாகிய எச்சிலைத்தின்ற எனக்கு பீமாநதியில் ஸ்நானமும் பஞ்சகவ்வியஸ்வீகாரமும் பிராயச்சித்தமாக விதித்தீர்கள் பாகவதர் எச்சிலைப் புசித்ததினால் தாசிபுத்திரன் நாரதனாகி சகல உலகத்தாரும் வந்தனஞ்செய்ய யோக்கியதையடைந்தவனாகி யிருப்பதைக் கேட்டறியீரோ பரிமளதிரவியத்த மூட்டைகளை சுமக்கும் நான்கு கால்மிருகம் அதின் பரிமளத்தை யரியாததுபோல வேதபாரத்தைச் சுமக்கும் நீங்கள் அதின் சாரமாகிய விசேஷதர்மமாகும் பாகவதரை யனுசரித்து நடக்கும் கிரமத்தையரியாமல் சாமானிய தர்ம நிஷ்டர்களாகி எனக்கிப்படிப்பட்ட பிராயச்சித்தத்தைக் கட்டளையிட்டீர்கள் ஆகிலும் பெரிதல்ல.

மஹாராஜனோயேன கதாஸ்ஸபந்தா என்றால் வெகுஜனங்கள் போவது போலப் போக வேண்டியது

Koviloor Digital Library

உத்தமம் ஆகையால இந்த ஊரிப்ராமணர்களாகும் நீங்களனைவரும் ஒரே வார்த்தையாக விதிக்கும் பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்கிறேனென்றுசொல்லிநாமதேவரைக் கையில் பிடித்துக்கொண்டு அந்தப் பிராமணர்கள் பின் தொடர்ந்துவர பீமாநதிக்குப் போய் விதிப்படி ஸ்நானஞ்செய்து அந்தப் பிராமணர்களினால் பஞ்சகவ்வியத்தைப் புசித்துப் பின்புபிராமணர்களுக்கு தக்ஷிணையீந்து அவர்களை யிருப்பிடத்திற்கு அனுப்பி அநேகபக்தர்களுடன் சந்நிதிக்கு வந்தார் அப்போது ருக்குமணி சத்தியபாமைகளெதிர்கொண்டுவந்து அர்க்கிய பாத்தியாதி உபசாரங்களைச் செய்து பகவானுடன் உட்காரவைத்து அறுசுவை யன்னங்களைப் பரிமாறி யாவரும் ஆனந்த மடைந்தவர்களாகி புசித்துக்கொண்டிருக்கும் பகவான் தன் எச்சிலைப் பாகவதர்களுக்குக் கொடுத்தும் அவர்கள் எச்சிலைத்தான் புசித்தும் இந்தப்படியாக அனைவரும் திருப்தியாக புசித்து சந்தனபுஷ்ப தாம்பூலாதி யோக்கிய வஸ்துக்களைத் தரித்த பின்பு பகவான் நேமனத்தை பெற்று பாகவதரனைவரும் தங்கள் தங்களிருப்பிடத்திற்கு போயினார்கள்.

அப்போது தேவலோகத்திலிருந்து நாரதமகா முனிவர்வந்து புண்டரீக வரதனுக்கு வந்தனங்கள் செய்து அவரை யாலிங்கனஞ் செய்துகொண்டு பரமானந்த மடைந்தவராகி அவர் நேமனத்தினால் பகவந்நாம சங்கீர்த்தனைசெய்ய பகவான் சந்தோஷித்து தன் கழுத்திலிருந்த திருத்துழாய் மாலையை அவர் கழுத்தில்போட்டு அனுக்கிரகித்தனுப்பினார் பின்பு ராதையும் ருக்குமணிபிராட்டியும் நாமதேவர் விஷயத்தில் பகவான் மிகவும் பரதந்திரனாகி அவன் எச்சிலைப் புசித்ததற்காக பிராமணர்களினால் பிராயச்சித்தமடைந்த அற்புதசரித்திரத்தையும் பகவான் வாத்சல்லிய சுவாமித்துவ சௌசீல சௌலப்பிய குணங்களென்னும் இந்த குணங்கள் நாமதேவன் விஷயத்தில் அநுபவசித்தமாக பலித்து இருப்பதை அனேக விதங்களாகக் கொண்டாடிக்கொண் டிருந்தார்கள்பின்பு நாரதர் சத்தியபாமை யிடத்திற்குவந்து வந்தனஞ் செய்து அந்த பிராட்டியினால் அவிடத்தில் நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டு ஓ அன்னையே பூர்வத்தில் பகவான்.

சுலோகம்.

"நாஹம்வஸாமி வைகுண்டே
நயோகிஹ்ருதயே ரவௌ
மத்பக்தாயத்ர காயந்தே
தத்ரதிஷ்டாமி நாரத."

என்று என்னுடன் சொல்லியிருந்தார் அதனை இப்போது நாமதேவர் விஷயத்தில் அனுஷ்டித்துக் காட்டினாரென்று விண்ணப்பஞ்செய்து நேமனத்தை யடைந்து இச்சைப்படி போயினார் அந்தராத்திரி பகவான் ஏகாந்தமாக சயனித்திருக்க ருக்குமணி பிராட்டி பகவான் பாதங்களைப் பிடித்துக்கொண்டு ஓ பிராணநாதரே மூவுலகங்களிலுமுனக்கு எவர்மிகுந்த அந்தரங்கப்பிரியர் என்றுகேட்க பகவான் ஓபெண்ணே நான் சகல பூலோகங்களுக்கும் சமனாகி ஆகிலும் ஞானீத்வாத்மைவமேமதம் என்பதுபோல ஞானி நானேயென்று என்னபிப்பிராயம் அப்படிப்பட்ட ஞானிகளுக்குள்ளாக நாமதேவன் முக்கியமானவன் மூன்றுலோகங்களிலேயும் அவனுக்குச் சமானமானவர்களில்லை ஆகையால் அநேகர்களுக்காகிலும் அவனே என்பிராணபதன் அவனே எனது நிதியென்று சொல்லக்கேட்டு ருக்குமணி பிராட்டி பரமானந்தத்தையடைந்து பக்தப்பிரியனாகி பகவானை வெகுவிதங்களாகத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த ராத்திரியெல்லாம் நாமதேவர் விஷயமாக பகவானும் ருக்குமணிபிராட்டியும் பேசிக்கொண்டிருந்தார்கள் சூரியோதயமானவுடன் பாகவதர்களனைவரும் வந்து பகவானைச் சேவித்து ஆனந்தக்கண்ணீருடன் தோத்திரஞ் செய்துக்கொண் டிருந்தார்கள். அந்தசமயத்தில் பகவான் ருக்குமணி பிராட்டியைப் பார்த்து இன்றைக்குப் பிராமணர்களைபோஜனத்திற்கழைக்கவேண்டாம் அவர்கள்தெரிசனத்தினால் சகல பாவங்களும் நசித்துப் போமென்றுசொல்லக் கேட்டு ருக்குமணி பிராட்டி ஓபிரியநாதரே அணிமாதி யஷ்ட சித்தர்களும் தேவரீர் சந்நிதியில் காத்திருக்க அதற்காக செய்யவேண்டிய யோசனை என்னயிருக்கிறது நினைத்தபடி செய்யலாமென்று சொல்ல அப்போது பகவான் சந்தோஷத்துடன் நாமதேவனைப் பார்த்து ஓ நாமதேவா ஜென்மாந்திரகுண சம்பத்தினாலும் உன் புண்ணிய பரிபாகத்தினாலும் நான் உனக்குப் பாதந்திரனாகி யிருக்கிறேன் ஆகையால் உனது நிமித்தியம் இந்தப் பிராமணர்களுக்கு எனதுஉண்மைரூபத்தைக் காட்டுகிறேனென்று சொல்லி நாமதேவர் கையைப் பிடித்துக்கொண்டு அநேக பக்தர்கள் பின் தொடர்ந்துவர விருந்துசொல்லுவதற்காக புறப்பட்டு குண்டலதீர்த்தத்தில் கூடியிருக்கும் பிராமணர்களைப் பார்த்து அவர்களுக்கு தெண்டனிட்டு ஓ விப்பிரர்களே நான் பிராம்மணபோஜனஞ் செய்விப்பதற்கு யத்தினஞ் செய்திருப்பதனால் நீங்களனைவரும் அதஷ்

டானங்களை முடித்துக்கொண்டு போஜனத்திற்கு வர வேண்டுமென்று சொல்ல அவர்கள் யாவரும் நல்லது நாங்கள் தேவரீரை நம்பி இங்கு காத்திருக்கிறோமாகையால் தேவரீர் இஷ்டப்படியாக வருகிறோமென்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்டு பகவான் சந்தோஷித்து தன் சந்நிதிக்குவந்து ருக்குமணி பிராட்டியைப் பார்த்து நல்லநாள் இன்று இவிடத்திய பிராமணர் யாவரும் போஜனத்திற்கு வருகிறார்களென்று சொல்ல ருக்குமணிபிராட்டி அந்த பிராமணர்கள் பூர்வபுண்ணியம் அபாரமாகியது ஆகையால் தேவரீர் தரிசனங்கொடுப்பதும் விருந்திற்கு அழைப்பதும் தேவரீரையினால் வட்டித்து புசிக்கச் செய்வதுமாகிய இந்த பெருந்தலாபம் இவர்களுக்கு சித்தித்தது இவர்கள் பாக்கியம் என்னென்று சொல்லலாம் என்றுசொல்ல இதற்குள் பிராமணர்கள் தங்களனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வந்தார்கள் அவர்களுக்கு அர்க்கியபாதிய ஆசமனாதி உபசாரங்களைச் செய்து உட்காரவைத்து ஜலசுத்திசெய்து சலவாழையிலைகளைப்போட்டு அறுசுவை யன்னங்களை வட்டிக்கையில் பிராமணர்கள் கோவிந்தநாம சங்கீர்த்தனையுடன்புசித்து கைகால்கள் சுத்திசெய்துக் கொண்டு ஜெகதீசனை தியானித்து சந்தன புஷ்ப தாம்பூலாதிகளைத் தரித்தார்கள். பின்பு பகவான் அந்தபிராமணர்களுக்கு உபசாரங்களைச் சொல்லி கொஞ்சநேரம் அங்கேயே உட்காரவேண்டு மென்றுசொல்லி அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க நாமதேவர் நிவர்த்திதேவர் ஞானதேவர் சோபானதேவர்சாமந்தர்விசோபாகேசர் நரஹரி சோகாமேளர் கோராகும்பர் முதலாகிய அநேக பக்தர்களை சமபந்தியில் வைத்துக்கொண்டு அதிகபிரியத்துடன் புசித்துக் கொண்டிருந்தார் அப்போது அவர்களுக்கு ருக்குமணி சத்தியபாமை ராதை இந்தமூவரும் வட்டித்திருந்தார்கள் ஷட்குல அஷ்டைஸ்வரிய சம்பன்னனாகிய பகவான் பக்தர்களுடன் புசித்துக்கொண்டிருக்கபிரம்மாதிதேவர்கள் ஆகாயத்திலிருந்து மலர்மாரிபொழிந்து இந்த அற்புதங்களைப் பார்த்து இந்த பக்தர்கள் பாக்கியமேபாக்கியம் வேதாந்தத்தில் ரகசியவஸ்துவாகிய பகவான் இவர்களுக்கிப்படி பிரத்தியக்ஷமாகியிருப்பது ஆச்சரியமென்று பகவான் சுசீலாதிகுணங்களைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள் யாவரும் புசித்தான பிறகு பகவான் தன் பீதாம்பரத்தில் அவரவரெச்சிலையும் வாங்கி அதனை பாகவத பிரசாதமென்று பக்தர்களுக்கெல்லாம் விநியோகஞ்செய்து தானும் புசித்தார் அப்போது பிராமணர்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு ஒருவரோடொருவர் இதுவென்னவிந்தைஇவர் பிராமணர் என்று எல்லா பிராயச்சித்தம் செய்வித்தோம் இவர்காரியங்களைப் பார்க்கையில் எதிலும் ஒட்டாதவனாகி யிருக்கிறான் இவன் கிராமம் குலம் தேசமில்லாதவனாகி யிருக்கிறான் வருணாசிரம தர்மம் இவனிடத்தில் தேடினாலுமில்லை மேலும் பூமிபர்வதம் மராமரங்களையாகிலும் பனிசாதி சரங்களையாகிலும் அபேதமாக சுமப்பதைப் போலும் சூரியன் தன்தேஜஸினால் அவைகள் யாவற்றிலும் அபேதமாக வசிப்பதைப்போலும் ஸ்ரீமந்நாராயணன் அந்தரியாமியாகி சகலத்தையும் சமமாக இரட்சிப்பதைப்போலும் இவனுக்கு தானென்றும் அன்னியனென்றும் பேதமில்லாமலிருக்கிறது.

ஆகையால் இவர் பாண்டுரங்கனாக யிருக்கவேண்டும் பக்தனுக்கு காயத்திற்கு அகோசரனாகிய இந்த புருஷோத்தமன் நாமதேவன் புண்ணிய வசத்தினால் அவனிடத்தில் அதிக பிரியத்துடன் கூடியிருக்கிறாரென்று சொல்லிக்கொண்டு அவர்கள் பகவானை தியானித்திருக்க ரிஷிகேசவன் தன் திவ்யமங்கள விக்கிரகத்துடன் பிராமணர்களுக்கும் பக்தர்களுக்கும் தெரிசனங் கொடுத்தார். அந்த திவ்யமங்கள விக்கிரக சொரூபத்தைப் புகழ்வதற்கு நான்முகபஞ்சமுகஆறுமுக ஆயிரமுகத்தர்களுக்கும் தரமாகாது வித்தைக்கு ஆதிதேவதையாகிய சரஸ்வதிக்கும் முடியாது ஆகையால் அப்படிப்பட்ட அற்புதசொரூபத்தைப் புகழ்வதற்கு அற்பஞான சக்தியுக்தர்களாகிய மனிதர்களுக்கிப்படி சாத்தியமாகும் பிரசன்ன முகமும் சுந்தரமாகிய தாமரை யிதழ்களைப்போல கண்களும் அழகாகிய கபாலங்களும் பலகையைப்போல விசாலமாகிய கஸ்தூரி திலர்த ஊர்த்துவ புண்டரங்களுடன் கூடிய நெற்றியும் திவ்வியமங்களங்களாகிய மகரகுண்டலங்களுடன் கூடிய ஸ்ரீ எழுத்தையொத்த செவிகளும் சங்கைநிகர்த்த கண்டமும் அதிக விசாலமாகிய ஸ்ரீ வற்சங்களுடன் கூடிய மார்பும் மூன்றுமடிப்புகளுண்டாகிய ஆழமாகிய நாபிக்கமலத்துடன் கூடியிருக்கும் வயிறும் முழங்காலுக்குக் கீழ்தொங்கும் கைகளும்சமமாகிய தொடைகளும் முழங்காலும் தாமரைக் கமலங்களுக்கு நிகராகிய பாதங்களும் திவ்வியமாகிய பீதாம்பரமும் கிரீட ஆரகேயூர கடகாதி திவ்விய ஆபரணங்களும் சங்குசக்கரம் கெதை வாள் கோதண்டம் அம்புறாத்தூணியும் திருத்துழாய் வைசந்தி வனசமாலைகளும் வரத அபயகரங்களுமாகிய இதுகளுடன் கூடின திவ்வியமங்கள விக்ரகத்துடன் தெரிசனங் கொடுத்தார். அப்போது அனந்தகெருடசேனைமுதலி

யாதி வித்தியருசியர்களும் ஜனகாதி ஜீவன் முக்தர்க
ளும் பிரமாதி தேவர்களும் பிருகுமுதலாகிய மகாரி
ஷிகளும் நாரதாதி தேவரிஷிகளும் வியாசாதி முனி
வர்களும் சித்திராதி செந்திருவரும் கபிலாதிசித்தர்க
ளும் பிரகலாதாதி பக்தர்களும் மூர்த்தியை துதிக்கும்
சுருதிகளும் புஷ்பவிருஷ்டிகளும் ஆனந்த மடைந்தவர்
களாகி சுபாவ சுபங்களைச்சொல்லி பகவானைக் கவிழ்
ந்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த அற்புதத்தைப் பார்த்து பக்தர்களும்பிரா
மணர்களும் கடலைப்போலக்கூவிகுதித்துக்கொண்
டு ஆனந்தக்கண்ணீருடன்கூடியநேத்திரங்களுடையவர்க
ளாகி நிர்விகாரங்களை மறந்து காற்றில்லா விடத்திலி
ருக்கும் விளக்கின் மொக்குபோல அசையாம லிருந்
தார்கள் அப்போதைய அநுபவத்தை ஞானதேவர்
கீர்த்தவாளியாலும் கிரந்ததில் சொல்லி யிருப்பது
போல பகவான் சொரூபானுபவ ரூபக்ஞானமோ,
வைராக்கியமோ சுகமோ எழுகோடி மகாமந்திரப்
பொருளோ பதினெட்டு புராணசாரமோ நாமதேவர்
அநுசந்தானமோ பகவான் சொரூப சாக்ஷாத்கார
மோ பிரம்மானந்தப் பிரபாவமோ சாதுஜென்மனே
பாவவிபவமோபரமபக்தஜன பகவானநுபவஜெனித
பரமானந்தங்கலந்த பரம அநுஷ்டானமோ பரம
யோகி ஜனயோகாமுத விபவமோ தியானரசமோ
சச்சிதானந்த விக்கிரக அநுபவமோ இது இப்படிப்
பட்டதென்று கோசரமாகவில்லை அப்போது “வ்ரு
க்ஷே வ்ருக்ஷே ஹபஸ்யாமி” என்பதுபோல, மாரீச
னுக்கு மரங்கள்யாவும் ஸ்ரீராமரூபமாகித் தோன்றிய
துபோல அந்த பிராமணர்களுக்கு அவ்விடத்தியசரா
சரவஸ்துக்கள் யாவும் ஸ்ரீகிருஷ்ணரூபமாகித் தோன்
றியது மேலும் அந்த பிராமணர்கள் பயமடையாத
சரீரர்களாகி இப்படிப்பட்ட பகவானுக்குபிராச்சிதம்
செய்வித்தோம் பவக்கடலில் மூழ்கினவராகிய நமது
புண்ணிய உதயத்தினால் இந்நிந்த பகவானைத் தெரி
சித்து பவக்கடலைக் கடந்தோம் என்று சொல்லிக்
கொண்டிருக்கும் பிராமணர்களைப்பார்த்து பகவான்
பழையரூபத்தை தரித்து நாமதேவரை கையால் பிடி
த்துக்கொண்டு பிராமணர்கள் திருவடிகளில் விழப்
போட்டு ஓவிப்பிரர்களே இவனை அநுக்கிரகஞ் செய்
யுங்கள் இவன் எனக்குப் பிராணபதமாகும் நான்பக்
தபராதீனனாகி யிருப்பேன் இந்த நிவர்த்திதேவர்
க்ஞானதேவர் சோபானதேவர்கள் திரேகாபிமானத்
தைவிட்டு சகலமும் என்சொரூபமாகப் பார்த்தும்
தியானித்தும் நிரந்தரம் என்னையே பஜித்தும் என்
னையே தங்களுக்கு வசியனாகச் செய்துக்கொண்டிருக்
கிறார்கள் இந்த ஜெகன்மித்திரனாகன் என்னைத் தன்
இருதயகுகையினில் ஏளச்செய்து தன் சரீராநுபந்து
க்களை நினைக்காம லிருக்கிறான இந்த சாமந்தன் சகல
பூதங்களிடத்திலும் என் ரூபமல்லாமல் மற்றொருவ
னைப் பார்க்காமலிருக்கிறான் சந்த நாசிம்மமேதா பே
தக்ஞானமெனும் காட்டை சமூலமாகவெட்டி ஞானா
க்கினியால் சுட்டு சாம்பலாகச்செய்து அபேதாமுத
த்தைப் பானஞ்செய்துக் கொண்டிருக்கிறான் நரஹரி
கோராகும்பர் சோகாமேளர் முதலாகியவர்கள் என்
பரமபக்தர்கள் அவர்களுக்கு நானும் எனக்குஅவர்க
ளும் பிராணநேசர்களாகி யிருப்போம் நான் அவர்
கள் பாததூளிக்கு ஆசைப் பட்டிருக்கிறேன் என்று
சொன்னார்.

இதைக்கேட்டு பிராமணர்கள் பகவானை துதித்
து பாண்டுரங்கனே எங்களுக்கு பரமபிராப்தியாகிய
தேவனே. எங்கள் அக்ஞானத்தைவெட்டி எங்கள்மன
து இடைவிடாமல் உன்னை தியானிக்கும்படி கிருபை
செய்யும் நாங்களெத்தனைகோடி ஜென்மந்த ளெடுத்த
போதிலும் நின் திவ்யநாமங்களைமறக்காமல் உன்னை
தியானித்துக் கொண்டிருக்கவேண்டும் உன் தொண்
டர்களுக்கு தொண்டுசெய்து கொண்டிருக்கவேணடும்
அநாதிகாலமாகிய. அனந்த ஜென்மங்களை யெடுத்தும்
வீணாய்விட்டது வேதசாஸ்திரங்களைப்படித்தும் அதி
ன்சாரத்தை யறியாமல் கேவலம் தாபிமானத்தினால்
பாகவத ஜென்மத்தை இழிவுபேசிக்கெட்டோம் ஆகி
லும் எங்கள் புண்ணியம எப்படிப்பட்டதோ தெரி
யாது தீனபந்துவாகி கிருபாநிதியாகிய நீரின்று நீர்
நிமித்தியமாக அநுக்கிரகஞ் செய்தீர் கிருத்திய அகிரு
த்திய விவேக அந்தகர்களாகும் எங்களுக்கு ஞான
தீபங்கொடுத்தீர் இனித் தேவரீர் விஷயத்தில் அகிஞ்
சன அனன்னிய கெதியுடன்கூடி உமது பக்தகோடி
களில் அந்தர்ம்பூதராகும்படி எங்களை அநுக்கிரகஞ்
செய்யும் இந்த பக்தர்கள் பாததூளிகள் எங்கள் சிர
சில் படும்படி கடாக்ஷஞ்செய்யும் என்று அனந்தவித
ங்களாகப் பிரார்த்திக்க பகவான் சந்தோஷித்துமந்த
காசஞ்செய்து தன்கடாக்ஷ அமுதமழையினால் தடத்
தைக் குளிரச்செய்து ஓபூதேவதைகளே எனக்குஆத்
துமாவாகிய ஞானதேவன் உன்சொரூபக்ஞானத்தை
யுங்களுக் குபதேசிப்பார் நீங்கள் ஜாதியபிமானத்தை
விட்டு பாகவத அபிமான மடைந்தவர்களாகி சஞ்சல
மற்ற சித்தத்துடன் என்னை பஜனைசெய்யுங்கள் உங்க
ளுக்கிந்த நிஷ்டை சித்தித்தால் வேறுதவ யக்ஞாதி
களை செய்யவேண்டியதில்லை மேலும் என்னும ஸ்மா
ணையுடையவன் சகலபூததயை யுடையவனுய் மறுபடி

Koviloor Digital Library

யும் ஜெனனமில்லாத பரமபதத்தையடைந்து நித்திய சூரியர்களுடன் கூடி ஆனந்தமடையலாம் என்றபரம ரகசியத்தை உபதேசிக்கவே பிராமணர்கள் கிருதார்த்தர்களானோமென்று சாஷ்டாங்க தெண்டனிட்டு பகவானைத் துதித்தார்கள் அப்போது ருக்குமணிநாதன் ஞானதேவரைப்பார்த்து இந்தப் பிராமணர்களை உன்வசத்திலொப்பிக்கிறேன் என்றுசொல்ல ஞானதேவர் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு ஓபரமகாருண்ணியரே தேவரீர்நியமனத்தை சிரமேற்கொண்டு இவர்களுக்கு தேவரீருடைய உண்மை சொருபத்தியான விஷயங்களை சொல்லுகிறேனென்று விண்ணப்பஞ் செய்தார்.

இந்தப்படி பகவான் தெரிசன விசித்திரங்களி லீடுபட்டு வருகிறபோது ஒருநாள் கோராகும்பர் அவிடத்திலிருந்த பக்தர்களுக்கு வந்தனஞ் செய்து ஓ பாகவத உத்தமர்களே நீங்களனைவரும் என்வீட்டிற்கு வரவேண்டுமென்று மிகவும் பிரார்த்திக்க அவர்கள் சம்மதித்து அவர் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களைக் கோராகும்பர் சகல உபசாரத்துடன் பூசித்து புசிக்கச்செய்து உன்னிதமாகிய விடத்தில் உட்காரவைத்து சந்தன புஷ்ப தாம்பூலாதி மங்கள திரவியங்களைத் தந்து உபசரித்தார் அப்போது நிவர்த்திதேவர் ஞானதேவர் சோபானதேவர் முக்தாபாயி சாமந்தர் நாமதேவர் முதலாகிய பரமபக்தர்கள் "பாதாயந்தஃ போஸ்பரம்" என்றபடி ஈஸ்வரன் கல்யாண குணங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஆனந்தித்திருக்க ஞானதேவர் கோராகும்பரைப் பார்த்து ஓசாதுஜென சிகாமணியே நீ பாண்டங்களைச் செய்பவனாகையால் இப்போதிங்கு வரிசையாக உட்காரவைத்திருக்கும் பாண்டங்களிலே பரிபக்குவமான பாண்டங்களையும் பக்குவமாகாத பாண்டங்களையும் பரிக்ஷைசெய்து சொல்லவேண்டுமென்று வினவ அவர் சாமார்த்திய வானங்களுக்கு கோராகும்பர் சந்தோஷித்து ஓ சுவாமி சம்சாரிகளுக்குப் போகமாகும் சாதாரணமான மண்பாண்டங்களுடைய பரிக்ஷை எனக்குத்தெரியும் சேதனன கர்மானுசாரமாக சர்வேஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட பஞ்சபூத பாண்டங்களுடைய தாரதம்யங்களை பரிந்து சொல்லுவதற்கு ஞானமில்லாத நான் சமர்த்தனல்ல ஆகிலும் தேவரீர் நியமனத்தை என் சிரமேற்கொண்டு எதார்த்தத்தைச் சொல்லுகிறேன் பிள்ளைகள் மொழிகளை தாய் தந்தையர்கள் கேட்டு இன்பமடைவதுபோலே என் சொற்களை பாண்டுரங்கனுக்குப் பிராணபதமாகிகீர்த்தி யடைந்திருக்கும் பாகவதர்களனைவரும் இன்பமாகக் கொள்ளவேணுமென்று பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன் உலகத்தில் உபாதானகாரணம் நிமித்தக் காரணம் சககாரிகாரணம் என்னும் இம்மூன்று காரணங்கள் சேர்ந்து ஒரு காரியமுண்டாக வேண்டும் பாண்டத்திற்கு மண்ணு உபாதானகாரணம் குலாலன் நிமித்தகாரணம் தடிசக்கிரமேவாங்கள் சககாரி காரணம் ஜெகத்துக்கு ஈஸ்வரன்தானே மூன்றுவித காரணமாகியிருப்பார் எப்படியென்றால் சிதசித்து விசிஷ்டவேடத்தினால் உபாதான காரணமாகி சங்கல்ப விசிஷ்டவேடத்தினால் நிமித்தகாரணமாகி ஞான சக்தியாதி விசிஷ்டவேடத்தினால் சககாரணமாகி காரியவர்க்கங்களை ஈஸ்வரன்சிருஷ்டித்தார் இப்படிப் பட்ட ஜெகதீசனது சிருஷ்டியக்தா பூதமாகி சேதன கிருதமாகிய பஞ்சபூதபாண்டங்களின் லக்ஷணங்கள் ஜெகத்தை சிருஷ்டிசெய்த பெரியகுலாலனாகிய ஸ்ரீ லட்சுமிபதிக்குப் சர்வக்ஞனாகிய தேவரையொத்தவர்களுக்குந் தெரியுமேயல்லது மந்தமதியாகிய எனக்கெப்படித்தெரியும் ஆகிலும் வில்வித்தைதகற்றவனாகிய ஒருபுருஷனின் மந்திரபலத்தினால் திரணம் பிரம்மாஸ்திர மாவதுபோல, தேவரீருடைய அனுக்கிரகபலத்தினால் நானிந்த பாண்டங்களை சங்கையில்லாமல் பரிக்ஷை செய்கிறேனென்று சொல்லி தான் பாண்டங்களைத் தட்டும் பலகையை எடுத்துக் கொண்டு அவிடத்தில் பந்தியாக உட்கார்ந்திருக்கும் பரமபாகவதர்கள் தலைகள்மீது ஓங்கி ஒவ்வோரடி யடித்துக்கொண்டுவர அனைவரும் நிரந்தரம் பகவான் குணானுபவ சீலர்களாகி பிரபஞ்சாதீதர்களாகிய பரிசுத்த சித்தர்கள் ஆகையால் இவ்வடியைக் கருதாமல் பகவான அநுபவத்தில சொக்கி மௌனமாக யிருந்தார்கள்.

மேலும் நாமதேவர் பகவான்பக்தியில் அனைவருக்கும் மேலானவராகியிருந்த போதிலும் குருகுலவாசஞ் செய்யாததினாலும் அகண்டஞானம் கிஞ்சித்தும் குறைபட்டிருந்தபடியாலும் தன்னை அடிக்க வந்த கோராகும்பரைப் பார்த்து என்னையேனடிக்கிறீரென்று பின்னுக்கொதுங்கினர். அதைப்பார்த்து கோராகும்பர் இந்த வரிசையில் இதுவேகாதபாண்டமென்று ஞானதேவருடன் சொன்னார் அப்போது ஈஸ்வர விபூதியாகிய ஜீவகோடிகளிடத்தில் ஒருவரையும் அவமானஞ் செய்யக்கூடாதென்னும் கௌரவ அபிப்பிராயமுடைய பாகவதர்கள் யாவரும் நாமதேவருக்கு இதத்தைக்கோரி அவருக்கு அவமானமுண்டாக வேண்டுமென்று பெருத்த சத்தத்துடன் நகைத்தார்கள் முக்தாபாயி நகைத்துக் கொண்டே எழுந்து இது வேகாத பாண்டமென்று தெரிந்து

Koviloor Digital Library

கொழுந்தாயாகையால் நீ பாண்ட பரிக்ஷையில் மிகவும் சமர்த்தனென்று கோராகும்பரை துதித்தாள்

அப்போது நாமதேவர் மிகவும் சிந்தாக்ராந்தராகித் துரிதமாகப் பாண்டுரங்கன் சந்நிதிக்கு வந்து சுவாமிக்கு வந்தனஞ்செய்து அஞ்சலிஹஸ்தராகிநேத்ர ஜலந்தவிட்டு அழுதுகொண்டு ஓசுவாமி இன்று நான் மிகவும் அவமானமடைந்தேனென்ன பாவான் புன்னகைசெய்து நாமதேவரை மார்பில் அணைத்துக்கொண்டு உன்னையாரென்னசெய்தார்கள் நீ எனக்கு பிராணஸ்நேகனாயிருந்தும் ஒளிக்காமல் உண்மையைச் சொல்லுமென்ன நாமதேவர் கோராகும்பர் வீட்டில் நடந்த விருத்தாந்தத்தை சவிஸ்தாரமாகத் தெரியப்படுத்தினார் அதைக்கேட்டு ஸ்ரீநிவாசன் ஏ நாமதேவரே கோராகும்பர் உண்மையைச் சொன்னார் ஞானதேவர் முதலாகிய பாகவதர்களனைவரும் நினைத்து மேன்மையை நினைத்து உன்மனதில் சோகமுண்டாக வேண்டுமென்று சிரித்தார்களேயல்லது உன்னை அவமானப்படுத்த வேண்டுமென்று சிரித்தார்களல்ல நீயொரு சற்குருவை யடுத்து பக்குவமாக வேண்டுமென நாமதேவர் என்துக்கத்தை தேவரீர் சந்நிதியிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று வந்தேன் கிணறெடுக்கப் போனவிடத்தில் பூதம் புறப்பட்டது போலவும் தூக்கந்தாடிப் பற்றிக்கொண்டு சிரமப்படுகிறபோது இன்னொருவன் கருட்டுக்குக் கொஞ்சம் நெருப்பு கொடுமென்று கேட்டதைப்போல ஞானதேவர் முதலானவர்களைப் போலவே நீரும் என்னை வேகாத பாண்டமென்று சொல்லுகிறீர் நீரே இப்படி என்னைக் கைநழுவவிட்டால் என்குறையை நான் யாருடன் சொல்லிக்கொள்வேனென பகவான் மலமும் அதின்மணமும் அபேதமாகி யிருப்பதுபோலே உனக்கும் எனக்கும் பேதமேயில்லை ஆகையால் நீ சோகமடைய வேண்டாம் ஞான அநுஷ்டான சம்பந்தமுடையவனாகிய சற்குருநாதனை யடுத்து உபதேசம் பெற்றுக்கொள்ளும் எனக்குப் பாண்டுரங்கன் சுவாமிநாமாகி யிருப்பதினால் வேறொரு ஆசாரியனைசவென்று என்னவேண்டாம் அந்தசற்குருவின் சொரூபத்தை நிச்சித்து விவரிக்கிறேன் சிரத்தையுடன் கேளும்.

ஸ்லோகம்.

“ஆசிநோதிஹி சாஸ்த்ரார்த்தான்
ஆசாரேஸ் தாபயிஸ்யதி
ஸ்வயமா சாரேயஸ்து
ஆசார்யஸ் ஸோபிதீயதே.”

என்றுல் தான் சாஸ்திர அர்த்தங்களை நன்றாயுணர்ந்து தன் ஞானானுஷ்டானங்களினால் சிஷ்யர்களுக்கு நிரக்கரம் ஆசாரத்தை யுண்டாகச் செய்பவன் ஆசாரியனென்று சொல்லப்படும் அநாதிகாலமாக பாகவதபக்தி யில்லாதவனாகி பக்த சமசாரியாகிய சேதனனை நித்யசூரிகளுடன் சேர்ப்பதற்கு சர்வசக்தியுடையவனாகிய ஈஸ்வரனுக்கு சாத்தியமேயல்லது அன்னியர்களுக்கு சாதியமாகாது உலகத்தில் ஞானநுஷ்டான சம்பன்னராகி சேதனர்களை உஜ்ஜீவிக்கச் செய்யும் பிரியமனமுடையவர்கள் ஈஸ்வராவேசத்தினால் ஆசாரிய பீடத்தை நிர்வகிக்கிறார்கள் அக்கினியினால் தகிக்கப்பட்டும் வெங்காரத்தின் சம்பந்தமில்லாமல் பொன்னுருகாததுபோல. நீ என்னை யடுத்திருந்தபோதிலும் ஆசாரிய சம்பந்தமில்லாமல் பக்குவமாகமாட்டாய் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு நான் எடுத்த ராமகிருஷ்ணாதி அவதாரங்களில் வசிஷ்ட சாந்தீபர்களிடத்தில் சிஷ்யபாவத்தை யடைந்து யுபாசனைசெய்ததைக் கேட்டறியாயோ சம்சார சம்பந்தமில்லாத எனக்கு குருகுலவாசம் அநாவசியமானபோதிலும் யத்யதாசரதிஸ்ரேஷ்ட தத்ததேவேதரோ ஜனா என்பதுபோல ஸ்ரேஷ்டர்கள் ஆசாரத்தை அன்னிய ஜனங்கள் அனுசரிப்பார்கள் ஆகையால் குருகுலவாசம் அதிக அவசியமென்பதை நானே அநுஷ்டித்துக் காட்டினேன் ஆகையால் என்னனுமதிப்படி சற்குருவையாசரியும் அப்படி செய்யமாட்டாயாகில் ஞானதேவாதிகளைப்போல உனக்கு அகண்ட க்ஞானம் சித்திக்கமாட்டாது அது சித்திக்காவிடின் முக்தனாகமாட்டாய் உள்பாடலுக்கும் என்னுடலுக்கும் சரிப்பட்டுப்போக வேண்டியதாய் வருமென்று சொல்லிய பகவான் வசனங்களைக் கேட்டு நாமதேவர் சுவாமியைப் பார்த்து,

ஸ்லோகம்.

„அஸ்ந்தியேவாத்ர ஹிம்பவந்தி
ஹாஸந்திசயாமி லஹவ்பவாஹா:
அத்ரைவஸ்ந்தோ யதிஸம்பவந்தி
தத்ரைவாலாபஸ்ர ஷீருஹாணம்”

என்பதுபோல அஸ்த்துக்களே பிறந்திருக்கிற இந்த உலகத்தில் ஒரு உத்தமபுருஷனுண்டாவது கும்பியினிடத்தில் தாமரை புஷ்பத்ததற்கு நிகராயிருக்கிறது ஆகையால் ஞானுஷ்டான சம்பன்னனாகி தன்ஜீவனத்திலும் அன்னியர் ஜீவனத்திலும் பிரியனாகும் ஆசாரியன் சித்திப்பது அரிது ஆகையால் ஓசுவாமீ அப்படிப்பட்ட சற்குருவை நிர்தேசித்து எனக்குக் காட்டுமென பகவான் சந்தோஷித்து விசோபாகேசன் அகண்ட ஞான பரிபூர்ணன்

Koviloor Digital Library

நீயவனை ஆஸ்ரயித்தால் உன்னைத் தன்னைப் போலச் செய்வான் ஆகையால் அவனிடத்திற்குப்போய் உபதேசத்தை யடைகுவாயென்று நேமிக்க நாமதேவர் பகவான் நேமனத்தை சிரமேற்கொண்டு விசோபாகேசர் நாகநாதஸ்வாமி சந்நிதியிலிருக்கிறாரென்று கேள்விப்பட்டு அவிடத்திற்குப் போயினார் அப்போதங்கு விசோபாகேசர் இரண்டுகாலையும லிங்காகாரமாகிய நாகநாதர் ஸ்வாமிபேரில் வைத்துக்கொண்டு நித்திரை செய்திருந்தார் அதைப்பார்த்து நாமதேவர் அதிசயப்பட்டு அந்த பயித்தியக்காரன் சிவலிங்கத்தின்மேல் கால்களை வைத்துக்கொண்டிருக்கிறார் இப்படிப்பட்ட ஜடனை ஞானனுஷ்டான சம்பன்னனென்று பாண்டுரங்கன் இவனிடத்திற்கு என்னையனுப்பினார் ஆகிலும் ஆக்ஷேபப்படாமல் இவரெண்ணத்தை பரீக்ஷை செய்கிறேன் என்றுசொல்லிக்கைகளைத் தட்டி அவரை நித்திரையிலிருந்தும் எழுப்பி இதுவென்ன விபரீதம் சத்புருஷர்களினால் சாதுவென்று கொண்டாடப்பட்ட நீர் பகவான் சிரசின்மேல் கால்களை வைத்துக்கொண்டு நித்திரைசெய்யும் காரணத்தைச் சொல்ல வேண்டுமென அவர்நாமதேவரைப்பார்த்து நித்திரையில் சொக்கினவனாகி அவிவேகத்தினால் குற்றஞ்செய்தேன் நான் ஸ்தூலசரீரகன் ஆகையால் என் திரேகம் எனக்கு ஸ்வாதீனப்படவில்லை என்மீது கிருபைவைத்து ஸ்வாமியின் மேலிருக்கும் என்கால்களை எடுத்து ஸ்வாமியில்லாத விடத்தில் வையுமென்றுபிரார்த்தித்தார் அப்போது நாமதேவர் நல்லதென்று சம்மதித்து தன்கையினால் அவர் கால்களை எடுத்துவைக்கப்போகையில் அவிடத்திலொருலிங்கமிருந்தது நாமதேவர் ஆச்சரியப்பட்டு அவர்கால்களை மற்றோரிடத்தில் வைக்கப்போனார் எங்கே பார்த்தாலும் லிங்கமாகவே யிருந்தது இது என்ன விந்தையென்று அந்த வாலயமெல்லாம் பார்க்கையில் லிங்கமில்லாத விடம் கொஞ்சமாகிலு மில்லாமலிருந்தது யாவத்து வஸ்துக்களும் லிங்கங்களாகவே யிருந்தது தன்னைப் பார்க்கத் தானுமொரு லிங்கமாகவே யிருந்தது உடனே நாமதேவர் அவர் கால்களை விட்டுவிட்டு தேவரீர் பாதஸ்பரிசத்தினால் சர்வமும் பகவான் சொரூபமாகித் தோன்றியது இனி தேவரீர் வாக்கமுதம் என்செவியில் பட்டால் அகண்டஞான பரிபூரணனாகி சம்சாரக் கடலைத் தாண்டுவே னென்பதற்கு சந்தேகமில்லை தேவரீர் ஞானமூர்த்தி சர்வக்ஞராகியபாண்டுரங்கனுக்கரிக்கையே யல்லது அக்ஞானனாகும் எனக்குத் தெரியாது என்று விண்ணப்பம்செய்ய விசோபாகேசர் நாமதேவரைப் பார்த்து ஓ விஷ்ணுபக்த சிகாமணியே ஜீவாத்துமா பிரகிருதி சரீரத்தில் புகுந்து யிருப்பதுபோல சர்வேஸ்வரன் சகலசராசரங்களையும் தனக்கு சரீரமாகச் செய்துகொண்டு நாம் யாவற்றிலும் புகுந்து சரீரனாகி யிருக்கிறான் மனிதர்கள் தனபாலகனென்றும் கிழவனென்றும் அந்தகனென்றும நொண்டியென்றும்சொல்லித திரிந்துக்கொண்டிருக்கிறார்கள் நான் என்றும் பதத்தில உத்தேசன் சரீரனாகும் ஜீவாத்துமாவாகி யிருக்கிறான் பாலியமும் வார்த்திகமும் அந்தகமும் நொண்டியும் சரீரபூர்வ தர்மங்களே யல்லாமல் ஆத்துமாவுக்கு சம்பந்தமில்லை அப்படியிருக்க சரீரசம்பந்தினால் சரீரபூர்வதர்மங்களை சரீரிதனில் புகழச்செய்வது நாம்பலனாகுமென்றிந்தப்படியாக வியவசரித்துக் கொண்டிருக்கிறார்கள் இந்தப்படியாக சகலசேதனு சேதனங்களைப் பகவான் சரீரமாகப்பெற்று யிருப்பதினால் அகண்டக்ஞானி யெதிலும் பகவானை தெரிசித்துக் கொண்டு சகலமும் பகவானே செய்துக்கொண் டிருக்கிறாரென்று அநுசந்திக்கவேண்டும் இப்படிப்பட்ட உண்மைக் ஞானமுடையவனுக்கு ராகத் துவேஷங்களுக்கு ஒழிவில்லையெனென்றால்,

சுலோகம்.

"ஈஸ்வரஸ் ஸர்வபூதானம்
ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி;
ப்ராமயன் ஸர்வபூதானு
யந்த்ராருடாணி மாயவா."

என்றால் சர்வபூதங்கள் இருதயத்தில் வசிக்கும் ஈசுவரன் சூத்திரதாரன் பதுமைகளை ஆட்டுவதைப்போல சகலபூதங்களும் பிரமிக்கச் செய்துக் கொண்டிருக்கிறானென்று பிரம்மவித்தையாகிய பகவத்கீதை சொல்லுகின்றது சூத்திரக்காரன் செய்யுங் காரியங்களை பதுமைகள் செய்துக்கொண்டிருக்கிற தென்று சொல்லும் மூடர்களைப்போல அந்தரியாமியாகிய சர்வேசுவரன் செய்விக்கும் காரியங்களில் பிராணிகள் கர்த்தர்களென்று யெண்ணுபவர்கள் அக்ஞானிகளாவார்கள் கொஞ்சநேரம் வெய்யலில்நின்று சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்த புருஷன் கண்ணுக்கு அன்னிய வஸ்துக்கள் தெரியாததுபோல பிரம்ம நிஷ்டனாகி பிரம்மானுபவஞ் செய்யுமவன்கண்களுக்கு அநுபவமல்லாது அன்னியன் தோன்றாது ஞானதேவர் கடாக்ஷத்தினால் எனக்கிப்படிப்பட்ட அகண்டக்ஞானஞ் சித்தித்தது நீ பாண்டுரங்கன் நேமனத்தினால் இவ்விடத்திற்கு வந்தாய் ஆகையாலுன்கண்களுக்கு சர்வமும் பாண்டுரங்கநாத சொரூபமாகி யிருக்கும் என்று விசோபாகேசர் உபதேசிக்க நாமதேவர் ஆனந்தபரவசராகி.

Koviloor Digital Library

"ஸ்திதப்ரஸ்மி கதஸந்தேஹ:
கரிஷ்யே வசனம்தவ"

என்று விண்ணப்பஞ்செய்து நிர்க்க தென்டனிட்டார் விசோபாகேசர் எழுந்து தன் அஸ்தத்தை நாமதேவர் சிரஸின்மேல்வைத்து அகண்டபரப்பிரம்ம சொரூபத்தை விவரமாக உபதேசித்து அனுக்கிரகஞ் செய்து அனுப்பினார் முன்னம் பாண்டுரங்கன் திவ்வியமங்கள விக்கிரகத்தில் மனதுலயித்து அன்னியவஸ்துக்களைப் பார்க்கவெறுத்து பாண்டுரங்கனை நிமிஷநேரமாகிலும் பிரியாமலிருந்த நாமதேவர் விசோபாகேசர் உபதேசமெனும் விரையைத் தன் இருதயக்ஷேத்திரத்தில்நட்டு பாண்டுரங்கன் கடாக்ஷ அமுதமெனும் ஜலத்தைப்பாயவிட்டு மனனரூபவிபவசாயம் செய்வதினால் சகலசேதனங்கள் பாண்டுரங்க சொரூபமாகத் தோன்றியது சுயம்வரகாலத்தில் நளன் அருகில் நளரூபத்தையடைந்து உட்கார்ந்திருந்த திக்குப் பாலர்களைப் பார்த்து அவர்களிலே உண்மையாகிய நளனைத் தெரிந்துக்கொள்ள வரியாதிருந்த தமயந்தியைபோல சதாசாரியர் உபதேசத்தினால்நாமதேவருக்கு சகலசேதனாசேதனங்கள் ஸ்ரீபாண்டுரங்கநாதன் திவ்வியமங்கள விக்கிரகங்களாகி தோன்றியதினால்அதில் உண்மையாகிய புண்டரீகவரதன் திவ்வியமங்கள விக்கிரகத்தைத் தெரிந்துக்கொள்ள வரியாமல் பக்தஜனங்களுடன்கூடி பரிபூரண ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

அப்போது பக்தவச்சலனாகிய புண்டரீகவரதன் அந்தகூட்டத்திற்குவந்து நாமதேவரை யாலிங்கனஞ் செய்துகொண்டு உச்சியைமுகர்ந்து ஓபுதல்வனே சற்குரு உபதேசமடைந்தபின்பு ஏன்என்னிடத்தில்வாராதிருந்தாயென்று கேழ்க்க நாமதேவர் கைகூப்பி நின்று சொல்லுகிறார் முன்னம் உன்னை சந்திரபாகா நதிக்கரையில் செங்கல்லின் பேரில் நின்றிருப்பவனாக பார்த்துக் கொண்டிருந்தேன் இப்போது சற்குரு உபதேசத்தினால் ஞானவிளக்கு கிடைத்தது அஞ்ஞானவிருள் நீங்கிப் போயினபடியால் சகல சேதனாசேதனங்கள் உன்மூர்த்தி விசேஷமாக தோனறுகின்றது ஆகையால் நானெங்கிருந்தாலும் உன் சந்நிதியிலேயே யிருக்குமவனாகும் எதைப்பார்த்தாலும் உன் ரூபத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்ன சொன்னாலும் உன் நாமத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறேன் எதைநினைத்தாலும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்ன செய்தாலும் உன் தொண்டே செய்துக் கொண்டிருக்கிறேன்.

"நாராயணைக நிஷ்டஸ்ய
யாயாசேஷ்டா ததர்ச்சனம்
யோயோ ஜல்பஸ்ஸஜபஸ
தத்யானம் யன்நிரீக்ஷணம்"

எனும் நிஷ்டை விசோபாகேசருடைய அநுக்கிரகத்தினால் எனக்கு சித்தித்தது இப்போதே மசாபல்யமாச்சுது ஓ புருஷோத்தமனே இனிக்கு எதினுக்குறைவில்லை எனக்கு சகலமும் நீயாக்கிறும் ஆகிலும் ஒருவரம் வேண்டுகிறேன் முந்தி தமக்களில் பிரதானனாகிய அர்ச்சுனன்.

"ஸஞ்சலம் ஹிமன: க்ருஷ்ண
ப்ரமாதி பலவத்ருடம்
தஸ்யாஹம் நிக்ரஹம்மன்யே
வாயோரிவஸுதுஷ்கரம்."

என்றால் ஓ கிருஷ்ணமூர்த்தி மனது சஞ்சலமாகி கலக்கப்படச் செய்வதாகி நீக்குவதற்குக் கூடாததாகி திடமாகியிருக்கிறது வாயுவை சுவாதீனஞ் செய்துக் கொள்வதற்கு சாத்தியப் படாததுபோல் மனதை வசியஞ்செய்துக் கொள்ளுவது அரிதென்று நினைக்கிறேனென்று துக்கப்பட்டாரல்லவா அப்படிக்கிருக்க இந்திரிய சேவகனாகும் எனக்கிப்படிப்பட்ட மனமெப்படி சாத்தியப்படும் அனாதிகாலமாக உமது விஷயத்தில் பக்தியில்லாதவனாகி யிருந்தேன் ஆகையாலிப்போதுண்டாகிய பிரியபக்தி நிலையாகயிருக்குமென்று நம்மாட்டேன் ஆகையால் ஓ நிர்தயாளனே ஆசாரிய அனுக்கிரகத்தினால் இப்போது எனக்குக் கிடைத்த ஞானவிளக்கை யுமது கிருபையெனும் எண்ணெயினால் விருத்தியடையச் செய்யும் இதுவே என்பிரார்த்தனையென்று விண்ணப்பஞ்செய்ய பகவான்சந்தோஷித்து நாமதேவர் கையைப் பிடித்துக்கொண்டு சகல சாதுஜனங்களைப் பார்த்து ஓசாதுக்களே இப்போது எனது பிரியராகிய நாமதேவரை வேகாத பாண்டமென்று சொல்லக்கடவீர்களா வென்று கேட்டார் ஞானதேவர் முதலானவர்கள் தலையையசைத்தார்கள் பின்பு நாமதேவர் ஸ்பரிச பாகவதருக்கு அகண்ட ஞானத்தை யுபதேசித்து பாகவத கூட்டத்துடன் பிரியாமலிருந்து இவர் நித்தியபதவியை யடைந்தவிதத்தை முன்சொல்லிய துக்காராம்சுவாமிகள் சரித்திரத்தில் தெரிந்துக் கொள்ளுங்களென்று நாபாஜிசித்தர் சொல்ல உத்தவசித்தர் முதலானவர்கள்கேட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கி நாபாஜிசித்தரைப் பணிந்து தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

ஸ்ரீபாண்டுரங்கபரப்பிரம்மணே நம:

நாமதேவர் சரித்திரம் முற்றிற்று.

Koviloor Digital Library

உ

ஓம்பாண்டுரங்க பரப்பிரம்மணே நம:

ஐந்து தாசர்களின் சரித்திரங்களில்

ஞானேஸ்வரர் சரித்திரம்.

பிற்பாதி.

அகாரமுதலான வெழுத்துகளுக் கெல்லாம் அதிபதியாகியும் அனைத்திலும் வியாபகமாகியும் ஆதிமத்தியாந்த ரகிதராயும நித்தியராகியும் நிர்மலராகியும் தற்பரராகியும் விளங்கும் பகவான் திருவடித்தாமரைகளை நித்திரையிலிருந் தெழுந்து உத்தவசித்தர் தொழுது ஸ்நான அநுஷ்டானங்களை முடித்து தன்சிஷியர் முதலானோருடன்கூடி நாபாஜிசித்தரிடம் வந்து அவருக்கு தீர்க்கதெண்டனிட்டு ஓசுவாமி ஞானேசுவரர் சரித்திரம் பூரணமாகாமல் நடுபாதியில் நின்றுவிட்டபடியால் மற்ற கதையையும் பூரணமாகச் சொல்லி முடித்து நாயேன் குறையைத் தீர்க்கவேண்டுமென்று பிரார்த்திக்க நாபாஜிசித்தர் சொல்லத் தொடங்கினார் கேளுங்கள் சித்தர்களே! ஞானேசுவரரெருமைக்கடாவினால் அந்தணர்களுக்கு வேதத்தை விரித்துரைத்து அவர்களால் பலவிதங்களாய்க் கொண்டாடப்பட்டு அகண்டச்ஞான நிஷ்டராகி யிருக்க, பண்டரியாசராகிய விசோபாகேசர் என்னும் சாதுபூரணராக வேதங்களையும் சுருஸ்மிருதி இதிகாச புராணங்களையும் உணர்ந்து அதில் தக்க யோக்கியதையைச் சம்பாதித்தார் இந்த விசோபாகேசர் ஓர்நாள் ஏகாந்தமாக உட்கார்ந்து தன்மனதில் இப்படியென்று தர்க்கித்தார் அதென்னவெனில், சொரூபரூபகுண விபவங்களினால் சகலத்திற்கும் மேலானவனாகி அகிலசேதன சேதனங்களுக்குக தானே ஆதாரமாகி தனக்குவேறோர் ஆதாரமில்லாதவனாகி தேவமனிதாதி ஜாதிகளும் வெள்ளைக் கருப்பாதி வர்ணங்களும் விருத்திபரிபாக விகாரங்களும் ஜெனனமரணாதி அவஸ்தைகளும் இல்லாதவனாகி அப்பிரமேயங்களாகும் ஞானசக்தியாதி பலைசுவரிய வீரியதேஜசாக மென்னும் ஷட்குண அபிஸ்வரியங்களுடன் கூடினவனாகி ஞான ஆனந்த சொரூபனாகி சேதன சேதனங்களுக்கு உள்ளும் புறம்பும் வியாபித்திருக் குமவனாகி எதிலும் ஒட்டாமல் யாவற்றிலும் பிரகாசிப்பவனாகி அஞ்ஞானாதி துர்க்குணங்க ளில்லாதவனாகி இச்சாகிருதவாசமங் அனந்த ரூபங்களு கூடினவனாகி யிருக்கும் சர்வேஸ்வரன் ஒருவனுண்டு அவனால் அனந்தகோடி பிரம்மாண்டங்கள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது இந்த அண்டங்கள்யாவும் ஆத்துமாக்கள்பூர்வகர்மரூபமாக நானாவித யோனிகளில் பிறந்திருக்கின்றது. அதில் மனிதசரீரம் மிகவும் அரிது அப்படிப்பட்ட ஜென்மம் கிடைத்தபோதிலும் அனாதி துர்வாசனையினால் அக்ஞானனாகி இந்திரிய வசப்பட்டவனாகி பகவானுக்கு விரோதியாகியிருப்பதைநீக்கி ஞானவானாகி இந்திரியங்களை ஜெயித்து பகவானுக்கு பிரியனாகி யிருப்பது அரிது இத்தனையுங் கிடைத்தபோதிலும் ஞான அனுஷ்டான சம்பன்னனாகிய சற்குரு கிடைப்பது மிகவுமரிது அப்படிப்பட்டசற்குரு சம்பந்தமுண்டாகாமல் பகவான் அங்கீகாரங்கிடைக்காது ஆகையால் சற்குருவை யாஸ்ரயித்து அவருபதேசமடைந்து பகவானிடத்தில் தைலதாரையைப் போல அவிச்சின்னமாகிய பக்திசெய்து கரங்களையும் பகவான் விஷயத்தில் விநியோகப்படுத்தி சுகதுக்க ஒடுபொன்பிரிய அப்பிரிய சீத்தோஷ்ணாதி மானமான சத்துரு மித்ருக்களிடத்தில் சமனாகி சகல ராமப்பரிதியாகி யிருபவன் "ப்ரஹ்மபூயாய கல்பதே" என்பதுபோலபிரம்மத்தை யடைவதற்கு சமர்த்தனாகின்றான் அனாதி காலமாக அனந்த ஜென்மங்களை எடுத்து இப்படிபட்ட ஞானமும் அதற்கு அநுகுணமாகிய அனுஷ்டானங்களில்லாமல் இந்திரிய சேவகனாகி யமனுக்கு வசியனாகினேன் இனி பகவான் கடாக்ஷத்தினால் சற்குருநாதரையடுத்து உபதேசமடைந்து பிரகாசமாய் பகவானுடைய பக்திசெய்து கிருதார்த்தர்களாகிறதென்று வெகுவிதங்களாக சிந்தித்து ஞானனுஷ்டான சம்பன்னனாகி பகவானுக்கு மிகவும் அந்தரங்கராயியிருக்கும் ஞானேசுவரரையடுத்து தீர்க்க தெண்டட்டு அஞ்சலியஸ்தராகி நின்றிருக்கையில் ஞானேசுவரர் இவரைப்பார்த்து யோகப்பா பாலகனாகிய நீவியாடுவதைவிட்டு தாய் தந்தையர்களைப் பிரிந்து இவ்விடத்திற்கென்ன காரணமாக வந்தாயென்று கேட்கையில் விசோபாகேசர் ஓ சுவாமி இதுவரை